தமிழ்நாடு அரசு

மேல்நிலை முதலாம் ஆண்டு

வரலாறு

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

11th History Introduction Tamil Medium.indd 1 12/3/2022 7:37:43 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018

திருத்திய பதிப்பு - 2019, 2020, 2023

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

11th History Introduction Tamil Medium.indd 2 12/3/2022 7:37:43 PM

புத்தகத்தைப் பயன்படுத்தும் முறை

கற்றலின் குறிக்கோள்	பாடத்தின் நோக்க எல்லை குறிக்கப்படுகிறது.
அறிமுகம்	பாடத்தில் பேசப்படும் துறைசார்ந்த செய்தி அறிமுகப்படுத்தப்படுகிறது.
ZNYP5	மாணவர்களின் கூடுதல் புரிதலுக்காக அனிமேஷன் காட்சிகளை வழங்குகிறது.
உங்களுக்குத் தெரியுமா?	மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடத்துடன் தொடர்புடைய கூடுதல் தகவல்களைப் பெட்டிச் செய்தியாக வழங்குகிறது.
விளக்கப்படம்	கடினமான கருத்துகளை எளிதாக்கும் நோக்கத்துடன் செய்திகளைப் படங்கள் வாயிலாக விளக்குகிறது.
செயல்பாடுகள்	மாணவர்கள் தனியாக அல்லது குழுவாகச் சில செயல்பாடுகளில் ஈடுபட்டு கற்க உதவுகிறது.
தொகுப்புரை	முக்கியமான கருத்துகள் மாணவர்களின் மனதில் பதியும் வண்ணம் ஒன்று அல்லது இரண்டு வரிகளில் நினைவுறுத்துகிறது.
பயிற்சி	மாணவர்கள் தாங்களே பயில்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உதவுகிறது.
கலைச் சொற்கள்	முக்கியச்சொற்களையும்தொழிநுட்பச்சொல்லாடல்களையும் பாடத்தின் முடிவில் விளக்குகிறது.
மூல நூல்கள்	பாடநூல் ஆக்கத்திற்கு ஆசிரியர்கள் பயன்படுத்திய மூல நூல்களின் பட்டியலை அளிக்கிறது. மாணவர்களின் விரிவான கற்றல் பயன்பாட்டிற்கு இது உதவுகிறது.
இணையச் செயல்பாடு	கற்றல் செயல்பாடுகளுக்காக மின்னணு ஊடகச் சான்றுகளைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் பாடம் தொடர்பான புரிதலை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

11th History Introduction Tamil Medium.indd 3 12/3/2022 7:37:44 PM

அலகு	பொருளடக்கம்	பக்க எண்	மாதம்
1	பண்டைய இந்தியா: தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை	01	ஜூன்
2	பண்டைய இந்தியா: செம்புக்கால, பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள்	20	ஜூன்
3	பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்	39	ஜூன்
4	அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்	54	ஜூலை
5	தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்	72	ஜூலை
6	மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்	87	ஜூலை
7	குப்தர்	100	ஜூலை & ஆகஸ்ட்
8	ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி	116	ஆகஸ்ட்
9	தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி	130	ஆகஸ்ட்
10	அரபியர், துருக்கியரின் வருகை	149	ஆகஸ்ட்
11	பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்	170	செப்டம்பர்
12	பாமினி மற்றும் விஜயநகர அரசுகள்	191	அக்டோபர்
13	பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்	207	அக்டோபர்
14	முகலாயப் பேரரசு	216	அக்டோபர்
15	மராத்தியர்	245	அக்டோபர் & நவம்பர்
16	ஐரோப்பியரின் வருகை	265	நவம்பர்
17	ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்	288	நவம்பர்
18	ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள்	304	நவம்பர் & டிசம்பர்
19	நவீனத்தை நோக்கி	326	டிசம்பர்
	காலக்கோடு	340	
	கலைக்களஞ்சியம்	344	

NKD6M

மின் நூல்

312CX

மதிப்பீடு

11th History Introduction Tamil Medium.indd 4 12/3/2022 7:37:44 PM

அலகு 1

பண்டைய இந்தியா: தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் கற்கால மனிதர்கள் குறித்துப் படிப்பது
- பழங்கற்கால, இடைக்கற்கால இந்தியச் சமூகங்களைப் புரிதல்
- புதிய கற்காலப் புரட்சியின் முக்கியத்துவத்தைக் கற்றல்
- சிந்து நாகரிகத்தின் சிறப்பியல்புகளை அறிதல்

LQYR2

அறிமுகம்

இந்தியா ஒரு தொன்மை வாய்ந்த நாகரிகங்களும் பண்பாடுகளும் கொண்ட வளர்ச்சி பெற்ற நாடாகும். பழங்கற்காலம் முதலாக இந்தியாவில் பல குழுக்களைச் சேர்ந்த மக்கள் பலமுறை குடிபெயர்ந்து பல்வகைப்பட்ட சூழல்களுக்கு ஏற்றவாறு தங்கள் பண்பாடுகளைத் தகவமைத்துக் கொண்டனர். இதன் விளைவாகப் பன்மைத் தன்மை கொண்ட நம்பிக்கைகளும் வாழ்க்கை முறைகளும் தோன்றின. உணவு சேகரித்தல் எனும் நிலையிலிருந்து கால்நடை மேய்ச்சல் வாழ்க்கை முறைக்குச் சமூகம் நகர்ந்தது, சிந்து வெளியில் குடியேறிய மக்கள் செம்புக் காலத்தில் பெரும் பக்குவமடைந்து ஒரு முதிர்ச்சியடைந்த வாழ்க்கை நிலையை அடைந்தனர்.

இப்பாடம் கற்காலத்தில் மனிதர்கள் முதன்முதலாகக் குடியமர்ந்ததில் தொடங்கி, சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சி வரையிலான இந்திய வரலாற்றின் மீது முழுக் கவனம் செலுத்துகிறது. புதிய கற்காலப் பண்பாட்டையும் விளக்குகிறது.

சான்றுகள்

இந்திய வரலாற்றில் கற்கால வாழ்க்கை முதல் சிந்து நாகரிகம் வரையிலான நெடுங்காலத்தைப் புரிந்துகொள்ள தொல்லியல் சான்றுகளே பெரிதும் உதவுகின்றன. தொல்லியல் ஆய்விடங்கள், நிலவியல் அடுக்குகள், விலங்குகளின் எலும்புகள், படிமங்கள், கற்கருவிகள், எலும்புக்கருவிகள், பாறை ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவை இச்சான்றுகளாகும். எழுத்துவடிவச் சான்றுகள் இக்காலத்துக்கு இல்லை. ஹரப்பா மக்கள் ஓர் எழுத்துமுறையைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அதன் பொருளை இன்றளவும் அறிய முடியவில்லை.

கற்கால மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்ள விலங்கு (fauna), தாவரங்கள் (flora) வடிவிலான சான்றுகள் இன்றியமையாதவை. கருகிய விதைகள், மகரந்தங்கள், கல்லாகிப்போன தாவரங்கள் (பைட்டோலித்) ஆகிய தாவரச் சான்றுகள் கற்கால மக்கள் மேற்கொண்ட வேளாண்மை சார்ந்த அறிவைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பு நடைபெற்ற மனித இடப்பெயர்ச்சிகள் குறித்து அறிந்துகொள்ள அவர்களுடைய மரபணுக்களும் முக்கியமான சான்றுகளாகும். மைட்டோகாண்ட்ரியல் டி.என்.ஏ. (மரபணு) ஆய்வுகள் கற்கால மனிதர்களின் இடப்பெயர்ச்சிகள் குறித்த தகவல்களை வழங்குகின்றன. வரலாற்றுக்கு முந்தையகால எலும்பிலிருந்து டி.என்.ஏ–வைப் பிரித்தெடுத்து, மனிதக்கூட்டம் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது குறித்துப் புரிந்துகொள்ள அறிவியலாளர்கள் முயற்சி செய்துவருகிறார்கள்.

மற்றுமொரு முக்கியமான வரலாற்றுச் சான்று மொழி ஆகும். இந்தோ–ஆரிய, திராவிட, ஆஸ்ட்ரோ–ஆசியாட்டிக், திபெத்தோ–பர்மன் ஆகிய மொழிக்குடும்பங்கள் இந்தியாவில் செழித்து வளர்ந்தன. இந்திய வரலாற்றில் நடைபெற்ற மனித இடப்பெயர்ச்சிகளின் பல்வேறு கட்டங்களில் இம்மொழிகள் தோன்றி வளர்ந்தன.

11th History Lesson 1 Tamil Medium.indd 1 02-01-2023 13:05:59

1.1 வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய இந்தியா

எழுத்துமுறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம், வரலாற்றுக்கு முந்தைய காலம் எனப்படுகிறது. இது கற்காலம் எனவும் குறிக்கப்படுகிறது. கற்காலத்தைக் குறித்துப் பேசும்போது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்க தேசம் ஆகியவை அடங்கிய தென்கிழக்கு ஆசியா முழுவதையும் ஒரே பகுதியாகக் குறிப்பதே பொருந்தும்.

மனித இனத்தின் மூதாதையர் முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றி, பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு ஆப்பிரிக்காவை விட்டு முதன்முதலாக வெளியே இடம்பெயர்ந்த மனித இனம் ஹோமோ எரக்டஸ் (homo erectus) ஆகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரைக்கும், இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலம் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் நிலவியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளின்படி, வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய மனிதர்கள் இந்தியாவில் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரையான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தார்கள் எனத் தெரிகிறது.

பொதுவாக, எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் எனப் பிரிக்கப்படும். அம்மக்கள் பயன்படுத்திய பொருள்கள் (எடுத்துக்காட்டாக, இரும்புக்காலத்தைச் சேர்ந்த ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற பாண்டங்கள்) அல்லது அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி (எடுத்துக்காட்டாக, சிந்து), நாகரிகம் நிலவியதாகக் கண்டறியப்பட்ட முதல் இடம் (எடுத்துக்காட்டாக, அச்சூலியன் அல்லது ஹரப்பா) ஆகியவற்றின் அடிப்படையிலேயே அப்பண்பாடுகளுக்குப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் (Palaeolithic) எனப்படுகிறது. இது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.

- கீழ்ப்பழங்கற்காலம் (Lower Palaeolithic)
- இடைப் பழங்கற்காலம் (Middle Palaeolithic)
- மேல் பழங்கற்காலம் (Upper Palaeolithic)

பழங்கற்காலத்துக்குப் பிந்தைய காலம் இடைக்கற்காலம் எனப்படும். இடைக்கற்காலத்துக்கு அடுத்த காலகட்டம் புதிய கற்காலம் ஆகும். இக்காலத்தில்தான் விலங்குகளையும் தாவரங்களையும் வளர்க்க மனிதர்கள் கற்றுக்கொண்டார்கள். அது உணவு உற்பத்திக்கு வழிவகுத்தது. பாறைப்படிவியல் (Stratigraphy)

காட்டு உயிரினங்களும் பழக்கப்படுத்தப்பட்ட உயிரினங்களும்: காட்டுத்தாவரங்களும் விலங்குகளும் பறவைகளும் பிற உயிரினங்களும் இயற்கையாக வளர்பவை. தாவரங்களும் விலங்கினங்களும் மனிதர்களால் பெருமளவில் பழக்கப்படுத்தப்படும் போது, அவற்றின் வாழ்க்கைமுறையும் உடலியல் கூறுகளும் மாற்றம் அடைகின்றன. அவற்றின் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக, காட்டில் உள்ள தாவரங்களுடன் ஒப்பிடும்போது, பழக்கப்படுத்தப்பட்ட தாவரங்களின் விதைகள் அளவில் சிறியதாக மாறுகின்றன. விலங்குகளைப் பழக்கப்படுத்தும்போது அவை தங்களின் மூர்க்க குணத்தை இழக்கின்றன.

ஆய்வுகள், காலவரிசை, கற்கருவிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய பண்பாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கீழ்ப்பழங்கற்காலப் பண்பாடு (Lower Palaeolithic Culture)

கற்காலத்தின் தொடக்கத்தைச் சேர்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்துள்ளன. கீழ்ப்பழங் கற்கால கட்டத்தின்போது, மனித மூதாதையர்களான ஹோமோ எரக்டஸ் இந்தியாவில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. பழங்கற்காலத்தைச் சேர்ந்த கருவிகள் முதன்முதலில், சென்னை அருகே உள்ள பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்பவரால் 1863இல் கண்டெடுக்கப்பட்டன. தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அவர் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டபோது, வரலாற்றுக்கு முந்தைய கால நாகரிகம் நிலவிய பல இடங்களைக் கண்டறிந்தார். அதிலிருந்து கற்கால மனிதர்கள் வாழ்ந்த பல பகுதிகள் இந்தியா முழுவதும் அடையாளம் காணப்பட்டு, அகழாய்வு செய்யப்பட்டன.

கற்கருவிகள்

வரலாற்றுக்கு முந்தைய காலம் குறித்த ஆய்வுத்துறை பெரும்பாலும் கற்கருவிகளையே சார்ந்துள்ளது. கற்கால மனிதரின் வாழிடங்கள் கல்லாலான கருவிகள் கிடைப்பதை அடிப்படையாகக் கொண்டு அடையாளங் காணப்படுகின்றன. மனித மூதாதையர் கருவிகள் செய்யப் பெரிய கற்பாளங்களையும் கூழாங்கற்களையும் தேர்ந்தெடுத்தனர். அவற்றை மற்றொரு உறுதி வாய்ந்த கல்லால் சீவிக்

11th History Lesson 1 Tamil Medium.indd 2 02-01-2023 13:05:59

அச்சூலின் மரபும் சோகனியன் மரபும் : இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், பழங்கற்கால மக்களின் தொடக்க காலப் பண்பாடு அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில் இரு மரபுகளாகப் பிரிக்கப்படுகிறது. கைக்கோடரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் (Acheulian) மரபு என்றும் கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளைக் கொண்ட மரபு சோகனியன் (Sohanian) மரபு என்றும் அழைக்கப்படுகிறது. அச்சூலியன் மரபு பெருமளாவில் கோடரிகளையும் வெட்டுக்கத்திகளையும் கொண்டது. இவ்வகைக் கைக்கோடரிகள் முதன்முதலில் பிரான்சில் உள்ள செயின்ட் அச்சூல் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டன. எனவே இவை அச்சூலியன் கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது. இது இன்றைய பாகிஸ்தானில் உள்ள சோகன் ஆற்றின் வடிநீர்ப்பகுதியில் நிலவிய மரபு என்பதால், சோகனிய மரபு எனப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளின்போது இதே பகுதியில் அச்சூலியன் மரபு சார்ந்த கருவிகளும் கிடைத்தன. எனவே தனித்தன்மை வாய்ந்த சோகனிய மரபு என்ற ஒன்று இருந்ததாகக் கூற இயலாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

கருவிகளை உருவாக்கினர். இவ்வாறு கற்களைச் செதுக்கிக் கோடரி, சிறுகோடரி, துண்டாக்கும் கருவி, பிளக்கும் கருவி போன்றவை உருவாக்கப்பட்டன. நன்கு சிந்தித்து உருவாக்கப்பட்ட வடிவமைப்பையும் சீரான தோற்றத்தையும் கொண்ட இக்கருவிகள் கற்கால மனிதர்களின் மேம்பட்ட அறிவாற்றலையும் திறனையும் காட்டுகின்றன. வேட்டையாடுவதற்கும் வேட்டையாடப்பட்ட விலங்குகளின் உடலிலிருந்து தோலை உரிப்பதற்கும் இறைச்சியை வெட்டுவதற்கும் எலும்பின் மஜ்ஜையை பிரித்தெடுப்பதற்கும் எலும்புகளை உடைப்பதற்கும் கிழங்குகளை அகழ்ந்தெடுப்பதற்கும் உணவை பதப்படுத்துவதற்கும் இக்கற்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

பழங்கற்காலக் கற்கருவிகளின் ஆக்கம், அதற்கான உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அக்காலப்பண்பாடு தொடக்க கால அச்சூலியன், இடைக்கால அச்சூலியன், பிற்கால அச்சூலியன் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பன்முகம் கொண்ட கோளவடிவம் கொண்ட பொருள்கள், கைக்கோடாரி, வெட்டுக்கத்திகள், செதுக்கும் கருவிகள் ஆகியவை தொடக்க கால அச்சூலியன் மரபில் அடங்கும்.

மேற்குத்தொடர்ச்சி மலை, கடற்கரைப் பகுதிகள், வடகிழக்கு இந்தியா ஆகிய இடங்களில் அச்சூலிய மரபுக்கான அடையாளங்கள் காணப்படவில்லை. பெருமழை இதற்குக் காரணமாக இருக்கலாம். பொருத்தமற்ற சூழல், மூலப்பொருள்களின் பற்றாக்குறை ஆகியவை மக்களின் குடியேற்றத்தைத் தடுத்திருக்கலாம். ஒருவேளை வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த மக்களுக்கு இப்பகுதிகளில் குடியேற வேண்டிய தேவை இல்லாமல் போயிருக்கலாம். இம்மக்கள் வாழ்ந்த இடங்கள் அதிக எண்ணிக்கையில் மத்திய இந்தியாவிலும் இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியிலும் (சென்னைக்கு அருகில்) கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகள் அதிகளவில் மழையைப் பெறுவதால், பசுமை மாறாமலும் அதிக வளங்களுடனும் உள்ளன.

பரவல்

பழைய கற்காலத்தின் தொடக்கத்தைச் சேர்ந்த கருவிகள் கங்கைச் சமவெளி, தமிழ்நாட்டின் தென்பகுதி, மேற்குத்தொடர்ச்சி மலையின் குன்றுப்பகுதிகள் ஆகியவற்றைத் தவிர்த்து, இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன. சென்னைக்கு அருகில் உள்ள அதிரம்பாக்கம், பல்லாவரம், குடியம், கர்நாடகாவின் ஹன்ஸ்கி சமவெளியில் உள்ள இசம்பூர், மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிம்பேட்கா ஆகியவை அச்சூலிய கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள வேறு சில இடங்களாகும்.

ஹத்னோரா ஆர்க்கைக் ஹோமோ சேப்பியன்ஸ் புதைபடிவம் – மண்டையோட்டின் மேல்பகுதி

எலிபஸ் நமடிகஸ்



போஸ் நமடிகஸ்

11th History Lesson 1 Tamil Medium.indd 3 02-01-2023 13:06:01

காலவரிசை

இந்தியாவில் கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கியிருக்க வேண்டுமென அண்மைக்கால ஆய்வுகள் மதிப்பிட்டுள்ளன. இப்பண்பாடு 60,000 ஆண்டுகள் முன்பு வரை தொடர்ந்தது.

ஹோமினின் மற்றும் விலங்குகளின் புதைபடிவங்கள்

தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் ஹோமினின் (Hominin) என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகளவில் காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் அவை அரிதாகவே உள்ளன. அதிரம்பாக்கத்தில் ஹோமினின் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளத்தக்க புதைபடிவத்தின் ஒரு பகுதியை இராபர்ட் புரூஸ் ஃபூட் கண்டெடுத்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் புதைபடிவம் தற்போது எங்கு இருக்கிறது என்று அறிய முடியவில்லை. இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஹோமினின் புதைபடிவம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹோசங்காபாத் அருகேயுள்ள ஹத்னோராவில் கண்டுபிடிக்கப்பட்டதாகும். அது ஒரு மண்டையோட்டின் மேல்பகுதி. இதை 'நர்மதை மனிதன்' என்று தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆர்க்கைக் ஹோமோ சேப்பியன்ஸ் என்னும் மனித இனம் வாழ்ந்ததற்கான அடையாளமாக இது கருதப்படுகிறது. மனித மூதாதையரின் புதைபடிவங்கள் என்ற வகையில் தற்போது இந்தியாவில் இருக்கிற ஒரே புதைபடிவம் இது மட்டுமே.

கற்காலத்தில் மக்கள் வாழ்ந்த பழமைச் சூழலை நாம் புரிந்துகொள்ள விலங்குகளின் புதைபடிவங்கள் பயன்படுகின்றன. நர்மதை சமவெளியில் மிகப்பெரிய தந்தங்களையுடைய வரலாற்றுக்கு முந்தைய காலகட்ட யானை, எலிபஸ் நமடிகஸ் (Elephus namadicus), வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த மற்றொரு மிகப் பெரிய யானை வகையான ஸ்டெகோடோன்கனேசா (stegodon ganesa), காட்டுமாடுகள் வகையான போஸ் நமடிகஸ் (Bos namadicus), குதிரை வடிவம் கொண்ட குதிரையான எக்கஸ் நமடிகஸ் (Equus namadicus) ஆகிய விலங்குகளின் புதைபடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குதிரை வகை விலங்கு(எக்கஸ்)களின் பற்கள், நீல்காவ் மற்றும் நீர் எருமைக்கான சான்றுகள், சில விலங்குகளின் குளம்புத்தடங்கள் ஆகியவை அதிரம்பாக்கத்தில் காணப்பட்டன. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் திறந்த, ஈரப்பதம் வாய்ந்த நிலப்பரப்பு சென்னைக்கு அருகில் இருந்ததை இவை உணர்த்துகின்றன.

எக்கஸ் – குதிரை, கழுதை, வரிக்குதிரை ஆகிய விலங்குகளை உள்ளடக்கியப் பேரினம்.

வாழ்க்கைமுறை

கீழ்ப்பழங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் விலங்குகளை வேட்டையாடியும் கிழங்குகள், கொட்டைகள், பழங்கள் ஆகியவற்றைச் சேகரித்தும் வாழ்ந்தனர். வேட்டை விலங்குகளால் வேட்டையாடப்பட்ட விலங்குகளின் இறைச்சியையும் உண்டனர். திறந்த வெளியிலும் ஆற்றுச் சமவெளிகளிலும் குகைகளிலும் வசித்ததை மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிம்பேட்கா, சென்னைக்கு அருகில் உள்ள குடியம் ஆகிய இடங்களில் உள்ள சான்றுகளால் அறிந்துகொள்ளலாம். ஹோமோஎரக்டஸ் இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் தற்கால மனிதர்களான ஹோமோ சேப்பியன்ஸைப் போல மேம்பட்ட மொழியைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சில ஒலிகள் அல்லது சொற்கள் மூலம் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கலாம். சைகைகளைச் சார்ந்த மொழியையும் பயன்படுத்தியிருக்கலாம். கருவிகளைச் செய்வதற்குச் சரியான கல்லைத் தேர்வு செய்வதற்கான அறிவு அவர்களுக்கு இருந்தது. பாறைகளைச் செதுக்கவும் அவற்றைக் கருவிகளாக வடிவமைக்கவும் சுத்தியல் போன்ற கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

இடைப் பழங்கற்காலம் (Middle Palaeolithic Culture)

இன்றிலிருந்து 4,00,000 ஆண்டுகளுக்கு முன்பான காலப்பகுதியில் கற்கள் தொடர்பான தொழில்நுட்பத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. மனித மூதாதையர்களிடத்தும் பிரிவுகள் தோன்றின. இக்காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் ஹோமோ எரக்டஸ் வகையினர் ஆவர். மனிதர்கள் தற்போது கொண்டுள்ள உடலமைப்புக்கூறுகளுடன் ஏறத்தாழ மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் இடைப்பழங்கற்காலக்கட்டத்தை நெவாசா என்னுமிடத்தில் பிரவாரா ஆற்றங்கரையில் ஹெச். டி.சங்கலியா என்ற தொல்லியலாளர் முதலில் அடையாளம் கண்டார். இதையடுத்து, இடைப் பழங்கற்காலம் நிலவிய பல இடங்களும் அடையாளம் காணப்பட்டன. இக்காலகட்ட மனிதர்கள் வாழ்ந்ததாக அறியப்படும் அதிரம்பாக்கத்தின் காலம் இன்றிலிருந்து 3,85,000–1,72000

11th History Lesson 1 Tamil Medium.indd 4 02-01-2023 13:06:01

மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம் : மேல் பழங்கற்காலத்தைச் சேர்ந்த ஒரு வழிபாட்டுத்தலமாக இருந்திருக்கலாம் என கருதத்தகுந்த ஒரு சிறு கட்டுமானம் உத்தரப்பிரதேசத்தில் உள்ள பாகோர் என்னுமிடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. செதுக்கப்படாத கற்களால் வட்ட வடிவில் சூழப்பட்ட ஒரு மணற்பாறையின் பாளம் இங்கு காணப்படுகிறது. இது தற்கால வழிபாட்டுத்தலங்களை ஒத்திருக்கிறது. இந்தியாவில் வழிபாட்டுத்தலங்களுக்கான தேடலில் கிடைத்த மிகப் பழமையான சான்று இதுதான்.

முக்கோண வடிவிலான கற்கள்– மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம்

இதேபோன்ற கல்–சமகாலத்தைய வழிபாட்டுத்தலம்

ஆண்டுகளுக்கு இடைப்பட்டது என அண்மையில் கணிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் நிலவிய இடைப் பழங்கற்காலப் பண்பாட்டைப் போலவே இந்தியாவின் இடைப்பழங்கற்காலக்கட்டமும் பழமை வாய்ந்ததாக இருக்கலாம்.

கருவி வகைகளும் தொழிற்கூடங்களும்

கைக்கோடாரிகள், பிளக்கும் கருவிகள், துண்டாக்கும் கருவிகள், சுரண்டும் கருவிகள், துளையிடும் கருவிகள், எறிதலுக்கு உட்படும் பொருள்கள், அரம் போன்ற கருவி, செதுக்குவதற்கான கத்தி ஆகியவை இக்காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டன. சுரண்டும் கருவி, துளையிடும் கருவி போன்றவற்றை அதிகளவில் சார்ந்திருந்ததால், இடைபழங் கற்கால நாகரிகம் செதுக்கும் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது எனலாம். மரக்கட்டை, விலங்குத் தோல் ஆகியவற்றைக் கையாளுவதற்குச் சுரண்டும் கருவிகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன.

காலவரிசை

இந்தியாவில் இடைப்பழங்கற்காலப் பண்பாடு பொ.ஆ.மு.(கி.மு)3,85,000–40,000க்குஇடைப்பட்ட காலகட்டத்தில் நிலவியதாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் இடைப் பழங்கற்காலம் ஹோமோ சேபியன்ஸ்களோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஐரோப்பாவில் இது நியாண்டர்தால் வகையினரோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இவ்வகையினரின் புதைபடிவ எச்சங்கள் இந்தியாவில் காணப்படவில்லை.

பரவல்

இடைப்பழங்கற்கால நாகரிகம் பரவியிருந்த இடங்கள் நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனை உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் காணப்படுகின்றன.

வாழ்க்கைமுறையும் முதன்மையான பண்புகளும்

இடைப்பழங்கற்கால மனிதர்கள் திறந்தவெளியிலும் குகையிலும் பாறைப்படுகைகளிலும் வசித்தார்கள். இவர்கள் வேட்டையாடுபவர்களாகவும் உணவைச் சேகரிப்பவர்களாகவும் இருந்தார்கள். இந்தியாவைச் சேர்ந்த இடைப்பழங்கற்காலப் பண்பாட்டின் முதன்மையான பண்புகள் கீழ்வருமாறு:

- கருவிகள் சிறியதாயின.
- ஏனைய கருவிகளோடு ஒப்பிடுகையில் கைக்கோடாரியைப் பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.
- கற்கருவிகள் உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது.
- செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி, குவார்ட்ஸ் ஆகிய கற்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்துதல்

மேல்பழங்கற்காலப் பண்பாடு (Upper Palaeolithic Culture)

இடைப்பழங்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுப்படிநிலை மேல்பழங்கற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது. கருவிகளுக்கான தொழில்நுட்பத்தில் புதுமையையும் மனிதர்களின் அறிவாற்றல் திறன்களில் மேம்பட்ட தன்மையையும் இக்காலகட்டத்தில் காண முடிகிறது. ஏறத்தாழ 3 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆப்பிரிக்காவின் சகாரா பாலைவனப்பகுதிக்கு அருகே தோன்றிய நவீன மனிதர்கள் ஏறத்தாழ 60 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவினர் அவர்கள் முந்தைய மக்கள் கூட்டத்தாரை விரட்டிவிட்டு அவர்கள் வசித்த இடங்களில் குடியேறியிருக்கலாம். இந்தப் புதிய குழுக்கள் இந்தியாவின் மேல்பழங்கற்காலப் பண்பாட்டுக்குக் காரணமாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

கற்கருவிகளும் தொழிற்கூடங்களும்

இக்காலகட்டத்தைச் சேர்ந்த கற்கருவிகள் கத்தி, வாள் போல வெட்டுவாய் கொண்டவையாகவும் எலும்பால் ஆனவையாகவும் அமைந்திருந்தன. மேல் பழங் கற்காலத்தில் சிறுகற்களில் செய்யப்பட்ட

11th History Lesson 1 Tamil Medium.indd 5 02-01-2023 13:06:01

கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றை உருவாக்க சிலிக்கான் செறிந்த மூலப்பொருள்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன. எலும்பினாலான கருவிகளும் விலங்குகளின் எஞ்சிய பகுதிகளும் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கர்நூல் குகைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

காலவரிசை

மேல் பழங்கற்காலத்துக்கான சான்றுகள் இந்தியாவின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. ஏறத்தாழ இன்றைக்கு முன் 40,000இலிருந்து 10,000ஆண்டிற்கு உட்பட்ட காலத்தில் மேல் பழங்கற்காலப் பண்பாடு நிலவியிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது.

பரவல்

இம்மக்கள் திறந்தவெளியிலும் குகைகளிலும் வசித்தார்கள். கர்நாடகாவில் உள்ள மெரல்பாவி, ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கர்நூல் குகைகள், தெலுங்கானாவில் உள்ள கோதாவரிக்காணி, மத்தியப்பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் –1, பாகோர் –3, மகாராஷ்டிராவில் உள்ள பாட்னே ஆகியவை இந்தியாவில் மேல்பழங்கற்காலம் நிலவிய இடங்களாகும். சிறு கற்களாலான கருவிகளும் நவீன மனிதர்களுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த ஹோமினின்களின் புதைபடிவங்களும் இலங்கையில் கிடைத்துள்ளன. மெல்லிய கீறல்கள் மூலம் படங்கள் வரையப்பட்ட தீக்கோழியின் முட்டை ஓடுகளும் சங்கு கொண்டு செய்யப்பட்ட மணிகளும் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள ஜீவாலாபுரம், மகாராஷ்டிராவில் உள்ள பாட்னே, இலங்கையில் உள்ள பாடடோம்பா – லெனா, ஃபாஹியான் குகை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தீக்கோழி முட்டை ஓடுகள் : இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலப் பண்பாடு நிலவிய இடங்களில் தீக்கோழிகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பறவையின் முட்டை ஓடு மணிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாட்னேயில் கிடைத்த தீக்கோழி முட்டை ஓட்டின் காலம் இன்றைக்கு முன் 25,000 ஆண்டுகள் எனக் கணிக்கப்படுகிறது. பிம்பேட்கா, பாட்னே ஆகிய இடங்களிலும் தீக்கோழி முட்டை ஓடுகள் கிடைத்துள்ளன.



மேல்பழங்கற்காலப் பண்பாட்டைச்சேர்ந்த அலங்கரிக்கப்பட்ட தீக்கோழி முட்டை ஓடுகள், பாட்னே, மகாராஷ்டிரா

வாழ்க்கை முறைகளும் முக்கியப் பண்புகளும்

மேல் பழங்கற்கால மனிதர்கள் கலை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டதற்கான சான்றுகளாகச் சில ஓவியங்கள் கிடைத்திருக்கின்றன. மணிகளும் அணிகலன்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கல்லில் வெட்டுக்கருவிகள் செய்யும் தொழிற்கூடங்கள் இக்காலகட்டத்தில் வளர்ச்சி பெற்றன. வரையப்பட்ட விதம் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் பிம்பேட்காவைச் சேர்ந்த சில பச்சை நிற ஓவியங்கள் மேல் பழங்கற்காலத்தைச் சேர்ந்தவையாகக் கணிக்கப்படுகின்றன.

இடைக்கற்காலப் பண்பாடு (Mesolithic Culture)

இந்தியாவில் இடைக்கற்காலப் பண்பாட்டோடு தொடர்புடைய இடங்கள் ஒரு சில பகுதிகள் நீங்கலாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. கடற்கரைப் பகுதி, மலை, மணற்பாங்கான இடம், வடிநீர்ப் பகுதி, வனப்பகுதி, ஏரிப்பகுதி. பாறை மறைவிடம், மலை சார்ந்த பகுதி, கழிமுகப்பகுதி என எந்த வேறுபாடும் இல்லாமல் அனைத்துத் திணைசார் மண்டலங்களிலும் அவை காணப்படுகின்றன.

இந்தியாவில் பயிஸ்ரா (பிகார்), லங்னஜ் (குஜராத்), பாகர் II, சோபனி மண்டோ, சாராய் நகர் ராய், மகாதகா, தம்தமா (இவை அனைத்தும் உத்திரப்பிரதேசத்தில் உள்ளன), சனகனகல்லு (ஆந்திரம்), கிப்பன ஹள்ளி (கர்நாடகம்) ஆகிய இடங்கள் இடைக் கற்காலப் பண்பாட்டோடு தொடர்புடையனவாகும். மேலும் ஆதம்கார், பிம்பேட்கா (மத்தியப் பிரதேசம்) ஆகிய பாறை வாழிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

மும்பையின் கடற்கரைப் பகுதிகள், தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தேரி மணல்மேடுகள், விசாகப்பட்டினம் (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் நுண்கற்காலச் சான்றுகள் கிடைக்கின்றன.

தேரி : தேரிகள் என்பன மணற்குன்றுகளால் உருவாக்கப்படும் கடற்கரைப் பகுதிகளாகும். இம்மண் வகை புத்துயிரூழியின் இரண்டாம் கட்டத்தில் உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

11th History Lesson 1 Tamil Medium.indd 6 02-01-2023 13:06:01

காலநிலை

பனியுகத்திற்குப் பின்னர், உலகம் வெப்பமடையத் துவங்கியதிலிருந்து, மனிதர்கள் அடிக்கடி இடம் பெயர்பவர்களாகி, பல்வேறு சூழல்களைக் கொண்ட பகுதிகளில் குடியேறினர். பருவகாலச் சுழற்சி முறை ஏற்கெனவே தோன்றிவிட்டது. சில பகுதிகளில் மழை மிக அதிகமாக இருந்தது. மேற்கு ராஜஸ்தானிலுள்ள தித்வானா என்னும் பகுதியில் இன்றைக்கு முன் 10,000–3500க்கு இடைப்பட்ட ஆண்டுகள் நன்னீர் ஏரிகள் இருந்ததாக அறியப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியைச் சேர்ந்த விலங்குகளின் எலும்புகள், இடைக் கற்காலத்தில் வறண்ட, இலையுதிர் காடுகள் இருந்ததைக் குறிக்கின்றன.

காலவரிசை

உலகளவில் இடைக்கற்காலப் பண்பாட்டின் காலம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. சில குறிப்பிட்ட பகுதிகளில் அது வேளாண்மை காலத்திற்கு முன்பானது என்று சொல்லப்படுகிறது. இடைக்கற்காலப் பண்பாடு கிழக்கு மத்தியத் தரைக்கடல் பகுதியான லெவண்ட்டில் பொ.ஆ.மு. 20,000இலிருந்து 9,500க்குள் நிலவியதாகக் கணிக்கப்படுகிறது. இந்தியாவில் இப்பண்பாடு ஏறத்தாழ பொ.ஆ.மு. 10,000இல் தோன்றியது. கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் இது பொ.ஆ.மு. 1,000 வரை, அதாவது இரும்புக்காலத்தின் தொடக்கம் வரைக்கும் தொடர்ந்தது. இலங்கையில் நுண் கற்கருவிகள் ஏறத்தாழ கடந்த 28,500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றின.

பொருளாதாரம்

காட்டு விலங்குகளை வேட்டையாடல், தாவர உணவுகளைச் சேகரித்தல், மீன் பிடித்தல் ஆகியனவே இக்கால மக்களின் முக்கியத் தொழிலாக இருந்தன. இடைக்கற்காலப் பண்பாட்டின் தொடக்க நிலைகளில் வேளாண்மை செய்யப்படவில்லை. ஆனால் இப்பண்பாட்டின் இறுதிப்பகுதியில் மனிதர்கள் விலங்குகளைப் பழக்கப்படுத்தி, புதிய கற்கால வாழ்க்கை முறைக்கு வழிவகுத்தனர். மத்திய இந்தியப் பகுதியில் உள்ள பாறை ஓவியங்களில் வேட்டையாடுதல், கண்ணிவைத்து விலங்குகளைப் பிடித்தல், மீன் பிடித்தல், தாவர உணவுகளைச் சேகரித்தல் போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

கிடைக்கப்பெற்றுள்ள விலங்குகளின் எச்சங்கள், புதைவடிவச் சான்றுகள் ஆகியன மூலம் இக்காலப் பகுதியைச் சேர்ந்த மக்கள் காட்டெருது, எருமை, சதுப்புநில மான், முள்ளம்பன்றி, சாம்பார் மான், ஒருவகைஅழகியமான்,வராகமான்,சிறுகொம்புடைய நீல்கைமான், குள்ளநரி, ஆமை, மீன், காட்டு முயல், உடும்பு ஆகியவற்றை வேட்டையாடினர் என அறிய முடிகிறது. யானை, காண்டாமிருகம் போன்ற விலங்குகளின் எலும்புகளும் கிடைத்துள்ளன. அவர்கள் ஈட்டி, வில் அம்பு, கண்ணிகள் ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளனர். பிம்பேட்கா என்னுமிடத்திலுள்ள ஓவியம் ஆண்களும் பெண்களும் இணைந்து இது போன்ற விலங்குகளை வேட்டையாடுவதைக் காட்சிப்படுத்துகிறது.

இக்கால மக்கள் நெருப்பைப் பயன்படுத்தினர். உணவை நெருப்பில் சுட்டும் உண்டிருக்கலாம். வெள்ளாடு, செம்மறியாடு, நாய், பன்றி ஆகியவற்றின் எலும்புகள் மத்திய பிரதேசத்திலுள்ள கானிவால், லோத்கேஸ்வர், ரத்தன்பூர், ஆதம்கார், பிம்பேட்கா ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. கானிவாலில் ஒட்டக எலும்புகளும் கிடைத்துள்ளன.

தற்காலிக வசிப்பிடங்களும் வீடுகளும்

இடம்பெயர்ந்துகொண்டே இருப்பது இடைக்கற்கால மக்களின் முக்கியமான பண்பாக இருந்தது. அவர்கள் உணவுக்காக விலங்குகளையும் தாவரங்களையும் தேடி இடம்பெயர்ந்தார்கள். மக்கள் தற்காலிகமான குடிசைகளை உருவாக்கியதுடன், குகைகளிலும் பாறைக்குடைவுகளிலும் தங்கினார்கள். தாங்குதூணுக்கான குழியுடன் கூடிய வட்ட வடிவக் குடிசைகள், நாணல் பதிக்கப்பட்ட தடங்களுடன் கூடிய சுட்ட மண் திண்டுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான குகைகளிலும் பாறை மறைவிடங்களிலும் ஓவியங்கள்காணப்படுகின்றன.பாறைஓவியங்களில் வட்ட வடிவக் குடிசை வரையப்பட்டுள்ளது. தற்காலிகமான குடிசைகள் விரைவில் அழியக்கூடிய பொருள்களால் கட்டப்பட்டன. முட்டை வடிவ வீடுகள், வட்ட வடிவ வீடுகள் (சுவர்கள் பிரம்பால் வேயப்பட்டு, அவற்றின் மீது மண் பூசிய வீடுகளாக இவை இருந்திருக்க வாய்ப்பு உள்ளது) ஆகியவற்றுக்கான அடையாளங்கள் உத்தரப்பிரதேசத்தில் உள்ள சோப்பானி மண்டோ, தம்தமா, ராஜஸ்தானில் உள்ள பாகோர், தில்வாரா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இறந்தோரைப் புதைத்தல்

இடைக்கற்கால மக்கள் இறந்தோரைப் புதைத்தனர். இது அவர்களின் நம்பிக்கைகளையும் சக மனிதர்கள் குறித்த சிந்தனைகளையும் நமக்கு உணர்த்துகிறது. உத்தரப்பிரதேசத்தில் உள்ள மகாதகா, தம்தமா, சாராய் நகர் ராய் ஆகிய இடங்களில் மனித எலும்புகூடுகள் கிடைத்துள்ளன. ஓர் ஆணும் பெண்ணும் ஒன்றாகப் புதைக்கப்பட்டிருந்ததற்கான அடையாளம் மகாதகாவில் கிடைத்துள்ளது. ஒரு புதைகுழியில் தந்தத்தாலான பதக்கம் காணப்பட்டது.

11th History Lesson 1 Tamil Medium.indd 7 02-01-2023 13:06:01

கலை

கலை என்பது மனித வாழ்க்கையோடு ஒருங்கிணைந்த ஒரு பகுதி. பழங்கால மனிதரின் கலை வெளிப்பாடுகள் குறித்த சான்றுகள் ஐரோப்பாவில் பெருமளவில் கிடைத்தாலும், இந்தியாவில் மிகச் சில இடங்களில்தான் கிடைத்துள்ளன. வடிவியல் வேலைப்பாடுகளுடன் கூடிய படிகக்கல் ராஜஸ்தானில் உள்ள சந்திராவதியில் கிடைத்துள்ளது. எலும்பில் செய்யப்பட்ட பொருள்கள் பிம்பேட்காவில் காணப்படுகின்றன. வடிவியல் வேலைப்பாடுகளுடன் கூடிய மனிதப்பல்லும் கிடைத்துள்ளது. மத்தியப்பிரதேசத்திலும் மத்திய இந்தியாவிலும் உள்ள பாறைக்குடைவுகளில் ஓவியங்களைக் காண முடிகிறது. மக்கள் வேட்டையாடுவதிலும் கண்ணி வைத்து விலங்குகளைச் சிக்க வைப்பதிலும் மீன் பிடிப்பதிலும் நடனமாடுவதிலும் ஈடுபடுவதை ஓவியங்கள் சித்தரிக்கின்றன. போபால் அருகேயுள்ள பிம்பேட்கா, மத்தியப்பிரதேசத்தில் உள்ள ரய்சன், பச்மார்ஹி, உத்தரப்பிரதேசத்தில் உள்ள தெற்கு மிர்சாபூர் ஆகியவை இத்தகைய சான்றுகள் கிடைக்கும் இடங்களாகும். இரும்பு செறிந்த ஹேமடைட் கல் தேய்க்கப்பட்டதற்கான வழவழப்புத்தன்மையுடன் காணக்கிடைக்கிறது. மக்கள் பூக்களாலும் இலைகளாலும் தங்களை அலங்கரித்துக்கொண்டார்கள்.

1.2 வரலாற்றுக்காலத்தைச் சேர்ந்த வேட்டையாடிகள் – சேகரிப்பாளர்கள்

நுண்கற்கருவிகளால் வேட்டையாடியும் உணவைச் சேகரித்தும் வாழ்ந்த மனிதர்கள் பிற்காலத்திலும், அதாவது புதிய கற்காலம், இரும்புக்காலம், வரலாற்றுக் காலத்தின் வளர்ச்சிக்குப் பிறகும்கூட அப்படியே தங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள். நகரங்களில் வாழ்ந்த மக்கள் அதிக செல்வத்தை ஈட்டியபோது, இம்மக்கள் விளிம்பு நிலைச் சமூகங்களின் ஒரு பகுதியாக ஆகியிருக்கலாம். இன்றைக்கும் தொலைதூரங்களில் உள்ள காடுகளில் வசிக்கும் மக்களையும் அந்தமான் போன்ற பகுதிகளில் வசிப்பவர்களையும் வேட்டையாடுதல்–சேகரித்தல் வாழ்க்கைமுறையைத் தேர்வு செய்த அத்தகைய சமூகத்தினராகவே நாம் கருதலாம். 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் அத்தகைய பல குழுக்கள் வாழ்ந்ததாக எட்கர் தர்ஸ்டன் எழுதிய 'தென்னிந்தியாவின் சாதிகளும் பழங்குடிகளும்' என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களை நாகரிக முதிர்ச்சியற்றவர்களாகக் கருதுவது தவறு. மாறாக, வேட்டையாடுதல்–உணவைச் சேகரித்தல் என்னும் வாழ்க்கைமுறையைத் தேர்வு செய்தவர்களாகவே அவர்களை நாம் கருத வேண்டும். சிந்து நாகரிகம் உச்சத்தில் இருந்தபோது தமிழ்நாட்டில் நுண்கற்கருவிகளைப் பயன்படுத்தும் வேட்டையாடி–சேகரிப்பாளர்கள் வாழ்ந்தார்கள். புதிய கற்காலத்தில் வேளாண்மை செய்வதும் கால்நடைகளை மேய்ப்பதுமாக இருந்த மக்கள் ஆந்திரா–கர்நாடகா பகுதியில் வசித்தார்கள்.

இடைக்கற்காலப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்

- இடைக்கற்கால மக்கள் ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிகக் குடியிருப்புகளில் வசித்தனர்.
- குகைகளிலும் திறந்த வெளிகளிலும் வசித்தார்கள்.
- இறந்தோரைப் புதைத்தார்கள்.
- அவர்களுக்குக் கலைத்திறன் இருந்திருக்கிறது.
- விரிவான புவியியல் பகுதிகளில் அவர்கள் பரவியிருந்தனர்.
- இக்காலகட்டத்திலிருந்து இந்தியாவின் பல பகுதிகளில் பண்பாட்டுத் தொடர்ச்சியைக் காண முடிகிறது.
- அவர்களின் நுண்கற்கருவிகள் சிறிய விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாட உதவின.

1.3 தொடக்க நிலைப் புதிய கற்காலப் பண்பாடுகளும் (Early Neolithic Cultures) வேளாண்மையின் தொடக்கமும்

வேளாண்மை, விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகியவற்றின் தொடக்கமாக புதிய கற்காலம் அமைந்தது. இந்திய வரலாற்றில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். புதிய கற்காலப் பண்பாட்டின் பழமையான சான்றுகள் எகிப்தின் செழுமைப்பிறைப்பகுதி, மெசபடோமியா, சிந்துப்பகுதி, கங்கைப் பள்ளத்தாக்கு, சீனா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. ஏறத்தாழ பொ.ஆ.மு. 10,000–5,000க்கு இடைப்பட்ட காலத்தில் இவ்விடங்களில் வேளாண்மை தோன்றி, பல பண்பாட்டு வளர்ச்சிகளுக்கு வழிவகுத்தது.

தாவரங்களையும் விலங்குகளையும் பழக்கப்படுத்தியதன் மூலமாக உணவு தானியங்கள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விநியோகமும் அளவில் அதிகரித்தன. ஆறுகளின் மூலம் படியும் செழிப்பான மண் வேளாண்மையை மேம்படுத்தி, படிப்படியாக தானிய உற்பத்தியில் உபரியின் அளவை அதிகரித்தது. பழம்பெரும் நாகரிகங்களின் தோற்றத்துக்கு உபரி உணவு

11th History Lesson 1 Tamil Medium.indd 8 02-01-2023 13:06:01

உற்பத்தி மிக முக்கியமான காரணமாகும். பெரிய கிராமங்கள் தோன்றின. மட்பாண்டங்கள் செய்யும் தொழில் வளர்ந்தது. நிரந்தர இருப்பிடங்கள் கட்டப்பட்டன. எனவே, இக்காலத்தின் பண்பாட்டு வளர்ச்சிகள் மொத்தமாக 'புதிய கற்காலப் புரட்சி' எனப்படுகின்றன.

இந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு வெவ்வேறு வட்டாரப் பண்பாடுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை வெவ்வேறு காலகட்டங்களில் வளர்ந்தன. இந்தியாவின் வடமேற்குப்பகுதியிலும் பாகிஸ்தானிலும் தொடக்க காலத்திலேயே தோன்றின. வடகிழக்கு இந்தியாவில் புதிய கற்காலப்பண்பாடுகள் மிகவும் பிந்தைய காலத்திலேயே, அதாவது, ஏறத்தாழ தொடக்க வரலாற்றுக் காலத்தில்தான் தோன்றின.

வடமேற்கு இந்தியாவில் புதியகற்காலப் பண்பாடு (Neolithic Culture)

மனிதர்கள் தாவரங்களையும் விலங்குகளையும் பழக்கப்படுத்தியதற்கான சான்றுகளைக் கொண்டிருப்பதில் வடமேற்கு இந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு மிகப் பழமையானதாகும். மெஹர்கார், ரானா குண்டாய், சாராய் காலா, ஜலில்பூர் ஆகியவை புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களாகும். இவ்விடங்கள் தற்போது பாகிஸ்தானில் உள்ளன.

ஏறத்தாழ பொ.ஆ.மு. 7000ஐச் சார்ந்ததாகக் கணிக்கத்தகுந்த தொடக்க கற்காலப் பண்பாட்டுக்கான சான்றுகள் மெஹர்காரில் கிடைத்துள்ளன. கோதுமையும் பார்லியும் பயிரிடப்பட்டன. செம்மறியாடு, வெள்ளாடு, கால்நடைகள் ஆகியவை வளர்க்கப்பட்டன. இப்பண்பாடு சிந்து நாகரிகத்துக்கு முந்தையதாகும்.

மெஹர்காரில் நிலவிய புதிய கற்காலப் பண்பாட்டின் முதல் பண்பாட்டுக் காலம் ஏறத்தாழ பொ.ஆ.மு. 7000–5500ஆகக் கணிக்கப்பட்டுள்ளது. இப்பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தவில்லை. அறு வரிசை பார்லி, எம்மர் கோதுமை, எய்ன்கான் கோதுமை, இலந்தை, பேரீச்சை ஆகியவற்றைப் பயிரிட்டார்கள். ஆடுமாடுகளைப் பழக்கப்படுத்தினார்கள். ஓரளவு நாடோடியாக வாழக்கூடிய, மேய்ச்சலில் ஈடுபடக்கூடிய, எனினும் மையமான தங்குமிடம் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் ஓரளவு இடம் விட்டு இடம் குடிபெயரக்கூடிய நாடோடி கால்நடை மேய்க்கும் குழுவினராவர். ஈர மண்ணால் வீடு கட்டினார்கள். இறந்தோரைப் புதைத்தார்கள். சங்கு, சுண்ணாம்புக்கல், நீலவண்ணக்கல், இரத்தினக்கல், வைடூரியம், மணற்கல் ஆகியவற்றில் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தார்கள்.

மெஹர்கார் புதிய கற்காலப் பண்பாட்டின் இரண்டாம் காலகட்டம் ஏறத்தாழ பொ.ஆ.மு. 5500–4800க்கு உட்பட்டதாகவும் மூன்றாம் காலகட்டம் ஏறத்தாழபொ.ஆ.மு.4800–3500க்குஉட்பட்டதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டங்களில் மட்பாண்டத் தொழில்நுட்பத்துக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சுடுமண் உருவங்களும் பளபளப்பான ஒப்பனை மட்பாண்டங்களின் மணிகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் அணிந்த அணிகலன்களுக்கான சான்றுகளும் கண்டறியப்பட்டுள்ளன. பதக்ஷானில் மட்டுமே கிடைக்கக்கூடிய வைடூரியம் இங்குக் கிடைப்பதை நெடுந்தூர வணிகத்துக்கான சான்றாகக் கொள்ளலாம். சிந்து நாகரிகத்தின் முதிர்ந்த கட்டத்தின் தோற்றத்துக்குப் பிறகு, மெஹர்கார் கைவிடப்பட்ட நகரமானது.

மெஹர்காரில் தொடக்க கால பல்மருத்துவம் : மனித மூதாதையருக்கு மருத்துவக் குணம் கொண்ட மூலிகைகள் குறித்த அறிவு இருந்திருக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து அவர்களால் தங்களது உடல்நலத்தைப் பராமரிக்க முடிந்தது. வாழ்க்கைமுறை மாறியபோது புதிய நோய்கள் தோன்றின. அவற்றுக்கான மருந்துகளைக் கண்டறிய வேண்டியிருந்தது.

புதியகற்கால களிமண் வீடு – மெஹர்கார்

புதிய கற்காலத்திலிருந்து மக்கள் அரைத்த தானியங்களையும் சமைத்த உணவுகளையும் உண்ணத் தொடங்கினார்கள். இது பல் கோளாறுகளுக்கும் பிற உடல் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தது. உயிருள்ள ஒரு மனிதரின் பல்லில் துளையிட்டதற்கான மிகப் பழமையான சான்று மெஹர்காரில் கிடைத்துள்ளது. இது பல்மருத்துவத்துக்கான ஒரு முகவுரையாகத் தோன்றுகிறது.

11th History Lesson 1 Tamil Medium.indd 9 02-01-2023 13:06:02

காஷ்மீரில் புதிய கற்காலப் பண்பாடு

காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரிகமும் ஒரே சமகாலத்தவையாகும். இக்காலகட்டத்தைச் சேர்ந்த முக்கியமான ஆய்விடமான பர்சாஹோம், பெருங்கற்காலத்துக்கும் தொடக்க வரலாற்றுக்காலத்துக்கும் சான்றாக உள்ளது. இங்கு மக்கள் குளிரிலிருந்து காத்துக்கொள்ள ஏறத்தாழ 4 அடி ஆழம் கொண்ட குழி வீடுகளில் வசித்தார்கள். முட்டை வடிவம் கொண்ட இவ்வீடுகள் அடிப்பகுதியில் அகலமாகவும் மேல்பகுதியில் குறுகியதாகவும் இருந்தன. இவற்றுக்கு அருகே ஒரு வேயப்பட்ட கட்டுமானத்துக்கான தூண்களை ஊன்றுவதற்கான குழிகளைக் காண முடிகிறது. புதிய கற்காலத்தில் காஷ்மீரில் வளர்ப்பு விலங்குகளாகச் செம்மறியும் வெள்ளாடும் இருந்தன. தாவரங்களைப் பயிரிட்டார்கள். பர்சாஹோமைச் சேர்ந்த புதிய கற்கால மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டார்கள். கையால் வனைந்த மட்பாண்டங்களையும் எலும்பிலான கருவிகளையும் பயன்படுத்தினார்கள். கற்கோடரி, உளி, வாய்ச்சி (மரம் செதுக்கும் கருவி), உலக்கை, மத்து போன்ற கருவிகள் மக்களிடம் இருந்தன. குளிரைத் தாக்குப்பிடிப்பதற்காகத் துணியில் விலங்குகளின் தோலைச் சேர்த்துத் தைப்பதற்குக் குத்தூசிகள் பயன்படுத்தப்பட்டன. தோல்களைக் கொண்டு வேலை செய்ய செதுக்குவதற்கான அல்லது சீவுவதற்கான கருவியை மக்கள் பயன்படுத்தினர்.

புதிய கற்காலத்தின் இரு கட்டங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. செராமிக், செராமிக் அல்லாதது என அவற்றைப் பிரிக்கலாம். செராமிக் அல்லாத கட்டத்தில் மட்பாண்டத் தொழில்நுட்பத்துக்கான அடையாளங்கள் இல்லை. செராமிக் கட்டத்தில் மட்பாண்டங்களுக்கான சான்றுகள் கிடைக்கின்றன. இக்கட்டத்தில் மக்கள் சேற்று மண்ணாலான வீடுகளைக் கட்டினார்கள். செம்பாலான அம்புகளைச் செய்தார்கள். கறுப்புநிறப் பாண்டங்களையும் அகேட், கார்னிலியன் கல் மணிகளையும் வண்ணம் பூசப்பட்ட பானைகளையும் பயன்படுத்தினார்கள். இங்கு காணப்படும் ஒரு புதைகுழியில் காட்டு நாயின் எலும்பும் மான் கொம்பும் காணப்பட்டன. சூரியன், நாய் ஆகியவை இடம்பெறும் ஒரு வேட்டைக்காட்சி செதுக்கப்பட்டுள்ள ஒரு கல்லும் இங்கு உள்ளது.

கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு ஆகியவற்றுக்கான விதைகள் அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்டன. கால்நடைகள், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, நாய், சில பறவைகள் ஆகியவை பழக்கப்படுத்தப்பட்டன. சிவப்பு மான், காஷ்மீர் கலைமான், வரையாடு, கரடி, ஓநாய் போன்ற காட்டு விலங்குகளின் எலும்புகள் அவர்கள் வேட்டையிலும் ஈடுபட்டதைக் காட்டுகின்றன.

நினைவுச்சின்னமாகக் குத்துக்கல் எழுப்பப்படும் வழக்கம் பெருங்கற்காலத்தில் இருந்தது. அக்கால மக்கள் சிவப்பு நிற மட்பாண்டங்களையும் உலோகப் பொருள்களையும் பயன்படுத்தினார்கள். பருப்பு வகை பயன்பாடு அவர்களுக்கு மத்திய ஆசியாவுடன் இருந்த தொடர்பைக் கூறுகிறது. ஹரப்பா நாகரிகத்துடன் இவர்களுக்குத் தொடர்பு இருந்திருக்கலாம்.

கங்கைச் சமவெளியிலும் மத்திய இந்தியாவிலும் புதிய கற்காலப்பண்பாடு

கங்கைச் சமவெளியிலும் மத்திய இந்தியாவிலும் லேகுரதேவா, சோபானி முண்டா ஆகிய இடங்களில் புதிய கற்காலப் பண்பாடு நிலவியதாகத் தெரிகிறது. தொடக்க காலத்திலேயே, அதாவது ஏறத்தாழ பொ.ஆ.மு. 6500இலேயே நெல் சாகுபடி நடந்ததற்கான சான்றுகள் லேகுரதேவாவில் கிடைத்துள்ளன.

மத்திய இந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்கள் கயிற்றின் தடம் பதிக்கப்பட்ட மட்பாண்டங்களால் அடையாளம் காணப்படுகின்றன. கோல்டிவா, சிரந்த், செனுவார், மகதரா ஆகியவை முக்கியமான புதிய கற்கால ஆய்விடங்களாகும். இந்த இடங்களும் மட்பாண்டங்கள் செய்தல், தாவரம் வளர்த்தல், விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளுக்கான சான்றுகளுடன் உள்ளன.

அறு வரிசை பார்லி, பல வகைப்பட்ட கோதுமை, நெல், பட்டாணி, பச்சைப்பயறு, கொண்டைக்கடலை, கடுகு, ஆளி, பலா ஆகியவை பயிரிடப்பட்டதற்கான முழுமையான

11th History Lesson 1 Tamil Medium.indd 10 02-01-2023 13:06:02

சான்றுகள் இங்கெல்லாம் கிடைத்துள்ளன. காட்டு விலங்குகளின் எலும்புகளுடன், செம்மறியாடு, வெள்ளாடு, ஏனைய கால்நடைகள் ஆகியவற்றின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதிய கற்கால மனிதர்கள் மேல்புறத்தில் கயிற்றின் தடம் பதிக்கப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். நுண்கற்கள், எலும்பு, மான் கொம்பு ஆகியவற்றாலான கருவிகளும் சுடுமண் பொருள்களும் பயன்பாட்டில் இருந்தன. இந்த இடங்கள் ஏறத்தாழ பொ.ஆ.மு இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரைக்கும் செழிப்புடன் இருந்துள்ளன.

கிழக்கு இந்தியாவில் புதிய கற்காலம்

பிகார், மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளின் பல இடங்களில் புதிய கற்காலப் பண்பாடு நிலவியது. பிர்பன்புர் அத்தகைய இடமாகும். கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள புதிய கற்கால வளாகங்களுடன் இந்த இடங்களை ஒப்பிடும்போது பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. மழுங்கிய, திரண்ட முனையுள்ள கோடரி, உளி, தோள்பட்டைக் கோடரி ஆகியவை இந்த இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதே பகுதியில் உள்ள குச்சாய், கோல்பய்சாசன், சங்கர்ஜங் ஆகிய இடங்களும் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களாகும்.

தென்னிந்தியாவில் புதிய கற்காலம்

புதிய கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் முக்கியமாக ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதி ஆகியவற்றில் நிலவியதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்திருக்கும் கட்டமைப்பு இந்த இடங்களில் காணப்படுகிறது. புதிய கற்கால வளாகத்தின் ஒரு பகுதியாக 200க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை

GIP02

புதிய கற்காலக் கற்கருவிகள்

நீராதாரங்களுடன் கூடிய கருங்கல் குன்றுகளுக்கு அருகே அமைந்துள்ளன. இவ்விடங்கள் கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரை, காவிரி சமவெளிகளிலும், கர்நாடகாவிலுள்ள சங்கனகல்லு, தெக்கலகோடா, பிரம்மகிரி, மஸ்கி, பிக்லிகல், வட்கல், ஹெமிங்கே, கல்லூர் ஆகிய இடங்களிலும், ஆந்திரப்பிரதேசத்தில் நாகார்ஜுனகொண்டா, ராமாபுரம், வீராபுரம், தமிழ்நாட்டில் பையம்பள்ளி ஆகிய இடங்களிலும் புதிய கற்காலப் பண்பாடு நிலவியுள்ளது.

சில தொடக்க காலப் புதிய கற்கால ஆய்விடங்கள் சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன. ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள உட்னூர், பல்வோய், கர்நாடகத்தில் உள்ள கொடெக்கல், குப்கல், புடிகல் ஆகியவை இத்தகைய சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன. மெல்லிய சாம்பலும் நுண்ணுயிர்களால் சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் இப்பகுதிகளில் காணப்படுகின்றன. சாம்பல்மேட்டைச்சுற்றிலும்வீடுகளும்புதைகுழிகளும் மனித வாழிடங்களுக்கான சான்றுகளாக உள்ளன.

வடகிழக்கு இந்தியாவில் புதிய கற்காலம்

வடகிழக்கு இந்தியாவில் புதிய கற்காலப்பண்பாடு மிகப் பின்னாலேயே தோன்றியது. இங்கு இப்பண்பாட்டின் காலம் பொதுவாக பொ.ஆ.மு. 2500–1500 அல்லது அதற்கும் பின்னர் என்று கணிக்கப்படுகிறது. தோளில் வைத்துக்கொள்ளத்தக்க மழுங்கல் முனைக் கோடரிகளும், முனை நீட்டிச் சாய்வாக்கப்பட்ட மழுங்கல் முனைக் கோடரிகளும் அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, அருணாசல பிரதேசம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாஜலி ஹேடிங், சருதரு ஆகியவை அஸ்ஸாமில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களாகும். இடம்பெயர் வேளாண்மை (shifting cultivation) செய்ததற்கான சான்றுகள் அஸ்ஸாமில் கிடைத்துள்ளன. சேனைக்கிழங்கும் சேப்பங்கிழங்கும் பயிரிடல், இறந்தோருக்குக் கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட நினைவுச்சின்னங்களைக் கட்டுதல், ஆஸ்ட்ரோ–ஆசிய மொழிகள் பேசப்படுதல் ஆகியவை இக்காலப்பண்பாட்டின் முக்கியக்கூறுகளாகும். இவை இப்பகுதிக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்குமிடையேயான பண்பாட்டு ஒப்புமைகளை உணர்த்துகின்றன.

1.4 சிந்து நாகரிகம்

இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னம் சிந்து நாகரிகமாகும். சிந்து பகுதியில் நாகரிகம் உச்சத்தில் இருந்தபோது, நாம் இதுவரை

11th History Lesson 1 Tamil Medium.indd 11 02-01-2023 13:06:02

விவாதித்த இடைக்கற்காலம், புதிய கற்காலம் உள்ளிட்ட பல பண்பாடுகள் இந்தியாவின் மற்ற பகுதிகளில் நிலவின.

பெயரிடு முறையும் படிநிலைகளும் காலவரிசையும்

இந்தியாவின் வடமேற்குப்பகுதியிலும் பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு. 3000 கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடுகளும் மொத்தமாகச் சிந்து நாகரிகம் எனப்படும். இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால், இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. ஹரப்பா நாகரிகம் திடீரென்று ஒரே நாளில் தோன்றிவிடவில்லை. இப்பகுதியில் புதிய கற்காலக் கிராமங்களின் தொடக்கம் நடைபெற்றது ஏறத்தாழ பொ.ஆ.மு. 7000 (புதிய கற்காலப் பகுதியான மெஹர்காரின் காலத்தைப் போல) எனக் கணிக்கப்படுகிறது. ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாகப் (படிநிலைகள்) பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

தொடக்க கால ஹரப்பா பொ.ஆ.மு.	3000–2600
முதிர்ச்சி அடைந்த ஹரப்பா பொ.ஆ.மு.	2600– 1900
பிற்கால ஹரப்பா பொ.ஆ.மு.	1900–1700

ஒரு நகரப் பண்பாட்டிற்கான கூறுகள் முதிர்ச்சி பெற்ற ஹரப்பாவின் காலத்தில் இருந்தது. அதற்குப்பின் அது வீழ்ச்சி அடைந்தது.

ஹரப்பாவுக்கு முதன்முதலில் பொ.ஆ. (கி.பி) 1826இல் வருகை தந்தவர் சார்லஸ் மேசன். 1831இல் அம்ரி என்னும் ஹரப்பா பண்பாட்டோடு தொடர்புடைய இடத்திற்கு அலெக்ஸாண்டர் பர்ன்ஸ் வருகை தந்தார். லாகூரிலிருந்து முல்தானுக்கு ரயில் பாதை அமைப்பதற்காக ஹரப்பா அழிக்கப்பட்டது. இப்பகுதியிலிருந்து ஒரு முத்திரை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் முதல் அளவையரான அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாமுக்குக் கிடைத்தது. 1853இலும் 1856இலும் 1875இலும் அவர் ஹரப்பாவைப் பார்வையிட்டார். ஆனால் ஹரப்பாவின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரிகத்தையும் உணர்ந்து, அங்கு ஆய்வு நடத்தக் காரணமாக இருந்தவர் சர் ஜான் மார்ஷல் ஆவார். இவர் இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குனராகப் பொறுப்பேற்ற நிகழ்வு, இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம். இவரது முயற்சிகள் மூலம் ஹரப்பாவில் ஆய்வுகள் தொடங்கப்பட்டன.

பிற்காலத்தில் 1940களில் ஆர்.இ.எம். வீலர் ஹரப்பாவில் அகழாய்வுகள் நடத்தினார். இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, ஹரப்பா நாகரிகப் பகுதியில் பெரும்பாலான இடங்கள் பாகிஸ்தானுக்கு உரியதாகிவிட்டன. எனவே ஆய்வாளர்கள் இந்தியாவில் உள்ள ஹரப்பா நாகரிகப்பகுதிகளைக் கண்டறிய ஆவல் கொண்டனர். ஹரப்பா நாகரிகத்துடன் தொடர்புடைய காலிபங்கன், லோத்தல், ராக்கிகார்ஹி, டோலாவீரா ஆகியவை இத்தகைய முயற்சிகளால் அகழாய்வுக்கு உட்பட்டன. 1950களுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்பயணங்களும் அகழாய்வுகளும் ஹரப்பா நாகரிகத்தையும் அதன் இயல்பையும் புரிந்துகொள்ள உதவின.

புவியியல் அமைவிடமும் குடியிருப்புகளும்

சிந்து நாகரிகமும் அதன் சமகாலப் பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக மொத்தம் 1.5 மில்லியன் சதுரகிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன. மேற்கில் பாகிஸ்தான் – ஈரான் எல்லையில் அமைந்துள்ள சட்காஜெண்டர் குடியிருப்புகள், வடக்கில் ஷார்ட்டுகை (ஆப்கானிஸ்தான்), கிழக்கில் ஆலம்கிர்புர் (உத்தரப்பிரதேசம்), தெற்கில் தைமாபாத் (மகாராஷ்டிரம்) எனச் சிந்து நாகரிகப்பகுதியின் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் மையப்பகுதிகள் பாகிஸ்தானிலும் இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.

தொடக்கம்

உலகில் வேளாண்மையும் விலங்கு வளர்ப்பும் மிக முன்பே தொடங்கிவிட்ட பகுதிகளில் சிந்து பகுதியும்(மெஹர்கார்) ஒன்று. சிந்து பகுதியின் புதிய கற்காலப் பண்பாடுகளுக்கும் பிற்காலத்து நகர நாகரிகத்துக்கும் தொடர்ச்சி உள்ளதா எனத் தெரியவில்லை. ஹரப்பா நாகரிகத்தின் தொடக்க நிலையில் அப்பகுதி முழுவதும் கிராமங்களும் ஊர்களும் வளர்ச்சி பெற்றன. முதிர்ந்த ஹரப்பா பண்பாட்டுக் கட்டத்தில் நகர மையங்கள் தோன்றின.

திட்டமிடப்பட்ட நகரங்கள்

ஹரப்பா(பஞ்சாப்,பாகிஸ்தான்),மொகஞ்சதாரோ (சிந்து, பாகிஸ்தான்), டோலவிரா, லோத்தல், சுர்கோட்டடா (குஜராத், இந்தியா), காலிபங்கன் (ராஜஸ்தான், இந்தியா), பனவாலி, ராக்கிகார்ஹி (ஹரியானா, இந்தியா), ஆகியவை ஹரப்பா கால முக்கிய நகரங்களாகும். அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர் வசதி ஆகியவை ஹரப்பா நகரங்களின் குறிப்பிடத்தக்க கூறுகள். தகுந்த குடிமை அதிகாரிகளின் கீழ் இத்தகைய திட்டமிடல் நிகழ்ந்திருக்கக்கூடும். ஹரப்பா மக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தினர். நகரங்கள் சட்டக வடிமைப்பைக் கொண்டிருந்தன. கழிவுநீர் வடிகால்கள் திட்டவட்டமான ஒழுங்குடன் கட்டப்பட்டன. வீடுகள் சேற்று மண்ணாலான

11th History Lesson 1 Tamil Medium.indd 12 02-01-2023 13:06:02

செங்கற்களாலும் கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டன. வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டிருந்தன.

மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். அது கோட்டைப்பகுதியாகவும் தாழ்வான நகரமாகவும் இரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது. வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன. மேல்தளம் இருந்ததை உணர்த்தும்வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன. வீடுகளில் பல அறைகள் இருந்தன. பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன் கூடிய முற்றம் அமைந்திருந்தது.

நகரத்தின் கோட்டைப்பகுதி முக்கியத்துவம் வாய்ந்த இருப்பிடத்துக்கான அமைப்புகளுடன் காணப்படுகிறது. இதைப் பொதுமக்களோ, மக்களில் குறிப்பிட்ட சிலரோ பயன்படுத்தியிருக்கலாம். மொகஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடம் சேமிப்புக்கிடங்காக அடையாளம் காணப்படுகிறது.

பெரும் குளம் (The Great Bath) என்பது முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளமாகும். குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடைபாதை வடக்குப்பக்கத்திலும் தெற்குப்பக்கத்திலும் படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது. நடைபாதையின் அருகே பல அறைகளும் உண்டு. அதன் சுவர்கள் ஜிப்சம் செறிந்த சுண்ணச்சாந்தால் பூசப்பட்டு, நீர் புகாதபடி இருக்கின்றன. அக்கட்டுமானத்தில் கழிவுநீர் வடிகால் வசதி இருந்தது. பெருங்குளம் சடங்குகளுடன் தொடர்புடைய நீராடல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

பெரும் குளம்

வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்தியும்

ஹரப்பா மக்கள் நிலையாக வாழ்வதற்கு வேளாண்மை முக்கிய ஆதாரமாக விளங்கியது. கோதுமை, பார்லி, அவரை வகைகள், கொண்டைக்கடலை, எள், வெவ்வேறு தினை வகைகள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களைப் பயிரிட்டார்கள். வேளாண்மையில் கிடைத்த உபரி வருவாய் முக்கியமான பல செயல்பாடுகளுக்கு ஆதாரமாக விளங்கியது. ஹரப்பா மக்கள் இரட்டைப்பயிரிடல் முறையைப் பின்பற்றினார்கள்.

ஹரப்பா மக்கள் உழவுக்குக் கலப்பையைப் பயன்படுத்தினார்கள். நிலத்தை உழுது, விதைக்கும் வழக்கத்தை அவர்கள் கொண்டிருந்திருக்கலாம். உழுதநிலங்களைக்காலிபங்கனில்காணமுடிகிறது. அவர்கள் பாசனத்துக்குக் கால்வாய்களையும் கிணறுகளையும் பயன்படுத்தினார்கள்.

> தொல்தாவரவியலாளர்கள் (Archaeobotanist) பழமையான வேளாண்மையையும் மனிதருக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவையும் குறித்து ஆய்வு செய்கிறார்கள்.

விலங்குகளைப் பழக்கப்படுத்துதல்

ஹரப்பாவில் மேய்ச்சலும் ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது. செம்மறியாடு, வெள்ளாடு, கோழி உள்ளிட்ட பறவைகளை வளர்த்தார்கள். எருமை, பன்றி, யானை போன்ற விலங்குகள் குறித்த அறிவும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் ஹரப்பா பண்பாட்டில் குதிரை இல்லை. ஹரப்பாவில் மாடுகள் செபு எனப்பட்டன. பெரிய உடலமைப்பைக் கொண்ட இவ்வகை மாடுகள் அவர்களின் பல முத்திரைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஹரப்பா மக்களின் உணவில் மீன், பறவை இறைச்சி ஆகியவையும் இருந்தன. காட்டுப் பன்றி, மான், முதலை ஆகியவற்றுக்கான சான்றுகளும் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கிடைத்துள்ளன.

கைவினைத் தயாரிப்பு

ஹரப்பா பொருளாதாரத்தில் கைவினைத் தயாரிப்பு ஒரு முக்கியமான பகுதியாகும். மணிகள் மற்றும் அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியவை கைவினைச் செயல்பாடுகளாக இருந்தன. கார்னிலியன் (மணி), ஜாஸ்பர்,கிரிஸ்டல்(படிகக்கல்),ஸ்டீட்டைட்(நுரைக்கல்) ஆகியவற்றிலும் செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும் சங்கு, பீங்கான், சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலன்களைச் செய்தார்கள். இந்த அணிகலன்கள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடனும் செய்யப்பட்டன. இவை மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து கலைப்பொருள்கள் ஏற்றுமதி ஆன செய்தி மெசபடோமியாவில் நடத்தப்பட்ட அகழாய்வு மூலம் தெரிகிறது.

11th History Lesson 1 Tamil Medium.indd 13 02-01-2023 13:06:03

ஹரப்பா நாகரிகப் பகுதிகள் சில குறிப்பிட்ட கைவினைப்பொருள் தயாரிப்பில் தேர்ச்சி பெற்றதாக உள்ளன. அத்தகைய பொருள்களும் அவற்றின் உற்பத்தி மையங்களும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொருள்	நகரம்
சங்கு	நாகேஷ்வர், பாலகோட்
வைடூரியம்	ஷார்டுகை
கார்னிலியன் (மணி)	லோத்தல்
ஸ்டீட்டைட் (நுரைக்கல்)	தெற்கு ராஜஸ்தான்
செம்பு	ராஜஸ்தான், ஓமன்

மட்பாண்டங்கள்

ஹரப்பா மக்கள் அன்றாடத் தேவைகளுக்குப் பலவகைப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். அவை நன்கு சுடப்பட்டவை. மட்பாண்டங்கள் அடர் சிவப்பும் கறுப்பும் கலந்த வண்ணம் பூசப்பட்டிருந்தன. அகன்ற பாத்திரத்தை வைப்பதற்கேற்ற தாங்கி, நீரைச் சேர்த்துவைக்கும் கலன், துளைகளுடன் கூடிய கலன், கையில் ஏந்துவதற்கு ஏற்ப குறுகிய பிடியுடன் உள்ள கோப்பை, நுனி சிறுத்தும் தாங்கும் பகுதி நன்கு அகன்றும் உள்ள கோப்பைகள், தட்டுகள், கிண்ணங்கள் போன்ற பலவகைகளில் மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. அவற்றில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் அரச இலைகள், மீன் செதில், ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளும் வட்டங்கள், கோணல்மாணலான கோடுகள், பக்கவாட்டில் உள்ள பட்டைகள், வடிவியல் கூறுகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹரப்பா நாகரிகத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் நன்கு சுடப்பட்டதாகவும் நுட்பமான வேலைப்பாடு கொண்டதாகவும் இருக்கின்றன.

வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள் – ஹரப்பா

உலோகங்களும் கருவிகளும் ஆயுதங்களும்

ஹரப்பா நாகரிகம் வெண்கலக் கால நாகரிகமாகும். அம்மக்கள் செம்பு வெண்கலக் கருவிகள் செய்ய அறிந்தவர்கள். வெண்கலக் கருவிகளைத் தயாரித்தாலும், வேளாண்மைக்கும் கைவினைப்பொருள்கள் உற்பத்திக்கும் பலவகைப்பட்ட கருவிகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. ஒருவகைப் படிகக்கலில் செய்யப்பட்ட கத்திகளும் செம்புப்பொருள்களும் எலும்பு மற்றும் தந்தத்தில் ஆன கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. கூர்முனைக் கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் பிடிப்பதற்கான தூண்டில், சவரக்கத்திகள், தராசுத் தட்டுகள், கண்ணாடிகள், அஞ்சனக் கோல்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. ரோரிசெர்ட் எனப்படும் படிகக்கல்லில் செய்யப்பட்ட கத்திகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினார்கள். அம்பு, ஈட்டி, கோடரி, மழுங்கல் முனைக் கோடரி ஆகியவை அவர்களின் ஆயுதங்களாக இருந்தன. ஹரப்பா மக்கள் இரும்பை அறிந்திருக்கவில்லை.

ரோரி செர்ட் : இந்தப் படிவுப்பாறை பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதியில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.

துணிகளும் அணிகலன்களும்

ஹரப்பா மக்கள் துணியாலான ஆடைகளை அணிந்தார்கள். கல்லாலும் உலோகங்களாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள். அவர்களுக்குப் பருத்தி, பட்டு ஆகியவை குறித்த அறிவு இருந்தது. ஒரு சுடுமண் பொம்மையில் மதகுரு போல் தோற்றமளிக்கும் உருவம் துணியாலான, பூவேலைப்பாடுகள் கொண்ட மேலாடையை அணிந்துள்ளதைக் காண்கிறோம். மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட 'நடனமாடும் பெண்' சிலையின், முழங்கையின் மேல்பகுதி வரை வளையல்கள் காணப்படுகின்றன. ஹரப்பா மக்கள் கார்னிலியன், செம்பு, தங்கம் ஆகியவற்றால் ஆன அழகிய வேலைப்பாடுகள் கொண்ட அணிகலன்களை உருவாக்கினர். அவற்றில் சில பொறிக்கப்பட்ட வடிவங்களைக் கொண்டுள்ளன. இவை மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஒப்பனைப்பாண்டங்கள், கல்லாலான பாத்திரங்கள், சங்கு வளையல்கள் ஆகியவையும் பயன்பாட்டில் இருந்தன. அவர்கள் உருவாக்கிய அணிகலன்கள் வணிக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக விற்கவோ, பண்டமாற்றம் செய்யவோ பயன்பட்டன.

வணிகமும் பரிவர்த்தனையும்

ஹரப்பாவின் பொருளாதாரச் செயல்பாடுகளில் வணிகமும் பரிவர்த்தனையும் முக்கியப்பங்கு வகித்தன. ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியோவுடன் நெருக்கமான

11th History Lesson 1 Tamil Medium.indd 14 02-01-2023 13:06:03

வணிகத்தொடர்பு இருந்தது. அவர்கள் இந்தியாவில் பிற பண்பாடுகளைச் சேர்ந்த மக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள். சுமேரிய நாகரிகம் நிலவிய ஓமன், பஹ்ரைன், ஈராக், ஈரான் ஆகிய இடங்களில் ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகளும் பொருள்களும் கிடைத்துள்ளன. க்யூனிபார்ம் கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன. அவற்றில் காணப்படும் 'மெலுகா' என்னும் சொல் சிந்து பகுதியைக் குறிக்கிறது. ஹரப்பாவில் செய்யப்பட்ட ஜாடி ஓமனில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகள், எடைக்கற்கள், தாயக்கட்டைகள், மணிகள் மெசபடோமியாவில் கண்டெடுக்கப்பட்டன. கார்னிலியன், வைடூரியம், செம்பு, தங்கம், பலவகைப்பட்ட மரங்கள் ஆகியவையும் ஹரப்பாவிலிருந்து மெசபடோமியாவுக்கு ஏற்றுமதியாயின. ஹரப்பா மக்கள் இந்தியாவின் வேறு பகுதிகளுடனும் தொடர்பு கொண்டு, மூலப்பொருள்களைப் பெற்று, அவற்றை மேலும் சில செய்முறைகளுக்கு உட்படுத்தி, உற்பத்தியில் ஈடுபட்டார்கள்.

எடைக்கற்களும் அளவீடுகளும்

ஹரப்பாவில் சரியான எடைக்கற்களும் அளவீடுகளும் பயன்படுத்தப்பட்டன. வணிகப் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டதால், முறையான அளவீடுகளுக்கான தேவையிருந்தது. ஹரப்பா நாகரிகப்பகுதிகளிலிருந்து படிகக்கல்லாலான, கனசதுர வடிவ எடைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எடைக்கற்கள் இரும முறையை உணர்த்துகின்றன. எடையின் விகிதம் இருமடங்காகும்படி பின்பற்றப்பட்டுள்ளது: 1:2:4:8:16:32. 16 –இன் விகிதம் கொண்ட சிறிய எடை அளவீடு இன்றைய அளவீட்டில் 13.63 கிராம் கொள்ளத்தக்கதாக உள்ளது. ஹரப்பா மக்கள் இன்றைய அளவீட்டில் ஒரு இஞ்ச் = 1.75செ.மீ ஆகக் கொள்ளும்விதத்தில் அளவுகோலையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். எடைக்கற்கள் கனசதுர வடிவத்தில், படிகக்கல்லில் செய்யப்பட்டிருந்தன. அவர்கள் இரும எண் முறையை (1,2,4,8,16,32,…..) பின்பற்றினார்கள். இம்முறை அணிகலன்களையும் உலோகங்களையும் எடை போடப் பயன்பட்டிருக்கலாம்.

முத்திரைகளும் எழுத்துமுறையும்

சிந்துவெளி முத்திரை

ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் போன்றவற்றாலான முத்திரைகள் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் அதிகளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஹரப்பா எழுத்துமுறையை இன்றுவரைக்கும் நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. 5000க்கும் மேற்பட்ட எழுத்துத்தொடர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஹரப்பாவில் கிடைத்தவற்றில் மிக நீளமானதாகக் கருதப்படும் எழுத்துத்தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது. பல அறிஞர்கள் அது திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகக் கருதுகிறார்கள். போக்குவரத்துக்கு உட்படும் பொருள்கள் மீது குறியிட்டு அடையாளப்படுத்துவதற்காக முத்திரைகள் பயன்பட்டிருக்கலாம். பொருள்களின் உரிமையாளரைக் குறிப்பதற்கும் அவை பயன்பட்டிருக்கலாம்.

கலையும் பொழுதுபோக்கும்

மதகுரு அரசன்

ஹரப்பா நாகரிகப்பகுதிகளிலிருந்து கிடைக்கும் சுடுமண் உருவங்கள், மட்பாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள், வெண்கல உருவங்கள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன. ஸ்டீட்டைட் கல்லில் அமைந்த 'மத குரு', செம்பாலான 'நடனமாடும் பெண்' (இவையிரண்டும் மொகஞ்சதாரோவில் கிடைக்கப்பெற்றுள்ளன.), ஹரப்பா, மொஹஞ்சதாரோ, டோலாவிரா ஆகிய இடங்களில் கிடைத்த கல் சிற்பங்கள் ஆகியவை ஹரப்பாவின் முக்கிய கலைப்படைப்புகளாகும். பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், சக்கரங்கள், பம்பரங்கள், சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப்படுவதைப் போன்ற காய்கள், கட்டங்கள் வரையப்பட்ட பலகைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்குச் சான்றாகும்.

நம்பிக்கைகள்

ஹரப்பா புதைகுழிகள்

சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டார்கள். அரச மரங்கள் வழிபாட்டுக்குரியதாக இருந்திருக்கலாம். சில சுடுமண் உருவங்கள் தாய்த்தெய்வத்தைப் போல் உள்ளன. காலிபங்கனில் வேள்வி பீடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஹரப்பா மக்கள் இறந்தோரைப் புதைத்தனர். புதைப்பதற்கான நடைமுறைகள் விரிவாக இருந்தன. இறந்த உடல்களை எரித்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. ஹரப்பா புதைகுழிகளில் மட்பாண்டங்கள், அணிகலன்கள், தாமிரக்கண்ணாடி, மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன. இறப்பிற்கு பின்னரான

11th History Lesson 1 Tamil Medium.indd 15 02-01-2023 13:06:04

வாழ்க்கை பற்றிய அவர்களின் நம்பிக்கையை இவை குறிக்கலாம்.

அரசியல் முறை

மட்பாண்டங்கள், முத்திரைகள், எடைக்கற்கள், செங்கற்கள் ஆகியவற்றில் காணப்படும் சீரான தன்மை அரசியல் முறை செயல்பட்டதை உணர்த்துகிறது. தீவிரமான வணிக நடவடிக்கைகளுக்குத் தொழிலாளர்களைத் திரட்ட வேண்டிய தேவை இருந்திருக்கும். அதிகாரம் படைத்த ஆட்சியமைப்பால் இத்தேவை நிறைவேற்றப்பட்டிருக்கலாம். ஹரப்பாவும் மொஹஞ்சதாரோவும் நகர அரசுகளுக்கான ஆட்சியமைப்பின் கீழ் இயங்கியிருக்கலாம். பண்பாட்டுப் பொருள்களிலும் அளவீடுகளிலும் காணப்படும் சீரான தன்மை ஹரப்பா சமூகம் உறுதியான மைய நிர்வாகத்தின் கீழ் இயங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.

நாகரிகத்தை உருவாக்கியவர்களும் இந்தியப் பண்பாட்டின் உருவாக்கமும்

ஹரப்பா நாகரிகத்தைப் உருவாக்கியவர்கள் திராவிட மொழிகளைப் பேசியவர்கள் என ஒரு ஆராய்ச்சியாளர் தரப்பு தெரிவிக்கிறது. தங்கள் நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஹரப்பா மக்கள் கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் இடம்பெயர்ந்ததைத் தொல்லியல் சான்றுகள் காட்டுகின்றன. அவர்கள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் குடிபெயர்ந்திருக்கலாம். எனினும் ஹரப்பா எழுத்துகளின் பொருள் விளங்கினால்தான், உறுதியான விடை கிடைக்கும்.

சிந்து நாகரிகமும் சமகாலப் பண்பாடுகளும்

மேய்ச்சல் சமூக மக்கள், வேளாண்மை செய்வோர், வேட்டையாடிகள்–உணவு சேகரிப்பாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய பல குழுக்கள் சிந்து பகுதியில் வசித்தன. இப்பகுதியில் கிராமங்களும் பெரிய நகரங்களும் இருந்தன. மக்கள் அங்கு ஒன்று கலந்திருந்தனர். இத்தகைய எண்ணற்ற சமூகங்களைச் சார்ந்த மக்கள் இக்காலகட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையும், குஜராத்திலிருந்து அருணாசல பிரதேசம் வரைக்கும் இருந்திருக்கலாம். அவர்களின் வரலாறும் இதே அளவு முக்கியமானது. இச்சமூகங்களின் பண்பாடும் சூழலியல் அறிவும் இந்தியப் பண்பாட்டுக்குப் பங்களிப்பு செய்துள்ளன.

இந்தியாவின் வடமேற்குப்பகுதியில் சிந்து நாகரிகம் செழிப்புற்றிருந்தபோது, பிற பகுதிகளில் பல்வேறு பண்பாடுகள் வளர்ந்துகொண்டிருந்தன. இந்திய துணைக்கண்டத்தின் தென்பகுதியிலும் (கேரளா) இலங்கையிலும் வேட்டையாடியும் சேகரித்தும் வாழ்ந்த சமூகங்கள் செயல்பட்டன. படகுப்போக்குவரத்து குறித்த அறிவுடன் இருந்த ஹரப்பா மக்கள் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அதற்குத்

சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்

இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகரமயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும்.

சிந்து நாகரிகத்தின் தோற்றமும் தோற்றுவித்தவர்கள் குறித்த செய்திகளும் விவாதத்துக்கு உரியனவாகவே உள்ளன. சிந்து எழுத்துகளின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை. தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்ட வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்துக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவுவதற்கான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடைக்கற்காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உறுதியானதொரு முடிவுக்கு வர இன்னும் அதிக ஆய்வுகள் தேவை.

பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

11th History Lesson 1 Tamil Medium.indd 16 02-01-2023 13:06:05

தெளிவானதொல்லியல்சான்றுகள்கிடைக்கவில்லை. தென்னிந்தியாவின் வட பகுதி, குறிப்பாகக் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகியவை புதிய கற்காலப் பண்பாடுகளுடன், மேய்ச்சல் மற்றும் கலப்பை சார்ந்த வேளாண்மையிலும் ஈடுபட்டுவந்தன. புதிய கற்காலப் பண்பாடு காஷ்மீர், கங்கைச் சமவெளி ஆகிய வட இந்தியப்பகுதிகளிலும்மத்திய இந்தியாவிலும்கிழக்கு இந்தியாவிலும் பரவியிருந்தபோது தக்காணத்திலும் மேற்கு இந்தியாவிலும் செம்புக்காலப் பண்பாடு நிலவியது. இவ்வாறு இந்தியா ஹரப்பா நாகரிகக் காலத்தில் பல்வேறு பண்பாடுகளின் கலவை என்று சொல்லத்தகுந்த நிலப்பகுதியாக விளங்கியது.

வீழ்ச்சி

ஏறத்தாழ பொ.ஆ.மு. 1900இல் சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது. காலநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி,தொடர்வறட்சியின் காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் காய்ந்து வற்றிப்போதல் ஆகியவை வீழ்ச்சிக்கான காரணங்களாக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன. சிந்து நாகரிகத்தின் அழிவுக்குப் படையெடுப்பு, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக்கொண்ட நிகழ்வு ஆகிய காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன. காலப்போக்கில் இம்மக்கள் சிந்து பகுதியிலிருந்து தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் இடம்பெயர்ந்தார்கள்.

பாடச் சுருக்கம்

- இந்தியாவின் வரலாறு வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தில் ஏறத்தாழ 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்குகிறது.
- வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து ஏராளமான மக்கள் குழுக்கள் இந்நிலப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இக்குழுக்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொண்டு, தனிச்சிறப்புடன் கூடிய வாழ்க்கைமுறையை உருவாக்கிக்கொண்டார்கள்.
- கைக்கோடரிகளைப் பயன்படுத்திய மனிதர்கள் இந்தியாவில் இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தார்கள். இடைக்கற்காலத்திலிருந்து வெவ்வேறு சமூகங்கள் இந்தியாவெங்கும் பரவி, இந்தியாவின் பண்பாட்டு அடித்தளத்தை உருவாக்கினார்கள்.
- இந்த அனைத்துக்குழுக்களின் கூட்டான பங்களிப்பு பன்மைத்துவம் வாய்ந்த இந்தியப் பண்பாட்டுக்குச் செழுமை சேர்த்துள்ளது.
- இந்தியாவின் வெவ்வேறுபட்ட மொழிகளும் பண்பாடுகளும் இந்திய வரலாற்றோடு தொடர்புடைய சிக்கலான செயல்முறையைச் சுட்டுகிறது.
- முதல் நகரமயமாக்கம் சிந்து பகுதியை மையமாகக் கொண்டு ஏறத்தாழ பொ.ஆ.மு. 2600இல் நிகழ்ந்தது. சிந்து நாகரிகம் வடமேற்கு இந்தியாவில் ஒரு முக்கியமான பண்பாட்டு முறைமையாக இருந்தபோது, ஏராளமான பண்பாடுகள் இந்தியாவின் வேறு, வேறு பகுதிகளில் இருந்தன.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் __________ எனப்படுகிறது.
   (அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்
   (ஆ) வரலாற்றுக்காலம்
   (இ) பழங் கற்காலம் (ஈ) புதிய கற்காலம்

2. வரலாற்றின் பழமையான காலம் __________ ஆகும்.
   (அ) பழங் கற்காலம் (ஆ) புதிய கற்காலம்
   (இ) செம்புக்காலம் (ஈ) இரும்புக்காலம்

3. பழங் கற்காலக் கருவிகள் முதன்முதலில் __________ இல் அடையாளம் காணப்பட்டன.
   (அ) 1860 (ஆ) 1863
   (இ) 1873 (ஈ) 1883

4. மத்திய பிரதேசத்தில் உள்ள சன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர்-1, பாகோர்-3 ஆகியவை __________ நாகரிகம் நிலவிய இடங்கள்.
   (அ) கீழ்ப்பழங்கற்காலம்
   (ஆ) இடைப் பழங்கற்காலம்
   (இ) மேல்பழங்கற்காலம் (ஈ) புதிய கற்காலம்

5. மெஹர்கர் __________ பண்பாட்டுடன்தொடர்புடையது.
   (அ) பழைய கற்காலப் (ஆ) புதிய கற்காலப்
   (இ) இடைக்கற்காலப் (ஈ) செம்புக்காலப்

6. __________ கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத்தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.
   (அ) க்யூனிபார்ம் (ஆ) ஹைரோக்ளைபிக்ஸ்
   (இ) தேவநாகரி (ஈ) கரோஷ்டி

7. பர்சஹோம் __________ நிலவிய இடமாகும்.
   (அ) காஷ்மீரின் புதிய கற்காலப்பண்பாடு
   (ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப்பண்பாடு
   (இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப்பண்பாடு
   (ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப்பண்பாடு

11th History Lesson 1 Tamil Medium.indd 17 02-01-2023 13:06:05

8. தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது ________ ஆகும்.
(அ) பொ.ஆ.மு. 3000–2600
(ஆ) பொ.ஆ.மு. 2600–1900
(இ) பொ.ஆ.மு. 1900 – 1700
(ஈ) பொ.ஆ.மு. 1700–1500

9. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ________ இருந்தது.
(அ) வேளாண்மை (ஆ) மட்பாண்டம் செய்தல்
(இ) கைவினைத்தொழில்கள் (ஈ) மீன் பிடித்தல்

10. சிந்து நாகரிகம் ஏறத்தாழ ________ இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.
(அ) பொ.ஆ.மு. 1800 (ஆ) பொ.ஆ.மு. 1900
(இ) பொ.ஆ.மு. 1950 (ஈ) பொ.ஆ.மு. 1955

II. குறுகிய விடை தருக

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
2. பழங் கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
3. ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.
4. இடைக்கற்காலப் பண்பாடு: குறிப்பு வரைக.
5. ஹரப்பா நாகரிகம் வெவ்வேறு கட்டங்களாக எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?
6. பெருங்குளம்: சிறு குறிப்பு வரைக.
7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறுக.

III. சுருக்கமான விடை தருக

1. அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.
2. இந்தியாவின் இடைப் பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளை எழுதுக.
3. இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்களைக் குறிப்பிடுக.
4. இடைக்கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் யாவை?
5. சிந்துநாகரிகம்நிலவியபகுதியின்எல்லைகளைக் குறிப்பிடுக.
6. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.
7. ஹரப்பா மக்களின் 'நம்பிக்கைகள்' குறித்து நீங்கள் அறிந்தது என்ன?

IV. விரிவான விடை தருக

1. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.
2. கீழ் மற்றும் இடைப்பழங்கற்காலப் பண்பாடுகளை ஒப்பிடுக.
3. 'காஷ்மீர் பகுதியின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரிகத்தின் காலத்தைச் சேர்ந்தது.' கூற்றை நிறுவுக.
4. தென்னிந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு எங்கு நிலவியது? அதன் முக்கியமான கூறுகளைக் குறிப்பிடுக.
5. சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது?
6. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

செயல்பாடுகள்

1. பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள் குறித்து அறிந்துகொள்ள அருகிலுள்ள அருங்காட்சியகத்துக்குச் செல்க.
2. பழைய கற்காலக் கருவிகளின் வகைகளைப் படம் வரைக.
3. மனிதப் பரிணாம வளர்ச்சியின் வெவ்வேறு படிநிலைகளை விளக்கும் படங்களை சேகரிக்க.
4. சிந்து நாகரிகப் பரவலைப் படம் வரைக. அந்த நாகரிகம் நிலவியதாகக் கண்டறியப்பட்டுள்ள இடங்களை அதில் குறிக்கவும்.

ஆசிரியரின் வழிகாட்டலுடன் செய்ய வேண்டியவை

1. இந்தியாவில் நிகழ்ந்த கற்காலம் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.
2. சிந்து நாகரிகம் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.
3. இந்தியாவில் நிகழ்ந்த புதிய கற்காலப் பண்பாடுகள் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.
4. இந்தியாவில் காணப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய கால கலை குறித்து பவர்பாயிண்ட் விளக்கக் காட்சியை உருவாக்குக.

மூலநூல்கள்

1. Irfan Habib. *The Indus Civilization. The People's History of India series.* Tulika, 2002
2. Jonathan Mark Kenoyer. *Ancient Cities of the Indus Valley Civilization.* Oxford University Press, 1998
3. L. Gregory Possehl, *The Indus Age: The Beginnings.* Oxford & IBH, 1999
4. R.S. Sharma, *India's Ancient Past.* Oxford University Press, 2005
5. Romila Thapar. *From Lineage to State: Social Formations in mid First Millennium BC in the Ganga Valley.* Oxford University Press, 1984
6. Romila Thapar. *Early India from the Origins to 1300 AD.* Penguin, 2015
7. Upinder Singh. *A History of Ancient and Early Medieval India.* Pearson, 2008

11th History Lesson 1 Tamil Medium.indd 18 02-01-2023 13:06:05

இணையதள ஆதாரங்கள்

1. http://www.paleophilatelie.eu
2. http://www.homepages.ucl.ac.uk/~tcrndfu/web_project/arch_back.html

கலைச்சொற்கள்

சிறு கொம்புடைய மான் வகை	Nilgai	a deer with small horns
மஞ்சள், சிவப்பு , பழுப்பு நிறம் கொண்ட கல் வகை	Jasper	a precious stone in yellow, red and brown colour
பல்நிறம் கொண்ட விலை குறைந்த மணிக்கல்	quartz	semi-precious stone with varying colour
கிழக்கு மத்தியத்தரைக்கடல் பகுதி	Levant	Eastern Mediterranean Region
ஒரு வகை அழகிய மான்	gazelle	a kind of deer
மரக் கைப்பிடி கொண்ட உளி போன்ற கருவி	adzes	chisel-like tool fastened to wooden handle
உயர் வகைக் கல்	agate	a kind of hard precious stone
அணிகலன்களில் பதிக்கும் சிவப்பு நிறக் கல்வகை	carnelian	reddish variety of stone used in jewellery
தாவர குடும்ப வகை (அவரை வகை)	legume	a kind of botanical family in which seeds are found in pods
பொருள்களின் பெயரிடும் முறை	nomenclature	system of naming
துவரை வகை	lentil	a kind of pulse
கோப்பை	goblet	a cup with handle at the base
சான்றாகக் காண்பித்தல்	adduced	showed as proof
கூழாங்கற்கள் மற்றும் சரளைக் கற்களாலான பாறை	conglomerate	rock consisting of gravel or pebbles

இணையச் செயல்பாடு

பண்டைய இந்தியா: தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

மெய்நிகர் அருங்காட்சியகம் வழியே பண்டைய இந்தியாவின் நிகழ்வுகளைக் காண்போமே !

படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி Natural History என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க
- இப்போது மெய்நிகர் அருங்காட்சியகம் தோன்றும். அதை கீழ் நோக்கி நகர்த்தி "Select Past Exhibits" என்பதைச் சொடுக்கவும்.
- மேலும் கீழ் நோக்கி நகர்த்தி "Western Cultures" என்பதைச் சொடுக்கவும்.
- திரையில் காணும் காட்சிப்படங்களைத் தேர்வு செய்து, சுட்டியின் உதவியுடன் படங்களை 360° கோணத்தில் பெரிதுபடுத்தியும் சிறிதாக்கியும் பண்டைய இந்தியாவின் காட்சிகளைக் காண்க.

உரலி

https://naturalhistory.si.edu/VT3/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

11th History Lesson 1 Tamil Medium.indd 19 02-01-2023 13:06:06

அலகு 2

பண்டைய இந்தியா: செம்புக்கால, பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள்

கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவில் செம்புக்காலத்தின் தனிச்சிறப்புகளைப் புரிந்துகொள்வது
- இந்தியாவின் பெருங்கற்கால, இரும்புக்காலப் பண்பாடுகளைத் தெரிந்து கொள்வது
- ஆரியர், ஆரியர் அல்லாதோர், வேதகாலப் பண்பாடு ஆகியன குறித்த அறிமுகத்தைப் பெறுதல்
- தொடக்க, பிந்தைய வேத காலச் சமூகங்கள் இடையேயான தனித்தன்மைகளைக் கற்றல்

அறிமுகம்

வழக்கமான நேர்க்கோட்டு முறையிலான இந்திய வரலாறு, சிந்து நாகரிகம் குறித்த தகவல்களை வழங்கி, பின் வேதகாலத்திற்கு நகர்ந்து, அதன் பின்னர் மகாஜனபதங்கள் குறித்த விளக்கங்களைத் தருகின்றது. ஆனால் சிந்துப் பண்பாட்டின் சரிவுக்குப் பின்னர் பொ.ஆ.மு. 2000 முதல் பொ.ஆ.மு. 600 வரையிலுமான காலகட்டத்தையும், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுமான, அருணாசலப் பிரதேசத்திலிருந்து குஜராத் வரையிலுமான நிலப்பரப்பு முழுவதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டால், பழங்கால இந்தியாவில் பல்வேறு மொழிகளைப் பேசிய பல்வகைப்பட்ட பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவாக விளங்கும்.

இப்பாடம் பிந்தைய ஹரப்பா காலகட்டம், செம்புக்காலம், பெருங்கற்காலம், இரும்புக்காலம், வேதகாலப் பண்பாடுகள் மற்றும் ஆரியர்கள் குறித்து விவரிக்கின்றது. சிந்துப் பண்பாடு குறித்து முந்தைய பாடத்தில் கற்றோம். இப்பாடம் சுமார் பொ.ஆ.மு. 3000த்திற்கும், மகாஜனபதங்கள் தோற்றத்திற்கும் இடையேயான வரலாறு, குறிப்பாக சமூகப் பொருளாதார மாற்றங்கள் குறித்து விளக்குகின்றன.

சான்றுகள்

பொ.ஆ.மு. 1900 காலகட்டத்தில் சிந்து நாகரிகம் மறைந்ததைத் தொடர்ந்து இந்திய வரலாறு புதிய கற்காலம், செம்புக்காலம், பெருங்கற்காலம், இரும்புக்காலம், வேதகாலம் ஆகிய பண்பாடுகளைச் சேர்ந்த நாடோடிச் சமூகங்கள், வேட்டையாடும், உணவு சேகரிக்கும் சமூகங்கள், நிரந்தரமற்ற, ஓரளவு நிரந்தரமான இடத்தில் தங்கி வாழ்ந்த வேளாண்–மேய்ச்சல் சமூகங்களைக் கொண்டிருந்தது. இந்திய வரலாற்றில் பொ.ஆ.மு. 3000 முதல் பொ.ஆ.மு. 600 வரையிலான நீண்ட கால வரலாறு தொடர்பாக இருவகைப்பட்ட முக்கிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்று அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்கள், களிமண் பாண்டங்கள், மக்கிய தாவரங்கள், உலோகப் பொருள்கள் ஆகியன உள்ளடக்கிய சான்றுகளாகும். மற்றொன்று வேதகால இலக்கியங்களாகும். இக்கால கட்டத்திற்கு எழுதப்பெற்ற சான்றுகள் இல்லை. ஏனெனில் வேத இலக்கியங்கள் வழிவழியாக வாய்மொழி மூலம் பயிலப்பட்டு நினைவில் கொள்ளப்பட்டவை ஆகும். இக்குறிப்பிட்ட காலத்தில் சிந்துப் பண்பாடு சார்ந்த குறியீடுகள் (இவை இன்றளவும் வாசித்து அறியப்படவில்லை) தவிர வேறு எழுத்து முறையை மக்கள் வளர்த்துக்கொள்ளவில்லை. வேத நூல்களில் சொல்லப்பட்டுள்ள பல குழுக்களைச் சேர்ந்த மக்களைப் பற்றிய செய்திகளையும் தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட பண்பாடுகளையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு தொடர்புபடுத்துவது எளிதான பணியல்ல. சிந்து நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் யார் என்பது குறித்தும் பிற தொல்லியல் பண்பாடுகள் குறித்தும் பல கருத்துக்கள் நிலவுகின்றன. இந்தக் கால வெளிக்குள் வெவ்வேறான பண்பாடுகளும், பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை முறைகளை மேற்கொண்ட சமூகங்களும் இந்தியாவில் வாழ்ந்தன.

11th History Lesson 2 Tamil Medium.indd 20 20-12-2022 15:18:54

தொடக்ககால வேதப் பண்பாடு இந்தியாவின் சில செம்புக்கால பண்பாடுகளின் கூறுகளோடு பொருந்துகிறது. அதைப் போலவே பிற்கால வேதப் பண்பாடு இந்தியாவின் இரும்புக்காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் தீட்டப்பட்ட சாம்பல் நிறப் பாண்டப் பண்பாட்டோடு பொருந்தி உள்ளது. சிந்து நாகரிகக் காலத்தில் குறிப்பிட்ட நிலப் பகுதிகளில் மட்டும் நிலவிய நகர்ப்புறம் சார்ந்த பண்பாடுகள் போல் இல்லாமல், இக்காலகட்டத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலும், வேளாண்மை மற்றும் தொழில் நுட்பங்களின் விரிவாக்கத்தையும், வளர்ச்சியையும் காண முடிகிறது. இக்காலத்தில், கைவினைப்பொருள் உற்பத்திப் பெருக்கமும் மக்கட்தொகைப் பெருக்கமும் ஏற்பட்டன. இந்தியா முழுவதிலும் ஒரு வலுவான பண்பாட்டு அடித்தளம் உருவாக்கப்பட்டதும் இக்காலகட்டத்திலேதான் ஆகும். இன்றளவும் வேளாண்மையும் கால்நடை மேய்ச்சலும் ஆதிக்கம் செலுத்தும் இந்தியாவின் கிராமக் குடியிருப்புகளுக்கான விரிவான அடித்தளம் இக்காலகட்டத்திலேயே அமைக்கப்பட்டது.

வேதகால இலக்கியங்கள்

இந்தியாவின் பழம்பெரும் சமயநூல்களில் வேதங்களும் அடங்கும் (வேதங்கள்; வித்=தெரிந்து கொள்ளல், வித்யா). வேதங்கள் நான்காகும். அவை ரிக், யஜூர், சாம, அதர்வ வேதங்களாகும். இவற்றில் ரிக் வேதம் பழமையானதாகும். இவை மனப்பாடம் செய்யப்பட்டு வாய்வழி வாயிலாக, தலைமுறை தலைமுறையாக பிராமணர்களால் போதிக்கப்பட்டது. எழுதும் முறை அறிமுகமான பின்னர் பிற்காலத்தில் இவை எழுத்து வடிவம் பெற்றன. பொ.ஆ. 10–11ஆம் நூற்றாண்டுகளில்தான் வேதப்பாடல்கள் முதன்முதலாக எழுதப்பெற்றதாக அறியப்படுகிறது. அப்பாடல்கள் அரசியல், சமூகம், மதம், தத்துவம் சார்ந்த செய்திகளைக் கொண்டிருப்பதால், அவை வரலாறு எழுதுவதற்கான சான்றுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வேதப்பாடல்களின் முக்கியத் தொகுப்புகள் சம்ஹிதைகள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றில் பழமையானது ரிக் வேத சம்ஹிதை ஆகும். இது பொ.ஆ.மு.1500க்கும் பொ.ஆ.மு.1000க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது. ரிக் வேதம் மொத்தம் 10 காண்டங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் இரண்டிலிருந்து ஏழு வரையிலான காண்டங்கள் முதலில் எழுதப்பெற்றன எனவும், 1, 8, 9, 10 ஆகிய காண்டங்கள் பிற்காலத்தைச் சேர்ந்தவை எனவும் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு சம்ஹிதையும் பிராமணங்கள் என்னும் இணைப்புக் குறிப்புகளைக் கொண்டுள்ளன. இவை பாடல்கள் மற்றும் சடங்குகள் குறித்த விளக்கவுரைகளாகும். சம்ஹிதைகள் இயற்றப்பட்ட பின்னரே பிராமணங்கள் இயற்றப்பட்டன. இவை சடங்குகள் பற்றிய பாடங்களாகும். இவை சடங்குகளின் மத சமூக முக்கியத்துவத்தை விளக்குகின்றன. ஒவ்வொரு பிராமணமும், ஓர் ஆரண்யகம், ஓர் உபநிடதம் கொண்டுள்ளது. ஆரண்யகங்கள் என்பவை காடுகளில் வாழும் முனிவர்கள் ரகசியமாக மேற்கொள்ள வேண்டிய மந்திரச் சடங்குகள் குறித்த குறிப்புகளைக் கொண்டுள்ளன. உபநிடதங்கள் தத்துவக் கருத்துகளையும் வினாக்களையும் கொண்டுள்ளன.

யஜூர், சாம, அதர்வ வேதங்கள் சற்றே பிற்காலத்தைச் சேர்ந்தவையெனக் கணக்கிடப்பட்டுள்ளன. யஜூர், சாம, அதர்வ வேதங்களின் சம்ஹிதைகளும் இவ்வேதங்களோடு இணைக்கப்பட்டுள்ள பிராமணங்களும், ஆரண்யகங்களும் உபநிடதங்களும் வேத காலத்தின் இறுதியில் இயற்றப்பட்டவையாகும். சாமவேதம் இசைப்பாடல்களாக அமைந்துள்ளது. யஜூர் வேதம் சடங்குகளையும் பாடல்களையும் கொண்டுள்ளது. அதர்வ வேதமானது, மாய மந்திர ஜாலங்கள் அடங்கியது.

> **ஜென்ட் அவெஸ்தா** : ஜென்ட் அவெஸ்தா எனப்படும் இப்பாரசீக/ஈரானிய நூல் ஜொராஸ்டிரிய மதத்தைச் சேர்ந்த நூலாகும். இந்தோ–ஈரானிய மொழிகளைப் பேசிவந்த மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு, அவர்களின் கடவுள்கள் குறித்து இந்நூல் பல செய்திகளைக் கூறுகிறது. இந்தியாவின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளைப் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள சொற்கள் வேதநூல்களின் சமஸ்கிருதச் சொற்களோடு மொழி ஒப்புமை கொண்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே அமைந்திருந்த ஆரியர்களின் தொடக்ககால வாழிடங்கள் பற்றி அறிந்துகொள்ள ஏதுவான துணைச்சான்றுகளை இந்நூல் கொண்டுள்ளது.

2.1 இந்தியாவில் ஆரியருக்கு முந்தைய – ஹரப்பாவிற்கு பிந்தைய, செம்பு காலகட்ட பண்பாடுகள்

ஹரப்பா பண்பாட்டிற்கு முந்தைய பண்பாடுகளே இந்தியாவின் மிகப் பழமையான செம்புக்காலப் பண்பாடுகளாகும். இவை முதிர்ந்த நிலை ஹரப்பா நாகரிக காலகட்டம் தொடங்குவதற்கு முன்பும் அதற்குப் பின்னரும்

11th History Lesson 2 Tamil Medium.indd 21 20-12-2022 15:18:55

தொடர்ந்து நீடித்தன. இந்தியாவில் காணப்படும் பிற செம்புக்காலப் பண்பாடுகளும் இதன் சமகாலத்தவை. ஹரப்பா பண்பாட்டின் சரிவுக்குப் பின்னரும்கூட அவை தொடர்ந்தன. இந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடுகள் சில ஹரப்பா பண்பாட்டின் சமகாலத்தவையாகவும், அதற்குப் பின்னரான காலங்களைச் சேர்ந்தவையாகவும் உள்ளன. முதிர்ந்த நகர்ப்புறம் சார்ந்த ஹரப்பா பண்பாட்டைப் போல் இல்லாமல், இச்செம்புக்காலப் பண்பாடுகள் பொதுவாக கிராமப்புற தன்மை கொண்டவையாகவும், வேளாண்மை மற்றும் மேய்ச்சல் தொழில் பண்பாடுகளாகவும் இருந்தன.

செம்புக்காலப் பண்பாட்டினைச் சேர்ந்த மக்கள் செம்பினால் செய்யப்பட்ட பொருள்களையும், கற்களாலான கூரான கருவிகளையும் மட்பாண்டங்களையும் பயன்படுத்தினர். மேலும், பிற்காலத்தில் குறைந்த தரம் கொண்ட இரும்பையும் பயன்படுத்தியுள்ளனர். இக்கால மக்கள் நிலையற்ற அல்லது ஓரளவு நிலையான குடியிருப்புகளில் வாழ்ந்தார்கள் என்பதற்கு இந்தியாவின் மேற்கு, வடமேற்குப் பகுதிகளின் தொடக்ககால வேளாண் பண்பாடுகள், புதிய கற்காலப் பண்பாடுகளைக் காட்டிலும் செம்புக்காலப் பண்பாடுகளுடனே அதிகம் தொடர்புடையவையாகும்.

செம்புக்காலப் பண்பாட்டினைச் சேர்ந்த மக்கள் வேளாண்மை செய்தார்கள். விலங்குகளைப் பழக்கப்படுத்தினார்கள். எருது, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி ஆகியவற்றை வளர்த்தார்கள். ஆமைகளும் கோழிகளும் இவர்களின் வாழ்விடங்களில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவர்கள் வாழ்ந்த வீடுகள் கல்லாலும், சுடாத மண் கற்களாலும், களிமண்ணாலும், மரப்பொருள்களினாலும் கட்டப்பட்டவையாகும். இவற்றின் சுவர்கள் மூங்கில் தட்டிகளால் ஆனது. தானியங்களைச் சேகரித்து வைக்கும் குதிர்கள் கண்டறியப்பட்டுள்ளன. மக்கள் கருப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்களையும், செந்நிறத்தின் மீது கருமை நிற ஓவியம் தீட்டிய மட்பாண்டங்களையும் பயன்படுத்தினர்.

இவ்விடங்களில் அதிகமான எண்ணிக்கையில் செம்பினாலான பொருள்கள் கிடைக்கின்றன. செம்பினாலான தட்டையான கோடாரிகள், வளையல்கள், மோதிரங்கள், வெட்டுக்கத்திகள், உளிகள், கூராக்கப்பட்ட அம்பு முனைகள், கத்திகள், பொருத்து குழியில்லா கோடாரிகள் ஆகியவற்றை மக்கள் பயன்படுத்தினர்.

பழுப்பு மஞ்சள்நிற பாண்டப் பண்பாடு

வட இந்தியாவில், செம்புக்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மட்பாண்டங்கள் சிவப்பு நிற அடிப்புறத்தின் மேல் பழுப்புமஞ்சள் நிறத்தைக் கொண்டுள்ளதாகக் காட்சியளிக்கும். (மட்பாண்டங்களைத் தொட்டவுடன் பழுப்புநிறம் விரல்களில் ஒட்டிக்கொள்ளும்.) எனவேதான் இவை பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டங்கள் என்றழைக்கப்படுகின்றன. இவை கருப்புநிற ஓவியங்களைக் கொண்டுள்ளன. பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டங்களில் ஜாடிகள், கொள்கலன்கள், தட்டுக்கள் அகலமான கிண்ணங்கள் ஆகிய வகைகள் உள்ளன.



பழுப்பு மஞ்சள்நிற பானை ஓடுகள்

பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டப் பண்பாட்டின் காலம் பொ.ஆ.மு. 2600 முதல் பொ.ஆ.மு. 1200 வரையாகும். சிந்து–கங்கைச் சமவெளிப் பகுதிகளில் காணப்படும் இப்பண்பாடு தொடக்க வேதகால பண்பாட்டோடு தொடர்புகளைக் கொண்டுள்ளது. இப்பண்பாடு நலிந்த ஹரப்பா பண்பாடாக பார்க்கப்படுகிறது. சில அறிஞர்கள் இப்பண்பாட்டிற்கும் ஹரப்பா பண்பாட்டிற்கும் இடையே எவ்வித உறவும் இல்லை எனக் கருதுகின்றனர். பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டப் பண்பாடு தொடர்பான ஆய்விடங்களில் செம்பினால் செய்யப்பட்ட உருவங்களும் ஏனைய பொருள்களும் அதிகம் கிடைப்பதால், இது '*செம்புப் பொருட்குவியல் பண்பாடு*' என்றும் அறியப்படுகிறது. இப்பண்பாடு ஒரு கிராமியப் பண்பாடாகும். இப்பண்பாட்டு இடங்களில் நெல், பார்லி, பட்டாணி, காய்வகைகள் ஆகியன விளைவிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. நாட்டுப்புற வாழ்க்கையை மேற்கொண்ட இப்பண்பாட்டு மக்கள் எருது, பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, நாய், பன்றி ஆகியவற்றை வளர்த்துள்ளார்கள். கிராமங்கள் மரதட்டிகளின் மேல் களிமண் பூசிக் கட்டப்பட்ட சுவர், மேல் கூரை கொண்ட வீடுகளைக் கொண்டிருந்தன. செம்பிலும், சுட்ட களிமண்ணிலும் செய்யப்பட்ட அணிகலன்களைப் பயன்படுத்திய அவர்கள் விலங்குகளின் சுடுமண் உருவங்களையும் செய்தனர்.

தென் இந்தியச் செம்புக்காலப் பண்பாடுகள்

ஒரு முழுமை பெற்ற செம்புக் கற்காலப் பண்பாடு தென்னிந்தியப் பகுதிகளில் நிலவியதற்கான

11th History Lesson 2 Tamil Medium.indd 22 20-12-2022 15:18:55

சான்றுகள் இல்லை. சில இடங்களில் துளையிட்ட பாண்டங்களும், கெண்டி வடிவிலான பாண்டங்களும் கிடைத்துள்ளன. செம்பினாலும் வெண்கலத்திலுமான கலிகள், கோடரிகள் இங்கு கிடைக்கின்றன. இப்பகுதிகளில் கல்லினாலான கருவிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் இக்கால மக்களின் வாழ்வாதாரமாக இருந்துள்ளன. சிறுதானியங்கள், பயறு வகைகள், கொள்ளு போன்றவற்றைச் சாகுபடி செய்த இம்மக்கள் பழங்களையும் இலைகளையும் கிழங்குகளையும் சேகரித்து உண்டு வாழ்ந்தனர்.

2.2 வட இந்தியாவில் இரும்புக்காலம்

வட இந்தியாவின் இரும்புக் காலமானது ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாட்டோடு ஒத்துப்போகிறது. ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டப் பண்பாட்டின் காலம் பொ.ஆ.மு. 1100 முதல் பொ.ஆ.மு. 800 வரையாகும். வட இந்தியாவில் ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டங்கள் கிடைப்பதாக 1000க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் அதிகமானவை கங்கை–யமுனை சமவெளிப் பகுதிகளில் உள்ளன. மத்திய இந்தியாவிலும் கிழக்கு கங்கைப் பகுதியிலும் கருப்பு–சிவப்பு மட்பாண்டப் பண்பாட்டிற்குப் பின்னர் இம்மட்பாண்டப் பண்பாடு தோன்றியது எனலாம்.

இக்கால மட்பாண்டங்களில் நேர்த்தியான சாம்பல் நிறத்தில் வடிவியல் வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் தொடக்ககால அரசியல் உருவாக்க காலத்தைச் சேர்ந்தவை. வேதநூல்கள் மூலம் அறியப்படும் குருபாஞ்சால அரசுகளோடு இவை தொடர்பு கொண்டவையாகும். ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டப் பண்பாட்டைத் தொடர்ந்து வட இந்தியாவில் மெருகேற்றப்பட்ட கருப்புநிற மட்பாண்டப் பண்பாடு தோன்றியது. இது மௌரியர் காலத்து மகாஜனபதங்களோடு தொடர்புடையதாகும்.

ஓவியம் தீட்டிய சாம்பல்நிற மட்பாண்டங்கள் கிடைக்கின்ற இடங்கள் நாட்டுப்புற வாழ்வையும் வேளாண்மையில் ஏற்பட்ட வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன. இக்காலகட்டத்தின் குடியிருப்புகள் அளவில் பெரிதானவை. அவை வட இந்தியப் பகுதிகளில் ஏற்பட்ட பெருமளவிலான மக்கள் தொகைப் பெருக்கத்தைக் காட்டுகின்றன. ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்ட பண்பாடு வட இந்தியாவின் இரும்புக் காலப் பண்பாடாக கணக்கிடப்படுகிறது. தென் இந்தியாவில் இரும்புக்காலம் ஈமச் சின்னங்களுடன் கூடிய பெருங்கற்காலப் பண்பாடாக உள்ளது.

11th History Lesson 2 Tamil Medium.indd 23 20-12-2022 15:18:55

2.3 தமிழகத்தில் பெருங்கற்காலம்/ இரும்புக்காலம்

தமிழகத்தில் புதிய கற்காலத்தில் பழக்கத்தில் இருந்த இறந்தவர்களைப் புதைக்கும் முறை பெருங்கற்காலத்திலும் தொடர்ந்தது. ஈமச் சடங்கின்போது பெரிய கற்பலகைகளைப் பயன்படுத்தி வட்ட வடிவம், குத்துக்கல் எனப் பலவகையான கல்லறைகளை உருவாக்குதல் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கூறாக அறியப்படுகிறது. இத்தகைய பெருங்கற்காலச் சான்றுகள் தமிழகத்தில் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. தாழியில் புதைக்கும் வழக்கம் மற்றொரு முறையாகும். இதற்கான சான்றுகள் ஆதிச்சநல்லூரில் (தற்போதைய தூத்துக்குடி மாவட்டம்) அகழ்ந்தெடுக்கப்பட்டன. தமிழகத்தில், இறந்தவர்கள் புதைக்கப்பட்ட புதைமேடுகளில் மட்டுமே கருப்புநிற மட்பாண்டங்கள் அதிகம் கிடைக்கின்றன. அக்கால மக்கள் வாழ்ந்த குடியிருப்பு பகுதிகளில் அவை காணப்படவில்லை. முதுமக்கள் தாழியைப் பொறுத்தமட்டில் பெரும்பாலும் கற்கள் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும் முதுமக்கள் தாழிகள் பெருங்கற்காலத்தவை என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில், மட்பாண்டங்கள், இரும்புப்பொருள்கள், மணிக்கற்கள் போன்ற ஈமக்காரியங்களில் பயன்படுத்திய பொருள்கள் பெருங்கற்காலக் கல்லறைகளில் காணப்படும் பொருள்கள் போன்றே உள்ளன.

பெருங்கற்கால ஈம நடைமுறைகள் பொ.ஆ. இரண்டு – மூன்றாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்தாக மதிப்பிடப்படுகிறது. இக்காலகட்டத்தில் அசோகர் பிராமி எழுத்து முறை போன்ற தமிழ் பிராமி எழுத்துமுறை இருந்துள்ளது என்பது கொடுமணல் (ஈரோடு மாவட்டம்) அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. பெருங்கற்கால மரபு பிந்தைய நூற்றாண்டுகளில் தொடர்ந்திருப்பதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன. சங்க காலம் வரையிலும் இதுபோன்ற ஈமக்குழிகள் மக்களால் நினைவு கூறப்பட்டுள்ளன. வைகை ஆற்றுப்படுகையின் மேல்பகுதிகளில் காணப்பட்ட பழைய காலத்தைச் சேர்ந்த நான்கு நடுகற்கள் தமிழ் பிராமி எழுத்துகளுடன் காணப்படுகின்றன. இவை ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம். ஆநிரை கவர்தல் தொடர்பாகச் சங்க இலக்கியங்களில் விவரிக்கப்படும் நடுகல் நடும் மரபினை நிறுவும் சான்றுகளாக இந்த நடுகற்கள் காணப்படுகின்றன. இதன்காரணமாக, சங்க காலம் என்பது பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டு அல்லது அதற்குச் சற்று முன்னதாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். போரில் இறந்த வீரர்கள் நினைவாக நடுகல் நடும் மரபு ஈமக் குத்துக்கல் மரபின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. ஈமக் குத்துக்கல், நினைவுக்கல், கல்திட்டை போன்றவை தமிழகத்தில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களாகும்.

> கருப்பு, சிவப்பு வண்ண மட்கலன்கள், மனித எலும்புச் சான்றுகள் மற்றும் இரும்புப் பொருட்களுடன் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி அருகில் உள்ள வடமலைக்குண்டா எனும் இடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு சில கற்பலகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகள் பழமையான குத்துக்கல் திருப்பூர் மாவட்டம் சிங்காரிபாளையம் குந்தலம் அருகே நடந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது; இது, உப்பாறு நதிக்கரையில் பண்டைய கால மனிதர்களின வாழிடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

2.4 தமிழகத்தில் பெருங்கற்கால அகழ்வாய்விடங்கள்

ஆதிச்சநல்லூர்

ஆதிச்சநல்லூர் திருநெல்வேலியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 1876ஆம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த இயற்கைவியலாளரும், இன வரைவியலாளருமான ஆண்டிரு ஜாகர் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வை மேற்கொண்டார். அங்கிருந்து சுடப்பட்ட மட்பாண்டங்கள் பல அளவுகளிலும் வடிவங்களிலுமான பாத்திரங்கள் ஆகியவற்றின் மாதிரிகளையும் கணிசமான எண்ணிக்கையில் இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், பெருமளவிலான எலும்புகள், மண்டையோடுகள் ஆகியவற்றையும் தன்னோடு எடுத்துச் சென்றார். தற்போது அவையனைத்தும் பெர்லின் அருங்காட்சியகத்தில் உள்ளன.

புதைமேடு, தாழிகள்–ஆதிச்சநல்லூர்

11th History Lesson 2 Tamil Medium.indd 24 20-12-2022 15:18:56

இதனைத் தொடர்ந்து, அன்றைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஏ.ஜே. ஸ்டூவர்ட், புகழ்பெற்ற மொழியியல் அறிஞரான ராபர்ட் கால்டுவெல் ஆகிய இருவரும் ஆதிச்சநல்லூர் சென்றனர். அப்பகுதியில் படிகக் கற்கள் நிறைந்திருப்பதைக் கண்டனர். உடனடியாக, கற்களை வெட்டியெடுப்பது அங்கு தடை செய்யப்பட்டு, அலெக்ஸாண்டர் ரீ என்பாரின் மேற்பார்வையில் அகழ்வாய்வுப் பணிகள் தொடங்கின. தன்னுடைய கண்டுபிடிப்புகள் தொடர்பாக புகைப்படங்களோடு கூடிய விரிவான அறிக்கையைத் தயார் செய்து, இந்திய தொல்லியல் துறையின் (ASI) 1902–03 ஆண்டறிக்கையில் வெளியிட்டார். சற்றேறக் குறைய நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தியத் தொல்லியல் துறை மேலும் ஒரு அகழ்வாய்வை இங்கு நடத்தியது. பல புதிய செய்திகள் கண்டறியப்பட்டன. அதன் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

ஆதிச்சநல்லூரிலுள்ள புதை மேட்டிலிருந்து கிடைத்தவை

- அதிக எண்ணிக்கையில் கிடைக்கும் பல்வகைப்பட்ட தாழிகளும் மட்பாண்டங்களும்
- ஆணிகள், ஆயுதங்கள் உள்ளிட்ட இரும்புக் கருவிகள் (கத்தி, வாள், ஈட்டி, அம்பு), சில கல்மணிகள், ஒரு சில தங்க நகைகள்
- வெண்கலத்தால் செய்யப்பட்ட வீட்டு விலங்குகளான எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, சேவல், காட்டு விலங்குகளான புலி, மிளா (மான் வகை), யானை ஆகியன
- துணி, மரப் பொருள்களின் எச்சங்கள்

வெண்கலப் பொருள்களின் மீதும் அணிகலன்களின் மீதும் விலங்கு உருவங்களைப் பொறிப்பது பழங்கால கைவினைத் தொழில் நுட்பத்தைக் குறிப்பதாகும். (கால்டுவெல் இவ்விடத்திற்கு வந்திருந்தபோது செம்பிலான வளையல் ஒன்றையும் கண்டெடுத்தார்.) மட்பாண்டங்கள் செய்வதிலும் பித்தளையை உருக்குவதிலும், நெசவு, கல், மர வேலைப்பாடுகளிலும் ஆதிச்சநல்லூர் மக்கள் சிறந்து விளங்கினர். நெல் மற்றும் பிற தானியங்களின் உமியும் கண்டெடுக்கப்பட்டது. இத்தானியங்கள் அக்காலத்தில் புழக்கத்திற்கு வந்துவிட்டதை இது குறிக்கின்றது. போர்களிலும் விலங்குகளை பலி கொடுக்கும்போதும் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. இது ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் வேத மதங்களைப் பின்பற்றியவர்கள் அல்ல என கால்டுவெல்லை எண்ண வைத்தது.

பையம்பள்ளி

பையம்பள்ளி, திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் கிராமமாகும். 1960களில் இந்தியத் தொல்லியல் துறை பெருங்கற்காலத்தோடு தொடர்புடைய இவ்விடத்தில் அகழ்வாய்வை நடத்தி கருப்பு மற்றும் சிகப்பு நிற மட்பாண்டங்களை வெளிக் கொணர்ந்தது. மேலும் இப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான ஈமத் தாழிகளும் கண்டறியப்பட்டன. இப்பண்பாட்டின் காலம் ரேடியோ கார்பன் பரிசோதனை மூலம் பொ.ஆ.மு 1000 என்று கணிக்கப்பட்டுள்ளது.

கொடுமணல்

ஈரோட்டிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில், காவிரியாற்றின் கிளை நதியான நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது கொடுமணல். 1980களிலும் 1990களிலும் தொடர்ந்து இங்கு அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மை அகழ்வாய்வு 2012இல் நடைபெற்றது. பழங்கால மக்கள் வாழ்விடங்களிலும், பெருங்கற்காலப் புதை மேடுகளிலும் மட்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள், மணிகள் குறிப்பாக மொகஞ்சதாரோ அகழ்வாய்வில் கண்டறியப்பட்டதைப் போன்ற செம்மணிக்கற்கள் ஆகியவை அகழ்ந்தெடுக்கப்பட்டன. செம்மணிக் கற்கள் இப்பகுதியைச் சார்ந்தவை அல்ல என்பதால் தற்போது கொடுமணலில் கண்டெடுக்கப்பட்டுள்ள செம்மணிக்கற்கள் வேறு பகுதிகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

சங்க நூலான பதிற்றுப்பத்தில் சேர அரசனுக்குச் சொந்தமான கொடுமணம் என்ற ஊர் அங்கு

கற்திட்டை (Dolmen)
மள்ளச்சந்திரம்

நெடுங்கல் (Menhir) –
குமரிகல்பாளையம்,
திருப்பூர்

தமிழ்பிராமி எழுத்துக்களுடன் கூடிய
நடுகல் –புளிமான்கோம்பை

11th History Lesson 2 Tamil Medium.indd 25 20-12-2022 15:18:56

கற்பலகைக் கல்லறை (Cist)–கொடுமணல்

கிடைக்கும் விலை மதிப்புமிக்க கற்களுக்காகப் புகழப்படுகிறது. சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் கொடுமணம் தான் இன்றைய கொடுமணல் எனச் சில தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு ரோமானிய நாணயக் குவியல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதால். ரோமப் பேரரசிற்கு விலை மதிப்புமிக்க கற்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் இவை இப்பகுதியை வந்தடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சிப்பிகள், வளையல்கள், உலைக்கள எச்சங்கள், சூளைச் சாம்பல், தமிழ் பிராமி பொறிப்புகளைக் கொண்ட மட்பாண்டக் குவியல்கள் போன்றவை இங்குஅகழ்ந்தெடுக்கப்பட்டஏனையபொருள்களாகும். ஈமக் குழிகள், ஈமத் தாழிகள், கற்படுக்கைப் புதைப்பு எனப் பலவகைப்பட்ட புதைக்கும் முறைகள் கொடுமணலில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு மட்பாண்டங்களின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் சில மனிதர்களின் பெயர்கள் பல்வேறு இனக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்ந்ததைச் சுட்டுகின்றன. மட்பாண்டங்களின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் வண்ணக் கலைகள் மக்களைக் குறித்தும் அவர்தம் நடவடிக்கைகள் குறித்தும் பல தகவல்களை தருகின்றன. ஒரு புதைகுழி அருகே காணப்படும் நடுகல் பெருங்கற்காலத்தைச் சேர்ந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. கொடுமணல் அகழ்வாய்வில் கிடைத்தவை சங்கத் தொகை நூல்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும் (பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டு – பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு) என எ.சுப்பராயலு கூறுகிறார்.

2.5 ஆரியர்களும் ரிக் வேதகால சமூகமும்

இதுவரை நாம் பிற்கால ஹரப்பா பண்பாடு, செம்புக்காலப் பண்பாடு, ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டப் பண்பாடு ஆகியன குறித்து பார்த்தோம். இனி வேதநூல்களிலிருந்து பெறப்பட்ட சான்றுகள் குறித்து நோக்குவோம். பொருட் பண்பாடுகளைப் பற்றி மட்டுமே தெரியப்படுத்தும் தொல்லியல் இடங்களைப் போலல்லாமல், வேதங்கள், மக்களின் இனக்குழு மற்றும் பண்பாட்டு அடையாளங்களைப்பற்றி பேசுகின்றன. வேதங்களில் காணப்படும் குறிப்புகளின் காரணமாக, தொடக்ககால இந்திய வரலாற்றில், ஆரியர்கள் குறித்து எழும் விவாதங்கள் முக்கியத்துவம் கொண்டவையாக ஆகியுள்ளன.

ஆரியர்கள்

ஐரோப்பியர்கள் இந்தியாவில் காலனியாதிக்கம் செலுத்தத் தொடங்கிய பின்னரே இந்திய வரலாற்றை எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் இந்தியாவின் வரலாறு, தொல்லியல், இலக்கியச் சான்றுகளையும், இந்திய மக்களின் வாய்மொழி மரபுகளையும் தொகுத்தனர். அப்போது ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்கள் ஐரோப்பிய ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருந்தன. இக்காலகட்டத்தில்தான் காலனியச் சூழலில் காலனியாளர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக, 'ஆரியர்' போன்ற சில கருத்தாக்கங்கள் உருவாக்கப்பட்டன. இக்காலகட்டத்தில்தான் மக்களை வகைப்படுத்துவதற்கும், பிரித்தறிவதற்கும் '*இனம்*' என்னும் கோட்பாடு பரவலாக்கப்பட்டது. இவற்றில் ஒரு சில கருத்துக்கள் காலனியகால இனவெறிக் கருத்துக்களை எதிரொலிப்பதாக இருந்தன. 'ஆரியர் கருத்தியல்' நீலநிறக் கண்களையுடைய வெள்ளையின மக்களோடு இணைக்கப்பட்டு பின்னர் ஐரோப்பியரோடு தொடர்புபடுத்தப்பட்டது. இந்த ஆரியக் கோட்பாட்டை நாஜிகள் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். இது இறுதியில் மாபெரும் இனஅழிப்புக்கு இட்டுச் சென்றது. ஆரியர் என்ற சொல் இனத்தைக் குறிக்கவில்லை எனவும், ஆனால் இந்தோ–ஆரிய மொழிகளைப் பூர்விகமாகப் பேசுபவர்களையே குறிக்கிறது எனவும் அண்மைக்கால ஆய்வுகள் நிறுவியுள்ளன.

மொழியியல் ஆய்வாளர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் மொழியை, அது எழுதப்பட்ட வடிவத்திலும் வாய்மொழி வடிவத்திலும் ஆய்வு செய்கின்றனர். சொற்பிறப்பியல், வரலாறு, மொழியியல், ஒப்பீட்டு மொழியியல், இலக்கிய விமர்சனம் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

ரிக் வேதம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், *முண்டா* மற்றும் *திராவிட மொழிகளைச்* சேர்ந்த 300 சொற்கள் அதில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது முந்தையகால மக்களுடனான பண்பாட்டுக் கலப்புகளைக் குறிக்கிறது.

11th History Lesson 2 Tamil Medium.indd 26 20-12-2022 15:18:56

ஆரியர்கள் பழக்கப்படுத்தப்பட்ட குதிரைகள் பூட்டிய தேர்களைப் பயன்படுத்தினார்கள் என்பது ரிக் வேதத்தின் மூலம் உறுதியாகிறது. அவற்றின் சக்கரங்கள் ஆரக்கால்களைக் கொண்டிருந்தன. ஆரியர்கள் வில்லையும் அம்பையும் பயன்படுத்தினர். அவர்கள் வேளாண்மை, கால்நடை மேய்த்தல் ஆகிய தொழில்களைச் செய்தனர். இறந்தவர்களைப் புதைக்கவும் எரிக்கவும் செய்தனர். இந்தோ–ஆரிய மொழிகளைப் பேசிய இவர்களிடையே சோமபானம் அருந்தும் பழக்கமும், நெருப்பைப் புனிதமாக நினைத்து வழிபடுவதும் பரவலாக இருந்துள்ளது.

இந்தோ–ஐரோப்பிய, இந்தோ–ஆரிய மொழிகளின் பிறப்பிடம் எது என்பது இன்றளவும் விவாதத்திற்குரியதாகவே உள்ளது. ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவிற்கு வந்தனர் என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். பல்வேறு காலகட்டங்களில் ஆரியர்கள் அலையலையாக இந்தியாவிற்கு வந்தனர் என்றும் நம்பப்படுகிறது. இக்கருதுகோளுக்கு ஆதரவாகப் பல சான்றுகள் காணப்படுகின்றன. ஆரியர்களின் பண்பாட்டுக் கூறுகள் பரவியுள்ள கிழக்கு ஐரோப்பிய, மத்திய ஆசியப்பகுதிகள் புவியியல் ரீதியில் இந்தியா, மேற்கு ஆசியா மற்றும் ஐரோப்பியப் பகுதிகளோடு இணைந்துள்ளன. கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆசியா, கருங்கடலுக்கு வடக்கேயுள்ள பகுதிகளே அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆரியர்களின் தாயகமாகும். '*பாக்ட்ரியா மார்ஜினா தொல்லியல் வளாகம்*' ஆரியப் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாகும். இதனுடைய காலம் பொ.ஆ.மு. 1900 முதல் பொ.ஆ.மு. 1500 ஆகும்.

இந்தோ–ஐரோப்பிய மொழிகள் பற்றிய குறிப்புகள் இன்றைய நவீன ஈராக் பகுதியில் கண்டறியப்பட்ட பொ.ஆ.மு. 2200ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. வேதகால கடவுள்களின் பெயர்களைப் போலுள்ள பெயர்களைக் குறிப்பிடும் *அனதோலியா கல்வெட்டு* (பொ.ஆ.மு. 1900–1700), ஈராக்கைச் சேர்ந்த *காஸ்சைட் கல்வெட்டு* (பொ.ஆ.மு. 1600), சிரியாவின் *மிட்டானி கல்வெட்டுகள், போகஜ் கல்வெட்டுகள்* (பொ.ஆ.மு.1400) ஆகியன இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் பொது இயல்புகளைப் பெற்றுள்ளன. அவ்வாறான கல்வெட்டுகள் இந்தியாவில் கிடைக்கவில்லை என்பதால், ஆரியர்கள் இந்தியாவில் குடியேறியவர்களே என வலுவாகக் கூற இயலும்.



'*அஸ்வா*' என்னும் சொல்லும் வேறு பல சொற்களும், பல இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் பொதுவான வேர்ச்சொற்களைக் கொண்டுள்ளன. ரிக் வேதத்தில் '*அஸ்வா*' (*குதிரை*) என்னும் சொல் 215 முறை இடம் பெற்றுள்ளது. அதைப் போலவே *ரிஷபா* (*காளை*) என்னும் சொல் 170 முறை இடம்பெற்றுள்ளது. வெப்பமண்டல விலங்குகளான புலி, காண்டாமிருகம் ஆகியன ரிக் வேதத்தில் காணப்படவில்லை. மேலும் ரிக் வேதத்தில் நகர்ப்புற வாழ்க்கை முறை குறித்து எந்தத் தடயமும் இல்லை. ஹரப்பா பண்பாட்டில் குதிரை இருந்ததற்கான சான்றுகளில்லை. எனவே ஆரியர்களை ஹரப்பா பண்பாட்டோடு தொடர்பு படுத்துவது பொருந்திப்போவதாயில்லை. பண்டையகாலக் குடிபெயர்வுகளைக் கண்டறிய தற்போது மரபணு அறிவியலும் பயன்படுத்தப்படுகிறது. எம்.17 (M.17) எனப்படும் மரபணு (DNA) இந்தோ–ஐரோப்பிய மொழிகளைப் பேசுபவர்களிடம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

2.6 ரிக் வேதகாலப் பண்பாடு

ரிக்வேத சம்ஹிதையே பழமையான நூலாகும். அது தொடக்க வேத காலத்தோடு தொடர்புடையதாகும். பல அறிஞர்கள் தொடக்க வேதகாலப்பண்பாடு பொ.ஆ.மு. 1500க்கும் பொ.ஆ.மு. 1000 க்கும் இடைப்பட்ட காலத்தை சேர்ந்ததெனக் கணக்கிடுகின்றனர். இக்காலகட்ட அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கைக் கூறுகள் ரிக் வேதப் பாடல்களில் எதிரொலிக்கின்றன.

புவியியல்

இந்தியத் துணைக் கண்டத்தில், தொடக்க வேதகால ஆரியர்கள் கிழக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப், மேற்கு உத்திர பிரதேசத்தின் சில பகுதிகளில் வாழ்ந்தனர்.

தாசர்களும் தசயுக்களும்

ரிக் வேதம் ஆரியர்களைக் குறித்து மட்டும் பேசவில்லை. இந்தியாவில் ஆரியர்கள் எதிர்கொண்ட ஆரியர் அல்லாத மக்களைப் பற்றியும் பேசுகிறது. ரிக்வேதகால ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபோது தாசர்கள், தசயுக்கள் என்று ஆரியர்களால் அழைக்கப்பட்ட மக்களோடு மோதினர். வெவ்வேறான பண்பாடுகளைப் பின்பற்றும் கருப்பு நிறம் கொண்ட இம்மண்ணின்

11th History Lesson 2 Tamil Medium.indd 27 20-12-2022 15:18:57

மக்களிடமிருந்து ஆரியர்கள் தங்களை மிகத் தெளிவாக வேறுபடுத்திக் கொண்டனர்.

வேறுபல மக்கள் குழுக்களைப் பற்றிய குறிப்புகளும் ரிக்வேதத்தில் உள்ளன. சிம்யு, கிக்கடா எனப்பட்டவரும் தசயுக்களுடன் சேர்க்கப்பட்டனர். குலிதாரா என்பவரின் மகனான *சம்பரா* என்பவர் 90 கோட்டைகள் அல்லது குடியிருப்புகளின் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். மற்றொரு தலைவரான *வர்சின்* பெரும் படையொன்றிற்குத் தலைவராக இருந்துள்ளார். *சம்பரா* என்னும் தலைவன் *பரத குலத்தைச்* சார்ந்த *திவோதசா* என்பவரால் தோற்கடிக்கப்பட்டதாக ரிக்வேதம் குறிப்பிடுகிறது.

அரசு முறையும் அரசியல் மோதல்களும்

அரசுமுறை என்னும் கோட்பாடு ரிக்வேத காலத்தில் உருவாக்கம் பெற்றது. ரிக் வேதத்தில் மக்களின் வாழ்விடங்களும் நிலப்பகுதிகளும் ஜனா, விஷ், கணா, கிராம, குலா எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆரியர்களின் பகைவர்களையும் அவர்களோடு ஆரியர்கள் மேற்கொண்ட போர்களையும் ரிக்வேதம் கூறுகின்றது. கால்நடைகளுக்காகவும் ஏனைய செல்வங்களுக்காகவும் போர்கள் செய்யப்பட்டுள்ளன. போர்களின் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஆரியர்கள், ஆரியர் அல்லாதவரோடு மட்டும் போர் புரியவில்லை; தங்களுக்குள்ளும் மோதிக் கொண்டார்கள். தாங்கள் மேற்கொண்ட போர்களில் தங்களுக்கு ஆதரவாகத் தெய்வங்களின் அருளாசியையும் பெற்றார்கள். வழிபாடுகளும் சடங்குகளும் பலியிடுதலும் தங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தெய்வங்களின் ஆதரவைப் பெற்றுத்தருமென அவர்கள் உறுதியாக நம்பினர். இந்திரன் '*புரந்தரா*' என்றழைக்கப்பட்டார். '*புரந்தரா*' என்பதன் பொருள் குடியிருப்புகளை அழிப்பவன் என்பதாகும். அக்குடியிருப்புகள் ஒருவேளை வேலிகளைக் கொண்டதாக இருக்கலாம் அல்லது திட்டமிட்டு கட்டப்பட்ட நகரங்களாக இருக்கலாம்.

பரத, திரிசு ஆகியன அரசாட்சி செய்த ஆரியக் குலங்களாகும். வசிஷ்ட முனிவர் இவர்களுக்கு ஆதரவாக இருந்தார். பரத குலத்தின் பெயரை ஒட்டியே இந்தியப் பகுதிகளுக்கு '*பாரதவர்ஷா*' எனும் பெயர் சூட்டப்பட்டது. பரத குலமானது பத்து தலைவர்களால் எதிர்க்கப்பட்டது. அவர்களுள் ஐவர் ஆரியர்களாவர். மற்றுமுள்ள ஐவர் ஆரியர் அல்லாதோர். இவர்களிடையே நடைபெற்ற போர் '*பத்து அரசர்களின் போர்*' என அறியப்படுகிறது. புருசினி ஆற்றங்கரையில் இப்போர் நடைபெற்றது. புருசினி ஆறு இன்றைய ரவி ஆறு என அடையாளங் காணப்பட்டுள்ளது. இப்போரில் சுதா என்பவன் பெற்ற வெற்றி பரத குலத்தின் மேலாதிக்கத்திற்கு வழி கோலியது. தோற்கடிக்கப்பட்ட குழுக்களில் 'புரு' வும் ஒன்றாகும். புரு மற்றும் பரத குலத்தவர் ஒன்றிணைந்து குரு குலத்தைத் தோற்றுவித்தனர். பின்னாளில் குரு குலத்தவர் பாஞ்சாலர்களோடு இணைந்து மேலை கங்கைச்சமவெளியில் தங்கள் ஆட்சியை நிறுவினர்.

சமூகப் பிரிவுகள்

வேதகால ஆரிய மக்கள் ஆரியர் அல்லாத ஏனைய மக்களிடமிருந்து தங்களை மேம்படுத்திக் காட்டிக்கொண்டனர். நிறத்தையும் வகையையும் சுட்டிக்காட்டுவதற்காக ஆரியர்கள் '*வர்ண*' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். ரிக் வேதம் '*ஆரிய வர்ண*', '*தச வர்ண*' என்று குறிப்பிடுகின்றது. தாசர்களும் தசயுக்களும் அடிமைகளாகக் கருதப்பட்டு பிடிக்கப்பட்டனர். பிற்காலத்தில் இவர்கள் சூத்திரர் என்று அறியப்பட்டனர். சமூகத்தில் போர் புரிபவர்கள், மத குருமார்கள், சாதாரண மக்கள் என்னும் பிரிவுகள் தோன்றின. ரிக் வேத காலத்தின் கடைப்பகுதியில் சூத்திரர் என்போர் தனிவகைப்பட்ட பிரிவாயினர். பொதுவாக அடிமை முறை இருந்தது. அடிமைகள் மதகுருமார்களுக்கு பரிசாக வழங்கப்பட்டனர். ஆனால் கூலித் தொழிலாளர் பற்றிய குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை. அடிமைகள் மத குருமார்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டனர். குதிரைகளால் இழுக்கப்பட்ட தேர்களையும், வெண்கலத்தாலான சில பொருள்களையும் சமூகத்தில் சிலர் மட்டுமே பெற்றிருந்தது சமூகத்தில் ஏற்றதாழ்வுகள் தோன்றியதை உணர்த்துகிறது. தொடக்க காலத்தில் சமூகம் சமத்துவத் தன்மை கொண்டதாகவே இருந்துள்ளது. சமூக வேறுபாடுகள் பிற்காலத்தில் தோன்றியுள்ளன. ரிக் வேதத்திலுள்ள 'புருஷசுக்தம்' என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளவாறு பல வர்ணங்கள் இவ்வாறு தோன்றியுள்ளன. புருஷ பலியிடப்பட்டபோது அவனுடைய வாயிலிருந்து தோன்றியவர்கள் பிராமணர்கள், இரண்டு கைகளிலிருந்து தோன்றியவர்கள் சத்திரியர்கள், தொடைகளிலிருந்து பிறந்தவர்கள் வைசியர்கள், கால்களிலிருந்து தோன்றியவர்கள் சூத்திரர்கள் என்று கூறுகிறது. இந்தச் சமூக வேறுபாடுகள் தொடக்க வேதகாலத்தின் கடைசிப்பகுதியில் தோன்றியிருக்க வேண்டும் என கருதப்படுகிறது. மேலும் தொழில் அடிப்படையில் போர் புரிவோர், மத குருமார்கள், கால்நடை வளர்ப்போர், வேளாண்மை செய்வோர், சிகை அலங்காரம் செய்வோர் போன்றோரும் குறிப்பிடப்படுகின்றனர். பானிகள் என்போர் மாடுகள் பூட்டப்பட்ட வண்டிகளில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தவர்கள் ஆவர். சில பாடல்களில் பானிகள் பகைவர்களாகப் பார்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இனக்குழுக்களும் குடும்பங்களும்

இரத்த உறவின் அடிப்படையிலேயே ரிக்வேத சமூகம் கட்டமைக்கப்பட்டிருந்தது. மக்கள் குறிப்பிட்ட குலங்களோடு இனங்காணப்பட்டனர்.

11th History Lesson 2 Tamil Medium.indd 28 20-12-2022 15:18:58

குலங்கள் ஒன்றிணைந்து 'ஜனா' எனும் சமூகம் ஆனது. ஜனா என்ற சொல்லுக்கு பழங்குடி, சமூகம் எனப் பொருள். ரிக் வேதத்தில் 'ஜனா' என்னும் சொல் 21 முறை இடம் பெற்றுள்ளது. ஆனால் ஜனபதா என்னும் சொல் ஒருமுறைகூட இடம் பெறவில்லை. சாதாரண மக்களைக் குறிப்பிடக் கூடிய 'விஷ்' என்னும் சொல் 170 முறை இடம் பெற்றுள்ளது. இவர்கள் கிராமங்களில் வாழ்ந்தனர். 'கிருஹா' எனும் சொல்லுக்கு குடும்பம் என்று பொருள். ஒரு இனக்குழுவினுள் குடும்பமே முக்கியமான சமூக அலகாகும். குடும்பத்திற்குத் தலைமையேற்றவன் 'கிருகபதி' ஆவான். அவன் மனைவி 'ஸபத்தினி' ஆவாள். இக்காலத்தில் குடும்பம் என்பது ஒருவேளை கூட்டுக்குடும்பமாக இருந்திருக்கலாம்.

பெண்கள்

பெண்கள் சமூகத்தில் மரியாதைக்குரிய இடத்தை வகித்தனர் என்ற போதிலும், அதைப் பொதுமைப்படுத்த முடியாது. சமூகம் தந்தைவழிச் சமூகமாக இருந்ததால் ஆண் குழந்தைகளுக்குச் சமூகத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆண் குழந்தையின் பிறப்பும், கால்நடைகளின் பிறப்பும் பெரிதும் விரும்பப்பட்டது. அக்காலச் சமூக அமைப்பு இராணுவத்தன்மை கொண்டதாக இருந்ததால் போர்புரிவதற்கும் நிலங்களின் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஆண் மக்கள் தேவைப்பட்டிருக்கலாம். பெண்கள் கிராமக் கூட்டங்களில் கலந்துகொண்டனர். வேள்விகளில் பங்கெடுத்தனர். திருமணம் செய்துகொள்வது நடைமுறையில் இருந்தாலும் புராதன மணமுறைகளும் பின்பற்றப்பட்டன. பலரைக் கணவராய்கொள்வது நடைமுறையில் இருந்ததாகத் தெரிகிறது. மறு மணமும் பழக்கத்தில் இருந்துள்ளது. பதினாறு–பதினேழு வயதில் திருமணம் நடைபெற்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர். வரலாற்று அறிஞர்கள் கருத்துப்படி அப்போது குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

பொருளாதாரம்

வேளாண்மை

ரிக்வேத மக்களிடையே வேளாண்மை வளர்ந்திருந்ததைத் தொல்லியல் சான்றுகள் சுட்டுகின்றன. கலப்பையின் கொழுமுனை ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேளாண் நிலம் *க்ஷேத்ரா* என்று அறியப்பட்டிருந்தது. கிருஷி என்ற சொல் உழவைக் குறிப்பதாகும். லங்லா, சுரா ஆகிய சொற்கள் கலப்பையைக் குறிப்பனவாகும். சீத்தா என்ற சொல் கலப்பையின் கொழுமுனையைக் குறிப்பதாகும். எருதுகளைக் கொண்டும் சக்கரங்களின் துணையோடும் கிணறுகளிலிருந்து நீர் இறைத்து வேளாண்மை செய்யப்பட்டிருக்கலாம். பல்வேறு பருவ காலங்களையும் விதைத்தல், அறுவடை செய்தல், பதர் நீக்குதல் ஆகியன குறித்தும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் பார்லியையும் (யவம்) கோதுமையையும் (கோதுமா) பயிரிட்டார்கள்.

கால்நடை வளர்ப்பு

ஆரியர்கள் வேளாண்மை செய்தபோதிலும் கால்நடை வளர்ப்பையும் பொருளாதாரத்திற்காய் மேற்கொண்டனர். கால்நடைகள் சொத்தாகக் கருதப்பட்டன. ரிக் வேதத்தில் போர்களைக் குறிக்கப் பயன்பட்ட சொல்லான *காவிஸ்தி* என்னும் சொல்லின் பொருள் பசுக்களைத் தேடுவதாகும். தற்காலத்தில் மருவி பகைக்குழு என பொருள்படும் சொல் 'கோஷ்டி' ஆகும். மதகுருமார்களுக்குப் பெரும்பாலும் பசுக்களையும் பெண் அடிமைகளையுமே நன்கொடையாக வழங்கினார்கள். நிலங்கள் கொடையாக வழங்கப்படாதது மேய்ச்சல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. நிலத்தைப் பொருத்தமட்டிலும் தனியுடைமை என்பது இருக்கவில்லை.

கைவினைத்தொழில்

மரவேலை செய்வோர், தேர்களைச் செய்வோர், துணி நெய்வோர், தோல் வேலை செய்வோர் ஆகியோரை ரிக்வேதம் குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் ஏற்பட்ட முக்கியமான வளர்ச்சிகளில் ஒன்று செம்பு உலோகவியலாகும். ரிக் வேதத்தில் இடம்பெறும் *அயஸ்* என்னும் சொல் செம்பையும் வெண்கலத்தையும் குறிக்கும். இரும்பைப் பற்றிய குறிப்புகள் ஏதும் ரிக் வேதத்தில் காணப்படவில்லை. உலோக வேலை செய்வோரைக் குறிக்கும் *கர்மரா* என்னும் சொல் ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்போலவே *நூலைக்* குறிக்கும் *ஸ்ரி* என்னும் சொல்லும், *மரவேலை* செய்வோரைக் குறிக்கும் *தச்சன்* என்ற சொல்லும் இடம் பெற்றுள்ளன. கம்பளி ஆடைகள் நெய்யப்பட்டதற்கான குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. குளிர் காலத்திற்கு அவை நிச்சயம் தேவைப்பட்டிருக்கும். சில தொழில்கள் சிறப்பு நிபுணத்துவம் கொண்டவர்களைக் கொண்டு முழுநேரப் பணியாக செய்யப்பட்டது.

வணிகம் , பரிமாற்றம், மறு விநியோகம்

தொடக்க வேதகாலத்தில் வணிகர்கள் இருந்தபோதிலும் வணிக நடவடிக்கைகள் அதிகமாக இல்லை. *பானி* என்போர் வணிகர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். பான் என்ற சொல்லுக்கு பண்டமாற்று என்று பொருளாகும். அவர்கள் ஒருவேளை வணிகர்களாக இருந்திருக்கலாம். *நிஷ்கா* என்பது தங்க அல்லது

11th History Lesson 2 Tamil Medium.indd 29 20-12-2022 15:18:58

வெள்ளி அணிகலனாகும். இது பண்டமாற்றுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. பண்டமாற்றே பரிவர்த்தனைக்கான வழியாகும். ஒரு மதகுரு தான் நடத்திக் கொடுத்த வேள்விக்காக 100 குதிரைகளையும் 100 நிஷ்காக்களையும் பெற்றுள்ளார். மற்றவர்களுக்கு வழங்கப்பட்ட தானங்களும் தட்சிணைகளும் செல்வத்தை மறுவிநியோகம் செய்வதற்கான வழிகளாகும். தக்சிணா என்பது குறிப்பிட்ட சேவைக்காக வழங்கப்பட்ட கட்டணமாகும். அதுவே செல்வ விநியோகத்திற்கான வழியுமாகும். பசுக்களை விநியோகம்செய்ததுமேய்ச்சல்தொழில்பரவுவதற்கும் பொருளாதார உற்பத்தி பெருகுவதற்கும் உதவியது.

போக்குவரத்து

போக்குவரத்திற்குக் குதிரைகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. மாட்டு வண்டிகளும் குதிரை பூட்டிய தேர்களும் பயன்படுத்தப்பட்டன. கடல் (சமுத்ரா), படகுகள் (நாவ்) குறித்த குறிப்புகள் உள்ளன. 100 துடுப்புகளால் ஓட்டப்பட்ட படகுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசுமுறையும் நிர்வாகமும்

ரிக்வேத கால அரசுமுறை என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும். இனக்குழுவின் தலைவரே அனைத்து நடவடிக்கைகளின் மையமாக இருந்துள்ளார். அவரே அரசியல் தலைமையாக இருந்தார். அவர் ராஜன் (அரசன்) என்றழைக்கப்பட்டார். அரசர்கள் பல தூண்களைக் கொண்ட அரண்மனைகளில் வாழ்ந்தனர். அவர்கள் மத குருமார்களுக்குக் கால்நடைகளையும் தேர்களையும் தங்க அணிகலன்களையும் பரிசாக வழங்கினர். ராஜன் ஒரு பாரம்பரியத் தலைவனாவார். ஒருவேளை அவர் சமிதி என்ற சபையினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். அரசருடைய மிக முக்கியப் பணி இனக்குழுவைக் காப்பதாகும். அவர் சொத்துக்களைப் பாதுகாத்தார், எதிரிகளோடு போரிட்டார், மக்களுக்காகக் கடவுளிடம் பிராத்தனை செய்தார். நிலப் பரப்பின் மீதும் மக்களின் மீதும் அவருக்கு அதிகாரமிருந்தது.

வேத சமூகம் இராணுவ இயல்பைக் கொண்டிருந்தது.வில்அம்புகளும்,கோடரி,ஈட்டி,வாள் ஆகியவையேமுக்கியப்போர்க்கருவிகளாயிருந்தன. போர்களின்போது சூறையாடிய செல்வமும் எதிரிகளிடமிருந்து பெற்ற கப்பமும் அரசனால் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதின் மூலம் மறுவிநியோகம் நடந்தது. தாசர்களும் அடிமைகளும் பரிசுப் பொருள்களாகக் கொடுக்கப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. புருக்களின் அரசர் *திரசதஸ்யு* 50 பெண்களைப் பரிசாகக் கொடுத்துள்ளார். இனக்குழுத் தலைவர்கள் 'கோபா' என்றும் 'கோபதி' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். அவற்றின் பொருள் கால்நடைகளின் தலைவர் என்பதாகும்.

ரிக் வேதத்தில் *சபா*, *சமிதி*, *விததா*, *கணா* என்றழைக்கப்பட்ட அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 'சபா' என்பது வயதில் மூத்தோர் அல்லது செல்வர்கள் பங்கேற்ற அமைப்பாகும். 'சமிதி' என்பது மக்கள் கூடும் இடமாகும். விததா என்பது இனக்குழுக்களின்அமைப்பாகும்.இராணுவம்மற்றும் மதம் சார்ந்த பணிகளை இவை மேற்கொண்டன. சபா மற்றும் 'விததா'க்களில் பெண்கள் பங்கேற்றனர். அரசர்கள் தங்களுடைய செயல்பாடுகளுக்கு சமிதி, சபா ஆகிய அமைப்புகளின் ஆதரவை நாடினர். இத்தகைய அமைப்புகளின் உண்மையான இயல்புகள், அவை மேற்கொண்ட பணிகள் குறித்துக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. வேதகால சமுதாயத்தைப் பற்றிய நம்முடைய புரிதலானது பெருமளவிற்கு, இது போன்ற பல சொற்களுக்கு அக்காலத்தில் தரப்படும் விளக்கங்களைச் சார்ந்தே அமைந்துள்ளது. சில சமயங்களில் உண்மையான பொருளை மீட்டுருவாக்கம் செய்வது கடினமாக உள்ளது.

மதகுருமார்கள் அரசருக்கு அறிவுரை வழங்கினர். வேதகால மத குருக்கள் அரசருக்கு ஆலோசனை வழங்கி, ஊக்கப்படுத்தி, புகழ்ந்து அரசர்களின் செல்வாக்கைப் பெற்றனர். இதற்காக அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சேனானி என்பவர் படைத் தலைவராவார். வரிவசூல் செய்யும் அதிகாரிகளைப் பற்றிய சான்றுகள் இல்லை. ஒரு வேளை மக்கள் தாமாகவே அரசனுக்கு வரி வழங்கியிருக்கலாம். அது 'பலி' எனப்பட்டது. சில அறிஞர்கள் பலி என்பது கட்டாயப்படுத்தி பெறப்பட்ட வரியே; தன்னார்வத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டதல்ல என்கிறார்கள். நீதி நிர்வாகம் குறித்துக் குறிப்புகள் ஏதுமில்லை. நிலப்பரப்பைக் கட்டுப்படுத்திய அதிகாரி *விராஜபதி* எனப்பட்டார். படைக்குழுக்களின் தலைவர்களான கிராமணி என்பவர்களுக்கு விராஜபதி உதவி செய்வார். கிராமங்களின் தலைவர் கிராமணியே ஆவார்.

வேதகால மதமும் சடங்குகளும்

வேதகாலச் சமூகத்தில் மதமும் சடங்குகளும் முக்கிய இடம் வகித்தன. ரிக்வேதத்தில் கால இயற்கை சக்திகளான சூரியன், சந்திரன், ஆறுகள், மலைகள், மழை ஆகியன தெய்வீகமானவையாகக் கொள்ளப்பட்டன. அவர்களின் மதம் இயற்கைத் தன்மையும் பல கடவுள்வழிபாடும் கொண்டது. இந்திரனே மிக முக்கியக் கடவுளாவார். அவர் 'புரந்தரா' என்றழைக்கப்பட்டார். நெருப்பு என்பது கடவுளுக்கும் மக்களுக்கும் இடையிலான தூதுவன் எனக் கருதப்பட்டது. இருளை அகற்றும் கடவுள்

11th History Lesson 2 Tamil Medium.indd 30 20-12-2022 15:18:58

சூரியன். 'உஷா' எனும் பெண்கடவுள் விடியலின் கடவுளாவார். அதிதி, பிரித்வி, சினிவளி ஆகியோர் ஏனைய கடவுள்களாவர்.

நீர்க்கடவுள் 'வருணா' அடுத்த முக்கிய இடத்தை வகிக்கிறார். இயற்கையின் விதிகளை உயர்த்திப்பிடிப்பவர் இவரே. தாவரங்களின் கடவுள் 'சோமா'. அவற்றிலிருந்து பெறப்படும் பானம் அவர் பெயரிலேயே அழைக்கப்பட்டது. சோமபானம் அருந்துவது சடங்குகளின் ஒரு பகுதியாக குறிப்பிடப்படுகிறது. போதை தரும் சோமபானம் தயாரிக்கப்படும் முறைகளை விளக்கும் பல பாடல்கள் ரிக் வேதத்தில் உள்ளன. 'மாருத்' வலிமையின் கடவுள் ஆவார். வேறு சில கடவுளர்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவை முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளர்களைப் போல் முக்கியக் கடவுள்கள் அல்லர். 'ருத்ரா' அல்லது 'சிவன்' குறித்தும் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள் இடர்ப்பாடுகள் ஆகியவற்றுக்குத் தீர்வாக சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் சமூகத்தில் மதகுருமார்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.

சமூகத்தின் சிறப்பியல்புகள்

தொடக்க வேத காலத்தில் குலங்களும் இனக்குழுக்களும் சமூகத்தைக் கட்டமைத்தன. அரசர் ஒருசில அதிகாரங்களையே பெற்றிருந்தார். நிலப்பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஆரியப் பழங்குடிகளும் ஆரியர் அல்லாத பழங்குடி இனக்குழுக்களும் போர்களில் ஈடுபட்டனர். வர்ணக் கோட்பாடும் ஆரியர்களின் அடையாளப் பெருமிதங்களும் இருந்தபோதிலும் பொதுவாகச் சமூகத்தில் பாகுபாடுகள் ஆழமாக வேரூன்றவில்லை. கால்நடை மேய்ச்சல் வாழ்க்கைமுறை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. கால்நடைகளை மையப்படுத்திய மோதல்கள் அன்றாடம் நடந்தன. கால்நடை வளர்ப்பு, மேய்ப்பு ஆகியவற்றுக்கு அடுத்த நிலையில் வேளாண்மை முக்கிய இடம் வகித்தது. உலோகத்தினாலான பொருள்களும், மரத்தினாலான பொருள்களும் மட்பாண்டங்களும், துணிகளும், இன்னும் பல பொருள்களும் உற்பத்தி செய்யபட்டதைத் தொல்லியல் ஆய்வு உணர்த்துகின்றது.

2.7 பிற்கால வேதப் பண்பாடு

பிற்கால வேதப்பண்பாட்டின் காலம் பொ.ஆ.மு. 1000 முதல் பொ.ஆ.மு. 700–600 வரை ஆகும். இரும்புக் காலத்தைச் சேர்ந்த வண்ணம் தீட்டிய சாம்பல்நிற மட்பாண்டப் பண்பாடு பிற்கால வேதப் பண்பாட்டோடு தொடர்புடையதாகும். இதனை அகழ்வாய்வு நடைபெற்ற இடங்களில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு தொல்லியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இக்காலம் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் கலப்பினையும் வளர்ச்சியினையும் எதிர் கொண்டது.

பிற்கால வேத நூல்கள்

பிற்கால வேத நூல்கள் ரிக்வேத சம்ஹிதைகளுக்குப் பின்னர் இயற்றப்பட்டனவாகும். ரிக் வேதத்திற்குப் பின்னரே யஜுர், சாம, அதர்வ வேதங்கள் இயற்றப்பட்டன.

ஆரியர்களின் கிழக்கு நோக்கிய பரவல்

பின்வேதகாலத்தில்,ஆரியர்கள்பஞ்சாபிலிருந்து மேற்கு உத்திரப்பிரதேசத்தின் கங்கை–யமுனை சமவெளியை நோக்கித் தமது வாழ்விடங்களை விரிவுபடுத்தினர். பண்டைய இந்தியாவின் வரலாறு, பண்பாடுகளின் பரவல்களாலும் பரிமாற்றங்களாலும், பல குழுவினர்க்கிடையே, நிலப்பகுதிகளுக்காகவும் செல்வ ஆதாரங்களுக்காகவும் நடைபெற்ற போர்களாலும் சுட்டப்படுகின்றன. ஆரியர்கள் கங்கை நதியின் கிழக்குப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்த நிலையில், இந்தோ–ஈரானியர்கள் ஈரானிலிருந்து குடிபெயர்ந்து பஞ்சாபில் குடியேறினர். சிந்து கங்கை நதிகளுக்கு இடைப்பட்ட மேலை கங்கைச் சமவெளியே குரு மற்றும் பாஞ்சாலர்களின் பகுதிகளாக இருந்ததெனப் பிற்கால வேதநூல்கள் கூறுகின்றன. ரிக்வேதத்தில் ஆரியர்களின் தெற்கு எல்லை எனக் குறிக்கப்படும் பகுதிகள் அய்த்ரேய பிராமணத்தில் (சம்ஹிதைகள் பற்றிய விளக்கங்கள்) பட்டியலிடப்பட்டு ஆரியர்களின் மத்தியப் பகுதி எனக் கூறப்பட்டுள்ளது. இது பின் வேதகாலத்தில் ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் குடியேறியதை உறுதி செய்கின்றது. ஆரிய மக்கள் தொகைப் பெருக்கம் புதிய, அதிகம் ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கம், நீர் மற்றும் நிலங்களுக்கான தேவை ஆகியவற்றால் இந்த இடப் பெயர்வு தூண்டப்பட்டிருக்கலாம்.

குரு, பாஞ்சாலர், வாஸ்கர்கள், உசிநரர்கள் ஆகியோர் இக்காலத்தைச் சேர்ந்த இனக்குழுக்கள் ஆவர்.பிற்காலவேதநூல்களில்சரஸ்வதி,திரிஸ்தவதி ஆகிய நதிகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. பொ.ஆ.மு. 1000 வாக்கில் வேதகால ஆரியர்கள் கிழக்கு உத்திரப்பிரதேசத்திலுள்ள கோசலம், வடக்கு பீகாரில் உள்ள விதேஹா ஆகிய பகுதிகளை நோக்கி நகர்ந்தனர். அப்பகுதிகளில் இந்த ஆரியர்கள் செம்புக்காலப் பண்பாட்டைப் பின்பற்றி வரும் அப்பகுதிவாழ்மக்களைஎதிர்கொள்ளநேர்ந்தது.மேல் கங்கைச் சமவெளியில்தான் வேதங்கள் முண்டா மொழி சொற்களைப் பெற்றன. கங்கைச் சமவெளிப் பகுதிகளில் முண்டா மொழியின மக்கள் வாழ்ந்ததை

11th History Lesson 2 Tamil Medium.indd 31 20-12-2022 15:18:58

இது உணர்த்துகின்றது. இக்காலத்தில் கோசலமும் விதேஹமும் ஆரியர்களின் கிழக்கு எல்லைப் பகுதிகளாக இருந்தன. வேத காலத்தின் இறுதியில் கோசலமும் விதேஹமும் ஆரிய மயமாயின. அவற்றுக்கும் அப்பால் கிழக்கேயிருந்த பகுதிகள் அந்நிய தேசங்களாகவே கருதப்பட்டன. அதர்வ வேதத்தில் அங்க, மகத (பிகார்) நாடுகளைச் சேர்ந்த மக்கள் எதிரிகளாகவே பார்க்கப்பட்டனர். இதைப் போலவே அய்த்ரேய பிராமணத்தில் வங்காளத்தைச் சேர்ந்த புந்த்ராக்களும் ஆந்திரர்களும் ஆரிய அடையாளங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகவே கருதப்பட்டுள்ளனர். இப்பகுதிகள் ஆரியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உள்ளாகவில்லை என்பதை இதன்மூலம் அறியலாம். ஆரிய மயமாதல் என்பது வடமேற்கிலிருந்து படிப்படியாகத் தென்கிழக்கு நோக்கி முக்கியமாக கங்கை சமவெளியில் பரவியது என்பது புலப்படுகிறது.

பிற்கால வேதப்பண்பாடும் இரும்பும்

இக்காலத்தில் கருவிகள் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு முக்கிய உலோகம் இரும்பாகும். இது 'சியாமா–அயஸ்' அல்லது 'கிருஷ் அயஸ்' என்றழைக்கப்பட்டது. கருப்பு உலோகம் என்பது இதன் பொருள். கங்கைச் சமவெளிப் பகுதிகளிலிருந்த காடுகள் அழிக்கப்பட்டு வேளாண் நிலங்களாக மாற்றப்பட்டதில் இரும்பு முக்கியப் பங்கு வகித்தது. வேதகாலத்தின் இறுதியில் இரும்பைப் பற்றிய அறிவு கிழக்கு உத்திரபிரதேசத்திலும் விதேகத்திலும் பரவியது. இரும்பானது பொ.ஆ.மு. 700 வாக்கில் அறிமுகமானதாகக் கருதப்படுகிறது. ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் பொ.ஆ.மு. 1200 வாக்கிலேயே இரும்பு அறிமுகமாயிற்று என்று கூறுகின்றன. தொடக்ககால ஆய்வுகள் கங்கைப் பகுதியின் காடுகள் திருத்தப்பட்டதில் இரும்பின் பங்கிற்கு அதிக அழுத்தம் கொடுத்தன. ஆனால் தற்போதைய ஆய்வுகள் அது மட்டுமே காரணமாக இருக்க முடியாது; வேறு காரணங்களும் உண்டென வாதிடுகின்றன.

குடியேற்றங்களும் நிலப்பகுதிகளும்

வேளாண்மை தீவிரமடைந்த பின்னர் பின் வேதகால மக்கள் ஓரிடத்தில் நிலையாகக் குடியேறி வாழத் துவங்கியபோது எல்லைகள் வரையறை செய்யப்பட்ட நிலப்பகுதிகள் உருவாயின. 'ஜனபதம்' என்னும் 'நிலத்தைக் குறிக்கும்' சொல் பொ.ஆ.மு. 800ஐச் சேர்ந்த பிராமணத்தில் காணப்படுகிறது. வட இந்தியப்பகுதியில் சுமார் 1000 இடங்களில் ஓவியம் தீட்டிய சாம்பல்நிற பாண்டப் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைக்கின்றன. இது மேலை கங்கைச் சமவெளியில் புதிய குடியேற்றங்கள் உருவாகி மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டதை மெய்ப்பிக்கிறது. மக்கள் சுடாத களிமண் கற்களால் கட்டிய வீடுகளிலோ அல்லது மரத்தட்டிகளையும் களிமண் சாந்தையும் கொண்டு கட்டிய வீடுகளிலோ வாழ்ந்தனர். வேதகாலத்தின் பிற்பகுதியில்தான் நகரங்கள் உருவாகி இருக்க வேண்டும். பின் வேதகாலம் தீவிரப் பண்பாட்டு ஊடாட்டங்கள் நடைபெற்ற காலமாகும். பிற்கால வேதநூல்களில் 'நகர' என்ற சொல் இடம் பெறுகிறது. அது வணிகர்கள் தங்கியிருந்த இடங்களைக் குறிப்பனவாகவே உள்ளன. இருந்தபோதிலும் வேதகாலத்தின் இறுதிப் பகுதியில்தான் பெரிய நகரங்கள் உருவாயின. ஹஸ்தினாபுரம், கோசாம்பி ஆகியவை நகரங்களின் முன் மாதிரிகளாக (நகரங்களைப் போன்ற) கருதப்பட்டன. இக்காலப் பொருண்மைப் பண்பாடானது பல்வகைத் தன்மைகள் கொண்டதாகவும் முந்தைய வேதகால பொருள்களைக் காட்டிலும் நேர்த்தியாகவும் மாறியது. உற்பத்தியில் உபரி இருந்தது எனவும் இனக்குழுத் தலைவர்கள், இளவரசர்கள் மத குருமார்கள் போன்ற சமூகப் பிரிவினர்க்கு அவ்வுபரி உதவுவதாய் அமைந்தது எனவும் யூகிக்கலாம்.

அரசியல் நிறுவனங்கள்

முற்கால வேத காலத்தில் இனக்குழு அரசியலே மேலாதிக்கம் செலுத்தியது. அரசர் மக்கள் பிரதிநிதி மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் வேத காலத்தில் இவ்வமைப்புகள் முக்கியத்துவம் இழந்தன. அரசரின் அதிகாரம் பெருகியது. விததா என்ற அமைப்பு செல்வாக்கு இழந்தது. சபா, சமிதி ஆகிய அமைப்புகள் தொடர்ந்து இயங்கின. பேரரசுகளின் தோற்றத்தைத் தொடர்ந்து இவ்வமைப்புகளின் அதிகாரம் மென்மேலும் குறைந்தது.

ராஜன் என்பவரே இனக்குழுவின் தலைவர். போர்க்களத்தில் அவர் படைகளுக்குத் தலைமை தாங்கினார். சாம்ராட், சாம்ராஜ் போன்ற கோட்பாடுகள் வளர்ச்சி பெற்றன. இவை அரசருடைய அதிகாரம் பெருகியதை உணர்த்துகின்றன. குடும்ப உரிமைகளை சட்டபூர்வமாக்க அரசர் வாஜ்பேய, ராஜசூயயாகங்களைநடத்தினார். நிலப்பகுதியின்மீதும் மக்களின் மீதும் செல்வ ஆதாரங்களின் மீதும் அரசரின் கட்டுப்பாடு பெருகியது. "அரசரை முன்னிறுத்தக் கூடியவர்" என்ற பெயர்ப்பொருள் கொண்ட புரோகிதர் அரசு நிர்வாகத்திலும் குடும்ப உறவுகளிலும் முக்கிய இடம் வகித்தார். முடியாட்சிமுறை வலுப்பெற்றது. ராஜன் சமூக ஒழுங்கைக் கட்டுப்படுத்துபவரானார். செல்வ ஆதாரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக *ஸ்ராதா* (சில நன்மைகளைப் பெறுவதற்காக செய்யப்படுவது) என்னும் யாகங்கள் நடத்தப்பட்டன. அரசர் புரோகிதர்க்குப் பசு, குதிரை, தேர், ஆடை ஆகியவற்றைப் பரிசாக அளித்தார். பெண்ணடிமைகளும் பரிசுப்பொருள்களாக

11th History Lesson 2 Tamil Medium.indd 32 20-12-2022 15:18:58

வழங்கப்பட்டனர். அரசப் பதவியேற்பின் போது செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்த ஒரு புரோகிதர்க்கு 1000 தங்கக்கட்டிகளும் கால்நடைகளும் பரிசளித்ததாக அய்த்ரேய பிராமணம் குறிப்பிடுகின்றது. புரோகிதர் அரசியல் உருவாக்கத்திலும் அரச குடும்பத்திலும் முக்கியப் பங்கு வகித்தார்.

> ஒரு பொதுமூதாதையரிடமிருந்து உருவாகும் தலைமுறைகள் வம்சாவளி/ கொடிவழி/ பரம்பரை எனப்படும்.

மாநிலத்தைக் குறிக்கும் *ராஷ்ட்ர* என்ற சொல்லும், இறையாண்மை உடைய நாட்டினைக் குறிக்கும் *ராஜ்ய* என்ற சொல்லும் பிறந்தன. அரசர் மக்களிடமிருந்து (விஷ்) *'பலி'* என்ற வரியைப் பெற்றார். அது மக்கள் தாமாகவே மனமுவந்து வழங்கியதாகவோ அல்லது கட்டாய வசூலாகவோ இருந்தது. தன்னார்வ அடிப்படையில் கொடுக்கப்பட்டது காலப்போக்கில் கப்பமாக மாறியது போலும். மகாபாரதம் அதிகாரப் போட்டிகளையும் நாடுகளைக் கைப்பற்ற நடந்த போர்களையும் சித்தரிக்கிறது. இராமாயணமும் ஆரியர்களின் விரிவாக்கத்தையும் காடுகளில் வாழ்ந்த மக்களோடு ஏற்பட்ட மோதல்களையும் விவரிக்கிறது.

நாடுகளின் உருவாக்கமும் மரபுவழி அரசாட்சியும் பின் வேதகாலத்தில் வலுப்பெற்றன. பொ.ஆ.மு. முதல் ஆயிரமாண்டு காலத்தில் ஏற்பட்ட இப்போக்கை ரோமிலா தாப்பர் 'குல உரிமையிலிருந்து அரசுக்கு' என்று கூறுகிறார். நாடுகளின் அளவிலான அரசியல் நிறுவனங்கள் பொ.ஆ.மு. 500 க்குப் பின்னரே உருவாயின. ஆகவே பின் வேதகாலச் சமூகம் மாறுதல்களுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தது தெளிவாகின்றது. பல மரபினர் நிலங்களைக் கொண்டவர்களாக மாறி பின்வேதகாலத்தில் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டனர். இதற்கான சான்று 'ஜனபதம்' என்ற சொல்லாகும். பொ.ஆ.மு.முதல்ஆயிரமாண்டுகளின்இடைப்பகுதியில், பின் வேதகாலத்தில் ராஜிய, கணசங்கா எனப்படும் அரசியல் நிறுவனங்கள் உருவாயின.

நாம் முன்னர் பார்த்ததுபோல் பரத, புரு இனக்குழுக்கள் இணைந்து குரு குழு உருவாகி அது பாஞ்சாலர் இனக்குழுவோடு இணைந்து கங்கை–யமுனை சமவெளியின் மத்தியப் பகுதியை கைப்பற்றின. பாஞ்சாலப் பகுதி உத்திரப்பிரதேசத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இக் குரு பாஞ்சாலர்கள் ஒரு பெரும் இனக் குழுவாக உருவானது. ஹஸ்தினாபுரம் அவர்களின் தலைநகரானது. மகாபாரதத்தில் போரிட்டுக் கொள்ளும் பாண்டவர்களும் கௌரவர்களும் குரு இனக்குழுவைச் சேர்ந்தவர்களே. ஹஸ்தினாபுரம் வெள்ளத்தில் மூழ்கியதால் குரு இனக்குழுக்கள் வெளியேறி அலகாபாத்திற்கு அருகேயுள்ள கௌசாம்பியில் குடியேறியதாக மரபுக் கதைகள் கூறுகின்றன.

பின் வேத காலத்தில் வேள்விகளும் சடங்குகளும் முக்கியத்துவம் பெற்றன. அரசர் மேலும் அதிக சுதந்திரம் பெற்றவரானார். மக்களிடமிருந்து விலகினார். குடும்பங்களில் சடங்குகள் மேலாதிக்கம் செலுத்தின. இது அரசர்கள், மதகுருமார்களின் அதிகாரமும் செல்வாக்கும் பெருகுவதற்கு வழி வகுத்தது. அரசர் அஸ்வமேதயாகம் நடத்தினார். அதன்படி அரசருடைய குதிரை அவிழ்த்து விடப்படும். அது பற்பல இடங்களுக்குச் செல்லும். அக்குதிரையை எவரும் பிடித்துக் கட்டவில்லை என்றால் அப்பகுதிவாழ் மக்கள் இவ்வரசனை அங்கீகரித்து விட்டனர் என்று பொருள். குதிரையை மறித்தால் அரசருடைய அதிகாரம் எதிர்க்கப்படுவதாகப் பொருள் கொள்ளப்படும். இது போர்களுக்கு இட்டுச்செல்லும். வாஜபேய என்னும் சடங்கு தேர்களின் போட்டியை உள்ளடக்கியதாகும். இதைப் போன்ற புதுமையான சடங்குகள் அரசருடைய அதிகாரத்தை மேலும் வளர்க்க உதவின.



சமூக அமைப்பு

பின் வேதகாலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களை வேத நூல்கள், மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. வர்ணத்தின் அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் உறுதி பெற்றன. கற்பித்தல் பிராமணர்களின் தொழிலானது. பிராமணர்களின் மனைவியரும், அவர்கள் வீட்டு பசுக்களும் உயர் தகுதியைப் பெற்றனர். ராஜன்யா என்னும் சொல் சத்திரியரைக் குறிப்பதாகும். ஆட்சியாளர்களாகவும்

11th History Lesson 2 Tamil Medium.indd 33 20-12-2022 15:18:58

போர் செய்பவர்களாகவும் இருந்த அவர்கள் பலி என்னும் வரியை வசூலித்தனர்.

வர்ண முறையில் பளிச்செனப் புலப்படும் மாற்றங்கள் ஏற்பட்டன. சமூகத்தில் மேல் மட்டத்தில் இரு பிரிவினரான பிராமண, சத்திரியர் ஆகியோரின் அதிகாரம் பெருகியது. நால்வர்ணமுறை ஆழமாக வேர் கொண்டு காலப்போக்கில் மேலும் இறுகியது. பஞ்சவம்ச பிராமணத்தில் சத்திரியர்களே பிராமணர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என முதலிடத்தில் வைக்கப்பட்டனர். ஆனால் சதபத பிராமணம் சத்திரியர்களைவிடப், பிராமணர்களே உயர்ந்தவர்கள் எனக் கூறுகிறது. பின் வேத காலத்தில் வேத நூல்களில் குறிப்பிட்டுள்ளதைப்போல் புரோகிதர்களின் முக்கியத்துவத்திற்கு அதிக அழுத்தம் தரப்பட்டது. சத்திரியர்கள் பிராமணர்களின் மேலாதிக்கத்தைக் குறிப்பாக கோவில் கருவறைக்குள் நுழையும் அவர்களின் தனிப்பட்ட உரிமையை எதிர்த்தனர். வாழ்க்கை பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம், சன்யாசம் என நான்கு கட்டங்களாக (ஆசிரமங்கள்) பிரிக்கப்பட்டது. இதன் காரணமாய் சமணம், பௌத்தம், ஆசீவகம் போன்றவை தோன்றின

வர்ண அடிப்படையிலான சமூகப் படிநிலை சமுதாயத்தில் ஆழமாகக் காலூன்றியது. சமூகத்தில் சடங்குகள் பரவலானதன் விளைவாக பிராமணர்கள் தங்கள் அதிகாரத்தை வளர்த்துக் கொண்டனர். ராஜன்யர்கள் எனப்பட்ட போர்ப் பிரபுக்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையே மோதல்கள் இருந்தபோதிலும், பிராமணர்கள் முக்கியமானவர்களாக ஆகிவிட்டதால் அரசர்கள் அவர்களை ஆதரித்தனர். இருபிறப்பாளர் (துவிஜா) எனும் கோட்பாடு வளர்ச்சி பெற்றது. அதனுடன் தொடர்புடைய உபநயனச்சடங்கு சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே உரியதானது. இச்சடங்கு கல்வி கற்பதன் தொடக்கத்தைக் குறிப்பதாகும். சமூகத்தின் நான்காவது பிரிவினருக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டது. சூத்திரர்கள் காயத்ரி மந்திரத்தை ஓதுதல் கூடாது என்று வரையறுக்கப்பட்டது. பெண்களுக்கு உபநயனமும் காயத்ரி மந்திரமும் மறுக்கப்பட்டன. அரசர் ஏனைய மூன்று வர்ணத்தார் மீதும் தனது அதிகாரத்தை நிலை நிறுத்தினர். பிராமணர்கள் ஆதரவை நாடுபவர்கள் எனவும், அவர்கள் அரசர்களால் பதவிநீக்கம் செய்யப்படலாம் எனவும் அய்த்ரேய பிராமணம் குறிப்பிடுகிறது.

சில தொழில்களைச் செய்யக்கூடிய தொழிற்பிரிவினரும் சமூகத்தில் மேல்நிலையை அடைந்தனர். எடுத்துக்காட்டாக தேர்களைச் செய்யும் 'ரதகாரர்கள்' மேல்நிலையின் அடையாளமாகப் பூணூல் அணியும் உரிமையைப் பெற்றிருந்தனர். வைசியர்கள் சாதாரண மக்களாகவே குறிப்பிடப்படுகின்றனர். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் போன்றவற்றைச் செய்துவந்த அவர்கள் பின்னர் வணிகர்களாக மாறினர். அவர்கள் அரசர்களுக்கு வரி செலுத்தினர். சமூகப் படிநிலையில் சூத்திரர்களுக்கும் கீழாக சில சமூகக் குழுக்கள் வைக்கப்பட்டனர்.

'கோத்திரம்' என்னும் கோட்பாடு பின் வேதகாலத்தில் தோன்றியது. கோத்திரம் என்னும் சொல்லுக்கு 'கிடை' (ஆட்டுக்கிடை, மாட்டுக்கிடை) என்று பொருள். ஒரு குறிப்பிட்ட மூதாதையரின் தொப்புட்கொடி வழிவந்த நபர்களை இது குறிக்கின்றது. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உடன்பிறப்புகளாவர். எனவே அவர்கள் தங்களுக்குள்ளே திருமணம் செய்யலாகாது. ஒரே மூதாதைய வம்சாவளியைச் சேர்ந்த குடும்பங்களைக் கொண்ட குழுக்கள் இருந்தன. இவை ஒன்றிணைந்து ஓர் இனக்குழுவாயின.

குடும்பம்

குடும்பம் வரையறை செய்யப்பட்ட உறவு முறைகளோடு நன்கு கட்டமைக்கப்பட்டிருந்தது. குடும்பம் என்பது ஒரு முக்கியமான சமூக அலகாகும். தந்தை வழிப்பட்டதாகவும் அவரின் ஆண் வாரிசுகள் வழிப்பட்டதாகவும் குடும்ப வம்சாவளி அமைந்திருந்தது. குடும்பத்தினுள் உறவுகள் படிநிலைகளைக் கொண்டிருந்தன. பலதார மணம் நடைமுறையில் இருந்தது. குடும்பத்தின் நன்மைக்காகக் குடும்பம் சார்ந்த பல சடங்குகள் நடத்தப்பட்டன. திருமணமான மகன் தனது மனைவியோடு இச்சடங்குகளுக்குத் தலைமையேற்றார் (யஜமானன்).

இக்காலகட்டத்தில் வாழ்வின் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கக்கூடிய ஆசிரமக் கோட்பாடு வலுவாகக் காலூன்றவில்லை. பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம் ஆகியன குறிப்பிடப்பட்டிருந்தாலும் சந்நியாசம் என்ற நிலை பெரிதாகப் பேசப்படவில்லை.

பெண்கள்

சமூகம் பல்வேறு பிரிவுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கொண்டதாக மாறியதாலும், தந்தை வழிக் குடும்ப அமைப்புகள் முக்கியம் பெற்றதாலும் சமூகத்தில் பெண்களின் நிலை கீழிறக்கப்பட்டது. தந்தை குடும்பத்தின் தலைவனாக இருந்தார். அடுத்த நிலையில் மூத்தமகன் முக்கியத்துவம் பெற்றிருந்தான். ரிக் வேத காலத்தில் பெண்கள் யாகங்களிலும் சடங்குகளிலும் கலந்து கொண்டனர். பின் வேதகாலத்தில் அவ்வுரிமை அவர்களுக்கு

11th History Lesson 2 Tamil Medium.indd 34 20-12-2022 15:18:58

மறுக்கப்பட்டது. பெண் குழந்தைகள் பிரச்சனைகளின் தோற்றுவாயாகக் கருதப்பட்டனர். பெண்கள் கால்நடைகள் வளர்ப்பது, பால்கறப்பது, தண்ணீர் இறைப்பது போன்ற பணிகளைச் செய்தனர்.

பொருளாதாரம்

இக்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவில் பன்முகத் தன்மை கொண்டதாக மாறின. வேளாண்மை, கால்நடை மேய்ச்சல், பொருள் உற்பத்தி, வணிகம் ஆகியவை பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன.

வேளாண்மை

பின் வேதகாலத்தில் வேளாண்மைச் செயல்பாடுகள் அதிகரித்தன. 'சதபத பிராமணம்' அரசர்கள் மேற்கொண்ட கலப்பையோடு தொடர்புடைய சடங்குகளைப் பற்றி கூறுகிறது. இக்குறிப்பானது அரசர்கள் வேளாண்மைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியைப்பெருக்கவேண்டியகாரணத்தினால் மேய்ச்சல் பொருளாதாரத்திலிருந்து வேளாண்மைக்கு மாறியதையும் கோடிட்டுக் காட்டுகின்றன. பலராமன் கலப்பையோடு காட்சிப்படுத்தப்படுவது வேளாண்மைக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. வேதகால மக்கள் பார்லி, அரிசி, கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டனர். பஞ்சாப் பகுதியின் பிரதான உணவுதானியம் கோதுமையாகும். கங்கை–யமுனை நதிக்கரைப் பகுதிகளில் வாழ்ந்த வேதகால மக்கள் அரிசியைப் பயன்படுத்தினர். வேதச் சடங்குகளில் கோதுமையைக் காட்டிலும் அரிசி அதிகம் பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

கால்நடை வளர்ப்பு முக்கியத் தொழிலாகத் தொடர்ந்தது. கால்நடை புனிதமானதாகக் கருதப்பட்டது. பண்டப் பரிமாற்றத்திலும் மறு விநியோகத்திலும் ஒரு பகுதியாக அது விளங்கியது. கால்நடைகளை 'தட்சிணை' யாக வழங்கும் பழக்கம் தொடர்ந்தது. கால்நடை மேய்ச்சல் வேளாண்மையின் துணைத் தொழிலானது.

கைவினைப்பொருட்கள் உற்பத்தி

கலைகளும் கைவினைத்தொழில்கள் மூலம் பொருள் உற்பத்தியும் பின் வேதகாலத்தில் வெகுவாகப் பரவின. தொழில் நிபுணத்துவம் ஆழமாக வேரூன்றியது. தொழில் சார்ந்து பல சமூகக் குழுக்கள் உருவாயின. பொ.ஆ.மு. 1200 இல் இரும்புத் தொழில் நடைபெற்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது. செம்பு, ஈயம், தங்கம், காரீயம், வெண்கலம் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வுலோகங்கள் உருக்கப்பட்டு நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் பொருள்களாக உருவாக்கப்பட்டன. போருக்கும் வேட்டைக்கும்தேவைப்படும்ஆயுதங்கள்செய்யசெம்பு பயன்படுத்தப்பட்டது. பெண்கள் துணி நெய்தனர் மர வேலைகளும், மண்பாண்டத் தொழிலும், தோல் பொருள்கள் பணியும் நன்கு அறியப்பட்டிருந்தன. மண்பாண்டங்கள் செய்வோரைக் குறிக்கும் 'குலாலா' என்னும் சொல்லும், கம்பளி நெய்வோரைக் குறிக்கும் 'உர்னா சூத்ரா' என்னும் சொல்லும் காணப்படுகின்றன. வில், அம்பு செய்கின்றவர்கள், கயிறு திரிப்பவர்கள், தோலாடை செய்பவர்கள், கல்லுடைப்போர், தங்க வேலை செய்வோர் போன்ற நிபுணத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொண்டோர் குறித்த குறிப்புகளும் வேதப்பாடல்களில் உள்ளன. மருத்துவர், சலவை செய்வோர், வேட்டையாடுவோர், படகோட்டிகள், சமையல் செய்வோர், ஆருடம் கூறுவோர் ஆகியோர் குறித்த குறிப்புகளும் உள்ளன. யானை, யானைப் பாகர் பற்றிய குறிப்புகள் அதர்வ வேதத்தில் பல இடங்களில் தென்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட செய்திகள் மாறுதலுக்கு உள்ளாகிக்கொண்டிருந்த ஒரு சமூகத்தைக் குறிப்பதாக அமைகின்றன.

வேத வேள்விகளையும் சடங்குகளையும் செய்வோரும் ஒருவகைப்பட்ட சேவைக் குழுவினரே. பல்வேறு சடங்குகளை நடத்துவதன் மூலம் மதகுரு அரசனுடைய நடவடிக்கைகளைச் சட்டபூர்வமாக்கினார். கால்நடைகள் மற்றும் ஏனைய விலங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டன. தட்சிணை வழங்கியதைப் பற்றிய ஒரு குறிப்பு 20 ஒட்டகங்களையும் 100 தங்க கழுத்தணியையும் 300 குதிரைகளையும் 10,000 பசுக்களையும் தட்சிணையாக வழங்கியதாகக் கூறுகிறது.

வணிகமும் பரிவர்த்தனையும்

வணிகமும் பண்டப் பரிவர்த்தனையும் பின் வேத காலத்தில் வளர்ச்சி பெற்றது. தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்ட இடங்களில் கிடைத்த பொருள்கள் சரக்குகள் ஓரிடம் விட்டு வேறிடம் கொண்டு செல்லப்பட்டதைக் காட்டுகின்றன. குறிப்பிட்ட பொருள்களில் வணிகம் செய்த கவிகைவண்டி வணிகக் குழுக்கள் இருந்துள்ளன. நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததற்கான சான்றுகள் இல்லை என்பதால் பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்திருக்க வேண்டும் எனலாம். பொ.ஆ.மு. 600 வாக்கில்தான் நாணயங்கள் அறிமுகமாயின.

11th History Lesson 2 Tamil Medium.indd 35 20-12-2022 15:18:58

மதப் பற்றும் நம்பிக்கையும்

பின் வேதகாலத்தின்போது மேல் கங்கைப் பகுதியானது ஆரியப் பண்பாட்டின் மையமாக விளங்கியது. இப்பகுதியே குரு பாஞ்சாலர்களின் பகுதியாக விவரிக்கப்பட்டுள்ளது. வேதக் கடவுள்களான அக்னி, இந்திரன் ஆகியோர் தங்கள் செல்வாக்கை இழந்தனர். பிரஜாபதி முக்கியக் கடவுளானார். சிவனின் மற்றொரு வடிவமாகக் கருதப்படும் சடங்குகளின் கடவுளான ருத்ரன் முக்கியக் கடவுளானார். சதபதபிராமணம் ருத்ரனுடைய வேறு பெயர்களை பசுனம்பதி, சர்வா, பவா, பகிகா என பட்டியிலிடுகிறது. மக்களைக் காக்கும் கடவுளாக விஷ்ணு குறிப்பிடப்படுகிறார். விஷ்ணுவின் அவதாரங்கள் குறித்த குறிப்புகள் ஏதுமில்லை. ஒவ்வொரு வர்ணத்தாரும் தங்களுக்கான கடவுளர்களைப் பெற்றிருந்தனர்.

சடங்குகள்

சமுதாயத்தில் சடங்குகள் முக்கியமாயின. சடங்குகளும் வேள்விகளும் பலியிடுதலும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் என மக்கள் நம்பினர். காலப்போக்கில் இச்சடங்குகள் அதிக செல்வத்தையும் நேரத்தையும் எடுத்துக்கொள்வதாக மாறின. இம்மாற்றம் சடங்குகளுக்கான தேவை அதிகமானதையும் அதிகம் செலவழிக்கத் தயாராக இருந்த செல்வம் படைத்த பிரிவு சமூகத்தில் உருவானதையும் சுட்டிக்காட்டுகிறது. சடங்குகள் மிகச் சரியாக நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. காணிக்கைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. சடங்குகளை நடத்துவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற மனப்போக்கு, செல்வமிருந்தால் எதையும் சாதிக்கலாம் எனும் எண்ணத்தை உருவாக்கியது. இப்படிப்பட்ட பார்வையை உபநிடதங்கள் மறுக்கின்றன. மாறாக ஆன்மாவை உணர வேண்டுமென அழுத்தம் கொடுக்கின்றன. சடங்குகளின் இப்படிப்பட்ட சீர்கேடும் செல்வத்தின் மீதான மத குருமார்களின் ஆசையும் எதிர்ப்புகளை ஏற்படுத்தின. அதன் விளைவாக பௌத்த சமண ஆசீவக மதங்கள் தோன்றின. அவை ஒழுக்கத்தையும் சரியான மனித நடவடிக்கைகளையும் முன்னிறுத்தின.

தத்துவமும் கல்வியும்

தத்துவம், இலக்கியம், அறிவியல் ஆகிய அறிவுத் துறைகளும் இக்காலத்தில் வளரலாயின. கற்றலின் பல பிரிவுகளான இலக்கணம், கணிதம், நன்னெறி, வானியல் போன்றவையும் வளர்ந்தன. கல்வியானது ஆண்களுக்கு மட்டுமே உரியதானது. வேத நூல்கள் உருவாக்கம், உச்சரிப்பிற்கும் இலக்கணத்திற்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், வாய்மொழி பரிவர்த்தனை ஆகியவை வேதகால கல்வியில் மனப்பாடம் செய்வதும், ஒப்புவித்தலும் அதன் ஒரு பகுதியாக இருந்ததை தெரிவிக்கிறது. பல்வேறு வகையான நூல்களின் உருவாக்கம் வளர்ச்சியையும் அறிவுக்கான தேடல் ஏற்பட்டிருந்ததையும் உணர்த்துகின்றன. காடுகளில் தங்கி தவம் இயற்றும் முனிவர்களோடு ஆரண்யகங்கள் தொடர்புடையனவாகும்.

உபநிடத (உபநிசத் = அருகே அமர்) நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன. அவை தத்துவ விசாரணை நூல்களாகும். வேத நூல்களின் இறுதிப்பகுதியாக அவை இணைக்கப்பட்டதால் அவை வேதாந்தங்கள் எனவும் அழைக்கப்பட்டன.

> சத்யமேவ ஜயதே (வாய்மையே வெல்லும்) என்ற சொற்றொடர் முண்டக உபநிஷத் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

அவை அறிவு, தன்னை உணர்தல், ஆன்மா, தியானம், பிறப்பு இறப்பு எனும் சுற்றுவட்டம் என்பனவற்றைக் கோடிட்டுக் காட்டின. கர்மா, நன்னடத்தை, சுய கட்டுப்பாடு, இரக்கம், கொடை ஆகியவற்றை நல்லொழுக்கங்கள் என்று சுட்டிக் காட்டின. வேதகாலச் சமூகத்தில் சடங்குகள் ஆதிக்கம் பெற்றிருந்த வாழ்க்கைமுறை இருந்தபோதிலும் சில ஞானிகள் அறிவையும் நல்லொழுக்கத்தையும் பின்பற்றுபவர்களாக இருந்தனர்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> காலனிய கால அறிஞர்கள் பண்டைய இந்திய இலக்கியங்களின் மீது ஆர்வம் கொள்வதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே, 1657இல் மொகலாய இளவரசரான தாராசுகோ உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

வாழ்க்கையின் ஏனைய கூறுகள்

பின் வேதகாலத்தில் இசையும் கவின்கலைகளும் செழித்ததற்கான சான்றுகள் உள்ளன. இசைக்கருவிகளான புல்லாங்குழல், மேளம், வீணை ஆகியவை பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேளாண்மை, கால்நடை மேய்ச்சல் ஆகியவற்றின் விரிவாக்கம், வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக மக்கள் தானியம், மரக்கறி, வெண்ணெய், நெய் ஆகியவை கொண்டு செய்யப்பட்ட வகைவகையான உணவுகளையும் பானங்களையும் உண்டனர்.

11th History Lesson 2 Tamil Medium.indd 36 20-12-2022 15:18:59

பட்டு பயன்பாட்டில் இருந்தமைக்கும் தங்கத்தாலும், செம்பினாலும் செய்யப்பட்ட அணிகலன்கள் பயன்படுத்தப்பட்டமைக்கும் சான்றுகள் உள்ளன. உலோகத்தினாலான கண்ணாடிகள் பயன்படுத்தப்பட்டன. தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் (கல் மணிகளும்) கண்ணாடி மணிகளும் கிடைத்துள்ளன. வேதகாலத்தின் பிற்பகுதியில் இத்தொழில்கள் மேலும் வளர்ந்தன.

பின்வேதகாலத்தின் தனிச்சிறப்பியல்புகள்

இனக்குழுக்களின் வம்சாவளித் தோன்றல்கள், கங்கைச் சமவெளியில் பல குறுஅரசுகளின் ஆட்சி உருவாகியது. வளர்ச்சிப் போக்கில் பொ.ஆ.மு. 600 க்குப் பின்னர் அவை அரசுகளாக வளர்ந்தது என்பதே பின் வேதகாலத்தின் சிறப்பியல்புகளாகும். ஜனபதங்கள், ராஷ்டிரங்கள் எனும் பெயர்களில் நிலப்பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. அரசர் அதிக அதிகாரங்களைப் பெற்றார். சமூகப் பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக வேர்கொண்டன. வர்ணமுறை வளர்ச்சியடைந்தது.

பாடச் சுருக்கம்

- சிந்து நாகரிகத்தின் சரிவுக்குப் பின்னர் வட இந்தியப்பகுதி முழுவதிலும் அதிகமான எண்ணிக்கையில் பண்பாடுகள் உருவாயின. செம்பும் அதனைத் தொடர்ந்து இரும்பும் பரவலான பயன்பாட்டிற்கு வந்தன. வேளாண்மை செய்யப்பட்ட நிலங்கள் விரிவடைந்ததற்கு இரும்பு பெரிதும் உதவியது. இது வேளாண் உபரிக்கு இட்டுச்சென்றது. இது அதிக மக்களுக்கு உணவளிக்கும் வசதியை நல்கியதால் மக்கள்தொகைப் பெருக்கமும் குடிபெயர்தலும் பெருமளவில் நடந்தன. சிந்து பண்பாட்டின் சரிவுக்குப் பின்னர், சில குழுக்கள் கிழக்கு நோக்கி குடிபெயர்ந்ததை முதிர்ந்த நிலை ஹரப்பா பண்பாடு அறிவுறுத்துகிறது.
- பழுப்புமஞ்சள்நிற மட்பாண்ட பண்பாடு இந்தியாவின் பல பகுதிகளில் செழித்தோங்கியது.
- பொ.ஆ.மு.. 1500–ஐ ஒட்டி ஆரியர்கள் இந்தியாவில் குடியேறினர். வேத நூல்களே இக்கால வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாகும்.
- சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட, காலத்தால் முந்தைய ரிக்வேதம் வேதகாலச் சமூகத்தையும் பண்பாட்டையும் சித்தரிக்கிறது.
- யஜுர், சாம, அதர்வ வேதங்களைச் சான்றுகளாகக் கொண்ட பின் வேதகாலம் சிக்கலான கெடுபிடியானதோர் சமூகமாகப் பரிணமித்தது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. வேதப்பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்

(அ) பிராமணங்கள் (ஆ) சம்ஹிதைகள்

(இ) ஆரண்யகங்கள் (ஈ) உபநிடதங்கள்

2. மேல் கங்கைச்சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) குரு–பாஞ்சாலம் (ஆ) கங்கைச்சமவெளி

(இ) சிந்துவெளி (ஈ) விதேகா

3. ஆதிச்சநல்லூர் ____________ மாவட்டத்தில் அமைந்துள்ளது

(அ) கோயம்புத்தூர் (ஆ) ஈரோடு

(இ) தூத்துக்குடி (ஈ) வேலூர்

4. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.

(i) சேனானி	–	படைத்தளபதி
(ii) கிராமணி	–	கிராமத்தலைவர்
(iii) பலி	–	தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
(iv) புரோகிதர்	–	ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

(அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv

5. **கூற்று:** முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

காரணம்: பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

(அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரியானது. காரணம் தவறானது.

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.

11th History Lesson 2 Tamil Medium.indd 37 20-12-2022 15:18:59

II. குறுகிய விடை தருக

1. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
2. ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.
3. தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக்காட்டுக.
4. ரிக்வேதக் கடவுள்கள் குறித்து எழுதுக.
5. இந்தியாவின் இரும்புக்காலம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?

III. சுருக்கமான விடை தருக

1. தென் இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்கவும்.
2. தொடக்ககால வேதகாலத்தின் புவியியல் பரவல்களைப் பட்டியலிடுக.
3. ரிக்வேத கால சமூகப்பிரிவுகளைக் கோடிட்டு காட்டுக.
4. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
5. தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் காட்டுக.

IV. விரிவான விடை தருக

1. இந்தியாவில் பழுப்புமஞ்சள்நிற மட்பாண்டப் பண்பாடுகளைப் பற்றி விவரி.
2. தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.
3. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

செயல்பாடுகள்

1. தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாய்வுகளையும் அவற்றில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைக் குறித்தும் வரைவேடு தயார் செய்க.
2. வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆரிய–திராவிடர் குறித்து விவாதிக்கவும்.

மூலநூல்கள்

1. Irfan Habib and Vijay Kumar Thakur, *The Vedic Age and the Coming of Iron, c. 1500–700 BC, A People's History of India,* Vol. 3 (New Delhi: Aligarh Historians Society, Tulika Books),
2. R.S. Sharma, *India's Ancient Past.* Oxford University Press, 2005
3. Romila Thapar. *From Lineage to State: Social Formations in mid-First Millennium BC in the Ganga Valley,* Oxford University Press, 1984
4. Romila Thapar. *Early India From the Origins to 1300 AD,* Penguin, 2015.
5. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India,* Pearson, 2008.

இணையதள ஆதாரங்கள்

1. https://sol.du.ac.in/mod/book/view.php?id=1608&chapterid=1628
2. https://holisticthought.com/the-later-vedic-period-in-india/
3. https://www.culturalindia.net/indian_history/ancient_india/vedic_civilization.html

கலைச்சொற்கள்

உலோக வார்ப்பிரும்புக் கட்டி	ingots	Molten bar of iron
நீண்ட மூக்குடைய பாத்திரம்	spouted vessel	kettle like vessel
கருத்தொருமித்த	consensus	widespread agreement
காணிக்கை/ஆகுதி	oblation	offering
ஊகம்	surmise	guess
பல்கிப் பெருகி	proliferated	grow rapidly
அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள்	mundane issue	worldly problem

11th History Lesson 2 Tamil Medium.indd 38 20-12-2022 15:18:59

அலகு
3

பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்

கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தின் மூலம் நாம் கீழ்க்கண்டவை குறித்த அறிவைப் பெறலாம்.

- கங்கைச்சமவெளியை நோக்கிய ஆரியர்களின் இடப்பெயர்ச்சி, இரும்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு
- இரண்டாம் நகரமயமாதல்; மகாஜனபதங்களின் தோற்றம்
- அரசியல் அமைப்பு மாற்றத்துடன் இணைந்த சமூக, பொருளாதார மாறுதல்கள்
- பௌத்தம், சமணம், ஆசீவகம் ஆகியவை ஏற்படுத்திய அறிவுமலர்ச்சி, புதிய விழிப்புணர்வு
- தமிழ்நாட்டில் உருவான அவைதீக மதக்கோட்பாடுகள்

அறிமுகம்

ஆரியர்கள் ஏறத்தாழ பொ.ஆ.மு. 1000 வாக்கில் கிழக்கு நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். அவர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்தபோது, அடர்ந்த காடுகளை எதிர்கொண்டார்கள். காடுகளைத் திருத்துவதில் இரும்பு முக்கியப் பங்காற்றியது. கங்கைச் சமவெளியின் வளம் செறிந்த மண்ணும் இரும்புக்கொழுமுனைகளின் பயன்பாடும் வேளாண் உற்பத்தியை மேம்படுத்தின. பானை வனைதல், மர வேலைகள், உலோக வேலைகள் போன்ற கைவினைப்பொருட்களின் உற்பத்தி அதிகரித்ததிலும் இரும்பு முக்கியப் பங்காற்றியுள்ளது. இவற்றின் விளைவாக நகரமயமாக்கத்துக்கு வழி ஏற்பட்டது. இதே காலகட்டத்தில் சமூகத்தில் பின்பற்றப்பட்ட வைதீகச் சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியனவற்றின் மீது கேள்விகளை எழுப்பிய சந்தேகிக்கும் உணர்வுகள் தோன்றின. இவை புதிய கருத்தியல்களும் நம்பிக்கைகளும் தோன்ற வழிவகுத்தன. இவ்வாறு உருவான பல அவைதீக மதக்கோட்பாடுகளில் சமணம், பௌத்தம் ஆகியன மக்களின் மனதைத் தொட்டன. இக்காலத்தின்போது உருவான பிராந்திய அடையாளங்கள், அவைதீக மதக்கோட்பாடுகள் ஆகியன குறித்து இப்பாடத்தில் காண்போம்.

இரும்புத்தொழில்நுட்பத்தின் தாக்கம்: பல்வேறு பார்வைகள்

- தெற்கு பிகாரில் கிடைக்கும் இரும்புக் கனிமத்தைத் தேடி அடைந்து, அதன் மீது ஏக போகத்தினை நிலைநாட்டும் நோக்குடன் இந்தோ–ஆரியர்கள் கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தார்கள். மகத அரசு அரசியல் மேலாதிக்கம் பெறுவதற்கு இரும்புத்தாது வளமே காரணமாக இருந்தது – டி.டி.கோசாம்பி
- கங்கை வடிநீர்ப் பகுதியில் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைய இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் வழிவகுத்தன – ஆர்.எஸ்.சர்மா
- காடுகள் அழிக்கப்படவும் உபரி வேளாண் உற்பத்தி ஏற்படவும் இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் காரணம் என்பது கட்டுக்கதை. ஏனெனில், 16, 17 ஆம் நூற்றாண்டு வரைகூட கங்கைச்சமவெளி அடர்ந்த வனப்பகுதியாகவே இருந்தது – மக்கன் லால்
- கங்கைப்பகுதியின் காடுகள் நெருப்பின் மூலமாகவும் அழிக்கப்பட்டிருக்கலாம் – ஏ.கோஷ், நிஹரஞ்சன் ரே

11th History Lesson 3 Tamil Medium.indd 39 12/3/2022 7:46:31 PM

சான்றுகள்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள், திரிபீடகங்கள், ஜாதகக்கதைகள் போன்ற பௌத்த நூல்கள், சமண நூல்கள், அர்ரியன் போன்ற கிரேக்கர்களின் குறிப்புகள் ஆகியவை இக்காலத்துக்கான இலக்கியச் சான்றுகளாகும். தொல்லியல் சான்றுகள் இவற்றை உறுதிப்படுத்துவதாக உள்ளன.

1. மண்வெட்டிகள், கதிர் அரிவாள்கள், கத்திகள், கொக்கிகள், ஆணிகள், அம்புகள், கலங்கள், கண்ணாடிகள் ஆகியவை இரும்புத்தொழில்நுட்பம் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன.
2. துணிகள், மணிகள், மட்கலன்கள், தந்தத்தால் ஆன பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப்பொருட்கள், பிற உலோகங்களாலான கலைப்பொருட்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.
3. சுடுமண் கலைப்பொருட்கள் பெரும் எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நகரங்களை அகழாய்வு செய்ததில், முன்பு இருந்த பழமையான நகரங்களுக்கான அடையாளங்கள் கிடைத்துள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஆடம்பர பாண்டங்கள், நகரங்களுக்கே உரியவை என்று கருதப்படும் வடபகுதி கரு நிற மெருகூட்டப்பட்ட பாண்டங்கள் (Northern Black Polished Ware) அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.
2. ராஜகிருகாவிலும் கௌசாம்பியிலும் காணப்படுவதுபோல, நகரங்கள் அகழிகளால் சூழப்பட்டிருந்தன. சில இடங்கள் அரண்களால் பாதுகாக்கப்பட்டன.
3. வீடுகள் சுடாத செங்கற்களாலும் சில இடங்களில் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன.
4. கங்கைச் சமவெளியில் காணப்படும் வடிகால்கள், உறைகிணறுகள், கழிவுநீர்ப்போக்குக்குழிகள் போன்ற வசதிகள் அங்கே இரண்டாவது நகரமயமாக்கம் நிகழ்ந்திருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

3.1 கங்கைச் சமவெளியில் ஏற்பட்ட வளர்ச்சி

இக்காலகட்டத்தில் மத்திய கங்கைச் சமவெளிகளில் வேளாண்மை செழித்தது. நஞ்சை சாகுபடி முறையால் மற்ற பயிர்களை விட அரிசி உற்பத்தி அதிகரித்தது. அதனால் தேவையான வேளாண் உபரி உருவானது. பாதுகாக்கப்பட்ட பாசன வசதி மட்டுமே அரிசியின் உபரி உற்பத்திக்குக் காரணமல்ல. இரும்புத் தொழில்நுட்பமும் முக்கியமான பங்காற்றியது. இரும்புக் கோடரி காடுகளைத் திருத்த உதவியதா? இரும்புக் கலப்பைக் கொழுமுனை வேளாண் உற்பத்தியை அதிகரித்ததா? என்ற கேள்விகள் இருந்தாலும், கைவினைப்பொருள் உற்பத்தி அதிகரித்ததில் இரும்புத்தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்காற்றியது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இரும்புக் கருவிகளின் அறிமுகம் பல்வேறு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்படுத்திய தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்தில் கொண்டால்தான், இரும்புத் தொழில் நுட்பத்தின் தாக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். வேளாண் உபரி, தொழில்நுட்பம் ஆகியவற்றால் கிடைத்த ஓய்வு நேரம் கைத்தொழில் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. அது சிறப்பான வணிகத்திற்கு வழிவகுத்தது.

இரண்டாவது நகரமயமாக்கம்

வேளாண் உபரி, கைத்தொழில், வணிக வளர்ச்சி, பெருகிக் கொண்டிருந்த மக்கள்தொகை ஆகியவை கங்கைச் சமவெளியில் நகரங்கள் தோன்றுவதற்கு வழி வகுத்தன. இது இந்திய வரலாற்றில் இரண்டாவது நகரமயமாக்கம் என்று குறிப்பிடப்படுகிறது. முதலாவது நகரமயமாக்கம் ஹரப்பா நாகரிகத்தின் போது நிகழ்ந்ததாகும். கங்கைப்பகுதியில் கீழ்க்கண்ட பல்வேறு வகையான நகரங்கள் உருவாகின:

1. ராஜகிருகம், சிராவஸ்தி, கௌசாம்பி, சம்பா போன்ற அரசியல், நிர்வாக மையங்கள்
2. உஜ்ஜையினி, தட்சசீலம் போன்ற வணிக மையங்கள்
3. வைசாலி போன்ற புனிதத் தலங்கள்

வைசாலி

3.2 ஜனபதங்களிலிருந்து மகாஜனபதங்களுக்கு

பிந்தைய வேதகாலம் (பொ.ஆ.மு. 1000 – 600) வம்சாவளி அடிப்படையிலான இனக்குழு அரசியலிலிருந்து ஒரு பிராந்திய அரசு என்ற

11th History Lesson 3 Tamil Medium.indd 40 12/3/2022 7:46:31 PM

மாற்றத்தைச் சந்தித்தது. கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்த 'ஜன' இனக்குழுக்கள் பல்வேறு பகுதிகளில்நிலையாகத்தங்கஆரம்பித்தன.மக்களின் ஆதரவு ஜனத்திடமிருந்து (இனக்குழு) ஜனபதத்திற்கு (பகுதி) மாற ஆரம்பித்தது. ஜனபதம் என்ற சொல்லுக்கு "இனக்குழு தன் காலைப் பதித்த இடம்" என்று பொருள். ஜனபதங்கள் வளங்களுக்காகவும், அரசியல் மேலாதிக்கத்திற்காகவும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன. சில ஜனபதங்கள் தமது பகுதிகளை விரிவுபடுத்தி, பல்வேறு ஜனங்களைத் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தன. இப்படிப்பட்ட ஜனபதங்கள் மகாஜனபதங்களாக வளர்ச்சி பெற்றன.

ஒரு நாட்டிற்கு நிலம், மக்கள், அரசாங்கம், இறையாண்மை ஆகியவை முக்கியக் கூறுகளாகும். இவ்வனைத்துக் கூறுகளும் சில மகாஜனபதங்களில் காணப்பட்டன. மகாஜனபதங்கள் மக்களை (ஜனங்களை) ஆண்ட பிரதேச முடியரசுகள் உருவானதைப் பிரதிபலித்தன. அரசாங்கத்திற்கு அரசர் தலைமை தாங்கினார். அவருக்கு மையப்படுத்தப்பட்டதொரு நிர்வாகம் உதவியது. அரசர் இறையாண்மையுள்ள ஆட்சியாளராக இருந்தார். வேளாண் உபரி மீது வரி விதித்தார். அதை மறுவிநியோகம் செய்தார். படிநிலைகளைக் கொண்ட சமூகத்தில் அதிகாரத்தின் மூலமும், அடக்குமுறை மூலமும் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படுவதை உறுதி செய்தார். இக்கூறுகள் கங்கைச் சமவெளியில் அரசுகள் உருவானதைக் குறிக்கின்றன.

பதினாறு மகாஜனபதங்கள்

புராண, பௌத்த, சமண மரபுச் சான்றுகளின்படி பதினாறு மகாஜனபதங்கள் பற்றி அறியமுடிகின்றது.

1. காந்தாரம்	9. குரு
2. காம்போஜம்	10. பாஞ்சாலம்
3. அஸ்மகம் (அசகம்)	11. மத்ஸ்யம்
4. வத்சம்	12. வஜ்ஜி (விரஜ்ஜி)
5. அவந்தி	13. அங்கம்
6. சூரசேனம்	14. காசி
7. சேதி	15. கோசலம்
8. மல்லம்	16. மகதம்

மகாஜனபதங்கள் அவற்றின் அரசு அதிகாரத்தின் தன்மையைப் பொறுத்து, கண சங்கங்கள் என்றும் குடித்தலைமை ஆட்சி என்றும் பிரிக்கப்பட்டன.

கண–சங்கங்கள்

கங்கைச் சமவெளியின் முந்தைய நாடுகள் ஜனபதங்கள் என்றழைக்கப்பட்டன. அவற்றில் குடியரசுகள், சிறு அரசுகள், குடித்தலைமை ஆட்சிப் பகுதிகள் என அனைத்தும் கலந்திருந்தன. தொடக்ககால நூல்களில் பதினாறு மகாஜனபதங்கள் சுட்டப்படுகின்றன. இனக்குழுக்களை மையமாகக் கொண்ட குழுவினரால் ஆளப்பட்ட கணசங்கங்களும் இருந்தன. இவற்றில் மிகவும் பிரபலமானது விரிஜ்ஜிகளின் கணசங்கமாகும். இது மிதிலைப் பகுதியில் இருந்தது. இதன் தலைநகரம் வைசாலி. இந்த அரசுகள், தான் மட்டுமே முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட அரசர்களின் கீழ் இருக்கவில்லை. இங்கு பல்வேறு இனக்குழுக்களின் தலைவர்களால் கூட்டாக முடிவுகள் எடுக்கப்பட்டன. கோசலம், காசி போன்ற சிறு அரசுகளும் இருந்தன. இக்ஷ்வாகு, விருஷ்ணி போன்ற இனக்குழுக்களின் பெயர்களும் இந்தத் தொடக்ககால அரசுகளின் பெயர்களும் ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

முடியாட்சிகள் அல்லது அரசுகள்

முடியாட்சி முறை நடைமுறையிலிருந்த அரசுகள் அனைத்திலும் வைதீக வேத மரபுகள் நடைமுறையில் இருந்தன. கண சங்கங்களைப் போலன்றி, மதகுருமார்கள் மகாஜனபதங்களில் உயர்ந்த தகுதிநிலையை அனுபவித்தார்கள். அரசுகள் அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டன. மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இருந்தது. பல்வேறு சடங்குகள் மூலம் பிராமண குருக்கள் அரசனுக்குச் சட்டபூர்வ அங்கீகாரத்தை அளித்தனர். அரச உரிமை வாரிசு முறையில் வந்தது. அரச உரிமை பெரும்பாலும் மூத்த மகனுக்கே உரிமை என்ற விதிப்படி தொடர்ந்தது. பரீஷத், சபா என்ற அமைப்புகள் அரசருக்கு உதவி செய்தன. இந்த அமைப்புகள் ஆலோசனை தருபவையாக இருந்தன. வேளாண் உபரியை அரசர் நில வரி மூலமும் வேறு சில வரிகள் மூலமாகவும் பெற்றுக் கொண்டார். வேளாண் நிலத்தின் மீதான வரி 'பலி' எனப்பட்டது. உற்பத்தியில் ஒரு பங்காகப் பெறப்பட்ட வரி 'பாகா' என்று சொல்லப்பட்டது. 'கரா', 'சுல்கா' ஆகியவை இக்காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட வேறு சில வரிகளாகும். இவ்வாறாக, ஒரு விரிவான நிர்வாக அமைப்பையும் ராணுவத்தையும் பராமரிக்கத் தேவையான வருவாயை அரசர் வரிகள் மூலம் ஈட்டினார்.

செல்வம் மிக்க நிலஉரிமையாளர்கள் கிரகபதி என்றழைக்கப்பட்டனர். இவர்கள் தாசர் அல்லது கர்மகாரர் என்று அழைக்கப்பட்ட வேலைக்காரர்களை பணியமர்த்தியிருந்தனர். சிறு நில உரிமையாளர்கள் கசாகா அல்லது கிரிஷாகா என்று அறியப்பட்டனர். சமூகம், வர்ணத்தின் அடிப்படையில் அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இது சமூக மரியாதையின் குறியீடானது.

11th History Lesson 3 Tamil Medium.indd 41 12/3/2022 7:46:31 PM

11th History Lesson 3 Tamil Medium.indd 42 12/3/2022 7:46:32 PM

விவசாயிகளும் கைவினைக் கலைஞர்களும் சூத்திரர் எனப்பட்டார்கள். இக்காலத்தில் வேறுசில சமூகக் குழுவினர் உருவாகியிருந்தனர். சமூகப் படிநிலையில் அவர்கள் சூத்திரர்களுக்குக் கீழே வைக்கப்பட்டார்கள்; தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டார்கள். இவர்கள் ஊருக்கு வெளியே வசிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். தம் உணவிற்காக, பிழைப்பிற்காக இவர்கள் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகியவற்றை நம்பி இருந்தார்கள். இவர்கள் பொதுவான வாழிடங்களின் ஓரங்களில் வசிக்கும்படி ஒதுக்கப்பட்டார்கள். நகரமயமாக்கம் அதிகரித்தபோது, இவர்களுக்கு குற்றேவல் வேலைகளே தரப்பட்டன. இவர்கள் தங்களுக்கெனத் தனி மொழியைக் கொண்டிருந்தனர். அது இந்தோ–ஆரியர்களால் பேசப்பட்ட மொழியிலிருந்து மாறுபட்டிருந்தது.

3.3 அவைதீகச் சிந்தனையாளர்களின் தோற்றம்

பொது ஆண்டுக்கு முந்தைய ஆறாம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் வட இந்தியா கவனிக்கத்தக்க அறிவுமலர்ச்சியைச் சந்தித்தது. இம்மலர்ச்சி இந்தியா முழுவதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்குப் பிந்தைய நூற்றாண்டுகளிலும் இந்தியாவின் பண்பாட்டில் இத்தாக்கம் தொடர்ந்தது. அறிவுமலர்ச்சி தெற்காசியா முழுவதும் பரவியது. ஏற்கெனவே பின்பற்றப்பட்டுவந்த தத்துவத்தைச் சில அவைதீகச் சிந்தனையாளர்கள் கேள்விக்கு உட்படுத்தியதன் விளைவாக இத்தகைய அறிவு மலர்ச்சி தோன்றியது. இக்காலகட்டத்தில்தான் கோசலர், கௌதம புத்தர், மகாவீரர், அஜித கேசகம்பளி முதலான பல்வேறு மாறுபட்ட சிந்தனையாளர்கள் இவ்வுலக இன்பங்களைத் துறந்து, அன்று நிலவி வந்த சமூக, பண்பாட்டுச் சூழல் குறித்து ஆழ்ந்த சிந்தனைகளுடன் கங்கைச் சமவெளிகளில் திரிந்து வந்தனர். இத்தகைய துறவிகள் கங்கைச் சமவெளி முழுவதும் குறுக்கும் நெடுக்குமாகப் பயணம் செய்வதும் புதிய கருத்துகளைப் எடுத்துரைப்பதும் அவற்றை ஆதரிப்பதும் வழக்கமாக இருந்தன. இத்துறவிகளின் போதனைகள் புதிய ஆட்சிமுறைகள், நகர மையங்களின் உருவாக்கம், கைத்தொழில்கள், தொலைதூர வணிகத்தின் வளர்ச்சி ஆகியவற்றால் மிகவிரைவாக மாறிக்கொண்டிருந்த சமூகத்தின் தேவைகளைப் பேசின. இந்த அறிவுமலர்ச்சி வாதிகள் வேதக் கருத்தாக்கங்களான ஆன்மா, மனம், உடல் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கினார்கள். அதன்வழியாக, புதிய மதங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தார்கள். இவர்கள் அனைவரும் வேத மதத்தைக் கேள்விக்குள்ளாக்கினாலும், அவர்களுக்குள்ளும் போட்டிகள் நிலவின. காலப்போக்கில் இவற்றில் பௌத்தமும் சமணமும் மிகப் பிரபலமான மதங்களாக உருவாகின.

அறிவுமலர்ச்சிக்கான காரணங்கள்

பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டு, தீவிரமான அறிவுசார் எழுச்சியின் காலமாகும். இவ்வெழுச்சிக்குப் பல காரணங்கள் உள்ளன.

1. அரசுருவாக்கமும், வேத மதத்தின் கடுமையும் சிந்தனை மற்றும் செயலுக்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தின. மத நம்பிக்கைகளுக்கு எதிரான கிளர்ச்சியாக அவைதீகக் கோட்பாடுகள் உருவாகின.

> "மக்களின் அறிவுசார் ஆர்வத்தை அடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களின் மனம் அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறது. இத் தவிர்க்கமுடியாத எதிர்வினைகள் எல்லாவிதமான முறைசார்ந்த அதிகாரங்களையும் பொறுத்துக்கொள்ள இயலாத தன்மையாக வெளிப்படுகிறது. அது சடங்குரீதியான மதத்தின் கட்டுப்பாட்டால் காலம்காலமாக ஒடுக்கப்பட்ட வாழ்விலிருந்து ஆவேசமாக விடுபடும் உணர்வாக உள்ளது" – இந்தியத் தத்துவ மேதை மேனாள் குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

2. பிரதேச அடையாளங்களின் தோற்றம் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உந்தித்தள்ளியது. ஏற்கெனவே நிலவிய சமூக அமைப்பைப் பற்றிய கற்பனைகளில் இருந்து வெளிவந்து அதிருப்தியுடன் இருந்த மேட்டுக்குடி மக்கள் அவற்றை எதிர்த்து மகதம் அல்லது மத்திய கங்கைச் சமவெளிகளில் செழித்து வளர்ந்து வந்த அவைதீக மதங்களை நோக்கி நகர்ந்தார்கள்.
3. வேத மதம் சமூகத்தின் அனைத்துப் பகுதியினரிடமும் ஊடுருவியிருக்கவில்லை. எனவே புதிதாக உருவாகி வந்த மதங்களைப் பின்பற்றுவது மக்களுக்குக் கடினமானதாக இல்லை.
4. நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் ஆகியவற்றின் காரணமாக வணிகர்கள், சேத்கள் (seths) போன்ற வங்கியாளர்கள் என ஒரு புதிய வர்க்கம் உருவானது. இது தமது பொருளாதாரத் தகுதி நிலைக்கு இணையான சமூகத் தகுதிநிலையைக் கோரியது.
5. ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கை முறை பிராமணர்களுக்கு மட்டுமே வேதங்களில் அனுமதிக்கப்பட்டிருந்தது. அவ்வுரிமை

11th History Lesson 3 Tamil Medium.indd 43 12/3/2022 7:46:32 PM

தங்களுக்கு அனுமதிக்கப்பட வில்லை என்பது சத்திரியர்களின் மனக்குறையாக இருந்தது.

அவைதீக மதங்கள்

ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் திரிந்த துறவிகளும், போதகர்களும் பல சீடர்களை ஈர்த்து பல்வேறு மதப்பிரிவுகளை உருவாக்கினார்கள். வைதீக அறவொழுக்கத்தை மறுத்தல் (அறவொழுக்கத்தை வலியுறுத்தும் சட்டங்களை மதிப்பதற்கான தேவையை இறையாற்றல் நீக்கிவிட்டது என்ற நம்பிக்கை), பொருள்முதல்வாதம், ஊழ்வினைக் கோட்பாடு ஆகியவற்றை இவர்களுடைய தத்துவங்கள் சார்ந்திருந்தன. இவை சனாதன வேதமதத்தை எதிர்த்த அவைதீக மதங்கள். இவற்றில் பல மதங்கள் அக்காலகட்டத்தில் நடைமுறைக்கு வந்தன. சமனபலசுத்தா என்ற பௌத்த நூல் அஜாதசத்ரு என்ற பேரரசர் பௌத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரைச் சந்தித்தது பற்றிக் குறிப்பிடுகிறது. அதில் இந்தச் சந்திப்பிற்கு முன், மற்ற பல்வேறு மதப்பிரிவுகளின் தலைவர்களான புராண கசபர். மக்காலி கோசலர், அஜிதகேச கம்பளி, பகுத கச்சாயனர், சஞ்சய பெலதிபுத்தர், நிகந்த நடபுத்தர் (மகாவீரர்) ஆகியோரோடும் அஜாதசத்ரு தத்துவ விவாதங்கள் செய்ததாகக் குறிப்பிடுகிறது. இவர்கள் 'நீண்டகாலமாக வீடற்று சுற்றித் திரிந்தவர்கள்' (சிர–பப்பாஜிதோ), மதங்களை உருவாக்கியவர்கள் (தீத்தகரோ), தங்களுடைய நெறிமுறைகளின் தலைவர்கள் (ஞானாசாரியோ) என்று குறிப்பிடப்படுகிறார்கள். இந்தப் பிரிவுகள் பௌத்தத்தின் முக்கியப் போட்டி மதங்களாகும். இவை எதுவும் அஜாதசத்ருவிற்கு ஏற்றுக்கொள்ளத்தகுந்ததாக இருக்கவில்லை என்றும்பௌத்தம்மட்டுமேஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்தது என்றும் குறிப்பிடப்படுகிறது.

3.4 ஆசீவகர்கள்

அக்காலத்தில் துறவிகள் குழுக்களாகச் செயல்பட்டனர். அவ்வாறான குழுக்கள் ஒன்றிலிருந்து ஆசீவகம் உருவானதாக நம்பப்படுகிறது. பௌத்த ஆவணங்களின்படி, ஆசீவகம் என்ற பிரிவைத் தோற்றுவித்தவர் 'நந்த வாச்சா' என்பவர் என்று கருதப்படுகிறது. இவருக்குப் பின் வந்தவர் கிஸா சம்கிக்கா. ஆசீவகர்களில் தலைசிறந்தவரும், மூன்றாவது தலைவராக இருந்தவரும் மக்காலி கோசலர் ஆவார். கோசலர் மகாவீரரை நாளந்தாவில் முதன்முறையாகச் சந்தித்தார். இவர்களது நட்பு ஆறாண்டு நீடித்தது. இவர்கள் பின்னர் கோட்பாட்டு வேற்றுமைகாரணமாகப்பிரிந்தனர்.பின்னர்கோசலர் சிராவஸ்தி சென்றார். அங்கு ஹலாஹலா என்ற வசதிமிக்க குயவர் பெண்ணால் ஆதரிக்கப்பட்டார். இவர் புத்துயிர்ப்பு என்ற கோட்பாட்டை நம்பினார். வேதத் துறவிகளின் பல்வேறு கடும் தவங்களைக் கேலிசெய்து, விமர்சித்தார். எதிர்ப்பிரிவுகள் என்பதால் பௌத்த, சமண நூல்கள் கோசலரைக் கெட்ட குணம் உள்ளவராகச் சித்தரிக்கின்றன. ஆசீவகப் பிரிவின் தலைமையகமாக சிராவஸ்தி இருந்தது. ஆசீவகர்கள் நிர்வாணத் துறவிகள். ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பியவர்கள். ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை நியதி அல்லது விதி என்பதாகும். இது 'எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவை என்பதால் இவ்வுலகில் எதையும் மாற்ற முடியாது; துக்கத்தைத் தீர்ப்பதற்கு ஒருவர் பல்வேறு பிறவிகளை எடுக்க நேரிடும்' என்று கருதுவதாகும். ஆசீவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன. அவை லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம் ஆகியன ஆகும். கோசலரின் மரணத்திற்குப் பிறகு, புராண கஸ்ஸபர், பகுத கச்சாயனர் என்ற இரு பரப்புரையாளர்கள் ஆசீவகர்களோடு இணைந்து, அதற்குப் புத்துயிர் கொடுத்தனர்.

செயல்களுக்கு நற்கூறுகள், தீயகூறுகள் எதுவும் கிடையாது என்று புராண கஸ்ஸபர் கருதினார். சித்திரவதை, காயம் இழைத்தல், கொலை ஆகியவற்றால் எந்தத் தீமையும் நேர்ந்து விடாது என்று கருதினார். அதேபோல ஈகை, சுயக்கட்டுப்பாடு, உண்மையான பேச்சு ஆகியவற்றாலும் எந்த நன்மையும் கிட்டாது. ஏனென்றால், எல்லாமே முன்னரே முடிவுசெய்யப்பட்டவை என்பதால் மனிதர்கள் எதையும் தமது செயல்களால் மாற்ற முடியாது. இருக்கும் ஒரே வழி செயலின்மைதான் என்பது அவரது கருத்து. பகுத கச்சாயனர் இந்த உலகம் ஏழு பொருட்களால் உருவாக்கப்பட்டதாக நம்பினார். அவை 'உருவாக்கப்படாதவை, குறைக்க முடியாதவை, படைக்கப்படாதவை, விளைவுகள் அற்றவை, மலைச் சிகரத்தைப் போல நிலையானவை, ஒரு தூணைப் போல உறுதியாக நிற்பவை, வடிவங்கள், வேறொன்றாக மாறாதவை, ஒன்றில் ஒன்று தலையிடாதவை, ஒன்றிற்கு ஒன்று மகிழ்ச்சியோ, வேதனையோ அல்லது மகிழ்ச்சி, வேதனை இரண்டையுமோ தர இயலாதவை.

> **தமிழ்நாட்டில் ஆசீவகர்கள் :** மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகியவை ஆசீவகக் கொள்கை குறித்து குறிப்பிடுகின்றன. நீலகேசியின் உண்மைக்கான தேடல் அவளை புத்தரிடமும், புராணனிடமும் இட்டுச் செல்கிறது. புராணன் ஆசீவகர்களின் தலைவர். சோழர்கள் ஆசீவகர்கள் மீது வரி விதித்ததாகக் கூறப்படுகிறது.

11th History Lesson 3 Tamil Medium.indd 44 12/3/2022 7:46:32 PM

குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசீவகத்திற்கு இருந்தார்கள். பௌத்தம், சமணம் ஆகியவற்றோடு ஒப்பிடும்போது, ஆசீவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும், நாடு முழுவதும் பரவியிருந்தது.

அஜித கேசகம்பளி (கேசத்தாலான கம்பளியணிந்த அஜிதன்) ஒரு பொருள்முதல்வாதி. அவர் ஒவ்வொரு மனிதனும் நெருப்பு, நீர், காற்று, உணர்வு ஆகிய நான்கு அடிப்படைப் பொருட்களால் உருவாக்கப்பட்டவன் என்று கருதினார். மரணத்திற்குப் பிறகு இந்த மூலப் பொருட்கள் பூமிக்குத் திரும்பிவிடும். மரணத்திற்குப் பிறகு வாழ்வில்லை. "பெருந்தன்மை மூடர்களால் கற்றுத்தரப்படுவதாகும். மரணத்திற்குப் பிறகான வாழ்க்கையைப் பற்றிப் பேசுபவர்களின் பேச்சு பொய்யும் வெற்று அரட்டையுமாகும். உடல் அழியும்போது புத்திசாலி, முட்டாள் எல்லோருமே முற்றிலுமாக அழிந்து போகிறார்கள். மரணத்திற்குப் பிறகு அவர்கள் வாழ்வதில்லை" என்றார் அவர்.

லோகாயதமும் சார்வாகமும்

"லோகாயதம்" என்ற சொல் பொருள் முதல்வாதத்தைக் குறிக்கிறது. இந்தியப் பொருள்முதல்வாதம் இந்தச் சிந்தனைப் போக்கை உருவாக்கிய இருவரில் ஒருவரான சார்வாகரின் பெயரால் சார்வாகம் என்றும் அழைக்கப்படுகிறது. சார்வாகரும் அஜித கேசகம்பளியும் இந்தியப் பொருள்முதல்வாதத்தை ஒரு முறையான தத்துவ முறையாக நிறுவியவர்கள் என்று சொல்லப்படுகிறது. சார்வாகர் ஐயுறுவாதம் என்ற சிந்தனையை மேம்படுத்தினார். அனுபவங்களின் மூலமே அறிவைத் தேட முடியுமென அவர் நம்பினார். மேலும், அவர் வேதங்களின் அதிகாரத்தைக் கேள்விக்கு உட்படுத்தினார்.

அவைதீக மதங்களிடையே மோதல்

பல்வேறு அவைதீக மதங்களுக்கிடையே கடும் மோதல்கள் நிலவின. இது அக்காலத்தின் பல்வேறு மதக் குறிப்புகள் மூலம் தெரியவருகிறது. பௌத்த, சமண நூல்கள் அவைதீக மதப் பிரிவுகள் பற்றிச் சொல்வதோடு அல்லாமல், அவற்றை சிறுமையும் படுத்துகின்றன. பகவதிசூத்திரம் எனும் சமணநூலில் மற்கலி கோசலர் தரக் குறைவாகப் பேசப்படுகிறார். புத்தகோஷரும் தனது நூலில் இவரை ஏளனம் செய்கிறார். ஒரு பௌத்த ஜாதகக் கதை இந்த துறவிகளை மின்மினிப் பூச்சிகளோடு ஒப்பிட்டு, இவர்களின் மெல்லிய ஒளி, சூரியனின் பிரகாசத்திற்கு முன், அதாவது புத்தரின் பிரகாசத்திற்கு முன் மங்கிப் போனதாக வர்ணிக்கிறது.

3.5 சமணம்

பல்வேறு பிரிவுகளில், வர்த்தமான மகாவீரரின் தலைமையிலான பிரிவு (பௌத்த இலக்கியங்களில் நிகந்த நடபுத்தர் என்று இவர் குறிப்பிடப்படுகிறார்) சமணம் என்ற ஒரு மதமாக மலர்ந்தது. இது முதலில் நிர்கிரந்தம் (தளைகளிலிருந்து விடுபட்டது) என்று அழைக்கப்பட்டது. மகாவீரர் ஜீனர் (உலகை வென்றவர்) என்று அழைக்கப்பட்டதால், அவரது பிரிவு ஜைனம் என்றும் அழைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சமணம் என்று அழைக்கப்படுகிறது. சமணப் பாரம்பரியத்தின் படி, சமணத்தை ஆதியில் தோற்றுவித்தவர் மகாவீரர் அல்ல. அவர் இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களில் கடைசியானவர். சமண பாரம்பரியத்தின்படி அதைத் தோற்றுவித்தவர் ரிஷபர் என்பவராவார். இவர் முதல் தீர்த்தங்கரராகக் கருதப்படுகிறார். யஜுர்வேதம் ரிஷபர், அஜிதானந்தர், அரிஷ்டநேமி என்ற மூன்று தீர்த்தங்கரர்களைக் குறிப்பிடுகிறது. மகாவீரர் தமது உறுப்பினர்களைத் துறவிகளாகவும், துறவறம் கொள்ளாது தம்மைப் பின்பற்றுபவர்களாகவும் திரட்டினார்.

மகாவீரரின் வாழ்க்கை

வர்த்தமானர் ஏறத்தாழ பொ.ஆ.மு. 540இல் வைசாலிக்கு அருகில் உள்ள குந்தகிராமம் என்ற ஒரு கிராமத்தில்பிறந்தார்.இவர்ஒருகணசங்கத்தைஆளும் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை சித்தார்த்தர், ஞானத்ரிகா என்ற இனக்குழுவின் தலைவர். இவரது தாய் திரிஷலை ஒரு லிச்சாவி இளவரசி. அவர் லிச்சாவியின் தலைவர் சேதகரின் சகோதரியும்கூட. மகாவீரர் தன் தாய் வழியில் மகதம், அங்கம், விதேகம் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு நெருங்கிய உறவினர். சிறுவயதிலிருந்தே அவர் ஆன்மீக வாழ்வின்பால் ஈர்க்கப்பட்டார். பெற்றோர்களின்

மகாவீரர் பிறப்புத் தொடர்பான சமண ஓவியம்

11th History Lesson 3 Tamil Medium.indd 45 12/3/2022 7:46:32 PM

மரணத்திற்குப் பிறகு, தமது முப்பதாவது வயதில் அவர் வீட்டை விட்டு வெளியேறினார். உண்மையான ஞானத்தைத் தேடிப் பன்னிரண்டாண்டுகள் அலைந்தார். அவர் கடுமையான விரதத்தை மேற்கொண்டார். ஆடைகளைத் துறந்தார். இப்படித் திரிந்த காலத்தில் கோசால மாஸ்கரிபுத்திரரைச் சந்தித்து அவரோடு ஆறாண்டு காலம் இருந்தார். பின்னர் கருத்து வேறுபாட்டால் பிரிந்தார். இப்படித் திரிய ஆரம்பித்த பதின்மூன்றாவது ஆண்டில், தனது நாற்பத்தியிரண்டாம் வயதில் வர்த்தமானர் ஞானத்தை அல்லது நிர்வாணத்தை அடைந்தார். பிறகு தீர்த்தங்கரர் ஆனார். ஜீனர் (வெற்றி பெற்றவர்) என்றும் மகாவீரர் என்றும் அழைக்கப்பட்டார். அவர் முப்பதாண்டு காலம் உபதேசம் செய்தார். செல்வர்களும் மேட்டுக்குடியினரும் அவரை ஆதரித்தனர். பொ.ஆ.மு. 468 வாக்கில் தனது எழுபத்தியிரண்டாம் வயதில், ராஜகிருகத்திற்கு அருகில் உள்ள பவபுரியில் மரணமடைந்தார். சமண நம்பிக்கையின்படி, அவர் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததாக நம்பப்படுகிறது. அவரது மரணம், அதாவது இறுதி விடுதலை சமணர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான நிகழ்வாகும்.

மகாவீரரை ஏராளமானோர் பின்பற்றினர். ஆரம்ப காலங்களில், இவர்கள் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் வந்தனர். எனினும் காலப்போக்கில், சமணம் வணிகம், வட்டிக்குக் கடன் தருவோர் ஆகிய சமூகத்தினரோடு சுருங்கிவிட்டது. அகிம்சையை சமணம் மிகவும் வலியுறுத்தியதால், வேளாண்மை உள்ளிட்ட மற்ற தொழில்களை அவர்களால் செய்ய முடியாமல் போனது. ஏனெனில் இத்தொழில்களில் தெரிந்தோ, தெரியாமலோ பிற உயிர்களைக் கொல்ல நேரலாம்.

மகாவீரரின் மறைவிற்கு 500 ஆண்டுகள் கழித்து, சுமார் பொ.ஆ. 79 அல்லது 82இல், சமணத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. மகதம் கடும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது. பத்ரபாஹு தலைமையில் சில சமணத் துறவிகள், தமது கடும் விரதங்களைத் தொடர்ந்து பின்பற்றுவதற்காகத் தெற்கு நோக்கிச் சென்றார்கள். அவர்கள் உடைகள் எதுவுமின்றி இருந்தார்கள். அவர்கள் திகம்பரர்கள் (வெளியை ஆடையாக அணிந்தவர் அல்லது நிர்வாணமானவர்) என்று அழைக்கப்பட்டார்கள். மற்றவர்கள் ஸ்தூலபத்திரர் தலைமையில் மகதத்திலேயே இருந்தார்கள். இவர்கள் வெள்ளையுடை உடுத்தினார்கள். இவர்கள் ஸ்வேதாம்பரர்கள் (வெள்ளை ஆடை உடுத்தியவர்கள்) என்று அழைக்கப்பட்டார்கள். இந்தப் பிளவு மகதத்தில் சமணத்தைப் பலவீனப்படுத்தியது. எனினும் குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒடிசா, கர்நாடகா ஆகிய இடங்களில் தீவிரமாகச் சமணத்தைப் பின்பற்றுவோர் இருந்தார்கள்.

பத்ரபாஹு மரணமடைந்த பிறகு, ஸ்தூலபத்திரர் பாடலிபுத்திரத்தில் ஒரு பெரிய மாநாட்டை நடத்தினார். இது சமண நெறிமுறைகளைத் தொகுத்தது. அத்தொகுப்பு பன்னிரண்டு அங்கங்களைக் (பாகங்களை) கொண்டது. இதைப் போன்ற மற்றொரு மாநாடு, பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டில், குஜராத்தில் உள்ள வல்லபியில் நடந்தது. இது பன்னிரண்டு உப அங்கங்களைச் சேர்த்தது. சமணத் துறவிகள் மத நூல்களை எழுதியதோடு, மதச்சார்பற்ற இலக்கியத்தையும் வளர்த்தனர். அச்சரங்க சூத்திரம், சூத்ரகிருதங்கம், கல்பசூத்திரம் ஆகியவை மிகத் தொடக்க கால சமண நூல்கள். இக்காலகட்டத்தைச் சேர்ந்த சமண நூல்கள் பெரும்பாலும் எளிய மக்களின் மொழியான அர்த்த– மகதி என்ற மொழியில் எழுதப்பட்டவை.

சமணத் தத்துவங்கள்

மகாவீரர்

சமணத்தின் மையமான தத்துவம் அஹிம்சை. சமணம் வலியுறுத்திய அளவிற்கு அஹிம்சையை வேறு எந்த மதமும் வலியுறுத்தவில்லை. அது மனித உணர்ச்சிகளையும் விமர்சித்தது. சமணம் கடவுளின் இருப்பை மறுத்தது. அதன் தொடக்க கட்டங்களில், சமணத்தில் உருவ வழிபாடு கிடையாது. 'கடவுளை வழிபடுவதாலோ, வேள்விகள் செய்வதாலோ முக்தி பெற முடியாது; எளிமையான ஒழுக்கமிக்க வாழ்க்கை மேற்கொள்வதன் மூலமாகவே ஒருவர் துன்பங்களிலிருந்து தப்ப முடியும்' என்று சமணம் வலியுறுத்தியது.

மகாவீரர் வேதங்களின் அதிகாரத்தை நிராகரித்தார். சமணம் வைதீகத்தை மறுக்கும் மதம். சமணத்தின்படி, உலகத்திற்குத் தொடக்கமும், முடிவும் கிடையாது. அது என்றும் நிலைத்திருக்கும். அது தொடர்ச்சியான வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் சந்திக்கும். சமணம் இருபொருள் வாதத்தை முன்வைத்தது. உலகம் ஆன்மாவாலும் (ஜீவன்) பொருளாலும் (அஜீவன்) உருவானது. இவ்விரண்டும் காலவரம்பற்றவை. ஜீவனும் அஜீவனும் இணையும்போது கர்மா (வினை) உண்டாகிறது. இது பிறப்பு, இறப்பு என்ற முடிவற்ற சுழற்சிக்கு இட்டுச் செல்கிறது. இக்கர்மாவிலிருந்து ஒருவர் விடுபடவேண்டும்

11th History Lesson 3 Tamil Medium.indd 46 12/3/2022 7:46:33 PM

எனில், அவர், கடுமையான துறவறங்களை மேற்கொள்ள வேண்டும். உடலை வருத்தும் நோன்புகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே சமண மதத்தைப் பொறுத்தவரை துறவிகளால் மட்டுமே பிறப்பு, இறப்பு என்ற சூழலிலிருந்து விடுதலை பெற முடியும்.

மும்மணிகள் (திரிரத்தினங்கள்)

சமண மதத்தினர் சில கடுமையான சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டும். அனைத்து சமணர்களும் கடைபிடிக்க வேண்டிய மூன்று கொள்கைகள் மும்மணிகள் (திரிரத்தினங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. அவையாவன :

1. நன்னம்பிக்கை (சம்யோக்–தர்ஷனா)
2. நல்லறிவு (சம்யோக்–ஞானா)
3. நன்னடத்தை (சம்யோக்–மஹாவ்ரதா)

ஐம்பெரும் சூளுரைகள்

துறவிகள் ஐம்பெரும் சூளுரைகளை (பஞ்ச–மஹாவ்ரதா) மேற்கொள்ள வேண்டும்.

1. கொல்லாமை. (அஹிம்சா)
2. கள்ளாமை (அஸ்தேயா)
3. பொய்யாமை (சத்யா)
4. புலனடக்கம் (பிரும்மச்சரியா)
5. பொருள் பற்றின்மை (அபரிக்ரஹா)

அஹிம்சை

இந்த ஐந்து சபதங்களும் துறவிகள், துறவி அல்லாதவர்கள் அனைவருக்கும் பொதுவானவை. மற்றவர்களை விடத் துறவிகள் இந்த ஐந்தையும் மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும். சமணம் அஹிம்சைக்கு அதிக முக்கியத்துவம் தந்ததால், மதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள், தாங்கள் அறியாமல்கூடச் சிறு பூச்சிகளை மூச்சோடு சேர்த்து இழுத்துவிடக் கூடாது என்று வாயையும் மூக்கையும் துணியால் மறைத்துக் கொள்வார்கள். எறும்பு போன்ற சிறு பூச்சிகளை மிதித்து விடக் கூடாது என்பதற்காகச் சமணத் துறவிகள் தாம் நடக்கும் பாதையை இறகால் பெருக்கியபடியே செல்வார்கள். வேளாண்மை முதலான தொழில்களில் உயிருள்ள ஜீவன்களைக் கொல்லவோ, காயப்படுத்தவோ நேர்ந்துவிடலாம் என்பதால் சமணர்களால் அவற்றில் ஈடுபடமுடியவில்லை. எனவே அவர்கள் வியாபாரத்திலும் வட்டிக்குக் கடன் கொடுப்பதிலும் ஈடுபட்டு, அவற்றில் சிறந்து விளங்கினார்கள். அதன் காரணமாக, நகரமயமாக்கத்தோடு அவர்கள் மிக நெருக்கமான தொடர்பு கொண்டவர்கள் ஆனார்கள்.

சமணம் ஒரு சமத்துவமான மதம். அது பிறப்பின் காரணமாக எந்தவித ஏற்றத்தாழ்வையும் அனுமதிக்கவில்லை. சமூகத்தில் ஒருவருடைய தகுதிநிலையை முடிவு செய்வது அவரது செயல்கள்தானே தவிர, பிறப்பல்ல எனச் சமணம் கூறுகிறது. "ஒருவன் தன் செயல்களால், பிராமணனாக, சத்திரியனாக, வைசியனாக, சூத்திரனாக மாறுகிறான்" எனச் சமணம் நம்புகிறது. பிறப்பின் காரணமாகப் பெருமை கொள்ளுதல் பாவமாகக் கருதப்படுகிறது. பெண்களும் துறவிகளாக ஏற்கப்பட்டார்கள். எனினும், பெண்களால் முக்தி அடைய முடியாது. நற்செயல்களைச் செய்து புண்ணியங்களை ஈட்டுவதன் மூலம், ஒரு பெண் ஆணாக மறுபிறவி எடுத்து, பிறகு முயற்சி செய்து முக்தி பெறலாம்.

தமிழ்நாட்டில் சமணம்

ஏறத்தாழ பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சமணம் தமிழ்நாட்டில் பரவியது. மதுரை மற்றும் பிற இடங்களைச் சுற்றிலும் குன்றுகளில் சமணத் துறவிகள் தங்கியிருந்த கற்படுக்கைகளோடு கூடிய குகைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. கோப்பெருஞ்சோழன் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தான் என்று புறநானூற்றில் காணப்படும் செய்தி சல்லேகனா என்ற சமண நடைமுறையை ஒத்திருக்கிறது. தொடக்க காலத் தமிழ் இலக்கியத்தில் சமணத்தின் வலுவான தாக்கத்தை உணர முடிகிறது. நாலடியார், பழமொழி, சீவகசிந்தாமணி, யாப்பெருங்கலக்காரிகை, நீலகேசி போன்றவை தமிழின் முக்கியமான சமண நூல்கள் ஆகும். பொ.ஆ. 470இல் மதுரையில்



சமணக் காஞ்சி, திருபருத்திக்குன்றம்

11th History Lesson 3 Tamil Medium.indd 47 12/3/2022 7:46:35 PM

வஜ்ரநந்தி என்பவரால் ஒரு திராவிட சமணச் சங்கம் நிறுவப்பட்டது. இவர் பூஜ்யபாதா என்பவரின் சீடர். சமணம் தமிழ்நாட்டில் பரவியதால், பல சமணக் கோவில்களும் கட்டப்பட்டன. காஞ்சிபுரம் அருகே அழகான மேற்கூரை ஓவியங்களுடன் உள்ள திருப்பருத்திக்குன்றம் கோவில் இத்தகைய சமணக்கோவில்களில் ஒன்று. காஞ்சிபுரத்தின் இப்பகுதி சமணக்காஞ்சி எனப்பட்டது.

இந்தியாவில் சமணத்தின் வீழ்ச்சி

இந்தியாவில் சமணம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள்:

1. அரச ஆதரவைச் சமணம் இழந்தது.
2. திகம்பரர், ஸ்வேதாம்பரர் எனப் பிளவு ஏற்பட்டது சமணத்தை மிகவும் பலவீனப்படுத்தியது.
3. ஒரு மத இயக்கமாகச் செயலாற்றும் துடிப்பைக் காலப்போக்கில் சமணம் இழந்தது.
4. குழுமனநிலை சமணத்தைப் பலவீனப்படுத்தியது.
5. சமண மத நடைமுறைகளின் கடுமையும் அதன் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.
6. ஒரு போட்டி மதப்பிரிவாக பௌத்தம் பரவி, சமணத்தைப் பின்னுக்குத் தள்ளியது.

3.6 பௌத்தம்

அவைதீக மதங்களிலேயே மிகவும் பிரபலமானது பௌத்தம்தான். இது பல்வேறு அரசர்களால் ஆதரிக்கப்பட்ட, செல்வாக்குமிக்க மதமாக உருவானது. இதன் கருத்துகள் மிகவும் செல்வாக்காக இருந்ததன் காரணமாக, அசோகர் இதை அரசாங்கக் கொள்கையாக ஏற்றார். ஏறத்தாழ சென்ற ஆயிரமாண்டுகளில் இந்தியாவில் பௌத்தம் கிட்டத்தட்ட காணாமலேயே போய்விட்டாலும்கூட, அதற்கு வெளியே தொலைவிற்குப் பரவியது. இன்றும் தென்கிழக்கு, கிழக்காசிய நாடுகளில் பௌத்தம் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. 20–ஆம் நூற்றாண்டின் மத்தியில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரால் பௌத்தம் இந்தியாவில் மீண்டும் புத்துயிர் பெற்றது.

புத்தரின் வாழ்க்கை

கௌதம புத்தர் சாக்கிய இனக்குழுவின் அரசர் சுத்தோதனர், பட்டத்தரசி மாயாதேவி (மகாமாயா) ஆகியோரின் மகன் ஆவார். இயற்பெயர் சித்தார்த்தர். அவருடைய தாய் மகாமாயா கருவுற்றிருந்தபோது, ஆறு தந்தங்கள் கொண்ட வெள்ளை யானை தன் கருப்பையில் புகுவதாகக் கனவு கண்டார். "பிறக்கப் போகும் குழந்தை உலகம் முழுவதற்கும் பேரரசனாக அல்லது உலகம் முழுவதற்குமான ஆசிரியனாக இருக்கும்" என்று அறிஞர்கள் ஆருடம் கூறினர். மகாமாயா தன் தாய்வீடு செல்லும் வழியில் கபிலவஸ்துவிற்கு அருகில் உள்ள லும்பினியில் உள்ள ஒரு பூங்காவில் சித்தார்த்தர் பிறந்தார். பட்டத்து இளவரசராக அவர் வளமாக வளர்ந்தார். யசோதராவை மணந்தார். அவர்களுக்கு ராகுலன் என்ற மகன் பிறந்தான். ஒரு நாள் தனது தேரோட்டி சன்னாவுடன் தேரில் அரண்மனையை விட்டு வெளியே சென்றபோது, ஒரு கிழவரையும், ஒரு நோயாளியையும், இறந்த உடலையும், ஒரு பிச்சையெடுக்கும் துறவியையும் பார்த்தார். மக்களுடைய துன்பங்கள் கண்டு வேதனைப்பட்ட அவர் நிரந்தர உண்மையைத் தேடி, நள்ளிரவில் தன் அரண்மனையை விட்டு வெளியேறினார். அவருக்குப் பிரியமான குதிரையான காந்தகா பூட்டப்பட்ட தேரை தேரோட்டி சன்னா நகர்க்கு வெளியே வெகு தொலைவிற்கு ஓட்டிச் சென்றார். சித்தார்த்தர் தனது முடியை வெட்டி, களையப்பட்ட தன் உடை, நகைகளோடு தந்தைக்குக் கொடுத்தனுப்பினார். இது மஹாபிரஸ்கிரமனா என்று அழைக்கப்படுகிறது.

கௌதம புத்தர்

ஞானத்தைத் தேடி அலைந்த சித்தார்த்தர், சிறிது காலத்திற்கு அலார கலாமா என்பவரிடம் சீடராக இருந்தார். உத்தக ராமபுத்தர் என்ற துறவியிடமும் வழிகாட்டுதல் பெற்றார். இவர்களுடைய பாதைகள் சித்தாருக்கு மனநிறைவைத் தரவில்லை. கடுமையான விரதங்கள் மேற்கொண்டு, ஒரு கட்டத்தில் சாவின் விளிம்பிற்குச் சென்றுவிட்டார் சித்தார்த்தர். ஒரு நாள் அவர் பால் விற்கும் பெண்மணியான சுஜாதா என்பவர் கொடுத்த பாலில் சமைத்த சோறை உண்டுவிட்டு, புத்தகயாவில் ஒரு அரசமரத்தின் கீழ் தியானம் செய்ய ஆரம்பித்தார். நாற்பத்தியொன்பது நாள் தியானத்திற்குப் பிறகு, தமது முப்பத்தைந்தாவது வயதில் ஞானத்தை அடைந்தார். அதிலிருந்து அவர் புத்தர், அதாவது ஞானம் அடைந்தவர் என்று அழைக்கப்பட்டார். வாரணாசிக்கு அருகே உள்ள சாரநாத்தில் மான்கள் நிறைந்த ஒரு காட்டில் அவர் தனது முதல் உபதேசத்தை அளித்தார். அது தர்மச்சக்கரபரிவர்த்தனா எனப்படுகிறது. அவர்

மகாபோதி கோவில், கயா

11th History Lesson 3 Tamil Medium.indd 48 12/3/2022 7:46:36 PM

நான்கு சிறந்த உண்மைகள் பற்றியும், மத்திமப் பாதை பற்றியும் பேசினார். அவர் சங்கத்தை அமைத்து, தன் கருத்துகளை வெகுதொலைவில் உள்ள இடங்களுக்கும் பரப்பினார். புத்தரும் அவருடைய சீடர்களும் ஆண்டுக்கு எட்டு மாதங்கள் பயணம் செய்தனர். மழைக்காலத்தின் போது நான்கு மாதங்கள் மட்டும் ஒரே இடத்தில் தங்கினர். அவர் தனது எண்பதாவது வயதில் குஷிநகரத்தில் மறைந்தார். அது பரிநிர்வாணம் என்று குறிப்பிடப்படுகிறது. சரிபுத்தர், மஹாமொக்கலனர், மஹாகச்சாயனர், ஆனந்தர் ஆகியோர் புத்தரின் முக்கியமான சீடர்கள் ஆவர். புத்தரை அரசர்கள் முதல் எளிய மக்கள் வரை ஏராளமானோர் பின்பற்றினர்.

பௌத்த சங்கங்கள்

புத்தரின் மரணத்திற்குப் பிறகு, பௌத்தத்தின் விதிகளும் மற்ற விஷயங்களும் பௌத்த சங்கங்களில் முடிவு செய்யப்பட்டன. காலப் போக்கில் நான்கு பௌத்த சங்கங்கள் நடந்தன. முதல் பௌத்த சங்கம் புத்தரின் மரணத்திற்குப் பிறகு அஜாதசத்ரு காலத்தில் ராஜகிருகத்தில் நடந்தது. இதற்கு உபாலி தலைமை தாங்கினார். இந்த சங்கத்தில் உபாலி வினய பிடகத்தை வாசித்தார். ஆனந்தர் சுத்த பிடகத்தை வாசித்தார். இரண்டாவது பௌத்த சங்கம் புத்தரின் மரணம், அதாவது பரிநிர்வாணத்திற்கு நூறாண்டுகளுக்குப் பின், வைசாலியில் நடந்தது. பௌத்த மதம் ஸ்தவிரவதின்கள் அல்லது – பெரியோரின் உபதேசங்களை நம்புவோர் – என்றும், மகாசங்கிகா அல்லது பெரும் குழுவின் உறுப்பினர்கள் – என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. மூன்றாவது சங்கம் பாடலிபுத்திரத்தில் நடந்தது. இதை அசோகர் கூட்டினார். இதற்குள் ஸ்தவிரவதின்கள் தம்மை வலுவாக நிறுவிக் கொண்டுவிட்டார்கள். தமக்கு எதிரான கருத்துக் கொண்டோரை மதத்திலிருந்து நீக்கினார்கள். அபிதம்ம பிடகத்தில் கதவத்து என்ற கடைசிப் பகுதி சேர்க்கப்பட்டது. நான்காவது பௌத்த சங்கம் கனிஷ்கர் காலத்தில் காஷ்மீரில் நடந்தது. சர்வஸ்திவாதிகள் என்போர் பௌத்தத்தின் முக்கியமான பிரிவினர். இப்பிரிவின் கொள்கைகள் மஹாவிபாஷாவில் தொகுக்கப்பட்டுள்ளன.

பசித்த புலி : ஒரு ஜாதகக் கதை

நல்லொழுக்கத்திற்கும், ஆன்மீக நெறிக்கும் பெயர் பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்த போதிசத்துவர் சிறந்த அறிஞராக, ஆசிரியராக உயர்ந்தார். செல்வம் பற்றிய ஆசை எதுவும் இன்றி, அவர் கானகம் சென்று துறவியாக வாழ்ந்தார். கானகத்தில் அவர் அப்போதுதான் பிரசவித்திருந்த பசியோடிருந்த புலியைப் பார்த்தார். புலி பசியில் தான் ஈன்ற குட்டிகளில் ஒன்றையே தின்ன இருந்தது. அருகில் வேறு உணவு எதுவும் இல்லாத நிலையில், போதிசத்துவர், இரக்கம் மேலிட, தனது உடலையே அதற்கு உணவாக அளித்தார்.



பௌத்த சங்கம்

பௌத்தத்தின் பிரிவுகள்

மகாசங்கிகர்கள், ஸ்தவிரவதின்கள், சர்வஸ்திவாதிகள் ஆகியவை பௌத்தத்தின் முக்கியமான பிரிவுகளாக உருவாகின. மகாசங்கிகர்கள், சர்வஸ்திவாதிகள் மத்தியில் புதிய கருத்துகள் உருவாகின. இது பௌத்தத்தில் மஹாயானம், ஹீனயானம் (பெரிய பாதை, சிறிய பாதை) ஆகிய பிரிவுகளின் உருவாக்கத்திற்கு இட்டுச் சென்றது. இந்தியாவில் மகாயானம் செல்வாக்குப் பெற்றது. பௌத்த கல்வியின் முக்கியமான மையமாக நாளந்தா பல்கலைக்கழகம் திகழ்ந்தது. இது வங்காளத்தைச் சேர்ந்த 'பால' வம்ச அரசர்களால் ஆதரிக்கப்பட்டது. மஹாயானம் சீனா, ஜப்பானுக்குப் பரவியது. ஹீனயானம் இலங்கை, பர்மா, தாய்லாந்து முதலான தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பரவியது. குப்தர்களின் ஆட்சியின் இறுதியில் வஜ்ராயனம் என்ற இடிமின்னல் பாதை உருவானது. இது வங்கம், பிகார் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றது. இது உள்ளூரின் புராதனப் பண்பாடுகளால் தாக்கம் பெற்று, பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் திபெத்திற்குப் பரவியது. பிகாரின் விக்ரமசீலா பல்கலைக்கழகம் வஜ்ராயன பௌத்தத்திற்கான முக்கியமான கல்வி நிலையமாகும். இந்தியாவில் பக்தி இயக்கத்தின் எழுச்சியின் காரணமாக பௌத்தம் வீழ்ச்சி பெறத் தொடங்கியது. விரைவிலேயே பௌத்தத்தை இந்துமதம் உள்வாங்க முனைந்தது. சில பாரம்பரியங்களில் புத்தர் விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.

பௌத்த இலக்கியங்கள்

பௌத்த இலக்கியங்கள் பாலி மொழியில் தொகுக்கப்பட்டன. பாலி பௌத்த சட்டங்கள் திரிபிடகங்கள் (மூன்று கூடைகள்) என்று அழைக்கப்பட்டன. அவை வினய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பவையாகும். வினய பிடகம் துறவறம் குறித்த விதிகளையும் ஒழுக்க விதிகளையும் கூறுவதாகும். சுத்த பிடகம் புத்தரின் போதனைகளைக்

11th History Lesson 3 Tamil Medium.indd 49 12/3/2022 7:46:36 PM

கூறுவது. அபிதம்ம பிடகம் பௌத்த தத்துவம் பற்றிப் பேசுகிறது. புத்தரின் போதனைகள் அடங்கிய சுத்த பிடகம் ஐந்து பகுதிகளாக அதாவது நிகாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தேராகதா, தேரிகதா (மூத்த பிட்சுகள், பிக்குனிகளின் பிரார்த்தனைப் பாடல்கள்), ஜாதகக் கதைகள் (போதிசத்துவராக முந்தைய பிறவிகளில் புத்தர் செய்த செயல்கள் பற்றிய கதைகள்) ஆகியவை அடங்கும்.

கிரேக்க–பாக்டீரிய அரசன் மினாண்டருக்கும், பௌத்தத் துறவி நாகசேனருக்கும் நடக்கும் விவாதமான மிலிந்த பன்ஹா, இலங்கை வரலாற்றுக் குறிப்புகளான தீபவம்சம் (தீவு வரலாற்றுக் குறிப்புகள்), மகாவம்சம் (பெரும் வரலாற்றுக்குறிப்பு), குலவம்சம் (சிறிய வரலாற்றுக்குறிப்பு) ஆகியவை மற்ற சில முக்கியமான பௌத்த இலக்கியங்களாகும்.

புத்தரின் நான்கு பெரும் உண்மைகள்

1. துன்பம் பற்றிய பெரும் உண்மை – பிறப்பு, வயது, மரணம், விரும்பத்தகாதவை, பிரிவு, நிறைவேறாத விருப்பம் பற்றியது. (துக்கம்)
2. துன்பத்தின் காரணம் பற்றிய பெரும் உண்மை – இன்பம், அதிகாரம், நீண்ட ஆயுள் போன்றவற்றிற்கான ஆசையே துன்பத்திற்கான காரணமாகும். (துக்க நிவாரணம்)
3. துன்பத்தின் முடிவு பற்றிய பெரும் உண்மை (நிர்வாணம்) – துன்பத்திலிருந்து முழுமையான விடுதலை. (துக்கோற்பத்தி)
4. கர்மா அல்லது பிறப்புச் சுழற்சியிலிருந்து விடுபட நிர்வாண நிலையை அடைய வேண்டும். இந்நிலையை அடைய எண்வழிப்பாதை அல்லது மத்திமப்பாதையைப் பின்பற்ற வேண்டும். (துக்க நிவாரண மார்க்கம்)

புத்தரின் மத்திம வழி அல்லது எண்வழிப்பாதை (அட்டாங்க மார்க்கம்)

1. நன்னம்பிக்கை 2. நல்லர்வம் 3. நல்வாய்மை 4. நற்செயல் 5. நல்வாழ்க்கை முறை 6. நன்முயற்சி 7. நற்சிந்தனை 8. நல்ல தியானம்.

எனவே, புத்தர் கடவுள் பற்றிக் குறிப்பிடவோ, பேசவோ இல்லை. அவர் கடவுளின் இருப்பை ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. பௌத்தம் சாதி முறையை ஏற்கவில்லை. சமத்துவத்தை வலியுறுத்தியது. அனைவரிடத்திலும் அன்பையும் அஹிம்சையையும் போதித்தது. எனினும், அஹிம்சையைப் பொறுத்தவரை, சமணம் போல் தீவிரமாக இல்லாமல் மிதப் போக்கைக் கடைபிடித்தது. பௌத்தம் வீணடிப்பதற்கு எதிரானது, அது வணிகத்தையும் சிக்கனத்தையும் ஆதரித்தது. ஆயுதங்கள், உயிருள்ள ஜீவன்கள், இறைச்சி, மது, விஷம் ஆகியவற்றை விற்பனை செய்வதை அது அனுமதிக்கவில்லை.

தமிழ்நாட்டில் பௌத்தம்

பௌத்தம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பரவியது. தக்காணப்பகுதிகளில் காணப்படும் அசோகரின் கல்வெட்டுக்குறிப்புகள் இந்தியாவின் தென்பகுதிகளில் பௌத்தம் பரவியதைக் குறிப்பிடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் பொ.ஆ. நான்காம் நூற்றாண்டில் ஒரு பௌத்த வளாகம் இருந்ததைத் தொல்லியல் சான்றுகளும் வெளிப்படுத்துகின்றன. வரலாற்று அறிஞரான நொபொரு கராஷிமா, பட்டினப்பாலையை ஆதாரமாகக் கொண்டு, அக்காலகட்டத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் புலால் உணவுகளைத் தவிர்த்த, உயிர்ப்பலியை எதிர்த்த வணிகர்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறார். இதன் மூலம் தமிழ்நாட்டில் பௌத்தத்தின் தாக்கத்தை உணர முடியும். சங்க காலத்துக்குப் பிற்பட்ட இரட்டைக் காப்பிய நூல்களில் ஒன்றான, சீத்தலைச்சாத்தனாரால் எழுதப்பட்ட மணிமேகலை பௌத்த இலக்கியமாகும். அதைப்போன்று 'குண்டலகேசி'யும் ஒரு பௌத்த இலக்கியமாகும். பொது ஆண்டுத் தொடக்கத்தில் காஞ்சிபுரம் பௌத்தம் தழைத்தோங்கிய மையமாகவே இருந்தது. நாளந்தா பல்கலைக்கழகத்திற்குத் தலைமை தாங்கிய தின்னகர், தர்மபாலர் ஆகியோர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பௌத்த அறிஞர்கள் ஆவர். தமிழ்நாட்டிற்கு வருகை தந்ததாக நம்பப்படும் யுவான் சுவாங் தனது பயணக்குறிப்புகளில், அசோகரால் காஞ்சிபுரத்தில் கட்டப்பட்ட பல ஸ்தூபிகளைக் குறிப்பிடுகிறார்.

பல்லவ அரசன் இரண்டாம் நரசிம்ம வர்மனின் (பொ.ஆ 695–722) ஆட்சிக் காலத்தில் ஒரு சீன அரசரின் வேண்டுகோளுக்கிணங்க நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தக் கோவில் கட்டப்பட்டது. சீனத்துறவி வு–கிங் இந்த பௌத்த மடத்துக்கு வருகை தந்தார். பொ.ஆ.1006இல் முதலாம் இராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் ஸ்ரீவிஜய அரசன் மாற விஜயோத்துங்க வர்மன் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தக் கோயிலைக் கட்டினார். அது சூளாமணி வர்ம விஹாரம் எனப்படுகிறது.

இந்தியாவில் பௌத்தத்தின் வீழ்ச்சி

பௌத்தம் காலத்துக்குக் காலம் பிரிவுகளை எதிர்கொண்டது. அதில் ஏற்பட்ட ஹீனயானா, மகாயானா, வஜ்ராயனா, தந்திராயனா, சகஜயானா ஆகிய பிரிவுகள் பௌத்தத்தின் உண்மைத்தன்மையை இழக்கச் செய்தன.

11th History Lesson 3 Tamil Medium.indd 50 12/3/2022 7:46:36 PM

வட இந்தியாவில் பேச்சுமொழிகளாக இருந்த பாலி, பிராகிருதம் ஆகியவற்றில் பௌத்த மதச் செய்திகள் முதலில் பரப்பப்பட்டு வந்தன. கனிஷ்கரின் ஆட்சியில் நான்காம் பௌத்த சங்கம் நடத்தப்பட்டதிலிருந்து அவை சமஸ்கிருத மொழியில் எடுத்துச்செல்லப்பட்டன. எனவே பாமர மக்களுக்கும் பௌத்தத்திற்கும் இடையே இடைவெளி விழுந்தது.

ஹர்ஷவர்த்தனரின் காலத்துக்குப் பிறகு, பௌத்தம் அரச ஆதரவை இழந்தது. இதற்கு மாறாக, வேத மதம் முதன்முதலாகப் புஷ்யமித்ர சுங்கரிடமிருந்தும் பிற்காலத்தில் குப்தப் பேரரசர்களிடமிருந்தும் அரச ஆதரவைப் பெற்றது. பக்தி இயக்கத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதிகளான ராமனுஜர், ராமானந்தர் ஆகியோர் வேத மதத்தின் பெருமையை நிலைநாட்டினர்.

ஹூணர்களின் படையெடுப்பு பௌத்தத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஹூண ஆட்சியாளர்களான தோரமானர், மிகிரகுலர் ஆகியோர் பௌத்தர்களின் மீது ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்தனர். அவர்கள் வடமேற்கு இந்தியாவில் வாழ்ந்த பௌத்த மதத்தினரை கிட்டத்தட்ட அழித்தொழித்தனர். கூடவே இரஜபுத்திர ஆட்சியாளர்களும் இதில் ஈடுபட்டனர். அவர்களால் பௌத்தத்தின் கொல்லாமைக் கோட்பாட்டுடன் இணக்கம் காண முடியவில்லை. அவர்கள் வேத மதத்தின் தீவிரமான ஆதரவாளர்களாகவும் இருந்தார்கள். இராஜபுத்திரர்கள் பௌத்த மதத்தினரைத் துன்புறுத்துவதிலும் கொல்வதிலும் ஈடுபட்டனர். இறுதியாக, அராபியர்கள், துருக்கியரின் படையெடுப்புகள் பௌத்தத் துறவிகளை இந்தியாவை விட்டு வெளியேற்றி, நேபாளம், திபெத், இலங்கை ஆகிய நாடுகளில் அடைக்கலம் தேட வைத்தன. இதன் விளைவாக, பௌத்த மதம் இந்தியாவிலிருந்து மெல்ல மெல்ல மறைந்தது.

தோரமானரின் நாணயம்

பாடச் சுருக்கம்

- பொ.ஆ.மு. 1000–700க்கும் இடைப்பட்ட காலத்தில் வேளாண்நில விரிவாக்கத்தில் இரும்பு குறிப்பிடத்தக்க பங்கை வகித்தது.
- வேளாண் உபரி, கைவினைத்தொழில்களின் வளர்ச்சி, வணிக விரிவாக்கம், மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவை கங்கைச் சமவெளியில் நகரங்களும் பரிமாற்ற மையங்களும் தோன்றுவதற்கு வழிவகுத்தன.
- மகாஜனபதங்கள், அவற்றின் அரசியல் இயல்புகளின் அடிப்படையில் கண–சங்கங்கள் என்றும், குடித்தலைமை ஆட்சி என்றும் பிரிக்கப்பட்டன.
- ஆசீவகர்களின் கருத்துப்படி, லாபமும் நஷ்டமும், இன்பமும் துன்பமும், வாழ்வும் மரணமும் வாழ்வின் தவிர்க்க இயலாத கூறுகளாகும்.
- மகாவீரரின் மும்மணிகளும், புத்தரின் எண்வழிப்பாதையும் பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் புதிய அறிவு மலர்ச்சியை ஏற்படுத்தியது.
- பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு தமிழ் நாட்டில் பரவியது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. புத்தர் தனது முதல் போதனையை ________ இல் நிகழ்த்தினார்.

(அ) சாஞ்சி (ஆ) வாரணாசி
(இ) சாரநாத் (ஈ) லும்பினி

2. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் ________ ஆகும்.

(அ) சீவகசிந்தாமணி (ஆ) அச்சரங்கசூத்திரம்
(இ) கல்பசூத்திரம் (ஈ) சமனபலசுத்தா

3. பகவதிசூத்திரம் ஒரு ________ நூலாகும்.

(அ) பௌத்தம் (ஆ) சமணம்
(இ) ஆசீவகம் (ஈ) வேதம்

4. ________ வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

(அ) இரும்பு (ஆ) வெண்கலம்
(இ) செம்பு (ஈ) பித்தளை

11th History Lesson 3 Tamil Medium.indd 51 12/3/2022 7:46:37 PM

5. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ________ ஆகும்.

(அ) கோசலம் (ஆ) அவந்தி

(இ) மகதம் (ஈ) குரு

II. குறுகிய விடை தருக.

1. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.
2. சார்வாகம் குறித்து அறிந்ததைக் கூறுக.
3. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
4. ஜனபதங்களுக்கும் மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறுக.
5. தமிழ்நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டினத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.

III. சுருக்கமாக விடை தருக.

1. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
2. கங்கைச்சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள் யாவை?
3. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு, வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.
4. பொ.ஆ.மு. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவைதீகச் சிந்தனையாளர்களை அடையாளம் காண்க.
5. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.

IV. விரிவான விடை தருக.

1. பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவுமலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?
2. ஆசீவகம் குறித்து விளக்கவும். மேலும் இந்தியாவில் அதன் பரவலையும் குறிப்பிடவும்.
3. சமணத்தில் ஏற்பட்ட பிளவை விளக்குக.
4. புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.
5. இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் எவை?

செயல்பாடுகள்

1. இந்திய வரைபடத்தில் 16 மகாஜனபதங்களின் அமைவிடத்தைக் குறிக்கவும்.
2. இந்தியாவில் உள்ள பௌத்த மத நினைவுச் சின்னங்களைக் குறித்த செய்திகளுடன் ஒரு விளக்கப்படம் தயாரிக்கவும்.

மூலநூல்கள்

1. A.L. Basham, *The Wonder that was India*, 1977
2. Abraham Eraly, *Gem in the Lotus: The Seeding of Indian Civilization*, Penguin, 2000
3. B.M. Barua, *The Ajivakas*, University of Calcutta, 1920
4. Hajime Nakamura, *Indian Buddhism*
5. S.Radhakrishnan, *Indian Philosophy, vol. 1*, George, Allen & Unwin,
6. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India*, 2009. Pearson Longman
7. Noboru Karashima, *A Concise History of South India*, OUP, 2014.
8. J.M. Somasundaram Pilllai, *A History of Tamil Literature*, Annamalainagar, 1968.
9. Himanshu Prabha Ray, "Writings on the Maritime History of Ancient India" in Sabyasachi Bhattacharya ed., *Approaches to History: Essays in Indian Historiography*, ICHR in association with Primus Books, Delhi, 2011.

இணையதள ஆதாரங்கள்

1. http://www.philtar.ac.uk/encyclopedia/hindu/ascetic/ajiv.html
2. http://www.columbia.edu/itc/religion/f2001/edit/docs/samannaphala.pdf
3. http://www.himalayanart.org

11th History Lesson 3 Tamil Medium.indd 52 12/3/2022 7:46:37 PM

கலைச்சொற்கள்

அவநம்பிக்கை	scepticism	doubt
பரவு	pervade	spread
அகழி	moat	a deep wide trench filled with water
பரம்பரை	lineage	ancestry
மூத்த மகனுக்கு மட்டுமே வாரிசுரிமை என்ற கோட்பாடு	primogeniture	An exclusive right of inheritance by the first son
கட்டாயப்படுத்துதல்	coercion	compulsion
புகழ்வாய்ந்த	preeminent	famous
வர்க்க அடிப்படையில் அமைக்கப்பட்ட	stratified	having a class structure
சிந்தனை செய்தல்	contemplating	meditating/pondering
ஆதரித்தல்	espousing	supporting
சிறுமைப்படுத்துதல்	belittle	degrade
வெறுக்கத்தக்க	contemptible	hated
வைதீகத்திற்கு எதிரான	heretics	a person who differs in opinion from established religion/dogma
தவிர்	refrain	avoid
பிளவு	schism	division
சிக்கனமான	frugality	economical
உறுதிப்படுத்து	vouch	confirm
நசுக்கு அல்லது அடக்கு	smother	suppress

இணையச் செயல்பாடு

பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்

வெக்டார் டேட்டாபேஸ் அடிப்படையிலான வரைபடங்கள் குறித்த இந்த செயல்பாட்டில் புதிய மதப்பிரிவுகள் தோன்றிய இடங்களையும், புதிதாகத் தோன்றிய அரசுகளின் தலைநகரங்களையும் சுட்டிக்காட்ட உதவுகிறது.



படிகள்:

- கீழ்க்காணும் உரலி விரைவுக் / குறியீட்டைப் பயன்படுத்தி geacron என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- உலக வரலாற்று வரைபடப் பக்கம் தோன்றும்.
- கொடுக்கப்பட்ட காலத்தைச் சேர்ந்த அரசினை நீ காண்பாய். (எ.கா. மௌரியர்கள் காலம்)
- அக்காலத்திற்குரிய வரைபடம் தோன்றும்.

உரலி

http://geacron.com/home-en/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

11th History Lesson 3 Tamil Medium.indd 53 12/3/2022 7:46:38 PM

அலகு
4

அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்

65AWO

கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தின் மூலம் கீழ்க்கண்டவை குறித்து அறிவைப் பெறுதல்.

- இந்தியாவின் முக்கியமான முதல் இரண்டு பேரரசுகளின் தோற்றம்
- பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோரின் படையெடுப்புகளின் குறிப்பிடத்தக்க அம்சங்கள்
- பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் 3ஆம் நூற்றாண்டு வரையிலான சமூக–பொருளாதார மாற்றங்கள்
- மௌரியர் காலத்துக்கு முற்பட்ட நிர்வாகமும் சமூகப் பொருளாதார நிலைகளும்
- அசோகரின் தர்ம அரசு குறித்து அவரது கல்வெட்டுக் கட்டளைகள் வழியாக எடுத்துரைத்தல்.

அறிமுகம்

பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு வரை வட இந்தியா பல முக்கியமான அரசியல், சமூக மாற்றங்களை எதிர்கொண்டது. பௌத்தம், சமணம் இந்தியாவின் முக்கியமான புதிய மதங்களாக உருவாகின. ஏராளமான மக்கள் இந்த மதங்களைப் பின்பற்றினார்கள். இவ்விரு அவைதீக மதங்களும் வைதீக வேத மதத்தின் கோட்பாடுகளுக்கு முரணானவை. புதியதாக உருவாகிவந்த சமூகத்தில் மக்கள் பல்வேறு மத நம்பிக்கைகள் கொண்டவர்களாக இருந்ததைத் தொடர்ந்து, சமணம், பௌத்தம் ஆகிய புதிய மதங்கள் போதித்த புதிய நம்பிக்கைகள், கருத்துகளின் விளைவாக அதுவரை வேத சடங்குகளில் மட்டுமே மையம் கொண்டிருந்த சமூக அமைப்பு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களுக்கு உள்ளானது. அரசு முறை தொடங்கிய இக்காலகட்டத்தில், சிறு நாடுகளும் இனக்குழுக்களின் கூட்டமைப்புகளும் போர் மூலம் வெல்லப்பட்டு, ஒரு பேரரசு உருவாகும் விதத்தில் இணைக்கப்பட்டன. இதன் விளைவாகப் பெரிய அரசுகள் உருவாகின; அவை சக்ரவர்த்தி அல்லது ஏக்ராட் என்ற உயர்ந்த அரச பதவிகளால் ஆட்சி செய்யப்பட்டன. இவ்வாறு இன்றைய பீகார், கிழக்கு உத்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கங்கைச் சமவெளியில் மையப்படுத்தப்பட்ட ஒரு பேரரசு உருவானது. இது இப்பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக அமைப்பைப் பெரிதும் மாற்றியது.

சமவெளிகளும், கங்கை மற்றும் அதன் துணைநதிகள் போன்ற வற்றாத நதிகளிலிருந்து கிடைத்த நீர்வளமும் இந்தக் குறிப்பிட்ட பகுதியில் பெரிய நாடுகள் உருவாவதற்குச் சாதகமாக இருந்த சூழலாகும். இந்த ஆறுகள் வணிகம், பயணங்கள் ஆகியவற்றுக்கு முக்கியமான நீர்வழிப் பாதைகளாகவும் பயன்பட்டன. புத்தரின் சமகாலத்தவரான பிம்பிசாரர் மகதத்தில் ஒரு பேரரசை நிர்மாணிக்கும் பணியைத் தொடங்கினார். அதன் பிறகு அவரது புதல்வர் அஜாதசத்ருவாலும், பின்னர் நந்தர்களாலும் இது மேலும் வலுவாக்கப்பட்டது. சந்திரகுப்த மௌரியர் உருவாக்கிய மௌரிய வம்சத்தின் தோற்றத்தோடு, இந்தப் பேரரசு தனது புகழின் உச்சத்தை அடைந்தது. முதல் மூன்று மௌரிய பேரரசர்களான சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் ஆகியோர் நன்கு அறியப்பட்ட மௌரிய அரசர்கள் ஆவர். அசோகருக்குப் பிறகு மௌரியப் பேரரசு மெல்ல மெல்ல வீழ்ச்சி அடைந்தது.

சான்றுகள்

மௌரியர் காலத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர், அவருக்கு அடுத்துவந்த இரு அரசர்கள் ஆகியோரின் பெயர்கள் எல்லாம் இப்போது அனைவரும் அறிந்திருக்கின்றனர். ஆனால், அந்த அரசர்களின் வாழ்வையும் வாழ்க்கைப்போக்குகளையும் மறுஉருவாக்கம் செய்வதற்குத் தொடக்ககால வரலாற்றாய்வாளர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். மௌரிய அரசர்கள் பற்றி பல்வேறு பௌத்த, சமண இலக்கியங்களிலும், இந்துமத இலக்கியங்களில்

11th History Lesson 4 Tamil Medium.indd 54 10-02-2023 13:30:16

ஒன்றான பிராமணங்களிலும் சில குறிப்புகள் இருந்தாலும், அவர்களைப் பற்றி நேரடியான குறிப்புகளோ அவர்களது சமகாலத்தைப் பற்றி விரிவான பதிவுகளோ, இலக்கியங்களோ இல்லை. இலங்கையில் கிடைத்த, பாலி மொழி நூலான மகாவம்சம் என்ற வரலாற்றேடு ஒரு முக்கியமான கூடுதல் ஆதாரம் ஆகும். இந்த ஆதாரங்கள் மூலம் துண்டுதுண்டாகக் கிடைக்கும் தகவல்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அலெக்சாண்டர் படையெடுத்ததைத் தொடர்ந்து, இந்தியா பற்றி எழுதிய கிரேக்க வரலாற்று அறிஞர்களின் பதிவுகளால் உறுதி செய்யப்பட்டன.

வரலாற்றின் தொடக்க காலம் பற்றி வரலாற்றாளர்கள் அறிந்து கொள்ள ஏராளமான தகவல்களைத் தரும் முக்கியமான சாதனங்களாகத் தொல்லியலும் கல்வெட்டியலும் உள்ளன. குறிப்பாக, தொல்லியல் மிகவும் முக்கியமானது. ஏனெனில், தொல்லியல் அகழ்வாய்வுகளின் மூலம் நகரப் புறத்தோற்றம் பற்றி, அதாவது நகரத்தின் அமைப்பு, கட்டிடங்களின் கட்டுமானம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அக்கால மக்களுக்குத் தெரிந்திருந்த உலோகங்கள், அவர்கள் பயன்படுத்திய கருவிகள். அவர்கள் கையாண்ட தொழில்நுட்பம் என்று மக்களின் அன்றாட வாழ்வியல் பண்பாடு குறித்த தகவல்களையும் அறிய முடிகிறது.

கங்கைப் பகுதியின் தொல்லியல் கண்டுபிடிப்புகள் காலப்போக்கில் அப்பகுதியில் உருவான நகர மையங்களின் தன்மை குறித்த நம்பகமான சான்றுகளைத் தந்துள்ளன. இக்காலகட்டத்தினைச் சேர்ந்த கல்வெட்டுச் சான்றுகள் அதிகம் இல்லை. மிகப் பரவலாக அறியப்பட்டவை அசோகருடைய கல்வெட்டுக் கட்டளைகளே. இவை நாட்டின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1837இல் ஜேம்ஸ் பிரின்செப் சாஞ்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இருந்த பிராமி எழுத்துகளின் பொருளைக் கண்டுபிடித்த பிறகுதான் மௌரிய காலகட்டத்தை மறுஉருவாக்கம் செய்வது பெரிய அளவிற்குச் சாத்தியப்பட்டது. அதேசமயத்தில், நாட்டின் மற்ற பகுதிகளைச் சேர்ந்த மௌரிய அரசின் கல்வெட்டுக் கட்டளைகள் குறித்த தகவல்களும் கிடைத்தன. இருபதாம் நூற்றாண்டில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சிந்து வெளி நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும்வரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான தொல்லியல் பொருள் இவைதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மௌரிய அரசின் அனைத்து கல்வெட்டுக் கட்டளைகள் ஒரு பெரிய அரசரைக் குறிப்பிட்டே தொடங்குகின்றன. அவை தேவனாம்பிய பியதஸ்ஸி (தேவர்களுக்குப் பிரியமான, மனநிறைவாக) இவ்வாறு கூறினார் என்று தொடங்குகின்றன. மௌரியப் பேரரசின் இந்த கல்வெட்டுக் கட்டளைகள் நாடு முழுவதும் பரவலாகக் கிடைத்ததன் மூலம் அவர் ஒரு பரந்த பேரரசை ஆண்டிருக்கிறார் என்பதை உணர முடிந்தது. ஆனால் அந்த அரசர் யார்? புராணங்களும் பௌத்த இலக்கியங்களும் அசோகர் என்ற ஒரு சக்ரவர்த்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளன. பல கல்வெட்டுக் கட்டளைகளின் பொருளும் ஒவ்வொன்றாகக் கண்டறியப்பட்டபோது, பொ.ஆ. 1915 இல் தேவனாம்பிய பியதசி எனும் அந்த அரசர் அசோகர் தான் என உறுதிசெய்யப்பட்டது. இது மௌரிய வரலாற்றை மறுஉருவாக்கம் செய்வதை சாத்தியமாக்கியது.

இனி இரண்டு பிற்கால வரலாற்றுச் சான்றுகளைப் பார்ப்போம். முதலாவது குஜராத்தில் உள்ள கிர்நார் என்ற இடத்திற்கு அருகில் உள்ள ஜுனாகத்தில் உள்ள பாறைக் கல்வெட்டு. இது பொ.ஆ. 130–150 காலத்தைச் சேர்ந்தது. அந்தப் பகுதியை ஆண்ட ருத்ரதாமன் ஆட்சிக்காலத்தில் இந்தக் கல்வெட்டு வெட்டப்பட்டது. இது பேரரசர் சந்திரகுப்தரின் மாகாண அரசப்பிரதிநிதி (ராஷ்ட்ரியா) புஷ்யகுப்தர் பற்றிக் குறிப்பிடுகிறது. இது பின்வரும் இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது. 1) மேற்கே வெகு தூரத்திற்கு குஜராத் வரை மௌரியப் பேரரசு பரவி இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. 2) சந்திரகுப்தர் மரணமடைந்து நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட பிறகும்கூட நாட்டின் பல பாகங்களில் அவர் அறியப்பட்டவராகவும், நினைவில் இருப்பவராகவும் இருந்திருக்கிறார். இரண்டாவது சான்று ஒரு இலக்கியப் படைப்பு ஆகும். அது விசாகதத்தரின் முத்ராராட்சசம் என்ற நாடகம் பொ.ஆ. நான்காம் நூற்றாண்டிற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு, குப்தர்கள் காலத்தில் எழுதப்பட்டது. இந்த நாடகம் மகத அரியணையில் சந்திரகுப்தர் அமர்ந்ததைப் பற்றியது. சந்திரகுப்தருக்கு எதிரான படையெடுப்பைத் தடுக்க அவரது தலைமை ஆலோசகர் 'சாணக்கியர்' அல்லது 'கௌடில்யர்' தீட்டிய யுக்திகளைப் பட்டியலிடுகிறது. இந்த நாடகம் சந்திரகுப்தர் குறித்து மற்ற சமகால ஆதாரங்களிலிருந்து திரட்டிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், இதையும் ஓர் உறுதிப்படுத்தும் சான்றாகக் எடுத்துக் கொள்ளலாம். சந்திரகுப்தரின் புகழ் அவர் மறைந்து நீண்ட நாட்கள் ஆன பின்பும், பொதுக்கதையாடலிலும் நினைவிலும் மங்காமல் நிலைத்திருந்தது என்பதை இந்த ஆதாரங்கள் மூலமாகத் தெரிந்துகொள்கிறோம். வாய்மொழிக் கதையாடல் பாரம்பரியங்களின் முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றன. அவை தற்போது ஒரு நம்பகமான வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கப்படுகின்றன.

11th History Lesson 4 Tamil Medium.indd 55 10-02-2023 13:30:16

4.1 ஹரியங்கா வம்சத்தின் கீழ் மகதத்தின் எழுச்சி

பிம்பிசாரர்

16 மகாஜனபதங்களில் தொடக்ககாலத்தில் காசி சக்திவாய்ந்ததாக இருந்தது. எனினும் பின்னர் கோசலம் ஆதிக்கம் செலுத்தியது. மகதம், கோசலம், வஜ்ஜி, அவந்தி ஆகியவற்றிற்கிடையே ஒரு அதிகாரப் போராட்டம் தொடங்கி, இறுதியில் மகதம் ஆதிக்கம் செலுத்தும் மகாஜனபதமாக உருவாகி,முதல்இந்தியப்பேரரசை அமைத்தது. ஹரியங்கா வம்சத்தின் பிம்பிசாரர் மகதத்தின் முதல் அரசராக அறியப்படுகிறார். அவர் திருமண உறவுகள் மற்றும், போர்கள் மூலம் மகதப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினார். கோசல அரசர் பிரசேனஜித்திற்குத் தனது சகோதரியை மணம் செய்துதந்ததன் மூலம், காசியை வரதட்சணையாகப் பெற்றார். லிச்சாவி மற்றும் மாத்ரா இளவரசிகளை அவர் மணந்தார். அவந்தி அரசரோடு நட்பான உறவைப் பேணினார். ஆனால் அங்கத்தை ராணுவ பலத்தால் இணைத்துக் கொண்டார். இவ்வாறாக, மகதம் ஒரு சக்திவாய்ந்த, முக்கியமான பேரரசானது. தனது ஆட்சியில், பல்வேறு மதப் பிரிவுகளையும், அவற்றின் தலைவர்களையும் பிம்பிசாரர் ஆதரித்தார். அவர் புத்தரையும் சந்தித்திருக்கிறார்.

அஜாதசத்ரு, தந்தை பிம்பிசாரரைக் கொன்றுவிட்டு ஆட்சிக்கு வந்தார். உடனடியாக, பிம்பிசாரருக்கு வரதட்சணையாகத் தந்திருந்த காசியை அரசர் பிரசேனஜித் திரும்ப எடுத்துக்கொண்டார். இதனால் மகத நாட்டிற்கும் கோசல நாட்டிற்கும் மோதல் உருவானது. பிரசேனஜித் தனது நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, மகதத்தின் தலைநகரான இராஜகிருகத்தின் கோட்டை வாசலில் இறந்து போகும் வரை போர் தொடர்ந்தது. பின்னர் மகத நாட்டுடன் கோசல நாடு இணைந்தது. அஜாதசத்ரு லிச்சாவியினருடன் போரிட்டு வென்றார். அஜாதசத்ரு லிச்சாவியரையும் மல்லர்களையும் வென்றார். அஜாதசத்ருவும் புத்தரைச் சந்தித்திருப்பதாக நம்பப்படுகிறது. பொ.ஆ.மு. 461இல் அஜாதசத்ரு மறைந்த போது மகதம் அசைக்கமுடியாத வலுவான அரசாகிவிட்டது.

ஹரியங்கா வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக வம்சம் வந்தது. வாரணாசியின் அரசப்பிரதிநிதி சிசுநாகர் என்பவர் ஹரியங்கா அரசரைக் கொன்று அரியணை ஏறினார். சிசுநாகர்கள் ஐம்பதாண்டுக் காலம் ஆட்சி செய்தனர். பிறகு அரியணையை அவர்களிடமிருந்து மஹாபத்ம நந்தர் கைப்பற்றினார்.

பரந்து பட்ட, அதிகார வர்க்கத்தை உருவாக்கவும், நிர்வாகத்தையும் ராணுவத்தையும் நடத்த நிதிஆதாரத்தையும் ஆட்களையும் திரட்டவும் ஒரு புதிய நிர்வாக அமைப்பு ஒரு மையப்படுத்தப்பட்ட அரசிற்கு தேவைப்பட்டது. வரிவிதிப்பின் மூலம் அரசின் செலவுகளுக்குத் தேவையான நிதியைத் திரட்ட ஒரு வருவாய் நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. இத்தகைய ஒரு அரசியல் உருவாக்கம் நிர்வாக மையங்களாக, நகரங்களை மாற்றுவதற்கு இட்டுச் சென்றது. இவை கிராமங்கள், ஊரகப் பகுதிகளிலிருந்து மாறுபட்டவை. பேரரசை விரிவுபடுத்தவும் பாதுகாக்கவும் ஒரு பெரிய நிலையான ராணுவம் தேவைப்பட்டது.

4.2 நந்தர்கள்: இந்தியாவில் முதல் பேரரசை உருவாக்கியவர்கள்

அஜாதசத்ரு மறைந்து சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பொ.ஆ.மு. 362இல் நந்தர்கள் மகதப் பேரரசின் அரசர்களானார்கள். முதல் நந்த அரசர் மஹாபத்மா ஆவார். இவர் சிசுநாக அரசரைக் கொன்று அரியணையைக் கைப்பற்றியதாக நம்பப்படுகிறது. நந்தர்களின் கீழ் பேரரசு நன்கு விரிவடைந்தது. நந்தர்களின் செல்வமும் அதிகாரமும் பரவலாக அறியப்பட்டன, எதிரிகளுக்கு அச்சமூட்டுவதாகவும் இருந்தன. மஹாபத்ம நந்தரைத் தொடர்ந்து அவருடைய எட்டு புதல்வர்கள் ஆட்சி செய்தார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து நவநந்தர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். பேரரசை விரிவாக்கும் பணியில் நந்தர்கள் பல சத்திரிய இனக்குழுக்களை அழித்தார்கள். ஓரளவு சுயேச்சையான அதிகாரம் கொண்டிருந்த சத்திரியர்களால் ஆளப்பட்ட அரசுகளையும் அடிமைப்படுத்தினார்கள். இவ்வாறாக, ஒரு சர்வாதிகாரமான, மையப்படுத்தப்பட்ட அரசை உருவாக்கினார்கள். ஒடிசாவின் புவனேஷ்வருக்கு அருகிலுள்ள உதயகிரியில் காணப்படும் ஹதிகும்பா (யானைக்குகை)கல்வெட்டுமுந்நூறுவருடங்களுக்கு முன் அரசர் நந்தர் வெட்டிய நீர்வடிகாலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இது நந்த அரசு எந்த அளவிற்குப் பரவியிருந்தது என்பதைக் காட்டுகிறது. நந்தர்கள் திறமையான நிர்வாகிகளாக, மகதப் பேரரசை விரிவுபடுத்தியவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருக்கவில்லை.

11th History Lesson 4 Tamil Medium.indd 56 10-02-2023 13:30:17

4.3 பாரசீக, மாசிடோனிய படையெடுப்புகள்

ஆறாம் நூற்றாண்டிலிருந்து வடமேற்கு இந்தியா பாரசீகத்துடனும் கிரேக்கத்துடனும் பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. சிந்து பகுதியின் காந்தாரமும், அதன் சுற்றுவட்டாரங்களும் பாரசீகத்தின் ஆக்கிமீனைட் பேரரசின் ஒரு சிறு பகுதியாக இருந்தது என்பதை அறிய வியப்பாக இருக்கும். பொ.ஆ.மு. 530 வாக்கில், பாரசீகப் பேரரசர் சைரஸ் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்து கபிஷா என்ற நகரை அழித்தார். கிரேக்க வரலாற்றாளர் ஹெரோடொட்டஸின் கூற்றின்படி, காந்தாரம் ஆக்கிமீனைட் பேரரசின் இருபதாவது மற்றும் செல்வமிக்க சத்ரபியாக இருந்தது. மஹா அலெக்சாண்டரின் படையெடுப்பு வரையிலும் அது பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. முதலாம் டாரியஸின் கல்வெட்டுகள் சிந்து பகுதியில் பாரசீகர்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. "கதாரா, ஹராவதி, மகா" பகுதிகளின் மக்கள் ஆக்கிமீனைட் பேரரசின் குடிமக்கள்" என்றும் கூறுகின்றது.

உங்களுக்குத் தெரியுமா?

ஈரானில் உள்ள பெர்சிபோலிசில் காணப்படும் முதலாம் டாரியஸின் கல்வெட்டில்தான் "இந்து" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது. பொதுவாக நதியையும், குறிப்பாக சிந்து நதியையும் குறிக்கும் "சிந்து" என்ற சொல் பாரசீகத்தில் "இந்து" வானது. கிரேக்கர்கள் Sindu என்பதில் உள்ள S ஐ நீக்கிவிட்டு, Indu என்றார்கள். அது பின்னர் 'ஹிந்து' என்றானது. பின்னர் அதிலிருந்து 'இந்தியா' வந்தது.

தட்சசீலம்

தட்சசீலம் இன்றைய பாகிஸ்தானில் உள்ளது. பொ.ஆ.மு. ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளுக்கிடையே அது பாரசீகத்தின் ஆக்கிமீனைட் பேரரசின் பகுதியாக இருந்தது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் உள்ள வணிகப் பெருவழியில், அதன் அமைவிடம் இருந்ததால் சிறப்பான முக்கியத்துவம் பெற்றிருந்தது. தட்சசீலம் முக்கியமான கல்வி, கலாச்சார மையமாக உருவானது. கல்விக்காக மாணவர்கள் வெகுதூரங்களிலிருந்து அங்கு வந்தார்கள். 1940களில் சர் ஜான் மார்ஷல் நடத்திய அகழ்வாய்வுகளின் போது இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. "எந்த ஒரு நாகரிகத்திலும் இல்லாத உயர்ந்த அறிவார்ந்த சாதனைகளைப் படைத்ததாக" தட்சசீலம் கருதப்படுகிறது. பாணினி தனது புகழ்பெற்ற படைப்பான அஷ்டத்யாயி என்ற இலக்கிய நூலை இங்குதான் எழுதியதாகத் தெரிகிறது.

பாரசீகத் தொடர்பின் தாக்கம்

பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் வடமேற்குப் பகுதி பாரசீகப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததால், இந்தப் பகுதி பாரசீக மற்றும் இந்தியப் பண்பாடுகளின் சங்கமமாக மாறியது. பாரசீகத் தொடர்பு பண்டைய இந்தியாவின் கலை, கட்டிடக்கலை, பொருளாதாரம், நிர்வாகம் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் பண்பாட்டுத் தாக்கம் காந்தாரப் பகுதியில் அதிகமாக இருந்தது. மிக முக்கியமான தாக்கம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பயன்படுத்தப்படும் கரோஷ்டி எழுத்துமுறையின் வளர்ச்சியாகும். இந்த கரோஷ்டி எழுத்தைக் காந்தாரப் பகுதியில் தன்னுடைய கல்வெட்டுகளுக்காக அசோகர் பயன்படுத்தினார். இது பாரசீகத்தின் அகமேனியப் பேரரசில் பரவலாகப் பயன்பட்டு வந்த அராமிக்கிலிருந்து உருவானதாகும்.

அராமிக் போலவே கரோஷ்டியும் வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்படும் எழுத்துமுறையாகும். பாரசீகத்தில் சிக்லோய் என்ற வெள்ளி நாணயம் இப்பகுதியிலிருந்து மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டதே ஆகும். இந்தியாவின் மிகப் பழமையான நாணயங்கள் மகாஜனபத அரசின் காலத்தவையாகும். நாணயத்திற்கான இந்தியச் சொல்லான "கார்சா" பாரசீக மொழியிலிருந்து வந்ததாகும். இந்த நாணயங்கள் பாரசீக நாணயங்களைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம். இக்காலகட்டத்தில் இந்த நாணயங்களின் புழக்கம், இந்தியா–பாரசீகத்திற்கு இடையில் வணிகத் தொடர்பு இருந்ததை உணர்த்துகிறது. அசோகருடைய கல்வெட்டுக் கட்டளைகள் ஆக்கிமீனைட் அரசர்

சமஸ்கிருதத்திற்கும் பாரசீகத்திற்கும் உள்ள தொடர்பு : ரிக் வேதத்திற்கும் ஜென்ட் அவஸ்தாவிற்கும் பல மொழியியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆரியர்கள் என்ற சொல்லைப் பண்டைக்கால பாரசீகர்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்திய மொழி–பண்பாட்டு ஆய்வாளர் தாமஸ் பரோவின் கூற்றின்படி, உச்சரிப்பு மட்டும் காலப்போக்கில் மாறியிருக்கலாம். பொ.ஆ.மு. 1380ஐச் சேர்ந்த போகஸ் கோய் (வடகிழக்கு சிரியா) கல்வெட்டு ஒன்று ஒரு ஹிட்டைட் அரசனுக்கும், மிட்டன்னி அரசனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. அது சில ரிக்வேத கடவுளர்களான இந்திரா, உருவ்னா (வருணா), மித்ரா, நஸதயா (அஸ்வினி) ஆகிய பெயர்களைக் குறிப்பிடுகிறது.

11th History Lesson 4 Tamil Medium.indd 57 10-02-2023 13:30:17

டாரியஸின் கல்வெட்டுக் கட்டளைகளைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம். அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் ஈரானியச் சொல்லான 'டிபி'க்குப் பதிலாக 'லிபி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன.

மெளரியக் கலைகளும் கட்டிடக் கலைகளும் பாரசீகத் தாக்கத்துக்கான அடையாளங்களைக் கொண்டுள்ளன. மெளரியத் தூண்களான அசோகர் தூண்கள் ஆக்கிமீனைட் பேரரசில் காணப்படும் தூண்களை ஒத்துள்ளன. தூண்களின் முகட்டில் உள்ள மணிபோன்ற உச்சி, குறிப்பாக சாரநாத் தூணின் சிங்க உச்சி, ராம்பூர்வால் தூணின் மணி உச்சி ஆகியவை ஆக்கிமீனைட் தூண்களில் காணப்படும் உச்சிகளை ஒத்தே உள்ளன. அதே போல பாடலிபுத்திரத்தின் அரண்மனையின் எஞ்சிய தூண்கள் உள்ள பகுதி ஆக்கிமீனைட் தலைநகரத்தின் தூண்கள் கொண்ட மண்டபத்தை மிகவும் ஒத்திருக்கிறது. எனினும், இக்கலைஞர்கள், பாரசீக கலையால் உத்வேகம் பெற்றிருந்த போதிலும், தமது படைப்பில் ஒரு தீர்மானமான இந்தியத் தன்மையைக் கொடுத்திருந்தார்கள்.

4.4 அலெக்சாண்டர் படையெடுப்பு

தனநந்தரின் ஆட்சிக்காலத்தில் அலெக்சாண்டர் வட–மேற்கு இந்தியா மீது (பொ.ஆ.மு. 327–325) படையெடுத்தார். பலவகைகளில் அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அது பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளுக்குத் தொடரப்போகும் இந்தியா மற்றும் மேற்குலகிற்கு இடையிலான தொடர்பின் ஆரம்பத்தைக் குறித்தது. கிரேக்க வரலாற்றாசிரியர்கள் இந்தியா பற்றி எழுத ஆரம்பித்தார்கள். கிரேக்க அரசப் பிரதிநிதிகளும் அரசர்களும் இந்தியாவின் வட–மேற்குப் பகுதியில் ஆட்சி செய்தார்கள். அது இந்திய ஆட்சியிலும் கலைகளிலும் புதிய பாணிகளை உருவாக்கியது. அலெக்சாண்டர் பஞ்சாப் பகுதியில் தனது வெற்றிக்குப் பிறகு, மகதப் பேரரசைத் தாக்கும் நோக்கத்தோடு, மேலும் கிழக்கு நோக்கி நகர விரும்பினார். எனினும், அவருடைய படையினர் கிழக்கின் மாபெரும் பேரரசரைப் (நந்தர்) பற்றியும், அவருடைய பெரிய ராணுவத்தைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்ததால், அத்தகைய வலுவான எதிரியுடன் போரில் ஈடுபட மறுத்துவிட்டார்கள்.

பொ.ஆ.மு. 326இல் பாரசீகர்களைத் தோற்கடித்துவிட்டு, அலெக்சாண்டர் இந்தியத் துணைகண்டத்திற்குள் நுழைந்தபோது தட்சசீலத்தின் அரசரான அம்பி அவரிடம் சரணடைந்து, அவரது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார். அலெக்சாண்டரின் வரலாற்றுச்

பேரரசர் அலெக்சாண்டர்

சிறப்புமிக்க போர் ஜீலம் நதிக்கரைக்கும் பியாஸ் நதிக்கரைக்கும் இடைப்பட்ட பகுதியை ஆட்சி செய்த போரஸுடன் நடந்தது. இரு ராணுவங்களும் ஹைடாஸ்பெஸ் போரில் சந்தித்தன. இதில் போரஸ் சிறைப்பிடிக்கப்பட்டார். பின்னர், போரஸின் கண்ணியத்தால் ஈர்க்கப்பட்ட அலெக்சாண்டர் தனது மேலாதிக்கத்தை ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவரது அரியணையைத் திருப்பித் தந்தார். போரினால் களைப்படைந்த அவரது வீரர்கள் மேலும் அணிவகுத்துச் செல்ல மறுத்தார்கள். இராணுவம் தயங்கும்போது மேற்கொண்டு செல்ல அலெக்சாண்டர் விரும்பவில்லை. நாடு திரும்பும் வழியில் அலெக்சாண்டர் கண்டறியமுடியாத கடும்காய்ச்சல் காரணமாக பாபிலோனில் இறந்தார்.



போரஸ் அலெக்சாண்டரிடம் சரணடைதல், 1865 – அலோன்சோ வழிபாட்டுத்தலத்தில் பொறிக்கப்பட்டது (நவீனச் சித்தரிப்பு)

இந்தியாவில் அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கம்

அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்தியத் துணைகண்டத்தின் வடமேற்குப் பகுதியில் கிரேக்க சத்ரப்புகள் (மாகாணங்கள்) அமைவதற்கு இட்டுச் சென்றது. மேற்குலகிற்காக வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன. நான்கு வணிகப் பெருவழிகள் பயன்பாட்டில் இருந்தன. இதனால் கிரேக்க

11th History Lesson 4 Tamil Medium.indd 58 10-02-2023 13:30:18

வணிகர்களும் கைவினைக் கலைஞர்களும் இந்தியா வந்தனர். இந்தியாவுக்கும் கிரேக்கத்திற்கும் இடையில் நேரடித் தொடர்பு ஏற்பட இது உதவியது. வணிகத்தொடர்பு அதிகரிக்க ஆரம்பித்த உடன் இந்தியாவின் வடமேற்கில் பல கிரேக்கக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. காபுல் அருகில் இருந்த அலெக்சாண்டிரியா, பாகிஸ்தானின் பெஷாவர் அருகே இருந்த பூகிஃபெலா, சிந்துவில் இருந்த அலெக்சாண்டிரியா ஆகியன சில முதன்மையான கிரேக்கக் குடியிருப்புகளாகும்.

செலியுகஸ் நிகேடர்

இந்தியாவைக் குறித்து கிரேக்கர்கள் எழுதிய பதிவுகள் சற்று மிகையானவை என்றாலும்கூட, இந்தியா பற்றி மிக அரிய தகவல்களைத் தருகின்றன. அலெக்சாண்டரின் மரணத்தால் வடமேற்கில் உருவான வெற்றிடம் சந்திரகுப்த மௌரியர் மகத அரியணையைக் கைப்பற்ற உதவியது. வடமேற்கில் மேலும் பல சிறு அரசுகளையும் கைப்பற்றி, அந்தப் பகுதி முழுவதையும் தனது பேரரசுடன் இணைத்துக் கொள்ளவும் அவ்வெற்றிடம் அவருக்கு உதவியது.

4.5 மௌரியப் பேரரசு

கிரேக்க வரலாற்றாளர்கள் எழுதிய சமகாலத்துப் பதிவுகள் அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்துவந்தபோது, சந்திரகுப்தர் தட்சசீலத்தில் வாழ்ந்துவந்த இளைஞராக இருந்தார் என்று குறிப்பிடுகின்றன. கிரேக்க வரலாற்றாளர்கள் அவரது பெயரை 'சண்ட்ரகோட்டஸ்' என்றும் 'சண்ட்ரகோப்டஸ்' என்றும் குறிப்பிடுகின்றனர். இவை 'சந்திரகுப்தர்' என்ற சொல்லின் திரிபுகள். அலெக்சாண்டரிடமிருந்து பெற்ற உந்துதலால் சந்திரகுப்தர் பல ஆண்டுகள் கழித்து நந்தர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து அவர்களை விரட்டினார். மக்கள் செல்வாக்கு இல்லாத அரசரை எதிர்த்து கிளர்ச்சி செய்யுமாறு மக்களைத் தூண்டியோ அல்லது மக்கள் செல்வாக்கு இல்லாத அரசனைத் தூக்கி எறிய மக்களின் ஆதரவைப் பெற்றோ இதை அவர்



அசோகரின் ஜுனாகத் பாறைக் கல்வெட்டு

சாதித்தார். சந்திரகுப்தர் பொ.ஆ.மு. 321இல் மௌரியப் பேரரசை அமைத்து, அதன் முதல் பேரரசர் ஆனார்.

சந்திரகுப்தர் தனது பேரரசை குஜராத் வரை விரிவுபடுத்தியிருந்தார் என்று ஜுனாகத் பாறை எழுத்துகள் மூலம் (இது பற்றி நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம்) அறிகிறோம். உள்ளூர் வரலாறுகளின்படி, அவரது மற்றொரு சாதனை, அவர் அலெக்சாண்டர் விட்டுச் சென்ற கிரேக்கத் தளபதிகளுடன் போரிட்டு அவர்களை அழித்ததாகும். இதனால் பேரரசை விரிவாக்கும் அவரது திட்டத்திற்கான வழியும் கிடைத்தது. அவரது ஆட்சியில் மற்றொரு முக்கியமான நிகழ்வு, அவர் அலெக்சாண்டரின் தளபதிகளில் ஒருவரான செலியுகஸுடன் நடத்திய போர் ஆகும். அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பிறகு, செலியுகஸ் பஞ்சாப் வரை பரவியிருந்த பகுதியில் தமது அரசை நிறுவினார். பொ.ஆ.மு. 301க்குச் சிலகாலம் முன்பாகச் சந்திரகுப்தர் அவர்மீது போர் தொடுத்துத் தோற்கடித்து, பஞ்சாப் பகுதியை விட்டே விரட்டினார். இறுதியில் இருவரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி சந்திரகுப்தர் செலியுகஸிற்கு 500 போர் யானைகளை வழங்கினார். செலியுகஸ் தனது தூதரைச் சந்திரகுப்தரின் அரசவைக்கு அனுப்பினார். அந்தத் தூதர்தான் மெகஸ்தனிஸ். அந்த மெகஸ்தனிஸிற்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் சந்திரகுப்தர் குறித்து நாம் அறியவரும் பெரும்பாலான தகவல்கள், மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்ற நூலில் உள்ளவையே. இந்த நூலின் மூலம் கிடைக்கவில்லை. ஆனால் பல கிரேக்க வரலாற்றாளர்கள் சந்திரகுப்தரின் அரசு, நிர்வாகம் ஆகியவை குறித்து மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ள பகுதிகளை மேற்கோள்காட்டி எழுதியிருக்கிறார்கள்.

சந்திரகுப்தர்

சந்திரகுப்தர் ஒரு சிறந்த ஆட்சியாளர் என்பது வெளிப்படை. தனது பரந்த அரசை நிர்வகிக்க அவர் ஒரு வலுவான நிர்வாக இயந்திரத்தை மறு கண்டுபிடிப்பு செய்தாக வேண்டி இருந்தது. (நிர்வாக அமைப்பும், அரசு முறையும் அடுத்த பகுதியில் விவரிக்கப்படுகின்றன.) அரசியல் தந்திரங்களுக்குப் பெயர் போன சாணக்கியரின் ஆலோசனைகள் நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவின. சந்திரகுப்தரின் சமகால பௌத்த, சமண நூல்கள் சாணக்கியர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால்

சந்திரகுப்தர்
(நவீனச் சித்தரிப்பு)

11th History Lesson 4 Tamil Medium.indd 59 10-02-2023 13:30:18

அனைவருக்கும் பரிச்சயமான வாய்மொழிக்கதைகள் சந்திரகுப்தர் ஆட்சியின் சிறப்பிற்குச் சாணக்கியரின் அறிவும், மேதைமையும்தான் காரணம் என்கின்றன. விஷ்ணுகுப்தர் என்று அழைக்கப்பட்ட சாணக்கியர் அல்லது கௌடில்யர் ஒரு பிராமணர். நந்தர்களின் கடும் எதிரி. நந்தர்களை வீழ்த்துவதற்கான திட்டங்களை இவர்தான் வகுத்தார் என்றும், சந்திரகுப்தர் மகதப் பேரரசராவதற்கு உதவினார் எனவும் கூறப்படுகிறது. அரசியல் நிர்வாகம் குறித்த புகழ்பெற்ற நூலான அர்த்தசாஸ்திரத்தை சாணக்கியர் எழுதினார் என்பது மரபு. மகத நாட்டிற்கு வரவிருந்த படையெடுப்பைத் தடுப்பதற்கு இவரது சூழ்ச்சி மிக்க தந்திரங்களும், அற்புதமான யுக்தியும் முத்ராராட்சசம் எனும் நாடகத்தின் கருப்பொருளாகும்.

பிந்துசாரர்

சந்திரகுப்தரின் புதல்வர் பிந்துசாரர் பொ.ஆ.மு. 297இல் அமைதியான, இயல்பான ஆட்சி மாற்றம் மூலம் அவருக்குப் பின் ஆட்சியில் அமர்ந்தார். சந்திரகுப்தருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. சில சமண நூல்கள் சொல்வது போல, அவர் இவ்வுலக வாழ்வைத் துறந்து, சமணத் துறவியாகி இருக்கலாம். சமண கதைகளின்படி, சந்திரகுப்தர், கர்நாடகாவின் சரவணபெலகொலாவிற்கு அருகிலுள்ள சந்திரகிரியில் துறவியாக வாழ்ந்ததாகத் தெரிகிறது. பிந்துசாரர் நல்ல திறமையான அரசர். மேற்கு ஆசியாவின் கிரேக்க அரசுகளுடன் நல்லுறவு பேணும் தனது தந்தையின் வழியைத் தொடர்ந்தார். இவருக்கு சாணக்கியரும் மற்ற அமைச்சர்களும் ஆலோசனைகள் வழங்கினர். பேரரசின் பல பகுதிகளுக்கு இவருடைய புதல்வர்கள் அரசப்பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். இவருடைய ராணுவ வெற்றிகள் பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. ஆனால், பிந்துசாரருக்குப் பிறகு மௌரியப் பேரரசு சிதையாமல் அப்படியே அவருடைய மகனான அசோகர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

பிந்துசாரர் 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் பொ.ஆ.மு. 272இல் இறந்திருக்க வேண்டும். அசோகர் அவர் தேர்ந்தெடுத்த வாரிசு அல்ல. நான்காண்டுகளுக்குப் பிறகே, பொ.ஆ.மு. 268இல் ஆட்சிக்கு வந்தார் என்பதன் மூலம் அரசுரிமைக்காகப் புதல்வர்களுக்கிடையில் போட்டி நடந்திருக்கிறது என்பதை உய்த்துணர முடிகிறது. அசோகர் தட்சசீலத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அங்கு உள்ளூர் அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் செய்த கிளர்ச்சியை அடக்கினார். பின்னர் அவந்தியின் தலைநகரும், முக்கிய நகரமும், வணிக மையமுமான உஜ்ஜயினியில் அரசின் பிரதிநிதியாக இருந்தார். பேரரசராக அவர் அற்புதமான நினைவுச் சின்னங்களைக் கட்டியவர் என்ற புகழ் பெற்றவர். அவை பாடலிபுத்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிப்பட்டுள்ளன. அவரும் மேற்கு ஆசியாவுடன் நெருக்கமான உறவு என்ற மரபைத் தொடர்ந்தார். இருதரப்பிலும் நல்லுறவு காக்க தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்.

அசோகர்

அசோகரது ஆட்சிக்காலத்தின் முக்கியமான நிகழ்வு அவரது ஆட்சியின் எட்டாவது ஆண்டில் நடந்த கலிங்கத்தின் (இன்றைய ஒடிசா) மீதான அவரது படையெடுப்பு ஆகும். இது ஒன்றுதான் மௌரியர்கள் அதிகாரப்பூர்வமாக பதிவுசெய்த படையெடுப்பு ஆகும். போரில் கொல்லப்பட்டவர்கள், காயம் பட்டுப் பின்னர் இறந்தவர்கள், நாடுகடத்தப்பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை பல பத்தாயிரங்களாகும். இப்போர் மற்ற போர்களை விட மிகக் கொடூரமானதாக, வெறிகொண்டதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இப்போர் மகதப் பேரரசிலிருந்து பிரிந்து சென்ற, கலிங்கத்தைத் தண்டிப்பதற்காகத் தொடுக்கப்பட்ட போர் ஆகும். (ஹதிகும்பா கல்வெட்டு கலிங்கம் நந்தப் பேரரசின் பகுதியாக இருந்தது என்று குறிப்பிடுகிறது) இந்த அழிவினால் அசோகர் மிகவும் வருந்தினார். போரினால் ஏற்பட்ட துன்பங்களால் நெகிழ்ந்த அவர் மனிதாபிமான மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராக மாறி, பௌத்தராக மதம் மாறினார். அவர் புதிதாய் அறிந்த மதிப்பீடுகளும் நம்பிக்கைகளும் அவரது கல்வெட்டுக் கட்டளைகளில் வரிசையாகப் பதிவு செய்யப்பட்டன. இவை அமைதி, அறவழிப்பட்ட நேர்மை, தம்மம் (சமஸ்கிருதத்தில் தர்மம்) மீதான அவரது பெருவிருப்பத்தை நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

பேரரசர் அசோகர் தேவனாம்பிரியர்

அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள்

அசோகருடையகல்வெட்டுக் கட்டளைகள் மௌரியப் பேரரசு பற்றிய தகவல்களுக்கான நம்பகத்தன்மை கொண்ட சான்றுகளாகத் திகழ்கின்றன. 14 முக்கியமான பாறைகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள், கலிங்க கல்வெட்டுக் கட்டளைகள் என்று அழைக்கப்படும் 2 கல்வெட்டுக் கட்டளைகள், 7 தூண் கல்வெட்டுக் கட்டளைகள், சில சிறு பாறைகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள், மிகச் சில சிறு தூண்களில் பதியப்பட்ட

11th History Lesson 4 Tamil Medium.indd 60 10-02-2023 13:30:19

பிராமி மொழியில் பொறிக்கப்பட்ட அசோகரின் (பொ.ஆ.மு.238) கல்வெட்டுக் கட்டளை – பிரிட்டிஷ் அருங்காட்சியகம்



அசோகரது கல்வெட்டு – சாரநாத்



பாறைக் கல்வெட்டு – காந்தஹார், ஆப்கானிஸ்தான்

அசோகரின் பாறைக் கல்வெட்டு – தௌளி, ஒடிசா

கல்வெட்டுக் கட்டளைகள் என்று மொத்தம் 33 கல்வெட்டுக் கட்டளைகள் இதுவரை கிடைத்துள்ளன. முக்கியமாகப் பாறைகளில் பதியப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள் ஆப்கனிஸ்தானின் காந்தஹார், வடமேற்கு பாகிஸ்தானின் ஷாபஸ்கார்ஹி மற்றும் மன்ஷேராவிலிருந்து வடக்கே உத்தரகாண்ட் மாவட்டம், மேற்கே குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா, கிழக்கே ஒடிசா, தெற்கே கர்நாடகா, ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டம் வரை பரவியுள்ளன. சிறு பாறையில் பதியப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள் வடக்கே நேபாளம் (லும்பினி) வரை காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுக் கட்டளைகள் பெரும்பாலும் பிராமி எழுத்துமுறையிலும், சில கல்வெட்டுக் கட்டளைகள் மகதி மற்றும் பிராகிருதத்திலும் அமைந்துள்ளன. காந்தஹார் பிரகடனங்கள் கிரேக்கத்திலும், அராமிக்கிலும் உள்ளன. வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள இரண்டு கல்வெட்டுக் கட்டளைகள் கரோஷ்டி எழுத்தில் உள்ளன.

இந்த மௌரியப் பேரரசின் கல்வெட்டுக் கட்டளைகள் புவியியல்நோக்கில் பரவியுள்ள விதம், அசோகர் ஆட்சி செய்த ஒரு பெரிய பேரரசின் பரப்பளவைக் காட்டுகிறது. அவரது இரண்டாவது அரசாணை அவரது பேரரசின் எல்லைக்கு வெளியேயான நிலப்பரப்புகளைக் கூறுகிறது. அவை; "சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள், கேரளபுத்திரர்கள் (சேரர்கள்), தாமிரபரணி, யோன (யவன) அரசர் அந்தியோகா (அந்தியோகஸ்) இந்த அந்தியோகாஸ் அருகில் இருந்த நாடுகளின் அரசர்கள்". இந்த அரசாணை அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றில் அசோகருக்கு இருந்த நம்பிக்கை, மக்களது நல்வாழ்வின் மீது அவருக்கிருந்த அக்கறை ஆகியவற்றை வலியுறுத்திக் கூறுகின்றன. வன்முறை, போர் ஆகியவற்றை நிராகரித்து, அமைதியையும் தர்மத்தையும் வலியுறுத்தியதன் மூலம் அசோகர் 'ஒரு பேரரசர் போர்கள் மூலம் தனது அரசை விரிவுபடுத்தி, வலுப்படுத்தவேண்டும்' என்று அக்காலத்தில் நிலவிவந்த கொள்கையை முற்றிலும் நிராகரித்தார்.

மூன்றாம் பௌத்த சங்கம்

அசோகர் ஆட்சியில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்று, பொ.ஆ.மு. 250இல் தலைநகரமான பாடலிபுத்திரத்தில் மூன்றாவது பௌத்த சங்கத்தைக் கூட்டியது ஆகும். அசோகரது ஆழமான பௌத்தமத ஈடுபாட்டால் பௌத்தமதத்திற்கு அரச ஆதரவு கிட்டியது. பௌத்தத்தை மற்ற பகுதிகளுக்கும் பரப்பவும், மக்களை பௌத்தமதத்திற்கு மாற்ற பிரச்சாரகர்களை அனுப்பவும் வேண்டும் என்பது இச்சங்கத்தின் முக்கியமான முடிவாகும். இவ்வாறாக பௌத்தம் மதமாற்றம் செய்யும் மதமாகவும் மாறியது. பேரரசிற்கு வெளியே அமைந்த பகுதிகளான

11th History Lesson 4 Tamil Medium.indd 61 10-02-2023 13:30:20



சாஞ்சி ஸ்தூபியின் தெற்கு வாசலில் பொறிக்கப்பட்டுள்ள அசோகர் ராமகிருகத்தைப் பார்வையிடும் காட்சி

காஷ்மீர், தென்னிந்தியா போன்ற பகுதிகளுக்கும் பிரச்சாரகர்கள் அனுப்பப்பட்டார்கள். அசோகர் தனது குழந்தைகளான மகேந்திரன், சங்கமித்திரை ஆகியோரை மதத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பினார் என்பர். புத்தர் அமர்ந்த போதிமரத்தின் ஒரு கிளையை அவர்கள் இலங்கைக்குக் கொண்டு சென்றதாகவும் நம்பப்படுகிறது.

அசோகரது ஆட்சிக்காலம் கி.மு.232 வரை இருந்திருக்கலாம். அவரது ஆட்சி நிர்வாகம், அகிம்சை குறித்த புரட்சிகரக் கருத்துகள் இன்று நமது சமகால உணர்வுகளில் ஓர் அதிர்வை ஏற்படுத்தினாலும், அக்காலத்தின் யதார்த்தத்திற்கு அவை பொருத்தமாக இல்லை என்பது வருந்தத்தக்கதே. அவரது மரணத்திற்குப் பிறகு, மகதப் பேரரசு மெதுவாகச் சிதைந்து, ஐம்பதாண்டுகளுக்குள்ளாக அழிந்துபோனது. ஆனால், அசோகரின் மரணம், மௌரியப் பேரரசின் அழிவு ஆகியனவற்றுக்கு முந்தைய இரண்டு நூற்றாண்டுகளும் இந்திய வரலாற்றில் உண்மையிலேயே குறிப்பிடத்தகுந்த காலகட்டமாகும். அது மிகப் பெரிய மாற்றத்தின் காலமாக இருந்தது. இந்தப் பேரரசு கிட்டத்தட்ட துணைக்கண்டத்தின் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான பகுதிகளில் பரவியிருந்தது. நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டது. அதிகார நிறுவனங்கள் வளர்ச்சியடைந்தன. பொருளாதார விரிவாக்கம் நடந்தது. மேலும், ஏற்கெனவே நிலைபெற்றிருந்த சனாதன பழக்க வழக்கங்களைக் கேள்விக்குள்ளாக்கிய புதிய மதங்களும் தத்துவங்களும் தோன்றின.

4.6 மௌரிய அரசும் ஆட்சி அமைப்பும்

அரசின் வருவாய்க்காக வரி வசூலித்தல், நீதி பரிபாலனம், உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுப் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்பு ஆகியவைதான் மௌரிய அரசு கவனத்தில் கொண்ட முக்கிய விஷயங்கள் ஆகும். இதற்கு மிகப் பெரிய, நுட்பமான நிர்வாக இயந்திரமும் நிறுவனங்களும் தேவைப்பட்டன. மெகஸ்தனிஸிடமிருந்து தகவல்களைப் பெற்ற கிரேக்க வரலாற்றாளர்கள் மௌரிய அரசை ஒரு மையப்படுத்தப்பட்ட அரசு என்று குறிப்பிடுகிறார்கள். மையப்படுத்தப்பட்ட அரசு என்றால், பேரரசின் பரந்து விரிந்த பகுதிகள் முழுவதிலும் ஒரே விதமான நிர்வாக அமைப்பே நிலவியது என்று பொருள் கொள்ளவேண்டும். ஆனால், அன்றிருந்த தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை வைத்துப் பார்க்கும்போது மையப்படுத்தப்படாத நிர்வாக முறைதான் இருந்திருக்க வேண்டும்.

இந்த அதிகாரமுறை என்பது கிராமங்கள், நகரங்கள், மாகாணத் தலைநகரங்கள், முக்கிய நகரங்கள் என்ற படிநிலைகளைக் கொண்டதாக இருந்தது. அதிகாரவர்க்கத்திற்கு வரிவசூலுக்கான ஒரு திறம்பட்ட முறை தேவைப்பட்டது, ஏனெனில், அந்த வசூலிலிருந்துதான் அதற்கு ஊதியம் தரப்பட்டது. எனவே, அதிகார வர்க்கம் திறமிக்க வரிவசூல் முறையை ஏற்படுத்தியது. அதேபோல, வரி மூலம் கிடைக்கும் வருவாயை நம்பியே மௌரியப் பேரரசின் மிகப் பெரிய ராணுவம் இயங்கியது. பெரிய அதிகாரிகளுக்கு ஊதியமும் அதிகமாக இருந்தது. அர்த்தசாஸ்திரம் கூறுவதன்படி, தலைமை அமைச்சர், புரோகிதர், ராணுவ தளபதி ஆகியோருக்கு ஊதியம் 48,000 பணம். போர்வீரர்களுக்கு ஊதியம் 500 பணம். இந்தத் தொகையைக் காலாட்படை, குதிரைப்படையின் எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிட்டால், ராணுவத்தையும் நிர்வாகப் பிரிவு ஊழியர்களையும் நிர்வகிக்கத் தேவையான பெருமளவு நிதியாதாரம் குறித்து ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

அர்த்தசாஸ்திரம்

நிர்வாகம் பற்றிய மிக விரிவான பதிவுகளை அர்த்தசாஸ்திரத்தில் காணலாம். ஆனால், இந்தப் படைப்பே மௌரியப் பேரரசுக்குச் சில நூற்றாண்டுகள் பிந்தையது என்ற ஆய்வாளர் கருத்தையும் மனங்கொள்ள வேண்டும். எனினும், அர்த்தசாஸ்திரம் அரச நிர்வாகத்திற்கான ஒரு வழிகாட்டி நூல் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகளோடு, அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள், மெகஸ்தனிஸின் குறிப்புகள் ஆகியவற்றில் உள்ள செய்திகளையும் இணைத்துக் கொண்டால் மௌரியப் பேரரசு எப்படி இருந்தது என்பதை நாம் எதிர்பார்த்ததிற்குச் சற்று அதிகமாகவே நம்மால் தெரிந்து கொள்ள முடியும்.

மாகாண நிர்வாகம்

நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர். அவருக்கு அமைச்சரவை, ஒரு மதகுரு (அவர் மிக முக்கியமானவர் என கருதப்பட்டார்), மஹாமாத்திரியர்கள் என்றழைக்கப்பட்ட செயலாளர்கள் ஆகியோர் உதவினர். தலைநகர்

11th History Lesson 4 Tamil Medium.indd 62 10-02-2023 13:30:21



பாடலிபுத்திரம் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. எஞ்சிய மௌரிய அரசுப் பகுதிகள் ஆந்திரப்பிரதேசத்தின் கர்னூலுக்கு அருகிலுள்ள சுவர்ணகிரி உஜ்ஜையினி (அவந்தி, மாளவம்), வட மேற்கில் தட்சசீலம். தென்கிழக்கில் ஒடிசாவின் தோசாலி என்று நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் பிரதிநிதிகளால் ஆளப்பட்டன. இவர்கள் பெரும்பாலும் மௌரிய அரசின் இளவரசர்களாவர். ஒவ்வொரு பகுதியிலும் ஒரே மாதிரியான வருவாய் மற்றும் நீதி நிர்வாகம்தான் நிலவியது. வரி வசூல் சமஹர்த்தா என்பவரின் பொறுப்பாக இருந்தது. இவர்தான் செலவுகளுக்கும் பொறுப்பு என்பதால், ஒரு விதத்தில் இவர் நிதியமைச்சர் போல் இருந்தார். இவர் அனைத்து மாகாணங்கள், நகரங்கள், சுரங்கங்கள், காடுகள், வணிகப் பெருவழிகள், வருவாய் வரக்கூடிய மற்ற வழிகள் என அனைத்தையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தது. வரி வசூல் குறித்த ஆவணங்களை நிர்வகிப்பது கருவூல நிர்வாகியின் பொறுப்பு. ஒவ்வொரு துறைக்குமான கணக்குவழக்குகளை அமைச்சர்கள் அனைவரும் சேர்ந்து அரசரிடம் தாக்கல் செய்தனர். ஒவ்வொரு துறையிலும் மத்திய மற்றும் உள்ளூர் நிர்வாகங்களோடு இணைக்கப்பட்ட ஏராளமான கண்காணிப்பாளர்களும் துணை அதிகாரிகளும் இருந்தனர்.

மாவட்டம் மற்றும் கிராம நிர்வாகம்

அடுத்த கட்ட நிர்வாகத்தின் கீழ் மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் வந்தன. மாவட்ட நிர்வாகம் ஸ்தானிகர் என்பவரின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. கோபா என்றழைக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து முதல் பத்து கிராமங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர். நகர நிர்வாகம் நகரிகா என்பவர் வசம் இருந்தது. கிராமங்கள் ஓரளவிற்குத் தன்னாட்சி பெற்றிருந்தன. மத்திய அரசாங்கத்தாலும், கிராம மூத்தவர்கள் குழுவாலும் நியமிக்கப்பட்ட கிராமணி என்பவரின் அதிகாரத்தின் கீழ் ஒவ்வொரு கிராமமும் இயங்கியது. முந்தைய பல நூற்றாண்டுகள் போலவே அப்போதும் வேளாண்மைதான் தேசியப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பைத் தரும் துறையாக இருந்தது. பொதுவாக அரசருக்கு உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கு உரியது. ஆனால் நடைமுறை அதைவிட மிகவும் அதிகமாக இருந்தது, பொதுவாக உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு வரியாகப் பெறப்பட்டிருக்கலாம்.

வருவாய் ஆதாரம்

பொருளாதாரத்தில் மிக முக்கியமான வேளாண்மைத் துறையின் வருவாயை அதிகரிக்கும் வகையில், வேளாண்மை உற்பத்திகளைச் சேமிக்க

11th History Lesson 4 Tamil Medium.indd 63 10-02-2023 13:30:21

கிடங்குகள், கட்டுப்படுத்தப்பட்ட சந்தைகள் ஆகிய வசதிகளுடன் உற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் விரிவான அரசுக் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று அர்த்தசாஸ்திரம் பரிந்துரைக்கிறது. நிலவரி, அரசு பாசன வசதி செய்து தந்திருந்தால் பாசனத்திற்கான வரி, நகர்ப்புற வீடுகளுக்கு வீட்டு வரி, வணிகத்திற்காக எடுத்துச் செல்லப்படும் பொருள்கள், நாணயம் அச்சடித்தல், அரசு நடத்தும் வணிகங்கள் மீதான லாபம் ஆகியவற்றின் மீது சுங்கம் மற்றும் நுழைவு வரி உள்ளிட்ட பிற வரி வருவாய்களும் இருந்தன. நிலம் அரசருக்குச் சொந்தம். காடுகள், சுரங்கங்கள், ஏகபோகமாக இருந்த உப்பு உற்பத்தி ஆகியவை வருவாய்க்கான முக்கியமான ஆதாரங்கள்.

நீதி நிர்வாகம்

நீதிமன்றங்கள் மூலம் நீதி வழங்கப்பட்டது. எல்லா முக்கிய நகரங்களிலும் நீதிமன்றங்கள் இருந்தன. இருவகை நீதிமன்றங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன. தர்மஸ்தியா நீதிமன்றங்கள் பெரும்பாலும் திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட குடிமை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தன. இந்த நீதிமன்றங்களில் மதச் சட்டங்களை நன்கு அறிந்த மூன்று நீதிபதிகளும் மூன்று அமாத்தியாக்களும் (செயலாளர்கள்) இருந்தார்கள். மற்றொரு நீதிமன்றம் கந்தகோசந்தனா (முள்ளை எடுத்தல்) என்றழைக்கப்பட்டது. இதிலும் மூன்று நீதிபதிகளும் மூன்று செயலாளர்களும் இருந்தார்கள். இந்த நீதிமன்றங்களின் முக்கியப் பணி சமூக விரோதிகளையும், பல்வேறு விதமான குற்றங்களையும் அகற்றுதலாகும். இது பெரும்பாலும் இன்றைய நவீன காவல்துறை போல இயங்கியது. சமூக விரோதச் செயல்கள் குறித்த தகவல்களை அறிவதற்காக, ஒற்றர்களைக் கொண்ட முறையான அமைப்புமுறை செயல்பட்டது. குற்றங்களுக்கான தண்டனை மிகக் கடுமையாக இருந்தது. நீதித்துறை வளர வளர, அதன் ஒட்டுமொத்த நோக்கம் அன்றாட வாழ்வின் பெரும்பாலான அம்சங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதாக இருந்தது.

அசோகரின் தம்ம அரசு

அசோகரது ஆட்சி ஒரு நல்ல அரசர், நியாயமான ஆட்சி என்பதற்கான ஒரு முன்மாதிரியைக் காட்டுகிறது. அவர் தனது அதிகாரிகளான யுக்தர்கள் (கீழ்நிலை அதிகாரிகள்), ராஜுக்கர்கள் (கிராம நிர்வாகிகள்), பிரதேசிகர்கள் (மாவட்டத் தலைவர்கள்) ஆகியோரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களுக்கு தம்மத்தைப் போதிக்குமாறு அறிவுறுத்தினார். (முக்கிய பாறை கல்வெட்டுக் கட்டளைகள் 3). எல்லா மக்களும் தமது குழந்தைகள் என்றும் தன் சொந்தக் குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவேனோ, அதையேதான் அனைத்து மக்களுக்கும் செய்ய வேண்டும், அவர்கள் (மக்கள்) இந்த உலகிலும், அடுத்த உலகிலும் நலமும் மகிழ்வும் பெற வேண்டும் என்ற பொறுப்புணர்வுடன் செயல்பட அதிகாரிகளுக்கும், நகர நீதிபதிகளுக்கும் கட்டளையிட்டுள்ளார். இந்த அதிகாரிகள் பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டும், சரியான காரணம் இன்றி மக்களை சிறைப்படுத்தக் கூடாது, சித்ரவதை செய்யக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் போன்றவை அசோகரின் கட்டளைகளாக இருந்தன. தன்னுடைய இந்த கட்டளைகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகிறதா என்பதைப் பார்க்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தான் ஒரு அதிகாரியை அனுப்பப்போவதாகவும் அவர் அறிவித்தார். (கலிங்கப் பாறைக் கல்வெட்டுக் கட்டளைகள்–எண் 1).

ஒரு திறமையான அரசர் தன் நாட்டில் என்ன நடக்கிறது என்பது பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பதை அசோகர் உணர்ந்திருந்தார். தான் எங்கே இருந்தாலும் தமக்கு முறையான தகவலும் ஆலோசனையும் தரப்பட வேண்டும் என்றார் (முக்கிய பாறை கல்வெட்டுக் கட்டளைகள்–எண் 6). அனைத்து மதங்களும் அமைதி நிலவ ஒத்துழைக்க வேண்டும் என்றும் எல்லா மதத்துறவிகளுக்கும் மரியாதை தரப்படவேண்டும் என்றும் கூறினார் (முக்கிய பாறை கல்வெட்டுக் கட்டளைகள் எண்–7 மற்றும் 12). மருத்துவ வசதி தருவது அரசாங்கத்தின் பணிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்றார். பேரரசர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் பார்க்க மருத்துவமனைகளைத் திறக்க உத்தரவிட்டார் (முக்கிய பாறை கல்வெட்டுக் கட்டளைகள்–எண் 2). தேவையின்றி விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டும், எல்லா உயிரினங்களுக்கும் மரியாதை காட்டப்பட வேண்டும் என்பது அவரது கல்வெட்டுக் கட்டளைகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் கருத்துகளில் ஒன்று. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகளில் மனிதநேயமும், பரிவும் கொண்ட, ஒரு நல்ல முன்மாதிரியாகக் கொள்ளத்தகுந்த அரசாங்கத்தைப் பார்க்கிறோம். அதிகாரிகளும் குடிமக்களும் எல்லோரும் தம்மத்தைக் கடைப்பிடித்து ஒழுங்காக வாழ வேண்டும் என்று அவரது கல்வெட்டுக் கட்டளைகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன.

11th History Lesson 4 Tamil Medium.indd 64 10-02-2023 13:30:21



11th History Lesson 4 Tamil Medium.indd 65 10-02-2023 13:30:21

4.7 பொருளாதாரமும் சமூகமும்

வேளாண்மை

மௌரியப் பேரரசுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வேளாண்மை விளங்கியது. அரசு மொத்த வருவாயில் அதன் பங்கு, அதில் வேலை செய்தோரின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அது மிகப் பெரிய துறை ஆகும். மண்ணின் வளத்தால் ஆண்டுக்கு இரண்டு போகம் விளைந்ததைக் கிரேக்கர்கள் வியப்போடு பதிவு செய்திருக்கிறார்கள். உணவு தானியங்களுடன், கரும்பு, பருத்தி போன்ற வணிகப்பயிர்களையும் விளைவித்தனர் என்பதைப் பதிவு செய்யும் மெகஸ்தனிஸ், அவற்றை முறையே 'தேனை உற்பத்தி செய்யும் மூங்கில்' என்றும், 'கம்பளி வளரும் செடி' என்றும் குறிப்பிடுகிறார். இவை முக்கியமான வணிகப் பயிர்களாக இருந்தன. வேளாண்மை தொடர்ந்து அபரிமிதமான உபரியை அளித்ததால், வணிக உற்பத்திக்கும் அப்பால் பொருளாதாரத்தில் மாற்றத்தை உருவாக்கும் முக்கிய காரணியாக இந்த உபரி விளங்கியது.

கைவினைத்திறன்களும் பொருள்களும்

பல்வேறு கைவினைத்திறன்கள் மூலம் பலவிதமான கைவினைப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு, பொருளாதாரத்துக்கு வளம் சேர்த்தன. இப்பொருள்களை நாம் பயன்பாட்டுப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் என்று வகைப்படுத்தலாம். நாடெங்கும் கிடைத்த பருத்தியை நம்பி, பருத்தி ஆடைகளுக்கான நூற்பிலும் நெசவிலும் ஈடுபடுவது வேளாண்மைக்கு அடுத்த முக்கியத் தொழிலாக இருந்தது. சாதாரண மக்கள் பயன்படுத்திய முரட்டு ரகம் முதல் உயர்குடியினரும் அரச குடும்பத்தினரும் பயன்படுத்திய மெல்லிய ரகம் வரை பல்வேறு ரகங்களில் பருத்தித்துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. காசி (வாரணாசி), வங்கம், காமரூபம் (அஸ்ஸாம்), மதுரை மற்றும் பல இடங்களில் சிறப்பான துணிகள் உற்பத்தி செய்யப்பட்டதாக அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு பகுதியும் தனிச்சிறப்புமிக்க துணிகளைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தது. அரசர்களும், அரசவையினரும், தங்க, வெள்ளி ஜரிகை வேலைப்பாடுகள் செய்த ஆடைகளை அணிந்தார்கள். பட்டு குறித்தும் அறிந்திருந்தார்கள். பட்டு பொதுவாக சீனப் பட்டு என்றே அழைக்கப்பட்டது. இது மௌரியப் பேரரசில் விரிவான கடல்வழி வணிகம் நடந்ததை சுட்டிக்காட்டுகிறது.

உலோகங்களும் உலோக வேலைகளும் குறிப்பிடத்தக்க இடம் பெற்றிருந்தன. உள்ளூர் உலோகத் தொழிலாளர்கள் இரும்பு, செம்பு மற்றும் இதர உலோகங்களைப் பயன்படுத்தி கருவிகள், உபகரணங்கள், பாத்திரங்கள், மற்ற வீட்டு உபயோகப் பொருள்களைத் தயாரித்தார்கள். இரும்புத் தாதுவிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பது பல நூற்றாண்டுகளாகவே அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால் பொ.ஆ.மு. 500க்குப் பிறகு, தொழில்நுட்பத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. உலையில் மிக உயர் வெப்பநிலையில் இரும்பைப் பிரித்தெடுப்பது சாத்தியமானது. இந்தக் காலகட்டத்துக்குப் பிறகு, இரும்பு உற்பத்தியில் அளவிலும், தரத்திலும் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொல்லியல் ஆதாரங்கள் காட்டுகின்றன. இரும்புத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் பொருளாதாரத்தின் மற்ற பகுதிகளிலும் பரவலான தாக்கங்களை ஏற்படுத்தியது. கோடரி போன்ற மேம்பட்ட இரும்புக்கருவிகளால் வேளாண்மைக்காகக் காடுகளை பெரிய அளவில் திருத்துவது சாத்தியமானது. மேம்படுத்தப்பட்ட கலப்பைகள் உழவுக்கு உதவின. தரமான ஆணிகளும் கருவிகளும் தச்சு வேலைகள், மர வேலைகள் உள்ளிட்ட கைவினைத்தொழில்களின் தரத்தை மேம்படுத்தின. மரவேலைகளில் காணப்பட்ட மேம்பாடு கப்பல் கட்டுவதற்கும், வண்டி, தேர் ஆகியவற்றை உருவாக்குவதற்கும், வீடு கட்டுவதற்கும், பிற வேலைகள் செய்வதற்கும் உதவின. கல் வேலைகள்– கற்களை வெட்டுதல், மெருகூட்டுதல் – உயர்ந்த தொழில்நுட்பமுள்ள தொழிலாக உருவாகின. இக்கலைத் திறமை சாஞ்சியில் உள்ள ஸ்தூபியிலும், அசோகருடைய தூண்களுக்கும் பயன்படுத்தப்பட்ட, மிகவும் மெருகூட்டப்பட்ட சுன்னார் கற்களிலும் பார்க்க முடியும்.

தங்க, வெள்ளிப் பொருள்கள், நகைகள். வாசனைத் திரவியங்கள், செதுக்கப்பட்ட தந்தங்கள் என்று ஏராளமான ஆடம்பரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மருந்துகள், மட்பாண்டங்கள், சாயங்கள், பசைகள் போன்ற வேறு பல பொருள்களும் மௌரியப் பேரரசில் தயாரிக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

சாஞ்சி ஸ்தூபி

11th History Lesson 4 Tamil Medium.indd 66 10-02-2023 13:30:22

இவ்வாறாக, பொருளாதாரம் உயிர் வாழத் தேவையானதை மட்டும் உற்பத்தி செய்வது என்ற நிலையிலிருந்து மிகவும் வளர்ந்து, உயர்ந்த வணிகரீதியான கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யுமளவு முன்னேறியிருந்தது.

கைத்தொழில்கள் பெரும்பாலும் நகரங்களில், பரம்பரையாகச் செய்யப்பட்ட தொழில்களாக இருந்தன. பொதுவாக, பல்வேறு கைத்தொழில்களில் வாரிசுதாரர்கள் தம் தந்தையரைத் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். கைவினைக் கலைஞர்கள் பொதுவாகத் தனிப்பட்ட முறையில்தான் தொழில் செய்தார்கள். இருப்பினும், துணி முதலான இதர பொருள்களை உற்பத்தி செய்ய அரண்மனையைச் சார்ந்த பணிமனைகளும் இருந்தன. ஒவ்வொரு கைவினைத்தொழிலுக்கும் பமுகா (பிரமுகா – தலைவர்) என்ற தலைவரும், ஜெட்டா (ஜேஷ்டா – மூத்தவர்) என்பவரும் இருந்தார்கள். தொழில்கள் ஒரு சேனி (ஸ்ரேனி – வணிகக் குழு) என்ற அமைப்பாகத் திரட்டப்பட்டிருந்தன. இதனால் உற்பத்தியில் தனிநபரை விட நிறுவன அடையாளம் முக்கியத்துவம்பெற்றது.ஸ்ரேனிகளுக்கிடையிலான பிரச்சனைகளை மஹாசேத்தி என்பவர் தீர்த்து வைத்தார். இது நகரங்களில் கைத்தொழில் உற்பத்தி தடங்கலின்றி நடப்பதற்கு உதவியது.

வணிகம்

வணிகம் அல்லது பரிமாற்றம் என்பது பொருளாதாரப் பரவலாக்கம், வளர்ச்சியின் ஆகியவற்றின் இயல்பான உடன் நிகழ்வாகும். வாழ்வதற்குத் தேவையானதற்கு மேல் உற்பத்தியாகும் உபரி, அதற்கு ஒரு பரிமாற்ற மதிப்பு இல்லாமல் போனால் வீணாகிவிடும். ஏனெனில் வாழ்க்கைத் தேவைகள் நிறைவுகண்டு விட்டால், அந்த உபரியால் பயனில்லை. எனவே, பொருளாதாரம் பரவலாகி விரிவடைகிறபோது, அந்தப் பரவலாக்கத்தின் பலன்களைப் பெறுவதற்கு பரிமாற்றம் மிக முக்கியமான அம்சமாகிறது. வணிகம் பல படிநிலை கொண்ட சந்தைகளில் நடந்தது. ஒரு கிராம சந்தையில் பரிமாற்றம் செய்துகொள்ளுதல், ஒரு மாவட்டத்தின் கிராமங்கள் மற்றும் ஊர்களுக்கு இடையிலான பரிமாற்றம், நகரங்களைத் தாண்டி தொலைதூர ஊர்களுக்கு இடையேயான பரிமாற்றம், எல்லைகளைத் தாண்டி மற்ற நாடுகளுடனான பரிமாற்றம் என்று பலவிதமாக நடந்தது. மௌரியப் பேரரசின் காலத்தில் நிலவிய அமைதியான அரசியல் சூழ்நிலைதான் வணிகத்திற்கு உகந்த நிலையாகும். மௌரியப் பேரரசு ஒரு பரந்துபட்ட பகுதியில் அமைதியையும் நிலைத்தன்மையையும் நிலைநாட்டியிருந்தது. கங்கைச் சமவெளியின் ஆறுகள்தான் பொருள்களை வடஇந்தியா முழுவதற்கும் எடுத்துச்செல்ல போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. மேலும் மேற்கே உள்ள நிலப்பகுதிகளுக்குச் சாலைகள் மூலம் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. விதிஷா, உஜ்ஜயினி ஆகிய நகரங்கள் வழியாக, நாட்டின் வடபகுதியைத் தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் உள்ள நகரங்களோடும் சந்தைகளோடும் சாலைகள் இணைத்தன. வடமேற்கில் உள்ள சாலை மௌரியப் பேரரசை வடக்கு மற்றும் மத்திய ஆசியாவோடு இணைத்தது. கப்பல்கள் மூலம் கடல்வாணிபமும் நடைபெற்றது. புத்த ஜாதகக் கதைகள் வணிகர்கள் மேற்கொண்ட நீண்ட கடற்பயணங்கள் குறித்துப் பேசுகின்றன. பர்மா, மலாய் தீவுக் கூட்டங்கள், இலங்கை ஆகியவற்றோடு கடல்வாணிபம் நடந்தது. எனினும் கப்பல்கள் சிறியவையாக, கடற்கரையை ஒட்டிச் செல்பவையாகவே இருந்திருக்கின்றன.

வணிகக் குழுக்கள் குறித்து நமக்கு அதிகமான தகவல்கள் தெரியவில்லை. பொதுவாக நீண்ட தூர, கடல் கடந்து அயல்நாடு செல்லும் வியாபாரங்கள் வணிகக் குழுக்களால் நடத்தப்பட்டன. இவர்கள் பாதுகாப்பிற்காகக் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். இந்த வணிகக் கூட்டத்திற்கு மஹா–சர்த்தவகா என்ற தலைவர் இருந்தார். காடுகள், பாலைவனங்கள் போன்ற வழிகளில் செல்லும் சாலைகள் ஆபத்தானவை. எனினும் அர்த்தசாஸ்திரம் வணிகத்தின் முக்கியத்துவத்தையும் அதன் சீரான செயல்பாட்டின் தேவையையும் அழுத்தமாகச் சொல்கிறது. சாலைகளை அமைத்து, அவற்றை நல்ல நிலையில் பராமரிப்பதன் மூலம் வணிகத்திற்கு உதவி செய்ய வேண்டும். பொருள்களை எடுத்துச் செல்லும்போது நுழைவு வரி வசூலிக்க வேண்டும் என்பதால், நுழைவு வரி வசூல் மையங்கள் நிறுவப்பட்டு, அதில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏமாற்று வேலைகளைத் தடுக்க நகர்ப்புறச் சந்தைகளும், கைவினைத்தொழில் கலைஞர்களும் பொதுவாகக் கண்காணிக்கப்பட்டார்கள். அர்த்தசாஸ்திரம் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் விற்கப்பட்ட பொருள்களின் – விவசாயப் பொருள்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டவை – நீண்ட பட்டியலைத் தருகிறது. இவற்றில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும். சீனா, இலங்கை போன்ற இடங்களிலிருந்தும் வந்த துணி. கம்பளி, பட்டு, வாசனை மரக்கட்டை, விலங்குத் தோல், நவரத்தினக் கற்கள் ஆகியன அடங்கும். கிரேக்கச் சான்றுகள், கிரேக்க மாகாணங்கள் வழியாக மேற்குலகுடன் இருந்த வணிகத் தொடர்புகளை உறுதிசெய்கின்றன. அவுரி (சாயம்), தந்தம், ஆமைஓடு, முத்து, வாசனை திரவியங்கள், அபூர்வ மரக்கட்டைகள் ஆகியன ஏகிப்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

11th History Lesson 4 Tamil Medium.indd 67 10-02-2023 13:30:22

முத்திரை பொறிக்கப்பட்ட மௌரியர் நாணயம்

கர்ச பணா– பிந்துசாரர்

நாணயமும் பணமும்

நாணய முறை பற்றி அறிந்திருந்தாலும், நவீன காலத்திற்கு முந்தைய பொருளாதாரங்களில் பண்டமாற்று முறைதான் பரிமாற்றத்திற்கான வழிமுறையாக இருந்தது. மௌரியப் பேரரசில் வெள்ளி நாணயங்கள்(pana) அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.வட இந்தியாவின்பலபகுதிகளில் அச்சுப்பொறிக்கப்பட்ட ஏராளமான நாணயங்கள் கிடைத்துள்ளன. எனினும், இவற்றில் சில இதற்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தவையாகவும் இருக்கலாம். இவ்வாறாக, நாணயங்கள் பயன்பாட்டில் இருந்தாலும்கூட, மௌரியர்களின் பொருளாதாரம் எந்த அளவிற்கு பணத்தைச் சார்ந்திருந்தது என்பதை மதிப்பிடுவது கடினமாக இருக்கிறது.

நகரமயமாக்கல்

ஒரு வேளாண் நிலப்பரப்பில் நகரங்களையும் மாநகரங்களையும் உருவாக்கும் முறை நகரமயமாக்கல் எனப்படும். நிர்வாகத்தின் தலைமையிடமாக, புனிதத் தலங்களாக, வணிக மையங்களாக, முக்கியமான வணிகப் பெருவழிகளின் அருகில் அமைந்திருத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் நகரங்கள் உருவாகின. நகரக் குடியிருப்புகள் எந்த வகையில் கிராமங்கள் அல்லது கிராமப்புற குடியிருப்புகளிலிருந்து மாறுபடுகின்றன? முதலில் நகரங்களும் மாநகரங்களும் தமக்கான உணவைத் தாமே உற்பத்தி செய்வதில்லை. தமது அடிப்படையான உணவுத் தேவைகளுக்கு வேளாண் உபரியை இவை நம்பி இருப்பவை. ஏராளமான மனிதர்கள் வசிப்பார்கள். மக்கள்தொகை நெருக்கம் மிகவும் அதிகமாக இருக்கும். வேளாண்மை சாராத தொழிலாளர்களும் கைவினைக் கலைஞர்களும் வேலை தேடி நகரங்களுக்கு அதிக எண்ணிக்கையில் வருவார்கள். இவ்வாறாக இவர்கள் பொருள்களின் உற்பத்திக்கும், பல்வேறு வகையானசேவைகளுக்குமான உழைப்பாற்றலை வழங்குவார்கள். இந்தப் பொருள்களும், கிராமங்களிலிருந்து கொண்டுவரப்படும் வேளாண் உற்பத்திகளுடன் சேர்த்து, சந்தையில் விற்கப்படும். நகரங்களில் பல்வேறு சேவை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இருப்பார்கள். சங்க இலக்கியப் பாடல்களும் தமிழ்க் காப்பியங்களும் மதுரை, காஞ்சிபுரம், பூம்புகார் போன்ற நகரங்கள் குறித்த விரிவான சித்திரத்தைத் தருகின்றன. பரபரப்பான சந்தைகள் பல்வேறு பொருள்களை விற்கும் வியாபாரிகள், வீடு வீடாகச் சென்று உணவு உட்பட பலவிதமான பொருள்களை விற்போர் என்று மனிதர்களின் கூட்டத்தால் நிரம்பி வழிந்ததைப் பற்றி இவை கூறுகின்றன. இந்த இலக்கியப் படைப்புகள் காலத்தால் சற்று பிந்தியவை என்றாலும், அன்றிருந்த தொழில்நுட்ப அளவுகளின்படி மிகவும் மாறுபட்டவை அல்ல. எனவே, இவற்றை நகர வாழ்வின் துல்லியமான வர்ணனையாக எடுத்துக் கொள்ளலாம். மௌரியர்களுக்குச் சமகாலத்து நகரங்களின் காட்சி வடிவிலான ஒரே சித்தரிப்பு சாஞ்சி கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அது அரச ஊர்வலத்தைக் காட்டுகிறது. நகரங்களில் சாலைகள் இருப்பதும், பல மாடிக் கட்டிடங்கள் இருப்பதும், கூட்டம் கூட்டமாக மக்கள் கூடியிருப்பதும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் நகரமயமாக்கம்

நகரமயமாக்கத்திற்கான ஒரு முன்நிபந்தனை ஒரு வேளாண்மை அடித்தளம் உருவாகியிருக்கவேண்டும் என்பதாகும். அது சிந்து – கங்கைச் சமவெளிப் பகுதியில் உருவாகியிருந்தது, மிக ஆரம்ப காலத்திலிருந்தே ஹஸ்தினாபுரம், அயோத்தி போன்ற நகரங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் நகரமயமாக்கல் கங்கை–யமுனைக்கிடைப்பட்ட பகுதி வரை பரவி இருந்தது. கௌசாம்பி, பிட்டா, வைஷாலி, இராஜகிருகம் போன்ற பல புதிய நகர மையங்கள் குறிப்பிடப்படுகின்றன. புத்தரின் போதனைகள் அனைத்தும் நகரப் பகுதிகளில் நடந்ததாகவே கூறப்படுகின்றன. வேளாண்மைப் பரவலாக்கம், நெல் பயிரிடுதல், ஆற்றிடைப் பகுதிகளில் நீரை வடிய வைத்து நிலத்தைச் சாகுபடிக்கு ஏற்றதாக்கியதன் மூலமே நகரங்கள் உருவாகின. வளமான மண்ணும் வற்றாத நதிகளிலிருந்து கிடைத்த நீரும் இரண்டு போகம் நெல் விளைவிப்பதைச் சாத்தியப்படுத்தின. இதனால்

11th History Lesson 4 Tamil Medium.indd 68 10-02-2023 13:30:23

நகரங்களுக்குத் தேவையான பெரியளவிலான வேளாண் உபரியும் சாத்தியமானது. நகரத்திலும் கிராமத்திலும் இரும்புத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் பொருளாதார வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மகதம் வளர்ந்தபோது, உஜ்ஜயினி போன்ற பல மாகாண மையங்களும் அப்பேரரசோடு இணைத்துக்கொள்ளப்பட்டன.

வீடுகளும் நகர அமைப்பும்

நகரங்கள் பொதுவாக ஆறுகளை ஒட்டி அமைந்திருந்தன. போக்குவரத்து வசதிக்காக இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம். இவை அகழிகளால் சூழப்பட்டிருந்தன. பாதுகாப்பிற்காகக் கோட்டைச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் அரசாங்கப் பணத்தை வைத்திருக்கும் கருவூலங்கள் இருந்ததாலும், வணிக மையங்கள் என்பதால் மக்களும் வணிகர்களும் செல்வமிக்கவர்களாக இருந்ததாலும் எப்போதுமே தாக்குதல் அபாயம் இருந்தது. இந்த நகரங்களின் செல்வம் அதிகரித்த போது களிமண் செங்கல்லால் அல்லது சுட்டசெங்கல்லால் கட்டப்பட்ட வீடுகளின் தரம் உயர்த்தப்பட்டது. நகரங்களில் சாக்கடைகள், உறை கிணறுகள், களிமண் குழிகள் ஆகிய வசதிகள் இருந்தது, சுகாதாரம், குடிமை வசதிகள் இருந்ததும் தெரிகின்றன. வாழ்க்கைத் தரம் அதற்கு முந்தைய காலத்தைவிட மௌரியர் காலத்தில் உயர்ந்திருந்ததை அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. நகரங்களில் உறை கிணறுகளும், கழிவுநீர்ப்போக்குக் குழிகளும் இருந்தன. இரும்பால் செய்யப்பட்ட பல்வேறு வகையான பொருள்களின் பயன்பாட்டின் அளவும் அதிகரித்திருந்தது.

பாடலிபுத்திர நகரம்

பாடலிபுத்திரம் மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரமாகும். இது கங்கையும் சோன் நதியும் சங்கமமாகும் இடத்தில் ஒரு இணைகரத்தின் வடிவில் இருந்த பெரிய, செல்வமிக்க நகரம் என்று வர்ணிக்கப்படுகிறது. இது 14 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளமும், சுமார் இரண்டரை கிலோமீட்டர் அகலமும் கொண்டது. வெளியே பாதுகாப்பிற்காக மரத்தாலான சுற்றுச் சுவர் இருந்தது. எதிரிகள் மீது அம்பு எய்வதற்காக இதில் ஆங்காங்கே ஓட்டைகள் இருந்தன. நகரத்திற்கு 64 வாசல்கள் இருந்தன. 570 கண்காணிப்புக் கோபுரங்கள் இருந்தன. சுவருக்கு வெளியே அகலமான, ஆழமான அகழி இருந்தது. அகழிக்கு ஆற்றிலிருந்து நீர் கொண்டுவரப்பட்டது. பாதுகாப்பிற்காகவும், கழிவுநீர் வடிகாலாகவும் அகழி பயன்பட்டது. நகரத்திற்குள் பல அழகிய அரண்மனைகள் இருந்தன. அதன் மக்கள் தொகை மிகவும் அதிகம். நகரம் 30 பேர் கொண்ட ஒரு கழகத்தால் நிர்வகிக்கப்பட்டது. அசோகர் இங்கு பல தூண்கள் கொண்ட அரங்கை நிர்மாணித்து நகரத்தின் கம்பீரத்தை அதிகரித்தார்.

கலையும் பண்பாடும்

இக்காலகட்டத்தின் பெரும்பாலான கலைப்படைப்புகளும் இலக்கியங்களும் அழிந்து போய்விட்டன. மௌரியர் காலத்தில் சமஸ்கிருத மொழியும் இலக்கியமும் இலக்கண ஆசிரியர் பாணினியின் (பொ.ஆ.மு. 500) படைப்புகளாலும், நந்தர்களின் சமகாலத்தவரும், பாணினியின் படைப்பிற்கு உரை எழுதியவருமான காத்யாயனராலும் செழுமை பெற்றன. பௌத்த, சமண இலக்கியங்கள் பெரும்பாலும் பாலி மொழியில் எழுதப்பட்டன. சமஸ்கிருதத்தில் பல இலக்கியப் படைப்புகள் இக்காலத்தில் எழுதப்பட்டன என்று தெரிகிறது. இவை பிற்காலப் படைப்புகளில் குறிப்பிடப்பட்டாலும், இன்று கிடைக்கவில்லை.

இசைக்கருவி, பாணர்கள், இசை நடனம், நாடகம்என இந்தக்காலகட்டத்தின் நிகழ்த்துகலைகள் பற்றி அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது. ஆடம்பரப் பொருள்களான நகைகள், தந்த வேலைப்பாடுகள், மர வேலைப்பாடுகள், கல் வேலைப்பாடுகள் ஆகியவை மௌரியக் கலையின் விளைவுகள்தான்.

மௌரிய பேரரசில் பல மதங்களும் சாதிகளும் சமூகங்களும் இணக்கமாக வாழ்ந்தன. அவர்களுக்குள் நேரடியான மோதல்களோ, கருத்து மாறுபாடுகளோ இருந்ததாக ஒரு குறிப்பும் இல்லை. இக்காலகட்டத்தின் பல பகுதிகளில் இருந்த (பண்டைய தமிழகம் உட்பட) கணிகையர்களுக்கு சமூகப் படிநிலையில் ஒரு சிறப்பான அந்தஸ்து இருந்தது. அவர்களது பங்களிப்பு மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டது.

மௌரியப்பேரரசின் வீழ்ச்சி

- அசோகரின் வாரிசுகள் பலவீனமாகவும், திறமையற்றவர்களாகவும் இருந்தபோது மையப்படுத்தப்பட்ட மௌரிய நிர்வாகம் சமாளிக்க முடியாத நிலைக்கு வந்தது. பலவீனமான மத்திய நிர்வாகம், தொலைதூரப் பகுதிகளைத் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், சுதந்திரமான தன்னாட்சி அரசுகள் உருவாகின.
- அசோகரின் மறைவுக்குப்பின், பேரரசு இரண்டாகப் பிரிந்தது. வடமேற்கிலிருந்து இந்தோ-கிரேக்கர், சாகர் மற்றும் குஷாணர் போன்றோர் இந்தியாவின் மீது படையெடுக்க இது வழிவகுத்தது.
- மௌரியப் பேரரசின் கடைசிப் பேரரசர் பிரிகத்ரதா அவரது தளபதி புஷ்யமித்ர சுங்கனால் (சுமார் கி.மு.185 இல்) கொல்லப்பட்டார். பின்னர் புஷ்யமித்ர சுங்கன், சுங்கவம்சத்தை நிறுவினார். இச் சுங்கவம்சம் சுமார் நூறு ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சியிலிருந்தது.

பாடச் சுருக்கம்

- கண–சங்கங்கள் காலப்போக்கில் பெரிய மகாஜனபதங்களாகவும், 16 அரசுகளாகவும் மாறின. மகதம் நாளடைவில் மிகச் சக்திவாய்ந்ததாக மாறியது.
- மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர் பிம்பிசாரர். அவரைத் தொடர்ந்து அவரது புதல்வர் அஜாதசத்ரு ஆட்சி செய்தார். மஹாபத்ம நந்தர் நந்தவம்சத்தை உருவாக்கினார்.
- பொ.ஆ.மு. 326இல் வடமேற்கு இந்தியா மீதான அலெக்சாண்டரின் படையெடுப்பு மேற்குலகின் வணிகத்தைத் திறந்துவிட்டது. அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பிறகு, சந்திரகுப்தர் மௌரியப் பேரரசைத் தோற்றுவித்தார்.
- மௌரியப் பேரரசர்களில் குறிப்பிடத்தகுந்த மூவரான சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் ஆகியோர் மையப்படுத்தப்பட்ட அரசை நிறுவினார்கள். அர்த்தசாஸ்திரம், இண்டிகா ஆகிய நூல்கள் மூலம் மௌரிய நிர்வாக அமைப்பு பற்றித் தெரிய வருகிறது.
- இக்காலகட்டத்தில் வணிகம் பன்மடங்கு வளர்ந்ததால், மௌரியப் பேரரசு இந்திய வரலாற்றில் ஒரு புதிய காலகட்டத்தை உருவாக்கியது எனலாம்.
- மௌரியப் பேரரசு நாட்டை விரிவுபடுத்துதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பழைய மரபுகளைத் தொடர்ந்தது. அப்போது மேற்கொள்ளப்பட்ட புரட்சிகர மாற்றத்திற்கான முயற்சி யாதெனில், அசோகர் தனது அதிகாரிகளையும், மக்களையும் தம்மத்தைப் பின்பற்றுமாறும், வன்முறையைத் தவிர்த்து ஒழுக்கமான வாழ்க்கை வாழுமாறும் கேட்டுக் கொண்டதாகும்.
- தொழில்நுட்பம், பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி, மையத்திலிருந்து நிர்வகிக்கப்பட்ட, ஒரு பெரிய நவீன அரசை உருவாக்கியது. இதன் காரணமாக மௌரியப் பேரரசு இந்திய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளது.

பயிற்சி

IJ8KQ

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. அசோகரதுதூண்களில்உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ________

(அ) தாமஸ் சாண்டர்ஸ் (ஆ) ஜேம்ஸ் பிரின்செப்

(இ) சர் ஜான் மார்ஷல் (ஈ) வில்லியம் ஜோன்ஸ்

2. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ________

(அ) பிம்பிசாரர் (ஆ) அஜாதசத்ரு

(இ) அசோகர் (ஈ) மகாபத்ம நந்தர்

3. ________ என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

(அ) மகாவம்சம் (ஆ) தீபவம்சம்

(இ) பிரமாணம் (ஈ) முத்ராராட்சசம்

4. ________ என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது.

(அ) முத்ராராட்சசம் (ஆ) ராஜதரங்கிணி

(இ) அர்த்தசாஸ்திரம் (ஈ) இண்டிகா

5. மெகஸ்தனிஸ் எழுதிய ________ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.

(அ) இண்டிகா (ஆ) முத்ராராட்சசம்

(இ) அஷ்டத்யாயி (ஈ) அர்த்தசாஸ்திரம்

6. ________ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

(அ) அர்த்தசாஸ்திரம் (ஆ) இண்டிகா

(இ) ராஜதரங்கிணி (ஈ) முத்ரராட்சசம்

II. குறுகிய விடை தருக.

1. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்?
2. மகாபத்ம நந்தர் பற்றி குறிப்பு வரைக
3. எதன் காரணமாக மகா அலெக்சாண்டர், போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
4. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய அம்சங்கள் யாவை?
5. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றிச் சிறு குறிப்பு தருக.

11th History Lesson 4 Tamil Medium.indd 70 10-02-2023 13:30:23

6. அலெக்சாண்டரின்படையெடுப்புஎந்தவகைகளில் இந்திய வரலாற்றில் திருப்புமுனையாக அமைகிறது?

III. சுருக்கமான விடை தருக

1. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவரும் நகரப் பண்புகளைக் கூறுக.
2. கங்கைச்சமவெளிமுடியாட்சிகளின்அம்சங்களை விளக்குக.
3. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
4. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?
5. மௌரியர் காலத்தில் பரந்த அளவில் நடந்த ஆடை வணிகம் பற்றி விவரி.
6. இந்தியா மற்றும் மேற்கு, மத்திய ஆசியா இடையில் வணிகம் செய்யப்பட்ட பொருள்கள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

IV. விரிவான விடை தருக

1. மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.
2. மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக்கூறுகளை விவரிக்கவும்.
3. இந்தியாவின் மீது பாரசீகர்களின் தாக்கம் குறித்து நாம் அறிவது என்ன?
4. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.

செயல்பாடுகள்

1. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் குறித்த தகவல்களை வைத்து விளக்கப்படம் தயாரித்தல்
2. கலிங்கப் படையெடுப்பின் விளைவு பற்றிய கலந்துரையாடல்.
3. இன்றைய நிர்வாக முறையையும் மௌரிய நிர்வாக முறையையும் ஒப்பிடுதல்.
4. சாஞ்சி, சாரநாத் தூண்கள் மற்றும் மகத, மௌரிய அரசர்கள் பற்றிய படத்தொகுப்பு தயாரித்தல்

மூலநூல்கள்

1. A.L. Basham, *The Wonder That Was India: A Survey of the History and Culture of the Indian Sub-continent before the Coming of the Muslims*, Picador, 2004.
2. Abraham Eraly, *Gem in the Lotus: The Seeding of Indian Civilization*, Penguin, 2000.
3. B.M. Barua, *The Ajivikas*, University of Calcutta, 1920.
4. D.N. Jha, *Ancient India in Historical Outline*, Manohar, New Delhi, 2010.
5. Dhammika, Ven. S. *The Edicts of King Ashoka: An English Rendering.* 1993/94.
6. John Keay, *India: A History.* 2000.
7. K.A. Nilakanta Sastri (ed.), *The Age of the Nandas and Mauryas (reprint)*, 1996.
8. Romila Thapar, *Ashoka and the Decline of the Mauryas* (rev. ed.), 1997.
9. Romila Thapar, *The Penguin History of Early India: From the Origins to AD 1300*, Penguin Books, 2002.
10. S. Radhakrishnan, *Indian Philosophy, vol. 1,* George, Allen & Unwin, London
11. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century*, Pearson, Delhi, 2008.
12. Wm. Theodore D. Bary, ed., *Sources of Indian Tradition, vol. 1,* Columbia University Press, New York, 1958.

இணையதள ஆதாரங்கள்

1. http://www.philtar.ac.uk/encyclopedia/hindu/ascetic/ajiv.html
2. http://www.columbia.edu/itc/religion/f2001/edit/docs/samannaphala.pdf

கலைச் சொற்கள்

முரண்பட்ட	antithetical	contrasting
தூண்டும்	inciting	inducing
கசப்பான	acrimonious	bitter
சூழ்ச்சி	manoeuvring	planned action
விரோதி	adversary	enemy
செயல்படாததாக்கு	negate	nullify
மதமாற்ற முயற்சி	proselytizing	attempt to convert one's religion
மற்றவர் உணர்வினை மதித்தல்	empathetic	showing concern for others

11th History Lesson 4 Tamil Medium.indd 71 10-02-2023 13:30:23

அலகு 5

தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

கற்றல் நோக்கங்கள்

- தென்னிந்தியாவில் பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்த சமூக அரசியல் உருவாக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்.

GMW5T

அறிமுகம்

தக்காணப் பகுதியில் பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டில் இன்றைய தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களின் பெரும் பகுதியை உள்ளடக்கிய நிலப்பரப்பில் சாதவாகனர் ஒரு வலுவான அரசை நிறுவினர். இதற்கும் தெற்கே தமிழகத்தின் வளமான பகுதிகளை ஆண்டு வந்த, தமிழ் அரச மரபினரான சேர, சோழ பாண்டியர்கள் சாதவாகனரின் சம காலத்தவர் ஆவர். ஆனால் பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகருடைய கல்வெட்டுகளில் மூவேந்தரைப் பற்றியக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளதின் அடிப்படையில் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தமிழக அரசர்கள் தங்கள் அரசுகளை நிறுவி விட்டதை அறிய முடிகிறது. இவ்விரு பகுதிகளைச் சேர்ந்த அரசியல் முறை மற்றும் சமூகங்களிடையே பல பொதுவான அம்சங்கள் இருந்தன. வேறுபாடுகளும் நிலவின.

சான்றுகள்

தொல்பொருள்கள்

- தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற்காலப் புதைவிடங்கள்
- அரிக்கமேடு, கொடுமணல், ஆலங்குளம், உறையூர் கட்டட இடிபாட்டுத் தடயங்களைக் கொண்டுள்ளன, துறைமுகங்கள் தலைநகரங்கள் உள்ளிட்ட பழங்கால இடங்களில் அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட பொருள்கள்.
- ஆந்திரா, கர்நாடகப் பகுதிகளில் அமைந்துள்ள ஸ்தூபிகளும் சைத்தியங்களும் கூடிய பௌத்தத்தலங்கள் (அமராவதி, நாகார்ஜுனகொண்டா முதலானவை)

ஸ்தூபிகள்

ஸ்தூபி என்பது புதை மேடுகளின் மேல் களிமண்ணால் கட்டப்பட்டதாகும். இறந்தோரை எரித்த சாம்பல் இங்கு வைக்கப்படும். தொடக்கத்தில் புத்தரின் அஸ்தி எட்டு ஸ்தூபிகளில் வைக்கப்பட்டன. இவ்வாறு பௌத்தத்தின் புனிதக் கட்டடக்கலை தோற்றம் பெற்றது. அரைக்கோள வடிவமுள்ள ஸ்தூபி பேரண்டத்தைக் குறிக்கின்றது. அத்துடன் புத்தர் ஆன்மீக உலகின் பேரரசர் என்பதையும் குறிக்கிறது. ஸ்தூபிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்டப் பாதையில் பக்தர்கள் வலம் வருவர்.

நாணயச் சான்றுகள்

- ஆந்திர–கர்நாடகப்பகுதிகளின்சாதவாகனர்கள் மற்றும் அவர்களுக்கு முந்தைய குறுநில மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்.
- சங்க காலச் சேர, சோழ, பாண்டிய அரசர்களும் வேளிரும் வெளியிட்ட நாணயங்கள்
- தங்கம், வெள்ளி, தாமிரத்தாலான ரோம நாணயங்கள்

கல்வெட்டுகள்

- ஆந்திர–கர்நாடகப் பகுதிகளில் காணப்படும், பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட அசோகர் கல்வெட்டுகள்
- தமிழக, கேரளக் குகைகளில் காணப்படும் தமிழ்–பிராமி கல்வெட்டுகள்: மாங்குளம், ஜம்பை, புகளூர் முதலானவை

11th History Lesson 5 Tamil Medium.indd 72 01-12-2022 19:43:34

- ஆந்திரப் பகுதியிலுள்ள சாதவாகனர் கல்வெட்டுகளும் பிற பௌத்த கல்வெட்டுகளும்
- தமிழகப் பகுதியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள், மோதிரம், கற்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துகள்; இந்தியாவிற்கு வெளியே பெரனிக்கே, குவாசிர் அல் காதம் (எகிப்து).

இலக்கியச் சான்றுகள்

- சங்கநூல்களும் சங்கம் மருவிய இலக்கியங்களும்
- பொருளாதாரம், அரசாட்சிக் கலை ஆகியன குறித்து கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம்
- ஆந்திரர்/சாதவாகனர் வம்சாவளி வரலாற்றினைக் குறிப்பிடும் புராணங்கள்
- மகாவம்சம் முதலான பௌத்த வரலாற்று நூல்கள்
- சாதவாகன அரசர் ஹாலா பிராகிருத மொழியில் எழுதிய காஹாசப்தசதி

தமிழ் செவ்வியல் இலக்கியம்

தமிழ் செவ்வியல் இலக்கியத் தொகுப்பானது தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தமிழின் மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் கவிதையியலைப் பற்றி மட்டும் பேசவில்லை. அக்காலத்து சமூகப் பண்பாட்டையும் பேசுகிறது. சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை) இதற்கடுத்த காலச் சமூகப் பண்பாட்டுச் சூழலைச் சார்ந்தவையாகும்.

வெளிநாட்டவரது குறிப்புகள்

கீழ்க்காணும் கிரேக்க, லத்தீன் சான்றுகள் தொலைதூர வணிகம், பண்பாட்டுத் தொடர்புகள் குறித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான கிரேக்க நூலான எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ்
- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டில் மூத்த பிளினி எழுதிய 'இயற்கை வரலாறு' (Natural History)
- பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் தாலமி எழுதிய ஜியோகிரபி (புவியியல்)
- ரோமானியரின் நிலவரைபடமான பியூட்டெஞ்செரியன் அட்டவணை (Peutingerian Table)

5.1 மௌரியர் காலத் தென்னிந்தியா

அசோகருடைய கல்வெட்டுகளே (பொ.ஆ.மு. 270–30) தென்னிந்தியாவின் அரசியல் நிலை குறித்த முதல் சித்திரத்தை வழங்குகிறது. அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டில் மௌரிய அரசின் எல்லைக்கப்பால் அமைந்த அண்டை அரசுகளானத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த அரச மரபுகளான சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்தியபுத்திரர் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். அப்பகுதிகளில் அசோகர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான இருவகைப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தார் எனச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் மௌரியப் பேரரசு கர்நாடகா, ஆந்திராவின் வடபகுதிகளையும் கொண்டிருந்தது. தமிழக அரசுகள் சுதந்திரமான அண்டை நாடுகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஏறத்தாழ 2400 பாடல்கள் கொண்ட இலக்கியக் கருவூலமாகும். மூன்று முதல் எண்ணூறு அடி அளவு கொண்ட இப்பாடல்கள் பாணர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டவை .

எட்டுத்தொகையாவன: 1. நற்றிணை 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. பதிற்றுப்பத்து 5. பரிபாடல் 6. கலித்தொகை 7. அகநானூறு 8. புறநானூறு

பத்துப்பாட்டாவது: 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப்பாலை 10. மலைபடுகடாம்.

சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த, **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** பெரும்பாலும் நீதி பற்றியும் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றியும் பேசுவனவாகும். திருக்குறளும் நாலடியாரும் இதில் முதன்மையானவை.

முதன்மையான காப்பியங்களான **சிலப்பதிகாரமும் மணிமேகலையும்** பண்பாடு மற்றும் மத வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாகப் பயன்படுபவை.

11th History Lesson 5 Tamil Medium.indd 73 01-12-2022 19:43:35

சங்க காலப் பெண்பாற் புலவர்

சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களில் முப்பது பெண்பாற் புலவரும் அடங்குவர். அவர்கள் 150க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளனர். அவர்களுள் ஔவையார், அல்லூர் நன்முல்லையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கியப் பெண்பாற் புலவர்களாவர்.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும், சாதவாகனர் எழுச்சிக்கு முன்னரும் பல சிற்றரசுகள் தோன்றியுள்ளன. அவற்றின் அரசர்களைப் பற்றி போதுமான செய்திகள் கிடைக்கவில்லை. எனினும் அவர்கள் வெளியிட்ட நாணயங்கள், அவர்கள் சிறுபகுதிகளை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன.

5.2 சாதவாகனர்கள் ஆட்சியின் கீழ் தென்னிந்தியா

சாதவாகனர்கள் பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் தக்காணப் பகுதியில் தோன்றினர். மகாராஷ்ட்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஒரு சில பகுதிகளை அவர்கள் ஆண்டனர். அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின்படி தெலங்கானா பகுதிகளில் ஆட்சியைத் தொடங்கிய சாதவாகனர் மகாராஷ்டிரப் பகுதிகளுக்கு நகர்ந்து, கோதாவரி நதித் தீரத்தில் பிரதிஸ்தான் (மகாராஷ்டிராவில் பைத்தன்) என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்னர் கிழக்கு நோக்கி நகர்ந்து ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தினர். பிளினியின் நூல் ஆந்திர நாட்டிலிருந்த கோட்டைகளுடன் கூடிய 30 நகரங்கள், ஒரு பெரும்படை, குதிரைப் படை, யானைப் படை ஆகியன குறித்து பேசுகிறது.

சாதவாகன அரசர்களுள் கௌதமபுத்ர சதகர்னி பெரும் அரசராவார். சாகஅரசர் 'நாகபனா'வை வென்ற அவர் நாகபனாவின் நாணயங்களைத் தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார். அவருடைய தாயான கௌதம பாலஸ்ரீ என்பாரின் நாசிக் கல்வெட்டு, சாகர் பகல்வர், யவனர்கள் ஆகியோரை இவர் வெற்றி கொண்டதாகக்



11th History Lesson 5 Tamil Medium.indd 74 01-12-2022 19:43:36

கூறுகிறது. பெருமைக்குரிய அஸ்வமேத யாகத்தை இவர் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

கௌதமிபுத்ர சதகர்னிக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற வசிஷ்டபுத்ர புலுமாயி, சாதவாகன நாட்டின் எல்லைகளை விரிவடையச் செய்தார். மற்றொரு புகழ்பெற்ற அரசரான யக்னஸ்ரீ சதகர்னி, தனது ஆட்சியின் வெளிநாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும் வகையில் கப்பலின் வடிவம் பதிப்பிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார்.

வசிஷ்டபுத்ர புலுமாயி

சாதவாகன அரசர் ஹாலா 700 காதற் பாடல்களைக் கொண்ட காஹாசப்தசதி என்ற நூலை இயற்றினார். மகாராஷ்டிரப் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் கருப்பொருள் சங்க இலக்கியத்தின் அகப்பொருளை ஒத்துள்ளன.

பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டையொட்டி சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அவர்களைத் தொடர்ந்து ஆந்திரப் பகுதியில் இக்சவாகுவும் அதனைத் தொடர்ந்து பல்லவர்களும், வட கர்நாடகப் பகுதிகளில் கடம்பர்களும் ஆட்சி புரிந்தனர்.

சாதவாகனர் காலத்தின் முக்கியத்துவம்

நிலமானியம் வழங்குவது சாதவாகனர் காலத்தின் முக்கிய அம்சமாகும். இதன் பயனாளிகள் பெரும்பாலும் பௌத்தர்களும் பிராமணர்களும் ஆவர். பௌத்தத் துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதை நனிகாட் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்வாறு மதகுருமார்களைக் கொண்ட குழுக்கள் செல்வாக்குப் பெற்று உயரிடத்தை வகிக்கத் தொடங்கியதைக் காணமுடிகிறது. நிலங்களைக் கொடையாக வழங்கும் இம்முறை நிலங்களில் வேளாண்மை செய்யாமல், நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறிய ஒரு பிரிவினரை உருவாக்கியது. இது காலப் போக்கில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகப் படிநிலைகளும் பிரிவுகளும் உருவாவதற்கு இட்டுச் சென்றது.

முதன்முதலாகத் தக்காணத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு பெரிய அரசு நிறுவப்பட்டது. பௌத்த சங்கங்களுக்கு என்றே பல குடைவரைக் குகைகள் உருவாக்கப்பட்டன. அவை உள்நாட்டுப் பகுதிகளையும் கொங்கணக் கடற்கரைப் பகுதியையும், உள்நாட்டு வணிகப் பாதைகளையும் இணைக்கும் புள்ளிகளாக அமைக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகளை இவை கொண்டுள்ளன. இக்காலத்தில் இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே விறுவிறுப்பான வணிகம் நடைபெற்றது.

நனிகாட் கல்வெட்டு

5.3 சங்க காலம்

பொது ஆண்டுக்கு முந்தைய இறுதி மூன்று நூற்றாண்டுகளிலிருந்து, பொது ஆண்டிற்கு பின்னர் தொடங்கும் முதல் மூன்று நூற்றாண்டுகள் வரையிலான காலம் சங்க காலம் என பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்காலம் பற்றிய செய்திகள் பெருமளவில் சங்க இலக்கியங்களிலிருந்தே பெறப்படுகின்றன. இலக்கியச் சான்றுகள் தவிரத் தெளிவான கல்வெட்டுச் சான்றுகள், தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப் பெறுவதால் இக்காலக் கட்டம் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தொடங்குகிறது எனக் கூறலாம். ஆகவே இக்கால கட்டத்தைத் தொடக்க வரலாற்றுக் காலம் என அழைப்பதே பொருத்தமாகும்.

மூவேந்தர்

பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தின் மூன்று அரச மரபுகள் குறித்து அசோகர் அறிந்திருந்தாலும், பொ.ஆ. முதலாம் நூற்றாண்டு மற்றும் அதற்கு பின் வந்த காலத்தைச் சேர்ந்த சங்க இலக்கியத்தின் மூலமே அவ்வரசர்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது. மூவேந்தர் என்றறியப்பட்ட மணிமுடிசூடிய அரசர்களான சேர, சோழ, பாண்டியர் பெரும்பாலான வேளாண் நிலங்களையும், வணிகப் பெருவழிகளையும் நகரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அசோகர் கல்வெட்டுகளில் மேற்சொல்லப்பட்ட மூவேந்தரோடு இடம் பெற்றுள்ள சத்யபுத்ர (அதியமான்) என்பது சங்கப் பாடல்களில் இடம் பெறும் வேளிரைக் குறிப்பதாக உள்ளது.

சோழர் தமிழகத்தின் மத்திய, வட பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டிருந்தனர். அவர்களது ஆட்சியின்

11th History Lesson 5 Tamil Medium.indd 75 01-12-2022 19:43:37

கரிகாலன் (நவீனச் சித்தரிப்பு)



இளங்கோவடிகளுடன் சேரன் செங்குட்டுவன் (நவீனச் சித்தரிப்பு)

மையமாக இருந்த பகுதி காவிரியாற்றின் கழிமுகப் பகுதியாகும். இதுவே பின்னர் சோழ மண்டலம் என்றழைக்கப்பட்டது. அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும். (திருச்சிராப்பள்ளி நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது). மேலும் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமானது முக்கியத் துறைமுகமாகவும் அரச குடும்பத்தின் மாற்று வாழ்விடமாகவும் திகழ்ந்தது. சோழரின் சின்னம் புலி ஆகும். காவிரிப்பூம்பட்டினம் இந்துமா கடலின் பல பகுதிகளைச் சேர்ந்த வணிகர்களைத் தன்பால் ஈர்த்தது. கரிகாலனின் ஆட்சியின் போது இங்கு நடைபெற்ற ஆரவாரமான வணிக நடவடிக்கைகள் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விரிவாக விளக்குகிறார்.

இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்ககால சோழஅரசர்களில் தலையாயவராக அறியப்படுகிறார். பட்டினப்பாலை அவருடைய ஆட்சியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. கரிகாலனுடைய தலையாய போர் வெற்றி என்பது வெண்ணி போர்க்களத்தில் சேரரையும் பாண்டியரையும் அவர்களுக்கு உதவிய பதினோரு வேளிர் குலத் தலைவர்களையும் வெற்றி கொண்டதாகும். காட்டை வெட்டி நாடாக்கியதற்காகவும், குளம் வெட்டி வளம் பெருக்கியதற்காகவும், காவிரியில் அணை கட்டி, வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் வேளாண்மையை வளரச் செய்தார் என்பதற்காகவும் இவர் போற்றப்படுகிறார். பெருநற்கிள்ளி எனும் பெயருடைய மற்றொரு அரசன் வேத வேள்வியான ராஜசூய யாகத்தை நடத்தியுள்ளார். கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர் மற்றும் புகார் அரச குடும்பத்தினரிடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டிருக்கிறது.

சேரர் மத்திய, வடக்கு கேரளப் பகுதிகளையும் தமிழ் நாட்டின் கொங்கு பகுதியினையும் ஆட்சி செய்தனர். வஞ்சி அவர்களின் தலைநகராகும். மேலைக் கடற்கரைத் துறைமுகங்களான முசிறியும் தொண்டியும் அவர்களது கட்டுபாட்டில் இருந்தன. வஞ்சி இன்றைய தமிழகத்தின், கரூர் என்று அடையாளம் காணப்படுகிறது. அதேசமயம் சில அறிஞர்கள் கேரளத்திலுள்ள திருவஞ்சைக்களம் என்னும் ஊரே வஞ்சி என்று அடையாளங் காண்கின்றனர். சேர அரச குடும்பத்தில் இரு கிளைகள் இருந்ததெனவும், பொறையர் என்னும் கிளையினர் தமிழ்நாட்டின் கரூர் நகரிலிருந்து ஆட்சி புரிந்தனர் எனவும் பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் பதிற்றுப்பத்து பேசுகிறது. கரூர் நகருக்கு அருகேயுள்ள புகளூரிலுள்ள கல்வெட்டு, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த சேர அரசர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களில் ஒருவரான சேரல் இரும்பொறை தன் பெயரில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், செங்குட்டுவனும் முக்கியச் சேர அரசர்கள் ஆவர். பல குறுநில மன்னர்களைச் செங்குட்டுவன் வெற்றி கொண்டுள்ளார். கடற்கொள்ளையர்களை அடக்கியதன் மூலம் முக்கியத் துறைமுகமான முசிறியின் பாதுகாப்பை உறுதிபடுத்தினார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் செங்குட்டுவனின் மாபெரும் வட இந்தியப் படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இவர் ஐம்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் வைதீக, அவைதீக மதங்களை ஆதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. செப்பு, ஈய நாணங்களைச் சேர அரசர் வெளியிட்டுள்ளார். தமிழ் பிராமியில் புராணக் குறிப்புகளைக் கொண்டுள்ள அவை, ரோம நாணயத்தைப் போலுள்ளன. எழுத்துக்கள் எவையும் இல்லாமல் சேரர்களின் வில் அம்புச் சின்னங்களைத் தாங்கிய சேர நாணயங்களும் கிடைத்துள்ளன.

பாண்டியர் மதுரையிலிருந்து ஆண்டனர். தாமிரபரணி நதி வங்காளவிரிகுடாக் கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ள கொற்கை அவர்களின் முக்கியத் துறைமுகமாகும். இது முத்துக்

11th History Lesson 5 Tamil Medium.indd 76 01-12-2022 19:43:37

குளிப்பிற்கும் சங்குகள் சேகரிப்பிற்கும் பெயர் பெற்றதாகும். கொற்கை பெரிப்ளசின் குறிப்புகளில் கொல்கொய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியரின் சின்னம் மீன். அவர்களின் நாணயங்களில் ஒருபுறம் யானையின் வடிவமும் மற்றொரு புறம், புதிய பாணியில் மீனின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் கேரளத்தின் தெற்குப் பகுதிகளின் மீது போர் தொடுத்து கோட்டயத்துக்கு அருகேயுள்ள நெல்கிண்டா துறைமுகத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தனர். மரபுவழிச் செய்தியின்படி பாண்டியர் தமிழ்ச் சங்கங்களை ஆதரித்து சங்க நூல்களைத் தொகுப்பித்தனர். சங்கப் பாடல்கள் பாண்டிய அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர்கள் எப்போது அரச பதவி ஏற்றார்கள், அவர்கள் ஆண்ட கால அளவு என்ன, என்பன போன்ற விவரங்கள் தெளிவாக இல்லை.

பெருவழுதி வெளியிட்ட நாணயம்

மாங்குளம் தமிழ்–பிராமி கல்வெட்டு பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய அரசன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகின்றது. மதுரைக் காஞ்சி முதுகுடுமிப் பெருவழுதியையும் மற்றொரு நெடுஞ்செழியனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், வேறு சில பாண்டிய மன்னர்களையும் குறிப்பிடுகின்றது. முதுகுடுமிப் பெருவழுதி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக்குடிச் செப்பேடுகளில், பிராமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினார் எனக் குறிக்கப்படுகிறார். தான் செய்த வேத வேள்விச் சடங்குகளின் நினைவாகப் பெருவழுதி என்ற பெயரில் புராண கதைப் பொறிப்புகளைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

நெடுஞ்செழியன் (நவீனச் சித்தரிப்பு)

நெடுஞ்செழியன், சேரர், சோழர், ஐந்து வேளிர் குல சிற்றரசர்கள் (திதியன், எழினி, எருமையூரான், இருங்கோவேண்மான், பொருநன்) ஆகியோரின் கூட்டுப்படைகளைத் தலையாலங்கானத்துப் போரில் வெற்றி கொண்டதற்காகப் புகழப்படுகிறார். மேலும் சிற்றரசர்களிடமிருந்து (வேளிர்) மிலலை, முத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்) என்னும் இடங்களைக் கைப்பற்றிய பெருமை இவரையே சாரும். கொற்கையின் தலைவனென்றும், திருநெல்வேலி கடற்கரைப் பகுதியில் வாழும் மீன் பிடிக்கும், போர்புரியும் திறன் பெற்ற தென்பகுதி பரதவர்களின் தலைவனென்றும் இவர் புகழப்படுகிறார்.

5.4 தமிழ் திணைப் பகுதிகளில் சமூக உருவாக்கம்

அக்காலத்தில் சமூக உருவாக்கத்தை நாம் புரிந்துகொள்ளச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. திணைக் கோட்பாட்டின் பின்புலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து முக்கிய நிலப்பரப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் தெய்வம், மக்கள், சூழல் சார்ந்த பண்பாட்டு வாழ்க்கை எனத் தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது.

குறிஞ்சி	மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்கு வேட்டையாடுதலும், உணவு சேகரித்தலும் வழக்கமாக இருந்தது.
முல்லை	காடும் காடு சார்ந்த இடமுமான இங்கு, கால்நடை மேய்ப்பதும், அத்துடன் மாற்றிட வேளாண்மை செய்வதும் தொழிலாக இருந்தது.
மருதம்	வயலும் வயல் சாந்த இடமுமான இங்கு நீர்பாசனத்தின் மூலம் கலப்பைகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது தொழிலாகும்.
நெய்தல்	கடலும் கடல் சார்ந்த இடமுமான இங்கு மீன்பிடித்தலும் உப்பு உற்பத்தியுமே முக்கியத் தொழில்களாகும்.
பாலை	மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதியான இங்கு வேளாண்மை சாத்தியமில்லை என்பதால் மக்கள் கால்நடைத் திருட்டையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டனர்.

5.5 தமிழ் அரசமைப்பு

ஒருவகையில் இத்திணைசார் பாகுபாடு சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் நிலவிய சமச்சீரற்ற வளர்ச்சியை பிரதிபலிப்பதாய் அமைந்துள்ளது என்றும் சொல்லப்படுகிறது. அரசியல் வடிவங்களிலும் அந்நிலை காணப்பட்டது. ஆட்சியாளர்களில் மூன்று வகைப்பட்ட தலைமைத்துவம் கொண்டவர்களைக் காண

11th History Lesson 5 Tamil Medium.indd 77 01-12-2022 19:43:37

முடிகிறது. 1) கிழார் 2) வேளிர் 3) வேந்தன். கிழார் என்போர் கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்றறியப்பட்ட நிர்வாகப் பிரிவின் தலைவராவர். இவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடிச் சமூகங்களின் தலைவர்களாவர். வேந்தர் எனப்பட்டோர் மிகப் பெரும் வளமான நிலப் பகுதியை கட்டுப்படுத்திய அரசர்களாவர்.

எண்ணிக்கையில் அதிகமாக இருந்த வேளிர்கள், பல்வேறு புவியியல் தன்மைகளைக் கொண்ட, குறிப்பாக மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளின் இடையே அமைந்திருந்த மலைப்பாங்கான காட்டுப் பகுதிகளைத் தங்கள் கட்டுபாட்டில் கொண்டிருந்தனர். அதியமான், பாரி, ஆய், இருங்கோ போன்ற குறுநில மன்னர்கள் ஒவ்வொருவரும்தங்களுக்கென இயற்கைவளமிக்க ஒரு பகுதியை ஆண்டனர். அவர்கள் பெருந்தன்மை கொண்ட புரவலர்களாகப் புலவர்களையும் ஆடல் பாடல் கலைஞர்களையும் ஆதரித்தனர். இவர்கள் படை வலிமை பெற்றிருந்தனர். ஆநிரை கவர்தல் காரணமாக இவர்களிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்றன. பல நேரங்களில் இவர்கள் இணைந்து மூவேந்தர்களில் யாராவது ஒருவரை எதிர்த்தனர்.

சங்க கால சேர, சோழ, பாண்டிய அரசுகளின் அரசியல் அமைப்பைப் பொறுத்த மட்டிலும் அறிஞர்களிடையே பல மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தொடக்க காலத்தைச் சேர்ந்ததும் பெரும்பான்மையோரால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்தும் யாதெனில் சங்க காலச் சமுதாயமானது நன்கு கட்டமைக்கப்பட்ட அரசைக் கொண்ட ஒரு சமூகம் என்பதாகும். சிலர் இதனை மறுக்கின்றனர். சேர, சோழ, பாண்டியரின் அரசியல் முறையானது, அரசு உருவாக்கத்திற்கு முன்பான குடிமைத் தலைமை முறையைச் சேர்ந்தது என்பது இவர்களின் கருத்தாகும். அவர்கள் தங்கள் கருத்துக்கு ஆதரவாக முன்வைக்கும் வாதங்கள் வருமாறு

1. சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.
2. எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாத நிலையிருந்தது.
3. ஒரு அரசின் உருவாக்கத்திற்குத் தேவைப்படும் வேளாண் வளர்ச்சியும் வேளாண் உபரியும் நாசம் ஏற்படுத்தும் போர்களால் தடுக்கப்பட்டன.
4. வட இந்திய அரசுகளைப் போல வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.

மேற்சொல்லப்பட்ட கருத்துகளுக்கு எதிரான நிலைப்பாட்டாளர்கள் கீழ்க்காணும் வாதங்களை முன்வைக்கப்படுகின்றனர்.

- சங்க இலக்கியங்களை ஆழ்ந்து வாசித்தோமேயானால் மருத நிலப் பகுதி வாழ் சமுகத்தில் வேற்றுமைகள் தோன்றிவிட்டதை அறியலாம்.
- தங்கள் நிலத்தின் மீது மூவேந்தர் கொண்டிருந்த பற்றையும் இவர்கள் பெற்றிருந்த செல்வாக்கையும் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க–ரோமானிய நூல்கள் துணைச் சான்றுகளாய் உறுதிப்படுத்துகின்றன.
- ஆட்சிப்பகுதிகளை விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட போர்களே புறத்திணை இலக்கியங்களின் முக்கியப் பாடுபொருளாக இருக்கின்றன.
- வணிகப் பெருவழிகளிலும், காவிரிப்பூம்பட்டினம் துறைமுகத்திலும் வரி வசூலிக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. மலையகப் பகுதிகளிலிருந்தும், முசிறி துறைமுகத்திலிருந்துமே சேர அரசர் வரி பெற்றனர் என அறிய முடிகின்றது.
- பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை வணிகம் மிகப் பெரும் பங்கை வகித்துள்ளது.

வேந்தரின் அரசியல் எழுச்சி

இரும்புக்காலகட்டத்தில் (பொ.ஆ.மு 1100–300) தோன்றிய தலைவர்களிலிருந்து தொடக்க வரலாற்று கால வேந்தர்கள் உருவாயினர். தலைவர்களில் ஒரு சிலர் மேய்ச்சல் நிலங்களின் மீதும், வேளாண் நிலங்களின் மீதும் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டை வைத்ததன் மூலம் உயர்நிலையை (வேந்தர்) அடைந்தனர். மற்றவர்கள் தலைவர்களாகவே (வேளிர்) நீடித்தனர். எடுத்துக்காட்டாக, அசோகர் கல்வெட்டுகளில் சத்யபுத்ரா என்று குறிப்பிட்டுள்ள அதியமான் நாளடைவில் வலிமை குன்றியதால் சேர, சோழ, பாண்டிய வேந்தர்களைப் போல அரசன் என்ற நிலையை அடைய இயலவில்லை.

கிழார்களையும், வேளிர் குலத்தலைவர்களையும் வேந்தர்கள் அடிபணியச் செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக்கொண்டனர். இதன் பொருட்டு தங்களுக்கெனப் படை வீரர்களை அணி திரட்டியதோடு, சில வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் பெற்றனர். சங்க காலத்தைச் சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காகச் சிறப்புப் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். கடுங்கோ,

11th History Lesson 5 Tamil Medium.indd 78 01-12-2022 19:43:37

இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டதன் மூலம் தங்களை ஏனைய மக்களிடமிருந்தும் வேளிர்குலத் தலைவர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

இவ்வேந்தர்கள் புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்து அவர்களை தங்களது அரசவையில் (அவையம்) அமர வைத்துக் கொண்டது ஒரு வகையில் தங்களையும், தங்கள் நாட்டையும் புகழ்ந்து பாடுவதற்காக இருக்கலாம். எடுத்துக்காட்டாக சோழ அரசன் கரிகாலன் பட்டினப்பாலையை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குப் பெருமளவில் பொன் நாணயங்களைப் பரிசாக அளித்துள்ளார்.

5.6 சமூகமும் பொருளாதாரமும்

சங்ககாலத்தில் வேந்தர்கள் மேற்கொண்ட போர்கள் எதிரிகளின் பகுதிகளைக் கைப்பற்றி அதன் மூலம் தங்களது ஆட்சி எல்லைப் பரப்பினை விரிவாக்குவதற்காக அமைந்தன. முடிவில்லாத போர்கள் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் உருவாவதற்கு காரணமாய் அமைந்திருக்கலாம். சடங்குகள் நடைபெற்ற இடங்களில் போர்க் கைதிகள் பணியாற்றியதற்கான பதிவுகள் காணப்படுகின்றன. அடிமைகள் பற்றிய சில குறிப்புகளும் காணப்படுகின்றன. பொருளாதார உற்பத்தியில் பெண்களும், செயலூக்கத்துடன் பங்கெடுத்துள்ளனர். சங்க காலத்தில் பல பெண்பாற் புலவர்களும் இருந்துள்ளனர்.

கைவினைத் தொழில்களான உலோகப் பாண்டம் செய்தல், மணி மற்றும் தங்க அணிகலன் செய்தல், சங்கு வளையல், அணிகலன் செய்தல் கண்ணாடி, இரும்பு வேலை, மட்பாண்டம் செய்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் குறித்து சான்றுகள் உள்ளன. நகர மையங்களான அரிக்கமேடு, உறையூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, கொற்கை, கேரளத்தில் பட்டணம் ஆகிய இடங்களில் இது போன்ற கைவினைப் பொருள் உற்பத்தி வளமையாக நடந்துள்ளன. மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேரக் கடைவீதிகளையும் (நாளங்காடி, அல்லங்காடி) அங்கு விற்பனையாகும் பலவகைப்பட்ட கைவினைப் பொருள்கள் பற்றியும் பேசுகிறது. பல்வேறு வகைப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்கள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவில்லை. சிலர் விலையுயர்ந்த ஆபரணக் கற்களையும், ஓரளவு மதிப்புள்ள ஆபரணக் கற்களையும் பண்டமாற்றாகக் கொடுத்து மூலப் பொருள்களைப் பெற்றனர். அம்மூலப் பொருள்கள் தொழிற்கூடங்களைச் சென்றடைந்து பல்வேறு பொருள்களாகத் தயார் செய்யப்பட்டு, பின்னர் வேறு சில பொருள்களுக்காகப் பண்டமாற்று செய்யப்பட்டன.

மட்பாண்டங்களின் மீது பொறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள், தமிழ் மொழி பேசாத ஏனைய மக்கள், பெரும்பாலும் வணிகர்கள் நகரங்களிலும் தொழில் மையங்களிலும் இருந்ததைத் தெரிவிக்கின்றன. தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். மகதக் கைவினைஞர்கள், மாளவ உலோகப் பணியாளர்கள், மராத்திய எந்திரப் பொறியாளர்கள் போன்றோர் தமிழகக் கைவினைஞர்களோடு கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றியதாக மணிமேகலை குறிப்பிடுகின்றது. தமிழ்–பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. உப்பு வணிகர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாகும்.

வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்திலிருந்தது. ரோம தங்க வெள்ளி நாணயங்களும் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. ரோமப் பேரரசு தென்கிழக்கு ஆசிய நாடுகள் போன்ற தொலைதூரத்தில் அமைந்துள்ள நாடுகளோடும் வணிகத் தொடர்புகள் மேற்கொண்டதைத் தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் உறுதி செய்கின்றன. இந்தியாவின் தென் பகுதியில் கடற்கரைகளை எளிதாகச் சென்றடைய முடியும் என்ற சூழல் இருந்ததாலும், கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கடல் வழிப் பாதையில் அமைந்திருந்த காரணத்தினாலும் கடல் கடந்த தொடர்புகளில் முக்கியப் பங்கு வகித்தது. தொடக்க வரலாற்றுக்கால துறைமுகங்கள் பலவற்றில் கிடைத்துள்ள அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் சுட்டுகின்றன. ரோமானியர்களால் கொண்டுவரப்பட்ட செல்வம் அயல்நாட்டு வணிகர்களின் வருகை ஆகியவை குறித்து தொல்பொருள் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக் குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

11th History Lesson 5 Tamil Medium.indd 79 01-12-2022 19:43:37



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள கீழடி நான்காம் கட்ட அகழாய்வு அறிக்கையின் சிறப்பம்சங்கள்:

கீழடியில் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள், அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம், மியாமி நகரத்தில் அமைந்துள்ள, பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்திற்கு (Beta Analytic Testing Laboratory) அனுப்பப்பட்டன. இவற்றில் அதிகபட்சமாக 353 செ.மீ. ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட கரிம மாதிரிகளின் காலம் கி.மு.(பொ.ஆ.மு.) 580 என ஆய்வு முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்தறிவு

கீழடியில் தமிழ்–பிராமி எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கி.மு.580 காலகட்டத்தைச் சேர்ந்த தமிழ்–பிராமி எழுத்துப் பொறிப்பு கொண்ட பானை ஓடும் அடங்கும். இதிலிருந்து ஆறாம் நூற்றாண்டிலிருந்தே தமிழக மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

குறியீடு

குவிரன் ஆத [ன்]

வேளாண் சமூகம் மற்றும் கால்நடை வளர்ப்பு


திமில் காளை

கொம்புகள்

கீழடி அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட விலங்குகளின் 70 எலும்புத் துண்டுகளின் மாதிரிகள், புனேவின் தக்காண கல்லூரி, முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்த உடைந்த எலும்பு துண்டுகள் பகுப்பாய்வு அறிக்கையின்படி, வகைப்படுத்தப்பட்டதில் திமிலுள்ள பசு / காளை, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி மற்றும் மயில் ஆகிய உயிரினங்களுக்குரியவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

கட்டடத் தொழில்நுட்பம்

தமிழகத்தில் சங்ககாலத்தைச் சார்ந்த பிற தொல்லியல் இடங்களில் காணப்படும் செங்கற்களைப் போல் இங்கு கிடைத்துள்ள செங்கற்கள் 1:4:6 என்ற விகிதாச்சார அளவிலேயே காணப்படுவதால் அக்காலகட்டம் கட்டுமானத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கியது தெரிகிறது.

செங்கற் சுவர்கள்

நெசவுத் தொழில்

தக்களிகள்

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ள நூல் நூற்கப் பயன்படும் 180–க்கும் மேற்பட்ட தக்களிகள், துணிகளில் உருவ வடிவமைப்புகளை வரைவதற்கு உபயோகப்படுத்தப்படும் (வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டதைப் போன்ற) எலும்பினாலான கூரிய முனைகள் கொண்ட தூரிகைகள் (20), கருங்கல் மற்றும் சுடுமண்ணால் செய்யப்பட்ட தறியில் தொங்கவிடும் குண்டு, செம்பினாலான ஊசி போன்ற தொல்பொருள்கள் இப்பகுதியில் நிலவியிருந்த நெசவுத் தொழிலின் நூல்நூற்றல், பாவு அமைத்தல், தறியிலமைத்தல், நெசவு அதன்பின் சாயமிடல் நிலைகளை உறுதி செய்கின்றன.

வணிகம்

கீழடி அகழாய்வுப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட அகேட், கார்னீலியன் போன்ற மணிகள் செய்வதற்கான மூலப்பொருள்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து மகாராஷ்டிரம், குஜராத் வழியாக கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

கீழடியில் சிவப்பு வண்ண பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வகை பானைகள் கி.மு.2ஆம் நூற்றாண்டில் ரோம் நாட்டில் புழக்கத்திலிருந்த தனித்தன்மை வாய்ந்த அரிட்டைன் வகையாகும்.

அகேட் மற்றும் மணிகள்

ரௌலட்டட் மட்கலன் (உள்நாட்டு வகை)

11th History Lesson 5 Tamil Medium.indd 80 01-12-2022 19:43:41

அணிகலன்கள் மற்றும் மணிகள்

தொங்கட்டான்கள்

வளையம்

ஊசி

சூதுபவளம் (கார்னீலியன்)

படிகம்

மாக்கல்



கண்ணாடி மணிகள்

தங்கத்தினாலான ஏழு ஆபரணத் துண்டுகள், செம்பு அணிகலன்களின் சிறிய துண்டுகள், மதிப்புமிக்க மணிகள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், சங்காலும், தந்தத்தாலும் செய்யப்பட்ட வளையல்கள், சீப்புகள் ஆகிய பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய மதிப்புறு அணிகலன்களும், ஏனைய அணிகலன்களும் சங்ககாலச் சமூகம் வளமையுடன் இருந்ததற்கான சான்றுகளாகும். மேலும், கண்ணாடி, படிகம், குவார்ட்ஸ், வண்ணம் தீட்டப்பட்ட மண்ணாலான மணிகள், அகேட், கார்னீலியன் மற்றும் சுடுமண் ஆகியவற்றால் செய்யப்பட்ட 4,000க்கும் மேற்பட்ட மணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.



இரும்பு பொருள்கள்

அகழாய்வில் இரும்பு ஆணிகள் மற்றும் கத்திகளின் பாகங்கள் குறிப்பிடத்தக்க அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுடுமண் உருவங்கள்

சுடுமண்ணாலான 13 மனித உருவங்கள், 3 விலங்கு உருவங்கள், 600க்கும் மேற்பட்ட விளையாட்டுப் பொருள்கள், 28 காதணிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சுடுமண் உருவங்கள்

ஆட்டக்காய்கள்

வட்டச்சில்லுகள்

விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குகள்

தமிழ்நாட்டு அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள பகடைக்காய், வட்டச்சில்லுகள் மற்றும் ஆட்டக்காய்கள் அன்றைய சமுதாயத்தின் வாழ்க்கை முறையையும், பொழுதுபோக்கு அம்சங்களையும் பிரதிபலிக்கின்றன. அகழாய்வில் கிடைக்கப்பெற்ற விளையாட்டுப் பொருட்களில் பெரும்பாலானவை சுடுமண்ணால் ஆனவை.

தட்டையான வடிவில் உள்ள பானை ஓட்டின் விளிம்புகள் நன்கு தேய்க்கப்பட்டு வட்ட வடிவத்தைக் கொண்டிருக்கும் விளையாட்டுப் பொருள் 'சில்லு' என்றழைக்கப்படுகிறது. இவ்வகை சில்லுகள் விளையாடுவதற்கு பயன்படுத்தப்பட்டன.

கீழடி மற்றும் சிந்துவெளி குறியீடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை







வைகை நதிக்கரையிலுள்ள கீழடி அகழாய்வுகள் மூலம் நகரமயமாதல் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பது தெளிவாகிறது. இதே காலக்கட்டத்தில்தான் வடஇந்தியாவின் கங்கை சமவெளிப் பகுதியிலும் நகரமயமாதல் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

பொருநை நாகரிகம்: தமிழ்ப் பண்பாட்டின் தொட்டில்

பொருநை (தாமிரபரணி) தமிழ் நாட்டின் ஒரே வற்றாத ஆறாகும். இது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்கிறது. பொருநை ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூரில் 1876இல் ஜெர்மானிய பரப்பாய்வாளர் டாக்டர் ஜாகோர் என்பவரால் அகழாய்வு நடத்தப்பெற்றது. பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் ரீ 1899 முதல் 1905 வரை ஆதிச்சநல்லூரில் அகழாய்வு செய்தார். அவர் அகழாய்வு செய்து சேகரித்த தொல்பொருள்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னர், சுமார் ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு இந்திய அரசு தொல்லியல் துறையினர் (ASI) 2004இல் ஆதிச்சநல்லூரில் தொல்லியல் அகழாய்வு செய்தனர். இதன் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழக அரசின் தொல்லியல் துறை ஆதிச்சநல்லூரின் ஈமக்காடுகள் மற்றும் வாழிடப்பகுதி புதைமேடுகளில் அகழாய்வுப் பணியினைத் (2019 – 2021) தொடங்கியது. கொற்கை, சங்க இலக்கியங்களிலும் கிரேக்க இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பழைய துறைமுகமாகும். தமிழக அரசின் தொல்லியல் துறையினரால் 1968 இல் இங்கு அகழாய்வு நடத்தப்பட்டது. தற்சமயம் இங்கு நடைபெற்று வரும் அகழ்வாய்வானது (2020 – 2021) கொற்கை துறைமுகத்தையும் அதனது அயலகத் தொடர்பினையும் குறித்துப் பல சுவையான தகவல்களை வெளிப்படுத்தி வருகின்றன.

ஆதிச்சநல்லூரிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிவகளை என்ற ஊரில் 2019இல் நடத்தப்பட்ட அகழாய்வில் ஒரு தாழியிலிருந்து கிடைத்த உமி நீங்கிய நெல்மணிகள் அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள பீட்டா ஆய்வகத்தில் கரிம பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது இதனது காலம் பொது ஆண்டிற்கு முந்தைய காலத்தைச் கி.மு.(பொ.ஆ.மு.) 1155 சேர்ந்ததாகக் காலக்கணக்கீடு செய்யப்பட்டது. இது தாமிரபரணி பண்பாடு 3200 வருடப் பழமை என்று உறுதிப்படுத்துகின்றது.

ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள்

ஈமத் தாழிகள்: மண்–பாறை அடுக்குகளில் 3 முதல் 12 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த ஈமத் தாழிகளில் எலும்புகள், இறந்தவர்களின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் என்ற நம்பிக்கையில் வைக்கப்பட்ட பாத்திரங்கள், பொன், உயரளவு ஈயம்கொண்ட வெண்கல, இரும்புப் பொருள்கள் கிடைத்துள்ளன.

11th History Lesson 5 Tamil Medium.indd 82 01-12-2022 19:43:49

பொன்னாலான நெற்றிப்பட்டங்கள்

நீள்வட்ட வடிவிலான பொன்தகட்டால் ஆன நெற்றிப்பட்டங்கள் சிறிய அளவில் பொறிக்கப்பட்ட முக்கோண வடிவ அணிவேலைப்பாடுகளுடனும் நெற்றியில் கயிற்றால் இணைத்துக் கட்டுவதற்காக இரு முனைகளிலும் இடப்பட்ட துளைகளுடனும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



உயரளவு ஈயம்கொண்ட வெண்கலப் பொருள்கள்

சிறிய, பெரிய அளவிலான உயரளவு ஈயம்கொண்ட வெண்கலப் பாத்திரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பெண் உருவம் / ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட பெண் உருவம்

சுடுமண் பெண்ணுருவங்கள்

சிந்துவெளி அகழ்வில் கிடைத்துள்ளதைப் போன்ற சுடுமண் பெண்ணுருவங்கள் கிடைத்துள்ளன.

இரும்புப் பொருள்கள்

எறி வேல், ஈட்டி, குறுவாள் போன்ற 32 விதமான இரும்பினாலான கருவிகள் கிடைத்துள்ளன.

பானை வகைகள்

கருப்பு–சிவப்பு நிற பானை வகைகள், 500க்கும் மேற்பட்ட கீறல் குறியீடுகள் மற்றும் தமிழி (தமிழ்–பிராமி) எழுத்துகள் பொறித்த பானையோடுகள் கிடைத்துள்ளன.

அணிகலன்கள்

செம்பு, இரும்பாலான மோதிரங்கள், பொன், கண்ணாடி, தந்தம், எலும்பு மற்றும் சங்கினால் செய்யப்பட்ட மணிகளும் வளையல்களும் கிடைத்துள்ளன.

நீர், கழிவுநீர் மேலாண்மை

இங்கு கிடைத்த செங்கற்கட்டுமானம் 29 வரிசையில் உள்ளது. இதன் நடுவில் ஒரு பெரிய பானை கிடைத்துள்ளது. மேலும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்ட துளையிடப்பட்ட 9 சுடுமண் குழாய்கள் அக்காலத்தின் தொழில்நுட்பச் சிறப்பை உணர்த்துகின்றன.

சங்கு வளையல் தொழிற்கூடம்

முழுமையான சங்குகள், அறுக்கப்பட்ட சங்கு வளையல்கள், வளையல்துண்டுகள் இங்கு சங்கு வளையல்கள் செய்யும் தொழிற்கூடம் இருந்தமையை வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியப் பாடல்கள் பலவும் கொற்கையில் சங்கு வளையல் தொழில் செய்பவர்கள் இருந்தமையை உறுதிப்படுத்துகின்றன.

அயலகத் தொடர்பை வெளிப்படுத்தும் பானையோடுகளும் நாணயங்களும்

இங்கு கிடைத்திருக்கும் அயல் நாட்டு பானையோடுகள் மற்றும் கருப்பு நிற மெருகேற்றப்பட்ட மட்பாண்டடங்கள், பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே தமிழகம் உலகின் பிற பகுதிகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை உறுதிப்படுத்துகின்றன.

11th History Lesson 5 Tamil Medium.indd 83 01-12-2022 19:43:56

அணிகலன்கள் செய்வதற்கான கற்கள், பட்டணம்



அம்போரா–ரோம்



கண்ணாடிக் கிண்ணங்கள்–ரோம்

5.7 கருத்தியலும் மதமும்

முறைபடுத்தப்பட்ட மத நடவடிக்கைகளின் தோற்றம் அசோகர் காலத்திலிருந்து தென்படத் தொடங்குகிறது. இக்காலகட்டத்தில்தான் பௌத்த மதம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்தது. அசோகரின் மகள் போதிமரத்தை இலங்கைக்குக் கொண்டு சென்றதாகக் கருதப்படுகின்றது. அசோகருக்கு முன்னதாக சந்திரகுப்த மௌரியர் கர்நாடகத்திற்கு வருகை தந்ததாகவும் பழங்கதை ஒன்று உள்ளது. சாதவாகனர்களும், சங்க காலத்து அரசர்களும், இக்சவாகுக்களும் வேத வேள்விகளை ஆதரித்தனர். பிராமணருடைய வருகை குறித்தும் வேதச் சடங்குகள் நடைபெற்றமைக்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. ஆனால் இக்காலகட்டத்தில் 'வர்ணாசிரமம்' என்னும் கருத்தியல் தமிழ்ப் பகுதிகளில் வேரூன்றவில்லை.

பௌத்த மதம் தொடர்பான சான்றுகள் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆந்திராவில் கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் கழிமுகப் பகுதிகள் பல பௌத்த மையங்களைக் கொண்டுள்ளன. பௌத்த மதம் எந்த அளவிற்கு ஆழமாக வேறூன்றியிருந்தது என்பதை அமராவதி, நாகர்ஜுனகொண்டா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உணர்த்துகின்றன. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. சமண மதத்தோடு ஒப்பிடுகையில் பௌத்த மதத்திற்கான சான்றுகள் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. தமிழகத்தில் காணப்படும் தமிழ்–பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய எண்ணற்ற குகை உறைவிடங்கள் பௌத்த மதத்தைக் காட்டிலும் சமண மதம் செல்வாக்குடன் விளங்கியதைப் பறைசாற்றுகின்றன. பொதுமக்களின் மீது இம்மதங்கள் கொண்டிருந்த செல்வாக்கை அறிந்துகொள்ள இயலவில்லை என்றாலும், வணிகர்களும் சாதாரண மக்களும் சமணத் துறவிகளுக்குப் பாறை மறைவுகளில் படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர், காணிக்கை செலுத்தினர் என்பதற்கான சான்றுகள் உள்ளன. சங்கம் மருவிய காலத்தில் சமணர்கள் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய சேவை செய்துள்ளனர்.

பௌத்த ஸ்தூபி –அமராவதி

புத்தர் சிலை–நாகர்ஜுனகொண்டா

11th History Lesson 5 Tamil Medium.indd 84 01-12-2022 19:43:58

5.8 களப்பிரர்களின் காலம் – சங்கம் மருவிய காலம்

சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட (தோராயமாக, பொ.ஆ. 300–600க்கும்) காலமே, தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என அறியப்படுகிறது. இவ்விடைவெளியில் போர்க்குணம் மிக்க களப்பிரர்கள் என்போர் தமிழகத்தைக் கைப்பற்றித், தமிழகத்தின் பாரம்பரிய அரசுகளான மூவேந்தர்களையும் தோற்கடித்ததால் இக்காலமானது களப்பிரர்களின் இடைக்கால ஆட்சி என்றும், இருண்ட காலமென்றும் தொடக்க கால வரலாற்று ஆசிரியர்கள் சித்தரித்தனர். ஒருவேளை இவ்விடைப்பட்ட காலத்தில்தான் முந்தைய தமிழ்ப் பண்பாட்டின் பல தனிக்கூறு மறைந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனாலும் இக்கருத்தை சரியானது என ஏற்பதிற்கில்லை.

ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள் இக்காலத்தில்தான் தோன்றியிருக்கிறது. இக்காலத்தில்தான் உன்னதமான தமிழ் இலக்கியமான திருக்குறளும் அதோடு ஏனைய பதினென் கீழ்க் கணக்கு நூல்களும் இயற்றப்பட்டன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சிறந்த காப்பியங்களும் இக்காலத்தைச் சார்ந்தவையே. இக்காலத்தில் அவைதீக மதங்களான சமணமும் பௌத்தமும் பெரும் செல்வாக்குப் பெற்றமையால், வைதீக வேதபுராண கருத்துக்களைக் கொண்டிருந்த அறிஞர்கள், ஆட்சி புரிகின்ற களப்பிரர்கள் தீயவர்கள் என்ற கருத்துத் தோற்றத்தை உருவாக்கியிருக்கலாம் எனத் தெரிகிறது.

இக்கால கட்டம் பற்றி அண்மைக் காலத்தில் முன்வைக்கப்பட்ட புதிய விளக்கத்தின் படி இக்காலகட்டம் ஒரு பெறும் மாற்றத்தை நோக்கி இட்டுச் சென்ற மாறுதல் காலமாகும். இந்த மாறுதல்களின் விளைவாகவே, பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வட தமிழகத்தில் பல்லவரும், தென்தமிழகத்தில் பாண்டியரும் அரசு மற்றும் சமூகத்தை உருவாக்க வழி உருவானது என்று அண்மைக்கால வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். தொடக்கத்தில் இந்நாடுகளின் அரசர்கள் சமண பௌத்த மதங்களையே ஆதரித்தனர். ஆனால் அவர்கள் படிப்படியாக சைவ–வைணவ பக்தி இயக்கத்தால் புத்துயிர் பெற்ற வேத புராண மதங்களின் செல்வாக்கிற்கு உள்ளாயினர். ஆனால் இம்மதங்கள் பக்தி இயக்க அடியார்களின் வெறுப்பைத் தூண்டும் வகையில் பொது மக்களிடையே சமண பௌத்த மதங்கள் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன.

சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களின் குடும்பம் வம்சாவளி ஆகியன குறித்து எக்குறிப்பும் காணப்படாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர். பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதி காலத்தில் களப்பிரர்கள் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

பாடச் சுருக்கம்

- தமிழை எழுதுவதற்காக எழுத்துமுறை பயன்பாட்டில் இருந்தமை, மேலும் கல்வெட்டுகள், இலக்கியங்கள் ஆகிய எழுத்து வடிவச் சான்றுகள் கிடைப்பதால், தென் இந்தியாவின் வரலாற்றை பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது.
- இரும்புக் காலத்தில் தலைமை உரிமை கொண்டவர்களாக இருந்த சேர, சோழ, பாண்டியர் சங்க காலத்தில் வேந்தர் என்னும் பட்டப் பெயரோடு அரசர்களாயினர்.
- ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரப் பகுதிகளை ஆட்சி செய்த சாதவாகனர்கள் மூவேந்தர்களின் சமகாலத்தவர்.
- தென்னிந்தியாவில் பௌத்தமும் சமணமும் வலுவான நிலையிலிருந்தன. ஆளும் வர்க்கத்தினரிடையே வேதக் கருத்துக்கள் செல்வாக்கு செலுத்தத் தொடங்கின.
- இந்தியப் பெருங்கடல் பகுதிகளோடும் ரோமானிய உலகத்தோடும் கடல் சார் வணிகம் வளர்ந்தது.
- முன்பிருந்ததைப் போலவே களப்பிரர் காலத்திலும் பண்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றது.

பயிற்சி

3N40V

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. கரிகாலன் __________ மகனாவார்

(அ) செங்கண்ணன் (ஆ) கடுங்கோ
(இ) இளஞ்சேட் சென்னி (ஈ) அதியமான்

11th History Lesson 5 Tamil Medium.indd 85 01-12-2022 19:43:58

2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

(i) தலையாலங்கானம் – நெடுஞ்செழியன்
(ii) பட்டினப்பாலை – உருத்திரங்கண்ணனார்
(iii) கஜபாகு – இலங்கை
(iv) திருவஞ்சிக்களம் – சோழர்

(அ) (i) (ஆ) (ii) (இ) (iii) (ஈ) (iv)

3. ____________ ராஜசூய யாகத்தை நடத்தினார்

(அ) பெருநற்கிள்ளி
(ஆ) முதுகுடுமிப் பெருவழுதி
(இ) சிமுகா
(ஈ) அதியமான்

4. இக்சவாகுகள் ____________ பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்

(அ) ஆந்திரா–கர்நாடகா (ஆ) ஒடிசா
(இ) தக்காணப் பகுதி (ஈ) பனவாசி

5. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க

(i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்
(ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்
(iii) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்
(iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்

(அ) (i) மற்றும் (ii) (ஆ) (ii) மற்றும் (iii)
(இ) (i) மற்றும் (iii) (ஈ) (iii) மற்றும் (iv)

II. குறுகிய விடை தருக

1. பண்டமாற்று முறையை விளக்குக.
2. மதுரைக்காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?

III. சுருக்கமான விடை தருக

1. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.
2. சோழ அரசர்களில் தலை சிறந்தவன் கரிகாலன்.
3. கௌதமிபுத்திர சதகர்னியின் சாதனைகள்.
4. கிழார் – வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்.

IV. விரிவான விடை தருக

1. "சங்க கால அரசியல் முறையானது அரசு உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைமை உரிமையே ஆகும்". இக்கூற்றை ஆதரித்தோ எதிர்த்தோ உனது காரணங்களை வழங்கு.
2. மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும்.
3. களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?
4. சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் பற்றி விளக்குக.

செயல்பாடுகள்

1. திருக்குறள் முன்வைக்கும் பல கருத்துக்கள் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும்
2. அருகேயுள்ள பழங்காலத் துறைமுக நகரத்திற்குச் சென்று அங்குள்ள இடிபாடுகள் பற்றிய, உள்ளூர் மக்களின் நினைவுகள் பற்றிய விவரங்களைத் தொகுக்கவும்.

மூலநூல்கள்

1. R.Champakalakshmi, *Trade, Ideology and Urbanization in South India*. Oxford University Press, 1996.
2. K.A. Nilakanta Sastri, *A History of South India*. Oxford University Press, 1955.
3. Noboru Karashima, ed., *A Concise History of South India: Issues and Interpretations*. Oxford University Press, 2014.
4. Rajan Gurukkal, *Social Formation in South India*. Oxford University Press, 2009.
5. Romila Thapar, *Early India*. Penguin.
6. R.Sathyanathier, *History of India, Vol. I,* 1972 (Reprint).
7. Upinder Singh, *A History of Ancient and Early Medieval South India*. Pearson Longman, 2009.

கலைச்சொற்கள்

நாணயங்கள் பற்றிய படிப்பு	**numismatic**	study of coins
கொடை: வள்ளன்மை	**munificence**	generosity
உறுதிப்படுத்து	**corroborate**	confirm
உயர்ந்த	**exalted**	dignified
அதிகாரச் சின்னம்	**insignia**	emblem
இடைப்படு காலம்	**interregnum**	the interval
இணை	**amalgamate**	combine, come together
கொண்டாட்டம்	**commemoration**	celebration in honour of or in memory of

11th History Lesson 5 Tamil Medium.indd 86 01-12-2022 19:43:58

அலகு 6

மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவில் கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கத்தை அறிதல்
- இந்தோ–கிரேக்க ஆட்சியாளர்கள், அவர்களின் பங்களிப்பு ஆகியன குறித்து அறிதல்
- மத்திய ஆசியாவிலிருந்து சாகர், பார்த்தியப் பஹ்லவர், குஷாணர் ஆகியோர் மேற்கொண்ட படையெடுப்புகள் குறித்து அறிதல்
- இந்தியா, மத்திய ஆசியா இடையிலான தொடர்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்
- கலை, இலக்கியத்தின் தாக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்
- ரோம் நாட்டினுடனான வணிகத்தின் வீச்சு பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கம் ஆகியனவற்றை அறிதல்.

அறிமுகம்

பேரரசர் அசோகர் இறந்ததையும், அதன் விளைவாக மௌரியப் பேரரசின் வீழ்ச்சியையும் தொடர்ந்து வந்த நான்கு நூற்றாண்டுகளில் இந்தியாவின் சில பகுதிகள் மேற்காசியா, மத்திய ஆசியாவைச் சேர்ந்த இந்தோ–கிரேக்கர், சாகர், குஷாணர் ஆகியோரின் படையெடுப்புகளுக்கு உள்ளாயின. இவர்கள் அனைவருமே இந்தியாவின் பெரும் பகுதிகளில் தங்களின் ஆட்சிகளை நிறுவினர். இது, இந்தியச் சமூகத்திற்குள், பண்பாட்டுமயமாக்கம், அந்நிய நாடுகளின் பண்பாடுகள், கலை வடிவங்கள் ஆகியவற்றைத் தன்வயப்படுத்துதல் ஆகிய செயல்முறைகளை வலுப்படுத்தியது. மேலும், இது விரிவான வணிகத் தொடர்புகள் மூலம் மத்தியத் தரைக்கடல் பகுதிகள், மத்திய ஆசியா, சீனா ஆகியவற்றோடு இந்தியாவை ஒருங்கிணைத்தது.

6.1 இந்தோ–கிரேக்க உறவுகளின் தொடக்கம்

அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து (பொ.ஆ.மு. 327–325), பஞ்சாப் பகுதியைக் கைப்பற்றியதிலிருந்து கிரேக்கர்களுடனான இந்தியத் தொடர்பு தொடங்கியது. அவர், தனது படையுடன் மேற்கு நோக்கி திரும்பிச் செல்லத் தொடங்கியபோது, வென்ற பகுதிகளை மாகாண ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் விட்டுச் சென்றார். சந்திரகுப்த மௌரியரின் தொடக்ககாலப் படையெடுப்புகளில் ஒன்று, இந்த அயல்நாட்டு படையெடுப்பாளர்களுக்கு எதிரானதாகும்.

அலெக்சாண்டரின் திறமைமிக்க தளபதிகளுள் ஒருவரான செலியுகஸ் நிகேடர், பொ.ஆ.மு. 311 க்குப் பிறகு பிரிஜியா (துருக்கி) தொடங்கி சிந்து நதி வரையிலுமான ஒரு மிகப்பெரிய பரப்பில் வெற்றிகரமாக தனது ஆட்சியை நிறுவினார். பொ.ஆ.மு. 305 வாக்கில், சந்திரகுப்தர் செலியுகஸை எதிர்த்துப் போரிட்டு அவரைத் தோற்கடித்தார். இருப்பினும், இது அலெக்சாண்டரின் ஏனைய ஆளுநர்களுக்கு ஏற்பட்டதைப் போன்ற கொடூரமான தோல்வி அல்ல. மாறாக, சந்திரகுப்தர் செலியுகஸுடன் ஓர் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். சிந்து வரையிலும் தான் வெற்றி கொண்டிருந்த நிலப்பரப்பை ஒப்படைத்த செலியுகஸ், அதற்குப் பதிலாக 500 போர் யானைகளைப் பெற்றுக்கொண்டார். மேலும் ஒரு திருமண ஒப்பந்தம் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. கிரேக்கர்களுக்கும் மௌரியப் பேரரசருக்கும் இடையே அரச உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும் அந்த உடன்படிக்கை வழி செய்தது. மேலும், கிரேக்க நாட்டுத் தூதராக மெகஸ்தனிஸ், மௌரியரின் தலைநகரான பாடலிபுத்திரத்துக்குக் அனுப்பப்பட்டார். இந்தியாவிற்கு வந்த முதல் அயல்நாட்டு தூதுவர் மெகஸ்தனிஸ் ஆவார்.

11th History Lesson 6 Tamil Medium.indd 87 01-12-2022 19:45:23

சந்திரகுப்தரின் மகன் பிந்துசாரர், மேற்காசியாவிலிருந்த கிரேக்க அரசுகளோடு தொடர்ந்து நட்புறவைப் பேணினார். எகிப்தின் இரண்டாவது தாலமி தூதர்களை அனுப்பியது பற்றியும் சிரியாவின் ஆன்டியோகஸுடனான பிந்துசாரரின் கடிதப் போக்குவரத்து குறித்தும் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அசோகரும் அதே மரபின்படி கிரேக்க அரசுகளுடன் நட்புறவு கொண்டிருந்தார். அவரது பாறைக் கல்வெட்டு ஆணை (13) ஐந்து யவன அரசர்களைக் குறிப்பிடுகிறது. அவர்கள் சிரியாவின் இரண்டாவது ஆன்டியோகஸ் தியோஸ், எகிப்தின் இரண்டாவது தாலமி பிலடெல்பஸ், மாசிடோனியாவின் ஆன்டிகோனஸ் கொனடாஸ், சைரீனின் மகஸ், கொரிந்தின் அலெக்சாண்டர் என்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது, கிரேக்கருடனான அசோகரின் தொடர்புகள், மேற்காசியாவுக்கு அப்பால் கிரீஸின் மையப் பகுதிவரை விரிவடைந்ததைக் குறிப்பிடுகிறது.

இந்தியா முழுவதும் கிரேக்கர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட யவன (அல்லது யோன) என்ற சொல்லை இப்போது பார்ப்போம். இச்சொல், பாரசீக மொழியில் கிரேக்கர்களைக் குறிக்கும் 'யயுனா' என்னும் சொல்லிருந்து பெறப்பட்டதாகும். இந்தியாவில் இச்சொல்லானது கலப்பின மக்கள் உட்பட கிரேக்கத்தை பிறப்பிடமாகக் கொண்ட அனைவரையும் மேலும் பொனீசியர்களைக்கூடக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த முறையான தூதுவப் பரிமாற்றமும் கடிதப் போக்குவரத்தும் கூடவே ஆஃப்கானிஸ்தான் வரையிலான மௌரியப் பேரரசின் விரிவாக்கமும் இந்தியாவிலிருந்து மேற்கே எகிப்து வரையில் முறையான வணிகம் நடைபெறுவதற்கு உதவிபுரிந்தது. தரை வழி வணிகமானது, வட மேற்கு ஆஃப்கானிஸ்தான் (பாக்ட்ரியா) வழியாக மேற்கொள்ளப்பட்டது; கூடவே ஓரளவு பாரசீக வளைகுடா, செங்கடல் வழியே கடல்வழி வணிகமும் நடைபெற்றது. தந்தம், ஆமை ஓடுகள், முத்துகள், அவுரி முதலிய சாயங்கள், விளாமிச்சை வேர்த் தைலம் அல்லது மிச்சை (கங்கைப் பகுதியைச் சேர்ந்த ஒரு நறுமணத் தைலம்), தாளிசபத்திரி (ஒரு வாசனைப் பொருளாகப் பயன்படும் இலவங்கப்பட்டை இலை) மற்றும் அரிய மரங்கள் உள்ளிட்ட பல்வகையான ஆடம்பரப் பொருள்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், பாடலிபுத்திரத்திலுள்ள நினைவுச் சின்னங்களிலிருந்து தெரியவருகிறது. மேலும் மௌரியப் பேரரசின் விரிவான நிர்வாக அமைப்புகளுக்குப், பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோரின் நிர்வாக அமைப்பு முறைகளே தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். இறுதியாக, மேற்கு இந்தியாவில் இந்தோ–கிரேக்க அரசாட்சிகள் தோன்றியமை, மாறுபட்ட பண்பாட்டின் தாக்கங்களை வலுப்படுத்தியதோடு ஒரு வேறுபட்ட, தனித்தன்மை கொண்ட கலைச்சிந்தனைப் போக்கையும் தோற்றுவித்தது.

இந்தோ–கிரேக்க அரசர்கள்

வடக்கு ஆஃப்கானிஸ்தான் (பாக்ட்ரியா) தொடங்கிசிரியாவரையிலும்விரிந்திருந்தசெலுசியப் பேரரசு, பொ.ஆ.மு. 250க்குப் பிறகு வலுவிழந்து சிதையத் தொடங்கியது. பாக்ட்ரியாவின் ஆளுநர் டியோடோடஸ், இரண்டாம் ஆன்டியோகஸை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, பாக்ட்ரியாவின் சுதந்திர அரசரானார். பொ.ஆ.மு. 212இல் இருந்த பாக்டிரிய அரசர், யூதிடெமஸ் ஒரு கிரேக்கராவார். செலுசியப் பேரரசர் மூன்றாம் ஆன்டியோகஸால் இவரை அடிமைப்படுத்த முடியவில்லை. மேலும், மேற்கில் தனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டியதாக இருந்ததால் ஆன்டியோகஸ், அவருடன் ஓர் உடன்படிக்கைச் செய்துகொள்ள ஒப்புக்கொண்டார். எனினும் மூன்றாம் ஆன்டியோகஸ், காபூல் நதி வரையிலும் வந்து, சுபகசேனா என்றறியப்பட்ட பூர்விக இந்திய அரசரைத் தோற்கடிக்க இயன்றது. இவ்வரசனைக் குறித்து மேலதிக விபரங்கள் தெரியவில்லை. இந்தப் பகுதியிலிருந்த ஒரு சுதந்திரமான அரசர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கொண்டு அசோகர் இறந்த பிறகு மௌரியப் பேரரசின் மையப்படுத்தப்பட்ட அதிகாரம் வலுவிழந்ததன் ஓர் அடையாளமாக இதைக் கொள்ளலாம்

டெமிட்ரியஸ்

யூதிடெமஸைத் தொடர்ந்து அவரது மகன் (சுமார் பொ.ஆ.மு. 200இல்) டெமிட்ரியஸ் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தார்; மேலும், மற்றொரு டெமிட்ரியஸ், உத்தேசமாக இரண்டாம் டெமிட்ரியஸ்தான் (சுமார் பொ.ஆ.மு. 175), அறியப்பட்ட முதல் இந்தோ–கிரேக்க அரசராவார். இந்தோ–கிரேக்க அரசர்களின் நேர்த்திமிக்க நாணயங்களே அவர்களின் ஆட்சியை வேறுபடுத்திக் காட்டுகிற அம்சமாகும். கிரேக்க வெள்ளி நாணயங்களின் பாணியில் வடிக்கப்பட்டிருந்த அவை, ஒரு பக்கத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசரின் உருவத்தையும், பெயரையும் தாங்கி இருந்தன. இவ்வாறாக அந்த நாணயங்கள், பல வகையான தலைக் கவசங்களோடு சித்திரிக்கப்பட்டுள்ள, கூடவே தனித்த முக மற்றும் உடல் கூறுகளையும்

11th History Lesson 6 Tamil Medium.indd 88 01-12-2022 19:45:24

டெமிட்ரியஸ் II

கொண்ட அரசர்களின் உருவத்தை நமக்குக் காட்டுகின்றன. இக்காலகட்டத்தைச் சேர்ந்த நாணயங்கள் பெருமளவில் சேகரிக்கப்பட்டுள்ளன; இவற்றைப் பயன்படுத்தி அரச வம்சாவளியை உறுதிப்படுத்துவது சாத்தியமாயிற்று.

அக்காலகட்ட இந்திய வரலாற்றுக் குறிப்புகள், அயோத்தி (சாகேதம்), அதனினும் கிழக்கேயுள்ள மகதம் ஆகிய பகுதிகள் மீதும் யவனர்கள் படையெடுத்து வந்ததைக் கூறுகின்றன. இருப்பினும், கிரேக்கர்கள் தமக்கிடையிலான உட்பூசல்களால் குழப்பத்திலிருந்ததாகத் தெரிவதால், இந்தப் பகுதிகள் எதையும் அவர்கள் கைப்பற்றி தங்கள் வசம் வைத்திருக்கவில்லை. மாறாக, கடைசி மௌரிய அரசனுக்குப் பிறகு ஆட்சியைப் பறித்துக்கொண்ட சுங்கப் பேரரசர் புஷ்யமித்ரனுக்கு நிலங்களை விட்டுக் கொடுத்தனர். டெமிட்ரியஸ் இந்தியாவோடு கொண்டிருந்த தொடர்புகளை நாணயச் சான்றுகளும் நிரூபிக்கின்றன. அவர் வெளியிட்ட சதுர வடிவ இருமொழி நாணயங்களில், முகப்புப் பக்கத்தில் கிரேக்கத்திலும் பின் பக்கத்தில் (வட மேற்குப் பாகிஸ்தானின் உள்ளூர் மொழியான) கரோஷ்டியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சுமார் பொ.ஆ.மு. 165 வாக்கில் பாக்ட்ரியா பார்த்தியர் மற்றும் சாகர் வசமானது. இதன் பின்னர் மத்திய மற்றும் தெற்கு ஆஃப்கானிஸ்தான் பகுதிகள், வடமேற்கு இந்தியா ஆகிய இடங்களில் யவனர்களின் ஆட்சி தொடர்ந்தது. இருப்பினும் ஆட்சி அதிகாரத்துக்கான மோதல்கள் கிரேக்கர் இடையே நீடித்ததால் குழப்பம் தொடர்ந்தது; மேலும், முப்பதுக்கும் அதிகமான அரசர்களின் பெயர்களை அவர்களது நாணயங்களிலிருந்து அடையாளம் காணமுடிகிறது. அவர்கள் அனைவருமே முழுவுரிமை பெற்ற ஆட்சியாளர்களாகச் சிறிய பகுதிகளைச் சுதந்திரமாக ஆட்சி செய்ததோடு, தங்களின் சொந்த நாணயங்களை வெளியிட்டிருப்பதும் சாத்தியமே.

மினாண்டர்

இந்தோ–கிரேக்க அரசர்களிலேயே நன்கறியப்பட்டவரான மினாண்டர் (சுமார் பொ.ஆ.மு. 165/145–130), நாட்டின் வட மேற்கில் ஒரு பெரிய பகுதியை ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. அவரது நாணயங்கள், காபூல், சிந்து நதிகளின் சமவெளிகளிலிருந்து மேற்கு உத்திரப் பிரதேசம் வரையிலுமான விரிந்து பரந்த பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன; மேலும் இது அவரது ஆட்சிப் பரப்பு குறித்த ஒரு நல்ல குறிப்பைத் தருகிறது. அவரது நாணயங்களில் காணப்படுவது போல் அவர் ஒரு மாபெரும், வீரதீரம் பொருந்திய படையெடுப்பாளராகத் தெரியவில்லை என்றபோதிலும் அவர் பாஞ்சாலம் மதுரா அரசர்களோடு சேர்ந்து கங்கைப் பகுதியைச் சூறையாடியதாகக் கூறப்படுகிறது. அவரைக் கலிங்க (ஒடிஷா) அரசர் காரவேலனால் தடுத்து நிறுத்தமுடியவில்லை என்று ஹதிகும்பா கல்வெட்டு கூறுகின்றது. பாடலிபுத்திரத்தை மினாண்டர் வெற்றிகரமாகத் தாக்கியபோதிலும் தனது வெற்றியை நிலைப்படுத்திக்கொள்ளாமல் பின்வாங்கினார். அவரது நாணயங்களில் அவர் ஓர் "அரச"ராக, இரட்சகராக, மீட்பராக விவரிக்கப்பட்டுள்ளாரே தவிர ஒரு மாபெரும் வெற்றி வீரனாக விவரிக்கப்படவில்லை.

மிலிந்த–பன்ஹா (மிலிந்தவின் வினாக்கள்) எனும் பௌத்தப் பிரதியில்தான் மினாண்டர் ஒரு பெருமைக்குரிய தலைவராக அறியப்படுகிறார். அதில் ஆசிரியர் நாகசேனருடன் பௌத்தம் குறித்த ஒரு கேள்வி–பதில் விவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் ஒரு பௌத்தராகி, பௌத்தத்தை ஊக்குவித்ததாக நம்பப்படுகிறது.

மினாண்டர்

இந்தோ–கிரேக்க அரசர்களில் நன்கு அறியப்பட்ட மற்றொருவர் ஆன்டியால்சைடஸ் அல்லது ஆன்டியால்கிடாஸ் (சுமார் 110 ஆம் ஆண்டு) குறித்த தகவல்களை நாம் அறிவதற்கு இவரது தூதர் ஹீலியோடோரஸ் என்பவரே காரணம். இவர் பாகபத்ர அரசரின் அரசவைக்குத் தூதராக அனுப்பப்பட்டார். ஹீலியோடோரஸ் அங்கு ஒரு தூணை நிறுவினார். தூணின் தலைப் பகுதி கருட உருவத்தை கொண்டது. கருட–துவஜ என்று அழைக்கப்பட்ட, வைணவக் கடவுள் கிருஷ்ணனுக்கு மரியாதை செய்யும்விதமாக இத்தூண் அமைக்கப்பட்டது. ஹீலியோடோரஸ் வைணவராக மாறியதாய் தெரிகிறது. (மத்திய பிரதேசம், விதிஷாவில் திறந்தவெளி மைதானத்தின் நடுவே அந்தத் தூண் காணப்படுகிறது).

11th History Lesson 6 Tamil Medium.indd 89 01-12-2022 19:45:24

கிரேக்கருடனான இந்தியத் தொடர்பு வெறும் இந்தோ-கிரேக்க அரசர்களுடனானது மட்டுமல்ல. மாறாக, துணைக்கண்டம் முழுவதும் கிரேக்கர் பிரபலமாகி இருந்தனர். அவர்களது இருப்பு குறித்த தகவல்கள் துணைக்கண்டம் முழுவதும் பதிவாகியுள்ளன. கிரேக்க வணிகர்கள், மாலுமிகள், மற்றும் பிறர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டனர். அதனால் கிரேக்கர்களுடனான தொடர்பு தொடர்ந்தது.

6.2 சாகர், பார்த்தியர், குஷாணர்

வடமேற்கு இந்தியாவிலிருந்த இந்தோ-கிரேக்க அரசுகள், சாகர் (சித்தியன்கள்), பார்த்தியர் (பஹ்லவிகள்), குஷாணர் (சீனத்தில் யுயி-சி அல்லது யுயசி (yueh-chi or yuezhi) இனக்குழுக்கள்) என்றறியப்பட்ட பல்வேறு மத்திய ஆசிய நாடோடி இனக்குழுக்களால் அகற்றப்பட்டன. அவர்கள், கிரேக்கர்களின் பழக்கத்தைப் பின்பற்றி தங்களின் பெயர்களையும் பட்டங்களையும் (பெரும்பாலும் "அரசர்களின் அரசன்") கொண்ட நாணயங்களைப் பெருமளவில் வெளியிட்டனர். இருந்தபோதிலும் நமது வரலாற்றில் இது ஒரு குழப்பம் மிகுந்த காலமாகும். இந்தியாவுக்கு வந்து ஆட்சி அமைத்த பல்வேறு இனக்குழுக்களின் அரச பரம்பரையின் வம்சாவளிகளை கண்டறிவது ஒரு சவாலான பணியாகும்.

முதலில் எழுகின்ற கேள்வி யாதெனில், நாடோடிப் பழங்குடியினராக இருந்தவர்கள் ஏன் எப்படி போர் செய்பவர்களாக, கைப்பற்றுபவர்களாக மாறினார்கள். மத்திய ஆசியாவில் நடைபெற்ற சிக்கலான, அடுத்தடுத்து நடந்த அரசியல் நிகழ்வுகள் மற்றும் குடிபெயர்வுகளின் விளைவாக இப்பழங்குடியினரின் இந்திய வருகை நிகழ்ந்தது. மத்திய ஆசியாவின் கிழக்குப் பகுதியில், நாடோடி இனத்தவரின் சூறையாடல்களைத் தடுக்கவும், சூறையாடல்களிலிருந்து தங்கள் கிராமங்களையும் வேளாண்மையையும் காத்துக்கொள்ளவும் சீனர்கள் பெருஞ் சுவரைக் கட்டினர். இதனால் யுயி-சி எனும் பழங்குடி மக்கள் மேற்கு நோக்கித் தள்ளப்பட்டனர். அப்பகுதியில் வசித்த சாகர்களைக் கிழக்கு ஈரானுக்குத் தள்ளினர். அங்கு செலுசியப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பார்த்தியர் ஆட்சி அமைத்திருந்தனர்.

சாகர்கள்

கிழக்கு ஈரானிலிருந்து பார்த்திய ஆட்சியாளர் மித்ரடேட்ஸால் வெளியே தள்ளப்பட்ட சாகர்கள், பிறகு வடமேற்கு இந்தியாவை நோக்கித் திரும்பி, இறுதியில் சிந்துவெளிக்கும் சௌராஷ்டிரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் குடியமர்ந்தனர். இந்தியாவின் முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் அல்லது மொ/மொகா (தோராயமாக, பொ.ஆ.மு.80) ஆவார். காந்தாரத்தைக் கைப்பற்றிய அவர், இந்தோ-கிரேக்க அரசுகளுக்கிடையே ஒரு பிளவை ஏற்படுத்தினார் என்றாலும் அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அஸிதான் இந்தோ-கிரேக்க அரசாட்சிகளின் கடைசி மிச்சங்களை இறுதியாக அழித்து, கிழக்கே மதுரா வரையிலும் சாகர்களின் ஆட்சியை விரிவுபடுத்தினார்.

இந்தியாவில் சாகர்கள், இந்து சமூகத்துக்குள் இரண்டறக் கலந்துவிட்டனர். இந்துப் பெயர்களையும் மதநம்பிக்கைகளையும் கைக்கொள்ளத் தொடங்கினர். அவர்களது நாணயங்களின் ஒரு பக்கத்தில் இந்துக் கடவுளர்களின் உருவம் பொறிக்கப்பட்டது. சாகர்கள் தங்களின் ஆட்சிப் பகுதிகளை நிர்வகிக்க சத்ரப்களை மாகாண ஆளுநர்களாக நியமித்தனர். சத்ரபாக்கள் பலரும் தங்களுக்கு மஹாசத்ரபாக்கள் எனப் பட்டம் சூடிக்கொண்டதோடு, நடைமுறையில் சுதந்திர ஆட்சியாளர்களாயினர்.

புகழ்பெற்ற சாக சத்ரப்களில் ஒருவர்தான் ருத்ரதாமன் (பொ.ஆ. 130 முதல் 150). புகழ்பெற்ற ஜுனாகத் பாறைக் கல்வெட்டில் (குஜராத்) அவரது வெற்றிகள் போற்றப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின்படி, சாதவாகனர்களையும் கூட அவர் போரில் தோற்கடித்துள்ளார். இவர் காலத்தில் சாகர்கள் இந்திய சமூகத்தோடு இணைந்து கலந்துவிடும் செயல்முறையானது முழுமையடைந்து விட்டதை இவரது பெயரே சுட்டிக் காட்டுகிறது.

ருத்ரதாமனின் ஜுனாகத் பாறைக் கல்வெட்டு

குஷாணர்

காபூலை முதலில் கைப்பற்றிய (சுமார் பொ.ஆ. 43) பார்த்திய கோண்டோபெர்னெஸ் என்பவரால் சாகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். காபூல் பள்ளத்தாக்கைக் குஷாணரிடம் அவர் இழந்தார் என்றாலும் இந்தியாவில் சாகர்களை எதிர்த்து அதிக வெற்றி பெற்றது அவர்தான். அவரது

11th History Lesson 6 Tamil Medium.indd 90 01-12-2022 19:45:25

ஆட்சி குறித்த பதிவுகள் பெஷாவர் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பார்த்தியருக்கு எதிராக தங்களுக்கு உதவுமாறு சாகர்கள், குஷாணர்களை (யுயி–சி) அணுகினர். ஆப்கானிஸ்தானை வென்றடக்கிய முதல் குஷாண அரசர், குஜிலா காட்பிசெஸ் ஆவார். அவரைத் தொடர்ந்து வந்தவர் விமா காட்பிசெஸ். இவ்விரு அரசர்களும் குஷான ஆட்சிப் பகுதியைக் காந்தாரத்துக்கும் பஞ்சாபுக்கும் கிழக்கே மதுரா வரையில் கங்கை யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதிக்கும் விரிவுபடுத்தினர்

கனிஷ்கர்

குஷாண அரசர்களில் நன்கு அறியப்பட்டவர் கனிஷ்கர் ஆவார். பொ.ஆ. 78 தொடங்கி பொ.ஆ. 101 அல்லது 102 வரையிலும் ஆட்சி புரிந்ததாகக் கருதப்படுகிறது. இந்திய நாள்காட்டியில் சக சகாப்தத்தின் தொடக்கமாக பொ.ஆ. 78 கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் கனிஷ்கரின் காலம் பற்றி வரலாற்றாளர்கள் மாறுபடுவதோடு அவரது ஆட்சி, பொ.ஆ. 78க்கும் பொ.ஆ. 144க்கும் இடையில் எப்போதோ தொடங்கியதாகக் கூறப்படுகிறது. ஆர்வமிக்க ஒரு பௌத்த ஆதரவாளரான கனிஷ்கர், நான்காம் பௌத்த மகாசங்கத்தை கூட்டிய புரவலர் ஆவார். (மூன்றாம் மகாசங்கம் அசோகரின் ஆட்சி காலத்தில் பாடலிபுத்திரத்தில் நடந்தது.) இக்காலத்தில் மஹாயான பௌத்தம் மேலாதிக்கம் செலுத்தும் பிரிவாகியிருந்தது. பௌத்தத்தைப் போதிப்பதற்காகச் சீனாவுக்கு அனுப்பப்பட்ட மதப் பரப்புநர்களைக் கனிஷ்கர் ஆதரித்தார்.

கனிஷ்கர்

கனிஷ்கர் நாணயம்

குஷாணரின் நாணயங்கள் உயர்ந்த தரமுள்ளவை என்பதோடு ரோமானிய நாணயங்களின் எடைத் தரங்களுக்கு ஒத்திருந்தன. அவை குஷாண ஆட்சியாளர்களை "அரசர்களின் அரசர்", "ஸீசர்", "அகிலத்தை ஆள்பவன்" என்பன போன்ற பிற பட்டப் பெயர்களால் குறிப்பிடுகின்றன. அதே நேரம், இந்த நாணயங்களில் அரசர்களின் உண்மையான பெயர்கள் அதிகமாக இடம் பெறவில்லை. எனவே குஷாண அரசர்கள் குறித்து நமக்குக் கிடைத்துள்ள தகவல்கள் மிகவும் உறுதியற்றவனவாக உள்ளன. கனிஷ்கரின் நாணயங்களும் கூடவே மதுரா அருகே காணப்படும்

11th History Lesson 6 Tamil Medium.indd 91 01-12-2022 19:45:26

அவரது சிலையும் அவர் மத்திய ஆசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதற்குச் சான்று கூறும் விதத்தில், வார் பூட்டிய அங்கி, நீண்ட மேலங்கி, காலணிகளும் அணிந்தவராகக் காணப்படுகிறார்.

சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து மேற்கொண்ட, 1979ஆம் ஆண்டு நிறைவு பெற்ற, காரகோரம் நெடுஞ்சாலைத் திட்டம், தொல்லியலாளர்களுக்கும் வரலாற்றாளர்களுக்கும் பெரும் பலன்களை அளித்துள்ளது. ஹுஸ்னா பாறைக் கல்வெட்டு முதல் இரண்டு காட்பிசெசுகள் குறித்து குறிப்பிடுவதுடன், குஷாண தேவபுத்ர (கடவுள் மகன்), மஹாராஜா என்று கனிஷ்கர் குறித்தும் சுட்டப்படுகிறது. கனிஷ்கரின் பேரரசு மத்திய ஆசியா முதல் கிழக்கு இந்தியா வரை பரவி, விரிந்திருந்ததை இந்தக் கல்வெட்டு உறுதிசெய்கிறது. அவர், மகதத்தையும் காஷ்மீரையும் கூடவே சின்கியாங்கிலுள்ள கோடனையும் கைப்பற்றியதாக பௌத்த சான்றுகள் பதிவுசெய்துள்ளன.

காரகோரம் நெடுஞ்சாலை நெடுகிலும் கண்டெடுக்கப்பட்ட கலைப் பொருள்கள், பௌத்தத்தைப் பரப்புகிற தங்களின் பணிக்காகப் பௌத்தத் துறவிகள் சீனாவுக்குச் சென்றது இச்சாலையில்தான் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. பௌத்த மதத் துறவிகளைப் பின்பற்றி வணிகர்களும் இச்சாலை வழியாகச் சென்றுள்ளனர். இதனால், சீனாவிலிருந்து பட்டு, மேற்காசிய நாடுகளிலிருந்து குதிரைகள் ஆகியனவற்றை இந்தியா இறக்குமதி செய்ய இச்சாலை ஒரு முக்கிய வணிக வழியாக மாறியது. மேற்கு நாடுகளின் வணிகர்கள் மத்திய ஆசியாவுக்கு அப்பால் மேலும் கிழக்கே செல்ல விரும்பவில்லை. இந்திய வணிகர்கள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மத்திய ஆசியாவின் பல்வேறு நகரங்களில் தங்களை நிறுவிக்கொண்டு, சீனாவுக்கும் ரோமானியப் பேரரசுக்கும் இடையேயான ஆடம்பரப் பொருள் வணிகத்தில் இடைத்தரகர் ஆவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டனர்.

பெரும்பாலும் 'ஷ்க' என்று முடிகிற பெயர்களைக் கொண்ட (இவர்களுள் ஹுவிஷ்கா, வசிஷ்கா, கூடவே பிந்தைய கனிஷ்கர்களும் ஒரு வாசுதேவர் உள்ளிட்ட) குஷாண அரசர்கள் குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆட்சி செய்தனர் என்றாலும் அவர்கள் குறித்து அதிகம் தெரியவில்லை. பேரரசு, சிதையத் தொடங்கியது என்பது தெளிவு என்பதோடு சத்ரப்கள் (மாகாணங்களை ஆள்வதற்கு சத்ரப்களை நியமிக்கும் வழக்கத்தைக் குஷாணரும் தொடர்ந்தனர்), பல்வேறு மாகாணத் தலைநகரங்களில் தங்களைச் சுதந்திரமான ஆட்சியாளர்களாக அமைத்துக்கொள்ள முடிந்தது.

கலையும் இலக்கியமும்

குஷாணர் காலத்தில் நிலவிய பெருமளவிலான படைப்பாற்றலின் காரணமாகக் கலையும் இலக்கியமும் செழித்திருந்தன. அரசர்கள் நல்கிய ஆதரவும் இதற்கு ஓரளவிற்குக் காரணமாகும். மஹாயான பௌத்த மத வளர்ச்சி போன்றவை பிற காரணங்களாகும். மஹாயான பௌத்த மதம் புத்தரை மனித வடிவில் சித்தரிப்பதை அனுமதித்தது. சிலை வடிப்புக் கலையில் கிரேக்க தாக்கத்தின் காரணமாக இந்திய–கிரேக்கக் கூறுகள் ஒன்றிணைந்து புதிய முறை உருவானது. அது பொதுவாகக் காந்தாரக் கலை என்றழைக்கப்படுகிறது. இது இந்தோ–கிரேக்க பாணியிலான சிற்பங்களும் கலையும் தோன்றுவதற்கு வழிவகுத்தது. குறிப்பாக, தட்சசீலத்திலும் வட–மேற்குப் பகுதிகளிலும் செதுக்கப்பட்ட புத்தரின் சிலைகள், கிரேக்க மரபால் ஊக்கம் பெற்று, கண்ணியமான ஆடைகளில், தேவ தூதர்களாலும் இலைகளாலும் சூழப்பட்டுள்ளதாக அவரைக் காட்டுகின்றன. எனினும், மதுரா அருகே செம்மணற்கல்லில் நுட்பமாக செதுக்கப்பட்டுள்ள பல சிற்பங்களையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

காந்தாரச் சிற்பம்

அஜந்தா குகைகள் முதல் மும்பையில் கன்ஹேரி குகைகள் வரை பௌத்தர்கள் மேற்கிந்தியாவிலுள்ள குன்றுகளில் பாறைகளைக் குடைந்து குகைகளை அமைத்தனர். விகாரங்களையும்

காந்தாரக் கலை : பண்பாட்டுத் தாக்கங்கள் சங்கமிக்குமிடத்தில் அமைந்துள்ள காந்தாரம் கிரேக்க மற்றும் ரோமானியப் பண்பாடுகளின் செல்வாக்குக்கும் உட்பட்டது. பொ.ஆ. முதல் நூற்றாண்டில் காந்தாரக் கலை வடிவங்கள் வளர்ச்சியடைந்தன. குஷாணப் பேரரசுக் காலத்தில், ரோமுடனான அதன் தொடர்புகளினால் ரோமானியக் கலை நுட்பங்கள் இந்தியக் கலை நுட்பங்களோடு கலந்து, வட மேற்கு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டன. ஆன்ம நிலையில் – கண்கள் பாதி மூடிய நிலையில் – தியானத்திலிருக்கிற புத்தரைச் சித்தரித்ததற்காகக் காந்தாரக் கலை புகழ்பெற்றது.

11th History Lesson 6 Tamil Medium.indd 92 01-12-2022 19:45:26

சைத்தியங்களையும் கொண்டிருந்த அவை பௌத்த மத மையங்களாக செயல்பட்டன. இவ்வாறான குகைகள் மஹாயான மரபின் ஒரு பகுதியாக இந்தக் குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் செதுக்கப்பட்டன. மேலும் பிந்தைய நூற்றாண்டுகளில் அவை, அஜந்தா குகைகளில் காணப்படுவதைப் போல அசாதாரண அழகுள்ள சுவர்ச் சித்திரங்களால் மேலும் ஒப்பனை செய்யப்பட்டன.

பௌத்த ஆசான் நாகார்ஜுனர், பௌத்தத் தத்துவஞானிகள் அஸ்வகோஷர், பார்ஸ்வர், வசுமித்திரர், போன்றோரின் புரவலராகப் பேரரசர் கனிஷ்கர் திகழ்ந்தார். அஸ்வகோஷர், அவரது புத்தசரிதம் நூலுக்காகப் புகழ்பெற்றவர் என்பதோடு ஒன்பது காட்சிகளில் அமைந்த சரிபுத்ரப்ரகரண என்ற முதல் சமஸ்கிருத நாடகத்தின் ஆசிரியர் என்பதற்காகவும் போற்றப்படுகிறார். மாபெரும் நாடகாசிரியர் பாசன், பெரும்பாலும் இந்தக் காலத்தைச் சேர்ந்தவராவார். பாசன் எழுதிய நாடகங்கள் சென்ற நூற்றாண்டில்தான் மறு கண்டுபிடிப்பு செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்து மத நூல்களில் மனுஸ்மிருதி, வாத்சயாயனரின் காமசூத்ரம், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் ஆகிய நூல்கள் இதே பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில்தான் இறுதிவடிவம் பெற்றன என்பதையும் அறிகிறோம்.

6.3 தமிழக அரசாட்சிகள்

சாதவாகன அரசர் கௌதமிபுத்ர சதகர்னி

நாட்டின் வட பகுதியில் நிகழ்ந்துவந்த அரசியல் மாறுதல்களால் தென்னிந்தியா பாதிக்கப்படாமல் இருந்தது. பொ.ஆ. முதல் நூற்றாண்டு வாக்கில், நவீன ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தக்காணப் பகுதியில் சாதவாகன ஆட்சி நிறுவப்பட்டது. எனினும் இது, மௌரியர்களின் மையப்படுத்தப்பட்ட பேரரசைப் போல இருக்கவில்லை. அதோடு சாதவாகனர்களின் மாகாண ஆட்சியாளர்கள் கணிசமான அளவுக்குத் தன்னாட்சி உரிமை பெற்றிருந்தினர்.

வடக்கே பேரரசுகள் விரிந்து பரந்த பேரரசுகள் தழைத்தோங்கியதற்கு மாறாக, தமிழ்ப் பகுதியின் அரசியல் நிலப்பரப்பு சிறு சிற்றரசுகளாகத் துண்டுபட்டிருந்தது. தமிழ்ப் பகுதி, மதுரையைத் தங்களின் தலைநகராகக் கொண்டு பாண்டியர், உறையூரைத் (தற்போதைய திருச்சியின் ஒருபுற நகர்) தங்களின் தலைநகராகக் கொண்டு சோழர், வஞ்சியிலிருந்து (நவீன கால கரூர் நகரம்) சேரர் என மூவேந்தர்களால் ஆளப்பட்டது. பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே மௌரிய அரசர்கள் தமிழ் மூவேந்தர்களை அறிந்திருந்தனர் என்பது நாமறிந்ததே. மேலும் அசோகரின் இரண்டாவது பாறைக் கல்வெட்டாணை அவர்களைத் தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசுகள் என்று குறிப்பிடுகிறது. மேலும், அவற்றுடன் சிறிய பகுதிகளை ஆட்சி செய்த பல போர்ப் பிரபுக்களும் சிற்றரசர்களும் (இவர்கள் வேளிர் எனக் குறிப்பிடப்படுவோர்) இருந்தனர்.

பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சேர்ந்த, சங்க இலக்கியம் என்று அறியப்படுகிற தமிழ் இலக்கியங்களின் தொகுப்பிலிருந்து தமிழ்ப் பகுதி குறித்த விரிவான தகவல்களை பெறமுடிகிறது. இவற்றுடன் ஓரளவு பிற்காலத்தில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். தமிழ்ப் பகுதியுடன் மேற்கொள்ளப்பட்ட மிக பெருமளவிலான வணிகம் ரோமானிய, கிரேக்க வரலாற்றாளர்களிடத்திலும் புவியியலாளர்களிடத்திலும் ஒரு பெரும் ஆர்வத்தைத் தூண்டியது; மேலும் அவர்களின் விவரங்கள், தமிழ் சான்றுகளில் விடுபட்டுள்ள, குறிப்பாக வணிகம் தொடர்பான தகவல்களை நிறைவு செய்வதாக அமைகிறது. பொ.ஆ. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கிரேக்க வரலாற்று ஆவணமாக "எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ்" (Periplus of the Erythrean Sea) (PeriplusMarisErythreai) இந்தியக்கடற்கரையிலிருந்த துறைமுகங்கள், அங்கு நிகழ்ந்த வணிகம் ஆகிய தகவல்களை வழங்கும் மிகவும் நம்பகத்தன்மை கொண்ட சான்றாகும். தொல்லியல் கண்டுபிடிப்புகள் இந்தச் சான்றுகள் அனைத்திலிருந்தும் பெறப்பட்ட தகவல்களை உறுதிசெய்கின்றன.

பன்னாட்டு வணிகத்தின் வரையறைகள்

பொது ஆண்டின் தொடக்க வாக்கில் இரண்டு முக்கியமான வளர்ச்சிகள், ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்குமான வணிகத்தின் வரையறைகளை மாற்றியமைத்தது. பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில், கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக் கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது. மேலும் ரோமானியக் குடியரசு, பொ.ஆ.மு. 27இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று. அநேகமாக, ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் பெற்ற வெற்றிகள் மூலம் குவித்திருந்த மிகப் பெரும் செல்வங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ரோம்தான் உலகிலேயே ஆகப் பெரியதும்

11th History Lesson 6 Tamil Medium.indd 93 01-12-2022 19:45:26

ரோம வணிகக் கப்பல்

செல்வச் செழிப்பு மிக்கதுமான நகரமாகும். ரோமின் செல்வச் செழிப்பு, இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு பொருள்களின், குறிப்பாக தமிழ் நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் துணி வகைகளின், தேவையை அங்கு பெருமளவிற்கு அதிகரித்து ஒரு பெரும் வணிக விரிவாக்கத்தை ஏற்படுத்தியது.

பொ.ஆ. முதல் நூற்றாண்டில், எகிப்தியக் கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளைக் கண்டறிந்தார். இது இரண்டாவது வளர்ச்சியாகும். அது வரை, இந்தியாவுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையிலான கடல் வணிகம், அரபியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. மேலும், ரோமாபுரிக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட இலவங்கப்பட்டை போன்ற பொருள்களின் உற்பத்தி மையங்கள் தென்னிந்தியாவில் எங்கிருந்தன என்பதைப் பற்றிய அறிவை அரபியர்களே ஏகபோகமாக கொண்டிருந்தனர். ஆனால் நேரடி கடல் வழி குறித்த தகவல் அனைவருக்கும் தெரிந்த செய்தியாக ஆன போது, ரோமானியக் கப்பல்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு நேரடியாகப் பயணிக்கத் தொடங்கின. இதனால் அவர்கள், கடற்கொள்ளையர்களின் பயம் நிறைந்த, பயண வழிகளைத் தவிர்க்க முடிந்தது. மேலும் தரை வழித் தடமும் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டது. ஏனெனில், தரை வழித் தடத்தில் வணிகர்கள், இரானில் பார்த்தியரின் தாக்குதலுக்குள்ளாகும் வாய்ப்பு இருந்தது. அதிகரித்த வண்ணமிருந்த ரோமானியரின் தேவைகளும், இந்தியாவிற்கான நேரடி கடல் வழி திறப்பும் இணைந்ததின் இறுதி விளைவாக இந்தியாவிற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்ந்தது. ஆண்டொன்றுக்கு இருபது கப்பல்கள் என்பதிலிருந்து ஏறக்குறைய அன்றாடம் ஒரு கப்பல் என்பதாக அதிகரித்தது.

6.4 தமிழகத்துக்கும் ரோமுக்கும் இடையிலான வணிகம்

ரோம் ஒரு குடியரசாக இருந்தபோதே ரோமுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலான வணிகம் செழித்திருந்தது. அக்காலத்தைச் சேர்ந்த ரோமானிய நாணயங்களும் கலைப் பொருள்களும், "இந்தோ–ரோமானிய வணிக நிலையம்" என்று கூறப்பட்டுவந்த, புதுச்சேரிக்கு அருகேயுள்ள அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பொது ஆண்டு முதல் நூற்றாண்டுக்கு முன்னர் ரோமானியக் கப்பல்கள், இந்தியாவின் மேற்குக் கரையைத் தாண்டிக் குமரி முனையைச் சுற்றிக்கொண்டு பயணப்பட முயலவில்லை. எனவே, மேற்குக் கரையிலிருந்த துறைமுகங்களே இவ்வணிகத்தில் ஈடுபட்ட முக்கியமான துறைமுகங்களாக இருந்தன. மேற்குக் கரையிலிருந்து, ரோமானிய வணிகர்கள் நிலவழியே பாலக்காடு கணவாயைக் கடந்து கிழக்கேயுள்ள உற்பத்தி மையங்களுக்கு வந்தனர். கொடுமணல் (ஈரோடு), படியூர் (திருப்பூர்), வாணியம்பாடி (வேலூர்) ஆகிய இடங்களில் ரோம் நாட்டில் அதிக தேவையில் இருந்த ஒரு நவரத்தினக் கல்லான கோமேதகம் கிடைக்கிற சுரங்கங்களிருந்தன. மேலும், ஈரோடு அருகேயுள்ள சென்னிமலையில், உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் எஃகும் ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. (உருக்காலை மற்றும் உருக்கு எச்சங்கள் இங்கே அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.) இதனால்தான் முற்பட்ட காலத்திய ரோமானிய நாணயங்கள், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிக அளவில் கிடைப்பதைக் காண்கிறோம்.

பொ.ஆ. முதல் நூற்றாண்டின் முடிவில், ரோமானியக் கப்பல்கள் தமிழகத்தின் கோரமண்டல் [சோழ மண்டலம் என்பதன் திரிபு] எனப்படும் கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் பயணிக்கத் தொடங்கின. மேலும் இந்தத் துறைமுகங்களில் பலவும் பெரிப்பிளஸ் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த முக்கியத் துறைமுகங்கள் நவுரா (கண்ணனூர்), தொண்டி (பொன்னானி) ஆகியனவாகும். இவை சேர மன்னர்களால் ஆளப்பட்ட தமிழ் நிலப்பரப்பின் வடக்கு எல்லையில் அமைந்திருந்ததாகச் சொல்லப்பட்டது. முசிறி அல்லது முசிரிஸ் என்பது மேலும் தெற்கே அமைந்திருந்த ஒரு முக்கியத் துறைமுகமாகும். இது, பாரம்பரியமாகக் கொடுங்களூர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அண்மையில் முசிறியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு, இத்துறைமுகம், ஒரு சில கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள பட்டணம் என்னும் ஊரில் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. அநேகமாக மேற்குக் கடற்கரையில் இருந்த துறைமுகங்களில் மிகவும் பரபரப்பான

11th History Lesson 6 Tamil Medium.indd 94 01-12-2022 19:45:27



முசிறி பாப்பிரஸ் ஆவணம்

வணிக மையம் முசிறியாகும். முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்கும் அலெக்சாண்ட்ரியாவைச் சேர்ந்த ஒரு வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. கோரைப்புல் தாளில் எழுதப்பட்ட அந்த ஒப்பந்தம், தனி வணிகர்களாலும்கூடப் பெருமளவிலான சரக்குகள் கப்பலில் கொண்டு செல்லப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது. சங்கப் பாடல்களின்படி முசிறி நகரம் இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக இருந்துள்ளது. நாட்டின் உள்பகுதிகளிலிருந்து அரிசியை ஏற்றிவந்த படகுகள், திரும்பிச் செல்கையில் மீன்களை ஏற்றிச் சென்றன; இது, அடிப்படையான நுகர்வுப் பொருள்களின் வணிகத்தில் பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டதைச் சுட்டுகிறது. அதே நேரத்தில், சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட கருமிளகு மூட்டைகள், கப்பலில் வந்த தங்கத்திற்குப் பண்டமாற்று செய்துகொள்ளப்பட்டு, பின் அத்தங்கம் படகுகளில் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தியாவிலிருந்து ரோமுக்குச் சென்ற கப்பல்கள், மிளகு, அதிக அளவில் முத்துகள், தந்தம், பட்டுத் துணி, செல்வமிக்க ரோமானியர்களிடையே தனிப் பயன்பாட்டுக்கென மிகுதியாக தேவைப்பட்ட ஒருவகை நறுமணத் தைலமான கங்கைப் பகுதியிலிருந்து தருவிக்கப்பட்ட விளாமிச்சை வேர்த் தைலம், இலவங்கப் பட்டை மர இலையான தாளிசபத்திரி எனும் நறுமணப் பொருள், நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமை ஓடு ஆகியவற்றைச் சுமந்து சென்றன. ரோமானியக் கப்பல்கள் சோழமண்டலக் கடற்கரையுடன் வணிகத்தைத் தொடங்கியதும், இந்தப் பகுதியின் நேர்த்தியான பருத்தித் துணிகளும்கூட முக்கியமான ஏற்றுமதிப் பண்டமாயின. ரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான பொருள்கள்: நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மது வகைகள் ஆகியனவாகும். தமிழ்ப் பகுதியிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு, ரோமிலிருந்து இறக்குமதியான பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் மிக அதிகம் என்பதோடு, பொ.ஆ. முதல் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில், பேரரசர் டைபீரியஸ் ஆட்சியின் போது வணிகத்தின் அளவு உச்சத்தை எட்டியது. அதிகரித்துவந்த வணிகச் சமமின்மையை நாணயங்களையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் சமப்படுத்துவது கவலைக்குரிய ஒரு விசயமாயிற்று. ஒவ்வோராண்டும் இந்தியாவுடனான வணிகத்தால் ரோமாபுரிக்கு 55 மில்லியன் செஸ்டர்செஸ் (பண்டைய ரோமானியப் பணம்) இழப்பு ஏற்பட்டது என்றொரு புகார் எழுந்தது. இறுதியாக, பேரரசர் வெஸ்பேசியன் ரோம் நாட்டுச் செல்வ வகுப்பினரின் ஆடம்பரப் பொருள் நுகர்வைத் தடை செய்து சட்டமியற்றினார்; அதையடுத்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்புடைய பண்டங்களாக பருத்தித் துணிகள், மிளகு ஆகியவை மட்டுமே என்றாயிற்று.

பாரம்பரியத் தரை வழிப்பாதையான பட்டுப் பாதை வழி வணிகம் மேற்கொள்வது ஆபத்தானதாக ஆகிவிட்டதால் வணிகப் பாணியில் மேலும் ஒரு மாறுதல் தோன்றியது. சீனாவிலிருந்து பட்டுத் துணியும் நூலும் கடல் வழியே சோழமண்டல துறைமுகங்களுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அவை மீண்டும் கப்பல்களில் ஏற்றப்பட்டு ரோமுக்கு அனுப்பப்பட்டன. தென் கிழக்கு ஆசிய நாடுகள், தூர கிழக்கு ஆசிய நாடுகளோடான தமிழ்ப் பகுதியின் வணிக உறவுகள் குறித்து கிடைக்கும் தகவல்கள் மிகச் சொற்பமே. இருப்பினும் ஆமை ஓடுகள் (ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கியமான பொருள்), இந்தியப் பெருங்கடலில் மலேயாவுக்கு அருகிலுள்ள தீவுகளிலிருந்து பெறப்பட்டது. அதே நேரத்தில், சீனத்திலிருந்து பட்டு இறக்குமதியானது. ஏறக்குறைய தமிழ் நாட்டின் நீட்சியாகத் தமிழ் இலக்கியங்களில் சித்தரிக்கப்படும் ஜாவா மற்றும் இலங்கையுடன் நிரந்தரத் தொடர்பும் இருந்தது. அநேகமாக பௌத்த மதம் இணைப்புச் சங்கிலியாக இருந்து, இந்த நாடுகளை இணைத்திருக்க வேண்டும்.

அயல்நாட்டு வணிகர்கள் (யவனர்)

கடல் கடந்த வணிகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் விரிவாக்கம் அயல்நாடுகளின் வணிகர்களையும் கடலோடிகளையும் தமிழ்ப் பகுதிக்கு அழைத்து வந்தது. பருவக் காற்றுகளின் காலமுறை இயல்பு, மற்றும் நடப்பிலிருந்த தொழில் நுட்பங்களின் இயல்புகள், நீண்ட கடற்பயணங்கள்,

11th History Lesson 6 Tamil Medium.indd 95 01-12-2022 19:45:27

ஆகியவை வணிகம் செய்யச் சென்ற நாடுகளில் நெடுநாள்கள் தங்கியிருப்பதை அவசியப்படுத்தின. இந்த அயல்நாட்டு வணிகர்களின் இருப்பைத் தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட விதத்தில் சுவாரஸ்யமான செய்திகளைக் காண்கிறோம். சோழமண்டலக் கடற்கரையில் இருந்த மிக முக்கியமான துறைமுகம் புகார் (பூம்புகார்) ஆகும். இங்கே யவன வணிகர்கள், துறைமுகப் பகுதியில் குறிப்பாக அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த குடியிருப்புப் பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள், சுதந்திரமாக வணிகம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். தமிழக மக்களால் இவர்கள் வெளியாட்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும், கடினமாக ஒலிக்கின்ற ஒரு மொழியைப் பேசுபவர்களாகவும் கருதப்பட்டனர். இதனால் அவர்களுடன் தமிழ்ப்பகுதி மக்கள் தயக்கத்துடன் பழகினர்.

வணிகர்களுடன் பிற யவனர்களும் வந்தனர். மதுரையிலிருந்த கோட்டை, பெரிய வாள்கள் தாங்கிய யவனர்களால் பாதுகாக்கப்பட்டது. யவன உலோகப் பணியாளர்களையும் மரவேலை செய்பவர்களையும் பற்றிய குறிப்புகளும் உள்ளன; அநேகமாக, அவர்களது கண்கள் சாம்பல் அல்லது நீல நிறத்தில் இருந்ததால் வன்கண் யவனர் எனச் சுட்டப்பட்டுள்ளனர். இச்சொல், கிழக்கத்திய மத்திய தரைக் கடல் பகுதிகளிலிருந்து வருகை தந்த அனைவரையும் குறிக்கிற ஒரு பொதுப் பெயராகிப்போனது. யவனர் என்ற சொல்லுக்கு கிரேக்கர்கள் என்ற பொருள் இருப்பதினால் மட்டுமே இவர்கள் அனைவரும் கிரேக்கர்கள் என முடிவு செய்ய இயலாது.

வணிகமும் பொருளாதாரமும்: விரிவான விவரங்கள்

இக்காலகட்டத்தில் வணிகம் மிகப் பெருமளவில் விரிவடைந்தது என்பது உண்மை. இத்தகைய சாதனையானது, பொருளாதார உற்பத்தியின் அடித்தளத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களின் காரணமாகவே எட்டப்பட்டிருக்க வேண்டும். கோமேதகம் போன்ற வெட்டியெடுக்கப்பட்ட நவரத்தினக் கற்கள் போன்ற முதல்நிலை உற்பத்திப் பொருள்கள் விஷயத்தில் கூட, அதிகரித்த தேவை சுரங்கத்தில் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலை செய்வதையும், அதிக கருவிகளையும் அதிக மூலதனத்தையும் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். துணிகளைப் பொறுத்தமட்டில், நெசவுச் செயல்பாட்டிலும் நெசவுக்கான நூலைத் தயாரிக்கிற நூற்பு போன்ற துணைச் செயல்பாடுகளிலும், மேலும் ஒருக்கால் கச்சாப்பொருளின் விநியோகத்தை அதிகரிப்பதற்காக அதிக பருத்தியை விளைவிப்பதிலும் ஒரு கணிசமான பெருக்கம் இருந்திருக்கவேண்டும். வளர்ந்து வருகிற வணிகம் இவ்வாறாக ஒரு கணிசமான அளவில் பொருளாதார விரிவாக்கத்துக்கு இட்டுச்சென்றிருக்கும்.

வணிகம் வளர்ந்த நிலையில் வணிகர்கள் எண்ணிக்கையில் பெருகி முக்கியமானோராயும் ஆயினர். பெரு நகரங்களின் அங்காடிகளில் உணவு தானியங்கள்,துணி,தங்கம்,நகைகள் போன்றவற்றில் குறிப்பான ஒரு பொருளை மட்டுமே வணிகம் செய்வோர் இருந்தனர். வணிகர்கள் கடல்கடந்த வணிகத்தில் ஈடுபட்டனர். அதைப் போலவே வெளிநாடுகளோடு தரைவழியாகவும் வணிகம் செய்தனர். நிறுவனமயப்பட்ட ஏற்பாடுகளால் வணிகச் சுற்றுகள் மேலும் சிறப்புத்தன்மை கொண்டவை ஆயின. இவ்வளர்ச்சி விரிவடைந்துவரும் வணிக நடவடிக்கைகளுக்கு உதவியது.

வணிகத்தில் பணம் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டது என்ற மிக முக்கியமான ஒரு வினா எழுகிறது. இதற்கு விடையளிப்பது கடினம். நவீனத்துக்கு முந்தைய அனைத்துப் பொருளாதாரங்களிலும் பரிமாற்றத்துக்கு ஒரு முக்கியமான ஊடகமாகப் பண்டமாற்றுமுறை விளங்கியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த உப்பு வணிகர்கள், கிழக்கு உப்புறக் கடற்கரைப் பகுதிகளிலிருந்துத் தங்களின் வண்டிகளில் உப்பை ஏற்றிக்கொண்டு, குழுக்களாகச் சேர்ந்து சென்றனர். அவர்கள் தங்களின் உப்பைப் பணத்துக்கு விற்காமல் ஏனைய பண்டங்களுக்காகவும் இதரத் தேவைகளுக்காகவும் பண்டமாற்று செய்து கொண்டிருக்கவே வாய்ப்பு அதிகம். இருப்பினும், தரை வழி, கடல் வழி வணிகம் ஆகியவற்றின் அளவும், கூடவே நகர அங்காடிகள் குறித்து இலக்கியத்திலுள்ள சித்தரிப்புகளில் பணம்தான் பரிமாற்றத்துக்கான முக்கிய ஊடகமாக இருந்தது என்பதை உணர்த்துகின்றன.

இந்த அனுமானத்தைப் பல்வேறு மையங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கிற ரோமானிய நாணயங்கள் மெய்ப்பிக்கின்றன. சுழற்சியில் உள்ள பணஅளவை அதிகரிப்பதற்காக உள் நாட்டிலேயே போலி ரோமானிய நாணயங்களும் கூட அச்சடிக்கப்பட்டன. அமராவதி ஆற்றுப் படுகையில் பெரிய அளவுகளில் சேர நாணயங்களும்கூடக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வட இந்தியாவில் மிகப் பெரிய அளவுகளில் இந்தோ–கிரேக்க, குஷாண நாணயங்கள்

ரோம நாணயம்

11th History Lesson 6 Tamil Medium.indd 96 01-12-2022 19:45:28

சேர நாணயம்

கண்டெடுக்கப்பட்டுள்ளமை, பணமயமாக்கத்தின் அளவு குறித்து அதே போன்ற ஒரு முடிவுக்கே இட்டுச்செல்லும். இவையனைத்தும், பண்டைய காலத்தில் பரிமாற்ற ஊடகமாகப் பணம், கணிசமான அளவுக்குப் பயன்பட்டது என்ற ஊகத்துக்கே இட்டுச்செல்லும்.

முடிவு

இவ்வியலில் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நூற்றாண்டுகள் அரசியல் உறுதித்தன்மை நிலவிய காலகட்டமல்ல. கனிஷ்கர் தவிர, வடக்கே படையெடுத்து வந்தவர்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து வலுவான பேரரசுகளை நிறுவவில்லை. கனிஷ்கரும்கூட ஒப்பீட்டளவில் ஒரு குறுகிய காலம் மட்டுமே ஆட்சிபுரிந்தார். மேலும் அவரது மரணத்துக்குப் பிறகு அவரது பேரரசு மெதுவாக வீழ்ச்சியுற்றது. தமிழ்ப் பகுதி, ஒரு பேரரசு உருவாவதற்குத் தேவைப்படும் ஒன்றுபடுத்துகிற சக்தியைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு ஒப்பீட்டளவில் சிறிய அரசாட்சிகளாகவும் மேலும் சிறிய சிற்றரசுகளாகவும்கூடத் துண்டுபட்டிருந்தது. வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளுக்கும் இக்காலத்திய மிக முக்கியமான வளர்ச்சி என்பது மாபெரும் வணிக விரிவாக்கமாகும். வடக்கிலிருந்து வணிக உறவுகள், கிழக்கே சீனா வரையிலும், மேற்கே மத்திய தரைக்கடல் உலகம் வரைக்கும் விரிந்திருந்தது. தெற்குப் பகுதியைப் பொறுத்த வரை, உள்நாட்டு வணிகம் மற்றும் பண்டமாற்று சுழற்சிகளுடன் அயல்நாடுகளுடனான வணிகம் மேற்கு ஆசிய நாடுகள் வரையிலும், கிழக்கில் சீனா வரையிலும் பெருமளவிற்கு வளர்ந்திருந்தது. இதன் விளைவினைக் கணிசமான அளவுக்குப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் அதிகரித்த செழிப்பிலும் காணலாம். தொல்லியல் அகழ்வாய்வுகளும் சங்க இலக்கியங்களில் நகரங்கள் குறித்த வர்ணனைகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

பாடச் சுருக்கம்

- இந்தியாவில் அலெக்சாண்டர் இறந்த பிறகு, அவரது தளபதி செலியுகஸ் நிகேடர், தொடர்ந்து வட மேற்கு இந்தியப் பகுதிகளில் ஆட்சி செலுத்தினார். இதனைத் தொடர்ந்து இராஜாங்க உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.
- செலுசியப் பேரரசு வலுவிழந்தது. அதன் ஒரு விளைவாக, அவரை அடுத்து வந்த ஓரிருவருக்குப் பிறகு, இந்தோ–கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவரான மினாண்டர் பேரரசை ஆட்சி செய்தார்.
- இந்தோ–கிரேக்க அரசாட்சி சாகர்களாலும் அதைத் தொடர்ந்து பார்த்தியர் மற்றும் குஷாணர்களால் அகற்றப்பட்டது. தங்களின் ஆட்சிப் பகுதிகளை ஆள்வதற்கு சத்ரப்கள் அல்லது மாகாண ஆட்சியாளர்களை சாகர்கள் நியமித்தனர்.
- சாகர் ஆட்சியாளர்களில் மிகவும் புகழ்பெற்றவர் ருத்ரதாமன். அவருக்குப் பிறகு சாகர்களை, பார்த்தியர்கள் குடிபெயரச் செய்தனர்; பார்த்தியரைத் தொடர்ந்து குஷாணர்கள் வந்தனர்.
- குஷாணர்களில் புகழ் பெற்றவர் கனிஷ்கர். பௌத்தத்தின் மகாயானப் பிரிவை இவர் ஆர்வமுடன் பின்பற்றினார். இவரது காலத்தில்தான் காந்தாரக் கலை வளர்ச்சி பெற்றது.
- அஸ்வகோஷர், பார்ஸ்வர், வசுமித்திரர், நாகார்ஜுனர் ஆகிய பௌத்தத் தத்துவஞானிகளை ஆதரித்தவர் கனிஷ்கர்.
- தென்னிந்தியாவில் சாதவாகனர் அரசாட்சி பொ.ஆ. முதல் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. தமிழ்ப் பகுதியில் (சோழ, சேர, பாண்டிய) மூவேந்தர்கள் ஆதிக்கம் செலுத்திவந்தனர்.
- தமிழ்நாட்டுக்கும் ரோமுக்கும் இடையே வணிகம் வளர்ச்சி அடைந்தது. சோழமண்டலக் (கிழக்குக்) கடற்கரையில் புகார் நகரம் ஒரு முக்கியமான துறைமுகமாக விளங்கிற்று. யவன வணிகர்கள் துறைமுக நகரங்களில் வாழ்ந்தனர்.

பயிற்சி

M79XW

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. அலெக்சாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ________

(அ) செலியுகஸ் நிகேடர் (ஆ) அன்டிகோனஸ்
(இ) அண்டியோகஸ் (ஈ) டெமெட்ரியஸ்

2. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு ________ தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.

(அ) ரோமானிய (ஆ) கிரேக்க
(இ) சீன (ஈ) பிரிட்டிஷ்

11th History Lesson 6 Tamil Medium.indd 97 01-12-2022 19:45:28

3. வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம் ________

(அ) இந்தியாவிலிருந்து மேற்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது.

(ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

(இ) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

(ஈ) மேற்கூறிய எதுவுமில்லை.

4. இந்தோ–கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் ________

(அ) யூதிடெமஸ் (ஆ) டெமெட்ரியஸ்

(இ) மினாண்டர் (ஈ) ஆன்டியால்ஸைடஸ்

5. குஷாண நாணயங்கள் ________ நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.

(அ) ரோமானிய (ஆ) கிரேக்க

(இ) குப்த (ஈ) சாதவாகன

6. இந்தோ–கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி ________ என்று குறிப்பிடப்பட்டது.

(அ) மதுரா கலை (ஆ) காந்தாரக் கலை

(இ) பாக் கலை (ஈ) பாலா கலை

7. கீழ்க்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?

(அ) புத்தசரிதம் – அஸ்வகோஷர்

(ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் – மெகஸ்தனிஸ்

(இ) அர்த்தசாஸ்திரம் – கௌடில்யர்

(ஈ) காமசூத்திரம் – வாத்சாயனர்

8. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர் ________

(அ) மொக (ஆ) ருத்ரதாமன்

(இ) அஸிஸ் (ஈ) யசோவர்மன்

9. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்,

(i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

(ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

(அ) (i) சரி

(ஆ) (ii) சரி

(இ) (i), (ii) இரண்டுமே சரி

(ஈ) (i), (ii) இரண்டுமே தவறு

10. ________ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

(அ) அரிக்கமேடு (ஆ) ஆதிச்சநல்லூர்

(இ) புகார் (ஈ) பல்லாவரம்

II. குறுகிய விடை தருக.

1. இந்தியாவை மத்தியத் தரைக்கடல் உலகத்தோடும் மத்திய ஆசியோவோடும் சீனாவோடும் இணைப்பதற்கு இட்டுச்சென்றது எது?

2. சந்திரகுப்தருக்கும் செலியுகஸ் நிகேடருக்கும் இடையே நிகழ்ந்த போரின் விளைவு என்ன?

3. "யவன" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

4. "நாட்டின் வட மேற்கில் ஒரு பெரிய அரசை மினாண்டர் ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது." விவரிக்கவும்.

5. "சத்ரப்கள்" பற்றி நீவிர் அறிவது யாது?

6. பின்வருவன குறித்து ஒரு பட்டியலைத் தயாரிக்கவும்.

அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்

ஆ) ரோமிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்

7. பெருகிவரும் வணிகத்திற்கும் வியாபாரத்துக்குமான வணிகர்களின் பங்களிப்பை விவரிக்கவும்.

III. சுருக்கமான விடை தருக.

1. டெமெட்ரியஸுடைய நாணயங்களின் சிறப்பைச் சுட்டிக்காட்டுக.

2. மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?

3. "முற்பட்ட கால ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கின்றன." ஏன்?

4. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது." எவ்வாறு?

5. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவத்துவத்தை விவரிக்கவும்

6. கிரேக்கருடனான இந்தியத் தொடர்பின் விளைவான பண்பாட்டுத் தாக்கத்தின் சிறப்புகளைக் கூறவும்.

IV. விரிவான விடை எழுதுக.

1. மேற்கு இந்தியாவில் இந்தோ–கிரேக்க அரசர்களின் எழுச்சி, வணிக, பண்பாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்தியது. விவரிக்கவும்.

11th History Lesson 6 Tamil Medium.indd 98 01-12-2022 19:45:28

2. கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

3. மத்தியத் தரைக் கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசுமேலெழுந்த விதத்தை விவரி.

4. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் தருக.

செயல்பாடு

1. மெகஸ்தனிஸ் இந்தியா குறித்து எழுதிய சுவாரஸ்யமான தகவல்களைச் சேகரி.

2. இந்தோ–கிரேக்கர்களின் நாணயங்களை ஆராய்க.

3. பௌத்தத்தின் மஹாயான, ஹீனயான வடிவங்களை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டு.

4. உலக வரைபடத்தில் ஒரு முக்கியமான வணிக மையமாக இருந்த ரோமை இடங்குறித்துக் காட்டு.

மூலநூல்கள்

1. John Keay, *India: A History.* HarperCollins
2. R.C. Majumdar, *History and Culture of the Indian People: The Age of Imperial Unity* (vol. II). Bharatiya Vidya Bhavan's Book
3. Kanakalatha Mukund, *Merchants of Tamilakam: Pioneers of International Trade*. Penguin Books
4. K.A. Nilakanta Sastri, *The Age of the Nandas and Mauryas*. Motilal Banarsidass
5. Romila Thapar, *Early India: From the Origins to A.D. 1300.* Penguin Books

கலைச்சொற்கள்

பிற பண்பாடு ஏற்றல்	acculturation	adapting to the surrounding culture
பெயருக்குரிய	eponymous	the person after whom someone is named
ஊக்கம் இழக்கத்தக்க	daunting	discouraging
அழகுபடுத்து	embellished	add beauty
சச்சரவு	squabble	argument
இரு நதிகளுக்கிடையில் காணப்படும் செழுமையான நிலப்பகுதி	Doab	a fertile tract of land between two adjacent rivers

இணையச்செயல்பாடு

மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

Settera Map Quiz விளையாட்டின் வழி நாடுகள், கொடிகள், தலைநகர்கள் ஆகியவற்றை அறிவோமா!



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி settera என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்லவும்.
- Free Map Quiz Games என்று திரையில் தோன்றும்.
- திரையைக் கீழ்நோக்கி நகர்த்தி ஏதேனும் ஒரு கண்டம் அல்லது நாட்டைத் தேர்வு செய்து நகரங்களைப் பார்க்கவும். (எ.கா. Indian Cities)
- வரைபடத்தில் பல்வேறு இடங்களை ஆராய்க.மேலும், Create Custom Quiz என்பதில் வினாக்களை உருவாக்கி விளையாடுக.

உரலி

இணையம் : https://online.seterra.com/en/

திறன்பேசி : https://play.google.com/store/apps/details?id=com.seterra.free

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

11th History Lesson 6 Tamil Medium.indd 99 01-12-2022 19:45:28

அலகு 7

குப்தர்

ER69D

கற்றல் நோக்கங்கள்

- இந்திய வரலாற்றில் குப்தர்கள் ஆட்சியின் முக்கியத்துவம் குறித்துக் கற்றல்
- நில மானியமுறையின் முக்கியத்துவத்தையும், வேளாண்மை, பொருளாதாரம் மற்றும் அவைகளின் தாக்கத்தையும் புரிந்து கொள்ளல்
- அக்காலத்து மக்களின் சமூக – பொருளாதார வாழ்க்கை குறித்தும், சமூகத்தின் தன்மை குறித்தும் அறிதல்
- அக்காலத்துப் பண்பாடு, கலை, கல்வி ஆகியவற்றின் வளர்ச்சி குறித்து அறிதல்.

அறிமுகம்

ஏறத்தாழ பொ.ஆ. 300 முதல் 700 வரையிலான காலகட்டம் அரசு அமைப்பில் ஒரு செவ்வியல் முறை தோன்றி பல பகுதிகளில் பேரரசர் ஆட்சி உருவாக வழிவகுத்த காலமாக இருந்தது. மௌரியப் பேரரசிற்குப் பின்னர், பல சிறு அரசுகள் தோன்றியவாறும் வீழ்ந்தவாறும் இருந்தன. குப்தர் அரசுதான் ஒரு பெரும் சக்தியாக உருவாகி, துணைக்கண்டத்தின் பெரிய பகுதியைஅரசியல்ரீதியாகஒன்றிணைத்தது.மத்தியில் ஒரு வலுவான அரசாக வலுப்பெற்றதால், பல அரசுகள் அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இக்காலகட்டத்தில் நிலப்பிரபுத்துவம் ஒரு நிறுவனமாக வேரூன்றத் தொடங்கியது. செயல்திறன்மிக்க வணிகக் குழு முறை, கடல்கடந்த வாணிபம் ஆகியவற்றுடன் அதன் பொருளாதாரம் எழுச்சி கண்டது. இக்காலகட்டத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புகள் தோன்றின. நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது

உயர் வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை உச்சத்தில் இருந்தது. கல்வி, கலை, அறிவியல் ஆகியவை சிறந்தோங்கி இருந்தாலும்கூட, இக்காலகட்ட ஆட்சியின் நிலப்பிரபுத்துவ குணம் காரணமாக மக்கள் துன்புற்றார்கள். 'குப்தர் காலம் பொற்காலம்' என்று சொல்லப்படுவது ஏகாதிபத்திய வரலாற்றாளர்களின் கருத்துகளுக்கான தேசிய வரலாற்றாளர்களின் எதிர்வினை என்பதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். எனினும், இக்காலகட்டம் பண்பாட்டு மலர்ச்சியின் காலம், செவ்வியல் கலைகளின் காலம் என்பதைப் பல அறிஞர்களும் ஏற்கவே செய்கிறார்கள்.

வரலாற்றுச் சான்றுகள்

குப்தர் காலத்து வரலாற்றை மீள் உருவாக்கம் செய்ய மூன்று வகையான சான்றுகள் உள்ளன.

1. இலக்கியச் சான்றுகள்

- நாரதர், விஷ்ணு, பிருகஸ்பதி, காத்யாயனர் ஸ்மிருதிகள்
- அரசருக்குக் கூறுவது போன்று எழுதப்பட்டுள்ள காமந்தகாரின் நீதிசாரம் என்ற தரும சாத்திரம் (பொ.ஆ. 400)
- விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தம், முத்ராராட்சசம் ஆகியவை குப்தரின் எழுச்சி குறித்த விவரங்களை அளிக்கின்றன.
- புத்த, சமண இலக்கியங்கள்
- காளிதாசர் படைப்புகள்
- இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி பாஹியான் குறிப்புகள்

2. கல்வெட்டுச் சான்றுகள்

மெஹ்ரோலி இரும்புத் தூண்

- மெஹ்ரோலி இரும்புத் தூண் கல்வெட்டு – முதலாம் சந்திரகுப்தரின் சாதனைகளை குறிக்கிறது.
- அலகாபாத் தூண் கல்வெட்டு: சமுத்திரகுப்தரின் ஆட்சி, அவரது ஆளுமை, சாதனைகள் ஆகியவற்றை இது விளக்குகிறது. இதனைப் பொறித்தவர் ஹரிசேனர். இது 33 வரிகளில் நாகரி வரிவடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது.

3. நாணய ஆதாரங்கள்

- குப்த அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தத் தங்க நாணயங்கள் குப்த அரசர்களின் பட்டங்கள் குறித்தும் அவர்கள் நடத்திய சடங்குகள் குறித்தும் தெரிவிக்கின்றன.

குப்தர் வம்சத்தின் தோற்றம்

குப்தர் வம்சத்தின் தோற்றம் குறித்த சான்றுகள் மிகவும் குறைவுதான். குப்த அரசர்கள் எளிய குடும்பத்திலிருந்துதான் உருவாகியிருக்க வேண்டும். குப்த வம்சத்தின் மூன்றாவது ஆட்சியாளரான முதலாம் சந்திர குப்தர் குமாரதேவி என்ற லிச்சாவி இளவரசியை மணந்தார். இத்தகவலை அவரது பரம்பரையினர் மிகவும் பெருமையோடு பதிவு செய்திருப்பது இந்த அரச குடும்பத்துடனான தொடர்பு குப்தர்களின் எழுச்சிக்குக் காரணமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. லிச்சாவி என்பது வடக்கு பிகாரில் இருந்த பழமையான கணசங்கமாகும். அது கங்கைக்கும் நேபாள தெராய்க்கும் இடைப்பட்ட பகுதியாகும். சந்திர குப்தரின் ஒப்பற்ற புதல்வரான சமுத்திரகுப்தரின் பிரயாகை (இன்றைய அலகாபாத்) தூண் கல்வெட்டின்படி, அவர் பிரயாகைக்கு மேற்கே மதுரா வரையுள்ள செழிப்பான நிலங்கள் முழுவதையும் கைப்பற்றினார். கலிங்கம் வழியாகத் தெற்கே, பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரம் வரை வெற்றிகரமான படையெடுப்பை நடத்தினார். மகதம், அலகாபாத், அவுத் ஆகியவற்றை குப்தர்களின் பகுதிகளாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

7.1 முதலாம் சந்திரகுப்தரும், பேரரசு உருவாகுதலும்

குப்த வம்சத்தின் முதல் அரசர் ஸ்ரீகுப்தர் (பொ.ஆ. 240–280). இவரைத் தொடர்ந்து இவரது புதல்வர் கடோத்கஜர் (பொ.ஆ. 280–319) ஆட்சிக்கு வந்தார். கல்வெட்டுகளில் ஸ்ரீகுப்தர், கடோத்கஜர் ஆகிய இருவரும் மகாராஜா என்று குறிக்கப்படுகிறார்கள். கடோத்கஜரின் புதல்வரான முதலாம் சந்திரகுப்தர் பொ.ஆ. 319 முதல் 335 வரை ஆட்சிபுரிந்தார். இவர் குப்தப் பேரரசின் முதல் பேரரசராகக் கருதப்படுகிறார். சந்திரகுப்தர் மகாராஜா – அதிராஜா என்ற பட்டத்தை ஏற்றார். மற்றவர்களின் ஆவணங்களிலிருந்து இவரது பேரரசர் நிலை நமக்குப் புலப்படுகிறது. இவரது ஆட்சிக் காலத்தின் கல்வெட்டோ, நாணயமோ நமக்குக் கிடைக்கவில்லை.

7.2 சமுத்திரகுப்தர்

பொ.ஆ. 335இல் முதலாம் சந்திரகுப்தர் தனது புதல்வர் சமுத்திரகுப்தரைத் தனது வாரிசாக நியமித்தார். அசோகர் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட இவர் குறித்த நீண்ட புகழுரை அவர் மௌரிய பரம்பரையில் வந்ததாகச் சொல்கிறது. இந்தக் கல்வெட்டு சமுத்திரகுப்தர் நாடு முழுவதும் படையெடுத்துச் சென்றபோது அவருக்கு அடிபணிந்த அரசர்கள், ஆட்சிப் பகுதிகள் ஆகியன குறித்த மிகப் பெரும் பட்டியலைத் தருகிறது.

முக்கியமாக தில்லி மற்றும் மேற்கு உத்தரப்பிரதேசத்தின் நான்கு அரசர்களையும் அவர் வென்றுள்ளார். தெற்கு மற்றும் கிழக்குப் பகுதி அரசர்கள் அடிபணிந்து கப்பம் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர். கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்க்கும்போது, சமுத்திரகுப்தரின் படையெடுப்பு கிழக்குக் கடற்கரையோரம் காஞ்சிபுரம் வரை நீண்டதாகத் தெரிகிறது. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் ஒன்பது அரசர்களைப் படை பலத்தால் வென்றார். காட்டு ராஜாக்களும் (மத்திய இந்தியா மற்றும் தக்காணத்தின் பழங்குடியினத் தலைவர்கள்), அஸ்ஸாம், வங்கம் போன்ற கிழக்குப் பகுதிகளின் அரசர்களும், நேபாளம், பஞ்சாப் போன்ற பகுதிகளின் சிற்றரசர்களும் கப்பம் கட்டக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மாளவர்கள், யுதேயர்கள் உள்ளிட்ட இராஜஸ்தான் பகுதியின் ஒன்பது குடியரசுகள் குப்தர்களின் ஏகாதிபத்தியத்தை ஏற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. இதோடு, தெய்வபுத்திர சகானுசாகி (ஒரு குஷாண பட்டம்), சாகர் அரசு, இலங்கை அரசு போன்ற வெளிநாட்டு அரசுகளும் கப்பம் கட்டியதாக அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

வரலாற்றறிஞர்கள் சமுத்திரகுப்தரை இந்திய நெப்போலியன் என அழைக்கின்றனர். இந்த செய்தி, மறுக்கமுடியாதது. தென்பகுதி அரசர்கள் கப்பம்

அலகாபாத் தூண் கல்வெட்டு

11th History Lesson 7 Tamil Medium.indd 101 01-12-2022 19:46:24

11th History Lesson 7 Tamil Medium.indd 102
01-12-2022 19:46:24

கட்டியது, வடஇந்திய அரசுகள் குப்தப் பேரரசோடு இணைக்கப்பட்டது ஆகியனவற்றை மறுக்க முடியாது. மேற்கு இந்தியாவில் சாக அரசர்களைத் தோற்கடிக்க முடியவில்லை என்பதால், நேரடி அதிகாரம் கங்கைச் சமவெளி வரையிலும்தான் இருந்துள்ளது. இராஜஸ்தானின் பழங்குடியினர் கப்பம் கட்டினர். ஆனால் பஞ்சாப் சமுத்திரகுப்தரின் அதிகாரத்திற்கு வெளியே இருந்தது. சமுத்திரகுப்தரின் படையெடுப்பு இப்பகுதியின் பழங்குடி குடியரசுகளின் அதிகாரத்தைக் குறைத்ததால், இங்கு ஹூணர்களின் ஊடுருவல் அடிக்கடி நிகழ்ந்தது.

குஷாணர்களுடனான உறவு குறித்து உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையைப் பொருத்தவரை, இலங்கை அரசர் மேகவர்மன் பரிசுகளை அனுப்பி, கயாவில் ஒரு பௌத்த மடம் கட்ட அனுமதி கோரியுள்ளார். சமுத்திரகுப்தரின் ஆட்சிக்காலம் நாற்பதாண்டுகள் நீடித்ததால். இது போன்ற படையெடுப்புகளைத் திட்டமிட்டு நடத்த அவருக்குப் போதுமான கால அவகாசம் இருந்தது. தனது ராணுவ வெற்றிகளைப் பிரகடனம் செய்ய அவர் அசுவமேத யாகம் நடத்தினார்.

சமுத்திரகுப்தர் அறிஞர்களையும், ஹரிசேனர் போன்ற கவிஞர்களையும் ஆதரித்தார். இதன் மூலம் சமஸ்கிருத இலக்கியத்தை வளர்ப்பதில் பங்காற்றினார். வைணவத்தை அவர் தீவிரமாகப் பின்பற்றினார். என்றாலும் வசுபந்து என்ற மாபெரும் பௌத்த அறிஞரையும் ஆதரித்தார். கவிதை, இசைப் பிரியரான இவருக்குக் கவிராஜா என்ற பட்டம் வழங்கப்பட்டது. குப்தர் நாணயங்களில் அவர் வீணை வாசிப்பது போன்ற சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

வீணை வாசிக்கும் சமுத்திரகுப்தர்

7.3 இரண்டாம் சந்திரகுப்தர்

இரண்டாம் சந்திரகுப்தர்

தனது தாத்தா பெயரையே சூடிய இரண்டாம் சந்திரகுப்தர் மிகத் திறமையான அரசர். அவர் பொ.ஆ. 375 முதல் 415 வரை 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். தனது சகோதரரான ராமகுப்தருடன் (370–375) வாரிசுரிமைக்குப் போராடி ஆட்சிக்கு வந்தார். விக்ரமாதித்யன் என்றும் அழைக்கப்பட்டார். பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்ட இரண்டாம் சந்திரகுப்தர் தனது அரசின் எல்லைகளை போர்கள், திருமண உறவுகள் ஆகியனவற்றின் மூலம் விரிவுபடுத்தினார். ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தக்காணப் பகுதியை ஆண்ட வாகடக இளவரசருக்குத் தன் மகள் பிரபாவதியைத் திருமணம் செய்து கொடுத்தார். இவரது மேற்கு இந்திய அரசுகள் மீதான படையெடுப்பின்போது, இத்திருமண உறவுகள் மிகவும் கூடுதல் பலம் அளித்தன. மேற்கு மாளவம், குஜராத் ஆகிய பகுதிகளை 400 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த சாக அரசர்களை இப்படையெடுப்பின் மூலம் இரண்டாம் சந்திரப்குப்தர் வென்றார்.

ரோமானியப் பேரரசுடனான வணிகத்தால் அரசின் வளம் பெருகியது. கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவை வென்ற பின்னர், இரண்டாம் சந்திரகுப்தர் ஹூணர், காம்போஜர், கிராதர் போன்ற வட நாட்டு அரசுகளை வென்றார். அவர் மிகப் பெரிய

மதுரா பாடலிபுத்திரம் குறித்து பாஹியான்

மதுராவில் மக்கள்தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் தமது குடும்பத்தைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.... அரசருக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் மட்டும்தான் தானியத்தில் ஒரு பகுதியை அரசருக்குத் தரவேண்டும். சூழலைப் பொறுத்து குற்றவாளிகளுக்கு மிதமாகவோ, கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது....

மீண்டும் மீண்டும் கலகம் செய்தால், குற்றமிழைத்தால், வலது கை துண்டிக்கப்படும்... நாடு முழுவதும் மக்கள் எந்த உயிரினத்தையும் கொல்வதில்லை. எந்த மதுபானத்தையும் அருந்துவதில்லை பாடலிபுத்திரத்தில் வசிப்பவர்கள் நல்ல பணக்காரர்கள்; வசதியானவர்கள்; ஈகைக் குணத்தில் ஒருவரோடொருவர் போட்டி போடுபவர்கள்.

நகரங்களில் வைசியக் குடும்பத்தினர் தர்மம் செய்வதற்கும் மருத்துவத்திற்கும் சத்திரங்களைக் கட்டியிருக்கிறார்கள். அனைத்து ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள், குழந்தையில்லாதவர்கள், அங்கவீனர்கள், ஊனமுற்றவர்கள் என அனைவருக்கும் அனைத்துவிதமான உதவிகளும் செய்யப்படுகின்றன.

11th History Lesson 7 Tamil Medium.indd 103 01-12-2022 19:46:25

வெற்றிவீரராக மட்டுமின்றி, சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார். விக்ரமன், தேவகுப்தன், தேவராஜன், சிம்ஹவிக்ரமன், விக்ரமாதித்யன், சகாரி ஆகியன இவரதுவேறுபெயர்களாகும்.(இவைநாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.) கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய நவரத்தினங்கள் எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இவரது அவையில் இருந்தனர். இவர்களில் மாபெரும் சமஸ்கிருத கவிஞர் காளிதாஸர், சமஸ்கிருதப் புலவர் ஹரிசேனர், அகராதியை உருவாக்கிய அமரசிம்மர், மருத்துவர் தன்வந்திரி ஆகியோர் அடங்குவர். இவரது ஆட்சிக்காலத்தில்தான் பாஹியான் என்ற பௌத்த அறிஞர் சீனாவிலிருந்து இந்தியா வந்தார். இவர் குப்தப் பேரரசின் வளம் குறித்து பதிவு செய்திருக்கிறார். வெள்ளி நாணயங்களை வெளியிட்ட முதல் குப்த அரசர் இரண்டாம் சந்திரகுப்தரே. இவரது ஆட்சிக்காலத்தில்தான் பேரரசின் விரிவாக்கம் உச்சத்தை எட்டியது.

இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பின்னர் அவரது புதல்வர் முதலாம் குமாரகுப்தர் ஆட்சி செய்தார். முதலாம் குமாரகுப்தர் நாளந்தா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர். இவர் சக்ராதித்யர் என்றும் அழைக்கப்பட்டார். குப்தவம்சத்தின் கடைசிப்பேரரசரான ஸ்கந்தகுப்தர் முதலாம் குமாரகுப்தரின் புதல்வராவார். இவர் ஹூணரின் படையெடுப்பைத் தடுத்தார். ஆனால் ஹூணர் மீண்டும் மீண்டும் படையெடுப்பு மேற்கொண்டதால், அரசு கருவூலம் காலியானது. பொ.ஆ. 467இல் ஸ்கந்தகுப்தரின் இறப்பிற்குப் பின்னர் குப்தப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. இவருக்குப் பின்னர் பல குப்த அரசர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இவர்கள் பேரரசின் வீழ்ச்சியை விரைவுபடுத்தினார்கள். குப்த வம்சத்தின் கடைசி அரசர் விஷ்ணுகுப்தர். இவர் பொ.ஆ. 540 முதல் 550 வரை ஆட்சிபுரிந்தார்.

7.4 குப்தரின் நிர்வாக முறை

அரசர்

குப்தர் ஆட்சியில் அரசியல் அதிகாரப் படிநிலைகள் காணப்பட்டன. வழங்கப்பட்ட பட்டங்கள், மேலதிகாரம், கீழ்ப்படிதல் ஆகிய உறவுகளின் வழியாக அதிகாரப் படிநிலைகளை அறிய முடிகிறது. அரசர்கள் மகாராஜாதிராஜ, பரம–பட்டாரக, பரமேஷ்வர போன்ற பட்டங்களை ஏற்றார்கள். பரம–தைவத (கடவுளின் பரமபக்தன்), பரம–பாகவத (வாசுதேவ கிருஷ்ணனின் பரமபக்தன்) போன்ற அடைமொழிகளால் தம்மைக் கடவுளோடும் இணைத்துக் கொண்டனர். குப்த அரசர்கள் தாம் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்ற பிம்பத்தை முன்வைத்ததாகவும் சில வரலாற்றாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக அலகாபாத் கல்வெட்டுகளில் சமுத்திரகுப்தர் புருஷா (அனைவருக்கும் மேலானவர்) என்ற கடவுளுடன் ஒப்பிடப்படுகிறார். அரசருக்கு, ஒரு தெய்வீகத் தகுதி நிலையை நிறுவும் முயற்சிகளாக இவற்றைக் கருதலாம்.

அமைச்சர்கள், அதிகாரிகள்

முத்திரைகள், கல்வெட்டுகள் போன்றவற்றில் பதிவிடப்பட்டுள்ளவை அதிகாரிகளின் படிநிலைகளையும் அவர்களது பதவிகளையும் குறிப்பிட்டாலும், அவற்றின் தெளிவான பொருளைப் பல நேரங்களில் அறிய முடியவில்லை. குமாரமாத்யா என்ற சொல் ஆறு வைசாலி முத்திரைகளில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பதவி தனக்கெனத் தனியாக அலுவலகம் (அதிகரணா) உள்ள ஒரு உயரதிகாரியைக் குறிப்பிடுவது போல் உள்ளது. அமாத்யா என்ற சொல் பல முத்திரைகளில் காணப்படுகிறது. குமாரமாத்தியா என்பது அமாத்யாக்களில் மிக முக்கியமான பதவியாக, அரசகுல இளவரசர்களின் தகுதிக்குச் சமமானதாக இருக்கும் போல் தெரிகிறது. குமாரமாத்யாக்கள் அரசர், பட்டத்து இளவரசர், வருவாய்த்துறை, அல்லது ஒரு மாகாணம் என்று பலவற்றோடு தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். ஒரு லிச்சாவி முத்திரை லிச்சாவியர்களின் பட்டமேற்பு விழாவிற்கான புனித குளத்திற்குப் பொறுப்பான ஒரு குமாரமாத்யா பற்றிக் குறிப்பிடுகிறது.

குமாரமாத்யா பொறுப்பில் உள்ளவர்கள் சில சமயங்களில் கூடுதல் பொறுப்புகளையும்

ஹூணர்களின் தோற்றம் குறித்து உறுதியாக எதுவும் தெரியவில்லை. ரோமானிய வரலாற்றாளர் டாசிடஸின் கூற்றுப்படி, அவர்கள் காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இனக்குழுக்கள். ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். அட்டில்லாவின் தலைமையில் திரண்ட இவர்கள் ஐரோப்பாவில் கொடுங்கோண்மைக்குப் பெயர் பெற்றவர்கள். வெள்ளை ஹூணர்கள் என்று அழைக்கப்பட்ட ஹூணர்களின் ஒரு பிரிவு மத்திய ஆசியாவிலிருந்து இந்தியா நோக்கி நகர்ந்தது. இவர்களது படையெடுப்பு குஷாணர்கள் காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பமானது.



11th History Lesson 7 Tamil Medium.indd 104 01-12-2022 19:46:25

பதவிப் பெயர்களையும் கொண்டிருந்தனர். இந்தப் பொறுப்புகள் வாரிசு அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, அலகாபாத் பிரசஸ்தியை (மெய்க்கீர்த்தி அல்லது புகழுரைக் கல்வெட்டு) எழுதிய ஹரிசேனர் ஒரு குமாரமாத்யா, சந்திவிக்ரஹிகா, மஹாதண்டநாயகா ஆகிய பட்டங்களைக் கொண்டவராக இருந்துள்ளார். அவர் மஹாதண்டநாயகா துருவபூதியின் புதல்வர் ஆவார்.

அமைச்சர் குழு

குப்த அரசர்களுக்கு ஒரு அமைச்சர் குழு உதவி புரிந்தது. அலகாபாத் கல்வெட்டு சபா என்ற ஒரு குழு குறித்துக் கூறுகிறது. இது அமைச்சர் குழுவாக இருக்கலாம். மஹாசந்திவிக்ரஹா என்பவர் அமைச்சர்களில் உயர் நிலையில் இருந்துள்ளார். இவர் அமைதி மற்றும் போருக்கான அமைச்சர். இவர்தான் போர் தொடுத்தல், உடன்பாடு காணுதல், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல் என்று பிற நாடுகளுடனான தொடர்புகளுக்குப் பொறுப்பானவர்.

நீதித்துறை, ராணுவம் ஆகியவற்றின் பொறுப்பு வகித்தவர் தண்டநாயகா அல்லது மஹாதண்டநாயகா என்றழைக்கப்பட்டுள்ளார். ஒரு முத்திரை அக்கினிகுப்தர் என்ற மஹாதண்டநாயகா குறித்துப் பேசுகிறது. அலகாபாத் கல்வெட்டு மூன்று மஹாதண்டநாயகாக்களைக் குறித்து கூறுகிறது. இவையனைத்தும் இந்தப் பதவிகள் எல்லாம் வாரிசுரிமையாக வருபவை என்பதைக் காட்டுகின்றன. மற்றொருவருக்கு மஹாஅஸ்வபதி (குதிரைப்படைத் தலைவர்) என்ற பதவி இருந்துள்ளது.

பேரரசின் பிரிவுகள்

குப்தர்களின் பேரரசு 'தேசம்' அல்லது 'புக்தி' எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உபாரிகா என்றழைக்கப்பட்ட ஆளுநர்களால் இவை நிர்வகிக்கப்பட்டன. உபாரிகாக்கள் அரசரால் நேரடியாக நியமிக்கப்பட்டனர். உபாரிகாக்கள் மாவட்ட தலைமை நிர்வாக அதிகாரிகளையும் வாரிய அதிகாரிகளையும் நியமித்தனர். உபாரிகாக்கள் நிர்வாக அதிகாரத்தோடு, யானைகள், குதிரைகள், வீரர்கள் என்று ராணுவ நிர்வாகத்தையும் கையில் வைத்திருந்தனர். தாமோதர்பூர் செப்பேடுகளில் மூன்று உபாரிகாக்களுக்கு மகாராஜா என்ற பட்டம் இருந்ததாகக் குறிப்பிடப்படுவதன் மூலம் நிர்வாகத்தில் இவர்களுக்கு இருந்த உயர்நிலை தெரிகிறது. குப்த ஆண்டு 165 என்று தேதியிடப்பட்டுள்ள புத்தகுப்தரின் ஏரான் தூண் கல்வெட்டு காளிந்தி மற்றும் நர்மதை நதிகளுக்கிடையிலான நிலங்களை ஆட்சிசெய்த லோகபாலா என்று மகாராஜா சுரஷ்மிசந்திரா என்பவரைக் குறிப்பிடுகிறது. இங்கு லோகபாலா என்பது மாநில ஆளுநரைக் குறிப்பிடுவதாகலாம்.

குப்தப்பேரரசின் மாநிலங்கள் விஷ்யபதி என்ற அதிகாரியின் கீழ் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவை விஷ்யா என அழைக்கப்பட்டன விஷ்யபதிகள் பொதுவாக மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சிலசமயங்களில் அரசரே நேரடியாக விஷ்யபதிகளை நியமித்தார். விஷ்யபதியின் நிர்வாகக் கடமைகளுக்கு நகரத்தின் சில முக்கியமான மனிதர்கள் உதவிபுரிந்தார்கள்.

மாவட்ட மட்டத்திற்குக் கீழே இருந்த நிர்வாக அலகுகள்

மாவட்ட மட்டத்திற்குக் கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன. ஆயுக்தகா, விதி–மஹாதரா எனப்படும் அதிகாரிகள் குறித்த குறிப்புகளும் காணப்படுகின்றன. கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்துள்ளனர். இவர்களை கிராம மக்களே தேர்ந்தெடுத்தனர். புத்தகுப்தர் காலத்து தாமோதர்பூர் செப்பேடு, மஹாதாரா என்பவர் தலைமையிலான அஷ்டகுல–அதிகாரனா (எட்டு உறுப்பினர் கொண்ட குழு) குறித்து குறிப்பிடுகிறது. மஹாதாரா என்பதற்கு கிராமப் பெரியவர், கிராமத் தலைவர், குடும்பத் தலைவர் என்று பல பொருள் உண்டு. இரண்டாம் சந்திரகுப்தர் காலத்து சாஞ்சி கல்வெட்டு பஞ்சமண்டலி என்பதைக் குறிப்பிடுகிறது. இது ஒரு குழும நிறுவனமாக இருக்கலாம்.

இராணுவம்

முத்திரைகள், கல்வெட்டுகள் ஆகியன பாலாதிகிருத்யா, மஹாபாலாதிகிருத்யா (காலாட்படை மற்றும் குதிரைப்படை தளபதி) போன்ற ராணுவப் பதவிகளைக் குறிப்பிடுகின்றன. வழக்கமாகப் பயன்படுத்தப்படும் சேனாபதி என்ற சொல் குப்தர் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ஆனால் சில வாகடக கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஒரு வைசாலி முத்திரை ராணுவக்கிடங்கின் அலுவலகமான ரணபந்தகர் அதிகாரனாவைக் குறிப்பிடுகிறது. மற்றொரு வைசாலி முத்திரை, தண்டபாஷிகா என்ற அதிகாரியின் அலுவலகத்தைக் குறிப்பிடுகிறது. இது மாவட்ட அளவிலான காவல்துறை அலுவலகமாக இருக்கலாம்.

மஹாபிரதிஹரா (அரண்மனைக் காவலர்கள் தலைவர்), கத்யதபகிதா (அரச சமையலறைக் கண்காணிப்பாளர்) போன்ற அரண்மனையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்த அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒரு வைசாலி முத்திரை மஹாபிரதிகராவாகவும் தாராவராகவும் இருந்த

11th History Lesson 7 Tamil Medium.indd 105 01-12-2022 19:46:25

ஒருவரைப் குறித்துக் குறிப்பிடுகிறது. நிர்வாக அமைப்பின் மேல்மட்டத்தில் அமாத்தியா, சச்சிவா ஆகியோர் இருந்தார்கள். இவர்கள் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பாக இருந்த நிர்வாக அதிகாரிகளாவர். துடகா என்றழைக்கப்பட்ட ஒற்றர்கள் கொண்ட உளவு அமைப்பும் இருந்தது. ஆயுக்தகா என்பது மற்றொரு உயர்மட்ட அதிகாரப் பதவியாகும்.

7.5 பொருளாதார நிலைகள்

குப்தர் காலத்தில் காமாந்தகா எழுதியது நீதிசாரா என்ற நூல் ஆகும். இந்நூல் அரச கருவூலத்தின் முக்கிய வருவாய்க்கான பல்வேறு மூலவளங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. சமுத்திரகுப்தர் மேற்கொண்ட படையெடுப்புகளுக்கான நிதி இதுபோன்ற வருவாய்களின் உபரிநிதியிலிருந்துதான் கிடைத்திருக்க வேண்டும். குப்தர் கல்வெட்டுகள் வருவாய்த் துறை குறித்து சில விவரங்களைத் தருகின்றன. அரசு ஆவணங்களை அக்ஷபதலதிக்கிருதா என்ற அதிகாரி பராமரித்தார். குப்தர் கல்வெட்டுகள் கிலிப்தா, பலி, உத்ரங்கா, உபரிகரா, இரண்யவெஷ்தி போன்ற சொற்களைக் குறிப்பிடுகின்றன. இரண்யவெஷ்தி என்றால் கட்டாய உழைப்பு என்று பொருள்.

வேளாண்மையும் வேளாண் அமைப்பும்

குப்தர் ஆட்சிக் காலத்தில் அரசு சார்பில் ஏராளமான பாசனப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக வேளாண்மை மேம்பாடு அடைந்தது. அரசு, தனிநபர்கள் ஆகியோர் நீங்கலாகவும், பிராமணர்கள், புத்த, சமண சங்கங்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட தரிசு நிலங்களிலும் வேளாண்மை மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகள் தமது பயிர்களை முறையாகப் பாதுகாக்க அறிவுறுத்தப்பட்டார்கள். பயிர்களை நாசம் செய்வோருக்கு தண்டனை வழங்கப்பட்டது. மேலும், பயிர்களைச் சுற்றியும் வேளாண் நிலங்களைச் சுற்றியும் வேலி அமைக்கப்பட்டிருந்தது.

குப்தர் காலத்தில் நெல், கோதுமை, பார்லி, கடலை, தானியம், பயறு, கரும்பு, எண்ணெய் வித்துகள் ஆகியவை பயிரிடப்பட்டன. காளிதாசர் மூலம் தென்பகுதியானது மிளகு, ஏலம் ஆகியவற்றிற்குப் புகழ்பெற்றிருந்தது தெரியவருகிறது. பழ மரங்கள் வளர்ப்பது குறித்து வராகமிகிரர் விரிவான அறிவுரைகளைத் தந்துள்ளார்.

பஹார்பூர் செப்பேடு அரசர்தான் நிலத்தின் ஒரே உரிமையாளர் என்று காட்டுகிறது. நில மானியங்கள் தரும்போதும், அதன் மீதான தனியுரிமையைத் தன்னிடமே அவர் வைத்துக் கொண்டார். தனிப்பட்ட நிலங்களின் இடமும் எல்லைகளும் ஆவணக் காப்பாளர்களாலும், அப்பகுதியின் செல்வாக்கு மிக்கவர்களாலும் அளந்து குறித்து வைக்கப்பட்டன. பஹார்பூர் செப்பேடுகளின்படி உஸ்தபாலா என்ற அதிகாரி மாவட்டத்தின் நிலப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பாதுகாத்தார். கிராமத்தில் நிலங்கள் தொடர்பான ஆவணங்களை கிராம கணக்கர் பராமரித்தார். குப்தர் காலத்தில் நிலம் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டிருந்தன.

க்ஷேத்ரா	பயிரிடக்கூடிய நிலம்
கிலா	தரிசு நிலம்
அப்ரஹதா	காடு அல்லது தரிசு நிலம்
வாஸ்தி	குடியிருக்கத் தகுந்த நிலம்
கபடசஹாரா	மேய்ச்சல் நிலம்

பல்வேறு விதமான நிலகுத்தகை முறை

நிலகுத்தகை வகை	உரிமையின் தன்மை
நிவி தர்மா	அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம் – இம்முறை வடக்கு, மத்திய இந்தியா மற்றும் வங்கத்தில் நிலவியது
நிவி தர்ம அக்சயனா	நிரந்தரமான அறக்கட்டளை – பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
அப்ரதா தர்மா	வருவாயைப் பயன்படுத்தலாம். ஆனால் அதை பிறருக்குத் தானம் செய்யமுடியாது. நிர்வாக உரிமையும் இல்லை.
பூமிசித்ராயனா	தரிசு நிலத்தை முதன்முதலாகச் சாகுபடி நிலமாக மாற்றுபவருக்குத் தரப்படும் உரிமை. இந்த நிலத்திற்குக் குத்தகையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

11th History Lesson 7 Tamil Medium.indd 106 01-12-2022 19:46:25

ஏனைய நிலக்கொடைகள்

அக்ரஹார மானியம்	பிராமணர்களுக்குத் தரப்படுவது. இது நிரந்தரமானது. பரம்பரையாக வரக்கூடியது. வரி கிடையாது.
தேவக்கிரஹார மானியம்	கோவில் மராமத்து, வழிபாடு ஆகிய பணிகளுக்காகப் பிராமணர்கள், வணிகர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் நில மானியம்.
சமயச் சார்பற்ற மானியம்	குப்தர்களுக்குக் கீழிருந்த நிலப்பிரபுக்களுக்குத் தரப்பட்ட மானியம்.

பல்வேறு வரிகளின் பட்டியல்

வரி	அதன் தன்மை
பாகா	விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்காகும்.
போகா	அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள் போன்றவை.
கரா	கிராமத்தினர் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி (இது வருடாந்திர நிலவரியின் ஒரு பகுதியல்ல)
பலி	ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியாக இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்டது. இது ஒரு ஒடுக்குமுறை வரி.
உதியங்கா	காவல் நிலையங்களின் பராமரிப்பிற்காக விதிக்கப்பட்ட காவல் வரியாக இருக்கலாம். அல்லது நீர் வரியாகவும் இருக்கலாம். எனினும், இது ஒரு கூடுதல் வரிதான்.
உபரிகரா	இதுவும் ஒரு கூடுதல் வரிதான். இது எதற்காக வசூலிக்கப்பட்டது என்பது குறித்து அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர்.
ஹிரண்யா	தங்க நாணயங்கள் மீது விதிக்கப்படும் வரி என்பது நேரடிப் பொருள். நடைமுறையில் இது சில குறிப்பிட்ட தானியங்களின் விளைச்சலில் ஒரு பங்கினை, அரசின் பங்காகப் பொருளாகவே அளிப்பதாகும்.
வாத–பூதா	காற்றுக்கும் ஆவிகளுக்கும் செய்ய வேண்டிய சடங்குகளுக்காக விதிக்கப்பட்ட பல்வேறு வரிகள்
ஹலிவகரா	கலப்பை வைத்திருக்கும் ஒவ்வொரு உழவரும் கட்ட வேண்டிய கலப்பை வரி
சுல்கா	வர்த்தகர்கள் நகரத்திற்கோ துறைமுகத்திற்கோ கொண்டுவரும் வணிகச் சரக்குகளில் அரசருக்கான பங்கு. இதைச் சுங்க, நுழைவு வரிகளுக்கு ஒப்பிடலாம்.
கிளிப்தா; உபகிளிப்தா	நிலப்பதிவின் போது விதிக்கப்படும் விற்பனை வரி

பாசனம்

மிகத் தொன்மையான காலத்திலேயே நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை இந்தியாவில் உணர்ந்திருந்தார்கள். நாரதஸ்மிருதி என்ற நூலில், வயல்களை வெள்ளங்களிலிருந்து பாதுகாத்த பந்தியா, பாசனத்திற்கு உதவிய கரா என்ற இருவகை அணைக்கரைகள் குறிப்பிடப்படுகின்றன. தண்ணீர் தேங்குவதைத் தடுக்க ஜலநிர்கமா என்ற வடிகால்கள் இருந்ததாக அமரசிம்மர் குறிப்பிடுகிறார். நதிகளிலிருந்து மட்டுமில்லாமல், ஏரிகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. குஜராத்தின் கிர்னார் மலையின் அடிவாரத்தில் இருந்த சுதர்சனா ஏரி மிகவும் புகழ்பெற்றதாகும்.

விவசாயிகளின் நிலை

விவசாயிகளின் நிலைமை கீழ் நிலையில் இருந்தது. சாதிப்பிரிவுகள் காரணமாகவும், நிலங்களும் உரிமைகளும் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதாலும் மானியங்கள் வழங்கப்பட்டதன் காரணமாகவும் அவர்கள் கொத்தடிமைகளின் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அப்போதிருந்த குத்தகை முறைப்படி குத்தகைதாரர்கள் நிலையான குத்தகைதாரர்கள் அல்ல. மாறாக, எப்போது வேண்டுமானாலும் குத்தகையை விட்டு வெளியேற்றப்படும் நிலையில் இருந்தார்கள். விவசாயிகள் பலவிதமான வரிகளையும் கட்டவேண்டி இருந்தது.

11th History Lesson 7 Tamil Medium.indd 107 01-12-2022 19:46:26

சுரங்கமும் உலோகவியலும்

குப்தர் காலத்தில் மிகவும் செழித்த தொழில்கள் சுரங்கத் தொழில், உலோகவியல் ஆகியன ஆகும். சுரங்கங்கள் இருந்தது குறித்து அமரசிம்மர், வராஹமிகிரர், காளிதாசர் ஆகியோர் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். இக்காலகட்டத்தில் பீகாரிலிருந்து இரும்புப் படிவுகள், இராஜஸ்தானிலிருந்து செம்புப் படிவுகள் ஆகியன பெருமளவில் தோண்டி எடுக்கப்பட்டன.

இரும்போடு தங்கம், செம்பு, தகரம், ஈயம், பித்தளை, வெண்கலம், மைக்கா, மாங்கனீஸ், அஞ்சனக்கல், சுண்ணாம்புக்கல், சிவப்பு ஆர்சனிக் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். விவசாயிகளுக்கு அடுத்தபடியான முக்கியத்துவம் உலோக வேலை செய்பவர்களுக்கு இருந்தது. பல்வேறு வீட்டு உபயோகப் பொருள்கள், பாத்திரங்கள், ஆயுதங்கள் தயாரிக்க உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. இரும்பின் கண்டுபிடிப்பிற்குப் பின்னர், கொழுமுனை மேம்படுத்தப்பட்டு, ஆழமான உழவிற்கு உதவியதால் இக்காலகட்டத்தில் வேளாண்மை அதிகரித்தது.

இக்காலகட்டத்தில், உலோகவியல் நுட்பங்கள் உச்சத்தில் இருந்தன என்பதை நிறுவுவதற்கு, இன்று தில்லி குதுப்மினார் வளாகத்தில் காணப்படும் மெஹ்ரோலி இரும்புத்தூண் சான்றாகக் காட்டப்படுகிறது. இது இரண்டாம் சந்திரகுப்தருடன் அடையாளம் காணப்படுகிறது. இந்த இரும்புத்தூண் பல நூற்றாண்டுகளாகத் துருப்பிடிக்காமல் அப்படியே இருக்கிறது. இது குப்தர் காலத்து உலோகவியல் கைவினைஞர்களின் திறனுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது. நாணயங்கள் வடித்தல், உலோகச் செதுக்கு வேலைப்பாடு, பானை வனைதல், சுடுமண் சிற்பங்கள், மர செதுக்கு வேலைப்பாடு ஆகியவை வேறு சில கைவினைத் தொழில்களாகும்.

முத்திரை தயாரித்தல், புத்தர் மற்றும் பிற கடவுளரின் சிலை வடித்தல் ஆகியவை இக்காலகட்டத்தில் உலோகவியலில் ஏற்பட்ட ஒரு குறிப்பிடத் தகுந்த முன்னேற்றமாகும். இரும்பு, தங்கம், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம் ஆகியவற்றை உருக்கிப் பிரித்தெடுப்பதில் ஏற்படும் இழப்பிற்கும் (சேதாரம்) சேர்த்து மக்கள் பணம் தரவேண்டியிருந்தது என்று சொல்லப்படுகிறது. நகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வணிகமும் வர்த்தகமும்

குப்தர் பொருளாதாரத்தின் வலிமைக்கு வணிகர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். சிரேஷ்டி, சார்த்தவஹா என்ற இருவேறுபட்ட வகைகளைச் சேர்ந்த வணிகர்கள் இருந்தனர். சிரேஷ்டி என்பவர் பொதுவாக ஒரே இடத்தில் தங்கியிருப்பவர். தனது செல்வம் மற்றும் வணிகத்திலும், வணிகமையத்தை நிர்வகிப்பதன் மூலமும் பெற்ற வளத்தால் மரியாதைக்குரிய நிலையில் இருந்தவர். சார்த்தவஹா என்பவர் இலாபத்திற்காக ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்தவர்.

அன்றாடம் பயன்படுத்தத் தேவையான பொருள்களிலிருந்து விலையுயர்ந்த, ஆடம்பரப் பொருள்கள் வரை வியாபாரம் செய்யப்பட்டன. மிளகு, சந்தனக்கட்டை, தந்தம், யானைகள், குதிரைகள், தங்கம், செம்பு, இரும்பு, மைக்கா ஆகியவை விற்கப்பட்டன. கைவினைக் கலைஞர்கள், வணிகர்கள், பெரு வணிக குழுக்கள் ஆகியன பற்றிக் குறிப்பிடும் செப்பேடுகள், முத்திரைகள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இதன் மூலம் இக்காலகட்டத்தில் கைவினைத் தொழில்களும் வணிகமும் செழித்திருந்ததைக் காணமுடிகிறது. வணிகக் குழுக்களில் கைவினைக் கலைஞர்கள், வணிகர்கள் இருந்தது பற்றியக் குறிப்புகள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. பொருள்களின் உற்பத்தி, அதிகரிப்பு, வணிக விரிவாக்கம் ஆகியவற்றில் வணிகக் குழுக்களின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் இருந்துள்ளது. தமது அமைப்புகளின் உள் நிர்வாகங்களைப் பொருத்தவரை இவை ஏறத்தாழ தன்னாட்சி அதிகாரம் பெற்றவைகளாக இருந்துள்ளன. இவர்களது சட்டதிட்டங்களை அரசும் மதித்தது. தனிப்பட்ட வணிகக் குழுக்கள் அனைத்தையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுமத்தினால் இந்த சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாரத ஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி ஆகியவை வணிகக் குழுக்களின் அமைப்பு, செயல்பாடு குறித்து விவரிக்கின்றன. ஒரு குழுவில் குழுத் தலைவர், இரண்டு, மூன்று அல்லது ஐந்து நிர்வாக அதிகாரிகள் இருந்ததாக இவை குறிப்பிடுகின்றன. குழுச் சட்டங்கள் எழுத்துப்பூர்வமாக ஆவணங்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும். தமது குழு உறுப்பினர்களின் தகராறுகளின் மீது தீர்ப்பு வழங்கியது குறித்து பிருகஸ்பதி ஸ்மிருதி கூறுகிறது. குழுவின் தீர்ப்பு எப்படி இருந்தாலும் அரசு ஒப்புதல் அளித்தே தீரவேண்டும். வணிகக் குழுக்களில் கைவினைஞர்களுக்கான குழுக்கள், வங்கியாளர்களுக்கான குழுக்கள், வணிகர்களுக்கான குழுக்கள் எனப் பல வித குழுக்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழும அமைப்புகள் இயங்கியதாகக் குறிப்புகள் உள்ளன.

பயணிகளின் நலன்களுக்காக நிழல் குடை, விடுதிகள், சத்திரங்கள், கோவில்கள், தோட்டங்கள், மண்டபங்கள் ஏற்படுத்தித் தரும் கொடை நடவடிக்கைகளிலும் வணிகக்குழுக்களும் குழுமங்களும் ஈடுபட்டு வந்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. மாவட்ட அளவிலான நிர்வாக அமைப்புகளில் வணிகக் குழுக்களின் தலைவர்கள் முக்கியப் பங்காற்றி வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. வணிக வங்கிகள், கவிகை வண்டி வணிகக்குழுக்கள், கைவினைஞர்கள் குழுக்களின் குழுமங்கள் அமைப்புகள் இயங்கியதாகவும் குறிப்புகள் உள்ளன. வணிகக்குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதாகவும் அறிய முடிகிறது. இதற்கான கொடையாளர்களின் பெயர்கள் இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

நிதியுடன் தொடர்புடைய மற்றொரு அம்சம் கந்துவட்டி (அதிக வட்டிக்குக் கடன் தருதல் கந்து வட்டி ஆகும்). வணிகத்தில் அதிக இலாபம் ஈட்டுவதற்காகப் பணம் கடனாகப் பெறப்பட்டு வட்டிக்கு விடப்பட்டதற்கான குறிப்புகள் இக்காலகட்டச் சான்றுகளில் காணப்படுகின்றன. குப்தர் காலத்தில் மேற்குக் கரையில் கல்யாண், சால் ஆகிய வணிகத் துறைமுகங்களும், மலபார், மங்களூர் சலோபடானா, நயோபடான, பந்தேபடானா ஆகிய வணிகச் சந்தைகளும் இயங்கியுள்ளன. வங்கத்தின் தாமிரலிப்தி கிழக்குக் கடற்கரையின் முக்கியமான வணிக மையம் என்று பாஹியான் குறிப்பிடுகிறார். இந்த வணிகத் துறைமுகங்களும் நகரங்களும் ஒரு புறம் பாரசீகம், அரபியா, பைசாண்டியம் போன்ற நாடு நகரங்களோடும் துறைமுகங்களோடும், மறுபுறம் இலங்கை, சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகளோடும் இணைக்கப்பட்டிருந்தன. இந்தியா, சீனா இடையிலான கடல் பயணத்தில் எதிர் கொள்ள நேரும் இடர்கள் குறித்து பாஹியான் குறிப்பிடுகிறார். அபூர்வமான ரத்தினக் கற்கள், மெல்லிய துணிவகைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவை இந்தியாவிலிருந்து விற்கப்பட்டன. சீனாவிலிருந்து பட்டும், இதர பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

> குப்தர்கள் அதிக எண்ணிக்கையில் தங்க நாணயங்களையும், ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையில் வெள்ளி, செம்பு நாணயங்களையும் வெளியிட்டனர். எனினும் குப்தர் காலத்திற்குப் பின்னர் தங்க நாணயங்களின் புழக்கம் குறைந்துபோனது.

7.6 பண்பாட்டு மலர்ச்சி

கலையும் கட்டடக் கலையும்

குப்தர் காலத்தில் நாகரா, திராவிடம் பாணியிலான கலைகள் வளர்ந்தன. இந்திய கட்டடக்கலை வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க, படைப்பாக்கம் கொண்ட காலமாகும். பிற்காலத்தில் கலைகள் மேம்பாடு காண்பதற்கான ஊற்றுக் கண்கள் இக்காலத்தில் தோன்றின.

குடைவரை, கட்டுமானக் கோவில்கள்

பாறைகளைக் குடைந்து கட்டப்படும் குடைவரைக் கோவில்கள் பெரும்பாலும் பழைய அமைப்புகளையேத் தொடர்ந்தன. எனினும் முகப்புப் பகுதியின் அலங்காரத்திலும், உள்பக்க தூண்களின் வடிவமைப்பிலும் விரிவான புதிய மாற்றங்களைக் கொண்டுவந்ததன் மூலம் புதுமை செய்தன. மிகவும் குறிப்பிடத்தகுந்த குடைவரைக் கோவில்கள் அஜந்தா, எல்லோரா (மஹாராஷ்டிரம்) மற்றும் பாக் (மத்தியப் பிரதேசம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. உதயகிரி குகைகளும் (ஒடிசா) இவ்வகையைச் சேர்ந்தவைதான்.

கட்டுமானக் கோவில்களில் பின்வரும் அம்சங்கள் காணப்படுகின்றன: 1. தட்டையான கூரை கொண்ட சதுரக் கோவில்கள் 2. விமானத்துடன் (இரண்டாவது மாடி) கூடிய தட்டையான கூரை கொண்ட சதுரக் கோவில்கள் 3. வளைகோட்டு கோபுரம் (சிகரம்) கொண்ட கோவில்கள் 4. செவ்வகக் கோவில்கள் 5. வட்டவடிவக் கோவில்கள்.

குடைவரைக் குகைகள் –அஜந்தா

இரண்டாவது குழுவைச் சேர்ந்த கோவில்கள் திராவிட முறையின் பல கூறுகளைக் கொண்டவையாக உள்ளன. கருவறைக்கு மேலே சிகரம் அமைக்கும் புதுமை மூன்றாவது பாணியின் சிறப்பு ஆகும். அது நாகரா பாணியின் முக்கிய அம்சமாகும்.

11th History Lesson 7 Tamil Medium.indd 109 01-12-2022 19:46:26

ஸ்தூபிகள்

இவை ஏராளமான எண்ணிக்கையில் கட்டப்பட்டன. மிகச் சிறந்த ஸ்தூபிகள் சமத் (உத்தரப்பிரதேசம்), ரத்தினகிரி (ஒடிசா), மிர்பூர்கான் (சிந்து) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

சிற்பங்கள் – கல் சிற்பங்கள்

கல் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று சாரநாத்தில் காணப்படும் நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலை. புராணச் சிற்பங்களில் மிக அழகானது உதயகிரி குகையின் நுழைவாயிலில் இருக்கும் வராஹ அவதாரச் சிலை.

உலோகச் சிற்பங்கள்

பெரிய அளவில் உலோகச் சிற்பங்களை வார்க்கும் கலையை குப்தர் காலத்து கைவினைக் கலைஞர்கள் மிகவும் கலைநுணுக்கத்தோடு செய்தார்கள். பீகாரின் நாளந்தாவில் உள்ள புத்தரின் பதினெட்டடி செம்புச் சிலை, சுல்தான்கஞ்சில் உள்ள ஏழரையடி புத்தர் சிலை ஆகிய இரண்டும் குப்தர் காலத்து உலோகச் சிற்பங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஓவியங்கள்

பொதுவாகவே குப்தர் காலத்தில் சிற்பக் கலையைவிட ஓவியக் கலையில் பலரும் ஈடுபட்டு, பேரும் புகழும் பெற்றது தெரிகிறது. குப்தரின் சுவரோவியங்கள் அஜந்தா, பாக், பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

அஜந்தா ஓவியம்

நுட்பம் என்ற அளவில், இந்த ஓவியங்கள் வரையப்பட்ட பரப்புகள் மிக எளிய முறையில் தயார் செய்யப்பட்டன. அஜந்தாவின் சுவர் ஓவியங்கள் ஃபிரெஸ்கோ எனப்படும் சுவரோவிய வகையைச் சேர்ந்தவையல்ல. ஏனெனில் ஃபிரெஸ்கோ ஓவியங்கள் சுவரின் பூச்சு ஈரமாக இருக்கும்போதே வரையப்படுபவை. ஆனால் அஜந்தாவின் சுவரோவியங்கள் பூச்சு காய்ந்தபின் வரையப்பட்டவை. அஜந்தா மற்றும் பாக்கில் காணப்படும் ஓவியங்கள் மத்தியதேச ஓவியப் பள்ளி முறையின் தலைசிறந்த ஓவியங்களாகும்.

சுடுமண் சிற்பங்களும் மட்பாண்டக் கலையும்

களிமண்ணால் செய்த சிறு உருவங்கள் மதம் சார்ந்த, மதம் சாராத நோக்கங்களுக்காகப் பயன்பட்டன. விஷ்ணு, கார்த்திகேயர், துர்கை, நாகர் மற்றும் பல ஆண், பெண் கடவுளர்களின் சிறு களிமண் உருவங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

அச்சிசத்திரா, ராய்கார், ஹஸ்தினாபூர், பஷார் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள குப்தர் காலத்து மட்பாண்டங்கள் மட்பாண்டக் கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இக்காலகட்டத்து மட்பாண்டங்களின் தனிப்பட்ட சிறப்பம்சம் "சிவப்பு மட்பாண்டங்கள்" ஆகும்.

சமஸ்கிருத இலக்கியம்

குப்தர் சமஸ்கிருதத்தை அலுவல் மொழியாக்கினார்கள். அவர்களின் அனைத்து கல்வெட்டுகளும் பட்டயங்களும் அம்மொழியில்தான் எழுதப்பட்டன. இக்காலகட்டம்தான் சமஸ்கிருத இலக்கியத்தின் உச்சகட்டமாகும்.

> பண்டைய காலத்தில் உருவான ஸ்மிருதிகள் நல்லொழுக்கம், அரசியல், கலை மற்றும் பண்பாடு என்று பல்வேறு கருப்பொருள்கள் குறித்துப் பேசிய சமய நூல்களாகும். தர்மசாஸ்திரங்களும் புராணங்களும் இந்த இலக்கியக்கட்டமைப்பின் மையப்பொருளை வடிவமைத்தன.

சமஸ்கிருத இலக்கணம்

பாணினி எழுதிய அஷ்டத்யாயி, பதஞ்சலியால் எழுதப்பட்ட மஹாபாஷ்யா ஆகிய படைப்புகளின் அடிப்படையில் குப்தர் காலத்தில் சமஸ்கிருத இலக்கணத்தின் வளர்ச்சி புலப்படுகிறது. இக்காலகட்டம் குறிப்பாக அமரசிம்மரால் அமரகோசம் என்ற சமஸ்கிருத சொற்களஞ்சியம் தொகுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. வங்கத்தைச் சேர்ந்த பௌத்த அறிஞர் சந்திரகோமியர் சந்திரவியாகரணம் என்ற இலக்கண நூலைப் படைத்தார்.

புராணங்களும் இதிகாசங்களும்

இன்று நாம் அறிந்திருக்கும் வடிவில் புராணங்கள் இந்தக் காலத்தில்தான் இயற்றப்பட்டன. இவை பிராமணர்களால் பதிவுசெய்யப்பட்ட தொன்மக் கதைகளாக இருந்தன. உண்மையில், இவை தொடக்கத்தில் பாணர்களால் பாடப்பட்டவை. பிராமணர்களின் கைகளுக்கு வந்ததும், இவை செவ்வியல் சமஸ்கிருதத்தில் மீண்டும் இயற்றப்பட்டன. இவற்றை இந்துக்களின் புனித பனுவல்களாக மாற்றும் முயற்சியாக இந்துப் பிரிவுகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் அனைத்தும் விரிவான முறையில் சேர்க்கப்பட்டன. அரச வாரிசுகள் யூகத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டன. காலம் காலமாக மக்களின் நினைவுகளின் ஊடாக நிலைத்து வந்த படைப்புகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, மீண்டும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. இவ்வாறாக மக்களின் கடந்த காலம் பிராமணிய விளக்கங்களுடன்

11th History Lesson 7 Tamil Medium.indd 110 01-12-2022 19:46:27

பதினெட்டு முக்கிய புராணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளில் பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், ஸ்கந்த புராணம், சிவமகா புராணம், மார்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், மத்ஸ்ய புராணம், ஸ்ரீமத்பகவத் புராணம் ஆகியன நன்கு அறியப்பட்டவையாகும்.

மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது. மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் மெருகேறிச் செம்மையடைந்து தமது இறுதி வடிவினைப் பெற்றன.

பௌத்த இலக்கியம்

தொடக்க கால பௌத்த இலக்கியங்கள் மக்கள் மொழியான பாலி மொழியில் இருந்தன. பின்னர் சமஸ்கிருதக் கலப்புடன் கவிதையும் வசனமுமாக மீண்டும் எழுதப்பட்டன. ஆர்ய தேவர், ஆர்ய அசங்கர் ஆகியோர் குப்தர் காலத்தின் குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர்கள் ஆவர். தர்க்க அறிவியல் சார்ந்த முதலாவது முழுமையான பௌத்த நூல் வசுபந்துவால் இக்காலகட்டத்தில் எழுதப்பட்டது. வசுபந்துவின் சீடரான திக்நாகரும் பல அரிய நூல்களை எழுதினர்.

சமண இலக்கியம்

சமணர்களின் மதநூல்களும் தொடக்கத்தில் பிராகிருத மொழியிலேயே எழுதப்பட்டன. பின்னர்தான் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. குறுகிய காலத்திலேயே சமண மதம் பல பெரிய அறிஞர்களை உருவாக்கிவிட்டது. இவர்களது முயற்சியால் சமணமதக் கோட்பாடுகளைப் பரப்பப் பல இந்து புராணங்களும், இதிகாசங்களும் சமண மதக் கண்ணோட்டத்தில் மாற்றி எழுதப்பட்டன. விமலா சமண இராமாயணத்தை எழுதினார். சித்தசேன திவாகரா சமணர்களிடையே தர்க்க சாஸ்திரத்திற்கு அடித்தளமிட்டார்.

சமயம் சாரா இலக்கியம்

சமுத்திரகுப்தர் கவிராஜா என்று புகழ்பெற்றவராவார். காளிதாசர், அமரசிம்மர், விசாகதத்தர், தன்வந்திரி போன்ற நவரத்தினங்கள் அவரது அவையை அலங்கரித்ததாகப் பரவலாக நம்பப்படுகிறது. காளிதாசர் இயற்கையை, அழகை எழுதிய கவிஞர். சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசியம் ஆகியவை இவரது புகழ்பெற்ற நாடகங்கள். சூத்ரகர் (மிருச்சகடிகம்), விசாகதத்தர் (முத்ராராட்சசம், தேவிசந்திரகுப்தம்) ஆகியோர் படைப்புகள் வெளியாகின. அதேசமயம் அதிகம் புகழ்பெறாத நாடக ஆசிரியர்கள், கவிஞர்களின் படைப்புகளும் இலக்கிய, சமூக மதிப்பீடுகளுக்கு பங்காற்றின. இக்கால கட்டத்து நாடகங்களின் ஒரு சுவையான அம்சம் என்னவென்றால், நாடகத்தின் மேட்டுக்குடி கதாபாத்திரங்கள் சமஸ்கிருதத்தில் பேச, எளிய கதாபாத்திரங்கள் பிராகிருதத்தில் பேசுகின்றன.

பிராகிருத மொழியும் இலக்கியமும்

பிராகிருதத்திற்கு அரசவைக்கு வெளியே ஆதரவு இருந்தது. குப்தர் காலத்தில் பிராகிருத மொழியின் பல்வேறு வடிவங்கள் உருவாகின. மதுரா பகுதியில் சூரசேனி என்ற வடிவமும், அவுத், பண்டேல்கண்ட் பகுதிகளில் அர்த்த மகதி வடிவமும், நவீன பீகார் பகுதியில் மகதி வடிவமும் வழக்கத்தில் இருந்தன.

நாளந்தா பல்கலைக்கழகம்

மகாவிஹாரா என்று பெயர் பெற்ற நாளந்தா இந்தியாவின் பண்டைய மகதப் பேரரசில் (இன்றைய பிகார்) இருந்த மிகப் பெரிய பௌத்த மடாலயமாகும். இது பாட்னாவிற்குத் தென்மேற்கே சுமார் 95 கிமீ தூரத்தில் பீகார் ஷெரீப் நகரத்திற்கு அருகே உள்ளது. இது பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து 1200 வரை புகழ்பெற்ற கல்விச்சாலையாக இருந்தது. இது யுனெஸ்கோவால் பாதுகாக்கப்படும் உலகின் தொன்மைச் சின்னமாகும்.

வேதக் கல்வியின் மிகவும் முறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் இந்தியாவின் தொடக்ககாலப் பல்கலைக்கழகங்கள் என்று குறிப்பிடப்படும் தட்சசீலம், நாளந்தா, விக்ரமசீலா போன்ற பெரிய கல்வி நிறுவனங்கள் அமையத் தூண்டுகோலாக இருந்தன. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் நாளந்தா பல்கலைக்கழகம் குப்தப் பேரரசின் ஆதரவிலும், பின்னர் கன்னோசியின் பேரரசரான ஹர்ஷரின் ஆதரவிலும் செழித்தது. குப்தர் காலத்திலிருந்து தொடர்ந்த பரந்த மனப்பான்மை கொண்ட பண்பாட்டு மரபு ஒன்பதாம் நூற்றாண்டு வரை வளர்ச்சியும் செழுமையும் பெற உதவியது. அதன் பின் வந்த நூற்றாண்டுகளில் படிப்படியாகச் சரிவு ஏற்பட்டது. இக்காலத்தில் வங்கத்தின் பால வம்ச அரசர்களின் ஆதரவால் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பௌத்த மதம் புகழ்பெறத் துவங்கியது.

தனது உச்சபட்ச வளர்ச்சிக் காலத்தில் இப்பல்கலைக்கழகம் அண்மையிலிருந்தும், வெகு தொலைவிலிருந்தும் மாணவர்களை ஈர்த்தது. திபேத், சீனா, கொரியா, மத்திய ஆசியா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வந்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் இப்பல்கலைக்கழகத்திற்கு இந்தோனேஷியாவின் சைலேந்திரா வம்சத்தோடு தொடர்பு இருந்தது தெரிய வருகின்றது. இவ்வம்சத்தின் அரசர் ஒருவர் இவ்வளாகத்தில் ஒரு மடாலயத்தைக் கட்டியுள்ளார்.

11th History Lesson 7 Tamil Medium.indd 111 01-12-2022 19:46:27

நாளந்தா பல்கலைக்கழகம்

பொ.ஆ. 1200இல் தில்லி சுல்தானிய மம்லூக் வம்சத்தின் பக்தியார் கில்ஜியின் படைகளால் நாளந்தா சூறையாடப்பட்டு, அழிக்கப்பட்டது. அதன்பின் மகாவிகாரம் சிறிது காலத்திற்கு சற்று தொலைவில் ஒரு தற்காலிக இடத்தில் தொடர்ந்து செயல்பட்டாலும், காலப்போக்கில் கைவிடப்பட்டு, மறக்கப்பட்டது என்று சில தகவல்கள் கூறுகின்றன. இந்தியத் தொல்லியல் துறை இப்பகுதியில் ஆய்வு நடத்தியபோது தற்செயலாக இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. முறையான அகழ்வாய்வு 1915இல் ஆரம்பித்தது. அப்போது 12 ஹெக்டேர் பரப்பில் (30 ஏக்கர்) அமைந்திருந்த பதினோரு மடாலயங்களும், ஆறு செங்கல் கோவில்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் பின்னர் ஏராளமான சிற்பங்கள், நாணயங்கள், முத்திரைகள், செப்பேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையனைத்தும் அருகில் உள்ள நாளந்தா தொல்லியல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. நாளந்தா இன்று ஒரு மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக உள்ளது. பௌத்த சுற்றுலா வட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அண்மையில் இந்தியா மற்ற தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உதவியோடு இப்பல்கலைக்கழகத்தைப் புதுப்பித்துள்ளது.

குப்தர் கால அறிவியல்

கணிதமும், வானவியலும்

சுழியம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்தது, அதன்விளைவாக பதின்ம இலக்க முறை கண்டுபிடித்தது ஆகிய பெருமைகள் இக்காலகட்டத்தின் அறிவியலாளர்களையேச்சாரும். சூரிய சித்தாந்தா என்ற நூலில் ஆரியபட்டர் (பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆறாம் நூற்றாண்டின் துவக்கம் வரை) சூரிய கிரகணங்களின் உண்மையான காரணங்களை ஆராய்ந்தார். பூமியின் சுற்றளவு குறித்த கணக்கீட்டில் ஆரியபட்டர் கணிப்பு நவீன மதிப்பீட்டிற்கு மிக நெருக்கமாக உள்ளது. பூமி ஒரு அச்சில் தன்னைத் தானே சுற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்த முதல் வானவியலாளர் அவர்தான். கணிதம், கோணவியல், இயற்கணிதம் ஆகியவற்றைப் பேசும் ஆரியபட்டீயம் என்ற நூலை அவர் எழுதினார்.

வராகமிகிரரின் (ஆறாம் நூற்றாண்டு) பிருஹத் சம்ஹிதா என்ற நூல் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக்களஞ்சியமாகும். பஞ்ச சித்தாந்திகா, பிருஹத் ஜாதகா ஆகியவை இவரது மற்ற படைப்புகளாகும். பிரம்மகுப்தர் (ஆறாம் நூற்றாண்டின் இறுதி, ஏழாம் நூற்றாண்டின் துவக்கம்) கணிதம் மற்றும் வானவியலுக்கான முக்கிய நூல்களான பிரும்மஸ்புத – சித்தாந்தா, கண்டகாத்யகா ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

மருத்துவ அறிவியல்

மருந்துகள் தயாரிப்பதற்கு உலோகங்களைப் பயன்படுத்துதல், பாதசரம் மற்றும் இரும்பு ஆகியவற்றின் பயன்பாடு குறித்து வராஹமிகிரரும் பிறரும் எழுதியிருப்பதைப் பார்க்கும்போது குப்தர் ஆட்சிக் காலகட்டத்தில் வேதியியலில் பெரும் முன்னேற்றம் நிகழ்ந்திருப்பது தெரிகிறது. நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியவற்றைக் கூறுகிறது. பாலகாப்யா எழுதிய ஹஸ்த்யாயுர்வேதா என்ற நூல் விலங்குகளுக்கான மருத்துவ நூலாகும். இது குப்தர் காலத்தில் மருத்துவ அறிவியல் எந்த அளவிற்கு வளர்ந்து இருந்தது என்பதைக் காட்டுகிறது.

7.7 குப்தப் பேரரசின் வீழ்ச்சி

குப்த வம்சத்தின் கடைசி அரசராக அறியப்படுபவர் விஷ்ணுகுப்தர். இவர் பொ.ஆ. 540 முதல் 550 வரை ஆட்சி செய்தார். உள்நாட்டுப் பூசல்களும், அரச குடும்பத்தில் கருத்து வேறுபாடுகளும் அதன் வீழ்ச்சிக்குக் காரணமாயின. புத்தகுப்தர் என்ற குப்த அரசர் ஆட்சிக்காலத்தில் மேற்கு தக்காணத்தின் வாகடக அரசரான நரேந்திரசேனா மால்வா, மேகலா மற்றும் கோசலா மீது படையெடுத்தார். பின்னர் மற்றொரு வாகடக அரசரான ஹரிசேனர் மாளவத்தையும் குஜராத்தையும் குப்தர்களிடமிருந்து கைப்பற்றினார். இரண்டாம் சந்திரகுப்தரின் பேரனான ஸ்கந்தகுப்தரின் ஆட்சியின்போது ஹூணர்கள் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்தார்கள். ஸ்கந்தகுப்தர் ஹூணர்களை விரட்டுவதில் வெற்றி பெற்றாலும், அதன் விளைவுகள் பேரரசின் நிதி

11th History Lesson 7 Tamil Medium.indd 112 01-12-2022 19:46:28

நிலையை நலிவுறச் செய்தது. ஆறாம் நூற்றாண்டில், ஹூணர்கள் மாளவம், குஜராத், பஞ்சாப், காந்தாரா ஆகியவற்றைக் கைப்பற்றினர். ஹூணர் படையெடுப்பால், நாட்டின் மீது குப்தர்களின் பிடி தளர்ந்தது. மாளவத்தின் யசோதர்மன், உத்திரபிரதேசத்தின் முகாரிகள், சௌராஷ்டிரத்தின் மைத்ரகாக்கள் போன்று பல சிற்றரசர்கள் உருவாக ஆரம்பித்தனர். குப்தப் பேரரசு பெருமளவு சுருங்கி மகதத்தில் மட்டும்தான் இருந்தது. பிற்காலத்திய குப்த அரசர்கள் பௌத்தத்தைக் கடைப்பிடித்ததும் இவர்கள் பேரரசை விரிவுபடுத்துவதிலோ, ராணுவப் படையெடுப்புகளிலோ கவனம் செலுத்தாததும் பேரரசைப் பலவீனப்படுத்தியது. அத்துடன், வெளிநாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகள், சிற்றரசர்கள் பலமாக உருவானது ஆகியன அனைத்தும் சேர்ந்து குப்தப் பேரரசு வீழக் காரணமாகின. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரரசு சிதைந்து பிராந்தியத் தலைவர்களால் ஆளப்பட்ட சிறுசிறு பகுதிகளானது.

நிலப்பிரபுத்துவம்: நிலப்பிரபுத்துவம் என்ற சமூக அமைப்பு இந்தியாவின் மத்தியகால சமூகத்தின் ஒரு பண்புநிலை ஆகும். வரலாற்றாளர் ஆர்.எஸ். சர்மா பின்வரும் நிலப்பிரபுத்துவ பண்புகளைப் பட்டியலிடுகிறார்: அரசர் அளிக்கும் நில மானியம், நிதி, நீதி உரிமைகளை பயனாளிகளுக்கு மாற்றித்தருதல்; விவசாயிகள், கலைஞர்கள், வணிகர்கள் மீது நில உடைமையாளர்களுக்கு உரிமை அளித்தல்; அடிக்கடி நிகழ்ந்த கட்டாய உழைப்பு நிகழ்ச்சிகள்; உபரியை அரசு எடுத்துக்கொள்ளல்; வணிகத்திலும், நாணயம் அச்சடித்தலிலும் வீழ்ச்சி; அதிகாரிகளின் ஊதியத்தை நில வருவாய் வசூல் மூலம் பெற்றுக்கொள்ள அனுமதிப்பது; சமந்தர்கள் (நிலப்பிரபுத்துவ துணைநிலை ஆட்சியாளர்கள்) அதிகாரங்கள் அதிகரித்தல்.

பாடச் சுருக்கம்

- மௌரியப் பேரரசிற்குப் பின்னர், குப்தப் பேரரசு பெரும் ஆற்றல் மிக்கதாக உருவானது.
- ஸ்ரீகுப்தர், குப்தப் பேரரசைத் தோற்றுவித்தார்.
- சமுத்திரகுப்தர் (335–375) பல பகுதிகளைக் கைப்பற்றி, பேரரசை ஒருங்கிணைத்தார்.
- இரண்டாம் சந்திரகுப்தர் தனது படையெடுப்புகளின் மூலமும் திருமண உறவுகள் மூலமும், பேரரசை மேலும் விரிவாக்கினார்.
- குமாரகுப்தர் நாளந்தா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.
- ஸ்கந்தகுப்தர் ஹூணர்களை விரட்டியடித்தார். ஆனால் இப்போரின் காரணத்தால் அவரது அரசுக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டது.
- குப்த அரசர்கள் தாம் தெய்வாம்சம் படைத்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். அவர்களுக்கு அமைச்சர்கள் குழுவும், அதிகாரிகள் குழுவும் உதவி செய்தன.
- குப்த அரசர்கள் கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவற்றை ஆதரித்தனர். அவர்களது அவையைக் காளிதாசர், அரிசேனர், அமரசிம்மர், தன்வந்திரி, வராகமிகிரர் போன்றோர் அலங்கரித்தனர்.
- ஹூணர்களின் படையெடுப்பால் கருவூலம் காலியானது, பிற்கால குப்த அரசர்கள் வலிமை குன்றியது ஆகியன குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்களாயின.

பயிற்சி

Q8DXE

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

(அ) இலக்கியச் சான்றுகள்
(ஆ) கல்வெட்டு சான்றுகள்
(இ) நாணயச் சான்றுகள்
(ஈ) கதைகள், புராணங்கள்

2. பொருத்துக

எழுதியவர்		இலக்கியப் படைப்பு
(i) தன்வந்திரி	–	1. சூரிய சித்தாந்தா
(ii) வராஹமிகிரா	–	2. அமரகோஷா
(iii) ஆர்யபட்டர்	–	3. பிருஹத்சம்ஹிதா
(iv) அமரசிம்மா	–	4. ஆயுர்வேதா

(அ) 4, 3, 1, 2 (ஆ) 4, 1, 2, 3
(இ) 4, 2, 1, 3 (ஈ) 4, 3, 2, 1

11th History Lesson 7 Tamil Medium.indd 113 01-12-2022 19:46:28

3. __________க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

(அ) முதலாம் சந்திரகுப்தர்
(ஆ) சமுத்திரகுப்தர்
(இ) இரண்டாம் சந்திரகுப்தர்
(ஈ) ஸ்ரீகுப்தர்

4. __________ என்ற சீனப் பயணி பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

(அ) இட்சிங் (ஆ) யுவான்–சுவாங்
(இ) பாஹியான் (ஈ) வாங்–யுவான்–சீ

5. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?

(i) உதயகிரி குகை (ஒடிசா)
(ii) அஜந்தா – எல்லோரா குகை (மகாராஷ்டிரா)
(iii) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா)
(iv) பாக் (மத்தியப் பிரதேசம்)
(அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv

6. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் __________

(அ) திக்நாகர் (ஆ) வசுபந்து
(இ) சந்திரகாமியா (ஈ) வராகமிகிரர்

II. குறுகிய விடை தருக.

1. ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியலைக் காலவரிசைப்படி எழுதுக.
2. ஹூணர் குறித்து நீங்கள் அறிவது என்ன?
3. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவதைச் சுருக்கமாக எழுதுக.
4. பௌத்த அறிஞர்களையும் அவர்களது படைப்புகளையும் பட்டியலிடுக.
5. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.

III. சுருக்கமான விடை தருக.

1. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைக் கூறுக.
2. விக்ரமசீலா பல்கலைக்கழகம் குறித்துச் சிறு குறிப்பு தருக.
3. குப்தர் காலத்தில் சமண இலக்கியம் வளர்ந்தது குறித்து விவரிக்கவும்.
4. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
5. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்கள் யாவை? ஏதேனும் மூன்று காரணங்களைக் கூறுக.

IV. விரிவான விடை தருக.

1. "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்". விவாதிக்கவும்
2. குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம், நிலகுத்தகை முறைகள் குறித்து விவரிக்கவும்.
3. குப்தர் காலத்து வணிகக் குழுக்களின் பங்கை ஆய்வு செய்க.

மூலநூல்கள்

1. R. Champakalakshmi, *Trade, Ideology and Urbanization in South India 300 BC to 1300*, Oxford University Press, 1996
2. Kulke Herman (Ed), *The State in India (1000-1700), Oxford in India Readings: Themes In Indian History*, Oxford University Press, 1997.
3. Romila Thapar, *A History of India*, Vol. I, Penguin, 1980.
4. Romila Thapar, *Early India: From the Origins to AD 1300* (Penguin Paperback), 2003.
5. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India from the Stone Age to the 12th Century*, Pearson, 2009
6. R.S. Sharma, *Indian Feudalism*, Macmillan, 1980
7. Kesavan Veluthat, *The Political Structure of Early Medieval South India*, Orient Longman, 1993.

இணையதள ஆதாரங்கள்

1. https://en.wikipedia.org/wiki/Gupta_Empire
2. https://www/ancient.eu/Gupta_Empire

11th History Lesson 7 Tamil Medium.indd 114 01-12-2022 19:46:28

கலைச்சொற்கள்

மேலாதிக்கம்	hegemony	dominance
அகராதி தயாரிப்பவர்	lexicographer	compiler of a dictionary
அடைமொழி	epithet	title
கருவூலம்	coffer	treasury
எப்போதும் நிலைத்திருக்கும்	perpetual	everlasting
மிகவும் அதிகமான	exorbitant	excessive
முகப்பு	facade	front
சூறையாடு	ransack	plunder
கருத்து வேற்றுமை	dissension	disagreement
இடையறாத	incessant	ceaseless

இணையச் செயல்பாடு

குப்தர்

ஊடாடும் காலவரிசையைப் பயன்படுத்திப்பேரரசுகளை அறிவோமா !



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "Timetoast" என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்லவும்.
- Timetoast பக்கம் திரையில் தோன்றும்.
- Search என்பதைத் தேர்வு செய்ததும் திரையில் தோன்றும் பெட்டியில் காலவரிசையைத் தட்டச்சு செய்யவும். (எ.கா. Gupta period)
- பேரரசின் காலவரிசை மற்றும் நிகழ்வுகள் காட்சிப்படங்களாகத் தோன்றும். அவற்றைச் சொடுக்கி வரலாற்றை அறிக.

உரலி

இணையம் : https://www.timetoast.com/categories

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

11th History Lesson 7 Tamil Medium.indd 115 01-12-2022 19:46:28

அலகு 8

ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி

734W1

கற்றல் நோக்கங்கள்

I ஹர்ஷர்

- ஹர்ஷரின் முன்னோர்கள் மற்றும் அவரது சமகாலத்தவரைப் பற்றி அறிதல்
- ஹர்ஷரின் படையெடுப்புகளைப் பற்றி அறிதல்
- ஹர்ஷரின் நிர்வாக முறையைப் புரிந்துகொள்ளுதல்
- ஹர்ஷரின் மதக் கொள்கையைப் பற்றி அறிதல்
- சீனப் பயணி யுவான் சுவாங்கின் குறிப்புகள் மூலமாக இந்திய மக்களின் சமூக பண்பாட்டு வாழ்க்கையை அறிதல்

II பாலர்கள்

- கிழக்கு இந்தியாவில் பிரதேச சக்தியாக வலுவான ஆட்சியதிகாரம் கொண்டு விளங்கிய பாலர்களின் வரலாற்றை அறிதல்
- பாலர்களில் முக்கியமான ஆட்சியாளர்களாக விளங்கிய தர்மபாலர், தேவபாலர், முதலாம் மகிபாலர் ஆகியோர் நிர்வாகத்திற்கு ஆற்றிய பங்கு குறித்து அறிதல்
- கங்கைச் சமவெளியில் மகாயான புத்தமதத்தைப் பரப்பியதில் பாலர்களின் குறிப்பிட்ட பங்கினைப் புரிந்துகொள்வது
- இலக்கியம், கலை, கட்டடக் கலை ஆகியவற்றுக்குப் பாலர்கள் ஆற்றிய பங்கினை அறிதல்

III ராஷ்டிரகூடர்கள்

- ராஷ்டிரகூடர்களின் சிறப்பை அறிதல்
- முதலாம் கிருஷ்ணர் முதல் மூன்றாம் கிருஷ்ணர் வரை திறமையாக அரசாண்ட ராஷ்டிரகூட அரசர்கள் வடதிசை நோக்கிய பல்லவ அரசின் விரிவாக்கத்தைத் தடுத்தனர் என்பதை அறிதல்
- ராஷ்டிரகூட அரசர்களின் ஆதரவில் கன்னட இலக்கியத்தின் வளர்ச்சி குறித்து அறிதல்

I ஹர்ஷர்

அறிமுகம்

குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் வட இந்தியா பல சிற்றரசுகளாகச் சிதறுண்டது. ஹூணர்கள் ஆட்சி செய்த பகுதிகளைத் (தற்கால பஞ்சாப், ராஜஸ்தான், மாளவம்) தவிர பல சிற்றரசுகள் தோன்றியதின் வாயிலாக பிராந்திய வட்டார அடையாளங்கள் வெளிப்பட்டன. மைத்ரேயர்கள் சௌராஷ்டிரத்தில் (குஜராத்) வல்லபியை தலைநகராகக் கொண்டு பலம் மிக்க அரசை உருவாக்கியிருந்தனர். ஆக்ராவும் அயோத்தியும் மௌகரியர்களால் சுதந்திரமான இறையாண்மை மிக்க அரசாக உருவாக்கப்பட்டது. மேற்கு தக்காணத்தில் வாகாடகர்கள் தங்களது ஆட்சியதிகாரத்தை மீட்டெடுத்திருந்தனர். இந்த அரசுகளுக்கிடையில் அரசியல் போட்டிகளும் மோதல்களும் இருந்துவந்தபோதிலும் தில்லிக்கு வடக்கே சட்லஜ், யமுனை நதிகளுக்கிடையில் இருந்த தானேஸ்வரம் புஷ்யபூதிகளால் சுதந்திரமான ஆட்சியதிகாரம் கொண்ட அரசாக உருவாக்கப்பட்டது. ஹர்ஷரின் ஆட்சியில் அது முக்கியத்துவத்தை அடைந்தது. குப்தர்களின் அரசிற்கு இணையாக இருந்த பெரிய அரசை ஹர்ஷர் பொ.ஆ. 606 முதல் 647 வரை ஆட்சி செய்தார்.

சான்றுகள்

இலக்கியச் சான்றுகள்

- பாணரின் ஹர்ஷ சரிதம்
- யுவான் சுவாங்கின் சியூகி

11th History Lesson 8 Tamil Medium.indd 116 20-12-2022 15:23:38

செப்புப் பட்டயம், கல்வெட்டுச் சான்றுகள்

- மதுபன் செப்புப் பட்டயக் குறிப்புகள்
- சோன்பட்டு செப்பு முத்திரைக் குறிப்புகள்
- பன்ஸ்கெரா செப்புப் பட்டயக் குறிப்புகள்
- நாளந்தா களிமண் முத்திரைக் குறிப்புகள்
- ஐஹோல் கல்வெட்டு

உங்களுக்குத் தெரியுமா? பாணரின் ஹர்ஷ சரிதம் ஒரு அரசரின் முதல் வாழ்க்கை வரலாற்று நூலாகும். அது இந்தியாவில் புதிய இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தது.

8.1 புஷ்யபூதிகள்

வர்த்தன வம்சத்தை நிறுவியவர் புஷ்யபூதி. அவர் தானேஸ்வரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். குப்தப் பேரரசர்களின் கீழ் படைத் தளபதியாக இருந்த அவர் குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆட்சியதிகாரத்தைப் பிடித்தார். பிரபாகர வர்த்தனர் (பொ.ஆ. 580–605) ஆட்சியில் அமர்ந்த பின்னர் புஷ்யபூதிகளின் குடும்பம் வலிமை மிக்கதாகவும் அதிகாரம் மிக்கதாகவும் மாறியது. பிரபாகர வர்த்தனர் கூர்ஜரர்கள், ஹூணர்கள் ஆகியோருக்கு எதிராகப் போரிட்டுத் தன் ஆட்சியை மாளவம் மற்றும் குஜராத் வரை நிறுவினார். அவர் கன்னோசியை (தற்போதைய கான்பூருக்கு அருகிலுள்ள) ஆண்ட மௌகாரி வம்சத்தைச் சேர்ந்த கிரகவர்மனுக்குத் தன் மகளான ராஜ்யஸ்ரீயைத் திருமணம் செய்துகொடுத்து கன்னோசியை தன் கூட்டாளியாக்கிக் கொண்டார். ஒரு பேரரசை உருவாக்கும் பிரபாகர வர்த்தனரின் கனவு அவரது இளைய மகனான ஹர்ஷவர்த்தனரால் நிறைவேறியது.

பிரபாகர வர்த்தனரின் மூத்த மகனான ராஜ்ய வர்த்தனர் (பொ.ஆ. 605–606); தன் தந்தை இறந்த பிறகு ஆட்சியில் அமர்ந்தார். வங்காளத்தை ஆண்டுவந்த கௌட அரசன் சசாங்கனால் இராஜ்ய வர்த்தனர் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். இதன் விளைவாக அவரது தம்பி ஹர்ஷவர்த்தனர் தானேஸ்வரத்தின் அரசரானார். ஹர்ஷர் அண்டையிலிருந்த சிற்றரசுகளின் பலவீனத்தை அறிந்து கொண்டு அவற்றின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைத் தன் பேரரசோடு இணைத்துக் கொண்டார். ஹர்ஷர் தனது தலைநகரை தானேஸ்வரத்திலிருந்து கன்னோசிக்கு மாற்றினார். தானேஸ்வரம் வடமேற்கிலிருந்து வரும் தாக்குதல்களுக்கு ஏதுவாக அமைந்திருந்தது. கன்னோசி மேற்கு கங்கை சமவெளியில் செழிப்பான வேளாண் பகுதியில் அமைந்திருந்தது.

கன்னோசியின் அரசராக ஹர்ஷர்:
கன்னோசியின் (மௌகரி அரசின் தலைநகர்) முக்கியமானவர்கள் தங்களது அமைச்சரான போனியின் அறிவுரையின்படி ஹர்ஷரை அரியணையில் அமர அழைப்பு விடுத்தனர். தயக்கம் காட்டிய ஹர்ஷர் அவலோகிதேஷ்வர போதிசத்வரின் அறிவுரையின்படி ராஜ்புத்திரர், சிலாதித்யா ஆகிய பட்டங்களுடன் ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். ஹர்ஷரின் ஆட்சியின் கீழ் தானேஸ்வரமும் கன்னோசியும் ஒன்றாக இணைந்தன. பின்னர் ஹர்ஷர் தனது தலைநகரைக் கன்னோசிக்கு இடம் மாற்றிக் கொண்டார்.

8.2 ஹர்ஷரின் படையெடுப்புகள்

ஹர்ஷர் பொ.ஆ. 606இல் ஆட்சியில் அமர்ந்ததும் முதலில் அவரது சகோதரியான ராஜ்யஸ்ரீயின் விவகாரத்தில் கவனம் செலுத்தினார். ராஜ்யஸ்ரீ தன்னை அடைய முயன்ற மாளவ அரசன் தேவகுப்தரின் தீய திட்டங்களுக்கு அஞ்சி விந்திய மலைப் பகுதிக்குத் தப்பிச் சென்றார். ஹர்ஷர் அந்தப் பகுதிக்குச் சென்று தேவகுப்தரைக் கொன்று தீக்குளிக்க முயன்ற தனது சகோதரியைக் காப்பாற்றினார். ஹர்ஷர் ராஜ்யஸ்ரீக்கு ஆறுதல் அளித்து தன்னுடன் கன்னோசி அரசிற்கு அழைத்து வந்தார். பின்னர் ராஜ்யஸ்ரீ பௌத்த மதத்தைத் தழுவினார். ஹர்ஷர் பௌத்த மதத்தைத் தழுவுவதற்கும் அவரே காரணமாக விளங்கினார்.

ஹர்ஷர் –நாணயம்

பாணரின் கூற்றின்படி பேரரசு ஒன்றை உருவாக்கும் முயற்சியாக ஹர்ஷர் பின் வரும் அரசர்களுக்கு சரணடையவோ அல்லது எதிர்த்துப் போரிடவோ வாய்ப்பினை அளித்து இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பினார்.

1. வங்காளத்தை ஆண்ட கௌட அரசன் சசாங்கன்
2. வல்லபியை ஆண்ட மைத்ரேயர்கள்; புரோச் பகுதியை ஆண்ட கூர்ஜரர்கள்
3. தக்காணத்தை ஆண்ட சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி

11th History Lesson 8 Tamil Medium.indd 117 20-12-2022 15:23:38

4. சிந்து, நேபாளம், காஷ்மீர், மகதம், ஒத்ரா (வடக்கு ஒடிசா), கொங்கோடா (பண்டைய ஒடிசாவின் ஒரு பகுதி) ஆகிய பகுதிகளை ஆண்ட அரசர்கள்.

ஹர்ஷரின் உடனடித் தேவை சசாங்கனைப் பழி வாங்குவதாக இருந்தது. தற்போதைய அஸ்ஸாம் நிலப் பகுதியான காமரூபத்தின் அரசனான பிரகியோதிஷருடன் அவர் கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார். இருந்தாலும், ஹர்ஷருக்கும் சசாங்கனுக்குமிடையில் நடந்த போர் குறித்த விவரம் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் சசாங்கனின் மறைவிற்குப் பிறகே மகதம், கௌடம், ஒத்ரா, கொங்கோடம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கௌடப் பேரரசை ஹர்ஷர் வெற்றிகரமாகத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

சசாங்கன் –நாணயம்

ஹர்ஷருக்கும் மைத்ரேயர்களுக்கும் இடையில் நிலவி வந்த பகைமை ஹர்ஷரின் மகளுக்கும் துருவபட்டருக்கும் நடந்த திருமண உறவின் மூலம் முடிவிற்கு வந்தது. பின்னர் வல்லபி அரசு ஹர்ஷரின் ஆட்சியின் கீழ் கூட்டணி துணை அரசாக மாறியது.

சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி

ஹர்ஷர் தனது ஆட்சியதிகாரத்தை தெற்கில் தக்காணப் பகுதிக்கு விரிவுபடுத்த முனைந்தார். தக்காணத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி ஹர்ஷரைத் தோற்கடித்தார். ஹர்ஷரை வெற்றி கொண்டதன் நினைவாகப் புலிகேசி "பரமேஷ்வரர்" என்ற பட்டத்தைப் பெற்றார். புலிகேசியின் தலைநகரான வாதாபியில் காணப்படும் கல்வெட்டுக் குறிப்புகள் இந்த வெற்றிக்குச் சான்றாக விளங்குகின்றன.



இரண்டாம் புலிகேசி (நவீனச் சித்தரிப்பு)

ஹர்ஷப் பேரரசின் எல்லைகள்

ஹர்ஷர் நாற்பத்தோரு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவரது ஆட்சிப் பகுதி, ஜலந்தர் (பஞ்சாபில் உள்ளது), காஷ்மீர், நேபாளம், வல்லபி ஆகியவற்றை உள்ளடக்கியது. வங்காளத்தை ஆண்ட சசாங்கன் ஹர்ஷருடன் பகைமை கொண்டிருந்தார். ஹர்ஷரது பேரரசு அஸ்ஸாம், வங்காளம், பீகார், கன்னோசி, மாளவம், ஒரிசா, பஞ்சாப், காஷ்மீர், நேபாளம், சிந்து ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தது எனக் கூறப்பட்டாலும் அவரது உண்மையான ஆளுகை கங்கை, யமுனை ஆகிய நதிகளுக்கிடையில் அமைந்திருந்த பிரதேசத்தைக் கடந்து செல்லவில்லை. அவரது மறைவிற்குப் பிறகு ஹர்ஷரின் பேரரசு சிற்றரசுகளாக சிதறியது.

ஹர்ஷரின் சீன உறவு

ஹர்ஷர் சீனாவுடன் நேசமான உறவைக் கொண்டிருந்தார். அவரது சமகால டான்ங் (Tang) பேரரசர் டாய் சுங், பொ.ஆ. 643ஆம் ஆண்டிலும் அடுத்து 647ஆம் ஆண்டிலும் ஹர்ஷரது அரசவைக்கு தனது தூதுக்குழுவை அனுப்பினார். இரண்டாவது முறை வந்த போது ஹர்ஷர் அண்மையில் இறந்திருந்ததை சீனத் தூதுவர் அறிந்தார். ஹர்ஷருக்குப் பிறகு ஆட்சியதிகாரம் தகுதியற்ற ஒரு நபரால் கைப்பற்றப்பட்டதை அறிந்த சீனத் தூதர் அபகரித்த அரசனை அகற்றும் பொருட்டுப் படை திரட்ட நேபாளத்திற்கும் அஸ்ஸாமிற்கும் விரைந்தார். பின்னர் அந்த அரசன் சிறைப்பிடிக்கப்பட்டுச் சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நிர்வாகம்

வரலாற்றாசிரியர் பர்ட்டன் ஸ்டெய்னின் கூற்றுப்படி, மையப்படுத்தப்பட்ட அரசு நிர்வாகம் என்பது வல்லமை மிக்கவர்களாக இருந்த குப்தர்களின் ஆட்சிக் காலத்திலும்கூட இருந்திருக்கவில்லை. அது பாடலிபுத்திரம், மதுரா ஆகிய நகரங்களுக்கிடையிலிருந்த கங்கைச் சமவெளிக்குள்ளாகச் சுருக்கப்பட்டிருந்து. அந்தப் பகுதிக்கு அப்பால் மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் காணப்படவில்லை. குப்தர்களுக்கும் வர்த்தனர்களுக்கும் இடையில் காணப்பட்ட ஒரே வேறுபாடு குப்தர்களுக்கு ஹூணர்கள் போன்ற வலுவான எதிரிகள் இருந்தனர்; வர்த்தனர்களுக்கு அத்தகைய எதிரிகள் இருக்கவில்லை என்பதுதான்.

பொ.ஆ. 632ஆம் ஆண்டின் செப்புப் பட்டயக் குறிப்புகள் இரண்டு பிராமணருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. அளிக்கப்பட்ட கொடைக்குப் பாதுகாவலர்கள் எனச் சில அரசதிகாரம் பெற்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலர் மஹாசமந்தர்கள் எனப்பட்டனர். அவர்கள் அரசருக்கு அணுக்கமாக

11th History Lesson 8 Tamil Medium.indd 118 20-12-2022 15:23:39

11th History Lesson 8 Tamil Medium.indd 119 20-12-2022 15:23:39

இருந்தபோதிலும் கீழ்நிலையில் வைத்தே அறியப்பட்டனர். ஏனையோர் சுயேச்சையான மகாராஜாக்களாக இருந்த போதிலும் அவர்கள் ஹர்ஷருக்குக் கப்பம் கட்டக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சிற்றரசர்களே ஆவர். இவர்களைத் தவிர மற்றொரு வகையான ஆட்சியாளர்களும் இருந்தனர். அவர்கள் ஹர்ஷருக்குத் தங்கள் விசுவாசத்தை உறுதி செய்ததுடன் அவருக்குச் சேவை புரியத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துக் கொண்டனர். வட இந்தியாவில் ஹர்ஷரது ஆட்சியதிகாரத்தின் தன்மை இவ்வாறாகவே இருந்தது.

அமைச்சரவை

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையின் அமைப்பு குப்தர்களின் காலத்தை ஒத்திருந்தது. பேரரசருக்கு அவரது கடமைகளை ஆற்றுவதில் அமைச்சரவை உதவி செய்தது. அரசரைத் தேர்ந்தெடுப்பதிலும் அரசின் அயலுறவுக் கொள்கையை வகுப்பதிலும் அமைச்சரவை முக்கியப் பங்காற்றியது. முதன்மை அமைச்சர் பதவியே அமைச்சரவையில் மிக முக்கியமான பதவியாகும்.

முக்கிய நிர்வாக அதிகாரிகள்

1. அவந்தி	–	அயலுறவு மற்றும் போர் விவகாரங்களுக்கான அமைச்சர்
2. சிம்மானந்தா	–	படைத் தளபதி
3. குந்தலா	–	குதிரைப்படைத் தலைவர்
4. ஸ்கந்தகுப்தர்	–	யானைப் படைத் தலைவர்
5. திர்கத்வஜர்	–	அரச தூதுவர்கள்
6. பானு	–	ஆவணப் பதிவாளர்கள்
7. மஹாபிரதிஹரர்	–	அரண்மனைக் காவலர்களின் தலைவர்
8. சர்வகதர்	–	உளவுத் துறை அதிகாரி

வருவாய் நிர்வாகம்

பாகா, ஹிரண்யா, பலி என மூன்று வகையான வரிகள் ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் வசூலிக்கப்பட்டன. பாகா என்ற நிலவரி பொருளாகச் செலுத்தப்பட்டது. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நில வரியாக வசூலிக்கப்பட்டது. ஹிரண்யா என்பது விவசாயிகளாலும் வணிகர்களாலும் பணமாக செலுத்தப்பட்ட வரியாகும். பலி என்ற வரியைப் பற்றி குறிப்புகள் ஏதும் இல்லை. அரசுக்குச் சொந்தமான நிலம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

பாகம் 1	அரசு விவகாரங்களை நடைமுறைப் படுத்துவதற்கானது
பாகம் 2	அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோருக்கு ஊதியம் வழங்குவதற்கானது
பாகம் 3	அறிவில் சிறந்தவர்களுக்கு வெகுமதி அளிப்பதற்கானது
பாகம் 4	மத நிறுவனங்களின் அறச் செயல்களுக்கு அளிப்பதற்கானது

நீதி நிர்வாகம்

குற்றவியல் சட்டங்கள் குப்தர்கள் காலத்தைக் காட்டிலும் கடுமையானதாக இருந்தன. இச்சட்டங்களை விசாரித்து நீதி வழங்க மீமாம்சகர்கள் எனப்பட்டோர் நியமிக்கப்பட்டனர். நாடு கடத்தப்படுவதும் உடல் உறுப்புகள் வெட்டப்படுவதும் வழக்கமான தண்டனைகளாக இருந்தன. கடும் சோதனைகளின் அடிப்படையிலான வழக்கு விசாரணை நடைமுறையில் இருந்தது. சட்ட மீறல்களுக்கும் அரசனுக்கு எதிராக சதி செய்வதற்கும் ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சீனப் பயணியான யுவான் சுவாங் ஏறத்தாழ பதிமூன்று ஆண்டு காலம் (பொ.ஆ. 630–643) இந்தியாவில் கழித்தார். சீனாவிற்குக் கொண்டு செல்வதற்கெனப் புனித நூல்களையும் பழைய நினைவுச் சின்னங்களையும் சேகரித்தார். "பயணிகளின் இளவரசர்" என அறியப்பட்ட அவர் புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய முக்கியமான புனித மையங்களுக்கு சென்றார். அவரது முக்கியமான நூலான சி–யூ–கி ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தின் போது நிலவிய சமூகம், பொருளாதாரம், மதம், பண்பாடு ஆகியவை குறித்த விரிவான தகவல்களை அளிக்கிறது.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகள் வலுவாக இருந்ததால் நாடு முழுவதும் சட்டம், ஒழுங்கு பராமரிக்கப்பட்டது. ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த முக்கியமான தண்டனைகளையும் நீதி விசாரணை முறைகளையும் யுவான் சுவாங் பதிவு செய்துள்ளார். கடுமையான குற்றங்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்கப்படுவதே நடைமுறையாக இருந்தது. ஆனால் மரணதண்டனை தவிர்க்கப்பட்டது. சமூக ஒழுக்கத்திற்கு எதிரான, சட்டத்தை மதிக்காத குற்றங்களைப் புரிந்தோரது உடல் உறுப்புகள் துண்டிக்கப்பட்டன. மக்களோடு தன்னை அணுக்கப்படுத்திக் கொள்வதற்காக ஹர்ஷர் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டார். மக்கள் அவரை எளிதாகச் சந்திக்கக் கூடிய நிலை இருந்தது. அவர் தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களைக் கண்காணித்து வந்தார்.

11th History Lesson 8 Tamil Medium.indd 120 20-12-2022 15:23:39

படை நிர்வாகம்

தமது இராணுவத்தின் ஒழுங்கு மற்றும் பலத்தின்மீது ஹர்ஷர் நேரடி கவனம் செலுத்தினார். அவரது சேனை யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவற்றைக் கொண்டிருந்தது. குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. சாதாரண படை வீரர்கள் சாடர், பாடர் என அழைக்கப்பட்டனர். குதிரைப்படை அதிகாரிகள் பிரகதிஷ்வரர் என அழைக்கப்பட்டனர். காலாட்படை அதிகாரிகள் பாலதிக்ரிதர் எனவும், மகாபாலதிக்ரிதர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். ஹர்ஷரின் சேனை நான்கு பிரிவுகளாக (சதுரங்கம்) பிரிக்கப்பட்டிருந்தது என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு படைப் பிரிவின் பலம், படைக்கு ஆளெடுக்கும் முறை, படை வீரர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் ஆகியவை குறித்து அவர் விவரங்களை அளித்துள்ளார்.

பேரரசின் பிரிவுகள்

ஹர்ஷரது பேரரசு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாகாணங்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மாகாணமும் பல 'புக்தி'களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. புக்திகள் 'விஷ்ய'ங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மாவட்டங்களை ஒத்த விஷ்யங்கள் 'பாதகா'க்களாகவும் பாதகாக்கள் பல கிராமங்களாகவும் நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டிருந்தன. உள்ளாட்சி நிர்வாகத்தை மேற்கொண்ட அதிகாரிகள் பலர் குறித்து ஹர்ஷ சரிதம் குறிப்பிடுகிறது. அந்நூலின் வழி அவர்களின் பட்டங்களை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அவர்களின் அதிகாரங்கள் என்ன என அறிய முடியவில்லை. எடுத்துக்காட்டாக அவர்கள் போகபதி, ஆயுக்தா, பிரதிபாலக–புருஷா போன்ற பட்டங்களைக் கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டார்கள். ஆனால் இவர்களின் பணிகள் குறித்து ஷர்ஷசரிதம் ஏதும் குறிப்பிடவில்லை.

நகரங்கள், சிறு நகரங்கள்

இந்தியாவின் நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் அமைப்பு, அழகியல், பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியன பற்றி யுவான் சுவாங் தனது நூலில் விவரிக்கிறார். அவரது நோக்கில் ஹர்ஷப் பேரரசு சீனாவைப் போன்றே எண்ணற்ற கிராமங்களையும், எண்ணற்ற சிறு நகரங்களையும், பெரு நகரங்களையும் கொண்டிருந்தது. பாடலிபுத்திரம் அதன் செல்வாக்கை இழந்த நிலையில் கன்னோசி அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டதை யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். கன்னோசியின் கம்பீரமான தோற்றம் அதன் கவின்மிகு கட்டிடங்கள், அழகிய பூங்காக்கள், அரிய பொருள்களின் இருப்பிடமாக விளங்கிய அருங்காட்சியகம் ஆகியன குறித்து அவர் விவரித்துள்ளார். அங்கு வாழ்ந்த மனிதர்களின் பொலிவான தோற்றம், அவர்கள் அணிந்திருந்த விலை உயர்ந்த ஆடைகள், கல்வி மற்றும் கலைகளின்பால் அவர்கள் கொண்டிருந்த நாட்டம் ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

யுவான் சுவாங்கின் கூற்றுப்படி, பெரும்பாலான நகரங்கள் வெளிப்புற மதில்களையும் உட்புற நுழைவாயில்களையும் கொண்டிருந்தன. மதில்கள் அகலமாகவும், உயரமாகவும் இருந்தபோதிலும் வீதிகளும் தெருக்களும் குறுகியிருந்தன. வசிப்பிட இல்லங்களும் மாடங்களும் மரத்தால் செய்யப்பட்டு சுண்ணாம்புக் கலவையால் பூசப்பட்டிருந்தன. சுத்தத்திற்காகவும், சுகாதாரத்திற்காகவும் தரைகள் பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தன. பெரும் சத்திரங்கள், பொதுக் கட்டிடங்கள், பௌத்த மடாலயங்கள், விகாரைகள் ஆகியவை பெரிதாகவும், அடுக்கு மாடிக் கட்டிடங்களாகவும் அமைந்திருந்தன. அவை சூளையில் சுட்ட செங்கற்கள், சிவப்பு நிற மணல் கற்கள், சலவைக் கற்கள் கொண்டு கட்டப்பட்டன. ஹர்ஷர் கங்கையாற்றின் கரையில் பல விகாரைகளையும் மடாலயங்களையும் ஸ்தூபிகளையும் கட்டுவித்தார்.

யுவான் சுவாங் : 'பயணிகளின் இளவரசன்' என்று புகழப்படும் யுவான் சுவாங் ஹர்ஷரின் ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். பொ.ஆ. 612இல் பிறந்த யுவான் சுவாங் தனது இருபதாம் வயதில் துறவு பூண்டார். அவர் இந்தியாவில் தங்கியிருந்தபோது, வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல்வேறு புனிதத் தலங்களைப் பார்வையிட்டார். நாளந்தா பல்கலைக்கழகத்திலும் பயின்றார். புத்தர் மீதான யுவான் சுவாங்கின் ஆழமான பற்றும் பௌத்த மதத்தில் அவருக்கு இருந்த பரந்த அறிவும் ஹர்ஷரின் பாராட்டுக்குரியதாக இருந்தன. புத்தர் நினைவுச் சின்னங்களாக 150 பொருள்கள், தங்கத்திலும் வெள்ளியிலும் சந்தனத்திலும் ஆன புத்தரின் உருவச்சிலைகள், 657 தொகுதிகள் கொண்ட அரிய கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை யுவான் சுவாங் இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றார்.

யுவான் சுவாங்

11th History Lesson 8 Tamil Medium.indd 121 20-12-2022 15:23:40

பயணிகள், நோய்வாய்ப்பட்டோர், ஏழைகள் ஆகியோரின் நலனுக்காக ஹர்ஷர் தர்ம நிறுவனங்களைக் கட்டினார். சத்திரங்கள், மருத்துவமனைகள் ஆகியனவற்றையும் அவர் கட்டினார். சிறு நகரங்களில் இலவச மருத்துவமனைகளும், தர்மசாலைகளும் இருந்தன. பயணிகளும் வெளியாள்களும் அங்குத் தங்கி இலவச மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

மதக் கொள்கை

ஹர்ஷர் பொ.ஆ. 631ஆம் ஆண்டு வரை சிவ வழிபாடு செய்பவராகவே இருந்துள்ளார். ஆனால் அவரது சகோதரி ராஜ்யஸ்ரீ, பௌத்தத் துறவி யுவான் சுவாங் ஆகியோரின் செல்வாக்கினால் அவர் பௌத்த மதத்தைத் தழுவினார். பௌத்த மதத்தின் மகாயானா பிரிவைப் பின்பற்றினார். ஆனாலும் அவர் எல்லா மதங்களையும் ஆதரித்தார். அம்மதங்களைச் சார்ந்த அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார். விலங்குகளைக் கொல்வதும், மாமிசம் உண்பதும் தடை செய்யப்பட்டிருந்தன. ஹர்ஷர் பொ.ஆ. 643ஆம் ஆண்டில் இரண்டு பௌத்த மதக் கூட்டங்களைக் கூட்டினார். முதலாவது கன்னோசியிலும், இரண்டாவது பிரயாகையிலும் கூட்டப்பட்டது.

கன்னோசி கூட்டத்தில் காமரூபத்து அரசன் பாஸ்கர வர்மன் உள்ளிட்ட இருபது அரசர்கள் பங்கு கொண்டனர். பௌத்தம், சமணம், வேதம் கற்ற பல மாநிலங்களைச் சேர்ந்த அறிஞர்கள் பலரும் பெரும் எண்ணிக்கையில் அங்கு கூடினர். தங்கத்தாலான புத்தரின் சிலை ஒரு மடாலயத்தில் புனிதச்சடங்குடன் நிறுவப்பட்டு, புத்தரின் மூன்றடி உயர சிறிய சிலை ஒன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் பாஸ்கரவர்மன் உள்ளிட்ட அரசர்களும் ஹர்ஷரும் கலந்து கொண்டனர்.

பிரயாகையில் பௌத்த மதக் கூட்டம்

ஹர்ஷர் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் "மகாமோட்ச பரிஷத்" என அழைக்கப்பட்ட பௌத்த மதக் கூட்டத்தை பிரயாகையில் கூட்டினார். தான் சேகரித்த செல்வத்தை பௌத்த மதத்தினர், வேத அறிஞர்கள், ஏழைகள் ஆகியோருக்கு பகிர்ந்தளித்தார். கூட்டம் நடந்த நான்கு நாள்களும் புத்தத் துறவிகளுக்கு எண்ணற்ற பரிசுப் பொருள்களை வழங்கினார்.

பௌத்த மதக் கொள்கைகள் இந்து சமூகத்தில் ஆழமாக ஊடுருவியிருந்ததை யுவான் சுவாங் உற்றுநோக்கிப் பதிவு செய்துள்ளார். மக்களுக்கு முழுமையான வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது என்று அவர் குறிப்பிடுகிறார். வேறுபட்ட மதங்களைப் பின்பற்றுவோர் மத்தியில் சமூக நல்லிணக்கம் நிலவியது. ஹர்ஷர் புத்த பிட்சுக்களையும் வேதம் கற்ற அறிஞர்களையும் சமமாகப் பாவித்து கொடைகளையும் சமமாகப் பகிர்ந்தளித்தார்.

சாதி அமைப்பு முறை

இந்து சமூகத்தில் சாதி அமைப்பு வலுவாக காலூன்றியிருந்தது. யுவான் சுவாங்கின் கூற்றுப்படி சமுதாயத்தின் நான்கு பிரிவினருக்கான தொழில்கள் முற்காலத்தில் இருந்ததைப் போலவே தொடர்ந்தன. மக்கள் பிறரை வஞ்சிக்காமல் நேர்மையுடன் நடந்து கொண்டனர். கசாப்புக் கடையினர், மீனவர், நடனக்காரர்கள், துப்புரவுப் பணியாளர் ஆகியோர் நகரத்திற்கு வெளியே வசித்தனர். சாதி அமைப்பு இறுக்கமாகக் காணப்பட்ட போதிலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியில் மோதல்கள் எதுவும் நிகழவில்லை.

பெண்கள் நிலை

யுவான் சுவாங்கின் பதிவு, அக்காலத்தில் பெண்களின் நிலை குறித்தும், திருமண முறைகள் குறித்தும் தகவல்களை அளிக்கிறது. பெண்கள் முகத்திரை அணியும் வழக்கம் இருந்தது. எனினும் உயர் வகுப்பினர் மத்தியில் முகத்திரை அணியும் வழக்கம் காணப்படவில்லை. தனது சொற்பொழிவுகளைக் கேட்கும் போது ராஜ்யஸ்ரீ முகத்திரை அணிந்திருக்கவில்லை என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். உடன் கட்டை ஏறும் (சதி) வழக்கமும் நடைமுறையில் இருந்திருக்கிறது. பிரபாகரவர்த்தனரின் மனைவி யசோமதிதேவி தனது கணவன் இறந்த பிறகு இவ்வாறு உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக்கொண்டார்.

வாழ்க்கை முறை

யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை முறை குறித்தும் அறிய முடிகிறது. மக்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். பருத்தி, பட்டினாலான வண்ண வண்ண ஆடைகளை அணிந்தனர். மெல்லிய ரக துணிகளைத் தயாரிக்கும் கலை செம்மை பெற்றிருந்தது. ஆண்கள், பெண்கள் என இரு சாராரும் தங்களை அலங்கரித்துக் கொள்ளத் தங்கம், வெள்ளி அணிகலன்களைப் பயன்படுத்தினர். அரசர்கள் சிறப்பான அணிகலன்களை அணிந்தனர். மலர் மாலைகள், அரியவகைக் கல் பதித்த மாலைகள், மோதிரங்கள், காப்புகள், பதக்கங்கள் முதலியவை அரச அணிகலன்களில் சில. செல்வ வணிகர்கள் கைகளில் காப்புகளை அணிந்தனர். பெண்கள் அழகு சாதனப் பொருள்களைப் பயன்படுத்தினர்.

11th History Lesson 8 Tamil Medium.indd 122 20-12-2022 15:23:40

உணவுப் பழக்கங்கள்

இந்தியர்கள் பெரும்பாலும் மரக்கறி உணவுப் பழக்கத்தைக் கொண்டிருந்ததாகவே யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். சமையலில் வெங்காயம், பூண்டு ஆகியவை அரிதாகவே பயன்படுத்தப்பட்டன. உணவுத் தயாரிப்பில் சர்க்கரை, பால், நெய், அரிசி ஆகியவற்றின் பயன்பாடு சாதாரணமாக வழக்கத்தில் இருந்தது. சில தருணங்களில் மீனும், ஆட்டு இறைச்சியும் உட்கொள்ளப்பட்டன. மாட்டிறைச்சி உண்பதும், வேறு சில விலங்குகளின் இறைச்சியை உண்பதும் தடை செய்யப்பட்டிருந்தன.

கல்வி

மடாலயங்களில் கல்வி போதிக்கப்பட்டது. கற்றல் என்பது மதம் சார்ந்த ஒன்றாக இருந்தது. மதம் சார்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன. வாய்மொழியாகவே வேதங்கள் கற்பிக்கப்பட்டன. அவை ஏட்டில் எழுதப்படவில்லை. சமஸ்கிருதமே கற்றறிந்தோரின் மொழியாக இருந்தது. கல்வி கற்கும் வயது 9 முதல் 30 வயது வரையாக இருந்தது. பலர் கல்வி கற்பதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர். அலைந்து திரியும் பிட்சுக்களும் சாதுக்களும் அவர்களது அறிவுத் திறத்திற்கும் பண்பாட்டிற்கும் பெயர் பெற்று விளங்கினர். ஒழுக்கமும் அறிவுத்திறமும் கொண்டிருந்த அத்தகைய மனிதர்களை மக்கள் பெரிதும் மதித்தனர்.

கலை, இலக்கியப் பு ரவலராக ஹர்ஷர்

ஹர்ஷர் இலக்கிய, பண்பாட்டு செயல்பாடுகளை ஆதரித்தவர். அரசு தன் வருவாயில் கால் பங்கினை அத்தகைய செயல்பாடுகளுக்குச் செலவழித்தது. ஹர்ஷ சரிதத்தையும், காதம்பரியையும் இயற்றிய பாணர் ஹர்ஷரின் அரசவைக் கவிஞராக இருந்தார். பேரரசர் ஹர்ஷருமே புகழ் பெற்ற இலக்கியவாதி ஆவார். பிரியதர்சிகா, ரத்னாவளி, நாகானந்தா ஆகிய அவரது நாடக ஆக்கங்கள் அவரது புலமையை எடுத்துக் காட்டுகின்றன. கல்வியை ஊக்குவிக்க ஹர்ஷர் தாராளமாகக் கொடையளித்தார். கோவில்களும், மடாலயங்களும் கல்வி மையங்களாக விளங்கின. கன்னோசி, கயா, ஜலந்தர், மணிப்பூர் ஆகிய இடங்களில் இருந்த மடாலயங்களில் புகழ் பெற்ற அறிஞர்கள் கல்வி போதித்தனர். இதே காலகட்டத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் அதன் புகழின் உச்சத்தை அடைந்தது.

நாளந்தா பல்கலைக்கழகம்

யுவான் சுவாங் தனது நூலில் நாளந்தா பல்கலைக்கழகம் எந்த அளவிற்கு புகழ் பெற்றிருந்தது என்பதைப் பதிவு செய்துள்ளார். பௌத்த மதத்தைப் பின்பற்றும் சீனா, ஜப்பான், மங்கோலியா, இலங்கை, திபெத் ஆகிய நாடுகளிலிருந்தும், மேலும் மத்திய, தென் கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலிருந்தும் மாணவர்கள், அறிஞர்கள் வந்து அங்கே தங்கி கல்வி கற்றனர். யுவான் சுவாங் வருகையின் போது சிலாபத்ரர் என்ற புகழ் பெற்ற பௌத்த மத அறிஞர் நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்துள்ளார். சர்வதேச அளவில் புகழ் பெற்ற கல்வி மையமாக விளங்கிய நாளந்தா பல்கலைக்கழகம், பத்தாயிரம் மாணவர்களைக் கொண்டிருந்தது. தர்மபாலர், சந்திரபாலர், சீலபத்ரர், பத்ரிஹரி, ஜெயசேனர், தேவாகரர், மாதங்கர் ஆகியோர் அரசின் ஆதரவு பெற்ற முக்கியமான ஆசிரியர்களாக விளங்கினர்.

II பாலர்கள்

ஹர்ஷரின் மறைவிற்குப் பின்னர் கங்கை–யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட வடிநீர்ப் பகுதி, அதனைச் சூழ்ந்துள்ள நிலப்பகுதி ஆகியவற்றின் மீதான கட்டுப்பாட்டிற்கு பிரதிகாரர்கள் (ஜலோர் ராஜஸ்தான்), பாலர்கள் (வங்காளம்), ராஷ்டிரகூடர் (தக்காணம்) ஆகியோர் மத்தியில் மும்முனைப் போட்டி நிலவியது கிழக்கு கங்கைச் சமவெளியின் பரந்து விரிந்த பகுதிகளை பாலர்கள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். வேளாண்மையின் மூலம் ஈட்டிய வருவாய் தவிர, பாலர்கள் தென் கிழக்கு ஆசியாவில் தங்களது வணிகத் தொடர்புகள் மூலமாகவும் வருவாய் ஈட்டினர். வங்காளத்தில் பரவியிருந்த பௌத்த மதம் கிழக்கு இந்தியாவிற்கும் ஜாவா, சுமத்ரா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இணைப்பாக விளங்கியது

8.3 வங்காளத்தில் பாலர்கள் ஆட்சியின் தோற்றம்

கௌட வம்சத்து அரசனான சசாங்கன் பொ.ஆ. 590–625 ஆண்டுகளுக்கு இடையில் வங்காளத்தை ஆண்டதாக நம்பப்படுகிறது. பழங்கால வங்காளத்தை ஆண்ட முக்கியமான அரசரும் அவரே. கௌட அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் மைய அதிகாரம் என்று ஏதும் இருக்கவில்லை. அதன் விளைவாகச் சிறு குடித்தலைமை அரசர்களுக்கிடையில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. எனவே, பொ.ஆ. 750ஆம் ஆண்டில் அவர்கள் குழு ஒன்று கூடி தமக்கு அரசராக கோபாலர் என்ற சத்திரியத் தலைவரை நியமிப்பது எனத்தீர்மானித்தனர். இவர் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கு ஒரு கதை உள்ளது. இதற்கு முன் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொன்ற 'அரக்கி'யைக் கொலை செய்யும் ஆற்றல் அவருக்கு உண்டு என்பதாலேயே கோபாலர் தேர்ந்தெடுக்கப்பட்டாராம். கோபாலரின் முன்னோர் எவரும் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஆனாலும், அவர் தமக்கென

11th History Lesson 8 Tamil Medium.indd 123 20-12-2022 15:23:40

ஒரு ராஜ்யத்தை அமைத்துக்கொள்வதில் வெற்றி கண்டார். கோபாலரின் அரசியல் அதிகாரம் சிறிய குறுநில அரசர்களால் விரைவில் அங்கீகரிக்கப்பட்டது. அவரது அரசு வங்கம் (அ) கிழக்கு வங்காளத்தில் அமைந்திருந்தது.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பனிரெண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பாலர்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்டு கிழக்கு இந்தியாவை ஆண்டனர். அவர்களது நாட்டில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகள் பயன்பாட்டில் இருந்தன. பாலர்கள் புத்த மதத்தின் மகாயான பிரிவைப் பின்பற்றினர்.

பாலர் வம்சத்து ஆட்சியாளர்கள்

முதலாம் கோபாலருக்கு அடுத்து அவரது மகன் தர்மபாலர் (பொ.ஆ. 770–815) ஆட்சிக்கு வந்தார். அவர் பாலர் ராஜ்யத்தை மதிக்கத் தக்க ஒன்றாக உருவாக்கினார். வங்காளமும் பீகாரும் அவரது நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்தன. கன்னோசி அவர் நியமனம் செய்த ஒருவரால் ஆளப்பட்டது. பஞ்சாப், ராஜஸ்தான், மாளவம், பீரார் ஆகிய பகுதிகளின் ஆட்சியாளர்கள் அவரது ஆட்சித் தலைமையை ஏற்றுக்கொண்டனர். அவர் பரமேஷ்வரர், பரமபட்டாரகா, மகாராஜாதிராஜா ஆகிய பட்டங்களை ஏற்றார்.

தர்மபாலர் பௌத்த மதத்தின் பெரும் ஆதரவாளராக இருந்தார். அவர் பீகாரில் பாகல்பூர் மாவட்டத்தில் விக்ரமசீலா எனும் பௌத்த மடாலயத்தை நிறுவினார். அது பௌத்த மதக் கொள்கைகளையும் பண்பாட்டையும் போதிக்கும் சிறந்த மையமாக உருவானது. அவர் சோமபுரியில் (தற்போதைய பாகர்பூர், வங்காள தேசத்தில்) பெரிய பௌத்த விகாரம் ஒன்றையும் கட்டினார். தர்மபாலர் பீகாரில் உள்ள ஒதாண்டபுரியில் ஒரு பௌத்த மடாலயத்தையும் கட்டினார். ஹரிஷ்பத்ரர் என்ற பௌத்த மத எழுத்தாளரையும் ஆதரித்தார்.

பாலர்களின் ஆட்சியை கிழக்கில் காமரூபம் (அஸ்ஸாம்) வரை தர்மபாலரின் மகன் தேவபாலர் விரிவுபடுத்தினார். ராஷ்டிரகூடர்களைத் தமது பொது எதிரியாகக் கருதிய அரசுகளை எல்லாம் ஓரணியாகத் திரட்டி ராஷ்டிரகூட அரசனான அமோகவர்ஷர் மீது போர்தொடுத்து வென்றார். தேவபாலரும் பௌத்த மதத்திற்குப் பெரும் ஆதரவாளராக விளங்கினார். சுவர்ணதீபத்தை (சுமத்ரா) ஆண்ட சைலேந்திர வம்சத்து அரசரான பாலபுத்ரதேவரால் நாளந்தாவில் கட்டப்பட்ட பௌத்த மடாலயத்தைப் பராமரிப்பதற்காக ஐந்து கிராமங்களை தேவபாலர் கொடையாக வழங்கினார். அவரது ஆட்சியில் நாளந்தா பௌத்த மதக் கொள்கைகளைப் போதிக்கும் முதன்மையான மையமாகத் தழைத்தோங்கியது.

தேவபாலருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த விக்ரமபாலர் சில ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின்னர் அரியணையைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டார். விக்ரமபாலரின் மகனான நாராயணபாலரும் சாந்தமான சுபாவம் கொண்டவராகவும் மதம் சார்ந்த மனப்போக்கு கொண்டவராகவும் விளங்கினார். ராஷ்டிரகூடர்களும் பிரதிகாரர்களும் இதனைத் தமக்குச் சாதகமான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு பாலர்களை வீழ்த்தினர். ஜலோரில் மிகிரபோஜரின் தலைமையில் பிரதிகாரர்களின் எழுச்சியும், பாலர்களின் ஆட்சிப் பகுதிக்குள் ராஷ்டிரகூடர்களின் ஆக்கிரமிப்பும் தவிர்க்கவியலாத நிலையில் பாலர்களுக்கு வீழ்ச்சியைக் கொண்டு வந்தன. அதுவரை பாலர்களுக்கு ஆதரவளித்து வந்த குறுநில அரசர்களும் சுயேச்சையாக இயங்கத் தொடங்கினர்.

அடுத்து வந்த ராஜ்யபாலர், மூன்றாம் கோபாலர், இரண்டாம் விக்ரமபாலர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் பாலர் வம்சத்தின் வீழ்ச்சி மேலும் வேகம் பெற்றது. எனினும் இரண்டாம் விக்ரமபாலரின் மகனான முதலாம் மஹிபாலரால் பாலர் வம்சத்தின் பெயர் ஓரளவு மீட்டெடுக்கப்பட்டது. பொ.ஆ. 1020–1025 ஆண்டுகளுக்கிடையில் தென்பகுதியைச் சேர்ந்த சோழ மன்னர் இராஜேந்திர சோழன் வட இந்தியாவிற்குப் படையெடுத்துச் சென்றது மஹிபாலரின் காலத்தில் மிக முக்கியமான நிகழ்வாகும். எனினும் இராஜேந்திர சோழனின் படையெடுப்பு கங்கையைக் கடக்க முடியாதபடி முதலாம் மஹிபாலரால் தடுக்கப்பட்டது.

மகிபாலரின் பதினைந்து ஆண்டு கால ஆட்சிக்குப் பின்னர் நான்கு திறமையற்ற ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்தனர். பாலர் வம்சத்தின் இழந்து போன மகத்துவத்தை மீட்டெடுக்க முயன்ற கடைசி அரசர் ராமபாலர். அவர் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவரது மறைவிற்குப் பின்னர் பாலர் வம்சத்தின் இருப்பு மகதத்தின் (பீகார்) ஒரு பகுதியில் மட்டுமே என்று ஆனது. அதுவும் குறுகிய காலத்திற்கே நீடித்தது. அதே காலத்தில் வடக்கு வங்காளத்தில் வல்லமை மிக்கவராக உருவாகியிருந்த சேனர் வம்சத்து அரசர் விஜயசேனர் கடைசி ஆட்சியாளரான மதனபாலரை (பொ.ஆ. 1130–1150) ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு, தான் சார்ந்த சேனர் வம்சத்து ஆட்சியை நிறுவினார்.

மதம்

பாலர் வம்சத்து அரசர்கள் பௌத்த மதத்தின் மகாயானப் பிரிவை ஆதரித்தனர். பௌத்த மத தத்துவ ஞானியான ஹரிபத்ரர் பாலர்களின் ராஜ்யத்தை நிறுவிய தர்மபாலருக்கு ஆன்மீக குருவாக விளங்கினார். வங்காளம் பௌத்த

11th History Lesson 8 Tamil Medium.indd 124 20-12-2022 15:23:40

விக்ரமசீலா பல்கலைக்கழகம்

மடாலயங்களின் இருப்பிடங்களுள் ஒன்றாக விளங்கியது. வணிகர்களும் கைவினைஞர்களும் பெருமளவில் இஸ்லாம் மதத்திற்கு மாறியதின் காரணமாகப் பாலர்களின் அரசும், பௌத்த மதமும் வீழ்ச்சியைச் சந்தித்தன.

கலையும் கட்டிடக் கலையும்

திமான், அவரது மகனான விடபாலர் ஆகிய இரு கலைஞர்களும் பாலர்களின் காலத்தினர். அவர்கள் இருவரும் பெரும் ஓவியர்களாகவும், சிற்பக் கலைஞர்களாகவும், வெண்கலச் சிலை வடிப்போராகவும் விளங்கினர். பாலர் ஆட்சிக் காலத்திய சிற்பக் கலை, குப்தர் காலத்துக் கலையின் தாக்கத்தைக் கொண்டிருந்தது. முதலாம் மகிபாலர் சாரநாத், நாளந்தா, புத்த கயா ஆகிய இடங்களில் புனித வழிபாட்டுத் தலங்களை உருவாக்கியதுடன் பலவற்றை சீரமைக்கவும் செய்தார். கோபாலர் ஒடாண்டபுரியில் (பீகார்) புகழ் பெற்ற பௌத்த மடாலயத்தை நிறுவினார். தர்மபாலர் விக்ரமசீலாவையும், சோமபுரத்தில் (வங்காள தேசம்) மகாவிகாரைகளையும் நிறுவினார்.

மகாவிகாரை, சோமபுரம் (வங்கதேசம்)

இலக்கியம்

அதிஷா, சரகர், திலோபா, தான்சில், தான்ஸ்ரீ, ஜினமித்ரர், முக்திமித்ரர், பத்மானவர், விராசன், சிலபத்ரர் ஆகியோர் விக்ரமசீலா, நாளந்தா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முக்கியமான அறிஞர்களாவர். பாலர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய தத்துவவியல் ஆக்கங்கள் கவுத பாதரின் ஆகம சாஸ்திரம், ஸ்ரீதரபட்டரின் நியாய குண்டலி ஆகிய நூல்களை உள்ளடக்கியிருந்தன. சக்ரபாணி தத்தா, சுரேஷ்வர் கடதர வைத்தியா, ஜிமுடவாகனர் ஆகியோரால் பல மருத்துவ நூல்கள் இயற்றப்பட்டன. பாலர்கள் சமஸ்கிருத அறிஞர்களையும் ஆதரித்தனர். புத்தமதம் சார்ந்த பல தாந்திரீக நூல்கள் இயற்றப்பட்டு அவை சமஸ்கிருதத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டன. தாந்திரீகம் குறித்த மூல நூல்கள் பல்வேறுபட்ட இந்திய, திபெத்திய நூல்களால் ஆனவை. நாட்டுப் புறப் பாடல்களின் தொகுப்பான "மகிபாலர் கீதங்கள்" இன்றும் வங்காளத்தின் கிராமப் புறங்களில் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. ராமசரிதம் என்ற காவியத்தை சந்தியாகர் நந்தி இயற்றினார். பாலர் வம்சத்து அரசர் ராமபாலரின் வாழ்க்கை வரலாற்று நூலான இது, வனங்களில் வாழ்ந்த பழங்குடியினத் தலைவர்களுக்கு விலை உயர்ந்த பரிசுகளை அளிப்பதின் மூலம் அவர்கள் எவ்வாறு பாலர்களின் கூட்டணிக்குள் கொண்டு வரப்பட்டனர் என விளக்குகிறது.

III ராஷ்டிரகூடர்கள்

பிரதிகாரர்களுக்கும் ராஷ்டிரகூடர்களுக்கும் இடையில் நிலவிய பகைமை இரு வம்சங்களின் அழிவிற்கு வழிவகுத்தது. கன்னோசிக்கு வருகை தந்த அரபுப் பயணி அல் மாசூத் அரசாளும் இரு வம்சங்களுக்கிடையில் நிலவிய பகைமையைப் பதிவு செய்துள்ளார். ராஷ்டிரகூடர்கள் பிரதிகாரர்களிடமிருந்து கன்னோசியைக் கைப்பற்றுவதற்குத் தக்க சமயத்தை எதிர் நோக்கியிருந்தனர். பொ.ஆ. பத்தாம் நூற்றாண்டு வரை அவர்கள் வெற்றிகரமாக அரசாண்டனர். அவர்கள் கன்னட மொழி பேசும் பகுதியில் வாழ்ந்த முக்கியப் பிரிவாக அறியப்பட்ட ரஸ்திகர் அல்லது ரதிகர்களின் வழித்தோன்றல்கள் எனத் தங்களை அறிவித்துக் கொண்டனர். அசோகரின் கல்வெட்டுகளிலும் அவர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

8.4 ராஷ்டிரகூட மரபின் எழுச்சி

தொடக்கத்தில் ராஷ்டிரகூடர்கள் வாதாபியை ஆண்டுவந்த மேலைச் சாளுக்கியர்களுக்குக் கப்பம் கட்டுபவர்களாகவே இருந்தனர். அதற்கு முன்னர் அரசாண்டவர்கள் இருந்தபோதிலும் தந்திதுர்கர் என்பவரே ராஷ்டிரகூட வம்சத்தின் தலைசிறந்த அரசராவார். பிராரில் ஒரு சிறு பகுதியை ஆண்டுவந்த தந்திதுர்கர் சாளுக்கிய அரசன் இரண்டாம் விக்ரமாதித்யனின் (பொ.ஆ. 733–746) மறைவிற்குப் பின்னர் தன் அரசைச் சுற்றியிருந்த பகுதிகளுக்குப் படையெடுத்துச் சென்று அவற்றைத் தனது அரசுடன் இணைத்துக் கொண்டார். அவர் நந்திபுரியின் கூர்ஜர ராஜ்யத்தையும், மாளவம், கிழக்கு மத்திய பிரதேசம், பிரார் முழுவதையும் கைப்பற்றினார். பொ.ஆ. 750ஆம் ஆண்டு வாக்கில், மத்திய மற்றும்

11th History Lesson 8 Tamil Medium.indd 125 20-12-2022 15:23:41

தெற்கு குஜராத் பகுதியிலும் மத்திய பிரதேசம், பிரார் ஆகிய பகுதிகளிலும் தன் ஆதிக்கத்தை நிறுவினார்.

தந்திதுர்கர் தனது நிலையை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர், வாதாபியை ஆண்ட கடைசி சாளுக்கிய அரசன் இரண்டாம் கீர்த்திவர்மனை (பொ.ஆ. 746–753) தோற்கடித்தார். அவர் மகாராஜாதிராஜர், பரமேஷ்வரர், பரமபட்டாரகர் ஆகிய பட்டங்களை ஏற்றார். பல்லவ அரசன் இரண்டாம் நந்திவர்மனுக்குத் தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்ததன் மூலம் பல்லவர்களுடன் உறவை வளர்த்துக் கொண்டார். பொ.ஆ. 756ஆம் ஆண்டில் தந்திதுர்கரின் மறைவிற்குப் பின்னர் அவரது சிற்றப்பாவான முதலாம் கிருஷ்ணர் ஆட்சிக்கு வந்தார்.

முதலாம் கிருஷ்ணரும் அவருக்குப் பின் வந்தவர்களும்

முதலாம் கிருஷ்ணர் (பொ.ஆ. 756–775) மைசூரை ஆண்ட கங்கர்களைப் போரில் வென்றவர். அவருக்கு அடுத்து அவரது மூத்த மகன் இரண்டாம் கோவிந்தர் பொ.ஆ. 775ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தார். அவர் கீழைச் சாளுக்கியர்களைத் தோற்கடித்தார். பின்னர் தனது சகோதரரான துருவரிடம் அரசுப் பொறுப்பை ஒப்படைத்தார். துருவர் (பொ.ஆ. 780–794) தனக்குத்தானே அரசராக முடிசூட்டிக் கொண்டார். அவரது ஆட்சிக்காலத்தில் ராஷ்டிரகூடர்களின் அரசு அதன் சிறப்பின் உச்சத்தை அடைந்தது. மேலைக் கங்கர் அரசனை வீழ்த்திய பின்னர் துருவர் பல்லவ அரசரான நந்திவர்மனைத் தோற்கடித்தார். வேங்கியை (தற்கால ஆந்திரம்) ஆண்ட அரசரும் துருவரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. தெற்கில் தனது ஆதிக்கத்தை நிறுவிய பிறகு துருவர் கன்னோசியைச் சுற்றியுள்ள பகுதிகளின் மீது தன் கவனத்தைத் திருப்பினார். அந்தப் பகுதியில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டப் போட்டியிட்ட பிரதிகர வம்சத்து அரசரான வாத்சர்யர், பாலர் வம்சத்தின் தர்மபாலர் என இருவரையும் தோற்கடித்தார். வாரிசாக தனது மகன் மூன்றாம் கோவிந்தரை நியமித்தார்.

மூன்றாம் கோவிந்தர் (பொ.ஆ. 794–814) ஆட்சியில் அமர்ந்த காலம் முன்னெப்போதும் இருந்திராத விதத்தில் வெற்றிகரமான ஆட்சிக்கு வழி அமைத்தது. பல்லவ அரசர் தண்டிகர் வீழ்த்தப்பட்டார். வேங்கியை ஆண்ட விஷ்ணுவர்த்தனர் அவரது தாய்வழிப் பாட்டனாக இருந்ததால் அவர் மூன்றாம் கோவிந்தரின் ஆதிக்கத்தை எதிர்க்கவில்லை. கோவிந்தர் தக்காணத்தில் தனி ஆதிக்கம் செலுத்துபவராக ஆனார். ராஷ்டிரகூடர்களின் ராஜ்யம் அதன் புகழின் உச்சத்தை அடைந்தது.

மூன்றாம் கோவிந்தருக்குப் பின்னர் அவரது மகன் அமோகவர்ஷர் (சுமார் கி.பி. (பொ.ஆ) 814– 878) ஆட்சிக்கு வந்தார். அமோகவர்ஷர் அறுபத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அதில் முதல் இருபது ஆண்டுகளுக்கு மேலைக் கங்கர்களுடன் போர் நீடித்தது. கங்கர் வம்சத்து இளவரசர் ஒருவருக்கு அமோகவர்ஷர் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்ததின் மூலம் அப்பகுதியில் அமைதி திரும்பியது. அமோகவர்ஷர் கலை, இலக்கியத்திற்கு ஆதரவளித்தார். புகழ் பெற்ற திகம்பர ஆச்சார்யரான ஜீனசேனர், சமஸ்கிருத இலக்கண ஆசிரியரான சகடயானர், கணித மேதையான மஹாவீராச்சார்யர் ஆகியோருக்கு ஆதரவளித்தார். அமோகவர்ஷர் சிறந்த கவிஞராக இருந்தார். அவர் இயற்றிய "கவிராஜமார்க்கம்" கவிதையியல் பற்றிக் கன்னட மொழியில் இயற்றப்பட்ட முதல் நூலாகும். அமோகவர்ஷருக்குப் பின்னர் அவரது வாரிசுகள் அரசாண்டனர். அவர்களுள் திறமையானவர் மூன்றாம் கிருஷ்ணர் (பொ.ஆ. 939–968) ஆவார்.

ராஷ்டிரகூட ஆட்சியாளர்களில் கடைசி அரசர் மூன்றாம் கிருஷ்ணர். அவர் ஆட்சிக்கு வந்தவுடன் தனது மைத்துனர் புதுங்கரின் துணையுடன் சோழ அரசின் மீது படையெடுத்தார். பொ.ஆ. 943ஆம் ஆண்டில் காஞ்சியும் தஞ்சாவூரும் கைப்பற்றப்பட்டன. ஆற்காடு, செங்கல்பட்டு, வேலூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தொண்டை மண்டலத்தை அவரது படை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பொ.ஆ. 949ஆம் ஆண்டில் தக்கோலம் (தற்கால வேலூர் மாவட்டம்) என்ற இடத்தில் நடந்த போரில் அவர் ராஜாதித்யனின் சோழர் படையைத் தோற்கடித்தார். மூன்றாம் கிருஷ்ணர் தெற்கே ராமேஸ்வரம் வரை படை கொண்டு சென்றார். அங்கு வெற்றியின் சின்னமாக ஒரு தூணை நிறுவினார். இவ்வாறு தக்காணம் முழுவதிலும் தன் ஆதிக்கத்தை நிறுவுவதில் அவர் வெற்றி கண்டார். அவரது ஆட்சியின்போதுதான் ராஷ்டிரகூடர்கள் கன்னோசியைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வர வட இந்திய ஆட்சியாளர்களுக்கிடையே நடந்த போட்டியில் இணைந்தனர். கன்னோசியைக் கைப்பற்றுவதற்கு அவர்களுக்கிடையே தொடர்ந்து நடந்த மோதலின் காரணமாக அந்தப் பிரதேசத்தின் குறுநில மன்னர்கள் சுயேச்சையாக இயங்கத் தலைப்பட்டனர். அவர்கள் காட்டிய எதிர்ப்பானது கன்னோசியை மையமாகக் கொண்டு வட இந்தியாவை ஆளும் ஒரு அரசு அமைவதின் வாய்ப்பைத் தகர்த்தது. வடமேற்கிலிருந்து வந்த படையெடுப்புகள் ஒரு வலுவான அரசை அமைப்பதற்கான முயற்சிகளுக்குத் தடையாக இருந்தன. ஆனால் மூன்றாம் கிருஷ்ணருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் ராஷ்டிரகூட அரசை அதன் வீழ்ச்சியிலிருந்து காக்க முடியாத அளவிற்கு வலுவற்றவர்களாக இருந்தனர்.

11th History Lesson 8 Tamil Medium.indd 126 20-12-2022 15:23:41

மதம்

ராஷ்டிரகூடர்களின் ஆட்சிக் காலத்தில் சிவ வழிபாடும், விஷ்ணு வழிபாடும் செல்வாக்குப் பெற்றிருந்தன. குடைவரைக் கோவிலாக உருவாக்கப்பட்ட புகழ் பெற்ற எல்லோரா சிவன் கோவில் முதலாம் கிருஷ்ணர் கட்டியதாகும். அரசு முத்திரைகளில் விஷ்ணுவின் வாகனமான கருடன், யோக நிலையில் அமர்ந்த சிவன் மற்றும் விஷ்ணுவின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. தந்திதுர்கர் உஜ்ஜையினியில் ஹிரண்யகர்ப்ப சடங்கை நடத்தினார். கோவில் தெய்வங்களுக்குத் தராசில் எடைக்கு எடை தங்கம் அளிப்பதான துலா தானத்தைக் குறித்த குறிப்புகள் கிடைத்துள்ளன.

முதலாம் அமோகவர்ஷர், நான்காம் இந்திரர், இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம் இந்திரர் போன்ற பிற்கால அரசர்கள் சமண மதத்திற்கு ஆதரவளித்தனர். பௌத்த மதம் வழக்கொழிந்துவிட்ட நிலையில் அதன் முக்கியமான மையம் கன்கேரி என்ற இடத்தில் மட்டுமே இருந்தது.

இலக்கியம்

ராஷ்டிரகூட ஆட்சியாளர்கள் கல்வியைப் போற்றினார்கள். அவர்களது ஆட்சிக் காலத்தில் கன்னட, சமஸ்கிருத இலக்கியங்கள் பெரும் வளர்ச்சி கண்டன. முதலாம் அமோகவர்ஷர் பிரஸ்னோத்ரமாலிகா எனும் சமஸ்கிருத நூலையும், கவிராஜமார்க்கம் எனும் கன்னட நூலையும் இயற்றினார். ஜீனசேனர் சமணர்களின் ஆதிபுராணத்தை எழுதினார். இரண்டாம் கிருஷ்ணரின் ஆன்மிக வழிகாட்டியாக விளங்கிய குணபத்ரர் சமணர்களின் மஹாபுராணத்தை எழுதினார். பழங்காலக் கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்களாக போற்றப்பட்ட கவிச்சக்கரவர்த்தி பொன்னா, ஆதிகவி பம்பா, கவிச்சக்கரவர்த்தி ரன்னா ஆகியோர் ராஷ்டிரகூட அரசர் மூன்றாம் கிருஷ்ணராலும், மேலைச் சாளுக்கிய அரசர்களான தைலபா, சத்யஷ்ரேய ஆகியோராலும் ஆதரிக்கப்பட்டனர்.

கட்டடக்கலை

ராஷ்டிரகூடர்கள் இந்தியச் சிற்பக்கலைக்கு வியத்தகு பங்களிப்பைச் செய்துள்ளனர். தற்கால மஹாராஷ்டிரத்தில் அமைந்துள்ள எல்லோரா, எலிஃபண்டா குடைவரைக் கோவில்கள் அவர்களது ஆட்சிக் காலத்தில் உருவானவையாகும். எல்லோரா குடைவரைக் கோவில் வளாகம் பௌத்த, சமண, இந்து மதச் சின்னங்களுக்கான கலை நுட்பத்தைக் கொண்டுள்ளது. முதலாம் அமோகவர்ஷர் சமண மதத்தை ஆதரித்தார். அவரது காலத்தியது எனக் கூறப்படும் ஐந்து சமண குகைக் கோவில்கள் எல்லோராவில் அமைந்துள்ளன.

எல்லோராவில் நமது கருத்தைக் கவரும் அமைப்பு என்பது ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோவிலாகும். எட்டாம் நூற்றாண்டில் முதலாம் கிருஷ்ணரின் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோவில் ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும். அது சாளுக்கிய அரசன் இரண்டாம் விக்ரமாதித்யன், தான் பல்லவர்களை வெற்றி கொண்டதன் நினைவாக கர்நாடகத்தில் பட்டாடக்கல் என்னும் இடத்தில் எழுப்பிய லோகேஷ்வரர் கோவிலை ஒத்துள்ளது. தசாவதார பைரவர், கைலாச மலையை ராவணன் அசைப்பது, நடனமாடும் சிவன், விஷ்ணுவும் லட்சுமியும் இசையில்

கைலாசநாதர் கோவில், எல்லோரா

எல்லோரா சிற்பம்

எலிஃபண்டா குகை

11th History Lesson 8 Tamil Medium.indd 127 20-12-2022 15:23:42

லயித்திருப்பது எனக் கற்பலகைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் சிறந்த சான்றுகளாகும்.

எலிஃபண்டாவின் பிரதான கோவில் எல்லோராவில் அமைந்துள்ள கோவிலை விடவும் சிறந்ததாகும். நடராஜர், சதாசிவம் ஆகிய சிற்பங்கள் அழகிலும் கலை நுட்பத்திலும் எல்லோரா சிற்பங்களை விட மேன்மை கொண்டவையாக விளங்குகின்றன. அர்த்த நாரீஸ்வரர், மகேசமூர்த்தி ஆகியோரின் சிலைகள் புகழ் பெற்ற சிற்பங்களாகும். இவற்றுள் மகேஷமூர்த்தியின் (சிவன்) மூன்று முகங்கள் கொண்ட 25 அடி உயரமுள்ள மார்பளவுச்சிலை இந்தியாவில் உள்ள கவின்மிகு சிற்பங்களுள் ஒன்றாகும். கைலாசநாதர் கோவிலின் வெளித்தாழ்வாரத்திலும், எல்லோராவில் உள்ள கோவிலின் விதானத்திலும் கூரையிலும் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் இன்றளவும் சிறப்புறக் காட்சி தருகின்றன.

பாடச் சுருக்கம்

I ஹர்ஷர்

- குப்தர், வர்த்தனர் ஆகியோரது ஆட்சிக்கு இடைப்பட்ட காலத்தில் சுயேச்சையான அரசுகள் தோன்றின. வட இந்தியா வலுவான மையப்படுத்தப்பட்ட அதிகாரமின்றிக் காணப்பட்டது.
- ஹூணர், வல்லபியின் மைத்ரகர், கன்னோசியின் மௌகாரியர், மாண்டசோரின் வகடர், தானேஸ்வரத்தின் புஷ்யபூதி, மகதத்தின் பிற்கால குப்தர் ஆகியோர் பிரதேச முடியரசர்களாகத் திகழ்ந்தனர்.
- ஹர்ஷர், சீனாவுடன் நேசமான உறவைக் கொண்டிருந்தார். சீனப் பயணியான யுவான் சுவாங் அக்காலத்தில் நிலவிய மக்களின் சமூக, மத சூழ்நிலைகளைப் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்திருந்தார்.
- ஹர்ஷர் பௌத்த மதத்திற்கு ஆதரவளித்தார். கன்னோசியிலும் பிரயாகையிலும் பௌத்த மதக் கூட்டங்களைக் கூட்டினார்.

II பாலர்கள்

- பாலர் வம்சத்தைத் தோற்றுவித்த கோபாலர் குறுநில மன்னர்களால் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- தர்மபாலர், தேவபாலர், முதலாம் மஹிபாலர் ஆகியோர் திறமையுடன் ஆட்சி புரிந்து பல பகுதிகளைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.
- விக்ரமசீலா, நாளந்தா பல்கலைக்கழகங்களுக்குப் பாலர்கள் அளித்த ஆதரவு பௌத்த, சமண, சமஸ்கிருத இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

III ராஷ்டிரகூடர்கள்

- முதலாம்கிருஷ்ணர்முதல்மூன்றாம்கிருஷ்ணர் வரை வெற்றிகரமான ஆட்சியாளர்களின் காலத்தில் ராஷ்டிரகூடர்களின் அரசு வலிமை மிக்க அரசாக உருவானது.
- இலக்கியம் ராஷ்டிரகூடர்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. சமஸ்கிருத, கன்னட அறிஞர்கள் தழைத்தோங்கினர்.
- எல்லோராவிலும் எலிஃபண்டாவிலும் காணப்படும் கலை நுட்பம் இவர்களது பங்களிப்பே ஆகும்.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை __________ என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

   (அ) கிரகவர்மன் (ஆ) தேவகுப்தர்
   (இ) சசாங்கன் (ஈ) புஷ்யபுத்திரர்

2. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை __________ இன் அறிவுரையின் படி ஏற்றுக் கொண்டார்.

   (அ) கிரகவர்மன்
   (ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்
   (இ) பிரபாகரவர்த்தனர்
   (ஈ) போனி

3. __________ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்

   (அ) குந்தலா (ஆ) பானு
   இ) அவந்தி (ஈ) சர்வாகதா

4. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?

   (அ) ஹர்ஷசரிதம் (ஆ) பிரியதர்சிகா
   (இ) அர்த்த சாஸ்திரா (ஈ) விக்ரம ஊர்வசியம்

5. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

   (அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
   (ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.

11th History Lesson 8 Tamil Medium.indd 128 20-12-2022 15:23:43

(இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.

(ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

II. குறுகிய விடை தருக

1. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை?
2. ஹர்ஷர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார்?
3. முதலாம் மகிபாலரின் சிறப்புகள் குறித்து கலந்துரையாடுக.
4. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
5. பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவத்தை விவரி.

III. சிறுகுறிப்பு வரைக

1. ஹர்ஷருக்கும் சீனாவிற்கும் இடையே நிலவிய உறவு.
2. ஹர்ஷருடைய குற்றவியல் நீதித்துறையின் முக்கியத்துவம்.
3. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச்சின்னங்கள்.
4. ராஷ்டிரகூடர்கள் கன்னட இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு.
5. ராஷ்டிரகூடர்கள் சமண மதத்திற்கு அளித்த ஆதரவு.

IV. விரிவான விடை தருக

1. ஹர்ஷரின் சமயக்கொள்கை பற்றி விளக்கம் தருக.
2. வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் யாவை?
3. பௌத்த மதத்திற்கு பாலர்கள் ஆற்றிய பங்களிப்பு என்ன?
4. ராஷ்டிரகூடர்களின் சிறப்புகள் யாவை?

செயல்பாடுகள்

1. பௌத்த மதச் சங்கக் கூட்டத்தின் செயல்பாடுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.
2. விவாதிக்க:

(i) பக்தியார் கில்ஜி நாளந்தா பல்கலைக்கழத்தை ஒரு கோட்டை என எண்ணித் தாக்கியது.

(ii) யுவான் சுவாங்கின் இந்திய வருகை பௌத்த மத நூல்களை சேகரிப்பற்கே.

மூலநூல்கள்

1. Burton Stein (2004), *A History of India*, Oxford University Press.
2. R.K. Mukherjee, *A History of India*.
3. Romila Thapar (2002), *Early India*, Penguin.
4. R. Sathianthaier, (1972), *History of India*, Vol. I, S. Viswanathan Printers, Chennai.
5. A.S. Altekar, (1934), *The Rastrakutas and Their Times*, Poona.
6. V.D. Mahajan, (1990), *Ancient India*, Chand & Co., New Delhi.
7. T.V. Mahalingam, (1955), *The South Indian Polity*, Madras.
8. R.D. Banerjee, (1915), *The Palas of Bengal*, Calcutta.
9. R.C. Majumdar, (1915), *History of Bengal*, Calcutta.

இணையதள ஆதாரங்கள்

1. https://en.m.wikipedia.org.....wiki>pala
2. https://www.tutorialsprint.com>anicient....
3. www.brittannica.com
4. https//en.m.wikipedia.org,wihi,Rash...

கலைச்சொற்கள்

ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிகழும்	quinquennial	occurring once in five years
பௌத்தத் துறவி	bhikshu	Buddhist monk
தீப் பாய்தல்	immolate	killing oneself by jumping into fire
கணக்கிடு	reckon	calculate
ஆசிரியர்	preceptor	teacher
போரின் மூலம் கொள்ளையடிக்கப்பட்டவை	booty	plunder
ஒரு காரியத்திற்கு அல்லது செயல்பாட்டிற்கு ஆதரவு தருதல்	espoused	supporting a cause
செதுக்கப்பட்ட	hewn	chiselled
சார்ந்தது	ascribed	assigned

11th History Lesson 8 Tamil Medium.indd 129 20-12-2022 15:23:43

அலகு 9

தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

கற்றல் நோக்கங்கள்

- இடைக்காலத்தின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் இருந்த அரசு மற்றும் சமுதாயத்தைப் புரிந்துகொள்வது
- சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் இடையேயான மோதலின் இயல்பை அறிதல்
- இருஅரசுகள்மோதிக்கொண்டிருந்தசூழலில்தென்னிந்தியாவில்நடைபெற்றபண்பாட்டுப்பரிமாற்றங்களைப் புரிந்து கொள்ளுதல்
- அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள நினைவுச் சின்னங்களின் மகத்துவத்தையும் பிரமாண்டத்தையும் அறிதல்
- பக்தி இயக்கத்தையும் அக்காலத் தென்னிந்திய மொழிகளின் சிறப்புமிக்க இலக்கிய வளர்ச்சியையும் அறிதல்

அறிமுகம்

பொ.ஆ. 6 முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான தென்னிந்திய அரசியல் வரலாற்றில், பாதாமி (வாதாபி) சாளுக்கியருக்கும் (மேலைச் சாளுக்கியர்) காஞ்சி பல்லவருக்கும் இடையிலான மோதல்கள் முதன்மை பெறுகின்றன. அதே வேளையில் இக்காலகட்டம் பண்பாடு, இலக்கியம் ஆகிய துறைகளில் மகத்தான முன்னேற்றங்களைக் கண்டது. கலை, கட்டடக்கலை ஆகிய துறைகளிலும் அதுவரையிலும் அறியாத புதிய சாதனைகள் செய்யப்பட்டன. இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய பக்தி இயக்கம் இக்காலப்பகுதியில்தான் தமிழகத்திலிருந்து தோன்றியது.

சான்றுகள்

கோவில் சுவர்களிலும் தூண்களிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் செப்புப் பட்டயங்களுமே இக்காலகட்ட வரலாற்றுக்கு முக்கியச் சான்றுகளாகும். பிராமணர்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலங்களைப் பதிவு செய்யவும், மத நிறுவனங்களுக்கு அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும் பிறரும் கொடுத்த கொடைகளைப் பதிவு செய்யவும், சாளுக்கிய அரசர்கள் கன்னடம், தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட கல்வெட்டுகளும், பல்லவ அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட கல்வெட்டுகளும் முக்கியச் சான்றுகளாகும். இரண்டாம் புலிகேசியினுடைய அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவர் சமஸ்கிருதத்தில் எழுதிய ஐஹோல் கல்வெட்டு சாளுக்கியக் கல்வெட்டுகளிலேயே மிக முக்கியமானதாகும். கன்னட மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூலான 'கவிராஜமார்கம்', 'பம்ப – பாரதம்', 'விக்கிரமார்ஜுன விஜயம்', நன்னையாவால் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட மகாபாரதம் ஆகிய நூல்கள் முக்கிய வரலாற்றுச் செய்திகளை முன்வைக்கின்றன.

இருந்தபோதிலும் இவையனைத்துக்கும் மேலான இடத்தை வகிப்பது தமிழ் இலக்கியங்களேயாகும். தமிழ்நாட்டில் தோன்றிய பக்திஇயக்கத்தின் விழுமிய வெளிப்பாடுகள் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இயற்றிய பாடல்களில் மிளிர்ந்தன. வைணவ ஆழ்வார்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டு நாலாயிர திவ்வியப்பிரபந்தம் எனப் போற்றப்பட்டது. சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. அப்பர் (திருநாவுக்கரசர்), சம்பந்தர் (திருஞானசம்பந்தர்), சுந்தரர் ஆகியோர் இயற்றிய தேவாரம், மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் ஆகியவை முக்கிய நூல்களாகும். அவை இன்றுவரை புனிதமான இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. பிற்காலத்தில் சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணமும் பல வரலாற்றுச் செய்திகளை முன்வைக்கின்றது. முதலாம் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாச பிரகாசனம் பல்லவர்கால வரலாற்றிற்கு ஒரு முக்கியச் சான்றாகும்.

11th History Lesson 9 Tamil Medium.indd 130 20-12-2022 15:46:54

பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்புப் பட்டயத்திலிருந்து : (வரி: 12) கிழக்கு மலையில் இருந்து சூரியனும் சந்திரனும் எழுவது போல, தனது இன அரசு வம்சாவளியில் இருந்து (தோன்றிய) நரசிம்மவர்மனின் பேரன்; அவர் இளவரசர்களின் மகுடங்களுக்கெல்லாம் மணிமகுடம்; அவர் தலை எதற்கும் (எங்கும்) பணிந்ததில்லை; எதிரி அரசர்களின் யானைப் படைகளை எதிர்த்து விரட்டிய சிங்கம், நரசிம்மாவால் ஆசிர்வதிக்கப்பட்ட தோற்றமுடையவர்; அவரே இளவரசராக (பூமிக்கு) வந்திருக்கிறார்; சோழர்கள், சேரர்கள், களப்பிரர்கள், பாண்டியர்களை மீண்டும் மீண்டும் தோற்கடித்துள்ளார். அவர் ஆயிரம்கரமுடையான் (ஆயிரம் கரமுடைய காத்தவராயன் போல), நூற்றுக்கணக்கான போர்களில் ஆயிரம் கரங்கள் கொண்டு போரிட்டது போல் செயல்பட்டவர்; பரியாலா, மணிமங்கலம், சுரமாரா போர்களில் வெற்றிச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் புலிகேசியின் முதுகில் பொறித்து புறமுதுகிட்டு ஓடச் செய்தார்; குடமுனி (அகத்தியர்) அரக்கன் வாதாபியை அழித்தது போல் வாதாபி நகரை அழித்தார்.

சமுத்திர குப்தருடைய அலகாபாத் தூண் கல்வெட்டு, சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு உள்ளிட்ட பல கல்வெட்டுக்கள் பல்லவ – சாளுக்கிய மோதல்கள் குறித்த விவரங்களை வழங்குகின்றன. பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடுகள், மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்பாளையம் செப்பேடுகள் அவ்வரசர்களின் போர்வெற்றிகளைப் பதிவு செய்கின்றன. நாணயங்களும் இக்காலப் பொருளாதார நிலையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பாலி மொழியில் எழுதப்பட்ட பௌத்த நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சீனப் பயணிகளான யுவான் சுவாங், இட்சிங் ஆகியோரின் பயணக் குறிப்புகள் ஆகியன பல்லவர்காலச் சமூக, மத பண்பாட்டு நிலைகள் குறித்த விவரங்களை வழங்குகின்றன. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு நாடுகளைச் சேர்ந்த பயணிகளும் மற்றும் புவியியலாளர்களுமான சுலைமான், அல்மசூதி, இபின் கவ்கா போன்றோரின் பயணக்குறிப்புகள் இக்காலகட்ட இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைப்பற்றி நமக்குக் கூறுகின்றன. ஐஹோல், வாதாபி, பட்டாடக்கல் ஆகிய இடங்களைச் சேர்ந்த கோவில்களிலுள்ள சிற்பங்கள் இக்காலகட்டப் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

சாளுக்கியர்களும் பல்லவர்களும்

9.1 சாளுக்கியர்

இரண்டு சாளுக்கிய அரச குடும்பங்கள் உள்ளன. ஒன்று வாதாபி சாளுக்கியர்; மற்றொன்று கல்யாணி சாளுக்கியர். இப்பாடம் வாதாபி சாளுக்கியரைப் பற்றியதாகும். சாளுக்கிய அரசவம்சம் அதனை உருவாக்கிய முதலாம் புலிகேசி (சுமார் கி.பி. (பொ.ஆ) 543–566) வாதாபிக்கு அருகேயுள்ள ஒரு குன்றினைச் சுற்றி கோட்டையைக் கட்டியதோடு வலுவான சக்தியாக உதயமானது. கடம்பரின் மேலாதிக்கத்தின் கீழிருந்த அவர், தன்னை சுதந்திர அரசராக பிரகடனப்படுத்திக்கொண்டார். அவர் யக்ஞங்களை நடத்தியதாகவும் அஸ்வமேத யாகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது. தலைநகர் வாதாபி கீர்த்திவர்மனால் (566–597) நிறுவப்பட்டது. முதலாம் புலிகேசியின் பேரன் இரண்டாம் புலிகேசி (609–642) அரசர் மங்களேசனைத் தோற்கடித்த பின்னர் தன்னை அரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்நிகழ்வு ஐஹோல் கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் புலிகேசியின் போர் வெற்றிகளில் குறிப்பிடத்தக்கது நர்மதை நதிக்கரையில் ஹர்ஷரை வென்றதாகும். மாளவம், கலிங்கம் மற்றும் தக்காணத்தின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த அரசர்கள் இவரின் அரசியல் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். பனவாசியின் கடம்பர்களையும் தலக்காடு (மைசூர்) கங்கர்களையும் இவர் வெற்றி கொண்டார். இவர் காஞ்சிபுரத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலைப் பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் முறியடித்தார். இது சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் இடையே ஒரு நீண்ட காலப் போருக்கு இட்டுச்சென்றது. பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன் (630–668) வாதாபியைத் தாக்கிக் கைப்பற்றினார். இப்போரில் இரண்டாம் புலிகேசி உயிர்துறந்தார். இதனைத் தொடர்ந்து வாதாபி சாளுக்கியப் பேரரசின் கிழக்குப் பகுதிகளின் மீதான பல்லவர்களின் கட்டுப்பாடு பல ஆண்டுகள் நீடித்தது. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாதாபி சாளுக்கியர்கள் ராஷ்டிரகூடர்களால் வெற்றிகொள்ளப்பட்டனர்.

சாளுக்கியரின் நிர்வாகம்

அரசு

அரசரே நிர்வாகத்தின் தலைவர். ஒரு அரசருக்குப் பிறகு, அவருடைய மூத்த மகனே அரசராக வேண்டும் என்ற மரபு முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. பொதுவாக ஓர் அரசர் ஆட்சி புரிகையில் அவருடைய மூத்த மகன் ஆளுநராக (யுவராஜாவாக) அமர்த்தப்படுவார். இந்த ஆளுநர் இலக்கியம், சட்டம், தத்துவம், போர்க்கலைகள் முதலானவற்றில் பயிற்சி பெறுவார். சாளுக்கிய அரசர்கள் தர்ம சாஸ்திரம், நீதி சாஸ்திரம் ஆகியவற்றின்படி ஆட்சிபுரிவதாகக் கூறினர். முதலாம் புலிகேசி மனுசாஸ்திரம், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

தொடக்ககாலத்தில்சாளுக்கியஅரசர்கள்மகாராஜன், சத்யசிரயன், ஸ்ரீபிருத்திவிவல்லபன் எனும் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். ஹர்சவர்தனரை வென்ற பின்னர் இரண்டாம் புலிகேசி பரமேஸ்வரன் எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். விரைவில் பத்ரகாரன், மகாராஜாதிராஜன் எனும் பட்டங்களும் பிரபலமாயின. பல்லவ அரசில், அரசர்கள், தர்ம மகாராஜாதி ராஜா, மகாராஜாதி ராஜா, தர்ம மகாராஜா, மகாராஜா எனும் உயர்வாக ஒலிக்கும் பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். ஹிரகடஹள்ளி செப்புப்பட்டயத்தில், அக்னிஸ்தோம, வாஜ்பேய, அஸ்வமேத வேள்விகளை நடத்தியவர் என்று அரசர் அறிமுகம் செய்யபடுகிறார். காட்டுப் பன்றியின் உருவமேசாளுக்கியரின்அரசமுத்திரையாகும்.இது விஷ்ணுவின் வராக அவதாரத்தைக் குறிப்பதாகும். சிவபெருமானின் வாகனமான காளை (நந்தி) பல்லவர்களின் அரச முத்திரையாகும்.

அரசகுல மகளிர்

முதலாம் ஜெயசிம்மனின் வழிவந்த சாளுக்கிய வம்சாவளியினர்அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை மாநில ஆளுநர்களாக நியமித்தனர்.

இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு : ஐஹோல் (கர்நாடகா) மேகுடி கோவில் ஒரு குன்றின் மேலுள்ளது. இச்சமணக் கோவிலின் கிழக்குச் சுவரில் 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று உள்ளது. (சக வருடம் 556: கி.பி. 634–635 காலத்தைச் சார்ந்தது). இக்கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர் ரவிகீர்த்தி என்ற கவிஞர். இக்கல்வெட்டு சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும். குறிப்பாக அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த இரண்டாம் புலிகேசி 'சத்யஸ்ராய' (உண்மையின் உறைவிடம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கல்வெட்டு சாளுக்கியரின் அரசவம்ச வரலாற்றை, இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்சவர்தனரைத் தோற்கடித்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது.

11th History Lesson 9 Tamil Medium.indd 132 20-12-2022 15:46:55

விஜயபத்திரிகா என்னும் பெயரைக் கொண்ட சாளுக்கிய இளவரசி கல்வெட்டாணைகளைப் பிறப்பித்துள்ளார். பல்லவ அரசிகள் அரசு நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கேற்கவில்லை. ஆனால் அவர்கள் பல கோவில்களை எழுப்பினர். பல கடவுள்களின் உருவங்களை அங்கே நிறுவினர். கோவில்களுக்குக் கொடை வழங்கினர். ராஜசிம்மனின் அரசி ரங்கபதாகாவின் உருவம், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலிலுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது.

அரசரும் அமைச்சர்களும்

சாளுக்கிய அரசில் அதிகாரங்கள் அனைத்தும் அரசரின் கரங்களில் வழங்கப்பட்டிருந்தன. அமைச்சரவை பற்றிக் கல்வெட்டுகளில் குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் அவை மகா – சந்தி – விக்கிரகிக என்னும் அதிகாரியை குறிப்பிடுகின்றன. நான்கு அமைச்சர்களைக் குறித்து கல்வெட்டுகள் பேசுகின்றன. அவர்கள் பிரதான (முதலமைச்சர்), மகாசந்தி–விக்கிரகிக (வெளிவிவகாரத்துறை அமைச்சர்), அமத்யா (வருவாய்த்துறை அமைச்சர்), சமகர்த்தா (அரசு கருவூல அமைச்சர்) ஆகியோராவர். நிர்வாக வசதிக்காகச் சாளுக்கியர்கள் நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அவை விஷ்யம், ராஷ்ட்ரம், நாடு, கிராமம் என்பவனவாகும். கல்வெட்டுகள் விசயாபதி, சமந்தா, கிராமபோகி, மபத்ரா என்னும் அதிகாரிகள் குறித்துப் பேசுகின்றன. விசயாபதி அரசரின் கட்டளைப்படி அதிகாரங்களைக் கையாண்டார். சமந்தா என்போர் நிலப்பிரபுக்களாவர். இவர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டனர். கிராம்போகி, கிராமகூடர் ஆகியோர் கிராம அளவிலான அதிகாரிகள். மகாத்ரா என்போர் கிராமத்தைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்களாவர்.

மாகாண மற்றும் மாவட்ட நிர்வாகம்

பொதுவாக அரசர்கள் தங்களின் மகன்களை மாகாண ஆளுநர்களாக அமர்த்தினர். மாகாண ஆளுநர்கள் தங்களை ராஜமார்க்க ராஜன் என்றும், ராஜாதித்ய ராஜ பரமேஸ்வரன் என்றும் அழைத்துக் கொண்டனர். இவர்களில் சிலர் மகா – சமந்தா என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் படைகளை வைத்துப் பராமரித்தனர். விஷ்யாவின் தலைவர் விசாயபதியாவார். இவ்விஷயாக்கள் மீண்டும் புக்திகளாகப் பிரிக்கப்பட்டன. புக்தியின் தலைவர் போகபதி ஆவார்.

கிராம நிர்வாகம்

கிராமங்களில் பாரம்பரியமாக வருவாய் அலுவலர்களாகப் பணியாற்றிவர் நல–கவுண்ட என்றழைக்கப்பட்டனர். அரசரால் நியமிக்கப்பட்ட கமுண்டர் அல்லது போகிகன், கிராம நிர்வாகத்தின் மையப் புள்ளியாக இருந்தார். கிராமக் கணக்கர் கரணா ஆவார். இவர்கிராமணி எனவும் அழைக்கப்பட்டனர். கிராம அளவில் கிராம மக்களைக் கொண்ட 'மகாஜனம்' என்னும் குழுவின் கைகளில் சட்டம் ஒழுங்கு நிர்வாகம் இருந்தது. 'மகாபுருஷ்' என்னும் சிறப்பு அதிகாரி கிராமத்தில் அமைதியைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டார். நகரபதி, புறபதி ஆகியோர் சிறுநகரங்களின் அதிகாரிகளாவர்.

மதம்

சைவம் வைணவம் ஆகிய இரு மதங்களையும் சாளுக்கியர் ஆதரித்தனர். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்களை எழுப்பினர். இக்கோவில்களில் முறையான வழிபாடுகளும் சடங்குகளும் விழாக்களும் நடத்தப்படுவதற்காக கங்கைப் பகுதிகளிலிருந்து பிராமணர்கள் அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். சாளுக்கிய அரசர்களில் குறிப்பிடத்தகுந்த அரசர்களான முதலாம் கீர்த்திவர்மன், மங்களேசன் (597–609), இரண்டாம் புலிகேசி (609–642) ஆகியோர் வேள்விகளை நடத்தினர். அவர்கள் பரம–வைஷ்யண, பரம–மஹேஸ்வர என்னும் பட்டங்களையும் தரித்துக்கொண்டனர். போர்க் கடவுளான கார்த்திகேயனுக்கு முக்கியத்துவம் அளித்தனர். சைவ மடங்கள் சைவத்தைப் பரப்பும் மையங்களாயின. சாளுக்கியர் ஆசீவக மதப்பிரிவுகளையும் ஆதரித்தனர். சமண மத மையங்களுக்கு மிகத் தாராளமாக நிலங்களை வழங்கினர். கவிஞர் என இரண்டாம் புலிகேசியால் புகழ்மாலை சூட்டப்பட்ட ரவிகீர்த்தி ஒரு சமண அறிஞர் ஆவார். இரண்டாம் கீர்த்திவர்மனின் ஆட்சியின்போது சமண மதத்தைச் சேர்ந்த கிராம அதிகாரி ஒருவர் அனெகெரி என்ற இடத்தில் ஒரு சமணக் கோவிலைக் கட்டினார். இளவரசர் கிருஷ்ணா குணபத்ரா என்ற சமணத் துறவியை தனது ஆசிரியராகக் கொண்டிருந்தார். சீனப் பயணி யுவான் சுவாங் சாளுக்கியப் பகுதிகளில் பல பௌத்த மையங்கள் இருந்ததாகவும் அவற்றில் மகாயான, ஹீனயான பிரிவுகளைப் பின்பற்றும் 5000 பௌத்தர்கள் வாழ்ந்ததாகவும் கூறுகிறார்.

இலக்கியமும் கல்வியும்

ஐஹோல், மகாகூடம் தூண் கல்வெட்டுக்களைச் சாளுக்கியர் சமஸ்கிருதத்தில் பொறித்துள்ளனர். வாதாபியிலுள்ள ஒரு சாளுக்கிய அரசனின் ஏழாம் நூற்றாண்டுக் கல்வெட்டு கன்னட மொழியை 'உள்ளூர் பிராகிருதம்' அதாவது மக்களின் மொழியென்றும், சமஸ்கிருதத்தைப் பண்பாட்டின் மொழி என்றும் குறிக்கின்றது. இரண்டாம் புலிகேசியின் தளபதி ஒருவன் 'சப்தாவதாரம்' எனும் இலக்கண நூலை சமஸ்கிருத மொழியில் எழுதினார்.

11th History Lesson 9 Tamil Medium.indd 133 20-12-2022 15:46:55

சாளுக்கியரின் கட்டடக்கலை

வரலாற்று ரீதியில் தக்காணத்தில் சாளுக்கியர்களே முதன்முறையாக, சற்றே மிருதுவான மணற்கல் (sand stone) பயன்படுத்திக் கோவில்களை எழுப்பினர். வாதாபியில் நான்கு விதமான கோவில்கள் காணப்படுகின்றன. இரண்டு கோவில்கள் விஷ்ணுவுக்கும் ஒரு கோவில் சிவனுக்கும் மற்றொன்று சமண தீர்த்தங்கரர்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவர்களின் கோவில்களைக் குடைவரை குகைக்கோவில்கள், கட்டுமானக் கோவில்கள் எனப் பிரிக்கலாம். வாதாபி, குடைவரைக் குகைக் கோவில்கள், கட்டுமானக் கோவில்கள் ஆகிய இரண்டுக்கும் பெயர்பெற்றது. பட்டாடக்கல் , ஐஹோல் ஆகியவை கட்டுமானக் கோவில்களுக்குப் பெயர்பெற்றவையாகும்.

ஐஹோல்

634இல் உருவாக்கப்பட்ட ஐஹோல் இடைக்காலத்தில் புகழ் பெற்றிருந்த ஐயாவொளே எனும் வணிகக் குழுமத்தின் தலைமையிடமும், முக்கியமான வணிக மையமுமாகும். ஐஹோலில் ஏறத்தாழ எழுபது கோவில்கள் உள்ளன. காலத்தால் முந்தைய கற்கோவில் லட்கான் கோவிலாகும். இதனுடைய தனித்தன்மை இங்குள்ள வட இந்திய பாணியிலிருந்து வேறுபட்ட சிகரத்தைக் கொண்ட, அழகான, நேர்த்தியான மென்சாந்து மேற்பூச்சைக் கொண்ட தூணாகும். துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மற்றொரு கோவில், புத்த சைத்ய பாணியில் அமைந்துள்ளது. சற்றே மேடான தளத்தின் மேல் அரை வட்டவடிவில் இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட குசிமல்லிகுடி எனும் மற்றொரு துர்க்கைக் கோவில் செவ்வக வடிவத்தில் அமைந்துள்ளது. சாளுக்கியர் சமணக் கோவில்களையும் கட்டினர். மேகுடியிலுள்ள சமணக்கோவில், சாளுக்கியர் காலத்திய கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மண்டப பாணியில் அமைக்கப்பட்டுள்ள குகைகள் ஐஹோலில் பாதுகாக்கப்படுகின்றன.

வாதாபி (பாதாமி)

வாதாபியில் நான்கு குகைகள் உள்ளன. மங்களேசன் கட்டிய மிகப் பெரிய குகைக்கோவில் விஷ்ணுவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பாம்புப் படுக்கையில் சயனக் கோலத்திலுள்ள விஷ்ணு, நரசிம்மர் சிற்பங்கள் சாளுக்கியரின் கலை மேன்மைக்கு நேர்த்திமிகுந்த எடுத்துக்காட்டுகளாகும். மதவேறுபாடுகளின்றிக் கட்டடக்கலை அமைப்புகள் ஒரே பொதுவான பாணியைக் கொண்டுள்ளன. இது தொழில்நுட்பத்தையும், புரவலர், கட்டடக் கலைஞர்களின் மதச்சார்பற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

பட்டாடக்கல்

கர்நாடக மாநிலம், பாகல்கோட் மாவட்டத்திலுள்ள பட்டாடக்கல் எனும் அமைதியான சிறிய கிராமம் கலையழகும் நேர்த்தியும் மிக்க கோவில்களுக்குப் பெயர்பெற்றதாகும். பட்டாடக்கல் அரச சடங்குகள் நடத்துவதற்கான இடமாகும். இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதன் நினைவாக அவனுடைய மனைவி லோகமாதேவியின் ஆணைப்படி விருப்பாக்சர் கோவில் கட்டப்பட்டது. பல்லவ அரசன் ராஜசிம்மன் மாமல்லபுரத்தில் எழுப்பிய கட்டுமானக் கோவில்களின் தனித்தன்மைகளைத் தழுவி இக்கோவில் அமைந்துள்ளது. பொதுவாக நினைவுச் சின்னங்கள் அவற்றைக்கட்டியஅரசர்களோடுதொடர்புடையனவாக இருக்கும். சிற்பிகளின் பெயர் அறியப்படாமல் போய் விடும். ஆனால் இங்கே இக்கோவிலின் வடிவத்தைத் திட்டமிட்ட கட்டடக் கலைஞர் அதை உருவாக்கிய நிபுணத்துவம் பெற்ற கலைஞர்கள் ஆகியோரின் கையெழுத்தும் இடம் பெற்றுள்ளன. விருப்பாக்சர் கோவிலின் கிழக்கு வாசலில் இடம் பெற்றுள்ள ஒரு கன்னடக் கல்வெட்டு இக்கோவிலை வடிவமைத்த கட்டடக் கலைஞரை வெகுவாகப் பாராட்டுகின்றது. அக்கட்டடக்கலைஞருக்குத் "திரிபுவாசாரியா" (மூன்று உலகையும் உருவாக்கியவன்) என்ற பட்டமும் சூட்டப்பட்டது. கோவில் சுவரில் இடம் பெற்றுள்ள பல சிற்பங்கள் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளின் கையொப்பத்தையும் கொண்டுள்ளன.

துர்க்கை கோவில் – ஐஹோல்

விருப்பாக்சர் கோவில் – பட்டாடக்கல்

11th History Lesson 9 Tamil Medium.indd 134 20-12-2022 15:46:56

இக்கிராமத்தின்தென்கிழக்குமூலையில்பாபநாத கோவில் அமைந்துள்ளது. விருப்பாக்சர் கோவிலைப் போன்ற அடித்தள கட்டுமானத் திட்டத்தின்படி கட்டப்பட்ட இக்கோவில் வட இந்திய பாணியிலான சிகரத்தைக் கொண்டுள்ளது. வெளிப்புறச் சுவர்கள் ராமாயணக் கதாபாத்திரங்களையும் காட்சிகளையும் சித்தரிக்கும் தொடர் சிற்பங்களால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோவிலின் கிழக்குச் சுவரிலுள்ள ஒரு சிறிய கன்னடக் கல்வெட்டு கருவறையை வடிவமைத்தவரின் பெயர் 'ரேவதி ஓவஜா' எனக் குறிப்பிடுகின்றது. பட்டாடக்கல் லில் சாளுக்கியர் பத்துக்கும் மேற்பட்ட கோவில்களை எழுப்பியுள்ளார்கள். இவை சாளுக்கியக் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகின்றன. கட்டப்பட்ட பாணியின் அடிப்படையில் இக்கோவில்களை இந்தோ–ஆரியன், திராவிட கட்டடக் கலை என இரண்டாகப் பிரிக்கலாம்.

ஓவியம்

வாதாபியில் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட குகைக்கோவிலில் சில ஓவியங்கள் காணப்படுகின்றன. ஓவியக்கலையில் சாளுக்கியர் வாகடகர்களின் பாணியைப் பின்பற்றினர். அவ்வாறான ஓவியங்களில் பெரும்பாலானவை விஷ்ணுவின் அவதாரங்களைப் பற்றியதாகும். சாளுக்கிய ஓவியங்களில் மிகப் பிரபலமானது. அரசன் மங்கேசனால் (597–609) கட்டப்பட்ட அரண்மனையில் உள்ளது. அக்காட்சி நடன நிகழ்ச்சி ஒன்றை அரச குடும்ப உறுப்பினர்களும் மற்றவரும் கண்டுகளிப்பதாய் அமைந்துள்ளது.

9.2 பல்லவர்

பல்லவர்களின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை. தொடக்ககால அறிஞர்கள் சிலர் பார்த்தியர் எனும் அரச மரபின் மற்றொரு பெயரான 'பஹல்வ' என்ற சொல்லின் திரிபே 'பல்லவ' ஆகும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் சாகர், சாதவாகனர்க்கிடையே போர்கள் நடைபெறுகையில் மேற்கிந்தியாவிலிருந்து தீபகற்பத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளுக்குப் பார்த்தியர் குடி பெயர்ந்தனர். ஆனால் இன்றைய அறிஞர் பலர் பார்த்தியரைத் தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் அல்லது வட இந்தியரோடு ரத்தக்கலப்பு கொண்டவர்கள் என்றும் கருதுகின்றனர்.

பல்லவர்கள் வடபெண்ணை ஆற்றுக்கும், வட வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பான தொண்டை மண்டலத்தோடு தொடர்புடையவராவர். சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு காவேரி வரை முன்னேறி சோழர்களுக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றி, தன் தந்தை தொடங்கிய பல்லவ வம்ச ஆட்சியை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டார். களப்பிரர்களை முற்றிலும் அழித்தொழித்து காவேரி வரை முன்னேறி அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றியபோது பாண்டியர்களோடு மோத வேண்டியதாயிற்று. சிம்மவிஷ்ணுவைத் தொடர்ந்து அவரது மகன் முதலாம் மகேந்திரவர்மன் (பொ.ஆ. 590–630) அரியணை ஏறினார். சமண மதத்தைப் பின்பற்றிய இவரை அப்பர் சைவராக மாற்றினார். கலைகளை ஆதரித்த மகேந்திரவர்மன் கவிஞனும் இசை வித்தகனுமாவார்.


நரசிம்மவர்மன்

மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் இரண்டாம் புலிகேசி, பல்லவ அரசினுடைய வடபகுதிகளைக் கைப்பற்றித் தலைநகர் காஞ்சிபுரம் வரை முன்னேறினார். இதனைத் தொடர்ந்து முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் (630–668) பதிலடி கொடுக்கும் விதத்தில் பல்லவர்கள் சாளுக்கியர்களுக்கு எதிராகப் பல வெற்றிகளை ஈட்டினர். இப்போர்களில் பல்லவர்களுக்கு மானவர்மன் எனும் இலங்கை இளவரசர் உதவினர். இவ்விளவரசரே பின்னர் இலங்கையின் அரசராகப் பதவியேற்றார். இப்போர்களின் உச்சகட்டமாக நரசிம்மவர்மன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார். இரண்டாம் புலிகேசி இப்போரில் கொல்லப்பட்டார். நரசிம்மவர்மன் சேர சோழர்களையும் களப்பிரர்களையும் வெற்றி கொண்டதாகக் கூறுகிறார். இலங்கை அரசன் மானவர்மனுக்கு ஆதரவாக இருமுறை அனுப்பப்பட்ட கப்பற்படைகள் வெற்றி பெற்றன. இருந்தபோதிலும் இலங்கை அரசர் தனது பதவியினை இழந்தார்.

பல்லவ சாளுக்கியப் பகைமையும் மோதல்களும் தொடர்ந்தன. இடையிடையே அமைதியும் நிலவியது. பல்லவ அரசன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் ஆட்சியின்போது (670–695) சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்யன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தார். முதலாம் பரமேஸ்வரவர்மன் கங்கர், பாண்டியர் ஆகியோரின் உதவியோடு விக்கரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டார். இதன் விளைவாகப் பின்னர் தெற்கில் பல்லவருக்கும் பாண்டியருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், தண்டிவர்ம பல்லவனின் ஆட்சியின்போது காஞ்சிபுரம்

11th History Lesson 9 Tamil Medium.indd 135 20-12-2022 15:46:56

ராஷ்ட்டிரகூட அரசர் மூன்றாம் கோவிந்தனின் தாக்குதலுக்கு உள்ளானது. தண்டிவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன், மேலைக் கங்கர், சோழர் ஆகியோரின் ஆதரவோடு பாண்டியரை திருப்புறம்பியம் போரில் தோற்கடித்தான்.

மூன்றாம் நந்திவர்மனின் பேரனான அபராஜிதன் தொண்டை மண்டலப்பகுதியின் மீது படையெடுத்து வந்த முதலாம் ஆதித்த சோழனோடு போர்புரிந்து மடிந்தான். இத்துடன் பல்லவரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் தொண்டை மண்டலம் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

சேரர்–குறிப்பு : பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை கேரளா, சேர பெருமாள் அரசர்களால் ஆளப்பட்டிருந்தாலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை அவர்களது வரலாறு குறித்து ஓரளவே தெரியவந்துள்ளது.

பல்லவ நிர்வாகம்

பல்லவர் காலத்தில் அரச பதவியானது தெய்வீக உரிமையென்றும், அவ்வுரிமையானது வம்சாவளியாகத் தொடர்வது என்றும் கருதப்பட்டது. பல்லவ அரசர்கள் பெரும் பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். அவற்றுள் 'மகாராஜாதிராஜா' என்பன போன்ற சில வடஇந்திய மரபிலிருந்து பெறப்பட்டவை. அமைச்சர் குழுவொன்று அரசருக்கு உதவியது. பிற்காலப் பல்லவர் காலத்தில் இவ்வமைச்சர் குழுவானது அரசின் கொள்கை முடிவுகளில் முக்கியப் பங்காற்றியது. ஒருசில அமைச்சர்கள் ஓரளவுக்கு உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர். இவ்வமைச்சர்களில் பலர் நிலவுடைமையாளர்களிலிருந்து நியமிக்கப்பட்டனர்.

அமத்யா என்பவருக்கும் 'மந்திரி' என்பவருக்குமிடையே சில வேறுபாடுகளிருந்தன. மந்திரி என்றால் பொதுவாக ராஜதந்திரி எனப் புரிந்துகொள்ளப்படுகிறது. அமத்யா என்பவர் ஆலோசகராவார். 'மந்திரி மண்டல' என்பது அமைச்சர் குழுவாகும். ரகஸ்யதிகிரதா என்பவர் அரசரின் அந்தரங்கச் செயலாளர். மாணிக்கப் பண்டாரம் காப்பான் என்னும் அதிகாரி கருவூலத்தைக் காப்பவராவார். (மாணிக்க–விலைமதிப்பில்லா; பண்டாரம்–கருவூலம்; காப்பான்–காவல் புரிபவர்). கொடுக்காப்பிள்ளை என்பவர் நன்கொடைகளுக்கான அதிகாரிகளாவார். அவர்கள் பல்லவ அரசர்களின் கீழ் மைய அதிகாரிகளாகப் பணியாற்றிய அதிகாரிகளாவர். கோச–அதீயட்சா என்பவர் மாணிக்கப் பண்டாரம் காப்பாளர்களை மேற்பார்வை செய்பவர். நீதிமன்றங்கள் அதிகர்ண மண்டபம் என்றும், நீதிபதிகள் தர்மாதிகாரி என்றும் அழைக்கப்பட்டனர். நந்திவர்ம பல்லவனின் காசக்குடி செப்பேடுகளில் அபராதங்களைப் பற்றிய

11th History Lesson 9 Tamil Medium.indd 136 20-12-2022 15:46:58

குறிப்புகள் காணப்படுகின்றன. மேல்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் கர்ணதண்டம் ஆகும். கீழ்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் அதிகர்ண தண்டமாகும்.

மாநில ஆளுநர்களுக்கு மாவட்ட அளவிலான அதிகாரிகள் ஆலோசனை வழங்கி. உதவிகள் செய்தனர். இவ்வதிகாரிகள் உள்ளூர் அளவிலான தன்னாட்சி பெற்ற அமைப்புகளோடு ஆலோசகர்கள் என்ற நிலையில் இணைந்து செயல்பட்டனர். இவ்வமைப்புகள் உள்ளூர் அளவிலான சாதி, கைவினைஞர், தொழில் குழுக்கள் (நெசவாளர், எண்ணெய் ஆட்டுவோர் போன்றோர்), சேவை செய்வோர், மாணவர், அர்ச்சகர்கள், துறவிகள் ஆகியோர்களின் உறவுகளின் அடிப்படையில் கட்டப்பட்டவையாகும். கிராமங்களில் மக்கள் பங்குபெறும் மன்றங்கள் இருந்தன. மாவட்டப் பிரதிநிதிகளும் இருந்தனர். இவ்வமைப்புகளின் பொதுக்குழுக் கூட்டங்கள் ஆண்டிற்கு ஒருமுறை கூட்டப்பட்டது. அளவில் சிறியதான குழுக்களின் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது இச்சிறிய அமைப்புகளின் பொறுப்பாகும்.

நிலமானியங்கள்

நிலவுடைமை உரிமை அனைத்தும் அரசரிடமே இருந்தது. அவர் அதிகாரிகளுக்கு வருவாய் மானியங்களையும் பிராமணர்களுக்கு நில மானியங்களையும் வழங்கினார் அல்லது நிலப்பிரபுக்கள், சிறு விவசாயிகள் மூலம் நிலத்தை சாகுபடி செய்ய வைத்தார். இரண்டாவதாகச் சொல்லப்பட்டதே பெரும்பாலும் பின்பற்றப்பட்ட முறையாகும். அரசருக்குச் சொந்தமான நிலங்கள் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டன. குத்தகைக்கான கால அளவைப் பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபடும். பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்களைக் கொண்ட கிராமங்கள் நிலவரி செலுத்தின. பிரம்மதேய கிராமங்கள் ஒரு பிராமணருக்கோ அல்லது சில பிராமணர்களைக் கொண்ட ஒரு குழுவுக்கோ கொடையாக வழங்கப்பட்டன. வரி செலுத்த வேண்டியதில்லை என்பதால் இக்கிராமங்கள் ஏனைய கிராமங்களைக் காட்டிலும் செழிப்பாக இருந்தன. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள் தேவதான கிராமங்களாகும். இவற்றின் வருவாயை கோவில் நிர்வாகிகள் பெற்றுக்கொண்டனரேயன்றி அரசு பெறவில்லை. கோவில் பணிகளில் வேலைவாய்ப்பு வழங்கி, கோவில்கள் கிராமங்களுக்கு உதவின. பின்வந்த காலங்களில் கோவில்கள் கிராமம் சார்ந்த வாழ்க்கையின் மையமாக மாறியபோது தேவதான கிராமங்கள் தனி முக்கியத்துவம் பெற்றன. பல்லவர்ஆட்சியில் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ள இருவகை கிராமங்களே (தேவதான கிராமங்கள் தவிர) பெரும்பான்மையாய் இருந்தன.

> 1879இல் புதுச்சேரிக்கு அருகே உருக்காட்டுக்கோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினோரு செப்புப் பட்டயங்கள் கண்டறியப்பட்டன. அரசன் நந்திவர்மனின் (பொ.ஆ 753) இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமம் குறித்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கம் அரசரைப் பற்றிய சமஸ்கிருத மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமஸ்கிருத செய்யுளோடு முடிவடைகிறது.

கிராம வாழ்க்கை

கிராம அளவில் அடிப்படையான அமைப்பு 'சபை' ஆகும். அறக்கட்டளைகள், நிலம், நீர்ப்பாசனம், வேளாண்மை, குற்றங்களுக்கான தண்டனை, மக்கள் தொகை உள்ளிட்ட தேவைப்படும் ஏனைய ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியன போன்ற கிராமத்தோடு தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளிலும் சபை அக்கறை செலுத்தியது. கிராம நீதிமன்றங்கள் சிறிய குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புகள் வழங்கின. சிறுநகரங்களிலும் நகரங்களிலும் அரசரை மேலான நடுவராகக் கொண்டு அதிகாரிகளின் தலைமையில் நீதிமன்றங்கள் செயல்பட்டன. சபை என்பது நிர்வாகமுறையைச் சேர்ந்த அமைப்பாகும். கிராமத்தவர்அனைவரும்பங்கேற்கும்நிர்வாகமுறை சாராத மக்கள் மன்றமான 'ஊரார்' என்ற அமைப்போடு இது இணைந்து செயல்பட்டது. இதற்கு மேலான மாவட்ட குழு 'நாடு' அல்லது மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்டது. பிராமணர்கள் மட்டுமே வாழ்ந்த அல்லது பிராமணர்கள் அதிகமாக வாழ்ந்த கிராமங்கள் இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்தன. கிராம அளவிலான இவ்வமைப்புகளுக்கும் அரசு நிர்வாகத்திற்குமிடையே பாலமாக செயல்பட்டவர் கிராமத்தலைவர் ஆவார்.

ஏரி நீர்ப்பாசனம்

ஏரிப்பட்டி அல்லது ஏரிநிலம் எனும் சிறப்புவகை நிலத்தை தென்னிந்தியாவில் மட்டுமே அறிகிறோம். தனிப்பட்ட மனிதர்கள் கொடையாகக் கொடுத்த இந்நிலங்களிலிருந்து பெறப்படும் வரி கிராமத்து ஏரிகளைப் பராமரிப்பதற்காகத் தனியாக ஒதுக்கி வைக்கப்படும். இந்த ஏரிகளில் மழைநீர் சேகரிக்கப்படும். அந்நீரைக் கொண்டு வருடம்

11th History Lesson 9 Tamil Medium.indd 137 20-12-2022 15:46:58

முழுவதும் வேளாண்மை செய்ய முடிந்தது. வறட்சியான கால நிலையிலும் வேளாண்மை செய்யலாம். ஏரிகள் அனைத்தும் கிராம மக்களின் கூட்டுழைப்பில் கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டன. ஏரி நீரை அனைத்து விவசாயிகளும் பகிர்ந்துகொண்டனர். ஏரிகளைப் பராமரிப்பது கிராமத்தின் பொறுப்பாகும். கிராமம் தொடர்பான செய்திகளைப் பேசுகிற பல்லவர் காலக் கல்வெட்டுகள் அனைத்தும் ஏரிப் பராமரிப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஏரிகளுக்கு அடுத்த நிலையில் கிணறுகள் முக்கியமானவை. வாய்க்கால்கள் வழியாக நீர் விநியோகிக்கப்பட்டது. நீர் பகிர்வினை முறைப்படுத்தவும், அளவுக்கு அதிகமாகச் சேர்ந்த நீரை வெளியேற்றவும் மதகுகள் அமைக்கப்பட்டிருந்தன. கிராமத்தாரால் நியமிக்கப்பட்ட ஏரிக்குழு எனும் அமைப்பு நீர் பகிர்வை மேற்பார்வையிட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமான நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வோர்மீது வரி விதிக்கப்பட்டது.

வருவாயும் வரிவிதிப்பும்

செப்புப்பட்டயங்களில் பதிவு செய்யப்பட்ட நிலமானியங்களே முக்கியமாக நில வருவாய், வரிவிதிப்பு ஆகியன குறித்தும் விரிவான தகவல்களை முன்வைக்கின்றன. வருவாயானது முதன்மையாக கிராம ஆதாரங்களிலிருந்தும், வணிக மற்றும் நகரங்களைச் சேர்ந்த நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டது. கிராமங்களின் மீது இருவகைப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. வேளாண் மக்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கில் தொடங்கி பத்தில் ஒரு பங்கு வரை வரியாக அரசுக்குச் செலுத்தினர். இவ்வரியை கிராமமே வசூல் செய்து அரசின் வசூல் அதிகாரியிடம் கட்டியது. இரண்டாவது வகைப்பட்ட வரிகள் உள்ளூர் அளவில் வசூலிக்கப்பட்ட வரிகளாகும். ஆனால் இவ்வரிகள் அந்தக் கிராமத்தின் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வரிப் பணம் நீர்ப்பாசன அமைப்புகளைப் பழுதுபார்த்தல், கோவில்களுக்கு விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கே செலவிடப்பட்டன. நிலவரியின் மூலமாகப் பெறப்படும் வருவாய் போதுமானதாக இல்லையெனில் அரசு கால்நடை வளர்ப்போர், கள் இறக்குவோர், திருமண வீட்டார், மட்பாண்டம் செய்வோர், தங்க வேலை செய்வோர், சலவை செய்வோர், துணி நெய்வோர், கடிதங்கள் சுமந்து செல்வோர், நெய் தயாரிப்போர், இடைத் தரகர்கள் ஆகியோரிடம் வரிவசூலித்து பற்றாக்குறையைச் சரிசெய்து கொள்ளும்.

போர்களின்போது சூறையாடப்பட்ட பொருள்களும் படைவீரர்களால் கைப்பற்றப்பட்ட செல்வமும் அரசு வருவாயோடு சேர்க்கப்பட்டன. பல்லவ அரசர்கள் போர்களை மிக முக்கியமானதாகக் கருதினார்கள். காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோவிலில் நந்திவர்மன் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள், குறிப்பாகப் பல்லவப் படைகள் ஒரு கோட்டையைத் தாக்குவது போன்ற போர்க்களக் காட்சிகள், தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அக்கோட்டை உயரமான மதிற் சுவர்களை கொண்டதாயும், வீரர்கள் அதைத் தாக்குவது போலவும் அருகில் யானைகள் நிற்பது போலவும் அக்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

வைகுண்டப் பெருமாள் கோவில், காஞ்சிபுரம்

பல்லவப் படைகள்

அரசர் நிலையான படையொன்றைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருந்தார். அரசு வருவாயில் பெரும்பகுதி படைகளைப் பராமரிப்பதற்கே செலவானது. படைகள் காலாட்படை, குதிரைப்படை, சிறிய அளவிலான யானைப்படை ஆகியவற்றைக் கொண்டிருந்தன. இக்காலத்தில் தேர்ப்படைகள் பெரும்பாலும் பயன்பாட்டிலில்லை. பெரும்பாலுமான போர்கள் குன்றுகள் நிறைந்த நிலப்பரப்புகளில் நடைபெற்றதால் தேர்ப்படைகளால் பயனுள்ள வகையில் செயல்பட இயலவில்லை. குதிரைப் படைகள் வெற்றிகரமான விளைவுகளை ஏற்படுத்த முடியுமென்றாலும் குதிரைகளை இறக்குமதி செய்யவேண்டியதிருந்ததால் பெருஞ்செலவு பிடிப்பதாக அமைந்தது. பல்லவர்களிடம் கப்பல்படையும் இருந்தது. அவர்கள் மாமல்லபுரத்திலும் நாகப்பட்டினத்திலும் கப்பல் தளங்களைக் கட்டினர். இருந்தபோதிலும் பின்வந்த சோழர்களின் கப்பற்படை வலிமையோடு ஒப்பிட்டால் பல்லவர்களின் கப்பற்படை சிறியதேயாகும்.

வணிகம்

பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் முக்கியமான வணிக மையமாக இருந்தது. வணிகர்கள் தங்கள் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு அரசிடம் உரிமம் பெற வேண்டும். பொதுவாகப் பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்தது. ஆனால் பின்னர் பல்லவர்கள் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். வணிகர்கள்

11th History Lesson 9 Tamil Medium.indd 138 20-12-2022 15:46:58

தங்களுக்கென 'மணிக்கிராமம்' போன்ற அமைப்புகளைக் கொண்டிருந்தனர். வெளிநாட்டு வணிகத்தில் நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள், விலையுயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியவை ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, பர்மா (மியான்மர்) ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.

வணிகர்கள் தங்களுக்கெனத் தனிக்குழுக்களை (guild) சுதேசி, நானாதேசிகர், ஐநூற்றுவர் என்ற பெயர்களில் அமைத்துக் கொண்டனர். அவர்களின் முக்கிய அமைப்பு ஐஹோல் நகரினை மையமாகக் கொண்டு செயல்பட்டது. வெளிநாடுகளோடு வணிகம் மேற்கொண்ட வணிகர்களின் குழு நானாதேசி ஆகும். இவ்வமைப்பு மையப்பகுதியில் காளையின் வடிவத்தைக் கொண்ட தனிக் கொடியைக் கொண்டிருந்தது. வீர சாசனம் என்ற பிரகடனங்களை வெளியிடும் உரிமையையும் பெற்றிருந்தது. நானாதேசியின் செயல்பாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதும் விரிந்து பரந்திருந்தது. இதன் தலைவர் பட்டன்சாமி, பட்டணக்கிழார், தண்டநாயகன் என்ற பெயர்களில் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் உறுப்பினர்கள் ஐஹோல் பரமேஸ்வரியார் என்றழைக்கப்பட்டனர்.

கடல்வழி வாணிபம்

வேளாண்மை செய்வதற்கேற்ற விரிந்து பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்த கங்கைச் சமவெளியைப்போலல்லாமல் பல்லவர், சாளுக்கியர் ஆகியோர் குறைந்த அளவிலான வேளாண்மை நிலத்தையே கொண்டிருந்ததால் நிலத்தின் மூலம் அரசு பெற்ற வருவாயும் குறைவாகவே இருந்தது. நாட்டின் பொருளாதாரத்திற்கு அதிக வருவாயைத் தேடித்தரும் வகையில் வணிகப் பொருளாதாரமும் வளர்ந்திருக்கவில்லை. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகத்தில் பல்லவர் ஈடுபட்டிருந்தனர். அப்பகுதியில் இக்காலத்தில் காம்போஜா (கம்போடியா), சம்பா (ஆனம்), ஸ்ரீவிஜயா (தெற்கு மலேசிய தீபகற்பமும் சுமத்ராவும்) மூன்று முக்கிய அரசுகள் இருந்தன.

மேற்குக் கடற்கரையில் மேலை நாடுகளுடனான வணிகத் தொடர்பில் இந்திய வணிகரைக் காட்டிலும் வெளிநாடுகளைச் சேர்ந்த வணிகர்களே, குறிப்பாக அராபிய வணிகர்களே முன்னிலை வகித்தனர். அயல்நாடுகளுக்குச் சரக்குகளைச் சுமந்து சென்ற இந்திய வணிகர்கள் நாளடைவில் ஏனைய வெளிநாட்டு வணிகர்களுக்குச் சரக்குகளை வழங்குபவர்களாக மாறினர். மேலை நாடுகளுடனான செய்தித் தொடர்பு நேரடியாக இல்லாமல் அராபியாவின் வழியாக அமைந்தது. அத்தொடர்புகளும் வணிகத்தோடு மட்டுமே நின்றுவிட்டன.

சமூகம்

இலக்கியம், வானியல், சட்டம் முதலான துறைகளில் கற்றறிந்த அறிஞர்களாய் இருந்ததால் பிராமணர்கள் அரசின் ஆலோசகர்களாகச் செயல்பட்டனர். ஆசிரியப் பணி மட்டுமல்லாமல் வேளாண்மை, வணிகம், போரிடுதல் ஆகிய பணிகளையும் அவர்கள் மேற்கொண்டனர். வரி கொடுப்பதிலிருந்தும், மரண தண்டனையிலிருந்தும் அவர்களுக்கு விலக்கு வழங்கப்பட்டிருந்தது. அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த சமூகப்பிரிவினர் நாட்டையாண்ட சத்–சத்திரியர்களாவர். அனைத்துச் சத்திரியர்களும் போர் செய்பவர்களாக இல்லை. அவர்களில் சிலர் வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் வேதங்களைப் படிப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்தார்கள். அவ்வுரிமை சமூகத்தின் அடித்தளத்திலிருந்த மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. வணிகர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வீரர்களைப் பராமரித்தனர். வணிகக் குழுக்களையும் உருவாக்கிக் கொண்டனர். சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்தவர்கள் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கைவினைப் பொருள் உற்பத்தி போன்ற தொழில்களை மேற்கொண்டனர். தூய்மைப் பணி, மீன்பிடி தொழில், சலவைத் தொழில், மூங்கில் பொருள்கள் செய்தல், தோல் பொருள் செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்ட மக்கள் வர்ண அமைப்புக்கு வெளியே நிறுத்தப்பட்டனர்.

பல்லவர் காலத்தில் ஆரியமயமாதலும் வடஇந்திய கருத்துப் போக்குகளின் செல்வாக்கும் தென்னிந்தியாவில் மிகுந்தது என்று பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நிலக்கொடை வழங்கியபோது அரசர்கள் வெளியிட்ட ஆணைகளே அதற்குச் சான்றாகும். சாதியமைப்பு வலுவாக நிறுவப்பட்டது. சமஸ்கிருதம் பெரும் முக்கியத்துவம் பெற்றது.

காஞ்சிபுரம் முக்கியம் வாய்ந்த கல்வி மையமாயிற்று. வேத மதங்களைப் பின்பற்றுவோர் சிவனை வழிபட்டனர். மகேந்திரவர்மனே முதன்முதலாக தனது ஆட்சிக் காலத்தின் இடைப்பகுதியில் சமண மதத்திலிருந்து விலகி சைவத்தைத் தழுவினார். சமணத்தின் மீது சகிப்புத்தன்மை அற்றவராய் அவர் சில சமண மடாலயங்களை அழித்தார். பௌத்தமும் சமணமும் தங்கள் செல்வாக்கை இழந்தன. யுவான் சுவாங் காஞ்சிபுரத்தில் நூறு பௌத்த மடாலயங்களையும் மகாயான பௌத்தத்தைச் சேர்ந்த 10,000

11th History Lesson 9 Tamil Medium.indd 139 20-12-2022 15:46:58

குருமார்களையும் தான் கண்டதாகப் பதிவு செய்துள்ளார். மதிப்புமிக்க கவிஞர்களாயிருந்த அடியார்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

பிராமணியத்தின் வளர்ந்து வந்த செல்வாக்கு

தென்னிந்தியப் பகுதிகளில் ஆரியப் பண்பாடு செல்வாக்குப் பெற்றுவிட்டதைத் தெளிவாகக் காட்டும் அடையாளம் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒப்புயர்வற்ற இடமாகும். அளவில் அதிகமான நிலங்களைக் கொடையாகப் பெற்றதால் அவர்கள் செல்வச் செழிப்படைந்தனர். பல்லவ நாட்டில் கல்வி நிலையங்களின் தோற்றமும் ஆரியமயமாகிவிட்டதின் ஓர் அடையாளமாகும். இக்காலகட்டத்தின் தொடக்கத்தில் கல்வி பௌத்தர்கள் மற்றும் சமணர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. ஆனால் படிப்படியாக பிராமணர்கள் அவர்களைப் புறந்தள்ளி விட்டு அவ்விடத்தை கைப்பற்றிக் கொண்டனர். சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட மத நூல்களைக் கொண்டு வந்த சமணர்கள் நாளடைவில் தமிழைப் பயன்படுத்தத் தொடங்கினர். சமணமதம் பெரிய அளவில் பிரபலமான மதமாக இருந்தது. ஆனால் பின்னர் வந்த நூற்றாண்டுகளில் சைவ, வைணவ மதங்களின் போட்டியினால் சமண மதத்தை ஆதரிப்போரின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது. இதோடு மகேந்திரவர்மனும் சமண மதத்தின் மீது கொண்டிருந்த பற்றை இழந்து சைவ மதத்தைப் பின்பற்றத் தொடங்கினார். அதனால் சமணர்கள் அரச ஆதரவை இழந்தனர். காஞ்சியிலும் மதுரையிலும் சமணர்கள் சில கல்வி நிலையங்களையும் கர்நாடகாவிலுள்ள சரவணபெலகொலாவில் உள்ளதைப் போன்று சமணமத மையங்களையும் நிறுவினர். ஆனால் சமணத் துறவிகளில் பெரும்பாலோர் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு காடுகளிலும் குன்றுகளிலும் உள்ள குகைகளில் வாழவே விருப்பம் கொண்டனர்.

மடங்களும் மடாலயங்களும்

காஞ்சிப் பகுதியிலும் கிருஷ்ணா கோதாவரி நதிகளுக்கிடைப்பட்ட பகுதிகளிலும் பௌத்தத் துறவி மடாலயங்கள் அமைந்திருந்தன. இவையே பௌத்தக் கல்வி முறையின் மையமாக இருந்தன. இக்காலகட்டத்தில் வேத வைதீகப் பிரிவினருக்கும், அவைதிக பிரிவுகளுக்குமிடையே தீவிர மோதல்கள் நடந்து கொண்டிருந்ததால் பௌத்த மையங்கள் பௌத்த மதத்தைக் கற்பதில் அக்கரைக்காட்டின. வேதமதங்களுக்கு கிடைத்த அரச ஆதரவு, பௌத்த மதத்திற்கு இல்லாத நிலை, வேத மதங்களின் வளர்ச்சிக்கு உத்வேகம் கொடுத்தது.

நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு இணையான புகழைப் பெற்றிருந்த காஞ்சி பல்கலைக்கழகத்தைத் தவிர வேறு சில சமஸ்கிருதக் கல்லூரிகளும் செயல்பட்டு வந்தன. சமஸ்கிருதம் அங்கீகரிக்கப்பட்ட ஊடக மொழியாகவும், அரசசபையின் அலுவலக மொழியாகவும் இருந்ததால் இலக்கிய வட்டாரங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எட்டாம் நூற்றாண்டில் மடங்கள் பிரபலமாயின. மடங்கள் ஓய்வில்லங்களாவும், உணவுச் சாலைகளாகவும், கல்வி கற்பதற்கான இடமாகவும் ஒரே நேரத்தில் செயல்பட்டன. இவ்வியல்பு இம்மடங்களோடு தொடர்புடைய பிரிவினருக்கு மறைமுகமாக விளம்பரத்தைத் தேடித்தருவதாயும் அமைந்தது.

சமஸ்கிருத மொழி பிரபலமாதல்

இக்காலத்தில் சமஸ்கிருத மொழிக்குப் பெரும் அரச ஆதரவு இருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசபிரகசனம்என்றநூலைசமஸ்கிருதத்தில் எழுதினார். தென்னிந்தியாவில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வியக்கத்தக்க இரு நூல்கள் சமஸ்கிருத இலக்கியத்திற்கான தர அளவுகளை உருவாக்கின. அவை பாரவியின் கிரதார்ஜூன்யம், தண்டியின் தசகுமாரசரிதம் ஆகிய நூல்களாகும். மிகச் சிறந்த அணி இலக்கணமாகிய 'காவிய தர்சா' என்னும் நூலை இயற்றிய தண்டி பல்லவ அரசவையை சில ஆண்டுகள் அலங்கரித்ததாகத் தெரிகிறது.

பல்லவரின் குடைவரைக் கோவில்கள்

பல்லவர் பகுதிகளில் குடைவரைக் கோவில்களை அறிமுகம் செய்த பெருமை முதலாம் மகேந்திரவர்மனைச் சேரும். பிரம்மா, ஈஸ்வரா, விஷ்ணு ஆகியோர்க்கு, தான் கட்டிய கோவில்கள், கோவில் கட்டுவதற்குப் பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் செங்கல், மரம், உலோகம், சாந்து ஆகியன கொண்டு கட்டப்படவில்லை என முதலாம் மகேந்திரவர்மன் தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். மகேந்திரவர்மனின் குடைவரைக் கோவில்கள் வழக்கமாக மண்டப பாணியில் தூண்களைக் கொண்ட ஒரு

மகேந்திரவர்மனின் குடைவரைக் கோவில்

11th History Lesson 9 Tamil Medium.indd 140 20-12-2022 15:46:59

மண்டபத்தைக் கொண்டிருக்கும்; அல்லது முதலில் ஒரு மண்டபத்தையும் அதற்குப் பின்புறமோ, பக்கவாட்டிலோ ஒரு கருவறையைக் கொண்டிருக்கும்.

II எல்லோரா – அஜந்தா – மாமல்லபுரம்

மகாராஷ்டிர மாநிலத்தின் ஔரங்காபாத் மாவட்டத்தில் எல்லோரா, அஜந்தா என்னுமிடங்களில் திரளாகக் குகைகளும் கோவில்களும் அமைந்துள்ளன. எல்லோரா குகைக் கோவில்கள் அவற்றின் சிற்பங்களுக்காகப் பெயர்பெற்றவை. அஜந்தா குகைக் கோவில்கள் அவற்றின் ஓவியங்களுக்காகப் புகழ் பெற்றவை. இக்கோவில்களின் காலம் சுமார் பொ.ஆ. 500–950 ஆகும். ஆனால், குகைக்கோவில்களை உருவாக்கும் நடவடிக்கை இதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டிருக்க வேண்டும். முதல் குகைக்கோவில் ஆசீவகர்ளுக்காக உருவாக்கப்பட்டது. சில கோவில்கள் முற்றுப்பெறாதவையாகும்.

9.3 எல்லோரா

எல்லோராவிலுள்ள குடைவரைக்கோவில்களில் 34 குகைகள் சரணத்ரி மலையில் அமைந்துள்ளன. கோணவியல், கட்டுமானத் தொழில்நுட்பம், உலோகவியல் ஆகிய துறைகளைப் பற்றிய அறிவு இந்தியக் கட்டடக்கலையாளர்களுக்கு இல்லாமல் இருந்திருந்தால் இவை போன்ற நேர்த்தியான பெருங்கட்டடங்களை உருவாக்கியிருக்க முடியாது. இக்குகைத் தொகுப்புகளை உருவாக்கியோர் சாளுக்கியரும் ராஷ்டிரகூடரும் ஆவர். இவ்வாறான புதிய பாணியில் கோவில்களைக் கட்டுவதை முதலில் மேற்கொண்டவர்கள் அவைதீக மதத்தவர்களே. பின்னர்தான் வைதீக மரபைச் சார்ந்தவர்களும் தங்கள் மதம் சார்ந்த சித்தாத்தங்களைப் பரப்புவதற்கு இந்த ஊடகத்தைக் கைக்கொண்டனர். இவ்வாறு ஆசீவகமும் சமணமும் பௌத்தமும் பிராமணீயமும் இக்கோவில்களை எழுப்பின. தொடக்ககாலக் கோவில்கள் எளிமையாகவும் அளவாகவும் கலை தொடர்பான உள்ளடக்கத்தைக் கொண்டிராமலும் இருந்தன.

எல்லோராவில் ஐந்து குகைகளில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. ஆனால் கைலாசநாதர் கோவிலில் உள்ளவை மட்டும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. சமணர் கோவில்களில் உள்ள சில சுவரோவியங்களும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. விலங்குகள், பறவைகள், மரங்கள், பூக்கள் ஆகியவை நேர்த்தியாக எழிலோடு தீட்டப்பட்டுள்ளதோடு ஆசை, அன்பு, பரிவு ஆகிய மனித இயல்புகளின் வெளிப்பாடும் தொழில் வல்லமையுடன் தீட்டப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா? எல்லோரா குகைகளை 1983இல் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

அவைதீக மதக் கோவில்கள் I / பௌத்தக் குகைகள்

எல்லோரோவில் மொத்தம் 12 பௌத்தக் குகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்துவம் கொண்ட கட்டடக்கலைப்பாணியைக் கொண்டுள்ளது. அவற்றில் சில அளவில் சிறியன. மற்றவை இரண்டு அல்லது மூன்று அடுக்குகளைக் கொண்டவை. பௌத்தத் துறவிகள் தங்கியிருந்து சீடர்களுக்கு மத நூல்களில் பயிற்சி வழங்கும் மையமாகச் செயல்படும் விதத்தில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. மத்தியிலுள்ள பெரிய அறையும் பக்கவாட்டில் அமைந்துள்ள சிறிய அறைகளும் துறவிகள் கல்வி வழங்குவதற்காகவும் போதனைகள் செய்வதற்கும் பயன்பட்டுள்ளன. ஆறாவது குகையில் ஒரு மேசையின் மீதுள்ள கையெழுத்துப் பிரதியை ஒரு மனிதன் வாசிப்பதைப் போன்று செதுக்கப்பட்டுள்ள சிற்பம் இதை உறுதிசெய்கின்றது. சுவர்களில் உள்ள சதுர, செவ்வகக் கட்டங்களில் புத்தரின் வாழ்க்கையில் நடைபெற்ற பல நிகழ்வுகள் காட்சிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இக்குகைகளில் இடம்பெற்றுள்ள சிற்பங்களைக் கொண்டு மூன்று வகைப்பட்ட தனிப் பண்புக்கூறுகளை அடையாளம் காணலாம். மிக முக்கியமானதும் மையமானதும் புத்தரின் மூன்று வகைத் தோற்றங்களே; 1. தியான புத்தர் (தியான முத்ரா) 2. போதனை செய்யும் புத்தர் (வியாக்கியான முத்ரா) 3. வலது கை ஆள்காட்டி விரலால் பூமியைத் தொடும் புத்தர் (பூமி ஸ்பர்ஸ முத்ரா).

தியான புத்தர் – எல்லோரா

பெண் கடவுள்கள்

பௌத்த குகைகளில் தாரா, கதிரவாணிதாரா, சுந்தா, வஜ்ரத்தீஸ்வரி, மகாமயூரி, சுஜாதா, பன்தாரா, பிரிகுட்டி ஆகிய பெண் தெய்வங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குகை எண் 12இல் பெரிய உருவம் கொண்ட பெண்மணி,

11th History Lesson 9 Tamil Medium.indd 141 20-12-2022 15:46:59

இடையில் ஒட்டியாணத்துடன், நாகப்பாம்பினால் ஆன தலைப்பாகையுடன் காட்சியளிக்கும் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. அதே குகையில் காதிரிவாணி–தாரா என்னும் பெண் தெய்வம் கையில் ஒரு நாகப்பாம்பைப் பிடித்தபடி நிற்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

அவைதீக மதக் கோவில்கள் II / சமணக் குகைகள்

எல்லோரோவில் சில சமணக் குகைகளும் காணப்படுகின்றன. இவை மற்றவற்றிலிருந்து வேறுபட்டு தனித்தன்மையுடன் காணப்படுகின்றன. ஆனால் அவை முற்றுப்பெறாத நிலையில் உள்ளன. பணியாட்கள் சூழ யக்ச–மாதாங்கா, மகாவீரர், பார்சவநாதர், கோமதீஸ்வரர் ஆகியோரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

வேதமதக் குகைகள்

இங்குள்ள குகைகளில் காலத்தால் முந்தியவை ஓரளவு சிறிதாகவும் எளிமையாகவும் உள்ளன. கைலாசநாதர் குகையைத் தவிர மற்றவை அனைத்தும் சதுர வடிவம் கொண்டவை. கைலாசநாதர் குகை (16) மட்டும் மிகப் பெரிய ஒற்றைக் கல்லிலான வடிவமாகும். இது உறுதியான ஒரே பாறையிலிருந்து செதுக்கப்பட்டதாகும். இக்கோவில் இரண்டு அடுக்குகளைக் கொண்டது. இது சிவபெருமானின் இருப்பிடமான கைலாயத்தைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றின் மேலுள்ளது கைலாசநாதர் கோவிலாகும். கீழ் அடுக்கில் யானை வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு அக்கோவிலை இந்த யானைகள் தாங்கியிருப்பதைப் போல் உள்ளது. கோவிலின் வெளிப்பகுதி மிக நன்றாகச் செதுக்கப்பட்ட சாளரங்களையும் இந்துப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வங்களின் வடிவங்களையும் காதல் மோகத்தை வெளிப்படுத்துகின்ற ஆண் பெண் மிதுன வடிவங்களையும் கொண்டுள்ளது. கோவில் நுழைவாயிலின் இடப்பக்கம் இடம்பெற்றுள்ள கடவுள் வடிவங்கள் பெரும்பாலும் சைவக் கடவுள்களாகவும் வலப்பக்கம் உள்ளவை வைணவக் கடவுள்களாகவும் உள்ளன. முன்பகுதியிலுள்ள முற்றம் மிகப்பெரிய கொடிக்கம்பங்களையும் நந்தி மண்டபமொன்றையும் கொண்டுள்ளது. சிவன்–பார்வதி திருமண விழாக் காட்சி, இராவணன் கைலாய மலையைத் தூக்குவதற்கு முற்படுதல், மகிசாசுரனை துர்காதேவி வதம் செய்தல் ஆகியவை அழகிய சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். தெய்வங்களின் கைகளிலுள்ள ஆயுதங்கள், இசைக்கருவிகள் ஆகியவை கோவில் சுவர்களில் சதுர செவ்வகக் கட்டங்களில் தொடர்சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பெண் நீர்த் தெய்வமான கங்கை ஒரு முதலையின் மீது அமர்ந்திருப்பதும் யமுனை ஆமையொன்றின் மீது அமர்ந்திருக்கும் காட்சியும் கருத்தைக் கவரும்வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது.

9.4 அஜந்தா

மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத் நகரத்திற்கு வடக்கே 100 கிலோமீட்டர் தொலைவில் அஜந்தா குகைகள் அமைந்துள்ளன. எரிமலைப் பாறைகளிலிருந்து மொத்தம் 30 குகைகள் குடைந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை சுவரோவியங்களுக்குப் பெயர்பெற்றனவாக இருந்தாலும் இங்குச் சிற்பங்களும் உள்ளன. ஹீனயான பௌத்த மதப் பிரினைச் சேர்ந்தவர்களே முதன்முதலில் அஜந்தா குகைகளை அமைக்கத் துவங்கினர். பொ.ஆ.மு. 200 பொ.ஆ. 200 வரையில் தக்காண பீடபூமிப் பகுதிகளை ஆண்ட அரசர்கள் இம்முயற்சிகளுக்கு ஆதரவளித்தனர். அரசர்களில் துவங்கி வணிகர்கள் வரை ஆதரவு வழங்கியோரைப் பற்றிக் கல்வெட்டுகள் பேசுகின்றன. முதற் கட்டக் குகைகள் பொ.ஆ.மு. 200 – பொ.ஆ. 200 காலகட்டத்தைச் சேர்ந்தவையாகும். இரண்டாவது கட்டக் குகைகள் சுமார் பொ.ஆ.200 – பொ.ஆ.400 காலப்பகுதியைச் சேர்ந்தனவாகும்.

ஓவியம்

போதிசத்துவர் – அஜந்தா

அஜந்தா குகைகள் சிறப்பு வாய்ந்த சுவரோவியங்களின் கருவூலமாகும். முதல் கட்ட ஓவியங்கள் பெரும்பாலானவை குகை எண் ஒன்பதிலும் பத்திலும் காணப்படுகின்றன. இவை சாதவாகனர் காலத்தைச் சேர்ந்தனவாகும். அஜந்தா குகையோவியங்களைத் தீட்டியவர்கள் அறிவுநுட்பத்துடன் திட்டமிட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்றியுள்ளனர். முதலில் பாறைச் சுவரின் மீது தாவரங்களின் நார், நெல் உமி, மணல் மற்றும் கல்பொடி கலந்து செய்த மென்சாந்தைப் பூசினார்கள். இதன் மீது சுண்ணாம்பு ஒரு மெல்லியப் பூச்சாகப் பூசப்பட்டுள்ளது. இப்பூச்சு வண்ணங்களை உள்வாங்கும் தன்மை உடையது. வண்ணங்களைப் பூசுவதற்காக இப்பரப்பின் மீது துணி விரித்து ஒட்டப்பட்டுள்ளதும் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

வண்ணங்கள் இயற்கைப் பொருள்களிலிருந்தும் தாதுக்களிலிருந்தும் எடுக்கப்பட்டன. கறுப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம், பச்சை ஆகியவையே முக்கிய வண்ணங்கள். ஓவியங்களில் அழகியல் கூறுகள், மாலைகள், காது வளையங்கள், தலைப்பாகைகள், கழுத்தணிகள்,

11th History Lesson 9 Tamil Medium.indd 142 20-12-2022 15:47:00

மனிதக் கைகளின் மிகச் சரியான அசைவுகள் ஆகியவன வெளிப்படுகின்றன. கதைகளைச் சொல்லும் சுவரோவியங்கள் கருத்தைக் கவர்வதாயும் செய்திகளைக் கூறுவதாயும் அமைந்துள்ளன. ஜாதகக் கதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில காட்சிகள் புத்தரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில முக்கியப் பகுதிகள் ஆகியனவே ஓவியங்களின் மையக் கருவாக உள்ளன.

வானுலகவாசிகளான கின்னரர்கள், வித்யாதாரர்கள், கந்தர்வர்கள் ஆகியோர் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். பிற்காலத்தைச் சேர்ந்த ஓவியங்களில் போதிசத்துவர் அளவில் பெரிதான புடைப்போவியமாக காண்பிக்கப்பட்டுள்ளார். பல்வகைப்பட்ட மனித உணர்வுகள் ஓவியங்களாக வடிக்கப்பட்டிருந்தாலும் பரிவு, இரக்கம், அமைதி ஆகிய உணர்வுகளே அதிகம் இடம்பெற்றுள்ளன. ஒளியும் நிழலும் அறிவுக் கூர்மையுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு வண்ணங்களில் மனித உருவங்கள் வரையப்பட்டுள்ளமைக்கு வெவ்வேறு இனக்குழுக்களைச் சார்ந்த மக்களைக் குறிப்பதாகப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

கட்டடக் கலையும் சிற்பமும்

கட்டடக்கலை நோக்கில் அஜந்தா குகைகளை இரு குழுக்களாகப் பார்க்கலாம். ஒன்று சைத்தியங்கள்; மற்றொன்று விகாரங்கள். சைத்தியா பல வளைவுகள் ஒருங்கிணையும் முகடுகளையும் நீண்ட அறைகளையும் கொண்டுள்ளது. அறையின் ஒரு கோடியில் புத்தருடைய சிலை மரபார்ந்த பாணியில் உள்ளது. புத்தருடைய சிற்பங்கள் அன்பின், ஆதரவின் ஒட்டுமொத்த உருவாக உள்ளன. பெரிய தோற்றமும் அதிக எடையும் சிற்பங்களின் பொது இயல்பாக உள்ளது. குழந்தைகளோடு காணப்படும் யக்சிகள், ஹரிதி ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை. போதிசத்துவர் தனியாகச் செதுக்கப்பட்டுள்ளதும் மற்றொரு சிறப்பம்சமாகும். போதிசத்துவர் அவலோகிதேஸ்வரர் ஓவியங்களிலும் சிற்பங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

அஜந்தா குகை 12: விகாரை

9.5 மாமல்லபுரம்

பல்லவர்களின் அடையாளமாகக் கருதப்படும் மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கடற்கரைக் கோவில் ராஜசிம்மனின் (பொ.ஆ. 700–728) ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும். இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானவை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் வெளிப்புறச் சுவர் விஷ்ணுவிற்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது. எல்லைச் சுவற்றின் உட்பக்கம் விரிவான செதுக்கு வேலைப்பாடுகளையும் சிற்பங்களையும் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் கட்டுமானக் கோவில்களில் இது முதன்மையானதாகும். இப்பகுதியிலுள்ள ஏனைய கோவில் கட்டடங்களைப் போலின்றி இக்கடற்கரைக் கோவில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகும். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுர பல்லவர் கோவில்களின் சிறப்புப் பண்பாகும்.

கடற்கரைக் கோவில் –மாமல்லபுரம்

இங்குள்ள ஒற்றைக்கல் தேர்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன. அர்ச்சுன ரதத்தில் கலை நுணுக்கத்தோடு செதுக்கப்பட்ட சிவன், விஷ்ணு, மிதுனா, துவாரபாலக சிலைகள் உள்ளன. இவ்வைந்து ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜ ரதமாகும். இது சதுர வடிவிலான அடித்தளத்தையும் மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தையும் அழகான ஹரிஹரர், பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தர், சிவன், அர்த்தநாரிஸ்வரர், கங்காதரர் ஆகியோரின் சிற்பங்களையும் கொண்டுள்ளது. மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பாட்டில் மிக முக்கியமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கிவரும் ஆகாய கங்கை காட்சியாகும். (இது பாகீரதன் தவம், அர்ஜுனன் தவம் என்றும் அறியப்படுகிறது.) புராண உருவங்களை பிரபலமான உள்ளூர் கதைகளோடு இணைத்து சிற்பங்களாகக் காட்சிப்படுத்துவது மனித மற்றும் விலங்குகளின் வாழ்க்கைக் கூறுகளை சீராகக் கலக்கும் கலைஞனின் திறமையைப் பறைசாற்றுகின்றன.

11th History Lesson 9 Tamil Medium.indd 143 20-12-2022 15:47:01

கிருஷ்ண மண்டபச் சுவர்களில் மிக அழகாகவும் கலை நுணுக்கத்தோடும் செதுக்கப்பட்டுள்ள பசுக்கள், பசுக் கூட்டங்கள் போன்ற கிராமத்து காட்சிகள் ரசிப்பதற்கான மற்றுமொரு கலை அதிசயமாகும்.

பஞ்சபாண்டவர் ரதங்கள்

முடிவுரை

பல்லவர் காலத்தில் குடைவரைக் கோவில்கள் என்பன இயல்பான ஒன்றாகும். தக்காணப் பகுதியில் ஐஹோல், வாதாபி ஆகிய இடங்களிலும் காஞ்சிபுரம் மாமல்லபுரம் ஆகியவற்றிலும் உள்ள கட்டுமானக் கோவில்களும் தனித்து நிற்கும் கோவில்களும் இக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட கட்டடக்கலை மேன்மைகளுக்குச் சான்றுகளாகும்.

தக்காண பாணியிலான சிற்பங்கள், குப்தக் கலையோடு கொண்டிருந்த ஒப்புமை இதில் காணப்படுகிறது. பல்லவச் சிற்பங்கள் பௌத்த மரபுகளுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் தக்காணம் மற்றும் தமிழ்நாட்டு கட்டடக்கலையும் சிற்பக்கலையும் வடஇந்திய மரபிலிருந்து பிறந்தவை அல்ல. அவை சுயமானவை. பண்டைய மரபுகளிலிருந்து தங்களது அடிப்படை வடிவத்தைப் பெற்றவை. மற்றவற்றிலிருந்து வேறுபட்டவை, தனித்து அடையாளம் காணக் கூடியவை. தனது மக்களின் அறிவுக் கூர்மையை தெளிவாகப் பிரதிபலிப்பவை.

III பக்தி இயக்கமும் இலக்கியமும்

9.6 தமிழ் பக்தி இயக்கம்

தென்னிந்தியாவில் தோன்றிய பிராந்திய அரசியல், சித்தாந்தத்தை அடித்தளமாகக் கொண்ட அரசுகள் நிறுவப்படுவதை அவசியமாக்கியது. இத்தருணத்தில் மதம் மட்டுமே மக்களை ஒன்று கூட்டும் புள்ளியாக இருந்திருக்கிறது. தமிழகத்தின் வடபகுதியில் காஞ்சிப் பல்லவரும் தென்பகுதியில் மதுரைப் பாண்டியரும் அதிகாரமும் பொருளாதார வளமும் பெற்றிருந்த வணிக வர்க்கத்தால் தலைமையேற்கப்பட்ட மதம் சார்ந்த பக்தி இயக்கத்திற்கு ஆதரவளித்தனர். உள்ளூர் கோவில் இவ்வியக்கத்தின் மையமாக மாறியது. பக்தி மக்களின் மனங்களை உணர்வுபூர்வமாகத் தொட்டு அவர்களை அணி திரட்டும் கருவியானது.

பக்தி இயக்கம் ஒரு மதம் சார்ந்த இயக்கமாக இடைக்காலத் தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்தது. தமிழ் பக்தி இயக்கத்தின் வலுவான அலை பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை நாடு முழுதும் வீசியது. நாயன்மார், ஆழ்வார் ஆகியோர் இயற்றிய பாடல்களே தமிழ் பக்தி இயக்கத்தின் அடிப்படையாகும். இச்சைவ, வைணவ அடியார்கள் தங்கள் பாடல்களோடு இசையைக் கலந்து அதன் பயன்பாட்டை எளிமைப்படுத்தினர். அவர்கள் உள்ளூர், பிராந்தியம் சார்ந்த பல பண்பாட்டு இயல்புகளை மைய நீரோட்டத்திற்குக் கொண்டுவந்தனர். பன்னிரு ஆழ்வார்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் தமிழ்ச் சமூகத்தின் கைவினைஞர்கள், வேளாண்குடியினர் போன்ற பல பிரிவுகளிலிருந்து வந்தவராவர். இவர்களுள் ஆண்டாள் போன்ற பெண் அடியாரும் அடங்குவர். ஆண்டாள் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். கவிஞர் காரைக்கால் அம்மையார், பாண்டிய அரசி மங்கையற்கரசியார் ஆகியோர் பெண் நாயன்மார்கள் ஆவர். பக்தி இயக்க அடியார்களால் மறுவடிவம் செய்யப்பட்ட சைவமும் வைணவமும் பௌத்த சமண மதங்களுக்கு வலுவான சவாலாக அமைந்தன. சற்றே கூர்ந்து நோக்கினால் பக்தி இயக்கத்தின் தாக்கத்தை நாம் இன்றும் தமிழகத்தில் காணமுடியும்.

சான்றுகள்

தேவாரம், நாலாயிரத்திவ்வியபிரபந்தம், திருத்தொண்டர்தொகை, மாணிக்கவாசகரின் திருவாசகம், பெரியபுராணம் முதலான பக்தி இயக்கப் பாடல்களே பக்தி இயக்க வரலாற்றிற்கான முக்கியச் சான்றுகளாகும். கோவில்களும் கோவில் கல்வெட்டுகளும் சுற்றுப்பிரகாரங்களிலுள்ள சிறிய சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவையும் சான்றுகளாகப் பயன்படுகின்றன.

பக்தி எனும் கருத்தியல்

பக்தி என்னும் சொல் பல துணைப் பொருளைக் கொண்டது. சேவை, நம்பிக்கை, வழிபாடு, மதப்பற்று போன்ற பொருள்களை அது தருகின்றது. அது மனித உணர்வுகளால், அழகியலால், மாறுபடும் எண்ணங்களால் வடிவமைக்கப்படும் சட்டமாகும். பக்திப்பாடல்கள் மூன்று முக்கிய கருப்பொருள்களைக் கொண்டுள்ளன. கடவுளிடம் பேரன்பு கொள்வதே முதலாவதும் முக்கியமானதுமாகும். தெய்வீக அமைதியையும் முக்தியையும் அடையும் வழிகள் தங்களுக்கு மட்டுமே என்கிற வைதீக பிராமணிய மனப்பாங்கை எதிர்த்தல் இரண்டாவதாகும். மூன்றாவது நேரடியாக பௌத்தத்தையும் சமணத்தையும் மதப்பற்று இல்லாதவர்கள் என வன்மையாகக் கண்டிப்பதாகும்.

11th History Lesson 9 Tamil Medium.indd 144 20-12-2022 15:47:01

பக்தியும் கலைகளும்

கிராமிய நடனங்களின் தோற்றம் பெற்று கோவில் நடனங்களில் ஆடற்கலை ஒழுங்குகள் மாறி மதம் சார்ந்த விஷயங்களைக் கருவாகக் கொண்டு இறுதிநிலையை எட்டியது. பல்லவர்காலம் முதலாகப் பயிற்சியளிக்கப்பட்ட நடனக் கலைஞர்களைக் கொண்ட குழுக்கள் செல்வச் செழிப்பு மிக்க கோவில்களால் பராமரிக்கப்பட்டன. புராணங்கள் இதிகாசங்கள் ஆகியவற்றில் இடம் பெற்ற முக்கியக் காட்சிகள் கோவில் சுவர்களில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. கல்லிலும் செம்பிலும் சிலைகளாக வடிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இசை, நடனம் போன்ற கவின்கலைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் கலைஞர்கள் அரசின் ஆதரவுடன் கோவில்களோடு இணைக்கப்பட்டனர். மதப் பாடல்களும் இசையும் மதத் தொண்டர்களால் பிரபலமாயின. கோவில் விழாக்களின்போது இப்பாடல்களைப் பாடுவது ஒரு முறையாகவே ஆனது. யாழ் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட இசைக் கருவியாக இருந்திருக்க வேண்டும். பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழுக்குப் பதிலாக வீணை பயன்பாட்டிற்கு வந்தது. இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வீணையானது சிறிய சுரை வடிவிலான அடிபாகத்தையும் நீண்ட வடிவிலான விரலால் மீட்டுவதற்கான தந்திகள் கொண்ட பகுதியையும் கொண்டதாக உருவெடுத்தது.

9.7 ஆழ்வார்கள், நாயன்மார்கள்

ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் வைணவப் பாடல்களை இயற்றினர். ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இப்பாடல்கள் அனைத்தையும் (நான்காயிரம்) நாலாயிர திவ்வியபிரபந்தமாக நாதமுனி தொகுத்தார். நாதமுனி திருவரங்கம் ரங்கநாதர்கோவிலில் அர்ச்சகராகப் பணியாற்றியவர். ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் ஆட்சிக் காலத்தில் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர் பெரியாழ்வார். கண்ணனின் குழந்தைப் பருவமே அவருடையபாடல்களின் கருவாயிருந்தது. ஆண்டாள் பாடல்களின் பாட்டுடைத் தலைவனும் கண்ணனே. ஆண்டாளின் பாடல்கள் அவர் கண்ணனின் மீது கொண்டிருந்த காதலை வெளிப்படுத்துகின்றன. நம்மாழ்வார் ஆழ்வார்களில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் இன்றைய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள குருகூரைச் (ஆழ்வார்திருநகரி) சேர்ந்தவர். திருவாய்மொழி உட்பட நான்கு நூல்களை அவர் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் நான்கு வேதங்களின் சாரத்தை வடித்தெடுத்து எழுதப்பட்டதென்பது வைணவ நம்பிக்கை. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதலாக வைணவப் பாடல்களுக்கு விரிவான புலமையுடன் கூடிய விளக்கவுரைகள் எழுதப்பட்டன.

ஆழ்வார்கள்

நாயன்மார்கள்

சைவக் கவிஞர்களில் முக்கியமானவர்கள் திருநாவுக்கரசர் (அப்பர்), திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நம்பியாண்டார்நம்பி இவர்களின் பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுத்தார். தேவாரம் என்றறியப்படும் முதல் ஏழு நூல்களில் உள்ள பாடல்கள் சம்பந்தர் (1–3) அப்பர் (4–6) சுந்தரர் (7) ஆகியோரால் இயற்றப்பட்டனவாகும். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரின் பாடல்களைக் கொண்டதாகும். சேக்கிழாரின் பெரியபுராணத்தோடு சேர்த்து பன்னிரண்டு நூல்கள் உள்ளதாலும் இவை பன்னிரு திருமுறை என்று போற்றப்படுகின்றன. பெரியபுராணம் சோழர் காலத்தில் இயற்றப்பட்டதாகும். இது அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைச் சொல்லுவதோடல்லாமல் அவர்தம் வாழ்வில் நடந்த அதிசய சம்பவங்கள் குறித்தும் பெரியபுராணம் கூறுகிறது.

நாயன்மார்கள்

தாக்கம்

பக்தி இயக்கம் மாபெரும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது. அதன் உச்சகட்டமாக பல கோவில்கள் நிறுவப்பட்டன. அக்கோவில்கள் தமிழ் நிலப்பரப்பில் பிரதான இடத்தை வகித்தன. பிற்காலச் சோழர் காலத்தில் கோவில்கள் பெரும்

11th History Lesson 9 Tamil Medium.indd 145 20-12-2022 15:47:02

சமூகப் பொருளாதார நிறுவனங்களாகின. அரசியல் தளத்தில் பக்தி இயக்கம் வடஇந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிராமணர்களை அழைத்துவந்து அவர்களுக்குக் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசர்களைத் தூண்டியது. அரச குடும்பத்தினரும், உள்ளாட்சி அமைப்புகளும் தனிப்பட்ட நபர்களும் கால ஒழுங்கில் கோவில்களில் விழாக்கள் கொண்டாடுவதைத் தொடங்கி வைத்தனர். அவ்விழாக்களின் செலவுகளைச் சந்திக்க அவர்களே அறக்கட்டளைகளை நிறுவினர். தமிழ்நாட்டில் அரசு என்னும் அமைப்பு உருவாவதை இது துரிதப்படுத்தியது. மேலும் கோவில் போன்ற நிறுவனங்களின் மூலம் பல்வகைப்பட்ட சமூகக் குழுக்களை மதத்தின் கீழ் ஒருங்கிணைத்தது. நூற்றாண்டுகளின் போக்கில் பக்தி இயக்கம் இந்தியா முழுவதும் பரவி இந்து மதத்தில் பல மாற்றங்களை விளைவித்தது.

9.8 ஆதிசங்கரர் (788 – 820)

பக்தி இயக்கம் சமூகத்தின் பல்வேறு பிரிவினரைத் தொண்டு, சரணடைதல், தியாகம் என்னும் குறிக்கோள்களின் மூலம் ஒன்று திரட்டி மைய நீரோட்ட அரசியலோடு ஒருங்கிணைத்தது. படிப்பறிவில்லாதவரும் கூட இக்குறிக்கோள்களை எளிதில் புரிந்துகொள்வார்கள். ஏனெனில் பக்தி இலக்கியங்கள் எளிய தமிழில் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் பொருட் செறிவோடு இசைபட கருத்துகளை முன்வைத்தன. ஆதிசங்கரரின் வருகையோடு இக்கருத்துக்கள் குறித்த விவாதங்கள் சமஸ்கிருத மொழியில் பேசப்பட்டதால் ஒரு சிலர் மட்டுமே புரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது.

ஆதிசங்கரரின் வருகை

இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய அரச வம்சங்களுக்கு அரசு என்ற ஒன்றை உருவாக்க ஒரு சித்தாந்தம் தேவைப்பட்டதின் பின்னணியில் ஒரு புதிய கோட்பாடு கேரள மாநிலம் காலடியைச் சேர்ந்த சங்கரர் என்பவரால் முன்வைக்கப்பட்டது. மாயை கோட்பாடு குறித்துப் பல்வேறு மதப் பிரிவுகளைச் சார்ந்தவர்களோடு விவாதம் செய்து வென்றார். அடிப்படையில் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாடு வேதாந்தம் அல்லது உபநிடதத் தத்துவங்களில் வேரூன்றி இருந்தது. பௌத்த மதத்தை வேரறுத்துவிட்டு ஸ்மார்த்த மடங்களை நிறுவ அவர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாய் சிருங்கேரி, துவாரகை, பத்ரிநாத், பூரி ஆகிய இடங்களில் மடங்கள் உருவாயின. பிராமண மடாதிபதிகள் அவற்றிற்குத் தலைமை தாங்கினர். சங்கரர் சைவ, வைணவ வழிபாடுகளைச் சம அளவில் முக்கியத்துவம் கொண்ட வேத மதத்தின் கூறுகளாகவே கருதினார். சங்கரரின் சிந்தனைப்பள்ளி, துறவற அமைப்புகளை ஏற்படுத்துதல், சமஸ்கிருத நூல்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கியது.

9.9 ஸ்ரீராமானுஜர் (1017 – 1138)

ஸ்ரீராமானுஜர்

ஸ்ரீபெரும்புதூரில்பிறந்த ஸ்ரீராமானுஜர் காஞ்சிபுரத்தில் சங்கரரின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட யாதவபிரகாசரிடம் தத்துவப் பயிற்சி பெற்றார். தனது குருவின் கருத்துக்களை ஏற்கமறுத்தஇளம்ராமானுஜர் யமுனாச்சாரியாரின் திருரங்கத் தத்துவப் பள்ளியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். ராமானுஜரை ஒருமுறை பார்த்த யமுனாச்சாரியார் அவரை திருவரங்கத்திற்கு வரவேற்றார். ராமானுஜர் திருவரங்கத்திற்குச் சென்ற சில நாட்களில் யமுனாச்சாரியார் இயற்கை எய்தினார். இதனைத் தொடர்ந்து ராமானுஜரே திருவரங்கம்மடத்தின்தலைவராகஅறிவிக்கப்பட்டார். கோவிலையும் மடத்தையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த அவர் பல பிரிவினரை ஒருங்கிணைத்தார். கோவில் சடங்குகளை மாற்றியமைத்தார். ராமானுஜர் ஓர் சிறந்த ஆசிரியர், சீர்திருத்தவாதி, திட்டமிட்டு செயல்பட்டார். அவர் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை மறுத்தார். வைணவத்தின் சமூகத்தளத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார். அத்வைதத்திற்கு மாற்றாக அவர் முன்வைத்த விசிஷ்டாத்வைதம் சிந்தனையாளர்களிடம் செல்வாக்குப் பெற்று தனிமரபாக வளர்ச்சி பெற்றது. அவருடைய இறப்பிற்கு நூறு ஆண்டுகளுக்குப்பின் அவரைப் பின்பற்றுவோரிடம் கோட்பாட்டின் அடிப்படையில் முரண்பாடு ஏற்பட்டு வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் ஆகியோரின் தலைமையில் இரு பிரிவுகள் தோன்றின. ராமானுஜர் வர்ணாசிரம அமைப்புக்கு வெளியே இருந்தோரிடமும் பக்திக் கோட்பாட்டைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டார். கோவில் நிர்வாகிகள் சிலர் உதவியோடு அதன் மூலம் வர்ணாசிரம அமைப்புக்கு வெளியே இருந்தோரையும் ஆண்டிற்கு ஒருமுறையாவது கோவில்களில் நுழைய அனுமதிக்கச் செய்தார். தங்கள் மதநம்பிக்கைகளுக்கும் இருப்புக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக இராமானுஜர் தனது வசிப்பிடத்தை விட்டு வெளியேற நேர்ந்தது என நம்பப்படுகிறது.

11th History Lesson 9 Tamil Medium.indd 146 20-12-2022 15:47:02

முடிவுரை

இக்குறிப்பிட்ட காலகட்டத்தில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட வளர்ச்சி வடஇந்திய தென்னிந்திய மரபுகள் ஒன்றிணைவதற்கு உதவியதோடு ஒரு கலப்பிந்தியப் பண்பாடு உருவாவதற்கும் வழிவகுத்தது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் உணர்ச்சிகரமான வெளிப்பாடு தமிழகத்தின் பக்தி இயக்கத்திலிருந்தே தொடங்கின. இது துணைக் கண்டத்தின் பல பகுதிகளில் ஒத்த இயல்புகளுடைய பெரும்பான்மையோர் ஒருங்கிணையத் தொடங்கிவிட்டதை சுட்டிக்காட்டியது. எம்.ஜி.எஸ். நாராயணன், கேசவன் வேலுதாட் ஆகியோரின் சொற்களில்பக்திக்கோட்பாட்டின்முக்கியத்துவத்தைச் சொல்வதென்றால் "பக்தியெனும் ஒருங்கிணைக்கும் சக்தி அரசர்களையும் பிராமண குருமார்களையும் சாதாரண மக்களையும் முரண்பாடில்லாத விதத்தில் ஒருங்கிணைத்து சாதிய அமைப்பைக் கொண்ட புதிதாக நிறுவப்பட்ட இந்து அரசுகளின் ஆட்சியை வலிமைப்படுத்தியது".

பாடச் சுருக்கம்

I. சாளுக்கியர், பல்லவர்

சாளுக்கியர்

- வாதாபி சாளுக்கியர், குறிப்பாக இரண்டாம் புலிகேசி, வடக்கே ஹர்சரையும் தெற்கே பல்லவரையும் அவர்கள் தக்காணத்தில் கைப்பற்றிய பகுதிகளில் தங்கள் அதிகாரத்தை நிறுவுவதிலிருந்து தடுத்தனர்.
- கலை, கட்டடக்கலை ஆகியவற்றிற்கு அவர்களின் பங்களிப்பிற்கு ஐஹோல், வாதாபி, பட்டாடக்கல் ஆகிய இடங்களிலுள்ள கோவில்களே சாட்சியாகும்.

பல்லவர்

- தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் அரசை நிறுவினர்.
- முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகிய பல்லவ அரசர்கள் வடக்கில் மேற்கொண்ட விரிவாக்க நடவடிக்கைகள் சாளுக்கியரோடு நீடித்தப் போர்களுக்கு இட்டுச் சென்றது.
- கடற்கரைக் கோவில் கட்டுமானத்திற்காகப் பல்லவராட்சி நன்கு அறியப்படுகிறது. அதற்கு மாமல்லபுரம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

II. எல்லோரா, அஜந்தா, மாமல்லபுரம்

எல்லோரா

- ஆசீவகம், சமணம், பௌத்தம், பிராமணியம் ஆகிய அனைத்து மதப் பிரிவுகளையும் பிரிதிநிதித்துவப்படுத்தும் சிற்பங்களுக்கு எல்லோரா பெயர்பெற்றது.
- கைலாசநாதர் குகையிலுள்ள தொடர் சிற்பங்கள் புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளன.

அஜந்தா

- அஜந்தாவில் முப்பது குகைகள் உள்ளன. ஐந்து குகைகளில் சுவரோவியங்கள் உள்ளன. ஜாதகக் கதைகளிலுள்ள காட்சிகளும் புத்தருடைய வரலாற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- புத்தர் சிலையைத் தவிர போதிசத்துவரின் சிலைகள் கவனத்தை ஈர்க்கும் வகையில் சைத்தியாக்களிலும் விகாரைகளிலும் இடம் பெற்றுள்ளன.

மாமல்லபுரம்

- பல்லவர்களின் கட்டடக்கலைக்கு மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் உன்னதமான எடுத்துக்காட்டாகும்.
- ஆகாய கங்கை, அர்சுனன் தவம் ஆகிய தனிச்சிறப்பு மிக்க சிற்பங்கள் சிற்பக்கலைக்குப் புகழ்மிக்க எடுத்துக்காட்டுகளாகும்.

III பக்தி இயக்கம்

- ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்கள் தமிழ்நாட்டில் பக்தி மரபைத் தொடங்கி வைத்தன.
- பல்லவரும் பாண்டியரும் பக்தி இயக்கத்தை ஆதரித்தனர். பக்தி ஒரு சித்தாந்தமாக சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும் மதம் என்னும் குடையின் கீழ் ஒருங்கிணைத்தது.
- இக்காலத்தில் வடஇந்திய–தென்இந்திய மரபுகளின் கலப்பு ஏற்பட்டது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக இணைக்கப்படவில்லை.

(அ) மூன்றாம் கோவிந்தன்	வாதாபி
(ஆ) ரவிகீர்த்தி	இரண்டாம் புலிகேசி
(இ) விஷயம்	ராஷ்ட்டிரகூடர்
(ஈ) நம்மாழ்வார்	குருகூர்

2. தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

(i) சிம்மவிஷ்ணு	– 1. சாளுக்கிய அரசன்
(ii) முதலாம் ஜெயசிம்மன்	– 2. பல்லவ அரசன்
(iii) முதலாம் ஆதித்தன்	– 3. கப்பல் தளம்
(iv) மாமல்லபுரம்	– 4. சோழஅரசன்

(அ) 4, 3, 1, 2 (ஆ) 4, 1, 2, 3
(இ) 2, 1, 4, 3 (ஈ) 4, 3, 2, 1

11th History Lesson 9 Tamil Medium.indd 147 20-12-2022 15:47:03

3. காம்போஜம் என்பது நவீன________
(அ) அஸ்லாம் (ஆ) சுமத்ரா
(இ) ஆனம் (ஈ) கம்போடியா

4. ________ சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்
(அ) சரவணபெலகொலா (ஆ) மதுரை
(இ) காஞ்சி (ஈ) கழுகுமலை

5. அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோவில்கள் எங்கு உள்ளது?
(அ) ஐஹோல் (ஆ) வாதாபி
(இ) மேகுடி (ஈ) பட்டாடக்கல்

6. அயல்நாட்டு வணிகர்கள் ________ என்று அறியப்பட்டனர்.
(அ) பட்டணசாமி (ஆ) நானாதேசி
(இ) விதேசி (ஈ) தேசி

7. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ________
(அ) அத்வைதம் (ஆ) விசிஷ்டாத்வைதம்
(இ) சைவசித்தாந்தம் (ஈ) வேதாந்தம்

II. குறுகிய விடை தருக

1. திருப்புறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன?
2. ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறு குறிப்பு வரைக.
3. சாளுக்கியர் காலத்தில் கன்னடத்தில் எழுதப்பட்ட இரண்டு முக்கியமான இலக்கியங்களைக் குறிப்பிடுக.
4. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பைக் குறிப்பிடுக.

III. சுருக்கமான விடை தருக

1. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள்.
2. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோவில்
3. புகழ்பெற்ற சைவ மூவர்கள்
4. தமிழகத்தில் வைணவத்தை பரவலாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு
5. சாளுக்கியர் ஆட்சியில் அரசகுல மகளிரின் முக்கியத்துவம்

IV. விரிவான விடை தருக

1. பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டு.
2. பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகளை விவாதி.
3. மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

செயல்பாடுகள்

1. வடக்குப் பகுதி பக்தி இயக்கத்தையும் தெற்குப் பகுதி பக்தி இயக்கத்தையும் ஒப்பிட்டு ஆய்க.
2. ஆழ்வார், நாயன்மார் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்.

மூலநூல்கள்

1. R. Champakalakshmi, *Religion, Tradition, and Ideology: Pre-Colonial South India*, Oxford University Press, 2011.
2. Noburu Karashima, *A Concise History of South India*, Oxford University Press, 2014
3. Burton Stein, *History of India*, Oxford University Press, 2002
4. K.A. Nilakanta Sastri, *A History of South India*: From Pre-historic Times to Fall of Vijayanagar, Oxford India Paperbacks, 1997.
5. R. Sathianathier, *History of India*, Vol. I, 1972 (Reprint)

கலைச்சொற்கள்

சிறப்புரிமைச் சின்னம்	insignia	a badge showing official position
வணிகம் சார்ந்த	mercantile	commercial
ஆதரவாளர்	protagonist	one who champions
கட்டடம்/மாளிகை	edifice	building
அர்த்தம்/பொருள்	connotation	meaning
ஆழ்ந்து கற்ற	erudite	learned/scholarly
மெய்யறிவு உள்ளவர்களுக்காக	esoteric	meant for the enlightened

11th History Lesson 9 Tamil Medium.indd 148 20-12-2022 15:47:03

அலகு 10

அரபியர், துருக்கியரின் வருகை

கற்றல் நோக்கங்கள்

- அரபியரின் சிந்துப் படையெடுப்பு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நிகழ்ந்த கஜினி மாமுது, கோரி முகமது ஆகியோரது இராணுவத் தாக்குதலின் விளைவுகளைக் கற்பது.
- வெவ்வேறு வம்சாவளி அரசுகளால் நிறுவப்பட்டு, நிலைப்படுத்தப்பட்ட தில்லி சுல்தானியத்தின் (சுல்தான் ஆட்சியின்) தன்மையை அறிவது.
- சுல்தானிய காலத்துச் சமூகப் பொருளாதார நிலைமைகளை அறிவது.
- இந்தியாவில் இலக்கியம், கலை, இசை, கட்டடக்கலை முதலான துறைகளில் நிகழ்ந்த பண்பாட்டு பரிமாற்றத்தில் இஸ்லாமிய தாக்கத்தைப் புரிந்துகொள்வது.

அறிமுகம்

பதின்மூன்று முதல் பதினாறாம் நூற்றாண்டு முற்பகுதி வரையான காலத்தில் (1200–1550) இஸ்லாமிய அரசு (தில்லி சுல்தானியம்) நிறுவப்பட்டது. இதன் விளைவாக இஸ்லாமிய நிறுவனங்களும் இஸ்லாமியப் பண்பாடும் இந்தியாவில் காலூன்றின. இக்காலகட்டத்தின் வரலாற்றை வெவ்வேறு கண்ணோட்டத்தில் வரலாற்றாசிரியர்கள் விளக்கியுள்ளனர். தனிப்பட்ட சுல்தான்களின் சாதனைகளையும் தோல்விகளையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு சுல்தானிய ஆட்சியை மதிப்பிடுவது வழக்கம். தனிநபரை முன்வைத்து வழக்கமாக எழுதப்படும் வரலாற்றை ஏற்க மறுக்கிற வரலாற்றாசிரியர்கள், சுல்தானிய ஆட்சி பொருளாதாரம், பண்பாட்டு வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது என்றும், இதன் மூலம் இந்தியாவில் ஒரு பன்முகப் பண்பாடு தோன்றுவதற்கு வழிவகுத்தது என்றும் கூறுகின்றனர். வர்க்க உறவுகளின் அடிப்படையில் வரலாற்றைக் கணிக்கும் வரலாற்றாசிரியர்களின் பார்வையில் மத்திய கால அரசுகள், ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியாகவே செயல்பட்டன; எனவே, முகலாயர் ஆட்சிகளுடன் ஒப்பிடுகையில் சுல்தானிய ஆட்சியில் அமைப்பு ரீதியான முன்னேற்றம் மிகக் குறைவு என்று கருதுகின்றனர். இவ்வாறாக, சுல்தானிய ஆட்சியின் இயல்பை முடிவு செய்வதில் அறிஞர்களிடையே இன்னமும் கருத்தொற்றுமை இல்லை.

இப்பாடம் இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது: (அ) சுல்தானிய ஆட்சிக் கால அரசர்கள், நிகழ்வுகள், கருத்துகள், மக்களின் நிலை குறித்த ஒரு வழக்கமான கற்றலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வது. (ஆ) மாணவர்கள் அதன் சரி, தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து, புதிய வினாக்களை எழுப்புகிற விதத்தில் பாடத்தின் உள்ளடக்கத்தை அமைத்தல்.

அரபியரின் வருகை: பின்னணி

இந்தியாவுக்கும் அரபியாவுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் ஏற்பட புவியியல் ரீதியான அமைவிடம் உதவியது. இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே, கடல்வழி வணிகத்தில் அரபியர் ஈடுபட்டிருந்தனர். இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுடன் கடல்வழி வணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர். இவர்கள் தென்னிந்தியாவின் மேற்கு (மலபார்), கிழக்குக் (கோரமண்டல்/சோழமண்டல) கடற்கரைகளில் குடியேறினர். மலபார் பெண்களைத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே குடியமர்ந்த அரபியர், "மாப்பிள்ளை" என்று அழைக்கப்பட்டனர். பொ.ஆ. 712இல் மேற்கொள்ளப்பட்ட அரபியப் படையெடுப்பும் அதைத் தொடர்ந்து நடந்த கஜினி, கோரி மன்னர்களின் படையெடுப்புகளும் இங்கிருந்து கொள்ளையடித்துச் சென்ற செல்வத்தைக் கொண்டு மத்திய ஆசியாவில் அவர்கள் ஆட்சியை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாக இருந்தன. இதனுடன், கஜினி மாமுதுவும், முகமது கோரியும் நிகழ்த்திய திடீர்த் தாக்குதல்கள், ஆக்கிரமிப்பாளர்கள், ஆக்கிரமிப்புக்குள்ளானவர்கள் என்ற உறவை ஏற்படுத்தின. குரசன் நாட்டு (கிழக்கு ஈரான்) ஷா, பின்னர் செங்கிஸ்கான் ஆகியோர் ஆஃப்கானிஸ்தான்

மீது படையெடுத்ததும், வட இந்திய சுல்தான் ஆட்சிக்கு ஆஃப்கானிஸ்தானுடனிருந்த உறவுகளைத் துண்டித்தன. மங்கோலியப் படையெடுப்புகள், கோரி சுல்தானிய ஆட்சியையும் கஜினியையும் அழித்து உச், மற்றும் முல்தானின் அரசர் சுல்தான் நசுருதீன் குபாச்சாவின் (1206–28) கருவூலத்தைக் காலியாக்கின. இவ்வாறாக, வட இந்தியாவில் தமது செல்வாக்கை விரிவுபடுத்துகிற நல்வாய்ப்பு சுல்தான் இல்துமிஷுக்கு இருந்தது. இது, தில்லியைத் தலைநகராகக் கொண்டு இந்திய மாகாணங்களை இஸ்லாமிய ஆட்சியாளர்கள் ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் ஆள்வதற்கு வழிவகுத்தது.

இக்காலகட்டத்தை இஸ்லாமிய ஆட்சிக் காலம் என்று விவரிப்பது வழக்கம். இருப்பினும் மத்திய இந்தியாவை ஆட்சி செய்த இவர்கள், பல்வேறு பிரதேசங்களையும் இனங்களையும் சேர்ந்தவர்களாவர்; அரபியரும், துருக்கியரும், பாரசீகத்தவரும், மத்திய ஆசியரும் இராணுவத்திலும் நிர்வாகத்திலும் பங்கு கொண்டிருந்தனர். இல்துமிஷ் ஓர் இல்பாரி துருக்கியர் (Ilbari Turk) என்பதோடு அவரது இராணுவ அடிமைகள் பலரும் புக்காரா, சாமர்கண்ட், பாக்தாத் ஆகிய இடங்களைச் சேர்ந்த வணிகர்களால் தில்லிக்கு அழைத்துவரப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டோர் துருக்கிய, மங்கோலிய வழி வந்தவர்களாவர். பிற இனங்களைச் சேர்ந்த அடிமைகளும் (குறிப்பாக, மத்திய இந்தியாவின் மிஹிரிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட ஹிந்து கான்) இருந்தனர் என்றாலும், இல்துமிஷ் அவர்கள் அனைவருக்கும் துருக்கியப் பெயர்களையே சூட்டினார்.

இக்காலகட்ட (1206–1526) தில்லி சுல்தானியம் ஒரே மரபைச் சேர்ந்த ஆட்சியாளர்களால் ஆளப்படவில்லை. அதன் ஆட்சியாளர்கள் ஐந்து வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள் அ) அடிமை வம்சம் (1206–1290), ஆ) கில்ஜி வம்சம் (1290–1320), இ) துக்ளக் வம்சம் (1320–1414), ஈ) சையது வம்சம் (1414–1451), உ) லோடி வம்சம் (1451–1526).

டெல்லி சுல்தானியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்

- அல்–பெருனி: தாரிக்–அல்–ஹிந்த் (அரபு மொழியில் எழுதப்பட்ட இந்திய தத்துவஞானமும் மதமும்)
- மின்ஹஜ் உஸ் சிராஜ்: தபகத்–இ–நசிரி (1260) (அரபு மொழியில் எழுதப்பட்ட உலக இஸ்லாமிய வரலாறு)
- ஜியாவுத்தின் பாரனி: தாரிக்–இ–பெரோஸ் ஷாஹி (1357) பெரோஸ் துக்ளக் வரையிலான தில்லி சுல்தான்கள் வரலாறு
- அமிர் குஸ்ரு: மிஃப்தா உல் ஃபுதா (ஜலாலுதீன் கில்ஜியின் வெற்றிகள்); கஜைன்; உல் ஃபுதா (அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகள் – பாரசீக மொழியில்)
- துக்ளக் நாமா (பாரசீக மொழியில் துக்ளக் வம்ச வரலாறு)
- சம்ஸ்–இ–சிராஜ் அஃபிஃப்: தாரிக் இ ஃபெரோஜ் ஷாஹி (தில்லி சுல்தானியம் பற்றிப் பாரசீக மொழியிலுள்ள பாரனியின் குறிப்புகளை ஒட்டியது)
- குலாம் யாஹ்யா பின் அஹ்மத்: தாரிக்–இ–முபாரக் ஷாஹி (சையது ஆட்சியாளர் முபாரக் ஷாவின் ஆட்சியில் பாரசீக மொழியில் எழுதப்பட்டது)
- ஃபெரிஷ்டா: இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் வரலாறு (பாரசீக மொழி)

> பாரசீக வரலாற்று ஆவணங்கள், தில்லி சுல்தானியம் குறித்து மிகைப்படுத்திக் கூறுகின்றன. குறிப்பிட்ட சுல்தானின் ஆட்சியில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்த அவற்றின் கருத்துகள் எந்த விமர்சனமும் இன்றி நவீன கல்விப்புலத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன – சுனில் குமார், *Emergence of Delhi Sultanate*

10.1 சிந்து மீது அரபுப் படையெடுப்பு

ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜஜ்–பின்–யூசுஃப், கடற்கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை என்ற காரணம் காட்டி, சிந்து அரசர் தாகிரை எதிர்த்து, தரை வழி, கடல் வழி என இரு தனித்தனி படைப் பிரிவுகளை அனுப்பினார். ஆனால் இரண்டு படைப்பிரிவுகளும் தோற்றன;அவற்றின் தளபதிகளும் கொல்லப்பட்டனர். பிறகு ஹஜஜ், கலிபாவின் அனுமதியுடன் 6000 வலுவான குதிரைப் படை, போர்த் தளவாடங்களைச் சுமந்துவந்த ஒரு பெரிய ஒட்டகப் படை ஆகியவை அடங்கிய ஒரு முழுமையான இராணுவத்தைப் 17 வயது நிரம்பிய தனது மருமகன் முகமது–பின்–காசிம் தலைமையில் அனுப்பினார்.

முகமது–பின்–காசிம்

காசிமின் படை, பிராமணாபாத் வந்து சேர்ந்த நேரத்தில் சிந்துப் பகுதியில் தாகிர் ஆட்சி செய்துகொண்டிருந்தார். பிராமணர்கள் அதிகம் வாழ்ந்த இப்பகுதியை தாகிரின் முன்னோர்கள் பௌத்த அரச வம்சத்திடமிருந்து கைப்பற்றி ஆட்சி நடத்திவந்தனர். ராணுவம் உள்ளிட்ட நிர்வாகப் பதவிகளில் பிராமணர்களே இருந்தனர். இதனால் அந்நகரம் பிராமணாபாத் எனப்பட்டது. அரசர் தாகிர்

11th History Lesson 10 Tamil Medium.indd 150 07-02-2023 16:00:13

அவரது முதன்மை அமைச்சர் ஆகியோருக்கிடையே அப்போது கருத்து மோதல் ஏற்பட்டிருந்தது. முகமது காசிம் படையெடுத்தபோது, முதன்மை அமைச்சர் அவருக்குத் துரோகம் இழைத்ததால் தாகிருடைய படையின் ஒரு பகுதி விலகிக்கொண்டது. மக்களும் மன்னர் மீது அதிருப்தி அடைந்திருந்த சூழலில், முகமது–பின்–காசிம், பிராமணாபாத்தை எளிதில் கைப்பற்றினார். தாகிரை விரட்டிச் சென்ற காசிம் ரோஹ்ரியில் நிகழ்ந்த ஒரு மோதலில் அவரைக் கொன்றார். அதன் பிறகு காசிமின் படை, சிந்துவின் தேபல் துறைமுக நகரத்தை அழித்து மூன்று நாட்கள் கொள்ளையடித்தது. சிந்து மக்களைச் சரணடையுமாறு காசிம் கேட்டுக்கொண்டார்; அவர்கள் தத்தமது மதத்தைப் பின்பற்றுவதற்கு முழுப் பாதுகாப்பு தருவதாகவும் வாக்களித்தார். தான் கொள்ளை அடித்ததில் வழக்கமான ஐந்தில் ஒரு பங்கைக் கலிபாவுக்கு அனுப்பிவைத்த காசிம், எஞ்சியதைத் தனது படைவீரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

அரபியரின் சிந்து படையெடுப்பானது ஒரு "விளைவுகளற்ற வெற்றியாகவே" குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் இது நாட்டின் எல்லைப்பகுதியை மட்டுமே தொட்டதோடு காசிமின் படையெடுப்பிற்குப் பின்னர் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் பல்வேறு முற்றுகைகள் இன்றி அமைதியாக இருந்தது.

கஜினி மாமுது

இதனிடையே, மத்திய ஆசியாவிலிருந்த அரபியப் பேரரசு உடைந்து, அதன் பல மாகாணங்கள், தங்களைச் சுதந்திர அரசுகளாக அறிவித்துக் கொண்டன. இவற்றில் ஒன்றுதான் சாமானித் (Shamanid) பேரரசு. பிறகு இதுவும் உடைந்து, பல சுதந்திர அரசுகள் தோன்றின. சாமானித் பேரரசில் குரசன் ஆளுநராக இருந்த துருக்கிய அடிமை அல்ப்டிஜின், 963இல் கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்த கஜினி நகரைக் கைப்பற்றி, ஒரு சுதந்திர அரசை நிறுவினார். பிறகு விரைவிலேயே அல்ப்டிஜின் இறந்துபோனார். தொடர்ந்து அவரது வாரிசாக வந்த மூவரின் தோல்வியால், உயர்குடிகள் சபுக்தஜின்னுக்கு முடிசூட்டினர்.

இந்தியாவில் இஸ்லாமிய அரசை தெற்கு நோக்கி விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை சபுக்தஜின் தொடங்கிவைத்தார். ஆப்கானிஸ்தான் ஷாஹி அரசர் ஜெயபாலரைத் தோற்கடித்து,

> அரபியரும் இரானியரும் இந்தியாவை 'ஹிந்த்' என்றும், இந்தியர்களை 'ஹிந்துக்கள்' என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு 'ஹிந்து' எனும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களைக் குறிப்பதாயிற்று.

அம்மாகாணத்தில் தனது மூத்த மகன் மாமுதை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார். 997இல் சபுக்தஜின் இறந்தபோது, கஜினி மாமுது குரசனில் இருந்தார். இதனால், சபுக்தஜினின் இளைய மகன் இஸ்மாயில் வாரிசாக அறிவிக்கப்பட்டார். பிறகு, தனது சகோதரன் இஸ்மாயிலைத் தோற்கடித்து இருபத்தேழு வயது கஜினி மாமுது ஆட்சியில் அமர்ந்தார். கஜினி மாமுது ஆட்சிப் பொறுப்பு ஏற்றதை, ஒரு பதவியேற்பு அங்கியை அளித்தும் யாமினி–உத்–தவுலா ('பேரரசின் வலது கை') என்ற பட்டத்தை வழங்கியும் கலிபா அவரை அங்கீகரித்தார்.

கஜினி மாமுதின் தாக்குதல்கள்

32 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கஜினி மாமுது, பதினேழு முறை இந்தியா மீது தாக்குதல்களை நடத்தினார். செல்வக் களஞ்சியமாக இருந்த இந்துக் கோவில்களில் கொள்ளை அடிப்பதே முதன்மை நோக்கம். இருப்பினும் கோவில்களை இடிப்பது, சிலைகளைத் தகர்ப்பது ஆகிய நடவடிக்கைகளும் நடந்தன. இதை கஜினி மாமுதுவின் படைவீரர்கள், தங்களது கடவுளின் வெல்லப்பட முடியாத ஆற்றலின் விளைவாகக் கண்டனர். 'பிற மதத்தினரை' வெட்டிக் கொல்வதிலும், அவர்களது வழிபாட்டுத் தலங்களை அழிப்பதிலும் கஜினி மாமுதுவின் படையினரின் மதப்பற்று வெளிப்பட்டது. எனினும் மக்களை இஸ்லாமிய மதத்துக்கு மாற்றுவதற்கு அவர்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. தங்களது உயிரையும் உடைமைகளையும் காத்துக்கொள்வதற்காக இஸ்லாமியராக மாறியவர்கள்கூட கஜினி மாமுதுவின் படையெடுப்பு முடிவுக்கு வந்ததும் தங்களின் மதத்துக்கே திரும்பினர்.

ஷாஹி அரசன் அனந்தபாலரைத் தோற்கடித்த கஜினி மாமுது, பிறகு பஞ்சாபைக் கடந்து கங்கைச் சமவெளிக்குள் நெடுந்தொலைவு உள்ளே வந்தார்; கன்னோசி சென்றடைவதற்கு முன்னர் மதுராவைச் சூறையாடினார். தொடர்ந்து கஜினி மாமுது, 1025இல் குஜராத் கடற்கரையிலுள்ள கோவில் நகரமான சோமநாதபுரத்தின் மீது படையெடுத்துக் கொள்ளையடித்தார். சோமநாதபுரக் கோவில் கொள்ளை பற்றிய ஆங்கிலேய காலனிய, மற்றும் இந்திய தேசியவாதிகளின் வரலாற்றியல்கள் மாமுதுவைக் கொடும் படையெடுப்பாளராக சித்தரிக்கின்றன. கஜினியின் இக்கொள்ளைகளை, மத ஆதிக்கம் சார்ந்தவை என்று கூறுவதைவிட பெரிதும் அரசியல், பொருளாதாரத் தன்மை கொண்டவை என்பதே பொருந்தும் எனப் பல வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மத்திய கால இந்தியாவில் வழிபாட்டிடங்களைச் சூறையாடுவதும் கடவுள் திருவுருவங்களை அழிப்பதும் பேரரசின் ஏகபோக அதிகாரத்தின் வெளிப்பாடுகளாகவே கருதப்பட்டன. கஜினி மாமுதின் ராணுவத்

11th History Lesson 10 Tamil Medium.indd 151 07-02-2023 16:00:13

தாக்குதல்களும் அவரது செயல்களும் அப்படிப்பட்டவையே. மேலும், கஜினி மாமுது கொள்ளை அடித்தது, அவரது பெரும் படையைப் பராமரிக்கிற செலவை ஈடுசெய்யும் தேவையினால் ஏற்பட்டது. துருக்கியப் படை என்பது நிரந்தரமான, தொழில்நேர்த்திப் பெற்ற படையாகும். அது தெரிந்தெடுத்து தகுதி உயர்த்தப்பட்ட வில்லாளிகள் பிரிவை மையமாகக் கொண்டு கட்டப்பட்டது; இவர்கள் அனைவரும் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளாவர்; இவர்களுக்குப் பயிற்சியளித்து ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியாவின் இந்து அரசாட்சிகளிலிருந்தும் ஈரானின் இஸ்லாமிய அரசாட்சிகளிலிருந்தும் அடிக்கப்பட்டப் போர்க் கொள்ளையிலிருந்து இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது.

இந்தப் போர்க் கொள்ளைகளில் கைப்பற்றப்பட்ட செல்வம் குறித்துப் பாரசீகக் குறிப்புகள் மிகைப்படுத்திக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, 1029இல் ரேய் என்ற ஈரானிய நகரத்தைச் சூறையாடியதில் கஜினி மாமுதுவுக்கு 500,000 தினார்கள் மதிப்புள்ள ஆபரணங்கள், நாணயங்களாக 260,000 தினார்கள், 30,000 தினார்கள் மதிப்புடைய தங்க, வெள்ளிப் பாத்திரங்கள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இது போலவே, சோமநாதபுரத்தைச் (1025) சூறையாடியதில், 2 கோடி தினார் மதிப்புடைய கொள்ளைப் பொருள்கள் கஜினி மாமுதுவுக்குக் கிடைத்ததாக நம்பப்படுகிறது. வரலாற்றறிஞர் ரோமிலா தாப்பர், "சோமநாதபுரப் படையெடுப்பு குறித்த தகவல்கள் 13ஆம் நூற்றாண்டிலிருந்து அரபு மரபுவழிப் பதிவுகளில் காணப்படுகின்றன. ஆனால், இதன் சமகால சமண மதச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்தவில்லை" என்கிறார். "இத்தகைய திடீர் இராணுவத் தாக்குதல்களும் கொள்ளையடிப்புகளும் பொருளாதார மற்றும் மத உருவ எதிர்ப்புத் தன்மை கொண்டதே தவிர வகுப்புவாதத் தன்மை கொண்டதல்ல. சமகாலப் போர்முறையிலிருந்து பிரிக்க முடியாத அழிவுகளையும் மத்திய கால அரசர்களின் வழக்கமான கொள்ளையிடும் தன்மையையுமே அவை வெளிப்படுத்துகின்றன" என்கிறார்.



சோமநாதர் கோவில்

கஜினி மாமுது இறந்த பிறகு கஜினி வம்சத்தில் உறவினர்களிடையே அரச வாரிசுரிமை தொடர்பாக முடிவற்ற மோதல்கள் நிகழ்ந்தன. இருப்பினும், 42 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி புரிந்த சுல்தான் இப்ராஹிம், 17 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த அவரது மகன் மசூத் போன்ற சில விதிவிலக்குகளும் இருந்தனர். வடக்கே கோரிகளிடமிருந்தும் மேற்கே செலிஜுக் துருக்கியரிடமிருந்தும் கஜினி வம்ச ஆட்சிக்கு நிரந்தர அபாயம் இருந்து வந்தது. இது அரசாட்சிக்குப் பேரழிவை ஏற்படுத்தியது. இதனால், கஜினி வம்சத்தின் பிற்கால ஆட்சியாளர்கள் லாகூர் பகுதியில் மட்டுமே அதிகாரம் செலுத்த முடிந்தது; இதுவும்கூட முப்பது ஆண்டுகளே நீடித்தது. 1186இல் கோரி அரசர் மொய்சுதீன் முகமது என்கிற கோரி முகமது, பஞ்சாப் மீது படையெடுத்து லாகூரைக் கைப்பற்றினார். கஜினி வம்சத்தின் கடைசி அரசர் குரவ் ஷா, 1192இல் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணத்துடன் கஜினி அரசு முடிவுக்கு வந்தது.

கணிதவியலாளரும் தத்துவஞானியும் வானியலாளரும் வரலாற்று ஆசிரியருமான அல்–பெருனி, கஜினி மாமுதுவுடன் இந்தியா வந்தார். கிதாப்–உல்–ஹிந்த் என்ற தனது நூலை இயற்றுவதற்கு முன்பு அவர் சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார்; இந்து மத நூல்களையும் தத்துவ நூல்களையும் கற்றார். யூக்ளிடின் கிரேக்க நூலைக்கூட அவர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஆரியபட்டரின் முக்கிய நூலான ஆர்யபட்டியம் (புவி, அதன் அச்சில் சுழல்வது இரவு பகலை ஏற்படுத்துகிறது போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்) என்பதை அவர் மேலை நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். இந்தியாவுக்கும் பிற உலக நாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்.

கோரி முகமது

கஜினியின் படையெடுப்புகள் கொள்ளையடிக்கும் நோக்கம் கொண்டவை. இதனை விரிவுபடுத்திக் கொள்ளையடித்த செல்வமும், திறையும் தொடர்ந்து சீராக வந்துசேர்வதை உறுதி செய்துகொள்ள படையரண் நகரங்களை கோரிகள் அமைத்தனர்.

கோரி முகமது
(நவீனச் சித்தரிப்பு)

கோரி முகமது, தாம் கைப்பற்றிய நிலப்பகுதிகளில்

11th History Lesson 10 Tamil Medium.indd 152 07-02-2023 16:00:13

முதலீடு செய்தார். 1180களிலும் 1190களிலும் நவீன பஞ்சாப், சிந்து, ஹரியானா மாகாணங்களில் அவர் காவல் அரண்களை அமைத்தார். விரைவிலேயே இந்தப் படை மையங்களில், ராணுவத்தில் சேர வாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருந்த கூலிப்படை வீரர்கள் குடியேறினர். இப்படைவீரர்கள், சுல்தானிய அரசின் வருவாய், படை விவகாரங்களை ஒழுங்கமைக்கப் பணியமர்த்தப்பட்டனர். வட இந்தியாவில் 1190இலிருந்து சுல்தானின் படைத் தளபதிகள், அடிமைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். போர் முறையிலும் நிர்வாகத்திலும் சிறப்புப் பயிற்சி பெற்ற இந்த அடிமைகள், நிலத்தோடும் விவசாய உழைப்போடும் வீட்டு வேலைகளோடும் தொடர்புடைய அடிமைகளிலிருந்து மாறுபட்டவர்கள். தொடக்கத்தில், உச், லாகூர், முல்தான் ஆகியன குறிப்பிடத்தக்க அதிகார மையங்களாகக் கருதப்பட்டன. 1175இல் முல்தான் மீது படையெடுத்த கோரி முகமது, அதை அதன் இஸ்மாயிலி வம்ச ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார். தொடர்ந்து உச் கோட்டையும் தாக்குதல் இன்றியே பணிந்தது. எனினும், குஜராத்தின் சாளுக்கியர் அபு மலையில் கோரி முகமதுவுக்கு ஒரு பயங்கரத் தோல்வியைக் கொடுத்தனர் (1179). இந்தத் தோல்விக்குப் பிறகு கோரி முகமது, தமது படையெடுப்பின் போக்கை மாற்றிக்கொண்டு சிந்துவிலும் பஞ்சாபிலும் தமது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்.

பிருத்விராஜ் சௌகான்

அஜ்மீர் சௌகான்களின் இராணுவ முக்கியத்துவத்துவம் வாய்ந்த தபர்ஹிந்தா (பட்டிண்டா) கோட்டையை முகமது கோரி தாக்கினார். அஜ்மீர் அரசர் பிருத்விராஜ் சௌகான், தபர்ஹிந்தாவுக்கு அணிவகுத்துச் சென்று 1191இல் முதலாவது தரெய்ன் போரை நிகழ்த்தினார். இந்தப் போரில் ஒரு முழுமையான வெற்றியை பிருத்விராஜ் பெற்றார். எனினும் இதை ஓர் எல்லைப்புறச் சண்டையாக மட்டுமே கருதியதால் அங்கே தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. மேலும், கோரிகள் அவ்வப்போது தாக்குதல்கள் நடத்துவார்கள் என்றும் அவர் எதிர்ப்பார்க்கவில்லை. தரெய்ன் போரில் முகமது கோரி காயமடைந்தார்; ஒரு குதிரை வீரன் அவரை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுசென்றார். பிருத்விராஜ் சௌகான் நினைத்ததற்கு மாறாக, அடுத்த ஆண்டில் (1192) முகமது கோரி அஜ்மீர் மீது மீண்டும் படையெடுத்தார். கோரியின் ஆற்றலைப்

பிருத்விராஜ் சௌகான்
(நவீனச் சித்தரிப்பு)

பிருத்விராஜ் குறைத்து மதிப்பிட்டார். கோரிக்கு எதிராக ஒரு சிறிய படைக் குழுவுக்குத் தலைமையேற்றுச் சென்றார். இந்த இரண்டாவது தரெய்ன் போரில், பிருத்விராஜ் தோல்வி அடைந்தார்; இறுதியில் சிறைப் பிடிக்கப்பட்டார். இந்திய வரலாற்றின் திருப்புமுனைகளுள் ஒன்றாக இந்தப் போர் அமைந்தது. போரில் வெற்றி பெற்ற கோரி, மீண்டும் அஜ்மீரின் ஆட்சியை பிருத்விராஜிடமே ஒப்படைத்தார். பின்னர், இராஜதுரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றார்; தனது நம்பிக்கைக்குரிய தளபதியான குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கான தனது துணை ஆட்சியாளராக நியமித்தார்.

கன்னோசி அரசர் ஜெயசந்திரர்

கன்னோசி அரசர் ஜெயசந்திரரை எதிர்த்துப் போர்புரிய மீண்டும் விரைவிலேயே முகமது கோரி இந்தியா வந்தார். கோரியை எதிர்த்த போரில் ராஜபுத்திரத் தலைவர்கள் யாரும் ஜெயச்சந்திரனை ஆதரிக்கவில்லை. அவர்கள் பிருதிவிராஜ் பக்கம் நின்றனர். ஜெயச்சந்திரன் மகள் சம்யுக்தாவைப் பிருதிவிராஜ் கடத்திச் சென்றதையொட்டி இருவருக்குமிடையே பகை இருந்தது. இதனால் தனிமைப்பட்டு நின்ற ஜெயசந்திராவை எளிதாக வென்ற முகமது கோரி, ஏராளமான கொள்ளைச் செல்வத்துடன் திரும்பினார். திரும்பும் வழியில், சிந்து நதிக் கரையில் தங்கியிருந்தபோது, அடையாளம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.

ராஜபுத்திர அரசுகள்

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜபுத்திர அரசான கூர்ஜர பிரதிகார் மற்றும் ராஷ்டிரகூடர் ஆகிய வலுவான இரண்டு அரசுகள் தங்களின் அதிகாரத்தை இழந்தன. டோமர் (தில்லி), சௌகான் (ராஜஸ்தான்), சோலங்கி (குஜராத்), பரமர் (மால்வா), கடவாலா (கன்னோசி), சந்தேலர் (பந்தேல்கண்ட்) ஆகியவை வட இந்தியாவின் முக்கியமான அரச வம்சங்கள் ஆகும். முதன்மையான இரு சௌகான் அரசர்களான விக்ரகராஜ், பிருத்விராஜ், பரமர் வம்சத்தின் போஜர், கடவாலா அரசன் ஜெயசந்திரா, சந்தேலரான யசோவர்மன், கீர்த்தி வர்மன் ஆகிய அனைவரும் வலுவாக இருந்தனர்.

ராஜபுத்திரர்கள் போர்ப் பாரம்பரியம் கொண்டவர்கள். துருக்கியரும் ராஜபுத்திரரும் ஒரே மாதிரியான ஆயுதங்களையே பயன்படுத்தினர். எனினும், படை ஒழுங்கிலும் பயிற்சியிலும் ராஜபுத்திரர்கள் கவனமின்றியிருந்தனர். அதே நேரத்தில் நிலைமைகளுக்குத் தக்கவாறு உத்திகள் வகுப்பதில் துருக்கியர் வல்லவர்களாயிருந்தனர். துருக்கிய குதிரைப் படை, இந்திய குதிரைப் படையை விட மேம்பட்டதாயிருந்தது. ராஜபுத்திரப்

11th History Lesson 10 Tamil Medium.indd 153 07-02-2023 16:00:14

லட்சுமணர் கோவில், விஸ்வநாதர் கோவில், கந்தரியா மகாதேவர் கோவில் உள்பட பல கோவில்களைக் கொண்ட உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோவில் வளாகம், கஜுராஹோவிலிருந்து ஆட்சிபுரிந்த பந்தேல்கண்ட் சந்தேலர்களால் கட்டப்பட்டது.

படை யானைகளை மையப்படுத்தி இருந்தது. யானைகளுடன் ஒப்பிடுகிறபோது குதிரைகள் பன்மடங்கு வேகம் கொண்டவை. இது, போரில் துருக்கியர்களுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே, அவர்கள் பகைவரை எளிதில் வென்றனர்.

தில்லி சுல்தானியத்தின் தோற்றம்

10.2 அடிமை வம்சம்

முகமது கோரி இறந்த பிறகு அதிகாரத்துக்கு மூவர் போட்டியிட்டனர். ஒருவர் குத்புதீன் ஐபக். இவர், தில்லியில் அரியணை ஏறினார்; ஆனால் அவரது மாமனார் இல்திஸ், ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தார். இந்த வம்சத்தின் மூன்று முக்கியமான ஆட்சியாளர்கள்: குத்புதீன் ஐபக், இல்துமிஷ், பால்பன்.

அடிமை வம்சத்தை மம்லக் வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது, 'ஓர் அடிமை' என்பதற்கான அரபுத் தகுதிப் பெயருமாகும்.

குத்புதீன் ஐபக் (1206–1210)

குத்புதீன் ஐபக், சிறுவனாக இருந்த போதே கஜினியில் ஓர் அடிமையாக சுல்தான் முகமது கோரிக்கு விற்கப்பட்டார். அவரது திறமையையும் விசுவாசத்தையும் கண்ட முகமது கோரி, இந்தியாவில் தான் வெற்றிபெற்ற ஒரு மாகாணத்திற்கு பொறுப்பு ஆளுநராக அவரை நியமித்தார். பீகாரையும் வங்கத்தையும் கைப்பற்றுவதற்கு ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த முகமது–பின்–பக்தியார் கில்ஜி என்ற ஒரு துருக்கியத் தளபதி குத்புதீன் ஐபக்–கிற்கு உதவினார். குத்புதீன்

புகழ்பெற்ற நாளந்தா பௌத்தப் பல்கலைக் கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா நூலகத்தில் இருந்த இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன.

ஐபக் நான்கு ஆண்டுகள் (1206–1210) ஆட்சி புரிந்தார்; அவர் புத்திசாலி என்றும் நேர்மையான நிர்வாகி என்றும் பெயரெடுத்தார். 1210இல் லாகூரில் சௌகான் (குதிரை போலோ) எனும் விளையாட்டின் போது நிகழ்ந்த ஒரு விபத்தில் இறந்தார்.

இல்துமிஷ் (1211–1236)

சம்சுதீன் இல்துமிஷ் (1211–1236) துருக்கிய இனத்தைச் சார்ந்த குத்புதீன் ஐபக்கின் அடிமை. இல்துமிஷ்–இன் மேல்தட்டு அடிமைகள் பலரும் துருக்கிய, மங்கோலிய வழித்தோன்றல்கள். அவர்களை புக்காரா, சாமர்கண்ட், பாக்தாத் போன்ற வணிக மையங்களிலிருந்து வணிகர்கள் தில்லிக்கு அழைத்துவந்தனர். எனினும் இவர்கள் அனைவருக்குமே துருக்கியப் பட்டங்களை சம்சுதீன் இல்துமிஷ், கொடுத்தார். தனது மேல்தட்டு இராணுவ அடிமைகளையே (பண்டகன்) அவர் நம்பியிருந்தார். தொலைவிலுள்ள இடங்களில் அவர்களையே ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கிற வழக்கத்தையும் கைக்கொண்டார். இக்காலகட்டத்தில் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த அனுபவமிக்க இராணுவத் தளபதிகள் வட இந்தியாவுக்குள் குடிபெயர்ந்தபோதிலும், பழைய வழக்கத்தை இல்துமிஷ் மாற்றிக்கொள்ளவில்லை.

குத்புதீனின் அடிமையும் மருமகனுமான சம்சுதீன் இல்துமிஷ், குத்புதீன் ஐபக்கின் மகன் ஆரம் ஷா ஆட்சிக்கு வருவதைத்தடுத்து, தானே தில்லியின் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். தனது ஆட்சிக் காலத்தில் அவர் குவாலியர், ரான்தம்பூர் , அஜ்மீர், ஜலோர்

பண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும்; இச்சொல்லுக்குப் படை அடிமை என்று பொருள். இராணுவப் பணி அனுபவம், பேரரசருடனான நெருக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். இந்த நம்பிக்கை, அவர்கள் ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கப்படுவதற்கு வழிகோலியது. வட இந்தியாவில் குரித் பண்டகன், மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இந்த அடிமைகளுக்கு சொந்தச் சமூக அடையாளம் இல்லை; இதனால் அவர்களது எஜமானர்கள் அவர்களுக்குப் புதிய பெயர்கள் சூட்டினர்; 'நிஸ்பா' என்பதையும் உள்ளடக்கிய அப்பெயர்கள் அவர்களது சமூக அல்லது பிரதேச அடையாளத்தைக் குறித்தன. அடிமைகள், தங்களது எஜமானர்களின் நிஸ்பாவைக் கொண்டிருந்தனர்; எனவே மொய்சுதீன் அடிமை, மொய்சு எனும் நிஸ்பாவைக் கொண்டிருப்பார்; சுல்தான் சம்சுதீன் இல்துமிஷின் அடிமை, ஷம்ஸி பண்டகன் என்று குறிப்பிடப்படுவார்.

11th History Lesson 10 Tamil Medium.indd 154 07-02-2023 16:00:14

ஆகிய இடங்களில் ராஜபுத்திரர்களுக்கிடையே நிலவிய குழப்பங்களை முடித்துவைத்தார். லாகூரிலும் முல்தானிலும் நசுருதீன் குபச்சாவின் படையை எதிர்த்து வெற்றிபெற்றார். வங்க ஆளுநர் அலிவர்தனின் சதியையும் முறியடித்தார். மங்கோலிய செங்கிஸ்கானுக்கும் மத்திய ஆசியாவின் கவாரிஸ்மி ஷா ஜலாலுதீனுக்கும் இடையே போர்ப்பகை இருந்தது. இல்துமிஷிடம் ஜலாலுதீன் ஆதரவு கேட்டார். இல்துமிஷ், அவரை ஆதரிக்க மறுத்துவிட்டார். ஜலாலுதீனை அவர், ஆதரித்திருந்தால் இந்திய வரலாறு பெரிதும் மாறி இருந்திருக்கும்; மங்கோலியர்கள் இந்தியாவை எளிதில் நாசம் செய்திருப்பார்கள். இல்துமிஷ்–இன் ஆட்சி, தில்லியில் 243 அடி உயரமுள்ள குதுப்மினார் என்ற ஒரு வெற்றித்தூணைக் கட்டிமுடித்ததற்கும் சுல்தான்கள் ஆட்சி காலத்தின் இரண்டு அடிப்படை நாணயங்களான செப்பு, வெள்ளி தங்காவை அறிமுகம் செய்ததற்கும் குறிப்பிடத்தகுந்தது.

அடிமை வம்ச மரபுகள் பலவீனமானவை என்பதால், இல்துமிஷ் இறந்த பிறகு அவரது வாரிசுகள் ஆட்சிக்கு வருவது எளிதாக இல்லை. ஒரு பத்து ஆண்டுகளுக்குள், ஒரு மகன், ஒரு மகள் (சுல்தானா இரஸியா), மற்றொரு மகன், ஒரு பேரன் எனப் பலரும் ஆட்சிக்கு வந்தனர்; இறுதியில் அவரது கடைசி மகன் சுல்தான் இரண்டாம் நசிர் அல்லுதீன் முகமது (1246–66) அரசரானார். இல்துமிஷின் வாரிசுகள் தங்கள் தந்தையாரால் நியமிக்கப்பட்ட தளபதிகளையும் ஆளுநர்களையும் எதிர்த்து போரிட்டுத்தோற்றனர். மூத்தபிரபுக்களாகிய அவர்கள் தொடர்ந்து தில்லி அரசியலில் தலையிட்டனர். இல்துமிஷ் வாரிசுகளுக்கு நிபந்தனைகள் விதித்து வந்தனர். மூத்த அரச குடும்ப அடிமைகளுக்கு மாற்றாக இளைய தலைமுறையினரை சுல்தான் நியமித்தபோது, அவர்களுக்கு முன்னே அதிகாரம் செலுத்தியவர்களுக்கு நிகரான வலிமையான ஒன்றுபட்ட சுல்தானிய அரசு பற்றி அரசருக்கிருந்த கண்ணோட்டத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை

கிழக்கே லக்னோவதி (நவீன வங்கம்), மேற்கே பஞ்சாப், சிந்து மாகாணங்களில் நியமிக்கப்பட்ட அடிமை ஆளுநர்கள் தில்லியின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி சுதந்திர அரசுகளாக அறிவித்தனர். தில்லி சுல்தானின் 'மைய ஆட்சிப் பகுதிகளிலிருந்த' (தில்லி மற்றும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகள்) அடிமை ஆளுநர்களும், தங்களை நிலைப்படுத்திக் கொண்டும் பக்கத்திலுள்ள குறுநிலத் தலைவர்களுடன் அணி சேர்ந்தும் சுல்தானுக்குக் கட்டுப்பட மறுத்தனர். ஷம்ஸியின் அடிமைகளுக்கும் அடுத்தடுத்து வந்த தில்லி சுல்தான்களுக்கும் இடையில் இருபதாண்டுகளுக்கு மோதல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு 1254இல், வடமேற்கில் ஷிவாலிக் ஆட்சிப் பகுதிகளின் தளபதியாக இருந்த உலுக் கான், தில்லியைக் கைப்பற்றினார். உலுக் கான், இல்துமிஷ் ஆட்சியின்போது அடிமையாகவும் இளைஞராகவும் இருந்தவர். அவர் (சுல்தானுக்குத் துணையாக இருந்த) ஆட்சி அதிகாரப் பிரதிநிதி என்று பொருள்படும், நய்பி-இ முல்க் என்று பட்டம் சூட்டிக்கொண்டார். பிறகு 1266இல் சுல்தான் கியாஸ்–உத்–தின் பால்பனாக தில்லி ஆட்சியைக் கைப்பற்றினார்.

பால்பன் (1266–1287)

பால்பன் அரசரானதும் தில்லி சுல்தானியத்தில் குழப்பங்கள் விளைவித்த பிரபுக்களின் அரசியல் சூழ்ச்சிகள் முடிவுக்குவந்தன. பால்பன், தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள, அடங்க மறுத்த ஆளுநர்கள் மீதும் அவர்களின் உள்ளூர் கூட்டாளிகள் மீதும் தாக்குதல் தொடுத்தார். தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோவாபிலும் நிகழ்ந்த பால்பனின் தாக்குதல்களை பரணி குறிப்பிடுகிறார். இந்தத் தாக்குதல்களின்போது காடுகள் அழிக்கப்பட்டன; புதிய சாலைகள் அமைக்கப்பட்டன; காடுகள் அழிக்கப்பட்ட புதிய நிலங்கள், புதிதாகப் படையில் சேர்ந்த ஆஃப்கானியர்களுக்கும் மற்றவர்களுக்கும்

இரஸியா சுல்தானா (1236–1240) : இவர் பேரரசர் இல்துமிஷின் மகள். இரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்கிய பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான தடைகளைக் கடந்தே இரஸியா பேரரசியாகப் பதவி ஏற்றார். மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணி, இபின் பதூதாவின் கூற்றுப் படி 'குதிரை மீது ஆண்கள் சவாரி செய்வதைப் போல், கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ இரஸியாவும் சவாரி செய்தார். தனது முகத்துக்கு அவர் திரையிடவில்லை'. இருப்பினும் அவர் மூன்றரை ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை அவர் குதிரை இலாயப் பணித்துறைத் தலைவராக (அமீர்–இ–அகுர்) ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினார். இது, துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. யாகுத்துக்கும் அரசி இரஸியாவுக்கும் இருந்த நெருக்கத்தைப் பெரிதுபடுத்த, பிரபுக்கள், அரசியைப் பதவியிலிருந்து இறக்க முயன்றனர். இரஸியாவுக்குப் பொதுமக்கள் ஆதரவு இருந்ததால், தில்லியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெற்குப் பஞ்சாபில் கலகக்கார ஆளுநர் அல்துனியாவைத் தண்டிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைச் சதிகாரர்கள் பயன்படுத்தி அவரை ஆட்சியிலிருந்து அகற்றினர்.

11th History Lesson 10 Tamil Medium.indd 155 07-02-2023 16:00:14

குத்தகையில்லா நிலங்களாக (மஃப்ருஸி) வழங்கப்பட்டு, அவை பயிரிடப்பட்டன. வணிகத் தடங்களையும் கிராமச் சந்தைகளையும் பாதுகாக்கப் புதிய கோட்டைகள் கட்டப்பட்டன.

பால்பனும் சட்ட ஒழுங்கும்

கங்கை, யமுனை நதிகள் இடையிலான தோவாப் பகுதிகளில் சட்டஒழுங்கு நிலைமை சீர்குலைந்தது. ராஜபுத்திர ஜமீன்தார்கள் கோட்டைகள் அமைத்தனர்; சுல்தானின் ஆணைகளை மீறினர். வட மேற்கில், மேவாரைச் சுற்றிய அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த 'மியோ' என்ற ஓர் இஸ்லாமியச் சமூகம் கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தது. இதை ஒரு சவாலாக ஏற்ற பால்பன் தாமே முன்னின்று மேவாரைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அவரின் படை வீரர்கள், மியோக்களைத் தேடிப் பிடித்துக் கொன்றனர். தோவாப் பகுதியில் ராஜபுத்திர அரண்கள் அழிக்கப்பட்டன; காடுகள் அழிக்கப்பட்டன. சாலைகளைப் பாதுகாக்கவும் கலகங்களைக் கையாளவும் அப்பகுதி முழுவதிலும் ஆஃப்கன் படை வீரர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

துக்ரில் கானை தண்டிக்கின்ற தாக்குதல்

பால்பன், கலகங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். தனக்குப்பிடித்த ஓர் அடிமையான துக்ரில் கானை வங்கத்தின் ஆளுநராக நியமித்தார். ஆனால், விரைவிலேயே துக்ரில் கான் வெளிப்படையாகவே கலகம் செய்தார். அதை ஒடுக்குவதற்கு, பால்பன் அனுப்பிவைத்த அவத் ஆளுநர் அமின் கான், பணிந்து பின்வாங்கினார். இதனால் ஆத்திரமடைந்த பால்பன் மேலும் இரு படைப் பிரிவுகளை அனுப்ப அவையும் தோல்வியைத் தழுவின. அடுத்தடுத்து ஏற்பட்ட இந்தப் பின்னடைவுகளால் அவமானப்பட்ட பால்பன், தாமே வங்கத்திற்குச் சென்றார். பால்பன் நெருங்கிவிட்டதைக் கேள்வியுற்ற துக்ரில் கான் தப்பியோடினார். பால்பன், அவரைப் பின் தொடர்ந்து முதலில் லக்னெளதிக்கும் பிறகு திரிபுராவை நோக்கியும் சென்றார். அங்கே துக்ரில் கானைப் பிடித்த பால்பனின் படைவீரர்கள் அவரைக் கொன்றனர். பிறகு வங்கத்தின் ஆளுநராக பால்பனின் மகன் புக்ரா கான் நியமிக்கப்பட்டார். பால்பன் இறந்த பிறகு புக்ரா கான் ஒரு சுதந்திர அரசாட்சியாகப் பிரிந்து போனாரேயன்றி தந்தையின் அரியணையைக் கோரவில்லை. இதனால் தில்லியில் ஒரு தலைமை நெருக்கடி ஏற்பட்டது; மேலும், அவரது மகன் கைகுபாத், சிற்றின்பத்தில் வீழ்ந்து கிடந்தார்.

மங்கோலிய அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள்

மங்கோலியர்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும்விதமாகதனதுராணுவத்தைபால்பன் பலப்படுத்திக் கொண்டார். படிண்டா, சுனம், சாமானா ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகளில் கூடுதல் படைகளை நிலைநிறுத்தி வலுப்படுத்தினார். அதே நேரத்தில், ஈரானின் மங்கோலிய பொறுப்பு ஆளுநரும் செங்கிஸ் கானின் பேரனுமான ஹுலாகு கானுடன் நல்லுறவைப் பேணுவதற்கு அவர் முயற்சி செய்தார். சட்லெஜுக்கு அப்பால் முன்னேறி வரமாட்டோம் என்ற வாக்குறுதியை மங்கோலியரிடமிருந்து பால்பன் பெற்றார். இதை, 1259இல் தில்லிக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பிவைத்து உலுக்கான் குறிப்பால் உணர்த்தினார். மங்கோலியத் தாக்குதல்களிலிருந்து எல்லைப் பகுதிகளைக் காப்பதற்காக தனது விருப்பத்துக்குரிய மகன் முகமது கானுக்கு முல்தானின் ஆளுநர் பொறுப்பு அளித்திருந்தார் பால்பன். உலுக்கானுடன் நட்புறவு இருந்தபோதிலும் ஒரு மங்கோலியரோடு ஏற்பட்ட ஒரு மோதலில் முகமது கான் கொல்லப்பட்டார். இதனால் மனமுடைந்த பால்பன், 1286இல் இறந்து போனார்.

பால்பனின் கல்லறை
(புதுதில்லி)

10.3 கில்ஜிகள் (1290–1320)

ஜலாலுதீன் கில்ஜி (1290–1296):

பால்பனின் மகன் கைகுபாத் அரசராகும் தகுதியற்றவராக இருந்தார். இதனால் அவரது மூன்று வயது மகன் கைமார்ஸ் அரச கட்டிலில் அமர்த்தப்பட்டார். பேரரசின் அமைச்சர்கள், பொறுப்பு ஆளுநர் போன்றோரை நியமிப்பதில்

> மங்கோல் என்ற பெயர், மங்கோலிய மொழி பேசக்கூடிய மத்திய ஆசிய நாடோடிக் குழுக்கள் அனைத்தையும் குறிக்கும். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அவர்கள் செங்கிஸ் கான் தலைமையில் ஒரு மிகப் பெரிய அரசாட்சியை நிறுவினர். நவீன ரஷ்யாவின் பெரும்பகுதி, சீனா, கொரியா, தென் கிழக்கு ஆசியா, பாரசீகம், இந்தியா, மத்தியக் கிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றை அவரது அரசாட்சி உள்ளடக்கி இருந்தது. அவர்களின் விரைவான குதிரைகளும் சிறந்த குதிரைப் படை உத்திகளும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்கும் மனப்பாங்கும் அரசியலைச் சூழ்ச்சித் திறத்துடன் கையாளும் செங்கிஸ்கானின் திறனும் மங்கோலியரின் வெற்றிக்குக் காரணமாகக் கூறப்படுகின்றன.

11th History Lesson 10 Tamil Medium.indd 156 07-02-2023 16:00:15

ஒத்த கருத்து ஏற்படவில்லை; இதையொட்டிப் பிரபுக்கள் சதி செய்தனர். இக்குழப்பத்திலிருந்து ஒரு புதிய தலைவராகப், படைத் தளபதி மாலிக் ஜலாலுதீன் கில்ஜி மேலெழுந்தார். கைகுபாத்தின் பெயரால் அரசாட்சி செய்த ஜலாலுதீன், அவரைக் கொல்வதற்கு ஒரு அதிகாரியை அனுப்பினார். விரைவிலேயே ஜலாலுதீன் முறைப்படி அரசரானார். ஜலாலுதீன் ஓர் ஆஃப்கானியர்; துருக்கியர் அல்லர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிர்ப்பிருந்தது. உண்மையில் கில்ஜிகள், ஆஃப்கானிஸ்தானில் துருக்கிய ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு குடியமர்ந்தவர்கள்; எனவே அவர்கள் ஆஃப்கானியமயமான துருக்கியர்களாவர். எப்படியிருப்பினும், பிரபுக்கள் பலரையும் விரைவிலேயே ஜலாலுதீன் வசப்படுத்திவிட்டார். இதனால், கில்ஜிகள் மீது தொடக்கத்தில் அவர்களுக்கு இருந்த வெறுப்பு மறைந்து அவர் பல சண்டைகளில் வெற்றிபெற்றார், மேலும் தமது முதிய வயதில்கூட மங்கோலியக் கூட்டங்களை எதிர்த்து அணிவகுத்த அவர், இந்தியாவுக்குள் அவர்கள் நுழைவதை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினார் (1292).

காராவின் பொறுப்பு ஆளுநரான ஜலாலுதீன் கில்ஜியின் ஓர் உடன் பிறந்தார் மகனும் மருமகனுமான அலாவுதீன், இச்சமயத்தில் மால்வா மீது படையெடுத்தார்; இந்தப் படையெடுப்பில் பெருமளவு செல்வம் கிடைத்தது. இந்த வெற்றி, தக்காணத்திலிருந்த யாதவ அரசின் தலைநகர் தேவகிரியைச் சூறையாடுவதற்கான ஓர் உந்துதலை அவருக்கு அளித்தது. டெல்லி திரும்பிய அலாவுதீனின் ஏற்பாட்டில் ஜலாலுதீன் கொல்லப்பட்டார் அலாவுதீன் அரியணை ஏறினார். இவ்வாறாக, ஜலாலுதீனின் ஆறாண்டுக் கால ஆட்சி 1296இல் முடிவுக்கு வந்தது.

அலாவுதீன் கில்ஜி (1296–1316):

அலாவுதீனும் பிரபுக்களும்

அலாவுதீன், எதிரிகளை ஒழித்து தில்லியில் தமது இடத்தைப் பலப்படுத்திக்கொள்வதில் முதலாண்டு முழுவதும் கழித்தார். விரைவிலேயே அவர், பிரபுக்கள் மீது ஒரு உறுதியான பிடியை வைத்துக்கொள்வதில் தமது கவனத்தைச் செலுத்தினார். உயர் அதிகாரிகள் பலரையும் பணிநீக்கம் செய்தார். குறிப்பாக, ஜலாலுதீனுக்கு எதிராகத் தங்களின் விசுவாசத்தை மாற்றிக்கொண்டு, சந்தர்ப்பத்துக்கேற்பத் தம்மிடம் இணைந்த பிரபுக்களிடத்தில் அவர் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்.

அலாவுதீன் கில்ஜி (நவீனச் சித்தரிப்பு)

மங்கோலிய அச்சுறுத்தல்கள்

மங்கோலியப் படையெடுப்புகள் அலாவுதீனுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தன. அவரது இரண்டாவது ஆட்சி ஆண்டில் (1298) மங்கோலியர் தில்லியை உக்கிரமாகத் தாக்கினர். அலாவுதீனின் படையால் அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை. அடுத்த ஆண்டில் மேலும் அதிக படைகளுடன் மங்கோலியர் மீண்டும் தாக்கிய போது, தில்லியின் புறநகர மக்கள் நகரத்துக்குள் தஞ்சமடைந்தனர். இந்தச் சவாலை அலாவுதீன், தானே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக நிகழ்ந்த மோதலில் மங்கோலியர் நிலைகுலைந்தனர். இருப்பினும் 1305இல் தோஆப் சமவெளிப் பகுதியின் வழியே நுழைந்து மீண்டும் தாக்கினர். இம்முறை மங்கோலியரை தோற்கடித்த சுல்தானின் படை, அதிக எண்ணிக்கையில் அவர்களைச் சிறைப்பிடித்துக் கொன்றது. ஆனாலும் மங்கோலியர் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. கடைசி மங்கோலியத் தாக்குதல் 1307–08இல் நிகழ்ந்தது. இது மிகப் பிரமாண்டமாக இருந்தது. ஆனாலும், மங்கோலியருக்குக் கிடைத்த கடுமையான பதிலடி, அதன் பிறகு அவர்கள் உள்ளே நுழைந்து தாக்காதவாறு தடுத்தது.

மங்கோலிய தாக்குதல்

இராணுவத் தாக்குதல்கள்

சுல்தானியம் தனது அரசியல் இலக்குகளை அடைவதற்கு, அதன் வட இந்திய நிலப்பரப்புகளின் வேளாண் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. இது, கொள்ளைப் பொருள் தேடி இடைவிடாமல் அவர்கள் நடத்திய சூறையாடல்களால் தெளிவாகிறது. தேவகிரி (1296, 1307, 1314), குஜராத் (1299–1300), ரான்தம்பூர் (1301), சித்தூர் (1303), மால்வா (1305) ஆகிய இடங்களின் மீது அலாவுதீன் நடத்திய தாக்குதல்கள், அவருடைய ராணுவ, அரசியல் அதிகாரத்தைப் பறைசாற்றவும், செல்வவளத்தைப் பெருக்கவுமே நடத்தப்பட்டன. தீபகற்பத்தில் அவருடைய முதல் இலக்கு மேற்கு தக்காணத்தில் இருந்த தேவகிரியாகும்.

1307ஆம் ஆண்டு, தேவகிரி கோட்டையைக் கைப்பற்றுவதற்காக மாலிக் காஃபூர் தலைமையில் ஒரு பெரும் படையை அலாவுதீன் அனுப்பினார். இதைத் தொடர்ந்து, தெலுங்கானா பகுதியிலிருந்த வாரங்கல்லின் காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா 1309இல் தோற்கடிக்கப்பட்டார். 1310இல் தோல்வியடைந்த ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன்,அவரது செல்வங்கள் அனைத்தையும் தில்லித் துருப்புகளிடம் ஒப்படைத்தார்.

பிறகு மாலிக் காஃபூர் தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டார். கனத்த மழை, வெள்ளத்தால் காஃபூர் முன்னேறுவது தடைபட்டபோதும். சிதம்பரம், திருவரங்கம் ஆகிய கோவில் நகரங்களையும், பாண்டியர் தலைநகரம் மதுரையையும் சூறையாடினார். தமிழ்ப் பிரதேசங்களிலிருந்த இஸ்லாமியர், மாலிக் காஃபூரை எதிர்த்து, பாண்டியர் தரப்பில் நின்று போரிட்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. 1311இல் ஏராளமான செல்வக் குவியலுடன் மாலிக் காஃபூர், தில்லி திரும்பினார்.

அலாவுதீன் உள்நாட்டு சீர்திருத்தங்கள்

பரந்த நிலப்பரப்புகளை வென்றதைத் தொடர்ந்து, அரசை நிலைப்படுத்தும் நோக்கில் விரிவான நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பிரபுக்கள் குவித்துவைத்திருந்த செல்வம், அவர்களுக்கு ஓய்வையும் சதிகள் செய்வதற்கான வசதிவாய்ப்புகளையும் அளிப்பதாக அலாவுதீன் கருதினார். அவர் எடுத்த முதல் நடவடிக்கை அதை அவர்களிடமிருந்து பறித்ததுதான். சுல்தானின் ஒப்புதலோடு மட்டுமே பிரபுக் குடும்பங்களுக்கிடையில்

அலாவுதீன் கில்ஜியின் செப்பு நாணயம்

திருமண உறவுகள் அனுமதிக்கப்பட்டன. பரிசாகவோ, மதம் சார்ந்த அறக்கொடையாகவோ அளிக்கப்பட்டுச் சொத்துரிமை அடிப்படையில் வைத்திருந்த கிராமங்களை மீண்டும் அரச அதிகாரத்தின் கீழ் கொண்டுவர சுல்தான் ஆணையிட்டார். கிராம அலுவலர்கள் அனுபவித்துவந்த மரபுரிமைகளைப் பறித்து, பரம்பரை கிராம அலுவலர்களின் அதிகாரங்களைத் தடை செய்தார். ஊழல் வயப்பட்ட அரச அலுவலர்களைக் கடுமையாகத் தண்டித்தார். மதுவும் போதை மருந்துகளின் பயன்பாடும் தடை செய்யப்பட்டன. சூதாட்டமும் தடை செய்யப்பட்டது; சூதாடிகள் நகரத்துக்கு வெளியே விரட்டப்பட்டனர். இருப்பினும் மது விலக்கு பெருமளவில் மீறப்பட்டதால், கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் கட்டாயம் அலாவுதீனுக்கு ஏற்பட்டது.

உழவர்களிடமிருந்து நில வரிகள் நேரடியாக வசூலிக்கப்பட்டன. இதனால் கிராமத் தலைவர்கள் மரபாக அனுபவித்து வந்த வரிகள் வசூலிக்கும் உரிமை பறிபோனது. அலாவுதீன் விதித்த வரிச் சுமை

நாற்பதின்மர் (சகல்கானி) : தகுதியிலும் வரிசையிலும் சுல்தானை அடுத்துப் பிரபுக்கள் இருந்தனர். அரசை நிர்வகிப்பதில் அவர்கள் ஒரு தீர்மானகரமான பங்கு வகித்தனர். பிரபுக்களே ஆளும் வர்க்கமாக இருந்தபோதிலும் அவர்கள், துருக்கியர், பாரசீகர், அரபியர், எகிப்தியர், இந்திய முஸ்லீம்கள் போன்ற வெவ்வேறு இனக்குழுக்களிலிருந்தும் இனங்களிலிருந்தும் வந்தனர். இல்துமிஷ், நாற்பதின்மர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களிலிருந்து தெரிவு செய்து இராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார். இல்துமிஷ் இறந்த பிறகு, ருக்னுத்தின் ஃபெரோஸை அரசனாக்க வேண்டும் என்ற இல்துமிஷின் விருப்பத்தைப் புறந்தள்ளும் அளவுக்கு அந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று. இரஸியா, தனது நலன்களைக் காத்துக்கொள்வதற்காக, அபிசீனிய அடிமை யாகுத் தலைமையில் துருக்கியரல்லாத பிரபுக்களையும் இந்திய முஸ்லீம் பிரபுக்களையும் கொண்ட ஒரு குழு அமைத்தார். எனினும் இதை, அவ்விருவரையும் கொலை செய்ய வைத்த துருக்கிய பிரபுக்கள் எதிர்த்தனர். இவ்வாறாக, அரசரின் மூத்த மகனே ஆட்சிக்கு வாரிசு என்ற விதி இல்லாத நிலையில் அரசுரிமை கோரிய ஏதோ ஒருவர் தரப்பில் பிரபுக்கள் சேர்ந்துகொண்டனர். இது, சுல்தானைத் தெரிந்தெடுக்க உதவியது அல்லது ஆட்சி நிலைகுலைவதற்குப் பங்களித்தது. பிரபுக்கள் பல குழுக்களாக சுல்தானுக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டனர். எனவே அந்த நாற்பதின்மர் அமைப்பு சுல்தானியத்தின் நிலைத்தன்மைக்குப் பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, அதை பால்பன் ஒழித்தார்; இதன் மூலம் "துருக்கிய பிரபுக்கள்" ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவரது ஆணையை மீறுகிற பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தார். அலாவுதீன் கில்ஜி, ஒற்றர்களைப் பணியமர்த்தி, துருக்கியப் பிரபுக்களின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் தம்மிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு பணித்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

11th History Lesson 10 Tamil Medium.indd 158 07-02-2023 16:00:16

செல்வர்கள் மீது இருந்ததேயன்றி ஏழைகள் மீது அல்ல. தனது பேரரசின் அனைத்துப் பகுதிகளுடனும் தொடர்பில் இருப்பதற்காக அலாவுதீன் அஞ்சல் முறையை ஏற்படுத்தினார்.

சந்தைச் சீர்திருத்தங்கள்

அலாவுதீன் ஒரு பெரிய, திறமை வாய்ந்த படையைப் பராமரிக்க வேண்டி யிருந்தது. படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் ஆவார். படை வீரர்களுக்குக் குறைந்த ஊதியமே அளிக்கப்பட்டது; இதனால், விலைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டியிருந்தது. அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களைச் சேகரிப்பதற்கு விரிவான ஒற்றாடல் வலைப்பின்னலை ஏற்படுத்தினார். சந்தைகளில் நடந்த கொடுக்கல்–வாங்கல், வாங்குவது, விற்பது, பேரங்கள் என அனைத்து விவரங்களையும் ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டார். அத்தியாவசியப் பொருள்களின் விலை குறித்துச் சந்தை கண்காணிப்பாளர்களும் அறிக்கை அளிப்பவர்களும் ஒற்றர்களும் அவருக்கு அன்றாடம் அறிக்கை அளித்தல் வேண்டும். விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஏதேனும் எடைக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டால், விற்பவரின் உடலிலிருந்து அதற்குச் சமமான எடையுள்ள சதை வெட்டி அவரது கண் முன்னேயே வீசப்பட்டது.

அலாவுதீன் வாரிசுகள்

அலாவுதீன், தனது மூத்த மகன் கிசர் கானை தமது வாரிசாக நியமித்தார். இருப்பினும் அந்நேரத்தில் அலாவுதீனின் நம்பிக்கைக்குரியவராக மாலிக் காஃபூர் இருந்தார். எனவே, மாலிக் காஃபூர் தாமே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொண்டார். ஆனால் ஆட்சிக்கு வந்த வெறும் முப்பத்தைந்தே நாள்களில் பிரபுகளால் அவர் கொல்லப்பட்டார். இதன் பிறகு வரிசையாகக் கொலைகள் நிகழ்ந்தன. இதன் காரணமாக மங்கோலியருக்கு எதிரான பல படையெடுப்புகளில் பங்கேற்ற திறமைசாலியான காஸி மாலிக், 1320இல் கியாசுதீன் துக்ளக் ஆக ஆட்சியில் அமர்ந்தார். பதவியிலிருந்த கில்ஜி ஆட்சியாளர் குஸ்ரௌவைக் கொன்றதன் மூலம் கில்ஜி வம்சத்திலிருந்து எவரும் அரசுரிமை கோருவதைத் தடுத்தார். இவ்வாறாக, 1414 வரையிலும் நீடித்த துக்ளக் வம்சத்தின் ஆட்சி தொடங்கியது.

அலாவுதீனின் கல்லறை (புதுதில்லி)

10.4 துக்ளக் வம்சம்

கியாசுதீன் துக்ளக் (1320–1325)

கியாசுதீன் துக்ளக், பிரபுக்கள் வகுப்பினருடன் சமரசக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது ஐந்தாவது ஆட்சி ஆண்டில் (1325) கியாசுதீன் இறந்தார். மூன்று நாள்கள் கழித்து ஜானாகான் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மகன் ஆட்சிக் கட்டில் ஏறியதோடு முகமது–பின்–துக்ளக் எனும் பட்டத்தை சூட்டிக்கொண்டார்

முகமது–பின்–துக்ளக் (1325–1351)

முகமது–பின்–துக்ளக், கற்றவர், நற்பண்பு நிறைந்தவர், திறமை வாய்ந்த அரசர் என்றபோதிலும் இரக்கமற்றவர், கொடூரமானவர், நியாயமற்றவர் என்றும் பெயர் பெற்றிருந்தார். தில்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மங்கோலியப் படையை முகமது–பின் துக்ளக் திறமையாகப் பின்வாங்கச் செய்தார். ஆனால், அலாவுதீன் போல் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மனவுறுதி முகமதுக்கு இல்லை.

தலைநகர் மாற்றம்

தில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது–பின்–துக்ளக் கருதினார். எனவே, தலைநகரை தௌலதாபாத்துக்கு மாற்றும் துணிவான முயற்சியை மேற்கொண்டார். மகாராட்டிரத்திலுள்ள தேவகிரிக்கு முகமது–பின்–துக்ளக் சூட்டிய மறுபெயரே தௌலதாபாத். இந்தியாவின் நடுவில் அமைந்திருக்கிற தேவகிரிக்குப், பாறைப்பாங்கான மலையின் உச்சியில் ஒரு வலுவான கோட்டையைக் கொண்டிருக்கிற சாதகமான அம்சமும் இருந்தது. இராணுவ, அரசியல் சாதகங்களை மனத்தில் கொண்டு முக்கியமான அதிகாரிகளையும் சூஃபி துறவிகள் உள்பட பல முன்னணிப் பிரமுகர்களையும் தேவகிரிக்கு இடம் மாறுமாறு சுல்தான் ஆணையிட்டார். ஆயினும் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவியது. தௌலதாபாதிலிருந்து வட இந்தியாவை ஆள்வது

11th History Lesson 10 Tamil Medium.indd 159 07-02-2023 16:00:17

கடினம் என்று முகமது–பின்–துக்ளக் விரைவிலேயே உணர்ந்தார். எனவே மீண்டும் தலைநகரை தில்லிக்கு மாற்ற உத்தரவிட்டார்.

அடையாள நாணயங்கள்

துக்ளக் நாணயம்

முகமது–பின்–துக்ளக் மேற்கொண்ட அடுத்த முக்கியமான பரிசோதனை அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியதாகும். இந்த நாணய முறை ஏற்கெனவே சீனாவிலும் ஈரானிலும் நடைமுறையிலிருந்தது. இந்தியாவில் நாணயங்களின் மதிப்பு அதிலிருந்த வெள்ளி உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் துக்ளக்கின் முயற்சி காலத்திற்கு முன் எடுத்த முயற்சியாகிவிட்டது. வெண்கல நாணயங்களைப் போலியாக அடிப்பது எளிதாயிருந்தது; அரசாங்கம் அதைத் தடுக்க முடியவில்லை. வெண்கல நாணயங்களைத் திரும்பப்பெற வேண்டிய அளவுக்குப் புதிய நாணயங்கள் மதிப்பிழக்கத் தொடங்கின. இதனால் மீண்டும் வெள்ளி நாணயங்களை அரசாங்கம் வெளியிட்டு அதை ஈடுசெய்ய வேண்டியதாயிற்று.

சுல்தான் மேற்கொண்ட புதுமை நடவடிக்கைகள்

வேளாண்மையை விரிவாக்குகிற முகமது–பின்–துக்ளக்கின் திட்டம் புதுமையானது என்றாலும் அதுவும் துயரகரமாகத் தோற்றது. தோவாப் சமவெளிப் பகுதியில் ஒரு நீண்டகாலக் கடும் பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இம்முயற்சி எடுக்கப்பட்டது. எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கடுமையாக நடத்தப்பட்டனர்; கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். இந்தப் பஞ்சம், தாங்கமுடியாத முறையற்ற நில வரி வசூலுடன் இனங்காணப்பட்டது. வேளாண்மையைக் கவனித்துக்கொள்ள ஒரு தனித் துறையை (திவான்–இ–அமிர் கோஹி) சுல்தான்

11th History Lesson 10 Tamil Medium.indd 160 07-02-2023 16:00:17

ஏற்படுத்தினார். கால்நடைகளையும் விதைகளையும் வாங்க, கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்குக் கடன் தரப்பட்டது என்றாலும் இது பயன்தரவில்லை. பயிர்களைக் கண்காணிக்கப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் திறம்படச் செயல்படவில்லை. பிரபுக்களும் முக்கியமான அலுவலர்களும் வெவ்வேறு பின்னணி கொண்டவர்கள். சுல்தானின் எதேச்சதிகாரப் போக்கு அவருக்கு நிறைய எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது.

தொலைவிலுள்ள பகுதிகளை பயனளிக்கும் வகையில் நிர்வகிக்க இயலாது என்பதை நன்கறிந்த அலாவுதீன் அவற்றை இணைத்துக் கொள்ளவில்லை. அவற்றின் மீது தமது மேலாண்மையை நிறுவுவதையே அவர் விரும்பினார். ஆனால், முகமது–பின்–துக்ளக், தான் வென்ற அனைத்து பகுதிகளையும் இணைத்துக்கொண்டார். எனவே, அவரது இறுதி காலத்தில் அடுத்தடுத்து கிளர்ச்சிகளை சந்தித்தார்; அவரது ஒடுக்குதல் நடவடிக்கைகள் மக்களை மேலும் அவரிடமிருந்து அந்நியப்படுத்தின. வங்கம், மதுரை, வாரங்கல், ஆவாத், குஜராத், சிந்து ஆகிய தொலைதூரப் பகுதிகள் ஒன்றுக்குபின் ஒன்றாக கிளர்த்தெழுந்தன. கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிடுவதிலேயே முகமது தமது கடைசி நாட்களைக் கழித்தார். குஜராத்தில் ஒரு கிளர்ச்சித் தலைவரை விரட்டிச் செல்வதில் ஈடுபட்டிருந்தபோது உடல்நலம் கெட்டு, தனது 26வது ஆட்சியாண்டின் (1351) முடிவில் முகமது–பின்–துக்ளக் இறந்தார்.

ஃபெரோஸ் ஷா துக்ளக் (1351–1388)

ஃபெரோஸின் தந்தை ரஜப், கியாசுதீன் துக்ளகின் தம்பி ஆவார். இருவருமே அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் குரசனிலிருந்து வந்தவர்கள். ரஜப், ஒரு ஜாட் இளவரசியை மணந்திருந்தார். ஃபெரோஸுக்கு ஏழு வயதான போது அவர் இறந்துவிட்டார். கியாசுதீன் ஆட்சிக்கு வந்த போது, ஃபெரோஸை, 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட சிறப்புப் படைக்குத் தளபதியாக்கினார். பின்னர், சுல்தானியத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றின் பொறுப்பு ஃபெரோஸிடம் கொடுக்கப்பட்டது. முகமது–பின்–துக்ளக், தனது வாரிசை அறிவிக்காமலேயே இறந்திருந்தார். முகமதுவின் சகோதரி, தனது மகனுக்கு ஆட்சி உரிமை கோரியதைப் பிரபுக்கள் ஆதரிக்கவில்லை. முகமதுவின் வாழ்நாள் நண்பர் கான்–இ–ஜஹான் பரிந்துரைத்த முகமதுவின் மகன் ஒரு குழந்தையாக இருந்தார். எனவே ஃபெரோஸ் ஆட்சியில் அமர்ந்தார்.

> ஃபெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயரதிகாரியாக இருந்த புகழ் பெற்ற கான்–இ–ஜஹான், இஸ்லாமுக்கு மாறிய ஒரு பிராமணர். ஆதியில், கண்ணு என்று அறியப்பட்ட அவர், (தற்போதைய தெலங்கானாவின்) வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானியப் படையெடுப்பு ஒன்றின் போது சிறைப் பிடிக்கப்பட்டவர்.

பிரபுக்களுடன் சமரசக் கொள்கை

பிரபுக்கள் வகுப்பினரிடமும் மதத் தலைவர்களிடமும் ஃபெரோஸ் துக்ளக், சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அலாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துகள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. அலாவுதீன் ஆதரிக்காத ஒரு நடைமுறையான, அலுவலர்களைப் பரம்பரையாகப் பணியமர்த்துகிற முறையை ஃபெரோஸ் மீண்டும் அறிமுகப்படுத்தினார். அரசாங்க அலுவலர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தினார். வருவாய் நிர்வாகத்தை ஒழுங்கு செய்கிற போது, பல வரிகளைக் குறைத்தார். அதே நேரத்தில் அரசு நிதி வீணாகச் செலவழிக்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்துகொண்டார். அவருக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர் செயல்படுத்திய பல்வேறு சித்திரவதை முறைகளை ஒழித்தார். அடிமைகள் குறித்து ஃபெரோஸுக்கு ஒரு மெய்யான அக்கறை இருந்தது. அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காகத் தனியே ஓர் அரசுத் துறையை ஏற்படுத்தினார். 1,80,000 அடிமைகளின் நல்வாழ்க்கையில் அடிமைகள் நலத்துறை, அக்கறை செலுத்தியது. கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

போர்கள் வேண்டாம் என்ற ஃபெரோஸின் கொள்கை

ஃபெரோஸ் துக்ளக், போர்கள் எதுவும் தொடுக்கவில்லை. இருப்பினும், கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவரது வங்கப் படையெடுப்பு ஒரு விதிவிலக்காகும். அவரது படை வங்கத்திலிருந்து திரும்புகிற வழியில் திடீரென்று ஒரிசாவுக்குள் நுழைந்தது; திறை செலுத்த ஒப்புக்கொள்ளும் வாக்குறுதியை அப்பகுதி அரசரிடமிருந்து பெறுவதற்கு இது உதவியது. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குதல்களே நிகழ்ந்தன; அவ்விரண்டுமே வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. அவரது காலத்திய ஒரே பெரிய இராணுவப் படையெடுப்பு, சிந்துவின் மீது தொடுக்கப்பட்டதாகும் (1362). எதிரிகளை வழியிலேயே நிலைகுலைய வைத்து ஃபெரோஸ் வெற்றிபெற்றார். எனினும் அவரது எதிரிகளும் அப்போது ஏற்பட்ட ஒரு பஞ்சமும் சுல்தானுக்கும் அவரது படைக்கும் ஒரு கடுமையான சோதனையை ஏற்படுத்தின. இருப்பினும் ஃபெரோஸின் இராணுவம் சமாளித்து சிந்துவை அடைந்தது.

11th History Lesson 10 Tamil Medium.indd 161 07-02-2023 16:00:17

சிந்துவின் அரசர், சுல்தானிடம் சரணடையவும் திறை செலுத்தவும் இணங்கினார்.

மதக் கொள்கை

வைதீக இஸ்லாமை ஃபெரோஸ் ஆதரித்தார். மதத் தலைவர்களை மன நிறைவுறச் செய்வதற்காக தமது அரசை இஸ்லாமிய அரசாக அறிவித்தார். மதவிரோதிகள் கொடுமை செய்யப்பட்டனர்; மேலும் இஸ்லாமிய விரோத நடைமுறைகள் என கருதப்பட்டவை தடை செய்யப்பட்டன. இஸ்லாமியர் அல்லாதவருக்கு 'ஜிஸியா' எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இருப்பினும் புதிய இந்துக் கோவில்கள் கட்டுவதை ஃபெரோஸ் தடை செய்யவில்லை. அவரது பண்பாட்டு ஆர்வம், மதம், மருத்துவம், இசை தொடர்பான பல சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்பதற்கு வித்திட்டது. பல்வகைப் பண்புகள் நிறைந்த ஓர் அறிஞரான ஃபெரோஸ், இஸ்லாமியர்–அல்லாதார் உள்படக் கற்றிந்தவர்களை மனத்தடையின்றி ஆதரித்தார். இசையில் விருப்பம் கொண்டிருந்தார். பல கல்வி நிறுவனங்களையும், மசூதிகளையும் அரண்மனைகளையும் கோட்டைகளையும் நிறுவினார்.

ஜிஸியா என்பது இஸ்லாமிய அரசுகளால் அவர்களின் நிலத்தில் வாழும் இஸ்லாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும். இதன் மூலம் அவர்கள் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. இந்தியாவில் முதன்முறையாக இஸ்லாமியர் அல்லாதார் மீது ஜிஸியா விதித்தவர் குத்புதீன் ஐபக். முகலாய அரசர் அக்பர், பதினாறாம் நூற்றாண்டில் ஜிஸியாவை ஒழித்தார் என்றாலும், பதினேழாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.

பொதுப் பணிகள்

பல பாசனத் திட்டங்களை ஃபெரோஸ் மேற்கொண்டார். சட்லெஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் அவரது வலுவான பொதுப் பணி வளர்ச்சிக் கொள்கையைச் சுட்டுகின்றன.

தனது மகன் பதே கானையும் பேரன் கியாசுதீனையும் தில்லி சுல்தானியத்தின் இணை ஆட்சியாளர்களாக ஆக்கிய பிறகு, 1388இல் ஃபெரோஸ் இறந்தார்.

பிரபுக்கள் வகுப்பினருக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பரம்பரை உரிமை, இராணுவத்திலும் செயல்படுத்தப்பட்டது. இது தில்லி சுல்தானியத்தை வலுவிழக்கச் செய்தது. அதிகாரத்தை மீண்டும் பெற்ற பிரபுக்களின் அரசியல் தலையீடுகள் அரசு நிலைகுலையும் அளவுக்கு இட்டுச்சென்றது. ஃபெரோஸ் துக்ளக் இறந்த ஆறு ஆண்டுகளுக்குள் அவரைத் தொடர்ந்து நால்வர் ஆட்சி புரிந்தனர்.

ஃபெரோஸ் துக்ளக்கின் கல்லறை

தைமூரின் படையெடுப்பு

தைமூர்

கடைசி துக்ளக் அரசர் நசுருதீன் முகமது ஷா (1394–1412); இவரது ஆட்சியின் போதுதான் மத்திய ஆசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது. தைமூர், பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் மங்கோலிய அரசர் செங்கிஸ்கானுடன் இரத்த உறவு இருப்பதாகக் கூறத்தக்க துருக்கியர். உள்ளபடியே எந்த எதிர்ப்புமின்றித் தைமூர் தில்லியைச் சூறையாடினார். தைமூர் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்ட சுல்தான் நசுருதீன் தில்லியை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். கொல்லர், கல்தச்சர், தச்சர் போன்ற இந்திய கைவினைஞர்களைச் சிறைபிடித்துச் சென்ற தைமூர், தனது தலைநகர் சாமர்கண்டில் கட்டடங்களை எழுப்புவதில் அவர்களை ஈடுபடுத்தினார். நசுருதீன் 1412 வரையிலும் சமாளித்து ஆட்சி செய்யமுடிந்தது. பிறகு வீழ்ந்து கொண்டிருந்த பேரரசை சையது லோடி வம்சங்கள் 1526 வரையிலும் தில்லியிலிருந்து ஆண்டனர்.

10.5 சையது வம்சம் (1414–1451)

பஞ்சாப் போர் அணிவகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு கிசர் கானைத் தனது துணையாக நியமித்தார் தைமூர்.

11th History Lesson 10 Tamil Medium.indd 162 07-02-2023 16:00:18

கிசர் கான் (1414–1421) தானே சென்று தில்லியைக் கைப்பற்றி சையது வம்ச ஆட்சியை நிறுவினார். கிசர் கான் நிறுவிய சையது வம்சத்தில், 1451 வரையிலும் நான்கு சுல்தான்கள் ஆண்டனர். முற்பட்ட சையது சுல்தான்கள், தைமூரின் மகனுக்குத் திறை செலுத்தி ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆட்சியை, யாஹியா–பின்–அஹ்மத் சிரிந்தி இயற்றிய தாரிக்–இ–முபாரக்–சாஹி குறிப்பிடுகிறது. அவர்களது ஆட்சியின் இறுதியில், பேரரசு தில்லி நகரத்துக்குள் சுருங்கி விட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று, முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தில் வந்த ஆலம் ஷா – Abraham Eraly, The Age of Wrath.

10.6 லோடி வம்சம் (1451–1526)

லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லுல் லோடி ஆவார். இவரது ஆட்சியின்போது வங்கத்தில் ஆட்சி புரிந்த ஷார்கி அரசு கைப்பற்றப்பட்டது. இவரது மகன் சிக்கந்தர் லோடி (1489–1517) 1504இல் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவுக்கு மாற்றினார். கடைசி லோடி ஆட்சியாளரான இப்ராஹிம் லோடி, முகலாய வம்ச ஆட்சியை நிறுவிய முதலாம் பானிபட் போரில் (1526) பாபரிடம் தோற்றார்.

இப்ராஹிம் லோடி (நவீனச் சித்தரிப்பு)

10.7 சுல்தானிய ஆட்சி நிர்வாகம்

அரசும் சமூகமும்

சுல்தானிய அரசு முறையானதோர் இஸ்லாமிய அரசாகக் கருதப்பட்டது. சுல்தான்கள் பலரும், கலிபாவின் தலைமையைத் தாங்கள் ஏற்பதாகக் கூறினாலும் அவர்கள் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளர்களாக விளங்கினர். இராணுவத் தலைவர் என்ற வகையில் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைத் தளபதி எனும் அதிகாரம் அவர்களிடமிருந்தது. நீதி நிர்வாகத் தலைவர் என்ற முறையில் மேல்முறையீட்டு உச்சநீதிமன்றமும் அவர்கள்தான். பூமியில் கடவுளின் பிரதிநிதியாகத் தாம் ஆட்சி செய்வதாக பால்பன் கூறினார். மதத்தின் பரிந்துரைகள் குறித்துத் தாம் கவலைப்படவில்லை என்று கூறிக்கொண்டு அலாவுதீன் கில்ஜி முழு அதிகாரத்தைக் கோரினார். இருப்பினும் அரசு மக்கள் நலனுக்கு இன்றியமையாதவற்றையே செய்தார்.

தில்லி சுல்தான் ஆட்சி, ஓர் அனைத்திந்தியப் பேரரசாகக் கருதப்படவேண்டிய தகுதி கொண்டது. முகமது–பின்–துக்ளக் ஆட்சியின் முடிவுக் காலத்தில் ஒரு சில சிறிய பகுதிகளைத் தவிர, எதிரெதிர் முனைகளிலுள்ள காஷ்மீரத்தையும் கேரளத்தையும் உள்ளடக்கிய இந்தியா முழுவதும் தில்லியின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. அரச வாரிசுரிமை தொடர்பாக நன்கு வரையறுக்கப்பட்ட, ஒப்புக்கொண்ட விதிகள் இல்லை. எனவே, சுல்தானிய காலத்தில் வாரிசுரிமைப் போட்டி எழுவது வழக்கமாக நடந்தது. இக்தா (முக்திகள் அல்லது வாலிகள்) உரிமையாளர்கள் வரிகள் வசூலித்தனர்; அரச சேவைக்குப் படைக் குழுக்களைப் பராமரிப்பதற்கு சுல்தான்களுக்கு அவர்கள் தேவைப்பட்டனர். சுல்தான்கள், குறிப்பிட்ட சில பகுதிகளைத் தங்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் (கலிஸா) வைத்துக்கொண்டனர். இத்தகைய பகுதிகளில் வசூலிக்கும் வருவாயிலிருந்தே சுல்தான்களின் சொந்த படைக்குழுக்களின் (ஹஷ்ம்–இ–கால்ப்) அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது.

பிரதேச விரிவாக்கத்திற்கு ஏற்றாற்போல் நிதி ஆதாரமும் பெருகியது. உற்பத்தி பொருளில் பாதி என்ற அடிப்படையில் நிலவரி கடுமையாக விதிக்கப்பட்டது. பரம்பரையாக வரி வசூலித்து வந்தோர் (சௌத்ரிகள்), கிராமத் தலைவர் ('கோட்'கள்) ஆகியோரின் நிதித் தேவைகள் கடுமையாகக் குறைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டன. தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட வரி வசூல் ஒரு கடுமையான விவசாயக் கிளர்ச்சியை, குறிப்பாக தில்லி அருகே தோ–ஆப்–இல், தூண்டிவிட்டது (1332–34). இதுவும், தொடர்ந்து வந்த பஞ்சமும் தில்லிப் பகுதியிலும் தோ–ஆப்–இலும் உழவர்களுக்குக் கடன் வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு வேளாண் வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வருமாறு முகமது–பின்–துக்ளக்கை நிர்ப்பந்தித்தன.

இராணுவப் படையெடுப்புகள், பதுக்கிய செல்வத்தை வெளிக்கொண்டு வந்தன, காடுகளை அழித்து நிலமாக்கியது, பிரதேசங்களுக்கு இடையில்

11th History Lesson 10 Tamil Medium.indd 163 07-02-2023 16:00:18

நடைபெற்ற விறுவிறுப்பான வணிகம் போன்றவை மக்கள் இடப்பெயர்ச்சியை ஊக்குவித்தது. அறிவாளிகளையும் மதப்பற்றுள்ளவர்களையும் ஒருங்கிணைத்தது. சுல்தானிய ஆட்சியின் படையரண் நகரங்களிலும் அவர்களின் வலுவான பிடியிலிருந்த பகுதிகளிலும் சமூகப் படிநிலை, குடியமர்வு ஆகியவற்றில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் நிர்வாகச் சிக்கல்களை உண்டாக்கின, பதினான்காம் நூற்றாண்டு முழுவதும் சுல்தான் ஆட்சி, அதிகரித்து வந்த அதன் வேறுபட்ட மக்கள்தொகையை, முக்தி (muqthi) எனும் மாகாண ஆளுநர்கள் மூலம் கட்டுப்படுத்த விரும்பியது. ஆனால், அவர்களது வல்லமையும் நிதி ஆதாரமும், இருப்பிடத்தில் இருந்த அரசியல் குழுக்களுடன் அணி சேர்வதற்கான சந்தர்ப்பமும் முகமது–பின்–துக்ளக் போன்ற கடுமையான, எதேச்சாதிகாரப் பேரரசர்களால்கூட அவர்களை ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்ற நிலையை உருவாக்கின.

துருக்கிய–ஆஃப்கானிய அரசியல் வெற்றிகளைத் தொடர்ந்து மத்திய ஆசியாவிலிருந்து பெரிய அளவுக்கு இஸ்லாமிய சமூகங்கள் குடிபெயர்ந்தன. இந்தியா வாய்ப்புகளின் நாடாக கருதப்பட்டது. அனைத்து நிலைகளிலும் சமூகம், சிறப்புரிமைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. மதத்திற்கு அப்பாற்பட்டு பிரபுக்கள் வகுப்பினர் அனைவரும் செழிப்பான சமூக–பொருளாதார வாழ்க்கையை அனுபவித்தனர். சமகாலத்தில் உலகம் முழுவதும் இருந்த ஆட்சியாளர்களுடன் ஒப்பிடுகிறபோது சுல்தான்களும் பிரபுக்களும் சிறப்புரிமைகளுடன் வளமான வாழ்க்கையை அனுபவித்தனர். தொடக்கத்தில் துருக்கியர் மட்டுமே பிரபுக்களாக இருந்தனர். நீண்ட காலத்திற்கு ஆஃப்கானியரும் ஈரானியரும் இந்திய இஸ்லாமியரும் பிரபுக்கள் வகுப்பிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். இஸ்லாத்தில் ஒரு தனிநபரின் தனிப்பட்ட தகுதிநிலை, பிறப்பின் அடிப்படையில்லாமல் திறமைகளையும் செயல்களையும் மட்டுமே சார்ந்திருந்ததால் இஸ்லாமுக்கு மதம் மாறியவர்கள் சமூகத்தில் சமமாகவே பாவிக்கப்பட்டனர்

சமயம்

அல்பெருனி
(நவீனச் சித்தரிப்பு)

பல கடவுளர்களை வழிபட்ட இந்துக்களைப் போலன்றி, இஸ்லாமியர் ஓர் இறை வழிபாட்டைப் பின்பற்றினர். நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களின் ஓர் அடிப்படைத் தொகுப்பையும் அவர்கள் கடைப்பிடித்தனர். பகவத்கீதைகுறிப்பிடுவதைப் போல, இந்துமதத்தில் வெகு நீண்ட காலமாக ஓரிறைப் போக்கு இருந்துவந்தது. இருப்பினும், அல்பெருனி சுட்டியதைப் போல, ஓரிறைக் கொள்கைக்கும் இஸ்லாத்துக்கும் உள்ள நெருக்கம், இக்கோட்பாட்டை ஓரத்திலிருந்து மையத்திற்குக் கொண்டுவர உதவியது. பதிமூன்றாம் நூற்றாண்டில், கர்நாடகத்தில் பசவண்ணர் நிறுவிய லிங்காயத் பிரிவு ஒரு கடவுளையே (பரமசிவன்) நம்பியது. அப்பிரிவு சாதிப் பாரபட்சங்களை நிராகரித்தது, பெண்களுக்கு உயர் நிலையை அளித்தது, கூடவே பூசாரி பிராமணர்களின் ஏகபோகம் என்பதை இல்லாமல் ஆக்கியது. இதற்கு இணையாகத் தமிழ் நாட்டில் சித்தர்கள் விளங்கினர். ஒரு கடவுளைப் பாடிய அவர்கள், சாதியை, வைதீகத்தை மறுபிறப்பைச் சாடினர். தென் இந்திய பக்தி இயக்கத்தையும் ஓரிறைக் கொள்கையையும் வட இந்தியாவுக்குக் கொண்டு சென்றதில் இரண்டு பேர் முக்கியமான பங்கு வகித்தனர். அதிகம் அறியப்படாதவர்கள்: மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த நாமதேவர் ஒருவர்; உருவ வழிபாட்டையும் சாதிப் பாகுபாடுகளையும் இவர் எதிர்த்தார், ஓரிறைக் கொள்கையைக் கடுமையாகப் பின்பற்றினார். இரண்டாமவர் இராமானுஜரைப் பின்பற்றிய இராமானந்தர்.

பொருளாதாரம்

தில்லி சுல்தானியம், சில முக்கியப் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. இதில் ஒன்று நில வரியைப் பணமாக வசூலித்தது. இதன் காரணமாக, உணவு தானியங்களும் இதர கிராமப்புறத்

பதினான்காம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடையிலான காலத்தில் பண்பாட்டுச் செயல்பாடுகளில் இந்து–முஸ்லிம் கூட்டுப்பங்களிப்பு இருந்தது. அறிவியல், இலக்கியம், இசை, கட்டடக்கலை, ஓவியம் மற்றும் நடனம் ஆகியவற்றில் இந்து–முஸ்லிம் கருத்துக்களின் ஒருங்கிணைப்பு காணப்பட்டது.

11th History Lesson 10 Tamil Medium.indd 164 07-02-2023 16:00:19

உற்பத்திப் பொருள்களும் நகரங்களை நோக்கி நகர்ந்தன; இதன் மூலம் நகர வளர்ச்சி ஒரு புதிய கட்டத்தை எட்டியது. பதினான்காம் நூற்றாண்டில், தில்லியும் தௌலதாபாத்தும் (தேவகிரி) உலகின் மாபெரும் நகரங்களாக விளங்கின. முல்தான், காரா, அவத், கௌர், கேம்பே (கம்பயத்), குல்பர்கா போன்ற இதர பெரிய நகரங்களும் இருந்தன.

பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே செப்புக் காசுகளோடு தங்க, வெள்ளிக் காசுகளையும் தில்லி சுல்தான்கள் வெளியிடத் தொடங்கினர்; இது வணிகம் விறுவிறுப்பாக நடந்ததை குறிக்கிறது. மேற்கு எல்லைப்பகுதிகளில் மங்கோலியப் படையெடுப்புகள் வெற்றிபெற்றபோதிலும், தரை வழியிலும் கடல் வழியிலும் நிகழ்ந்த இந்தியாவின் அயல் வணிகம், இக்காலத்தில் கணிசமாக வளர்ச்சி பெற்றது என்கிறார் இர்ஃபான் ஹபீப்.

வணிகமும் நகர்மயமாக்கமும்

சுல்தான்களும் பிரபுக்களும் ஆடம்பரப் பொருள்களை மிகவும் விரும்பியதால் உள்நாட்டு வணிகம் புத்துயிர் பெற்றது. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் அரிதாக வெளியிடப்பட்ட தங்க நாணயங்கள், இந்தியப் பொருளாதாரத்தின் மீட்சியைக் குறிக்கும் விதத்தில் மீண்டும் வெளிவரத் தொடங்கின. ஆயினும் பண்டைக் காலத்தில் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பாத்திரம் வகித்த வணிகக் குழுக்கள் சுல்தான்கள் காலத்தில் இருந்ததற்குச் சான்று இல்லை. சுல்தான்கள் ஆட்சி, பல முக்கியமான நகரங்களையும் பெருநகரங்களையும் உள்ளடக்கிய ஒரு நகர்ப்புறப் பொருளாதாரத்தால் இயங்கியது. தில்லி, லாகூர், முல்தான், காரா, லக்னோ, அன்ஹில்வாரா, கேம்பே, தௌலதாபாத் ஆகிய நகரங்கள் சமண மார்வாரிகள், இந்து முல்தானிகள், முஸ்லிம் போராக்கள், குரசானியர், ஆஃப்கானியர், ஈரானியர் ஆகியோரின் வணிக நடவடிக்கைகளால் செழித்திருந்தன. ஏற்றுமதி–இறக்குமதி வணிகம், தரை வழி, கடல் வழி என இரண்டின் மூலமும் நன்கு செழித்திருந்தது. குஜராத்திகளும் தமிழர்களும் கடல் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தினர். அதே நேரத்தில் இந்து முல்தானிகளும் முஸ்லிம் குரசானியரும் ஆஃப்கானியரும் ஈரானியரும் மத்திய ஆசியாவுடன் தரை வழி வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தினர்.

தொழில்துறை வல்லமை

சீனர் கண்டுபிடித்து அரபியர் கற்றுக்கொண்ட காகிதம் தயாரிக்கும் தொழில்நுட்பம், தில்லி சுல்தானியர் காலத்தில் இந்தியாவில் அறிமுகமானது. சீனர் கண்டுபிடித்த நூற்புச் சக்கரம், பதினான்காம் நூற்றாண்டில் ஈரான் வழியே இந்தியாவுக்கு வந்தது; இது நூற்பவர்களின் உற்பத்தித் திறனை ஆறு மடங்கு அதிகரிக்க உதவியது; நூல் உற்பத்தியை மாபெரும் அளவுக்குப் பெருக்கியது. அதைத் தொடர்ந்து தறிகளில் மிதிப்பொறிகள் அறிமுகம் செய்யப்பட்டன. நூலுற்பத்தி பெருகியது போலவே நெசவு வேலையை விரைவுபடுத்த இது உதவியது. பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் நிறுவப்பட்டன. அதிகமாக செங்கல், கலவை பயன்படுத்தி நிலவறைத் தொழில்நுட்பத்தோடு கூடிய கட்டட நடவடிக்கைகள் ஓர் புதிய உச்சத்தை எட்டின.

கல்வி

இஸ்லாமிய உலகக் கல்வி மரபுகள் அறிமுகமாயின. அடிப்படையாக இருந்தது மக்தப்; இங்கே ஒரு பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்குப் படிக்கவும் எழுதவும் கற்றுத்தந்தார். மேலும் உயர் நிலையில், பல்வேறு பாடங்களிலுள்ள முக்கியமான பிரதிகளைக் கற்க அறிஞர்களிடத்தில் தனி மாணவர்கள் படித்தனர். உயர் கல்வியின் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம் மதரஸா (நேர்ப் பொருள்: கற்றுக்கொள்கிற இடம்). பதினோறாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலும் ஈரானிலும் இது பரவலாக நிறுவப்பட்டது. மேலும் அங்கிருந்து இதர இஸ்லாமிய நாடுகளுக்குப் பரவியது. வழக்கமாக மதரஸாவுக்கு ஒரு கட்டடம் இருந்தது; தனி ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். அங்கே மாணவர்கள் தங்கி இருக்கவும் நூலகத்துக்கும் தொழுகைக்கும் எனச் சில அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஃபெரோஸ் துக்ளக், தில்லியில் ஒரு பெரிய மதரஸாவைக் கட்டினார்; அந்த அற்புதமான கட்டடம் இன்றும் இருக்கிறது; முதன்மையாக அங்கே "குர்ஆன் உரை, இறைதூதரின் வாக்குகள், இஸ்லாமியச் சட்டங்கள் (ஃபிக்)" கற்பிக்கப்பட்டன என்று பரணியின் விவரணையிலிருந்து தெரிகிறது. சிக்கந்தர் லோடி (1489–1517), தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் பல்வேறு நகரங்களில் மக்தப்களிலும் மதரஸாக்களிலும் ஆசிரியர்களை நியமித்தார். அவர்களுக்கு நிலமும் மானியமும் ஒதுக்கினார் என்பது திட்டவட்டமாக தெரிகிறது.

வரலாற்றியல்

அரபு பாரசீகக் கல்வியறிவுடன் மதம்–சாரா அறிவியல்களும் இந்தியாவுக்கு வந்தன. கூடுதலாக வந்த இன்னுமொரு குறிப்பிடத்தக்க விடயம் முறையான வரலாறெழுதுதலாகும். அரபியரின் சிந்துப் படையெடுப்பு குறித்து எழுதப்பட்ட நூல் சச்நாமா (ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு அரபிய மூல நூலின் பதிமூன்றாம் நூற்றாண்டுப் பாரசீக மொழிபெயர்ப்பு). தில்லியில் சுமார் 1260இல் எழுதப்பட்ட மின்ஹஜ் சிராஜின் தபகத்–இ–நசிரியைப் போன்று பிற்கால வரலாறெழுதுதலின் ஒத்திசைவும் தர்க்க ஒழுங்கும் இல்லாமல் இருக்கிற போதிலும்

11th History Lesson 10 Tamil Medium.indd 165 07-02-2023 16:00:19

அது வரலாற்று ஆராய்ச்சியில் முன்னேற்றத்தை காட்டுவதாக உள்ளது.

சூஃபியிசம்

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் சூஃபிகள் மத்தியில் செல்வாக்கு மிக்க இரு பிரிவுகள் தோன்றின: முல்தானை மையமாகக் கொண்ட சுஹ்ரவார்தி, தில்லியிலும் பிற இடங்களிலும் கோலோச்சிய சிஸ்டி ஆகியன. மிகப்பிரபலமான சிஸ்டி துறவி ஷெய்க் நிசாமுதீன், தமது உரையாடல்களில் (1307–1322) இறை நம்பிக்கைக்கு முற்பட்ட கட்டத்திலிருந்த சூஃபியிசம் பற்றிச் செம்மையான ஒரு விளக்கமளித்தார். ஜலாலுதீன் ரூமி (1207–1273), அப்துர் ரஹ்மான் ஜமி (1414–1492) ஆகியோரின் பாரசீகக் கவிதைகள் வழியாகவும், பிறகு இந்தியாவில் அஷ்ரஃப் ஜஹாங்கிர் சிம்நனி (பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில்) மேற்கொண்ட முயற்சிகள் வழியாக (1240இல் இறந்த) இப்ன் அல்–அரபியின் கருத்துகள் செல்வாக்கு பெறத் தொடங்கிய போது சூபிசம் இறை நம்பிக்கை கொண்டதாக மாறியது. குறிப்பாக, ஏற்கப்பட்ட இறை நம்பிக்கை இந்திய இஸ்லாமிய சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய அதே காலத்தில் ஆதி சங்கரின் இறை நம்பிக்கை கோட்பாடு வைதீக சிந்தனைக்குள் கூடுதல் செல்வாக்கை பெற்றுக் கொண்டிருந்தது.

கலீபா

முகமது நபியின் வாரிசாகக் கருதப்படும் கலீபாக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தின் குடிமை, மதம் தொடர்பான விவகாரங்களின் மீது அதிகாரம் செலுத்தி வந்தனர். 1258 இல் பாக்தாத் நகரை மங்கோலியர் கைப்பற்றும்வரை கலீபா அந்நகரை ஆட்சி செய்தார். பின்னர் எகிப்தில் 1516–17ஆம் ஆண்டுகளில் ஆட்டோமானியர் வெற்றி பெறும்வரை ஆட்சி செய்தார். இதன் பின்னர் ஆட்டோமானிய சுல்தான்களே இப்பதவியை வகித்து வந்தனர். ஆட்டோமானியப் பேரரசு நீக்கப்பட்டு (1920) முஸ்தபா கமால் அத்தாதுர்கின் தலைமையில் துருக்கியக் குடியரசு உருவானபோது இக்கலீபா பதவி ஒழிக்கப்பட்டது.

சாதியும் பெண்களும்

"இந்திய நிலப்பிரபுத்துவ"த்திலிருந்து சுவீகரித்துக்கொண்ட சமூக நிறுவனங்கள் பலவற்றை சுல்தான்கள் மாற்றி அமைக்கவில்லை. அடிமை முறை ஏற்கெனவே இந்தியாவில் நிலவியது. இருப்பினும், பதிமூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் அடிமைகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. போர், வரி செலுத்தத் தவறுதல் ஆகிய இரு நேர்வுகளாலும் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். வீட்டுவேலை செய்வதிலும் கூடவே கைத்தொழிலிலும் அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டனர். கிராம சமுதாயமும் சாதி அமைப்பும் மாற்றமின்றி நீடித்தன. பாலினச் சமத்துவமின்மை, தடையின்றி நடைமுறையில் நீடித்தது. மத்திய கால இந்தியப் பெண்களிடம் கல்வியின்மை பரவலாகக் காணப்பட்டது. மேலும் சில இந்து சாதிகளில், உயர்குடிப் பெண்கள் கல்வியறிவு பெறுவது அவமானத்திற்கு உரியதாகவும் கருதப்பட்டது. மேல் தட்டு இஸ்லாமிய சமுதாயத்தில் பெண்கள் பர்தா அணிவதைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது; மேலும், அவர்களின் குடும்ப உறுப்பினர் தவிர வேறெந்த ஆண்களோடும் எவ்விதத் தொடர்புமின்றி ஸெனானாவில் (பெண்கள் வசிப்பிடத்தில்) ஒதுக்கி வைக்கப்பட்டனர். செல்வப் பெண்கள் மூடு பல்லக்கில் பயணம் செய்தனர்.

பர்தா அணிந்திருந்தபோதிலும் சில விஷயங்களில் இஸ்லாமியப் பெண்களுக்கு, பெரும்பாலான இந்துப் பெண்களைக் காட்டிலும் ஒப்பிட்டளவில் சமூகத்தில் உயர்ந்த தகுதியும் அதிக சுதந்திரமும் இருந்தன. அவர்கள் தங்களின் பெற்றோரிடமிருந்து சொத்துரிமை பெறவும், மண விலக்கு பெறவும் உரிமை இருந்தது; இந்தச் உரிமைகள் இந்துப் பெண்களுக்கு இல்லை. ராஜபுத்திரர்களிடையே இருந்ததைப் போல், பல இந்து சமுதாயங்களில் பெண் குழந்தை பிறப்பது, ஒரு கெடுவாய்ப்பாகக் கருதப்பட்டது. இஸ்லாமிய மரபில், விதவைகள் உடன்கட்டை ஏறும் (சதி) வழக்கம் அறியப்பட்டிருக்கவில்லை. பெண்கள் படிக்கவும் எழுதவும் கற்பதை இஸ்லாம் தடைசெய்யவில்லை. அதே நேரத்தில் அது பலதார மணத்திற்கு ஏற்பளித்தது.

கலப்புப் பண்பாட்டின் பரிணாமம்

இந்தியருடனான துருக்கியரின் பரஸ்பரத் தொடர்பு, கட்டடக்கலையிலும் நுண்கலையிலும் இலக்கியத்திலும் அதன் தாக்கத்தைத் ஏற்படுத்தியது.

சுல்தான் ஃபெரோஸ் துக்ளக், 1,80,000 அடிமைகள் வைத்திருந்ததற்காகப் புகழ்பெற்றவர். இதில் 12,000 பேர் கைவினைஞர்களாகப் பணிபுரிந்தனர். அவரது முதன்மை அமைச்சர் கான் ஜஹன் மக்பூல் 2000த்துக்கும் அதிகமான பெண் அடிமைகளை வைத்திருந்தார்.

கட்டடக் கலை

வளைவு, கவிகை, நிலவறைகள், சுண்ணாம்புக் கலவைப் பயன்பாடு, சாராசெனிய அம்சங்கள் ஆகியவை இந்தியாவில் அறிமுகமாயின. பளிங்குக்கல், சிகப்பு, சாம்பல் மஞ்சள் நிற மணற்கல் பயன்பாடு கட்டடங்களுக்குப் பேரழகூட்டின.

11th History Lesson 10 Tamil Medium.indd 166 07-02-2023 16:00:19

சுல்தான்கள், ஏற்கெனவே இருந்த கட்டடங்களைத் தம் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டனர். இதற்கு, தில்லியில் குதுப் மினாருக்குப் பக்கத்தில் அமைந்துள்ள குத்புதீன் ஐபக்கின் குவ்வாத் உல் இஸ்லாம் மசூதியும் அஜ்மீரிலுள்ள அத்தைஹ–தின்–க ஜோப்ராவும் சிறப்பான எடுத்துக்காட்டுகள். ஒரு சமண மடாலயத்தின் மீது கட்டப்பட்ட ஒரு இந்துக் கோவில், குவ்வாத் உல் இஸ்லாம் மசூதியாக மாற்றி அமைக்கப்பட்டது; ஒரு மசூதியாக மாற்றப்படுவதற்கு முன்பு அத்தைஹ–தின்–க–ஜோப்ரா, ஒரு சமண மடாலயமாக இருந்திருக்கிறது.



இல்துமிஷ் கட்டி முடித்த போது 72.5 மீட்டர் உயரமிருந்த குதுப் மினார், ஃபெரோஸ் ஷா துக்ளக் மேற்கொண்ட பழுதுநீக்கும் பணிகளால் 74 மீட்டராக உயர்ந்தது. 379 படிகள் கொண்ட மினார், அதன் உயரத்துக்காகவும், மாடிகளை அடையாளப்படுத்துகிற துருத்தி நிற்கிற உப்பரிகைகளுக்காகவும், படிப்படியான கோபுரச் சரிவுக்காகவும், கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள சரிவான விளிம்பு அலங்கரிப்புகள் ஒரு வளைவு தோற்றத்தைத் தருவதற்காகவும் சிறப்புடையது.

மேற்காசியாவிலிருந்து கைவினைஞர்கள் வந்துசேர்ந்ததும் வளைவுகளும் கவிகைகளும் துல்லியமும் முழுமையும் அடைந்தன. படிப்படியாக உள்ளூர் கைவினைஞர்களும் இதில் பயிற்சி பெற்றனர். முதல் மெய்யான வளைவால் அலங்கரிக்கப்பட்டது பால்பனின் கல்லறை. குவ்வாத் உல் இஸ்லாம் மசூதிக்கு ஒரு நுழைவாயிலாக அலாவுதீன் கில்ஜி கட்டிய அலாய் தர்வாஸா, முதல் உண்மையான கவிகையாகும். கியாசுதீன் துக்ளக்கும், முகமது பின் துக்ளக்கும் தலைநகர் தில்லியின் துக்ளகாபாத்தில் யமுனை நதியைத் தடுத்து செயற்கை

அலாய் தர்வாஸா

ஏரி ஒன்றை உருவாக்கி அதன் நடுவில் அமைந்திருந்த கோட்டை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கியாசுதீன் துக்ளகின் கல்லறை, ஓர் உயர்ந்த மேடையின் மீது கவிகைகளைக் கொண்ட சாய்வுச் சுவர் அமைப்பை அறிமுகப்படுத்தியது. ஃபெரோஸ் துக்ளகின் கட்டடங்கள், குறிப்பாக அவரது உல்லாச விடுதியான ஹவுஸ் காஸ், இந்திய, சாராசெனிய அம்சங்களை ஒன்று விட்டு ஒன்றான அடுக்குகளில் இணைத்திருப்பது, ஓர் ஒருங்கிணைப்பு உணர்வைக் காட்டுகிறது.

சிற்பமும் ஓவியமும்

கட்டடங்களை விலங்கு மற்றும் மனிதச் சித்திரங்கள் கொண்டு அலங்கரிப்பது இஸ்லாமியவிரோதம் என்று மரபான இஸ்லாமிய இறையியல் கருதியது. எனவே இஸ்லாத்துக்கு முந்தைய கட்டடங்களில் காணப்பட்ட நன்கு செதுக்கப்பட்ட உயிரோட்டம் கொண்ட உருவங்களுக்குப் பதிலாக பூ மற்றும் இதர வடிவ வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. தனிச்சிறப்பான கையெழுத்துப் பாணியில் பொறிக்கப்பட்ட குர்ஆன் வாசகங்களைக் கொண்டு கட்டடங்களை அழகுபடுத்தும் கலையான அரபிய சித்திர எழுத்து வேலை, கட்டடங்களுக்கு எழிலூட்டியது.

இசையும் நடனமும்

இசை என்பது கூட்டிணைவுப் போக்குகள் தெளிவாக வெளிப்படுகிற ஒரு துறையாகும். ரபாப், சாரங்கி போன்ற இசைக்கருவிகளை இஸ்லாமியர் கொண்டுவந்தனர். இந்திய இசை, உலகிலுள்ள மற்ற அனைத்து இசைகளை விடவும் மேம்பட்டது என்று அமிர் குஸ்ரு வெளிப்படையாக அறிவித்தார். சூஃபிகளின் மனனப்பயிற்சி, இசையோடு சேர்ந்து காதல் கவிதைகளைப் பாடுதல் போன்றவை இசையைப் பரவலாக்க உதவியது. சூஃபி துறவி பிர் போதன் இக்காலத்தின் ஒரு மிகப்பெரும் இசைஞராகக் கருதப்பட்டார். இசையின் வளர்ச்சிக்கு அரச ஆதரவும் இருந்தது. ஃபெரோஸ் துக்ளக் இசையில் காட்டிய ஆர்வம், 'ராக் தர்பன்' என்ற இந்திய சமஸ்கிருத இசை நூலைப் பாரசீக மொழிக்குப் பெயர்த்ததன் மூலம் ஒத்திசைவுக்கு இட்டுச்சென்றது. நடனமும் அரசவையில் ஒரு உந்துதலைப் பெற்றது. இசைஞர் நுஸ்ரத் காட்டன் நடனக்காரர் மிர் அஃப்ரோஸ், ஜலாலுதீன் கில்ஜி அரசவையில் இருந்ததை ஜியாவுத்தீன் பரனி பட்டியலிடுகிறார்.

இலக்கியம்

பாரசீக உரைநடையிலும் கவிதையிலும் ஒரு முக்கியமான நபராக விளங்குபவர் அமிர் குஸ்ரு. தமது "ஒன்பது வானங்கள்" (Nu Siphr) நூலில் தம்மை ஓர் இந்தியன் என்று அழைத்துக்கொள்வதில் அவர் பெருமிதம் கொள்கிறார். இந்நூலில், அவர் இந்தியாவின் வானிலையை, அதன் மொழிகளை

11th History Lesson 10 Tamil Medium.indd 167 07-02-2023 16:00:20

குறிப்பாக சமஸ்கிருதத்தை; அதன் கலைகளை, அதன் இசையை, அதன் மக்களை, அதன் விலங்குகளையும் கூடப் போற்றுகிறார். இஸ்லாமிய சூஃபி துறவிகள், இலக்கியத்தில் ஆழ்ந்த தாக்கம் செலுத்தினர். சூஃபி துறவி நிசாமுதீன் அவுலியாவின் உரையாடல்களைக் கொண்ட "ஃபவாய் துல் ஃபவாத்" என்ற ஒரு நூலை அமிர் ஹாஸ்ஸன் தொகுத்தார். ஜியவுத்தீன் பரனி, சம்சுதீன் சிராஜ் அஃபிஃப், அப்துல் மாலிக் இஸ்லாமி ஆகியோரின் எழுத்துகளுடன் சேர்ந்து ஒரு வலுவான வரலாறு எழுதுகிற சிந்தனைப் போக்கு உதித்தது. பாரசீக உரைநடையின் ஆசானாக ஜியாவுத்தீன் பரனி தோன்றினார். ஃபுதூ உஸ் சலாதின் என்ற தனது கவிதைத் தொகுப்பில் அப்துல் மாலிக் இஸ்லாமி, கஜனவிய காலம் தொடங்கி முகமது–பின்–துக்ளக் ஆட்சி வரையிலுமான இஸ்லாமியர் ஆட்சியின் வரலாற்றைப் பதிவு செய்தார்.

அமிர் குஸ்ரு
(நவீனச் சித்தரிப்பு)

சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்த்ததன் மூலம் பாரசீக இலக்கியம் வளமடைந்தது. பாரசீகச் சொற்களுக்கு நிகரான ஹிந்தாவி சொற்களைக் கொண்ட அகராதிகள் தொகுக்கப்பட்டன. இவற்றுள் மிகவும் முக்கியமானவை: ஃபக்ருத்தின் கவ்வாஸ் இயற்றிய ஃபரங்–இ–கவாஸ் முகம்மத் ஷதியாபடி இயற்றிய மிஃப்தஜு–உல்–ஃபுவாஜாலா ஆகியனவாகும். கிளி நூல் எனும் துதிநமஹ என்பது ஜியா நக்ஷபி, பாரசீக மொழியில் மொழிபெயர்த்த சமஸ்கிருதக் கதைகளின் தொகுப்பாகும். மகாபாரதமும் ராஜதரங்கிணியும் கூடப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

சமஸ்கிருத இலக்கியத்தின் முன்னேற்றத்தை தில்லி சுல்தானிய ஆட்சி தடுக்கவில்லை. உயர் அறிவுபூர்வ சிந்தனை மொழியாக சமஸ்கிருதம் தொடர்ந்தது. பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த சமஸ்கிருதப் பள்ளிகளும் கல்வி நிலையங்களும் தொடர்ந்து செழித்தன. தில்லியிலுள்ள 1276ஆம் ஆண்டுக்குரிய செவ்வியல் சமஸ்கிருத கல்வெட்டு (பாலம் பவோலி), சுல்தான் பால்பனின் நல்லாட்சியின் விளைவாக விஷ்ணு பகவான், எந்தக் கவலைகளுமின்றிப் பாற்கடலில் துயில்கிறார் என்கிறது. சமஸ்கிருத இலக்கியத்தில் அரபு, பாரசீக மொழிகளின் தாக்கத்தை, மொழிபெயர்ப்புகள் வழி உணரலாம். ஸ்ரீவரா, கதாகௌடுக என்ற தமது நூலில், யூசுஃப் ஜுலைகாவின் கதையை ஒரு சமஸ்கிருதக் காதல் பாடலாகச் சேர்த்திருக்கிறார். காஷ்மீர அரசர்களின் வரலாறான ஜைனவிலாஸ் நூலை இயற்றுவதற்கு பட்டவதார, ஷா நாமா எனும் ஃபிர்தௌசியின் நூலை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொண்டுள்ளார்.

பாடச் சுருக்கம்

- பொ.ஆ. 712இல் சிந்துப் பிரதேசத்தின் மீது முகமது–பின்–காஸிம் படையெடுப்பு
- 11ஆம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகள், கொள்ளையடிப்பதை நோக்கமாகக் கொண்ட கஜினி மாமுதுவின் தாக்குதல்களைக் கண்டது.
- 12ஆம் நூற்றாண்டில் முடிவில் நிகழ்ந்த முகமது கோரியின் படையெடுப்பு, 1206இல் குத்புதீன் ஐபக்கின் கீழ் தில்லி சுல்தானிய ஆட்சி நிறுவப்படுவதற்கு இட்டுச்சென்றது.
- சுல்தான்களின் மேம்பட்ட இராணுவ உத்திகளால், 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜபுத்திர அரசர்கள் தங்களின் மேலாதிக்கத்தை இழந்தனர்.
- தில்லி சுல்தானியம் ஐந்து வம்சாவளிகள் கொண்டது. இப்பாடத்தில் மூன்று முக்கிய சுல்தானிய வம்சங்களான அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம் ஆகியனவற்றுக்கு கூடுதல் கவனம் அளிக்கப்பட்டுள்ளது.
- அலாவுதீன் கில்ஜியின் முற்போக்கான பல இராணுவ, சந்தைச் சீர்திருத்தங்கள்
- முகமது–பின்–துக்ளக்கின் புதுமையான நடவடிக்கைகள் அவரது காலத்திற்கு மிகவும் முக்கியமற்றவை என்பதோடு அவருடைய வீழ்ச்சிக்கு வழிவகுத்தன.
- ஃபெரோஸ் துக்ளக்கின் சீர்திருத்தங்களும் நடவடிக்கைகளும் அவருக்கு மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுத்தந்தன.
- ஒரு பண்பாட்டுக் கலப்பும் இலக்கியம், கலை, இசை கட்டடக் கலைத் துறைகளில் பரஸ்பரத் தாக்கமும் ஏற்பட்டன.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. 8ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின்போது சிந்து அரசர் ______ ஆவார்.
   (அ) ஹஜாஜ் (ஆ) முகமது–பின்–காஸிம்
   (இ) ஜெயசிம்ஹா (ஈ) தாகிர்
2. கஜினி மாமுது, இந்தியாவுக்குள் ______ முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
   (அ) 15 (ஆ) 17 (இ) 18 (ஈ) 19
3. பாலம் பவோலி கல்வெட்டு ______ மொழியில் இருக்கிறது.
   (அ) சமஸ்கிருதம் (ஆ) பாரசீக மொழி
   (இ) அரபி (ஈ) உருது

11th History Lesson 10 Tamil Medium.indd 168 07-02-2023 16:00:21

4. உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோவிலைக் கட்டியவர்கள் ___________
(அ) ராஷ்டிரகூடர் (ஆ) டோமர்
(இ) சண்டேளர் (ஈ) பரமர்

5. மம்லுக் என்ற பெயர் ஒரு ___________ க்கான அரபுத் தகுதிச்சுட்டாகும்.
(அ) அடிமை (ஆ) அரசர்
(இ) இராணி (ஈ) படைவீரர்

6. இபின் பதூதா ஒரு ___________ நாட்டுப் பயணி
(அ) மொராக்கோ (ஆ) பெர்சியா
(இ) துருக்கி (ஈ) சீனா

7. அரசப் பதவியை விடுத்து, தில்லியிலிருந்து விலகி முப்பதாண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான் ___________
அ) முபாரக் ஷா (ஆ) ஆலம் ஷா
(இ) கிசர் கான் (ஈ) துக்ரில் கான்

8. சரியாகப் பொருத்தி, விடையைத் தெரிவு செய்க
(i) ராமச்சந்திரர் – 1. காகதீயர்
(ii) கான்–இ–ஜஹான் – 2. பத்மாவத்
(iii) மாலிக் முஹமத் ஜெய்சி – 3. மான் சிங்
(iv) மன் மந்திர் – 4. தேவகிரி
(அ) 2, 1, 4, 3 (ஆ) 1, 2, 3, 4
(இ) 4, 1, 2, 3 (ஈ) 3, 1, 2, 4

II. குறுகிய விடை தருக

1. கஜினியின் அரசராக மாமுது பதவி ஏற்றல்.
2. கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள்.
3. துருக்கியப் படையெடுப்பின்போது வட இந்தியாவில் ஆட்சியிலிருந்த ராஜபுத்திர வம்சாவளிகள்.
4. நாற்பதின்மர் அமைப்பு
5. இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக்கருவிகள்

III. சுருக்கமான விடை தருக

1. முகமது–பின்–காஸிமின் இராணுவப் படையெடுப்புகளுக்கான உடனடிக் காரணங்களை விவரி.
2. இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவத் தாக்குதல்களுக்கான காரணங்கள் என்னென்ன?
3. இரஸியா சுல்தானா அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது ஏன்?
4. மாலிக் காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
5. முகமது துக்ளக்கின் சோதனை முயற்சிகள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் என்னென்ன?

IV. விரிவான விடை தருக

1. கஜினி மாமூதினுடைய கொள்ளைத் தாக்குதல்கள் மதநோக்கில் என்பதைக் காட்டிலும் அதிக அரசியல் – பொருளாதாரத் தன்மை கொண்டவை – விளக்குக.
2. இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?
3. கஜினி மாமுதுவையும் கோரி முகமதுவையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.
4. அலா–உத்–தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.
5. ஃபெரோஸ் துக்ளகின் ஆட்சியை மதிப்பிடுக
6. தில்லி சுல்தானியத்தின் நிர்வாக அமைப்பு குறித்து விவரணை தருக.

செயல்பாடுகள்

1. டெல்லி சுல்தானியர்களின் படங்களையும் அவர்கள் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்களின் படங்களையும் சேகரித்து அதனை ஒட்டி ஒரு படத்தொகுப்பு தயாரிக்க.
2. பிருத்திவிராஜ், சம்யுக்தா வாழ்க்கையை நாடகமாக நடித்துக் காட்டுக.

மூலநூல்கள்

1. Satish Chandra, *History of Medieval India*, Oriental BlackSwan, 2009.
2. Irfan Habib, *Medieval India I: Essays in the History of India*, Oxford University Press, 1999.
3. Irfan Habib, *Medieval India: The Study of Indian Civilization*, National Book Trust, (2008).
4. Sunil Kumar, *The Emergence of Delhi Sultanate*, Permanent Black, 2010.
5. Abraham Eraly, *The Age of Wrath*, Penguin, 2014.

கலைச்சொற்கள்

குறுகிய நோக்குடைய தேசியவாதம்	chauvinism	aggressive support to one's own group or creed
பதிவியேற்பு சடங்கு	investiture	ceremony to install someone in authority or office
தலைசிறந்த கலை படைப்பு	magnum opus	a great work of literature, history or art
துரோக	treacherous	unreliable, betraying
சூழ்ச்சி	intrigue	plotting to do something illegal or harmful
இணக்கத்தை ஏற்கும்	conciliatory	willing to accept mediation in a dispute
உயிரோட்டமுள்ள	exuberance	liveliness
தண்டிக்கிற	punitive	punishing
கோட்டைக் காவற்படை	garrison	troops stationed in a fortress
மோதல்	collision	clash or conflict
திடீர் படையெடுப்பு	incursion	invasion

11th History Lesson 10 Tamil Medium.indd 169 07-02-2023 16:00:21

அலகு 11

பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்

WR7GD

கற்றல் நோக்கங்கள்

பிற்காலச் சோழர், பாண்டியர் ஆட்சியின்போது நடைபெற்ற கீழ்கண்டவை குறித்து அறிவு பெறுதல் ஆகும்.

I சோழர்

- சோழ அரசர்களின் சாதனைகள்
- சோழப் பேரரசின் கீழ் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி
- நன்கு வளர்ச்சி அடைந்த வேளாண்மைக் கட்டமைப்பு, நீர்ப்பாசன முறை ஆகியவற்றின் தோற்றம்
- இடைக்காலத் தமிழ்ச் சமூகத்தில் கோவில்களின் பங்களிப்பு
- சோழர் காலக் கடல்வழி வணிகம்

II பாண்டியர்

- மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டியரின் எழுச்சி
- மாலிக் காபூரின் படையெடுப்பும் வீழ்ச்சியும்
- அலாவுதீன் கில்ஜியை வரவழைத்த வாரிசுரிமைச் சண்டை
- பாண்டியர் ஆட்சியில் வேளாண்மை , நீர்ப்பாசனம், வணிகம்
- தென் தமிழ்நாட்டில் மதமும் பண்பாடும்

அறிமுகம்

வரலாற்றின் தொடக்க காலத்தில் மூன்று வலிமை வாய்ந்த மரபுவழி அரசர்கள் தமிழகத்தை ஆட்சி செய்தனர். சங்க இலக்கியம் மூவேந்தர்கள் என்று அவர்களைக் குறிப்பிடுகிறது. பல சங்கப் பாடல்கள் சோழ அரசர்களின் மரபு பற்றிக் குறிப்பிடுகின்றன. எனினும், சங்க காலத்திற்குப் பின், பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு வரை சோழர் குறித்த சான்றுகளை அறிய முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட அசைவியக்கங்கள் இப்பகுதியில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. அம்மாற்றங்கள் முடியாட்சி தோன்றி நிலைத்திருக்கக் காரணமாயின. அவற்றுள் ஒன்றுதான் பிற்காலச் சோழப் பேரரசு ஆகும்.

பிற்காலச் சோழரின் தோற்றத்துக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று வேளாண்மை விரிவாக்கம் ஆகும். இந்த விரிவாக்கம் ஆற்று வடிநிலங்களில் ஏற்பட்டது. இதன்மூலம் வேளாண் உற்பத்தி பன்மடங்கு பெருகியது. இந்த வேளாண் பெருவளர்ச்சி அபரிமிதமான உபரி தானிய உற்பத்திக்கு இட்டுச் சென்றது. ஆனால் இந்த உபரி சமமற்ற செல்வப் பகிர்வுக்கும் காரணமாயிற்று. தொடக்க காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல், சமூகம் படிப்படியாகப் பெரிய அளவில் வேறுபாடுகளுக்கு உள்ளானது. இதே காலகட்டத்தில், இந்தியாவின் வட பகுதியிலிருந்து அறிமுகமான மதங்கள், அவை சார்ந்த கோவில்கள் போன்ற நிறுவனங்களும் சிந்தனைப் போக்குகளும் புதிய சக்திகளாக வடிவெடுத்தன. பக்தி இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது கருத்தியலைபரப்புரைசெய்தனர்.இதேபோன்று,வட இந்தியாவில் உருவான அரசியல் சிந்தனைகளும் நிறுவனங்களும் விரைவில் தெற்கில் பரவின. இம்மாற்றங்களின் ஒட்டுமொத்த விளைவாக இங்கு அரசு உருவானது. முடியாட்சிமுறையைக் கொண்ட இவ்வரசுக்குப் பண்டைய சோழ மன்னனின் வழிவந்தவர்களாகத் தங்களை பறைசாற்றிக் கொண்டோர் தலைமையேற்றனர்.

சோழப் பேரரசு செல்வாக்கு இழந்ததும், வைகை ஆற்று வடிநிலமான மதுரை பகுதியில் பாண்டியர் ஆட்சி செய்யத் தொடங்கினர். பதினான்காம் நூற்றாண்டுவாக்கில் பாண்டியரின்

11th History Lesson 11 Tamil Medium.indd 170 07-02-2023 16:08:16

ஆட்சி வலிமை பெற்றது. சோழர் போலவே பாண்டியர்களும் வேளாண்மை, வணிகம் மூலம் பெரும் வருவாய் ஈட்டினர். இக்கால கட்டத்திலும் கடல் கடந்த வாணிபத்தின் விரிவாக்கம் தொடர்ந்தது. பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்த திருநெல்வேலியிலிருந்து மலபார் கடற்கரைப்பகுதிக்குத் தானியங்களும் பருத்தியும் பருத்தித்துணிகளும் காளைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மேற்கு, தென்கிழக்கு ஆசியா பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது. பாண்டிய மன்னர்கள் மத, பண்பாட்டு, அரசியல் கூறுகளைத் தொகுத்து உருவாக்கிய பண்பாட்டு மரபானது குப்த அரசர்கள் செவ்வியல் காலத்தில் உருவாக்கியதாகக் கருதப்படும் ஒற்றைப் பரிமாணப் பண்பாட்டில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

I – சோழர்

சோழப் பரம்பரையின் தோற்றம்

சங்க காலத்துக்குப் பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி, காவிரிப்பகுதியில் சோழர் பல்லவருக்குக் கீழ்நிலை ஆட்சியாளர்களாக இருந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. விஜயாலயன் (பொ.ஆ. 850–871) முத்தரையர்களிடமிருந்து காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதிகளை வென்றார். அவர் தஞ்சாவூர் நகரைக் கட்டமைத்து, 850இல் சோழ அரசை நிறுவினார். எனவே, வரலாற்றாய்வாளர்கள் இச்சோழர்களை பிற்காலச் சோழர் என்றும் பேரரசுச்சோழர் என்றும் குறிப்பிடுகிறார்கள். விஜயாலயனுக்குப் பின் வந்த சோழ அரசர்கள் தாங்கள் சங்க காலத்தின் புகழ்பெற்ற சோழ அரசனான கரிகாலனின் மரபில் வந்தவர்கள் எனச் செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தமது மரபுவழிப்பட்டியலில் 'சோழ' என்ற பெயருடைய அரசரைத் தமது மூதாதையராகக் குறிப்பிட்டுள்ளார்கள். கிள்ளி, கோச்செங்காணன், கரிகாலன் எனும் பெயர்களைக் கொண்ட சோழ அரசர்கள் தங்கள் கொடிவழியைச் சேர்ந்தவர்கள் என இச்செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

விஜயாலயனுக்குப் பின்வந்தோரில் முதலாம் பராந்தகன் (907–955) முதல் மூன்றாம் குலோத்துங்கன் (1163–1216) வரையான அரசர்கள் சோழருக்குப் பெருமையும் புகழும் சேர்த்தனர். பராந்தகச் சோழன், நாட்டின் எல்லையை விரிவுபடுத்தினார். ஆட்சிமுறையின் அடித்தளத்தையும் விரிவாக்கினார். முதலாம் இராஜராஜனும் (985–1014) அவருடைய மகன் முதலாம் இராஜேந்திரனும் (1014–1044) தங்கள் முன்னோடிகள் மூலம் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை ஒருங்கிணைத்து, தீபகற்ப இந்தியாவில் சோழரின் மேலாதிக்கத்தை நிறுவினர்.

கரந்தை செப்பேடு – முதலாம் இராஜேந்திர சோழன்

சான்றுகள்

சோழர் தங்களது பரந்து விரிந்த பேரரசை ஆள்வதற்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியதுடன், பிற்கால வரலாற்றாய்வாளர்களுக்கு உதவும்வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் சான்றுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். செப்பேடுகளிலும் கல்லிலும் 10,000–க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றுக்கான முதல்நிலைச் சான்றுகளாக உள்ளன. இந்த வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோவில்களுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்களாகவே உள்ளன. அவற்றின் உள்ளடக்கத்தில் நிலப் பரிமாற்றங்கள், வரிகள் (விதிக்கப்பட்ட வரிகள், விலக்கப்பட்ட வரிகள்) ஆகியன குறித்த தகவல்களே அதிகம். ஆனால், பிற்காலக் கல்வெட்டுகள் சமூக வேறுபாடுகள் குறித்துக் குறிப்பிடுகின்றன. அவை சமூகத்தில் சாதிகள், துணைச்சாதிகள் இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றின் வாயிலாக அன்றைய சமூகக் கட்டமைப்பு குறித்த தகவல்களை அறிய முடிகிறது. இவற்றுடன் செப்பேடுகளிலும் அரசர் ஆணைகள் காணப்படுகின்றன. அவற்றிலும் குலவரலாறு , போர்கள், வெற்றிகள், நிர்வாகப் பிரிவுகள், உள்ளாட்சி அமைப்பு, நில உரிமைகள், பல்வேறு வரிகள் குறித்த செய்திகள் உள்ளன. சோழர் ஆட்சியில் இலக்கியங்களும் செழித்தன. சைவ, வைணவ நூல்கள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன. இது சோழர் காலத்தில் நடந்த முக்கியமான சமய இலக்கியப் பணியாகும். பெருங்காவிய நூலான



பெரிய கோவில்: கல்வெட்டு

11th History Lesson 11 Tamil Medium.indd 171 07-02-2023 16:08:17

கம்ப இராமாயணம் இலக்கிய வடிவிலான வரலாற்று நூல்களான கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ், மூவருலா ஆகியனவும் இக்காலத்தில் இயற்றப்பட்டன. நன்னூல், நேமிநாதம், வீரசோழியம் ஆகியவை இக்காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் ஆகும். பாண்டிக்கோவை, தக்கயாகப்பரணி ஆகியவை பிற முக்கிய இலக்கியப் படைப்புகளாகும்.

ஆட்சிப்பகுதி

தமிழ்நாட்டில் சோழ அரச மரபின் கீழ் இருந்த ஆட்சிப் பகுதி சோனாடு அல்லது சோழ நாடு எனப்படுகிறது. சோழ மண்டலம் எனப்படும் காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதி சோழ அரசின் மையப்பகுதியாக விளங்கியது. சோழ மண்டலம் என்ற சொல் ஐரோப்பியர் நாவில் 'கோரமண்டல்' எனத் திரிபடைந்தது. தற்போது இச்சொல் தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதி முழுவதையும் குறிக்கின்றது. தமது படைவலிமையைப் பயன்படுத்தி, தற்போதைய புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களையும் தற்போதைய மேற்குத் தமிழ்நாட்டின் கொங்குப் பகுதியையும் இணைத்துச் சோழப் பேரரசை விரிவுப்படுத்தினார்கள். பதினொன்றாம் நூற்றாண்டு வாக்கில் படையெடுப்புகள் மூலம் தொண்டை நாடு, பாண்டிய நாடு, தெற்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த கங்கைவாடி, மலைமண்டலம் என்ற கேரளம் ஆகிய பகுதிகள் வரை விரிவுப்படுத்தினார்கள். கடல் கடந்த விரிவாக்கத்தின்போது, சோழர் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்தியும், அப்பகுதிகளை 'மும்முடிச்சோழ மண்டலம்' என்றும் அழைத்தார்கள்.

11.1.1 பேரரசு உருவாக்கம்

சோழ அரசர்களில் மிகவும் போற்றப்படுபவர் முதலாம் இராஜராஜன். அவரது கடல் கடந்த படையெடுப்புகள் மேற்குக்கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியைப் பெற்றுத்தந்தன. அவர் இந்தியப்பெருங்கடலில் மாலத் தீவுகளைக் கைப்பற்றியதும் இதில் சேரும். இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதற்கு ஒரு தமிழ் தளபதியை இராஜராஜன் நியமித்ததுடன், அங்கு ஒரு கோவில் கட்டவும் ஆணை பிறப்பித்தார். அக்கோவில் 'சிவ–தேவாலே' (சிவாலயம்) எனப்படுகிறது. இவரால் 'மகாதிட்டா' என்ற இடத்தில் கட்டப்பட்ட கோவில் 'இராஜராஜேஸ்வரம்' என அழைக்கப்படுகிறது.

இராஜராஜ சோழன், அவரது ஆசான் கரூர் தேவர்

இராஜராஜன் தன் மகன் முதலாம் இராஜேந்திரனை வாரிசாக அறிவித்தார். இருவரும் இரு ஆண்டு காலம் கூட்டாக ஆட்சி செய்தார்கள். முதலாம் இராஜேந்திரன் தன் தந்தையின் படையெடுப்புகளில் பங்கேற்று, மேலைச்சாளுக்கிரைத் தாக்கி, சோழ அரசின் எல்லையைத் துங்கபத்திரை ஆறு வரை விரிவுப்படுத்தினார். இராஜராஜன் மதுரை மீது தாக்குதல் தொடுத்தபோது பாண்டியர் தங்கள் மணிமுடி மற்றும் அரச நகைகளுடன் தப்பி, இலங்கையில் அடைக்கலம் புகுந்தார்கள். எனவே முதலாம் இராஜேந்திரன் இலங்கையை வென்று, பாண்டியரின் மணிமுடியையும் பிற அரச உடைமைகளையும் கைப்பற்றினார்.

முதலாம் இராஜேந்திரன் அரசராகப் பொறுப்பேற்ற பின் 1023இல் வட இந்தியாவின் மீது மிகத் தீவிரமான ஒரு படையெடுப்பை நிகழ்த்தினார். இதற்காகப் படைகளைக் கோதாவரி ஆறு வரை அவரே வழிநடத்திச்சென்றார். கோதாவரியைக் கடந்த பிறகு படைக்குத் தலைமையைத் தனது தளபதியிடம் ஒப்படைத்தார். அத்தளபதியின் தலைமையில் படையெடுப்பு தொடர்ந்தது. முதலாம் இராஜேந்திரனுக்கு வட இந்தியாவில் கிடைத்த வெற்றிகளின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரம் கட்டப்பட்டது.

தமிழர்களின் கடல்வழிச் சாதனைகள் சோழர் காலத்தில் உச்சத்தை எட்டின. சோழர் சோழ மண்டலக் கடற்கரையோடு, மலபார் கடற்கரையையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். வங்காள விரிகுடாப் பகுதியில் சோழரின் செல்வாக்குச் சில பத்தாண்டு காலத்திற்கு நீடித்தது. இராஜேந்திரனின் கடற்படை ஸ்ரீவிஜயா (தெற்கு சுமத்ரா) மீது தாக்குதல் தொடுத்தது. தென்கிழக்கு ஆசியாவில் 700க்கும் 1300க்கும் இடையே செழித்து வளர்ந்த நாடுகளுள் ஸ்ரீவிஜயாவும் ஒன்றாகும். இது வலிமையான கடற்படை கொண்டதாகவும் வணிகத்தில் சிறந்ததாகவும் இருந்தது. இதே போன்று குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும் (கடாரம்) இராஜேந்திரனால் தோற்கடிக்கப்பட்டது. எனவே, இராஜேந்திரனுக்கு 'கடாரம் கொண்டான்' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மேலைச் சாளுக்கிய அரசின் மீது 1003இல் முதலாம் இராஜராஜன் தொடுத்த போரும் 1009இல் முதலாம் இராஜேந்திரன் தொடுத்த போரும் அவர்களுக்கு வெற்றியைத் தந்தன. சாளுக்கியரின் தலைநகரான கல்யாணியைத்

11th History Lesson 11 Tamil Medium.indd 172 07-02-2023 16:08:18

தகர்ப்பதற்கு இராஜேந்திரன் தன் மகனை அனுப்பினார். அங்கிருந்து கொண்டுவரப்பட்ட துவாரபாலகர் (வாயிற்காப்போன்) சிலையைக் கும்பகோணத்திலுள்ள தாராசுரம் கோவிலில் இன்றும் காணலாம். இராஜேந்திரன் முடிகொண்ட சோழன், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், பண்டித சோழன் போன்ற பட்டங்கள் சூடிக்கொண்டார்.

11.1.2 சோழர் நிர்வாகம்

அரசர்

சோழ அரசின் தன்மை குறித்து வரலாற்றாய்வாளர்களிடையே பலவிதக் கருத்துகள் உள்ளன. சோழ அரசு மரபுவழிப்பட்ட முடியாட்சியை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது. அரசர் பற்பல பெருமைகளுக்கு உரியவராக அக்காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களிலும் கல்வெட்டுக் குறிப்புகளிலும் புகழப்படுகிறார். கடவுளுக்கு இணையாகப் பெருமான் அல்லது பெருமகன், உலகுடைய பெருமாள், உலகுடைய நாயனார் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். பிற்காலத்தில் சக்கரவர்த்தி (பேரரசர்), திருபுவன சக்கரவர்த்தி (மூன்று உலகங்களுக்கானப் பேரரசர்) போன்ற பட்டங்களை சோழ அரசாகள் சூடிக்கொண்டனர். அரசராகப் பட்டம் சூட்டும் விழாவின்போது அவரது பெயருக்குப் பின் 'தேவன்' என்ற சொல்லைப் பின்னொட்டாகச் சேர்க்கும் நடைமுறை இருந்தது. அரசர்கள் தங்களைக் கடவுளின் நண்பன் (தம்பிரான்தோழன்) என்று உரிமை கோரித் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

சோழ அரசர்கள் தங்கள் ஆன்மீக வழிகாட்டி அல்லது இராஜ குருக்களாகப் பிராமணர்களை நியமித்தார்கள். முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இராஜ குருக்கள் மற்றும் சர்வ சிவன்கள் ஆகியோரின் பெயர்களைத் தங்கள் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளனர். அரசர்கள் தங்கள் சமூக மதிப்பையும் அதிகாரத்தையும் உயர்த்திக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவே பிராமணர்களை ஆதரித்தனர். அதன் பொருட்டு பிராமணர்களுக்குப் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் பெரும் நிலப்பரப்புகளைக் இறையிலியாக அளித்தனர்.

மண்டலங்கள்

முன்னரே குறிப்பிடப்பட்டது போல் சோழ அரசின் எல்லை விஜயாலயன் காலத்திலிருந்தே சீராக விரிவடைந்து வந்தது. திறை செலுத்துபவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் விளக்கமளிக்கப்படும் சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்களுடனான போர்களுக்குப் பின்னர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகள் சோழ அரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டன. முதலாம் இராஜராஜன் இப்பகுதிகளையெல்லாம் மண்டலங்களாக ஒன்றிணைத்து, ஒவ்வொரு மண்டலத்திலும் ஓர் ஆளுநரை நியமித்தார். பாண்டிய நாட்டில் சோழ பாண்டியர், இலங்கையில் சோழ இலங்கேஸ்வரர் (இது, பின்னர் மும்முடி சோழ மண்டலம் என்று அழைக்கப்பட்டது), தெற்கு கர்நாடகத்தின் கங்கைவடி பகுதியில் சோழ கங்கர் என ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், இருக்குவேளிர், இளங்கோ வேளிர், மழவர்கள், பானர்கள் போன்ற சிற்றரசர்கள் ஆட்சி செய்த முக்கியத்துவம் குறைந்த பகுதிகளும் பின்னர் சோழ அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்தச் சிற்றரசர்களும் சோழ ஆட்சி நிர்வாகத்தின் பல்வேறு பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர்.

படை

சோழப் பேரரசு நிரந்தரப் படையைக் கொண்டிருந்தது. இப்படை மரபுவழிப்பட்டிருந்த மூன்று பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது: காலாட்படை, குதிரைப்படை (குதிரைச்சேவகர்), யானைப்படை (ஆனையாட்கள்). வில் வீரர்கள் (வில்லாளிகள்), வாள் வீரர்கள் (வாளிலர்), ஈட்டி வீரர்கள் (கொண்டுவார்) ஆகியோரும் படையில் இருந்தனர். படைப் பணிகளில் இரு படிநிலைகள் குறிப்பிடப்படுகின்றன. இது பெருந்தனம் மற்றும் சிறுதனம் என்று அழைக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சீனப் புவியியலாளர், "சோழரிடம் 60 ஆயிரம் போர் யானைகள் இருந்தன. அவற்றின் முதுகில் வீடு போன்ற அமைப்பு இருக்கும். அதில் வீரர்கள் நிறைந்திருப்பார்கள். போரில் இவர்கள் நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளின் மீது அம்பு எய்வார்கள். அருகில் உள்ள பகைவர்களுடன் யானையின் மீதிருந்தபடியே ஈட்டியால் சண்டையிடுவார்' எனக் குறிப்பிடுகிறார். சோழர் கடல்கடந்து சென்று நடத்திய போர்கள் மிகவும் புகழ்பெற்றவை. சோழர்களிடம் 'எண்ணற்ற' கப்பல்கள் இருந்தன என வரலாற்றாய்வாளர்கள் அவர்களின் கடற்படையை வியந்து குறிப்பிடுமளவுக்கு அதன் பலம் இருந்தது. படை வீரர்களுக்குப் 'படைப்பற்று' என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. தலைநகரில் படை முகாம் இட்டிருந்த இடம் 'படைவீடு' எனப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்படும் பகுதிகளில் அமைக்கப்பட்ட புறக்காவல் படைகள் 'நிலைப்படைகள்' எனப்பட்டன. ஒரு படைப்பிரிவின் தலைவர் 'நாயகம்' என்றும் பின்னாட்களில் 'படைமுதலி' என்றும் அழைக்கப்பட்டார். படைத்தளபதி 'சேனாபதி', 'தண்டநாயகம்' என்றறியபட்டார்.

11th History Lesson 11 Tamil Medium.indd 173 07-02-2023 16:08:18

உள்ளாட்சி அமைப்பு

சோழர் காலத்தில் பல்வேறு உள்ளாட்சிக் குழுக்கள் சிறப்பாக இயங்கியுள்ளன. அவை, ஊரார், சபையார், நகரத்தார், நாட்டார் ஆகியவை அத்தகு குழுக்கள் ஆகும். இவை ஒப்பீட்டளவில் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இயங்கின. இந்த அடித்தளத்தின் மீதுதான் சோழப் பேரரசு கட்டமைக்கப்பட்டது.

ஊரார்

வேளாண்மை விரிவாக்கத்தைத் தொடர்ந்து கிராமப்புறங்களில் வேளாண் குடியிருப்புகள் அதிகளவில் தோன்றின. அவை 'ஊர்' என அழைக்கப்பட்டன. அந்த ஊர்களில் நிலஉடைமையாளர்களே ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டார்கள். அவர்கள் ஊரார் என அழைக்கப்பட்டார்கள். கோவில்களின் நிர்வாகத்தையும் குளங்களின் பராமரிப்பையும் இவ்வூரார் மேற்கொண்டனர். குளங்களிலிருந்த நீரை ஊரின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் ஊரார் கவனித்துக்கொண்டார்கள். இவை தவிர, வரி உள்ளிட்ட வருவாய்களைச் வசூலிப்பது, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது, அரசரின் கட்டளையை நிறைவேற்றுவது ஆகிய நிர்வாகப் பொறுப்புகளையும் இவர்கள் மேற்கொண்டனர்.

சபையார்

ஊர் என்பது நில உடைமை சார்ந்தோரின் குடியிருப்பு ஆகும். இது வேளாண்வகை கிராமம் என அழைக்கப்பட்டது, பிரம்மதேயம் என்பது பிராமணர்களின் குடியிருப்பாகும். பிரம்மதேயத்தின் மையமாக விளங்கிய கோவில்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது, பிரம்மதேய குடியிருப்புகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளை 'சபை'கள் மேற்கொண்டன. கோவில் நிலங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பாசனக்குளங்களின் பராமரிப்புக்குச் சபை பொறுப்பாக இருந்தது. ஊரைப் போலவே சபையும் அரசின் பிரதிநிதியாகச் செயல்பட்டது. நிர்வாகம், நிதி, நீதி ஆகிய துறைகள் சார்ந்த பணிகளையும் சபை மேற்கொண்டது.

நகரத்தார்

நகரம் வணிகர்களின் குடியிருப்பாக விளங்கியது.தங்கம்உள்ளிட்டஉலோகப்பொருள்கள், கைவினைப் பொருள்கள், நெசவு, பானை வனைதல் ஆகியவற்றில் திறமை பெற்ற கைவினைஞர்களும் நகரத்தில் வசித்தனர். நகரத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் நகரத்தார் எனப்பட்டனர். இவர்களின் நிதியுதவி கோவில்களுக்குத் தேவைப்பட்டது. கோவில்களின் நிர்வாகத்துடன் நகரத்தார் சீரான தொடர்பில் இருந்தனர். முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் 'மாநகரம்' என்ற குழுவால்

உள்ளாட்சித் தேர்தல்களும் உத்திரமேரூர் கல்வெட்டுகளும் : பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்திரமேரூரில் (உத்தரமல்லூர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ. 919இலும் 921இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன. அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும்சேர்ந்துவெவ்வேறுகுழுக்களைஉருவாக்குவார்கள்.அவைபொதுப்பணிக்குழு,குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன: ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 70 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை). சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

11th History Lesson 11 Tamil Medium.indd 174 07-02-2023 16:08:18

நிர்வகிக்கப்பட்டது. உள்ளூர் பொருள்கள் நகரங்களில் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டன. பட்டு, பீங்கான், கற்பூரம், கிராம்பு, சந்தனக்கட்டை, ஏலக்காய் போன்றவை இவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதாகச் சீன வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன. உள்நாட்டிலும் கடல் கடந்தும் வணிகத்தை ஊக்குவிப்பதற்காகக் குலோத்துங்கன் சுங்கவரிகளை நீக்கினார். எனவே அவர் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்படுகிறார்.

நாட்டார்

பிரம்மதேயங்கள் நீங்கலாகப் பல ஊர்களின் தொகுப்பு நாடு எனப்பட்டது. கால்வாய்கள், குளங்கள் போன்ற பாசன ஆதாரங்களைச் சுற்றி இவை உருவாக்கப்பட்டிருந்தன. வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது. சோழ அரசக்கட்டமைப்பின் அடிப்படை உறுப்புகளாக நாட்டார் செயல்பட்டனர். அரசுக்கான நிர்வாகம், நிதி, நீதித்துறை சார்ந்த பணிகளை இவர்கள் மேற்கொண்டனர். நாட்டார்களுக்கு மரபுவழி நில உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. தாங்கள் சார்ந்த நாட்டிலிருந்து வரி சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. நாட்டார்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் ஆசுடையான் (நில உரிமையாளர்), அரையன் (வழிநடத்துவோர்), கிழவன் (தலைவர்) போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன. நாட்டுக்கணக்கு, நாட்டு வையவன் எனும் பணியாளர்கள் நாட்டாரின் நிர்வாகப் பணிகளை ஆவணப்படுத்தினர்.

11.1.3 பொருளாதாரம்

வேளாண்மை

சோழர் காலகட்டத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வளர்ச்சிகளில் ஒன்று, வேளாண்மை விரிவாக்கம் ஆகும். வளமான ஆற்றுச் சமவெளி பகுதிகளில் மக்கள் குடியேறினர். ஆறுகள் இல்லாத பகுதிகளிலும் குளம், கிணறு, கால்வாய் ஆகிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் உணவு தானிய உற்பத்தி உபரிநிலையை எட்டியது. இதனால் சமூக ஏற்றத்தாழ்வுகள் உருவாகின. வேளாண்மையில் கிடைத்த கூடுதல் வருவாய் நில வரியாகச் சோழ அரசுக்கு வலுவூட்டியது. நில வருவாய் நிர்வாகத்துக்கெனத் தனியாக ஒரு துறை 'புறவுவரித்திணைக்களம்' என்ற பெயரில் இயங்கியது. அதன் தலைவர் 'புறவு வரித்திணைக்கள நாயகம்' எனப்பட்டார்.

நில வருவாயும் நில அளவையும்

வரிகளை மதிப்பிடுவதற்காகச் சோழர் விரிவான முறையில் நில அளவை செய்வதிலும் தீர்வை விதிப்பதிலும் ஈடுபட்டார்கள். முதலாம் இராஜராஜன்(1001), முதலாம் குலோத்துங்கன்(1086), மூன்றாம் குலோத்துங்கன்(1226) ஆகிய சோழ அரசர்கள் நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்தனர். நில அளவீட்டுப் பணியில் ஈடுபட்டவர்கள் 'நாடு வகை செய்கிற' என்று குறிப்பிடப்பட்டார்கள். இவர் நில உடமைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். நில அளவீடு செய்ய குழி, மா, வேலி , பட்டி, பாடகம் முதலிய அலகுகள் வழக்கில் இருந்தன. பெரும்பாலும் வரிகள் பொருள்களாகவே வசூலிக்கப்பட்டன. இறை, காணிகடன், இறை கட்டின காணிகடன், கடமை உள்ளிட்ட பல வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான ஒரு வரி குடிமை வரி ஆகும். நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று வேளாண்மை செய்தவர்கள் அரசுக்கும் நில உடமையாளர்களுக்கும் செலுத்திய வரி குடிமை வரி எனப்படும். இந்நில உடமையாளர்கள் உடையான், அரையன், கிழவர் போன்ற மரியாதைக்குரிய பட்டங்களைப் பெற்றிருந்தனர். நிலத்தின் வளம், நில உடைமையாளரின் சமூக மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து வரி நிர்ணயிக்கப்பட்டது. அரசரும் உள்ளூர்த்தலைவர்களும் 'ஒப்படி' என்ற வரியை வசூலித்தனர்.கோவில்களுக்கும்பிராமணர்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. விளைபொருளாகச் செலுத்தப்பட்ட வரி 'இறை கட்டின நெல்லு' எனப்பட்டது. இவ்வரிகள் அனைத்தும் பெரும்பாலும் காவிரிசமவெளிப் பகுதியில்தான் நடைமுறையில் இருந்தன. ஏனைய தொலைதூரப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஊர் மட்டத்தில் வரிகளை வசூலித்து, அரசுக்குச் செலுத்தும் பொறுப்பு ஊராரின் பொறுப்பு ஆகும். நாடு மட்டத்தில் நாட்டார் இப்பொறுப்பை நிறைவேற்றினர்.

> வரியாக வசூலிக்கப்பட்ட நெல் 'களம்' என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அளவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

பாசனம்

சோழர் நடைமுறையில் இருந்த நீர் பாசன முறையை மேம்படுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டார்கள். சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் ஈட்டும் அரசாக இருந்ததால், நீராதாரங்களை நிர்வகிப்பதில் அதிகக் கவனத்தைச் செலுத்தியது. வடி, வாய்க்கால் என்ற குறுக்கு

11th History Lesson 11 Tamil Medium.indd 175 07-02-2023 16:08:18

மறுக்கான கால்வாய்கள் மழைநீரைச் சேமித்து வைப்பதற்குக் காவிரி வடிநிலப்பகுதியில் பயன்பட்ட மரபுவழி முறை. 'வடி' என்பது நீர் வடக்குத் தெற்காக ஓடுவதாகும். 'வாய்க்கால்' என்றால் கிழக்கு மேற்காக ஓடுவதாகும். வடி என்பது வடிகாலாக நீரை வெளியேற்றுவதையும், வாய்க்கால் என்பது நீரைக் கொண்டுவருவதையும் குறிக்கும். ஒரு விளைநிலத்துக்கு வாய்க்கால் வழியே வரும் நீர் வடிக்குத் திருப்பப்பட்டு, மற்றொரு வாய்க்காலுக்குச் செல்லும். மழைநீர் கால்வாய் என்பது இயற்கையாக உருவாவதாகும். பல பாசனக் கால்வாய்கள் இத்தகைய இயற்கையான கால்வாய்களை மாற்றியமைத்துக் கொண்டு உருவாக்கப்பட்டவைதான். இவ்வாறு சேமிக்கப்படும் மழை நீர் வடி வழியாகவும் வாய்க்கால் வழியாகவும் சுற்றுமுறையில் பயன்படுத்தப்பட்டது. இந்த அமைப்புமுறை அனைத்து நிலங்களுக்கும் நீர் சீராகச் செல்வதற்கு உதவியது. பல கால்வாய்களுக்கு அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக, உத்தமச் சோழ வாய்க்கால், பஞ்சவன் மாதேவி வாய்க்கால், கணவதி வாய்க்கால் போன்றவற்றைக் கூறலாம். ஊர் வாய்க்கால் என்பது நில உரிமையாளர்கள் பலரால் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டது. நாடு வாய்க்கால் என்பதே நாட்டு வாய்க்கால் எனப்பட்டது. சுழற்சி முறையில் நீரை விடுவது வழக்கில் இருந்தது. சோழர் கல்வெட்டுக் குறிப்புகள் சில பெரிய பாசன ஏரிகளைக் குறிப்பிடுகின்றன. சோழ வாரிதி, கலியநேரி, பல்லவர்களால் உருவாக்கப்பட்ட வைரமேகத் தடாகம், பாகூர் பெரிய ஏரி, இராஜேந்திர சோழ பேரேரி போன்றவை சில எடுத்துக்காட்டுகள். ஏரிகளை அனைத்து பருவங்களிலும் பராமரிக்கும் வகையிலும், மராமத்து பணிகளில் ஈடுபடும் வகையிலும் மக்கள் ஊதியமில்லா உழைப்பைத் தரும் வழக்கம் இருந்தது.

> கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பிடத்தக்கது. அங்குள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் 'ஜலமய ஜெயஸ்தம்பம்' என்று குறிப்பிடுகிறார். அதற்கு, 'நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்' என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெரூனி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். "எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது" என்று அல்பெரூனி பதிவு செய்துள்ளார். சான்று: ஜவஹர்லால் நேரு, *Glimpses of World History.*

நீர் மேலாண்மை

பல வகையான நீர் உரிமைகள் நிலவின. ஏரிகளில் இருந்தும், கிணறுகளில் இருந்தும் பெறப்படும் நீரின் பங்கினை இந்த உரிமைகள் முறைப்படுத்தின. கால்வாய்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், பாசன அமைப்பைப் பழுதுபார்த்தல் ஆகிய பொறுப்புகளும் இந்த உரிமைகளில் அடக்கம். நீரைப் பங்கீடு செய்வது 'நிற்கின்றவாறு' (பங்கீடு செய்யப்பட்டபடியான நீரின் அளவு) என்று குறிக்கப்பட்டது. குமிழ் (மதகு), தலைவாய் (தலைமடை) ஆகியன வழியாக நீர் திறந்துவிடப்பட்டது. நீர் உரிமைகளை மீறுவதும் பிரம்மதேயங்களுக்குக் கொடையளிக்கப்பட்ட நீராதாரங்களை ஆக்கிரமிப்பதும் அரசுக்கு எதிரான செயல்கள் என்று அரசு ஆணைகள் எச்சரித்தன. ஊருக்குப் பொதுவான குளம் 'எங்கள் குளம்' என்று அழைக்கப்பட்டது. நன்கொடையாகவும் மானியமாகவும் நடைபெற்ற நிலப்பரிமாற்றங்களில் நீர் மீதான உரிமைகளும் இணைக்கப்பட்டிருந்தன.

கவிநாட்டுக் கண்மாய் சோழக் கல்வெட்டுக் குறிப்புகளுடன்

சோழர் காலத்தில், கிராம சபைகள் பாசனக்குளங்களைப் பழுதுபார்க்க ஏரி ஆயம் என்ற வரி வசூலிக்கப்பட்டது. சில சமயங்களில் அரையன் போன்ற உள்ளூர் தலைவர்கள் புயலில் சேதமடைந்த குளங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தனர். கிராம மக்களும் கோவில்களும் குளத்து நீரைப் பகிர்ந்துகொண்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. குளங்களிலும் ஆறுகளிலும் இருந்து மதகு அல்லது தலைமடை வழியாக நீரைத் திறந்துவிடுவதற்குத் தலைவாயர், தலைவாய்ச்சான்றார், ஏரி அரையர்கள் போன்ற சிறப்புக் குழுக்கள் இருந்துள்ளன. குளத்துக்குப் பொறுப்பான மக்கள் குழு குளத்தார் எனப்பட்டது. பிற்காலத்தில், பாசன ஆதாரங்களை நிர்வகிக்கும் பொறுப்புகள் கோவில்களுக்கு வழங்கப்பட்டன. வெட்டி, அமஞ்சி ஆகிய வடிவங்களில் ஊதியமில்லா உழைப்பு செயல்படுத்தப்பட்டது.

11th History Lesson 11 Tamil Medium.indd 176 07-02-2023 16:08:19

11.1.4 சமூகமும் அதன் கட்டமைப்பும்

சோழர் காலச் சமூகம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்ததால், நிலம் வைத்திருப்பது சமூக மதிப்பையும் அதிகாரப் படிநிலையையும் நிர்ணயிக்கும் ஒரு முக்கியக் காரணியாக விளங்கியது. பிரம்மதேய குடியிருப்புகளில் உயர்தகுதி நிலையில் இருந்த நில உடமையாளர்கள் 'பிரம்மதேய–கிழவர்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு நில வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து அங்கிருந்த உள்ளூர் விவசாயிகள் 'குடிநீக்கம்' (குடிநீக்கி) செய்து இடம்பெயரச் செய்யப்பட்டனர். நிலக்கொடை அளிக்கப்பட்ட கோவில்கள் 'தேவதானம்' என்று அழைக்கப்பட்டன. இவற்றுக்கும் பிரம்மதேயம் போன்றே வரிவிலக்கு வழங்கப்பட்டன. இக்காலகட்டத்தில் கோவில்களே பல்வேறு செயல்பாடுகளின் இணைப்பு மையமாக மாறியிருந்தன.

சமூகப்படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண்வகை கிராமங்களைச் சேர்ந்த நில உடமையாளர்கள் இடம் பெற்றனர். இவர்களின் நிலங்களிலும் பிராமணர்களின் நிலங்களிலும் 'உழுகுடி' என்ற குத்தகைதாரர்கள் வேளாண் வேலைகளை மேற்கொண்டனர். இவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லை. நில உடமையாளர்கள் விளைச்சலில் மேல்வாரத்தையும் (அதிக பங்கு) உழுகுடிகள் கீழ்வாரத்தையும் (குறைவான பங்கு) எடுத்துக்கொண்டனர். சமூகப்படி நிலையில் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும் (பணிசெய் மக்கள்) அடிமைகளும் இருந்தார்கள்.

இந்த வேளாண் சமூகத்துக்கு வெளியே ஆயுதம் தரித்த வீரர்களும் கைவினைஞர்களும் வணிகர்களும் இருந்தனர், மக்கள்தொகையில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கக்கூடிய கால்நடை வளர்ப்போர் குறித்துச் சில ஆவணங்கள் கூறுகின்றன. அக்காலத்தில் பழங்குடிகளும், காட்டில் வசித்த மக்களும் இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் குறித்து நமது அறிதல் குறைவானதாகும்.

மதம்

சிவன், விஷ்ணு முதலான புராணக் கடவுளர்கள் சோழர் காலத்தில் பிரபலம் அடைந்தனர். இக்கடவுள்களுக்காக அதிக எண்ணிக்கையில் புதிய கோவில்கள் கட்டப்பட்டன. இக்கோவில்களுக்குப் பெருமளவில் நிலக் கொடைகள் வழங்கப்பட்டன. பெருமளவிலான மக்கள் இக்கோவில்களின் செல்வாக்கின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

சோழ அரசர்கள் தீவிர சைவர்கள் ஆவர். முதலாம் பராந்தகனும் (907–953) உத்தமச் சோழனும் (970–985) சைவ சமயத்தை வளர்க்க நிதியுதவியும் நிலக்கொடையும் அளித்தார்கள்.

தஞ்சை பிரகதீசுவரர் (பெருவுடையார்) கோவிலில் உள்ள ஒரு சுவரோவியத்தில் முதலாம் இராஜராஜனும் அவருடைய மனைவியரும் சிவனை வணங்குவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவபாத சேகரன் என்பது அவருக்குரிய பட்டங்களுள் ஒன்று. சிவனுடைய பாதங்களை இறுகப் பற்றியவன் என்பது இதற்குப் பொருள்.

லிங்கோத்பவர்
பிரகதீசுவரர் கோவில்

முதன்மைக் கடவுளான சிவன் இரு வடிவங்களில் வணங்கப்பட்டார். இக்காலகட்டத்தில், மிகவும் மேம்பட்ட தத்துவமாக சைவ சித்தாந்தம் உருவானது. இத்தத்துவத்தின் அடிப்படை நூலான சிவஞானபோதம் மெய்கண்டரால் இயற்றப்பட்டது. பிற்காலத்தில் பல சைவ மடங்கள் தோன்றி இத்தத்துவத்தை வளர்த்தன.

லிங்கோத்பவர் என்ற குறியீட்டு வடிவத்திலும் நடராஜர் என்ற மனித வடிவத்திலும் சிவ வழிபாடு நடைபெற்றது. காவிரி சமவெளியில் அமைந்த இக்கோவில் மையங்களைக் கொண்டு ஒரு நில வரைபடம் தயாரித்தால், அது, இடம், காலம் தொடர்பான ஓர் வேளாண்–அரசியல் புவியியல் வரைபடத்தை நமக்கு வழங்கும்.

சிற்பங்கள், ஓவியங்களில் 'திரிபுராந்தகன்' (அசுரர்களின் மூன்று மாய நகரங்களை அழித்தவராகப் புராணங்களில் கூறப்படுபவர்) என்னும் வடிவத்தில் சிவன் மீண்டும், மீண்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது, அவருக்குப் போர் வீரருக்குரிய ஒரு கூறினை வழங்கியது. இதன் மூலம் அரசர் தமது அரசப் பதவிக்குச் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார். நடராஜன் அல்லது ஆடல் வல்லான் (நடனங்களின் அரசர்) ஆகிய வடிவங்களிலும் சிவன் சித்தரிக்கப்பட்டார். இது, நாயன்மார்கள் எழுதிய பாடல்களோடு இணைந்து தமிழ் இசை, நடனம், நாடகம் ஆகியவற்றின் மையக் கருவானது. சிவனைப் போற்றிப் பாடிய இப்பாடல்கள் அவரின் திருவிளையாடல்களை சித்தரிக்கின்றது. இவை சமூகத்தின் பல பிரிவுகளைச் சார்ந்த மக்களை ஈர்ப்பதாக அமைந்தன.

நம்பியாண்டார் நம்பி சைவ சமய நூல்களை மீட்டெடுத்து, திருமுறை என்ற பெயரில் தொகுத்து, வரிசைப்படுத்தினார். கோவில்களில் தினமும் திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார், பதிகம் பாடுவோர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர். பாடல்களைப் பாடுவோர் 'விண்ணப்பம் செய்வோர்'

11th History Lesson 11 Tamil Medium.indd 177 07-02-2023 16:08:20

என்று அழைக்கப்பட்டனர். இசைக்கருவிகளை இசைப்பவர்களும் நியமனம் செய்யப்பட்டனர். கடவுளுக்குத் தொண்டு செய்ய பெண்கள் அர்ப்பணிக்கப்பட்டனர். அவர்களைப் பயிற்றுவிக்க இசை ஆசிரியர்களும் நடன ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

காலப்போக்கில் சைவம் மீதான சோழ அரசர்களின் பக்தி மிகையான ஆர்வமாக மாறியது. இரண்டாம் குலோத்துங்கனிடம் இத்தகைய தன்மையைக் காண முடியும். அரச சமயமான சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையே நடந்துவந்த சமய மோதல்களில் வைணவம் ஒதுக்கப்பட்டது. இவை, வைணவத் திருத்தொண்டரான ஸ்ரீ ராமானுஜர் சோழ நாட்டை விட்டு வெளியேறி கர்நாடகத்தில் உள்ள மேல்கோட்டைக்குச் சென்ற நிகழ்வுக்கும் இட்டுச் சென்றது.

கோவில்கள்

சோழர் தமது காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கோவில்களை எழுப்பி, ஆதரித்தனர். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் அரசர்களால் எழுப்பப்பட்ட கோவில்கள் சோழர்கால கட்டுமானம், ஓவியம், சிற்பம், சிலைவடித்தல் ஆகிய கலைகளின் களஞ்சியமாக விளங்குகின்றன. கோவில்கள் சமூகம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியல் ஆகிய செயல்பாடுகளின் மையங்களாக மாறின. அரசர், அதிகாரிகள், நடன கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பாடகர்கள், அவர்களின் ஆசிரியர்கள், இவர்களுக்குத் தலைமை தாங்கும் மதகுரு என கோவில்களின் அமைப்பு அப்படியே அரச சபையைப் எதிரொளித்தது. இவர்கள் கோவிலின் பிரிக்க முடியாத உறுப்புகளாகவே செயல்பட்டார்கள். தொடக்க கட்ட சோழர்கால கோவில்கள் கட்டுமான நோக்கில் எளிமையாக இருந்தன. அரசர்கள் புதைக்கப்படும் இடங்களில் கோவில்(பள்ளிப்படை) எழுப்பும் வழக்கமும் இருந்தது.

சமூக நிறுவனமாகக் கோவில்

சோழர் காலத்தில் கோவில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின. சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாகக் கோவில்கள் விளங்கின. கோயிரமர், கோவில் கணக்கு (கோவில் கணக்காளர்), தேவ–கன்னி (கடவுளின் பிரதிநிதி), ஸ்ரீ வைஷ்ணவர், கண்டேசர் (கோவில் மேலாளர்), மற்றும் பிறர் முதல்நிலை கோவில் அதிகாரிகள் ஆவர். கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை அவர்கள் ஊக்குவித்தனர். முதலாம் இராஜராஜனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இராஜராஜ நாடகம் என்ற நாடக நிகழ்ச்சி தஞ்சாவூர் கோவிலில்

நடன மங்கையுடன் இசைக் கலைஞர், பிரகதீசுவரர் கோவில்

பெருவுடையார் (பிரகதீசுவரர்) கோவில் : இராஜராஜேஸ்வரம், பிரகதீசுவரர் கோவில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்குத் தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோவில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது. இக்கோவிலின் கருவறைமீது அமைக்கப்பட்ட 190அடி உயரத்தால் ஆன விமானம் 80டன் எடை கொண்ட மூடிய அமைப்பைக் கொண்டுள்ளது. கருவறையின் வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் (பிச்சை ஏற்கும் கோலத்தில் உள்ள சிவன்) ஆகிய உருவங்கள் சிறப்பு அம்சங்கள் ஆகும். புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோவில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோழ ஆட்சியாளர்களின் சமயக் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. நடனப் பெண்கள், இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் இவை நாடு என்ற பகுதிகளைச் சேர்ந்த பல குடியிருப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுக், கோவில்களோடு இணைக்கப்பட்டனர். கோவில்களில் பக்திப்பாடல்களைப் பாடுவதற்காகப் பாடகர்கள் நியமிக்கப்பட்டனர்.

11th History Lesson 11 Tamil Medium.indd 178 07-02-2023 16:08:20

நிகழ்த்தப்பட்டிருக்கிற சித்திரைத் திருவிழா, கார்த்திகை, ஐப்பசி விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன. கோவில்களில் பாடப்பட்ட வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியைவளர்த்ததாகக்கூறப்படுகிறது. குடக்கூத்து, சாக்கைக்கூத்து போன்ற மரபு நடனங்கள் சிற்ப–ஓவிய வடிவங்களாகக் கீழப்பழுவூர், திருவொற்றியூர் கோவில்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் பெரிய கோவிலில் நிருத்யம், கர்ணம் போன்ற நடன நிலைகள் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளன. தமிழ் மரபு இசைக்கருவிகளும் இதேபோல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்ட மக்களும் தங்கள் பக்தியை வெளிப்படுத்தும் விதமாகக் கோவில்களின் அணையா விளக்குகளைப் பராமரிப்பதற்குக் கால்நடைகளைக் கொடையாக வழங்கினர். அவர்களது கொடைகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் அம்மக்களின் பெயர்களும் அரச கோவில்களின் கல்வெட்டுகளில் இடம்பெற்றன. இதன் மூலம் அவர்கள் அரச குடும்பத்தின் நெருக்கத்தினைப் பெற்றனர். எண்ணெய் ஆட்டுபவர்கள் சங்கர பாடியார் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கோவில்களுக்கு எண்ணெய் வழங்கினர், இதன் மூலம் கோவில்களின் அன்றாட நிகழ்வுகளின் அங்கமாயினர். பஞ்ச காலத்தில் இவர்களில் சிலர் தங்களைத் தாமே கோவில் அடிமைகளாக விற்றுக்கொண்டனர்.

கடன் வழங்குதல், அறக்கொடைகளையும், நன்கொடைகளையும் வழங்குதல், பெறுதல் ஆகிய செயல்பாடுகளில் ஈடுபட்டதால் கோவில்கள் வங்கிகள் போன்று இயங்கின. வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோவில் ஒரு கல்வி நிறுவனமாகவும் விளங்கியது. சிற்ப வேலைகளும் உலோக வேலைகளும் ஊக்குவிக்கப்பட்டன. கோவிலின் வரவு செலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கையாளர் 'கோவில் கணக்கு' என அழைக்கப்பட்டார்.

கங்கைகொண்ட சோழபுரம்

முதலாம் இராஜேந்திர சோழனின் வட இந்திய வெற்றியின் நினைவாகத் தஞ்சாவூர் பெரிய கோவில் போன்றே கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கோவிலைக் கட்டினார். இராஜேந்திரன் சோழ கங்கம் என்ற புதிய பாசன ஏரியையும் தலைநகர் அருகே உருவாக்கினார், இது ஜல தம்பம் (நீர்த்தூண்) என அழைக்கப்படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் சோழ அரசர்கள் முடிசூட்டும் இடமாகவும் ஆனது. கங்கை கொண்ட சோழபுரம் கோவில் கருவறையின் வெளிப்புறச் சுவர் மாடங்களில் இடம்பெற்றுள்ள அர்த்தநாரீசுவரர், துர்கா, விஷ்ணு, சூரியன், சண்டேச அனுக்கிரக மூர்த்தி ஆகிய கடவுளரின் சிலைகள் சிறப்புமிக்கவை.

அனுக்கிரக மூர்த்தி
கங்கைகொண்டசோழபுரம்

தாராசுரம் கோவில்

இரண்டாம் இராஜராஜனால் (1146–1172) கட்டப்பட்ட தாராசுரம் கோவில் சோழர் காலக் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும். இக்கோவிலின் கருவறைச்சுவரின் தளத்தில் 'பெரிய புராண' நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. நாயன்மார்களில் முதல் நால்வரில் ஒருவரான சுந்தரரின் கதையைச் சித்தரிக்கும் சுவரோவியமும் இங்குள்ளது. அரசு நிர்வாகத்தில் சேக்கிழார் செல்வாக்குப் பெற்றிருந்ததை இந்த ஓவியம் ஏற்பளிப்பு செய்வதாக உள்ளது.

வணிகம்

வேளாண் உற்பத்தி அதிகரிப்புடன் கைவினைத் தொழில்கள் நடவடிக்கைகளாலும் உற்பத்திப்பொருள் அதிகரித்து, பண்டமாற்று முறை வணிக வளர்ச்சிக்கு இட்டுச்சென்றது. இந்த வணிக நடவடிக்கைகளில், தென் இந்தியாவின் தொடக்ககாலத்தில் அறிந்திராத விலை, லாபம், சந்தை போன்ற கருத்தாக்கங்கள் இப்போது ஈடுபடுத்தப்பட்டன. அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் ஆகிய இரு வணிகக்குழுக்கள் பற்றி அறியமுடிகின்றது. அஞ்சுவண்ணத்தார் குழு யூதர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் உள்ளிட்ட மேற்கு ஆசியர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் கடல்வழி வணிகர்கள் ஆவர். மேற்குக்கடற்கரையின் துறைமுக நகரங்களில் இவர்கள் குடியேறியிருந்தார்கள். உள்நாட்டு வணிகம் செய்தவர்கள் மணிக்கிராமத்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கொடும்பாளூர், உறையூர், கோவில்பட்டி, பிரான்மலை போன்ற நாட்டின் உட்புற நகரங்களில் வசித்தனர். காலப்போக்கில் இந்த இரு வணிகக்குழுவினரும் ஒன்றாகி, ஐநூற்றுவர், திசை ஆயிரத்து–ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கினர். இவர்களது தலைமை வணிகக் குழு கர்நாடகத்திலுள்ள ஐஹோல் என்ற இடத்தில் இயங்கியது. ஐநூற்றுவர் வணிகக் குழு மேற்கொண்ட கடல் கடந்த வணிகம் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நடைபெற்றது. முனைச்சந்தை (புதுக்கோட்டை), மயிலாப்பூர், திருவொற்றியூர்

11th History Lesson 11 Tamil Medium.indd 179 07-02-2023 16:08:21



(சென்னை), நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், கிருஷ்ணப்பட்டினம் (தெற்கு நெல்லூர்) ஆகிய இடங்கள் கடல் வணிகக்குழுக்களின் மையங்களாக மாறின. உள்நாட்டு வணிகம் விலங்குகள், படகுகள் வழியாக மேற்கொள்ளப்பட்டன. சோழநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் சந்தனம், அகில், சுவையூட்டும் பொருள்கள், விலையுயர்ந்த ரத்தினங்கள்,மிளகு,எண்ணெய்,நெல்,தானியங்கள், உப்பு ஆகியவை ஆகும். கற்பூரம், செம்பு, தகரம், பாதரசம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பாசன நடவடிக்கைகளில் வணிகர்களும் ஆர்வம் கொண்டனர். வளஞ்சியர் குழு வெட்டிய ஐநூற்றுவப்பேரேரி என்ற பாசன ஏரி புதுக்கோட்டையில் உள்ளது.

11.1.5 கல்விப் புரவலர்களாக சோழர்

சோழஅரசர்கள்சமஸ்கிருதகல்வியைப்போற்றி வளர்த்தனர். முதலாம் ராஜேந்திரர் வேத கல்லூரி ஒன்றை எண்ணாயிரம் (தென்னாற்காடு மாவட்டம்) என்ற இடத்தில் தோற்றுவித்தார். இக்கல்லூரியில் 14 ஆசிரியர்களின் கீழ் 340 மாணவர்கள் சமஸ்கிருத இலக்கணம், சமயம் மற்றும் தத்துவம் பயின்றனர். அவருக்குப் பின் அரசாண்ட சோழ மன்னர்களால் புதுச்சேரிக்கு அருகில் உள்ள திருபுவனியில் 1048ஆம் ஆண்டு ஒரு கல்லூரியும், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடலில் 1067 ஆம் ஆண்டு மற்றொரு கல்லூரியும் துவக்கப்பட்டன.

சோழ ஆட்சியின் முடிவு

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சோழ அரச மரபு நிலையாக இருந்தது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்குள்ள குடித்தலைமை ஆட்சியாளர்கள் எழுச்சி அடையத் தொடங்கினர். இது மைய அரசின் வலிமையைக் குறைத்தது. அடிக்கடி நிகழ்ந்த பாண்டியரின் தொடர் படையெடுப்புகளால் ஒரு காலத்தில் வலிமை பெற்று விளங்கிய சோழ அரசு, தன்னை விட வலிமையில் குறைந்த ஹொய்சால அரசைச் சார்ந்திருக்குமளவிற்கு வலுவிழந்தது. 1264இல் பாண்டிய மன்னன் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் சோழர் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றினார். அதற்கு முன்னரே காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழர் கைப்பற்றியிருந்தனர். எஞ்சிய பகுதிகள் பாண்டியரின் ஆளுகைக்குச் சென்றன. 1279இல் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன்

11th History Lesson 11 Tamil Medium.indd 180 07-02-2023 16:08:21

சம்புவராயர்கள் : சம்புவராயர்கள் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வட ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். பல சமயங்களில் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர். பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாண்டியர் ஆட்சியின் இறுதி வரை சம்புவராயர்கள் பாலாறு பகுதியில் அரசியல் செல்வாக்குடன் விளங்கினர். அவர்களின் அரசு இராஜ கம்பீர ராஜ்யம் எனப்பட்டது. அதன் தலைநகரம் படைவீட்டில் அமைந்திருந்தது. வீர சோழ சம்புவராயனின் கல்வெட்டுகள் (1314–1315) பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சம்புவராயர்கள் உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, சகலலோக சக்ரவர்த்தி(ன்) வென்று மண்கொண்ட சம்புவராயன் (1322–1323), சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் (1337–1338) ஆகியோரைக் கூறலாம். சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, பின்னாட்களில் விஜயநகரத்தின் குமார கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முறியடிப்புக்குப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை படையெடுத்துச் சென்றார். குமார கம்பணர் மதுரை சுல்தானைத் தோற்கடித்து முழுவெற்றி பெற்றார்.

கடைசி சோழ அரசரான மூன்றாம் இராஜேந்திர சோழனைத் தோற்கடித்தார். இத்துடன் சோழரின் ஆட்சி முடிவுக்கு வந்து, பாண்டியரின் ஆட்சி தொடங்கியது.

II – பாண்டியர்

தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் நவீன காலத்துக்கு முன்புவரை இந்தியாவின் தென்பகுதியைத் ஆட்சி செய்து வந்த மூவேந்தர் மரபினரில் பாண்டியரும் அடங்குவர். அசோகர் தன் கல்வெட்டுகளில் சோழர், சேரர், பாண்டியர் சத்தியபுத்திரர் ஆகியோரைத் தென் இந்தியாவின் ஆட்சியாளர்களாகக் குறிப்பிடுகிறார். முத்துக்குளித்தல் தொழிலோடு வரலாற்றுப்பூர்வமாக இணைந்த கொற்கை பாண்டியரின் தொடக்க காலத் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் இருந்தது. பிற்காலத்தில் அவர்கள் மதுரைக்கு இடம்பெயர்ந்தனர்.

மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாண்டியர்களின் தொடக்க காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் மடிரை என மதுரை குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் செவ்விலக்கியங்கள் மதுரையைக் கூடல் எனச் சுட்டுகின்றன. இச்சொல்லுக்குக் கூடுகை என்று பொருளாகும். பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலிமான் கோம்பை என்ற கிராமத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில்கூடல்என்றசொல்குறிப்பிடப்பெற்றுள்ளது. பத்துப்பாட்டு நூல்களிலான பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் கூடல் பாண்டியர் தலைநகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களிலும் இச்சொல் காணப்படுகிறது. வரலாற்றுப் பூர்வமாகவே மதுரை, கூடல் ஆகிய சொல்லாடல்கள் ஒன்றுக்கொன்று மாற்றுச்சொல்லாகவே கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

சான்றுகள்

சங்ககாலப் பாண்டியர் வரலாறு ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால ஈமப் பொருள்கள் கண்டுபிடிப்பு, தமிழ் பிராமி கல்வெட்டுகள், சங்க இலக்கியப் பாடல்கள் போன்ற பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் சங்க காலப் பாண்டியர் வரலாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் தென் தமிழ்நாட்டில் பாண்டியர் தம் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தது குறித்த தகவல்களைச் சில செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நெடுஞ்சடையானின் வேள்விக்குடி மானியம் முக்கியமானதாகும். அரசாணைகள், பாண்டிய அரசர்களின் மரபுவழி வரிசை, வெற்றிகள், அரசர்கள் எழுப்பிய கோவில்கள், உருவாக்கிய பிரம்மதேயங்கள் ஆகியவற்றுக்கு அரசர்கள் வழங்கிய மானியங்கள், அறக்கொடைகள் ஆகியன குறித்து செப்பேடுகள் தெரிவிக்கின்றன. குடைவரைக் கோவில்களை உருவாக்கியவர்கள், பாசன ஏரிகள், கால்வாய்கள் போன்றவற்றை உருவாக்கியவர்கள் குறித்த செய்திகளைக் கல்வெட்டுகள் அளிக்கின்றன. மார்க்கோ போலோ, வாசஃப், இபின் பதூதா போன்ற பயணிகள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகள் அக்காலகட்ட அரசியல், சமூக, பண்பாட்டு வளர்ச்சிகள் குறித்து அறிய உதவுகின்றன. மதுரைத் தல வரலாறு, பாண்டிக்கோவை, மதுரை திருப்பணி மாலை ஆகிய இலக்கியங்கள் மதுரையை ஆண்ட பிற்காலப் பாண்டியர் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

11th History Lesson 11 Tamil Medium.indd 181 07-02-2023 16:08:21

பொ.ஆ. ஏழாம்/எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த 'இறையனார் அகப்பொருளில் 'சங்கம்' என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது. ஆனால், பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்ற சொல் இப்பொருளில் குறிப்பிடவில்லை. திருவிளையாடல் புராணம்,பெரியபுராணம்ஆகியபிந்தையஇடைக்கால நூல்களில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

மணிமேகலையை இயற்றிய சீத்தலைச்சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.

ஆட்சிப்பகுதி

பாண்டியரின் ஆட்சிப்பகுதி பாண்டி மண்டலம், தென் மண்டலம், பாண்டி நாடு என்று அழைக்கப்படுகிறது. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளால் வளம் பெறும் சில பகுதிகள் நீங்கலாகப் பெரும்பாலும் பாறைகளும் குன்றுகளும் மலைத்தொடர்களும் நிறைந்த பகுதியே பாண்டிய நாடு ஆகும். புதுக்கோட்டை வழியே ஓடும் வெள்ளாறு பாண்டிய நாட்டின் வட எல்லையாகும். இந்தியப் பெருங்கடல் தென் எல்லையாகும். மேற்குத்தொடர்ச்சி மலைகள் மேற்கு எல்லையாகவும் வங்காள விரிகுடா கிழக்கு எல்லையாகவும் அமைந்திருந்தன.

11.2.1 பாண்டியரின் மறுமலர்ச்சி (600–920)

களப்பிரரின் மறைவுக்குப் பின் பாண்டியரின் மறு எழுச்சி ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒருகாலத்தில் மலைவாழ் பழங்குடிகளாக இருந்த களப்பிரர்கள் விரைவிலேயே சமவெளியில் குடியேறினர். அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரித்தனர். களப்பிரரிடமிருந்து பாண்டியர் பகுதியைக் கடுங்கோன் மீட்டதாகச் செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது. அவரைத் தொடர்ந்து இரு அரசர்கள் அடுத்தடுத்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் சேந்தன் என்பவர் போர் முறையில் சிறந்தவராக இருந்துள்ளார். சேரரை வென்றதால் அவர் வானவன் என்ற பட்டம் பெற்றார் எனச் செப்பேடுகள் கூறுகின்றன. அடுத்து வந்த தொடக்க காலப் பாண்டிய அரசர்களில் சிறந்தவரான அரிகேசரி மாறவர்மன் (624–674) 642இல் பதவி ஏற்றார் என்பதை வைகை ஆற்றுப்பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன் ஆகியோருக்குச் சம காலத்தவர் ஆவார். அவர் தமது காலத்தைச் சேர்ந்த சேர, சோழ, பல்லவ சிங்கள அரசர்களை வெற்றி கொண்டதாக அக்கல்வெட்டுக் குறிப்புகளும் செப்பேடுகளும் கூறுகின்றன. சமணர்களைக் கழுவேற்றிய கூன் பாண்டியனே அரிகேசரி என்று அடையாளம் காணப்படுகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

அரிகேசரியைத் தொடர்ந்து கோச்சடையான் இரணதீரனும் (700–730), அவருக்குப் பின் மாறவர்மன் இராஜசிம்மனும் (730–765) ஆட்சி செய்தனர். அவர்களுக்குப் பின் ஜதில பராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன்) (765–815) ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவரே புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்தவர் ஆவார். பாண்டிய அரச மரபில் மிகச் சிறந்தவரான இவர் பல்லவர்களையும் சேரர்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டார். பாண்டிய அரசைத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர்



சமணர்கள் கழுவேற்றப்பட்டார்கள் என்ற செய்தியில் கழுவேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை விவாதத்திற்குரியதாக இருந்தாலும், கழுவேற்றம் நடந்தது என்ற செய்தி மறுக்க முடியாததாக உள்ளது.

11th History Lesson 11 Tamil Medium.indd 182 07-02-2023 16:08:22

ஆகிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தினார். பல விஷ்ணு கோவில்களைக் கட்டிய பெருமையும் இவருக்கு உண்டு. இவருக்கு அடுத்த அரசரான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (815–862) இலங்கைக்குப் படையெடுத்து, அங்கு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். எனினும் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனிடம் (846–869) தோற்றார். அடுத்ததாக ஆட்சிக்கு வந்த இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் (885–903) தோற்கடிக்கப்பட்டார். இவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தக வீரநாராயணன், இரண்டாம் இராஜசிம்மன் ஆகியோரால் முதலாம் பராந்தகனின் தலைமையில் தோன்றிய சோழரின் எழுச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. முதலாம் பராந்தகனிடம் தோற்ற இரண்டாம் இராஜசிம்மன் 920இல் நாட்டை விட்டே ஓடினார்.

மீண்டும் பாண்டிய எழுச்சி (1190–1310)

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிக் கால்பகுதியில் ஆதி இராஜேந்திரனின் மறைவுக்குப் பிறகு, சோழ அரசில் வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் பாண்டியப் பகுதியை நிர்வகித்த ஆளுநரும் வலுவிழந்தார். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பாண்டியக் குடித்தலைமை மன்னர்கள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டு தமது சுதந்தர ஆட்சியை நிறுவ முயன்றனர். இரண்டாம் இராஜராஜசோழனுடன் போரிட்ட ஸ்ரீவல்லப பாண்டியன் தன் மகனைப் போரில் பறிகொடுத்தார். ஐந்து பாண்டியக் குறுநில மன்னர்கள் இச்சூழலைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் குலோத்துங்கனுடன் (1070–1120) போரிட்டார்கள். போரில் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. 1190இல் சடையவர்மன் ஸ்ரீவல்லபன் முதலாம் குலோத்துங்கனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு, பாண்டிய நாட்டில் ஆட்சியைத் துவக்கினார். சடையவர்மன் ஸ்ரீவல்லபன் மதுரையில் நடைபெற்ற பட்டம் சூட்டு விழாவில் அரசராக முடிசூடி, செங்கோல் ஏந்தி, அரியணையில் அமர்ந்தார். இந்த நிகழ்வின் நினைவாகச், சுந்தரசோழபுரம் என்ற வேளாண் குடியிருப்புப் பகுதியைச் சுந்தரசோழசதுர்வேதிமங்கலம் என்று பெயர் மாற்றி இறையிலியாகப் பிராமணர்களுக்கு வழங்கினார்.

சோழரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குமிக்க அரச மரபினராக மாறினார்கள். மதுரை அவர்களின் தலைநகராக இருந்தது. காயல் அவர்களுக்கான பெருந்துறைமுகமாக விளங்கியது. வெனீஸைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணி மார்க்கோ போலோ 1288இலும் 1293இலுமாக இரு முறை காயலுக்கு வந்துள்ளார். அப்போது காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்களால் நிறைந்திருந்ததாகவும்

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோ போலோ நேர்மையான நிர்வாகத்துக்காகவும் வெளிநாட்டுவணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியதற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காயல் நகரில் வணிக நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுவதாகவும் மார்க்கோ போலோ கூறுகிறார்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன்

இரண்டாம் பாண்டிய அரசின் சிறப்புமிக்க ஆட்சியாளர் சுந்தரபாண்டியன் (1251–1268) ஆவார். அவர் தமிழ்நாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன், ஆந்திராவில் உள்ள நெல்லூர் வரை தனது அரசியல் அதிகாரத்தைச் செலுத்தினார். இவர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் பாண்டிய அரசு வலிமையின் உச்சத்தில் இருந்தது. அப்போது ஹொய்சாளர்கள் அடக்கிவைக்கப்பட்டார்கள். பல கல்வெட்டுக்கள் அவரை மிகவும் உயர்வாகப் போற்றப்படுகின்றன. சுந்தரபாண்டியன் சேர அரசரான மலைநாட்டுத் தலைவரை அடக்கி, தனக்குக் கப்பம் செலுத்த வைத்தார். சோழரின் வீழ்ச்சி மால்வா பகுதியை ஆட்சி செய்த போஜ அரசன் வீர சோமேஸ்வரனுக்குச் சுந்தரபாண்டியனை சவாலுக்கு அழைக்கும் துணிச்சலைக் கொடுத்தது. இருவருக்குமிடையே கண்ணனூரில் நடந்த போரில் சுந்தர–பாண்டியன் வீர சோமேஸ்வரனைத் வென்று, மால்வா பகுதியைச் சூறையாடினார். சேந்தமங்கலத்தையும் கட்டுக்குள் கொண்டுவந்தார். கடலூரை மையமாகக் கொண்டு வட தமிழகத்தில் செல்வாக்குடன் ஆட்சி நடத்திய காடவர்களையும் அடக்கிய சுந்தரபாண்டியன் அவர்களைக் கப்பம் செலுத்தப் பணித்தார். அவர் மேற்குப்பகுதியையும் தற்கால ஆற்காடு பகுதிக்கும் சேலத்துக்கும் இடைப்பட்ட பகுதியையும் கைப்பற்றினார். போரில் காஞ்சிபுரம் அரசனைக் கொன்று அதையும் எடுத்துக்கொண்டார். கொல்லப்பட்ட காஞ்சிபுரம் அரசரின் சகோதரர் பாண்டிய மன்னருக்கு அடிபணிந்ததன் மூலம் காஞ்சிபுரம் ஆட்சியை கவனித்துக் கொண்டார். கப்பம் செலுத்தவும் சம்மதித்தார். எனினும் அவர் தனி

11th History Lesson 11 Tamil Medium.indd 183 07-02-2023 16:08:23

ஒருவராக ஆட்சி செய்யும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. சுந்தரபாண்டியன் தன்னுடைய தரப்பினரான விக்கிரம பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய இருவருடன் சேர்ந்து ஆட்சி புரியும்படி செய்தார். வீரபாண்டியன் ஈழம், கொங்கு, சோழ மண்டலம் (சோழ நாடு) ஆகியவற்றை வெற்றிகொண்டதாக அவர் குறித்த ஓர் ஆவணம் (1253–1256) கூறுகிறது.

மாறவர்மன் குலசேகரன்

சுந்தரபாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் குலசேகரன் நாற்பது ஆண்டுகள் பாண்டிய நாட்டை வெற்றிகரமாக ஆட்சிபுரிந்தார். அவரது ஆட்சியில் அமைதியும் வளர்ச்சியும் நிலவின. அவர் 1268இல் அரியணை ஏறி, 1312 வரை ஆட்சி செய்தார். அவருக்கு இரு மகன்கள். மூத்தவர் சுந்தர பாண்டியன்; இளையவர் வீரபாண்டியன். 1302இல் இளைய மகன் வீரபாண்டியனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. இதனால் கோபமடைந்த மூத்த மகன் சுந்தர பாண்டியன் தன் தந்தையைக் கொன்று பதவிக்கு வந்தார். இதைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரில் வீரபாண்டியன் வென்று ஆட்சியைப் பிடித்தார். சுந்தர பாண்டியன் தில்லிக்குத் தப்பிச் சென்று அலாவுதின் கில்ஜியிடம் அடைக்கலமானார். இந்த நிகழ்வுகளே மாலிக் காபூர் தமிழகப் படையெடுப்புக்கு வழிவகுத்தன.

மாலிக் காபூர் படையெடுப்பு

மாலிக்காபூர்1311இல்மதுரையைஅடைந்தபோது, அங்கே யாரும் இல்லை. வீரபாண்டியன் ஏற்கனவே தப்பியோடியிருந்தார். இந்த மதுரை படையெடுப்பு குறித்து அலாவுதின் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின்படி, அங்கிருந்து 512 யானைகள், 5,000 குதிரைகள், 500 மூட்டைகளில் வைரம், முத்து, மரகதம், மாணிக்க நகைகள் மாலிக் காபூரால் எடுத்துச்செல்லப்பட்டன எனத் தெரிகிறது. அமிர் குஸ்ரு மிகைப்படுத்தி எழுதக்கூடியவர், இருப்பினும் சொக்கநாதர் கோவிலை இடித்து ஏராளமான விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக் காபூர் எடுத்துச்சென்றார் என்பது உண்மையே. இச்செல்வத்தைப் பயன்படுத்தி அலாவுதீன் கில்ஜி தனது எதிரிகளை தன் பக்கம் ஈர்த்து தனது பலத்தை அதிகரித்துக் கொண்டார்.

மாலிக் காபூரின் படையெடுப்புக்குப் பிறகு, பாண்டிய அரசின் ஆட்சிப்பொறுப்பு பாண்டிய அரசக் குடும்ப உறுப்பினர்களால் தனித் தனியாகப் பிரித்துக்கொள்ளப்பட்டன. மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகியது. இது 1335 வரை தான் நீடித்தது. மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் அஸன் ஷா டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்படாமல் 1335இல் மதுரை அரசராகத் தன்னை அறிவித்துக்கொண்டார்.

11.2.2 அரசு

பாண்டிய அரசர்கள் தொடர்ந்து மதுரையையே தங்கள் தலைநகராகக் கொண்டார்கள். மதுரை நகரமானது கூடல் எனவும் தமிழ் கெழுகூடல் எனவும் புகழப்பட்டது. பாண்டிய அரசர்களைக் கூடல்கோன், கூடல் நகர் காவலன், மதுரபுர பரமேசுவரன் என்று போற்றுவது மரபாக இருந்தது. தொடக்க காலப் பாண்டியருக்கான பட்டங்கள்: பாண்டிய அதியரசன், பாண்டிய மகராசன், மன்னர் மன்னன், அவனிப சேகரன், ஏக வீரன், சகலபுவன சக்கரவர்த்தி போன்றவை ஆகும். பிற்காலப் பாண்டியருக்குச் சமஸ்கிருதத்தில் அமைந்த பட்டங்கள்: கோதண்ட ராமன், கோலாகலன், புவனேகவீரன், கலியுக ராமன் போன்றவை ஆகும். தூய தமிழில் அமைந்த பட்டங்கள்: செம்பியன், வானவன், தென்னவன் போன்றவை. பாண்டியர் தம்முடன் நெடிய வணிக பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த அரபு நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தனர். இக்குதிரைகளைக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்டனர். இதன்மூலம் பாண்டியர் தங்கள் ராணுவ வலிமையைத் தக்கவைத்துக் கொண்டனர்.

அரண்மனையும் அரியணையும்

பாண்டியர் அரண்மனை திருமாளிகை, மனபரணன் திருமாளிகை என்று அழைக்கப்பட்டன. அரசர்கள் நீளமான,ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அமரும் இட வசதி கொண்ட அரியணையில் அமர்ந்தபடி நிர்வாகம் செய்தனர். குறுநில மன்னர்கள் மீது அரசர்களின் சட்டபூர்வ மேலாளுமையைக் காட்டும் விதத்திலும் அரியணைகளுக்குப் பெயரிடும் வழக்கம் இருந்தது. அத்தகைய அரியணைகளின் பெயர்கள் முன்னைய தரையன், பாண்டியத்தரையன், கலிங்கத்தரையன் ஆகும். அரசர்கள் அரியணைகளில் இருந்தபடிதான் அரசக்கட்டளைகளை வாய்மொழியாகப் பிறப்பித்தார்கள். அவை 'திருமந்திர ஓலை' என்று அழைக்கப்பட்டன.

அரச அதிகாரிகள்

அதிகாரிகள் குழு அரச கட்டளைகளை நிறைவேற்றியது. முதன்மை அமைச்சர் உத்தர மந்திரி எனப்பட்டார். மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாறன்கரி போன்ற ஆளுமைகள் பாண்டிய அமைச்சர்களாக இருந்துள்ளனர். அரச தலைமைச் செயலகம் எழுத்துமண்டபம் எனப்பட்டது. அக பரிவார முதலிகள் என்பவர்கள் அரசரின் தனிப்பட்ட உதவியாளர்களாக இருந்தனர். மாறன் எயினன், சதன் கணபதி, ஏனாதி சதன், திரதிரன், மூர்த்தி எயினன் போன்றவை உயர்ந்த மதிப்புக்குரிய அரச பதவிகளாக இருந்தன. படைத்தளபதிகளுக்குப் பள்ளி வேலன், பராந்தகன்

11th History Lesson 11 Tamil Medium.indd 184 07-02-2023 16:08:23

பள்ளி வேலன், மாறன் ஆதித்தன், தென்னவன் தமிழவேள் ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டன.

அரசியல் பிரிவுகள்

பாண்டிய மண்டலம் என்பது பல வளநாடுகளைக் கொண்டது. ஒரு வளநாடு பல நாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டது. நாடு, கூற்றம் ஆகியன மங்கலம், நகரம், ஊர், குடி ஆகிய குடியிருப்புகளைக் கொண்டவையாக இருந்தன. பாண்டிய மண்டலத்தில் குளக்கீழ் என்ற ஒரு தனிச்சிறப்பான அரசியல் பிரிவு இருந்தது. பாசன ஏரிக்குக் கீழேயிருக்கும் பகுதி என்று இதற்குப் பொருளாகும். எடுத்துக்காட்டாக, மதுரை நகரம் 'மடக்குளக்கீழ் மதுரை' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேளாண் நிலங்களின் தன்மைகளை மதிப்பிட்டு, வரிகளை விதிப்பது நாட்டாரின் வேலையாகும். நில அளவீடுகளின்போது 14 மற்றும் 24 அடி நீளமுள்ள கழிகளைப் பயன்படுத்தினர். பின்னர் அவற்றைக் கொடையாக வழங்கினர். சாலபோகம் நிலம் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இரும்பு உலோக வேலை செய்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் 'தட்டார் காணி' எனப்பட்டது. மரவேலை செய்பவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் 'தச்சர் மானியம்' எனப்பட்டது. கல்வி கற்பிக்கும் பிராமணக் குழுவிற்கு வழங்கப்பட்ட நிலம் பட்ட விருத்தி எனப்பட்டது.

நிர்வாகமும் சமயமும் : 7 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை

800–ஐச் சேர்ந்த மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு கிராம நிர்வாகத்தைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. அதன்படி, பாண்டியர் கிராம நிர்வாகமும் கிராமசபைகள், குழுக்கள் எனச் சோழர் ஆட்சியின் உள்ளாட்சி முறை போன்றே அமைந்திருந்தது. குடிமை அதிகாரங்கள், இராணுவ அதிகாரங்கள் ஒரே நபரிடமே இருந்துள்ளன. இக்காலகட்ட பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் ஆதரித்தனர். சைவ, வைணவ அடியார்கள் (நாயன்மார்களும் ஆழ்வார்களும்) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பை அளித்தனர். இக்காலகட்டம் கடுமையான மத மோதல்கள் நிகழ்ந்த காலகட்டமாகக் குறிக்கப்படுகிறது. பக்தி இயக்கத்தின் எழுச்சி வேற்று மத அறிஞர்களை விவாதங்களுக்கு அழைத்தது. இத்தகைய விவாதங்களில் புத்த, சமண மதங்கள் தோல்வி அடைந்ததாக பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன.

11.2.3 பொருளாதாரம்

சமூகம்

அரசர்களும் குறுநில மன்னர்களும் பாசன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளை உருவாக்கி மங்கலம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயரிட்டு பிராமணர்களுக்கு வழங்கினர். இக்குடியிருப்புகளுக்கு அரசனின் பெயர்களும் கடவுளரின் பெயர்களும் சூட்டப்பட்டன. செல்வாக்குமிக்க பிராமணர்கள் பிரம்மாதிராஜன், பிரம்மராஜ்யன் ஆகிய உயர் தகுதிநிலை பட்டங்களைக் கொண்டிருந்தனர்.

வணிகம்

இசுலாமியர்களைத் தமிழ்நாட்டுக்குள் முதன்முதலாக வரவழைத்தது மாலிக் காபூரின் படையெடுப்பு அல்ல. ஏழாம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவின் மேற்குக்கடற்கரையில் அரபுக்குடியிருப்புகள் தோன்றிவிட்டன. இதன்மூலம் தங்கள் வணிகத்தை கிழக்குக் கடற்கரையிலிருந்த தமிழர்களுடன் விரிவுபடுத்திக் கொண்டனர். இதன் காரணமாக கிழக்குக் கரையில் இருந்த அரசுகள் இந்த அரபு வணிகர்கள் மீது மிகவும் தாராளமாக கொள்கைகளைத் தளர்த்தி ஆதரவு அளித்துள்ளனர். இதனால் அவ்வணிகர்களுக்குத் துறைமுகக் கட்டணங்கள், சுங்க வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன. காயல் துறைமுக நகரில், அரபுத்தலைவன் மாலிக்கு இஸ்லாம் ஜமாலுதின் என்பவரால் ஒரு முகவர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பாண்டியருக்குக் குதிரைகளை இறக்குமதி செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

நிகமத்தோர், நானாதேசி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், பதினென் விஷயத்தார் என்று வணிகர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களது வணிக குழுக்கள் கொடும்பாளூர், பெரியகுளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. மிளகு, முத்து, விலையுயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியன வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டன. பதிமூன்று–பதினான்காம் நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் விறுவிறுப்பாக நடைபெற்றது. விழாக்கள், போர்களில் பயன்படுத்த குதிரைகள் அதிக அளவில் தேவைப்பட்டதால் பாண்டிய அரசர்கள் குதிரைகளில் அதிக முதலீடு செய்தனர் என்று மார்க்கோ போலோ, வாசாஃப் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். குதிரை வணிகம் செய்வோர் குதிரைச்செட்டி எனப்பட்டனர். இவர்கள் கடல்வழி வணிகத்திலும் ஈடுபட்டனர்.

பாண்டியர் காலத்தில் முழு வீச்சில் இயங்கிய துறைமுக நகரம் காயல்பட்டினம் (தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது) ஆகும். வணிகத்தில்

11th History Lesson 11 Tamil Medium.indd 185 07-02-2023 16:08:23

பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து வாசாஃப்பின்வருமாறுபதிவுசெய்துள்ளார்: "காயல் மற்றும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ 10,000 குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 1,400 குதிரைகள் ஜமாலுதீனுக்குச் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்களாகும்."

பரிமாற்றத்துக்கான ஊடகமாக தங்கம் விளங்கியதால், தங்க நாணயங்கள் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, பழங்காசு, அன்றாட நற்பழங்காசு, கனம், கழஞ்சு, பொன் எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டன. வணிகர்களின் கடவுளர் அவர்களுக்கான பட்டப்பெயர்களுடன் கூடிய பெயர்களுடன் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக, ஆயிரத்து ஐநூற்றுவார் உடையார், சொக்கநாயகி அம்மன் போன்ற பெயர்களைக் கூறலாம். சீரான கால இடைவெளியில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகள் தவளம் எனப்பட்டன. வணிகர்களின் குடியிருப்புப் பகுதி 'தெரு' எனப்பட்டது.

பாசனம்

பாண்டிய அரசர்கள் பெரும் எண்ணிக்கையிலான பாசன வளங்களை உருவாக்கினர். அவை அரசக் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களில் அறியப்படுகின்றன. வாசுதேவப்பேரேரி, வீரபாண்டியப்பேரேரி, ஸ்ரீ வல்லபப் பேரேரி, பராக்கிரமப்பாண்டியப்பேரேரி போன்றவை ஆகும். ஏரிகள் திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்று பெயரிடப்பட்டன. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் அவற்றின் நீரைப் பாசனக் குளங்களுக்குக் கொண்டுசெல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. சேந்தன் மாறன் காலகட்டத்தைச் சேர்ந்த வைகை ஆற்றுப்படுகைக் கல்வெட்டுகளில் அவரால் நிறுவப்பட்ட ஆற்று மதகு குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபன் வெட்டிய ஒரு பெரிய ஏரி இன்றும் பயன்பாட்டில் உள்ளது. வட மாவட்டங்களில் பல்லவர்கள் மேற்கொண்டதைப் போன்றே தென் மாவட்டங்களிலும் பாண்டியர் பாசனத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தனர். ஏரிகளின் கரைகளை அமைக்கும்போது பண்டைய கட்டுமானக் கலைஞர்கள் கரை மட்டத்தைச் சமமாகப் பராமரிக்க நூல் பயன்படுத்தினர். கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குளைப் பயன்படுத்தியது பாண்டிய பாசனத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும். பிற்காலப் பாண்டியர் காலத்தில் (ஏறத்தாழ 1212) திருவண்ணாமலை கோவில் நிலங்கள் பாசன வசதி பெற, பெண்ணை ஆற்றிலிருந்து வாய்க்கால் அமைத்துத் தந்துள்ளார். வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பல ஏரிகள் வெட்டப்பட்டன. இத்தகைய பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் மேற்பார்வையில் பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பாசன நீர்நிலைகளின் பராமரிப்பு பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. சில சமயங்களில் வணிகர்களும் பாசன ஏரிகளை வெட்டினார்கள்.

இருப்பைக்குடி கிழவன் என்ற உள்ளூர்த்தலைவர் பல ஏரிகளை வெட்டியதுடன், அவற்றைப் பழுதுபார்க்கும் வேலையிலும் ஈடுபட்டார். நில உடமையாளர்கள் பூமிபுத்திரர் எனப்பட்டனர். வரலாற்று நோக்கில் இவர்கள் உள்ளூர் குடிகளாக இருந்ததால், நாட்டுமக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களின் சமுதாயக் குழு சித்திர மேழி பெரிய நாட்டார் எனப்பட்டது.

ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் உள்ள தண்ணீரை வெளியேற்ற பயன்படும் அமைப்பு மதகு ஆகும். கல்வெட்டுகளில் இவை மடை, குமிழி, மதகு என்று அழைக்கப்படுகின்றன.

திருவில்லிபுத்தூர் மதகு

எழுத்தறிவு

பாண்டியர் ஆட்சியில் எழுத்தறிவைப் பரப்பும் பணிகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. கோவில்களில் பக்திப்பாடல்கள் பாடப் பாடகர்கள் நியமிக்கப்பட்ட செயல்பாடுகளை, எழுத்தறிவை ஊக்குவிக்கும் செயல்பாடுகளாகக் காணமுடியும். அரங்குகளில் நாடகங்கள் இதே நோக்கில் அரங்கேற்றப்பட்டன. சமஸ்கிருதக் கல்வியை ஊக்குவிக்கப் 'பட்ட விருத்தி', 'சாலபோகம்' ஆகிய பெயர்களில் அறக்கொடைகள் வழங்கப்பட்டன. கடிகை, சாலை, வித்யா ஸ்தானம் ஆகிய நிலையங்களில் பிராமணர்கள் சமஸ்கிருதம் பயின்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் மடங்கள் உருவாகி மத ஆர்வத்தில் கல்வி கற்பிக்கும் நோக்கத்துடன் கோவில்களுடன் இணைக்கப்பட்டன. தமிழை வளர்க்கவும் மகாபாரதத்தை மொழிபெயர்க்கவும் ஒரு கலைக்கழகம் அமைக்கப்பட்டதாக ஒரு செப்பேடு கூறுகிறது. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான இலக்கிய நூல்கள் திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம், திருக்கோவை மற்றும் திருமந்திரம் முதலியன ஆகும்.

11.2.4 மதம்

பாண்டியர் தொடக்கத்தில் சமணர்களாக இருந்து, சைவ மதத்துக்கு மாறியவர்கள் என்று கூறப்படுகிறது. கோவில் கல்வெட்டுகளும் சிற்பங்களும் அதற்குச் சான்று பகர்வதாக உள்ளன. குடைவரை–குகை கோவில்கள் இக்காலகட்டத்தில் மதம்–கட்டடக்கலை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன. இடைக்காலப் பாண்டியரும் பிற்காலப் பாண்டியரும் பல கோவில்களைப் பழுதுபார்த்து, அவற்றுக்குத் தங்கம், நிலம் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளனர். திருவரங்கம், சிதம்பரம் ஆகிய கோவில்களின் கருவறை மீதுள்ள விமானங்கள் தங்கத் தகடுகளால் வேயப்பட்டன. சடையவர்மன் சுந்தர பாண்டியன் திருவரங்கம் கோவிலில் பட்டம் சூட்டினார். அதன் நினைவாக அக்கோவிலுக்கு ஒரு விஷ்ணு சிலையை நன்கொடையாகக் கொடுத்தார். இக்கோவிலின் உட்சுவர்களும் பிற மூன்று விமானங்களும் தங்கத்தகடுகள் பொருத்தப்பட்டவை ஆகும்.

பாண்டியர் வேத நடைமுறைகளுக்கும் தங்கள் ஆதரவை விரிவுபடுத்தினார்கள். பல வேதச் சடங்குகளைச் செய்த பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி சங்க காலத்தைச் சேர்ந்த பாண்டிய அரசர் ஆவார். ஒவ்வொரு பெரிய பாண்டிய அரசரும் அசுவமேத யாகம், ஹிரண்ய கர்பா, வாஜபேய யக்னா ஆகிய சடங்குகளை மேற்கொண்டதாக வேள்விக்குடி செப்பேடும் பிற கல்வெட்டுகளும் கூறுகின்றன. அரசர்கள் சைவத்தையும் வைணவத்தையும் சமமாக நடத்தியதைக் கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் கடவுள் வாழ்த்துப்பகுதிகள் தெரிவிக்கின்றன. சில அரசர்கள் தீவிர சைவச் சமயத்தவராகவும் சில அரசர்கள் தீவிர வைணவச் சமயத்தவராகவும் இருந்துள்ளனர். எனினும் இரு பிரிவைச் சேர்ந்த கோவில்களும் ஆதரிக்கப்பட்டன. நிலக்கொடைகள், வரி விலக்கு, புதுப்பிக்கும் பணி, கூடுதலாகக் கோபுரம் கட்டுவது, அதிக இட வசதி உள்ள மண்டபங்களைக் கட்டுவது போன்ற அறக்கொடைகள் மூலம் கோவில்கள் சிறப்பாக ஆதரிக்கப்பட்டன.

கோவில்கள்

பாண்டியர் பல்வேறு மாதிரிகளில் கோவில்கள் கட்டினார்கள். அவை கல்லறைக்கோவில்கள் (சுந்தரபாண்டிசுவரம்), குடைவரைக்கோவில்கள்,

குடைவரைக்கோவில் – ஆனைமலை (பொ.ஆ.800)



சமணச் சிற்பங்கள்–கழுகுமலை

சித்தன்னவாசல்

11th History Lesson 11 Tamil Medium.indd 187 07-02-2023 16:08:24

கட்டமைப்புக் கோவில்கள் ஆகும். இடைக்காலப் பாண்டியர்களும் பிற்காலப் பாண்டியர்களும் புதிதாகக் கோவில்களைக் கட்டவில்லை. மாறாக, புதிய கோபுரங்கள் எழுப்புவது, பிரகார வீதிகள் அமைப்பது, மண்டபங்கள் கட்டுவது ஆகிய விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். தொடக்க காலப் பாண்டியர் கோவில்கள் எளிமையாகவும் சிறியதாகவும் இருந்தன. இக்கோவில்களில் சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசன், சுப்பிரமணியர், சூரியன், பிரம்மன் ஆகிய கடவுளர் சிலைகள் சிறப்பாக வடிக்கப்பட்டிருந்தன. பாண்டியர் காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் கூடுதல் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டது. கூடுதல் கோபுரங்கள், மண்டபங்கள் என கோவில் பரப்பை விரிவாக்கிக் கொண்டேயிருந்தனர்.

பண்டைய பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக்கோவில்கள் பிள்ளையார்பட்டி, திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை, கன்னியாகுமரி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசல், அரிட்டாபட்டி, திருமலைபுரம், திருநெடுங்கரை ஆகிய கோவில்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் குகைக்கோவிலில் காணப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டு அந்தக் குகை இளம் கௌதமர் என்பவரால் உருவாக்கப்பட்டது என்று கூறுகிறது. அதே காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் இக்கோவிலைப் புதுப்பித்தார் என்று கூறுகிறது. கோவிலின் சுவர்களிலும் கூரைகளிலும் தூண்களிலும் காணப்படும் ஓவியங்கள் சிறந்த கலைப்படைப்புகளாகும். இந்த ஓவியங்கள் நடனமாடும் பெண், அரசன், அரசி போன்றோரைச் சித்தரிக்கின்றன. ஒரு குளத்தைச் சித்தரிக்கும் ஓவியத்தில் சில நீர்வாழ் உயிரினங்களும் பூக்களும் பறவைகளும் சில பாலூட்டிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவின் கடல் சார்ந்த வரலாறு பாண்டியர்களின் வரலாறு இன்றி முழுமை பெறாது. பாண்டியர்களின் காலத்தில் கிழக்குக்கடற்கரை நெடுகிலும் துறைமுக நகரங்கள் இருந்தன. பாண்டியர் தென்கிழக்கு ஆசிய அரச மரபுகளில் திருமண உறவுகளும் செய்து கொண்டார்கள்.

கடல்வழி வணிக நடவடிக்கைகளில் பாண்டியர் ஓர் அழுத்தமான தடத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

> சிந்தாமணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், திருவாடனை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

பாடச் சுருக்கம்

I சோழர்

- சோழரின் ஆட்சி விஜயலாய சோழன் (850–871) மூலம் புத்துயிர்ப்பு பெற்று முதலாம் பராந்தக சோழன் (907–955) மூலம் வலிமையூட்டப்பட்டது.
- முதலாம் இராஜராஜன்(985–1014) சோழப் பேரரசை உருவாக்கினார். சோழ அரச மரபுக்குப் பெருமையும் புகழும் சேரும் விதத்தில் தஞ்சாவூரில் பிரகதீசுவரர் (பெருவுடையார்) கோவிலைக் கட்டினார்.
- முதலாம் இராஜேந்திரன் கடல்கடந்த படையெடுப்புகள் மூலம் கடாரம் முதல் ஸ்ரீ விஜயா வரை ஆட்சிப்பகுதியை மேலும் விரிவாக்கினார். அவர் வடஇந்தியா மீது படையெடுத்துச் சென்றதில் கிடைத்த வெற்றிகளின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் கோவிலைக் கட்டினார்.
- சோழர் ஏரி, கால்வாய் பாசன அமைப்புகளை உருவாக்கியதால் வேளாண்மையிலும் வணிகத்திலும் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.
- கோவில்கள் சமூக மையங்களாக மாறியதால் கலை, கல்வி போன்ற செயல்பாடுகளுக்கு ஆதரவு பெருகின.
- அரசர்களால்கட்டப்பட்டதஞ்சாவூர்,கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய கோவில்கள் கட்டுமானக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, சிலைவடித்தல் ஆகியவற்றில் சோழர் அடைந்திருந்த முழுமையான வளர்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.
- கடல்வழி வணிகம் செழித்தது. சந்தனக்கட்டை, கருங்காலி, சுவையூட்டும் பொருள்கள், விலை உயர்ந்த கற்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள், உப்பு ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டன. கற்பூரம், செம்பு, தகரம் மற்றும் பாதரசம் போன்றவை முக்கியமான இறக்குமதிப் பொருள்களாகும்

II பாண்டியர்

- களப்பிரர்களுக்குப் பிறகு, பாண்டியர் ஏறத்தாழ பொ.ஆ.6ஆம் நூற்றாண்டில் தங்கள் அரச மரபை நிறுவினர்.
- சோழரின் வீழ்ச்சிக்குப் பிறகு, 13ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பாண்டிய அரச மரபின் புத்துயிர்ப்பால் தமிழகம் மீண்டும் ஒளி பெற்றது.
- பாண்டியர் குடவரைக் கோவில்களையும் கட்டமைப்புடன் கூடிய கோவில்களையும் கட்டினார்கள்.
- மார்க்கோ போலோ மற்றும் அரபிய பயணிகள் கூற்றுப்படி, துறைமுக நகரமான காயல் வணிகம், பண்டமாற்று ஆகியவற்றுக்கான மையமாக விளங்கியுள்ளது.

11th History Lesson 11 Tamil Medium.indd 188 07-02-2023 16:08:25

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. ________ கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.
   (அ) மூன்றாம் குலோத்துங்கன்
   (ஆ) முதலாம் இராஜேந்திரன்
   (இ) முதலாம் இராஜராஜன்
   (ஈ) பராந்தகன்

2. ________ படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது.
   (அ) வைகை (ஆ) காவிரி
   (இ) கிருஷ்ணா (ஈ) கோதாவரி

3. முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இணைந்து ________ ஆண்டுகள் சோழ அரசை ஆட்சி செய்தார்கள்.
   (அ) 3 (ஆ) 2 (இ) 5 (ஈ) 4

4. ________ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
   (அ) 28 கி.கி (ஆ) 27 கி.கி
   (இ) 32 கி.கி (ஈ) 72 கி.கி

5. கெடா ________ இல் உள்ளது.
   (அ) மலேசியா (ஆ) சிங்கப்பூர்
   (இ) தாய்லாந்து (ஈ) கம்போடியா

6. முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் ________ என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்பட்டது.
   (அ) நாட்டார் (ஆ) மாநகரம்
   (இ) நகரத்தார் (ஈ) ஊரார்

7. பொருத்துக.
   (i) படை முகாம் – 1. படை வீடு
   (ii) புறக்காவல் படைகள் – 2. தண்டநாயகம்
   (iii) தலைவர் – 3. நிலைப்படை
   (iv) படைத்தளபதி – 4. படைமுதலி
   (அ) 1, 3, 4, 2 (ஆ) 4, 2, 1, 3
   இ) 2, 1, 3, 4 (ஈ) 2, 3, 1, 4

8. ________ இல் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினார்.
   (அ) இலங்கை (ஆ) வட இந்தியா
   (இ) கேரளம் (ஈ) கர்நாடகம்

9. ________ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
   (அ) மதுரை (ஆ) காயல்பட்டினம்
   (இ) கொற்கை (ஈ) புகார்

10. பொ.ஆ.800ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ________ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.
   (அ) மத்திய அரசு (ஆ) கிராமம்
   (இ) படை (ஈ) மாகாணம்

11. வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் ________ ஐக் கட்டினார்கள்.
   (அ) அகழிகள் (ஆ) மதகுகள்
   (இ) அணைகள் (ஈ) ஏரிகள்

II. குறுகிய விடை தருக

1. சோழர் காலத்து இலக்கிய வடிவ வரலாற்று நூல்கள் எவை?
2. சோழ மண்டலம் 'மும்முடிச்சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டது ஏன்?
3. முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் யாவை?
4. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.
5. சோழர் காலத்து கால்வாய்களில் அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர் சூட்டப்பட்ட கால்வாய்கள் யாவை?
6. தமிழ்ச் சங்கம் குறித்து எழுதுக.
7. பாண்டிய அரசின் மீதான மாலிக் காபூரின் படையெடுப்பின் விளைவுகள் யாவை?

III. சுருக்கமான விடை தருக

1. இராஜராஜ சோழனின் கடல்வழிப்படையெடுப்புகள் குறித்து குறிப்பு வரைக.
2. இராஜேந்திர சோழன் 'கடாரம் கொண்டான்' என அழைக்கப்படுவது ஏன்?
3. சோழர் காலத்தில் இருந்த வணிகக்குழுக்களின் பங்களிப்பு குறித்து எழுதுக.
4. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன?
5. சோழர் காலச் சமூகத்தின் படிநிலையைக் கூறுக.
6. சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களைக் குறிப்பிடுக.
7. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக்கோவில்கள் யாவை?
8. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டுப் பயண வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளைக் கூறுக.

IV. விரிவான விடை தருக

1. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன – ஆராய்ந்து எழுதுக.

11th History Lesson 11 Tamil Medium.indd 189 07-02-2023 16:08:25

2. சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக.

3. கோவில்–ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

4. பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியைக் கூறுக.

5. சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்க.

செயல்பாடுகள்

1. சோழர் குறித்து அண்மையில் செய்தித்தாள்களிலும் இணையதளங்களிலும் வெளிவந்த செய்திகளை ஒட்டி ஓர் ஏடு தயார் செய்க.
2. சோழர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளை ஆசிய வரைபடத்தில் குறிக்கவும்.

மூலநூல்கள்

1. Noburu Karashima, *A Concise History of South India*, Oxford University Press, 2014
2. Y. Subbarayulu, *South India under the Cholas*, Oxford University Press, 2011.
3. Burton Stein, *History of India*, Oxford University Press, 2002
4. R. Champakalakshmi, *Trade, Ideology and Urbanization in South India 300 BC to 1300*, Oxford University Press, 1996.
5. K.A. Nilakanta Sastri, *Colas*, University of Madras, 1955
6. R. Sathianathier, *History of India*, Vol. I, 1949.

கலைச்சொற்கள்

ஏறத்தாழ	circa	approximately
முடிசூட்டும் போது செய்யப்படும் சமயச்சடங்கு	anointment	ceremony associated with induction of a person in office/position
ஓரினத்தன்மை	homogeneity	same kind
சூறையாடு	ransack	plunder
மேலாதிக்கம்	hegemony	dominance especially by one state over other state or one social group over others
அவைதீக	heterodox	not following accepted beliefs/faiths
சேதப்படுத்து	ravage	devastate
வணங்குதற்குரிய	venerated	worshipful
ஆசிரியர் /ஆசான்	preceptor	teacher
புகழ்கின்ற	extoll	praise enthusiastically
முடிவில்லாத	perpetual	ever lasting
பரபரப்பான	bustling	busy
பின்பு ஏற்பட்ட	ensued	resulted
விசுவாசம்	allegiance	loyalty
கொல்	slain	kill
மூதாதை மரபு வரலாறு	genealogy	family tree

இணையச் செயல்பாடு

பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்

UNESCO வின் பண்பாட்டு மையத்தின் வழிகாட்டுதலுடன் நினைவுச்சின்னங்களை அறிவோமா!



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி "UNESCO" என்னும்இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- World Heritage Centre பக்கம் தோன்றும்.
- இடங்களைப் பெரிதாக்கிட இரு முறை சொடுக்கவும். (எ.கா. Great Cholas Temples)
- உங்களால் மனிதப் பண்பாடு தொடர்பான படங்கள், காணொளிக் காட்சிகள், செய்திகளை இங்கு காண இயலும்.

உரலி:

இணையம் : http://whc.unesco.org/en/interactive-map

திறன்பேசி : https://play.google.com/store/apps/details?id=com.tripbucket.unesco

11th History Lesson 11 Tamil Medium.indd 190 07-02-2023 16:08:25

பாடம்
12

பாமினி மற்றும் விஜயநகர அரசுகள்

கற்றல் நோக்கங்கள்

BIOJ7

கீழ்கண்டவை பற்றி அறிதல்

I

- பாமினி, விஜயநகர அரசுகளைப் பற்றி அறிவதற்கான ஆதாரங்கள்
- பாமினி சுல்தானியம் உருவாக்கப்படுதலும் வலிமைபடுத்தப்படுதலும்
- பாமினி அரசுகளுக்கும் விஜயநகருக்கும் இடையிலான நெடிய போர்கள்
- முகமது கவானின் இராணுவ வெற்றிகளும் சாதனைகளும்
- கோல்கொண்டா கோட்டையின் இராணுவ முக்கியத்துவம்

II

- சங்கம சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்ட விஜயநகர அரசின் தோற்றமும் வளர்ச்சியும்
- விஜயநகர்–பாமினி மோதலுக்கான காரணங்களும் விளைவுகளும்;
- சாளுவ அரச வம்சத்தின் குறுகிய கால ஆட்சியும் தொடர்ந்துவந்த கிருஷ்ண தேவராயரின் சிறப்பு மிக்க வளர்ச்சி யும்
- தலைக்கோட்டைப் போரும் விஜயநகர அரசின் வீழ்ச்சியும்
- விஜயநகர அரசின் நிர்வாகம், சமூகம், பொருளாதாரம்
- நாயக்க அரசுகளின் எழுச்சி

அறிமுகம்

14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி சுல்தானியம் தெற்கே விரிவாக்கத்திற்குத் தயாரானபோது தக்காண தென்னிந்தியாவும் நான்கு அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை தேவகிரியின் யாதவர் (மேற்குத் தக்காணம்/ தற்போதைய மகாராஷ்டிரா), துவாரசமுத்திரத்தின் ஹொய்சாலர் (கர்நாடகா), வாரங்கலின் காகதியர் (தற்போதைய தெலங்கானாவின்கிழக்குப்பகுதி), மதுரையின் பாண்டியர் (தென் தமிழ்நாடு) ஆகும். 1310 ,1304 ஆகிய ஆண்டுகளில் மாலிக் காபூரின் இரு படையெடுப்புகளில் இந்தப் பழைய அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்கடிக்கப்பட்டன; சேர்த்துவைக்கப்பட்டிருந்த தங்கள் செல்வங்களின் பெரும் பகுதியையும் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்பின்போது இழந்தன. துக்ளக் அரச வம்சம் தனது படைத்தளபதிகளின் மூலம் தென்னிந்தியப் படையெடுப்புகளைத் தொடர்ந்து நடத்தியது. முகம்மது பின் துக்ளக் (1325–1351) பரந்த தன் அரசை சிறப்பாக ஆட்சி புரிவதற்கென தலைநகரைக்கூட தேவகிரிக்கு மாற்றினார் (தௌலதாபாத் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது). ஆனால் அம்முயற்சிகள் தோல்வியடைந்து மக்கள் பெருந்துயரத்திற்கு ஆளாயினர். மீண்டும் தன் தலைநகரை தில்லிக்கு மாற்றியபோது அவரின் தென்பகுதி மாகாண ஆளுநர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்தனர். இதன் காரணமாக 1333இல் மதுரையில் சுதந்திரமான மதுரை சுல்தானியம் உருவானது. 1345இல் வடக்குக் கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக்கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றினார். அவர் பாமன் ஷா என்ற பட்டத்தைச் சூடி பாமினி அரசவம்சத்தைத் (1347–1527) தோற்றுவித்தார். இதற்கு சில

ஆண்டுகளுக்கு முன்பாக 1336ஆம் ஆண்டு விஜயநகர அரசு சங்கம வம்ச சகோதரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் துங்கபத்ரா நதிக்கரையில் விஜயநகரைத் தலைநகராகக் கொண்டு (தற்போதைய ஹம்பி) தோற்றுவிக்கப்பட்டது. அடுத்த நூற்றாண்டுகளில் இவ்வரசுகள் தங்களுக்குள் வளமான ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைக் கட்டுப்படுத்தவும் இவர்களின் இராணுவத்திற்குத் தேவைப்படும் குதிரைகளை இறக்குமதி செய்யவும், மேற்குக் கடற்கரையிலுள்ள கோவா, ஹோனாவர் துறைமுகங்களைக் கட்டுப்படுத்தவும் இடைவெளியில்லாமல் கடுமையாகப் போரிட்டனர்.

ஆதாரங்கள்

இக்காலப் பகுதியைப் பற்றி அறிய இலக்கியம், கல்வெட்டு, தொல்பொருள் போன்ற பலவகை ஆதாரங்கள் கிடைக்கின்றன. பாமினி அரசவையிலிருந்த வரலாற்றாசிரியர்கள், பாமினி, விஜயநகர அரசுகளுக்கிடையிலான மோதல்கள் பற்றிப் பாரசீக மொழியில் எழுதிய பல குறிப்புகள் உள்ளன. அவற்றில் சில சார்புத் தன்மையோடு மிகைப்படுத்திய தகவல்களைக் கொண்டிருந்தாலும், அவை போர்கள், அரண்மனைச் சதிகள், இருதரப்புக்களை சார்ந்த மக்களின் வாழ்க்கை, துயரங்கள் ஆகியன பற்றிய போர்களைக் கண்ணால் கண்ட சாட்சியங்களைக் கொண்டுள்ளன. கல்வெட்டுகளில் அது போன்ற செய்திகள் இல்லை. விஜயநகர அரசவையின் ஆதரவில் எழுதப்பட்ட மனுசரிதம், சாளுவபையுதயம் போன்ற இலக்கியங்கள் விஜயநகர அரசின் வம்சாவளி, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய தகவல்களைத் தருகின்றன. தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இலக்கியமான ராயவாசகமு கிருஷ்ணதேவராயரின் கீழ் இருந்த நாயங்காரர் முறை பற்றிய ஆர்வமூட்டக்கூடிய தகவல்களைத் தருகின்றது. 14 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிற்கு வந்த பல அயல்நாட்டுப் பயணிகள் தங்கள் பயணங்களைப் பற்றி எழுதியுள்ளனர். அவை அரசியல், சமூகம், பண்பாடு ஆகிய அம்சங்களின் முக்கியத்துவத்தை அறிய உதவுகிறது.. மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணியான இபன் பதூதா (1333–45), பாரசீகப் பயணியான அப்துர் ரசாக் (1443–45), ரஷியப் பயணியான நிகிடின் (1470–74), போர்த்துகீசிய நாட்டு வணிகர்களானடோமிங்கோ பயஸ், நூனிஸ் (1520–37) ஆகியோரின் குறிப்புகள் குறிப்பிடத் தகுந்த முறையில் அதிகமான செய்திகளை முன்வைக்கின்றன. கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளும் சமஸ்கிருத மொழியிலுள்ள பல செப்புப் பட்டயங்களும் இலக்கியச் சான்றுகள் தரும் செய்திகளோடு அதிகச் செய்திகளை வழங்குகின்றன. கோவில்கள், அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள் என வளமான தொல்லியல் சான்றுகளும் உள்ளன. நாணயச் சான்றுகளும் அதிக அளவில் கிடைக்கின்றன.

விஜயநகர அரசர்கள் 'வராகன்' என்று குறிப்பிடப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர். (இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது.) இந்தத் தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை, கன்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை (இரட்டைக் கழுகு வடிவத்தில் உள்ள இந்த உருவம் தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது) ஆகிய விலங்கு உருவங்களையும் தாங்கியுள்ளன. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயர் – தங்க நாணயங்கள்

12.1 பாமினி அரசு

அலாவுதீன் ஹசன் பாமன்ஷா (1347–1358)

கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளுக்கிடையிலான வளமான ரெய்ச்சூர் பகுதியைக் கைப்பற்றுவதில் பாமினி, விஜயநகர அரசுகளிடையே ஏற்பட்ட போட்டி பாமினி அரசின் தொடக்க கால வரலாற்றைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல் இரு நூற்றாண்டுகளுக்கு நீடித்த அம்சமாக இருந்தது. வாரங்கல்லின் கிழக்குப் பகுதி மற்றும் ஒரிசா ஆட்சியாளர்களுக்கு எதிராக பாமன்ஷா தன் போராட்டத்தைத் தொடங்கினார். சுமூகமான நிர்வாகத்திற்காக தில்லி சுல்தானியர் முறையைப் பின்பற்றிய இவர் தன் ஆட்சிப் பகுதியை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார். அப்பகுதிகள் தராப்ஸ் எனப்பட்டன. பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆளுநர் நியமிக்கப்பட்டார். அவர்களே

11th History Lesson 12 Tamil Medium.indd 192 01-12-2022 19:57:29

அப்பகுதியின் படைகளையும் வழிநடத்தினர். குல்பர்கா, தௌலதாபாத், பீடார், பெரார் ஆகியவை அந்த நான்கு மாகாணங்களாகும். மாகாண ஆளுநர்கள் மாகாண நிர்வாகம், வரி வசூல் போன்றவற்றிற்கு முழுப்பொறுப்பாவர். வலிமையான அரசர்களின் கீழ் நன்கு செயல்பட்ட இம்முறை, திறமை குன்றிய அரசர்களின் காலத்தில் ஆபத்தாக மாறியது. 11 ஆண்டுகள் பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி சிறப்பாக ஆட்சி செய்தார். வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியவற்றிடமிருந்து வருடம்தோறும் கப்பம் பெற அவர் மேற்கொண்ட முயற்சி பல போர்களுக்கு இட்டுச் சென்றது. அனைத்திலும் அவர் வெற்றிபெற்றார். இவர் தான் பெற்ற வெற்றிகளை நினைவுகூறும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக்கொண்டார்.

முதலாம் முகமது (1358–1375)

பாமன்ஷாவிற்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் முதலாம் முகம்மது. விஜயநகர அரசுடன் நீண்டகாலப் போர்களை அவர் மேற்கொண்டார். அவற்றில் பல ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியோடு தொடர்புடையதாகும். இருதரப்பிலும் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டாலும் யாரும் அப்பகுதியை முழுமையாக கட்டுப்படுத்த இயலவில்லை. இவர் மேற்கொண்ட இரண்டு கடுமையான போர்களால் பலன் ஏதும் இல்லை. 1363இல் வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார். வாரங்கல் போர் நஷ்டஈட்டை வாரி வழங்கியது. கோல்கொண்டா கோட்டை அவர் வசமானது. அங்கிருந்த கருவூலங்கள், ரத்தினக்கற்கள் பாமினி அரசின் வசமாயின. அங்கிருந்த ரத்தினச் சிம்மாசனம் பாமினி அரசின் சிம்மாசனமாயிற்று.

> ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும். இம்மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பிர்தௌசியின் ஷாநாமா குறிக்கின்றது.

முதலாம் முகமது சிறந்த அரசு முறை நிர்வாகத்தைப் பின்பற்றினார். தில்லி சுல்தானிய அரச முறையைப் பின்பற்றிச் சிறப்பாக இவர் செய்த நிர்வாக முறை பிற்காலத்தில் மராட்டிய ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அவர் எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார். அதன் படி 1. வகில்–உ–ஸ்–சுல்தானா: படைத்தலைவர்; அரசருக்கு அடுத்த நிலையில் உள்ளவர். 2. வசீர்–இ –குல்: மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுபவர். 3. அமீர்–இ–ஜும்லா: நிதியமைச்சர் 4. வசீர்–இ–அஷ்ரப்: வெளியுறவு அமைச்சர், அரசு விவகாரத்துறை அமைச்சர், அரசு விழாக்களை முன்னின்று நடத்தும் பொறுப்புடையவர். 5. நசீர்: நிதித்துறை இணையமைச்சர். 6 பேஷ்வா: அரசப் படைகளின் பொறுப்பாளர். 7. கொத்வால்: காவல்துறைத் தலைவர், தலைநகரின் நீதிபதி 8.சதர்–இ–ஜஹான்: தலைமை நீதிபதி; சமய அறநிலையத்துறை அமைச்சர்.

வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக அவர் கடுமையான நடவடிக்கை எடுத்தார். நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் முகமது ஷா ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அவர் அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது. அவர் குல்பர்காவில் இரு மசூதிகளை எழுப்பினார். அதில் ஒரு மசூதி 1367 ஆம் ஆண்டில் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. அது சிறந்த கட்டடமாகும். முதலாம் முகமது ஷாவிற்குப் பின் சில சுல்தான்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் திறமையற்றவர்கள். தென்பகுதி ஆட்சியாளர்களுடன் அவர்கள் அடிக்கடி போரிட்டனர். 1425இல் வாரங்கல் மற்றும் அதன் கிழக்கிலிருந்த பகுதிகளை ஒரிசாவின் ஆட்சியாளர்கள் கைப்பற்றினர். இந்நிலையில் தலைநகரம் குல்பர்காவிலிருந்து 1429இல் பீடாருக்கு மாற்றப்பட்டது. அதன் பின் ஆட்சிக்கு வந்த மூன்றாம் முகமது (1463–1482) காலத்தில் சிறந்த அமைச்சராக விளங்கிய முகமது கவான் சிறந்த அரசியல் இராஜதந்திரியாவார்

முகமது கவான்

பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் புகழ்பெற்ற இஸ்லாமிய சமய வல்லுநராகவும், பாரசீக மொழியில், கணிதத்தில் புலமை பெற்றவராகவும் விளங்கினார். அவர் சிறந்த கவிஞராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார். பீடாரில் ஒரு மதரசாவை நிறுவிய அவர் அதில் ஒரு பெரிய நூலகத்தையும் அமைத்தார். அந்நூலகத்தில் 3000 கையெழுத்து நூல்கள் இருந்தன. இவை இவருடைய புலமையை உணர்த்த வல்லன. மூன்றாம் முகம்மதுவின் தலைசிறந்த பிரதம மந்திரியாக விளங்கிய கவான் சிறந்த நிர்வாகத் திறனுடன் பாமினி அரசின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகத் திகழ்ந்தார். கொங்கணம், ஒரிசா, விஜயநகர மன்னர்களுக்கு எதிராக வெற்றிகரமாகப் போரை நடத்தினார். சிறந்த நிர்வாக நுணுக்கங்களை அறிந்திருந்த இவர் பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தைப் பயன்படுத்தினார். மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திச் சிறப்பான ஆட்சி அமைப்புக்கு கவான் அடித்தளமிட்டார். பாமினி அரசை நிர்வகிக்க வசதியாக நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே எல்லை வரையறை செய்யப்பட்டு அவற்றிற்கெனத்

11th History Lesson 12 Tamil Medium.indd 193 01-12-2022 19:57:29

தனித்தனியே ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். சில மாவட்டங்களை கவானே தன் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். ஆளுநர்களின் ராணுவ அதிகாரத்தை குறைத்தார். ஒரு ஆளுநருக்கு ஒரு கோட்டையே அனுமதிக்கப்பட்டது. மற்ற கோட்டைகள் சுல்தானின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. அரசு அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதில் நிலங்கள் தரப்பட்டன.

கவான் அறிமுகப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் அரசின் நிலையை உயர்த்தின. ஆனால் மாகாணத் தலைவர்களுக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவர்களில் பலர் தக்காணத்தை சேர்ந்தவர்களாவர். தக்காணத்தில் அவர்களுக்கிடையே இரு பிரிவுகள் உண்டாயின. அவ்விரு பிரிவினர் 1) தக்காண முஸ்லீம்கள் 2) வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்கள் ஆவர். அவ்விரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலால் நிர்வாகச் சீர்குலைவும் வீழ்ச்சியும் ஏற்பட்டன. இந்தப் போட்டியில் கவான் பலியானார். கவானின் வளர்ச்சியால் பொறாமை கொண்ட அவர்கள் கவான் சுல்தானுக்கு எதிராக சதி செய்கிறார் என்னும் போலிக் கடிதத்தை தயாரித்து சுல்தானின் கைகளில் கிடைக்குமாறு செய்தனர். ஏற்கனவே கவான் தன் மீது ஆதிக்கம் செலுத்துவதாக எண்ணிய சுல்தான் அவர்மீது அதிருப்தி கொண்டார். சுல்தானுடன் இருந்த விரிசலைச் சரி செய்ய கவான் அவரிடம் மன்னிப்பு கோரினார். ஆனால் சுல்தான் மன்னிக்கத் தயாராக இல்லை. அரசனுக்கெதிராகச் செயல்பட்டதாக கவான் கொல்லப்பட்டார். சுல்தான் மூன்றாம் முகம்மதுவின் ஆட்சியின் வீழ்ச்சிக்கு கவானின் மறைவு காரணமாயிற்று.

கோல்கொண்டா கோட்டை : ராஜா கிருஷ்ண தேவ் என்ற வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்ட காகத்திய வம்ச அரசர் கட்டிய கோட்டை இது. 1495–1496இல் இக்கோட்டை சுல்தான் குலிகுதுப்ஷாவிற்கு ஒரு ஜாகீராகத் (நிலமாக) தரப்பட்டது. அவர் அக்கோட்டையைக் கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார். அதன்பின் இக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது. பிற்காலத்தில் பாமினி அரசின் கைவசமாகி, அதன்பின்னர் குதுப்ஷாகி வம்ச அரசின் தலைநகரானது. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தானான முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது. பாமினி சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குபின் இந்நகரம் வளர்ச்சியடைந்தது. 17ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது. கோஹினூர் வைரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது.

கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் என்றழைக்கப்படுகிறது. இதில் ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது. அது தர்பார் அறையிலிருந்து மலையின் கீழுள்ள அரண்மனைக்குச் செல்வதாகச் சொல்லப்படுகின்றது. இக்கோட்டையில் அரச அவையும் (Durbar Hall) உள்ளது. இதில் ஒரு மாளிகையும் உள்ளது.

கோல்கொண்டா கோட்டையில் குதுப்ஷாகியின் கல்லறையும் உள்ளது. இதில் இருவிதத் தனி வழிகள் உள்ளன. இவை கோல்கொண்டா கட்டடக்கலையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகத் கருதப்படுகிறது. பீரங்கிகள், பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும். இக்கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது. ஔரங்கசீப் எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு 1687இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக கோல்கொண்டா கோட்டையை அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.

கோல்கொண்டா கோட்டை

11th History Lesson 12 Tamil Medium.indd 194 01-12-2022 19:57:29



கலை மற்றும் கட்டடக்கலை

பாமினி அரசர்கள் குல்பர்கா, பீடார் மற்றும் பீஜப்பூர் போன்ற நகரங்களில் பல கட்டடங்களை கட்டினர். ஏராளமான மசூதிகள், மதராஸாக்கள் மற்றும் நூலகங்கள் கட்டப்பட்டன. குல்பர்காவில் உள்ள ஜாமி மஸ்ஜித், ஹைதராபாத்தில் உள்ள கோல்கொண்டா கோட்டை, பீஜப்பூரில் உள்ள கோல்கும்பாஸ் மற்றும் பீடாரில் சாந்த் மினார் ஆகியவை பாமினி கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணங்கள் ஆகும். சுல்தான்கள் இந்தோ–சாரசெனிக் பாணியிலான கட்டடக்கலைகளை உருவாக்கினர்.

பாமினி அரசின் வீழ்ச்சி

மூன்றாம் முகம்மது இறந்தபின் பாமினி அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதன்பின் அவரது வம்சத்தைச் சார்ந்த 5 மன்னர்கள் ஆட்சி செய்தனர். அரசும் நான்கு சுதந்திர அரசுகளாகப் பிரிந்தது (பீஜப்பூர், அகமது நகர், பெரார், கோல்கொண்டா). அதன்பின் ஐந்தாவதாக பீடார் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் பீஜப்பூர் வலிமையான அரசானது. பீடார், பெரார் போன்றவை அதில் இணைக்கப்பட்டன. அதே நேரத்தில் அகமது நகர், கோல்கொண்டா போன்றவை சுதந்திர அரசுகளாயின. ஆனால் பொது எதிரியான விஜயநகர அரசை எதிர்க்கும் வகையில் ஐந்து அரசுகளும் இணைந்து 1565இல் தலைக்கோட்டைப் போரில் (ராக்சஷி தங்கடி போர்) விஜயநகர அரசைத் தோற்கடித்தன. ஆனால் தலைக்கோட்டைப் போருக்குப் பின் தக்காண சுல்தானியங்கள் முகலாய அரசுடன் இணைக்கப்பட்டன.

11th History Lesson 12 Tamil Medium.indd 195 01-12-2022 19:57:29

II

12.2 விஜயநகரப் பேரரசு

தோற்றமும் விரிவாக்கமும்

விஜயநகரப் பேரரசின் உருவாக்கம் தொடர்பாக பல மரபுசார்ந்த செய்திகள் உள்ளன. சமகாலக் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில், பொதுவாக ஏற்கப்படும் கருத்து யாதெனில் சங்கமரின் இரு புதல்வர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோர் ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த பின்னர் தங்களை சுதந்திர அரசர்களாக நிலைநிறுத்திக் கொண்டு 1336இல் புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர். இந்நிகழ்வு ஹொய்சாள அரசர் மூன்றாம் பல்லாலர், மதுரை சுல்தானால் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றிருக்க வேண்டும். தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது. ஆனால் விரைவில் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான ஹொசபட்னா (ஹம்பிக்கு அருகே) என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டது. தலைநகரம் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜயநகரம் எனப் புதிய பெயர் சூட்டப்பட்டது. இதன் பின்னர் அவர்கள் தங்களை விஜயநகர அல்லது கர்நாடக–விஜயநகர அரசர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். 1346ஆம் ஆண்டு ஹரிஹரரின் முடிசூட்டுவிழா கொண்டாடப்பட்டது. வரலாற்றறிஞர்கள் ஹரிஹரர், புக்கர் தொடங்கிய இவ்வரச வம்சத்தை அவரின் தந்தையாரின் பெயரில் அல்லது மூதாதையரின் பெயரில் சங்கம வம்சம் என அழைத்தனர். விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான பன்றி (வராகம்) உருவத்தைத் தங்களது அரச முத்திரையாகக் கொண்டனர்.

சில மரபுக் கதைகளின்படி புகழ்பெற்ற சைவத் துறவியும், சமஸ்கிருத அறிஞருமான வித்யாரண்யர் (மாதவர்) அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரரும் புக்கரும் சுல்தான் துக்ளக்கிடம் செய்துவந்த பணியிலிருந்து விலகி, சுல்தானால் சிறை பிடிக்கப்பட்டபோது முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்த இவர்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர் என்று கூறப்படுகிறது. விஜயநகரப் பேரரசு நிறுவியதில் வித்யாரண்யர் முக்கியப் பங்காற்றினார். ஆனால் இது சந்தேகத்திற்குரியது என்பர். ஏனெனில் சில கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அதாவது விஜயநகரப் பேரரசு உருவான அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர்.

விஜயநகர அரசு நான்கு அரச வம்சத்து அரசர்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டது. சங்கம வம்சம் (1336–1485), சாளுவ வம்சம் (1485–1505), துளுவ வம்சம் (1505–1570), ஆரவீடு வம்சம் (1570–1650) என இவ்வரசின் வரலாற்றை நான்கு கட்டங்களாக விவரிக்கலாம்.

தொடக்கத்தில் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ளூர் தலைவர்களால் ஆளப்பட்டு வந்த பல சிற்றரசுகளைப் போலவே விஜயநகர அரசும் இருந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டின் பெரிய அரசுகளான தமிழ்நாட்டில் பாண்டியர், கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாளர், ஆந்திர காகத்தியர் ஆகிய மூன்று அரசுகளும் பதினான்காம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்புகளால் அழிவுற்று பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த இச்சூழ்நிலை சங்கம வம்சத்தை சேர்ந்த ஹரிஹரர் முதலான ஐந்து சகோதரர்களுக்கு தங்கள் பகுதிகளை ஒருங்கிணைக்கவும் விரிவாக்கம் செய்யவும் வாய்ப்பினை வழங்கியது. மேலும் சற்றே முன்னதாக உருவாக்கப்பட்ட மதுரை சுல்தானியமும், 1347இல் உருவான பாமினி அரசும் தில்லியின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர அரசுகளாயின. தில்லி சுல்தானியமே பலவீனம் அடைந்ததால் அது தென்னிந்தியாவின் மேல் அதிக ஆர்வம் காட்டவில்லை.

விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாகக் குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது. முதலில் கர்நாடகாவில் ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகள் விஜயநகரோடு இணைக்கப்பட்டன. தொடர்ந்து கர்நாடகாவின் கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவை இறுதிவரை நாட்டின் முக்கியப் பகுதியாகவே இருந்தன. பல துறைமுகங்களைச் சென்றடையும் வாய்ப்பினை இப்பகுதி கொண்டிருந்ததால் இப்பகுதியின் பிரதானிகள் அல்லது ஆளுநர்கள் இப்பகுதியின் நிர்வாகத்தில் அக்கறை செலுத்தினர். முதலாம் புக்கரின் ஆட்சியின் போது தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது. தமிழகத்தின் வட மாவட்டங்களை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதியை சம்புவராயர் ஆண்டு வந்தனர். இளவரசர் கம்பணர்–ஆல் (வழக்கமாக குமார கம்பணர் என்பர்) தன் நம்பிக்கைக்குரிய தளபதி மாரையா நாயக்கரின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக முடித்தார். மேலும் மதுரை

11th History Lesson 12 Tamil Medium.indd 196 01-12-2022 19:57:29

சுல்தானை 1370இல் கொன்றதன் மூலம் மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த பெருமையும் குமார கம்பண்ணாவைச் சாரும். இச்செய்தி குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி சமஸ்கிருத மொழியில் எழுதிய 'மதுரா விஜயம்' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மதுரை உள்ளிட்ட பாண்டிய நாடு அப்போது விஜயநகர அரசோடு இணையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1500 வாக்கில் பாண்டிய நாடு விஜயநகர அரசின் ஒரு பகுதியானது. அதுவரையிலும் தமிழகத்தின் வடபகுதிகளும் காவேரி வடிநிலப் பகுதி வரையிலான மத்தியப் பகுதிகளுமே சங்கம–சாளுவவம்ச அரசுகளின் நேரடி நிர்வாகத்தின் கீழிருந்தன.

விஜயநகர் – பாமினி மோதல்

தொடக்கத்திலிருந்தே பாமினி விஜயநகர அரசுகள் தொடர்ந்து மோதிக் கொண்டன. இடங்களைக் கைப்பற்றுதல், கப்பம் வசூலித்தல், குதிரை வாணிகத்தின் மேலான கட்டுப்பாடு ஆகியவற்றில் ஏற்பட்ட போட்டியே மோதல்களுக்கான முக்கியக் காரணங்களாகும். கிருஷ்ணா, துங்கபத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட வளம் மிக்க ரெய்ச்சூர் பகுதியை இணைத்துக்கொள்ளவும், மேலாதிக்கம் செலுத்தவும் இருவருமே விரும்பினர். ஆனால் இருவராலும் முழுமையான வெற்றியைப் பெற இயலவில்லை. நிலையற்ற சிறிய வெற்றிகளுக்காகப் பெருமளவில் ரத்தம் சிந்தப்பட்டது. சில வரலாற்று ஆய்வாளர்கள் இந்து விஜயநகரத்திற்கும் இஸ்லாமிய பாமினி அரசுகளுக்கு இடையே நிலவிய மதப் பகைமையே தொடர்ந்த போர்களுக்கான அடிப்படைக் காரணமென்று கருதுகின்றனர். ஆனால் உண்மையில் விஜயநகர அரசர்கள் முஸ்லீம்கள் அல்லாத இந்து அரசுகளான வாராங்கல், கொண்டவீடு, ஒரிசா ஆகியவற்றுடன் போரிட்டபோது முஸ்லீம் அரசுகள் சில சமயம் விஜயநகருக்கு ஆதரவாகவும் சில சமயம் எதிர்தரப்புக்கு ஆதரவாகவும் பங்கேற்றனர். கோவா மற்றும் ஏனைய துறைமுகங்கள் வழியாக நடைபெற்ற குதிரை வாணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதில் ஏற்பட்ட போட்டி இப்போர்களுக்கு மற்றொரு காரணமாகும். தொடர்ந்து போரிட்டுக்கொண்டாலும் கிருஷ்ணா நதியே ஏறக்குறைய இவ்விருவரையும் பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.

ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவைச் சேர்ந்த கஜபதி அரசுக்கும் விஜயநகருக்குமிடையே நடைபெற்றது. இரண்டாம் தேவராயர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்வரை இப்பிரச்சனையில் விஜயநகரால் பெரும் வெற்றி என எதையும் பெற இயலவில்லை. இரண்டாம் தேவராயர் (1422–46) ஒரியர்களைச் சில போர்களில் தோற்கடித்தார். இப்போர்கள் அனைத்தும் கப்பம் வசூல் செய்வதற்காகவே நடைபெற்றன. இடங்கள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்படவில்லை. சங்கம வம்ச அரசர்களுள் மிகச் சிறந்த அரசர் இரண்டாம் தேவராயர் ஆவார். தன்னுடைய குதிரைப் படையின் வலிமையைப் பெருக்குவதற்காகப் பயிற்சி பெற்ற முஸ்லீம் குதிரைப்படை வீரர்களைத் தனது படைகளில் சேர்த்துக் கொண்டார். இரண்டாம் தேவராயரின் காலத்தில் இங்கு வந்த பாரசீக நாட்டின் தூதுவர் அப்துர் ரஸாக் கொச்சி சாமரின் அரசவைக்கும் விஜயநகரத்திற்கும் வருகை தந்தார். இரண்டாம் தேவராயர் மிகப்பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தினார் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாம் தேவராயர் இலங்கை அரசனிடமிருந்தும் கப்பம் பெற்றார்.

இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் பிரச்சனைகள் தலைதூக்கின. வாரிசுரிமைச் சண்டைகளும் திறமையற்ற அரசர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதின் விளைவாக கஜபதி அரசர்கள் ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். 1460–65க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன. மேலும் திருச்சிராப்பள்ளி வரை வெற்றிகரமாகப் படையெடுத்து வந்த கஜபதி படைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு கோவில்களின் செல்வத்தையும் கொள்ளையடித்தன. இச்சூழலை சாதகமாகப் பயன்படுத்திய குறுநில மன்னர்கள் சுதந்திர அரசர்களாயினர். சாளுவ வம்ச அரசர்களின் எழுச்சி வரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பகுதிகளில் திருமலைத்தேவர், கோனேரித்தேவர் போன்ற குறுநில மன்னர்கள் ஒரு சில பத்தாண்டுகள் சுதந்திர அரசர்களைப் போல ஆட்சி நடத்தினர்.

காலத்தின் நகர்வில் அரசியல் அதிகாரம் நம்பிக்கைக்குரிய தளபதி சாளுவ நரசிம்மரின் கைகளுக்குச் சென்றது. அவர் கஜபதிகளிடமிருந்து நாட்டைக் காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்டார். 1485இல் அரசாட்சியைக் கைப்பற்றி தன்னையே அரசரென அறிவித்து, குறுகிய காலமே ஆட்சி செய்து சாளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவருடைய தளபதியும் மாபெரும் போர்வீரருமான நரச நாயக்கர் அவருக்குத் துணை நின்றார். அவர் தென்பகுதியில் கலகத்தில் ஈடுபட்ட உள்ளூர் தலைவர்களை அடக்க முயன்றார். 1491இல் சாளுவநரசிம்மர் மரணமடைந்தார். அதற்கு முன்பாக தனது இளம் வயது மகன்களை நரச நாயக்கரின் பாதுகாப்பில்

11th History Lesson 12 Tamil Medium.indd 197 01-12-2022 19:57:30

விட்டுச் சென்றார். உண்மையான ஆட்சி அதிகாரம் தனது கைகளுக்கு வரப்பெற்ற நரச நாயக்கர் தனது மரணம் வரையிலும் நாட்டைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1505இல் அவருடைய மூத்த மகன் வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். சிறிது காலமே ஆட்சி செய்தாலும் அவரது ஆட்சிக் காலம் முக்கிய நிகழ்வுகளைக் கொண்டதாய் அமைந்தது. அவரைத் தொடர்ந்து அவருடைய தம்பி கிருஷ்ணதேவராயர் அரியணை ஏறினார்.

கிருஷ்ணதேவராயர் (1509–1529)

கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசர்களில் மகத்தானவராகக் கருதப்படுகிறார். தனது தந்தையும் அண்ணனும் அமைத்துக் கொடுத்த வலுவான ராணுவ அடித்தளத்தின் மீது அவர் ஒரு பேரரசைக் கட்டினார். தனது நாட்டின் பெருமைக்குக் குறை ஏற்படாமலிருக்கப் பல படையெடுப்புகளை மேற்கொண்டார். தனது ஆட்சியின் தொடக்கத்தில் மைசூருக்கு அருகேயிருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனைத் தோற்கடித்துப் பணியச் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் இரு முனைகளில் போரிட வேண்டியிருந்தது. ஒன்று பரம்பரை எதிரிகளான பாமினி சுல்தான்களுடன், மற்றொன்று ஒரிசாவின் கஜபதி அரசர்களுடன். அவருடைய கிழக்குத்திசை படையெடுப்பின்போது கஜபதி அரசர்களின் வசமிருந்த உதயகிரி கோட்டையைப் போன்று பல கோட்டைகள் கைப்பற்றப்பட்டதைப் பற்றிப் பல கட்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன. முடிவில் அவர் தனது வெற்றித் தூணை சிம்மாச்சலத்தில் நிறுவினார்.

பாமினி படைகளை முறியடிப்பதற்காகக் கிருஷ்ணதேவராயர் ஒன்றுக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை ஆண்டுதோறும் மேற்கொள்ள நேர்ந்தது. ஏனெனில் ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாமினிப் படைகள் விஜயநகரை ஊடுருவின. ஒரு சில படையெடுப்புகளின்போது, மலபார், கொங்கணக் கடற்கரைப் பகுதிகளில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவுவதற்கு முயன்றுகொண்டிருந்த போர்த்துகீசியர் விஜயநகருக்கு இராணுவ உதவிகளைச் செய்தனர். மேலும் பத்கல் என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையைப் பெற்றனர். அவர் மிகப்பெரும் வெற்றியாளராக இருந்தபோதிலும் கிருஷ்ணதேவராயர் பெற்ற வெற்றிகள், தங்களுக்கிடையே தொடர்ந்து போர் செய்து கொண்டிருந்த தக்காண சுல்தானிய அரசுகளை ஒற்றுமை கொள்ளச் செய்தன.

கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசின் மகத்தான அரசர் எனப்போற்றப்படுவதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. ஸ்ரீசைலம், திருப்பதி, காளஹஸ்தி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சைவ, வைணவக் கோவில்களுக்குப் பெருமளவில் கொடையளித்தார். பல கோவில்களில் அவர் எழுப்பிய கோபுரங்கள் இன்று வரை உள்ளன. விஜயநகருக்கு வருகை தந்த சமகாலத்து வெளிநாட்டுப் பயணிகளான நூனிஸ், பயஸ் போன்றோர் அவருடைய ஆளுமை குறித்தும் விஜயநகரத்தின் உயர் நிலை, செல்வச் செழிப்பு ஆகியன பற்றியும் பாராட்டுகளை விட்டுச் சென்றுள்ளனர். அவருடைய அரசவையை அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர். கிருஷ்ண தேவராயரே பெரும் அறிஞராக கருதப்படுகிறார். ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார். ஆனாலும் அவருடைய தலை சிறந்த சாதனை, ஒரு மதிநுட்பம் மிக்க நிர்வாகியாக அவர் நாயக்கர் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைப்பு செய்து அதற்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுத்ததாகும். அது நிர்வாக முறை என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

தலைக்கோட்டைப் போர் (1565)

கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரர் அச்சுததேவராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் விரைவிலேயே வாரிசு உரிமைப் பிரச்சனை தலை தூக்கியது.

தலைக்கோட்டைப் போர்

11th History Lesson 12 Tamil Medium.indd 198 01-12-2022 19:57:30

கிருஷ்ணதேவராயரின் மருமகனான ராமராயர் அச்சிறு வயது இளவரசனுக்குப் பட்டம் சூட்டுவதன் வழியாக அரசியல் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார். இருந்தபோதிலும் அச்சுதராயருக்கு செல்லப்பா (சாளுவநாயக்கர் என்றும் அறியப்படுபவர்) என்பாரின் ஆதரவு இருந்தது. அக்கால கட்டத்தில் சிறப்பிடம் வகித்த இவர் தமிழகத்தின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். காலப்போக்கில் இவரே கிளர்ச்சியில் ஈடுபட அச்சுதராயர் பெரும்படையோடு தென்னகம் வந்து இவரை அடக்கினார். அச்சுத தேவராயர் பாமினி சுல்தான்களோடும் சில போர்களை மேற்கொண்டார். 1542 இல் அவர் மரணமடைந்தபோது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அரச பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆண்டார் (1542–70). ஆனால் உண்மையான அதிகாரம் ராமராயரின்கைகளில் இருந்தது. பல நெருங்கிய உறவினர்களின் (ஆரவீடு வம்சாவளியினர்) ஆதரவு அவருக்கு இருந்தது. அரசின் பல முக்கியப் பொறுப்புகளில் அவர் தன் உறவினர்களை அமர்த்தினார்.

சிறந்த வீரரும் ராணுவ வல்லுநருமான ராமராயர் பாமினி சுல்தான்களை ஒருவரோடு ஒருவரை மோதச் செய்யும் திறமை பெற்றிருந்தார். போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள் அனுப்பப்படுவதை நிறுத்தினார். சில காலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கைகோர்த்தார். இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சி விஜயநகருக்கு எதிராகப் பெரும் பகையை வளர்த்தது. இதன் விளைவாக, தக்காண சுல்தான்கள் தங்களது பரஸ்பர பகையை மறந்து ஒன்றுபட்டு, பொது எதிரிக்கு எதிராக இறுதிப்போர் புரிய கைகோத்தனர். ஜனவரி 23, 1565இல் தலைக்கோட்டை அல்லது ராக்சஷி–தங்கடி போர் நடைபெற்றது. தனது வயது முதிர்வையும் பொருட்படுத்தாது ராமராயரே படைப்பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று தனது சகோதரர்கள், ஏனைய உறவினர்களோடு போர்க்களம் புகுந்தார். போரின் இறுதிக் கட்டத்தில் விஜயநகரம் தோல்வியடைந்தது. ராமராயர் கைது செய்யப்பட்டு உடனடியாகக் கொல்லப்பட்டார். வெற்றிபெற்ற பாமினிப் படைகள், தங்களது வரலாற்றில் முதன்முறை விஜயநகரத்துக்குள் புகுந்தன. பல மாதங்கள் அந்நகரைக் கொள்ளையடித்துச் சூறையாடி பாழ்படுத்தின.

பொதுவாக இப்போர் விஜயநகர் அரசின் முடிவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அரசர் சதாசிவராயரும் அவருடைய வீரர்களும் பெனுகொண்டாவுக்குத் தப்பிச் சென்றனர். ராமராயரின் சகோதரர் திருமலை 1570இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரசமரபான ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகன்களும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இருதலைமுறை காலத்திற்கு 1630 வரை ஆட்சி புரிந்தனர். வேறுசில அரசர்கள் நிரந்தரத் தலைநகரமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர். பல நாயக்கத் தலைவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உண்மையான அதிகாரத்தோடு ஆட்சி புரிந்தனர். அவர்களில் சிலர் அரசரை ஆதரித்தனர். வேறுசிலர் அரசரை எதிர்த்தனர். இவ்விரு பிரிவுகளுக்கிடையே சில போர்கள் நடைபெற்றனர். 1601இல் அரசு விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம நாயக்கர் தலைமையிலும் எதிர் தரப்பினர் வேலூர் நாயக்கர் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேரூரில் கடுமையான போரில் ஈடுபட்டனர். இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கரை ஆதரித்தனர்.

12.3 நிர்வாகம்

அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார். அவரே படைத்தளபதியும் ஆவார். அவருக்குப் பல உயர்மட்ட அதிகாரிகள் உதவி செய்தனர். முதலமைச்சர் மகாபிரதானி என்றழைக்கப்பட்டார். தளவாய் (தளபதி), வாசல் (அரண்மனைப் பாதுகாவலர்), ராயசம் (செயலர்/கணக்கர்), அடைப்பம் (தனி உதவியாளர்), காரிய கர்த்தா (செயல் முகவர்) போன்ற கீழ்நிலை அதிகாரிகளுக்கு இவரே தலைமையாவார். முதலாம் ஹரிஹரரும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து அவற்றில் நிர்வாக அமைப்புகளை உருவாக்க முயன்றனர். ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார். ஹொய்சாள, ராஜ்யா, அரகா, பரகூர், மங்களூர், முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும். புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்பட்ட போது புதிய ராஜ்யாக்கள் உருவாயின. 1400இல் தமிழகப் பகுதிகளில் சந்திரகிரி, படைவீடு, வலுதலம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் என ஐந்து ராஜ்யங்கள் இருந்தன. பிரதானி அரசவை உறுப்பினராகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ இருப்பார். இவர் அரச குடும்பத்திற்கு உறவினர் அல்ல. நிர்வாகத்தில் அவருக்கு உதவி செய்யக் கணக்கர்களும் ராணுவ அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

11th History Lesson 12 Tamil Medium.indd 199 01-12-2022 19:57:30

ஒவ்வொரு ராஜ்யமும் நாடு, சீமை, ஸ்தலம், கம்பனா எனும் சிறிய நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமமாகும். துளுவ வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரால் நாயக்கர் முறை அறிமுகமானபோது ராஜ்யங்கள் தங்களது நிர்வாக, வருவாய் முக்கியத்துவத்தை இழந்தன.

நாயக்க முறை

நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இராணுவத்தலைவர், அல்லது இராணுவவீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டில் காகத்திய அரசில் ஒரு நாயக்கின் இராணுவ சேவைக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாயை வழங்கும் முறை நடைமுறையில் இருந்தது. இது தில்லி சுல்தானியத்தில் பின்பற்றப்பட்ட 'இக்தா' முறையைப் போன்றதாகும். ஆனால் விஜயநகர அரசில் இராணுவ சேவைக்குப் பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று. கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக்கட்டணம் எனவும், நாயக்தானம் என கன்னடத்திலும், நாயன்கரமு எனத் தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன. இம்முறையானது கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் ஆகியோரின் ஆட்சியின்போது நிறுவன வடிவம் பெற்றது.

கல்வெட்டுச் சான்றுகளும் நூனிஸ், பயஸ் போன்ற வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளும் இதை உறுதி செய்கின்றன. விஜயநகர அரசு இருநூறுக்கும் மேற்பட்ட நாயக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் அந்நாயக்குகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, காலாட்படை வீரர்களைப் பராமரித்து தேவைப்படும் நேரத்தில் அரசருக்கு இராணுவச் சேவை செய்ய வற்புறுத்தப்பட்டார்கள் எனவும் நூனிஸ் குறிப்பிடுகின்றார். மேலும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமயங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட அளவு வருவாயை வழங்க வேண்டும். நூனிஸின் கூற்றை 'ராயவாசகமு' என்னும் தெலுங்கு நூல் உறுதிப்படுத்துகிறது. இந்நூல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இம்முறை நடைமுறையில் இருந்ததைக் கூறுகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களின் வம்சாவளிகள் (அவர்களில் பெரும்பாலோர் பழைய நாயக்கர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) இந்நாயக்க முறையானது கிருஷ்ணதேவராயர் காலத்தில் நிறைவு பெற்றது எனக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான நாயக்கர்கள் கன்னடம், தெலுங்கு பேசுபவர்கள். இவர்கள் போர்த்தளபதிகளாகவும் இருந்தனர். உள்ளூர்த் தலைவர்களாகவும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். நாயக்குகள் பிராமண, பிராமணர் அல்லாத பல சாதிகளைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். பிராமணரல்லாத நாயக்குகள் பல்வேறு சமூகப் பின்னணியைக் கொண்டிருந்தனர். போர்புரியும் மரபினைச் சார்ந்தவர்களாகவும், மேய்ச்சல் தொழில் செய்பவர்களாகவும், வனங்களில் வாழும் குலத்தோராகவும் (யாதவர், பில்லமர்), விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர்களாகவும் (ரெட்டி) வணிகர்களாகவும் (பலிஜா) இருந்தனர். கிருஷ்ணதேவராயரிடம் பணிபுரிந்த செல்லப்பா போன்ற மிகச்சிறந்த நாயக்குகள் பிராமணர்கள் ஆவர்.

இராமநாதபுரம்,புதுக்கோட்டை சிற்றரசுகள்: இராமநாதபுரம் சிற்றரசு மதுரை நாயக்க அரசர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் துவங்கிவைக்கப்பட்டது. போர் புரியும் மரபினைக் கொண்டிருந்த இப்பகுதி வாழ் மக்கள் பாண்டிய சோழ விஜயநகர அரசர்களிடம் படை வீரர்களாகப் பணியாற்றினர். மேலும் திருநெல்வேலி, தென் தமிழகப் பகுதி ஆகியவற்றிலும் பரவினர். நாயக்க மன்னர்களின் படைகளிலும் பணியாற்றிய இவர்கள், பரம்பரைக் காவல்காரர்களாக கிராமங்கள், கோவில்கள் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பணியையும் செய்து வந்தனர். இராமேஸ்வரம் கோவில், உடையான் சேதுபதி (இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீர் இணைப்பின் அல்லது பாலத்தின் தலைவர் என்று பொருள்) என்பவரின் பாதுகாப்பின் கீழிருந்தது.

புதுக்கோட்டை ஒரு சிறிய சிற்றரசாக மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க அரசுகளின் இடையில் அமைந்திருந்தது. முந்தைய காலத்தில் சோழ பாண்டிய அரசுகளுக்கிடையே இடைப்படு நாடாக இருந்துள்ளது. இராமநாதபுரம் பகுதி வாழ் மக்களைப் போலவே புதுக்கோட்டை பகுதி வாழ் மக்களும் போர் புரியும் மரபை சார்ந்தவர்களாவர். இதன் காரணமாகவே தொண்டைமான்களின் தலைமையில் இப்பகுதி ஒரு சிற்றரசு என்னும் மதிப்பைப் பெற்றது. இத்தொண்டைமான்கள் சேதுபதி, மதுரை, தஞ்சை நாயக்க அரசர்களின் அரண்மனைகளில் முக்கியப் பணிகளில் பணியாற்றினர்.

11th History Lesson 12 Tamil Medium.indd 200 01-12-2022 19:57:30

கிருஷ்ணதேவராயரைப் போன்ற வலிமையான அரசர்கள் இருந்தவரை இம்முறை சிறப்பாகச் செயல்பட்டது. இந்நாயக்குகள் நாயக்கத்தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினர். 'பேட்டை' எனும் வணிக மையங்களை நிறுவினர். விவசாயிகளையும் கைவினைஞர்களையும் தங்கள் பகுதிகளில் குடியேற ஊக்குவித்து வரிச் சலுகைகள் வழங்கினர். நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கிப் பராமரித்தனர். அவர்களில் பலர் உயர்மட்டப் பணிகளில் (ஆளுநர், படைத்தளபதி, கணக்கர்) அமர்த்தப்பட்டு அரசரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டனர். தலைக்கோட்டை போருக்குப் பின்னர் பெரும்பாலான நாயக்குகள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் மதுரை, தஞ்சாவூர், இக்கேரி போன்ற நாயக்குகள் வலுவான அரசுகளை உருவாக்கிக் குறுநிலத் தலைவர்களைக் கட்டுப்படுத்தினர். பதினேழாம் நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.

12.4 சமூகமும் பொருளாதாரமும்

தொடர் போர்களும் அவற்றின் விளைவாக ஏற்பட்ட அளவிலாத் துயரங்களும் தொடக்ககால, இடைக்கால சமூகங்களின் பொதுவான அம்சங்களாகும். பாமினி விஜயநகர் அரசுகளின் காலமும் இதற்கு விதிவிலக்கல்ல. கண்களால் பார்த்த சாட்சியங்களின் குறிப்புகள் அதிக அளவில் கிடைப்பதால் இவ்வம்சம் பெரியதாகவே தெரிகிறது. மற்றொரு முக்கியமான, நூற்றாண்டுகளைக் கடந்து நீடித்திருக்கும் விளைவு மக்கள் இடம் விட்டு இடம் சென்றதும் புலம் பெயர்ந்ததுமாகும். இப்பாடத்தில் நாம் காணும் மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் அனைத்து இடங்களிலும் இதுபோன்ற குடிபெயர்வைக் காணமுடிகிறது. பாமினி அரசவைகளில் நடைபெற்ற மோதல்களுக்குத் தக்காணப் பகுதிகளில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர் ஆகியோர் குடியேறியதே காரணமாயிற்று. விஜயநகரப் பகுதிகளைப் பொறுத்த அளவில் கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களும் அவர்களைச் சேர்ந்தோரும் தமிழகப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் குடியேறினர். பெரும்பாலான நாயக்கத் தலைவர்கள் இவ்விரு மொழியினரே. மற்றொரு முக்கிய விளைவு ஆளும் வர்க்கத்தினருக்கும் ஆட்சி செய்யப்பட்டவர்களுக்கும் இருந்த மிகப் பெரிய இடைவெளியாகும். அனைத்து அயல்நாட்டு பயணிகளும் அரசர்கள், அரசு அதிகாரிகள், சமூகத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள், விஜயநகரம், பீஜப்பூர் போன்ற நகரங்களில் வாழ்ந்தோரின் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் குறிப்பிடும்போதே பெருவாரியான மக்கள் வறுமையில் வாடியதையும் குறிப்பிட்டுள்ளனர். அடிமைமுறை நிலவியதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் மீது வரிவிதிப்பின் மூலமே அரசு வருமானத்தைப் பெற்றது. சங்கம வம்ச அரசர்களின் காலத்தில் விஜயநகரத்தின் ஆட்சி புதிய பகுதிகளுக்குப் பரவியபோது வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டதால் உழைக்கும் மக்கள் கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி 1430இல் தமிழ்நாட்டின் மையப்பகுதிகளில் நடைபெற்றுள்ளது. இக்கிளர்ச்சியில் அடிப்படை உற்பத்தியாளர்கள் தங்கள் சாதி வேறுபாடுகளைப் புறந்தள்ளி ஒன்றுபட்டிருந்தனர். அரசு பிரதானி (ஆளுநர்) அவருடைய படைவீரர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் உட்பட நியாயத்திற்குப் புறம்பாக அதிக வரி கட்டும்படி மக்களை வற்புறுத்தியதன் காரணமான இக்கிளர்ச்சி ஏற்பட்டது. விஜயநகர இளவரசர் இது விஷயத்தில் நேரடியாகத் தலையிட்டு மக்களைச் சமாதானப்படுத்தி வரித் தொகையைக் குறைத்ததாகக் கூறப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வப்போது வரிச்சலுகை வழங்கினர்.

விஜயநகர அரசின் காலத்தில் வேளாண் சாராத கைவினைத் தொழில் உற்பத்தி வியத்தகு வளர்ச்சியை அடைந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பொருளாதாரம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்தது. பணப் பொருளாதாரத்தின் தொடக்கத்தோடு, நாணயப் பணத்தின் பயன்பாடும், அதன் செலாவணியும் பலமடங்காகப் பெருகியது. சமூகத்தில் நெசவு செய்வோர் உலோக வேலை செய்வோர். கட்டடக் கலைஞர்கள் போன்ற கைவினைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வேளாண் அல்லாத பிரிவுகளைச் சார்ந்த 'பட்டடை' அல்லது 'காஸய–வர்க்கம்' என்றழைக்கப்பட்ட இவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர். தமிழகத்தின் வடபகுதி, ராயலசீமை, ஆந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிகமையங்களும் நெசவு மையங்களும் உருவாயின. இயல்பாகவே தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் ஜவுளி முக்கியப் பண்டமாக விளங்கியது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஜவுளி வணிகமானது இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர் மற்றும் ஏனைய ஐரோப்பிய வணிகர்களைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாகும்.

11th History Lesson 12 Tamil Medium.indd 201 01-12-2022 19:57:30

12.5 இலக்கியம்

விஜயநகர அரசர்கள் இலக்கியத்தின் சிறந்த புரவலர்களாக இருந்தனர். அரசர்கள் வடமொழி (சமஸ்கிருதம்), தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட இலக்கியங்களையும் மொழிகளையும் ஊக்குவித்தனர். கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இலக்கியம் வளர்ச்சியின் உச்சத்தை எட்டியது. கலை மற்றும் இலக்கியத்தின் சிறந்த புரவலராக இருந்த அவர், 'ஆந்திர போஜா' என்று அழைக்கப்பட்டார்.

அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த சமஸ்கிருத அறிஞரான சயானா, வேதங்கள் குறித்த விளக்கவுரைகளை எழுதினார். அந்த விளக்கவுரைகள் இன்றும் தரமான விளக்கவுரைகளாக கருதப்படுகின்றன. அவர் இரண்டாம் ஹரிஹராவின் அமைச்சராக இருந்தார். மாதவச்சார்யா ஒரு பிரபலமான வடமொழி அறிஞர், அவர் விஜயநகர அரச குடும்பத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். புக்கரின் மகன் கம்பனாவின் மனைவியான கங்காதேவி, அக்கால எழுத்தாளர்களில் மிகச் சிறந்தவர். அவர் தனது புகழ்பெற்ற படைப்பான மதுரா விஜயம் எனும் நூலில் தனது கணவர் மதுரையை வென்றதை மகாகாவிய பாணியில் விவரிக்கிறார். அந்த காலத்தில் பிரபல கவிஞர்கள் ஹன்னம்மா மற்றும் திருமலம்மா ஆகியோர் ஆவர். ஹன்னம்மா இரண்டாம் தேவராயரின் அவையில் இருந்த ஒரு பெண் செய்தியாளராவார்.

கிருஷ்ணதேவராயர் தமிழ் அறிஞர்களை ஆதரித்தார். சைவ, வைணவ மற்றும் சமண சமய தமிழ் அறிஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். திருமலைநாதரும் அவரது மகன் பரஞ்ஜோதியாரும் அக்காலத்தில் நன்கு அறியப்பட்ட அறிஞர்கள் ஆவர். சிதம்பர புராணம் மற்றும் சொக்கநாதருலா ஆகியவை திருமலைநாதரால் எழுதப்பட்டன. சேவ்விட்ச்புதவர் பாகவத புராணத்தை தமிழில் மொழிபெயர்த்தார். வதமலவி அன்னகாலையம், வைஷ்ணவ மதம் குறித்த ஒரு படைப்பான இருசமய விளக்கத்தை எழுதியவர் ஆவார்.

நச்சனா சோமநாதா வடமொழி, தெலுங்கு ஆகிய இரண்டு மொழியிலும் புலமைபெற்ற அறிஞராக இருந்தார். ஆயினும், காளிதாசரின் சாகுந்தலத்தின் தெலுங்கு பதிப்பை வசனத்தில் இயற்றிய பிள்ளலமரி பினா வீராபத்ரா கவி அந்தக் காலத்தில் மிகப் பெரிய கவிஞர் ஆவார். முதலாம் தேவராயர் சிறந்த புரவலராக இருந்தார். ஹரவிலாசம் எழுதிய பிரபல தெலுங்கு கவிஞர் ஸ்ரீநாதா அவரது அவையில் இருந்தார்.

அஷ்டதிக்கஜங்கள் (எட்டு புகழ்பெற்ற கவிஞர்கள்)

அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன், துர்ஜதி, பட்டு மூர்த்தி, புணவீரபத்ரன், மல்லானா மற்றும் பனாஜி சூரனா.

கிருஷ்ணதேவராயர் 'அபினவா போஜா' என்றும் அழைக்கப்பட்டார். எட்டு சிறந்த தெலுங்கு கவிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். அவர்கள் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்டனர். அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன் மற்றும் மேலும் பலர் அவரது அவையில் தெலுங்கு கவிஞர்களாக இருந்தனர். மிகச் சிறந்தவரான அல்லசானி பெத்தண்ணா 'ஆந்திரகவித பிதாமகா' என்று வர்ணிக்கப்பட்டார். தெலுங்கில் மனுசரிதத்தை எழுதியவர் அல்லசானி பெத்தண்ணா. கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்த தெனாலிராமன் மிகவும் பிரபலமான அறிஞர் மற்றும் நகைச்சுவையாளர் ஆவார். இவர் பாண்டுரங்க மகாத்மியம் என்ற நூலின் ஆசிரியராவார். கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் அமுக்தமால்யதா எனும் நூலை எழுதினார். இது பெரியாழ்வாரின் மகள் கோதை தேவி (ஆண்டாள்) கதையோடு தொடர்புடையது. அவர் வடமொழி மற்றும் தெலுங்கு மொழி அறிஞராகவும் இருந்தார். உஷா பரிணயம் மற்றும் ஜாம்பாவதி கல்யாணம் ஆகியவை அவரது புகழ்பெற்ற வடமொழி படைப்புகள் ஆகும். கிருஷ்ணதேவராயரின் ஆட்சி தெலுங்கு மொழி இலக்கியத்தின் செவ்வியல் கால கட்டமாகக் கருதப்படுகிறது. எனவே அவர் ஆந்திர பிதாமகா என்று போற்றப்படுகிறார்.

அந்த காலத்தில் கன்னடத்தில் அதிகளவிலான படைப்புகள் உருவாக்கப்பட்டன. பீமா கவி என்பவர் பசவ புராணத்தை கன்னட மொழியில் மொழிபெயர்த்தார். இரண்டாம் ஹரிஹரர் 'கர்நாடக வித்யவிலாசா' என்ற பட்டத்தை பெற்றிருந்தார். ராமாயணத்தின் கன்னட பதிப்பை குமார வெல்மிகி உருவாக்கினார்.

12.6 கலை மற்றும் கட்டடக்கலை

விஜயநகர அரசர்கள் சிறந்த கட்டட கலையார்வம் கொண்டிருந்தனர். அரண்மனைகள், கோவில்கள், பிரமாண்டமான மண்டபங்கள் (மகாமண்டபம்), கோட்டைகள், கோபுரங்கள், பொது கட்டடங்கள், அணைகள், நீர்நிலைகள் மற்றும் கால்வாய்கள் ஆகியன அக்காலத்தில் கட்டப்பட்டன. தென்னிந்திய கலை மற்றும் கட்டடக்கலை விஜயநகர ஆட்சியின் கீழ் முழுமையை அடைந்தது. விஜயநகர அரசர்கள் திராவிட பாணி எனப்படும்

11th History Lesson 12 Tamil Medium.indd 202 01-12-2022 19:57:30

புதிய கட்டடக்கலை ஒன்றை உருவாக்கினர். விஜயநகர கட்டடக்கலையின் முக்கிய பண்புகள் உயரமான ராயகோபுரங்கள் அல்லது நுழைவாயில்கள் மற்றும் கல்யாணமண்டபம் ஆகியவை ஆகும். தூண்களில் உள்ள சிற்பங்கள் தனித்துவமான அம்சங்களுடன் செதுக்கப்பட்டன. தூண்களில் சித்தரிக்கப்பட்ட மிகவும் பொதுவான விலங்கு குதிரை ஆகும். பெரிய மண்டபங்களில் நூறு தூண்களும் சில பெரிய கோவில்களில் ஆயிரம் தூண்களும் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. கல்யாண மண்டபத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு வேலூர் மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜசுவாமி, ஏகம்பரநாத கோவில்களும், திருச்சிராப்பள்ளியில் உள்ள ஜம்புகேஸ்வரர் கோவிலும் உள்ள மண்டபங்கள் ஆகும்.

விஜயநகர மன்னர்களின் காலத்தில் ஹம்பி, சிருங்கேரி, திருப்பதி, காளஹஸ்தி, நந்தி, கோலார், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் கோவில்கள் கட்டப்பட்டன. கோவில் கட்டடக்கலையில் புதிய கூறுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதுதவிர, பிரதான சன்னதிக்கு வடமேற்கில் அம்மன் ஆலயம் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய கோவில் தேவிக்காக கட்டப்பட்டது. இது பிற்கால சோழர் காலத்தில் தொடங்கிய இந்த முறையானது இப்போது நடைமுறையாகிவிட்டது.

அரசரின் அரண்மனையானது நகரத்தில் மிகவும் கவனத்தை கவர்கின்ற கட்டடமாக இருந்தது. மற்ற அம்சங்கள் குறிப்பாக விஜயநகர் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட தென்னிந்திய கோவில்களின் தனித்துவமான அம்சமான கோபுரங்கள் என்று அழைக்கப்படும் உயரமான நுழைவாயில்கள் ஆகும். திருவண்ணாமலை மற்றும் சிதம்பரத்தில் உள்ள ராயகோபுரங்கள் விஜயநகரின் புகழ்பெற்ற சகாப்தத்தைப் பேசுகின்றன. அவை பிற்காலத்தில் நாயக்கர் ஆட்சியாளர்களால் தொடரப்பட்டன.

விஜயநகரத்தின் மிகச்சிறந்த கோவில்கள் உலக பாரம்பரிய நகரமான ஹம்பியில் உள்ளன. அவர்களின் தலைநகரான விஜயநகர், துங்கபத்ரா ஆற்றின் தென் கரையில் இருந்தது. தலைக்கோட்டை (பொ.ஆ.1565) போருக்குப் பிறகு, அந்த அற்புதமான நகரம் வெற்றியாளர்களின் கோபத்திற்கு உள்ளாகி சொல்லமுடியாத அழிவையும் சிதைவையும் சந்தித்தது. விஜயநகர ஆட்சியாளர்களின் கட்டடக்கலை சாதனைகள் மற்றும் ஹம்பியின் இடிபாடுகள் ஆகியவற்றை வெளிநாட்டு பயணிகளான நிக்கோலோ கோண்டி மற்றும் அப்துர்ரசாக் ஆகியோரின் குறிப்புகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. கோவில் கட்டடக்கலையில் ஒற்றைக்கல் தூண்கள், அலங்கரிக்கப்பட்ட கையணிகள் மற்றும் சுவர்களின் வெளிப்புறத்தில் செய்யப்பட்ட அலங்காரம் ஆகியவை விஜயநகர பாணியின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

கிருஷ்ணதேவராயர் ஒரு சிறந்த கட்டடக்கலை நிபுணர் ஆவார். அவர் தனது தாயார் நாகம்பாவின் நினைவாக நாகலாபுரம் (விஜயநகருக்கு அருகில்) என்ற நகரை நிறுவினார். மேலும் பேரரசின் பல்வேறு பகுதிகளில் நீர்நிலைகள், கோபுரங்கள் மற்றும் கோவில்களைக் கட்டினார். இவற்றில் மிகவும் பிரபலமானது விட்டலசாமி கோவில் மற்றும் விருபாக் ஷா கோவில்கள் ஆகும். கிருஷ்ணதேவராயரின் ஆட்சியில் கட்டப்பட்ட புகழ்பெற்ற ஹசாரா கோவிலை "இந்து கட்டடக்கலையில் முழு நிறைவு வாய்ந்த ஓர் எடுத்துக்காட்டாகும்" என்று லாங்ஹர்ஸ்ட் குறிப்பிடுகிறார். விட்டலசாமி கோவில் விஜயநகர பாணிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். ஃபெர்குஸன் என்பவர், இது "கட்டடக்கலைப்பாணி மிகுந்த பேரழகுடன் முன்னேறியிருந்ததன் முழு எல்லையைக் காட்டுகிறது" என்கிறார். விட்டலசாமி கோவிலில் உள்ள சப்தஸ்வர இசை தூண்கள் மற்றும் கல் தேர் ஆகியவை கட்டடக்கலையின் சில அதிசயங்கள் ஆகும்.

வீரபத்ரா கோவில் மற்றும் லெபாக்ட்சி கோவிலில் உள்ள ஓவியங்கள் விஜயநகர ஓவியர்களின் தனிச்சிறப்பை வெளிப்படுத்துகின்றன. விஜயநகர அரசர்கள் இராமாயண மற்றும் மகாபாரதக் கதைகளை பல்வேறு கோவில்களின் சுவர்களில் பொறித்தனர். விஜயநகர மன்னர்கள் இசை, நடனம், நாடகம், யக் ஷகானா போன்ற நுண்கலைகளுக்கு ஆதரவளித்தனர். அரண்மனை மற்றும் கோவில்களில் கலைஞர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டனர். நரசிம்மர், கிருஷ்ணதேவராயர் மற்றும் அவரது இரண்டு ராணிகளின் இயல்புருவ அளவு உருவப்படங்கள் விஜயநகர கலையின் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். ஓவியம் ஒரு கலையாக வெளிப்பட்டதை விஜயநகர பேரரசின் கோவில் சுவர்களில் காணலாம். விருபாக் ஷா கோவிலில் காணப்படும் தசவதாரக் காட்சிகள் மற்றும் கிரிஜாகல்யாணம் போன்ற சுவர் ஓவியங்கள் அழகிய கலை மாதிரிகள் ஆகும்.

11th History Lesson 12 Tamil Medium.indd 203 01-12-2022 19:57:30

பாடச் சுருக்கம்

I

- பாமினி அரசை உருவாக்கியதில் பாமன்ஷாவின் பங்களிப்பு, பாமினி அரசை வலிமைப்படுத்தியதில் முதலாம் முகமதுவின் பங்கு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை மையமாகக் கொண்டு விஜயநகர் பாமினி அரசுகளிடையே தொடர்ந்து நடைபெற்ற போர்கள் பொருளாதார ரீதியாக இருஅரசுகளையும்பலவீனப்படுத்தியது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- பாமினி சுல்தானியம் ஐந்து தக்காண சுல்தானியங்களாகப் பிரிந்தது விவரிக்கப்பட்டுள்ளது.
- கண்கவரும் கோல்கொண்டா கோட்டையின் வடிவமும் அதன் முக்கியத்துவமும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

II

- சங்கம சகோதரர்களால் விஜயநகர அரசு நிறுவப்பட்டது விளக்கப்பட்டுள்ளது.
- சாளுவ வம்சத்தின் குறுகிய கால ஆட்சியும், துளுவ வம்சத்தைச் சேர்ந்த பெரும் புகழ்பெற்ற கிருஷ்ண தேவராயரின் ஆட்சியும் விவரிக்கப்பட்டுள்ளது.
- தலைக்கோட்டைப்போரும் நாயக்க அரசுகளின் எழுச்சியும் விளக்கப்பட்டுள்ளன.
- விஜயநகரப் பேரரசின் நிர்வாகம், சமூகம், பொருளாதாரம் ஆகியன பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக ____________ இடம் பணி செய்தனர்.

(அ) காகதியர் (ஆ) ஹொய்சாளர்
(இ) பீஜப்பூர் சுல்தான் (ஈ) யாதவர்

2. கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.

(அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவவம்சம், துளுவ வம்சம்
(ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
(இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
(ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

3. விஜயநகர அரசின் அரச முத்திரை____________

(அ) பன்றி (ஆ) புலி (இ) மீன் (ஈ) வில்

4. ____________ என்ற நூலை கங்காதேவி எழுதினார்.

(அ) மனுசரிதம் (ஆ) ஆமுக்தமால்யதா
(இ) பாண்டுரங்க மகாத்மியம் (ஈ) மதுரா விஜயம்

5. ____________ சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்பட்டார்.

(அ) முதலாம் தேவராயர்
(ஆ) இரண்டாம் தேவராயர்
(இ) கிருஷ்ணதேவராயர்
(ஈ) வீர நரசிம்மர்

6. கிருஷ்ணதேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம் ____________.

(அ) பெல்காம் (ஆ) கட்டாக்
(இ) சிம்மாச்சலம் (ஈ) இராஜமகேந்திரவரம்

7. எந்த இரு பகுதிகளிடையே இடைப்பட்டு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது ____________.

(அ) சோழ மற்றும் விஜயநகர அரசுகள்
(ஆ) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்
(இ) சேர மற்றும் பாண்டிய அரசுகள்
(ஈ) சோழ மற்றும் சேர அரசுகள்

8. ஷா நாமாவை எழுதியவர் ____________.

(அ) பிர்தௌசி
(ஆ) இபன் பதூதா
(இ) நிக்கோலோ டி கோன்டி
(ஈ) டோமிங்கோ பயஸ்

9. முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் ____________.

(அ) பெரார் (ஆ) பீஜப்பூர்
(இ) பீடார் (ஈ) அகமது நகர்

10. ____________ கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.

(அ) இராஜா கிருஷ்ண தேவ்
(ஆ) சுல்தான் குலி–குதுப்–உல்–முல்க்
(இ) முகமது கவான்
(ஈ) பாமன்ஷா

11th History Lesson 12 Tamil Medium.indd 204 01-12-2022 19:57:30

11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு

(அ) விஜயநகர அரசின் அரசர்கள் ஐந்து வம்சங்களாக சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

(ஆ) ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் ஒரிசாவின் கஜபதி மற்றும் பாமினி அரசுகளிடையே கடும் போர் நடைபெற்றது.

(இ) அப்துர் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியிலிருந்த சாமரின் அவைக்கு வந்தார்.

(ஈ) பாமினி அரசர்கள் அதிக அளவில் தங்க நாணயங்களை பல்வேறு வகையான தெய்வங்களின் உருவங்களுடன் வெளியிட்டனர்.

12. கீழ்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) முதலாம் முகமது ஏற்படுத்திய சிறந்த அரசு அவருக்குப் பின் வந்த சுல்தான்களாலும் மராத்தியர்களாலும் பின்பற்றப்பட்டது.

(ii) கவான் போர்ச்சுகீசிய வேதியியல் நிபுணர்களைக் கொண்டு வெடிமருந்தைத் தயார் செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றைக் கற்றுதரச் செய்தார்.

(அ) (i) மற்றும் (ii) சரி (ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி (ii) தவறு (ஈ) (i) தவறு (ii) சரி

13. **கூற்று:** பாமன்ஷா மிகச்சரியாகத் தாக்குதல் தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்ட வீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோறும் திறை செலுத்த வைத்தார்.

காரணம்: இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று

(ஆ) கூற்று சரி, காரணம் தவறு

(இ) கூற்றும் தவறு காரணமும் தவறு

(ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்

14. பொருத்துக

(i) அப்துர் ரசாக்	–	1. ரஷ்யா
(ii) நிகிடின்	–	2. சாளுவநாயக்கர்
(iii) டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ்	–	3. பாரசீகம்
(iv) செல்லப்பா	–	4. போர்த்துகல்

(அ) 1, 2, 3, 4 (ஆ) 4, 3, 2, 1

(இ) 2, 1, 4, 3 (ஈ) 3, 1, 4, 2

II. குறுகிய விடை தருக

1. விஜயநகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள் பற்றி எழுதுக.
2. விஜயநகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது.
3. பாமினி விஜயநகர அரசுகளுக்கிடையே பகைமை ஏற்பட்டதற்கான மூன்று முக்கியக் காரணங்கள் யாவை?
4. தராப் பற்றி எழுதுக.
5. முதலாம் முகமது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

III. சுருக்கமான விடை தருக

1. பாமினி அரசு எவ்வாறு நிறுவப்பட்டது? யாரால் நிறுவப்பட்டது?
2. நாயக்க முறை
3. ராக்சஷி தங்கடி போர்.
4. கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசின் சிறந்த ஆட்சியாளராகப் போற்றப்படக் காரணங்கள் யாவை?
5. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?
6. கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.

IV. விரிவான விடை தருக

1. விஜயநகரப் பேரரசின் சமுக மற்றும் பொருளாதார நிலையினை விவரி.
2. விஜயநகர ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை பற்றி விவரி.
3. முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.
4. முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.

செயல்பாடுகள்

1. இந்திய வரைபடத்தில் விஜயநகர் மற்றும் பாமினி அரசின் விரிவாக்கத்தைக் குறிக்கவும்.
2. கிருஷ்ணதேவராயரின் அவையைச் சார்ந்த விகடகவி தெனாலிராமனைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

ஒப்படைப்புகள்

1. விஜயநகர அரசு தொடர்புடைய முக்கியமான கோவில்களின், படங்கள் ஹம்பியின் அழிவு பற்றிய படத்தொகுப்பைத் தயார் செய்க.
2. விஜயநகர அரசின் அவைக்கு வந்த வெளிநாட்டுப் பயணிகள், அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

11th History Lesson 12 Tamil Medium.indd 205 01-12-2022 19:57:31

மூலநூல்கள்

1. Benjamin B. Cohen, *Kingship and Colonialism in India's Deccan* (1850 to 1948), Macmillan, 2007.
2. A.L. Basham, *A Cultural History of India*, Oxford University Press, 1984
3. Firroqui Salma Ahmad, *A Comprehensive History of Medieval India from the Twelfth to the Mid-Eighteenth Century*, Pearson, 2011
4. Burton Stein, *The New Cambridge History of India: Vijayanagara*, Cambridge University Press, 1987
5. Abraham Eraly, *The Age of Wrath*, Penguin, 2014.

கலைச்சொற்கள்

சேர்த்த	accumulated	gathered
ஆதரி	patronise	sponsor
பொறுப்புள்ள	accountable	responsible
கூட்டுச் சதி	conspiracy	plot
வெல்லப்பட்ட	vanquished	conquered
நிலப்பிரபுத்துவ முறைப்படி உருவாக்கப்பட்ட சிற்றரசர்கள்	feudatories	chieftains holding land under feudal system
எண்ணிக்கை குறைந்த	truncated	reduced in size

11th History Lesson 12 Tamil Medium.indd 206 01-12-2022 19:57:31

அலகு
13

பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்

கற்றல் நோக்கங்கள்

கீழ்கண்டவை பற்றி அறிதல்

- சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக ஆதி சங்கரரின் தத்துவக் கோட்பாடு
- தென்னிந்தியாவில் மத மறுமலர்ச்சியும், பக்தி இயக்கத்தின் தாக்கமும்
- சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிகழ்வுகள் ஒரு புறமும் மறுபுறம் சிரமணப் பிரிவுகளான சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையிலான முரண்பாடுகள்
- வடஇந்தியாவின் பக்தி இயக்கத்தில் இரண்டு போக்குகள்: சூபியிஸத்தின் தாக்கம், வங்காளத்து வைணவ இயக்கத்தின் செல்வாக்கு
- கபீர், குருநானக், ரவிதாஸ் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே கடவுள் இயக்கம். இராமானுஜர் சிந்தனைப் பள்ளியின் சீர்திருத்த அணுகுமுறை

PHN8C

அறிமுகம்

பிற பண்பாட்டு மரபுகளைப் போலவே, மதமும் தனித்து இருப்பதில்லை. நிலவும் சூழ்நிலைகளோடு தன்னை தகவமைத்துக் கொண்டு மக்களின் சமூக, ஆன்மிகத் தேவைகளை மதமும் நிறைவு செய்கிறது. நீண்ட பண்பாட்டு வரலாற்றைக் கொண்டிருக்கும் நாடான இந்தியாவில், மதங்கள் பல்வகைப்பட்ட மரபுகளோடு தொடர்புகொண்டு வளர்ந்துள்ளன. ஆரிய மொழி பேசிய மக்களின் வருகையோடு இந்தியா வந்த வேத மதம் சிந்து நாகரிகத்தின் பல கூறுகளை உள்வாங்கிக் கொண்டது. ஹரப்பாவில் தாய்த் தெய்வ வழிபாடு தொடங்குகிறது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிற்பம் சிவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்திரன், வருணன், அக்னி ஆகியோரே முக்கிய வேதக் கடவுள்கள் ஆவர். சிவன், விஷ்ணு வழிபாடு பின்னர் வளர்ந்தனவாகும். பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் (கி.மு 1000) இடைப்பகுதியில் சிந்து கங்கைச் சமவெளியில் பௌத்தம், சமணம் எனும் இரு மகத்தான மதங்கள் உருவாயின. (ஆசீவகம் போன்ற ஏனைய புறக்கோட்பாட்டு மதங்கள் போன்றே) இவை வைதீக வேதமத நடைமுறைகளை எதிர்த்தன.

இதைப் போலவே பொது ஆண்டின் முதலாயிரமாண்டின் இடைப்பகுதியில் நாட்டின் தென்பகுதியில் பக்தி இயக்கம் எனும் வடிவத்தில் ஓர் உன்னதமான சமய மரபு செழித்தோங்கியது. ஒரு மதக் கோட்பாடான, பக்தியின் பொருள் ஆழமான பற்றுடன் அனைத்துக்கும் மேலான இறைவனைச் சரணடைந்து முக்தி பெறுதலாகும். பகவத்கீதை போன்ற மத நூல்கள் பக்திக்கான பாதை அல்லது பக்தி மார்க்கத்தைப் பற்றி பேசியதாலும் இவ்வியக்கம் வலுப்பெற்றது. இக்காலப் பகுதியில்தான் பௌத்தம், சமணம் ஆகியவற்றின் ஒழுக்கநெறி, கடவுள் மறுப்புக் கோட்பாடுகளுக்கு எதிராகவே இவ்வியக்கம் தோன்றியது என வரலாற்றறிஞர்கள் வாதிடுகின்றனர். வேத இறையியல், இவை இரண்டிலிருமிருந்தும் சில கூறுகளை எடுத்து இணைத்துக் கொண்டது. ஆதிசங்கரர் புறமதக் கோட்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு இந்து மதத்திற்கு 'அத்வைதம்' எனும் தத்துவக் கோட்பாட்டை வழங்கினார். அது அறிவார்ந்தவர்களின் நிலையில் செல்வாக்குப்பெற்றது. புகழ்பெற்ற சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் உள்ளத்தை உருக்கும் பாடல்களால் பக்திக் கோட்பாட்டிற்கு ஒரு வடிவம் கொடுத்து மக்களின் ஆதரவைப் பெற்றனர். வரலாற்றாய்வாளர்கள் இதனைப் பக்தி இயக்கம் என அழைக்கின்றனர். பக்தி இயக்கம் அரச ஆதரவோடு சமூக, அரசியல், மதம், பண்பாடு, மொழி ஆகிய தளங்களில் மிக

11th History Lesson 13 Tamil Medium.indd 207 01-12-2022 19:58:35

ஆழமான, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு தென்னிந்தியா 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை மத மறுமலர்ச்சியின் இல்லமாக விளங்கியது. இராமானுஜர் போன்ற இறையியலாளர்களால் அது பதினோராம் நூற்றாண்டில் ஒரு தத்துவ, சித்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது. பக்தி வழிபாடு அடியார்கள் கொடுத்த ஊக்கத்தினால் 14ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் பரவியது. நாம் இங்கு பக்தி இயக்கத்தின் பொதுவான கூறுகளையும் அதை முன்னெடுத்த முக்கியமானவர்களையும், அதன் இருவகையான போக்குகளையும் மக்களின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் பகுத்தாய்வு செய்ய உள்ளோம்.

13.1 தென்னிந்தியாவில் பக்தி வழிபாடு

ஒரு பழங்குடிச் சமூகம் நன்கு கட்டமைக்கப்பட்ட சமூகமாக மாற்றம் பெறும்பொழுதும் அதிகாரமிக்க முடியாட்சி முறையிலான நிர்வாகமுறை உருவாகும்போதும் தனது அதிகாரத்தை நியாயப்படுத்திக்கொள்ள அதற்கு ஏதாவது ஒரு மதத்தை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. பௌத்தமும் சமணமும் பெரும்பாலும் வணிக வர்க்கத்தினரால் ஆதரிக்கபட்டன. அரசுகளும் அவற்றை ஆதரித்தன. பக்தி இயக்கம் நிலவுடைமைச் சாதிகளிடையேயிருந்து தோன்றியதால் அது பௌத்தத்தையும் சமணத்தையும் விமர்சனம் செய்தது. இதன் விளைவாக அரசர்களின் ஆதரவைப் பெறுவதில் மோதல்கள் ஏற்பட்டன. பக்தியானது சாதி, பாலின வேறுபாடுகளின்றி அனைவராலும் அணுக இயலும் என்ற நிலையை ஏற்படுத்தியதன் மூலம் சமணமும் பௌத்தமும் பிராமணர்களின் அதிகாரத்தை எதிர்த்தன.

பௌத்த மற்றும் சமணத்தோடு மோதல்

சான்றுகள்: பக்தி இலக்கியங்கள், பெரும்பாலும் புராணங்கள், திருத்தொண்டர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் ஆகியவை தமிழகத்தில் நடைபெற்ற மத மோதல்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன. தேவாரமானது அப்பர் (திருநாவுக்கரசர்) சம்பந்தர் (திருஞான சம்பந்தர்) சுந்தரர் ஆகிய மூவரால் எழுதப்பட்டப் பாடல்களைக் கொண்டவை. இவை மூன்றும் சேர்ந்து பன்னிரு சைவத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாக இடம் பெறுகின்றன. மாணிக்கவாசகரின் பாடல்கள் எட்டாவது திருமுறை ஆகும். இவற்றில் பல பாடல்கள் பௌத்தர்களையும் சமணர்களையும் பற்றிய விமர்சனங்களை விவரிப்பவையாகும். அறுபத்துமூன்று நாயன்மார்களைப் பற்றி கூறும் சேக்கிழாரின் பெரியபுராணம் பக்தி இயக்கம் குறித்த முக்கியச் சான்றாகும். வைணவ அடியார்களான ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பக்தி இயக்கப் பாடல்களின் முக்கியத்துவம் யாதெனில் அவை இன்றுவரை மக்களால் படிக்கப்படுகின்றன, பாடப்படுகின்றன, வணங்கப்படுகின்றன. அவை தமிழ் இலக்கிய மரபின் முக்கியப் பகுதியாகவும் விளங்குகின்றன.

ஆரம்ப கால மோதல்கள்

பல்லவர் காலத்தில்தான் முதன்முதலாகச் சைவமும் வைணவமும் ஒருபுறமாகவும் சிரமணப் பிரிவுகளான சமணம், பௌத்தம் மறுபுறமாகவும் இருந்து மோதிக்கொண்டன.

முதலாம் மகேந்திரவர்மப் பல்லவர் சமணத்தைப் பின்பற்றியதால் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தினார். அப்பர் தொடக்கத்தில் சமணராக, தர்மசேனன் எனும் பெயருடனிருந்தார். பின்னர் தனது தமக்கையின் செல்வாக்கால் சைவமதத்தைத் தழுவினார். சில சமணர்களால் தூண்டப்பட்ட மகேந்திரவர்மன் அப்பரை மீண்டும் சமணராக மாறும்படி வற்புறுத்தினார். அப்பர் மறுத்தபோது துன்புறுத்தப்பட்டார். முடிவில் மகேந்திரவர்மனே சைவமதத்திற்கு மாறியபோது பிரச்சனை முடிவுக்கு வந்தது.

மரபுசார்ந்த ஒரு கதையின்படி சம்பந்தர் இறையியல் வாதங்களில் சமணர்களை வென்றதால் தோற்றுப்போன சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். கூன் பாண்டியன் எனவும் அறியப்பட்ட மாறவர்மன் அரிகேசரி (640–670) சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறிய பின்னர் சம்பந்தருடைய செல்வாக்கால் மீண்டும் சைவரானார். ஒரு சைவக் கதையின்படி சைவத்திற்குத் திரும்பிய பின்னர் சமணர் பலரை மதுரை மாவட்டத்திலுள்ள சமந்தம் என்னும் ஊரில் கொல்லும்படி ஆணையிட்டதாகவும் தெரிகிறது.

சைவ சித்தாந்தம் போன்ற தத்துவ ஆய்வு நூல்கள் பௌத்த சமண தத்துவ மோதல்களை விரிவாக விளக்குகின்றன. சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியாரில் 'பரபக்கம்' என்ற பெயரில் தனிப் பிரிவொன்றுள்ளது. அது பௌத்த சமண வாதங்களை முற்றிலுமாக எதிர்க்கின்றது. பக்தி இலக்கியங்களும் திருத்தொண்டர்களைப் பற்றிய நூல்களும் மோதல்கள் ஏற்பட்ட நிகழ்வுகளையும் புறச்சமயத்தார் தோற்கடிக்கப்பட்டதையும் விளக்குகின்றன.

11th History Lesson 13 Tamil Medium.indd 208 01-12-2022 19:58:36

அவ்வாறான மோதல்கள் இறுதியில் வன்முறை சார்ந்ததாக மாற்றம் பெற்று பல சமணத் துறவிகள் கழுவில் ஏற்றப்பட்டதில் முடிந்ததெனக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.

தத்துவம் சார்ந்த வாதங்கள் ஒரு பக்கம் நடைபெற்றாலும் பக்தி இயக்கம் மன்னர் ஆதரவைப் பெற்றிருந்ததன் விளைவாக பௌத்தமும் சமணமும் தோல்வியைச் சந்தித்தன. பதினோராம் நூற்றாண்டில் இவ்விரு மதங்களும் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. பௌத்தம் தமிழகத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் முற்றிலுமாகத் துடைக்கப்பட்டாலும் தமிழ்மொழி பேசுகின்ற சமணர்கள் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். சமண பௌத்த கோவில்களும் கருவறைகளும் பெரும்பாலும் சிதைக்கப்பட்டன, அல்லது பயன்பாட்டில் இல்லாமல் ஆயின. கலைப்பொருட்கள் பல புறக்கணிக்கப்பட்டன அல்லது கொள்ளை போயின. இன்றைய அளவிலும் தமிழ்நாட்டின் பலபகுதிகளில் தலைப்பகுதி உடைக்கப்பட்ட புத்தர், சமணத்தீர்த்தங்கரர் சிலைகளைக் காணமுடிகிறது.

இவ்வாறு இருந்தபோதிலும் வைதீகமும் புறச் சமயங்களும் ஒன்றோடொன்று கருத்து பரிமாற்றம் செய்துகொண்ட அடையாளங்களும் காணப்படுகின்றன. பௌத்தம், சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான துறவறத்தை சைவமும் வைணவமும் ஏற்றுக்கொண்டன. பௌத்தம், வைணவம் ஆகிய இரண்டும் எளிமையையும் உலக சுகங்களை மறுப்பதையும் முன்னிறுத்தியபோது பக்தி இயக்கம், விழாக்கள், சடங்குகள் என வாழ்க்கையைக் கொண்டாடியது. சைவ உணவு, கொல்லாமை ஆகிய மதிப்பு வாய்ந்த நெறிகளும் பரஸ்பர செல்வாக்கின் விளைவாக ஏற்பட்டு இருக்கலாம். புறச் சமயங்கள் வடமொழியான பிராகிருதத்தைப் பயன்படுத்தியதற்கு எதிர்வினையாக தமிழ்மொழிக்கு மேலதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பௌத்தமும் சமணமும் ஊழ்வினைக் கோட்பாட்டை பேசியபோது பக்தி இயக்கத்தை விளக்கியவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் சரணடைவதன் மூலம் விதியை வெல்லமுடியும் எனக் கூறினர்.

பௌத்தம், சமணம் ஆகியவற்றுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக வேதமதங்கள் சில மாறுதல்களுக்கு உள்ளாயின.

13.2 பக்தி இயக்கம் வடஇந்தியாவில் பரவுதல்

தென்னிந்தியாவில் பக்தி இயக்கம் அதன் புகழின் உச்சத்தை எட்டியபோது பக்திக் கோட்பாடானது வைணவப் புலவர்களாலும் அடியார்களாலும் தத்துவத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விளக்கப்பட்டது. இராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவத்தை உருவாக்கினார். அவருடைய போதனைகள் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இரண்டல்ல ஒன்றே என்ற ஆதி சங்கரரின் கருத்தை மறுத்தன.

தமிழகத்தில் பக்தி இயக்கம் ஏழாம் நூற்றாண்டிலேயே செழித்தோங்கி இருந்த நிலையில் வடஇந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டில்தான் அது முழு வேகத்தைப் பெற்றது. இக்காலத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்திப் பாடல்கள் எழுதப்பட்டன. சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைகள், ஒதுக்கி வைத்தல், பல கடவுள்களை வணங்கும்முறை, உருவ வழிபாடு போன்றவற்றால் ஏற்பட்டிருந்த சமூகப் பின்னடைவுகளுக்கு எதிராக வட இந்தியாவில் பக்தி இயக்கம் குரல் கொடுத்தது. மதச் சான்றோர்கள் மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற சடங்குகளையும் விமர்சித்தனர். வைணவ பக்தி இயக்கத்தோடு இணைந்து ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தவர்கள் அன்றைய அளவில் முக்கிய மதங்களாகத் திகழ்ந்த வைதீகம், இஸ்லாம் ஆகியவற்றிலிருந்து விலகி சுதந்திரப் பாதையைப் பின்பற்றினர். இவ்விரு மதங்களிலிருந்த மூடநம்பிக்கைகளையும் பழமைவாதத்தையும் விமர்சித்தனர்.

துருக்கியப் படையெடுப்போடு கூடிய இஸ்லாமின் வருகை வேத மதங்களுக்கும் குருமார்களுக்கும் பெரும் சவாலாகத் திகழ்ந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் இஸ்லாம் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியது. அதிகமான இந்தியர்கள் முஸ்லீம்களாயினர். இஸ்லாம் அரசு அதிகாரத்தோடு சமத்துவத்தை முன்வைத்தது இந்தியச் சமூகத்தில் கீழ்நிலையில் இருந்தோரைக் கவர்ந்தது.

புதிய அரசியல் சமூகச் சூழல் பிரதான மதங்களின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை ஓர் இயக்கமாக்கியது. இவ்வியக்கம் சாதி முறைக்கு எதிரானதாகவும், வேதங்களுக்கும் புராணங்களுக்கும் எதிரானதாகவும் உருவானது. பண்பாட்டுத் தளத்திலும் இவ்வியக்கம் பிராந்திய மொழிகளின் வளர்ச்சி இந்துஸ்தானி இசையின் வளர்ச்சி போன்ற தாக்கங்களை ஏற்படுத்தியது.

முஸ்லீம்களின் அரசியல் அதிகாரத்திற்கு எதிரான இந்துக்களின் எதிர்வினை பன்முகத் தன்மை கொண்டதாய் இருந்தது. ஒருபுறம் புதிய மதத்திற்கு எதிராக வெறுப்பினைக் கொண்டிருந்தபோதும், புதிய சவால்களை

11th History Lesson 13 Tamil Medium.indd 209 01-12-2022 19:58:36

எதிர்கொள்ளும் அளவுக்கு வலிமையை பெருக்க வேண்டுமெனின் இந்து மதத்திற்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்வும் தோன்றியது. இதன் முக்கிய விளைவாக கபீர், குருநானக் மற்றும் ரவிதாஸ் ஆகியோரின் இயக்கங்கள் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தின.

13.3 சூபியிஸத்தின் தாக்கம்

இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் அதைப் போன்ற கருத்துக்களை சூபியிஸம் கொண்டிருந்தது. சூபி, வாலி, தர்வீஷ், பக்கீர் ஆகிய பெயர்கள் இஸ்லாமிய ஞானிகளைக் குறிப்பதாகும். இவர்கள் தியானம், யோகப் பயிற்சிகள், துறவறம், தியாகம் போன்றவற்றின் மூலம் உள்ளுணர்வைப் பெருக்கி இறை நிலையை உணர்ந்தவர்களாவர். 12ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் சமூக வாழ்வில் சூபியிஸம் செல்வாக்குப் பெற்ற சக்தியாக விளங்கியது.

சூபியிஸம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கமாகும். மதம், சமூக வேறுபாடுகள் என்ற எல்லைகளைத் தாண்டி சூபிகள் ஒட்டுமொத்த மனித குலத்தின் மேம்பாட்டிற்காகப் பணிசெய்தனர் தத்துவ ஞானிகளான இவர்கள் தங்கள் பரந்த மனப்பான்மைக்காகப் பெயர் பெற்றனர். இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர். அவ்வழகைக் கண்டு ஆச்சரியப்படல் வேண்டும், அதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுதல் வேண்டும், முழுக்கவனத்தையும் இறைவன்மேல் குவித்தல் வேண்டும் என்றனர். அவர்கள் கடவுளை *மஸ்க்* (நேசிக்கப்பட வேண்டியவர்) என்றும் தங்களை *ஆசிக்* (நேசிப்பவர்கள்) என்றும் நம்பினர். பின்னாளில் சூபியிஸம் பல பிரிவுகளைக் கொண்டதாக மாறியது. சிஸ்டி, சுரவார்டி, குவாதிரியா, நஸ்பந்தி ஆகியன முக்கியப் பிரிவுகளாகும்.

சூபியிஸம் நகர்ப் புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வேர்கொண்டது. சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சூபியிஸம் அனைத்து விதமான மதச்சம்பிரதாயம், பழமைவாதம் வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது. ஆன்மீகப் பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது. அரசியல் அதிகாரத்திற்காக மோதிக்கொள்வதே இயல்பாக இருந்த ஒரு சூழலில், போர்களாலும் போட்டிகளால் சூழல் பாழ்பட்டுக்கிடந்த நிலையில் சூபிகள் அமைதியையும் மகிழ்ச்சியையும் நிலைநாட்டப் பணியாற்றினர். சூபிகளின் மகத்தான பங்களிப்பு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான வெறுப்பின் கூரிய முனைகளை மழுங்கடித்து அவர்களிடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தியதாகும்.

13.4 பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள்

1. பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
2. பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட முடியும் என நம்பினர். இறைவனிடம் ஆழமான பற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன்வைத்தனர்.
3. இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்.
4. குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.
5. உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர்.
6. உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர்.
7. ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டுமென வலியுறுத்தினர்.
8. மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தைகளே எனக் கூறினர். பிறப்பின் அடிப்படையில் மக்களைப் பிரித்துவைக்கும் சாதிமுறையைக் கண்டனம் செய்தனர்.
9. சடங்குகள், சம்பிரதாயங்கள், புனிதயாத்திரைகள், நோன்புகள் ஆகியவற்றைக் கண்டனம் செய்தனர்.
10. எந்த மொழியையும் புனிதமான மொழி என அவர்கள் கருதவில்லை. மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.

13.5 பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள்

கபீர்


கபீர்

இடைக்கால இந்தியாவின் மிக முக்கியமான பண்பாட்டு ஆளுமையாகக் கபீர் கருதப்படுகிறார். புனிதங்கள் எனக் கருதப்பட்டவற்றை கேள்விக்குறியாக்கும் அவருடைய பாடல்கள் சடங்குகள், சம்பிரதாயங்களைக் கேலிக்குரியதாக்கி, கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற கருத்தை முன்வைத்தன. இவருடைய கருத்துகளால் கவரப்பட்ட மக்கள் இவரைப் பின்பற்றினர். அவருடைய

11th History Lesson 13 Tamil Medium.indd 210 01-12-2022 19:58:36

வாழ்க்கையைப் பற்றி மிகக் குறைவான செய்திகளே கிடைத்துள்ளன. நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இராமானந்தரின் சீடராக, அவரிடமிருந்து வேதாந்தத் தத்துவத்தைக் கற்றுக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. பிரபலமான, தஸ்கிரா–இ–ஆலியா–இ–ஹிந்த் (இஸ்லாமிய துறவிகளின் வாழ்க்கை) எனும் நூல் அவரை சூபி துறவியான ஷேக் தகி என்பவரின் சீடராகச் சித்தரிக்கிறது. முற்போக்கான மதச் சிந்தனைகளைக் கொண்ட கபீர் இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களிலுள்ள பிரிவினை வாதங்களையும், குறுகிய மனப்பான்மைகளையும் எதிர்த்தார். இந்து சமூகத்தின் கீழ்த்தட்டுகளைச் சார்ந்த மக்கள் அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டனர். உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதிமுறை ஆகியன கைவிடப்பட வேண்டுமென உறுதிபடக் கூறினார். அதே சமயத்தில் இஸ்லாமிலிருந்த சம்பிரதாயங்களையும் கடுமையாக விமர்சித்தார். கடவுளின் மேல் உண்மையான பற்றுதலைக் கொண்டிருந்த அவர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிக்கும் தடைகளை உடைக்க முயன்றார். கடவுளை அடைய அவர் கண்டடைந்த பாதை கீழ்நிலையில் உள்ளோர்க்கும் மேல்நிலையில் உள்ளோர்க்கும் ஏற்புடையதாயிருந்தது. அவருடைய பாடல்கள் இன்றுவரை இந்தியாவின் பலபகுதிகளில் பாடப்பட்டுவருகின்றன.

ரவிதாஸ்

ரவிதாஸ்

ரவிதாஸ் 15, 16ஆம் நூற்றாண்டின் பக்தி இயக்கத்தைச் சேர்ந்த கவிஞரும் துறவியுமாவார். பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களால் குருவாக வணங்கப்படுபவர். அவர் இயற்றிய பக்திப் பாடல்கள் பக்தி இயக்கத்தின் மேல் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. ரவிதாஸின் வாழ்க்கை விவரங்களைப் பற்றி உறுதியான செய்திகள் இல்லை. கிடைத்துள்ள செய்திகளிலும் முரண்பாடுகளுள்ளன. பெரும்பான்மையான வரலாற்றறிஞர்கள் அவரை தோல் பதனிடுவோர் குடும்பத்தைச் சேர்ந்தவரெனக் கூறியுள்ளனர். இவர் பக்தி இயக்கத்துறவியும்புலவருமான இராமானந்தரின் சீடர்களின் ஒருவராவார். சீக்கியரின் மதப் பாடல்களில் ரவிதாசரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சாதி அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் ஆண், பெண் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராகப் பேசினார். ஆன்மீக விடுதலையைப் பெறும் முயற்சியில் ஒற்றுமையை ஊக்குவித்தார்.

குரு நானக் (1469–1539)

குருநானக்

குரு நானக் மிகப்பெரும் அமைப்பின் செல்வாக்குமிக்க துறவியாவார். அவரால் நிறுவப்பட்ட சீக்கிய மதம் அவருடைய, ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பண்பாட்டு ஒற்றுமைச் சிந்தனையைப் பறைசாற்றுகிறது. ஒரு கடவுள் கோட்பாட்டைக் கொண்ட சீக்கிய மதம் கடவுள் ஒருவரே என்ற கருத்தையும், ஒழுக்க நெறிகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியது. இரண்டு நூற்றாண்டுகளில், பத்து சீக்கிய குருக்களின் தலைமையில் சீக்கிய மதம் பஞ்சாப் முழுவதும் விரிவடைந்து பெருவாரியான மக்களை ஈர்த்தது. சீக்கிய மதப் போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தின. அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழல் முகலாயப் பேரரசுடன் பகைமையை உருவாக்கி அடக்குமுறைக்கு வழி வகுத்து இறுதியில் குருக்களின் உயிர்த்தியாகத்தில் முடிந்தது. குரு கோவிந்த சிங் சீக்கிய மதத்தின் கடைசி குரு ஆவார். அவருக்குப் பின்னர் கிரந்த சாகிப் (புனித நூல்) குருவாகக் கருதப்பட்டது. குரு நானக்கின் போதனைகள் *ஆதிகிரந்தம்* ஆகும். ஏனைய சீக்கிய குருக்களின் போதனைகளும், இராமானந்தர், சைதன்யர், நாமதேவர், கபீர், ஷேக் பரித் போன்ற பக்தி இயக்க கவிஞர்களின் சூபி துறவிகளின் போதனைகளும் ஆதி கிரந்தத்தோடு சேர்த்து குரு கிரந்த சாகிப் எனப்படுகிறது

சைதன்யர் (1485–1533)


சைதன்யர்

வங்காளத்தைச் சேர்ந்த சைதன்யர் பக்தி இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையை பிரதிபலித்தார். கபீர் மற்றும் அவரை தொடர்ந்து வந்த பக்தி இயக்கத் துறவிகளின் போதனைகளிலிருந்து அவர் வேறுபட்டார். அனைத்து வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் இறைவனை புரிந்துகொள்ள மக்களை ஒருங்கிணைத்த கபீரைப் போலல்லாமல் சைதன்யர் ஏனைய கடவுள்களைக் காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் எனக்கொண்டார். வேறு வகையில் சொல்வதென்றால் சைதன்யருடைய இயக்கம் ஒருமைப்பாட்டிற்கான இயக்கமல்ல, மாறாக இது ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகும். விஷ்ணுவின் பல வடிவங்களில் பரவசத்தைத் தரும் கிருஷ்ணரின் வழிபாட்டுக்குத் திரும்புவதாகும்.

11th History Lesson 13 Tamil Medium.indd 211 01-12-2022 19:58:36

வங்காள வைணவர்கள் இந்துமதத்தைச் சீர்திருத்த முயலவில்லை. மாறாக விஷ்ணுவின்மேல் பக்தி கொள்ள வற்புறுத்தினர். இருந்தபோதிலும் பல சமூகங்களிலிருந்து சைதன்யருக்குச் சீடர்கள் உருவாயினர். சைதன்யர் இறை வழிபாட்டில் குழுவாகக் கூடிப் பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடும் பழக்கத்தைப் பிரபலமாக்கினார். அவருடைய இயக்கம் வங்காளத்திலும் ஒரிசாவிலும் பிரபலமானது.

நாமதேவர்

நாமதேவர்

மகாராஷ்டிராவில் சதாரா மாவட்டத்தில் நரஸ் வாமணி எனும் கிராமத்தில் தையல் கலைஞரின் மகனாகப் பிறந்த நாமதேவர், ஜனதேவர் எனும் துறவியினால் ஈர்க்கப்பட்டு பக்தி இயக்கத்தில் பங்கெடுத்தார். பந்தர்பூரிலுள்ள விட்டலா (விஷ்ணு அவதாரம்)வின் மேல் தீவிர பக்தி கொண்ட நாமதேவர் தன் சீடர்களுடன் பெரும்பாலான நேரத்தை இறை வழிபாட்டிலும் தானே இயற்றிய பாடல்களைப் பாடுவதிலும் கழித்தார். மராத்திய, இந்தி மொழிகளில் "அபங்க" (மகாராஷ்டிராவைச் சேர்ந்த இந்து மத குருமார்கள் இறைவனைப் புகழ்ந்து எழுதிய பாடல்கள்) என்றழைக்கப்பட்ட பாடல்களை எழுதினார். அவர் பஞ்சாப் வரை பயணம் மேற்கொண்டார். பஞ்சாபிலும் அவருடைய போதனைகள் பிரபலமாயின. பின்னர் அவை குருகிரந்தத்தில் சேர்க்கப்பட்டன. "முழுமையான இதயத்தோடு இறைவனை வணங்குங்கள், மதப் பணி சார்ந்த வாழ்வை வாழுங்கள். உறுதியான பக்தியுடன் அனைத்தையும் இறைவனிடம் அர்ப்பணியுங்கள்" என்பனவே அவருடைய செய்திகளின் சாரமாகும்.

இராமானந்தர் (1400–1476)



இராமானந்தர்

சைதன்யர் மாதாவாச்சாரியாரின் (வேதாந்தத்தில் துவைதக் கொள்கையை முன்னிறுத்தியவர்) தத்துவப் பள்ளியைச் சேர்ந்தவர். இராமானந்தர் இராமானுஜரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். பிரயாகையில் (அலகாபாத்) பிறந்த இராமானந்தர் காசியில் இந்து மதத் தத்துவத்தில் உயர்கல்வியைக் கற்று இராமானுஜரின் பள்ளியில் போதகராகப் பணியிலமர்ந்தார். வட இந்தியாவின் புனிதத் தலங்களுக்குச் சென்று வந்த அவர் வைணவத்தை போதித்தார். இராமர் சீதை ஆகியோரிடம் பக்தி வைத்தல் என்று தானே உருவாக்கிய புதிய கோட்பாட்டின் அடிப்படையில் வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையைப் போதித்தார். சாதிமுறையை நிராகரித்த அவர் குறிப்பாக இந்து மதத்தின் பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் பிராமணர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்தார். சமூகத்தின் அடித்தளத்தைச் சேர்ந்த மக்கள் இவரைப் பின்பற்றினர். ரவிதாஸ், கபீர் மற்றும் இரண்டு பெண்கள் அவருடைய பன்னிரண்டு சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது மரபு. பிராந்திய மொழியான இந்தியில் தனது கொள்கைகளை போதித்தவர்களில் முதலாமவர் இராமானந்தரே. இதன் காரணமாகவே அனைத்துத் தரப்பு மக்களாலும் அறியப்பட்டவரானார். இவருடைய சீடர்கள் மிதவாதிகள், முற்போக்கர்கள் என இரு பிரிவாகப் பிரிந்தனர்.

மீராபாய் (1498–1546)

மீராபாய்

மீராபாய் ராஜஸ்தானில், மேர்தா மாவட்டத்தில் குத் எனும் ஊரில் பிறந்தார். ஜோத்பூர் அரசை நிறுவிய ராணா ஜோதாஜியின் கொள்ளுப் பேத்தி ஆவார். இவர் மேவாரின் அரசனான ராணா சங்காவின் மகன் போஜராஜன் என்பாரை மணந்தார். கிருஷ்ணரின் தீவிர பக்தையாக மாறிய அவர் அரண்மனையைவிட்டு வெளியேறி, அன்பே கடவுளை அடையும் வழியென போதனை செய்யவும் பஜனைப் பாடல்களைப் பாடவும் தொடங்கினார். கடவுளை கிருஷ்ணர் எனும் பெயரில் வணங்க வேண்டுமென்றும், பிறப்பு, செல்வம், வயது, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் கிருஷ்ணருடைய அருள் யாருக்கும் மறுக்கப்படக் கூடாது எனப் போதித்தார். அவருடைய பக்திப் பாடல்களும் இசைப்பாடல்களும் வளமான பண்பாட்டு மரபாகும். அவருடைய போதனைகள் தெய்வீகபக்தி என்னும் செய்தியை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்றது.

சூர்தாஸ்

அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த சூர்தாஸ் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகன் எனப் பலராலும் அறியப்பட்டவர். சூர்தாஸ் தில்லி சுல்தானியர் காலத்து, வைணவப் போதகரான வல்லபாச்சாரியாரின் சீடர் என நம்பப்படுகிறது. வல்லபாச்சாரியார் புஷ்தி மார்க்கத்தை (அருள் பாதை)

11th History Lesson 13 Tamil Medium.indd 212 01-12-2022 19:58:37

நிறுவியவராவார். சூர்தாஸ் அன்பெனும் மதத்தையும் தனிப்பட்ட கடவுளிடம் பக்தியோடிருப்பதையும் போதித்தார். கடவுள் கிருஷ்ணரைக் குறித்து இந்தி மொழியில் உணர்வுபூர்வமான பாடல்களை இயற்றினார். சூர்தாஸின் கவிதைகளில் கிருஷ்ணருடைய 'பாலலீலா' முக்கியக் கருப்பொருளாக விளங்கியது. அவருக்குக் கிருஷ்ணர் தெய்வீகமானவர். அவரைப் பொருத்த அளவில் காதல் என்பது உணர்வுபூர்வமான கருப்பொருளாகும். பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் மீது கோபியர் கொண்ட கட்டுப்படுத்த இயலாத காதலை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றார். கோபியர் வெளிப்படுத்திய காதலின் தீவிரம் என்பது ஒரு தெய்வீக ஆன்மாவின் மேல் மனித ஆன்மா கொண்டிருக்கும் இயற்கையான கவர்ச்சியின் வெளிப்பாடென்றார். சூர்சாகர், சூர்சரவளி, சாஹித்ய லஹரி ஆகியன அவருடைய முக்கியப் படைப்புகளாகும். அவருடைய மாபெரும் படைப்பான சூர்சாகர் அல்லது சூர்சமுத்திரம் கிருஷ்ணர் பிறந்ததிலிருந்து மதுராவுக்கு புறப்படும் வரையிலான கதைகளைக் கொண்டுள்ளது.

சூர்தாஸ்

துக்காராம்

துக்காராம் 1608ஆம் ஆண்டு மஹாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார். சத்ரபதி சிவாஜி, ஏக்நாத், ராம்தாஸ் போன்றோரின் சமகாலத்தவர். தொடக்கத்தில் ஒரு வணிகராக இருந்த இவர் பின்னர் தனக்குப் பிரியமான கடவுளான பந்தர்பூர் விட்டலாவின் புகழைப்பாடும் பாடல்களைப் பாடுவதில் நேரத்தை செலவிட்டார்.

துக்காராம்

துக்காராம் கடவுள் வடிவமற்றவர் என நம்பினார். அவரைப் பொருத்த அளவில் உலக நடவடிக்கைகளில் ஆன்மீக இன்பத்தைத் துய்க்க முடியாது எனக் கூறினார். வேத வேள்விகள், சடங்குகள், புனிதப் பயணங்கள், உருவ வழிபாடு ஆகியவற்றை நிராகரித்தார். கடவுள் பற்று, மன்னிக்கும் மனப்பாங்கு, மன அமைதி ஆகியவற்றைப் போதித்தார். சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய செய்திகளைப் பரப்பினார். இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். அவர் தன்னுடைய 'அபங்க' பாடல்களை மராத்தி மொழியில் எழுதினார்.

13.6 பக்தி இயக்கத்தின் தாக்கங்கள்

முக்தி என்பது வர்ணாஸ்ரமக் கொள்கையின்படி முதல் மூன்று படி நிலைகளைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமே உரியது என்ற நம்பிக்கையை மாற்றி அது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது. பக்தி இயக்கம் பெண்களுக்கும் சமூகத்தின் அடித்தட்டிலிருந்த மக்களுக்கும் சேர்த்து ஆன்ம விடுதலைக்கான வழியைக் காட்டியது. பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்கள் எண்ணிக்கையில் பெருகின. பக்தி இயக்கத்தைச் சேர்ந்த துறவிகள் தத்துவ ஞானத் துறையில் சிறந்து விளங்கி துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவக் கோட்பாடுகளை வழங்கினர். இக்காலத்தில் பிராந்திய அளவில் நடைமுறையிலிருந்த பண்பாட்டுப் பழக்கங்களான, அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவது பண்டிகைகள், விழாக்கள் நடத்துவது, புனிதப் பயணங்கள் செல்வது, சைவ, வைணவச் சடங்குகளை செய்வது ஆகியன இன்றுவரை நடைமுறையில் உள்ளன.

பாடச் சுருக்கம்

- வைதீக வேத குருமார்களின், பூசாரிகளின் அதிகாரத்தை பௌத்தமும் சமணமும் எவ்வாறு எதிர்த்தன என்பதும், எவ்வாறு மதம் சாதி, பாலினப் பாகுபாடுகளை மீறி அனைவருக்குமானதாக மாற்றப்பட்டதென்பதும் விவரிக்கப்பட்டுள்ளது.
- அரச ஆதரவோடு சமணர்கள் ஒடுக்கப்பட்டது விளக்கப்பட்டுள்ளது.
- பௌத்த சமண மதங்களோடு மோதுகிறபோதே வேதமதத்துக்குள் ஏற்பட்ட மாற்றங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- பக்தி இயக்கம் வட இந்தியாவில் பரவியதும் அதன் முக்கியக் கூறுகளும் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.
- சூபியிஸம் இஸ்லாமின் மீது ஏற்படுத்திய தாக்கம், ஒரு கடவுள் தத்துவத்தைக் கொண்ட மதங்கள்– குறிப்பாக சீக்கிய மதம் உருவானதில் அது செலுத்திய செல்வாக்கு– ஆகியன பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.
- வடஇந்தியாவில் பக்தி இயக்கத்தை முன்னெடுத்தவர்கள், அவர்கள் மேற்கொண்ட பணிகளின் தாக்கம் ஆகியவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

11th History Lesson 13 Tamil Medium.indd 213 01-12-2022 19:58:37

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர் ____________
   (அ) ஆதிசங்கரர் (ஆ) இராமானுஜர்
   (இ) இராமானந்தர் (ஈ) சைதன்யர்
2. வைதீக வேதப்பிரிவுகளுக்கும், சிரமணப் பிரிவுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுவது ____________
   (அ) இராமாயணம்
   (ஆ) பாகவத புராணம்
   (இ) திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள்
   (ஈ) பால லீலா
3. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் ______
   (அ) முதலாம் மகேந்திரவர்மன்
   (ஆ) மாறவர்மன் அரிகேசரி
   (இ) நரசிம்மவர்மன்
   (ஈ) சுந்தரபாண்டியன்
4. சமண மதத்திலிருந்தபோது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் ____________
   (அ) அரிசேனா (ஆ) தீர்த்தங்கரர்
   (இ) சிவஞான சித்தியார் (ஈ) தர்மசேனர்
5. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் ____________.
   (அ) இஸ்லாமிய ஞானி (ஆ) பௌத்தத் துறவி
   (இ) இந்துத் துறவி (ஈ) சீக்கிய குரு
6. மாதாவாச்சாரியார் ____________ தத்துவப் பள்ளியைச் சார்ந்தவர்.
   (அ) துவைதம் (ஆ) அத்வைதம்
   (இ) விசிஷ்டாத்வைதம் (ஈ) புஷ்டி மார்க்கம்
7. இராமானந்தரின் சீடர் ____________
   (அ) சைதன்யர் (ஆ) மீராபாய்
   (இ) குருநானக் (ஈ) கபீர்
8. முதன்முதலாக இந்திமொழியில் தனது மதத் தத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர் ____________
   (அ) ரவிதாஸ் (ஆ) இராமானந்தர்
   (இ) கபீர் (ஈ) நாமதேவர்
9. அக்பரின் அரசவையில் "ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர்" என்று அறியப்பட்டவர் ______
   (அ) சூர்தாஸ் (ஆ) துக்காராம்
   (இ) இராமானந்தர் (ஈ) மீராபாய்
10. மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் ____________ ஆவார்
    (அ) இராமானந்தர் (ஆ) மீராபாய்
    (இ) சூர்தாஸ் (ஈ) துக்காராம்
11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு
    (அ) தனது தொடக்கக்கால வாழ்வில் சைவராக இருந்த அப்பர் தனது தமக்கையால் சைவ மதத்திலிருந்து சமண மதத்திற்கு மாறினார்.
    (ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர்
    (இ) இராம பக்தியை முன்னிலைப்படுத்தி வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றனர்.
    (ஈ) பௌத்த மத நூல்களில் ரவிதாஸின் பக்திப்பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன
12. **கூற்று:** மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
    காரணம்: அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.
    (அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
    (ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.
    (இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
    (ஈ) கூற்று தவறு; காரணம் சரி.
13. பொருத்துக
    (i) கபீர் – 1. சாகித்திய லாகிரி
    (ii) சூர்தாஸ் – 2. ஷேக் தாதி
    (iii) சூபியிஸம் – 3. சம்பந்தர்
    (iv) கூன் பாண்டியன் – 4. நெசவாளர்
    (அ) 2, 3, 4, 1 (ஆ) 4, 1, 2, 3
    (இ) 2, 4, 3, 1 (ஈ) 3, 4, 2, 1

II. குறுகிய விடை தருக

1. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் யாவை?
2. பக்தி இயக்கத்தில் ரவிதாஸின் பங்கினைப் பற்றி நீவிர் அறிவன யாவை?
3. இராமானந்தரின் போதனைகள் யாவை?
4. பண்பாட்டுப் பாரம்பரியத்தின் சிறப்பிற்குக் காரணமாக மீராபாயின் பாடல்களும் கவிதைகளும் அமைந்தன. விளக்குக.
5. இந்துத் துறவிகள் இஸ்லாமின் மீது கொண்டிருந்த இரண்டு வெவ்வேறு அணுகுமுறைகள் யாவை?

III. சுருக்கமான விடை தருக

1. மத மறுமலர்ச்சியின் உறைவிடமாகத் தென்னிந்தியா விளங்கியதை விளக்குக.
2. சூர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகளை ஆய்க.

11th History Lesson 13 Tamil Medium.indd 214 01-12-2022 19:58:37

3. கபீரின் போதனைகளை விவரி.
4. கபீரிடமிருந்து சைதன்யர் எவ்வாறு வேறுபடுகிறார்?
5. பக்தி இயக்கத்தின் விளைவுகளைச் சுட்டிக்காட்டுக.

IV. விரிவான விடை தருக

1. சூபியிஸத்தின் தாக்கம் பற்றி விவரி.
2. பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

செயல்பாடுகள்

1. கபீரின் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகள் தயார் செய்க.
2. இசை மற்றும் கலைகளின் மீது பக்தி இயக்கம் ஏற்படுத்திய தாக்கத்தினைக் காட்டுக.

ஒப்படைப்புகள்

1. பக்தி இயக்கத் துறவிகளின் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பினைத் தயார் செய்க.
2. தமிழ்நாட்டில் பக்தி இயக்கத் துறவிகள் பிறந்த இடங்களைப் பார்வையிட்டு அவர்கள் சேவை செய்த கோவில்களின் தலபுராணங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும்.

மூலநூல்கள்

1. S. Krishnasawamy Aiyankar, *Some Contributions of South India to Indian Culture,* University of Calcutta, 1923.
2. R.Chambakalakshmi, *Religion, Tradition and Ideology,* Oxford University Press, 2011.
3. Noboru Karashima, *A Concise History of South India,* Oxford University Press, 2014.
4. S.A.A. Rizvi, *Wonder that was India II,* Picador India, 2005.

கலைச்சொற்கள்

கலாச்சாரப் பரிமாற்றம்	**Syncretism**	Amalgamation of different religious and cultures
திருத்தொண்டர்களின் வாழ்க்கையைப் புகழ்ந்து எடுத்துக்காட்டாகக் கூறுதல்	**Hagiographical**	Excessive flattering account about the lives of saints
உள்ளுணர்வு	**Intuitive**	Feeling to be true even without conscious reasoning
கவிஞன்	**Bard**	Poet
புனிதமாக்கு	**Sublimate**	Purify
எங்கும் நிறைந்ததாக	**Pervasiveness**	Presence felt throughout a place or thing
களிப்பூட்டும்	**Ecstatic**	Joyful, blissful

இணையச் செயல்பாடு

பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்

வினா விடைகள் மூலம் சமய – சமூக சீர்திருத்த இயக்கங்களைத் தெரிந்து கொள்வோமா!



படிகள்:

- கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.
- Social Reforms and Religious Movements என்னும் பக்கத்தில் வினாக்கள் கொள்குறி வகையில் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றிற்கான விடைகளைத் தேர்வு செய்க.
- விடைகள் சரியெனில் வலப்புறம் பச்சை நிற கைக் குறியீடு தோன்றும்.
- விடை தவறெனில் Show answer என்பதைத் தேர்வு செய்து விடையை அறிந்து கொள்க.

உரலி:

இணையம் : https://civilserviceaspirants.in/gk/History/Social-reforms-and-religious-movements-1.html
http://www.gyanjosh.com/test/modern-india/socio-religious-movements/0

XI2UK

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

11th History Lesson 13 Tamil Medium.indd 215 01-12-2022 19:58:37

அலகு
14

முகலாயப் பேரரசு

கற்றல் நோக்கங்கள்

கீழ்கண்டவை பற்றி அறிதல்

- முதல் பானிப்பட் போருக்குப் பிறகு இந்தியாவில் முகலாயர் ஆட்சி நிறுவப்பட்டது.
- ஹுமாயூனின் திறமையின்மையால் தனது ஆட்சியை நிலைநிறுத்த முடியாதபோது ஷெர்ஷாவின் சூர் வம்ச ஆட்சி ஏற்பட்டதை அறிதல்
- ஷெர்ஷாவின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்
- அக்பர் ஆட்சிக் காலத்தில் முகலாய அரசு வலுப்படுத்தப்பட்டது
- அக்பரின் மத மற்றும் ரஜபுத்திரக் கொள்கை
- ஜஹாங்கீர் ஆட்சியின் முக்கியத்துவம்
- கலை மற்றும் கட்டடக் கலைக்கு ஷாஜகானின் பங்களிப்பு
- ஔரங்கசீப்பின் இராணுவ வெற்றிகள், அவரது அழிவுகரமான ரஜபுத்திர, தக்காணக் கொள்கைகள் மற்றும் மராத்தியர்களுக்கு எதிரான போர்கள்
- முகலாயர் ஆட்சியின்போது இலக்கியம், ஓவியம், இசை, கட்டடக்கலை ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி, பக்தி இயக்கம், சூபியிசம், சீக்கியம், கிறித்துவம், இஸ்லாம்; வர்த்தகம், தொழில், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி

அறிமுகம்

இந்தியாவின் மீது மேற்கு, வடமேற்குத் திசைகளிலிருந்து மகா அலெக்ஸாண்டர் காலம் தொடங்கி நூற்றாண்டுகளின் ஊடாகப் பலமுறை படையெடுப்புகள் நடைபெற்றுள்ளன. வடஇந்தியாவின் பல பகுதிகள் இந்தோ–கிரேக்கர்கள், சாகர், குஷாணர், ஆப்கானியர் போன்ற அந்நியர்களால் ஆளப்பட்டுள்ளன. மங்கோலிய செங்கிஸ்கான், துருக்கிய தைமூர் ஆகியோரின் வழித்தோன்றல்களான முகலாயர் இந்தியாவில் ஒரு பேரரசை நிறுவினர். அப்பேரரசு மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தது. ஆனால் அவர்கள் அந்நிய தேசங்களைச் சார்ந்த ஆட்சியாளர்களாகக் கருதப்படவில்லை; மாறாக இந்திய அரச வம்சாவளியினராகவே கருதப்பட்டு வந்தனார்.

முகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர். இப்பேரரசு 1526இல் பானிப்பட் போரில் இப்ராகிம் லோடியை பாபர் தோற்கடித்தபின் நிறுவப்பட்டது. இவ்வாறு இந்தியாவில், ஒரு புதிய சகாப்தம், ஒரு புதிய பேரரசு தொடங்கி 1526 முதல் 1857 வரை நீடித்தது. முகலாய வம்சத்தைச் சேர்ந்த ஆறு முக்கிய அரசர்களான பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் இந்திய வரலாற்றில் தங்கள் தடங்களைப் பதித்தனர். 1707இல் ஔரங்கசீப்பின் மறைவைத் தொடர்ந்து பேரரசு வீழ்ச்சியடைந்தது. என்றாலும் 1707 முதல் 1857 வரை முகலாயர் அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கி வந்தது. ஒன்றரை நூற்றாண்டுக்குப் பின்னர் 1857ஆம் ஆண்டு பெரும்கிளர்ச்சிக்குப் பின் அரசியல் அதிகாரம் ஆங்கிலேய அரசியாரின் கைவசமானபோது ஆட்சி ஆங்கிலேயரின் கைகளுக்குச் சென்றது. முகலாயப் பேரரசு அதனுடைய அதிகாரத்தின் உச்சத்தில் ஆப்கானிஸ்தானிலிருந்து வங்காளம் வரையிலும், காஷ்மீர் முதல் தெற்கே தமிழகம் வரையிலும் பரந்து விரிந்திருந்தது. இந்தியா முழுவதிலும் மையப்படுத்தப்பட்ட சீரான நிர்வாக அமைப்பை முகலாயர் உருவாக்கினர். முகலாயர்கள், குறிப்பாக

11th History Lesson 14 Tamil Medium.indd 216 02-01-2023 14:05:42

அக்பர், இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒரே நாட்டினராக ஒருங்கிணைத்து, ஒரு கூட்டுத் தேசிய அடையாள அரசியலை உருவாக்கினார். மேலும் இந்தியாவைச் செழுமைப்படுத்திய மகத்தான கலை, கட்டடக்கலை, இலக்கிய, பாரம்பரியத்தையும் விட்டுச் சென்றனர்.

14. 1 ஜாகிருதீன் முகமது பாபர் (1526–1530)

பாபர்

மத்திய ஆசியாவில் உஸ்பெக்குகள் (துருக்கிய இனக்குழு); சபாவி (ஈரானை ஆட்சி செய்த அரச வம்சத்தினர்; ஷியா முஸ்லீம் பிரிவை ஆதரித்தவர்கள்); உதுமானியத் துருக்கியர் (சன்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள்) ஆகியோரிடையே நடைபெற்ற மேலாதிக்கத்திற்கான போட்டி, சாமர்கண்ட் பகுதியின் அரசரான பாபரை, தனது வாழ்க்கை வளத்துக்கான வாய்ப்புகளை வேறு இடங்களில் தேடிச் செல்லக் கட்டாயப்படுத்தியது. வரலாற்று ரீதியாக மத்திய ஆசிய நாடுகள் பட்டுப்பாதை வழியாக இந்தியாவோடு செய்த வர்த்தகம் அவர் செல்ல விரும்பிய இடத்தைப் பற்றிய (இந்தியா) தேவையான தகவல்களை அவருக்கு வழங்கியது. ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர் தைமூர் செய்ததை மீண்டும் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டுகொண்டிருந்த பாபர், தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாகச் சிதைவுற்றதைத் தொடர்ந்து 1526இல் தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசை நிறுவுவதில் வெற்றி பெற்றார்.

பாபர் பதினோரு வயதுச் சிறுவனாகத் தனது தந்தையிடமிருந்து சாமர்கண்டை (தற்போது உஸ்பெக்கிஸ்தானிலுள்ள ஒரு நகரம்) மரபுரிமைச் சொத்தாகப் பெற்றார். எதிரிகளால் சூழப்பட்ட நிலையில் அரியணையை இழந்த அவர் விரைவில் அதை மீட்டார். ஆனால் ஈரானில் வலிமைவாய்ந்த சபாவிகளின் ஆட்சி நடந்ததினாலும், மத்திய ஆசியாவில் உஸ்பெக்குகள் இருந்ததினாலும் தனக்கென ஒரு பேரரசைத் தென்கிழக்கே இந்தியாவில்தான் அமைக்க முடியுமென உணர்ந்தார். தைமூர் வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகையால் பஞ்சாப் மீது அவருக்கு ஒரு கண் இருந்தது. ஏனெனில் முன்பு பஞ்சாபின் ஒரு பகுதி தைமூரின் ஆளுமைக்குள் இருந்திருக்கிறது. 1519க்கும் 1524க்கும் இடையே அவர் பேரா, சியால்கோட் லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானை கைப்பற்றும் உறுதியான எண்ணத்தை வெளிக்காட்டினார். இந்துஸ்தானின் அரசியல் சூழலும் அவருடைய துணிச்சலான நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருந்தது. காபூல், கஜினி ஆகியவற்றை கைப்பற்றிய பாபர் சிந்து நதியைக் கடந்து ஒரு சிறிய அரசை ஏற்படுத்தினார். இந்தியாவின் மீது படையெடுப்பதற்கான காலமும் கனிந்தது. லோடி வம்சத்தைச் சேர்ந்த தில்லி சுல்தான் இப்ராகிம் லோடி தன் நாட்டை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் ஆப்கானியர், ரஜபுத்திரர் ஆகியோரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு இப்ராகிம் லோடியின் எதிரியான தௌலத்கான் லோடியாலும், மேவாரின் அரசனும் ரஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பின் தலைவருமான ராணா சங்காவாலும் அனுப்பப்பட்ட தூதுக்குழுக்களை பாபர் சந்தித்தார். பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதிகூறி பின்னர் பின்வாங்கிய தௌலத்கான் லோடியின் படைகளை லாகூரில் வென்றார்.

முதலாம் பானிப்பட் போர் (ஏப்ரல் 21, 1526)

இதன் பின்னர் பாபர் லோடியால் ஆளப்பட்ட பஞ்சாப்பை நோக்கித் திரும்பினார். பல படையெடுப்புகளுக்குப் பின்னர் பாபர் இப்ராகிம் லோடியின் பெரும்படையை எண்ணிக்கையில் குறைவான தனது படையைக் கொண்டு பானிப்பட்டில் தோற்கடித்தார். மிகச் சரியாகப் போர்வியூகங்கள் வகுத்துப் படைகளை நிறுத்தியமையும், பீரங்கிப் படையை (Artillery) திறம்படப் பயன்படுத்தியமையும் பாபரின் வெற்றிக்குக் காரணங்களாய் அமைந்தன. இவ்வெற்றி இந்தியாவில் நிரந்தரமாகத் தங்குவதற்கான நம்பிக்கையை பாபருக்கு அளித்தது. தில்லியையும் ஆக்ராவையும் பாபர் கைப்பற்றினாலும் ஆப்கானியர்களையும் ரஜபுத்திரர்களையும் அடக்க வேண்டிய அவசியமிருந்தது.

கான்வா போர் (1527)

அடுத்தபடியாக பாபர் மேவாரின் அரசனும் ராஜஸ்தான் மாளவம் ஆகிய பகுதிகளில் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த சித்தூரின் ராணா சங்காவை போர்க்களத்தில் எதிர்கொள்ளத் தீர்மானித்தார். தவிர்க்கமுடியாத அம்மோதலுக்குச் சாதகமான களமாக ஆக்ராவுக்கு அருகேயுள்ள கான்வா என்னுமிடத்தைத் தேர்வு செய்தார். தன்னுடைய அச்சமூட்டக் கூடிய பெரும்படையோடும் அதற்கு வலுச்சேர்த்த ஆப்கன் முஸ்லீம்கள், இப்ராகிம் லோடியின் சகோதரர்

11th History Lesson 14 Tamil Medium.indd 217 02-01-2023 14:05:42

பீரங்கியைப் பயன்படுத்தும் ராணுவப் படைப்பிரிவு பீரங்கி படை (Artillery) ஆகும். இதை இடம் விட்டு இடம் கொண்டு செல்லலாம். பொதுவாக ஒருவருக்கும் மேற்பட்ட நபர்களால் இவை இயக்கப்படும். வெடிமருந்து முதன்முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இது துப்பாக்கிகளிலும் பீரங்கிகளிலும் பயன்படுத்தப்பட்டது. பாபருக்கு முன்பாக இந்தியாவில் போர்களில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

முகமது லோடி, மேவாட்டின் அரசனான ஹசன்கான் மேவாட்டி ஆகியோரின் உதவியோடு ஆவேசமாக அணிவகுத்து வந்த ராணா சங்காவின் படைகள் பாபரின் படைகளை எதிர்கொண்டன. மீண்டும் ராணுவ தந்திரத்தாலும், பீரங்கிப்படைகளைத் திறம்பட பயன்படுத்தியதாலும் பாபர் ராணா சங்காவின் படைகளைத் தோற்கடித்தார். இவ்வெற்றியைத் தொடர்ந்து குவாலியர், தோல்பூர் ஆகிய கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. இது பாபரின் நிலைக்கு மேலும் வலுவூட்டியது.

சந்தேரிப் போர் (1528)

அடுத்து சிறப்பு வாய்ந்த மாளவப் பகுதியின் மீது பாபரின் மேலாதிக்கத்தை உறுதி செய்தது சந்தேரியில் மேதினிராய் என்பவருக்கு எதிராகச் செய்யப்பட்ட போராகும். இவ்வெற்றியைத் தொடர்ந்து பாபர் ஆப்கானியரின் வளர்ந்துவரும் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரும்பினார்.

காக்ரா போர் (1529)

ஆப்கானியர்களுக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிப்போர் இதுவாகும். சுல்தான் இப்ராகிம் லோடியின் சகோதரனான முகம்மது லோடியும் அவரது மருமகனான சுல்தான் நஸ்ரத்ஷாவும் பாபருக்கு எதிராகச் சதி செய்தனர். ஆபத்தை உணர்ந்த பாபர் அவர்களுக்கு எதிராகப் படையெடுத்தார். கங்கை நதியின் துணை நதியான காக்ரா ஆற்றின் கரையில் இறுதியாக நடைபெற்ற போரில் பாபர் ஆப்கானியரைத் தோற்கடித்தார். ஆனால் ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் பாபர் 1530இல் காலமானார்.

பாபரைப் பற்றிய மதிப்பீடு

முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவராவார். தனது வாழ்க்கையைப் பற்றிய பாபரின் நினைவுக் குறிப்புகளான துசுக்–இ–பாபுரி (பாபர் நாமா) உலகச் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. ஒரு சில காலம் இந்தியாவை ஆண்ட ஆப்கானியரைப் பற்றியோ அல்லது அவர்களால் ஆளப்பட்ட பெரும்பான்மை மக்களைப் பற்றியோ வியந்து பாராட்டும் அளவிற்கு பாபர் எதையும் பார்க்கவில்லை. ஆனால் இந்தியாவைப் பற்றிய அவருடைய சில கருத்துக்கள் சுவாரசியமாக உள்ளன.

இந்தியா எதைப் பெற்றிருந்தது என்பதை பாபர் பின்வருமாறு விவரிக்கிறார்: இந்துஸ்தானத்தின் தலையாய மேன்மை எதுவெனில் இது ஒரு மிகப் பெரிய நாடு. பெருமளவிலான தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டுள்ளது. இந்துஸ்தானத்தின் மற்றொரு வசதி யாதெனில் இங்குள்ள தொழிலாளர்கள், ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு பிரிவுக்கும் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் முடிவே இல்லாத வகையில் கடுமையாக உழைத்தனர்.

காந்தகாரில் தொடங்கி வங்காளத்தின் எல்லை வரையிலான பாபருக்குச் சொந்தமான பகுதிகள் தற்போது பாதுகாப்பாய் இருந்தன. இருந்தபோதிலும் ரஜபுத்திரர்களின் விரிந்து பரந்த பாலைவனப் பகுதிகளிலும் ராந்தம்பூர், குவாலியர், சந்தேரி ஆகியவற்றிலும், ரஜபுத்திரத் தலைவர்கள் தங்களிடையே சண்டைகளிட்டுக் கொண்டிருந்ததால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகம் என்பதில்லை. பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு இடர்பாடுகள் நிறைந்த பணியை விட்டுச் சென்றார்.

14. 2 ஹுமாயூன் (1530 – 1540; 1555 – 1556)

ஹுமாயூன் பண்பாடும் கல்வியறிவும் மிக்கவர். ஆனால் தனது தந்தையைப் போல் பெரும் வீரர் அல்ல. பலவீனமான பொருளாதார முறை, கொள்ளையடிக்கும் இயல்புடைய ஆப்கானியர், ஆகிய இரண்டு சிக்கல்களை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது. குஜராத் அரசரான பகதூர்ஷா அச்சத்தை ஏற்படுத்துபவராக இருந்தார். காபூல், காந்தகார் பகுதிகளுக்குப் பொறுப்பு வகித்த ஹுமாயூனின் சகோதரர் கம்ரான் தன்னுடைய அதிகாரத்தைப் பஞ்சாப் வரை நீட்டித்தார். பாபர் மரணமுறும் தருவாயில் சகோதரர்களை அன்புடன் நடத்துவேன் என பாபருக்குக் கொடுத்த சத்தியவாக்கை நினைவில் நிறுத்திய ஹுமாயூன் பஞ்சாப் மீதான கம்ரானின் ஆட்சியதிகாரத்தை ஓர் உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதற்காக ஏற்றுக்கொண்டார்.

11th History Lesson 14 Tamil Medium.indd 218 02-01-2023 14:05:42

பீகார், உத்திரப்பிரதேசம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஷெர்கான் (பின்னர் ஷெர்ஷா) என்பவரின் தலைமையில் வளர்ந்துவரும் ஆப்கானியரின் அதிகாரம், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹுமாயூனைத் தூண்டின. 1532இல் தௌரா என்னுமிடத்தில் ஆப்கானியரைத் தோற்கடித்த ஹுமாயூன், பலம் வாய்ந்த சுனார் கோட்டையை முற்றுகையிட்டார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் முகலாயருக்கு விசுவாசமாக இருப்பேன் எனப் பொய்யாக வாக்குறுதியளித்த ஷெர்ஷாவின் வார்த்தைகளை நம்பி ஹுமாயூன் முற்றுகையைக் கைவிட்டார். ஹுமாயூன் எடுத்த இந்த தவறான முடிவு அவரது ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

பின்னர் வந்த ஆண்டுகளில் அவருடைய எதிரிகள் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில் இவர் தில்லியில் 'தீன்பனா' என்னும் புதிய நகரை உருவாக்குவதில் கழித்தார். இதே சமயத்தில் பகதூர்ஷா ராஜஸ்தானைக் கைப்பற்றி இணைத்துக் கொண்டதோடு முகலாயர்களுக்கு எதிரானவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களைத் தூண்டியும் விட்டார். வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்த ஹுமாயூன் பகதூர்ஷாவின் மேல் போர் தொடுத்து குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றி அவற்றை தனது சகோதரரான அஸ்காரியின் பொறுப்பில் விட்டார். குஜராத் மக்களின் கலகங்களை அடக்க இயலாத நிலையில் அஸ்காரி ஆக்ரா செல்லத் தீர்மானித்தார். அஸ்காரி ஆக்ராவைக் கைப்பற்றி தனதாக்கிக் கொள்வார் என்ற அச்சத்தில் மாண்டுவில் தங்கியிருந்த ஹுமாயூன் குஜராத்தையும் மாளவத்தையும் கைவிட்டுவிட்டுப் படைகளோடு சகோதரரைப் பின் தொடர்ந்தார். ராஜஸ்தானில் சந்தித்துக்கொண்ட சகோதரர்கள் இருவரும் சமாதானமாயினர்.

பகதூர்ஷா தொடர்பான போர் நிகழ்வுகளில் ஹுமாயூன், முழுமையாக ஈடுபட்டிருந்த வேளையில் ஷெர்கான் வங்காள ஆட்சியாளரைத் தோற்கடித்து தன்னை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். வங்காளத்திலுள்ள கோட்டையும் ரோத்தா கோட்டையும் அவரால் கைப்பற்றப்பட்டன. சுனார் கோட்டையைக் கைப்பற்றிய ஹுமாயூன் ஷெர்கானை எதிர் கொள்வதற்காக வங்காளம் நோக்கிப் புறப்பட்டார். இடையே கவுர் அல்லது கௌடா என்ற இடத்தை ஹுமாயூன் அடைந்தபோது அவருடைய மற்றொரு சகோதரரான ஹிண்டால் கிளர்ச்சி செய்வதாக தகவல் வந்தது. ஆகவே ஹுமாயூன் அதை அடக்குவதற்காக ஆக்ரா நோக்கிப் புறப்பட்டார். அதுவரையிலும் அமைதி காத்த ஷெர்கான் இப்போது ஹுமாயூனின் படைகளைத் தாக்கத் தொடங்கினார். மிகப்பெரும் இடர்பாடுகளுக்குப் பின்னர் ஹுமாயூன் சௌசா என்னுமிடத்தை அடைந்தபோது ஒரு முழுமையான போரே ஏற்பட்டது.

சௌசாப் போர் (1539)

ஷெர்கான் தனது மேலான, அரசியல், ராணுவத் திறமைகளால் இப்போரில் வெற்றி பெற்றார். ஹுமாயூன் பெருந்தோல்வியைச் சந்தித்தார். இப்போரில் 7000 முகலாயப் பிரபுக்களும் வீரர்களும் கொல்லப்பட்டனர். தன்னுயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடிய ஹுமாயூன் கங்கை நதியை நீந்திக் கடந்தார். ஆக்ராவை சென்றடைந்த அவர் சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டால் ஆகியோரின் உதவியோடு ஷெர்கானை எதிர்கொள்ள படையொன்றைத் திரட்டினார். இறுதி மோதல் கன்னோசியில் நடைபெற்றது.

கன்னோசி போர் (1540)

கன்னோசி போரில் ஹுமாயூனின் படைகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. அவர் நாடற்ற அரசரானார்.

14. 3 ஷெர்ஷாவும் சூர் வம்சமும்

ஷெர்ஷா

ஹுமாயூன் கன்னோசி போரில் தோல்வியடைந்து தனது அரியணையை இழந்த பின்னர் மீண்டும் 1555இல் தில்லியைக் கைப்பற்றித் தனது அதிகாரத்தை மீட்பதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சூர் வம்சத்தைச் சேர்ந்த ஷெர்ஷாவால் தில்லி ஆளப்பட்டது. ஒரு ஜாகீர்தாரின் குடும்பத்தில் பிறந்து பரித் என்றழைக்கப்பட்ட இவர் ஒரு புலியைக் (ஹிந்தியில் ஷெர்) கொன்றதனால் ஷெர்கான் என்னும் பெயரைப் பெற்றார். அரியணை ஏறிய பின் ஷெர்ஷா என்றழைக்கப்பட்டார். தன் திறமையினாலும் ஆற்றலினாலும் இந்தியாவிலிருந்த ஆப்கானியரின் தலைவரானார். அவருடைய இராணுவ மதிநுட்பமும் அரசியல் செயல்திறனும் ஹுமாயூனுக்கு எதிராகவும் ஏனைய ரஜபுத்திர அரசுகளுக்கு எதிராகவும் அவருக்கு வெற்றிகளை ஈந்தன. மாளவம் போரிடாமலேயே அவரிடம் வீழ்ந்தது. மேவாரின் உதய்சிங் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் சரணடைந்தார். கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த முயற்சியில் அவர் தோல்விகண்டார்.

11th History Lesson 14 Tamil Medium.indd 219 02-01-2023 14:05:42

வெடிகுண்டு விபத்தின் காரணமாக 1545இல் அவர் உயிரிழந்தார். அவருக்குப்பின் பதவியேற்ற அவருடைய இரண்டாவது மகன் இஸ்லாம்ஷா 1553 வரை ஆட்சி புரிந்தார். சிறு வயதிலேயே அவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து வாரிசுரிமை பற்றிய குழப்பம் நிலவியது. இச்சூழ்நிலையை ஹுமாயூன் பயன்படுத்தி தில்லியையும் ஆக்ராவையும் சூர்வம்ச அரசர்களிடமிருந்து மீட்டார்.

ஷெர்ஷாவின் சீர்திருத்தங்கள்

ஹுமாயூனைப் பின்தொடர்ந்த ஷெர்ஷா அதற்கு முன்னர் கிசிர்கான் என்பவரை வங்காளத்தின் ஆளுநராக நியமித்திருந்தார் கிசிர்கான் வங்காளத்தின் முன்னாள் ஆட்சியரான சுல்தான் மகமுதுவின் மகளை மணந்தவர். அவர் சுதந்திர அரசரைப்போல் செயல்படத் துவங்கினார். ஊர் திரும்பியவுடன் அவரைக் கைது செய்ய ஷெர்ஷா உத்தரவிட்டார். பிராந்திய அரசுகளின் கீழ்ப்படியாமையைக் குறித்து நன்கு அறிந்திருந்த ஷெர்ஷா, ஒரு வலிமையான நிர்வாக அமைப்பை உருவாக்குவதே பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வாகும் எனக் கருதினார். எனவே அவர் தனது அரசை மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றினார் தில்லி சுல்தானியத்தின் உள்ளாட்சித் துறை நிர்வாகக் கட்டமைப்பு ஒரு சில மாற்றங்களோடு பின்பற்றப்பட்டது. தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களில் களவு போகும் பொருட்களுக்கு கிராமத்தலைவரே பொறுப்பு என்றானவுடன் கிராமத் தலைவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படத் தொடங்கினர். 'விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்" என ஷெர்ஷா நம்பினார். படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்குச் செல்கையில் பயிர்களுக்குச் சேதம் ஏற்படக் கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார். நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார். நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது. சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. வேறுபல இடங்களில் மொத்த வேளாண் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு மட்டும் வரியாக வசூலிக்கப்பட்டது.

ஷெர்ஷா விவசாயிகளிடம் கொண்டிருந்த அதே அக்கறையை வர்த்தகர்களிடமும் கொண்டிருந்தார். வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி, விற்பனை வரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன. தங்க, வெள்ளி, செப்புக் காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தரஅளவு வரையறை செய்யப்பட்டது வணிகத்திற்கு வசதி செய்து கொடுத்தது. அவருடைய நாணயமுறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் அடித்தளமானது.

வணிகத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும் பொருட்டு உறுதியான சாலை வசதி முறையை ஷெர்ஷா பராமரித்தார். பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டதோடு புதிய சாலைகளும் அமைக்கப்பட்டன. மேற்கில் சிந்துப் பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனார்கான் வரையிலான முக்கியப் பெருவழியைச் செப்பனிட்டதோடு குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளையும் அமைத்தார். லாகூர் முல்தான் ஆகிய நகரங்களை இணைக்கும் புதிய சாலை அமைக்கப்பட்டது. அனைத்துச் சாலைகளிலும் 'சராய்' எனப்படும் சத்திரங்கள் அமைக்கப்பட்டு வணிகர்கள் தங்கவும் உணவருந்தவும் வசதிகள் செய்துதரப்பட்டன. இவ்வேற்பாடுகள் விறுவிறுப்பான வணிகத்திற்கு உத்ரவாதம் அளித்தன. ஷெர்ஷாவால் உருவாக்கப்பட்ட ஒரு சில சராய்கள் இன்றளவும் உள்ளன. இத்தகைய சராய்கள் தங்களுக்கு அருகே நகரங்கள் உருவாவதையும் உறுதி செய்தன.

ஷெர்ஷா பெருமளவில் நற்தொண்டுகளைச் செய்தார். ஆதரவற்றோர்க்குக் கருவூலத்திலிருந்து உதவித்தொகை வழங்கினார். ஷெர்ஷா ஒரு வைதீக சன்னி முஸ்லீம் ஆவார். பாரபட்சமில்லாமல் நீதி வழங்கினார். தவறு செய்தவர்கள்

ஜாகீர்தாரிமுறை : இது ஒரு நில உடைமை முறையாகும். தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

ஜமீன்தாரி : இச்சொல் மற்றொரு நில உடைமை முறையைக் குறிப்பதாகும். பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற சொல்லுக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள். முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார். ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.

11th History Lesson 14 Tamil Medium.indd 220 02-01-2023 14:05:43

பிரபுக்களாயிருந்தாலும் தனது உறவினர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கத் தவறவில்லை. கலக மனப்பாங்கு கொண்ட ஜமீன்தார்கள், பிரபுக்கள், கொள்ளையர், திருடர்கள் ஆகியோரை கடுமையான தண்டனைகள் மூலம் ஒடுக்கி பேரரசில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தினார். மிகவும் புகழப்படும் அக்பர், தோடர்மால் ஆகியோரின் நிதிநிர்வாக முறை பெருமளவில் ஷெர்ஷாவின் நிதி நிர்வாக முறையினை அடித்தளமாகக் கொண்டதாகும். ஷெர்ஷாவுக்குப் புதிய நகரங்களை நிர்மாணிக்கவோ கட்டடங்களைக் கட்டவோ போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை. தில்லியில் கோட்டைச் சுவர்களுடன் கூடிய ஒரு புதிய நகரத்தை நிர்மாணிக்கத் தொடங்கினார். பின்னர் அது புராண கிலா (Old Fort) என அழைக்கப்பட்டது. தன்னுடைய கல்லறை மாடத்தை சசாரம் என்னுமிடத்தில் கட்டினார்.

14. 4 ஹுமாயூன் மீண்டு வருதல்

ஷெர்ஷா 1545இல் காலமான பின்னர் அவருக்குப் பின்வந்த வலிமை குன்றிய அரசர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். கன்னோசி போரில் தோற்றுத் தப்பியோடிய ஹுமாயூன் பாரசீகத்தில் தஞ்சம் புகுந்தார். பின்னர் பாரசீகப் படைகளுடன் ஆப்கானிஸ்தான் சென்ற ஹுமாயூன் காந்தகாரையும் காபூலையும் கைப்பற்றினார். ஆனால் அவருடைய சகோதரர் கம்ரான் அவர் கைப்பற்றிய பகுதிகளை அமைதியாக ஆட்சி புரிய ஹுமாயூன் அனுமதிக்கவில்லை. சகோதரர்களுக்கு இடையிலான போராட்டம் தீவிரமடைந்து இறுதியில் சமாதானத்தில் முடிந்தது. இதனிடையே சூர் பேரரசு பல துண்டுகளாகச் சிதைவடைந்தது. எனவே ஹுமாயூனின் படையெடுப்பு எளிதானது. முகலாயரின் வருகையைக் கண்ட பஞ்சாபிலிருந்த ஆப்கானியப் படைகள் தப்பியோடத் தொடங்கின. ஹுமாயூன் மீண்டும் பேரரசர் ஆனார். ஆனால் மிக விரைவிலேயே தில்லி கோட்டைக்குள் இருந்த நூலகம் ஒன்றின் மாடிப்படிகளில் இடறி விழுந்து ஹுமாயூன் இறந்து போனார். ஸ்டேன்லி லேன்பூலின் பொருள் பொதிந்த வார்த்தைகளில் சொல்வதென்றால் "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்".



ஹுமாயூன் கல்லறை

14. 5 அக்பர் (1556 – 1605)

ராஜபுதனத்துப் பாலைவனங்களில் ஹுமாயூன் அலைந்து திரிந்தபோது அவருடைய மனைவி 1542இல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். அந்த ஆண் மகனே ஜலாலுதீன் என்று அறியப்பட்ட அக்பர். பதினான்காவது வயதில் அவருக்கு முடிசூட்டப்பட்டது. அக்பர் அரியணை ஏறியபோது இன்னும் வலிமையாக இருந்த ஆப்கானியரும் ரஜபுத்திரரும் பெரும் சவாலாகத் திகழ்ந்தனர். இருந்தபோதிலும் அக்பர், பைராம்கான் என்ற தலைசிறந்த பாதுகாவலரைப் பெற்றிருந்தார்.

அக்பர் (லாஸ் ஏஞ்சல்ஸ் அருங்காட்சியகம்)

இரண்டாம் பானிப்பட் போர் (1556)

தில்லியில் வீற்றிருந்த ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய அரசன் அடில்ஷாவின் இந்து படைத்தளபதியான ஹெமு, முகலாயருக்கு எதிராக ஆப்கானியர் படைகளுக்குத் தான் தலைமையேற்றுச் செல்ல அனுமதிக்குமாறு அரசனைக் கேட்டுக் கொண்டார். அரசர் ஊக்கம் தரவே ஹெமு முதலில் குவாலியரைக் கைப்பற்றி அதன் முகலாய ஆளுநரை வெளியேற்றினார். அடுத்து எவ்வித எதிர்ப்புமின்றி ஆக்ராவைக் கைப்பற்றினார். ஹெமுவின் தாராளத் தன்மை தில்லியைக் கைப்பற்றும்போது பலம் வாய்ந்த எதிரிகளை வெல்ல உதவியது. அக்பர் 1556 நவம்பர் மாதம் தில்லியை நோக்கிப் புறப்பட்டு ஹெமுவை இரண்டாம் பானிப்பட் போரில் சந்தித்தார். போர் ஹெமுவுக்குச் சாதகமாக முடியவிருந்த தருவாயில் அவர் கண்ணில் அம்பொன்று பாய மயக்கமுற்று கீழே விழுந்தார். தலைமை இல்லாத ஆப்கானியப்

ஹெமு தோற்கடிக்கப்படுதல்

11th History Lesson 14 Tamil Medium.indd 221 02-01-2023 14:05:43

படைகளை முகலாயப் படைகள் வெற்றி பெற்றன. ஹெமு கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இவ்வெற்றி அக்பரை ஆக்ரா மற்றும் தில்லியின் அதிபதி ஆக்கியது. முகலாயப் பேரரசு மீண்டும் நிறுவப்பட்டது.

அக்பரும் பைராம்கானும்

அக்பர் ஒரு வெற்றியாளராக வட இந்தியா முழுவதையும் வாகை சூடி வலம் வந்தார். அக்பரின் முதல் நான்காண்டு ஆட்சிக் காலத்தில் பகர ஆளுநர் பைராம்கானின் கீழ், நாடு குவாலியர், அஜ்மீர் உட்பட காபூலிலிருந்து ஜான்பூர் வரை விரிவடைந்தது. தன் சாதனைகளின் காரணமாய் பைராம்கான் தன்போன்ற ஏனைய பிரபுக்களிடம் ஏளனத்துடனும் இறுமாப்போடும் நடந்துகொள்ளத் துவங்கினார். இதனால் கோபம் கொண்ட அக்பர் பைராம்கானைப் பணிநீக்கம் செய்து உத்தரவிட்டார். இதன் விளைவாகப் பைராம்கான் கலகம் செய்ய அக்பர் அதைச் சாதுர்யமாகக் கையாண்டார். இறுதியில் அக்பர் முன் ஒப்படைக்கப்பட்ட பைராம்கான் மெக்காவுக்கு அக்பரின் அறிவுரையின்படி புறப்பட்டார். செல்லும் வழியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார். பைராம்கானின் குடும்பம் தில்லிக்கு அழைத்துவரப்பட்டது. பைரம்கானின் மகன் அப்துர் ரகீம் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்–இ–கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

அக்பரின் படையெடுப்புகள்

அக்பர் மிகப்பெரும் வெற்றிப் படையெடுப்புகள் மூலம் மகத்தானதொரு பேரரசுக்கான அடிக்கல்லை நாட்டினார். 1562இல் மாளவம் பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர் அக்பரின் அரசவையில் ஒரு மன்சப்தாராக ஆக்கப்பட்டார். 1564இல் இந்தியாவின் மையப்பகுதியிலிருந்த கோண்டுவானா அதன் ராணி துர்காதேவி அவ்வம்மையாரின் மகன் வீர்நாராயணன் ஆகியோருடனான கடும் போருக்குப்பின் கைப்பற்றப்பட்டது. மேவார் அரசரான ராணா உதய்சிங் சித்தூரை இழப்பதற்கு முன்னர் கடுமையாகப் போரிட்டார். ஆறுமாதகால முற்றுகைக்குப் பின்னர் சித்தூர் கைப்பற்றப்பட்டது. ராணா உதய்சிங் குன்றுகளுக்குள் பின்வாங்க அவரின் தளபதிகளான ஜெய்மால், பட்டா ஆகியோர் போரைத் தொடர்ந்து நடத்தினர். இவ்விருவர் உட்பட 30,000 ரஜபுத்திர வீரர்கள் இப்போரில் கொல்லப்பட்டனர். ஜெய்மால், பட்டா ஆகியோரின் துணிச்சலைக் கண்டு பெரும் வியப்படைந்த அக்பர் அவர்களின் நினைவாகவும் அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் ஆக்ரா கோட்டையின் முக்கிய நுழைவாயிலில் அவர்களின் சிலைகளை நிறுவினார். சித்தூர் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ரஜபுத்திர அரசுகளான ராந்தம்பூர், கலிஞ்சார், பிக்கானீர், ஜோத்பூர், ஜெய்சால்மர் ஆகியவை சரணடைந்தன.

மத்திய இந்தியப் பகுதிகளைக் கீழ்படிய வைத்த பின்னர் அக்பர் தனது கவனத்தை செல்வச் செழிப்புமிக்க, கடல்சார் வணிகத்திற்குப் புகழ்பெற்ற குஜராத் மீது செலுத்தினார். அதன் அரசன் முசாபர்ஷாவிடமிருந்து 1573இல் குஜராத்தைக் கைப்பற்றினார். குஜராத் தக்காணத்தைக் கைப்பற்றுவதற்கான ஏவுதளமானது. பீகார் வங்காளம் ஆகிய பகுதிகளை ஆண்டு வந்த தாவுத்கான் அக்பரால் தோற்கடிக்கப்பட்டு அவ்விரு பகுதிகளும் 1576இல் முகலாயப் பேரரசோடு இணைக்கப்பட்டன.

ராஜா மான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் உதவியுடன் அக்பர் காபூலைச் சேர்ந்த மிர்சா ஹக்கீமைத் தோற்கடித்தார். காஷ்மீரையும் (1586) சிந்துவையும் (1591) அக்பர் கைப்பற்றியது வடமேற்கில் அவருடைய பேரரசை வலுப்படுத்தியது. வட இந்தியாவை அரசியல் ரீதியாக ஒருங்கிணைத்த பின்னர் அக்பர் தக்காணத்தின் மீது கவனம் கொண்டார். அக்பருடைய படைகள் 1591இல் காண்டேஷ் பகுதியைக் கைப்பற்றின. 1596இல் சாந்த்பீபியிடமிருந்து பெரார் கைப்பற்றப்பட்டது. இவ்வம்மையார் அகமதுநகரின் நிஜாம் சாகி வம்சத்தை சேர்ந்த தன் உடன்பிறப்பின் மகனான முசாபர்ஷாவினுடைய பகர ஆளுநராக அகமதுநகரைத் தாக்கிய முகலாயப்படைகளை எதிர்த்து வீரத்தோடு போராடினார். 1600இல் அகமதுநகர் அரசின் ஒரு சில பகுதிகள் முகலாயர் படைகளின் கைவசமானது. 1604இல் செப்டம்பர் மாதம் அக்பர் நோய்வாய்ப்பட்டு 1605 அக்டோபர் மாதம் 27ஆம் நாள் இயற்கை எய்தினார்.

ரஜபுத்திரக் கொள்கை

இந்துக்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக அக்பர் மனமார்ந்த முயற்சிகளை மேற்கொண்டார். முஸ்லீம் அல்லாத மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியையும் (தலை வரி) இந்து புனித யாத்திரைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் நீக்கினார். போர்க்கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறையும் கைவிடப்பட்டது. இந்து விதவைகள் பின்பற்றிய உடன்கட்டை ஏறும் முறையும் ஒழிக்கப்பட்டது. அவருடைய இணக்கமான ரஜபுத்திரக் கொள்கையானது ரஜபுத்திர அரச குடும்பங்களோடு திருமண உறவை மேற் கொள்ளுதல், அரசவையில் உயர்ந்த பதவிகளில் அவர்களை அமர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சகிப்புத்தன்மை கொண்ட மதக் கொள்கையானது பண்பாட்டு

11th History Lesson 14 Tamil Medium.indd 222 02-01-2023 14:05:43

11th History Lesson 14 Tamil Medium.indd 223
02-01-2023 14:05:43

ரீதியாகவும் உணர்வுப் பூர்வமாகவும் மக்கள் ஒருங்கிணைவதை உறுதி செய்தது. அக்பருக்கு முன்னரே பல முஸ்லீம் அரசர்கள் ரஜபுத்திர இளவரசிகளைத் திருமணம் செய்திருந்தனர். ஆனால் அக்பர் பரந்த மனப்பான்மையோடு இக்குடும்பங்களோடு நெருக்கமான உறவினை மேற்கொண்டு இத்திருமணங்கள் இருவேறு பண்பாடுகளை இணைக்கின்ற சக்தியாக மாறுவதற்குக் காரணமாக இருந்தார். அக்பர் ஆம்பர் நாட்டு அரசர் ராஜா பார்மல் (பீகாரிமால் என்று அறியப்பட்டவரின்) மகளான ஹர்க்கா பாயை மணந்தார். இந்த ஹர்க்காபாய் பின்னாளில் ஜோதா அக்பர் என்று அழைக்கப்பட்டார். மேலும் பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ரஜபுத்திர அரசுகளின் இளவரசிகளையும் திருமணம் செய்து கொண்டார். ஹர்க்காபாய் பெற்றெடுத்த இளவரசர் சலீம் பின்னர் ராஜா பகவன்தாஸின் மகளைக் கரம்பற்றினார்.

ஜோதா அக்பர்

ராஜா பகவன்தாஸின் மகனான ராஜா மான்சிங் அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியானார். திருமண உறவு மேற்கொள்ளக் கூடாது என நினைத்த ரஜபுத்திரர்களும் அக்பரின் அரசவையில் உயரிய மரியாதையைப் பெற்றனர். அக்பரின் ரஜபுத்திரக் கொள்கை மிகச் சிறந்த ராணுவத் தளபதிகளையும் சிறந்த நிர்வாகிகளையும் பேரரசுக்கு வழங்கியது. வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிபுணத்துவம் உடைய ராஜா தோடர்மால் திவானாக பதவி உயர்த்தப்பட்டார். ராஜா பீர்பால் அக்பரால் பெரிதும் விரும்பப்பட்ட நண்பராவார்.

மேவார், மார்வார் ஆகியவை முகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற ரஜபுத்திர அரசுகளாகும். ராணா உதய்சிங்கின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மகன் ராணா பிரதாப்சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்காமல் 1597இல் தனது மரணம் வரை தொடர்ந்து போரிட்டார். 1576இல் நடைபெற்ற ஹால்டிகாட் போரே முகலாயப் படைகளுக்கும் ராணா பிரதாப் சிங்கிற்குமிடையே நடைபெற்ற இறுதிப் போராகும். மார்வாரில் (ஜோத்பூர்) மால்தியோ ராத்தோரின் மகனான அரசர் சந்திரா சென் 1581 இல் தான் இறக்கும்வரை முகலாயரை எதிர்த்தார். ஆனால் அவருடைய சகோதரர்கள் முகலாயர் பக்கமிருந்து போரிட்டனர். தொடக்கத்தில் ஆக்ரா அக்பரின் தலைநகராக இருந்தது. பின்னாளில் பதேபூர்சிக்ரி என்னும் புதிய தலைநகரை அக்பர் உருவாக்கினார். தற்போது கைவிடப்பட்ட நகரமாக இருந்தாலும் இன்றும் அது அழகான மசூதிகளோடும் உன்னதமான புலந்தர்வாசா மற்றும் ஏனைய கட்டடங்களோடும் திகழ்கிறது.

மன்சப்தாரி முறை

அக்பர் ஒரு முறைபடுத்தப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கினார். அம்முறை பேரரசின் வெற்றிக்குப் பெரும்பங்காற்றியது. அவர் மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார். பிரபுக்கள், குடிமைப் பணிசார்ந்த இராணுவ நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது. மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது. ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும் அவ்வெண்ணிக்கை 10 முதல் 10,000 வீரர்கள்வரை ஆனதாகும். சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். வீரர்களின் எண்ணிக்கை, குதிரைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிப்பது அல்லது குறைப்பதன் மூலம் ஒரு மன்சப்தாரின் உயர்வும் தாழ்வும் நிர்ணயம் செய்யப்பட்டன. மன்சப்தாரி முறையானது பிரபுக்களின் இனக்குழுத் தளத்தை பல்வகைப்பட்டதாக மாற்றியமைத்தது. அக்பரின் தொடக்க காலங்களில் பிரபுக்கள் முற்றிலுமாக மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களாகவும் பாரசீகத்தைச் சார்ந்தவர்களாகவும் மட்டுமே இருந்தனர். ஆனால் மன்சப்தாரி முறை அறிமுகமான பின்னர் ரஜபுத்திரரும் ஷேக்சதா என்றழைக்கப்பட்ட இந்திய முஸ்லீம்களும் பிரபுக்கள் வரிசையில் இடம் பெறலாயினர். மன்சப்தார்களின் ஊதியம் பணமாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் அதற்கு மாறாக அவர்களுக்கு நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன. (தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஒரு மன்சப்தார் பணம் வசூலித்துக்கொள்ளலாம்.) இந்த ஜாகீர்கள் அடிக்கடி மாற்றப்பட்டன. மன்சப்தார் பதவியானது பரம்பரை உரிமை சார்ந்ததல்ல. ஒரு மன்சப்தார் மரணமடைந்துவிட்டால் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஜாகீரை அரசு உடனடியாகக் கையகப்படுத்தும்.

அக்பரின் மதக் கொள்கை

அக்பர் ஒரு வைதீக முஸ்லீமாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் சூபி தத்துவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஓர் இணக்கமான போக்கை மேற் கொண்டார். ஏனைய மதங்கள் தொடர்பான கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்ட அவர் அனைவருக்கும் அமைதி (சுல்–இ–குல்) என்னும் தத்துவத்தைப் பரப்புரை செய்தார். மதங்களுக்கு இடையிலான தொடர்புகள் பற்றி அக்பர் மேற்கொண்ட தத்துவ விவாதங்கள் மீது

11th History Lesson 14 Tamil Medium.indd 224 02-01-2023 14:05:44

வெறுப்புக் கொண்ட சமகால வரலாற்று அறிஞரான பதானி அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தார் எனக் குற்றம் சாட்டினார். அக்பர் இபாதத் கானா எனும் வழிபாட்டுக் கூடத்தை நிறுவினார். தொடக்கத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் இங்கு கூடி ஆன்மீக விசயங்கள் குறித்து விவாதித்தனர். பின்னர் இந்துக்களையும் கிறித்தவர்களையும் ஜொராஸ்திரியர்களையும் சமணர்களையும் கடவுள் மறுப்பாளர்களையும் இவ்விவாதங்களில் பங்கேற்க வரவேற்றார். இபாதத் கானாவில் நடைபெற்ற விவாதங்கள் மதங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியால் 1582இல் அக்பர் அவற்றை நிறுத்தினார். ஆனால் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சியை அவர் கைவிடவில்லை. அக்பர் பல்வேறு மதங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற ஞானிகளோடு எடுத்துக் காட்டாக புருசோத்தம், தேவி (இந்து மதம்), மெகர்ஜிராணா (ஜொராஸ்திரிய மதம்), அக்வாவிவா, மான்சரட் எனும் போர்த்துக்கீசியர் (கிறித்தவ மதம்), ஹிர விஜய சூரி (சமண மதம்) ஆகியோரை தனிப்பட்டவிதத்தில் தொடர்பு கொண்டு உண்மை எதுவென அறிய முயன்றார். இத்தகைய விவாதங்களின் விளைவாகப் பல்வகைப்பட்ட இப்பெயர்களுக்குப் பின்னே ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக அவர் உணர்ந்தார். அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் பதானியும் பயன்படுத்திய சரியான சொல் 'தௌகித்–இ–இலாகி' (தீன் இலாகி) என்பதாகும். தௌகித்–இ–இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.

இது ஒரு புதிய மதமல்ல. ஆனால் இதை சூபி மரபின் ஒரு வகைமுறையாகக் கருதலாம். அக்பர் இப்பிரிவின் பீர் (மத குரு) என்ற முறையில் அவர் சீடர்களைச் (முரிக்கள் சூபி சீடர்கள்) சேர்த்திருந்தார். இச்சீடர்கள் குரு முன்வைக்கும் விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும். பல்லாயிரக் கணக்கானோர் அக்பரின் சீடர்களாகச் சேர்ந்தனர். அக்பரின் உண்மையான நோக்கம் மதச் சார்பற்ற கோட்பாடுகளை, பல்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்தவர்களுக்குச் சரி சமமான சகிப்புத் தன்மையையும் சம மதிப்பையும் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் அரசை உருவாக்குவதாகும். சமஸ்கிருத, அராபிய, கிரேக்க மற்றும் ஏனைய மொழி நூல்களைப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்வதற்காக ஒரு பெரிய மொழியாக்கத் துறையை அக்பர் உருவாக்கினார். இராமாயணம், மகாபாரதம், அதர்வவேதம், விவிலியம், குரான் ஆகியவை அனைத்தும் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன. தௌகித்–இ–இலாகி (தீன் இலாகி) அக்பருக்குப் பின்னர் இல்லாமல் போனது.

14. 6 ஜஹாங்கீர் (1605–1627)

ஜஹாங்கீர்

அக்பருக்குப் பின் அவருடைய மகன் சலீம், நூருதீன் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார். இவர் அரசரானதை எதிர்த்து இவருடைய மூத்தமகன் இளவரசர் குஸ்ரு சீக்கிய குரு அர்ஜுன் தேவின் ஆதரவோடு கலகத்தில் இறங்கினார். கலகம் ஒடுக்கப்பட்டு இளவரசர் குஸ்ரு கைது செய்யப்பட்டு விழிகள் அகற்றப்பட்டன. கலகத்தைத் தூண்டியதாக குரு அர்ஜுன் தேவ் கொல்லப்பட்டார். வங்காளத்தில் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கான் என்பவரை ஜஹாங்கீர் பணிய வைத்தார். ராணா உதய்சிங், ராணா பிரதாப்சிங் ஆகியோர் காலத்தில் முகலாயருக்கு அடிபணிய மறுத்த மேவார் ராணா உதய்சிங்கின் பேரன் ராணா அமர்சிங்கிற்கு எதிராகத் தனது மகன் இளவரசர் குர்ரம் (பின்னாளில் பேரரசரான ஷாஜகான்) தலைமையில் படையெடுப்பு நடத்தி ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் அவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமர்சிங் ஜஹாங்கீரின் மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்ட அரசராகத் தனது பகுதிகளை ஆண்டார். 1608இல் தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையின் கீழ் தன்னைச் சுதந்திர அரசாக அறிவித்தது.

அகமதுநகரை இளவரசர் குர்ரம் கைப்பற்ற மேற்கொண்ட பல முயற்சிகள் கடைசியில் தோல்வியில் முடிந்தன. 14 மாத கால முற்றுகைக்குப் பின்னர் காங்ரா கோட்டையைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். 1595இல் பாரசீகர்களிடமிருந்து அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை 1622இல் பாரசீக அரசர் ஷா அப்பாஸ் மீட்டிருந்தார். ஜஹாங்கீர் அதை மீண்டும் கைப்பற்ற விரும்பினார். ஆனால் இளவரசர் குர்ரம் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாக அதை அவரால் செய்ய இயலவில்லை. ஜஹாங்கீரின் ஆட்சி வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற இரு ஆங்கிலேயரின்



ஜஹாங்கீர் அரசவையில் சர் தாமஸ் ரோ

மாலிக் ஆம்பர் : எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாகக் கொண்டுவரப்பட்ட மாலிக் ஆம்பர், பல இடங்கள் மாறி இறுதியாக அகமதுநகர் அரசின் பிரதம மந்திரியான செங்கிஸ்கானிடம் வந்து சேர்ந்தார். மாலிக் ஆம்பர் அரசியல் விவேகம், ராணுவம் மற்றும் நிர்வாக விஷயங்களை செங்கிஸ்கானிடமிருந்து கற்றுக்கொண்டார். செங்கிஸ்கானின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மனைவி மாலிக் ஆம்பரை சுதந்தர மனிதராக்கினார். கடுமையான உழைப்பின் மூலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி இறுதியாகத் தென்னிந்தியச் சுல்தானியங்கள் ஒன்றின் இராணுவத் தளபதியாகவும் பகர ஆளுநராகவும் ஆனார்.

தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் வட்டாரத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இம்முயற்சியின் பின்னே மூளையாகச் செயல்பட்டவர் மாலிக் ஆம்பர். 1626, மே 14இல் மாலிக் ஆம்பர் தன்னுடைய 78ஆம் வயதில் மரணமடைந்தபோது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினர்.

வருகைக்கு சாட்சியமானது. இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குடியேற்றம் ஒன்றை நிறுவுவதற்குப் பேரரசின் அனுமதியை முதலாமவரால் பெற இயலவில்லை. ஆனால் தாமஸ் ரோ இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவராய்ச் சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியை பேரரசரிடம் பெறுவதில் வெற்றி பெற்றார்.

ஜஹாங்கீர் அரசு விஷயங்களைக் காட்டிலும் கலை, ஓவியம், தோட்டம், மலர்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இதன் காரணமாக அரசரின் பாரசீக மனைவி மெகருன்னிசா (ஜஹாங்கீரால் நூர்ஜகான் எனப் பெயரிடப்பட்டவர்) அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார். நூர்ஜகான் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சிகளின் காரணமாக இளவரசர் குர்ரம் தனது தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். ஆனால் ஜஹாங்கீரின் விசுவாசமிக்க தளபதி மகபத்கான் மேற்கொண்ட முயற்சிகளால் வெற்றிபெற இயலாத நிலையில் குர்ரம் தக்காணம் திரும்பினார். பின்னர் நூர்ஜகானின் சதி நடவடிக்கைகளின் காரணமாக மகபத்கான் கலகத்தில் இறங்க, அக்கலகம் நூர்ஜகானால் திறமையுடம் கையாளப்பட்டதால் மகபத்கானும் தக்காணம் சென்று குர்ரமுடன் கைகோத்தார். ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜகான் தன் மருமகன் ஷாரியர் என்பவருக்கு மணிமுடி சூட்ட முயன்றார். ஆனால் நூர்ஜகானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் ஷாஜகான் என்ற பெயருடன் அடுத்த முகலாய அரசராக அரியணை ஏறினார். பத்து ஆண்டுகள் நாட்டையாண்ட நூர்ஜகான், 1627இல் ஜஹாங்கீரின் இறப்புக்குப் பின்னர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தார்.

நூர்ஜகான்

14. 7 ஷாஜகான் (1627–1658)

ஷாஜகான் ஆக்ராவில் அரியணை ஏறியபோது அவருடைய நிலை பாதுகாப்பானதாகவும் சவால்களற்றதாகவும் இருந்தது. இருந்தபோதிலும் பேரரசின் நடப்பு நிகழ்வுகள் கவனத்தைக் கோரின. தெற்குப் பிராந்தியங்களின் ஆளுநராக இருந்த கான்ஜகான் எனும் பட்டப் பெயர் கொண்ட ஆப்கானாகிய பிர்லோடி பகைமை பாராட்டினார். தக்காண அரசிலிருந்து அவரை இடமாற்றம் செய்து ஷாஜகான் ஆணை பிறப்பித்திருந்தும் அவர் அகமதுநகர் சுல்தானான இரண்டாம் மூர்தசா நிஜாம்ஷாவுடன் இணைந்து ஷாஜகானுக்கு எதிராகச் சதிகளில் ஈடுபட்டார். நிலைமை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஷாஜகான் தானே நேரடியாகத் தக்காணத்திற்கு விரைந்தார். புதிதாகப் பதவியில் அமர்த்தப்பட்டத் தக்காண ஆளுநர் ஆசம்கான் எனும் பட்டத்தைப் பெற்ற இராதத்கான் பேரரசின் படைகளுக்குத் தலைமையேற்று பால்காட் பகுதியைத் தாக்கினார். பேரரசின் படைகளால் ஏற்பட்ட அழிவுகளைக் கண்ட மூர்தசா கான்ஜகானுடனான தனது போக்கை மாற்றிக் கொண்டார். இதனால் கான்ஜகான் தௌலதாபாத்திலிருந்து தப்பி மாளவம் சென்றார். ஆனால் முடிவில் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். தக்காணத்தில் அமைதி திரும்பியது. ஷாஜகான் தக்காணத்தை விட்டுச் செல்லும் முன்பாக அப்பகுதியைத் தௌலதாபாத் உள்ளிட்ட அகமதுநகர், காண்டேஷ், பெரார், தெலுங்கானா என நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். அந்நான்கு மாநிலங்களுக்கும் ஆளுநராகப் பதினெட்டே வயது நிரம்பிய தனது மகன் ஔரங்கசீப்பை நியமித்தார்.

11th History Lesson 14 Tamil Medium.indd 226 02-01-2023 14:05:44

தக்காணம் இவ்வாறாக ஷாஜகான் காலத்தில் முகலாயப் பேரரசின் ஆற்றல்மிக்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. முகலாயருக்கு வலுவான போட்டியாளராகத் திகழ்ந்த அகமதுநகர் மாலிக் ஆம்பரின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பேரரசோடு இணைக்கப்பட்டது. 1636இல் ஷாஜகான் மகபத்கானின் உதவியோடு அகமது நகரின் நிஜாம் ஷாஹி அரசர்களைப் பணியச் செய்தார். ஷியா பிரிவைச் சேர்ந்த கோல்கொண்டாவின் சுல்தான் தன் அமைச்சர் மீர்ஜும்லாவைச் சிறையில் அடைத்ததைக் காரணம் காட்டி ஔரங்கசீப் கோல்கொண்டாவின் மீது படையெடுத்தார். உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி குதுப்ஷாகி அரசர் முகலாயப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசரானார்.

தக்காண சுல்தானியம் : மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகியவற்றின் பெரும் பகுதியையும் கர்நாடகத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த பாமினி சுல்தானியம் ஒரு நூற்றாண்டுக் காலம் செல்வச் செழிப்போடு இருந்து பின்னர் சிதைவுற்றது. வலிமை வாய்ந்த பிரபுக்கள் கோல்கொண்டா (குதுப்ஷாஹி), பீஜப்பூர், (அடில்ஷாஹி), பெரார் (இமத்ஷாஹி) பீடார், (பரீத் ஷாஹி) அகமதுநகர், (நிஜாம் ஷாஹி) ஆகிய இடங்களில் புதிய அரசுகளைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் கூட்டாகத் தக்காணச் சுல்தானியம் என்றழைக்கப்படுகிறது.

1638இல் ஷாஜகான் பாரசீகப் பேரரசில் அரங்கேறிய அரசியல் சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி, அக்பரால் கைப்பற்றப்பட்டு ஜஹாங்கீரால் இழக்கப்பட்ட காந்தகாரைக் கைப்பற்றி இணைத்துக்கொண்டார்.

போர்த்துகீசியர் கோவாவில் ஒரு ஆளுநரைக் கொண்டிருக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும் வங்காளத்தில் தங்களது குடியிருப்புகளைத் தொலைதூரத்திலிருந்த ஹுக்ளியில் பெற்றிருந்தனர். ஷாஜகான் இப்போர்த்துகீசியரை அவர்களின் குடியிருப்புகளிலிருந்து துரத்தும்படி வங்காள ஆளுநருக்கு உத்தரவிட்டார். ஹுக்ளியிலிருந்த 200 போர்த்துகீசியர் 600 இந்திய அடிமைகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்தனர். அவர்களில் பலரைப் போர்த்துகீசியர் கட்டாய மதமாற்றம் செய்து கிறித்தவர்களாக்கினர். மேலும் கோவாவிலிருந்த போர்த்துகீசியர் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதில் வீரமாகப் போராடினாலும் முகலாயப் படைகளால் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

1641இல் ஷாஜகானின் அமைச்சரும் மாமனாருமான ஆசப்கான் மரணமடைந்தார். ஆசப்கானின் தமக்கையும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான் 1645 டிசம்பர் வரை உயிரோடிருந்தார். ஓய்வு பெற்றபின் அவர் வேறு பிரச்சனைகள் எதையும் ஏற்படுத்தவில்லை.

முகலாயர் காலத்து ஐரோப்பியக் குடியேற்றங்கள்:

போர்த்துகீசியர்: 1510இல் அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றி அதைக் கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார். தொடர்ந்து மேற்குக் கடற்கரையில் டாமன், சால்செட், பம்பாய் ஆகிய இடங்களிலும், கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கு அருகே சாந்தோம், வங்காளத்தில் ஹுக்ளி ஆகிய இடங்களிலும் போர்த்துகீசியர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

டச்சுக்காரர்: டச்சுக்காரர்கள் மசூலிப்பட்டினம் (1605), புலிக்காட் (பழவேற்காடு 1610), சூரத் (1616), பிமிலிபட்டினம் (1641), காரைக்கால் (1645), சின்சுரா (1653) காசிம்பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் (அனைத்தும் 1658), கொச்சி (1663) ஆகிய இடங்களில் தங்களது வணிகநிலையங்களை ஏற்படுத்தினர்.

டேனியர்: டென்மார்க் நாட்டினரும் இந்தியாவில் வணிகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் 1620இல் குடியேற்றத்தை நிறுவினர். வங்காளத்தில் செராம்பூர் அவர்களின் தலைமையிடமாக இருந்தது.

பிரெஞ்சுக்காரர்: சூரத் (1668), மசூலிப்பட்டினம் (1669), அப்போது சிறுகிராமமாக இருந்த புதுச்சேரி (1673), வங்காளத்தின் சந்தன்நகர் (1690) ஆகியவை பிரெஞ்சுக்காரரின் தொடக்ககாலக் குடியேற்றங்களாகும். பின்னர் மலபாரில் உள்ள மாஹி, சோழமண்டலக் கடற்கரையில் ஏனாம் (இரண்டும் 1725இல்), காரைக்கால் (1739) ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

ஆங்கிலேயர்: முதலில் கம்பெனி சூரத்தில் ஒரு வணிகச்சாவடியை நிறுவியது (1612இல் அங்கு ஒரு வணிக நிறுவனம் / பண்டகசாலை அமைக்கப்பட்டது). பின்னர் சென்னை (1639), பம்பாய் (1668), கல்கத்தா (1690) ஆகியவற்றைப் பெற்றது. கம்பெனி பல வணிகக் குடியேற்றங்களைப் பெற்றிருந்தாலும் கல்கத்தா வில்லியம் கோட்டையும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையும், பம்பாயிலுள்ள மாளிகையும் ஆங்கிலேயரின் மிக முக்கியமான வணிகக் குடியேற்றங்களாகும்.

11th History Lesson 14 Tamil Medium.indd 227 02-01-2023 14:05:44

பிரான்ஸ் அரசன் பதினான்காம் லூயியின் சமகாலத்து அரசனான ஷாஜகான் முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவருடைய காலத்தில்தான் அரசருக்காகப் புகழ்பெற்ற மயிலாசனம் செய்யப்பட்டது. பெர்னியர் (பிரெஞ்சு மருத்துவர், பயணி), தாவர்னியர் (பிரெஞ்சு வைர வியாபாரி, பயணி), மான்டெல்சோ (ஜெர்மன் பயணி மற்றும் துணிச்சல் வீரர்), பீட்டர்முன்டி, (இங்கிலாந்து வணிகர்), மனுச்சி (இத்தாலிய எழுத்தாளர் மற்றும் பயணி) ஆகிய ஐரோப்பியர்கள் ஷாஜகானின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தனர். இந்தியா குறித்த விரிவான விவரங்களை எழுதிச் சென்றனர்.

ஷாஜகானின் இறுதி நாட்களில் அவரது நான்கு மகன்களிடையே அரியணைக்கான போட்டி ஏற்பட்டது. மூத்த மகன் தாராஷூகோ அரசனாவதை ஷாஜகான் விரும்பினார். தாராஷூகோ பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டதால் மற்ற சகோதரர்கள் வெறுப்புக் கொண்டனர். மூன்றாவது மகனான ஔரங்கசீப், மனிதர்களையும் சூழ்நிலைகளையும் சரியாக எடைபோடுபவராகவும் சிறந்த திட்டமிடல் கொண்டவராகவும் இரக்கமற்றவராகவும் இருந்தார். தாராஷூகோ சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூபி தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார். ஷாஜகானின் நான்கு மகன்களிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் மூன்றாவது மகன் ஔரங்கசீப் வெற்றி பெற்றார்.

ஷாஜகானைச் வீட்டுச் சிறையிலடைத்த ஔரங்கசீப் முகலாயப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். மனம் உடைந்துபோன ஷாஜகான் ஒரு அரண்மனைக் கைதியாகவே 1666 ஜனவரி மாதம் மரணமடைந்தார். தாஜ்மஹாலில் அவரது மனைவியின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோற்றுப்போன தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார். பல்வேறு பண்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய அவர் இந்து மதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

14. 8 ஔரங்கசீப் (1658–1707)

ஔரங்கசீப்

ஔரங்கசீப் ஆலம்கீர் (உலகை வெல்பவர்) வாரிசுரிமைப் போரில் அரியணைக்காகத் தன்னோடு போட்டியிட்ட தாராஷூகோ, ஷூஜா, முராத் ஆகியோரை வெற்றி கொண்டு 1658இல் அரியணை ஏறினார். அவருடைய ஐம்பது ஆண்டுகால ஆட்சியைச் சரிபாதியாகப் பிரித்துப் பார்க்கலாம். முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வட இந்திய அரசியலில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார். தக்காணப் பகுதி அவருடைய ஆளுநர்களின் கைகளில் விடப்பட்டிருந்தன. 1681இல் அவருடைய மகன்களில் ஒருவரான இளவரசர் அக்பர் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாய் அவர் தக்காணம் செல்ல நேர்ந்தது. மீண்டும் அவர் தில்லிக்குத் திரும்பவேயில்லை. ஏமாற்றமடைந்த மனநிலையில் 1707–இல் அவர் அகமதுநகரில் காலமானார்.

தாஜ்மஹால் : தாஜ்மஹால் முகலாயக் கட்டடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும். அது இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும். 1612இல் திருமணமானதில் தொடங்கி 1631இல் குழந்தைப்பேறின் போது மரணமடையும் வரை இணைபிரியாமல் உற்ற துணையாய் இருந்த தனது மனைவி மும்தாஜுக்கு அழியாப் புகழை அளிப்பதற்காக ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினார். பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமைக் கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் இவ்வளாகத்திற்கான வரைபடத்தைத் தயாரித்த பெருமை இக்காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும். இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் (மினார் என்றழைக்கப்படும் நான்கு கோபுரங்கள்) ஆகிய அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தனித்தன்மை வாய்ந்ததாக வடிவமைக்கப்பட்டது. 1632இல் கட்டிட வேலைகள் தொடங்கின. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப்பணியை 1638–39இல் முடிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர். அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643இல் முடிவடைந்தன. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1647 வரை தொடர்ந்தது.

தாஜ்மஹால்

11th History Lesson 14 Tamil Medium.indd 228 02-01-2023 14:05:46

முகலாயப் பேரரசின் எல்லைகளை விரிவடையச் செய்வதற்காகப் பல படையெடுப்புகளை ஔரங்கசீப் மேற்கொண்டார். வடமேற்கிலும் வடகிழக்கிலும் அவர் மேற்கொண்ட போர்களால் கருவூலம் வறண்டு போனது. இவருடைய தந்தையார் காலத்திலேயே நிலவரியானது விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு என்ற நிலையிலிருந்து சரிபாதி என உயர்த்தப்பட்டது. ஔரங்கசீப் மேற்கொண்ட நீடித்தப் போர் நடவடிக்கைகள், விவசாயிகளின் மீது அதிகமான வரிகளைச் சுமத்தும் தேவையை ஏற்படுத்தின. தொடக்கத்தில் ஷாஜகானாபாத் அவரின் தலைநகராக அமைந்தது. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தனது நீண்ட படையெடுப்புகளின்போது ஔரங்கசீப் எங்கெல்லாம் முகாமிட்டாரோ அவ்விடங்களுக்குத் தலைநகர் மாறியது.

வடஇந்தியாவில் ஔரங்கசீப்பிற்கு எதிராக மூன்று மிக முக்கியக் கிளர்ச்சிகள் அரங்கேறின. ஜாட் (மதுரா மாவட்டம்), சத்னாமியர் (ஹரியானா பகுதி), சீக்கியர் ஆகியோர் கலகம் செய்தனர். ஜஹாங்கீர், ஷாஜகான் காலத்திலேயே தொடர்ந்து கலகம் செய்யும் இயல்பினைக் கொண்ட ஜாட்டுகளின் 1669ஆம் ஆண்டுக் கலகம் தற்காலிகமாக ஒடுக்கப்பட்டாலும் ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின்னரும் அவர்கள் கட்டுக்கடங்காதவர்களாகவே இருந்தனர். சத்னாமியரின் கிளர்ச்சியானது உள்ளூர் இந்து ஜமீன்தார்களின் உதவியோடு ஒடுக்கப்பட்டது. சீக்கியர் கலகமானது, அதிகாரப்பூர்வமாக சீக்கிய குரு என்ற பதவியை வகித்து வந்த சீக்கிய குரு தேஜ்பகதூருக்கு எதிராக அப்பதவியின்மீது உரிமை பாராட்டிய ராம்ராய் மேற்கொண்ட சூழ்ச்சிகளின் காரணமாய் வெடித்தது. இறுதியில் சீக்கியரின் ஒன்பதாவது குருவான தேஜ்பகதூர் கொல்லப்பட்டதோடு கிளர்ச்சி முடிவுற்றது.

அனைத்து வகைகளைச் சேர்ந்த இந்துக்களின் மீதும் ஜிஸியா வரி விதிக்கப்பட வேண்டுமென ஔரங்கசீப் மேற்கொண்ட முடிவு, அதுவரைப் பேரரசிற்கு விசுவாசத்துடன் சேவை செய்துவந்த ராஜஸ்தானத்து தலைவர்களிடையே கிளர்ச்சி மனநிலையை உருவாக்கியது. மார்வாரில் ஜஸ்வந்த் சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து வாரிசுரிமைச் சிக்கல் ஏற்பட்டது. இச்சிக்கலில் ஔரங்கசீப் தலையிட்டு ஜஸ்வந்த் சிங்கின் பேரனான இந்திரசிங் என்பவரைப் பெயரளவிற்கு அரச பதவியில் அமர்த்த மேற்கொண்ட முயற்சியை ஜஸ்வந்த் சிங்கின் மனைவி ராணி ஹாடி வெறுத்தார். இது தொடர்பாக, ராத்தோர் ரஜபுத்திரரின் உதவியோடு மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால் வெறுப்புக் கொண்ட மேவாரின் ராணாவான ராஜ்சிங் கலகத்தில் ஈடுபட்டார். இக்கிளர்ச்சியை ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர் ஆதரித்தார். இருந்தபோதிலும் முகலாயப் படைகளுக்கு ராணா இணையானவர் அல்ல என்பதால் கொரில்லா போர்முறையைக் கையாண்டு 1680இல் தான் மரணமடையும் வரை ராணா போராடினார். 1681இல் மேவாரின் புதிய ராணாவாகப் பதவியேற்ற ராணா ஜெய்சிங் ஔரங்கசீப்புடன் ஒரு அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை

ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கையானது வளர்ந்துவந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது, ஷியா பிரிவைச் சேர்ந்த தக்காணச் சுல்தானியங்களானக் கோல்கொண்டா, பீஜப்பூர் அகியவற்றின் கிளர்ச்சிப் போக்கிற்கு அணைபோடுவது, தக்காணத்தைப் புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிளர்ச்சிகளை ஒடுக்குவது ஆகியவற்றை நோக்கமாய்க் கொண்டிருந்தது. ஔரங்கசீப் 1682இல் தக்காணம் வந்தார். 1707இல் தனது மரணம் வரை தக்காணத்திலேயே தங்கியிருந்தார். பீஜப்பூரின் அடில்சாஹி வம்சத்தைச் சேர்ந்த

கோல்கும்பாஸ் : 1480 முதல் 1686 வரை ஆட்சி செலுத்திய அடில் ஷாஹி மரபின் தலைநகர் பீஜப்பூர் (விஜயபுரா) ஆகும். இது கண்கவர் கட்டடங்களையும் மசூதிகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வம்சத்தின் ஏழாவது ஆட்சியாளரான முகமது அடில்ஷாவின் (1627–1656) மிடுக்கான கல்லறையே கோல்கும்பாஸ் (வட்டவடிவக் குவிமாடம்) ஆகும். அடில் ஷா இதனைத் தனது வாழ்நாளிலேயேக் கட்டினார். இது அடர் சாம்பல்நிறக் கற்களால் கட்டப்பட்டு மேற்பூச்சு பூசி அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறம் சாதாரணமாயும் ஆனால் அழகுறவும் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் நான்கு வெளிமூலைகளிலும் எண்கோணக் கவிகைமாடம் உள்ளது. ஒவ்வொரு கவிகைமாடமும் ஏழு அடுக்குகளையும் ஒவ்வொரு அடுக்கும் பல சாளரங்களையும் கொண்டு பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ரோமின் புனித பீட்டர் தேவாலயத்திற்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய குவிமாடம் இதுவேயாகும். இதன் உட்சுவற்றின் நீளம் 135 அடி; உயரம் 178 அடி. இங்கு சற்று உயர்த்தப்பட்ட மேடையில் முகமது அடில்ஷா அவர் மனைவி அருஸ்பீபி, அவர் மகள், பேரன், பேரனின் பிரிய மனைவி ரம்பா ஆகிய ஐவரின் கல்லறைகள் உள்ளன.

11th History Lesson 14 Tamil Medium.indd 229 02-01-2023 14:05:46



11th History Lesson 14 Tamil Medium.indd 230 02-01-2023 14:05:47

சுல்தான் சிக்கந்தர் அடில்ஷா ஔரங்கசீப்பின் பல படையெடுப்புகளை எதிர்த்து நின்றார். ஔரங்கசீப் 1685இல் தனது மகன் ஆசாம் ஷாவை அனுப்பிவைத்ததில் பயனேதுமில்லை. பின்னர் மற்றொரு மகன் ஷாஆலமை பீஜப்பூரைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். ஷியா முஸ்லீமான பீஜப்பூர் சுல்தான் திறமையுடன் கோட்டையைப் பாதுகாத்தார். ஆனால் ஔரங்கசீப்பே நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி இறுதிவரை போரிடும்படி தனது படைகளுக்கு உற்சாகம் அளித்ததால் பீஜப்பூர் சுல்தான் தோல்வியடைந்தார். கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் 1687இல் தோற்கடிக்கப்பட்டு கோல்கொண்டா கைப்பற்றப்பட்டது.

மராத்தியருக்கு எதிராக ஔரங்கசீப்பின் நடவடிக்கைகள்

சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் ஔரங்கசீப்புக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தனர். ஔரங்கசீப் தனது இரு முக்கியத் தளபதிகளான செயிஷ்டகான், ஜெய்சிங் ஆகியோரை ஒருவருக்குப் பின் ஒருவராக சிவாஜியைக் கைதுசெய்ய அனுப்பி வைத்தார். ஜெய்சிங் சிவாஜியைக் கைது செய்து தில்லிக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அங்கிருந்து தப்பிய சிவாஜி மீண்டும் தக்காணத்தை அடைந்தார். சிவாஜி கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி 1680இல் 53 வது வயதில், தான் மரணமடையும் வரை முகலாயப் படைகளை எதிர்த்துப் போர் செய்தார். சிவாஜியின் மகன்களும் தொடர்ந்து எதிர்த்து 1707இல் ஔரங்கசீப் மரணமடையும்வரை அவரைப் பெரும் சோதனைக்கு உள்ளாக்கினர். 1707இல் ஔரங்கசீப் காலமானது இந்திய வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்புமுனையாகும். ஏனெனில் அடுத்த 150 ஆண்டுகளுக்கு வலிமைகுன்றிய வழித்தோன்றல்களால் அது ஆளப்பட்டபோதும் ஔரங்கசீப் மரணமடைந்தபோதே முகலாயப் பேரரசும் முடிவுக்கு வந்துவிட்டது.

ஔரங்கசீப்பின் பிற நடவடிக்கைகள்

அரியணைப் போட்டியில் தனக்கு எதிரான முக்கியப் போட்டியாளரான தனது சகோதரர் தாராஷுகோவுக்குச் சீக்கியர் உதவினர் என்ற காரணத்திற்காக அவர்களின் மீது ஔரங்கசீப் வெறுப்புக் கொண்டார். ஔரங்கசீப்பின் உத்தரவின்படியே குரு தேஜ்பகதூர் கொல்லப்பட்டார்.

இந்நிலையில் ரஜபுத்திர அரசர்கள் தங்களை சுதந்திர அரசுகளாகப் பிரகடனம் செய்து கொண்டனர். இவர்களுக்கு எதிராக ஔரங்கசீப்பின் மகனான இளவரசர் அக்பரின் தலைமையில் பெரும்படையொன்று அனுப்பப்பட்டது. மகனுடையத் துரோகக் குணத்தை ஒருவேளை அறிந்திராமலே ஔரங்கசீப் இந்த முடிவை எடுத்திருக்கலாம். எப்படியிருந்தபோதிலும் இளவரசர் தன்னை முகலாயப் பேரரசராகப் பிரகடனம் செய்து கொண்டார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவரைத் தக்காணத்திற்குத் துரத்தின. அங்கு அவர் சிவாஜியின் மகன் சாம்பாஜியின் உதவியைப் பெற்றார். ஔரங்கசீப் நேரடியாகக் களத்தில் இறங்கவே பாரசீகத்திற்குத் தப்பிச் சென்ற இளவரசர் அக்பர் அங்கிருந்து திரும்பவேயில்லை. 1689இல் சாம்பாஜி கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்கள் முற்றிலுமாகச் சரணடையும் அளவுக்குத் தள்ளப்பட்டன.

ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதிப்பகுதியில் பேரரசு சிதைவடையத் தொடங்கியது. ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின் "பின் தோன்றிய அரசுகளால்" பேரரசின் சிதைவு விரைவுபடுத்தப்பட்டது. பேரரசு எளிதில் கையாள முடியாத அளவிற்கு விரிந்தது. பேரரசின் தொலைதூரப் பகுதிகளை மேலாண்மை செய்யக் கூடிய அளவுக்குப் போதுமான நம்பிக்கைக்குரிய நபர்களை ஔரங்கசீப் பெற்றிருக்கவில்லை. அவருடைய அரசியல் எதிரிகள் பலர் முகலாயர் ஆதிக்கத்தை மீறி சுதந்திர அரசர்களாகப் பிரகடனம் செய்தனர். தக்காண விவகாரங்களில் ஔரங்கசீப் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டது பேரரசின் ஏனைய பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளை எதிர்கொள்ளவிடாமல் அவரைத் தடுத்தது. ஔரங்கசீப் மரணமடைந்த சிறிது காலத்திலேயே இந்திய அரசியலில் முகலாயப் பேரரசு ஒரு ஆற்றல்மிக்க சக்தியாக இல்லாமல் மறைந்தது.

ஔரங்கசீப் 'ஜிஸியா' வரியை மீண்டும் விதித்தார். புதிய கோவில்கள் கட்டப்படக் கூடாதெனவும் ஆணைகள் பிறப்பித்தார். ஆனால் பழைய கோவில்களில் பழுது நீக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டன. இந்நடவடிக்கைகள் அவருடைய மத நம்பிக்கைகளில் மட்டும் வேர்கொண்டு இருக்கவில்லை; மாறாக அரசியல் நிர்பந்தங்களிலும் அவை வேர்கொண்டிருந்தன. ஆனால் ஓர் உண்மையான முஸ்லீமாக, வழக்கமாக விதிக்கப்படும் நிலவரிக்கு மேலாக வசூலிக்கப்பட்ட 'அப்வாப்' என்னும் வரிவசூலை, அது ஷரியத் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தினார். அதைப் போலவே கோவில்கள் தொடர்பான அவருடைய சட்டங்களும் பழமையானவை. இச்சட்டங்கள் அரசியல் பகைமையிருந்த பகுதிகளில் மட்டும்

11th History Lesson 14 Tamil Medium.indd 231 02-01-2023 14:05:47

நடைமுறையில் இருந்தன. எங்கே அரசியல் பகைமையில்லாமல் கீழ்ப்படியும் நிலையிருந்ததோ அங்கெல்லாம் கோவில்கள் கட்டுவதற்கு ஔரங்கசீப் கொடைகளை அளித்துள்ளார். ஷாஜகானுடைய ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்து அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் அரசு நிர்வாகத்தில் பணியாற்றினர் என்பது இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய செய்தியாகும்.

14.9 முகலாயர் கால சமுதாயம்

இந்திய மக்கள் தொகை 16ஆம் நூற்றாண்டில் 15 கோடியாகவும் 18ஆம் நூற்றாண்டில் 20 கோடியாகவும் இருந்திருக்கலாமென மதிப்பீடு செய்யப்படுகிறது. நிலப்பரப்பின் பெரும்பகுதி காடுகளாக இருந்ததால் வேளாண்மை நிலங்கள் அளவில் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். சமூகத்தின் மிக முக்கியத் தொழில் வேளாண்மை என்பதால், சமூக அமைப்பில் கிராமச்சமூகமே முதன்மை நிறுவனமாகும். கிராமத்தின் இயல்புகள், உட்கூறுகள், ஆட்சி முறைகள் ஆகியவற்றில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் இருந்தபோதிலும் கிராம நிர்வாகத்தில் சில பொதுத்தன்மைகள் இருந்தன. முக்காடம் என்றழைக்கப்பட்டக் கிராமத் தலைவர்கள் கிராமத்தின் நிர்வாக உறுப்பான பஞ்ச் (பஞ்சாயத்து) என்ற அமைப்பினை உருவாக்கினர். கிராம அளவில் வரிகளை வசூலிப்பதும் அவை தொடர்பான கணக்குகளைப் பராமரிப்பதும் இப்பஞ்சாயத்தின் பொறுப்பாகும். பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத நிலங்களைக் கிராமக் கைவினைஞர்கள், கடைநிலை ஊழியர்கள், சேவை செய்வோர் ஆகியோருக்கு அவர்கள் செய்யும் சேவைகளுக்குக் கைமாறாக இப்பஞ்சாயத்து வழங்கியது.

சமூகத்தின் நடுத்தர வர்க்கமானது சிறிய மன்சப்தார்கள், சிறு கடைகள் வைத்திருப்போர், ஹக்கீம் (மருத்துவர்கள்), இசைக் கலைஞர்கள், ஏனைய கலைஞர்கள், முகலாய நிர்வாகத்தின் கீழ்நிலை அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது. ஊதியம் பெறும் ஒரு வர்க்கமும் இருந்தது. இவர்கள் 'மதாத்–இ–மாஷ்' எனப்பட்ட மானியத்தை முகலாயப் பேரரசரிடமிருந்தும், உள்ளூர் ஆட்சியாளர்கள், ஜமீன்தார்கள் ஆகியோரிடமிருந்தும் பெற்றனர். இவர்கள் கிராமத்து மேன்மக்களின் ஒரு பகுதியாக மாறி கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கின்ற கண்ணிகளாய் இருந்தனர். தில்லி, ஆக்ரா, பதேப்பூர் சிக்ரி, லாகூர், அகமதுநகர், டாக்கா, முல்தான் ஆகியன பேரரசின் முக்கியமான நகரங்களாகும். அவை சமகால ஐரோப்பிய நகரங்களான லண்டன், பாரிஸ் போன்றவற்றிற்கு இணையாகக் கருதத்தக்க நிலையிலிருந்தன.

சிறப்பு உரிமைகளையும் தனிச் சலுகைகளையும் பெற்றிருந்த வர்க்கத்தாருக்கும் அவற்றைப் பெற்றிராத வர்க்கத்தாருக்கும் இடையே வாழ்க்கைத் தரத்திலிருந்த சமத்துவமின்மை தெளிவாகத் தெரிந்தது. சமுகத்தின் அடிமட்டத்திலிருந்த மக்களில் ஆண்கள் 'லங்கோடு' எனப்பட்ட கோவணத்தையும் பெண்கள் சேலையையும் அணிந்தனர். ஏழைமக்கள் மண் வீடுகளில் வசித்தனர். அவர்களுடைய உணவு கோதுமை சப்பாத்தி, பருப்புகள், காய்கறி ஆகியன. முகலாய சமூகத்தில் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருந்த ஜமீன்தார்களையும், பிரபுக்களையும் கொண்டிருந்த வர்க்கம் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்தனர். மன்சப்தாரிகளான பிரபுக்கள் ஜாகீர்களை (நிலமானியங்களை) தங்கள் தகுதிக்கேற்ற ஊதியமாகப் பெற்றிருந்தனர். இவர்கள் அடக்குமுறை, சுரண்டும் இயல்புகளைக் கொண்டிருந்தனர். பிரபுக்கள் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களையும் குதிரைகளையும் யானைகளையும் மற்றவற்றையும் பெற்றிருந்தனர். அவர்கள் கனிமரங்களைக் கொண்ட தோட்டங்களையும், நீரோடைகளையும் கொண்டிருந்த அழகிய வீடுகளிலும் வசித்தனர். நேர்த்தியான ஆடைகளை அணிந்தனர்.

ஆதிக்க இனங்களையும் சாதிகளையும் சேர்ந்த ஜமீன்தார்கள் ஆயுதம் ஏந்திய படைகளோடு நிலத்தின்மீதும் விவசாயிகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சலுகைகளைப் பெற்றவர்களாய் விளங்கினர். அபுல் பாசல் தன்னுடைய அய்னி அக்பரியில் ஜமீன்தார்கள் ஆவதற்கானத் தகுதிகளையுடைய சாதிகளைப் பட்டியலிடுகிறார். பெரும்பாலும் இந்து மேல் சாதிகளைச் சேர்ந்தோரும் ரஜபுத்திரர்களும் ஜமீன்தார்களாக இருந்தனர். சில பகுதிகளில் முஸ்லீம்களும் ஜமீன்தார்களாக இருந்துள்ளனர். ஜமீன்தார்கள் குத்தகைப் பணத்தை முறையாகச் செலுத்தத் தவறிய விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

முகலாயச் சமூகக் கட்டமைப்பில் பிரபுக்களாக அங்கம் வகித்தவர்களில் பெரும்பாலோர் மத்திய ஆசியா மற்றும் ஈரானிலிருந்து வந்தவர்களாவர். ஆப்கானியர், இந்திய முஸ்லீம்கள் (ஷேயிக்சதாஸ் என்றழைக்கப்பட்டனர்), ரஜபுத்திரர்கள், மராத்தியர் ஆகியோரும் பிரபுக்கள் என்னும் சமூக மேன்மைநிலையைப் பெற்றிருந்தனர். அக்பருடைய ஆட்சிக் காலத்தில் 15 விழுக்காடுக்கும் மேற்பட்ட பிரபுக்கள் ரஜபுத்திரர்கள் எனக்

11th History Lesson 14 Tamil Medium.indd 232 02-01-2023 14:05:47

ராஜா மான்சிங்

ராஜா பீர்பால்

ராஜா தோடர்மால்

கணக்கிடப்பட்டுள்ளது. ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பீர்பால் ஆகியோர் அக்பர் காலத்தில் புகழ்பெற்ற பிரபுக்களாவர். ரஜபுத்திரர்கள் அரசு நிர்வாகத்திலிருந்த பல்வேறு பணியிடங்களுக்குக் காயஸ்தர், கத்ரி சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியமித்தனர். ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் மராத்தியரைப் பிரபுக்களாக நியமித்தனர். எடுத்துக்காட்டாக சிவாஜியின் தந்தை ஷாஜி சில காலம் ஷாஜகானிடம் பணியாற்றினார்.

வாழ்க்கையில் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்புகள் இந்தியாவில் அதிகம் இருந்ததால் மத்திய ஆசியாவிலிருந்து தொடர்ந்து புலம்பெயர்தல் நடைபெற்றது. இப்புலம் பெயர்தல் பல்வகைப்பட்டக் கூறுகள் ஒருங்கிணைவதற்கு வழிவகுத்துப் பண்பாட்டிற்குச் செழுமை சேர்த்தது. பிரபுக்கள் இன அடிப்படையில் பிரிந்திருந்தாலும் அவர்கள் கூட்டிணைந்த வர்க்கமாக, பாரசீக இந்திய ஓவியர்களையும் இசைக்கலைஞர்களையும் ஆதரித்ததன் மூலம் ஒரு சமரசம் சார்ந்த பண்பாட்டை முன்னெடுத்தனர்.

சாதிமுறை ஒரு மேலாதிக்க நிறுவனமாக இருந்தது. கீழ்நிலைச் சாதிகள் அதிகமான ஒடுக்குமுறைக்கு உள்ளாயினர். சமூகப் பாகுபாடுகளுக்கு எதிராகப் பக்தி இயக்கம் புரட்சிக்கொடியை உயர்த்தினாலும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட வறுமையில் வாடிய, நிலமற்ற விவசாயிகள் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

மரபு வழிச் சொத்துக்களில் பங்கு பெறுவதற்கு குறைந்தபட்ச உரிமையே பெண்களுக்கு இருந்தது. உயர் சாதிப் பெண்களிடையில் விதவை மறுமணம் தடைசெய்யப்பட்டிருந்தது. அன்றாட வீட்டுவேலைகளோடு பெண்கள் நூல்நூற்றனர். வேளாண் பணிகளிலும் உதவி செய்தனர். முகலாய நிர்வாகம் மேல்சாதிச் சமூகங்களிடையே நிலவிய உடன்கட்டை ஏறும் பழக்கத்தை நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டது. முஸ்லீம் மணப்பெண்கள் திருமணத்தின்போது 'மகர்' எனும் பணப்பரிசை (மணமகன் மணமகளுக்குக் கட்டாயம் தர வேண்டிய பணம்) பெறுவதற்கு உரிமை பெற்றிருந்தனர். மேலும் பரம்பரைச் சொத்துக்களில் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குச் சமமமாக இல்லாவிட்டாலும் பெண்களும் ஓரளவு பங்குபெறும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

14. 10 பொருளாதாரம்

முகலாயப் பொருளாதாரம் காடு சார்ந்த வேளாண் பொருளாதாரமாகும். காடுகள் கைவினைத் தொழிலாளர்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை வழங்கியது. தச்சர், கப்பல்கட்டுவோர், மேல்பூச்சு சாயம் தயாரிப்போர் ஆகியோர்க்குத் தேவையான மரங்களைக் காடுகள் ஈந்தன. நூல் நூற்போருக்கும் நெசவு செய்வோருக்கும் கச்சாப்பட்டினை வழங்கியது. இரும்புச் சுரங்கப் பணியாளர்களுக்கும், உலோகங்களை உருக்குவோருக்கும் தேவைப்பட்ட மரக்கரியைக் கொடுத்தது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கும் காடுகளுக்குமான உறவு மிக நெருக்கமாக இருந்தது.

கிராமப் புறங்களில் பல்வகைப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். வேளாண்மையே பொருளாதாரத்தின் அடித்தளம். சொத்துக்கள் வைத்துக்கொள்ள உரிமை மறுக்கப்பட்ட, நிலமற்ற ஏழை விவசாயிகள் மக்கள் தொகையில் ஏறத்தாழக் கால் பங்கிருந்தனர். ஜமீன்தார்களும் கிராமத் தலைவர்களும் ஏராளமான நிலங்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் பணி செய்ய வேலையாட்கள் அமர்த்தப்பட்டு அவர்களுக்கான ஊதியம் பணமாகவோ பொருளாகவோ வழங்கப்பட்டது. கிணற்று நீர்ப் பாசனமே முக்கியப் பாசன முறையாக இருந்தது.

11th History Lesson 14 Tamil Medium.indd 233 02-01-2023 14:05:47

ரபி, காரிப் ஆகிய இரு வேளாண் பருவங்களில் பயிர் செய்யப்பட்டப் பயிர் வகைகளை அய்னி அக்பரி பட்டியலிடுகிறது. புகையிலையும் மக்காச் சோளமும் பதினேழாம் நூற்றாண்டில் அறிமுகமாயின. அதற்குப் பின்னரே மிளகாயும் வேர்க்கடலையும் அறிமுகமாயின. அன்னாசிப்பழம் பதினாறாம் நூற்றாண்டில் அறிமுகமானது. ஒட்டுமுறையில் பல மாம்பழ ரகங்களை போர்த்துகீசியர் வளர்த்தார்கள். உருளைக்கிழங்கு, தக்காளி, கொய்யா ஆகியவை பின்னர் வந்தன. அவுரி மற்றுமொரு முகலாயர் கால முக்கிய வணிகப் பயிராகும். பட்டு உற்பத்தி வங்காளத்தில் பிரமிப்பூட்டும் வளர்ச்சியைப் பெற்று உலகச் சந்தைக்கு அதிகமான பட்டுத்துணியை அனுப்பி வைக்கும் தலைமைப் பட்டு உற்பத்தி மையமாயிற்று.

விவசாயிகள் நிலவரியைச் செலுத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டதால் அவர்கள் தங்கள் உபரியைச் சந்தையில் விற்றாக வேண்டியதிருந்தது. முகலாய ஆளும் வர்க்கத்தாருக்கு நிலவரியே மிக முக்கியமான வருவாயாகும். அது விளைச்சலில் கிடைக்கும் ஒரு பங்காகும். அரசு நிர்வாகம் நிலத்தின் உற்பத்தித் திறனை மதிப்பிட்டு, நிலத்தை அளவை செய்து, மொத்த அளவை அடிப்படையாகக் கொண்டு வரியை நிர்ணயம் செய்தது. அக்பர் ஜப்தி முறையை (தோடர்மாலால் அறிமுகம் செய்யப்பட்ட முறை) பிரகடனம் செய்தார். நிலத்தின் அளவு, விளைவிக்கப்பட்ட பயிர் ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயி பணமாகச் செலுத்த வேண்டிய வரி நிர்ணயிக்கப்பட்டது. பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய இவ்வரிகள் தொடர்பான விவரங்களைக் கொண்ட அட்டவணைகள் தஸ்தர் என அழைக்கப்பட்டன.

நகர்ப்புறப் பொருளாதாரம் கைவினைத் தொழிற் கூடங்களைச் சார்ந்திருந்தது. பஞ்சடித்துப்பட்டை இடுபவர், நூல்நூற்போர், நெய்வோர், சாயமேற்றுவோர், அச்சுப் பதிப்போர், சலவைச் செய்வோர் என அதிக எண்ணிக்கையிலான மக்களைப் பருத்தியிழைத் தொழிற் கூடங்கள் பணிகளில் அமர்த்திக் கொண்டன. இரும்பு, தாமிர, வைரச்சுரங்கங்கள் அமைத்தல், துப்பாக்கி தயாரித்தல் போன்றவை ஏனைய முக்கியத் தொழில்களாகும். "கர்கானா" என்னும் தொழிற்கூடங்களில் விலையுயர்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அரச குடும்பங்களுக்குத் தேவையான பொருட்களை அரண்மனை சார்ந்த கர்கானாக்கள் உற்பத்தி செய்தன. கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்த ஆடம்பரப் பொருட்களை வர்த்தகர்கள் உள்ளூர் மற்றும் தொலைதூரச் சந்தைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

வர்த்தகமும் வாணிகமும்

நாட்டின் அரசியல் ஒருங்கிணைப்பும் திறமைமிக்க சட்டம் ஒழுங்குப் பராமரிப்பும் சுறுசுறுப்பான வர்த்தகத்தையும் வாணிகத்தையும் உறுதிப்படுத்தின. உபரியானது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு ஆறுகளின் வழியாகவும், மாட்டு வண்டிகளிலும், ஒட்டக வண்டிகளிலும் சாலை வழியாகவும் கொண்டு செல்லப்பட்டன. பஞ்சாரா எனும் நாடோடி வணிக இனக்குழு பெருமளவிலான பொருட்களைத் தொலைதூரப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் நிபுணத்துவம் பெற்றிருந்தது. அரிசி, சர்க்கரை, மஸ்லின் பட்டு, உணவு தானியம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் வங்காளம் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. சோழமண்டலக் கடற்கரை, தனது பருத்தித் துணி உற்பத்திக்காகப் புகழ் பெற்றிருந்தது. காஷ்மீர் சால்வைகளும் தரைவிரிப்புகளும் கைவினைப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் பெற்றிருந்த லாகூரிலிருந்து விநியோகமாகின. பொருட்கள் இடம் விட்டு இடம் செல்வதற்கு 'உண்டி' என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் உதவின. ஒருங்கிணைக்கப்பட்டிருந்த "சராய்கள்" (ஓய்வு விடுதிகள்) வணிகர்களின் பயணங்களை ஊக்குவித்தன. இந்து, முஸ்லீம், சமணம் போன்ற அனைத்து மதங்களையும் சார்ந்த வணிகர்கள் இருந்தனர். குஜராத்தைச் சேர்ந்த போராமுஸ்லீம்கள், ரஜபுதனத்து மார்வாரிகள், சோழமண்டலக் கடற்கரைசார்ந்த செட்டியார்கள், மலபார் முஸ்லீம்கள் ஆகியோர் புகழ்பெற்ற வணிக சமூகத்தினர் ஆவர்.

மேற்கு ஆசியா ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுடனான வணிகத்தை ஐரோப்பியரே கட்டுப்படுத்தினர். இந்திய வணிகர்களின் பங்கேற்பை அவர்கள் கட்டுப்படுத்தினர். மேலும் பெருமளவிலான வளங்களையும், மிகப்பெரும் ராணுவத்தையும் கொண்டிருந்தபோதிலும் முகலாய அரசு ஒரு கடற்படையைக் கொண்ட சக்தியாக இல்லை. தாங்கள் ஒரு பலம் பொருந்திய கடற்படைச் சகாப்தத்தில் வாழ்கிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஐரோப்பியர்கள் நறுமணப் பொருட்கள், சாயங்கள், வங்காளப் பட்டு, மஸ்லின், சொரசொரப்பான அச்சிடப்பட்ட துணி, பளபளப்பான பருத்தித் துணி ஆகியவற்றை இங்கும் கொள்முதல் செய்தனர். இதற்கு மாறாக இந்தியா பெருமளவில் தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தது. முகலாயரின் வெள்ளி நாணய முறை வெள்ளிக்கான தேவையை அதிகரித்தது.

11th History Lesson 14 Tamil Medium.indd 234 02-01-2023 14:05:47

14. 11 மதம்

முகலாயர் காலம் புராண மரபுகளின் அனைத்து அடிப்படைக் கூறுகளும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டதற்குச் சாட்சியாய் இருந்தது. எண்ணிலடங்கா நம்பிக்கைகளும் அதிக எண்ணிக்கையிலான மரபுகளும் நடைமுறைகளும் வழக்கத்தில் இருந்ததால் இந்து மதத்தை ஒரு கோட்பாட்டுத் தொகுப்பெனச் சொல்வது கடினமானது என்றாலும் பரஸ்பர பரிமாற்றம், பெரும்பாலுமான பகுதிகளில் சமஸ்கிருத மொழியில் வெளிப்பாடாகி, இந்து மதத்தின் பல பிரிவுகள் ஒரே மாதிரியான மரபுத் தொடர்புகளையும் ஒரே மாதிரியான தெய்வங்களையும் கொண்டிருந்தன. பதினாறு, பதினேழு ஆகிய நூற்றாண்டுகள் வைணவ மதத்தின் நூற்றாண்டுகளாகும். இராமர் வழிபாட்டு மரபைத் தனது புகழ்பெற்ற பக்திப் பாடல்கள் வழி முன்மொழிந்த துளசிதாசர் (ராமசரிதமனஸ்) இராமரைக் கடவுளின் அவதாரமாகச் சித்தரித்தார். பக்தியின் இலக்கு விஷ்ணுவின் மற்றொரு அவதாரமான கிருஷ்ணரானபோது பக்தியின் வெளிப்பாடு மேலும் உணர்ச்சிகரமாயிற்று.

இக்காலகட்டத்தில் பக்தி இயக்கம் பெரும் வளர்ச்சி பெற்றது. கவிஞர்களும் இறையடியார்களும் நாட்டின் பல பகுதிகளில் தோன்றினர். சடங்குகளையும் சாதிமுறையையும் அவர்கள் விமர்சனம் செய்து கேள்விக்குள்ளாக்கினர். தங்கள் பக்தியை வெளிப்படுத்துவதற்கு சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தாமல் மக்களின் மொழியைப் பயன்படுத்தினர். அவர்களின் முற்போக்கான சிந்தனைகள் கருத்தைக் கவரும் மொழிநடையில் இசையோடு பாடப்பட்டபோது அவை மக்களிடையே பிரபலமாயின. வல்லபாச்சாரியார் அவருடைய மகன் வித்தால்நாத் ஆகியோர் கிருஷ்ண வழிபாட்டைப் பரப்புரை செய்தனர். இப்பிரிவைப் பின்பற்றிய சூர்தாஸ் சூர்–சராவளி என்னும் இலக்கியத்தை உள்ளூர் மொழியில் எழுதினார். ஏகநாதர், துக்காராம் ஆகியோர் மகாராஷ்டிராவைச் சேர்ந்த பக்தி இயக்கக் கவிஞர்களாவர். வியாசராயரால் பிரபலப்படுத்தப்பட்ட கர்நாடகத்தைச் சேர்ந்த பக்தி இயக்கமான 'தசருதா' இயக்கம் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோரின் இயக்கமாக மாறியது.

பக்தி இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமை கபீர் ஆவார். நெசவுக் குடும்பத்தைச் சார்ந்த இவர் முழுமையான ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தார். உருவ வழிபாட்டையும் சடங்குகளையும் சாதிமுறையையும் கண்டித்தார். எளிய மொழி நடையில் எழுதப்பட்ட இவரின் பாடல்கள் வாய்மொழியாகவே வடஇந்தியாவின் பெரும் பகுதிகளில் பரவியன.

கபீர்

பக்தி இயக்கப் புலவர்களைப் பற்றி ஆர்வமூட்டக் கூடிய செய்தி யாதெனில் அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாகவும் கைவினைஞர்களாகவும் சேவை செய்யும் சமூகப் பிரிவினராகவும் இருந்தனர் என்பதே. கபீர் ஒரு நெசவாளர். ரவிதாஸ் தோல் பதனிடும் தொழிலாளி. சைன் என்பவர் சிகையலங்காரத் தொழில் செய்தவர். தாது பருத்தியைச் சுத்தம் செய்பவராவார். ஹரியானாவைச் சேர்ந்த சத்னாமி சமூகத்தவர் தங்களைக் கபீர் மற்றும் அவருடைய போதனைகளின் வழித்தோன்றல்கள் எனக் கூறுவதில் பெருமை கொள்கின்றனர். சமஸ்கிருதமும் பாரசீகமும் நிர்வாக, அறிவுலக நடவடிக்கைகளின் மொழிகளாக இருக்கையில் பிராந்திய மொழிகள் தங்கள் உயிர்த்துடிப்பு மிக்க இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்தின.

சீக்கிய மதம்

சீக்கிய மதம் ஒரு கடவுள் கோட்பாட்டை முன்னெடுத்த இயக்கமாகத் தோற்றம் பெற்று பின்னர் அங்கீகரிக்கப்பட்ட உலக மதங்களில் ஒன்றாகப் பரிணமித்தது. சீக்கியரின் புனித நூலான குரு கிரந்த சாகிப் இஸ்லாமிய மத குருவான ஷேக் பரித், பக்தி இயக்கப் புலவர்களான நாமதேவர், கபீர், சைன், ரவிதாஸ் ஆகியோரின் போதனைகளை உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளது. "கடவுள் ஒருவரே" என குரு நானக் நம்பினார். அக்கடவுள் உருவமற்றவர், எங்கும் நிறைந்திருப்பவர் எனக் கூறினார். உருவ வழிபாட்டையும் மதச் சடங்குகளையும் அவர் கண்டனம் செய்தார். அனைத்து மக்களின் மீதும் அன்பு செலுத்துதல், நன்னெறியைக் கடைப்பிடித்தல், ஒழுக்கம் ஆகியவற்றை பின்பற்றும்படி வற்புறுத்திக் கூறினார். சாதிமுறையைக் கண்டனம் செய்தார்.

சூபியிஸம்

சூபியிஸம் என்பது இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பை முன்வைக்கும்

11th History Lesson 14 Tamil Medium.indd 235 02-01-2023 14:05:47

ஒரு மதக் கோட்பாடாகும். ஈரானில் உதயமான இக்கோட்பாடு இந்தியாவில் செழித்து வளர்ந்தது. வைதீக முஸ்லீம் இறையியலாளர்களுக்கு ஷரியத் முன் வைக்கும் கட்டுப்பாடுகளை சூபியிஸம் நிறைவேற்றுகின்ற வரை அது ஏற்புடையதாகவே இருந்தது.

கிறித்தவம்

ஐரோப்பிய வணிகர்களின் வருகையோடு பிரான்ஸிஸ் சேவியர், ராபர்ட்–டி–நொபிலி போன்ற கிறித்தவச் மதப் பரப்பாளர்களும் இந்தியா வந்தனர். தொடக்ககாலக் கிறித்தவச் மதப் பரப்பாளர்கள் கத்தோலிக்கர்களாவர். டேனியர்களின் ஆதரவின் கீழ் முதல் லூத்தரன் மதப் பரப்பாளர்கள் 1706இல் தரங்கம்பாடிக்கு வந்தனர். அவர்களில் ஒருவரான சீகன்பால்கு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை 1714இல் தமிழில் மொழியாக்கம் செய்தார். வெகுவிரைவில் பழைய ஏற்பாடும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

14. 12 அறிவியலும் தொழில்நுட்பமும்

முஸ்லீம் கல்வி நிறுவனங்களான மதரஸாக்கள் முஸ்லீம் இறையியலின் மீதே அதிகக் கவனம் செலுத்தியது. வாரணாசி போன்ற மிகச் சிறந்த கல்வி மையங்களில் ஜோதிடம் கற்றுத்தரப்பட்டது. ஐரோப்பாவிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு நிகராக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள் இல்லையென பிரான்ஸ் நாட்டுப் பயணி பெர்னியர் குறிப்பிடுகிறார். இதனால் அறிவியல் பாடங்களைக் கற்பிப்பது இயலாத நிலையில் இருந்தது. இருந்தபோதிலும் கணிதம், வானியல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது. அக்பரின் அவைக்களப் புலவரான பெய்சி பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிபெயர்த்தார். முகலாயர் காலத்தில் ஐரோப்பியர் இந்தியாவில் இருந்தாலும் இந்தியக் சமூகத்தின் மீது அவர்கள் செல்வாக்குச் செலுத்தவில்லை.

நீர் இறைப்பதற்காகப் பல பீப்பாய்கள் இணைக்கப்பட்டச் சக்கரமான பாரசீகச் சக்கரம் பாபர் காலத்தில் அறிமுகமானது. வரிசையாக விசைச் சக்கரங்கள் பொருத்தப்பட்டச் சற்றே கடினமான நீர் இறைக்கும் இயந்திரம் பதேபூர் சிக்ரியில் நிறுவப்பட்டது. வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரவலாக்கிய பெருமை அக்பரைச் சாரும். கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில் நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர் என அக்பர் புகழப்படுகின்றார். இத்தொழில் நுட்பத்தின்படி ஒரு பெரிய படகின் மீதே கப்பல் கட்டப்படும். அவ்வாறு கட்டப்படுவது அக்கப்பல்களைக் கடலுக்குள் கொண்டு செல்வதை எளிதாக்கியது. ஒருசில இயந்திரத் தொழில்நுட்ப சாதனங்களை இறுக்கமாக இணைப்பதற்கான திருகாணிகள், உடல் உழைப்பாலும் வார்களாலும் இயக்கப்படும் துளைப்பான், வைரத்தை பட்டை தீட்டும் கருவி போன்றவை பயன்பாட்டில் இருந்தன. வேளாண் கருவிகள் முன்னர் இருந்ததைப் போலவே தொடர்ந்தன. அவை பெரும்பாலும் மரத்தாலானவை. உலோகவியலைப் பொருத்தமட்டிலும் வார்ப்பு இரும்பை உற்பத்தி செய்ய இயலாமல்போனது பெரும் பின்னடைவாகும். வரலாற்றறிஞர் இர்பான் ஹபீப் இந்தியாவின் பின்தங்கிய நிலையைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார். தொழில் நுட்பத்தில் இந்தியாவின் பின்தங்கிய நிலை வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தியப் படைகளில் மேட்ச் லாக் எனப்படும் பழைய பாணியிலானத் துப்பாக்கிகள் அதிகமான பயன்பாட்டில் இருந்தபோது ஐரோப்பாவில் பிளின்ட்லாக் எனப்படும் நவீனத் துப்பாக்கிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. செலவு மிக்க செம்பினாலான பீரங்கிகளை இந்தியா தொடர்ந்து பயன்படுத்தி வந்தபோது ஐரோப்பாவில் முன்னதாகவே அவை பயன்பாட்டிலிருந்து நீங்கிவிட்டன. இதற்குக் காரணம் பதினேழாம் நூற்றாண்டில்கூட இந்தியாவால் வார்ப்பிரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனதேயாகும்.

கட்டடக்கலை

முகலாயர் காலத்தில் கட்டடக் கலையில் ஏற்பட்ட மகத்தான வளர்ச்சி உலகக் கலையில் குறிப்பிடத்தக்கக் கட்டமாகும். கூண்டு வடிவிலான குமிழ்களைக் கொண்ட கவிகை மாடங்களாலும், ஒப்பனைகள் மிகுந்த கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்களாலும், நான்கு மூலைகளிலும் எழுப்பப்பட்டுள்ள ஸ்தூபி மாடங்களாலும் படங்கள் வரையப்பட்டு பதிக்கப்பட்ட ஓடுகளாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய வடிவங்களுக்கு முகலாயக் கட்டடங்கள் பெயர் பெற்றவையாகும். பாபர், ஹுமாயூன் காலங்களில் கட்டப்பட்ட மசூதிகள் கட்டடக்கலை ரீதியாக முக்கியத்துவம் உடையவையல்ல. சூர் வம்சத்து அரசர்கள், தில்லியில் புராணகிலா, பீகாரில் சசாரம் என்னுமிடத்தில் கட்டிய ஷெர்ஷா, இஸ்லாம் ஷா ஆகியோரின் கல்லறைகள் போன்ற கண்களைக் கவரும் கட்டடங்களை விட்டுச் சென்றுள்ளனர். புராணகிலாவில் உயர் அரண் படியடுக்கு நடைமேடையில் கட்டப்பட்டுள்ள கல்லறைகள், நாற்புறமும் சூழ்ந்துள்ள நீர் நிலைகள் ஆகியன நவீனக் கூறுகளாகும்.

11th History Lesson 14 Tamil Medium.indd 236 02-01-2023 14:05:47

அக்பர் ஆட்சிக் காலத்தில் ஹுமாயூனின் கல்லறை உயர்த்தப்பட்ட தளத்தின் மீது வைக்கப்பட்டது. சுற்றிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. பாரசீகக் கட்டடக்கலை வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இந்தியக் கலைஞர்களால் கட்டப்பட்ட இக்கல்லறை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்தது. மணற்கற்பாறைகளால் கட்டப்பட்ட ஆக்ரா கோட்டை ரஜபுத்திர பாணிகளை இணைத்துக் கட்டப்பட்டதற்கு ஒரு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. அக்பரின் புதிய தலைநகரான பதேபூர் சிக்ரி கோட்டைகளால் சூழப்பட்ட எழுச்சியூட்டும் பல கட்டடங்களைக் கொண்டுள்ளது. பதேபூர் சிக்ரியின் மலைப்பூட்டும் வாயிற்பகுதியும், அக்பர் சிகப்புநிற மற்றும் பளிங்குக் கற்களால் கட்டிய புலந்தர்வாசாவும் நேர்த்தியான கட்டடக்கலையில் முகலாயரின் சாதனைகளாகக் கருதப்படுகின்றன. ஆக்ராவுக்கு அருகே சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறை மாடம் சில பௌத்த கட்டடக்கலைக் கூறுகளையும் கொண்டுள்ளது. இது அக்பரின் காலத்தில் தொடங்கப்பட்டு ஜஹாங்கீரின் காலத்தில் நிறைவு பெற்றது. ஜஹாங்கீர் நூர்ஜகானின் தந்தையான இதிமத் உத் தௌலாவுக்காக எழுப்பிய கல்லறையே முழுவதும் வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் முகலாயர் கட்டிய முதல் கட்டடமாகும்.

ஷாஜகான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது. தாஜ்மஹால் முழுவதும் பளிங்குக் கற்களால் உயர்த்தப்பட்ட தளத்தின் மீது கட்டப்பட்டதாகும். மையத்தில் பின்னொதுங்கிய வாயிலுக்கு மேல் குமிழ்வடிவக் கவிகை மாடத்தையும் அதைச் சுற்றி நான்கு ஸ்தூபி மாடங்களையும் நான்கு மூலைகளிலும் நான்கு தனித்தனியான கோபுரங்களையும் (மினார்) கொண்டு அமைந்த இந்நினைவிடம் உலகப்புகழ் பெற்றுள்ளது. திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால், ஹுரமஹால் போன்ற பிரமிப்பூட்டும் கட்டடங்களால் சூழப்பட்டுள்ள செங்கோட்டை ஷாஜகான் காலத்து கட்டடக்கலைத் திறன்களைப் பிரதிபலிக்கின்றன. ஆக்ரா கோட்டையிலிருக்கும் மோதி மசூதி முழுவதும் பளிங்குத் கற்களாலானது. தில்லியிலுள்ள கம்பீரமான வாயிற் பகுதியில் வரிசையான கவிகை மாடங்கள், உயரமான மெலிதான கோபுரங்கள் (மினார்) ஆகியவற்றைக் கொண்டுள்ள ஜும்மா மசூதி ஆகியன ஷாஜகானால் கட்டடப்பட்ட முக்கிய மசூதிகளாகும். ஷாஜகான், ஷாஜகானாபாத் என்ற பெயரில் ஒரு நகரத்தையே (இன்றைய பழைய தில்லி) உருவாக்கினார். இங்குதான் செங்கோட்டையும் ஜும்மா மசூதியும் அமைந்துள்ளன. ஔரங்கசீப் காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது. மேலும் ஔரங்காபாத்தில் ரபீயா உத் தௌராணியின் பளிங்கிலான கல்லறையும் கட்டப்பட்டது. இக்கல்லறை பீபிமக்பாரா (பெண்ணின் கல்லறை) என்றழைக்கப்படுகிறது.

ஜஹாங்கீர், ஷாஜகான் ஆகியோர் உருவாக்கிய ஷாலிமர் தோட்டங்கள் இந்தியத் தோட்டக் கலையில் குறிப்பிடத்தக்கவை ஆகும். மிகப் பெரும் கட்டிடங்களைத் தவிரப் பொதுப்பயன்பாட்டிற்காகவும் பல கட்டுமானப் பணிகளை முகலாயர் மேற்கொண்டனர். அவற்றுள் மகத்தானது ஜான்பூரில் கோமதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளப் பாலமாகும். முகலாயரின் மிகவும் போற்றத்தக்கச் சாதனை தில்லிக்கு நீர் கொண்டுவரும் மேற்கு யமுனா கால்வாயைக் கட்டியதாகும்.

முகலாயக் கட்டடக்கலை நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோவில் கட்டுமானங்களின் மீதும் செல்வாக்குச் செலுத்தியது. மதுராவுக்கு அருகே பிருந்தாவனத்தில் உள்ள கோவிந்தேவ் கோவிலிலும், மத்தியப்பிரதேசம் ஒரிசாவிற்கு அருகேயுள்ள சதுர்டிஜ் என்னும் இடத்திலுள்ள பீர்சிங் கோவிலிலும் முகலாயக் கட்டிடக்கலையின் தாக்கத்தைக் காணலாம்.

ஓவியம்

முகலாயர் கால ஓவியம் பன்னாட்டு அளவிலான அங்கீகாரத்தைப் பெற்றது. முகலாயரின் நுண் ஓவியங்கள் உலகத்தின் பல அருங்காட்சியகங்களில் முக்கிய இடம் வகிக்கின்றன. குஜராத், மாளவம் ஆகிய பகுதிகளில் உயிர்ப்புடன் செயல்பாட்டிலிருந்த இந்திய ஓவிய மரபுகள், மேற்காசிய ஓவிய

புலந்தர்வாசா

பதேபூர்சிக்ரி – பஞ்ச் மஹால்

செங்கோட்டை

11th History Lesson 14 Tamil Medium.indd 237 02-01-2023 14:05:47

மரபுகளின் செல்வாக்கோடு இணைந்து ஓவியக் கலையின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. மத்திய ஆசியாவிலிருந்து ஹுமாயூனோடு இந்தியா வந்த நுண் ஓவியக் கலைஞர்களான அப்துல் சமத், மீர் சையத் அலி ஆகியோரிடமிருந்து இந்திய ஓவியர்கள் ஊக்கம் பெற்றனர். இலக்கிய நூல்களை விளக்கும் பொருட்டே ஓவியங்கள் பெரிதும் வரையப்பட்டன. பாரசீக மொழியில் எழுதப்பட்ட மகாபாரதத்திலும், அய்னி அக்பரியிலும் பல ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. தஷ்வந்த், பசவன் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர். ஐரோப்பிய ஓவியங்கள் போர்த்துக்கீசியப் பாதிரிமார்களால் அக்பரின் அவையில் அறிமுகம் செய்யப்பட்டன. ஜஹாங்கீர் காலத்தில் உருவப் படத்தை வரைதலும் விலங்குகளை வரைவதும் வளர்ச்சி பெற்றன. இத்துறையில் மன்சூர் பெரிதும் அறியப்பட்டவராவார். முகலாய நுண்ணோவியங்கள் டச்சு நாட்டின் தலைசிறந்த ஓவியரான ரெம்பிராண்ட் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. ஷாஜகான் ஓவிய மரபைத் தொடர்ந்தார். ஆனால் ஔரங்கசீப்பின் அலட்சியத்தால் ஓவியர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குக் கலைந்து சென்றதன் மூலம் பிராந்திய அளவில் ஓவியக்கலை வளர்ந்தது.

இசையும் நடனமும்

பல மெல்லிசைப் பாடல்களை இயற்றிய குவாலியரைச் சேர்ந்த தான்சென் ஏனைய 35 இசைக் கலைஞர்களோடு அக்பரால் ஆதரிக்கப்பட்டார் என அய்னி அக்பரி குறிப்பிடுகின்றது. ஜஹாங்கீரும் ஷாஜகானும் இசையை ஆதரித்தவர்களே. ஔரங்கசீப் இசைக்கு எதிரானவர் என்ற பொதுக் கருத்தொன்று நிலவுகிறது. ஆனால் அவருடைய காலத்தில்தான் இந்தியாவின் செவ்வியல் இசை குறித்த பல நூல்கள் எழுதப்பட்டன. அவருடைய அரசிகளும் இளவரசிகளும் பிரபுக்களும் தொடர்ந்து இசைக்கு ஆதரவு தந்தனர். பிற்கால முகலாய அரசர்களில் ஒருவரான முகமது ஷா இசைத்துறையில் முக்கிய வளர்ச்சிகள் ஏற்படக் காரணமாக இருந்தார். பாபர் நாமா, பாதுஷா நாமா ஆகிய நூல்களில் இசைக்கருவிகளோடு பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இலக்கியம்

பாரசீகம், சமஸ்கிருதம் மற்றும் பிராந்திய மொழிகள் முகலாயர் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. முகலாயப் பேரரசிலும் தக்காண அரசுகளிலும் பாரசீக மொழியே நிர்வாக மொழியாக இருந்தது. ரஜபுத்திர அரசுகளின் மீதும் அம்மொழி தாக்கத்தை ஏற்படுத்தியதால் அவற்றின் நிர்வாகத்தில் பல பாரசீகச் சொற்கள் இடம்

அபுல் பாசல் அக்பர் நாமாவை சமர்ப்பித்தல்

பெற்றன. 'அக்பர் நாமா' என்னும் நூலில் அக்பரின் வரலாற்றை அபுல் பாசல் தொகுத்து வழங்கியுள்ளார். முகலாய நிர்வாகத்தைப்பற்றி அவர் அய்னி அக்பரியில் விவரித்துள்ளார். அறிவியல், புள்ளியியல், புவியியல், பண்பாடு ஆகியவற்றின் மீது 'அய்னி அக்பரி' கொண்டுள்ள அக்கறைக்காகவே அது பாராட்டப்பட வேண்டும். அப்துல் ஹமீது லகோரி, முகமது வரிஸ் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய ஷாஜகான் வாழ்க்கை வரலாறான 'பாதுஷா நாமா' அய்னி அக்பரியை முன்னுதாரணமாகக் கொண்டு எழுதப்பட்டதே. ஔரங்கசீப்பின் முதல் பத்தாண்டு கால ஆட்சியைப் பற்றி ஆலம்கீர் நாமா என்னும் நூலை எழுதிய முகமது காஸிம் இதே முறையைத்தான் பின்பற்றினார். பாபரின், சகதாய் துருக்கிய மொழியில் எழுதிய சுயசரிதையை அப்துல் ரகீம் கானி–இ–கானான் என்பவர் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தார். தபிஸ்தான் என்னும் நூல் பல்வேறு மதங்களின் நம்பிக்கைகள், அம்மதங்கள் தொடர்பான நூல்கள் ஆகியன குறித்துப் பாரபட்சமற்ற விபரங்களைக் கொண்டுள்ளது. சமஸ்கிருத நூல்களை மொழி பெயர்த்ததால் பாரசீக மொழி வளம் பெற்றது. அக்பரின் அவைக்களப் புலவரும் அபுல்பாசலின் சகோதரருமான அபுல் பெய்சியின் மேற்பார்வையில் மகாபாரதம் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. தாராஷுகோவால் உபநிடதங்கள் 'சர்–இ–அக்பர்' (மாபெரும் ரகசியம்) என்னும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அபுல் பெய்சியின் மஸ்னாவி, உத்பி, நசிரி ஆகியன இந்தியாவில் பாரசீகக் கவிதைகளுக்கு வளம் சேர்த்தன.

தாராஷுகோ

முகலாயர் காலத்தில் படைக்கப்பட்ட சமஸ்கிருத நூல்கள் வியக்கத்தக்கவையாகும். இக்காலச் சமஸ்கிருத இலக்கியம் காவியம் என்றழைக்கப்படும் வரலாற்றுக் கவிதைகள்

11th History Lesson 14 Tamil Medium.indd 238 02-01-2023 14:05:48

வடிவில் எழுதும் பாங்கிற்கு பெயர் பெற்றதாகும். கல்ஹணர் காஷ்மீரின் முழுமையான வரலாறு குறித்து எழுதிய 'ராஜவலிபதகா' எனும் நூல் அக்பர் ஆட்சிக் காலத்தில் பிரக்ஞபட்டரால் தொகுக்கப்பட்டது. பாரசீக மொழி நூல்கள் சமஸ்கிருதத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டதால் கிரேக்க, அராபியப் புலமையானது இந்தியா வந்தடைந்தது. அக்பரின் வானியலறிஞரான நீலகண்டர், தஜிகனிலகந்தி என்னும் வானியல் ஆய்வு நூலைப் படைத்தார், ஷாஜகானின் அவைக்களப் புலவரான ஜெகநாத பண்டிதர் 'ரசகங்காதரா' எனும் சிறப்புக்குரிய நூலை எழுதினார்.

முகலாயர் காலத்தில் இலக்கியத் துறைக்குச் செய்யப்பட்ட பெரும் பங்களிப்பு பல்வேறு மொழிகளைப் பேசி வந்த மக்களிடையே உருது ஒரு பொதுவான தொடர்பு மொழியாக வளர்ச்சியடைந்ததாகும். இக்காலத்தில் பிராந்திய மொழிகளும் வலுப் பெற்று முழுமையான வளர்ச்சி பெற்றன. செய்யுள் முறையிலான தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற மிகச் சிறந்த பாடல்கள் பிராந்திய மொழிகளில் எழுதப்பட்டன. அப்துர் ரகீம் கான்–இ–கானான் என்பவர் வாழ்க்கை குறித்த, மனித உறவுகள் தொடர்பான பாரசீகர்களின் சிந்தனைகள் இழையோடும் பக்திப் பாடல்களை இந்தியின் கிளை மொழியான பிரிஜி என்னும் வடிவத்தில் எழுதினார். கிழக்கு உத்திரப் பிரதேசத்து மக்கள் பேசிய இந்தி மொழியின் வட்டார மொழியான அவதியில் துளசிதாசர் எழுதிய பாடல்கள் அவற்றின் பக்திச் சிந்தனைகளுக்காகப் பிரபலமாயின. இக்காலத்தில் ஏகநாதர், துக்காராம், ராம்தாஸ், முக்தீஸ்வர் ஆகியோரின் இலக்கியப் படைப்புகளால் மராத்திய இலக்கியம் எழுச்சி பெற்றது. ஏனைய மொழிகளின் மீதான சமஸ்கிருதத்தின் மேலாதிக்கத்தை ஏக்நாத் கேள்விக்குள்ளாக்கினார். துக்காராமின் பாடல்கள் ஒரு கடவுள் கோட்பாட்டின் மேல் ஆர்வத்தைத் தூண்டியது. முக்தீஸ்வர் மகாபாரத்தையும் இராமாயணத்தையும் இலக்கிய வளம் கொண்ட மராத்திய மொழியில் எழுதினார்.

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் தனது 'ஆமுக்தமால்யதா' (ஆண்டாளைப் பற்றிய காவியம்) மூலமாகவும், அவருடைய அவைக்களப்புலவரான அல்லசானி பெத்தண்னா தனது 'மனுசரித்திரா' எனும் நூலின் மூலமாகவும் தெலுங்கு இலக்கியத்தின் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர். இக்காலத்தில் தமிழிலிருந்து தனியாகப் பிரிந்த மலையாளம் இலக்கிய நிலை பெற்றது. இராமாயணமும் மகாபாரதமும் மலையாள மொழியில் எழுதப்பட்டன. அஸ்ஸாமிய மொழியில் பக்திப் பாடலை முன்மாதிரியாகக் கொண்டு சங்கர தேவர் ஒரு புதிய இலக்கியமரபை உருவாக்கினார். அஸ்ஸாமிய மொழியில் வானியல், கணிதம், யானைகள் மற்றும் குதிரைகளுக்குச் சிகிச்சையளிக்கும் முறைகள் குறித்த நூல்கள் படைக்கப்பட்டன. இராமாயணமும் மகாபாரதமும் அஸ்ஸாமிய மொழியில் எழுதப்பட்டன. கிருஷ்ணருக்கும் ராதைக்குமான காதலைச் சித்தரிக்கும் கவிதைகளைக் கொண்ட சைதன்ய வழிபாட்டு முறை வங்காள இலக்கியத்தை மேம்படுத்தியது. குரு அர்ஜுன் சிங் தொகுத்த சீக்கியரின் புனித நூலான குரு கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள ஒரு கடவுள் கோட்பாட்டின் மேல் நம்பிக்கை கொண்ட சீக்கிய குருக்கள், ஷேக்பரித் ஆகியோரின் பாடல்கள் பஞ்சாபி மொழியின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய அடையாளங்களாகும்.

இதே காலப் பகுதியில் தமிழ் இலக்கியப்பரப்பில் சைவ, வைணவ இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. மாபெரும் சைவப் புலவரான குமரகுருபரர், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காசி சென்று வந்ததாகக் கூறப்படுகின்றது. அவர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கம் ஆகிய முக்கிய இலக்கியங்களை இயற்றினார். தாயுமானவர் சமரச சன்மார்க்கம் எனும் அறத்தை உள்ளடக்கியப் பக்திப்பாடல்களை இயற்றினார். கிறித்தவ மதப் பரப்பாளர்களான ராபர்ட் டி நொபிலி, கான்ஸ்டான்ட்டைன் ஜோசப் பெஸ்கி (வீரமாமுனிவர்) ஆகியோர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தொடங்கியிருந்தனர்.

தேசிய அளவில் முகலாயர் உருவாக்கிய பேரரசு, ஆற்றல் மிகுந்த மையப்படுத்தப்பட்ட நிர்வாகமுறையின் சிறப்பான உதவியோடு பல துண்டுகளாகப் பிரிந்து கிடந்தவற்றை அரசியல் ரீதியாக ஒருங்கிணைத்து ஒன்றாக்கியதன் மூலம் இந்தியாவின் மீது என்றுமழியாத் தாக்கத்தை ஏற்படுத்தியது. இச்செயல்பாட்டில் பன்முகப்பட்ட அடையாளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதால் தனித்தன்மை வாய்ந்த ஒரு இந்தியப் பண்பாடு பரிணமித்தது.

11th History Lesson 14 Tamil Medium.indd 239 02-01-2023 14:05:48

உலகத்தின் ஏனைய பகுதிகளில்

அக்பரின் காலமான 1556 முதல் 1605 வரை மாபெரும் அரசர்களின் காலமாகும். அவருக்கு மிக அருகேயிருந்த சமகாலத்தவர் இங்கிலாந்தின் பேரரசியார் எலிசபெத் ஆவர். இக்காலப் பகுதியில்தான் ஷேக்ஸ்பியரும் வாழ்ந்தார். இதே காலத்தில்தான் பிரான்சை போர்பார்ன் வம்சத்தின் முதல் அரசர் நான்காம் ஹென்றியும், பாரசீகத்தை சபாவி அரசவம்சத்தின் மாபெரும் வலிமைமிக்க அரசனான மகாஅப்பாஸும் ஆண்டுவந்தனர் ஐரோப்பாவில் நடைபெற்ற ஸ்பானிய ஆட்சிக்கு எதிராக நெதர்லாந்தின் கிளர்ச்சி இக்காலத்தில் தொடங்கி ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் தொடர்ந்து 1648இல் முடிவடைந்தது.

மகா அப்பாஸ்

பாடச் சுருக்கம்

- முகலாய வம்சத்தின் ஆட்சியை நிறுவ பாபர் செய்த நான்கு போர்கள் விளக்கப்பட்டுள்ளன.
- ஹுமாயூனுக்குச் சகோதரர்களால் ஏற்பட்ட இடையூறுகள், ஆப்கானியர், குஜராத்தின் பகதூர்ஷா ஆகியோரின் பகைமை சூர் அரச வம்சத்தின் எழுச்சிக்கு இட்டுச் சென்றது விளக்கப்பட்டுள்ளது.
- ஷெர்ஷாவின் எழுச்சியும் அவருடைய வருவாய், நிதி சீர்திருத்தங்களும் கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன.
- அக்பரின் மன்சப்தாரிமுறை, அனைவரையும் அரவணைக்கும் மதக் கொள்கை, படையெடுப்புகளின் மூலம் முகலாய ஆட்சியை ஒருங்கிணைத்தது, முக்கியமாக இரண்டாவது பானிப்பட் போர் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.
- அரசு நிர்வாகத்தில் ஜஹாங்கீரின் நாட்டமின்மையால் நூர்ஜகான் உண்மையான ஆட்சியாளராகச் செயல்பட்டமை விவாதிக்கப்பட்டுள்ளது.
- முகலாயக் கட்டடக் கலையின் அடையாளமான ஷாஜகானின் தாஜ்மஹால், அவரின் மூன்று மகன்களிடையே நடைபெற்ற வாரிசு உரிமைப் போரும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.
- ஔரங்கசீப்பின் தலைமையிலான முகலாயருக்கும் சிவாஜியின் தலைமையிலான மராத்தியருக்கும் நடைபெற்ற இடைவிடாத போர்களும், ஔரங்கசீப்பின் ராஜபுத்திர, தக்காணக் கொள்கைகளும் விவாதிக்கப்பட்டுள்ளன. .
- முகலாயச் சமூகத்தின் சிறப்பியல்புகள் விளக்கப்பட்டுள்ளன.

பயிற்சி

CKFG0

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில், பாபர் ____________ யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்
   (அ) காலாட்படை (ஆ) குதிரைப்படை
   (இ) பீரங்கிப் படை (ஈ) யானைப்படை

2. கடைசிப்போரான காக்ரா போரில் பாபர் ____________ எதிராகப் போரிட்டார்.
   (அ) ஆப்கானியர்களுக்கு (ஆ) ரஜபுத்திரர்களுக்கு
   (இ) துருக்கியர்களுக்கு (ஈ) மராட்டியர்களுக்கு

3. ____________ தனது உயரிய அரசியல் மற்றும் இராணுவத் திறமையினால் சௌசாப் போரில் வெற்றி பெற்றார்.
   (அ) பாபர் (ஆ) ஹுமாயூன்
   (இ) ஷெர்கான் (ஈ) அக்பர்

4. ____________ நில உடைமை உரிமை முறையில், நிலத்திற்கான வரியை வசூலிக்கும் பொறுப்பும், அந்நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
   (அ) ஜாகீர்தாரி (ஆ) மகல்வாரி
   (இ) ஜமீன்தாரி (ஈ) மன்சப்தாரி

5. அக்பரது நிதி நிர்வாகம் ____________ நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.
   (அ) பாபர் (ஆ) ஹுமாயுன்
   (இ) ஷெர்ஷா (ஈ) இப்ராஹிம் லோடி

6. இளவரசர் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதற்காக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் __________ ஆவார்.
   (அ) குரு அர்ஜுன் தேவ் (ஆ) குரு ஹர் கோபிந்த்
   (இ) குரு தேஜ் பகதூர் (ஈ) குரு ஹர் ராய்

7. ____________ தனது ஆட்சியின்போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.
   (அ) அக்பர் (ஆ) ஜஹாங்கீர்
   (இ) ஷாஜகான் (ஈ) ஔரங்கசீப்

8. கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் ____________ ஆவார்.
   (அ) அக்பர் (ஆ) ஷாஜகான்
   (இ) ஷெர்ஷா (ஈ) பாபர்

9. ____________ சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.
   (அ) ஆக்ராவை (ஆ) குவாலியரை
   (இ) தில்லியை (ஈ) மதுராவை

11th History Lesson 14 Tamil Medium.indd 240 02-01-2023 14:05:48

10. பாதுஷா நாமா என்பது ___________ன் வாழ்க்கை வரலாறாகும்.

(அ) பாபர் (ஆ) ஹுமாயூன்
(இ) ஷாஜகான் (ஈ) அக்பர்

11. ___________ ஒரு ஜோதிட ஆய்வு நூலாகும்.

(அ) தஜிகநிலகந்தி (ஆ) ரசகங்காதரா
(இ) மனுசரிதம் (ஈ) ராஜாவலிபதகா

12. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் ___________.

(அ) தாயுமானவர் (ஆ) குமரகுருபரர்
(இ) இராமலிங்க அடிகள் (ஈ) சிவப்பிரகாசர்

13. தவறான கூற்றினைக் கண்டுபிடி.

(அ) இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கட்டடக்கலையின் பாணியில் முகலாயரின் கட்டடக்கலையின் மறுவடிவமாக தாஜ்மஹால் உள்ளது.
(ஆ) அக்பரது புதிய தலைநகரமான ஆக்ரா மற்றும் அதன் சுற்றுச் சுவர்களுக்குள் பல எழுச்சியூட்டும் கட்டடங்கள் உள்ளன.
(இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கல்லால் கட்டப்பட்டது.
(ஈ) 'புராண கிலா' ஒரு உயர்ந்த கோட்டையாகும்.

14. தவறான கூற்றினைக் கண்டுபிடி.

(அ) ஒவ்வொரு மன்சப்தாருக்கும் 1 முதல் 10,000 வரையிலான படைவீரர்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதை ஜாட்டுகள் தீர்மானித்தனர்.
(ஆ) ஷெர்ஷாவின் நாணய முறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது.
(இ) முகலாயருக்கும் ராணா பிரதாப் சிங்கிற்கும் இடையே நடைபெற்ற ஹால்டிகாட்டி போர் மிகக் கடுமையான இறுதிப் போர் ஆகும்.
(ஈ) சீக்கியப் புனித நூலான "குரு கிரந்த சாகிப்" குரு அர்ஜுன் தேவால் தொகுக்கப்பட்டது.

15 பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

(i) ராணா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்திவாய்ந்த படையை எதிர்கொண்டது.
(ii) கன்னோசிப் போருக்குப்பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.

(அ) (i) சரி
(ஆ) (ii) சரி
(இ) (i) மற்றும் (ii) தவறு
(ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

16. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

(i) ஷெர்ஷா மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.
(ii) அக்பர் தனது மிகப் பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

(அ) (i) சரி
(ஆ) (ii) சரி
(இ) (i) மற்றும் (ii) சரியானவை
(ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

17. **கூற்று:** பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.

காரணம்: பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
(ஆ) கூற்று தவறு; காரணம் சரி
(இ) கூற்று தவறு; காரணமும் தவறு
(ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

18. **கூற்று:** ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று

காரணம்: ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
(ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்
(இ) கூற்று தவறு; காரணம் சரி
(ஈ) கூற்று சரி காரணம் தவறு.

19. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.

(அ) பாஸ்கராச்சார்யா – நீதிநெறி விளக்கம்
(ஆ) ஆமுக்தமால்யதா – கிருஷ்ண தேவராயர்
(இ) ஜகன்னாத பண்டிதர் – ரசகங்காதரா
(ஈ) அல்லசானிபெத்தண்ணா– மனுசரித்திரா

20. பொருத்துக.

(i) அபுல் பாசல்	1. ஔரங்கசீப்
(ii) ஜும்மா மசூதி	2. அக்பர்
(iii) பாதுஷாஹி மசூதி	3. ஷெர்ஷா
(iv) புராண கிலா	4. ஷாஜகான்

(அ) 2, 4, 1, 3 (ஆ) 3, 2, 1, 4
(இ) 3, 1, 4, 2 (ஈ) 1, 3, 2, 4

11th History Lesson 14 Tamil Medium.indd 241 02-01-2023 14:05:48

II. குறுகிய விடை தருக

1. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டியது எது?
2. அக்பர், பைராம்கானை எவ்வாறு கையாண்டார்?
3. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ் ஆ) சர் தாமஸ் ரோ
4. "ஜஹாங்கீரின் அரியணைக்குப் பின்னால் அதிகார மையமாகச் செயல்பட்டவர் நூர்ஜஹான்" – விளக்குக.
5. முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாகக் கருதப்படுவது எது? அதன் வடிவமைப்பை விவரிக்கவும்.
6. ஔரங்கசீப்பிற்கு எதிராக வடபகுதியில், மூண்ட மூன்று எழுச்சிகள் யாவை?
7. சிறு குறிப்பு வரைக– i) சீக்கிய மதம் ii) சூபியிஸம்
8. மக்களிடையே பக்தி இயக்கத் துறவிகள் எவ்வாறு புகழ் பெற்றனர்?
9. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக.
10. "முகலாயர் ஓவியத்துறையில் உலகளாவிய அங்கீகாரம் பெற்றிருந்தனர்" – விவரிக்கவும்.

III. சுருக்கமான விடை தருக

1. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" – விவரிக்கவும்.
2. "தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது?
3. அக்பரது சித்தூர் முற்றுகை.
4. அக்பரது மன்சப்தாரி முறை.
5. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்கள்.
6. தாராஷூகோ
7. கர்கானா
8. கபீர்
9. அபுல் பாசல்
10. சூபி இயக்கம்

IV. விரிவான விடை தருக

1. "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" – விளக்குக.
2. அக்பரின் மதக் கொள்கை எவ்வாறு ஔரங்கசீப்பின் மதக் கொள்கையிலிருந்து மாறுபட்டிருந்தது?
3. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?
4. முகலாயர் ஆட்சியில் பொருளாதாரம், வர்த்தகம் வணிகம் பற்றி ஆராய்க.
5. முகலாயக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

செயல்பாடுகள்

1. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் (அ) அக்பர் (ஆ) ஔரங்கசிப்பின் ஆட்சி எல்லைகளைக் குறிக்கவும்.
2. முகலாயர் ஆட்சியின் காலக்கோடு தயார் செய்க.
3. முகலாயரின் அழிவு எவ்வாறு ஐரோப்பியர் ஆதிக்கம் நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது என்பதை விவாதிக்கவும்.

ஒப்படைப்பு

1. முகலாயக் கட்டடக்கலைத் தொடர்பானப் புகைப்படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பைத் தயாரிக்கவும்.
2. தாஜ்மஹாலின் மாதிரிப் படிவம் உருவாக்குவும்.
3. முகலாய அரசர்களின் காலவரிசையைப் பட்டியலிட்டுக், கட்டடக்கலையில் அவர்களது பங்களிப்பின் ஏதேனும் ஐந்தைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பற்றி விளக்குக.

மூலநூல்கள்

1. Abraham Eraly, *Emperors of the Peacock Throne: the Saga of The Great Mughals*, Penguin Books, New Delhi, 1997.
2. Irfan Habib, *Medieval India: The Story of a Civilization*, National Book Trust, New Delhi, 2007.
3. Stanely Lane-Poole, *Medieval India under Mohammedan Rule (AD 712-1764)*, Delhi, 1963.
4. Satish Chandra, *Medieval India*, NCERT, New Delhi,
5. Satish Chandra, *History of Medieval India*, Orient BlackSwan, New Delhi, 2007
6. R. Sathianathaier, *A Political and Cultural History of India, Vol. II*. Madras, 1980.

இணையதள ஆதாரங்கள்

1. https://en.wikipedia.org/wiki/Mughal_Empire
2. https://www.britannica.com/topic/Mughal-dynasty
3. www.historyworld.net/wrldhis/PlainTextHistories.asp?historyid=ab99
4. www.newworldencyclopedia.org/entry/Mughal_Empire
5. https://www.sscnet.ucla.edu/southasia/History/Mughals/mughals.html
6. www.ncert.nic.in/NCERTS/l/gess104.pdf

11th History Lesson 14 Tamil Medium.indd 242 02-01-2023 14:05:48

கலைச்சொற்கள்

அறிவுகூர்மை	ingenuity	inventiveness, cleverness
கைவிடப்பட்டதற்காக	forsaking	abandoning
சூழ்ச்சி, சதி	intrigue	secret planning of something illicit, plotting
துரோகத்தனமான, நம்பிக்கை மோசம் செய்கிற, இரண்டகம் செய்கிற	traitorous	disloyal, backstabbing
வெளிவருகின்ற	emanating	originate, derive, emerge
கப்பல் கட்டுபவர்	shipwright	ship builder
மர ஆபரணப் பொருள்	lacqueware	articles that have a decorative lacquer coating
சிட்டத்தில் நூல் நூற்பவர்	reeler	one who winds something on a reel
கற்பொறி மூலம் இயங்கும் துப்பாக்கி	flintlock	an old fashioned type of gun fired by a spark from a flint
கலசம்	cupolas	a small dome, on the top of a larger dome, adorning a roof or ceiling

Sources for the Study of Mughal Empire

S.No	Name of the Author	Work	Language	Content
1.	Babur	*Tuzuk I Baburi*	Turkish	Autobiography of Babur
2.	Mirza Muhammad Haider (Cousin of emperor Babur)	*Tarikh I Rashidi*	Persian	History of Mughals of Central Asia
3.	Gulbadan Begum Daughter of Babur	*Humayun Namah*	Persian	History of Humayun
4.	Abbas Khan Sarwani	*Tarikh I Sher Shahi*	Persian	Describes the contest between Humayun and Sher Shah
5.	Rizaqullah Mushtaqi	*Waqiat I Mushtaqi*	Persian	Elaborates on Sher Shah and Islam Shah
6.	Firishta (in the service of Bijapur Sultan Aadil Shah II)	*Tarikh I Firishta*	Persian	History of Muhammedan Power in India till 1612.
7.	Abul Fazal	*Akbar Namah*	Persian	History of Mughals with special emphasis on Akbar
8.	Abul Fazal	*Ain I Akbari*	Persian	Administration of Akbar
9.	Khwaja Nizamuddin Ahmad	Tabaqat I Akbari	Persian	Deals with Mughals up to Akbar.
10.	Abdul Qadir Badauni (Member of Akbar's Court	Muntakhab-Ut-Tawarikh	Persian	General History of Muslims
11.	Jahangir	Tuzuk-i- Jahangiri	Persian	Autobiography
12.	Mutamid Khan	Iqbal Namah	Persian	Description of the Mughals
13.	Abdul Hamid Lahori	Padshah Namah	Persian	Describes first ten years of reign of Sha Jahan.

11th History Lesson 14 Tamil Medium.indd 243 02-01-2023 14:05:48

இணையச் செயல்பாடு

முகலாயப் பேரரசு

முகலாயப் பேரரசின்
காலக்கோட்டினை
உருவாக்குவோமா!

படிநிலைகள்

படி – 1 கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி –2 காலக்கோட்டினை ஒருங்கிணைக்க 'Time, Date, Event' போன்றவற்றைத் தெரிவு செய்யவும். 'your name' மற்றும் 'project name' போன்றவற்றில் பெயர் மற்றும் செயல்திட்டத்தின் பெயரை உள்ளீடு செய்து 'START' பொத்தானை அழுத்தித் தொடங்கவும்.

படி –3 மத்தியில் உள்ள காலக்கோட்டினைத் தெரிவு செய்து, திரையில் தோன்றும் சாளரத்தின் உள்ள 'Label', 'Short description', 'Full description', மற்றும் 'choose image' (அரசரின் படம்) போன்றவற்றைப் பூர்த்திசெய்து '✓' அழுத்தவும்.

படி –4 இதேபோல் மற்ற அரசர்களுக்கும் உருவாக்கி 'Finish' பொத்தானை அழுத்தவும்.

படி –5 இந்த செயல்திட்டத்தினைச் சேமிக்க 'Save final' என்பதைத் தெரிவு செய்யவும். இதனை மீண்டும் தொகுக்கலாம்.

படி–1



படி–2

படி–3



படி–4

உரலி: http://www.readwritethink.org/files/resources/interactives/timeline_2/

UOJZB

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்

11th History Lesson 14 Tamil Medium.indd 244 02-01-2023 14:05:49

அலகு 15

மராத்தியர்

E6TB3

கற்றல் நோக்கங்கள்

கீழ்கண்டவற்றை பற்றி அறிதல்

- மராத்தியரின் எழுச்சிக்குக் காரணமான சூழ்நிலைகள்
- மராத்திய அரசு நிறுவியதில் சிவாஜியின் பங்கு
- சிவாஜியின் நிர்வாக முறை
- பேஷ்வா ஆட்சியும் நிர்வாகமும்
- தமிழ்நாட்டில் மராத்தியரின் குறிப்பாக இரண்டாம் சரபோஜியின் பங்கு

அறிமுகம்

முகலாயரின் வீழ்ச்சியில் மராத்தியர் முக்கியப் பங்கு வகித்தனர். 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் மையப்பகுதியில் மராத்திய மாமன்னர் சிவாஜியின் தலைமையில் முகலாய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர். தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்தியத் தளபதி வெங்கோஜி (சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர்) தமிழகத்தில் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். தஞ்சாவூரில் 1674ஆம் ஆண்டு தொடங்கிய மராத்தியரின் ஆட்சி 1832ஆம் ஆண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் மரணம் வரை நீடித்தது.

15.1 மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள்

(அ) மக்களின் இயல்பும், புவியியல் கூறுகளும்

மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி கொங்கணம் என்று அழைக்கப்பட்டது. செங்குத்தான மலைகளும், எளிதில் அணுகமுடியாத பள்ளத்தாக்குகளும், பாதுகாப்பு அரண்களாகத் திகழ்ந்த மலைகோட்டைகளும் இராணுவப் பாதுகாப்புக்கு உகந்தவையாக இருந்தன.

போர்ச் செயல்பாடுகளில் நீண்ட மரபைக் கொண்ட மராத்தியர் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளை தாக்கும் ஆற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்கள். முன்னதாக பாமினி சுல்தான்களின் கீழ் செயல்பட்ட மராத்தியர், சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்றனர். சிவாஜி மறைவுக்குப் பிறகு அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார், பீரார் ஆகிய சுல்தான்களின் கீழ் செயல்பட்டனர்.

வலிமை மிகுந்த காலாட்படையும் ஆபத்தான ஆயுதங்களையும் கொண்டிருந்த முகலாய இராணுவத்துடன் நேரடியாக மோதுவதை மராத்தியர் தவிர்த்தனர். *கொரில்லா தாக்குதல்* முறை அவர்களின் வலிமையாகத் திகழ்ந்தது. இரவு நேரங்களில் திடீரென மின்னல் வேகத்தில் தாக்குதல்களைத் திட்டமிடுவதிலும் நடத்துவதிலும் திறமை கொண்டிருந்தனர். மேலும் மேலதிகாரியின் உத்தரவுக்குக் காத்திருக்காமல் போர்ச்சூழலைக் கருத்தில் கொண்டு வழிமுறைகளை மாற்றிச் செயல்படுத்தும் திறனையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

(ஆ) பக்தி இயக்கமும் அதன் தாக்கமும்

பக்தி இயக்கம் பரவியதன் மூலமாக மராத்தியரிடம் ஒற்றுமை உணர்வு மேலோங்கியது. துக்காராம், ராம்தாஸ், ஏகநாதர், ஆகியோர் பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். மராத்தி மொழியில் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் சமூகத்தில் வாழ்ந்த மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தின.



ராம்தாஸ்

11th History Lesson 15 Tamil Medium.indd 245 07-02-2023 16:18:34

"(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை. அமைப்புகள், சடங்குகள், வகுப்பு வேறுபாடுகள், ஆகியவற்றுக்கு எதிரான தனது போராட்டத்தைப் பொறுத்த அளவில் வழக்கத்தில் உள்ள கொள்கைக்கு மாறானதாக அது அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் பிராமண வகுப்பைச் சாராமல் சமூகத்தின் அடிநிலையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்" – நீதிபதி ரானடே

(இ) பிற காரணங்கள்

பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகள் கலைந்த சூழலில் மராத்தியர் ஒன்றிணைந்து தங்களுடைய வாழ்க்கைக்காகப் போராட வேண்டிய உந்துதலைப் பெற்றனர். பீஜப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர் ஆகிய சுல்தான்களுக்கு எதிராக நடந்த தக்காணப் போர்களின் காரணமாக முகலாயர்களின் கருவூலம் காலியானது. தக்காணப் பகுதியில் சிதறிக் கிடந்த மராத்தியரைத் தனது தலைமையின் கீழ் ஒன்றுதிரட்டி சிவாஜி ஒரு வலுவான அரசை நிறுவினார். அந்த அரசுக்கு ராய்கர் தலைநகராக விளங்கியது.

15.2 சிவாஜி (1627–1680)

சிவாஜி

ஜுன்னார் என்ற இடத்திற்கு அருகே ஷிவ்னர் என்ற பகுதியில் ஷாஜி போன்ஸ்லே மற்றும் அவரது முதல் மனைவி ஜீஜாபாய்க்கு மகனாக சிவாஜி பிறந்தார். தாய் வழியில் தேவகிரியை ஆண்ட யாதவ மன்னர்களின் வழித்தோன்றலாகவும் தந்தை வழியில் மேவாரின் சிசோடியாக்களின் வழித்தோன்றலாகவும் ஷாஜி போன்ஸ்லே விளங்கினார். அகமது நகர், அகமது ஷாவின் அபிசீனிய அமைச்சராகவும், முன்னாள் அடிமையாகவும் இருந்த மாலிக் அம்பர் (1548–1626) என்பவரின் கீழ் ஷாஜி போன்ஸ்லே சேவை புரிந்தார். மாலிக் அம்பர் மறைவுக்குப் பிறகு அரசியலில் ஈடுபட்ட ஷாஜி போன்ஸ்லே அகமதுநகர் முகலாயர்களால் இணைக்கப்பட்ட பிறகு பீஜப்பூர் சுல்தானிடம் தன் பணியைத் தொடர்ந்தார்.

பூனாவில் இருந்த ஷாஜி போன்ஸ்லேவின் ஜாகீர்தாரான தாதாஜி கொண்டதேவ் என்பவரின் பராமரிப்பில் சிவாஜியும் அவரது தாயும் விடப்பட்டனர். (இராணுவ மற்றும் நிர்வாக சேவைகளுக்கான அங்கீகாரமாக வழங்கப்பட்ட நிலம் ஜாகீர் ஆகும்.) பூனாவைச் சுற்றியிருந்த மலைப்பாங்கான பகுதிகளில் அனுபவமும் அறிவும் வலிமையும் கொண்ட மாவலியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தலைவர்களின் நன்மதிப்பை சிவாஜி பெற்றார். மதத் துறவிகளாக விளங்கிய ராம்தாஸ், துக்காராம் ஆகியோரும் சிவாஜியிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள், துறவி ராம்தாஸ் அவர்களை சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்தினார்.

இராணுவ வெற்றிகள்

சிவாஜி தமது 19ஆவது வயது முதல் இராணுவத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். 1646இல் தோர்னா கோட்டையை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார். தோர்னாவில் இருந்து ஐந்து மைல் தொலைவில் இருந்த ராய்கர் கோட்டையையும் கைப்பற்றி மீண்டும் முழுமையாக அதனைக் கட்டினார். 1647இல் தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு தமது தந்தையின் (ஜாகீர்) நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை சிவாஜி ஏற்றார். அதனைத் தொடர்ந்து பாராமதி, இந்துபுரம், புரந்தர், கொன்டானா ஆகிய கோட்டைகளும் அடுத்தடுத்து அவரது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. அந்தப் பகுதியிலிருந்த கல்யாண் என்ற முக்கிய நகரையும் மராத்தியர் முன்பே கைப்பற்றி இருந்தார்கள்.

பீஜப்பூர் சுல்தான், சிவாஜியின் தந்தையை சிறுமைப்படுத்திச் சிறையில் அடைத்தார். தக்காணத்தின் முகலாய அரசப்பிரதிநிதியாக இருந்த இளவரசர் மூராத் உடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர் முகலாய சேவையில் சேர விருப்பம் தெரிவித்தார். 1649ஆம் ஆண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் பீஜப்பூர் சுல்தான் ஷாஜியை விடுதலை செய்தார். 1649 முதல் 1655 வரை இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து சிவாஜி விலகியிருந்தார். இந்தக் காலகட்டத்தில் அவர் தனது அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தினார்.

1656ஆண்டு முதல் சிவாஜி, தனது இராணுவச் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கினார். சதாரா மாவட்டத்தில் ஜாவ்லி என்ற இடத்தைக் கைப்பற்றினார். இந்தக் குறிப்பிடத்தக்க வெற்றியால் அவர் மராத்தியரின் மத்தியில் பிரபலம் அடைந்தார். இளைஞர்கள் அவரது இராணுவத்தில் இணைந்தனர். ஜாவ்லி என்ற இடத்திலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் பிரதாப்கர் என்ற புதிய கோட்டை கட்டப்பட்டது.

பீஜப்பூருக்கு எதிரான மோதல்

1656 நவம்பர் மாதம் பீஜப்பூரின் முகமது அடில்ஷா மரணமடைந்தார். பதினெட்டு வயதே

11th History Lesson 15 Tamil Medium.indd 246 07-02-2023 16:18:34

நிரம்பிய இளைஞர் இரண்டாம் அடில்ஷா அடுத்துப் பொறுப்பேற்றார். 1657ஆம் ஆண்டு பீடார், கல்யாணி, புரந்தர் ஆகியவற்றை ஔரங்கசீப் கைப்பற்றினார். எனவே பீஜப்பூர் சுல்தானும் சிவாஜியும் ஔரங்கசீப்புடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டார். தில்லியில் அவரைத் தொடர்ந்து யார் ஆட்சிக்கு வருவது என்பதில் போட்டி நிலவியது. ஔரங்கசீப் ஆட்சியைக் கைப்பற்றி தில்லி வந்தார். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட சிவாஜி வடக்கு கொங்கணம் மீது போர் தொடுத்து கல்யாண், பிவாண்டி, மாகுலி கோட்டைகளைக் கைப்பற்றினார்.

சிவாஜி மற்றும் அஃப்சல்கான், 1659

முகலாயரிடமிருந்து எந்த ஆபத்தும் இல்லை என்பதால் பீஜப்பூர் சுல்தான் சிவாஜி மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தார். அஃப்சல்கான் பெரும்படையுடன் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டார். "மலையில் ஒளிந்துகொண்டிருக்கும் எலியை" சங்கிலியில் கட்டி இழுத்துக்கொண்டு வருவதாக அவர் சூளுரைத்தார். ஆனால் மலைப்பாங்கான பகுதியில் சண்டையிடுவது அவருக்கு சிரமமாக இருந்தது. சூழ்ச்சி மூலமாக சிவாஜியை வீழ்த்த நினைத்தார். ஆனால் அதிலும் தோல்வியே கிடைத்தது. தெற்கு கொங்கணம் மற்றும் கோல்ஹாபூர் மாவட்டங்களைத் தாக்கிய மராத்தியப் படைகள் பன்ஹலா கோட்டையை கைப்பற்றின. பீஜப்பூர் சுல்தான் தாமே இந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். இந்தப் போர் சுமார் ஓராண்டுக் காலம் நீடித்தது. ஆனாலும் எந்தப் பகுதியையும் வெல்ல முடியவில்லை. இறுதியாக, பேச்சுவார்த்தைக்குப் பிறகு சிவாஜி, தமது ஆளுகையின் கீழுள்ள பகுதிகளின் ஆட்சியாளராக அங்கீகரிக்கப்பட்டார்.

சிவாஜி மற்றும் முகலாயர்

1658 ஜூலை மாதம், ஔரங்கசீப் மாமன்னராக அரியணை ஏறினார். சிவாஜியை அடக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1660ஆம் ஆண்டு செயிஷ்டகான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சிவாஜி ஒரு தைரியமான திட்டத்தை வகுத்தார். ஓர் இரவு நேரத்தில், பூனாவுக்கு 400 படை வீரர்களுடன் திருமணக் குழுவினர் போல் சென்ற அவர் செயிஷ்டகானின் இல்லம் மீது தாக்குதல் நடத்தினார். இதனால் 1663 டிசம்பர் மாதம் ஔரங்கசீப் செயிஷ்டகானை தக்காணத்திலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார்.

சிவாஜி மற்றும் ஜெய்சிங்

அரபிக் கடல் பகுதியில் முகாலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கிய சூரத் நகரைக் குறிவைத்து 1664ஆம் ஆண்டு சிவாஜி தாக்குதல் நடத்தினார். அவரது படை வீரர்கள் நகரைச் சூறையாடினார்கள். சிவாஜியை வீழ்த்துவதற்காகவும் பீஜப்பூரை இணைப்பதற்காகவும் ரஜபுத்திரத் தளபதி ராஜா ஜெய்சிங் தலைமையில் ஒரு இராணுவத்தை ஔரங்கசீப் அனுப்பினார். அப்பொழுது இளவரசர் மூவாசம் (பின்னர் முதலாம் பகதூர் ஷா என அழைக்கப்பட்டவர்,) தக்காணத்தின் ஆளுநராக பதவி வகித்தார். அனைத்துத் தரப்புக்களிலிருந்தும் சிவாஜியைச் சுற்றி வளைக்க ஜெய்சிங் விரிவான திட்டம் வகுத்திருந்தார். ராய்கர் கோட்டையும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. 1665 ஜூன் மாதம் புரந்தர் கோட்டையைப் படைகள் சுற்றி வளைத்தன. சிவாஜியின் தீரமான வீரதீர தற்காப்பு பலன் தரவில்லை. இதை உணர்ந்த சிவாஜி பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடிவு செய்தார். 1665 ஜூன் 11ஆம் தேதி ஏற்பட்ட புரந்தர் உடன்படிக்கையின்படி சிவாஜிக்கு அவர் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக்கொள்ள அனுமதி கிடைத்தது. மன்சப்தாராகச் செயல்பட்டு பீஜப்பூரைக் கைப்பற்ற முகலாயருக்கு உதவ ஒப்புக்கொண்டார்.

சிவாஜியும் ஜெய்சிங்கும்

ஆக்ரா பயணம்

முகலாய அரசவையை பார்வையிடுமாறு சிவாஜியிடம் ஜெய்சிங் வற்புறுத்தினார். சிவாஜியிடம் அதிக நம்பிக்கை வார்த்தைகளைச் கூறிய ஜெய்சிங், தலைநகரில் சிவாஜியின் பாதுகாப்புக்குத் தாமே உறுதியளித்தார். 1666 மே மாதம் சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் ஆக்ராவை அடைந்தனர். ஆனால் அவர்களுக்கு அவமரியாதை காத்திருந்தது. சிறுமைப்படுத்தப்பட்ட அவர் கொதித்தெழுந்து மன்னரை கண்டித்துப் பேசினார். சிறையில் அடைக்கப்பட்ட சிவாஜி பழக்கூடை ஒன்றில் ஒளிந்துகொண்டு அங்கிருந்து தப்பியதாக கூறப்படுகிறது.

1666 ஆண்டு முதல் சிவாஜி தீவிர போர்க் கொள்கையைக் கடைபிடிக்கலானார். அதனால் மராத்திய வீரர்கள் புதிய வெற்றிகளைப் பெற்றனர்.

11th History Lesson 15 Tamil Medium.indd 247 07-02-2023 16:18:34

வடமேற்கே ஆப்கன் எழுச்சி காரணமாக அதில் கவனம் செலுத்திய முகலாயருக்கு சிவாஜியை சமாளிக்க முடியவில்லை. தனது உள் நிர்வாகத்தை மறு சீரமைப்பு செய்வதில் சிவாஜி ஈடுபாடு காட்டினார். இளவரசர் மூவாசம், தக்காணத்தின் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) மிகவும் வலுகுறைந்தும் சோம்பலுடனும் இருந்தார். ராஜா ஜஸ்வந்த் சிங் சிவாஜியுடன் நட்பு பாராட்டினார். மன்சப்தார் ஐந்தாயிரம் என்ற படிநிலையில் சாம்பாஜி நியமிக்கப்பட்டார்.

முகலாயருடன் மோதல் (1670)

பீராரில் சிவாஜிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட ஜாகீர் நிலத்தின் ஒரு பகுதியை ஔரங்கசீப் எடுத்துக்கொண்டார். இதனால் கோபமடைந்த சிவாஜி முகலாயர் சேவையிலிருந்த தனது படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டார். புரந்தர் உடன் படிக்கையால் சிவாஜி

ஔரங்கசீப்

தான் இழந்த கோட்டைகளைத் திரும்பவும் மீட்டுக்கொண்டார். 1670ஆம் ஆண்டு மேற்குக் கடற்கரையோரத்தின் முக்கியத் துறைமுகமான சூரத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார். 1672ஆம் ஆண்டு சூரத்திலிருந்து சௌத் எனப்படும் நான்கில் ஒரு பங்கு வருமானத்தை வருடாந்திரக் கப்பமாக மராத்தியர் பெற்றனர்.

அரியணை ஏறுதல்

1674 ஜூன் 6ஆம் தேதி சிவாஜி ராய்கர் கோட்டையில் வேத முறைப்படி அரியணை ஏறினார். 'சத்ரபதி' (Supreme King) என்ற பட்டத்தைச் சூடினார்.

ராய்கர் கோட்டை

11th History Lesson 15 Tamil Medium.indd 248 07-02-2023 16:18:35

தக்காணப் போர் முயற்சிகள்

1676ஆம் ஆண்டு தெற்குப் பகுதியில் சிவாஜி தனது வெற்றியைத் துவக்கினார். கோல்கொண்டா சுல்தானுடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதற்குக் கைமாறாக சிவாஜி சில பகுதிகளைத் தருவதாக உறுதியளித்தார். செஞ்சி, வேலூர் ஆகியவற்றைக் கைப்பற்றிய அவர், அடுத்திருந்த தனது தந்தை ஷாஜிக்குச் சொந்தமான பகுதிகளையும் சேர்த்துக்கொண்டார். சகோதர உறவிலான வெங்கோஜியை அல்லது எக்கோஜி, தஞ்சாவூரை நிர்வகிக்குமாறு அவர் பணித்தார். மதுரை நாயக்கர்களுக்குப் பெரும் தொகையைக் கப்பமாக தரவும் உறுதியளித்தார். கர்நாடக முற்றுகை முயற்சிகள் சிவாஜிக்கு பெருமையையும் புகழையும் கொடுத்தன. புதிதாகக் கைப்பற்றிய செஞ்சி அவருக்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுக்கு இரண்டாம் கட்டப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது.

சிவாஜியின் கடைசி நாட்கள்

சிவாஜியின் கடைசி நாட்கள் மகிழ்ச்சியானவையாக இல்லை. அவரது மூத்த மகன் சாம்பாஜி அவரைக் கைவிட்டுவிட்டு முகலாய முகாமில் இணைந்தார். சாம்பாஜி திரும்பியபோது ஔரங்கசீப்பால் சிறைபிடிக்கப்பட்டு பன்ஹலா கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அடுத்தடுத்த போர்கள் சிவாஜியின் உடல்நலத்தைப் பாதித்தன. அவர் தனது 53 ஆவது வயதில் 1680ஆம் ஆண்டு காலமானார். அவரது மறைவின்போது மேற்குத் தொடர்ச்சி மலைகள், கல்யாண் மற்றும் கோவா இடையேயான கொங்கணப் பகுதி ஆகியன சிவாஜி அரசின் கீழ் இருந்தன. தெற்கில் பெல்காம் தொடங்கி துங்கபத்திரை நதிக்கரை வரை மேற்கு கர்நாடகாவை உள்ளடக்கிய பகுதிகள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அவரது மரணத்தின்போது வேலூர், செஞ்சி மற்றும் இதர சில மாவட்டங்கள் பற்றிய விஷயத்தில் தீர்வு காணப்படவில்லை.

15.3 சிவாஜிக்குப் பிறகு மராத்தியர்

சிவாஜி மறைந்து ஓராண்டுக்குப் பிறகு அவரது மூத்த மகன் சாம்பாஜி மராத்திய இராணுவத்திற்கு தலைமை ஏற்று முகலாயப் பகுதிக்குள் நுழைந்து பீரார்ில் பகதூர்பூரைக் கைப்பற்றி அங்கிருந்த சொத்துக்களைக் கைப்பற்றினார். இதனால் ஆத்திரமடைந்த ஔரங்கசீப் மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திரர்களுடன் சமரசம் மேற்கொண்டு தக்காணப் பகுதிக்குள் படைகளை வழிநடத்திச் சென்றார். 1686இல் பீஜப்பூரும் 1687இல் கோல்கொண்டாவும் வெல்லப்பட்டன. தன்னுடன் மல்லுக்கட்டும் தனது மகன் இளவரசர் இரண்டாம் அக்பருக்குப் பாதுகாப்பு கொடுத்ததற்காக சாம்பாஜிக்கு தண்டனைக் கொடுப்பதே ஔரங்கசீப்பின் அடுத்த இலக்காக இருந்தது. 1689இல் முகலாயப் படை சாம்பாஜியைச் சிறைபிடித்துக் கொன்றது.

சாம்பாஜியின் மறைவு மராத்தியரை முடக்கி விடவில்லை. அவரது இளவல் ராஜாராம் செஞ்சிக்கோட்டையிலிருந்து சண்டையைத் தொடங்கினார். இந்த மோதல் பல ஆண்டுகள் நீடித்தது. ராஜாராம் 1700இல் மரணமடைந்த பிறகு அவரது மனைவி தாராபாய் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது. கைக்குழந்தை சார்பாக செயல்பட்ட தாராபாய் 50 ஆயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப்படை மற்றும் காலாட்படையை ஹைதராபாத் அரசுக்கு எதிராகப் போர்தொடுக்க பணித்தார். அதன் விளைவாகத் தலைநகர் சூறையாடப்பட்டது. இதன் காரணமாக அருகிலிருந்த மசூலிப்பட்டினம் துறைமுகத்தில் வர்த்தகம் பல ஆண்டுகளுக்கு பாதிக்கப்பட்டது. 1707இல் ஔரங்கசீப் மறைந்தபோது மராத்தியர் பல கோட்டை, கொத்தளங்களை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

ஔரங்கசீப்பின் மரணத்துக்குப் பிறகு சாம்பாஜியின் மகன் சாஹூ விடுதலையாகி மராத்தியரின் அரியணையை அலங்கரித்தார். தாராபாய் இதை எதிர்த்தார். அதன் பின் உள்நாட்டுக் கலகம் வெடித்தது. அதில் சாஹூ வெற்றி பெற்று 1708இல் அரியணையில் அமர்ந்தார். அரியணை ஏறிய பிறகு, பாலாஜி விஸ்வநாத் அவருக்கு ஆதரவாக இருந்தார். அதற்கு நன்றிக்கடனாக பாலாஜி விஸ்வநாத்தைப் பேஷ்வாவாக 1713இல் நியமித்தார். பின்னர் சாஹூ சதாராவுக்கு ஓய்வெடுக்கச் சென்றார். பூனாவில் இருந்து பேஷ்வா ஆட்சி செய்யத் தொடங்கினார்.

தாராபாய்

கோல்ஹாபூரைத் தலைநகராகக் கொண்டு தாராபாய் ஒரு மாற்று அரசாங்கத்தை நடத்தினார். ராஜாராமின் இரண்டாவது மனைவி ராஜாபாய், அவரது மகன் இரண்டாம் சாம்பாஜி, தாராபாய் மற்றும் அவரது மகன் ஆகியோரை 1714ஆம் ஆண்டு சிறைப்பிடித்தனர். இரண்டாம் சாம்பாஜி கோல்ஹாபூரில் அரியணை ஏறினார். சாஹூவின் அதிகாரத்தை அவர் ஏற்கவேண்டியிருந்தது. சாஹூ 1749இல் மறைந்தபிறகு ராமராஜா அரியணை ஏறினார். அவர் பேஷ்வாக்களுடன் ஒப்பந்தத்தை எட்டியதால் தலைமைப் பொறுப்பை அடைந்தார். தாராபாய் இதனால் ஏமாற்றம் அடைந்தார். 1761இல் தாராபாய்,

11th History Lesson 15 Tamil Medium.indd 249 07-02-2023 16:18:35

1777இல் ராமராஜா ஆகியோர் மரணமடைந்தனர். ராமராஜாவின் தத்துப் புதல்வரான இரண்டாவது சாஹு 1808இல் மரணமடையும் வரை பெயருக்கு மன்னராக ஆட்சியில் இருந்தார். அவரது மகன் பிரதாப் சிங் அடுத்து அரியணை ஏறினார். பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டி, 1839ஆம் ஆண்டு அவரை பிரிட்டிஷ் அரசு ஆட்சியில் இருந்து நீக்கியது. பிரதாப் சிங் ஒரு சிறைக்கைதியாக 1847இல் மரணமடைந்தார். அவரது இளவல் ஷாஜி அப்பா சாஹிப், இரண்டாம் ஷாஜி 1839ஆம் ஆண்டு அரசராக பிரிட்டிஷ் அரசால் பதவியில் அமர்த்தப்பட்டார். தனக்குப் பின் ஆள்வதற்கு ஒருவருமற்ற நிலையில் இரண்டாம் ஷாஜி 1848இல் மரணமடைந்தார்.

15.4 சிவாஜி ஆட்சியில் மராத்திய நிர்வாகம்

மத்திய அரசு

சிவாஜி பெரிய போர்வீரர் மட்டுமல்ல ஒரு நல்ல நிர்வாகியும்கூட. அன்றாட நிர்வாகத்தில் தனக்கு உதவுவதற்காக ஓர் ஆலோசனை சபையை அவர் வைத்திருந்தார். "அஷ்டபிரதான்" என அழைக்கப்பட்ட இந்தச் சபையில் எட்டு அமைச்சர்கள் இடம்பெற்று இருந்தனர். அந்தச் சபையின் செயல்பாடு ஆலோசனை கூறுவதாகவே அமைந்திருந்தது.

- முக்கிய பிரதான் அல்லது பேஷ்வா அல்லது பிரதம மந்திரி. நாட்டின் பொதுநலன்கள் மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது இவரது முக்கியக் கடமை.
- அமத்யா அல்லது நிதி அமைச்சர். அரசின் அனைத்துப் பொதுக்கணக்குகளையும் ஆராய்ந்து ஒப்புதல் கையொப்பமிடுவது இவரது வேலை.
- வாக்கியநாவிஸ் அல்லது மந்திரி, அரசரின் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆவணங்கள் வடிவில் பராமரித்தார்.
- சுமந்த் அல்லது டாபிர் அல்லது வெளியுறவுச் செயலர், மன்னருக்குப் போர் மற்றும் அமைதி குறித்த அனைத்து விஷயங்களிலும் ஆலோசனைகளை வழங்கினார். பிறநாடுகளின் தூதர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.
- சச்சிவ் அல்லது சுருநாவிஸ் அல்லது உள்துறை செயலர், அரசரின் அன்றாட கடிதப் போக்குவரத்தை கவனித்துக் கொண்டதோடு வரைவுகளைத் திருத்தும் அதிகாரமும் கொண்டிருந்தார். பர்கானாக்களின் கணக்குகளையும் அவர் சரிபார்த்தார்.
- பண்டிட் ராவ் அல்லது தனத்தியாக்சா அல்லது சதர் அல்லது முதாசிப் அல்லது மதத்தலைவர் என்பவர் மதம் தொடர்பான சடங்குகளுக்கும் தானதர்மங்களுக்கும் பொறுப்பேற்றிருந்தார். சமூகச் சட்டதிட்டங்கள் மற்றும் பொது ஒழுக்க நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு அவர் நீதிபதியாக இருந்தார்.
- நியாயதீஷ் அல்லது தலைமை நீதிபதி குடிமை மற்றும் இராணுவ நீதிக்குப் பொறுப்பேற்றிருந்தார்.
- சாரிநௌபத் அல்லது தலைமைத் தளபதி இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு, அமைப்பு ரீதியாக பராமரிப்பது, இராணுவத்தை நிர்வகிப்பது ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டார்.

நியாயதீஷ் மற்றும் பண்டிட்ராவ் தவிர அமைச்சர்கள் அனைவரும் இராணுவத்தை வழிநடத்துவதற்கு தலைமை ஏற்பதோடு, பயணங்களுக்கும் தலைமை ஏற்க வேண்டும். அனைத்து அரசுக் கடிதங்கள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் ஆகியன அரசர், பேஷ்வா ஆகியோரின் இலச்சினையையும் மற்றும் தனத்தியாக்சா, நியாயதிக்சா, சேனாபதி தவிர்த்த நான்கு அமைச்சர்களின் ஒப்புதலையும் பெறவேண்டும். பல அமைச்சர்களின் கீழ் 18 அரசு துறைகள் இருந்தன.

மாகாண அரசு

நிர்வாக வசதிக்காக சிவாஜி தனது அரசை நான்கு மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு வைஸ்ராய் எனப்படும் அரசப்பிரதிநிதியை அமர்த்தினார். மாகாணங்கள் பிராந்த் (pranths) எனப்படும் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டன. ஜாகீர் வழங்கும் நடைமுறை ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளுக்கும் ரொக்கமாகப் பணம் வழங்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாய் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பும் எந்த ஒரு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் சொத்துகள் மூலமாகக் கிடைத்த வருவாய் மட்டுமே அவருக்கு உரியது. அதனுடன் தொடர்புடைய மக்களுடன் அந்த அதிகாரிக்கு எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. எந்தப் பதவியும் பரம்பரையானதில்லை. பிராந்தியத்தின் செயல்பாடுகளுக்கான மையமாகக் கோட்டை அமைந்திருந்தது. பாரம்பரியப்படி கிராமம் என்பது நிர்வாக நடைமுறையின் கடைசி அலகாக இருந்தது.

11th History Lesson 15 Tamil Medium.indd 250 07-02-2023 16:18:35

வருவாய் நிர்வாக அமைப்பு

சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாக, உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது. நிலம் அளவீடு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டது. மொத்த உற்பத்தியில் அரசின் உரிமையாக 30 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டு அது பணமாகவோ பொருளாகவோ செலுத்தப்பட்டது. பின்னர் இந்த வரி 40 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. செலுத்த வேண்டிய வரித் தொகை தெளிவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. பஞ்சகாலத்தில் அரசு பணத்தையும் உணவுதானியங்களையும் உழவர்களுக்கு முன்பணம் அல்லது முன்பொருளாகக் கொடுத்தது. பின்னர் அவற்றை அவர்கள் தவணைகளில் திரும்பச் செலுத்தவேண்டும். விவசாயிகள் கால்நடை வாங்க, விதைப்புக்காக, இன்னபிற தேவைகளுக்காகக் கடன்கள் வழங்கப்பட்டன.

சௌத் மற்றும் சர்தேஷ்முகி

அரசு வசூலிக்கும் வருவாய், தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலையில் சௌத், சர்தேஷ்முகி என இரண்டு வரிகளைத் தனது சாம்ராஜ்யத்தின் அண்டை பகுதிகளான முகலாய மாகாணங்களிடமிருந்தும் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்தும் சிவாஜி வசூலித்தார். மராத்தியர் கைப்பற்றிய மாவட்டத்தின் வருவாயில் நான்கில் ஒரு பங்கு 'சௌத்' என வசூலிக்கப்பட்டது. சர்தேஷ்முக் என்ற தகுதியின் காரணமாக சிவாஜி தனது கூடுதல் வருவாயில் 10%-ஐ சர்தேஷ்முகி என்னும் வரிமூலம் பெற்றார். தேசாய்கள், தேஷ்முக்குகளின் பிரதம தலைமையாக சர்தேஷ்முக் திகழ்ந்தார். மரபுவழியாகத் தனது நாட்டின் சர்தேஷ்முக் ஆக சிவாஜி விளங்கினார்.

இராணுவ அமைப்பு

சிவாஜி நிலையான இராணுவத்தைக் கொண்டிருந்தார். ஜாகீர்களை வழங்குவதையும் மரபுவழியாகச் செய்யப்படும் நியமனங்களையும் அவர் ஊக்கப்படுத்தவில்லை. படைவீரர்களுக்கு வீடு வழங்கப்பட்டது. அவர்களுக்கு முறைப்படி ஊதியமும் வழங்கப்பட்டது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை என இராணுவத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன. கொரில்லாபோர்முறையில் வீரர்கள் சிறந்து விளங்கியபோதிலும் பாரம்பரியப் போர்முறையிலும் அவர்கள் பயிற்சி பெற்றனர்.

காலாட்படை ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் எனப் பிரிக்கப்பட்டது. ஒன்பது வீரர்களைக் கொண்ட சிறிய படைப்பிரிவுக்கு நாயக் (கார்ப்பரல்) தலைமை வகித்தார். ஒவ்வொரு படைப்பிரிவிலும் 25 குதிரைப் படை வீரர்கள் சார்ஜண்ட் தகுதிக்கு இணையான தகுதியில் ஹவில்தார் தலைமையின் கீழ் செயல்பட்டனர். ஒரு ஜமால்தாரின் கீழ் ஐந்து ஹவில்தார் செயல்பட்டனர். பத்து ஜமால்தார்களின் தலைவராக ஒரு ஹஜாரி திகழ்ந்தார். சாரிநௌபத் குதிரைப்படையின் தலைமைத்தளபதி ஆவார். ஒவ்வொரு குதிரைப்படையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அரசு மூலமாகக் குதிரைகள் வழங்கப்பட்ட படைவீரர்கள் பர்கிர்கள் என்றும், தாங்களாகவே குதிரைகளை ஏற்பாடு செய்து கூலிக்கு வேலை செய்யும் வீரர்கள் ஷைலேதார்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இதுதவிர நீர் கொண்டு செல்லும் குதிரைப்படைவீரர்களும் குதிரைகளுக்கு லாடம் கட்டுபவர்களும் இருந்தனர்.

நீதி

நீதி நிர்வாகம் மரபுவழிப்பட்டதாக இருந்தது. நிரந்தரமான நீதிமன்றங்களோ, நீதிவழிமுறைகளோ இல்லை, விசாரணைமுறை அனைவருக்கும் பொதுவாக இருந்தது. கிராமங்களில் பஞ்சாயத்து நடைமுறை இருந்தது. கிரிமினல் வழக்குகளை பட்டேல்கள் விசாரித்தனர். சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான மேல்முறையீடுகளைத் தலைமை நீதிபதி நியாயதிஷ், ஸ்மிருதிகளின் ஆலோசனையோடு விசாரித்தார். 'ஹாஜிர்மஜ்லிம்' இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக இருந்தது.

15.5 பேஷ்வா ஆட்சி (1713–1818)

பேஷ்வா அல்லது பிரதமமந்திரி என்பவர் சிவாஜியின் அமைச்சரவையான அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர். பதினெட்டாம் நூற்றாண்டில் பேஷ்வாக்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று ஆட்சிபுரிந்தனர். பாலாஜி விஸ்வநாத் என்பவர் ஆற்றல் மிகுந்த முதல் பேஷ்வா ஆவார்.

> பேஷ்வா என்ற பாரசீக சொல்லின் பொருள் "முதன்மையான" அல்லது "பிரதம அமைச்சர்" என்பதாகும்.

பாலாஜி விஸ்வநாத் (1713–1720)

பாலாஜி விஸ்வநாத்

உள்நாட்டுப் போரால் சிக்கலிலிருந்த அரசைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர சாஹூவுக்கு பாலாஜி விஸ்வநாத் உதவினார். மேற்குக் கரையோரத்தில் கனோஜி ஆங்கிரே அதிக அதிகாரம் படைத்த கடற்படைத் தளபதியாகத் திகழ்ந்தார். உள்நாட்டுப்போரின்போது கனோஜி

11th History Lesson 15 Tamil Medium.indd 251 07-02-2023 16:18:35

ஆங்கிரே தாராபாய்க்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ஐரோப்பியரால் ஏற்படும் ஆபத்தைப் பற்றி அவருக்கு எடுத்துரைத்த பேஷ்வா சாஹூவிடம் தனக்குள்ள விசுவாசத்தை உறுதிசெய்தார். ஜாகீர்களை வழங்கும் நடைமுறை மீண்டும் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பேஷ்வாவின் பதவி மரபுசார்ந்ததாக ஆனது.

முதலாம் பாஜி ராவ் (1720–1740)

முதலாம் பாஜிராவ்

பாலாஜி விஷ்வநாத்துக்குப் பிறகு அவரது மகன் முதலாம் பாஜிராவ் 1720இல் மன்னர் சாஹூவால் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டார். ஹைதராபாத் நிஜாம், மால்வாவின் ரஜபுத்திர ஆளுநர், குஜராத் ஆளுநர் ஆகியோரை வீழ்த்தி மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை பாஜிராவ் மேம்படுத்தினார். முகலாயரின் கட்டுப்பாட்டிலிருந்து பந்தேல்கண்டை அவர் விடுவித்தார். அதனால் மராத்தியருக்கு அதன் ஆட்சியாளரிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் தாரை வார்க்கப்பட்டது. பேஷ்வாவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய தலைமைத் தளபதி திரிம்பக்ராவ் 1731இல் பரோடா அருகே தபாய் என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தலைமைத்தளபதியின் பதவியையும் பேஷ்வா ஏற்றுக்கொண்டார். 1731இல் எட்டப்பட்ட வார்னா ஒப்பந்தத்தின்படி சாஹூவின் இறையாண்மையை ஏற்குமாறு கோல்ஹாபுரின் சாம்பாஜிக்கு நெருக்குதல் அளிக்கப்பட்டது.

தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகள் 1738இல் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்கள் கொங்கணக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அதே நேரத்தில் மராத்தியருடன் ஆங்கிலேயர் நட்புறவை ஏற்படுத்தியதன் மூலம் தக்காணப்பகுதியில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்கள்.

பாலாஜி பாஜி ராவ் (1740 –1761)

முதலாம் பாஜிராவ் மறைவுக்குப் பிறகு பாலாஜி பாஜிராவ் பேஷ்வாவாக பதவியேற்றார். நானா சாகிப்

பாலாஜி பாஜிராவ்

என்று அழைக்கப்பட்ட அவர் நல்ல நிர்வாகியாகவும் நிதி தொடர்பான விஷயங்களில் வல்லுநராகவும் விளங்கினார்.

கர்நாடகத் தாக்குதல்கள்

ஆற்காடு நவாபின் மருமகன் சந்தா சாகிப் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிய பிறகு தஞ்சாவூரை முற்றுகை இடப்போவதாக அச்சுறுத்தினார். 1739இல் தஞ்சாவூரை ஆண்ட மராத்திய ஆட்சியாளர் சாஹூவிடம் உதவி கோரினார். இந்தக் கோரிக்கையை ஏற்ற பேஷ்வா, தனது மைத்துனர் ரகோஜி போன்ஸ்லேவைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார். 1740ஆம் ஆண்டு ரகோஜி போன்ஸ்லே ஆற்காடு நவாப் தோஸ்த் அலியை வீழ்த்திக் கொன்றார். திருச்சிராப்பள்ளி கைப்பற்றப்பட்டு சந்தா சாகிப் சிறையில் அடைக்கப்பட்டார். புந்தேல்கண்ட் மற்றும் வங்காளத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களில் பேஷ்வா ஈடுபட்டிருந்ததால் அடுத்து வந்த நவாப் முகமது அலி 1743இல் ஆற்காட்டை எளிதாகக் கைப்பற்றியதோடு திருச்சிராப்பள்ளியையும் மீட்டார். இதனால் பேஷ்வா தனது உடன் பிறவா சகோதரரான சதாசிவ ராவை கர்நாடகத்துக்கு அனுப்பினார். மராத்தியரின் அதிகாரம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டபோதிலும் அவர்களால் திருச்சிராப்பள்ளியை மீட்க முடியவில்லை.

உத்கிர் போர், 1760

1748இல் நிஜாம் ஆசப்ஜாவின் மறைவுக்குப் பிறகு வாரிசுப் போட்டி வெடித்தது. நிஜாமின் மூத்த மகனுக்குப் பேஷ்வா தனது ஆதரவைத் தெரிவித்தார். சதாசிவ ராவ் தலைமையில் பேஷ்வா அனுப்பிய இராணுவம் 1760இல் நடந்த உத்கிர் போரில் எதிரிகளை வீழ்த்தியது. மராத்தியரின் இராணுவ பலத்துக்குக் கடைசி கட்டமாக இந்த வெற்றி அமைந்தது. பீஜப்பூர், ஔரங்காபாத், தௌலதாபாத், அகமதுநகர், பர்கான்பூர் ஆகிய பகுதிகளைப் பேஷ்வா கைப்பற்றினார்.

11th History Lesson 15 Tamil Medium.indd 252 07-02-2023 16:18:36

ரஜபுதனத்தை (1741 முதல் 1748 வரை) ஆறு தாக்குதல் முயற்சிகளுக்குப் பிறகு மராத்தியர் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்கள். 1751இல் வங்காள நவாப் ஒரிஸ்ஸாவைக் கைவிட்டு மராத்தியருக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முகலாயரின் ஆட்சியைக் குறிவைத்தே மராத்தியர் செயல்பட்ட காரணத்தால் அவர்கள் 1752இல் தில்லியில் நுழைந்தார்கள். தில்லியை விட்டு ஆப்கனியரையும் ரோகில்லாக்களையும் விரட்டியடித்தார்கள். மராத்தியரின் உதவியோடு வைஸ்ராயாகப் பொறுப்பேற்ற இமாத் உல் முல்க் அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு செயல்படும் பொம்மையானார். பஞ்சாபைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகு ஆப்கானிஸ்தானில் துராணி சாம்ராஜ்யத்தை நிறுவிய அகமதுஷா அப்தாலியின் பிரதிநிதியை அங்கிருந்து அகற்றினார்கள். இதனால் அகமது ஷா அப்தலியுடனான பெரிய சண்டையைத் தவிர்க்க இயலவில்லை.

வடமேற்கிலிருந்த அதிகார மையங்களிலும் மராத்தியர் தங்கள் கூட்டாளிகளை உருவாக்க முனைந்தனர். ஆனால் மராத்தியரின் முந்தைய செயல்பாடுகளால் வடமேற்கு அவர்களுக்கு எதிரான மனநிலையைக் கொண்டிருந்தது. சீக்கியர், ஜாட் தலைவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மராத்தியரை நம்பத் தயாராக இல்லை. 1757இல் நடந்த பிளாசி போரில் சிராஜ் உத் தௌலாவுக்கு மராத்தியர் உதவவில்லை. அதனால் வங்காளத்திலிருந்தும் பெரிதாக ஏதும் உதவி கிடைக்கவில்லை. கர்நாடகத்திலும் வங்காளத்திலும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பேஷ்வா எடுத்த முயற்சிகளின் விளைவாக அவர்களால் மேலும் முன்னேறமுடியாமல் போனது. தில்லி மீதான பேஷ்வாவின் தேவையற்ற ஆர்வம் பல பிரதேச ஆட்சியாளர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தது. 1761இல் அகமதுஷா அப்தலி பெரும் இன்னலை பானிப்பட் போர்க்களத்தில் உருவாக்கினார்.

மூன்றாவது பானிப்பட் போர், 1761

இந்திய வரலாற்றில் 1761இல் நடந்த மூன்றாவது பானிப்பட் போர் முக்கிய முடிவைக் கொடுத்ததாகும். இந்தப் போரில் மராத்தியர்க்கும் முகலாயருக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழி வகுத்தது.

சூழ்நிலைகள்

பலவீனமான முகலாய அரசு வடமேற்கு எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறிவிட்டது. இதனால் அப்போது ஆப்கானிஸ்தானை ஆண்ட நாதிர் ஷா போர் தொடுக்க நேரிட்டது. மீண்டும் மீண்டும் அளித்த வேண்டுகோள்களுக்குப் பிறகு முகலாய ஆட்சியாளர் முகம்மது ஷா ஆப்கன் நாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். இதனால் 1739இல் நாதிர் ஷாவின் தாக்குதல்கள் தொடங்கின. தில்லி சூறையாடப்பட்டது. கோகினூர் வைரம், மதிப்புமிகு மயிலாசனம் ஆகியவற்றை அவர் கைப்பற்றிச் சென்றார்.

1747இல் நாதிர் ஷா கொல்லப்பட்ட பிறகு அவரது இராணுவ தளபதிகளில் ஒருவரான அகமதுஷா அப்தாலி ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராக மாறினார். தனது நிலையை உறுதிப்படுத்திய அவர் பின்னர் இராணுவத் தாக்குதல்களைத் தொடங்கினார். முல்தான் மற்றும் பஞ்சாபை அவருக்குத் தாரை வார்த்த முகலாய மாமன்னர் அமைதியை நிலை நிறுத்தினார். பஞ்சாப் ஆளுநராக முகலாய மாமன்னரால் நியமிக்கப்பட்ட மீர்மன்னு, அகமது ஷா அப்தலியின் முகவர் போலவே செயல்பட முடிந்தது. மீர் மன்னுவின் மரணத்துக்குப் பிறகு அவரது மனைவி தில்லி வசீர் இமாத் உல் முல்க்கின் துணையோடு பஞ்சாப் ஆளுநராக மீர் முனிமை அப்தலியின் ஒப்புதலின்றி நியமித்தார். இதனால் ஆத்திரம் அடைந்த அப்தலி படையெடுத்து வந்து பஞ்சாபைக் கைப்பற்றினார். மீர் முனிம் தில்லிக்குத் தப்பினார். அவரைத் தொடர்ந்து விரட்டிய அப்தலி தில்லியைக் கைப்பற்றினார். 1757ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தில்லி சூறையாடப்பட்டது. மதுராவும் பிருந்தாவனமும் சிதைக்கப்பட்டன.

தில்லியை விட்டு வெளியேறும் முன் அப்தலி தில்லியில் தனது பிரதிநிதியாக மீர் பக்சியை நியமனம் செய்தார். அவரது மகன் தைமூர் ஷா லாகூரின் (வைஸ்ராயாக) அரசபிரதிநிதியாக ஆக்கப்பட்டார். அப்தலி தில்லியிலிருந்து வெளியேறிய பிறகு மல்ஹர் ராவ் ஹோல்கர், ரகுநாத ராவ் ஆகியோரின் தலைமையின் கீழ் ஒரு தாக்குதல் நடந்தது. தில்லியில் அப்தலி நியமித்த பிரதிநிதியை அவர்கள் அகற்றினார்கள். பின்னர் தங்களுக்கு பிடித்த ஒருவரை வசீராக நியமித்தனர். 1758இல் சர்கிந்த் மற்றும் லாகூரை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆப்கன் படைகள் வீழ்த்தப்பட்டு தைமூர் ஷா ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்.

1759 அக்டோபர் மாதம் அப்தலி பஞ்சாபை மீட்டார். லாகூர், முல்தான், சர்கிந்த் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு மராத்தியர் தள்ளப்பட்டனர். பஞ்சாபின் நிலைமையைச் சீராக்குவதற்காக மகாதாஜி சிந்தியாவின் சகோதரரான தத்தாஜி சிந்தியாவை பேஷ்வா அங்கு அனுப்பினார்.

11th History Lesson 15 Tamil Medium.indd 253 07-02-2023 16:18:36

ஆனால் 1760இல் நடந்த போரில் அப்தலி அவரை வீழ்த்திக் கொன்றார். சிகந்தராவில் மல்ஹர் ராவ் ஹோல்கரும் தோல்வி கண்டார். அதன் பிறகு சதாசிவ ராவின் தலைமையில் பெரும்படையைப் பேஷ்வா உருவாக்கினார்.

ரோகில்கண்டின் நஜீப் உத் தௌலா மற்றும் அயோத்தியின் ஷுஜா உத் தௌலா ஆகியோருடன் கூட்டணி அமைத்து அப்தலி பதிலடி கொடுத்தார். வடக்கு அதிகார மையங்களில் மராத்தியருக்குக் கூட்டாளிகள் கிடைக்கவில்லை. அயோத்தி நவாப், சீக்கியர், ஜாட் தலைவர்கள் ஆகியோரைப் பகைத்துக்கொண்ட மராத்தியர், ரஜபுத்திரர்களின் நம்பிக்கையையும் இழந்தனர்.

பேஷ்வாவின் இளைய புதல்வர் விஸ்வாஸ் ராவின் ஒட்டுமொத்த தலைமையின் கீழ் மராத்திய இராணுவம் இருந்தது. இந்தப் படைகளுக்கு சதாசிவ ராவ் உண்மையான தளபதியாகத் திகழ்ந்தார். வழியில் ஹோல்கர், சிந்தியா, கெய்க்வாட் ஆகியோரை இணைத்துக் கொண்டனர். இந்த நேரத்தில் முகலாய மன்னர் இரண்டாம் ஆலம்கீர் கொல்லப்பட்டார். அவரது இளைய மகன் இரண்டாம் ஷாஆலம் தானே முடி சூடிக்கொண்டார். இந்தப் படுகொலையைத் திட்டமிட்ட வசீர் மூன்றாம் ஷாஜகானுக்கு பட்டம் சூட்டினார். இதில் தலையிட்ட சதாசிவ ராவ் மூன்றாம் ஷாஜகானை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு இரண்டாம் ஷா ஆலம் என்பவரை மன்னராக அறிவித்தார். அப்தலியின் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக சதாசிவ ராவ் உணவுப்பற்றாக்குறை ஏற்படும் வரை நீண்ட காலம் அமைதிகாத்தார். தட்டுப்பாடின்றி உணவு கிடைக்கக்கூடிய பசுமையான ஆற்றிடைப் பகுதிகளில் அப்தலி தனது படைகளை நிறுத்தினார்.

பானிப்பட் போரின் விளைவுகள்

1761 ஜனவரி 14ஆம் தேதி மூன்றாவது பானிப்பட் போர் நடந்தது. மராத்தியரின் இராணுவம் முற்றிலுமாக அழிந்தது. பேஷ்வாவின் மகன் விஸ்வாஸ் ராவ், சதாசிவ ராவ், மற்றும் எண்ணற்ற மராத்திய தளபதிகள் கொல்லப்பட்டனர். ஹோல்கர் தப்பியோடினார். சிந்தியாவின் படைகள் அவரைத் துரத்தின. இந்தத் துயர செய்தி கேட்டு பேஷ்வா அதிர்ச்சி அடைந்தார். இதயம் நலிவடைந்த பேஷ்வா 1761 ஜூனில் மரணமடைந்தார்.

பானிப்பட் போருக்குப் பிறகு அப்தலி இரண்டாம் ஷா ஆலத்தை தில்லியின் மன்னராக அங்கீகரித்தார். ஆண்டொன்றுக்கு நான்கு மில்லியன் கப்பம் கிடைத்தது. முதலில் கடுமையான அதிர்ச்சியைச் சந்தித்த மராத்தியர் பத்து ஆண்டுகளுக்குள் முகலாய மன்னர் ஷா ஆலத்தின் பாதுகாவலராக உருவாகி வடக்கே தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றனர்.

பேஷ்வா முதலாம் மாதவ் ராவ் (1761–1772) மற்றும் அவரது வழித்தோன்றல்கள்

1761ஆம் ஆண்டு பாலாஜி பாஜி ராவின் மகன் மாதவ் ராவ், பேஷ்வாவின் இளைய சகோதரர் ரகோபாவின் ஆட்சியில் பேஷ்வா ஆகப் பதவியேற்றார். பானிப்பட் போரில் இழந்த மராத்திய அதிகாரத்தை மீட்க மாதவ் ராவ் முயன்றார். 1763ஆம் ஆண்டு ஹைதராபாத் நிஜாமுடன் கடும் சண்டை நடந்தது. மைசூரை ஆண்ட ஹைதர் அலிக்கு எதிராக 1765–1767 க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் நடத்திய தாக்குதல்கள் வெற்றி பெற்றன. எனினும் தான் இழந்த அனைத்துப் பகுதிகளையும் ஹைதர் அலி விரைவாக மீட்டார். ஆனால் மாதவ் ராவ் 1772ஆம் ஆண்டு மீண்டும் அவற்றை மீட்டார். அதன் காரணமாக தர்மசங்கடமான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடும் நிர்பந்தம் ஹைதர் அலிக்கு ஏற்பட்டது.

ரோகில்லாக்களை (பதான்கள்) வீழ்த்தி ரஜபுத்திர அரசுகளையும் ஜாட் தலைவர்களையும் அடிமைப்படுத்தி வட இந்தியா மீதான தனது கட்டுப்பாட்டை அவர் உறுதி செய்தார். தப்பியோடிய மன்னரான இரண்டாம் ஷா ஆலம் அலகாபாத்தில் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்தார். 1771இல் அவரை மராத்தியர் மீண்டும் தில்லிக்கு அழைத்து வந்தனர். கோரா, அலகாபாத் ஆகிய இடங்களை மன்னர் ஷா ஆலம் மராத்தியருக்குத் தாரை வார்த்தார். ஆனால் 1772ஆம் ஆண்டு பேஷ்வாவின் திடீர் மரணம் அவரது சிறப்புமிக்க ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

முதலாம் மாதவ் ராவுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் அவரது இளைய சகோதரர் நாராயண ராவ் 1772இல் பேஷ்வா ஆகப் பொறுப்பேற்றார். ஆனால் அடுத்த ஆண்டே அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது மகன் சவாய் மாதவ் ராவ் (இரண்டாம் மாதவ் ராவ்) பிறந்து 40 நாட்களே ஆன நிலையில் பேஷ்வா ஆக முடிசூடப்பட்டார். இரண்டாம் மாதவ் ராவின் மரணத்துக்குப் பிறகு ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜி ராவ் பதவியை ஏற்றார். அவரே கடைசி பேஷ்வா ஆவார்.

15.6 ஆங்கிலேய–மராத்தியப் போர்கள்

(அ) முதலாவது ஆங்கிலேய–மராத்தியப் போர் (1775–1782)

LF84R

நானா பட்னாவிஸ் ஆட்சியில் மாதவ் ராவ் நாராயண் பேஷ்வா சிறுவனாக இருந்ததால் முன்னாள் பேஷ்வாவான முதலாம்

11th History Lesson 15 Tamil Medium.indd 254 07-02-2023 16:18:36

மாதவ்ராவின் மாமா ரகுநாத் ராவ் அதிகாரத்தைக் கைப்பற்றினார். இது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வேலையைப் பார்க்க கம்பெனி நிர்வாகத்துக்கு வாய்ப்புக் கொடுத்தது. சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை ரகுநாத் ராவ் திரும்பப் பெற பம்பாயிலிருந்த கம்பெனி நிர்வாகம் ஆதரவாக இருந்தது. மகாதாஜி சிந்தியாவும் நாக்புரின் போன்ஸ்லேயும் ஆங்கிலேய ஆதரவாளர்களாக ஆனதை அடுத்து மராத்தியர் சால்செட், தானே ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தாரை வார்க்க நேரிட்டது. சால்பை உடன்படிக்கையின் படி 1782இல் ரகுநாத் ராவ் கட்டாய ஓய்வு பெற வைக்கப்பட்டார். இதனை அடுத்து கம்பெனிக்கும் மராத்தியருக்கும் இடையே சுமார் இருபது ஆண்டு காலத்துக்கு அமைதி நிலவியது.

ஆங்கிலேய–மராத்தியப் போர்

(ஆ) இரண்டாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் (1803–1806)

நானா பட்னாவிஸ் மறைவு அவரது பெரும் சொத்துக்கள் சிதற வழி வகுத்தது. ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜி ராவ் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டார். அந்தச் சூழ்நிலையில் இரண்டாம் பாஜி ராவுக்கு ஆங்கிலேயரின் உதவியை ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரபு பேஷ்வா மீது துணைப்படைத் திட்டத்தைத் திணித்தார். 1802இல் பேசின் ஒப்பந்தம் கையெழுத்தானது. 26 லட்சம் வருமானம் ஈட்டக்கூடிய நிலப்பகுதி கொடுக்கப்பட வேண்டும். முன்னணியிலிருந்த மராத்திய அரசுகள் பல இந்த மோசமான ஒப்பந்தத்தை ஒதுக்கித் தள்ளின. அதனால் இரண்டாவது ஆங்கிலேய–மராத்தியப் போர் மூண்டது. மராத்தியர் கடும் எதிர்ப்பைக் காட்டியபோதிலும் மராத்தியத் தலைவர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டனர். துணைப்படைத் திட்டம் ஏற்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு தோஆப் (ஆற்றிடைப்பகுதி), அகமதுநகர், புரோச், மலைப்பகுதிகள் ஆகியன முழுமையாக கிடைத்தன.

(இ) மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் (1817–1818)

பரோடாவின் ஆட்சியாளர் (கெய்க்வாட்) முதன்மை அமைச்சர் கங்காதர் சாஸ்திரி, பேஷ்வாவின் விருப்பத்துக்கு உகந்த திரிம்பக்ஜியால் கொல்லப்பட்டதை அடுத்து பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ் ஆங்கிலேயருக்கு எதிராக மாறினார். பூனேயில் வசித்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோனின் வற்புறுத்தலில் திரிம்பக்ஜி சிறையில் அடைக்கப்பட்டார். எனினும் பேஷ்வாவின் உதவியோடு கொலையாளி சிறையிலிருந்து தப்பிவிட்டார். மராத்தியக் கூட்டமைப்பை உருவாக்க ஆங்கிலேயருக்கு எதிராக சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டியதாகப் பேஷ்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. எனவே 1817ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆட்சியாளர்களை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள்.

அதன்படி

- மராத்தியக்கூட்டமைப்பின்தலைமையிலிருந்து பேஷ்வா பதவி விலகினார்.
- கொங்கணப் பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கியதோடு கெயிக்வாரின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

தனக்கு நேர்ந்த அவமானத்தை பாஜி ராவால் ஏற்கமுடியவில்லை. எனவே பிண்டாரிகளை அடக்குவதில் தீவிரமாக ஆங்கிலேயர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் பூனா அரசக்குடியிருப்பை இரண்டாம் பாஜி ராவ் தீயிட்டுக் கொளுத்தினார். பூனாவுக்கு உடனடியாக விரைந்த ஜெனரல் ஸ்மித் அதனைக் கைப்பற்றினார். சதாராவுக்குப் பேஷ்வா தப்பியோடிய நிலையில் அதனையும் ஜெனரல் ஸ்மித் கைப்பற்றினார். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாஜி ராவ் ஓடிக்கொண்டே இருந்தார். அவரது படைகளை அஸ்தா, கிர்க்கி, கோர்கான் ஆகிய பகுதிகளில் ஜெனரல் ஸ்மித் வீழ்த்தினார். 1818ஆம் ஆண்டு பாஜி ராவ் எல்பின்ஸ்டன்னிடம் சரணடைந்தார்.

மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போரின் விளைவுகள்

பேஷ்வா முறையை ரத்து செய்த ஆங்கிலேயர்கள் அனைத்து பேஷ்வா பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர். உரிமைப்படி ஜாகீர்களைக் கொண்டிருந்தவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கப்பட்டது.

11th History Lesson 15 Tamil Medium.indd 255 07-02-2023 16:18:36

இரண்டாம் பாஜி ராவ் 1851இல் மரணமடையும் வரை வருடாந்திர ஒய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதியாகவே விளங்கினார்.

- சிவாஜியின் வழித்தோன்றலான பிரதாப் சிங் சதாராவிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அரசாங்கத்துக்கு அரசராக உருவாக்கப்பட்டார்.
- முதலாம் பாஜிராவால் உருவாக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் பகுதிகளை உள்ளடக்கிய மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- பூனாவின் அரசபிரதிநிதியாக இருந்த மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டோன் பம்பாய் ஆளுநராக ஆனார்.

15.7 பேஷ்வாக்களின் கீழ் மராத்திய நிர்வாகம் (1714–1818)

பேஷ்வா (முதன்மை அமைச்சர்) என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதானக் கட்டமைப்பில் ஒருவர். இது வாரிசு முறையில் மரபுவழியாகக் கிடைப்பது அல்ல. அரசரின் அதிகாரமும் பெருமையும் குறைந்த நிலையில் பேஷ்வாக்கள் முக்கியத்துவம் பெற்றனர். பாலாஜி விஸ்வநாத்தின் புத்திக்கூர்மை (1713–1720) பேஷ்வாவின் பதவியைச் சிறப்புமிக்கதாகவும் மரபுவழி சார்ந்ததாகவும் மாற்றியது. அரசரின் அதிகாரங்களைப் பயன்படுத்தி முழு நிர்வாகத்தையும் பேஷ்வாக்கள் கட்டுப்படுத்தினார்கள். அரசின் மதத் தலைமையாகவும் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

மத்திய தலைமைச் செயலகம்

மராத்திய நிர்வாகத்தின் மையம் பூனாவிலிருந்த பேஷ்வா தலைமைச் செயலகமாகும். அனைத்து மாவட்டங்களின் வரவுசெலவுகளையும் இந்த மையம் கவனித்துக் கொண்டது. கிராமம் மற்றும் மாவட்ட அதிகாரிகள் சமர்ப்பித்த கணக்குகளையும் அது ஆராய்ந்தது. அனைத்து நிலைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் உரிமைகள், சிவில், இராணுவம் மற்றும் மதத்தலைவர்களின் வரவு செலவுகளும் கையாளப்பட்டன. அனைத்து வருவாய்கள், அனைத்து மான்யங்கள், ஆளுகையின் கீழ் இருந்த வெளிநாட்டுப் பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் தினசரி பதிவேட்டில் பராமரிக்கப்பட்டன.

மாகாணங்கள்

பேஷ்வாக்களின் கீழ் மாகாணங்கள் பல்வேறு அளவுகளில் இருந்தன. பெரிய மாகாணங்கள் "சர்–சுபாஷ்தார்கள்" என்றழைக்கப்பட்ட மாகாண ஆளுநர்களின் கீழ் இருந்தன. மாகாணங்களின் கீழ் இருந்த மண்டலங்கள் சுபாக்கள் மற்றும் பிராந்துகள் என்று அழைக்கப்பட்டன. மம்லத்தார், காமாவிஸ்தார் ஆகியோர் மாவட்டங்களில் பேஷ்வாக்களின் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் நிர்வாகமும் அவர்களின் பொறுப்பில் இருந்தது. தேஷ்முக், தேஷ்பாண்டே ஆகியோர் மாவட்ட அளவில் கணக்குகளைக் கவனித்துக்கொண்ட அதிகாரிகளாகவும், மம்லத்தார்கள், காமவிஸ்தார்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பவர்களாகவும் விளங்கினார்கள். கணக்குகளைச் சரிவரக் கண்காணிக்கும் நடைமுறைச் செயல்பாட்டில் இருந்தது.

பொதுப் பணம் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் வகையில் மராத்திய அரசு பெரும் தொகையை *ரசத்* என்ற பெயரில் முன் பணமாக மம்லத்தார்கள் மற்றும் இதர அதிகாரிகளிடமிருந்து வசூலித்தது. மாவட்டத்தில் முதன்முறையாக நியமனம் பெற்ற உடன் இது வசூலிக்கப்பட்டது. இரண்டாவது பாஜி ராவின் காலகட்டத்தில் இந்த அலுவலகங்கள் ஏலத்துக்கு விடப்பட்டன. எழுத்தர்களுக்கும் இதர அடிநிலை ஊழியர்களுக்கும் ஆண்டில் 10 அல்லது 11 மாதங்கள் ஊதியம் வழங்கப்பட்டது.

கிராம நிர்வாகம்

நிர்வாகத்தின் அடிப்படைப் பிரிவாகக் கிராமம் திகழ்ந்தது. அது தன்னிறைவும் சுயசார்பும் உடையதாக இருந்தது. பட்டேல் தலைமை கிராம அதிகாரியாக விளங்கினார். அவர் அரசின் வருவாயை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றிருந்தார். அவருக்கு அரசு ஊதியம் தரவில்லை. ஆனால் அவரது பதவி மரபுவழி சார்ந்ததாக இருந்தது. பட்டேலுக்கு உதவியாகக் குல்கர்னி அல்லது கணக்காளர் மற்றும் ஆவணக்காப்பாளர் இருந்தார். மதச்சடங்குகளை நடத்த வேண்டிய மரபுவழியாக வந்த கிராம சேவகர்களாக அவர்கள் விளங்கினார்கள். தச்சர், கொல்லர் மற்றும் இதரகிராமத் தொழில் சார்ந்தவர்கள் கட்டாய வேலையைச் (பேகர்) செய்தனர்.

நகர நிர்வாகம்

நகரங்களிலும் மாநகரங்களிலும் தலைமை அதிகாரி கொத்வால் என்று அழைக்கப்பட்டார். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது, சிவில் வழக்குகளைத் தீர்த்துவைப்பது, மாதாந்திரக் கணக்குகளை அரசுக்கு அனுப்புவது ஆகியன அவரது முக்கியப் பணிகளாக இருந்தன. நகரக் காவல்துறையின் தலைவராகவும் நீதிபதியாகவும் அவர் செயல்பட்டார்.

11th History Lesson 15 Tamil Medium.indd 256 07-02-2023 16:18:36

வருவாய் ஆதாரங்கள்

நில வருவாய்தான் முக்கிய வருவாயாக இருந்தது. சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர். நில வரியை வசூலிக்க குத்தகை நடைமுறையைப் பின்பற்றினார்கள். அரசுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற வகையில் நிலம் வழங்கப்பட்டிருந்தது. நிலத்தின் உற்பத்தித் திறன் சார்ந்து வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. காடுகளிலிருந்து வருவாய் கிடைத்தது. கட்டணத்தின் பேரில் மரங்களை வெட்டுவதற்கும், மேய்ச்சல் வெளிகளைப் பயன்படுத்தவும் உரிமங்கள் வழங்கப்பட்டன. புல், மூங்கில், எரிபொருள், தேன் போன்ற பொருட்களை விற்பதன் மூலமும் வருவாய் கிடைத்தது.

சரியான புள்ளி விவரங்கள் அடிப்படையில் கவனத்துடன் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. பயிர் வகைகள், நீர்ப்பாசன வசதிகள், நிலத்தின் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நிலம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது. கிராமத்தினர் பூர்வக்குடிகளாக இருந்தனர். அவர்களின் வசம் காடுகள் இருந்தன. அவர்களிடமிருந்து நிலத்தைப் பிரிப்பது முடியாத செயல். உயர் நிர்வாகத்திடம் அவர்களின் உரிமைகளை எடுத்துரைக்கப் பட்டேல் மூலமாக மட்டுமே முடிந்தது.

சௌத் மற்றும் சர்தேஷ்முகி ஆகியன இதர வருவாய் ஆதாரங்களாக விளங்கின. சௌத் என்பது கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்பட்டிருந்தது

- ஆட்சியாளருக்கு 25 சதவீதம்
- மராத்திய அதிகாரிகள் மற்றும் படைகளைப் பராமரிப்பதற்காக இராணுவத் தளபதிகளுக்கு 66 சதவீதம்
- பிறப்பில் பிராமணராகவும் தலைவராகவும் உள்ள பண்டிட் சச்சீவுக்கு 6 சதவீதம்
- வரி வசூல் செய்வோருக்கு 3 சதவீதம்

சுங்கம், கலால் வரி, வனப்பொருட்களின் விற்பனை, ஆகியன மூலமாகவும் வருவாய் கிடைத்தது. அரசுக்குக் காப்புரிமைத் தொகை செலுத்தி அதற்கான உரிமத்தைப் பெற்ற பிறகு பொற்கொல்லர் நாணயங்களை உருவாக்கித் தந்தார்கள். ஒரு குறிப்பிட்ட தரநிலையைப் பராமரித்தனர். தரநிலை பின்பற்றப்படுவதில் முறைகேடுகள் இருந்ததால் அனைத்துத் தனியார் நாணயத் தொழிற்சாலைகளும் 1760இல் மூடப்பட்டு ஒரே ஒரு மத்திய நாணயத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.

வேறு வரிகளும் வசூலிக்கப்பட்டன. 1. தேஷ்முக்கு, தேஷ்பாண்டே வைத்திருந்த நிலத்தின் மீதான வரி. 2. கிராம மகர்கள் வைத்திருந்த நிலத்தின் மீதான வரி. 3. கிணற்றுப் பாசன வசதி கொண்ட நிலத்தின் மீதான வரி. 4. பிராமணர்கள் மற்றும் கிராம அதிகாரிகள் தவிர்த்து மற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வீட்டு வரி. 5. எடைக் கற்கள் மற்றும் அளவைகளைச் சோதிப்பதற்கான வருடாந்திரக் கட்டணம். 6. விதவைகள் மறுமணத்துக்கான வரி. 7. செம்மறி ஆடு, எருமை மாடு மீதான வரி. 8. மேய்ச்சல் நில வரி. 9. நதிக் கரையோரங்களில் பூசணி விவசாயத்துக்கான வரி 10. வாரிசு உரிமை வரி, 11. குதிரைகளை விற்பதற்கான வரி மற்றும் பல. மராத்திய அரசு நிதிச்சிக்கலிலிருந்த போது அனைத்து நில உடைமையாளர்களுக்கும் வரி விதித்தது. வரி செலுத்துபவரின் ஒருவருட வருமானத்துக்குச் சமமான வரியாக குர்ஜா பட்டி அல்லது தஸ்தி பட்டி வசூலிக்கப்பட்டது. நீதி பரிபாலனமும் வருவாயை ஈட்டித்தந்தது. பணப் பத்திரங்களின் மீது 25 சதவிகித கட்டணம் வசூலிக்கப்பட்டது. தகாத உறவில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அல்லது சந்தேகத்துக்கு உட்பட்ட நபர்களிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பட்டது. சொந்தப் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான தீர்வையிலிருந்து பிராமணர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

காவல்துறை கட்டமைப்பு

'மகர்கள்' காவலர்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் குற்றங்கள் அதிகரித்தபோது ஆயுதங்களைப் பயன்படுத்தி குற்றங்களைக் கட்டுப்படுத்த காலாட்படையை அரசு அனுப்பியது. ஆயுதப்படைகளைப் பராமரிப்பதற்கான செலவுகளை மேற்கொள்வதற்காக குடியிருப்பு வாசிகளுக்குக் கூடுதலாக வீட்டு வரி விதிக்கப்பட்டது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்வதற்காகக் கூடுதலாகக் காவல்துறை அதிகாரிகளை இரண்டாம் பாஜி ராவ் நியமனம் செய்தார்.

நகரப் பகுதிகளில் கொத்வாலுக்கு நீதி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. விலைகளைக் கண்காணிப்பது, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, சிவில் வழக்குகளை விசாரிப்பது, அரசுக்குத் தொழிலாளர்களை வழங்குவது, காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது நகர்காவுக்கு தங்களது பணிகளை மேற்கொள்ள கட்டணங்களை விதிப்பது ஆகியன கொத்வாலின் கூடுதல் பணிகளாகும்.

11th History Lesson 15 Tamil Medium.indd 257 07-02-2023 16:18:36

நீதித்துறை

நீதித்துறை முறைப்படுத்தப்பட்டதாக இல்லை. முறைப்படுத்திய சட்டம் ஏதும் இல்லை. பின்பற்றப்பட வேண்டிய சட்ட வழிமுறைகளும் இல்லை. சமரசப் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை தரப்பட்டது. அது தவறினால் அந்த வழக்கு கிராமத்தின் பட்டேல் மற்றும் நகரங்களில் முன்னணி வர்த்தகர்கள் அடங்கிய பஞ்சாயத்தின் முடிவுக்கு விடப்பட்டது. பஞ்சாயத்து என்பது மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும். மறுவிசாரணையும் நடந்தது. மம்லத்தாரிடம் மேல்முறையீடுகள் செய்யப்பட்டன. கிரிமினல் வழக்குகளில் நீதித்துறை அதிகாரிகளின் படிநிலை இருந்தது.

ராஜா, சத்ரபதி தலைமைப் பொறுப்பிலும் அவருக்குக் கீழ் பேஷ்வா, துணை சுபாதார், பட்டேல், மம்லதார் ஆகியோர் இருந்தனர். சாட்டையால் அடிப்பது, துன்புறுத்துவது ஆகியவற்றைப் பயன்படுத்தி குற்றம் ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டது

இராணுவம்

பேஷ்வாக்களின் கீழ் மராத்திய இராணுவ அமைப்பு முகலாய இராணுவ அமைப்பை போன்று அமைக்கப்பட்டது. ஆட்சேர்ப்பு, ஊதியம் வழங்குவது, படைவீரர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவது, குதிரைப்படைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஆகியன முகலாய இராணுவ அமைப்பைப் போன்று இருந்தது. சிவாஜி பின்பற்றிய இராணுவ அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பேஷ்வாக்கள் பின்பற்றவில்லை.

மராத்திய பகுதிகளிலிருந்து சிவாஜி படைவீரர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் பேஷ்வாக்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனைத்து வகுப்புகளிலிருந்தும் (பழங்குடியினர் உட்பட) படைவீரர்களைச் சேர்த்தனர். அராபியர், அபிசீனியர், ரஜபுத்திரர், சீக்கியர் ஆகியோர் பேஷ்வாவின் இராணுவத்தில் இடம்பெற்றிருந்தனர். பேஷ்வாக்களின் இராணுவத்தில் பழமையான தலைவர்களின் படைவீரர்கள் இடம் பெற்றிருந்தனர். எதிரி தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் அந்தப் பகுதியிலேயே இருந்ததால் அதிக அளவில் உட்குழப்பங்கள் இருந்தன. இதனால் மராத்திய அரசின் மக்களிடையேயான இறையாண்மை பாதிக்கப்பட்டது.

குதிரைப்படை

மராத்திய இராணுவத்தின் முக்கிய பலமாகக் குதிரைப்படை இயல்பாகவே அமைந்தது. ஒவ்வொரு ஜாகீர்தாரும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைப்படை வீரர்களைப் பொதுச் சேர்க்கைக்குக் கொண்டு வரவேண்டும். அவர்கள் வைத்திருந்த குதிரைகளின் தரத்தை வைத்து மூன்று வகைகளாக அவர்கள் பிரிக்கப்பட்டனர்.

காலாட்படையும் ஆயுதப்படையும்

குதிரைப்படையில் சேவை புரிய மராத்தியர் அதிக ஆர்வம் காட்டினார்கள். எனவே, காலாட்படைக்கு நாட்டின் இதரப் பகுதிகளிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. மராத்திய வீரர்களுடன் ஒப்பிடுகையில் மராத்திய காலாட்படையிலிருந்த அராபியர், ரோகில்லாக்கள், சீக்கியர், சிந்திக்கள் ஆகியோருக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்டது. மராத்திய ஆயுதப்படையில் பெரிதும் போர்த்துகீசியரும் இந்தியக் கிறித்தவர்களும் இடம் பெற்றிருந்தனர். பிறகு ஆங்கிலேயர்களும் இடம்பெற்றனர்.

கடற்படை

மராத்தியத் துறைமுகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மராத்திய கடற்படை உருவாக்கப்பட்டது. கடற்கொள்ளையைக் கட்டுப்படுத்துவது, கப்பல் போக்குவரத்தில் சுங்க வரிகளை வசூலிப்பது ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன. பாலாஜி விஸ்வநாத் கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டினார். கப்பல் கட்டவும் சீர்செய்யவும் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

15.8 தமிழ்நாட்டில் மராத்தியரின் ஆட்சி

நிறுவப்படுவதற்கான சூழ்நிலைகள்

கிருஷ்ணதேவராயர் தனது ஆட்சிக்காலத்தில் (1509–1529) நயங்காரா அமைப்பை உருவாக்கினார். இதன்படி தமிழகம் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை என மூன்று மிகப்பெரிய நயங்காராக்களாக பிரிக்கப்பட்டது. இந்த புதிய முறைப்படி துணைத் தலைவர்கள் பாளையக்காரர்களாக நியமிக்கப்பட்டனர். பாளையங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன. சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது. பின்னர் இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது. மதுரை நாயக்கர் மற்றும் தஞ்சாவூர் நாயக்கரிடையே நிலவிய பகை கடைசியில் 1673இல் தஞ்சாவூரில் நாயக்க ஆட்சியை முடிவுறச் செய்தது. தஞ்சாவூரில் 1676இல் மராத்திய தளபதி வெங்கோஜி தன்னை அரசராக அறிவித்தார். இவ்வாறாக மராத்தியர் ஆட்சி தஞ்சாவூரில் துவங்கியது.

11th History Lesson 15 Tamil Medium.indd 258 07-02-2023 16:18:36

ராஜா தேசிங்கு: மராத்திய அரசர் ராஜாராம் முகலாயப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ராய்கரிலிருந்து தப்பியோடி செஞ்சியில் அடைக்கலம் புகுந்தார். படைத்தளபதி சுல்பிகர்கான் தலைமையிலும், பின்னர் தாவுத்கான் தலைமையிலும் அவரைத் தொடர்ந்து சென்ற முகலாயப் படைகள் செஞ்சியைக் கைப்பற்றின. செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் பன்டேலா ரஜபுத்திர தலைவர் சுவரூப் சிங் செஞ்சிக்கோட்டையின் (கோட்டை இராணுவத்தின் தலைவர்) கிலாதாராக 1700இல் பணியில் அமர்த்தப்பட்டார். அதன் பிறகு சுவரூப் சிங் செஞ்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். 1714இல் அவர் மறைந்த பிறகு அவரது மகன் தேஜ் சிங் (தேசிங்கு) செஞ்சியின் ஆளுநராக பொறுப்பேற்றார். முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்–உல்–லா கானின் கோபத்திற்கு ஆளானார். அதனைத் தொடர்ந்து நடந்த சண்டையில் 22 வயதே ஆன ராஜா தேசிங்கு கொல்லப்பட்டார். அவரது இள வயது மனைவி உடன்கட்டை ஏறினார். ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

செஞ்சிக்கோட்டை

கர்நாடகத்தின் மீது 1677இல் படையெடுத்த சிவாஜி வெங்கோஜியை அகற்றிவிட்டுத் தனது ஒன்றுவிட்ட சகோதரர் சந்தாஜியை அப்பதவியில் அமர்த்தினார். ஆனால் வெங்கோஜி மீண்டும் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் ஷாஜி தஞ்சாவூரை ஆண்டார். ஷாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது சகோதரர் முதலாம் சரபோஜி அடுத்த ஆட்சியாளராக அமர்ந்தார். 1712 முதல் 1728 வரை 16 ஆண்டுகளுக்கு அவர் ஆட்சியில் இருந்தார். அவருக்குப் பிறகு துக்கோஜி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். அவரைத் தொடர்ந்து 1739 முதல் 1763 வரை பிரதாப் சிங் ஆட்சி புரிந்தார். பின்னர் அவரது மகன் துல்ஜாஜி 1787இல் ஆட்சியில் அமர்ந்தார். அந்த ஆண்டில் பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறினார். துல்ஜாஜியின் சகோதரர் அமர் சிங் ஆட்சியை நிர்வகித்தார். இந்த வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர். அதன் அடிப்படையில் இரண்டாம் சரபோஜி தனது அரசு நிர்வாகத்தை ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்க நேரிட்டது. இரண்டாம் சரபோஜி தஞ்சாவூரை ஆண்ட மராத்தியரின் போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளராவார்.

இரண்டாம் சரபோஜி

இரண்டாம் சரபோஜி மன்னர் மிகச்சிறந்த ஆட்சியாளர். ஜெர்மானிய சமயப் பரப்பாளர் பிரீட்ரிக் ஸ்வார்ட்ஸிடம் கல்வி பயின்ற அவர் பல ஐரோப்பிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவரது நூலகத்தில் கல்விப் புலத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளுக்குமான புத்தகங்களும் இருந்தன. அவரது நவீனமயமாக்கும் இரு திட்டங்களுள் மராத்தி, சமஸ்கிருத மொழிகளுக்கான அச்சகம் ஏற்படுத்துதலும்; ஆங்கிலம், வட்டார மொழிகளில் கல்வியை இலவசமாக கற்றுக்கொடுக்க நவீன பொதுப்பள்ளிக்கூடங்கள் அமைத்தலும் அடங்கும். சரஸ்வதி மஹால் நூலகத்தின் விரிவாக்கத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

ஒரு அச்சகத்தை நிறுவுவது சரபோஜியின் நவீனத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. (இதுவே மராத்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கான முதலாவது அச்சகமாகும்). சரஸ்வதி மஹால் நூலகத்தை மேம்படுத்துவதும் அவரது திட்டங்களில்

சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது. மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள், 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு–மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து ஆகியன மோடி எழுத்துவடிவ ஆவணங்களாக அமைந்துள்ளன. மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.

சரஸ்வதி மஹால் நூலகம்

11th History Lesson 15 Tamil Medium.indd 259 07-02-2023 16:18:37

ஒன்றாக இருந்தது. அவரது அரசவை மூலம் நவீனப் பொதுப் பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவரது அதிநவீனத் திட்டமாக இருந்தது.

இரண்டாம் சரபோஜி

அவர் காலத்தில் வாழ்ந்த தரங்கம்பாடி சமய பரப்புக்குழுவைச் சேர்ந்த அறிஞர் சி.எஸ். ஜான் என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார். ஜான், கல்வித் துறையில் புதிய பரிசோதனைகளையும் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார். பாடத்திட்டம் மற்றும் கல்விப்பயிற்றும் முறைகளில் அவர் நவீன முறைகளையும் மாணவர்களுக்கு உறைவிடப்பள்ளி முறையை அறிமுகம் செய்தார். 1812இல் ஆங்கிலேய காலனி அரசுக்கு அவர் சமர்ப்பித்த முக்கியத் திட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் இந்திய மாணவர்களுக்கு இலவசப் பள்ளிகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிறித்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும்.

சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார். ஆனால் கம்பெனி அரசு 1841ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேவில்லை. இதற்கு மாறாக ஜெர்மானிய சமயப்பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.

இரண்டாம் சரபோஜி, சமயபரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார். உயர் கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப் பள்ளிகளை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு எனத் தஞ்சாவூர் மற்றும் இதர அண்டை இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நிறுவி நிர்வகித்தது மன்னர் சரபோஜியின் மிக முக்கியமான முன்முயற்சியாகும். அனைத்து நிலைகளிலான பள்ளிகள், நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத உயர் கல்விக்கான பாடசாலைகள் ஆகியன அவற்றில் அடங்கும். அரசவை மேன்மக்கள், வேத அறிஞர்கள், ஆதரவற்றோர், ஏழைகள் ஆக அனைவருக்கும் இந்தப் பள்ளிகள் சேவை புரிந்தன. புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும்.

1803ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும். அங்கு 1822 ஆம் ஆண்டில் இரண்டு வகுப்பறைகளில் காலையும் மாலையும் 15 ஆசிரியர்கள் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மொத்தம் 464 மாணவர்களுக்குக் கற்பித்தனர். மதப்பரப்பாளர்கள் கண்ணந்தன்குடியில் நடத்திய ஏழைக் கிறித்தவ மாணவர்களுக்கான பள்ளியையும் சரபோஜி ஆதரித்தார். அவரது வள்ளல் தன்மைக்குச் சான்றாக ஆதரவற்றோருக்கான பள்ளி விளங்கியது.

மனிதர்களுக்காகவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த 'தன்வந்தரி மஹால்' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார். நோயாளிகளின் ஆவணங்களைப் பராமரிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டது. நவீன மருத்துவர்கள், ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் ஆகியவற்றின் மருத்துவர்கள் மருத்துவச் சிகிச்சைக்கான மருந்துகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டனர். 18 தொகுதிகள் அடங்கிய ஆராய்ச்சி புத்தகத்தையும் சரபோஜி மன்னர் உருவாக்கினார். பிரத்யேகமான கை ஓவியங்கள் மூலமாக முக்கிய மூலிகைகள் பற்றியத் தகவல்களை சரபோஜி பட்டியலிட்டுப் பாதுகாத்தார்.

ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன. சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின. ஆசிரியர்கள் தாங்களாகவே இலவசமாக மூன்று பள்ளிகளை நடத்தினார்கள். மிக முக்கியமான புனிதத்தல வழித்தடங்களில் அமைந்திருந்த பதிமூன்று சத்திரங்கள் மூலமாக யாத்ரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவும் உறைவிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

11th History Lesson 15 Tamil Medium.indd 260 07-02-2023 16:18:37

நவீனக் கல்வி முறை தொடர்பான சரபோஜியின் புதிய முன்முயற்சிகள் தஞ்சாவூர் மேன்மக்களுக்கு அப்போதைய காலனி ஆதிக்கச் சமூக மற்றும் பொருளாதார முறைமைக்குள் நுழையவும் பயன்பெறவும் வழி செய்தன. அரசவை அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து அவர்கள் காலனி கால நவீனத்துவத்தின் முன்னணி முகவர்களாக மாறினார்கள். ஆங்கிலக் கல்வி கற்ற துபாஷிகள், எழுத்தர்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறித்தவ மொழிபெயர்ப்பாளர்கள் பல பொறுப்புக்களை ஏற்க முடிந்தது. சரபோஜி அரசவையின் இரண்டு பண்டிதர்கள் கிழக்கிந்தியக் கம்பெனி நடத்திய புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியில் மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுக் கலாச்சாரத்தின் தலைவர்களாகத் திகழ்ந்தார்கள். சரபோஜி, ஜான் ஆகியோரின் வாழ்வியல் திட்டங்கள் காலனியாதிக்கத் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் வரலாற்றில் தனிநபர்களும், டேனிய–தமிழ் மீன்பிடி கிராமங்களைப் போன்ற இடங்களும், மராத்திய–தமிழ் இளவரசர் ஆட்சிப்பகுதியும் வகித்த பாத்திரத்தை படம்பிடித்துக் காட்டுகின்றன.

பாரம்பரிய இந்தியக் கலைகளான நடனம் மற்றும் இசையை ஆதரிப்பதில் பெரும் கொடையாளராக சரபோஜி விளங்கினார். குமாரசம்பவ சம்பு, தேவேந்திர குறவஞ்சி, முத்ரராக்சஸ்யா ஆகிய புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார். கர்நாடக இசையில் மேற்கத்திய இசைக்கருவிகளான கிளாரினட், வயலின் ஆகிய கருவிகளை அவர் அறிமுகம் செய்தார். தஞ்சாவூர் ஓவியத்தைப் பிரபலப்படுத்தும் பணிகளை அவர் செய்தார். ஓவியம் வரைதல், தோட்டமிடுவது, நாணயங்களைச் சேகரிப்பது, தற்காப்புக் கலைகள், ரதப் போட்டிகள், வேட்டை, எருதுச் சண்டை ஆகியவற்றைப் பிரபலப்படுத்துவதில் சரபோஜி ஆர்வம் கொண்டிருந்தார். தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தமிழ்நாட்டின் முதலாவது வன உயிரியல் பூங்காவை அவர் அமைத்தார்.

1832இல் மார்ச் 7ஆம் தேதி ஏறக்குறைய 40 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு சரபோஜி மரணமடைந்தார். அவரது அரசு சார்ந்த அனைத்து பகுதிகளிலும் அவரது மறைவு குறித்து துக்கம் அனுசரிக்கப்பட்டது. அவரது இறுதி யாத்திரையில் 90 ஆயிரம் பேருக்கும் அதிகமாக கலந்துகொண்டனர். அவரது இறுதி ஊர்வலத்தில் சமயப்பரப்பாளரான அருட்தந்தை பிஷப் ஹீபர் இவ்வாறு கூறினார்,

"முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை."

பாடச் சுருக்கம்

- சிவாஜியின் எழுச்சி, இராணுவ வெற்றிகள், ஔரங்கசீப் உடனான மோதல் பற்றி விவாதிக்கப்பட்டது.
- சிவாஜியின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.
- சிவாஜியின் வழித்தோன்றல்கள் மற்றும் அவர்களின் சாதனைகள் அதற்காக பாலாஜி விஸ்வநாத், பாலாஜி பாஜிராவ் போன்ற பேஷ்வாக்களின் பங்களிப்பு ஆகியன விவாதிக்கப்படுகின்றன.
- மூன்றாம் பானிப்பட் போர் மராத்தியரிடமும் முகலாயரிடமும் ஏற்படுத்திய விளைவுகள் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.
- ஆங்கிலேயரின் துணைப்படைத் திட்டத்திற்கு மராத்தியர் காட்டிய எதிர்ப்பும் அதனால் ஏற்பட்ட மூன்று ஆங்கிலேய–மராத்தியப் போர்களும் விவரிக்கப்பட்டுள்ளன.
- தஞ்சாவூரின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மராத்திய ஆட்சியாளர் இரண்டாம் சரபோஜி ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. வலிமைமிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர் ____________.

(அ) மராத்தியர் (ஆ) முகலாயர்
(இ) ஆங்கிலேயர் (ஈ) நாயக்கர்

2. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் ____________க்கும் இடையே கையெழுத்தானது.

(அ) அஃப்சல்கான் (ஆ) செயிஷ்டகான்
(இ) ஜெய்சிங் (ஈ) ஔரங்கசீப்

3. சிவாஜியின் ஆலோசனை சபை ____________ என்று அழைக்கப்பட்டது.

(அ) அஷ்டபிரதானம் (ஆ) அஷ்டதிக்கஜங்கள்
(இ) நவரத்தினங்கள் (ஈ) பஞ்சபாண்டவர்கள்

11th History Lesson 15 Tamil Medium.indd 261 07-02-2023 16:18:37

4. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக ________ இருந்தார்.

(அ) நாயக் (ஆ) ஹவில்தார்

(இ) பர்கிர் (ஈ) ஷைலேதார்

5. மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்திய பேஷ்வா ________ ஆவார்.

(அ) முதலாம் பாஜி ராவ்

(ஆ) பாலாஜி விஷ்வநாத்

(இ) பாலாஜி பாஜி ராவ்

(ஈ) இரண்டாம் பாஜி ராவ்

6. ________ கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.

(அ) அஹமது ஷா அப்தலி

(ஆ) நாதிர் ஷா

(இ) ஷுஜா–உத்–தௌலா

(ஈ) நஜீப்–உத்–தௌலா

7. ________ உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ–மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

(அ) மதராஸ் உடன்படிக்கை

(ஆ) பூனா உடன்படிக்கை

(இ) சால்பை உடன்படிக்கை

(ஈ) பேசின் உடன்படிக்கை

8. இரண்டாவது ஆங்கிலோ–மராத்தியப் போரின்போது ஆங்கிலேய கவர்னர்–ஜெனரலாக இருந்தவர் ________.

(அ) காரன்வாலிஸ் பிரபு

(ஆ) வெல்லெஸ்லி பிரபு

(இ) ஹேஸ்டிங்க்ஸ் பிரபு

(ஈ) டல்ஹௌசி பிரபு

9. கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ________ ஏற்றிருந்தனர்.

(அ) தேஷ்முக்கு (ஆ) குல்கர்னி

(இ) கொத்வால் (ஈ) பட்டேல்

10. மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க ________ இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.

(அ) சரஸ்வதி மஹால் (ஆ) முக்தாம்பாள் சத்திரம்

(இ) நவ வித்யா (ஈ) தன்வந்திரி மஹால்

11. கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?

(அ) குமாரசம்பவ சம்பு

(ஆ) தேவேந்திர குறவஞ்சி

(இ) முத்ரராஷஸ்ஸாயா

(ஈ) குமாரசம்பவம்

12. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு

(அ) சிவாஜியை அடக்கும் முக்கிய நோக்கில் 1660ஆம் ஆண்டு அஃப்சல்கான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

(ஆ) சிவாஜியின் வழித்தோன்றல்களைப் பாதுகாப்பதில் செஞ்சி முன்னணியில் செயல்பட்டது.

(இ) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்திச் செய்பவர்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

(ஈ) சர்தேஷ்முகி என்பது சிவாஜி வசூலித்த 15 சதவிகித கூடுதல் வருவாயாகும்.

13. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு

(அ) ஆங்கிலேயர்கள் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமம் பெற்றனர்.

(ஆ) 1749இல் ஆற்காட்டு நவாப் தோஸ்து அலியை சாஹூ தோற்கடித்துக் கொன்றார்.

(இ) பேஷ்வாக்களின் கீழ் நீதிமுறை முழுமை பெற்றிருந்தது.

(ஈ) தஞ்சை மராத்திய அரசின் போன்ஸலே வம்சத்து கடைசி அரசர் வெங்கோஜி ஆவார்.

14. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சிவாஜியின் கீழிருந்த நீதி நிர்வாகம் பழமையான ஒன்றாகும்.

(ii) நிலையான நீதிமன்றங்களும் விதிமுறைகளும் இருந்தன.

(அ) (i) சரி (ஆ) (ii) சரி

(இ) (i) மற்றும் (ii) சரி (ஈ) (i) மற்றும் (ii) தவறு

15. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியின் பாதுகாப்பை வீழ்ந்துகொண்டிருந்த முகலாயப் பேரரசு நழுவவிட்டது.

11th History Lesson 15 Tamil Medium.indd 262 07-02-2023 16:18:37

(ii) இது நாதிர் ஷாவின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது

(அ) (i) சரி

(ஆ) (ii) சரி

(இ) (i) மற்றும் (ii) சரியானவை

(ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

16. **கூற்று:** மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.

காரணம் : இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்று சரி; காரணம் தவறு

(இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

(ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

17. **கூற்று:** காலாட்படை வீரர்கள் மஹாராஷ்டிராவிலிருந்து மட்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

காரணம் : மராத்தியர் குதிரைப்படையில் பணியாற்ற விரும்பினர்.

(அ) கூற்று தவறு; காரணம் சரி

(ஆ) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது

(இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

(ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானவை

18. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்படவில்லை

(அ) சிவாஜி	–	மலை எலி
(ஆ) முதலாம் பாஜி ராவ்	–	உத்கிர் போர்
(இ) தைமுர் ஷா	–	லாகூரின் வைஸ்ராய்
(ஈ) தேசிங்கு	–	செஞ்சி

19. பொருத்துக

(i) அமத்யா	–	1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள்
(ii) சுமந்த்	–	2. பொது ஒழுக்க நடைமுறைகள்
(iii) பண்டிட் ராவ்	–	3. போர் மற்றும் அமைதி
(iv) வாக்கிய நாவிஸ்	–	4. அரசின் அனைத்து பொது கணக்குகள்

(அ) 4, 1, 2, 3 (ஆ) 1, 2, 4, 3

(இ) 4, 3, 2, 1 (ஈ) 1, 4, 2, 3

20. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களைக் கால வரிசைப் படி எழுதவும்.

(அ) சாம்பாஜி, சாஹு, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி

(ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

(இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹு, இரண்டாம் சாம்பாஜி

(ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹு

II. குறுகிய விடை தருக

1. சிவாஜிக்கும் அஃப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற பூசலைப் பற்றி எழுதுக.
2. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?
3. தாராபாய் பற்றி சிறு குறிப்பு வரைக.
4. சிறு குறிப்பு வரைக.
   (அ) சௌத் (ஆ) சர்தேஷ்முகி
5. பேசின் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?
6. மராத்தியரின் இராணுவ வலிமைக்குக் கடைசி கட்டமாக இருந்தது எது?
7. ஆங்கிலேயருக்கும் பேஷ்வாவுக்கும் இடை யே 1817இல் கையெழுத்தான பூனா உடன்படிக்கை பற்றி எழுதுக.
8. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
9. இரண்டாம் சரபோஜி, சமய பரப்புகுழு மற்றும் காலனி ஆதிக்க அரசுக்கு எவ்வாறு முன்னோடியாகத் திகழ்ந்தார்?
10. கனோஜி ஆங்கிரே பற்றி நீ அறிந்தவற்றைப் பற்றி எழுதுக.

III. சுருக்கமான விடை தருக

1. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள்
2. சிவாஜியின் கீழ் இருந்த இராணுவ அமைப்பு
3. மூன்றாம் பானிப்பட் போரின் விளைவுகள்
4. 1775–1782இல் நடைபெற்ற போர்
5. மூன்றாவது மராத்தியப் போரின் விளைவுகள்
6. நயங்காரா முறை
7. ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள்
8. 'நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன்முயற்சியாகும்' – எவ்**வாறு?**

11th History Lesson 15 Tamil Medium.indd 263 07-02-2023 16:18:37

IV. விரிவான விடை தருக

1. சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழி வகுத்தது?
2. சிவாஜியின் நிலவருவாய் முறையினைப் பேஷ்வாவின் நிலவருவாய் முறையோடு ஒப்பிடுக.
3. முதலாம் பாஜிராவ் வாழ்க்கையையும் சாதனையையும் பற்றி விவாதிக்கவும்.
4. பேஷ்வாக்கள் ஆட்சியின் வருவாயினங்கள் பற்றி எழுதுக.
5. நவீனக் கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

செயல்பாடுகள்

1. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில், சிவாஜியின் கீழிருந்த மராத்திய சாம்ராஜ்யத்தைக் குறிக்கவும்.
2. சிவாஜியின் வாழ்க்கை பற்றி ஒரு குறிப்பு **வரைக.**

ஒப்படைப்பு

1. மராத்திய அரசர்களின் காலக்கோடு ஒன்று தயார் செய்க.
2. நாம் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிகளை வரிசைப்படுத்தவும்.
3. சரஸ்வதி மஹால் நூலகத்திற்குச் சென்று பார்த்தபின், அதனை உனக்கு அருகிலுள்ள நூலகத்துடன் ஒப்பிடுக.

மூலநூல்கள்

1. V.D. Mahajan, *India Since 1526*, S. Chand & Company, New Delhi, 1991
2. Burton Stein, *A History of India*, OUP, 1998.
3. Jadunath Sarkar, *Shivaji and His Times*, Longmans, London, 1920.
4. Indira Viswanathan, Peterson, *Serfoji II: Scholar King of Thanjavur*, Oxford University Press, 2010

இணையதள ஆதாரங்கள்

1. M.G. Ranade, *Rise of the Maratha Power*, archive.org/details/in.ernet
2. Britanica.com -online encyclopaedia

கலைச்சொற்கள்

தகர்க்க முடியாத	**impregnable**	indestructible
சூறையாடு	**ravage**	plunder
தீவிரமாகப் போரிடும் கொள்கை	**belligerent policy**	policy of intense war force
விட்டுக்கொடுக்காத	**relentless**	unyielding
திருச்சபை தலைவர்	**ecclesiastical head**	head of the Roman Catholic church
ஒப்புதல்	**endorsement**	approval
மீறு	**breach**	violate
ஒற்றுமை	**solidarity**	unity for causes
கற்பிக்கும் கலை	**pedagogy**	teaching method

11th History Lesson 15 Tamil Medium.indd 264 07-02-2023 16:18:37

அலகு 16

ஐரோப்பியரின் வருகை

கற்றல் நோக்கங்கள்

CP8YE

கீழ்கண்டவை பற்றி அறிதல்

I

- 1600 முதல் 1750 வரையிலான காலகட்டத்தில் இந்திய அரசுகள் மற்றும் சமுதாயத்துடனான ஐரோப்பியரின் தொடர்பு
- இந்தியாவில் அன்றைய நவீனகாலத்தில் வணிக நிறுவனங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த அமைப்புகள்
- இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் இந்தியத் துறைமுகங்களும் அவற்றின் முக்கியத்துவமும்
- ஐரோப்பிய வணிக நிறுவனங்களின் வருகையினால் இந்திய வணிகர்களிடமும் வணிகத்திலும் ஏற்பட்ட தாக்கங்கள்

II

- இந்தியாவுடனான வணிகத்தை வளர்ப்பதில் போர்த்துகீசியர்களின் பங்களிப்பு
- இந்தியாவில் போர்த்துகீசியர், டச்சுக்காரர் வருகையினால் ஏற்பட்ட தாக்கங்கள்
- பிரெஞ்சுக்காரருக்கும், டச்சுக்காரருக்குமான பகைமையும் போர்களும்
- டென்மார்க் காலனிப் பகுதிகளும் அவற்றின் முக்கியத்துவமும்
- கர்நாடகப் பகுதிகளில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட ஏகபோக வணிகத்திற்கான மோதல்கள்
- மூன்று கர்நாடகப் போர்களுக்குப் பிறகு மறுக்க முடியாத சக்தியாக இங்கிலாந்து எழுச்சி பெறுதல்

அறிமுகம்

1757 ஆம் ஆண்டு நடைபெற்ற பிளாசிப் போரில் வங்காள நாவாப்பை ஆங்கிலேயர் வெற்றிகொண்ட பிறகு அந்த ஆண்டை இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. ஆனால் ஐரோப்பியர் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்தியாவிற்கு வந்துவிட்டனர். அவர்களின் நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு, இலவங்கம், கிராம்பு முதலான நறுமணப் பொருட்களைக் கொள்முதல் செய்வதும் இந்தியப் பெருங்கடல் பகுதி வணிகத்தில் ஈடுபடுவதுமாகும்.

இந்தியாவில் முதலாவதாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட ஐரோப்பியர் போர்த்துகீசியரே. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவிற்கு நேரடிக் கடல்வழியைக் கண்டுபிடித்தவர் வாஸ்கோடகாமா ஆவார். பிறகு மேற்குக் கடற்கரைப் பகுதியில் போர்த்துகீசியர் கோவாவை 1510இல் கைப்பற்றினர். இதனால் இந்தியாவிலிருந்த போர்த்துகீசியருக்கும் கிழக்கே மலாக்கா, ஜாவா பகுதிகளுக்கும் கோவா அரசியல் தலைமையிடமானது. போர்த்துகீசியர் தங்களுடைய அரசியல் ஆக்கிரமிப்பு, வலுவான கப்பற்படை ஆகியவை மூலம் இந்தியப் பெருங்கடல் பகுதி வணிகத்தைத் தங்களின் முறையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். டையூ, டாமனிலிருந்த கோட்டைகள், கப்பற்படை வலிமை ஆகியவற்றின் துணைகொண்டு அரபிக்கடலின் கப்பல் போக்குவரத்தையும் அவர்களால் கட்டுப்படுத்த முடிந்தது. ஒரு நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பின்னர் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர் குறிப்பாக ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் தங்களின் நடவடிக்கைகளைப் போர்த்துகீசியரின் செயல்திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைத்துக் கொண்டனர். ஆகவே ஐரோப்பிய

11th History Lesson 16 Tamil Medium.indd 265 01-12-2022 20:03:24

வணிக நிறுவனங்களின் வருகையானது இந்திய அரசியல் அதிகார சக்திகளோடும், உள்ளூர் வணிகர்கள் மற்றும் சமூகத்தோடும் தொடர்ந்து கொண்டிருந்த தொடர்பின் உச்சமே 1757இல் வங்காளத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பாடம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி இந்திய அரசியல் வரலாற்றையும், 1600க்குப் பின்னர் அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கிறது. இரண்டாம் பகுதி ஐரோப்பிய வணிக நிறுவனங்களின் வருகையையும் அவை ஒவ்வொன்றும் இந்தியச் சமுதாயத்தில் ஏற்படுத்தியத் தாக்கத்தினையும் விவாதிக்கிறது.

I

16.1 அரசியல் நடவடிக்கைகள்

முகலாயப் பேரரசு, 1600 –1650

1600 முதல் 1650 வரையான காலப்பகுதியில் முகலாயப் பேரரசு அதன் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தது. ஆங்கிலக் கவிஞர்கள் இந்தியாவின் செல்வ வளங்கள் குறித்து எழுதியுள்ளனர். இதனால் முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும் பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பல பகுதிகளைச் சார்ந்த பயணிகள் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்தனர். அவர்களின் பயணக் குறிப்புகள் முகலாயப் பேரரசு மற்றும் அக்காலச் சமூகம் குறித்த விரிவான சமகால விவரங்களைத் தருகின்றன.

அக்பர் 1600களில் ராஜஸ்தானையும் குஜராத்தையும் கைப்பற்றி முகலாயப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தியதன் மூலம் தனது ஏகாதிபத்தியக் கனவுகளை நிறைவேற்றினார். 1573ஆம் ஆண்டு குஜராத்தையும் வென்றார். இதனால் மேற்காசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த, மதிப்பு மிக்க வளங்களைக் கொண்ட துறைமுகமான சூரத் முகலாயரின் செல்வாக்கிற்கு உள்ளானது. வணிகம் தவிர மெக்காவிற்குப் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் சூரத்திலிருந்தே புறப்பட்டுச் சென்றன. முகலாய அரசு சூரத் நகரத்திற்கு இரண்டு ஆளுநர்களை நியமித்திருந்தது. ஓர் ஆளுநர் நகரைப் பாதுகாப்பதற்காகத் தபதி நதியின் அருகே கட்டப்பட்டிருந்த, கண்காணிப்புக் கோபுரங்களுடன் கூடிய காவல் அரணில் பணியமர்த்தப்பட்டிருந்தார். மற்றொரு ஆளுநர் நகரம் தொடர்பான நிர்வாகத்திற்கும் சுங்க வரியை வசூலிப்பதற்கும்

சூரத்தில் ஆங்கிலேயரின் வர்த்தகக் கூடம்

பொறுப்பாவார். இந்த நிர்வாக ஏற்பாடே முகலாயப் பேரரசுக்குச் சூரத் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்த்தும்.

அக்பர் வங்காளத்தைக் கைப்பற்றி பீகாருக்கும் கிழக்கே தனது பேரரசை விரிவுப்படுத்த முயன்றார். எனினும் அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு வங்காளம் முகலாயப் பேரரசோடு ஒருங்கிணைக்கப்படாத பகுதியாகவே இருந்தது. பின்னர் பேரரசர் ஜஹாங்கீர் காலத்தில்தான் வங்காளம் முகலாயப் பேரரசின் மாகாணங்களில் (சுபா) ஒன்றாயிற்று. அக்பர் காலத்தில், தோடர்மாலின் வழிகாட்டலில் பேரரசின் வருவாய்த்துறை நிர்வாகம் முற்றிலும் சீரமைக்கப்பட்டதால் பேரரசு முழுவதும் ஒரே சீரான நிர்வாகமும் வரிவசூலும் நடைபெற்றது. அக்பர் தனது மறைவின்போது வலுவான, பொருளாதார வளம் மிகுந்த, நன்கு நிர்வகிக்கப்பட்ட பேரரசை விட்டுச் சென்றார்.

டச்சுக்காரரும், அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் 1600களின் தொடக்க ஆண்டுகளில் வணிக நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காகச் சூரத் வந்தனர். அவர்களுக்கு வணிகம் செய்வதற்கும், தங்களுடைய பண்டங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளக் கிட்டங்கிகளைக் கட்டிக்கொள்வதற்கும் முகலாய ஆளுநர் அனுமதியளித்தார். ஆனால் நகரின் எந்தப் பகுதியையும் தங்களின் சொந்தப்பகுதியாக உரிமை கொண்டாடும் வகையில் இடங்களைத் தர அவர் மறுத்துவிட்டார். இதனால் போர்த்துகீசியரை மாதிரியாகக் கொண்டு, வணிகத்தளம் அமைக்கும் தங்களுடைய ஆசை நிறைவேறாததால் டச்சுக்காரர் மனமுடைந்தனர்.

1668 இல் பம்பாய் தீவுகளைப் பெற்று, அங்கு தங்கள் தலைமையிடத்தை ஆங்கிலேயர் 1687இல் ஏற்படுத்தினர். அவர்களின் அடிப்படை நோக்கமானது தங்களது வணிக நடவடிக்கைகளுக்கு பம்பாயை மாற்று இடமாக உருவாக்குவதுதான். ஆனாலும் முகலாயரின் பாதுகாப்பிலிருந்த சூரத் வணிகர்களால் பெரிதும் விரும்பப்பட்ட வர்த்தக நடடிக்கைகளின் மையமாகத் தொடர்ந்தது.

11th History Lesson 16 Tamil Medium.indd 266 01-12-2022 20:03:25

விஜயநகருக்குப் பின் தென்னிந்தியா (1600–1650)

தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகப் பகுதிகளில் இக்காலகட்டத்தில் முகலாயப் பேரரசின் மையப்படுத்தப்பட்ட உறுதியான அரசியல் நிலைக்கு நேர் எதிரான சூழல் நிலவியது. அரசியல் ரீதியாக இப்பகுதிகள் பிளவுபட்டு ஓர் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருந்தன. விஜயநகர ஆட்சியின்போது தமிழகப் பகுதியில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய மூன்று நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன. இவை நிறுவப்பட்டதன் நோக்கமே மைய அரசுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் மனித ஆற்றலையும் (இராணுவ வீரர்களை) திரட்டிக் கொடுப்பதுதான். 1565இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய சுல்தானியக் கூட்டுப்படைகளால் விஜயநகர அரசு தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னர் ஆதிக்கம் செய்த மைய அரசு வலிமை குன்றியது. விஜயநகரப் பேரரசின் அதிகாரத்தைப் பெயரளவிற்கு அங்கீகரித்த இந்த நாயக்க அரசுகள் நடைமுறையில் சுயாட்சி பெற்றவைகளாகச் செயல்பட்டன. அளவில் பெரிதான இந்நாயக்க அரசுகளோடு பல்வேறு பகுதிகள் உள்ளூர் ஆட்சியர்கள் வசமும் இருந்தன. அவர்களில் முக்கியமானவர் இராமநாதபுரம் அரசின் சேதுபதி ஆவார். அவரும் தன்னைச் சுதந்திர அரசராக நிலைநிறுத்திக் கொள்ள விரும்பினார். இத்தகைய நிச்சயமற்ற அரசியல் சூழலால் 1590க்கும் 1649க்குமிடையே இப்பகுதிகள் பல இராணுவ மோதல்களைக் கண்டன. தங்கள் மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக செஞ்சி, மதுரை, தஞ்சாவூர் அரசுகளும் பல போர்களைச் செய்தன. விஜயநகரப் பேரரசருக்கு எதிராகக் கிளர்ச்சிகளும் நடைபெற்றன. நடைபெற்றுக்கொண்டிருந்த இம்மோதல்கள் தவிர 1646இல் சோழமண்டலப் பகுதிகளை ஊடுருவிய கோல்கொண்டாவின் படைகள் பழவேற்காட்டிற்கும் சாந்தோமுக்கும் இடைப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன.

இக்காலகட்டத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் சில இடங்களைத் தங்களுக்குச் சொந்தமானதாகப் பெற்று அவற்றின் மேல் தங்கள் உரிமையை நிறுவினர். நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தோனேசியத் தீவுகளுடனான வணிகத்திற்குத் தேவைப்படும் சில்லறைப் பொருட்களைக் கொள்முதல் செய்யத் தங்களுக்குச் சோழமண்டலக் கடற்கரையில் வணிகத்தளம் தேவை என்பதை டச்சுக்காரர் உணர்ந்தனர். செஞ்சி நாயக்கரிடமிருந்து பழவேற்காடு பகுதியைப் பெற்ற அவர்கள் அங்கே ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர். தமர்லா வேங்கடாத்திரி நாயக்கர் எனபவரிடமிருந்து நிலத்தைப் பெற்ற ஆங்கிலேயர் அங்கு 1639இல் புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டினர். இவ்வாறாக ஆங்கிலேய வணிகத் தளங்கள் சென்னையில் நிறுவப்பட்டு காலப்போக்கில் வளர்ந்து, மதராஸ் அதன் மாகாணத் தலைநகரமானது.

புனித ஜார்ஜ் கோட்டை

முகலாயப் பேரரசு 1650–1700

பேரரசர் ஔரங்கசீப் தெற்கே தக்காணப்பகுதி வரை தனது பேரரசை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன் செயல்பாடுகளைத் தொடங்கினார். 1680களில் அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய அரசுகள் கைப்பற்றப்பட்டன. இதனால் சென்னைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளும் முகலாயரின் மைய ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டன. அளவுக்கு அதிகமாகப் பெரிதாகிவிட்ட முகலாயப் பேரரசு விரைவில் தனது பலவீனங்களை வெளிக்காட்டத் தொடங்கியது. சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் ஒன்றுபட்டு அதிகாரத்திலும் இராணுவ பலத்திலும் வளர்ந்து, 1664இல் சூரத்தைத் தாக்கிய போது இப்பலவீனம் தெளிவாகத் தெரிந்தது. எனவே சூரத்தைச் சூறையாடுவது கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. ஆனால் 1670இல் மராத்தியரால் சூரத்தும் அதன் வணிகமும் சூறையாடப்பட்ட போது ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மீள்வதற்குப் பல ஆண்டுகள் ஆகின. தாங்கள் வெல்ல முடியாதவர்கள் என முகலாயர்கள் நினைத்ததற்கு இது பெரும் சவாலாக அமைந்ததோடு முகலாயப் பேரரசின் படிப்படியான சரிவுக்கு ஆரம்பமாகவும் அமைந்தது.

சூரத் தாக்குதலுக்குப் பின்னர், சிவாஜி தனது கவனத்தைத் தென்னிந்தியாவை நோக்கித் திருப்பி செஞ்சி, தஞ்சாவூர் நாயக்க அரசுகளைத் தோற்கடித்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் செஞ்சி முகலாயரால் கைப்பற்றப்பட்டாலும் தஞ்சாவூர் மராத்தியரால் ஆளப்படும் அரசாக நீடித்தது. மராத்திய அரசர்கள், தமிழரின் அறிவார்ந்த, கலாச்சாரப் பாரம்பரியங்களை உள்வாங்கி ஏற்கும் கொள்கையால் தமிழகப் பகுதியின் பண்பாட்டுத் தலைநகராகத் தஞ்சாவூரை மாற்றினர்.

11th History Lesson 16 Tamil Medium.indd 267 01-12-2022 20:03:25

முகலாயப் பேரரசும் வழித்தோன்றல்களும் 1700–1750

மாபெரும் முகலாய அரசர்களில் கடைசி அரசரான ஔரங்கசீப் 1707இல் இயற்கை எய்தினார். அவத், வங்காளம், ஐதராபாத், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து முகலாய அரசப்பிரதிநிதிகள் தங்களைச் சுதந்திரமான ஆட்சியாளர்களாக அறிவித்துக்கொண்டனர். ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் முகலாயப் பேரரசின் வலிமைகுன்றிய பாதுகாப்பற்ற நிலையை நன்கு அறிந்திருந்தனர்.

வங்காள, கர்நாடக நவாப்புகள் பெருமளவிலான பணத்தை ஆங்கிலேயரிடமிருந்து கடனாகப் பெற்றனர். அத்தொகையைத் திருப்பிச் செலுத்தும் ஒரு வழியாகத் தங்களின் பரந்த நிலப்பகுதிகளில் நிலவரியை வசூல் செய்து கொள்ளும் உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்கினர். வரி வசூலிப்பவர்களாக ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியதை இது குறிக்கிறது.

நாகப்பட்டினம் (1702)

டச்சுக்காரர் இதற்குள் பழவேற்காட்டிலிருந்து வெளியேறி தங்களின் தலைநகரை நாகப்பட்டினத்திற்கு மாற்றியிருந்தனர். இதே காலத்தில் சென்னை செழிப்பு மிக்க நகரமாக வளர்ச்சியடைந்திருந்தது. ஆங்கிலேயர் பல ஆண்டுகாலப் போராட்டங்களுக்குப் பின்னர் இப்பகுதியின் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாயிருந்தனர். சூரத் நகரின் உள்ளூர் வணிகர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி, தாங்கள் டச்சுக்காரரின் அல்லது ஆங்கிலேயரின் "பாதுகாப்பின் கீழ்" இருப்பதாக 1750இல் அறிவித்துக்கொண்டனர். எனவே உறுதியற்ற அரசியல் சூழலால் சூரத் அல்லலுற்றது. இதனால் பம்பாய் மாற்று வணிகத்தளமாக மாறி, சூரத்திலிருந்தும் குஜராத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வணிகர்களை ஈர்க்கத் தொடங்கியிருந்தது.

16.2 பொருளாதாரம்

வேளாண்மை

கிராமப்புற வாழ் மக்களில் பெரும்பாலோர் தங்கள் வாழ்க்கைக்கு வேளாண்மையைச் சார்ந்திருந்தனர். உணவுதானியப் பயிர்களுடன் கூடுதலாக கரும்பு, எண்ணெய்வித்துக்கள், பருத்தி, அவுரி உள்ளிட்ட வணிகப் பயிர்களும் பயிர் செய்யப்பட்டன. இந்தியாவிற்குள் உபரியான பகுதியிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளுக்கு உணவுதானியங்கள், நெய், சர்க்கரை முதலான உணவுப் பண்டங்களைக் கொண்டு சென்றதன் மூலம் விறுவிறுப்பாக வணிகம் நடந்தது. குறிப்பாக உணவுதானியங்கள் படகுகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. தமிழகம், உணவு தானியங்களை ஆந்திர பிரதேசத்திலிருந்தும் வங்காளத்திலிருந்தும் இறக்குமதி செய்தது. குஜராத் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மிளகு, இலவங்கம், இஞ்சி ஆகியவற்றுக்குப் பதிலாக உணவுதானியங்களை மலபார் பகுதிக்கு ஏற்றுமதி செய்தது. இலங்கையிலும் பட்டாவியாவிலும் (இந்தோனேசியா) இருந்த டச்சு குடியேற்றங்களுக்கும் உணவு தானியங்கள் அனுப்பப்பட்டன.

பருத்தி உற்பத்தி

இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான அடிப்படைத்தளத்தைப் பெற்றிருந்தது. குறிப்பாக நாட்டின் பல்வேறு மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியிழைத் துணிகளுக்காக அது புகழ் பெற்றிருந்தது. நெசவுத் தொழில் நாட்டின் இரண்டாவது முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. இதற்கு ஆதாரத் துணை நடவடிக்கைகளாக நூல் நூற்றலும் சாயத் தொழிலுமிருந்தன. கைவினைப் பொருளுற்பத்தி நகர்ப்புறம் கிராமப்புறம் ஆகிய இரண்டிலும் நடைபெற்றது. ஆடம்பரத் தொழில்கள் (எடுத்துக்காட்டாக உலோக வேலைகள்) நகரங்கள் சார்ந்தனவாக இருந்தன. நெசவுத் தொழில் பெரும்பாலும் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது. நமது நாட்டில் பருத்தி விளைந்தது அதற்கு சாதகமாக அமைந்தது. படிகாரம் போன்ற

கர்நாடகம் என்பது உண்மையில் கன்னடமொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதியைக் குறிப்பதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இது மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள இன்றைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, தெற்கு ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இப்பகுதிகளை ஆற்காட்டு நவாப் கட்டுப்படுத்தினார்.

11th History Lesson 16 Tamil Medium.indd 268 01-12-2022 20:03:25

வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தி நிரந்தர வண்ணங்களைத் தயாரித்துத் துணிகளுக்குச் சாயமேற்றுவதில் இந்தியக் கைவினைச் சமூகங்கள் சிறப்பான அறிவினையும் நிபுணத்துவத்தையும் பெற்றிருந்தன. சோழமண்டலப்பகுதி வண்ணம் பூசப்பட்ட 'கலம்காரி' எனப்படும் துணி வகைக்குப் பெயர் பெற்றதாகும். இவ்வகைத் துணியில் அலங்காரக் கோடுகளோ அல்லது வடிவங்களோ முதலில் வரையப்பட்டு பின்னர் சாயம் ஏற்றப்படும். இது பதினாறாம் நூற்றாண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தோனேசியத் தீவுகளில் வாழும் மக்கள் விரும்பி வாங்கும் நுகர்வுப் பொருளானது. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஏனைய உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் மிக முக்கியமானவை துணிகளேயாகும். பதினெட்டாம் நூற்றாண்டு வரை இந்நிலை தொடர்ந்தது.

சந்தைப்படுத்துதல்

வெளிச் சந்தைக்கான உற்பத்தியும் பரந்து விரிந்திருந்தது. இதனால் சொந்தத் தேவை என்ற எல்லையைத் தாண்டி பொருளுற்பத்தி வணிகமயமாயிருந்தது. இதற்குச் சந்தைப்படுத்தும் முகமை அமைப்புகள் தேவைப்பட்டன. இவை உற்பத்தியாளரிடமிருந்து வேறுபட்ட வணிக வர்க்கத்தினர் அடங்கிய அமைப்புகளாகும். இவ்வாறு வணிகர்கள் கிராமப்புறப் பகுதிகளில் பரவலாக இருந்த உற்பத்தியாளர்களை உள்நாட்டிற்குள் இருந்த நகரத் சந்தைகளோடும் நாட்டுக்கு வெளியேயிருந்த வெளிச் சந்தைகளோடும் இணைத்தனர். நாட்டிலிருந்த விரிவான ஒருங்கிணைந்த வணிக நடவடிக்கைகள் பல சுற்றுகளில் செயல்பட்டன. பொருள்கள் கிராமப்புறச் சந்தைகளிலிருந்து மண்டல அளவிலான சந்தைகளுக்கும், அடுத்து பெரிய நகர வணிக மையங்களுக்கும் சென்று இறுதியாகத் துறைமுகங்களைச் சென்றடைந்தன. அவையே நாட்டிற்கு வெளியேயுள்ள சந்தைகளுக்கான வாயில்களாகும்.

வணிகக் குழுக்கள்

பல்வேறு நிலைகளில் செயல்பட்ட பல்வகைப்பட்ட சந்தைகளைப் போலவே வணிகர்களும் ஒரே வகைப்பட்ட குழுவைச் சார்ந்தவர்கள் அல்ல. சிறிய இடங்களிலிருந்த சந்தைகளுக்குச் சேவை செய்ய வியாபாரிகளும் சில்லரை வர்த்தகர்களும் இருந்தனர். வணிக நடவடிக்கைகளை ஒரு பிரமிடாக நாம் கற்பனை செய்து கொண்டால் இவ்வணிகர்கள் பிரமிடின் அடித்தளப் பகுதியிலிருந்தனர். பிரமிடின் உச்சத்தில் பெரும் வர்த்தகர்கள் இருந்தனர். பெருமளவிலான மூலதனத்தைக் கையிருப்பாகக் கொண்ட இவர்களே கடல் வணிகத்தை முன்னின்று இயக்கியதோடு, துறைமுகங்களின் கடலோரப் பகுதியைச் சேர்ந்த உற்பத்தியாளர்களையும் கட்டுப்படுத்தினர். இவர்கள் தங்களின்கீழ் தரகர்களையும் துணைத்தரகர்களையும் பணியமர்த்தி உள்நாட்டு பகுதிகளிலோ துறைமுக நகரங்களின் உட்பகுதிகளிலோ உற்பத்தியாகும் பொருட்களைக் கொள்முதல் செய்தனர். இவர்களை வணிகர்களின் பிரமிடில் இடை அடுக்கைச் சார்ந்தவர்களாகக் கருதலாம்.

வங்கித்தொழிலும் வணிக முதலீட்டாளரின் எழுச்சியும்

பரந்துவிரிந்த இத்தகைய வணிகத்தை மேம்படுத்த வணிக நிறுவனங்களும் நன்கு வளர்ந்திருந்தன. பல்வகைப்பட்ட நாணயங்கள் புழக்கத்திலிருந்ததால், அவற்றின் தூய்மை நிலையைப் பரிசோதிக்கவும் அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிடவும் 'சராப்' (Shroffs) எனப்பட்ட பணம் மாற்றுவோரும் இருந்தனர். அவர்கள் உள்ளூர் வங்கியாளராகவும் செயல்பட்டனர். ஓரிடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் பணத்தை ரொக்கமாக அனுப்புவதற்குப் பதிலாக வணிகர்கள் பணமாற்று முறிகளை (Bills of Exchange) வழங்கினர். உண்டி என்றழைக்கப்பட்ட இவை பல்வேறு இடங்களில் 'சராப்'களால் குறிப்பிட்ட தள்ளுபடியோடு பணமாக மாற்றப்பட்டன.

நன்கு வளர்ந்த உள்கட்டுமானங்களோடும் அமைப்புகளோடும் இருந்த வணிகம், பணம் படைத்த வணிகர்களுக்கு மேலும் பெரும் செல்வத்தை ஈட்ட உதவியது. இவ்வகையான வணிக இளவரசர்களை அல்லது முதலாளிகளை நாம் இந்தியா முழுவதும் காணலாம். சூரத்திலிருந்த பனியாக்கள், பாரசீக வணிகர்கள், அகமதாபாத்தின் நகர்சேத்துகள், வங்காளத்து ஜெகத் சேத்துகள் மற்றும் சோழமண்டலப்பகுதியைச் சேர்ந்த நகரத்தார் ஆகியோரை எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமகால ஐரோப்பியப் பார்வையாளர்கள், வணிகத்தில் வரும் இலாபம் அனைத்தையும் பெருவணிகர்களான இவர்களே கைவசப்படுத்திக் கொண்டதால், அடிப்படையில் உற்பத்தி செய்பவர்களான விவசாயிகள், நெசவாளர்கள் போன்றோரின் வருமானமும் வாழ்க்கையும் இரங்கத்தக்க நிலையில் இருந்தது எனக் குறிப்பிடுகின்றனர்.

ஆங்கிலேயர் நடுநிலைமை தவறி சார்புத் தன்மையுடன் இவ்வாறு கூறியுள்ளனர் என்று நினைத்தாலும், பிறருடைய கருத்துக்களை எடுத்துக்கொள்ளாமல் முழுமையான அளவுகோல்களைக் கொண்டு கணித்தாலும்

11th History Lesson 16 Tamil Medium.indd 269 01-12-2022 20:03:25

அடிப்படைத் தொழிலாளர்களின் ஊதியமும் வாழ்க்கைத் தரமும் கீழ்நிலையிலிருந்தது என்பதே உண்மை. இதன் காரணமாகப் பஞ்சங்கள் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது இவர்கள் பாதுகாப்பற்றவர்களாகவே இருந்தனர். எடுத்துக்காட்டாக சென்னை மாகாணப் பகுதிகளில் 1678 முதல் 1750ஆம் ஆண்டுகளுக்கிடையே பத்துப் பஞ்சங்கள் ஏற்பட்டன. சில சமயங்களில் அவை பரந்து விரிந்தனவாகவும் பல ஆண்டுகளுக்கு நீடித்துமிருந்தன. இவை கிராமப்புற ஏழை மக்கள் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர்களைத் தள்ளியது. சோழமண்டலப் பகுதியிலிருந்து படாவியாவிற்கு அனுப்பப்பட்ட சரக்குகளோடு வழக்கமாக அனுப்பப்பட்ட ஆண், பெண் அடிமைகளின் பெயர்கள் டச்சு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடல் கடந்த வணிகம்

கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைகளின் கடல் கடந்த வணிகமானது இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் இணைக்கப்பட்டு உறுதியான நன்கு வடிவமைக்கப்பட்ட வணிக முறையாகப் பதினாறாம் நூற்றாண்டில் மாறியது. இந்தியப் பெருங்கடலில் சரக்குகளைச் சுமந்து செல்வது என்பது பல்வேறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வரையறை செய்யப்பட்ட நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது. சீனாவிலிருந்தும் ஏனைய தூரக்கிழக்கு நாடுகளிலிருந்தும் வந்த கப்பல்கள் மலாக்காவை வந்தடைந்து சரக்குகள் அங்கு இறக்கப்பட்டு மேற்கேயிருந்து வந்த பொருட்கள் அக்கப்பல்களில் ஏற்றப்பட்டன. ஏற்கனவே இறக்கப்பட்ட சரக்குகள் வேறு கப்பல்களில் ஏற்றப்பட்டு அவை மேற்குக் கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை அல்லது குஜராத்திலுள்ள சூரத் துறைமுகத்தை வந்தடையும். இப்படியான துறைமுகங்கள் இடைநிலைத் துறைமுகங்கள் (Entrepots) என்றழைக்கப்பட்டன. ஐரோப்பா, மேற்காசியாவிலிருந்து வந்த பொருட்கள், இத்துறைமுகங்களில் கிழக்கேயிருந்து வந்த பண்டங்கள் மற்றும் உள்ளூர் தயாரிப்புகளான நறுமணப் பொருட்கள், சாயம், துணி, உணவு தானியப் பொருட்களுக்காக மாற்றப்படும். பதினாறாம் நூற்றாண்டில் கள்ளிக்கோட்டை மதிப்பிழந்தது. மாறாக, பரந்துவிரிந்த பல்வகைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் கடலோரப் பகுதிகளைக் கொண்ட குஜராத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெற்றன. சோழமண்டலக் கடற்கரையின் துறைமுகங்களான மசூலிப்பட்டினம், பழவேற்காடு ஆகியவையும், அவற்றிற்கு தெற்கே உள்ள ஏனைய துறைமுகங்களும் பர்மா, மலாய் தீபகற்பகத்திலிருந்து வரும் கப்பல்களுக்கு இடைநிலைத் துறைமுகங்களாகச் சேவை செய்தன.

16.3 ஐரோப்பியர் வருகை

நன்கு நிறுவப்பட்ட முறைப்படுத்தப்பட்ட இவ்வணிகத்திற்கு வெளியே இருந்து வந்த முதல் அதிர்ச்சி என்பது போர்த்துகீசியரிலிருந்து தொடங்கிய ஐரோப்பியரின் வருகையே ஆகும். ஐரோப்பாவிற்குத் தேவையான நறுமணப் பொருட்களை நேரடியாகப் பெறுவது என்பதே ஐரோப்பியரின் முதன்மை நோக்கமாக இருந்தது. பண்டைய நாட்களில் நறுமணப் பொருட்கள் கடல் வழியாகப் பாரசீக வளைகுடாவிலுள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நிலவழிப் பாதை மூலம் மத்திய தரைக்கடல் பகுதியைச் சென்றடையும். இருவருக்கிடையில் எளிமையான நேரடியான வணிகத்திற்கு ஆசியச் சந்தைகளில் வாய்ப்பில்லை என்பதை ஐரோப்பியர் விரைவிலேயே புரிந்துகொண்டனர். ஏனெனில் உள்ளூர்ப் பொருளாதாரங்களில் ஐரோப்பியப் பொருட்களுக்கான (தங்கம், வெள்ளி தவிர) தேவை இல்லை. ஆனால் மற்றொருபுறம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சந்தைகளில் இந்தியத் துணிகளுக்கு இருந்த உலகளாவிய தேவையால் இந்தியத் துணிகள் செலாவணி ஊடகமாயிற்று. இந்தோனேசியத் தீவுகளில் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த வண்ணம்பூசப்பட்ட துணிகளுக்கான தேவை டச்சுக்காரரையும் ஆங்கிலேயரையும் கிழக்குக் கடற்கரையில் தங்கள் நிறுவனங்களை அமைத்துக் கொள்ளச் செய்தது. அங்கிருந்துகொண்டு துணிகளைக் கொள்முதல் செய்து அவற்றை இலாபகரமான நறுமணப் பொருட்களுக்காகப் பண்டமாற்று செய்து கொண்டனர்.

16.4 இந்திய வணிகர்களுடன் கூட்டமைப்பு

இந்தியாவில் மிகப்பெரும் வணிகர்களின் உதவியும் உறவும் இருந்தால்தான் தாங்கள் வெற்றிபெற இயலும் என்பதைத் தொடக்கத்திலிருந்தே ஐரோப்பியர் உணர்ந்தனர். இந்திய வணிகர்கள் ஐரோப்பியர்களிடம் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தக் கிடைத்த புதிய வணிக வாய்ப்பினைக் கண்டு அவர்களோடு இணைந்து செயல்பட்டனர். சூரத் நகரில் பிரச்சனைகள் ஏற்பட்டதால் தங்களுக்கு ஆதரவு தரும் முகலாய அரசாங்கத்தின் பாதுகாப்போடு வணிகர்கள் செயல்பட்டு வந்தனர். பழவேற்காடு, பின்னர் ஆங்கிலேயரின் கீழிருந்த சென்னை,

11th History Lesson 16 Tamil Medium.indd 270 01-12-2022 20:03:25

பிரெஞ்சுக்காரரின் கீழிருந்த புதுச்சேரி ஆகிய காலனியாதிக்க நிலப்பகுதிகளைத் தங்களுக்குப் பாதுகாப்பான இடங்களாக இந்திய வணிகர் கருதினர். தமிழகப் பகுதியில் தொடரும் அரசியல் குழப்பங்களிலிருந்து விலகி இவ்விடங்களிலிருந்து தங்கள் வணிகத்தைப் பாதுகாப்பாக செய்ய இயலும் என நினைத்தனர்.

ஐரோப்பியருடன் இந்திய வணிகர் மேற்கொண்ட வணிக நடவடிக்கைகள் 1700ஆம் ஆண்டு வரை பாதகமற்ற முறையிலிருந்தன. சூரத்தில் மராத்தியப் படையெடுப்புக் குறித்த அச்சத்தினாலும் தகுந்த பாதுகாப்பு வழங்க இயலாத முகலாய அரசின் இயலாமையினாலும் சூழ்நிலை மாறியது. சென்னையில் தங்களை வலுவாக நிலைநிறுத்திக் கொண்ட ஆங்கிலேயரால் ஐரோப்பாவிற்கானத் துணி ஏற்றுமதியை அதிகரிக்க, இந்திய வணிகர்களை ஏற்கவியலாத வணிக நிபந்தனைகளை ஏற்க வைக்க முடிந்தது. படிப்படியாக ஆங்கிலேய வணிகருக்கும் உள்ளூர் வணிகருக்கும் இடையிலான அதிகார உறவு மாறத் தொடங்கியது. முந்தைய நூற்றாண்டில் வணிகக் காட்சியில் கதாநாயகர்களாக இருந்த வர்த்தக இளவரசர்கள் முற்றிலும் காணாமல் போனதை நம்மால் பார்க்க முடிகிறது.

ஐரோப்பாவில் இந்தியத் துணிகளுக்கான தேவை அதிகரித்ததால், அது இந்தியப் பொருளாதாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் இத்தேவை அதிகரிப்பு உள்ளூர் பொருளாதாரத்திற்குப் பயனளிப்பதாக அமைந்தது. உற்பத்திக் காரணிகளும் (தொழிலாளர், கச்சாப் பொருள், மூலதனம்) நேர்மறையாக வினையாற்றின. இருந்தபோதிலும் ஐரோப்பாவின் தேவை தொடர்ந்து அதிகரித்தபோது அதிக உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்ட நெருக்கடி மிக விரைவாக உற்பத்தி ஆதாரங்களைப் பாதித்தது. தெற்கே அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்களும், கச்சாப் பொருட்களுக்கும் உணவு தானியங்களுக்கும் ஏற்பட்ட பற்றாக்குறையையும் நெசவாளர்கள் கூடுதலாக ஏற்க வேண்டிய சுமைகளாயின. இப்படி அதிகமான வணிக வாய்ப்புகள் குறுகிய காலத்திற்குப் பயனளித்ததாலும் நீண்டகால விளைவென்பது அவ்வாறே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

இந்த நூற்றைம்பது வருட காலத்தில் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் படிப்படியான மாற்றத்திற்கு உள்ளாயினர். வணிகராயிருந்த ஆங்கிலேயர் வணிகப் பேரரசை நிறுவியவர்களாக உருமாறி இறுதியில் நாட்டின் பெரும்பகுதி ஆட்சியாளராக மாறினர்.

II

16.5 ஐரோப்பியர் வருகையும் அதற்குப் பின்பும்

இந்தியாவில் போர்த்துகீசியர்

சாமுத்ரி ராஜா (சாமரின்)

தனது முதல் பயணத்தில் வாஸ்கோடகாமா மூன்று கப்பல்களில் 170 நபர்களோடு வந்தார். கள்ளிக்கோட்டை அரசர் சாமுத்ரியினுடைய (சாமரின்) நட்புணர்வு வாஸ்கோடகாமாவிற்கு மகிழ்ச்சியளித்தது. 1498 ஆகஸ்ட் 29ஆம் நாள் தன்னுடன் வந்தவர்களில் உயிரோடிருந்த ஐம்பத்தைந்து மாலுமிகளுடனும் மூன்றில் இரண்டு கப்பல்களில் இந்தியச் சரக்குகளுடனும் ஊர்திரும்பும் பயணத்தை மேற்கொண்டார். வாஸ்கோடகாமாவின் வெற்றி போர்த்துகலை 1200 மாலுமிகளை 13 கப்பல்களுடன் பெட்ரோ ஆல்வரிஸ் கேப்ரல் என்பவரின் தலைமையில் மீண்டும் அனுப்பி வைக்கச் செய்தது. 1502 அக்டோபர் 29 ஆம் நாள் 20 கப்பல்களுடன் வாஸ்கோடகாமா மீண்டும் கள்ளிக்கோட்டை வந்தார். அங்கிருந்து அதிக வசதிகளைக் கொண்ட கொச்சிக்குச் சென்றார். ஐரோப்பிய வணிகம் பெருக வேண்டுமெனில் வணிகத்தின் மீது அராபியர்கள் கொண்டிருந்த முற்றுரிமை உடைக்கப்பட வேண்டுமென்பதை அவர் உணர்ந்தார். கொச்சி மற்றும் கள்ளிக்கோட்டையின் இந்து மன்னர்களிடையே நிலவிய பகைமையை அவர் தனது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டார். இந்தியப் பெருங்கடல், செங்கடல் வணிகத்தில் அராபியர் கொண்டிருந்த முற்றுரிமையை ஒழித்தார். போர்த்துகல்லுக்குத் திரும்பும் முன்னர் கொச்சியில் ஒரு சரக்குக் கிடங்கையும் கண்ணூரில் ஒரு சிறைச்சாலையையும் நிறுவினார்.

IBY58

போர்த்துகீசிய வணிகம் ஒருங்கிணைக்கப்படல்

ஆண்டுதோறும் பயணம் மேற்கொள்வதை நிறுத்திய போர்த்துகீசியர், இந்தியாவில் ஒரு ஆளுநரை அமர்த்த முடிவு செய்தனர். முதல் ஆளுநரான பிரான்ஸிஸ்கோ–டி–அல்மெய்டா "நீலநீர்க் கொள்கை"யைக் கடைபிடித்தார். இக்கொள்கையின் மூலம் அவர் குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் கப்பல்களின்

11th History Lesson 16 Tamil Medium.indd 271 01-12-2022 20:03:25

எண்ணிக்கையை அதிகரித்து கப்பற்படையை வலுப்படுத்தினார். சாமுத்ரியினுடைய கப்பற்படையையும் எகிப்திய சுல்தானின் கப்பற்படையையும் மூழ்கடித்தார். கொச்சி அரசருடன் நட்பு பூண்டு அவர் கொச்சி, கண்ணூர், மலபார் கடற்கரையின் ஏனைய இடங்களிலும் கோட்டைகளைக் கட்டினார்.

அல்புகர்க்

அல்மெய்டாவிற்குப் பின்னர் அல்புகர்க் (1509–1515) பதவியேற்றார். இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் இவரே. பீஜப்பூரின் அரசர் யூசுப் அடில் கானைத் தோற்கடித்த இவர் 1510இல் கோவாவைக் கைப்பற்றினார். கோவாவை முக்கிய வணிக மையமாக வளர்த்தெடுத்தார். அனைத்து மதம் சார்ந்த மக்களையும் கோவாவில் குடியேற ஊக்கப்படுத்தினார். ஐரோப்பியர் இந்தியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, போர்த்துகீசியர் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் குடியேறுவதை ஆதரித்தார். இந்தியாவிற்கும்–சீனாவிற்கும், மெக்காவிற்கும்–கெய்ரோவிற்கும் இடைப்பட்ட வணிகத் தடங்களின் மீது மேலாதிக்கம் செலுத்திவந்த முஸ்லீம் வணிகர்களைத் தோற்கடித்த அவர் மலாக்காவை (மலேசியாவில் உள்ளது) கைப்பற்றியதால் பேரரசு விரிவடைந்தது. அராபியரைத் தாக்கி ஏடன் நகரைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்றார். 1515இல் 'ஆர்மசு' துறைமுகம் அவர் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது.

உங்களுக்குத் தெரியுமா? உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை வலிமைப்படுத்துவதில் மேலும் இரண்டு ஆளுநர்கள் முக்கியப் பங்காற்றினர். அவர்கள் நினோ டா குன்கா, ஆன்டானியோ டி நொரன்கா ஆகியோராவர். டா குன்கா 1534இல் பசீனையும் 1537இல் டையூவையும் கைப்பற்றினார். 1559இல் டாமன் துறைமுகம் இமாத்–உல்–முல்க் என்பவரிடமிருந்து பறிக்கப்பட்டது. இதே சமயத்தில் பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொழும்புவில் ஒரு கோட்டை கட்டியதைத் தொடர்ந்து இலங்கையின் மீதான போர்த்துகீசியரின் கட்டுப்பாடு அதிகமானது. டி நொரன்காவின் காலத்தில்தான் (1571) முகலாய அரசர் அக்பர் குஜராத்திலுள்ள காம்பேவுக்கு வந்தார். போர்த்துகீசியருக்கும் முகலாயருக்கும் இடையிலான தொடர்பு உருவானது.


ஐரோப்பிய வணிகர்களுடனான அக்பர் சந்திப்பு

ஸ்பெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் 1580இல் போர்த்துக்கல் நாட்டைக் கைப்பற்றி இணைத்துக் கொண்டார். போர்த்துகீசியரை முதலில் இலங்கையில் தோற்கடித்த டச்சுக்காரர் பின்னர் மலபார் கடற்கரையிலிருந்த அவர்களின் கோட்டையையும் கைப்பற்றினர். இதனால் போர்த்துகீசியர் இந்தியாவில் தங்கள் குடியேற்றங்களைப் பாதுகாப்பதைக் காட்டிலும் பிரேசிலின் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

போர்த்துகீசிய வருகையின் தாக்கம்

- இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர்.
- இந்திய அரசர்கள் எப்போதும் பிரிந்திருந்தனர். அதை ஐரோப்பியர் சாதகமாக்கிக் கொண்டனர்.
- போரிடுவதில் ஐரோப்பியர் புதிய முறைகளைக் கைக்கொண்டனர். வெடிமருந்தும், வலிமை வாய்ந்த பீரங்கிப்படையும் முக்கியப் பங்கு வகித்தன.
- போர்த்துகீசியரால் அராபியரின் வணிக முற்றுரிமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் உண்மையில் அது அவர்களுக்கு உதவவில்லை: மாறாக அது ஆங்கிலேயருக்குப் பயனளித்தது. ஆங்கிலேயர் கடற்கொள்ளையரை அழித்து கடற்பயணத்தைப் பாதுகாப்பானதாக ஆக்கினர்.
- தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையிலான திருமணங்களைப் போர்த்துகீசியர் ஊக்குவித்ததன் விளைவாக ஒரு புதிய யூரேசிய இனக்குழு உருவானது. இவர்கள் பின்னாளில் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த போர்த்துகீசியரின் காலனிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
- சென்னை சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான முக்கியச் சான்றாக உள்ளது. போர்த்துகீசியர் கருப்பர் நகரம்

11th History Lesson 16 Tamil Medium.indd 272 01-12-2022 20:03:26

(Black Town) என்று மயிலாப்பூரை அழைத்தனர் (ஆங்கிலேயர் கருப்பர் நகரம் என்று ஜார்ஜ் டவுனை அழைத்தனர்).

- போர்த்துகீசியரின் குடியேற்றங்களுக்குப் பிறகு இயேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள், 1. இராபர்டோ டி நொபிலி தமிழிலும் சமஸ்கிருதத்திலும் விரிவாக எழுதினார் இவர் தமிழ் உரைநடையின் தந்தையெனக் கருதப்படுகிறார். 2. ஹென்ரிக்ஸ், போர்த்துகல் நாட்டு யூதரான இவர் தமிழ் அச்சுப் பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

இராபர்டோ–டி–நொபிலி

சாந்தோம் தேவாலயம்

மீன்பிடிக்கும் உரிமை, படகோட்டும் உரிமை, முத்துக்குளித்தல் ஆகியவை தொடர்பாக போர்த்துகீசியருக்கும் கீழைக் கடற்கரையைச் சார்ந்த முஸ்லீம் குழுக்களுக்கும் இடையே 1530களில் மோதல்கள் நடந்தன. இதைப் பொறுத்தமட்டில், பரதவ மக்களின் ஒரு குழுவானது, ஆயுதம்பூண்ட முஸ்லீம் வணிகர்களின் தாக்குதல்களால் தாங்கள் பட்ட துயரங்களை கொச்சியிலிருந்த போர்த்துகீசிய அதிகாரிகளிடம் முறையிட்டு உதவி கேட்டனர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துகீசியர் தங்களது ரோமன் கத்தோலிக்க குருமார்களைக் கீழைக் கடற்கரைக்கு அனுப்ப, ஆயிரக்கணக்கான பரதவகுல மக்கள் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்திற்கு மதமாறினர். இதனைத் தொடர்ந்து இயேசு சபையை உருவாக்கியவர்களில் ஒருவரான புனித பிரான்ஸிஸ் சேவியர் 1542இல் கோவா வந்தார். பின்னர் மதம் மாறியவர்களுக்கு திருமுழுக்கு சடங்கு நடத்துவதற்காகத் தூத்துக்குடி, புன்னைக்காயல் வரை பயணம் செய்தார். சோழமண்டலக் கடற்கரைக் கிராமங்களில் உயர் கோபுரங்களோடு உருவான தேவாலயங்களை இன்றும் காணலாம்.

கார்டஸ் (cartaz) என்ற பெயரில் போர்த்துகீசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வன்முறை மூலம் வணிகத்திற்கு இடையூறு செய்யப்போவதாக பயமுறுத்துவர். கார்டஸ் முறையில் போர்த்துகீசியர் வணிகர்களிடமிருந்து பணம் பறித்தனர். கடற் கொள்ளையர்களுக்கு எதிராக தாங்கள் பாதுகாப்பு வழங்குவதாக கூறிக்கொண்டனர். ஆனால் அதைப் போன்ற இடையூறுகளில் பலவற்றை செய்தவர்களும் போர்த்துகீசிய கடற்கொள்ளையரே.

டச்சுக்காரர்

ஜேன் ஹீயுன் வான் லின்சோடென் என்னும் நெதர்லாந்தைச் சேர்ந்த லிஸ்பனில் வாழ்ந்து வந்த வணிகர் டச்சுக்காரரின் முதல் பயணத்தை தென்கிழக்கு ஆசியாவை நோக்கி 1595 ஆம் ஆண்டு மேற்கொண்டார். கீழ்த் திசை நாடுகளோடு வணிகம் செய்வதற்காகப் பல நிறுவனங்கள் வணிகர்களாலும் தனிநபர்களாலும் நிறுவப்பட்டிருந்தன. அரசு தலையிட்டு அவையனைத்தையும் ஒருங்கிணைத்து 1602இல் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கியது. புதிதாக உருவான இக்கம்பெனி இந்தோனேசியாவில் தனது ஆதிக்கத்தை நிறுவியது. டச்சுக்காரர் மலாக்காவை போர்த்துகீசிரியரிடமிருந்து 1641இல் கைப்பற்றினர். மேலும் 1658இல் இலங்கையைத்

1623இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள், போர்த்துகீசியர், ஜப்பானியர் அடங்கிய இருபது பேர்களை டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர்கள் இந்தோனேசியாவிலுள்ள அம்பாய்னா என்னும் தீவில் சித்திரவதை செய்து கொன்றனர். இது அம்பாய்னா படுகொலை என்றழைக்கப்படுகிறது.

அம்பாய்னாப் படுகொலை

தங்கள் வசம் ஒப்படைக்கப் போர்த்துகீசியரைக் கட்டாயப்படுத்தினர். நறுமணத் தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர். ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயரிடம் ஏற்பட்ட பின்னடைவுகளால் அவர்கள் துயருற்றனர்.

தமிழகத்தில் டச்சுக்காரர்

1502 முதல் பழவேற்காட்டைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துகீசியர் டச்சுக்காரரால் அகற்றப்பட்டனர். சென்னை நகருக்கு வடக்கே 60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பழவேற்காட்டில் டச்சுக்காரர் ஜெல்டிரியா என்னும் பாதுகாப்புக் கோட்டையைக் கட்டினர். 400 ஆண்டுகள் கடந்தும் அதன் எச்சங்களை இன்றும் காணலாம். இக்கோட்டை ஒரு காலத்தில் டச்சுக்காரரின் அதிகார பீடமாக இருந்தது. தங்கள் அதிகாரத்தை 1605இல் மசூலிப்பட்டினத்தில் நிறுவிய டச்சுக்காரர் பழவேற்காட்டில் சில குடியேற்றங்களை 1610இல் நிறுவினர். நாகப்பட்டினம், புன்னைக்காயல், பரங்கிப்பேட்டை, கடலூர் (திருப்பாதிரிப்புலியூர்), தேவனாம்பட்டினம் ஆகியவை டச்சுக்காரரின் ஏனைய கோட்டை மற்றும் காலனியாதிக்கப் பகுதிகளாகும்.

டச்சு கல்லறை, பழவேற்காடு

பழவேற்காடு, டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சோழமண்டலப்பகுதியின் தலைமையிடமாயிற்று. பழவேற்காட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு வைரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜாதிக்காய், ஜாதிபத்ரி, கிராம்பு ஆகியவையும் இங்கிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெடிமருந்து தொழிற்கூடம் ஒன்றை நிறுவினர். அடிமை வியாபாரத்தில் டச்சுக்காரர் ஈடுபட்டனர் என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. வங்காளத்திலிருந்தும், குடியேற்றப்பகுதிகளான தேங்காய்ப்பட்டினம், காரைக்கால் ஆகியவற்றிலிருந்தும் அடிமைகள் பழவேற்காட்டிற்குக் கொண்டுவரப்பட்டனர். அடிமைகளைப் பிடிப்பதற்காக டச்சுக்காரர் சென்னையில் தரகர்களை நியமித்தனர். இவர்கள் அனைவரும் சென்னையில் கப்பல்களில் ஏற்றப்பட்டனர். பஞ்சமும், வறட்சியும் போர்களும் அடிமை வணிகம் செழிக்க உதவின.

லெய்டன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளரான வில் ஓ டிஜிக் (Wil O Dijk) என்பார் ஒரு ஆய்வுக்கட்டுரையில், இங்கிருந்தும் வங்காள விரிகுடாப் பகுதிகளிலிருந்தும் டச்சுக் கப்பல்களில் ஏற்றி அனுப்பப்பட்ட அடிமைப் பயணிகளின் பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார். 1621 ஜுன் முதல் 1665 நவம்பர் வரை மொத்தம் 26,885 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடிமைகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 1379 நபர்கள் உயிரிழந்தனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகளால் உருவான பஞ்சம் போன்ற காரணங்களால் சோழமண்டலத்தில் அடிமை ஏற்றுமதி பெருகியது என அவ்வாய்வாளர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இதனைத் தொடர்ந்து பீஜப்பூர் சுல்தான் மேற்கொண்ட படையெடுப்பு தஞ்சாவூரின் வளமான வேளாண் நிலங்களைப் பாழ்படுத்தியதால் மேலும் பல மக்கள் அடிமைகளாயினர். இக்காலத்தில் (1646) ஏறத்தாழ 2118 அடிமைகள் பெரும்பாலும் அதிராமபட்டினம், தொண்டி, காயல்பட்டினம் போன்ற கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதிகளைச் சார்ந்தவராக இருந்தனர்.

பிரெஞ்சுக்காரர்

இந்தியாவுடன் வணிக உறவை மேற்கொள்ள பிரெஞ்சுக்காரர் 1527ஆம் ஆண்டிலேயே முயற்சி மேற்கொண்டனர். போர்த்துகீசியராலும் டச்சுக்காரராலும் தூண்டப்பட்ட பிரெஞ்சுக்காரர் 1664இல் உருவாக்கப்பட்ட பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி மூலம் தங்கள் வணிகச் செயல்பாடுகளைத் தொடங்கினர். ஏனைய ஐரோப்பிய நாடுகளின் வணிக நிறுவனங்கள் தனியார் வணிக நிறுவனங்களாக இருக்க, பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசர் பதினான்காம் லூயியின் திட்டமாக அமைந்தது. அவருடைய நிதியமைச்சரான கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்படுவதற்கு காரணமாக இருந்தார்.

பிரான்சின் முயற்சியானது அரசால் தொடங்கப்பட்ட முயற்சியாக இருந்ததால் பொதுமக்களின் ஆர்வத்தை அது ஈர்க்கத் தவறியது.

11th History Lesson 16 Tamil Medium.indd 274 01-12-2022 20:03:27

மேலும் வரிவிதிப்பதற்கான மற்றொரு வழியென்றே அதை மக்கள் கருதினர்.

மடகாஸ்கர் வழியாகப் புதுச்சேரி

1602இல் பிரெஞ்சு வணிகர்கள் ஆப்ரிக்காவிலுள்ள மடகாஸ்கரை அடைந்தனர். மடகாஸ்கரைத் தங்களின் காலனியாதிக்கப் பகுதியாக கொண்டிருந்தாலும், 1674இல் கடற்கரையோரமுள்ள ஒரு சிறு வணிகமுகாமைத் தவிர ஏனைய இடங்களைக் கைவிட நேர்ந்தது. இந்தியாவிலிருந்த பிரெஞ்சு முகவரான பெர்பர், செப்டம்பர் 4, 1666இல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பிடமிருந்து அனுமதி ஆணை பெற்று தங்களின் முதல் நிறுவனத்தை டிசம்பர் 1668இல் டச்சுக்காரரின் எதிர்ப்பையும் மீறி சூரத்தில் அமைத்தார். ஓராண்டிற்குள் மசூலிபட்டினத்தில் மற்றுமொரு நிறுவனமும் அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் நிறுவனம் (factory) என்பது அயல்நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடம் என்னும் பொருளைப் பெற்றது.

இந்தியாவில் காலூன்ற வலுவான இடம் தேவை என்பதை உணர்ந்த நிதியமைச்சர் கோல்பெர்ட், ஹேய் (ஜேக்கப் பிளான்குயிட் டி லா ஹேய், Jacob Blanquet de la Haye) என்பாரின் தலைமையில் கப்பற்படையொன்றை அனுப்பி வைத்தார். சாந்தோமிலிருந்தும் மயிலாப்பூரிலிருந்தும் டச்சுக்காரரை வெளியேற்றுவதில் பிரெஞ்சுக்காரர் 1672இல் வெற்றி பெற்றனர். டச்சுக்காரர்களுக்கு எதிராகப் பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியான உள்ளூர் ஆளுநர் செர்கான் லோடியின் உதவியை பிரெஞ்சுக்காரர் நாடினர். பீஜப்பூரின் எதிரியான கோல்கொண்டா சுல்தானோடு, டச்சுக்காரர் நட்பு கொண்டனர். பிரெஞ்சுக்காரர் குடியேறுவதற்குப் பொருத்தமான இடமென புதுச்சேரியை செர்கான் லோடி வழங்கினார். 1673இல் புதுச்சேரி ஒரு சிறிய மீனவக் கிராமமாக இருந்தது. மடகாஸ்கரில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சூரத் வந்த பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் புதுச்சேரியின் ஆளுநர் ஆனார். இந்தியாவில் பிரெஞ்சுக் குடியேற்றங்களின் அதிகார மையமாக அதை உருவாக்கினார்.

டச்சுக்காரருடன் போட்டியும் போர்களும்

புதுச்சேரியைத் தங்கள் குடியேற்றமாக்கும் முயற்சியில் பிரெஞ்சுக்காரர் மிகவும் சிரமப்பட்டனர். தங்களின் முக்கியப் போட்டியாளரான டச்சுக்காரர்களை முதலில் எதிர்கொள்ள

"நாங்கள் கடந்து சென்ற கிராமப்புறப்பகுதி (புதுச்சேரிக்கு வெளியேயுள்ள பகுதி) மிக நன்றாக விவசாயம் செய்யப்பட்டிருந்தது. மிக அழகாகவும் இருந்தது. அரிசி ஏராளமாகக் காணப்பட்டது. எங்கே நீர் இருந்ததோ அங்கே பருத்தி விளைவிக்கப்பட்டது." புதுச்சேரி நிலப்பரப்பை குறித்து பிரான்ஸிஸ் மார்ட்டின் தனது நாட்குறிப்பில் எழுதியது.

வேண்டியிருந்தது. பிரான்சும் ஹாலந்தும் 1672இலிருந்து தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தன. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்குப் போதுமான நிதி, ஆயுதம், வீரர்கள் இல்லை. ஏனெனில் அவை வங்காளத்திலிருந்த மற்றொரு பிரெஞ்சுக் குடியேற்றமான சந்தன்நகருக்கு (சந்திரநாகூர்) கொண்டு செல்லப்பட்டிருந்தன. ஆகவே 1693இல் புதுச்சேரியை டச்சுக்காரர் எளிதாகக் கைப்பற்ற முடிந்தது. புதுச்சேரி தொடர்ந்து ஆறு ஆண்டுகள் டச்சுக்காரரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. 1697இல் ரிஸ்விக் உடன்படிக்கையின்படி புதுச்சேரி மீண்டும் பிரெஞ்சுகாரருக்குத் தரப்பட்டது. இருந்தபோதிலும் 1699இல்தான் அது பிரெஞ்சுக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1706இல் பிரான்ஸிஸ் மார்ட்டின் இயற்கை எய்தும்வரை அதன் ஆளுநராக இருந்தார்.

பிரெஞ்சுக்காரர் மேற்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக 1725இல் மாகியையும் 1739இல் காரைக்காலையும் பெற்றனர். வங்காளப் பகுதியில் காசிம் பஜார், சந்தன்நகர், பாலசோர் ஆகிய இடங்களில் தங்களது குடியேற்றங்களை நிறுவி விரிவுபடுத்துவதில் பிரெஞ்சுக்காரர் வெற்றி பெற்றனர். பியரி பெனாய்ட் டூமாஸ் என்பவர் (1668–1745) புதுச்சேரியின் மற்றுமொரு சிறந்த ஆளுநர் ஆவார். இருந்தபோதிலும் தங்களைவிட மிகவும் வலிமை வாய்ந்த போட்டியாளரான ஆங்கிலேயரின் பயமுறுத்துதல்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. இறுதியில் தாங்கள் சேகரித்த செல்வம் அனைத்தையும் ஆங்கிலேயரிடம் இழந்தனர்.

பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை புதுச்சேரி, மாகி, காரைக்கால், சந்திரநாகூர் ஆகிய இடங்களில் இன்றும் கண்கூடாகக் காணலாம்.

டேனியர்

டென்மார்க் மற்றும் நார்வே (1813 வரை இரண்டும் இணைந்திருந்தது) இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குடியேற்றங்களைக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டில் தரங்கம்பாடி, மேற்கு வங்காளத்தில் செராம்பூர், நிக்கோபர் தீவுகள் ஆகியன டேனியர் வசம் இருந்த

11th History Lesson 16 Tamil Medium.indd 275 01-12-2022 20:03:27

பகுதிகளாகும். 1616 மார்ச் 17ஆம் நாள் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் ஒரு பட்டயத்தை வெளியிட்டதன் மூலம் டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கினார். டேனிய வணிகரிடையே இந்நிறுவனத்திற்கு பெரும் ஆதரவு ஏதுமில்லை. 1618இல் கடற்படைத் தலைவர் ஒவி ஜெடி இலங்கைக்கு முதல் கடற்பயணத்தை மேற்கொண்டார். டேனியரால் இலங்கையோடு வணிக ஒப்பந்தம் எதையும் மேற்கொள்ள இயலவில்லை. ஏமாற்றத்தோடு திரும்புகிற வழியில் காரைக்காலுக்கு அருகே அவர்களின் முக்கியக் கப்பல் போர்த்துகீசியரால் மூழ்கடிக்கப்பட்டது. சிக்கிக்கொண்ட பதிமூன்று மாலுமிகளும் அவர்களின் வணிக இயக்குநரான ராபர்ட் கிராப்பி என்பவரும் தஞ்சாவூர் நாயக்க அரசரிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். ராபர்ட் கிராப்பி தஞ்சாவூர் அரசரோடு பேச்சுவார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தத்தையும் செய்துகொண்டார். 1620 நவம்பர் 20 ஆம் நாள் கையெழுத்தான அவ்வொப்பந்தத்தின்படி டேனியர்கள் தரங்கம்பாடியையும் அதில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையையும் பெற்றனர்.

தரங்கம்பாடி கோட்டை

தரங்கம்பாடியிலுள்ள டேனியர் கோட்டை அடிக்கடி சாலைகளையும் வீடுகளையும் சேதப்படுத்திய பேரலைகளின் முன் பாதுகாப்பற்றதாக இருந்தது. முப்பதாண்டுப் போரில் பங்கேற்று பெருமளவில் பண இழப்பு அடைந்தபோதிலும் அவர்களால் மசூலிப்பட்டினத்தில் ஒரு கிடங்கை (factory) அமைக்க முடிந்தது. பாலசோரிலும், பிப்ளி (ஹூக்ளி ஆற்றின் அருகே) என்ற இடத்திலும் வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்நிறுவனத்தில் முதலீடு செய்திருந்த டென்மார்க் முதலீட்டாளர்கள் இந்நிறுவனத்தை கலைக்க வேண்டுமென்றனர். ஆனால் அரசர் நான்காம் கிறிஸ்டியன் அதை எதிர்த்தார். 1648இல் அவரின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மகன் பிரடெரிக் இந்நிறுவனத்தைக் கலைத்தார்.

இரண்டாவது டேனிய கிழக்கிந்தியக் கம்பெனி 1696இல் தொடங்கப்பட்டது. டென்மார்க்கிற்கும் தரங்கம்பாடிக்கும் இடையிலான வணிகம் மீண்டும் நடைபெறத் துவங்கியது. பல புதிய வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன. தஞ்சாவூர் நாயக்க அரசர் தரங்கம்பாடியைச் சுற்றியிருந்த மேலும் மூன்று கிராமங்களைப் பரிசாக அளித்தார். 1706 ஜுன் 9 ஆம் நாள் டென்மார்க்கிலிருந்து முதன்முதலாக இரண்டு லுத்தரன் சமயப்பரப்பாளர்கள் வந்தனர். டேனியர்கள் 1755இல் அந்தமானிலும் நிக்கோபாரிலும் குடியேறினர். ஆனால் மலேரியா காய்ச்சல் ஏற்படுத்திய அச்சத்தால் அவற்றை 1848இல் கைவிட்டனர். நெப்போலினியப் போர்களின் போது டேனியரின் பகுதிகளை ஆங்கிலேயர் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கினர். 1839இல் செராம்பூர் ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டது. தரங்கம்பாடி உள்ளிட்ட ஏனைய குடியேற்றங்கள் 1845இல் விற்கப்பட்டன.

டேனியரும் தமிழகமும்

பார்த்தலோமியஸ் சீகன் பால்கு

தரங்கம்பாடியில் டேனியர் கட்டிய கோட்டை இன்றும் சீர்கெடாமல் உள்ளது. டென்மார்க்கிலிருந்து இந்தியா வந்த முதலிரண்டு லுத்தரன் மதப் பரப்பாளர்களான பார்த்தலோமியஸ் சீகன்பால்கு, ஹென்ரிச் புலுட்சா ஆகிய இருவரும் 1706 செப்டம்பரில் தரங்கம்பாடி வந்தனர். அவர்கள் சமயப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். பத்து மாதங்களுக்குள் தங்களால் மதமாற்றம் செய்யப்பட்டோருக்குத் திருமுழுக்கு சடங்கு நடத்தி வைத்தனர். அவர்களின் பணிகளை உள்ளூர் டேனிய அதிகாரிகளும் இந்துக்களும் எதிர்த்தனர். உள்ளூர் மக்களை மதமாற்றம் செய்வதன் மூலம் சீகன்பால்கு கலகத்தைத் தூண்டுகிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். கோபன்ஹேகனைச் சேர்ந்த ஒரு மதப்பரப்பாளர் சங்கம் உள்ளூர் கிறித்தவத் திருச்சபையை ஊக்கப்படுத்த நினைத்தது. அதன்படி தனது மதப்பரப்பாளர்களை மதபோதனை மட்டும் செய்யுமாறும் ஏனையவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் எனவும் அறிவுறுத்தியது. இருந்தபோதிலும் சீகன்பால்கு மற்றவர்கள் நலனில் அக்கறைகொள்வது என்பது மதபோதனையின் உட்பொருளாக உள்ளது என வாதிட்டார்.

சீகன்பால்கு ஓர் அச்சுக்கூடத்தை நிறுவினார். தமிழ்மொழி, இந்திய மதங்கள், பண்பாடு குறித்த நூல்களை வெளியிட்டார். 1715இல் அவர் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அவரும் அவருடைய சகாக்களும் 1718இல் கட்டிய தேவாலயக் கட்டடமும் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. உள்ளூர் மத குருமார்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு இறையியல் பயிற்சிப் பள்ளியையும் நிறுவினார்.

11th History Lesson 16 Tamil Medium.indd 276 01-12-2022 20:03:28

1719 பிப்ரவரி 23 ஆம் நாள் அவர் இயற்கை எய்திய போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட, பழைய & புதிய ஏற்பாடு, தமிழில் சுருக்கமாக எழுதப்பட்ட பல ஏடுகள், இரண்டு தேவாலயங்கள், இறையியல் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றையும் புனித நீராட்டல் சடங்கை முடித்திருந்த 250 கிறித்தவர்களையும் விட்டுச் சென்றார்.

ஆங்கிலேயரின் வருகை

ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனம்

இலண்டன் நகரின் லேடன்ஹால் வீதியைச் சேர்ந்த ஒரு வணிகக்குழு, கீழை நாடுகளுடனான பெரும் இலாபத்தை ஈட்டித்தரும் நறுமணப் பொருட்கள் வியாபாரத்தில் தாங்களும் பங்கு பெற அரசியார் முதலாம் எலிசபெத்திடமிருந்து பட்டயம் (உரிமை ஆணை) ஒன்றைப் பெற்றனர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பணம் படைத்த வணிகரையும், மேட்டுக்குடி மக்களையும் பங்குதாரர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் ஒரு ஆளுநராலும் 24 இயக்குநர்களைக் கொண்ட குழுவாலும் மேலாண்மை செய்யப்பட்டது. 1611இல் அரசர் முதலாம் ஜேம்ஸ், வில்லியம் ஹாக்கின்ஸ் மூலம் இந்தியாவுடன் இயல்பாக வணிகம் செய்யும் அனுமதியை முகலாய அரசர் ஜஹாங்கீரிடம் பெற்றார். ஆங்கிலேயர் சூரத்தில் சில வணிக உரிமைகளைப் பெற்றனர். குஜராத்தின் முகலாய ஆளுநரான இளவரசர் குர்ரம் ஆங்கிலேயருக்கு வணிக உரிமைகளை வழங்கினார். ஆனால் இப்பகுதிகளில் போர்த்துகீசியர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததால் ஆங்கிலேயரால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை.

1639இல் சந்திரகிரியின் அரசர் சென்னையை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்து அதில் கோட்டைக் கட்டிக் கொள்ளும் அனுமதி வழங்கினார். கட்டப்பட்ட கோட்டை புனித ஜார்ஜ் கோட்டை எனப் பெயரிடப்பட்டது. இந்திய மண்ணில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழு முதன்முதலாகப் பெற்ற நிலப்பகுதி இதுவே. சென்னையில் கம்பெனியின் கட்டுப்பாட்டிலிருந்த

சந்திரகிரி கோட்டை

பகுதிகள் மீது 1645ஆம் ஆண்டு கோல்கொண்டா அரசர் படையெடுத்து பாழ்படுத்தினார். 1687இல் ஔரங்கசீப் கோல்கொண்டாவைக் கைப்பற்றிக் கம்பெனியின் பகுதிகளை முகலாய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். ஆனால் ஆங்கிலேயருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உரிமைகள் தொடர்ந்தன. குறுகிய காலத்திற்குள் மசூலிப்பட்டினத்திற்கு மாற்றாகக் கம்பெனியின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியின் தலைமையிடமாக சென்னை மாறியது. அரசர் இரண்டாம் சார்லஸ் திருமணத்தின்போது மணக்கொடையாகப் பெற்ற பம்பாய் தீவு 1668இல் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. 1683 ஆம் ஆண்டுப் பட்டயம் கம்பெனிக்குப் படைகளை உருவாக்கிக் கொள்ளவும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகியவற்றிலுள்ள நாடுகளுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்யவும் அமைதி உடன்படிக்கை மேற்கொள்ளவும் உரிமை வழங்கியது.

1652இல் சென்னை ஓர் மாகாணமாக்கப்பட்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் (1655) இம்மாகாண அந்தஸ்து நீக்கப்பட்டது. மீண்டும் 1684இல் சென்னை மாகாண அந்தஸ்தைப் பெற்றது. 1688இல் சென்னை ஒரு மேயரையும், பத்து உறுப்பினர்கள் (Aldermen) அடங்கிய ஆலோசனைக் குழுவையும் கொண்ட நகராட்சி அரசைப் பெற்றிருந்தது. 1693இல் சென்னையைச் சுற்றியுள்ள மூன்று கிராமங்களையும் 1702இல் மேலும் ஐந்து கிராமங்களையும் பெற்றது.

வங்காளம்

ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் வணிக உரிமைகளைப் பெறுவது நீண்டகாலப் போராட்டமாக அமைந்தது. முகலாய அரசர் ஷாஜகானின் இரண்டாவது மகனும் வங்காளத்தின் ஆளுநருமான ஷா சுஜாவிடமிருந்து கம்பெனி சில வணிக உரிமைகளைப் பெற்றிருந்தது. ஆனால் அவ்வுரிமைகள் முகலாய அரசால் முறையாக உறுதி செய்யப்படவில்லை. 1608இல் வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர் வணிக உரிமைகளைப் பெற்றனர். ஆனால் ஆங்கிலேயரின் வணிக உரிமைகளில் உள்ளூர் அதிகாரிகள் தலையிட்டதால் கம்பெனி முகலாய அரசின் பிரதிநிதியாக வங்காளத்தை நிர்வகிக்கும் ஆட்சியாளருக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்தது. 1690இல் அமைதி மீட்கப்பட்டதைத் தொடர்ந்து கம்பெனி சுதநுதி என்ற இடத்தில் தனது முதல் குடியேற்றத்தை நிறுவியது. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தாவாயிற்று. 1696இல் அங்கு கோட்டை கட்டப்பட்டது. 1698இல் சுதநுதி, காளிகட்டா, கோவிந்தப்பூர் ஆகிய கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையைக் கம்பெனி பெற்றது. இதற்குப் பதிலாக கம்பெனி ஆண்டுதோறும்

11th History Lesson 16 Tamil Medium.indd 277 01-12-2022 20:03:28

11th History Lesson 16 Tamil Medium.indd 278 01-12-2022 20:03:28

நாரிஸ் தூதுக்குழு

இங்கிலாந்து அரசர் மூன்றாம் வில்லியம் சர் வில்லியம் நாரிஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். அவர் 1698இல் ஔரங்கசீப்பை சந்தித்தார். ஆங்கிலேயக் குடியேற்றங்கள் மீது ஆங்கிலேயரின் முழுமையான கட்டுப்பாட்டைப் பெறுவதும், ஏற்கனவே பெறப்பட்ட சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்துவதும், வணிக உரிமைகளை மேலும் நீட்டிப்பதும் இச்சந்திப்பின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இவ்வேண்டுகோள் 1714–1717 ஆண்டுகளில் சுர்மன் என்பவரின் தலைமையின் கீழ்வந்த தூதுக்குழு முகலாயப் பேரரசர் பருக்சியாரைச் சந்தித்தபோதுதான் ஏற்கப்பட்டது. சுர்மன் வணிக உரிமைகள் தொடர்பான அரசரின் ஆணையை பருக்சியாரிடமிருந்து பெற்றார். இவ்வாணை குஜராத், ஹைதராபாத், வங்காளம் ஆகிய பகுதிகளின் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

ரூ. 1,200 செலுத்தியது. கல்கத்தாவில் கட்டப்பட்ட வில்லியம் கோட்டை 1770இல் மாகாணத்தின் தலைமையிடமாயிற்று.

கர்நாடகப் போர்கள்

ஆங்கிலேயர் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கு 1746–1763 காலப்பகுதியில் பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக மூன்று போர்களை நடத்தினர். வரலாற்று அறிஞர்கள் இப்போர்களை கர்நாடகப் போர்கள் எனக் குறிப்பிடுகின்றனர்.

முதல் கர்நாடகப் போர்: 1746–1748

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இந்தியாவிலும் எதிரொலித்தது. ஆஸ்திரிய அரசர் ஆறாம் சார்லஸ் 1740இல் காலமானார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகள் மரிய தெரேசா அரசபதவியை ஏற்றார். மரிய தெரேசாவின் உரிமையை ஏற்க மறுத்த பிரான்ஸ், ஜெர்மானிய மொழி பேசப்படும் பகுதிகளான பவேரியா, சாக்ஸனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளோடு மரிய தெரேசாவுக்கு எதிராகக் கைகோத்தது. பிரஷ்ய அரசர் இரண்டாம் பிரடெரிக் (பிரஷ்யாவின் மகாபிரடெரிக் என அறியப்பட்டவர்) இப்புதிய அரசியல் சூழலைத் தனக்கு சாதகமாக்கி பிரான்சின் உதவியுடன் ஆஸ்திரிய நாட்டின் ஒரு பகுதியான சைலீசியாவைக் கைப்பற்றினார். இப்பிரச்சனையில் இங்கிலாந்து பிரான்சிற்கு எதிராகவும் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாகவும் களம் கண்டது. ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட போர்களால் வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் இருந்த இருநாட்டுக் குடியேற்றங்களிலும் போர்கள் ஏற்பட்டன. போர் வெடித்தபோது புதுச்சேரியின் புதிய ஆளுநர் துய்ப்ளே, சென்னையின் ஆங்கிலேய ஆளுநர் மோர்சிடம் ஐரோப்பாவில் இருவரிடையே போர்மூண்டாலும் இங்கே நடுநிலைமை காக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் பார்னெட் என்பாரின் தலைமையிலான ஆங்கிலக் கப்பற்படை இந்தியப் பொருட்களை ஏற்றிச் சென்ற சில பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றியது. இந்நிகழ்வால் அதிர்ச்சிக்குள்ளான துய்ப்ளே கர்நாடக நவாப் அன்வாருதீனின் உதவியை நாடி ஆங்கிலேயரோடு போர் ஏற்படுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இதனால் சில காலம் அமைதி நிலவியது.

இதனிடையே துய்ப்ளே, பிரான்சின் தீவின் (Isle of France) ஆளுநராக இருந்த லா போர்டோனாய் என்பவரைத் தொடர்பு கொண்டார். அவர் தனது எட்டு போர்க் கப்பல்களுடன் இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைந்தார். ஆங்கிலக் கப்பற்படைக்குத் தலைமையேற்ற பைடன் தனது நான்கு கப்பல்களோடு பிரெஞ்சுக் கப்பல்களை இடைமறித்தார். 1746 ஜுலை 6 ஆம் நாள் நடைபெற்ற இப்போரில் தோல்வியடைந்த பைடன் இங்கிலாந்திலிருந்து வரவேண்டிய கப்பல்களை எதிர்பார்த்து கல்கத்தாவிலுள்ள ஹுக்ளிக்குப் பின்வாங்கினார்.

துய்ப்ளே

சென்னையின் வீழ்ச்சி

வெற்றிபெற்ற பிரெஞ்சுக் கப்பற்படை பாதுகாப்பற்றிருந்த சென்னையை 1746 செப்டம்பர் 15ஆம் நாள் கைப்பற்றியது. சென்னை ஆளுநர் மோர்ஸ் சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டார். ஆனால் அவர் ஆற்காடு நவாப் அன்வாருதீனின் உதவியை நாடினார். அரசியல் விவேகத்துடன் செயல்பட்ட துய்ப்ளே சென்னையைக் கைப்பற்றி நவாப்பிடமே ஒப்படைக்கப்போவதாகக் கூறி அவரை சமாதானம் செய்தார். 1746 செப்டம்பர் 21இல் ஆங்கிலேயர் சென்னையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் ஏற்கனவே வாக்குறுதியளித்தபடி சென்னையைத் தன்வசம் ஒப்படைக்கும்படி அன்வாருதீன் கேட்டபோது துய்ப்ளே தட்டிக்கழித்தார். உடனடியாக நவாப் 10,000 வீரர்களைக் கொண்ட ஒரு படையை தனது மகன் மாபுஸ்கானின் தலைமையில் அனுப்பி வைத்தார்.

11th History Lesson 16 Tamil Medium.indd 279 01-12-2022 20:03:29

ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்புகள்

ஆனந்தரங்க பிள்ளை (1709–1761) அக்காலத்தில் தலைசிறந்த வணிகராக விளங்கிய திருவேங்கடம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் பிரெஞ்சு ஆளுநர்களான டூமாஸ், துய்ப்ளே ஆகியோர் கொடுத்த ஆதரவால் புதுச்சேரியில் மாபெரும் வணிகரானார். துய்ப்ளே இவரை தலைமை துபாஷியாகவும் (துபாஷி – இரு மொழிகள் அறிந்தவர்) தலைமை வணிக முகவராகவும் (1746) அமர்த்தினார். இது அவரை புதுச்சேரியில் பெரும் அரசியல் செல்வாக்குள்ள நபராக மாற்றியது. ஆனால் அவருடைய உண்மையான புகழ், தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கிய அவருடைய நாட்குறிப்புகளைச் சார்ந்துள்ளது. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு, முக்கியமாக துய்ப்ளே ஆளுநராக இருந்த காலப்பகுதியின் வரலாற்றுக்கு மிகவும் மதிப்புமிக்க சான்றாதாரமாகும். மேலும் அது சமகால நிகழ்வுகள் குறித்த அவருடைய பார்வை மற்றும் கருத்துக்களின் பதிவுமாகும்.

சாந்தோம், அடையாறு போர்கள்

நவாப்பின் படைகள் புனித ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி வளைத்தன. ஆனால் பிரெஞ்சுப் படைகள் அவற்றை சாந்தோம் வரை பின்னுக்குத் தள்ளின. இதனிடையே பிரெஞ்சுப் படைகளுக்கு கூடுதல் படைகள் வந்து சேர்ந்தன. பிரெஞ்சுப் படைகளின் முன்னேற்றத்தை அடையாறு ஆற்றங்கரையில் தடுத்து நிறுத்த மாபுஸ்கான் முயற்சி மேற்கொண்டார். ஆனால் பிரெஞ்சுப்படைகள் சிரமப்பட்டு நீரைக் கடந்து நவாப்பின் படைகளைத் தீவிரமாகத் தாக்கின. நவாப்பின் படைகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானது.

இதன் பின்னர் துய்ப்ளே கடலூரிலிருந்த ஆங்கிலேயருக்குச் சொந்தமான புனித டேவிட் கோட்டையின் மீது கண் வைத்தார். ஆங்கிலேயர் நவாப்பின் உதவியோடு பிரெஞ்சுக்காரரிடம் தாங்கள் இழந்த பகுதிகளை மீட்கும் முயற்சியில் இறங்கினர். துய்ப்ளே மீண்டும் ஒரு அரசியல் விவேக விளையாட்டை விளையாடினார். அவர் நவாப்பிடம் ஒருவார காலத்திற்குப் புனித ஜார்ஜ் கோட்டையில் நவாப்பின் கொடியை பறக்கவிட்ட பின்னர் கோட்டையை ஆங்கிலேயர் வசம் ஒப்படைத்துவிடுவதாக உறுதிமொழி அளித்தார். மேலும் பிரெஞ்சுக்காரர் நவாபுக்கு ரூ.40,000 மதிப்புள்ள பரிசுகளை வழங்கி ஆங்கிலேயருக்கு வழங்க இருந்த உதவிகளை திரும்பப் பெறச் செய்தனர். இதனிடையே ஆங்கிலப்படைகள் கடற்படைத் தலைவர் பாஸ்கோவென் தலைமையில் புதுச்சேரியைக் கைப்பற்ற மேற்கொண்ட இரு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில் 1748இல் ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் ஐ லா சபேல் (Aix La Chapelle) உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கையின்படி இந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தங்கள் மோதல்களை முடித்துக்கொண்டனர். பிரெஞ்சுக்காரர் சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பித் தருவதென்றும் அதற்கு மாறாக வட அமெரிக்காவில் லூயிஸ்பர்க் என்ற இடத்தை பிரெஞ்சுக்காரருக்குக் கொடுப்பதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் கர்நாடகப் போர்: 1749–1754

ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே அமைதி நிலவியது. ஆனால் இந்தியாவில் இவ்விரு காலனி நாடுகளாலும் அமைதியாக இருக்க முடியவில்லை. சுதேச அரசர்களை ஒருவருக்கு எதிராக மற்றொருவரைத் தூண்டிவிட்டனர். ஆற்காடு, ஹைதராபாத் அரசுகளில் ஏற்பட்ட வாரிசுரிமை போர்களில் பங்கெடுப்பதன் மூலம் துய்ப்ளே பிரான்சின் செல்வாக்கை மேம்படுத்த விரும்பினர்.

ஹைதராபாத்தின் நிஜாம் ஆசப்ஜா 1748இல் மரணமடைந்தார். அவருடைய பேரன் முசாபர் ஜங் அடுத்த நிஜாமாக ஆவதற்கு உரிமை கொண்டாடியதை துய்ப்ளே ஆதரித்தார். ஆற்காட்டில் முகமது அலிக்கு எதிராக சந்தா சாகிப்பை ஆதரித்தார். பிரெஞ்சுக்காரர், நிஜாம், கர்நாடக நவாப் ஆகியோரிடையே ஒரு முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது.

பெரும் மதிப்பு வாய்ந்த சென்னையை இழந்த ஆங்கிலேயருக்குப் புனித டேவிட் கோட்டை மட்டுமே இருந்தது. பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை குறைப்பதற்காக ஆங்கிலேயர் ஹைதராபாத் அரியணைக்கு எதிர் போட்டியாளரான நாசிர் ஜங்கையும், கர்நாடகத்தில் 1749இல் நடைபெற்ற ஆம்பூர் போரில் நவாப் அன்வாருதீன் கொல்லப்பட்ட பின்னர் அவ்வரியணைக்கு முகமது அலியையும் ஆதரித்தனர்.



ஆற்காடு நவாப் முகமது அலி

11th History Lesson 16 Tamil Medium.indd 280 01-12-2022 20:03:29

ஆம்பூர் போர் (1749)

ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முசாபர் ஜங், கர்நாடக அரியணைக்கு உரிமைகோரிய சந்தா சாகிப் ஆகிய இருவரும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிரெஞ்சுக் காலாட்படைகளின் உதவியோடு அன்வாருதீன் படைகளைத் தாக்கி பெருமளவு சேதத்தை ஏற்படுத்தினர். போரில் அன்வாருதீன் கொல்லப்பட்டார். சந்தா சாகிப் நவாபாக ஆற்காட்டினுள் நுழைந்தார். இதே சமயத்தில் அன்வாருதீனின் மகனான முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றார்.

ஆம்பூர் போரைத் தொடர்ந்து வெற்றி பெற்ற படைகள் தக்காணத்தில் நுழைந்தன. பிரெஞ்சுப்படைகளால் நாசிர் ஜங் கொல்லப்பட்டார். முசாபர் ஜங் 1750 டிசம்பரில் ஹைதராபாத்தின் நிஜாமாக ஆக்கப்பட்டார். பேரரசை நிறுவ வேண்டுமென்ற துய்ப்ளேயின் கனவு நனவாகலாம் என்ற நிலை சில காலமிருந்தது. நிஜாமிடமிருந்தும் ஆற்காடு நவாப்பிடமிருந்தும் துய்ப்ளே பெருமளவு பணத்தையும் நிலங்களையும் பெற்றார். முசாபர் ஜங் பிரெஞ்சுக்காரரின் பாதுகாப்பைக் கோரியபோது துய்ப்ளே பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி அவருடன் அதிக எண்ணிக்கையில் பிரெஞ்சு வீரர்களையும் அனுப்பி வைத்தார். ஆனால் முசாபர் ஜங் நீண்ட நாட்கள் உயிரோடில்லை. நாசிர் ஜங்கை யார் கொன்றார்களோ அவர்களே முசாபர் ஜங்கையும் கொன்றனர். உடனடியாக புஸ்ஸி நாசிர் ஜங்கின் சகோதரனான சலபத் ஜங் என்பாரை அரியணை ஏற்றினார். சந்தா சாகிப் ஆங்கிலேயரின் செல்வாக்கை குறைக்க வேண்டும் என்பதற்காகவும் முகமது அலியைக் கைது செய்யவும் (அன்வாருதீன் கொல்லப்பட்ட பின்னர் திருச்சிக்கு தப்பியோடியவர்) நிஜாம் மற்றும் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் திருச்சியைக் கைப்பற்ற முடிவு செய்தார்.

கிளைவும் இரண்டாவது கர்நாடகப் போரும்

சந்தா சாகிப்பின் உதவியோடு திருச்சியைக் கைப்பற்ற வேண்டுமென துய்ப்ளேயும் உறுதி பூண்டிருந்தார். சந்தா சாகிப்பின் படையோடு பிரெஞ்சுப் படையினர் 900 பேர் சேர்ந்தனர். முகமது அலி 5000 படைவீரர்களையும் தனக்கு உதவியாக 600க்கும் மிகாத ஆங்கில வீரர்களை மட்டும் கொண்டிருந்தார். ராபர்ட் கிளைவின் எண்ணம் வரலாற்றின் போக்கை மாற்றியமைத்தது. பிரெஞ்சுக்காரரும் நவாப்பும் திருச்சி முற்றுகையில் தீவிரமாக இருக்கையில் ஆற்காட்டின் மீது திடீர் தாக்குதலைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை ராபர்ட் கிளைவ் முன்வைத்தார்.

கிளைவ் 1752 ஆகஸ்ட் 26இல் புனித டேவிட் கோட்டையிலிருந்து 200 ஆங்கிலயே, 300 இந்திய வீரர்களுடன் புறப்பட்டார். எதிர்பார்த்தபடி சிறிய பகுதிகளைச் சேர்ந்த பல அரசர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றனர். மைசூர் மற்றும் தஞ்சாவூர் அரசர்கள் முகமது அலியை ஆதரித்தனர். சந்தா சாகிப் உடனடியாக 3000 வீரர்களைத் தனது மகன் ராஜா சாகிப்பின் தலைமையில் ஆற்காட்டுக்கு அனுப்பி வைத்தார். 1752 ஆகஸ்ட் 31இல் ஆற்காட்டைக் கைப்பற்றிய கிளைவ் ராஜாசாகிப்பின் 53 நாள் கோட்டை முற்றுகையையும் தாக்குப்பிடித்தார். ராஜாசாகிப்பிற்குப் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர் உதவினர். ஆரணி போரில் ஆங்கிலேயரும் மராத்திய அரசர் முராரிராவும் தங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான பிரெஞ்சு மற்றும் ஆற்காட்டுப் படைகளை எதிர் கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற பல போர்களில்,

ராபர்ட் கிளைவ்

ராபர்ட் கிளைவ் 1725 செப்டம்பர் 29இல் பிறந்தார். அவருக்குக் கல்வியில் ஆர்வமில்லை.படிப்பில் ஆர்வமின்மை, ஒழுக்கமின்மையால் மூன்று பள்ளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். மேலும் சண்டைக்காரன் என்ற அவப்பெயரையும் பெற்றார். அவருடைய நடத்தையால் வெறுப்புக் கொண்ட அவரின் தந்தை அவரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தர் பணியில் அமர்த்தி இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். கிளைவ் சென்னை மாகாண ஆளுநராக உருவானார். முதல்முறை ஆளுநராக இருந்தபோது (1755–60) பிளாசிப் போரில் வெற்றிபெற்று அதன்மூலம் இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசிற்கு அடித்தளமிட்டார். இரண்டாவது முறை 1764–1767 ஆளுநராக இருந்தபோது பக்சார் போரில் வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமைகொள்ளச் செய்தார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் போது மிகப் பெரிய செல்வந்தராக வெளியேறினார். அவரின் தனிப்பட்ட சொத்தாக 2,34,000 பவுண்டுகள் இருந்தது. அது தவிர வங்காளத்திலுள்ள அவரது ஜாகிர் மூலம் 27,000 பவுண்டுகள் வருடாந்திர வாடகை வருவாயைப் பெற்றார். அவர் இங்கிலாந்து திரும்பியபோது தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்துப் பாராளுமன்ற விசாரணையை எதிர் கொண்டார். கிளைவ் தன் மீதான குற்றசாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டபோதிலும் தற்கொலை செய்து கொண்டார்.

11th History Lesson 16 Tamil Medium.indd 281 01-12-2022 20:03:29

குறிப்பாக காவேரிப்பாக்கத்தில் நடைபெற்ற போரில் சந்தா சாகிப் பிடிபட்டு கொல்லப்பட்டார். முகமது அலி எதிர்ப்பேதுமில்லாமல் கர்நாடகத்தின் அரசரானார்.

ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் எப்போரிலும் ஈடுபடாத நிலையில் இந்தியாவில் தங்கள் காலனிகள் போரில் ஈடுபடுவதைக் கண்டனம் செய்தனர். பிரெஞ்சு அரசாங்கம் துய்ப்ளேயை திரும்ப அழைத்துக் கொண்டது. 1755இல் ஆங்கிலேயருடன் புதுச்சேரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. இந்திய சுதேச அரசுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளில் தலையிடுவதில்லை என இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன. இவ்வுடன்படிக்கை, இந்தியாவில் இவ்விருவரும் சொந்தமாகக் கொண்டிருந்த பகுதிகளைத் தெளிவாக வரையறுத்தது. இந்நிலை சுமார் இருநூறு ஆண்டு காலம் இந்தியா விடுதலை பெறும் வரை நடைமுறையிலிருந்தது.

மூன்றாம் கர்நாடகப் போர்: 1756–1763

ஐரோப்பாவில் 1756இல் தொடங்கிய ஏழாண்டுப் போரின் (1756–1763) விளைவே மூன்றாம் கர்நாடகப் போராகும். உலகளாவிய இம்மோதலில் முக்கிய எதிரிகளான இங்கிலாந்தும் பிரான்சும் போரிட்டன. இப்போர் வட அமெரிக்காவிலும் (அமெரிக்க விடுதலைப் போராக முடிந்தது) மேற்கு ஆப்பிரிக்காவிலும் (பின்னர் பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா என்றானது) நடைபெற்றது. இந்தியாவில் இது மூன்றாவது கர்நாடகப் போராக வெளிப்பட்டது.

நம்முடைய கவனத்தை மூன்றாவது கர்நாடகப் போரில் திருப்பும் முன்னர், இதே நேரத்தில் வங்காளத்தில் என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம்.

பிளாசிப் போர் (1757)

வங்காளத்தில் உள்நாட்டு வணிகத்தில் பங்கேற்பதற்காக வங்காள நவாப்புக்கு செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தாமல், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் வணிகக் குழு, முகலாய அரசு வழங்கிய வணிக உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தியது. இதைத் தவிர வங்காள நவாப் சிராஜ் உத் தௌலாவுடன் பகை கொண்டிருந்த அவருடைய சகோதரியின் மகனுக்கு வணிகக்குழு அடைக்கலம் வழங்கியது. அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு நவாப் கேட்டபோது வணிகக்குழு மறுத்துவிட்டது. இதனால் நவாப் வில்லியம் கோட்டையைக் கைப்பற்றி ஆங்கிலேயரைச் சிறையில் அடைத்தார். வில்லியம் கோட்டையைச் சேர்ந்த ஆங்கில அதிகாரிகளின் இடர்பாடுகளைக் களைவதற்காக வணிகக்குழு புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஒரு வலுவான படைப்பிரிவை ராபர்ட் கிளைவ், வாட்சன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்றப் போரே வரலாற்று அறிஞர்களால் பிளாசிப் போர் என அழைக்கப்படுகிறது.

சிராஜ்–உத்–தௌலா

வங்காள நவாப்பால் கைது செய்யப்பட்ட 146 ஐரோப்பியர் 18க்கு 15 அடி அளவுள்ள ஓர் அறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர்களில் 23 பேர் மட்டுமே உயிர்பிழைக்க மற்றவர்கள் மூச்சுத்திணறி இறந்து போனதாகவும் பழி சொல்லப்பட்டது. இருட்டறைத் துயரம் (Black Hole Tragedy) என ஆங்கிலேய ஆவணங்களில் சுட்டும் இந்நிகழ்வின் உண்மைத் தன்மை குறித்து வரலாற்று அறிஞர்களிடையே விவாதம் நடைபெறுகிறது.

பிளாசிப் போர் வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழுவை, வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக மாற்றியது. ஆங்கிலேயர் பெற்றிருந்த வணிக உரிமைகளை இது உறுதி செய்தது. சிராஜ் உத்தௌலாவிற்குப் பதிலாக அவருக்குத் துரோகமிழைத்த மீர் ஜாபர் வங்காள நவாப் ஆக்கப்பட்டார். கல்கத்தாவின் மீதான வணிகக்குழுவின் இறையாண்மை அங்கீகரிக்கப்பட்டது. தன்னுடைய படைகளைப் பராமரிப்பதற்காக வணிகக்குழுவிற்கு நிலம் வழங்கப்பட்டது. வணிகக்குழுவின் அதிகாரி (Resident) ஒருவரை தன்னுடைய அவையில் அமர்த்திக்கொள்ளவும் மீர்ஜாபர் ஒத்துக்கொண்டார். பின்னர் மீர்ஜாபருக்குப் பதிலாக மீர்காசிம் நவாப் ஆக்கப்பட்டார். இவர் தன் சுதந்திரத்தை நிலைநிறுத்த மேற்கொண்ட முயற்சியை வணிகக்குழுவின் அதிகாரிகள் விரும்பவில்லை.

பக்சார் போர் (1764)

வங்காளத்திலிருந்து தப்பியோடிய மீர்காசிம் முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம், அவத்தின் நவாபான சூஜா உத்தௌலா ஆகியவர்களோடு கூட்டு சேர்ந்தார். தங்கள் உள் விவகாரங்களில் வணிகக்குழு தலையிடுவதால் அவர்களும் மனக்குறையோடு இருந்தனர். இம்மூவரும் வணிகக்குழுவுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்தனர். 1764இல் பக்சார் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் இம்மூவரும் வீரத்துடன் போரிட்டனர். வணிகக்குழுவின் படைகள் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமையால்

11th History Lesson 16 Tamil Medium.indd 282 01-12-2022 20:03:29

அவர்கள் போரில் வெற்றி பெற்றனர். பக்சார் போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றி 1765இல் அலகாபாத் உடன்படிக்கைக்கு இட்டுச்சென்றது. ராபர்ட் கிளைவும் இரண்டாம் ஷாஆலமும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வுடன்படிக்கையின் மூலம் வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் திவானி (நிலவரி வசூலிக்கும் உரிமை) உரிமையைப் பெற்றது. மேலும் வங்காளத்திலிருந்த பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய மூன்று மாவட்டங்களையும், கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றது. ஆங்கிலேயர் வங்காளத்தின் ஆட்சியாளராக மாறினர்.

மூன்றாம் கர்நாடகப் போர் (1756–63)

ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் வெடித்தவுடன், வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்தன்நகரைக் கிளைவ் கைப்பற்றினார். இத்துடன் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு முடிவுக்கு வந்தது. பிரெஞ்சு அரசு கவுண்ட்–டி–லாலி என்பவரை இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் படைகளுக்குத் தலைமைத் தளபதியாக அனுப்பி வைத்தது. ஆங்கிலேயர் வங்காளத்தில் தங்கள் கவனத்தைக் குவித்திருந்ததால் லாலி சிலநாள் முற்றுகைக்குப் பின்னர் உடனடியாக டேவிட் கோட்டையை கைப்பற்றினார். அடுத்து தஞ்சாவூர் முற்றுகையிடப்பட்டது. பிரெஞ்சுக்காரர் தஞ்சாவூர் அரசரிடமிருந்து பணம் எதிர்பார்த்தனர். ஆனால் அவரால் தரஇயலவில்லை. புதுச்சேரியை ஆங்கிலப்படைகள் தாக்கும் ஆபத்து இருந்ததால் ஒரு பைசா லாபமில்லாமல் தஞ்சாவூர் முற்றுகை கைவிடப்பட்டது. ஒரு வேளை புதுச்சேரி தாக்கப்பட்டால் தனக்கு உதவியாக இருப்பதற்காக லாலி ஹைதராபாத்திலிருந்த புஸ்ஸியை அழைத்தார். இடையில் தக்காண அரசியலில் மாற்றங்கள் வேகமாக நடைபெற்றன. இராஜமுந்திரியை 1758இலும் மசூலிபட்டினத்தை 1759இலும் பிரெஞ்சுக்காரர் இழந்தனர். ஹைதராபாத் நிஜாம் சலபத்ஜங் போரே செய்யாமல் ஆங்கிலேயரோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். பிரெஞ்சுக்காரருக்குத் தான் ஏற்கனவே வழங்கியிருந்த மசூலிபட்டினத்தையும் வடசர்க்கார் பகுதிகளையும் அவர் ஆங்கிலேயருக்கு மாற்றி வழங்கினார்.

புஸ்ஸி, லாலி ஆகியோரின் கூட்டுப்படை காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி, சென்னையைக் கைப்பற்ற விரைந்தது. ஆங்கிலேயர் வங்காளத்தில் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்ததால் சென்னையில் 800 ஆங்கில வீரர்களையும் 2500 இந்திய வீரர்களையும் மட்டுமே கொண்டிருந்தனர்.

புஸ்ஸி

லாலி

1758 டிசம்பர் 12ஆம் நாள் சென்னையை முற்றுகையிடத் தொடங்கிய பிரெஞ்சுக்காரரால் 1759 பிப்ரவரி வரை சிறிதும் கூட முன்னேற முடியவில்லை. இரண்டு பக்கங்களிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. இருந்தபோதிலும் படைகளுக்குத் தேவையான பொருட்களின் வரத்து சுருங்கியதால் பிரெஞ்சுக்காரரால் முற்றுகையை நீட்டிக்க இயலவில்லை. இதே சமயத்தில் சென்னையை விடுவிப்பதற்காக ஆங்கிலேய ஜெனரல் பொகாக் ஒரு கப்பற்படையோடு இந்தியா வந்தார். லாலி முற்றுகையைக் கைவிட்டுக் காஞ்சிபுரம் செல்லும் கட்டாயத்திற்கு உள்ளானார்.

வந்தவாசிப் போரும் புதுச்சேரியின் வீழ்ச்சியும்

சர் அயர்கூட்

பிரெஞ்சுப் படைகளை ஆற்காட்டில் விட்டுவிட்டு லாலி புதுச்சேரி திரும்பினார். வந்தவாசியை நோக்கிச் சென்ற ஆங்கிலப்படைகள் திடீரென காஞ்சிபுரத்தைத் தாக்கிக் கைப்பற்றின. சர் அயர்கூட் என்பவரின் தலைமையில் புதிய ஆங்கிலபடைப்பிரிவும் வந்து சேர்ந்தது. இறுதியில் 1760 ஜனவரி மாதம் இறுதிப்போர் அயர் கூட், லாலி ஆகியோரிடையே வந்தவாசியில் நடைபெற்றது. புஸ்ஸி தோற்கடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார். லாலி புதுச்சேரிக்குப் பின் வாங்கினார். ஆனால் புதுச்சேரி உடனடியாக முற்றுகையிடப்பட்டது. இதே சமயத்தில் செஞ்சியைக் கைப்பற்றிய ஆங்கிலப்படைகள், புதுச்சேரியை முற்றுகையிட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை மாற்றி அமைத்த லாலி தீரத்துடன் போராடினார். பல மாதங்கள் நீடித்த புதுச்சேரி முற்றுகை 1761 பிப்ரவரி மாதம் 4 ஆம் நாள் முடிவுக்கு வந்து புதுச்சேரி வீழ்ந்தது. லாலி கைது செய்யப்பட்டு பிரெஞ்சு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டார். தன்னுடைய நாட்டில் லாலி விசாரணை செய்யப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டது. அதே ஆண்டில் பிரெஞ்சு

11th History Lesson 16 Tamil Medium.indd 283 01-12-2022 20:03:30

வணிகக்குழுவிற்குச் சொந்தமான மாகியையும் ஆங்கிலேயர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் அனைத்து இடங்களையும் இழந்தனர். ஏழாண்டுப் போரின் இறுதியில், 1763இல் பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தானபோது அனைத்துப் போர்களும் முடிவுக்கு வந்தன. பாரிஸ் உடன்படிக்கையின்படி புதுச்சேரியும் சந்தன்நகரும் மீண்டும் பிரெஞ்சுக்காரருக்கு வழங்கப்பட்டது. எனவே பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் (யூனியன் பிரதேசமான புதுச்சேரியின் பகுதிகள்), மாகி (கேரளாவிலுள்ள கண்ணூர் மாவட்டம்), சந்தன்நகர் (வங்காளம்) ஆகிய பகுதிகளை மட்டுமே தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர். வணிக நிறுவனமாக இருந்த இங்கிலாந்து பெரும் நிலப்பரப்பை ஆளுகின்ற சக்தியாக மாறி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட காலனியாதிக்க நாடாக எழுச்சி பெற்றது.

பாடச் சுருக்கம்

I

- வங்காளம் மற்றும் குஜராத்தில் அக்பரது பேரரசின் விரிவாக்கம் ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்களுடனான தொடர்புக்கு வழிவகுத்தது. அக்பர் மற்றும் ஜஹாங்கீரின் ஒப்புதலுடன் டச்சு, ஆங்கிலக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.
- தென்னிந்தியாவில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களில் நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன. செஞ்சி நாயக்க அரசின் அனுமதியுடன் பழவேற்காட்டில் டச்சு வணிகத் தளம் அமைக்கப்பட்டது.
- ஔரங்கசீப்பின் லட்சியங்களுக்குத் தடையாக இருந்த சிவாஜி தென்இந்தியாவில் தனது செல்வாக்கினை நிலைநாட்டினார். தஞ்சை, செஞ்சி நாயக்க மன்னர்களை சிவாஜி வெற்றி கொண்டதால் தஞ்சையில் மராத்திய அரசு நிறுவப்பட்டது.
- ஔரங்கசீப்பின் மறைவுக்குப் பிறகு பல சிறு அரசுகள் தங்களை நிலை நிறுத்திக்கொண்டன, டச்சுக்காரர் பழவேற்காட்டிலிருந்து நாகப்பட்டினத்திற்கும், ஆங்கிலேயர் சூரத்திலிருந்து பம்பாய்க்கும் தங்கள் தலைமையிடத்தை மாற்றிக் கொண்டனர்.
- 1600–1750 காலகட்டத்தில் இந்தியாவின் அரசியல் பொருளாதார வளர்ச்சி கணக்கெடுப்பின்படி, வேளாண்மைத்துறையில் பருத்தி சாகுபடியையும் உற்பத்தித்துறையில் நெசவுத் தொழிலையும், வணிகக் குழுக்கள் கடல் கடந்த வணிகத்தில் ஈடுபட்டனர்.
- ஐரோப்பியரின் வருகையும், இந்திய வணிகர்களுடனான கூட்டும் ஆங்கிலேயர் தங்களின் வர்த்தகப் பேரரசை உருவாக்கிக் கொள்ள அடித்தளமிட்டது.

II

- கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டு போர்த்துகீசியர் தங்களின் வணிகத்தளத்தை அமைத்தனர். போர்த்துகீசியரின் வருகை இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- டச்சு கிழக்கிந்திய கம்பெனி வணிக நடவடிக்கைகளில் குறிப்பாக அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டனர்.
- பிரெஞ்சுக்காரரின் குடியேற்றமாகப் புதுச்சேரி விளங்கியது. பிரெஞ்சுக்காரருக்கும் டச்சுக்காரருக்கும் ஏற்பட்ட வணிகப்பூசல்களால் டச்சுக்காரர் இந்தியாவைவிட்டு வெளியேறினர்.
- தரங்கம்பாடியில் லுத்தரன் சமயப் பரப்புக்குழு ஏற்படுத்தப்பட்டதும் அப்பகுதிகளில் சமயப் பரப்பாளரான சீகன்பால்குவின் பங்கு மற்றும் தாக்கம் விவரிக்கப்பட்டுள்ளது.
- ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட வணிகப்பூசல்களால் மூன்று கர்நாடகப் போர்கள் ஏற்பட்டன; அந்தப் போர்களில் ஆங்கிலேயர் சார்பாக ராபர்ட் கிளைவும், பிரெஞ்சுக்காரர் சார்பாக துய்ப்ளேவும் பெரும் பங்காற்றினர்.
- பிளாசி, பக்சார் போர்கள் ஆங்கிலேயரை இந்தியப் பகுதியில் ஒரு காலனியாதிக்கச் சக்தியாக மாற்றின.

பயிற்சி

T16V8

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் __________ ஆகும்.

   (அ) கோவா (ஆ) டையூ
   (இ) டாமன் (ஈ) சூரத்

2. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த துறைமுகம் __________ ஆகும்.

   (அ) டையூ (ஆ) கல்கத்தா
   (இ) பம்பாய் (ஈ) சூரத்

11th History Lesson 16 Tamil Medium.indd 284 01-12-2022 20:03:30

3. ஆங்கிலேயர் 1639ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில் ____________ கோட்டையைக் கட்டினர்.

(அ) புனித ஜார்ஜ் கோட்டை

(ஆ) வில்லியம் கோட்டை

(இ) வேலூர் கோட்டை

(ஈ) கோல்கொண்டா கோட்டை

4. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர் ____________.

(அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா

(ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்

(இ) நீனோ டா குன்கா

(ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

5. ____________ "தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

(அ) இராபர்டோ டி நொபிலி

(ஆ) அல்போன்சோ டி அல்புகர்க்

(இ) ஹென்ரிக்ஸ்

(ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

6. அம்பாய்னா படுகொலைக்குக் காரணமானவர்கள் ____________.

(அ) ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி

(ஆ) டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி

(இ) போர்த்துகீசு கிழக்கிந்தியக் கம்பெனி

(ஈ) பிரெஞ்சு கிழக்கு இந்தியக் கம்பெனி

7. பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் ____________ஐ பிரெஞ்சுக் குடியேற்றங்களின் கேந்திர மையமாக ஆக்கினார்.

(அ) மசூலிப்பட்டினம் (ஆ) நாகப்பட்டினம்

(இ) கோவா (ஈ) புதுச்சேரி

8. இரண்டாம் சார்லஸ் வரதட்சணையாகப் பெற்ற ____________ ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

(அ) மதராஸ் (ஆ) கல்கத்தா

(இ) பம்பாய் (ஈ) தில்லி

9. முதலாம் கர்நாடகப் போரின்போது ____________ புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்.

(அ) பீட்டன் (ஆ) லா போர்டோனாய்ஸ்

(இ) துய்ப்ளே (ஈ) மோர்ஸ்

10. ராபர்ட் கிளைவ் ____________ இல் வெற்றிபெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமை பெறச் செய்தார்.

(அ) கர்நாடகப் போர்கள் (ஆ) ஏழாண்டுப் போர்

(இ) பக்சார் போர் (ஈ) பிளாசிப் போர்

11. வந்தவாசிப் போர் ____________க்கிடையே நடைபெற்றது.

(அ) அயர்கூட் மற்றும் லாலி

(ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி

(இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி

(ஈ) ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி

12. ஏழாண்டுப் போர் ____________யுடன் முடிவுக்கு வந்தது.

(அ) புதுச்சேரி உடன்படிக்கை

(ஆ) அலகாபாத் உடன்படிக்கை

(இ) பாரிஸ் உடன்படிக்கை

(ஈ) ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை

13.சரியான கூற்றினைத் தேர்ந்தெடு

(அ) முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும், பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர்.

(ஆ) டச்சுக்காரர் ஆங்கிலேயரைத் தொடர்ந்து பம்பாய்க்கு வந்தனர்.

(இ) தஞ்சாவூர் முகலாயரால் ஆளப்படும் அரசாக இருந்தது.

(ஈ) பம்பாய் முக்கியமான வணிகமையமாக இருந்து, சூரத்திலிருந்தும் ஒரிசாவிலிருந்தும் வணிகர்களை ஈர்த்தது.

14. கீழ்கண்டவற்றுள் தவறான கூற்றினைத் தேர்ந்தெடு

(அ) இந்திய அரசர்கள் அயல்நாட்டவரிடம் கொண்டிருந்த ஈர்ப்பினை ஐரோப்பியர் சாதகமாக்கிக் கொண்டனர்.

(ஆ) நறுமணத்தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர்.

(இ) கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்கு காரணமாக இருந்தார்.

(ஈ) புதுச்சேரியில் இன்றளவும் பிரெஞ்சுத் தாக்கத்தைக் காணமுடிகிறது.

15. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பிளாசிப் போர், வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை, வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக மாற்றியது.

(ii) பெரும் நிலப்பரப்பை ஆட்சிசெய்த இங்கிலாந்து வந்தவாசிப் போருக்குப்பின், வணிக நிறுவனத்தை ஆளுகின்ற சக்தியாக எழுச்சி பெற்றது.

(அ) (i) சரி (ஆ) (ii) சரி

(இ) இரண்டும் சரி (ஈ) இரண்டும் தவறு

11th History Lesson 16 Tamil Medium.indd 285 01-12-2022 20:03:30

16. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) அல்புகர்க் இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் ஆவார்.

(ii) உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

(அ) (i) சரி (ஆ) (ii) தவறு

(இ) இரண்டும் சரி (ஈ) இரண்டும் தவறு

17. **கூற்று:** பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருகை தந்தனர்.

காரணம்: அவர்களது உண்மையான நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு, இலவங்கம், கிராம்பு ஏனைய நறுமணப் பொருட்களை கொள்முதல் செய்வதாகும்.

(அ) கூற்று சரி: காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்று சரி: காரணம் தவறு

(இ) கூற்று தவறு: காரணம் சரி

(ஈ) கூற்று சரி: காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

18. **கூற்று:** இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான தளத்தையும், குறிப்பாகப் பருத்தியிழைத் துணிகளுக்காகவும் புகழ்பெற்றிருந்தது,

காரணம்: நாட்டின் முதல் முக்கியமான பொருளாதார நடவடிக்கை விவசாயம் ஆகும்.

(அ) கூற்று மற்றும் காரணம் சரி

(ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

(இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

19. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

(அ) தரங்கம்பாடி – டேனியர்

(ஆ) சர் தாமஸ் ரோ – பிரெஞ்சுக்காரர்

(இ) அன்வாருதீன் – ஆற்காடு நவாப்

(ஈ) அல்புகர்க் – போர்த்துகீசியர்

20. பொருத்துக

(i) சாமுத்ரி (சாமரின்) – 1. அச்சுப் பதிப்பு

(ii) ஹென்ரிக்ஸ் – 2. ஹைதராபாத் நிஜாம்

(iii) முசாபர் ஜங் – 3. சந்தா சாகிப்

(iv) ஆற்காட்டு நவாப் – 4. கள்ளிக்கோட்டை அரசர்

(அ) 4, 1, 2, 3 (ஆ) 4, 3, 2, 1

(இ) 3, 2, 1, 4 (ஈ) 2, 1, 4, 3

II. குறுகிய விடை தருக

1. நாயக்க அரசுகள் யாவை? அவை நிறுவப்பட காரணம் என்ன?
2. ஆங்கிலேயர் மதராஸில் தங்களது குடியேற்றத்தை எவ்வாறு நிறுவினர்?
3. கைவினைப்பொருள்கள் உற்பத்தி பற்றி ஒரு குறிப்பு வரைக.
4. "சராப்" மற்றும் "உண்டியல்" பற்றி நீ அறிவன யாவை?
5. இந்தியாவின் முதல் போர்த்துகீசிய ஆளுநர் யார்? அவர் அறிமுகப்படுத்திய கொள்கையை விளக்குக.
6. "கார்டஸ் (Cartaz) முறை" என்றால் என்ன?
7. இந்தியாவில் டச்சுக்காரரின் காலனியாதிக்கக் கோட்டைகளையும் குடியேற்றங்களின் பெயர்களையும் குறிப்பிடுக.
8. "வணிக நிறுவனம்" (factory) என்றால் என்ன? 16 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் யாவை?
9. முதலாம் கர்நாடகப் போருக்கான காரணங்கள் யாவை?
10. 1765இல் கையெழுத்தான உடன்படிக்கையின் பெயர் என்ன? அதன் கூறுகள் யாவை?

III. சுருக்கமான விடை தருக

1. 1565ஆம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கூறு?
2. வணிகர்கள் ஒரே வகையான குழு அல்ல என்பதை விளக்குக.
3. கிழக்குக் கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக் காரணம் என்ன?
4. இந்தியத் துணிகளுக்கான தேவை ஐரோப்பாவில் அதிகரித்ததோடு அது இந்தியப் பொருளாதாரத்தின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது?
5. பழவேற்காடு
6. தரங்கம்பாடி
7. ஆம்பூர் போர்
8. "ஆனந்தரங்கர் நாட்குறிப்பு"

IV. விரிவான விடை தருக

1. இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி.
2. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வணிகம் செய்யும் உரிமையை எவ்வாறு நிலைநாட்டியது?

11th History Lesson 16 Tamil Medium.indd 286 01-12-2022 20:03:30

3. கர்நாடகப் பகுதிகளில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே நடைபெற்ற போர்களுக்கான காரணங்கள் யாவை?
4. வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக ஆங்கிலேயர் எவ்வாறு, எப்பொழுது மாறினர்?
5. இந்தியாவில் துய்ப்ளேவின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றிச் சுருங்கக் கூறுக.

செயல்பாடுகள்

1. இந்திய வரைபடத்தில் ஐரோப்பியரின் குடியேற்றங்களைக் குறிப்பிடுக.
2. புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் அருங்காட்சியத்திற்கு சென்று அதைப் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயார் செய்க.
3. "சென்னை தினம்" (Chennai Day) மற்றும் அது தொடர்பான செயல்பாடுகள்.

ஒப்படைப்பு

1. போர்த்துகீசியர், பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியப் பகுதிகள் பற்றிய புகைப்படங்களைக் கொண்டு ஒரு படத்தொகுப்பினைத் தயார் செய்க.
2. ராபர்ட் கிளைவின் வாழ்க்கைக் குறிப்பை எழுதுக.

மூலநூல்கள்

1. Sinnappa Arasaratnam, *Merchants, Companies and Commerce on the Coromandel Coast, 1650-1740*, Oxford University Press, New Delhi, 1986.
2. Om Prakash, *The New Cambridge History of India European Commercial Enterprise in Precolonial India*, Cambridge University Press, 1998.
3. Sanjay Subrahmanyam, *Improvising Empire: Portuguese Trade and Settlement in the Bay of Bengal, 1500–1700*, New Delhi, Oxford University Press, 1990.
4. M. Manickam, *Trade and Commerce in Pondicherry (A.D.1701-1793)*, Unpublished Ph.D. Thesis, Pondicherry University, 1995.
5. Bipan Chandra, *History of Modern India*, Orient Blackswan, New Delhi, 2009.
6. Danna Agmon, *Traders, Missionaries and Tamil Intermediaries in the Eighteenth century French India*. Ph.d thesis submitted in the department of Anthropology and History in the University of Michigan (US) 2011.

கலைச்சொற்கள்

திருத்தியமைக்கப்பட்ட	revamped	changed something again
அழிந்துபோதல்	devastated	destroyed
அரசியல் அமைதியின்மை	political turmoil	a state of confusion
ஊடுருவல்	incursion	a sudden attack
உருமாற்றம்	metamorphosis	a complete change
கைவிடப்பட்ட	stranded	struck by a difficult situation
வெல்லமுடியாத	invincibility	impossible to defeat

இணையச் செயல்பாடு

ஐரோப்பியரின் வருகை

ஐரோப்பியரின் வருகை பற்றி அறிந்து கொள்வோமா?

படிகள்:

- கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க
- காலக்கோட்டின் கீழ் உள்ள 'British Period' என்பதைச் சொடுக்கவும்.
- ஐரோப்பியரின் வருகைபற்றி அறிய கீழே நகர்த்தவும்.
- மற்றொரு வழியில், வலப்பக்க பட்டியலில் உள்ள 'British India' என்பதைத் தெரிவு செய்தும் அறிந்துகொள்ளலாம்.

உரலி:

இணையம் : https://www.timemaps.com/history/south-asia-1837ad/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

அலகு

17

ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

கற்றல் நோக்கங்கள்

கீழ்கண்டவை பற்றி அறிதல்

- இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அதிகாரத் தோற்றமும் வளர்ச்சியும்
- ராபர்ட் கிளைவின் இரட்டை ஆட்சிமுறையின் தோல்வியும், ஒழுங்குமுறைச் சட்டப்படி (1773) வணிக நிறுவனத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரிக் கொள்கையும்
- காரன்வாலிஸ் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய நிலையான நிலவரித் திட்டம்; சர் தாமஸ் மன்றோ சென்னை மாகாணத்தில் அறிமுகப்படுத்திய இரயத்துவாரி முறை
- வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் மூலமாகவும் டல்ஹௌசியின் வாரிசு உரிமை இழப்புக் கொள்கை மூலமாகவும் இந்தியப் பகுதிகளை ஆங்கில ஆட்சியுடன் இணைத்தல்
- இந்திய ஆட்சியாளர்களுடன் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியின் உறவுகள்
- காரன்வாலிஸ் மற்றும் வெல்லெஸ்லியின் குடிமையியல், நீதி, நிர்வாகச் சீர்திருத்தங்கள்
- வில்லியம் பெண்டிங், டல்ஹௌசி காலத்தில் ஏற்பட்ட சமூக, கல்வி சீர்திருத்தங்கள், இருப்புப்பாதை, தொலைத்தொடர்பு, கல்வி, பொதுப்பணித்துறைச் சீர்திருத்தங்கள்
- காலனி அரசு, பாசன வசதி செய்து தராமையாலும், காடுகளை அழித்தமையாலும் பஞ்சம் ஏற்பட்டு விவசாயிகள், கைவினைஞர்கள் நாட்டை விட்டு குடிபெயர்ந்து கூலி உழைப்பை மேற்கொள்ளல்
- தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு

அறிமுகம்

முகலாயப் பேரரசின் வீழ்ச்சியோடு மைய அதிகாரம் நொறுங்கியதால் ஓர் ஆங்கிலேய வணிக நிறுவனம் இந்தியாவை கையகப்படுத்தும் நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கம் நிர்வாகம் செய்வது அல்ல; மாறாக அது சிக்கலில்லாமல் வியாபாரம் புரிவதாகவே இருந்தது. எனினும், வங்காளத்தில் 1770இல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திற்குப் பின் சற்றே அதிகாரத்தை பொறுப்புணர்வு கொண்டதாக அவர்கள் மாற்றினர். ஒருபுறம் பாரபட்சமான சுரண்டல் பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடித்தபோதும், அவர்கள் தாங்கள் ஆண்ட மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் நீதி நடைமுறைகளையும் காக்க முயல்வதாகப் பறைசாற்றிக் கொண்டார்கள். பாரம்பரிய அரசாட்சி சர்வாதிகாரக் கொடுமையை உள்ளடக்கியதாக இருப்பதாலும், எதிர்பாராத படையெடுப்புகளாலும் கள்வர்களாலும் மக்கள் இன்னல் அனுபவிப்பதாலும் தங்களின் அதிகாரம் விரிவடைவது தவிர்க்க முடியாததென நியாயப்படுத்திக் கொண்டார்கள். இருப்புப்பாதை ஏற்படுத்தியதும், தந்தி தொடர்பு முறையும், எதிர்ப்புகளை ஒடுக்கவும், உள்ளூர் மக்களை எளிதாகக் கட்டுப்படுத்தவும் உதவின. ஆங்கிலேயரின் விவசாய, வணிகக் கொள்கைகள் இந்தியப் பொருளாதாரத்தை நாசப்படுத்தின. இந்திய நாட்டின் வளங்கள் பல வகைகளிலும் கொள்ளைபோயின. பாதிக்கப்பட்ட விவசாயிகளும் நெசவாளர்களும் இதன் விளைவாக 1830களின் பின் அதிக அளவில் ஆங்கிலேய அதிகாரம் பரவியிருந்த நாடுகளில் இருந்த தோட்டங்களுக்கு கூலி உழைப்பாளிகளாகப் புலம்பெயர்ந்தார்கள்.

17.1 ஆங்கிலேய அரசு உருவாக்கம்

ஆங்கிலேயர் இந்தியாவில் காலூன்ற பக்சார் போரே முக்கியக் காரணமாகும். வங்காளம், அவத் நவாபுகள் மட்டுமல்லாமல் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமும் ஆங்கிலேயரை

11th History Lesson 17 Tamil Medium.indd 288 20-12-2022 15:27:33

எதிர்த்தார். பக்சார் போரின் முடிவில், கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரத் தன்மையை இழந்து அசைக்கமுடியாத அரசியல் சக்தியாக உருவெடுத்தது. போரின் முடிவில் ராபர்ட் கிளைவ் இங்கிலாந்திற்குச் சென்றார். வங்காள நிர்வாகத்தில் ஊழல் மலிந்துவிட்டதாகக் கருதப்பட்டதால் அவர் வில்லியம் கோட்டை ஆளுநராக நியமிக்கப்பட்டார். கிளைவிற்கு, அவருக்கு முன்பாக பதவி வகித்த ஆளுநரான வான்சிடார்ட் அவத்தை ஷா ஆலம் வசம் மீண்டும் ஒப்படைத்தது ஏற்புடையதாக இல்லை. அதனால் அவர் சூஜா–உத்–தௌலாவுடன் புதிய பேச்சு வார்த்தையைத் துவங்கினார். அதன் விளைவாக இரண்டு அலகாபாத் உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. வங்காளம், பீகார், ஒரிசா (ஒடிசா) பகுதிகளின் திவானி (வருவாய் நிர்வாகம்) அதிகாரத்தைக் கம்பெனி வசம் பேரரசர் ஒப்படைத்தார் அலகாபாத், காரா பகுதிகளின் நிர்வாகத்தைப் பெறுவதோடு பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் வருவாயிலிருந்து ஆண்டுக்கு 26 இலட்சம் ரூபாய் பெறப்போவதாக அறிவிக்கப்பட்டது. போர் இழப்பீடு வழங்கிவிட்டு சூஜா–உத்–தௌலா அவத் பகுதியை தக்க வைத்துக்கொள்ள உறுதி செய்யப்பட்டது. வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் பொது நிர்வாகம் வங்காள நவாபின் பொறுப்பானது.


ராபர்ட் கிளைவ்

வாரன் ஹேஸ்டிங்ஸ்

பேரரசர், கிளைவிடம் திவானி பொறுப்பை ஒப்படைக்கும் முன்பே மீர் ஜாபரின் வாரிசாக பொறுப்பேற்ற நவாப், நிஜாமத் (பொது நிர்வாகம்) பொறுப்புகளைக் கம்பெனி வசம் ஒப்படைத்திருந்தார். ஆகவே திவானாகவும் நிஜாமாகவும் கம்பெனி செயல்பட வேண்டியிருந்தது. திவானின் கடமை வரி வசூலிப்பதும் குடிமக்களின் நீதி நிர்வாகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் ஆகும். நிஜாமின் கடமையோ இராணுவச் செயல்பாடுகளும் குற்றவியல் நீதி வழங்கலும் ஆகும். இவ்வாறாகக் கம்பெனி மெய்யான முழு அதிகாரத்தையும் தன்வசம் தக்க வைத்துக்கொண்டு வெற்று நிர்வாகச் சுமையை மட்டுமே நவாபிடம் விட்டு வைத்தது. இத்தகைய நிர்வாக முறையே 'இரட்டை ஆட்சிமுறை' என்றும் இரட்டை அரசுமுறை (dyarchy) என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆனால் 'இரட்டை ஆட்சிமுறை' விரைவில் உடையத் துவங்கியது. பொறுப்புகளை ஏற்காத அரசாட்சி முறை வங்காளத்தில் 1770 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திற்கு இட்டுச்சென்றது. மூன்றில் ஒருவர் என்ற விகிதத்தில் மக்கள் மடிந்தனர். கம்பெனி ஊழியர்கள் அரிசி வணிகத்தில் கொண்டிருந்த ஏகபோகக் கட்டுப்பாடும், அவர்கள் அவ்வேளையிலும் கடைப்பிடித்த லாப நோக்கமும் துயரச்சூழலை மேலும் அதிகமாக்கியது. இறுதியாகக் கம்பெனி தனது பொறுப்பை உணர்ந்ததன் விளைவாக, 1773ஆம் ஆண்டில் ஒழுங்குமுறைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. வங்காளத்தின் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார்.

17.2 நில நிர்வாக முறை: நிலையான நிலவரி முறையும் இரயத்துவாரி முறையும்

ஒழுங்குமுறைச் சட்டம் 1773இன்படி கம்பெனி ஊழியர்களின் வரவுசெலவு கணக்கு பற்றி இயக்குநர் குழு பிரிட்டிஷ்

1772 வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தலைவர் ஆளுநரே ஆவார் (வில்லியம் கோட்டையிலோ ஜார்ஜ் கோட்டையிலோ வீற்றிருப்பார்). வில்லியம் கோட்டையில் ஆளுநராகப் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டத்தின் (1773) மூலமாக கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார். கவர்னர் ஜெனரல் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் மன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். 1833 பட்டயச் சட்டம் மூலமாக அப்பதவி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்று நிலையேற்றம் பெற்றது. அப்பதவியும் இயக்குநர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, பதவி வகிப்பவர் இயக்குநர் மன்றத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கடமையுமிருந்தது. 1857 பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசின் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து இங்கிலாந்து அரசு நேரடியாக எடுத்துக்கொள்ள வகைசெய்த 1858இன் 'விக்டோரியா ராணியாரின் பிரகடனம்' முதன்முறையாக அரசப்பிரதிநிதி (வைஸ்ராய் மற்றும் கவர்னர் ஜெனரல்) என்ற சொற்றொடரைக் கையாண்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரலாக கானிங் நியமிக்கப்பட்டார்.

11th History Lesson 17 Tamil Medium.indd 289 20-12-2022 15:27:34

கருவூலத்திற்குத் தெரியப்படுத்துவது சட்டரீதியாக கடமையாக்கப்பட்டது. ஆளுநரும் தலைமைத் தளபதியும் இரு ஆலோசகர்களும் கொண்ட குழு, வருவாய் வாரியமாகச் செயல்பட்டு, வருவாய் குறித்து விவாதித்தது. 1784ஆம் ஆண்டின் பிட் இந்தியச் சட்டம், இராணுவ மற்றும் குடிமை அமைப்புகளை தனித்தனியாகப் பிரித்தது.

காரன்வாலிஸ்

தானே ஒரு நிலச்சுவான்தாரராக இருந்த காரன்வாலிஸ் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றிய நிலப்பிரபுத்துவ முறையை உருவாக்க நினைத்தார். வருவாய் வசூலிப்பவரோடு கலந்துபேசி அவர் ஒரு முடிவுக்கு வந்தார். இது ஜமீன்தார் என்கிற இடைத்தரகர்களை உருவாக்கியதோடு பயிரிடுவோரைக் குத்தகை விவசாயிகளாக மாற்றியது. இயக்குநர் குழுவின் அறிவுரைப்படி வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் ஜமீன்தார்களுடன் அவர் ஏற்படுத்திக்கொண்ட அமைப்பு முறையே நிலையான நிலவரி முறையாக அறியப்படுகிறது. 'சாசுவதம்' என்பது நிலத்தை அளவிட்டு அதனடிப்படையில் ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசுக்கு வழங்க வேண்டிய வருவாயை நிர்ணயம் செய்வதாகும். 1793இல் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளுக்கு அந்த நிர்ணயம் நிரந்தரமாக்கப்பட்டது. இம்முறையின் மூலமாக வரி வசூலிப்போராக இருந்தோர் வாரிசுரிமை கொண்ட ஜமீன்தார்களாக மாறி அரசு வழங்கிய நிலத்தின் பயன்களை அனுபவிக்கலானார்கள். நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிற்கு மேலாக வசூலிக்கப்பட்ட அனைத்தையும் ஜமீன்தார்கள் கையகப்படுத்திக் கொண்டார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் கால்நூற்றாண்டு சென்னை மாகாணத்தின் நில வருவாய் வரலாற்றின் தொடக்கக் காலமாகும். ஆரம்பத்தில் பெரும் சர்ச்சைக்குப் பின் நிரந்தர நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. செங்கல்பட்டு, சேலம், திண்டுக்கல் மாவட்டங்கள் பல மிட்டாக்களாக பிரிக்கப்பட்டு அதிக தொகைக்குக் கேட்போருக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு நிலவுரிமை பெற்றோர் வேளாண் குடிகளை அப்புறப்படுத்தியமையால் ஓரிரு ஆண்டுகளில் தோல்வியையே எதிர்கொண்டனர். ஆகவே அம்முறை கைவிடப்பட்டது. அதன்பின் வருவாய் வாரியம் (Board of Revenue) கிராமங்களைக் குத்தகைக்கு விடும் முயற்சியை மேற்கொண்டது.

> வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1833) மகல்வாரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நிலவருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரோடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்பவரிடமிருந்தே வசூலிக்கப்பட்டது.

கிராமக் குத்தகை முறையில், பழைய வரிவசூல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கிராமமும் மூன்று ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. மிராசுதார் முறை நிலவி வந்த மாவட்டங்களில் நிலவரி வசூலிக்கும் பொறுப்பு மிராசுதார்களிடம் கொடுக்கப்பட்டது. மிராசுதார்கள் இல்லாத பகுதிகளில் கிராமத்தலைவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இம்முறை மோசமான பருவநிலை, தானிய விலைக் குறைவு, குறைந்த கால குத்தகை முறை போன்ற காரணங்களால் தோல்வியடைந்தது. போதிய விளைச்சல் இல்லாத போது மொத்த கிராமங்களும் வரி செலுத்த முடியாமல் புலம் பெயர்வது என்பது சாதாரணமாக நிகழ்ந்தது. அரசு, மாவட்ட ஆட்சியரின் துணையோடு அவ்வாறு புலம் பெயர்ந்தோரை மறுகுடியமர்த்த முயற்சி மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

1814ஆம் ஆண்டு இயக்குநர் குழுவில் இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இது ஆளுநராக இருந்த தாமஸ் மன்றோ என்பவரால் உருவாக்கப்பட்டது. வேளாண் நிலத்தின் உரிமையாளரும், அதன் வரிகளை செலுத்துபவரும் என்ற பொருள் கொண்ட 'ரைய்யா' என்ற அரபு வார்த்தையின் ஆங்கில திரிபே 'ரயத்' (Ryot) ஆகும். ரயத் என்ற சொல்லிற்கு உழவர் என்று பொருள். எந்த இடைத்தரகரும் இல்லாமல் அரசே நேரடியாகப் பயிரிடுவோருடன் தொடர்பு கொள்வதே இம்முறையாகும். நிலவரி செலுத்தும் வரை விவசாயம் செய்வோரின் வசமே நிலமிருப்பது உறுதி செய்யப்பட்டது. வரி செலுத்தாதோரை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதோடு அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த கால்நடை, வீடு தனிப்பட்ட உடைமை போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. அரசு, பயிர் செய்யப்பட்ட ஒவ்வொரு வயலிலிருந்தும் கிடைக்கக்கூடிய வருவாயைக் கணித்தது. தானிய விலை மாற்றம், சந்தைப்படுத்தும் வசதிகள், பாசன வசதி போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முப்பது ஆண்டுக்கு ஒருமுறை தீர்வு மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இரயத்துவாரி முறை நிலத்தில் தனியுடைமையை அறிமுகப்படுத்தியது. தனிப்பட்ட உடைமையாளர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. அவர்கள் நிலத்தை விற்பதற்கும், அடமானம் வைப்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும், உரிமையை மாற்றிக் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

11th History Lesson 17 Tamil Medium.indd 290 20-12-2022 15:27:34

தாமஸ் மன்றோ: தாமஸ் மன்றோ 1780 இல் மதராஸ் வந்தடைந்தார். முதல் பன்னிரெண்டு வருடங்கள் அவர் ஒரு படை வீரராக மைசூர் போரில் பங்கேற்றார். அவர் பாரமஹால் பகுதியில் (சேலம் மாவட்டம்) 1792 முதல் 1799 வரையிலும், கனரா பகுதியில் 1799 முதல் 1800 வரையிலும் பணியிலிருந்தார். பிரித்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான கடப்பா, கர்னூல், சித்தூர், அனந்தபூர் ஆகியவற்றிற்கு ஆட்சியராக பணி புரிந்தார். இக்காலத்தில்தான் அவர் இரயத்துவாரி முறை பற்றி யோசிக்கலானார். அவர் 1820 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்று அதன் பின் ஏழு வருடங்கள் சேவையாற்றினார். அப்போது 1822 ஆம் ஆண்டில் இரயத்துவாரி முறையை செம்மையாக அறிமுகப்படுத்தி செயலூட்டினார். அவர் ஆளுநராக இருந்த காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு கல்விக்கான செலவீனங்களை எதிர்காலத்திற்கான முதலீடாகவே கருதினார். அவர் நிர்வாகத்தில் இந்தியர்கள் பெருமளவில் பங்காற்றுவதை ஆதரித்தார். அவர் ஜுலை 1827 ஆம் ஆண்டு கர்னூலில் அமைந்துள்ள பட்டிக்கொண்டாவில் காலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். மக்களிடையே பிரபலமாகியிருந்த ஆளுநரான அவரின் நினைவாக பல நினைவிடங்கள் எழுப்பப்பட்டதோடு, குழந்தைகள் பலருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து அவரது சிலை வடிவமைக்கப்பட்டு 1839 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.

தாமஸ் மன்றோ

17.3 துணைப்படைத் திட்டமும், வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும்

கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி (1798–1805) பிரிட்டிஷ் ஆட்சியை உறுதி செய்யும் பொருட்டு ஒரு முன்னோக்கிய கொள்கையை பின்பற்றினார். அவர் சிற்றரசுகளைப் போர் வெற்றியின் மூலமாக வசப்படுத்தவில்லை. அதற்கு மாறாக அரசர்களைப் பெயரளவிற்கு அங்கீகரித்து அவர்களுக்கு மானியம் வழங்கியதோடு மொத்த நிர்வாகத்தையும் தன் வசப்படுத்தினார்.

வெல்லெஸ்லி

வெல்லெஸ்லிக்கு முன்பாக இந்திய அரசர்களோடு கம்பெனி கூட்டணி அமைத்திருந்த நிஜாமும், அவத் நவாபும் பிரிட்டிஷ் படைகளைப் பராமரிக்க மானியம் பெற்றிருந்தார்கள். ஆனால் அவ்வாறு பராமரித்த படைப்பிரிவுகள் அவர்களின் நாட்டு எல்லைகளுக்கு வெளியே தான் நிறுத்தப்பட்டிருந்தன. பராமரிப்புச் செலவு பணமாகவே வழங்கப்பட்டது. பணப்பட்டுவாடா குறித்த நேரத்தில் நடந்தேறாதபோது சிக்கல் எழுந்தது. இம்முறையை வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தின் மூலம் விசாலமாக்கியதோடு ஹைதராபாத், மைசூர், லக்னோ, மராத்திய பேஷ்வா, போன்ஸ்லே (கோலாப்பூர்), சிந்தியா (குவாலியர்) போன்ற அரசுகளையும் அரசர்களையும் அதன் கீழ்க்கொண்டு வந்தார்.

துணைப்படைத் திட்டத்தின் கூறுகளாவன (அ) கூட்டணிக்குள் வரும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்தப் படைகளை கலைத்து விட்டு பிரிட்டிஷ் படைகளை ஏற்பதோடு அவர்கள் அனுப்பும் அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக (Resident) ஏற்க வேண்டும். (ஆ) பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும். அது முடியாதபோது மாகாணத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும். (இ) பாதுகாப்புக்கு உட்பட்ட அரசர் பிற ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். அதிலும் பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக்கூடாது. (ஈ) பிரிட்டிஷார் அனுமதியில்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியிலமர்த்தக்கூடாது. (உ) பிற இந்திய அரசுகளோடு கம்பெனியின் அனுமதியில்லாமல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது. (ஊ) எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக்கூடாது. இவ்வாறு சுதேச அரசுகள் தங்கள் இறையாண்மையை இழந்து அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் கம்பெனியை சார்ந்திருக்கும் நிலை உருவாக்கப்பட்டது.

துணைப்படைத் திட்டம் கம்பெனி அரசின் இராணுவ பலத்தை உயர்த்தியதோடு அதன் ஒட்டுமொத்தத் திறனையும் கூட்டியது. அதன் உடனடி விளைவு என்பது சொந்த நாட்டில் ஆயிரக்கணக்கான தொழில் முறை போர் வீரர்கள் வேலை இழந்ததே ஆகும். அவ்வாறு கட்டவிழ்த்து விடப்பட்ட வீரர்கள் கொள்ளையர்களாக மாறினார்கள். பிண்டாரிகளின் (கூட்டமாக சூறையாடுவோர்) எண்ணிக்கை துணைப்படைத் திட்டத்திற்கு பின் கணிசமாக உயர்ந்தது. அரசர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கியபோதும்,

11th History Lesson 17 Tamil Medium.indd 291 20-12-2022 15:27:34

பாதுகாப்பிற்குள்ளிருந்த பல அரசுகளின் நிர்வாகம் திறம்பட இல்லை எனக் குற்றம் சுமத்தி அவற்றை இலகுவாக இணைப்பதும் நடந்தேறியது.

மாகாணம் (Presidency) என்பதற்கும் மாநிலம் (Province) என்பதற்குமான வேறுபாடு: கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும். அவ்விதத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும். பின்னர் இம்மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம் போன்றவை உருவாக்கப்பட்டன.

வாரிசு உரிமை இழப்புக் கொள்கை

டல்ஹௌசி

இந்து சம்பிரதாயங்களின்படி, வாரிசில்லாத மன்னர் ஓர் ஆண் மகவைத் தத்தெடுக்க முடியும். அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட மகனுக்குச் சொத்தில் முழு உரிமையும் உண்டு. இச்சூழலில் உச்ச அதிகாரத்திற்கு (இங்கிலாந்திற்கு) கட்டுப்பட்ட ஒரு சிற்றரசு அவ்வதிகாரத்தின் அனுமதி பெறாமல் வாரிசுகளை நியமிக்க முடியுமா என்கிற கேள்வி எழுந்தது. டல்ஹௌசியின் வரவுக்கு முன்புவரை கம்பெனி அரசின் அனுமதியை சுவீகாரத்திற்கு முன்போ, பின்போ அரச குடும்பத்தினர் பெற்று வந்தனர். ஆனால் டல்ஹௌசியோ இம்முறை உச்சபட்ச அதிகாரத்தின் பார்வைக்கு சென்றால் சட்டபூர்வமான சிக்கலை எதிர்கொள்ளலாம் என்று நினைத்தார். அவ்வாறு இருக்குமாயின் தத்தெடுக்கப்பட்ட வாரிசுகள் அரியணை ஏறுவது கம்பெனி அரசால் செல்லாதது என்று அறிவிக்கவும் வாய்ப்பிருந்தது.

வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும். சதாராவின் மன்னரான ஷாஜி இறந்த பின் (1848) அவரது தத்தெடுக்கப்பட்ட வாரிசை டல்ஹௌசி அங்கீகரிக்க மறுத்தார். ஜான்சியின் அரசர் கங்காதரராவ் நவம்பர் 1853இல் இறந்த மறுகணமே அவ்வரசு டல்ஹௌசியால் இணைக்கப்பட்டது. (விதவையான அவரது மனைவி இராணி லட்சுமிபாய் 1857 பெருங்கிளர்ச்சியின் போது பெரும் பங்காற்றினார்.) குழந்தைகள் இல்லாமல் மூன்றாம் ரகுஜி போன்ஸ்லே 1853இல் மறைந்தார். நாக்பூர் உடனடியாகக் கம்பெனி ஆட்சியில் இணைக்கப்பட்டது. மராத்தியர்களின் கடைசி பேஷ்வா 1851இல் காலமானார். அவர் முப்பத்து மூன்று வருடம் கம்பெனி கொடுத்த ஓய்வூதியத்தைப் பெற்றிருந்தார். ஆனால் டல்ஹௌசியோ அவரது வாரிசான நானா சாகிப்பிற்கு ஓய்வூதியம் கொடுக்க மறுத்தார். இவ்வாறாக வாரிசு உரிமை இழப்புக் கொள்கை நாடு பிடிக்கும் உத்தியாகச் செயல் வடிவம் பெற்றது. எனினும் பிரிட்டிஷ் முடியரசு இந்திய நாட்டின் பொறுப்பை ஏற்ற பின் இக்கொள்கை திரும்ப பெறப்பட்டது.

17.4 சுதேச அரசுகளும் ஆங்கிலேயரின் மேலாதிக்கமும்

பிளாசிப் போருக்குப்பின் (1757) கம்பெனி தன்னை விரிவுபடுத்தும் முகமாக இரட்டை ஆட்சி முறையை உருவாக்கியது. இம்முறையின் கீழ், மேலளவில் ஓர் அதிகாரமற்ற அரசரை வைத்துக்கொண்டு அவரது பின்புலத்தில் கம்பெனி அதிகாரிகள் செயலாற்றினர். கொள்கையளவில் கம்பெனி, தன்னை திவானாக (வரி வசூலிக்கும் அதிகாரம்) மட்டும் சொல்லிக்கொண்டாலும் முழு அதிகாரமும் அதனிடமே குவிந்திருந்தது. கிளைவால் உறுதியளிக்கப்பட்டிருந்த முகலாய மன்னர் இரண்டாம் ஷா ஆலமிற்கு செலுத்தவேண்டிய ஆண்டு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதன் மூலம் இவ்வதிகாரம் வலியுறுத்தப்பட்டது. கடித அளவிலான மரியாதையைக்கூடக் காரன்வாலிஸ் கொடுக்க மறுத்தார். வெல்லெஸ்லி மேலும் நெருக்கடியைக் கூட்டும் வண்ணமாக பிரிட்டிஷாருக்குச் சாதகமாகத் துணைப்படைத் திட்டத்தைக் கடைபிடித்தார். அதனை ஹைதராபாத், பூனா, மைசூர் போன்ற முக்கிய அரசுகளை ஏற்க வைத்தார்.

கவர்னர் ஜெனரலாக 1813ஆம் ஆண்டு பதவியேற்ற ஹேஸ்டிங்ஸ் (மொய்ரா) முகலாய முத்திரையைப் பரிவர்த்தனைகளில் தவிர்த்தார். கம்பெனியின் உடைமைகள் மீது முகலாய மன்னர் இரண்டாம் அக்பர் செலுத்திவந்த ஆதிக்கத்தை நிறுத்திக்கொள்ளாவிட்டால் அவரைத் தான் சந்திக்க முடியாது என்றார். ஹேஸ்டிங்ஸ் இந்திய அரசுகளை நிர்வகிக்கும் பொறுப்பு கம்பெனிக்கு இல்லை என்ற கொள்கை முடிவைப் பின்பற்றினார். ஆக, துணைப்படைத் திட்டத்தின் கீழ் மக்கள் ஆட்சியாளர்கள் மீது அதிருப்தி கொண்டாலோ, அண்டை அரசு பொறாமையால் சூழ்ச்சியில் ஈடுபட்டாலோ பாதிப்பு எதுவும் ஆட்சி செய்வோருக்கு ஏற்படவில்லை. குறுந்தலைமைகளால் பிரித்து ஆட்சி செய்யப்பட்டுவந்த கத்தியவார் பகுதியையும் மத்திய இந்தியப் பகுதியையும் கம்பெனி நெருங்கிய கண்காணிப்பில் வைத்திருப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

11th History Lesson 17 Tamil Medium.indd 292 20-12-2022 15:27:34

துணைப்படைத் திட்டத்தின் கீழ் கம்பெனி ராணுவம் இந்திய ஆட்சியாளர்களை உள்நாட்டு கலகங்களிலிருந்தும், பிற பாதிப்புகளிலிருந்தும் காத்தது. ஹைதராபாத்தின் சில பகுதிகள் நிஜாமின் கட்டுபாட்டிலிருந்து விடுபட்ட அரேபியப் படைகளின் ஆதிக்கத்தில் இருந்தன. பிரிட்டிஷ் படைப்பிரிவின் உதவியோடு அரேபிய வீரர்கள் பணிய வைக்கப்பட்டார்கள். மைசூர் அரசில் 1830ஆம் ஆண்டு நிதி நிர்வாக முறைகேட்டில் அரசர் ஈடுபட்டார் என்ற காரணத்தை முன்வைத்து ஏற்பட்ட கிளர்ச்சியை வெல்லெஸ்லியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் கம்பெனி தலையிட்டு சரி செய்தது. கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங் அரசரை அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் விடுவித்து மார்க் கப்பன் என்பவரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தார். குவாலியரின் வாரிசு இளம் வயதினர் என்பதால் நிர்வாகம் கட்டுடைந்து, அரசவையில் கோஷ்டிகள் தோன்றி அவர்களுக்குள் கடுமையாகச் சண்டையிட்டுக் கொண்டார்கள். இராணுவமோ கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு செயலிழந்து கிடந்தது. எல்லன்பரோ வலிமையான படைகளோடு வந்து சேர்ந்தார். அவரது படைகளை உள்ளூர் படைகள் எதிர்த்தன. மகாராஜ்பூர் போரில் உள்ளூர் இராணுவம் தோற்கடிக்கப்பட்டு 1843ஆம் ஆண்டில் படை பலத்தைக் குறைத்துக்கொள்வது உள்ளிட்ட நிபந்தனைகளோடு புதிய வழிமுறை மொழியப்பட்டது.

டல்ஹௌசியின் வாரிசு இழப்புக்கொள்கை பிரிட்டிஷாரின் நேரடிக் கட்டுபாட்டிற்குள்ளிருந்த பகுதியை விரிவாக்கியது. இணைக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் இந்திய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்த அரசுகளின் மீதான கம்பெனியின் அதிகாரம் ஓங்கியது.

17.5 குடிமை மற்றும் நீதி நிர்வாகங்களில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள்

நீதிபதியும், கிழக்கத்திய சிந்தனை மரபை ஏற்றவருமான வில்லியம் ஜோன்சின் உதவியினைப் பெற்று காரன்வாலிஸ் கம்பெனி நிர்வாகத்தைக் கட்டமைத்தார். குற்றம் நடப்பதைக் கண்டுபிடிக்கவும், தண்டனை வழங்கவும் ஒரு சீரிய முறையை அறிமுகப்படுத்தியதன் மூலமாக கிளைவ் உருவாக்கிய இரட்டை ஆட்சி முறையை முடிவு கொண்டு வந்தார். வரி வசூலிக்கும் பொறுப்பைப் பொது நிர்வாகத்திலிருந்தும், நீதித்துறையிலிருந்தும் பிரித்தார். ஆட்சியர்களை (Collectors) வரி வசூலிக்க மட்டுமே பணித்து, அவர்களை நீதி வழங்கும் பொறுப்பிலிருந்து விடுவித்தார். குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் முழுமையாகச் சீரமைக்கப்பட்டன. நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத்தும், சதர் நிஜாமத் அதாலத்தும் திகழ்ந்தன. குற்றவியல், குடிமையியல் நீதியில் உச்சபட்ச முறையீட்டு நீதிமன்றங்களான இவை கல்கத்தாவில் அமையப்பெற்று கவர்னர் ஜெனரல் உள்ளிட்ட குழுவினரால் வழிநடத்தப்பட்டன. அவற்றின் கீழ் நான்கு பிராந்திய முறையீட்டு நீதிமன்றங்கள் கல்கத்தா, தக்காணம், மூர்ஷிதாபாத், பாட்னா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. இந்நீதிமன்றங்கள் ஒவ்வொன்றினுக்கும் மூன்று ஐரோப்பிய நீதிபதிகளும், அவர்களுக்கு உதவி புரிய ஓர் இந்திய வல்லுனரும் நியமிக்கப்பட்டார்கள். இந்நீதிமன்றங்களின் கீழ் ஒரு ஐரோப்பிய நீதிபதியையும், அவருக்குத் துணையாகச் சில இந்தியர்களையும் உள்ளடக்கிய மாவட்ட மற்றும் நகர நீதிமன்றங்கள் இயங்கின. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெருநகரிலும் ஓர் நீதிமன்றம் அமைந்தது. அவற்றின் கீழ் இந்திய நீதிபதிகளைக் கொண்ட முன்சீப் நீதிமன்றங்கள் இயங்கின. சீரியல் (சிவில்) வழக்குகளில் இஸ்லாமியச் சட்டங்கள் பின்பற்றப்பட்டன. குற்றவியல் வழக்குகளில் தொடர்புடையவரின் சமயப் பின்னணியினைப் பொறுத்து இந்து சட்டமும், இஸ்லாமிய சட்டமும் பின்பற்றப்பட்டன.

காரன்வாலிஸின் தலையாய பங்களிப்பானது குடிமைப் பணிகளின் சீர்திருத்தமே ஆகும். அவர் திறமை வாய்ந்தவர்களையும் நேர்மையானவர்களையும் பணியமர்த்த வழிவகை செய்தார். கம்பெனி அதிகாரிகளுக்குச் சொற்ப சம்பளத்தை வழங்கிவிட்டு அவர்களைத் தனியாக வியாபாரம் செய்ய அனுமதித்த பழைய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். திறமையின் அடிப்படையில் பணிவழங்கியபோதும், இந்தியர்கள் பணியாற்றத் தகுதியற்றவர்கள் என்று கருதியதால் அவர்களைப் பணிக்கு அமர்த்த மறுத்தார்.

ஒவ்வொரு மாவட்டமும் தானாக்களாகப் (காவல் வட்டம்) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு தானாவும் இந்தியர் ஒருவரால் வகிக்கப்பட்ட தரோகா என்ற பதவியின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. காரன்வாலிஸின் காவல் துறை நிர்வாக முறை பின்னர் மேலும் மெருகேற்றப்பட்டது. நீதியதிகாரத்திற்கும் வருவாய் அதிகாரத்திற்குமிடையேயான திடமான பிரிவு கைவிடப்பட்டது. ஆட்சியரே நீதி வழங்குபவராகவும் செயலாற்றத் துவங்கினார்.

குடிமை மற்றும் நீதி நிர்வாகத்தைப் பண்படுத்திய காரன்வாலிஸ் கம்பெனி ஊழியரின்

11th History Lesson 17 Tamil Medium.indd 293 20-12-2022 15:27:34

கல்வியை மேம்படுத்த போதிய அக்கறை செலுத்தவில்லை. வெல்லெஸ்லியோ அவர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இங்கிலாந்தின் தாராளவாதக் கல்வி முறையோடு இந்தியரின் மொழி, சட்டங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் குடிமைப் பணியாளர்கள் அறிந்திருத்தல் நன்று என அவர் கருதினார். இந்நோக்கத்தோடு கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் 1800இல் ஒரு கல்லூரி துவங்கப்பட்டது. கம்பெனியின் குடிமைப் பணியாளர்களுக்கு இங்கு மூன்று வருட காலப் பயிற்சி வழங்கப்பட்டது. பல ஐரோப்பியப் பேராசிரியர்களும் எண்பது இந்தியப் பண்டிதர்களும் இங்குப் பணிபுரிந்தனர். இதுவே வங்காளக் கிழக்கத்தியப் பள்ளியாக உருவெடுத்தது. கிழக்கிந்தியக் கல்லூரி 1806இல் இங்கிலாந்தில் துவக்கப்பட்டது. வில்லியம் கோட்டை கல்லூரியின் அடியொற்றி, எல்லிஸ் என்பவர் தூய ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை (1812) சென்னையில் உருவாக்கினார். இங்குதான் தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருதத்தோடு தொடர்பில்லாத சுதந்திரமான தனிமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் கருத்தாக்கம் முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

17.6 கம்பெனி ஆட்சியில் கல்வி வளர்ச்சி

மௌல்வி ஒருவரின் துணையோடு வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒரு மதரசாவை உருவாக்கியதே பிரிட்டிஷார் கல்விக்கு ஆற்றிய முதல் தொண்டு ஆகும். இம்மதரசா நாற்பது மாணவர்களைக் கொண்டு துவங்கப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கியது. இஸ்லாமியர்களுக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்தது போன்ற சேவையை இந்துக்களுக்கு மேற்கொள்ள அவருக்குப் பின் பொறுப்பேற்றோர் தயாராக இருந்தனர். காரன்வாலிஸ் வாரணாசியில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியை (1791) நிறுவினார். அதன் பின் வந்த இருபது ஆண்டுகளில் பெரிய நடவடிக்கைகள் எதையும் பிற ஆளுநர்கள் மேற்கொள்ளவில்லை. கம்பெனியின் நலம் கருதி இந்தியாவில் கல்வி வளர்ச்சியை மேற்கொள்வது விரும்பத்தக்கது அல்ல என்றே நினைத்து செயல்பட்டது. பின்னர் 1813ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டயச்சட்டத்தில் தெளிவான கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற பின் கிறித்தவ சமயத் தொண்டாற்றுவோர் மூலமாகத் தாய்மொழிக் கல்வியின் வளர்ச்சியை ஊக்குவித்தார். கல்கத்தாவில் 1817ஆம் ஆண்டு ஆங்கில மொழியையும் மேற்கத்திய அறிவியலையும் ஆதரித்த இந்தியரின் எண்ணவோட்டத்தைப் பூர்த்தி செய்யும் விதமாகத் துவக்கப்பட்ட இந்து கல்லூரிக்கு அவரே புரவலரானார். அலெக்சாண்டர் டஃப் போன்ற கிறித்தவ சமயப்பணியாளர்களும் கல்வியை வளர்த்தெடுக்கத் தூண்டுகோலாக இருந்தனர். ஹேஸ்டிங்ஸின் தாராளப்பார்வையும், அதன் விளைவாக 1799இல் பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டிருந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதும் கல்வி வளர்ச்சியில் பாராட்டுக்குறிய நடவடிக்கைகளாகும். இச்சூழலில்தான் 1818ஆம் ஆண்டு வங்காள வாராந்திர இதழ் 'சமாச்சார் தர்பன்' துவங்கப்பட்டது.

இந்திய மக்களின் வளர்ச்சியையும் மேம்பாட்டையுமே 1833ஆம் ஆண்டின் பட்டயச்சட்டம் வலியுறுத்தியது. ஒருங்கிணைந்த பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங் சமூக சீர்திருத்தத்தின் பொருட்டு தக்கர்களை (Thuggee) (சடங்கு முறையாக கொள்ளையடிப்பதையும், கொலை செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தவர்கள்) அழிக்கவும், சதி முறையை ஒழிக்கவும், கல்வி மேம்பாட்டுக்காகப் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் திறக்கத் தலைப்பட்டார். கல்கத்தா மருத்துவக் கல்லூரியை 1835இல் துவங்கினார். இக்கல்லூரியின் மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் பொருட்டு 1844ஆம் ஆண்டு லண்டனுக்கு அனுப்பப்பட்டார்கள். 1845இல் பம்பாயில் கிராண்ட் மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டது. தாம்சன் பொறியியல் கல்லூரி 1847ஆம் ஆண்டு ரூர்க்கியில் தோற்றுவிக்கப்பட்டது. கல்கத்தாவில் 1849இல் பெண்களுக்கான பள்ளி துவங்கப்பட்டது.

> பட்டயம் (charter) என்பது ஒரு நாட்டின் இறையாண்மை அதிகாரத்தை மையமாகக்கொண்டு சகல அதிகாரங்களும், சலுகைகளும் உள்ள ஒரு வணிக நிறுவனத்தையோ, பல்கலைக்கழகத்தையோ, நகரத்தையோ உருவாக்க வழங்கப்படும் சட்டமாகும். கிழக்கிந்தியக் கம்பெனி, மகாராணி எலிசபெத் 1600இல் வழங்கிய பட்டயத்தின் மூலம் துவங்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக 1773ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமானது. பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட 1853ஆம் ஆண்டின் பட்டயச்சட்டமே கடைசியானது ஆகும்.

11th History Lesson 17 Tamil Medium.indd 294 20-12-2022 15:27:34

மெக்காலே : இந்திய இலக்கியம், தத்துவம், மருத்துவம் இவற்றில் எதிலும் மெக்காலே நல்லவற்றை காணவில்லை. 1835ஆம் ஆண்டு அவர் எழுதிய கல்வி குறித்த குறிப்பில் மெக்காலே கீழ்கண்டவாறு எழுதுகிறார்:



மெக்காலே

.... எனக்கு அரபு மொழியும் தெரியாது, சமஸ்கிருதமும் தெரியாது. ஆனால் அரபு, சமஸ்கிருத மொழிகளில் சிறப்பானவையாகக் கருதப்படும் நூல்களின் மொழியாக்கங்களைப் படித்திருக்கிறேன். எனது நாட்டிலும், இங்கும் (இந்தியாவில்) கிழக்கத்திய மொழிகளில் புலமை பெற்ற மனிதர்களுடன் உறவாடியிருக்கின்றேன். நல்லதோர் ஐரோப்பிய நூலகத்தில் உள்ள ஓர் அலமாரியில் இருக்கும் நூல்கள் அரேபியாவிலும், இந்தியாவிலும் உள்ள அனைத்து இலக்கிய நூல்களுக்கும் சமம் என்பதை அவர்களுள் ஒருவர்கூட மறுக்கமாட்டார்கள்.

.... தற்போது நமக்கும், நாம் ஆள்கின்ற லட்சக்கணக்கான மக்களுக்குமிடையே உரைபெயர்ப்பாளர்களாக ஒரு வர்க்கத்தை உருவாக்க நாம் முடிந்ததைச் செய்ய வேண்டும் – இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர் ஆனால் சுவையில், கருத்தில், தார்மீகத்தில், அறிவில் ஆங்கிலேயராக இருக்கும் ஒரு வர்க்கம்.

.... பிராந்திய மொழிகளைச் சீர்திருத்தி, மேற்கத்திய சொற்பட்டியலிலிருந்து அறிவியல் தொடர்பான சொற்களைச் சேர்த்து செழுமைப்படுத்தி அனைத்து மக்களுக்கும் எவ்வழியில் அறிவைக் கொண்டு சேர்க்க முடியுமோ அவ்வழியில் கொண்டு சேர்க்கும் பொறுப்பை அவ்வர்க்கத்திடமே விட்டுவிடலாம்.

மெக்காலே ஒரு சட்ட உறுப்பினராக 1835ஆம் ஆண்டில் இந்தியாவை வந்தடைந்தார். அவர் கல்விக்குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு உள்நாட்டுக் கல்வி மீது மதிப்பிருக்கவில்லை. மெக்காலே ஆங்கிலவழிக் கல்வியை ஆதரித்துப் பரிந்துரைத்ததால் அரசு ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகவும் அலுவலக மொழியாகவும் ஏற்றுக்கொண்டது.

டல்ஹௌசியும் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டினார். அவர் வடகிழக்கு மாகாணத்தின் துணை ஆளுநர் (1843–53) ஜேம்ஸ் தாமஸினால் உருவாக்கப்பட்ட தாய்மொழிக் கல்விமுறைக்கு ஆதரவு கொடுத்தார். சார்லஸ் உட்டின் 'கல்வி அறிக்கை (1854) ஆரம்பக்கல்வி முதல் உயர்நிலைப் பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரைவாகும். பொதுக் கல்வித்துறை துவங்கப்பட்டு மூன்று மாகாணத் தலைநகரங்களிலும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே 1857இல் சென்னை பல்கலைக்கழகமும் பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டன. டல்ஹௌசி மெக்காலேயின் கொள்கையை மாற்றி, தாய் மொழியிலும் கல்வி நிலையங்கள் உருவாவதை ஆதரித்தார். அவர் சாதி சமயப் பாகுபாடு பார்க்காமல் தனியாரின் கல்விச்சேவையை ஆதரிக்கும் விதமாக கல்விச் சேவையில் ஈடுபட்ட தனியாருக்கும் மானியம் வழங்கினார்.

17.7 பாதுகாப்பு முயற்சிகளும் வளர்ச்சி நடவடிக்கைகளும்

பிண்டாரிப் போர்

பிண்டாரி கொள்ளைக்கூட்டத்தில் இஸ்லாமியர்கள், இந்துக்கள் என்ற இரு சமயத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர். துணைப்படைத் திட்டத்தினால் வேலையிழந்த பல வீரர்கள் இக்கொள்ளைக்கூட்டத்தில் சேர்ந்து கவலை கொள்ளும் அளவுக்குப் பெருகினர். பிரிட்டிஷ் அரசு பிண்டாரிகள் மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆனால் அது மராத்தியருக்கு எதிரானப் போராக உருப்பெற்றது. இப்போர்கள் பல்லாண்டுகள் (1811–1818) நடைபெற்றாலும் மொத்த மத்திய இந்தியாவையும் இறுதியில் பிரிட்டிஷார் வசம் கொண்டு சேர்த்தது.

பிண்டாரிகளிடமிருந்து தப்பிக்க மக்களே தீ வைத்துக்கொள்ளல்

வில்லியம் பெண்டிங்

தக்கர்களை அடக்குதல்

தக்கர்கள் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து தில்லிக்கும் ஆக்ராவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில்

11th History Lesson 17 Tamil Medium.indd 295 20-12-2022 15:27:35

கொள்ளையடித்துக்கொண்டிருந்த கூட்டத்தினர் ஆவார். அவர்கள் தங்கள் அமைப்பை உறுதிமொழி ஏற்பதன் மூலமாகவும், சில சடங்கு ஆச்சாரங்களைப் பின்பற்றுவதன் மூலமாகவும் பலப்படுத்தி அப்பாவி வழிப்போக்கர்களை எதிர்பாராத தருணத்தில் தாக்கி காளியின் பெயரால் கொலை செய்து வந்தனர். தக்கர்களின் அச்சுறுத்தலை அடியோடு நீக்க பெண்டிங் ஒரு திட்டத்தை வகுத்து அவர்களை அழிக்க வில்லியம் ஸ்லீமேனை நியமித்தார். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தக்கர்களின் குற்றங்கள் 1831 முதல் 1837 வரையான காலகட்டத்தில் நிரூபணமானது. ஐந்நூறு பேர் அரசு சாட்சிகளாக மாறினர். தக்கர்களை முன்னிட்டு எழுந்த பிரச்சினைகள் 1860ஆம் ஆண்டுவாக்கில் முடிவுக்கு வந்தன.

தக்கர்கள்

சதி ஒழிப்பு

விதவைகளை அவர்களது கணவர்களின் சிதையோடு சேர்த்து எரிக்கும் சதி முறையை ஒழிக்க முடிவெடுத்ததின் மூலம் வில்லியம் பெண்டிங் தன் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு முன் பதவி வகித்த கவர்னர் ஜெனரல்கள் சமயம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் தலையிட யோசித்த பின்புலத்தில், பெண்டிங் தயக்கமில்லாமல் சட்டம் (சதி ஒழிப்புச் சட்டம், 1829) ஒன்றை இயற்றி, அதன் மூலம் இப்பழக்கத்திற்கு ஒரு முடிவு கொண்டுவர முயன்றார். இராஜா ராம் மோகன் ராயின் பிரச்சாரங்களும் முயற்சியும் இந்த மனிதத்தன்மையற்ற முறை ஒழிய முக்கியக் காரணமாக இருந்தன.

இருப்புப்பாதையும், தபால்–தந்தி முறையும்

இருப்புப்பாதை அமைக்க முதல் கோரிக்கையை வைத்தது ஐரோப்பிய வியாபாரச் சமூகமே ஆகும். இந்தியாவில் வெற்றிகரமாக இருப்புப்பாதைப் போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குனர்களிடம் இருக்கவே செய்தது. இருப்புப்பாதைப் போக்குவரத்தின் மூலமாக பொருளாதாரச் சாதகங்கள் ஏற்படும் என்று டல்ஹௌசி வாதிட்டு அதை வலியுறுத்தினார். எனினும் 1857 பெருங்கிளர்ச்சிக்கு முன்பு வெறும் முந்நூறு மைல் தூரம் மட்டுமே இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவிற்கும் லண்டனுக்குமிடையே தந்திப் போக்குவரத்தை உருவாக்க பல கோரிக்கைகள் வைக்கப்பட்டபோதும் தந்திப் போக்குவரத்து இந்தியாவில் 1854ஆம் ஆண்டுதான் தொடங்கியது. 1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சியின் போது அதன் முக்கியத்துவம் உணரப்பட்டது. 1857ஆம் ஆண்டின் பெருங்கிளர்ச்சிக்குப் பின் அது அதி முக்கியத் தேவையென்ற நிலையை எட்டியது. லண்டனுக்கும், கல்கத்தாவிற்குமிடையே தொடர்பு கொள்ள பல நாட்கள் ஆன சூழல் மாறி இருபத்தியெட்டு நிமிடங்களில் தொடர்பு கொள்ள தந்தி வழிசெய்தது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமிடையே உள்ள தூரம் 1869ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 4000 மைல்களாகக் குறைந்தது. 1870ஆம் ஆண்டிற்குள் இலண்டன் இந்தியா அலுவலகத்தில் அரசு செயலருடன் பிரிட்டிஷ் இந்திய அரசு திறன் கொண்ட தொடர்பு வைக்க முடிந்திருந்தது. இதன் பின் கர்சன் நீங்கலாக மற்ற கவர்னர் ஜெனரல்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைச் செயலகமாகத் திகழ்ந்த 'வெள்ளை மாளிகையைத்" (Whitehall) தொடர்பு கொள்ளாமல் முடிவெடுக்கத் தயங்கினார்கள்.

பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே இருப்புப்பாதை 1853ஆம் ஆண்டு அமையவும், ஹௌராவுக்கும் ராணிகஞ்சிற்கும் இடையே 1854–55ஆம் ஆண்டுகளில் அமையவும் செய்தது. தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856ஆம் ஆண்டு இராயபுரத்திற்கும், ஆற்காட்டிற்கும் (வாலாஜா ரோடு) இடையே அமைக்கப்பட்டது. அவ்வாண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் இராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்.

முதல் புகைவண்டி பம்பாய் (மும்பை)–தானே

11th History Lesson 17 Tamil Medium.indd 296 20-12-2022 15:27:35

நீர்ப்பாசன வசதி

ஆர்தர் காட்டன்

பாசனவசதி ஏற்படுத்திக் கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது. இந்திய அரசர்கள் வெட்டிச் சென்ற பழைய கால்வாய்களும் குளங்களும் பயனற்றுக் கிடப்பதை கண்டபோதும் அவற்றைத் தூர்வாரி பயன்பாட்டிற்குக் கொடுக்கவோ, புதுப்பிக்கவோ கம்பெனி முயற்சி செய்யவில்லை. சென்னையில், நாம் பின்வரும் பக்கங்களில் விரிவாகக் காணப்போவது போல, ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் சிற்சில பாசன வேலைகள் நடந்தேறின. பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே கொள்ளிடத்தின் குறுக்கே 1836இல் அணையைக் கட்டினார். கிருஷ்ணா நதியின் குறுக்கே அணை கட்டும் பணி 1853ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுபாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக வட இந்தியாவில் 1830இல் யமுனா கால்வாயும், 1857இல் கங்கைக் கால்வாயை 450 மைல்கள் வரை நீட்டித்த பணியும், 1856இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரி இடைத்துறைக் கால்வாய் (தோ ஆப்) தோண்டும் பணியும் பாசன வசதி மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முக்கிய பணிகளாகும். ஆனால் கால்வாய்கள் மண்ணில் உப்புத் தன்மையை கூட்டவும், தேவையில்லாத இடங்களில் தண்ணீர் தேங்கவும் வழிவகுத்தது.

காடுகள்

பிரிட்டிஷ் இந்திய அரசுக்கு வருவாய் ஈட்டிக்கொடுக்க கூடியதாக நிலமே விளங்கியது. அதனால் வேளாண் நிலத்தை விரிவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. ஜங்கிள் மஹல் காடுகளிலிருந்து ஜமீன்கள் உருவாக்கப்பட்டு ஏலம் விடப்பட்டபின் முறையான வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டன. இந்நிலங்களின் பூர்வீக குடிகளான சந்தால் பழங்குடி மக்கள் விரட்டப்பட்டார்கள். ஆகவே சந்தால் இன மக்களே பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த முதல் பழங்குடி மக்களாகத் திகழ்கிறார்கள். ஐரோப்பிய நிறுவனங்களுக்கு மலைகளில் தோட்டப்பயிர் விவசாயத்திற்கு நிலங்கள் சொற்ப விலைக்கு விற்கப்பட்டது. ஆர்வ மிகுதியால் தோட்டப்பயிர்களைச் சாகுபடி செய்ய இந்திய அரசர்களும் ஜமீன்தாரர்களும் காடுகளை அழித்தார்கள். ஆனால் காப்பி பல இடங்களில் செழித்து வளரவில்லை. எனினும், விடாமல் காடுகளை அழித்துக் காப்பித் தோட்டங்களை உருவாக்க முயன்றுகொண்டே இருந்தார்கள். இருப்புப்பாதை பதிக்கும் பொருட்டு பெருமளவில் மரங்கள் வெட்டப்பட்டன. 1870களில் ஆண்டுக்கு கிட்டத்தட்ட பத்து இலட்சம் மரங்கள் என்ற அளவில் வெட்டப்பட்டு இருப்புப் பாதை அமைக்க தண்டவாளக் குறுக்குக்கட்டைகளாகப் பயன்படுத்தப்பட்டன. இந்திய மரங்களில் சால், தேவதாரு, தேக்கு போன்றவை அவற்றின் வலிமைக்காக பிற மரங்களை விட அதிகம் வெட்டப்பட்டன. வங்காளம் மற்றும் பீகார் பகுதிகளை உள்ளடக்கிய ஜங்கிள் மஹால் காடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையில் அவை வெட்டப்பட்டன. இங்கிலாந்தில் இருப்புப்பாதை அமைக்கும்பொருட்டு இந்தியாவிலிருந்து மரப்பலகைகள் அனுப்பப்பட்டன. இந்தியக் காடுகளின் செல்வவளம் அழிக்க முடியாதது என்ற தொன்மக்கூற்று உடைபட்டது. இப்பின்னணியில் காடுகளின் வளங்களை மேலாண்மை புரிவதற்கும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் 1865இல் இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பாரபட்சமான இச்சட்டம் காடுகளின் வளங்களைப் பூர்வீக குடிகள் பயன்படுத்தத் தடை விதித்ததால் அவர்களின் அதிருப்தியைப் பெற்றது. அவர்களின் எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் கட்டுக்குள் கொண்டுவரும் விதமாக கொடுமையான குற்றப் பழங்குடியினர் சட்டம், 1871இல் இயற்றப்பட்டது. காலனிய ஆதிக்கக்காலம் முழுமையும் அவ்வப்போது பழங்குடியின மக்கள் காலனி அரசுக்கு எதிராகக் கிளர்த்தெழுந்தனர். காலனி ஆட்சியில் இயற்றப்பட்ட வனச் சட்டங்கள் இன்றளவிலும் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றன.

17.8 தொழில் முடக்கமும் செல்வச் சுரண்டலும்

ஐரோப்பிய நாடுகள் கிழக்கிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்துகொண்ட அளவிற்கு ஆரம்பத்தில் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. ஏற்றுமதியான நறுமணப் பொருட்கள், பருத்தி, ஆபரணங்கள் முதலானவற்றுக்கு மாற்றாகக் கிழக்கு நாடுகளுக்கு ஐரோப்பாவிலிருந்து எதுவும் தேவைப்படவில்லை. இந்த நிலையை இங்கிலாந்தின் ஜவுளி உற்பத்தியில் ஏற்பட்ட தொழிற்புரட்சி முதன்முறையாக மாற்றியமைத்தது. அதன்பின் திட்டமிட்டே இந்தியாவில் தொழில்கள் அழிவுக்குத் தள்ளப்பட்டன. உலகின் துணி ஏற்றுமதியில் முதன்மை பெற்று விளங்கிய இந்தியா, லங்காஷ்யரின் (இங்கிலாந்து) பருத்தி ஆடைத் தேவைக்குச் சந்தையாக மாற்றப்பட்டது. குறைந்த விலையில் இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட பிரிட்டிஷ் பொருட்கள் இந்தியச் சந்தைகளில் குவியலாயின. நீண்டகாலப்

11th History Lesson 17 Tamil Medium.indd 297 20-12-2022 15:27:36

பயன்பாட்டுக்கு உகந்தமையாக இருந்ததனாலும், சொற்ப விலைக்கு விற்கப்பட்டதாலும் இயந்திரத் தயாரிப்பில் உருவான பொருட்களின் பயன்பாடு ஓங்கி, இந்தியப் கைவினைப் பொருட்கள் உற்பத்தி நலிவடையக் காரணமாகியது.

முதல் முப்பது ஆண்டுகளில் கம்பெனி அரசு பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான பொருட்களை இறக்குமதி வரி ஏதும் விதிக்காமல் தங்குதடையின்றி அனுமதிக்கும் கொள்கையைப் பின்பற்றியது. இப்பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தியான பொருட்களை விட விலை குறைவாக இருந்தன. அதே வேளை, இந்திய உற்பத்திப் பொருட்கள் மீது பாதுகாப்பு வரிகள் பலவற்றைத் திணித்து பிரிட்டிஷ் சந்தையில் பங்குபெற முடியாமல் செய்தனர். இக்கொள்கை இந்திய நெசவாளர்களையும் வணிகர்களையும் பெரிதும் பாதித்தது. நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழந்து வாழ்வாதாரத்திற்காக வேளாண்மைக்குச் செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஏற்கனவே நிலத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த மிக அதிக அளவிலான வேளாண் மக்களோடு நெசவாளர்களும் சேர்ந்ததால் நிலத்தின் மீதான அழுத்தம் அதிகமாகி நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

இஸ்லாமியர் ஆட்சி முறையை பிரிட்டிஷ் அரசிடமிருந்து வேறுபடுத்திப் பார்த்த வில்லியம் பெண்டிங், முந்தைய ஆட்சியே நன்மை பயக்கக்கூடியதாகக் கருதினார். பெண்டிங் எழுதுகிறார்: பல வகையிலும் இஸ்லாமியர் ஆட்சி நம்மை விஞ்சுகிறது; அவர்கள் படையெடுத்துச் சென்ற நாடுகளிலேயே குடியமர்ந்தார்கள்; அவர்கள் உள்ளூர் மக்களோடு மண உறவு கொண்டார்கள், அவர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்கினார்கள்; படையெடுத்தவர்களும், அடிபணிந்தவர்களும் ஒத்தக்கருத்தும், எண்ண ஓட்டமும் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். இதற்கு மாறாக நம்முடைய ஆட்சியோ நேர்எதிரானதாக உள்ளது – விரோதப் போக்கு, சுயநலம், இரக்கமின்மை ஆகியவையே அதன் கூறுகள்.

பிரிட்டிஷ் இந்தியாவின் வரவு செலவுக் கணக்கில் இராணுவ மற்றும் குடிமை நிர்வாகச் செலவுகள் 80 சதவீதமாகவும், எஞ்சிய 20 சதவீதம் மட்டுமே மற்ற துறைகளுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலை இருந்தது. வேளாண்மை புறக்கணிக்கப்பட்டது. பாசன வசதி ஏற்படுத்தப்படவில்லை. காலனி அரசு நீர்ப்பாசனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்புப்பாதை பதிப்பதில் ஆர்வத்தைக் குறைத்துக்கொள்ளலாம் என்று ஆர்தர் காட்டன் பரிந்துரைத்ததை இங்கிலாந்தின் ஏகாதிபத்திய அரசால் நிராகரிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி கால்நூற்றாண்டில் ஏற்பட்ட தொடர் பஞ்சங்கள், பிரிட்டிஷ் முடியரசை அணைகள் கட்ட சில நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டின.

இரயத்துவாரி முறையின் நோக்கம் சீரழிந்துபோன வஞ்சகமான ஜமீன்தார்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட வேளாண் குடிகளை உருவாக்குவதே என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் பெரிய நிலக்கிழார்களே வலுவடைந்தார்கள். இரயத்துவாரி பகுதிகளில் குத்தகை விவசாயிகளின் நலன் பற்றி அரசு அக்கறை கொள்ளவில்லை. நில வரியே அரசின் பெரிய வருவாயாக இருந்ததால் கடுமையான முறைகளைப் பின்பற்றி வரி வசூலிப்பது முக்கியக் கொள்கையாக இருந்தது. கம்பெனி அரசால்

இங்கிலாந்து மக்களவையின் தேர்வுக்குழு (Select Committee) 1840 ஆம் ஆண்டு அங்கம் வகித்த சார்லஸ் ட்ராவல்யன் இவ்வாறு தன் பார்வையை முன் வைக்கிறார். வங்காளத்தில் முன்பு விளைந்த ஒருவகைப் பட்டு போன்ற பருத்தியிலிருந்து டாக்கா மஸ்லின் என்ற மெல்லிய துணியை நெய்வார்கள், அது போன்ற ஒன்றை பார்ப்பது அரிதாகிவிட்டது. டாக்கா நகரின் மக்கள் தொகை 1,50,000லிருந்து 30,000 அல்லது 40,000 என்ற அளவில் விழுந்து விட்டது என்பதோடு அந்நகரை மலேரியா நோயும், காடுகளும் வேகமாக சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மான்செஸ்டர் என்று கருதப்பட்டு வந்த நகரம் இன்று சிறப்பிழந்து வறுமை சூழ்ந்து சிறுத்துவிட்டது. அங்கே நிலவும் அசாதாரணச் சூழல் உண்மையில் படு பயங்கரமானது.

அபே டுபாய் என்ற பிரெஞ்சுக் கத்தோலிக்க சமயப் போதகர் தான் ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்கு முன் 1823ஆம் ஆண்டு இவ்வாறு கூறுகிறார். "கவலையும், இறப்பும் எங்கெங்கும் நிறைந்து சென்னை மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் பசியால் செத்து மடிகிறார்கள்."

அபே டுபாய்

"வணிக வரலாற்றில் இதற்கு சமமான ஒரு துயரம் நிகழ்ந்ததில்லை. பருத்தி நெசவாளர்களின் எலும்பு இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பரப்புகளை வெளுக்கச் செய்கின்றன" என்று கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் கூறுகிறார்.

11th History Lesson 17 Tamil Medium.indd 298 20-12-2022 15:27:36

சென்னையில் நியமிக்கப்பட்ட சித்திரவதை ஆணையம் 1855இல் சமர்ப்பித்த அறிக்கை, வருவாய் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் வரி வசூலிக்கும் சமயங்களில் பயிரிடுவோர் மீது கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்களை விளக்கமாக எடுத்தியம்பியது. எனினும் சித்திரவதைச் சட்டம் 1858ஆம் ஆண்டுதான் திரும்பப் பெறப்பட்டது.

17.9 பஞ்சங்களும், ஒப்பந்தக் கூலிகளும்

பஞ்சம் இந்தியாவுக்குப் புதியதல்ல என்ற போதும் பிரிட்டிஷ் ஆட்சியில் அது அடிக்கடி தோன்றியதோடு மிக கோரமானதாகவும் விளங்கியது. நான்கு பஞ்சங்களே 1800ஆம் ஆண்டிலிருந்து 1825ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தோன்றின. ஆனால் அந்நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில் 22 பஞ்சங்கள் தோன்றின. இவற்றால் ஐம்பது இலட்சத்திற்கும் மேலானோர் இறந்ததாகக் கருதப்படுகிறது. முன்னாள் குடிமைப் பணி அதிகாரியான ரோமேஷ் சந்திர தத் 1901ஆம் ஆண்டில் கணக்கிடும் போது 1860ஆம் ஆண்டிற்கு பின் 10 பெரும் பஞ்சங்களைச் சுட்டுவதோடு, அதனால் ஒன்றரை கோடி மக்கள் இறந்ததாகவும் கூறுகிறார்.

தலையிடா வணிகக்கொள்கை (Laissez Faire) என்பதைக் கடைபிடிப்பதாக 1833இல் காலனி அரசு எடுத்த முடிவைப் பஞ்சக் காலத்திலும் பலமாகப் பின்பற்றியது. பல ஆண்டுகளாக மேற்கத்தியக் கல்வி முறையில் கற்ற இந்திய இளைஞர்கள் பிரிட்டிஷ் ஆட்சியே இந்தியாவை வறுமையின் பிடியில் வைத்திருக்கிறது என்று வாதிட்டனர். ஒரிசாவில் ஏற்பட்ட பஞ்சத்தில் மூன்றில் ஒருவர் என்ற அளவில் மக்கள் பசியாலும் நோயாலும் செத்து மடிந்ததே அக்கூற்றுக்குச் சான்றாக விளங்கியது. இந்நிகழ்வே தாதாபாய் நௌரோஜியை தமது வாழ்க்கை முழுக்க இந்திய வறுமை பற்றிய ஆய்வை மேற்கொள்ள வைத்தது.

சென்னை மாகாணப் பெரும்பஞ்சம், 1876–78: இரு ஆண்டுகளில் தொடர்ச்சியாக பருவகாலம் பொய்த்ததால் சென்னை மாகாணத்தில்

> அன்றைய சென்னை மாகாணத்தின் குண்டூர் மாவட்டத்தில் 1833ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் பற்றிய ஒரு நேரடிப் பார்வையாளரின் (ஆங்கிலேயர்) கூற்று வருமாறு: மிகுந்த நெருக்கடியான சூழலில் மனிதர்கள் எத்தகைய அருவருப்பான உணவை உட்கொள்வார்கள் என்பதை யோசிக்கவே மிகவும் அச்சமாக உள்ளது. ஏனென்றால் உயிர் பிழைத்த சிலர் ஒரு செத்த நாயையும் குதிரையையும் பேராசையோடு சுவைப்பதைக் கண்டேன். மற்றொரு சமயம் ஒரு துரதிருஷ்டமான கழுதை கோட்டையை விட்டு வெளியேறிய அக்கணத்திலேயே அதன் மீது ஓநாய்கள் போல் பாய்ந்து முன்னங்கால், பின்னங்கால் வேறுபாடில்லாமல் பாய்ந்து அங்கேயே கொன்று சுவைத்ததைக் கண்டேன்.

1876–78ஆம் ஆண்டுகளில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஒரிஸ்ஸாவில் பின்பற்றியது போன்றே வைஸ்ராய் கைவிரிக்கும் போக்கை பின்பற்றினார். இதனால் மாகாணத்தில் முப்பத்தைந்து லட்சம் மக்கள் மடிந்தனர்.

தோட்டப்பயிர்களின் அறிமுகமும், மலைச் சரிவு நிலப் பயிரிடு முறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் இலங்கை, மொரீசியஸ், பிஜி, மலேயா, கரீபியன் தீவுகள், நேட்டால், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் அதிகமான தொழிலாளர் தேவையை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் அடிமைகளே பயன்படுத்தப்பட்டார்கள். கம்பெனி அரசு 1843இல் இந்தியாவில் அடிமை முறையை ஒழித்த பின் ஒப்பந்தக் கூலிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின் கீழ், தொழிலாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்குப் பணியமர்த்தப்பட்டு முடிவில் பயணச் செலவு வழங்கப்பட்டவுடன் தாய்நாட்டிற்குத் திரும்ப வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட பல தொழிலாளர்களும் நெசவாளர்களும் சிறிதளவேனும் பணம் ஈட்ட முடியும் என்று எண்ணி இம்முறைக்கு இசைந்தார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய நிலை அடிமை முறையைவிட மோசமானதாக விளங்கியது. காலனி அரசு நிலமற்ற விவசாயக்கூலிகளை

தாது வருடப் பஞ்சம், சென்னை

ஒரிசாவில் ஏற்பட்ட பஞ்சம்

ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்

11th History Lesson 17 Tamil Medium.indd 299 20-12-2022 15:27:36

ஏமாற்றியோ, ஆட்கடத்தல் முறையிலோ கொண்டு வர கண்காணிகள் எனும் முகவர்களை நியமித்தது. இப்புதிய அடிமைமுறையால் பாதிக்கப்பட்ட அப்பாவிகள் 150 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாய் முதன்முறையாக 1828இல் தஞ்சாவூர் பகுதியிலிருந்து இலங்கையில் அமையப்பெற்ற பிரிட்டிஷ் காப்பித் தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் பணியை விட்டு தப்பிச் சென்றார்கள். தப்பிச்செல்வது குற்றம் என்று கூறிய 1830களின் சட்ட விதிகளையும் இணைத்து நடந்த பணிநியமனம் இந்நிலைமையை மேலும் மோசமாக்கியது எனினும் பட்டினி சாவிலிருந்து தப்பிக்கப் பலர் தாமாக முன்வந்து இப்புதிய அடிமை முறையில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்.

சென்னையின் ஆளுநர் 1815ஆம் ஆண்டு இலங்கையின் ஆளுநரிடமிருந்து காப்பித் தோட்டங்களில் பணி புரிய கூலித் தொழிலாளர்களைக் கேட்டு கடிதம் ஒன்றை பெற்றார். சென்னை ஆளுநர் அக்கடிதத்தை தஞ்சாவூர் ஆட்சியருக்கு அனுப்ப, அவர் நிலைமையை ஆராய்ந்து அங்குள்ள மக்கள் நிலத்தோடு மிகுந்த பற்றுக்கொண்டவர்களாக விளங்குவதால் ஏதாவது

ஒப்பந்தக் கூலிமுறை: இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான, தண்டனைக்குரிய ஒப்பந்தமுறை ஆகும் இது. இம்முறையின்படி கூலி (இந்திய ஒப்பந்தத் தொழிலாளரை அழைக்கும் பெயர்) சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும். பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காகத் திரிந்தாலோ உத்தரவுக்குக் கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்தக் காலம் முடியுமுன் பணியைவிட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத் தண்டனை வழங்கவோ முடியும். ஓர் அற்பப் பிரச்சனைக்காகக்கூட சட்டச் சரத்துக்களைக்காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையிலடைக்கவோ செய்தனர். கூலி உயர்வுக்காவோ அல்லது ஒப்பந்தத்தை முறிக்கவோ செய்திட சங்கம் வைத்துப் போராட ஒப்பந்தக் கூலிச் சட்டம் தோட்டத் தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை. பாரதி தனது 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலில் பெண் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஊக்கமளிக்காவிட்டால் விஷயமில்லாமல் அவர்களை ஊரை விட்டுக் கிளப்புவது கடினம் என்று பதில் கொடுத்தார். ஆனால் அப்பகுதியைதாக்கிய இரு பெரும் பஞ்சங்கள் (1833 மற்றும் 1843 ஆம் ஆண்டுகளில்) அரசின் எந்தவித ஊக்கமோ, சலுகையோ இல்லாமல் அவர்களை இலங்கைக்குப் புலம் பெயர்த்து காப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் ஒப்பந்த முறையின் கீழ் கூலித் தொழிலாளர்களாக பணியில் அமரக் கட்டாயப்படுத்தின. கிட்டத்தட்ட பதினைந்து லட்சம் (14,44,407) மக்கள் 1843–1868 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சென்னையிலிருந்து இலங்கைக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாகச் சென்றார்கள்.

செல்வச் சுரண்டல்

'இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்' (Poverty and UnBritish Rule in India) என்ற நூலில் ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்த ஆட்சியாளர்கள் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதை தாதாபாய் நௌரோஜி விளக்குகிறார். ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்தவர்கள் கொள்ளையடித்து தங்கள் நாடுகளுக்குத் திரும்பச் சென்று விட்டார்கள். சந்தேகமில்லாமல் அவர்கள் மிகுந்த ரணங்களை ஏற்படுத்தினார்கள் என்றபோதும் செயலூக்கம் கொண்ட இந்தியா சிறிது காலத்தில் மீண்டெழுந்தது. அவ்வாறல்லாமல் படையெடுத்தோர் ஆட்சியாளர்களாக இந்த மண்ணில் குடியமர்ந்த போது அவர்கள் ஆட்சி முறை எவ்வாறு இருந்த போதும் இங்கிருந்து பொருட்கடத்தலோ, நன்னடத்தை சீர்கேடோ ஏற்படவில்லை. ஆங்கிலேய ஆட்சி இதிலிருந்து வேறுபடுகிறது. பொதுப்பணத்தில் நடத்தப்பட்ட முதற்போர்கள் பெரும் கடன் சுமையை ஏற்படுத்தின என்பதோடு காயத்தை ஆறவிடாமல் உயிர் பாய்ச்சும் உதிரத்தை உறிஞ்சும் போக்கில் தொடர் சுரண்டலே நடைபெற்றது. பழைய ஆட்சியாளர்கள் கசாப்புக்காரர் போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெட்டினர், ஆனால் ஆங்கிலேயரோ விஞ்ஞான அறிவோடு அறுவை சிகிச்சை நிபுணர்கள் கத்தியால் நேரடியாக இதயத்தை வெட்டினாலும், வடு தெரியாதவாறு நேர்த்தியைக் கையாளுவதோடு நாகரீகம், வளர்ச்சி போன்ற சொல்லாடல்களை பயன்படுத்திக் காயத்தை மறைக்கிறார்கள்.


தாதாபாய் நௌரோஜி

நௌரோஜி தன் வாதத்தில் இந்தியாவிலிருந்து பெருந்தொகை உள்நாட்டின் செலவுக் கட்டணம்

11th History Lesson 17 Tamil Medium.indd 300 20-12-2022 15:27:36

(Home Charges) என்ற வகையில் இங்கிலாந்து போய்ச் சேர்கிறது என்கிறார். உள்நாட்டு செலவுக் கட்டணம் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியது.

- கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட இலாபம்
- ஐரோப்பிய அதிகாரிகள், ஐரோப்பிய வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் போன்றோரின் சம்பளம், சேமிப்பு என்ற வகையில் இங்கிலாந்தில் வரவு வைக்கப்பட்டத் தொகை.
- இராணுவத்திலிருந்தும், குடிமைப் பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்றோருக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத் தொகை.
- இலண்டனில் அமைந்திருந்த 'இந்திய அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கும் செயலருக்குமான வேண்டிய பெருஞ் சம்பளம்.
- இந்தியாவில் நிகழ்ந்த போர்களுக்கான செலவுகள், போர் நடத்துவதற்காக வங்கியில் பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் இருப்புப்பாதை அமைக்க ஏற்பட்ட செலவுகள்.

இங்கிலாந்திற்கு இந்தியா 1837இல் கொடுக்க வேண்டிய கடன் 130 மில்லியன் பவுண்டுகளாகும். அது சிறிது காலத்தில் 220 மில்லியன் பவுண்டுகளாக உயர்ந்த போது அதில் 18 சதவீதம் ஆப்கானிஸ்தானோடும், பர்மாவோடும் போர் நடத்திய வகையில் செலவு செய்ததாகச் சொல்லப்பட்டது. ஒரு அரசு அறிக்கை 1908 ஆம் ஆண்டின் நிலவரத்தைக் குறிப்பிடும்போது இருப்புப்பாதை பதிக்கும் வகையில் மட்டும் இந்தியாவின் கடன் பாக்கி 177.5 மில்லியன் பவுண்டு என்றது. இந்தியாவில் முதலீடுகள் தொய்வு நிலையை எட்டியபோது பிரிட்டிஷ் அரசு இங்கிலாந்தின் தனியாரிடமிருந்து முதலீடுகளை பெற்றுக்கொண்டது. இவ்வாறு பெறப்பட்ட முதலுக்கு உறுதியாக 5 சதவீத வட்டியை ஸ்டெர்லிங்கில் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இந்த வகையில் மட்டுமே இந்தியாவிற்கு 220 மில்லியன் பவுண்டுகள் என்ற அளவில் இழப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் நடந்த செல்வவளக் கடத்தல் (Drain of Wealth) என்று இப்போக்கை வர்ணிக்கும் தாதாபாய் நௌரோஜி இவ்வளங்கள் இந்தியாவிலேயே தங்கியிருந்தால் இந்த நாடு செழித்திருக்கும். மேலும் கூறுகையில் அவர் கஜினி முகமதுவின் கொள்ளை பதினெட்டு முறையோடு நின்றுவிட, பிரிட்டிஷாரின் கொள்ளையோ முடிவில்லாமல் தொடர்கிறது என்றார். ஆர்.சி. தத் மதிப்பீட்டில் மகாராணி விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தின் கடைசிப் பத்து ஆண்டுகளில் (1891– 1901) மொத்த வருவாயான 647 மில்லியன் பவுண்டுகளில், 159 மில்லியன் பவுண்டுகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது எனத் தெரிய வருகிறது. இது மொத்த வருவாயில் 24 சதவீதம் என்று சொல்லப்படுகிறது.

பாடச் சுருக்கம்

- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பொறுப்புகளை விடுத்து அதிகாரத்தை மட்டும் பயன்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகளை விளக்குதல்
- வாரிசு உரிமை இழப்புக்கொள்கை, துணைப்படைத் திட்டம் ஆகியன மூலம் இந்தியப் பகுதிகளை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்
- வங்காளத்தில் நிலையான நிலவரி திட்டம் மற்றும் சென்னை மாகாணத்தில் இரயத்துவாரி முறை செயல்பட்டதை விளக்குதல்
- மக்களின் வாழ்க்கையில் பொது மற்றும் நீதி நிர்வாகச் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குதல்
- கவர்னர்–ஜெனரல்களின் வளர்ச்சிப் பணிகள், சமூக, பண்பாட்டு மற்றும் கல்விச் சீர்திருத்தங்களை விளக்குதல்
- இருப்புப்பாதை தபால் தந்தி ஆகியவை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மக்களை கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறு உதவின என்பதை விளக்குதல்
- இங்கிலாந்துக்கு இந்தியாவின் செல்வ வளங்கள் கொள்ளை போனதை தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு விளக்கியது.
- கிழக்கிந்திய கம்பெனியின் சுரண்டல் கொள்கைகள் கடும் பஞ்சங்களுக்கு இட்டுச் சென்று விவசாயிகளையும், கைவினைஞர்களையும் நாட்டை விட்டு வெளியேறி ஆங்கிலேயப் பேரரசின் இதர காலனிகளில் ஒப்பந்தக் கூலிகளாக பணிசேர நிர்பந்தித்தன.

பயிற்சி

QXCR1

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. ________ இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகும்.
   (அ) பிளாசிப் போர் (ஆ) முதலாம் கர்நாடகப் போர்
   (இ) பக்சார் போர் (ஈ) வந்தவாசிப் போர்
2. ________ உடன்படிக்கையினால் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸாவின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்க நேரிட்டது.
   (அ) அலகாபாத் (ஆ) மதராஸ்
   (இ) பூனா (ஈ) புதுச்சேரி

11th History Lesson 17 Tamil Medium.indd 301 20-12-2022 15:27:36

3. ____________ வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.
(அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் (ஆ) டியூப்ளே
(இ) காரன்வாலிஸ் (ஈ) ராபர்ட் கிளைவ்

4. ____________ சட்டம் இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குழு ஆட்சியை முறைப்படுத்தியது.
(அ) ஒழுங்கு முறைச்சட்டம் (1773)
(ஆ) பிட் இந்தியச் சட்டம் (1784)
(இ) பட்டயச் சட்டம் (1813)
(ஈ) பட்டயச் சட்டம் (1833)

5. இந்தியாவில் முதல் ஆங்கிலேய அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்.
(அ) காரன்வாலிஸ் (ஆ) கானிங்
(இ) வெல்லெஸ்லி (ஈ) ஹேஸ்டிங்ஸ்

6. ______ ஜமீன்தார்களோடு காரன்வாலிஸ் நிலையான நிலவரித் திட்டத்தை மேற்கொண்டார்.
(அ) மைசூர் (ஆ) பம்பாய் (இ) வங்காளம் (ஈ) சென்னை

7. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் _________.
(அ) காரன்வாலிஸ் (ஆ) தாமஸ் மன்றோ
(இ) ராபர்ட் கிளைவ் (ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

8. தக்கர்களை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி ____.
(அ) வில்லியம் ஆதம் (ஆ) வில்லியம் ஸ்லீமேன்
(இ) ஜேம்ஸ் ஹாலந்து (ஈ) ஜான் நிக்கல்சன்

9. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின்படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் ____________.
(அ) நாக்பூர் (ஆ) அவத் (இ) ஜான்சி (ஈ) சதாரா

10. நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக வரி வசூலிப்பதை ____________ நியாயப்படுத்தியது.
(அ) இரயத்துவாரி சட்டம்
(ஆ) பிட் இந்தியச் சட்டம்
(இ) நிலையான நிலவரித் திட்டம்
(ஈ) சித்திரவதைச் சட்டம்

11. ____________ இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.
(அ) காரன்வாலிஸ் (ஆ) வில்லியம் பெண்டிங்
(இ) மெக்காலே (ஈ) தாமஸ் மன்றோ

12. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ____________.
(அ) 1837 (ஆ) 1861 (இ) 1844 (ஈ) 1857

13. ____________ என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி எனும் உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.
(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்
(ஆ) வில்லியம் ஜோன்ஸ்
(இ) ராஜா ராம்மோகன் ராய்
(ஈ) தயானந்த சரஸ்வதி

14. தென் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து 1856ல் இராயபுரத்திலிருந்து ____________ வரை இயக்கப்பட்டது.
(அ) வாணியம்பாடி (ஆ) காட்பாடி
(இ) விழுப்புரம் (ஈ) ஆற்காடு

15. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு
(அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
(ஆ) துணைப்படைத் திட்டத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவ வளங்களும் செயல்திறனும் குறைந்தன.
(இ) வெல்லெஸ்லி பிரபுவால் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதரசா (இஸ்லாமிய கல்வி நிறுவனம்) தொடங்கப்பட்டது.
(ஈ) டல்ஹெளசி பிரபு மார்ச் 1835இல் கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

16. **கூற்று:** ஆங்கிலேய அரசு அணைகளைக் கட்டுவதற்கான பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டது.
காரணம்: 19ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகக் கடைசி கால் நூற்றாண்டில் அதிகமான பஞ்சங்கள் நிலவின.
(அ) கூற்று சரி; காரணம் தவறு
(ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
(இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
(ஈ) கூற்று தவறு; காரணம் சரி

17. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?
(அ) கங்காதர ராவ் – ஜான்சி
(ஆ) ரகுஜி போன்ஸ்லே – நாக்பூர்
(இ) ஷாஜி – சதாரா
(ஈ) சிந்தியா – கோலாப்பூர்

18. பொருத்துக
(i) ஆர்தர் காட்டன் – 1. சமஸ்கிருத கல்லூரி
(ii) வில்லியம் ஸ்லீமேன் – 2. கொள்ளிடம்
(iii) வில்லியம் பெண்டிங் – 3. தக்கர்களை அடக்குதல்
(iv) காரன்வாலிஸ் – 4. சதி ஒழிப்புச் சட்டம்
(அ) 4, 1, 2, 3 (ஆ) 2, 3, 4, 1
(இ) 3, 2, ,1, 4 (ஈ) 2, 1, 4, 3

11th History Lesson 17 Tamil Medium.indd 302 20-12-2022 15:27:36

II. குறுகிய விடை தருக

1. 1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டத்தை விவரி.
2. ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. மாகாணம் மற்றும் மாநிலம் – வேறுபடுத்துக.
4. இந்தியக் குடிமைப் பணிக்கு காரன்வாலிசின் பங்களிப்பினைப் பற்றிக் கூறுக.
5. ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி குறித்து எழுதுக.
6. டாக்காவின் மஸ்லின் துணி பற்றி ஓர் சிறுகுறிப்பு வரைக.
7. "செல்வவளங்கள் நாட்டை விட்டு வெளியேறியது இந்தியாவை ஏழ்மையாக்கியது" – எவ்வாறு?

III. சுருக்கமான விடை தருக

1. இரட்டை ஆட்சி முறை
2. ஜமீன்தார்கள், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலங்களுக்குப் பரம்பரை உரிமைகளை எவ்வாறு பெற்றனர்
3. வாரிசு உரிமை இழப்புக் கொள்கை
4. காரன்வாலிஸின் நீதித்துறை நிர்வாகம்
5. சார்லஸ் உட் அறிக்கை
6. பிண்டாரிகள் மற்றும் தக்கர்கள்
7. இந்திய கைத்தறி நெசவாளர்கள் மீது தொழிற்புரட்சியின் தாக்கம்
8. ஒப்பந்தக் கூலிமுறை

IV. விரிவான விடை தருக

1. வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.
2. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது?
3. 1865 ஆம் ஆண்டு இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கான சூழ்நிலைகளை விவரி. அதன் விளைவுகள் யாவை?

செயல்பாடுகள்

1. ஆங்கிலேயர் கால இருப்புப் பாதை மற்றும் தபால் தந்தி முறையினை இன்றைய நவீன இந்தியாவின் இருப்புப் பாதை மற்றும் தபால் தந்தி முறையோடு ஒப்பிடுக.
2. இந்தியாவில் ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்தின் நிறை குறைகளை பற்றி விவாதிக்க.

ஒப்படைப்பு

1. ஆங்கிலேய இந்தியாவில் இங்கிலாந்திற்கு வடிகாலான செல்வவளம் குறித்ததோர் விரிவான அறிக்கையைத் தயார் செய்க.
2. "இந்திய இருப்புப் பாதைத் திட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில் உருவானதாகும்". இத்துறையில் தற்போதைய இருப்புப் பாதை வளர்ச்சியை ஒப்பிட்டு விவரி.

மூலநூல்கள்

1. Michael Edwardes, *British India 1772-1947*, Rupa & Co, 1993.
2. Dharma Kumar, *Land and Caste in South India*, Cambridge University Press, 1965.
3. Dharma Kumar and Tapan Raychaudhuri (eds), *The Cambridge Economic History of India*, Cambridge University Press, 2008.
4. L.S.S. O'Malley, *Modern India and the West*, OUP, 1968.
5. Sarada Raju, *The Agrarian Structure of the Madras Presidency: Impact of British Administration*, University of Madras.
6. William Digby, *Prosperous British India*, New Delhi: Sagar Publications, 1969.
7. Geoghegan, *Report on Coolie Emigration from India*, 1874.
8. Madhav Gadgil and Ramachandra Guha, *This Fissured Land*, OUP, 1992.
9. Naoroji, *Poverty and Un-British Rule in India*, Publication Division, Govt. of India.

கலைச்சொற்கள்

செயல்படுத்தும் விதமாக	in pursuance	a follow up
அறுவைக் கத்தி	scalpel	surgical knife
இராணுவப் பிரிவு	contingent	a part of a military force
விட்டுக் கொடுத்தல்	ceded	granting of some possessions
ஒப்புயர்வற்ற	paramount	supreme
குதிரைக்கு லாடமடிப்பவர்	farrier	a person who makes and fits metal plates for horse's feet
கொடுமையான	draconian	heartless
கிளர்ச்சி	insurrection	rebellion
விழுங்குதல்	devoured	to eat or swallow something eagerly
சூறையாடுதல்	pillage	loot expecially during war

11th History Lesson 17 Tamil Medium.indd 303 20-12-2022 15:27:37

அலகு 18

ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள்

X9YAU

கற்றல் நோக்கங்கள்

கீழ்க்கண்டவை பற்றி அறிதல்

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு மைசூர் சுல்தான்களின் தொடக்ககால எதிர்ப்புகள்
- தென்னிந்தியாவில் பாளையக்காரர் முறை நிறுவப்படுதலும் பாளையக்காரர்களின் கிளர்ச்சியும்
- கொங்குப் பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சியும் அரசுரிமை மறுக்கப்பட்ட ஏனைய ஆட்சியாளர்களின் வேலூர் புரட்சியும்
- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி, வட்டிக்கடைக்காரர்கள், ஜமீன்தார்களுக்கு எதிரான பழங்குடியினர், விவசாயிகளின் எழுச்சிகள்
- 1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி; அதன் முடிவில் கம்பெனியின் அதிகாரத்தை ஆங்கில அரசு கைக்கொள்ளுதல்.

அறிமுகம்

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பலருடைய ஆட்சிப்பகுதிகளை வெற்றி கொண்டதும் தங்களது எல்லையை விரிவுப்படுத்திக்கொண்டே போனதும் தொடர்ச்சியான பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன. அவர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மன்னர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள், தங்கள் ஆட்சிப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் ஆகியோரால் இத்தகைய கிளர்ச்சிகள் ஏற்பட்டன. வரலாற்றாசிரியர்கள் இதை ஆரம்பநிலை எதிர்ப்பு என்று குறிப்பிடுகிறார்கள். உடைமைகள் பறிக்கப்பட்ட விவசாயிகள், பழங்குடிகள் ஆகியோரின் எழுச்சியும் இத்தகைய கிளர்ச்சிகளையொட்டித் தோன்றின. வேளாண் உறவுகளிலும், நில வருவாய் முறையிலும், நீதி நிர்வாகத்திலும் ஆங்கிலேயர் செய்த மிக விரைவான மாற்றங்கள் பற்றி முந்தைய பாடம் விரிவாகக் கூறியுள்ளது. இம்மாற்றங்கள் வேளாண் பொருளாதார அமைப்பில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தின. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும் அவதிப்பட்டார்கள். எனவே, மனக்கொதிப்பில் இருந்த இந்திய ஆட்சியாளர்கள் கலகத்தில் இறங்கியபோது, அவர்களுக்கு விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரின் ஆதரவும் இயல்பாகவே கிடைத்தது. அக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் நடந்த நிகழ்வுகளும் 1857 ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சியும் இப்பாடத்தில் விவரிக்கப்படுகின்றன.

18.1 மைசூர் சுல்தான்களின் எதிர்ப்பு

ஹைதர் அலியின் எழுச்சி

மைசூர், விஜயநகரப் பேரரசின் கீழ் நிலமானிய முறையில் இயங்கிய ஒரு சிறு அரசாக இருந்தது. 1565இல் விஜயநகரப் பேரரசு வீழ்ந்ததற்குப் பிறகு உடையார் வம்சத்தினர் சுதந்திரமான ஆட்சியாளர் ஆயினர். ராஜா உடையார் 1578இல் அரியணை ஏறினார். 1610இல் தலைநகரம் மைசூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு மாற்றப்பட்டது. அப்போதிருந்து உடையார் வம்சத்தினரின் ஆட்சி 1760 வரை தொடர்ந்தது. ஹைதர் அலி அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை உடையார்களின் ஆட்சி நீடித்தது.

ஹைதர் அலியின் தந்தை ஃபதே முகம்மது கோலார் பகுதியின் கோட்டைக் காவற்படைத் தளபதியாக (பௌஜ்தார்) இருந்தார்.

11th History Lesson 18 Tamil Medium.indd 304 10-02-2023 12:59:18

அவரது இறப்புக்குப் பின் ஹைதர் அலி தன் தலைமைப்பண்புகள் மூலம் படையின் உயர்பதவிகளை விரைவாக அடைந்தார். 1755க்குள் அவர் 100 குதிரைப்படை வீரர்களையும் 2000 காலாட்படை வீரர்களையும் நிர்வகிக்கும் அளவுக்கு அதிகாரம் படைத்த பொறுப்பைப் பெற்றிருந்தார். மைசூரில் இராணுவத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கினார். மராத்தியர் ஆக்கிரமித்த மைசூர் அரசின் சில பகுதிகளை ஹைதர் மீட்டெடுத்தார். இதற்காக அவர் 'ஃபதே ஹைதர் பகதூர்' (வீரமும் வெற்றியும் கொண்ட சிங்கம்) என்ற பட்டம் பெற்றார். 1760இல் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டு சேர்ந்தார். ஆனால் அவர் தனது சொந்த மண்ணில் மராத்தியரால் உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் ஹைதர் அதை வெற்றிகரமாக முறியடித்தார். அதற்குப் பிறகு அவரே நடைமுறையில் மைசூரின் தளவாயாக இருந்து உண்மையான ஆட்சியாளர் ஆனார். 1770இல் மைசூர் அரசர் நஞ்சராஜா நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். அதில் ஹைதருக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் கிளம்பியது. இந்த நிகழ்வுக்குப் பிறகு உடையார் வம்ச அரசர்கள் பெயரளவிலான ஆட்சியாளர்களாக ஆயினர். ஹைதரே உண்மையான அரச அதிகாரத்துக்கு உரியவர் ஆனார்.

ஹைதர் அலி

ஹைதர் அலியும் ஆங்கிலேயரும்

கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையைப் பெற்ற (வங்காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றில் முகலாய அரசுக்குப் பதிலாக வரி வசூலிக்கும் உரிமை) பிறகு, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளைக் கூடுதல் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியிருந்தது. கம்பெனி போதுமான வலிமையுடன் இல்லாததால், இந்திய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்த்து வந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களைத் தக்கவைத்துக்கொள்ள இடைப்பட்ட நாடுகளை (buffer states) வாரன் ஹேஸ்டிங்ஸ் சுற்றுவேலிக் கொள்கை மூலம் தொடர்ந்து அனுமதித்தார். எனினும் கம்பெனி கர்நாடக அரசியல் விவகாரங்களினால் ஈர்க்கப்பட்டது. நவாப் பதவிக்காகத் தொடர்ச்சியாக நடைபெற்ற மோதல்களே இதற்குக் காரணம். ஆங்கிலேய வணிகர்கள் இதை இந்திய அரசியலில் நேரடியாகத் தலையிடுவதற்கான ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதினார்கள். ஆனால் அவர்களின் முயற்சிக்கு ஹைதர் அலி, ஹைதராபாத் நிஜாம் ஆகிய வலிமைமிக்க சக்திகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.

முதலாம் மைசூர் போர் 1767–69

மூன்றாம் கர்நாடகப் போரில் வங்காளத்திலிருந்து படைகளை வழிநடத்திய கர்னல் ஃபோர்டே 1759இல் மசூலிப்பட்டிணத்தைக் கைப்பற்றினார். இது ஜாலாபத் ஜங் உடனான உடன்படிக்கைக்கு வழிவகுத்தது. அவர் 'வட சர்க்கார்கள்' என அறியப்படும் கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. வட சர்க்கார்கள் ஆங்கிலேயர் வசம் ஆனதை முகலாயப் பேரரசர் 1765இல் அலகாபாத் உடன்படிக்கை மூலம் அங்கீகரித்தார். ஆனால் 1766இல் ஆங்கிலேயர் இப்பகுதியைக் கையகப்படுத்தியபோது பிரச்சனை தோன்றியது. இந்தப் பகுதிகளை ஆங்கிலேயர் கையகப்படுத்த நிஜாம் அலி எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்க வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக அவருக்கு எதிரிகளிடமிருந்து ஆபத்து வரும்போது ஆங்கிலேயர் உதவிக்கு வருவார்கள் என்றும் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வாக்குறுதி மூலம் ஹைதர் அலிக்கு எதிராக நிஜாம் அலிக்கு உதவத் தாங்கள் தயாராக இருப்பதை உணர்த்தினார்கள். ஆங்கிலேயர் பின்னாட்களில் பின்பற்றிய துணைப்படைத்திட்டத்துக்கு இந்நடைமுறை காரணியாக அமைந்தது. நிஜாம் அலி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டாலும், 1767இல் அவருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே ஓர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது. எனவே ஆங்கிலேயர் ஹைதருக்கு எதிராக போரை அறிவித்தார்கள். இது முதலாம் ஆங்கிலேய மைசூர் போர் அல்லது முதலாம் மைசூர் போர் என அறியப்படுகிறது.

பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயரின் ஒரு படை மேற்குக்கடற்கரையின் மங்களூரையும் அதைச் சுற்றியிருந்த பிற பகுதிகளையும் கைப்பற்றியது. ஆனால் ஹைதர் இவற்றை மீட்டெடுத்தார். பெங்களூரைக் கைப்பற்ற நினைத்த ஆங்கிலேயரின் முயற்சி வெற்றி பெறவில்லை. 1768இல் ஹைதர் பாராமஹால் (சேலம் மாவட்டம்) மீது திடீர் தாக்குதல் தொடுத்து, கேப்டன் நிக்சனைத் தோற்கடித்துக் கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார். இதற்கிடையே ஹைதரின் தளபதி ஃபசலுல்லா கான் மதுரையிலும் திருநெல்வேலியிலும் படையை எந்த எதிர்ப்புமின்றி வழிநடத்திச் சென்றார். ஹைதர் தஞ்சாவூருக்கும் அங்கிருந்து கடலூருக்கும்

11th History Lesson 18 Tamil Medium.indd 305 10-02-2023 12:59:18

முன்னேறிச் சென்றார். ஆங்கிலேயர் மீதான தாக்குதலை நிறுத்த ஹைதர் விரும்பாவிட்டாலும், மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுறுத்தல் அவரை ஆங்கிலேயருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளியது. அவருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட சென்னை உடன்படிக்கையில் இருந்த நிபந்தனைகள் வருமாறு: இரு தரப்பும் கைப்பற்றிய பகுதிகளை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். கரூர் மட்டும் ஹைதரின் வசம் இருக்கும். தங்களைத் தற்காத்துக்கொள்ள நடைபெறும் போர்களில் இரு தரப்பும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். இது மராத்தியருக்கு எதிராக ஆங்கிலேயர் உதவுவதற்கு கடமைப்பட்டவர்கள் என்பதையே குறித்தது. ஆனால் ஹைதருக்கும் மராத்தியருக்கும் எதிரான சண்டையின்போது தேவையான நேரத்தில் ஆங்கிலேயரின் உதவி கிடைக்காததால் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினார்.

இரண்டாம் மைசூர் போரும் ஹைதரும் 1780–84

அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு பிரான்ஸ் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை (1778) செய்துகொண்டது. எனவே பிரிட்டன் பிரான்ஸுக்கு எதிரான போரை அறிவித்தது. இதைப் போலவே ஸ்பெயினும் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை மேற்கொண்டு, இங்கிலாந்துக்கு எதிராகப் போரில் (1779) இறங்கியபோது இங்கிலாந்து தனிமைப்பட்டது. இந்தியாவிலும் பிரெஞ்சுப்படையின் ஆதரவுடன் நிஜாம் அலியும் மராத்தியரும் கைகோத்துச் செயல்பட்ட போக்கு ஆங்கிலேயருக்கு நெருக்கடியை அதிகப்படுத்தியது. ஹைதர் அலி இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடகத்திற்குப் படையெடுத்தார்.

ஹெக்டர் மன்றோ தலைமையிலான படையுடன் சேர்ந்து செயல்பட வேண்டிய கர்னல் பெய்லி ஹைதரின் திடீர்த்தாக்குதலில் கடுமையாகக் காயமுற்றார். இது மன்றோவை சென்னை நோக்கிச் செல்ல வைத்தது. ஹைதர் ஆற்காட்டைக் கைப்பற்றினார் (1780). இந்நிலையில் சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வந்தவாசிப் போரில் வெற்றிபெற்ற அயர்கூட் மதராஸைக் கடல்வழியே முற்றுகையிட வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்டார். ஹைதருக்கு எதிராக வெற்றியை ஈட்டிய கூட் புதுச்சேரியை நோக்கி நகர்ந்தார். இதற்கிடையே ஹைதர் தஞ்சாவூர் அரசைத் தன் பிடிக்குள் கொண்டுவந்தார். கூட் பரங்கிப்பேட்டையை (Porto Novo) அடைந்து, ஹைதருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் வெற்றி பெற்றார். ஹைதர் அங்கு நடைபெற்ற மோதலில் ஆங்கிலேயரிடம் பிடிபடுவதிலிருந்து நூலிழையில் தப்பினார். ஹைதரின் மகன் திப்பு சுல்தான் கர்னல் ப்ரெய்த்வெயிட்டை கும்பகோணம் அருகே தோற்கடித்துச் சிறைப்பிடித்தார். மைசூர் சுல்தானின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஜெனரல் மேத்யூஸ் மங்களூரை நோக்கி ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். இந்த நடவடிக்கை ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடி திப்பு சுல்தானைக் கர்நாடகத்தை விட்டு மேற்குக்கடற்கரையை நோக்கி நகர வைத்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹைதரின் மரணம் (1782), அமெரிக்கச் சுதந்திரப் போரின் முடிவில் கையெழுத்தான பாரிஸ் உடன்படிக்கை (1783), நீண்ட நாட்களுக்கு நீடித்த மங்களூர் முற்றுகை ஆகிய நிகழ்வுகள் திப்பு சுல்தானுக்கு எதிரான ஆங்கிலேயரின் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாக இருந்தன. கர்னல் லேங் கரூரையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றினார். கர்னல் ஃபுல்லர்ட்டன் பாலக்காட்டையும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினார். அடுத்ததாக ஸ்ரீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அவர் முன்னேறி வந்தபோது திப்பு சுல்தான் சமாதானத்துக்கு விருப்பம் தெரிவித்து, முற்றுகையைத் தவிர்த்தார். 1784 மார்ச் மாதத்தில் மங்களூர் உடன்படிக்கை கையெழுத்தானது. அதன்படி, இரு தரப்பினரும் அதுவரை வென்ற பகுதிகளைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் போரில் கைதானவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மூன்றாம் மைசூர் போர் 1790–92

இடைப்பட்ட காலத்தில் காரன்வாலிஸ் கவர்னர் ஜெனரல் ஆகப் பொறுப்பேற்றார். அவர் திப்பு சுல்தானைப் பழிவாங்கும் விதத்தில் நடந்துகொண்டார். தெற்கில் இரு மிகப்பெரும் சக்திகளாக விளங்கிய ஹைதராபாத் நிஜாமும் மராத்தியரின் கூட்டமைப்பும் ஆங்கிலேயரின் கூட்டாளிகளாக இதில் செயல்பட்டார்கள். திப்புவுடனான போருக்குத் தேவைப்பட்ட நிதியாதாரங்களையும் கூடவே தன் படைகளையும் ஹைதராபாத் நிஜாம் ஆங்கிலேயருக்கு வழங்கினார். 1782இல் முதல் ஆங்கிலேய-மராத்தியப் போருக்குப் பின் ஆங்கிலேயருடன் சால்பை உடன்படிக்கை செய்துகொண்ட மராத்தியர்

திப்பு சுல்தான்

11th History Lesson 18 Tamil Medium.indd 306 10-02-2023 12:59:18

ஆங்கிலேயரை ஆதரித்தார்கள். ஆங்கிலேயரின் கை ஓங்கியது.

திப்பு கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் 1787இல் பாரிஸுக்கும் தூதுக்குழுவை அனுப்பினார். ஆங்கிலேயருக்கு எதிராகத் தன்னை வலுப்படுத்திக்கொள்வதற்காகத் திப்பு இந்த இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டார். பிரெஞ்சு அரசர் பதினாறாம் லூயி தூதுக்குழுவை நட்புறவுடன் நடத்தினாலும், திப்பு எதிர்பார்த்த ஆதரவு குறித்து வெற்று வாக்குறுதியையே அளித்தார்.

பிரிட்டனுடன் நட்பு பாராட்டிய திருவிதாங்கூர் மீதான திப்புவின் தாக்குதலும் கொடுங்களூரைக் கைப்பற்றியதும் கம்பெனி அரசுடனான போருக்கான அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு மூன்றாம் ஆங்கிலேய–மைசூர் போர் தொடங்கியது.

கர்னல் ஹார்ட்லி திப்புவின் தளபதி ஹுசைன் அலியைக் கள்ளிக்கோட்டையில் தோற்கடித்தார். இதற்குப் பதிலடியாகத் திப்பு திருவண்ணாமலையைக் கைப்பற்றினார். புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநரின் ஆதரவைப் பெறுவதற்குத் திப்பு எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. காரன்வாலிஸ் தானே வேலூரிலிருந்து படையெடுத்து வந்து, பெங்களூரை அடைந்தார். வழியில் அவர் திப்புவை எதிர்கொள்ள நேர்ந்தது. ஸ்ரீரங்கப்பட்டணம் அருகே திப்பு தோற்கடிக்கப்பட்டார். படையெடுப்பின்போது தேவைப்படும் பொருட்களின் பற்றாக்குறையால் காரன்வாலிஸ் பின்வாங்க வேண்டியிருந்தது. இந்தத் தருணத்தில் மராத்தியர் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள். கூடுதல் வலிமை பெற்ற ஆங்கிலேயப்படை ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டது. அதன் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திப்பு அமைதி உடன்படிக்கைக்கு அழைப்பு விடுத்தார். உடன்படிக்கையில் காரன்வாலிஸ் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டை

ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்; போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும்; அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக்கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கூட்டணியாளரிடையே திப்புவிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளும் இழப்பீட்டுத்தொகையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆங்கிலேயர் மலபார், திண்டுக்கல், பாராமஹால் ஆகிய பகுதிகளைப் பெற்றார்கள். திப்பு குடகுப் பகுதியை இழந்தார். அதன் அரசர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிய வேண்டிய சிற்றரசர் ஆனார். திப்புவின் அதிகாரம் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. சென்னையில் பிணைக்கைதிகளாகயிருந்த திப்புவின் மகன்கள் அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு 1794 ஆம் ஆண்டு மே 29 அன்று திருப்பியனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட அவமானத்தையும் பொருளாதார இழப்பையும் திப்புவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மைசூர் அரசர் ஒன்பதாம் சாமராஜ் 1796இல் இறந்தார். அடுத்த அரசரை நியமிக்கும் முறையான வழக்கத்தைத் திப்பு பின்பற்றவில்லை. அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்த அதே நேரத்தில், பிரெஞ்சு காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த மொரீஷியஸின் கவர்னர் மாலரிக் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பிரான்ஸிடமிருந்து உதவி கிடைத்த பிறகு திப்பு ஆங்கிலேயர் மீதான போர் குறித்து அறிவிப்பார் என்பதே மாலரிக்கின் அறிவிப்பாகும். திப்பு 1798 ஜுலையில் பிரான்சு ஆட்சியை நிர்வகித்த இயக்குநரகத்துடனும் அதற்குப் பிறகு அங்கு ஆட்சியைப் பிடித்த நெப்போலியனுடனும் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், அவர் வெல்லெஸ்லியுடனான கடிதத்தொடர்பில் காட்டிய நழுவல் ஆகியவை வெல்லெஸ்லியை மீண்டும் திப்புவுக்கு எதிரான போரை அறிவிக்கச் செய்தது.

நான்காம் மைசூர் போர் 1799

திப்பு தனது படையையும் நிதியாதாரங்களையும் வலுப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். 1796இல் பாரிஸுக்கு மீண்டும் தூதர்களை அனுப்பினார். 1797இல் வருகை புரிந்த பிரெஞ்சுத் தூதுக்குழுவானது மொரிஷியஸிலிருந்து பிரெஞ்சு ஆதரவு கொடுக்கப்படும் என உறுதியளித்தது. பிரான்சில் இருப்பதைப் போல ஸ்ரீரங்கப்பட்டணத்திலும் ஜேக்கோபியர் கழகம் தொடங்கப்பட்டது. மைசூர் சுல்தானுக்கும் பிரெஞ்சு

11th History Lesson 18 Tamil Medium.indd 307 10-02-2023 12:59:18

அரசுக்குமான நல்லுறவைத் தெரிவிக்கும் விதத்தில் பிரெஞ்சு குடியரசின் கொடி ஏற்றப்பட்டது.

பிரான்சுடன் திப்பு ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியால் கோபமுற்ற புதிய கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி துணைப்படைத்திட்டத்தின் கீழ் மைசூரில் ஆங்கிலேயப் படை ஒன்றை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தினார். திப்பு இதை ஏற்கவில்லை. ஆங்கிலேயர் நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரை 1799இல் அறிவித்தனர். ஜெனரல் டேவிட் பெய்ர்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மீது திடீர் தாக்குதல் தொடுத்துக் கைப்பற்றினார். அமைதி உடன்படிக்கைக்கான திப்புவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இறுதி மோதலில் காயமுற்ற திப்பு ஓர் ஐரோப்பியப் படைவீரனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திப்புவை அகற்றியதும் உடையார் வம்சத்தினரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதும் தென்னிந்தியாவில் கம்பெனி ஆட்சியின் உண்மையான தொடக்கமாக அமைந்தன. திப்புவின் மகன்கள் முதலில் வேலூரில் சிறைவைக்கப்பட்டார்கள். 1806இல் வேலூர் கிளர்ச்சிக்குப் பிறகு கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயருக்கு எதிரான மைசூர் சுல்தான்களின் வீரம் செறிந்த மோதல்கள் முடிவுக்கு வந்தன.

18.2 தென்னகப் பாளையக்காரர்களின் தொடக்ககால எதிர்ப்பு

பாளையங்களின் தோற்றம்

விஜயநகரப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, அரசப்பிரதிநிதியாக மதுரைக்கு வந்த நாகம நாயக்கரும் அவருடைய மகன் விஸ்வநாத நாயக்கரும் மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றின் சுதந்திரமான ஆட்சியாளர்களாகத் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டனர். தளவாய் அரியநாத முதலியாரின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் முன்னாள் பாண்டியப் பேரரசின் அனைத்து சிற்றரசுகளும் வகைப்படுத்தப்பட்டு, 72 பாளையங்களாக மாற்றப்பட்டன. விஸ்வநாத நாயக்கர் மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பினார். அதில் 72 அரண்கள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைமையின் கீழ் இருந்தன.

பாளையக்காரர் அரசருக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகச் செலுத்துவதற்கும் தேவையானபோது படைவீரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர். இந்தக் கடமைகளையும் பிற பணிகளையும் செய்வதற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. அக்கிராமங்களில் அவர் வரிவிதித்து நிதி திரட்டினார். இத்துடன் கூடுதலாகப் பல பட்டங்களும் சிறப்புரிமைகளும் பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்டன. பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல் பிரச்சனைகளிலும் குற்றவியல் பிரச்சனைகளிலும் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு.

புவியியல் அடிப்படையில், பரவியிருந்த பாளையங்களை மேற்குப் பாளையங்கள், கிழக்குப் பாளையங்கள் எனப் பிரிக்கலாம். மறவர் குறுநில மன்னர்களிடமிருந்த பாளையங்கள் பெரும்பாலும் திருநெல்வேலியின் மேற்குப்பகுதியில் அமைந்திருந்தன. கிழக்குப் பகுதியில் உள்ள கரிசல் நிலப்பரப்புகளில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள். அவை பாளையக்கார நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.

பாளையக்காரர்களின் கிளர்ச்சி

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிராமங்களை அடகு வைத்து ஏராளமாகக் கடன் வாங்கியிருந்த ஆற்காடு நவாப் அங்கெல்லாம் நிலவரி வசூல்செய்யும் உரிமையை கம்பெனிக்கு அளித்தார். கான் சாகிப் என்று அழைக்கப்பட்ட யூசுப்கான் கிழக்கிந்திய கம்பெனி படையில் இந்திய வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் படைத் தலைமையுடன் வரி வசூலிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஆற்காடு நவாபின் வேண்டுகோளின்படி, 1755இல் அவருக்கு உதவி

பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டுவந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது. இந்த முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.

11th History Lesson 18 Tamil Medium.indd 308 10-02-2023 12:59:18

செய்ய 500 ஐரோப்பியரும் 200 சிப்பாய்களும் அடங்கிய படை மதுரை, திருநெல்வேலி பகுதிகளுக்குள் நுழைய உத்தரவிடப்பட்டது. பாளையக்காரர்களின் அதிகாரத்தில் கம்பெனி நிர்வாகத்தின் குறுக்கீடு கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியது.

மாபுஸ்கான் (ஆற்காடு நவாபின் மூத்த அண்ணன்) இந்தப் பகுதிகளில் நவாபின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மாபுஸ்கான் கர்னல் ஹெரானுடன் திருநெல்வேலிக்குப் படையெடுத்துச் சென்றார். அவர்கள் மதுரையை எளிதாகக் கைப்பற்றினர். பாஞ்சாலக்குறிச்சி பாளையத்தை ஆட்சி செய்த கட்டபொம்மனின் அதிகாரத்தைக் குறைப்பதற்காகச் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டு, பிறகு அது திரும்ப வரவழைக்கப்பட்டது. ஹெரான் ஊர் திரும்பும் வழியில் நெற்கட்டும் செவல் கோட்டை மீது திடீர் தாக்குதல் தொடுக்க உத்தரவு வந்தது. அந்தப் பாளையத்தை ஆட்சி செய்த புலித்தேவர் மேற்குப் பாளையக்காரர்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார். பீரங்கி உள்ளிட்டவற்றின் பற்றாக்குறை, படைவீரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய தேவை ஆகிய காரணங்களால் ஹெரானின் தாக்குதல் கைவிடப்பட்டது. அவரது படை மதுரைக்குத் திரும்பியது.

நவாப் சந்தா சாகிப்பின் பிரதிநிதிகளான மியானா, முடிமய்யா, நபிகான் கட்டக் ஆகிய பதான் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மதுரையையும் திருநெல்வேலியையும் கண்காணித்து வந்தனர். அவர்கள் ஆற்காடு நவாப் முகமது அலிக்கு எதிராகத் தமிழ்ப் பாளையக்காரர்களை ஆதரித்தனர். அவர்களுடன் புலித்தேவருக்கு நெருக்கமான உறவு இருந்தது. ஊற்றுமலை, சுரண்டை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, ஊர்க்காடு, சேத்தூர், கொல்லம்கொண்டான், வடகரை ஆகிய பாளையங்களின் ஆட்சியாளர்களும் புலித்தேவரின் கூட்டமைப்பில் சேர்ந்தனர். திருவிதாங்கூருக்குக் களக்காடு திரும்பத் தரப்படும் என்ற வாக்குறுதி மூலமாகப் புலித்தேவர் திருவிதாங்கூரின் ஆட்சியாளரையும் தன் கூட்டமைப்பில் சேர்த்திருந்தார்.

இன்னொரு பக்கம் ஆற்காடு நவாப் மாபுஸ்கானுக்குக் கூடுதல் படைப்பிரிவை அனுப்பினார். நவாபின் வலுப்படுத்தப்பட்ட படை திருநெல்வேலியை நோக்கிப் பயணித்தது. கம்பெனியைச் சேர்ந்த 1000 வீரர்களுடன், நவாப் மூலம் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்ட 600 வீரர்களும் இப்போது மாபுஸ்கானிடம் இருந்தார்கள். கூடவே, கர்நாடகத்திலிருந்து குதிரைப்படையினரும், காலாட்படை வீரர்களும் வந்ததால் மாபுஸ்கானின் படைபலம் அதிகரித்தது. அவர் தன் படையினரைக் களக்காட்டுக்கு அருகே நிறுத்திவைப்பதற்கு முன்பே திருவிதாங்கூரிலிருந்து வந்த 2000 வீரர்கள் புலித்தேவர் படையுடன் சேர்ந்துகொண்டார்கள். களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபுஸ்கானின் படை தோற்றது.

புலித்தேவரும் பிற பாளையக்காரர்களும் கூட்டாக, சிறப்பான திட்டமிடலுடன் காட்டிய எதிர்ப்பு ஆங்கிலேயரைத் திருநெல்வேலி விவகாரங்களில் நேரடியாகத் தலையிட வைத்தது. 1756இலிருந்து 1763 வரைக்கும், திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள். கம்பெனியால் அனுப்பப்பட்ட யூசுப் கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வந்துசேரும் வரை புலித்தேவரைத் தாக்கத் துணியவில்லை. பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி, மராத்தியர் ஆகியோருடன் ஆங்கிலேயர் போர்களில் ஈடுபட்டுவந்ததால், 1760 செப்டம்பரில்தான் பீரங்கிகள் வந்துசேர்ந்தன. யூசுப் கான் நெற்கட்டும் செவல் கோட்டையை இடிக்கும் நோக்கத்துடன் தாக்குதலை நடத்தினார். இது ஏறத்தாழ இரு மாதங்கள் நீடித்தது.

யூசுப் கானின் இயற்பெயர் மருதநாயகம். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம் சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752–54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார். ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராகப் பொறுப்பு வகித்தார். யூசுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பற்றினார். லாலியின் மதராஸ் முற்றுகை (1758–59)யின்போது யூசுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார். மதுரை கோவில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள் வசமிருந்த கோவில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.

1761 மே 16இல் நெற்கட்டும் செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய இடங்களில் இருந்த முக்கியமான கோட்டைகள் யூசுப் கான் வசமாயின. புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றியதால் பிரெஞ்சுக்காரர்களின் தலையீடு இல்லாமல் ஆனது. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவிகள் வரமுடியாத காரணத்தால், பாளையக்காரர்களின் ஒற்றுமை குலையத் தொடங்கியது. திருவிதாங்கூர், சேத்தூர், ஊற்றுமலை, சுரண்டை ஆகிய பாளையங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேய அணிக்கு மாறினர். கம்பெனி நிர்வாகத்துக்குத் தெரிவிக்காமல் பாளையக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த யூசுப் கான் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

கோட்டைகளை யூசுப் கான் கைப்பற்றிய பிறகு, எங்கோ தஞ்சம் புகுந்த புலித்தேவர் தனது பாளையத்துக்குத் திரும்பி, மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பாளையக்காரர்களைத் திரட்டத் தொடங்கினார். இம்முறை ஆங்கிலேயர் அனுப்பிய கேப்டன் கேம்பெல் நெற்கட்டும் செவல் கோட்டையை முற்றுகையிட்டு 1767இல் கைப்பற்றினார். புலித்தேவரின் இறுதிநாட்கள் குறித்த உறுதியான செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

வேலு நாச்சியார்

வேலு நாச்சியார்

இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாக இன்று அறியப்படும் பகுதியைச் சேதுபதி மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார். அவர் சிவகங்கை அரசரான முத்துவடுகர் பெரியஉடையாரை மணந்தார். அவர்களுக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் இருந்தார். வேலு நாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதும், அவர் தன் மகளுடன் தப்பித்து, திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் ஹைதர் அலியின் பாதுகாப்பில் எட்டு ஆண்டு காலம் இருந்தார். இக்காலகட்டத்தில் வேலு நாச்சியார் ஒரு படையைக் கட்டமைத்தார். ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்தார். 1780இல் இவ்விருவரின் துணையோடு ஆங்கிலேயருடன் போரிட்டு வென்றார்.

> வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக்கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து அதை அழித்தார். நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.

ஆற்காடு நவாப் வேலு நாச்சியாருடைய படை முன்னேறி வருவதைத் தடுக்கப் பல தடைகளை ஏற்படுத்தினார். எனினும் நாச்சியார் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு சிவகங்கைக்குள் நுழைந்தார். ஆற்காடு நவாப் தோற்கடிக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டார். சிவகங்கையை மீண்டும் கைப்பற்றிய நாச்சியார் மருது சகோதரர்களின் துணையுடன் இராணியாக முடிசூடினார்.

சின்ன மருது நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். 1783இல் ஆங்கிலேயர் சிவகங்கைக்கு மீண்டும் படையெடுத்து வந்தனர். இம்முறை மருது பாண்டியர் சில இராஜதந்திர நடவடிக்கைகளால் சிவகங்கையின் பாதுகாப்பை உறுதிசெய்தனர். பிற்காலத்தில் ஆங்கிலேயரின் சமரச உடன்பாட்டின்படி வேங்கண் பெரிய உடைய தேவர் சிவகங்கை அரசர் ஆனார். 1790இல் இவருக்கு மணம் முடித்துவைக்கப்பட்ட வெள்ளச்சி நாச்சியார் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்தார். வேலு நாச்சியார் நோயுற்று 1796இல் இறந்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன்

வீரபாண்டிய கட்டபொம்மன்

வேலு நாச்சியார் இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் ஆங்கிலேயருக்கு சவாலாக இருந்தபோது, வீரபாண்டிய கட்டபொம்மனின் எதிர்ப்பு வளர்ந்துகொண்டிருந்தது. கட்டபொம்மன் ஒட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த

11th History Lesson 18 Tamil Medium.indd 310 10-02-2023 12:59:19

பாளையக்காரர் ஆவார். கட்டபொம்மன் நாயக்கர் என்பது அவரது குடும்பப் பட்டமாகும். கட்டபொம்மனின் தாத்தா ஜெகவீர கட்டபொம்மன் கர்னல் ஹெரான் காலத்தில் குறுநிலமன்னராக இருந்தார். 1760இல் பிறந்த வீரபாண்டிய கட்டபொம்மன் தனது தந்தையின் இறப்புக்குப் பின் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்குப் பொறுப்பேற்றார். கம்பெனிக்கும் தென்சீமை பாளையத்தாருக்கும் தொடர்ந்து மோதல் இருந்ததால், கம்பெனிக்கு அவர்கள் கப்பம் செலுத்துவது ஒரு பிரச்சனையாகவே நீடித்தது. 1798 செப்டம்பர் மாதத்துக்கான கப்பமும் செலுத்தப்படாததால், கலெக்டர் ஜாக்சன் அவருக்கே உரிய ஆணவத்துடன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார்.

நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டதால், வரி வசூலிப்பது மிகக்கடினமான வேலை ஆனது. கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்ப விரும்பினாலும், சென்னை நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. திருநெல்வேலியிருந்த படை வீரர்களை மைசூரில் திப்பு சுல்தானுக்கு எதிராகப் போரிடுவதற்காகக் கம்பெனி ஏற்கனவே அனுப்பியிருந்தது. இந்த நிலையில் மிகவும் தொலைவிலிருந்த தெற்குப்பகுதியில் போர் செய்வது ஆபத்து எனக் கம்பெனி கருதியது. அது பிரச்னையில் தொடர்புடைய பாளையக்காரரை இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கலந்தாலோசனை செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிட்டது. அதன்படி, 1798 ஆகஸ்ட் 18 அன்று ஜாக்சன் இரு வாரங்களுக்குள் தன்னை இராமநாதபுரத்துக்கு வந்து சந்திக்கும்படி வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு, திருநெல்வேலி சுற்றுப்பயணத்தைத் துவக்கினார். பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிப்பதற்காகச் சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் அவர் தங்கியிருந்தபோது வீரபாண்டியக் கட்டபொம்மன் அவரைச் சந்திக்க முயன்றார். ஆனால் இராமநாதபுரத்தில்தான் கலெக்டரைச் சந்திக்க முடியும் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த அவமதிப்பையும் மீறி, கட்டபொம்மன் 23 நாட்களில் 400 மைல் தூரம் கலெக்டரைச் சளைக்காமல் பின்தொடர்ந்து, செப்டம்பர் 19ஆம் நாள் இராமநாதபுரத்தை அடைந்தார். கலெக்டரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு அன்றே தரப்பட்டது.

> விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது. திப்புசுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது. 'பகோடா மரத்தை உலுக்குதல்' என்ற சொலவடை இங்கிலாந்து மக்களிடையே நிலவியது. ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்கும் வாய்ப்புகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன என்ற ஐரோப்பியர்களின் அக்கால மனநிலையை இதன் மூலம் நாம் உணரலாம். தமிழில் இதனை வராகன் என்பர்.

கட்டபொம்மன் சரியாக நடந்துகொண்டதாகவும் இதன் மூலம் அவர் தன்னை அழிவிலிருந்து காத்துக்கொண்டதாகவும் ஜாக்சன் திருப்தியுடன் கூறினார். கட்டபொம்மன் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தொகையில் பெரும்பகுதியைச் செலுத்திவிட்டதையும் 1080 வராகன் மட்டுமே பாக்கி இருப்பதையும் கணக்குகளைச் சரிபார்த்து அவர் அறிந்துகொண்டார். இந்தச் சந்திப்பின்போது ஆணவக்குணம் கொண்ட ஜாக்சன் முன்னால் கட்டபொம்மனும் அவருடைய அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் நின்றபடி உரையாட வேண்டியிருந்தது. சந்திப்பின் இறுதியில் ஜாக்சன் இருவரையும் இராமநாதபுரம் கோட்டையில் தங்கும்படி கூறினார். அங்கு திடீரென வந்த வீரர்கள் கட்டபொம்மனைக் கைது செய்யவே வந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. கட்டபொம்மனும் அமைச்சரும் தப்ப முயன்றனர். கோட்டைவாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டார்கள். சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் மட்டுமே தப்ப முடிந்தது.

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் தன்னிடம் ஜாக்சன் நடந்துகொண்ட முறையே இராமநாதபுரத்தில் நடந்த மோதலுக்குக் காரணம் என்று சென்னை கவுன்சிலுக்குக் கடிதம் அனுப்பினார். இதற்கிடையே ஆளுநர் எட்வர்டு கிளைவ் கம்பெனி நிர்வாகத்திடம் கட்டபொம்மன் சரணடையும்படி அறிவிப்பு வெளியிட்டார். இவ்வாறு கட்டபொம்மன் சரணடைந்தால் நேர்மையான விசாரணை நடைபெறும் என்றும் இதற்கு உடன்படாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதன்படி, கட்டபொம்மன் கம்பெனி விசாரணைக்குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார். கலகக் குற்றச்சாட்டுகளிலிருந்து

11th History Lesson 18 Tamil Medium.indd 311 10-02-2023 12:59:19

கட்டபொம்மனை விடுவித்த குழு, கலெக்டர் நடந்துகொண்ட விதத்துக்காக அவரைக் கண்டித்தது. லூஷிங்டன் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டார். இறுதியில் ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

எனினும் கட்டபொம்மன் தனது பிரச்சனை இன்னும் தீரவில்லை என்ற கொதிப்புடன்தான் இருந்தார். இந்தச் சூழலில் மருது பாண்டியர்கள் திண்டுக்கல் கோபால நாயக்கருடனும் ஆனைமலை யாதுல் நாயக்கருடனும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இருந்தார்கள். இதே விருப்பத்துடன் இருந்த கட்டபொம்மனும் மருது பாண்டியரும் நெருக்கமானார்கள்.

கட்டபொம்மன் சிவகிரி பாளையக்காரருடனும் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். பாஞ்சாலங்குறிச்சி திறந்த சமவெளிப்பகுதியில் எளிதாகத் தாக்குதலுக்குள்ளாகும் விதத்தில் அமைந்திருந்தது. சிவகிரிக்கோட்டை மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் வலுவான அரண்களுடன் மிகப் பாதுகாப்பாக தாக்குதல், எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுதல் ஆகிய இரு நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக இருந்தது.

கட்டபொம்மனின் நிலையைப் பலப்படுத்துவதற்காகச் சிவகிரி பாளையக்காரரின் மகன் வீரபாண்டியன் தன் வீரர்களுடனும் கூட்டணியில் இருந்த பிற தலைவர்களுடனும் தளவாய் குமாரசாமி நாயக்கரின் தலைமையில் மேற்கு நோக்கி அணிவகுத்துச் சென்றார். சிவகிரிபாளையம் கம்பெனிக்குக் கட்டுப்பட்டதாக இருந்ததால், வீரபாண்டியனின் இந்நடவடிக்கையை சென்னைக் கம்பெனி அரசு தனக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதி தாக்குதலுக்கு உத்தரவிட்டது.

1799 மே மாதத்தில் வெல்லெஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்த படைகளை' திருநெல்வேலிக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். திருவனந்தபுரம் அரசரின் படையும் ஆங்கிலேயருடன் இணைந்தது. மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.

1799 ஜூன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கைக்குச் சென்றார். பழையனாறு என்ற இடத்தில் மருதுவுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். இதையடுத்து, சிவகங்கையிலிருந்து ஆயுதம் தரித்து வந்த 500 பேருடன் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பினார்.

நாகலாபுரம், மன்னர்கோட்டை, பாவாலி, கோலார்பட்டி, செந்நல்குடி ஆகிய பாளையங்களின் தலைவர்கள் மருது சகோதரர்களின் முயற்சியால் ஏற்கனவே ஒன்று சேர்ந்திருந்தார்கள். அவர்கள் கம்பெனியின் ஆட்சிப்பகுதிகளிலிருந்த சில குறிப்பிட்ட கிராமங்களில் வரி வசூலிக்கும் உரிமையை உறுதிப்படுத்தியிருந்தார்கள். கட்டபொம்மன் தன் செல்வாக்கையும் நிதியாதாரங்களையும் முன்னிறுத்தி, இந்த அணியில் சேர்ந்து அதன் தலைவர் ஆனார். இக்கூட்டமைப்பை ஏற்படுத்த சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகியவற்றின் பாளையக்காரர்களையும் அதில் சேரும்படி வலியுறுத்தினார்.

1799 செப்டம்பர் 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார். கட்டபொம்மன் சந்திப்பைத் தவிர்த்ததால், பானர்மேன் போர் தொடுக்க முடிவெடுத்தார். செப்டம்பர் 5ஆம் நாள் கம்பெனி படை பாஞ்சாலங்குறிச்சியைச் சென்றடைந்தது.

கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணினால் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயப்படை கோட்டையின் தகவல்தொடர்புக்கான வழிகளைத் துண்டித்தது. கட்டபொம்மனின் வீரர்கள் கம்பீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. கர்னல் வெல்ஷ் என்பார் தனது நினைவுக் குறிப்புகளில், கட்டபொம்மனது படைவீரர்களின் வீரத்தைப் பதிவிட்டுள்ளார். கம்பெனிப் படைக்குக் கூடுதல் எண்ணிக்கையில் வீரர்கள் தேவைப்பட்டனர். செப்டம்பர், 16 அன்று ஆங்கிலேயருக்குக் கூடுதல் வலு சேர்ப்பதற்கான உதவிகள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன. அவர்களின் தொடர்ச்சியான தாக்குதலால் சுவர்கள் உடைந்து கோட்டை பலவீனம் அடைந்ததால், கோட்டைக்கான காவற்படை வெளியேறி காடல்குடியை அடைந்தது. கோலார்பட்டியில் நடந்த மோதலில் கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை பிடித்துவைக்கப்பட்டார். நாலாபுறமும் எதிர்ப்பைக் காட்டிய தலைவர்களுக்குரிய பிற பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. ஆங்கிலேயப்படையைக் கண்டதும், மேற்குப் பாளையத்தாரும் சரணடைந்தனர்.

புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்த

11th History Lesson 18 Tamil Medium.indd 312 10-02-2023 12:59:19

கட்டபொம்மனைப் பிடித்து, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் ஆதரவாளர்கள் மருது சகோதரர்கள், கோபால நாயக்கர் ஆகியோருடன் இணைவதற்குச் சிவகங்கைக்கும் திண்டுக்கல் மலைக்குன்றுகளுக்கும் விரைந்தனர்.

1799 அக்டோபர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனைக் கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார். அது கேலிக்கூத்தான விசாரணையாகவே இருந்தது. கட்டபொம்மன் மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒத்துக்கொண்டார். அவர் சிவகிரிக்கு எதிராக ஆயுதந்தரித்த வீரர்களை அனுப்பியதையும் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயப்படைகளுக்கு எதிராகப் போரிட்டதையும் ஒத்துக்கொண்டார். அக்டோபர் 16ஆம் நாளில் கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டார். கட்டபொம்மனுடைய வீரச்செயல்களைக் கருப்பொருளாகக் கொண்ட நாட்டுப்புறப்பாடல்கள் மக்களிடையே அவரது நினைவை இன்றுவரை உயிர்ப்புடன் வைத்துள்ளன.

மருது சகோதரர்களும் 1801 தென்னிந்தியக் கிளர்ச்சியும்

ஆற்காடு நவாப் 1772ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம் ஸ்தலக்காவல், தேசக்காவல் ஆகியவற்றுக்கான உரிமைகளை கம்பெனிக்குக் கொடுத்திருந்தார். இது பாளையக்காரர்கள், பாளையக்காரர்கள் அல்லாதோர் ஆகிய இரு தரப்பினரின் ஆட்சிப்பகுதிகளிலுமிருந்த காவல் தலைவர்களைப் பாதித்தது. அதிருப்தியடைந்த காவல்காரர்களும் அவர்களின் தலைவர்களும் நவாபுக்கும் கம்பெனிக்கும் எதிராகப் பாளையக்காரர்களுடன் சேர்ந்தார்கள். சிவகங்கை பெரிய உடைய தேவர், நவாப் படைக்கு எதிரான சண்டையில் உயிரிழந்ததால் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்ட சின்ன மருதுவும் பெரிய மருதுவும் நவாப் படையை வெளியேற்றினார்கள். பெரிய உடைய தேவர், வேலு நாச்சியார் ஆகியோரின் மகளான வெள்ளச்சி நாச்சியாரை சிவகங்கையின் இராணியாக அறிவித்தனர். அவர்கள் அமைச்சர் பொறுப்புகளை ஏற்றனர். அன்றைய சிவகங்கைக் காட்டின் நடுவில் இருந்த காளையார்கோவில், கிளர்ச்சியாளர்கள் கூடுமிடமாகவும் அவர்களது அடையாளமாகவும்

மருது சகோதரர்கள்

இருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், அவருடைய சகோதரர் ஊமைத்துரை கமுதியைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவரைச் சின்ன மருது சிவகங்கையின் தலைநகரான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.

நவாப் முகமது அலி முத்துராமலிங்கத் தேவரைச் சிறையிலிருந்து விடுவித்து, அவரை இராமநாதபுரத்தின் சேதுபதியாக முடிசூட்டினார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் முத்துக்கருப்பத் தேவரைத் தங்கள் ஆட்சியாளராக அறிவித்தனர். மேலும் அரசின் தெற்குப் பகுதியையும் வடக்குப் பகுதியையும் ஆக்கிரமித்தனர். கிளர்ச்சியாளர்களின் வீரர்கள் மதுரைக்குள்ளும் நுழைந்தனர். ஜூலையில் ஊமைத்துரை தன் ஆதரவாளர்களுடன் மதுரையில் உள்ள பழையநாடு என்னும் பகுதியைக் கைப்பற்றினார். 1801இல் சின்ன மருதுவின் மகன் செவத்த தம்பியின் தலைமையில் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இரு பகுதிகளைச் சேர்ந்த படைகளும் இணைந்து, கடற்கரை வழியாகத் தஞ்சாவூர் நோக்கி அணிவகுத்துச் சென்றன. தஞ்சாவூரில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளும் செவத்த தம்பியின் படையில் சேர்ந்தனர். தஞ்சாவூர் ஸ்தானிகர் ஆக இருந்த கேப்டன் வில்லியம் ப்ளாக்பர்ன் படைகளைத் திரட்டி, மாங்குடி அருகே செவத்த தம்பியை வென்றார். தஞ்சாவூர் ராஜா சரபோஜி ஆங்கிலேயருக்குத் துணையாக நின்றார். இருப்பினும் வீரர்கள் ஆங்கிலேயர் படை பின் தொடர்தலிலிருந்து தப்பித்து, கடந்து சென்ற பகுதிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி சென்றனர்.

18.3 தென்னிந்தியக் கிளர்ச்சி (1801)

திப்புவையும் கட்டபொம்மனையும் வென்ற பின்னர், ஆங்கிலேய படைகள் பல்வேறு முனைகளிலிருந்து திரும்பி இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் கிளர்ச்சியாளர்களை எதிர்கொள்ள முடிந்தது. புதுக்கோட்டை தொண்டைமான் கிழக்கிந்திய கம்பெனியில் ஏற்கனவே இணைந்திருந்தார். மேலும் சிவகங்கையின் முன்னாள் ஆட்சியாளரின் வழித்தோன்றல் படமாத்தூர் ஒய்யாத்தேவரின் ஆதரவையும் கிழக்கிந்தியக் கம்பெனி பெற முடிந்தது. அவர் சிவகங்கையின் ஆட்சியாளராகக் கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்டார். இந்தப் பிரித்தாளும் தந்திரம் அரசரின் ஆதரவாளர்களிடையே பிளவை ஏற்படுத்தி, இறுதியில் கிளர்ச்சியாளர்களை மனந்தளர வைத்தது.

1801 மே மாதத்தில் அக்னியு தலைமையிலான ஒரு படைப்பிரிவு தன் நடவடிக்கைகளைத் துவக்கியது. இப்படை மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகப் பயணித்து, கிளர்ச்சியாளர்கள்

11th History Lesson 18 Tamil Medium.indd 313 10-02-2023 12:59:19

வசமிருந்த பரமக்குடி அரண்களை ஆக்கிரமித்தது. மோதலின்போது இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆனால் கிளர்ச்சியாளர்களின் அடங்காத எதிர்ப்பும் மருது சகோதரர்களின் வீரம் செறிந்த சண்டைகளும் ஆங்கிலேயரின் நடவடிக்கையை மிகவும் கடினமாக்கியது. முடிவில், ஆங்கிலேயரின் படை வலிமையும் தளபதிகளின் திறமையுமே வெற்றி பெற்றன. ஆங்கிலேயர் ஊமைத்துரையைக் கைது செய்ததைத் தொடர்ந்து, மருது பாண்டியரைச் சிங்கம்புணரி குன்றுகளிலும் செவத்தையாவை வத்தலகுண்டு பகுதியிலும் வெள்ளை மருதின் மகன் துரைசாமியை மதுரைக்கு அருகிலும் கைது செய்தனர். சின்ன மருதுவும் அவருடைய சகோதரர் வெள்ளை மருதுவும் 1801 அக்டோபர் 24இல் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும் செவத்தையாவும் அவர்களின் ஆதரவாளர்கள் பலரும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு 1801 நவம்பர் 16ஆம் நாள் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். 73 கிளர்ச்சியாளர்கள் 1802 ஏப்ரல் மாதத்தில் மலேயாவில் பினாங்குக்கு நாடு கடத்தப்பட்டார்கள்.

தீரன் சின்னமலை

சேலம், கோயம்புத்தூர், கரூர், திண்டுக்கல் ஆகியவை அடங்கிய கொங்குநாடு, மதுரை நாயக்கர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதை மைசூர் உடையார்கள் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். உடையார்களின் வீழ்ச்சிக்குப் பிறகு மைசூருடன் இந்த ஆட்சிப்பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டன. மூன்றாம், நான்காம் மைசூர் போர்களின் விளைவாகக் கொங்குப் பகுதி முழுதும் ஆங்கிலேயர் வசமாயின.

தீரன் சின்னமலை

தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்குநாட்டுப் பாளையக்காரர் ஆவார். இவர் பிரெஞ்சுக்காரர்களாலும் திப்புவாலும் பயிற்சியளிக்கப்பட்ட பாளையக்காரர்களில் ஒருவர். சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தும் முயற்சியில் (1800) இருந்தபோது, மருது பாண்டியரின் உதவியைப் பெற முயன்றார். கம்பெனியுடன் போரிடுவதற்காக விருபாட்சி கோபால நாயக்கர், பரமத்திவேலூர் அப்பச்சிக் கவுண்டர், சேலம் ஆத்தூர் ஜோனி ஜான் கஹன், பெருந்துறை குமராள் வெள்ளை, ஈரோடு வாரணவாசி ஆகியோருடன் கூட்டணி சேர்ந்தார்.

F8VSD

தனது படையை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகளை மருது சகோதரர்களிடமிருந்து பெறுவதைக் கம்பெனி தடுத்துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் பலிக்கவில்லை. அவரும் தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே கோட்டையைத் தாக்கினார். கம்பெனிப் படை 49 பேரைத் தூக்கிலிடுவதற்கு இது வழிவகுத்தது. சின்னமலை ஆங்கிலேயரிடம் சிக்காமல் தப்பினார். 1800இலிருந்து அவர் தூக்கிலிடப்பட்ட 1805 ஜூலை 31 வரை கம்பெனிக்கு எதிராகப் போராடிக்கொண்டே இருந்தார்.

சின்னமலையின் போர்களில் முக்கியமானவை மூன்று: காவிரிக்கரையில் நடைபெற்ற 1801 போர், 1802ஆம் ஆண்டு ஓடாநிலையில் நடந்த போர்; 1804இல் நடந்த அரச்சலூர் போர் ஆகும். அவரது இறுதிப் போர் 1805இல் நடைபெற்றதாகும். இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரால் துரோகம் இழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

வேலூர் புரட்சி (1806)

அரியணையை இழந்த அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் சந்ததியினர் ஆங்கிலேய ஆட்சி சுமத்திய அடிமைத்தளையைத் தகர்க்கத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றின் மொத்த விளைவுதான் 1806ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேலூர் புரட்சி ஆகும். மருது சகோதரர்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டனர். எண்ணிக்கையில் 3000க்குக் குறையாத திப்பு சுல்தானின் விசுவாசிகள் வேலூரிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் குடியேறியிருந்ததால், ஆங்கிலேய எதிர்ப்புக்கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் அங்கு தங்கள் இரகசிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டனர். ஆங்கிலேயரால் பதவியோ, சொத்தோ பறிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்தனர். இதுபோல் பாதிக்கப்பட்ட பலரை வேலூர் கோட்டையின் படைமுகாம் உள்ளடக்கியிருந்தது. இவ்வாறு வேலூர் கோட்டை தென்னிந்தியாவின் புரட்சியாளர்கள் சந்தித்துக்கொள்ளுமிடமாக ஆனது. சிப்பாய்களும் வேலூருக்கு இடம்பெயர்ந்தவர்களும் கோட்டையில் அடிக்கடி கூடித் தீவிரமாகக் கலந்தாலோசித்தனர். அவற்றில் திப்பு மகன்களின் பிரதிநிதிகளும் பங்கேற்று வந்தனர்.

11th History Lesson 18 Tamil Medium.indd 314 10-02-2023 12:59:19

உடனடிக் காரணம்

இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் தங்கள் படையில் உள்ள சிப்பாய்ப்பிரிவில் சில புதுமைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். சிப்பாய்கள் சாதி அல்லது மதத்தின் அடையாளமாகத் தங்களது நெற்றியில் அணிந்த அனைத்து விதமான குறியீடுகளும் தடை செய்யப்பட்டன. சிப்பாய்கள் தங்கள் மீசையை ஒரே மாதிரியான முறைக்குப் பொருந்தும்படி வெட்டுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். துணை ஜெனரல் அக்னியு சிப்பாய்களுக்கான ஒரு புதிய தலைப்பாகையை வடிவமைத்து, தனது நேரடிக் கண்காணிப்பில் அதனை அறிமுகம் செய்தார்.

இந்தியர்களின் பார்வையில், இந்தத் தலைப்பாகையில் இடம்பெற்றிருந்த அருவருக்கத்தக்க அம்சம், அதன் மீதிருந்த ரிப்பன் மற்றும் குஞ்சம் ஆகும். இது மிருகத் தோலில் செய்யப்பட்டிருந்தது. பன்றித்தோல் முஸ்லீம்களுக்கு வெறுப்பூட்டும் பொருள் ஆகும். இந்துக்கள் பசுத்தோலில் செய்யப்பட்ட எந்தப் பொருளையும் விலக்க வேண்டியதாகக் கருதினர். இந்த மாற்றங்களுக்கான எதிர்ப்பை இந்தியர்களிடையே இன்னும் அதிகரிக்கச் செய்யும் வகையில், சிப்பாய்கள் அணியும் சீருடையின் முன்பக்கம் சிலுவை பொறிக்கப்பட்டிருந்தது.

மீசை, சாதி அடையாளங்கள், கடுக்கன் ஆகியவை தொடர்பான உத்தரவு இந்து, முஸ்லீம் ஆகிய இரு சமயங்களைச் சேர்ந்த சிப்பாய்களின் சமய வழக்கங்களை மீறுவதாக இருந்தாலும், இத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்துதல் இந்த உத்தரவுக்கு முன்பு முறையான உத்தரவால் தடை செய்யப்படாமலிருந்தாலும், அணிவகுப்பில் இவ்வாறு தோன்றும்படி எந்த ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட படையிலும் வழக்கத்தில் இருந்ததில்லை என்று இம்மாற்றங்களுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது.

முதல் எதிர்ப்பு 1806 மே மாதத்தில் நிகழ்ந்தது. வேலூரிலிருந்த 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு வீரர்கள் புதிய தலைப்பாகையை அணிய மறுத்தனர். இந்தப் பிரச்னை படைமுகாமின் தளபதியான கவர்னர் ஃபேன்கோர்ட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிளர்ச்சியாளர்களை உடனிருந்து கண்காணிக்கும்படி 19ஆம் குதிரைப்படைப்பிரிவுக்கு உத்தரவிட்டார். இவர்கள் மீதான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டது. 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவுக்குப் பதிலாக வாலாஜாபாத்திலிருந்த 23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு பொறுப்பை ஏற்றது. தலைமையின் உத்தரவை எதிர்த்தமைக்காகப் படையின் கீழ்நிலைப் பொறுப்பிலிருந்த 21 வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள். அவர்களில் 10 முஸ்லீம்களும் 11 இந்துக்களும் இருந்தார்கள். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும்பொருட்டு இரு வீரர் (ஒரு முஸ்லீம், ஒரு இந்து)களுக்குத் தலா 900 கசையடிகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.

இந்திய வீரர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்புகளை மீறி, அவர்களின் மனக்குறைகளைப் பொருட்படுத்தாமல் அரசு தான் முன்வைத்த மாற்றங்களைச் செயல்படுத்த முடிவெடுத்தது. 'புதிய தலைப்பாகையை அணிவதற்கு விருப்பமில்லாத உணர்வு வீரர்களிடையே மிக பலவீனமாக இருப்பதாக'வே கவர்னர் வில்லியம் பெண்டிங்க் நம்பினார்.

வேலூர் கோட்டையில் 1806 ஜூலை 9ஆம் நாள் இரவின்போது பணியிலிருந்த இராணுவ அதிகாரிகள் வழக்கத்துக்கு மாறாக எதையும் கவனிக்கவில்லை என முதலில் கூறப்பட்டது. எனினும், அன்றைக்குப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேய அதிகாரி பார்வையிடும் தனது வேலையை அன்று செய்யவில்லை என்றும் தனக்குப் பதிலாக ஜமேதார் ஷேக் காசிம் என்ற இந்திய அதிகாரியை அனுப்பினார் என்றும் பின்னர் தெரிய வந்தது. வேலூர் புரட்சிக்குப் பிறகு, அவர் முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார். ஜூலை 10 அதிகாலையில் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய படைப்பிரிவின் தலைவர்கள் ஜூலை 9 ஆம் நாள் இரவே கோட்டையில் தூங்குவதற்கு அதைச் சாக்காகப் பயன்படுத்தினர். இந்தத் துணை இராணுவ அதிகாரி கோட்டைக்குள் பாதுகாவலர்களாகத் தன்னால் இயன்றவரை தன்னுடைய ஆதரவாளர்களையே நியமித்தார்.

வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்ததாகக் கருதப்படுபவர் ஜமாலுதீன் ஆவார். இவர் திப்புக் குடும்பத்தின் 12 இளவரசர்களில் ஒருவர். அவர் இந்திய அதிகாரிகளிடமும் வீரர்களிடமும் இரகசியப் பேச்சுவார்த்தைகளின்போது, அவர்கள் வேலூர் கோட்டையை எட்டு நாட்களுக்குத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படியும் அதற்குள் 10 ஆயிரம் ஆதரவாளர்கள் உதவிக்கு வந்து விடுவார்கள் என்றும் கூறி வந்தார். உரிமை பறிக்கப்பட்ட பாளையக்காரர்களின் உதவியைக் கேட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதையும் அவர் தெரிவித்தார். திப்பு சுல்தானிடம் பணிபுரிந்த ஏராளமான அதிகாரிகள் திப்புவின் முன்னாள் அமைச்சரான பூர்ணையாவுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் தக்க நேரத்தில் கைகொடுப்பார்கள் என்றும் ஜமாலுதீன் கூறினார்.

11th History Lesson 18 Tamil Medium.indd 315 10-02-2023 12:59:19

புரட்சி வெடித்தல்

வேலூர்க் கோட்டையில் ஜூலை 10ஆம் நாள் காலை 2 மணிக்கு முதன்மை பாதுகாப்புத்தளத்திலிருந்த காவலாளியிடமிருந்து கார்ப்பரல் பியர்சிக்கு ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. படைவீரர் குடியிருப்புக்கு அருகில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது என்பதே அச்செய்தி. பியர்சி பதில் நடவடிக்கையில் இறங்கும் முன்னரே, சிப்பாய்கள் ஆங்கிலேயப் பாதுகாவலர்கள் மீதும், படைவீரர் குடியிருப்பு, அதிகாரிகள் குடியிருப்பு ஆகியவற்றின் மீதும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுத்தனர். பியர்சியும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார். ஐரோப்பியக் குடியிருப்புகளில் கோடை வெக்கையைச் சமாளிக்கக் கதவுகள் இரவிலும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. கிளர்ச்சியாளர்கள் படுக்கைகளில் பாதுகாப்பின்றி உறங்கிக்கொண்டிருந்த ஐரோப்பியரைச் சன்னல் வழியாக எளிதில் சுட முடிந்தது. ஐரோப்பியக் குடியிருப்புக்குத் தீ வைக்கப்பட்டது. ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புகளைக் கண்காணித்து, வெளியே வரும் எவரையும் சுடுவதற்குத் தனிப்படைப்பிரிவு நியமிக்கப்பட்டது. வெடிமருந்துகளும் துப்பாக்கி ரவைகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கை முதலாம் ரெஜிமெண்ட்டின் ஒரு பிரிவு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. அதே ரெஜிமெண்ட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு குழு குடியிருப்புகளில் உள்ள ஐரோப்பியரைக் கொல்வதற்குத் தொடர்ந்து கண்காணிப்பில் இருந்தது. ஏராளமான ஐரோப்பிய ஒழுங்குமுறை நடத்துனர்களுடன், 13 அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இராணுவக்குடியிருப்பில் 82 கீழ்நிலை இராணுவ வீரர்கள் இறந்தார்கள். 91 பேர் காயமடைந்தனர்.

உள்ளூர் வீரர்கள் அடங்கிய 16ஆம் காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது கோட்டைக்கு வெளியே பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். அவர் பல்லக்கிலிருந்து இறங்கி, கோட்டையின் சரிவான பகுதிக்குச் சென்று விசாரித்தார். அதற்குப் பதில் போல் பாதுகாப்பு அரணிலிருந்து சரமாரியாகப் பொழிந்த குண்டுமழை உடனடியாக அவரது உயிரைப் பறித்தது. கோட்டைக்கு வெளியே பணியிலிருந்த மேஜர் கோட்ஸ் கிளர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு கோட்டைக்குள் நுழைய முயன்றார். அவரால் உள்ளே செல்ல முடியாததால், ஆற்காட்டில் குதிரைப்படை முகாமுக்குப் பொறுப்பு வகித்த கில்லஸ்பிக்குக் கடிதம் எழுதி, அதைக் கேப்டன் ஸ்டீவன்சன் என்பவரிடம் கொடுத்தனுப்பினார். அந்தக் கடிதம் வேலூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் இருந்த ஆற்காட்டுக்குக் காலை 6 மணி அளவில் சென்றடைந்தது. கர்னல் கில்லஸ்பி உடனே வேலூருக்குப் புறப்பட்டார். தன்னுடன் கேப்டன் யங் தலைமையில் 19ஆம் குதிரைப்படையைச் சேர்ந்த ஒரு பிரிவையும் லெப்டினெண்ட் உட் ஹவுஸ் தலைமையில் அதற்குத் துணைநிற்கும் 7ஆம் குதிரைப்படையிலிருந்து ஒரு வலுவான பிரிவையும் அழைத்துச் சென்றார். அவர் குதிரைப்படையில் மீதமுள்ள வீரர்களுடன் தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கர்னல் கென்னடியிடம் அறிவுறுத்திவிட்டு, ஆற்காடு படைமுகாமைப் பாதுகாக்கவும் தன்னுடன் தகவல்தொடர்பில் இருக்கவும் ஒரு தனிப்பிரிவை விட்டுச்சென்றார்.

வேலூர் கோட்டைக்குக் காலை 9 மணிக்கு வந்தடைந்த கில்லஸ்பி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டிருந்ததால், பீரங்கிகள் தங்கள் பாதுகாப்புக்கு வந்துசேரும்வரை காத்திருக்க முடிவு செய்தார். விரைவிலேயே ஆற்காட்டிலிருந்து பின்தொடர்ந்து வந்த கென்னடி தலைமையிலான குதிரைப்படை 10 மணி அளவில் வந்துசேர்ந்தது. லெப்டினெண்ட் ப்ளாகிஸ்டன் தலைமையில் 19ஆம் குதிரைப்படையின் பீரங்கியால் கோட்டையின் வெளிவாசல் கதவு தகர்க்கப்பட்டது. கேப்டன் ஸ்கெல்ட்டன் தலைமையிலான குதிரைப்படையின் ஒரு பிரிவு கோட்டைக்குள் நுழைந்தது.

கில்லஸ்பியின் வீரர்கள் கடுமையான துப்பாக்கிச்சூட்டை எதிர்கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலில் கர்னல் கில்லஸ்பியும் காயங்களுக்கு உள்ளானார். கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் பின்வாங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கோட்டையின் சுவர்கள் மீது ஏறித் தப்பித்தனர் அல்லது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு கருணைக்காகக் கெஞ்சினர். குதிரைப்படைப்பிரிவுகள் அனைத்தும் அணிவகுப்பு மைதானத்தில் ஒன்றுகூடின. கோட்டையின் திட்டிவாசல் மூலம் கிடைத்த குறுகலான பாதை வழியே தப்பியோடிய சிப்பாய்களைப் பின்தொடர்ந்து சென்று பிடிக்க முடிவெடுக்கப்பட்டது.

தப்பியோடிய சிப்பாய்களை வழிமறித்துப் பிடிக்கச் சில உள்ளூர் குதிரைக்காரர்களுடன் ஒரு குதிரைப்படைப்பிரிவு கிளம்பியது. கோட்டையின்

வேலூர் கோட்டை

11th History Lesson 18 Tamil Medium.indd 316 10-02-2023 12:59:20

கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறுகிறார். டபிள்யூ. ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரியால் 1806 செப்டம்பர் 23 அன்று நிறைவேற்றப்பட்டது.

(*சான்று:* W.J. Wilson, History of Madras Army, Vol.III, pp. 186–89)

அனைத்துக் கட்டிடங்களிலும் தேடுதல் வேட்டை நடந்தது. அங்கு ஒளிந்திருந்த கிளர்ச்சியாளர்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். கில்லஸ்பியின் ஆட்கள் கிளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிய திப்புவின் மகன்களைப் பழிவாங்க விரும்பினார்கள். ஆனால் லெப்டினெண்ட் கர்னல் மர்ரியாட் இதை எதிர்த்தார்.

கர்னல் கில்லஸ்பி வேலூர் கோட்டையை 15 நிமிடங்களுக்குள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது. கர்னல் ஹர்கோர்ட் (வாலஜாபாத் படைக்குப் பொறுப்பு வகித்தவர்) ஜூலை 11இல் வேலூர் படையின் தற்காலிகப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஜூலை 13இல் ஹர்கோர்ட் படைமுகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்று, இராணுவச் சட்ட ஆட்சியை அமல்படுத்தினார். கர்னல் கில்லஸ்பியின் விரைவான, சிறந்த திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கையே, கோட்டையைச் சில நாட்களுக்குள் கைப்பற்றி, அடுத்ததாக மைசூரிலிருந்து வரவிருந்த 50 ஆயிரம் வீரர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் திட்டமிட்ட கிளர்ச்சியாளர்களின் கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகக் கருதப்படுகிறது.

படைவீரர்கள் எதிர்ப்பு தெரிவித்த அருவருப்பான மாற்றங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவின் கூற்றுப்படி, மைசூர் இளவரசர்கள் கிளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது நிறுவப்படாததால், அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது. உயர்மட்டத் தீர்ப்பாயங்கள் கவர்னர், தலைமைப் படைத்தளபதி, துணை உதவி ஜெனரல் ஆகியோரை இந்தக் குளறுபடிக்குப் பொறுப்பாக்கி. அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள உத்தரவிட்டன.

வேலூர் நிகழ்வின் தாக்கம் ஹைதராபாத், வாலஜாபாத், பெங்களூர், நந்திதுர்கம், பாளையங்கோட்டை, பெல்லாரி, சங்கரிதுர்கம் ஆகிய இடங்களிலும் பரவியது. 1857ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் கிளர்ச்சிக்கான அனைத்து முன்னறிகுறிகளும் வேலூர் கிளர்ச்சியில் இருந்தன. பெருங்கிளர்ச்சியில் இடம்பெற்ற கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் என்ற சொல்லுக்கு மாற்றாக வேலூர் நிகழ்வில் இடம்பெற்ற பாட்ஜ் என்பதையும் பகதூர் ஷா, நானா சாகிப் ஆகியோருக்கு மாற்றாக மைசூர் இளவரசர்களையும் நம்மால் பொருத்திப் பார்க்க முடியும்.

18.4 விவசாயிகள், பழங்குடிகள் ஆகியோரின் கிளர்ச்சிகள்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கம்பெனி அரசாங்கத்தின் நில உரிமையும் வருவாய் ஈட்டும் முறையும் இந்தியக் கிராமியச் சமூகத்தை மிகக் கடுமையாகப் பாதித்தன. விவசாயிகளை அதற்கு முன்னில்லாத அளவுக்கு வருத்தியது. வருவாய் ஈட்டும் வேளாண்முறையின் தொடக்க காலத்தில் விவசாயிகள் அவர்களுக்கு அதிகளவிலான வருவாய் இலக்கை நிர்ணயித்து, அநியாயமாக அதை வசூலித்த ஒப்பந்ததாரர்களாலும் கம்பெனி அதிகாரிகளாலும் நசுக்கப்பட்டனர். இதற்குத் தீர்வு காணும்படி விவசாயிகள் தொடக்கத்தில் கம்பெனி அரசாங்கத்துக்குப் புகார் அனுப்பினார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை செவிசாய்க்கப்படாமல் போனபோது, அவர்கள் அணி திரண்டு, நேரடி நடவடிக்கையில் இறங்கினர். விவசாயிகள் உள்ளூர் கச்சேரி (வருவாய் வசூலிக்கும் அலுவலகம்)களைத் தாக்கினார்கள்; தானியச் சேகரிப்புக்கிடங்குகளைக் கொள்ளையடித்தார்கள்; வரியைச் செலுத்த மறுத்தார்கள்.

1840களிலும் 1850களிலும் செயல்பட்ட விவசாயிகள் இயக்கம் மலபார் கிளர்ச்சியாக வெளிப்பட்டது. இப்பகுதியில் குடியேறி, மலபார் பெண்களைத் திருமணம் செய்துகொண்ட அரபு வணிகர்களின் சந்ததியினர் (மாப்பிள்ளைகள்) ஆவர். படிப்படியாக மாப்பிள்ளைமார்கள் விவசாயத்தைச் சார்ந்தவர்களாகி, நிலத்தை வாடகைக்கு எடுத்து விவசாயம் செய்வோராகவும் நிலமற்ற உழைப்பாளர்களாகவும் சில்லறை வணிகர்களாகவும் மீனவர்களாகவும் மாறினர். 1792இல் ஆங்கிலேயர் மலபாரைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தபோது, அவர்கள்

11th History Lesson 18 Tamil Medium.indd 317 10-02-2023 12:59:20

நில உடைமை விவகாரங்களைச் சீரமைக்க முடிவெடுத்தார்கள். நிலத்துக்கான தனிநபர் உரிமையாளர் முறையை உருவாக்குவது அவர்கள் கொண்டுவந்த மாற்றமாகும். முன்பிருந்த மரபுமுறை, நிலத்திலிருந்து கிடைக்கும் மொத்த விளைச்சலை ஜன்மி (ஜன்மம் என்ற உரிமை பெற்றவர்), கனம்தார் (கனம் என்ற உரிமை பெற்றவர்), விவசாயி ஆகியோர் சரிசமமாகப் பகிர்வதற்கு வாய்ப்பளித்தது. ஆங்கிலேயர் கொண்டுவந்த புதிய முறை ஜன்மிகளை நிலத்தின் முழு உரிமையாளர்களாக்கி, குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் அதிகாரத்தையும் கொடுத்தது. இந்த நடைமுறை அதற்கு முன்பு இல்லாததாகும். இது விவசாயிகளை மிகவும் பாதித்தது. இவற்றுடன், மிகையாக மதிப்பிடுதல், சட்டத்துக்குப் புறம்பான வரிகளைச் சுமத்துவது, நீதிமன்றமும் காவல்துறையும் நில உரிமையாளருக்கு மட்டுமே ஆதரவாக நடந்துகொள்வது ஆகியவை விவசாயிகளை வறுமையின் உச்சத்தில் வாழும் நிலைக்குத் தள்ளியது.

தாங்கள் நசுக்கப்படுவதைச் சகித்துக்கொள்ள முடியாத விவசாயிகள் எதிர்வினை புரிந்த நிகழ்வுகள் மலபாரில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுதும் நடந்தன. அவற்றில் 1849 ஆகஸ்ட் மாதத்தில் மஞ்சேரியிலும், 1851 ஆகஸ்ட் மாதத்தில் குளத்தூரிலும் (இந்த இரு இடங்களும் தெற்கு மலபாரில் உள்ளவை) 1852 ஜனவரி மாதத்தில் வடக்கில் உள்ள மட்டனூரிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மிகவும் தீவிரமானவையாகும். ஆங்கிலேய ஆயுதப்படைகள் கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்டன. இங்கெல்லாம் அமைதியை ஏற்படுத்த ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் இருபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தன. ஆனால் மாப்பிள்ளைகள் 1870இல் மீண்டும் எழுச்சி பெற்றனர். மீண்டும் கிளர்ச்சிகள் நடந்தன.

1857க்கு முந்தைய இந்தியாவில் நடைபெற்றவற்றில் சில கிளர்ச்சிகள் பழங்குடியினரால் நடத்தப்பட்டன. உள்ளூர் வளங்கள் மீதான அவர்களின் தன்னாட்சியும் கட்டுப்பாடும் ஆங்கிலேய ஆட்சியாலும் பழங்குடி அல்லாதவரின் வருகையாலும் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். இப்பழங்குடிகள் இந்தியாவின் பெரும்பகுதிக்குப் பரவி, 19ஆம் நூற்றாண்டில் நூற்றுக்கணக்கான தீவிர மோதல்களையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தினார்கள்.

கோல்களின் கிளர்ச்சி (1831–32)

கோல் (Kol) என்ற பழங்குடி இனத்தினர் பீகாரிலும் ஒரிசாவிலும் சோட்டா நாக்பூர், சிங்பும் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடி அல்லாதோருக்குக் குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு உடனடிக்காரணமாகும். சோன்பூர், தமர் ஆகிய பகுதிகளில் வசித்த கோல்கள் திக்காடர்களுக்கு (வரி வசூலிப்போர்) எதிரான கிளர்ச்சியை நடத்துவதற்கு முதல் முயற்சியை எடுத்தனர். வெளியாருடைய சொத்துகளைத் தாக்குவதை இவர்களின் கிளர்ச்சி உள்ளடக்கியிருந்தது. கோல்கள் உயிர்ச்சேதம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. கொள்ளையடிப்பதும் சொத்துகளுக்குத் தீவைப்பதும் அவர்களது கிளர்ச்சியில் முக்கிய வழிமுறைகளாக இருந்தன. 1831 டிசம்பர் 20ஆம் நாளில் சோட்டா நாக்பூரில் உள்ள சோனிப்பூர் பர்கானா எழுநூறு கிளர்ச்சியாளர்கள் அடங்கிய குழுவால் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டது. 1832 ஜனவரி 26க்குள் கோல்கள் சோட்டா நாக்பூர் முழுவதையும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டார்கள். இவர்களின் கிளர்ச்சி ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு போருடன் முடிவுக்கு வந்தது. மிகத் தீவிரமாக ஒரு குறுகிய பரப்புக்குள் நடந்த சண்டையில் கோல் கிளர்ச்சியின் தலைவரான புத்த பகத் கொல்லப்பட்டார். துண்டிக்கப்பட்ட அவரது தலையை ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்ததற்காக அதிகாரிகள், இராணுவ வீரர்கள் ஆகியோருக்கு ஓராயிரம் ரூபாய் விநியோகிக்கப்பட்டது. கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்த பிந்த்ராய் மன்கி 1832 மார்ச் 19ஆம் நாள் சரணடைந்ததும், கோல்களின் போராட்டம் ஒரு துயரமான முடிவுக்கு வந்தது.

சந்தால் கிளர்ச்சி (1855–56)

பழங்குடிகளான சந்தால்கள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு



சந்தால் கிளர்ச்சி

11th History Lesson 18 Tamil Medium.indd 318 10-02-2023 12:59:20

காட்டுப்பகுதிகளில் அங்கங்கே பரவியிருந்தபடி வாழ்ந்தார்கள். மஞ்சி என்றும் அவர்கள் அறியப்பட்டார்கள். தங்களின் தாய்மண்ணிலிருந்து துரத்தப்பட்ட சந்தால்கள் ராஜ்மகல் குன்றுகளைச் சுற்றியுள்ள பகுதியைத் திருத்தி, அதை டாமின்–இ–கோ (சந்தால்களின் நிலம்) என்று அழைத்தார்கள். பழங்குடி நிலங்கள் சந்தால் அல்லாத ஜமீன்தார்களுக்கும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டதால், சந்தால்கள் படிப்படியாகக் கையறுநிலையில் வாழ வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார்கள். இத்துடன், உள்ளூர் காவல்துறையினராலும் அப்பகுதிகளில் தொடர்வண்டிப்பாதை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய அதிகாரிகளாலும் அடக்குமுறைக்குள்ளானார்கள். டிக்குகளின் (வெளியிலிருந்து வந்தோர்) இத்தகைய ஊடுருவல் சந்தால் சமூகத்தை நிலை தடுமாறச் செய்தது. இது அவர்கள் இழந்த பகுதியை மீட்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வைத்தது.

1855 ஜூலையில் சந்தால்கள் ஜமீன்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்த இறுதி எச்சரிக்கை செவிமடுக்காமல் போனவுடன், ஆயிரக்கணக்கிலான சந்தால்கள் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டு வெளிப்படையான கிளர்ச்சியைத் துவக்கினார்கள். தமது கிளர்ச்சி தம்மை ஒடுக்குபவர்களான ஜமீன்தார்கள், வட்டிக்கடைக்கரார்கள், அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரின் புனிதமற்ற கூட்டுக்கு எதிரானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். மகேஷ்பூர் போரில் மஞ்சிகளில் பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற உடையை அணிந்திருந்தார்கள். பின்னாட்களில் இது அதிகாரத்துக்கு உரிமைகோரும் அடையாளத்துக்கான ஆடை ஆனது. கிளர்ச்சியின் முதல் வாரத்தில் பத்து பேர் அடங்கிய ஒரு குழு மோங்கபர்ரா என்னும் கிராமத்தைத் தாக்கித் தீக்கிரையாக்கியது. கிளர்ச்சியாளர்களில் பெண்களும் இருந்தார்கள்.

தொடக்கத்தில் சித்தோ சந்தால்களின் தலைவராக இருந்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னர் கானு கிளர்ச்சியை நடத்தினார். கிளர்ச்சியின் பிற்பகுதியில் விவசாயிகளும் சேர்ந்துகொண்டார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் சார்லஸ் மசேக் அவுரித் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். இதன் விளைவாக, கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயர் தரப்பிலிருந்து மிருகத்தனமான நடவடிக்கைகள் தொடங்கின. இராணுவம் குவிக்கப்பட்டு, சந்தால் கிராமங்கள் பழிக்குப் பழியாக ஒன்றன் பின் ஒன்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு கணக்கீட்டின்படி, கிளர்ச்சி இறுதியாக ஒடுக்கப்படும் முன்பு, 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரையான கிளர்ச்சியாளர்களில் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டார்கள் எனத் தெரிகிறது.

முண்டா கிளர்ச்சி

பிர்சா முண்டா வழிநடத்திய முண்டாக்களின் கிளர்ச்சி (உல்குலன்) 1899–1900 காலகட்டத்தில் நடைபெற்றது. முண்டாக்கள் பீகார் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பழங்குடிகள் ஆவர். ஆங்கிலேயரின் ஆட்சியில் அவர்களின் பொதுநில உரிமை முறை அழிக்கப்பட்டது. முண்டாக்களுக்குச் சொந்தமான நிலங்களை ஜாகீர்தார்களும் திக்காடர்களும் (பெரும் விவசாயி) வட்டிக்கடைக்காரர்களும் பறித்துக்கொண்டனர். பிர்சா முண்டா குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளின் குடும்பத்தில் 1874இல் பிறந்தார். ஆங்கிலேயரை விரட்டிவிட்டு, முண்டாக்களின் ஆட்சியை நிறுவ வந்த புனிதத்தூதர் என அவர் தன்னை அழைத்துக்கொண்டார். பழங்குடிகளின் நிலங்களைப் பழங்குடி அல்லாதோர் ஆக்கிரமிப்பதை இவரது தலைமையில் முண்டாக்கள் எதிர்த்தார்கள். முண்டா இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாடகை செலுத்த வேண்டாம் என பிர்சா முண்டா வலியுறுத்தினார்.

பிர்சா முண்டா சோட்டா நாக்பூர் பகுதியில் கிளர்ச்சியைத் துவக்கினார். சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள். சாயில் ரகப் படுகொலை பிர்சா ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆங்கிலேய அதிகாரிகள் பிர்சாவைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததுடன், அவரைப் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் அறிவித்தார்கள். இத்தனைக்குப் பிறகும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்வதைக் காண முடிகிறது. ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்ட பிர்சா 1900ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாளில் தியாகி ஆனார். அவருடைய பெயர் தொடர்ந்து அப்பகுதியின் மலைவாழ் மக்களை ஈர்ப்பதாக உள்ளது.

முண்டா கிளர்ச்சி

11th History Lesson 18 Tamil Medium.indd 319 10-02-2023 12:59:20

18.5 1857 பெருங்கிளர்ச்சி

அறிமுகம்

1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி ஆங்கிலேய, இந்திய வரலாற்று அறிஞர்களிடையே பெரும் விவாதத்திற்குரிய பொருளாக உள்ளது. ஆங்கில ஏகாதிபத்திய வரலாற்றாசிரியர்கள் இவ்வெழுச்சியை இராணுவக் கலகம் என்றும் இராணுவ வீரர்களின் கோபத்தின் வெளிப்பாடு என்று கூறி சாதாரணமாகப் புறந்தள்ளுகின்றனர். இந்திய வரலாற்றறிஞர்கள் ராணுவப் புரட்சியைப் பெருங்கிளர்ச்சியாக மாற்றியதில் மக்கள் வகித்த பாத்திரம் பற்றி ஆய்வு மேற்கொண்டு இரண்டு கேள்விகளை எழுப்பியுள்ளார். அக்கேள்விகளுக்கு ஏகாதிபத்திய வரலாற்றறிஞர்களிடம் பதிலில்லை. இது ஒரு இராணுவக் கலகம் மட்டுமே என்றால், முகாம்களில் இருந்த சிப்பாய்கள் புரட்சி செய்வதற்கு முன்பாகவே, மக்கள் கிளர்ச்சி செய்ததை எப்படி விளக்குவது? எழுச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லி மக்களை அபராதம் விதித்து தூக்கிலிட்டுத் தண்டிக்க வேண்டிய அவசியமென்ன? வங்காளப் படையின் ஆங்கிலத் தளபதியான கர்னல் மல்லீசன் "The Making of the Bengal Army" வங்காளப்படையின் உருவாக்கம் எனும் சிறு ஏட்டில் "ஒரு இராணுவ வீரர்களின் கலகம். விரைவாக தனது குணாதியத்தை மாற்றிக் கொண்டு தேசீய எழுச்சியாக மாறியது" என்று குறிப்பிடுகிறார்.

வரலாற்றறிஞர் கீன் (Keen) இக்கிளர்ச்சிக்குக் காரணமாகச் செயல்பட்ட பல விஷயங்களை முன்வைக்கிறார். டல்ஹௌசியின் இணைப்புக் கொள்கைகளாலும் சீர்திருத்த வேகத்தாலும் பாதிப்புக்குள்ளான இளவரசர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் குமுறல்கள் என ஏற்கனவே குவித்து வைக்கப்பட்டிருந்த எரிபொருளை கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் தீப்பொறியை ஏற்படுத்திப் பற்றி எரியச் செய்தன. எட்வர்டு ஜான் தாம்சன் இந்நிகழ்வை "பெருமளவில் உண்மையான விடுதலைப் போராட்டம்" என விளக்கியுள்ளார். 1909இல் வெளியான சாவர்கரின் The War of Indian Independence (இந்திய விடுதலைப் போர்) எனும் தனது நூலில் ஆங்கிலேயரால் இதுவரை வெறும் இராணுவப் புரட்சியே என்று வர்ணிக்கப்பட்ட இந்நிகழ்வு உண்மையில் அமெரிக்க சுதந்திரப் போரைப் போன்ற ஒரு விடுதலைப் போரே என வாதிடுகின்றனர். ஆங்கிலம் படித்த மத்தியதர மக்கள் இவ்வெழுச்சியில் எந்த ஒரு பங்கையும் வகிக்காவிட்டாலும் தேசிய வரலாற்றறிஞர்கள் இவ்வெழுச்சியை இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்றே கூறுகின்றனர்.

பெருங்கிளர்ச்சிக்கான காரணங்கள்

நாடுகளை ஆக்கிரமித்தல்

டல்ஹௌசி வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் மூலமாக அவத்தையும் ஜான்சியையும் இணைத்ததும், கடைசி பேஷ்வாவின் தத்தெடுக்கப்பட்ட மகனான நானா சாகிபை அவமானகரமாக நடத்தியதும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. முறையான உரிமம் இல்லாமல், குத்தகை இல்லாத நிலங்களை வைத்திருப்போர் பற்றி விசாரிக்க பம்பாய் அரசு அமைத்த இனாம் கமிஷனின் (1852) அறிக்கையின்படி 21,000க்கும் மேற்பட்ட தோட்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இணைக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக அவத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகள் தாலுக்தாரின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்ததால் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினர். மேலும் அவத்தில் அரச குடும்பத்தின் ஆதரவை நம்பியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும், விலையுயர்ந்த ஆடைகள், அலங்கரிக்கப்பட்ட காலணிகள், அதிக விலையுள்ள நகைகள் ஆகியவற்றைத் தயாரிப்போரும் வாழ்விழந்தனர். இவ்வாறு டல்ஹௌசி தன்னுடைய விரிவாக்கக் கொள்கையின் மூலமாக பெருவாரியான மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தார்.

1857 பெருங்கிளர்ச்சி

பெருஞ்சுமையான நிலவருவாய் முறை

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகளில் இருந்ததைக் காட்டிலும் தற்போது நிலவரி மிக அதிகமாக இருந்தது. ஆங்கிலேயருக்கு முன்னர் இருந்த இந்திய அரசுகள் விளைந்த நிலங்களுக்கு மட்டுமே வரி வசூலித்தனர். ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர். இதன்படி நிலத்தில் விவசாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதே அளவு வரி வசூலிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் விவசாயப் பண்டங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியுற்றன. காலனியரசு கடனைக்

11th History Lesson 18 Tamil Medium.indd 320 10-02-2023 12:59:20

குறைக்கவோ நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் குத்தகைதாரர்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாயினர்.

முஸ்லீம் உயர்குடியினரும் கற்றறிந்தோரும் ஒதுக்கப்படுதல்

முஸ்லீம்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளையே சார்ந்திருந்தனர். கம்பெனியின் ஆட்சிக்கு முன்னர் முந்தைய அரசுகளில் மதிப்புமிகுந்த பணிகளில் அவர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். குதிரைப்படைத் தளபதிகளாகச் சிலர் உயர்ந்த ஊதியம் பெற்று வந்தனர். ஆனால் கம்பெனியின் ஆட்சியில் அவர்கள் துயரத்திற்கு ஆளாயினர். ஆங்கில மொழியும் மேலைக்கல்வியும் முஸ்லீம் அறிவுஜீவிகளை முக்கியமற்றவர்களாக ஆக்கியது. நீதிமன்றங்களில் பொதுப்பணித் தேர்வுகளில் பாரசீக மொழியின் பயன்பாடு ஒழிக்கப்பட்டது அரசுப் பணியில் முஸ்லீம்கள் சேர்வதற்கான வாய்ப்புகளைக் குறைத்தது.

மத உணர்வுகள்

1856ஆம் ஆண்டு சட்டமானது வங்காளப் படையில் உயர் ஜாதியினரும் சேர்ந்துகொள்ள வழிவகை செய்தது. சாதிப்பற்றை, கைவிட்டு அவர்கள் படைகளில் சேரவேண்டும் அல்லது இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி முன்னேறும் வாய்ப்பைக் கைவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் சதிஒழிப்புச் சட்டம், விதவை மறுமணத்தை சட்டபூர்வமாக்கியது, பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிரான சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது. 1850இல் இயற்றப்பட்ட லெக்ஸ் லோசி சட்டம் (Lex Loci Act) கிறித்தவர்களாக மதம் மாறியவர்களுக்கும் மூதாதையரின் சொத்துக்களில் உரிய பங்கினைப் பெறும் உரிமையை அளித்தது. இது வைதீக இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

மேலும் துப்பாக்கித் தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளது என்ற செய்தி பரவியபோது இந்து முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன. இத்தோட்டாக்களை புதிதாக அறிமுகமான என்பீல்டு துப்பாக்கிகளுக்குள் செலுத்துவதற்கு முன்பாக அதைப் படை வீரர்கள் கடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது கிறித்தவ மதத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சியாக கருதப்பட்டது.

ஆகவே அனைத்து விதத்திலும் 1857ஆம் ஆண்டு, பெருங்கிளர்ச்சி கனிந்த ஆண்டாகும். கொழுப்பு தடவிய தோட்டா பிரச்சனை கிளர்ச்சி எனும் வெடிமருந்தில் வைக்கப்பட்ட தீப்பொறியாகும். பதவி பறிக்கப்பட்ட அதிருப்தி கொண்ட ராஜாக்கள், ராணிகள், ஜமீன்தார்கள், குத்தகைதாரர்கள் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், முஸ்லீம் அறிவு ஜீவிகள், இந்து பண்டிதர்கள், குருமார்கள் ஆகிய அனைவரும் இவ்வெழுச்சியைத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதினர்.

பெருங்கிளர்ச்சியின் போக்கு

இப்பெருங் கிளர்ச்சி கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பரக்பூரில் இராணுவக் கலகமாகவே தொடங்கியது. மங்கள் பாண்டே தனது இராணுவ மேலதிகாரியை சுட்டுக் கொன்றார். தொடர்ந்து அங்கு இராணுவக் கலகம் வெடித்தது. அடுத்த மாதம் மீரட் நகரில் தோட்டாக்களைப் பெற வேண்டிய 90 வீரர்களில் ஐவர் மட்டுமே உத்தரவுக்கு அடிபணிந்தனர். மே மாதம் 10ஆம் நாளில் மூன்று ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த சிப்பாய்கள் கிளர்ச்சியில் இறங்கி தங்கள் உயர் அதிகாரிகளைக் கொன்று, சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரர்களை விடுதலை செய்தனர். மறுநாள் தில்லியை அடைந்த அவர்கள் ஐரோப்பியர் பலரைக் கொன்று நகரைக் கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள் இரண்டாம் பகதூர்ஷாவை பேரரசராகப் பிரகடனம் செய்தனர்.

மங்கள் பாண்டே

இரண்டாம் பகதூர்ஷா

ஜுன் மாதத்தில் கிளர்ச்சி ரோகில்கண்ட் பகுதிக்குப் பரவியது. ஒட்டுமொத்த கிராமப்புறமும் கிளர்ச்சியில் ஈடுபட்டது. கான் பகதூர் கான் தன்னைப் பேரரசருடைய வைஸ்ராயாக அறிவித்துக் கொண்டார். புந்தேல்கண்ட் பகுதியும் ஆற்றிடைப்பகுதி முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்தியது. ஜான்சியில் ஐரோப்பியர் கொல்லப்பட்டு 22 வயதான லட்சுமிபாய் அரியணை ஏற்றப்பட்டார். கான்பூரில் நானா சாகிப் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 125 ஆங்கிலேயர்களும் ஆங்கில அதிகாரிகளும் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டன. கான்பூர் படுகொலை என்றறியப்பட்ட இந்நிகழ்வு ஆங்கிலேயரைக் கோபம் கொள்ளச் செய்தது. நிலைமைகளை எதிர்கொள்ள அனுப்பப்பட்ட தளபதி ஹென்றி ஹேவ்லக் படுகொலைக்கு மறுநாளே நானா சாகிப்பைத் தோற்கடித்தார். ஆங்கில இராணுவ அதிகாரி நீல் கொடூரமான பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். படுகொலைக்குக்

11th History Lesson 18 Tamil Medium.indd 321 10-02-2023 12:59:21

ஜான்சிராணி லட்சுமிபாய்

நானா சாகிப்

காரணமானவர்கள் எனக் கருதப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டனர். நவம்பர் மாத இறுதியில் தாந்தியா தோபே கான்பூரைக் கைப்பற்றினார். ஆனால் அது விரைவில் காம்ப்பெல் என்பவரால் மீட்கப்பட்டது.

ஹென்றி லாரன்சால் பாதுகாக்கப்பட்ட லக்னோ ஆளுநர் மாளிகை கிளர்ச்சியாளர்களின் வசமானது. நானா சாகிப்பை ஹேவ்லக் தோற்கடித்த பின்னர் லக்னோவைக் கைப்பற்ற விரைந்தார். ஆனால் அவர் திரும்ப நேர்ந்தது. ஜூலை மாத இறுதியில் ஜான் லாரன்ஸால் தில்லிக்கு அனுப்பப்பட்ட ஜான் நிக்கல்சன் அதைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா சிறைக் கைதியானார். அவருடைய இரண்டு மகன்களும் பேரனும் சரணடைந்த பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவத்தில் மட்டும் தாலுக்தார்களும் விவசாயிகளுடன் பங்கு கொண்டதால் கிளர்ச்சி நீடித்தது. தாலுக்தார்களில் பலர் அவத் நவாபின் விசுவாசிகளாவர். ஆகவே அவர்கள் லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மஹாலோடு (நவாப் வஜித் அலியின் மனைவி) சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். பெரும்பாலான வீரர்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது இவர்களும் பாதிப்புக்குள்ளாயினர். நீண்ட காலத்திற்கு வங்காளப்படைகளுக்கு அவத் நாற்றங்காலாக இருந்தது. அவத்தை சேர்ந்த வீரர்கள் குறைந்த ஊதியம் குறித்தும் விடுமுறை பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றியும் புகார் செய்தனர். அவர்கள் அனைவரும் பேகம் ஹஸ்ரத் மஹாலின் பின் அணி திரண்டனர். ராஜா ஜெய்லால் சிங்கின் தலைமையில் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு லக்னோவைக் கைப்பற்றினர். ஹஸ்ரத் மஹால் தன் மகன் பிர்ஜிஸ் கத்ராவை அவத்தின் அரசராக அறிவித்தார். கான்பூரில் பழிதீர்த்துக் கொண்ட நீல் லக்னோவில் தெருச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1858 மார்ச் மாதத்தில்தான் லக்னோவை ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தது.

சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937–39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது.

ஹக் ரோஸ் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜான்சியை முற்றுகையிட்டு தாந்தியா தோபேயைத் தோற்கடித்தார். இருந்தபோதிலும் லட்சுமிபாய் துணிச்சலுடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருக்கு ஆதரவான குவாலியர் அரசர் சிந்தியா தப்பியோடினார். ரோஸ் தன்னுடைய படைகளோடு லட்சுமிபாயுடன் நேரடியாக மோதினார். வியப்பூட்டும் வகையில் லட்சுமிபாய் போரில் பங்கேற்று வீரமரணமடைந்தார். கிளர்ச்சியாளர்களில் லட்சுமிபாய் மிகச் சிறந்த தைரியம் மிக்க தலைவரென லட்சுமிபாயைப் பற்றி ரோஸ் குறிப்பிட்டுள்ளார்.

குவாலியர் விரைவில் மீட்கப்பட்டது. 1858இல் கானிங் இராணுவப் புரட்சி ஒடுக்கப்பட்டு அமைதி மீட்கப்பட்டதாக அறிவித்தார். தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு 1858 ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.

இரண்டாம் பகதூர்ஷா செப்டம்பர் 1857இல் கைது செய்யப்பட்டு குற்றவாளி என அறிவிக்கப்பட்டு ரங்கூனுக்கு (மியான்மர்) நாடு கடத்தப்பட்டார். அங்கேயே அவர் நவம்பர் 1862 இல் தனது 87வது வயதில் மரணமடைந்தார். அவருடைய இறப்போடு முகலாய அரசவம்சம் முடிவுக்கு வந்தது.

பெருங்கிளர்ச்சியின் விளைவுகள்

விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை 1858

விக்டோரியா மகாராணி

அலகாபாத்தில் 1858 நவம்பர் 1இல் அரசு தர்பார் கூட்டப்பட்டது. விக்டோரியா ராணி வெளியிட்ட பேரறிக்கை தர்பார் மண்டபத்தில் கானிங் பிரபுவால் வாசிக்கப்பட்டது. அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் முதல் வைஸ்ராயுமாவார்.

- இதன் பின்னர் இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசுச் செயலர் மூலம் ஆளப்படும். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா கவுன்சில் எனும் அமைப்பு அரசு செயலருக்கு உதவி செய்யும். இதன்

11th History Lesson 18 Tamil Medium.indd 322 10-02-2023 12:59:21

விளைவாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டுக் குழுவும் ஒழிக்கப்பட்டன. ஆங்கிலேய முடியரசும் நாடாளுமன்றமும் அரசியல் அமைப்பின் அடிப்படையில் இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்வர். கிழக்கிந்தியக் கம்பெனியின் படை கலைக்கப்பட்டு இங்கிலாந்து அரசின் படைகளோடு இணைக்கப்படும்.

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை இப்பேரறிக்கை ஏற்றுக் கொண்டது. அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் மதிப்பதாகவும் உறுதியளித்தது. மேலும் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கம் இல்லை எனவும் அறிவித்தது.
- 1853ஆம் ஆண்டு சட்டமன்றம் ஐரோப்பியர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருந்ததால் அவர்கள் இந்தியரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அக்கறை இல்லாமல் இருந்ததே இச்சிக்கலுக்கு காரணம் என்று கூறிய அறிக்கை 1861இல் அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது.
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்படும். ஆங்கிலேயரை நேரடியாகக் கொன்ற கிளர்ச்சியாளர்களைச் தவிர மீதமுள்ள கிளர்ச்சியாளர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.
- கல்வி, பொதுப்பணித் திட்டங்கள் (சாலைகள் இருப்புப்பாதை, தந்தி, நீர்ப்பாசனம்) ஆகியவை முடுக்கிவிடப்படும்.
- கடந்த காலம் மீண்டும் வரும் எனும் நம்பிக்கை மங்கியது. இந்தியச் சமூகத்தின் மரபுசார்ந்த கட்டமைப்பு உடையத் துவங்கியது. மேற்கத்தியமயமான ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கம் தேசிய சிந்தனைகளோடு உருவானது.

பாடச் சுருக்கம்

- கம்பெனி அரசுக்கு எதிராக ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரின் எதிர்ப்பும் அது எவ்வாறு ஆங்கிலேய மைசூர் போர்களுக்கு இட்டுச் சென்றது என்பதும் விளக்கப்பட்டுள்ளன.
- புலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், அனைத்து தென்பகுதிப் பாளையக்காரர்கள், கொங்கு பகுதியின் தீரன் சின்னமலை ஆகியோரின் கிளர்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன.
- வேலூரில் சிறைவைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் மகன்களின் ஆதரவோடு தென்பகுதிப் பாளையக்காரர்கள் தென்னிந்தியாவின் அரசபதவி பறிக்கப்பட்ட அரசர்களோடு இணைந்து இறுதிப் போரை நடத்தியது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- அரசுரிமை பறிக்கப்பட்ட அரசர்கள், பதவி இழந்த ஜாகீர்தார்கள், ஜமீன்தார்கள், விவசாயிகள் 1857 இல் மேற்கொண்ட பெருங்கிளர்ச்சியும் அது எவ்வாறு ஆங்கிலப் பேரரசின் அடித்தளத்தை ஆட்டங்காண வைத்தது என்பதும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.
- 1858 ஆம் ஆண்டு ராணியாரின் பிரகடனத்தின் அடிப்படையில் இந்தியா ஆங்கில முடியரசுக்கு மாற்றப்பட்டதும், பிரகடனத்தின் சிறப்பியல்புகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்ட பின் ____________ உண்மையான அரசர் ஆனார்.

   (அ) ஹைதர் அலி (ஆ) நஞ்சராஜா

   (இ) நாகம நாயக்கர் (ஈ) திப்பு சுல்தான்

2. திப்பு சுல்தான் ____________ பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் தொடங்கியது.

   (அ) கள்ளிக்கோட்டை (ஆ) குடகு

   (இ) கொடுங்களூர் (ஈ) திண்டுக்கல்

3. பாளையக்காரர் முறை முதன்முதலில் ____________ பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

   (அ) விஜயநகர் (ஆ) பாமனி

   (இ) காகதிய (ஈ) ஹொய்சாள

4. நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய புலித்தேவரின் மூன்று முக்கியமான கோட்டைகளை ____________ தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

   (அ) மாபுஸ் கான் (ஆ) யூசுப் கான்

   (இ) கர்னல் ஹெறான் (ஈ) நபிகான் கட்டக்

11th History Lesson 18 Tamil Medium.indd 323 10-02-2023 12:59:21

5. வேலு நாச்சியார் ____________ அரசருடைய மகள்

(அ) சிவகங்கை (ஆ) புதுக்கோட்டை

(இ) இராமநாதபுரம் (ஈ) பழவநத்தம்

6 வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாகக் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ____________ ஆவார்.

(அ) W.C. ஜாக்சன் (ஆ) A. பானர்மேன்

(இ) S.R. லூஷிங்டன் (ஈ) P.A. ஆக்னியூ

7. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு ____________ ஆகும்.

(அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள்
(ஆ) நவீன சீருடை மாற்றம்
(இ) புதிய தலைப்பாகை
(ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

8. கோல்களின் எழுச்சிக்குக் காரணமானவர் ____________ ஆவார்.

(அ) பின்த்ராய் மன்கி (ஆ) சிடோ

(இ) பிர்சா முண்டா (ஈ) கானு

9. 1857 ஆம் ஆண்டு புரட்சியின்போது இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாக இருந்தவர் ____________ ஆவார்.

(அ) டல்ஹௌசி ஆ) கானிங்

(இ) மின்டோ (ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே

10. 1857ஆம் ஆண்டு புரட்சியின்போது நானா சாகிப்பின் படைகளைத் தோற்கடித்தவர் ____________

(அ) ஹென்றி லாரன்ஸ்

(ஆ) மேஜர் ஜெனரல் ஹோவ்லாக்

(இ) சர் ஹீயூக் வீலர்

(ஈ) ஜெனரல் நீல்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க

(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ், திப்பு சுல்தானை பழிவாங்கும் நோக்கில் அணுகினார்.

(ஆ) திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

(இ) ஆற்காட்டு நவாப் வேலு நாச்சியாருக்கு ஆதரவு அளித்தார்.

(ஈ) திருநெல்வேலி காடுகளின் மையத்தில் காளையார்கோவில் உள்ளது.

12. **கூற்று** : சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

காரணம் : மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

(ஆ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

(இ) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

(ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. பொருத்துக

(i) ஜில்லெஸ்பி	–	1. ஸ்ரீரங்கப்பட்டணம்
(ii) மஞ்சி	–	2. பாரக்பூர்
(iii) ஜாக்கோபியன் கழகம்	–	3. வேலூர் கலகம்
(iv) மங்கள் பாண்டே	–	4. சந்தால்கள்

(அ) 1, 2, 3, 4 (ஆ) 3, 4, 1, 2

(இ) 3, 2, 1, 4 (ஈ) 2, 3, 4, 1

II. குறுகிய விடை தருக

1. திப்பு சுல்தான் மீது சுமத்தப்பட்ட ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் (1792) அவமானகரமான விதிமுறைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
2. 'வராகன்' (பகோடா) என்றால் என்ன?
3. கொங்குப் பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சிகள் பற்றி நீவிர் அறிவது யாது?
4. 'சாயில் ரகப்' படுகொலை பற்றி சிறு குறிப்பு வரைக.
5. கான்பூர் படுகொலை.

III. சுருக்கமான விடை தருக

1. ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே கையெழுத்தான மதராஸ் உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை விளக்குக.
2. 1801ம் ஆண்டு கிளர்ச்சி பற்றி எழுதுக.
3. 1806 ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக.
4. கோல் பழங்குடியினரின் எழுச்சியைப் பற்றி விளக்குக.
5. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?

IV. விரிவான விடை தருக

1. தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை பற்றி விவரிக்கவும்.
2. 1806 ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும்.
3. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்.

செயல்பாடுகள்

1. யூசுப்கான் பற்றிய கட்டுரை ஒன்றைத் தயார் செய்க.
2. 1857 ஆம் ஆண்டு புரட்சியில் நானா சாகிப்பின் பங்கினை எடுத்துக் கூறுக.

ஒப்படைப்பு

1. ஆங்கிலேயருக்கு எதிரான வீரபாண்டிய கட்டபொம்மனின் எழுச்சி உரையை நாடகமாக நடித்துக் காண்பிக்கவும்.
2. வேலூர் கோட்டையைப் பார்வையிட்டு அது தொடர்பான வரலாற்றுத் தகவல்களை சேகரிக்கவும்.

மூலநூல்கள்

1. Bipan Chandra, *India's Struggle for Independence 1857-1947*, New Delhi: Penguin Books, 1989.
2. S. Kadhirvel, *History of Maravas*, Madurai, 1977
3. K.A. Manikumar, *Vellore Revolt, 1806*, Allied Publishers, 2007
4. S. Gopalakrishnan, ed., *The South Indian Rebellions – Before and After 1800*, Chennai: Palaniappa Brothers, 2007.
5. Sekhar Bandyopadhyay, *From Plassey to Partition and After: A History of Modern India*, Orient BlackSwan, 2004.
6. Pramod K. Nayar, *The Great Uprising – India 1857*, New Delhi: Penguin Books, 2007.

கலைச்சொற்கள்

நெடிய	protracted	lasting for a long time
நடப்பதற்குமுன் தடுத்து நிறுத்துவது	pre-empt	take action in order to prevent
தட்டிக் கழிக்கின்ற	evasiveness	avoidable
தொல்லைக்கு ஆளான	irked	irritated
சண்டை	scuffle	fight
தப்பிச்செல்	elude	escape
கோபமூட்டும்	obnoxious	offensive
தொப்பியின் மீது பதவியைக் குறிக்கும் துணிக் குஞ்சம்	cockade	a small ribbon on a hat
வெறுக்கத்தகுந்ததாக	anathema	detestable
பீரங்கிகளின் ஒரே நேரத்தில் குண்டு வீச்சு	volley	the discharge of a number fire – arms together
தவிர்	shun	avoid
பேச்சு வார்த்தை நடத்துதல்	parleys	holding discussion

11th History Lesson 18 Tamil Medium.indd 325 10-02-2023 12:59:21

அலகு 19

நவீனத்தை நோக்கி

கற்றல் நோக்கங்கள்

கீழ்கண்டவை பற்றி அறிதல்

- பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம் முதலான இயக்கங்களின் சமூக, சமய சீர்திருத்தங்கள்
- விவேகானந்தரின் போதனைகளும், இராமகிருஷ்ண இயக்கமும்
- பிரம்ம ஞான சபை, சத்ய சோதக் சமாஜம், ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம்
- இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்கள்
- தமிழ்நாட்டில் ஏற்பட்ட சீர்திருத்த இயக்கங்கள்
- கிறித்தவ சமய பரப்புக் குழுவின் பங்களிப்பு

C9QU3

அறிமுகம்

இந்தியா பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் காலப்பகுதியில் ஆங்கில நிர்வாகத்துடனும் ஆங்கில வர்த்தகத்துடனும் நெருக்கமான தொடர்புடைய ஆங்கிலக் கல்வி பயின்ற சிறிய அறிவுஜீவிகளின் கூட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தது. கிறித்தவ சமயப் பரப்பாளர்களின் பணிகளும் சிந்தனைகளும் ஏற்கனவே தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தன. ஆங்கிலேயச் செல்வாக்கின் தாக்கத்திற்கு ஆட்பட்ட முதல் மாகாணம் வங்காளமாகும். அதனால் பல சீர்திருத்தக் கருத்துக்கள் அங்கிருந்தே உருவாயின. ஆங்கில நிர்வாகம், ஆங்கிலக் கல்வி, ஐரோப்பிய இலக்கியங்கள் ஆகியவை புதிய சிந்தனை அலைகளை இந்தியாவிற்கு கொண்டு வந்தன. அவை மரபு சார்ந்த அறிவுக்குச் சவால் விடுத்தன. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட நன்னெறிச் சிந்தனைகள் மனித இனத்தின் பரிணாமம், வளர்ச்சி குறித்த சிந்தனைகள், அறிவொளியோடு தொடர்புடைய இயற்கை உரிமைகள் கோட்பாடு ஆகிய சிந்தனைகள் இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. அச்சுத் தொழில்நுட்பம், சிந்தனைகள் பரவுவதில் முக்கியப் பங்கை வகித்தது.

19.1 சீர்திருத்த இயக்கங்களின் எழுச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியச் சமூகம் மூடநம்பிக்கை, சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு எனும் நச்சுச் சூழலில் சிக்கியுள்ளது என ஆங்கிலேயர் விளக்கினர். அவர்களின் கண்ணோட்டத்தில் உருவ வழிபாடும், பல கடவுள் வழிபாடும் வைதீகத்திற்கு வலுவேற்றி, அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற மக்களைத் தூண்டியவை ஆகும். அதற்கு இணையாகச் சமூகச் சூழலும் உயிரோட்டமில்லாமல் தாழ்ந்த நிலையில் இருந்தது. மேலும் பெண்களின் நிலையும் இரங்கத்தக்க நிலையில் இருந்தது. உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கம் மிகவும் கண்டனத்திற்கு உள்ளானது. பிறப்பின் அடிப்படையிலான சமூகப் பிரிவுகளும் அதன் விளைவான சாதி முறையும் விமர்சனம் செய்யப்பட்டது. மிக முக்கியமாக ஆங்கிலேயர், தங்களின் தலையீடு இல்லாமல் இத்தகைய தீமைகளிலிருந்து இந்தியர் விடுபட வாய்ப்பில்லை என வாதிட்டனர். இது ஆங்கில ஆட்சியை நியாயப்படுத்துவதற்காகக் கிறித்தவ மதப் பரப்பாளர்களும் யூடிலிட்டேரியன்களும் முன்வைத்த கருத்தென்பதைச் சொல்லத் தேவையில்லை.

11th History Lesson 19 Tamil Medium.indd 326 02-01-2023 14:12:22

யூடிலிட்டேரியன்கள் (Utilitarians): மிக அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்பட்ட மகிழ்ச்சியைக் கோரிய நவீனச் சிந்தனையாளர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா மிகப்பெரிய, மிகவும் சிக்கலான பல்வகைப்பட்ட தன்மைகளைக் கொண்ட நாடாக இருந்தது. இடத்திற்கு இடம் நிலைமை மிகவும் மாறுபட்டிருந்தன. காலந்தோறும் சமூகப் பண்பாட்டுத் தீமைகளுக்கு எதிராக இந்தியச் சீர்திருத்தவாதிகள் போராடியிருந்தனர். ஆனால் ஆங்கிலேயரின் அறிவொளிச் சிந்தனைகளுடன் கூடிய வரவு சந்தேகத்திற்கிடமின்றிப் புதிய சவாலை முன்வைத்தது இப்பாடப்பகுதி எவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளில் சீர்திருத்த இயக்கங்கள் உதயமாயின என்பதை விவரிக்கின்றது.

மேற்கத்தியப் பண்பாடு, சிந்தனைகள் ஆகியவற்றின் வளர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபு சார்ந்த நிறுவனங்கள் தங்களை உயிர்த்துடிப்புள்ளனவாக மாற்றிக் கொள்ளக் கட்டாயப்படுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் எதிர்ப்புகளின் வெளிப்பாடுகளும், மாற்றத்திற்கான வேட்கையும் பல்வகைப்பட்ட சீர்திருத்த இயக்கங்களின் மூலம் வெளிப்பட்டன. இவ்வியக்கங்கள் இந்திய மக்களின் மதக் கண்ணோட்டத்தையும் சமூக நிறுவனங்களையும் சீர்திருத்துவதையும் ஜனநாயகப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. புதிய பொருளாதார சக்திகளின் தோற்றம், கல்வியின் பரவல், தேசிய மனப்பான்மையின் வளர்ச்சி, நவீன மேற்கத்திய சிந்தனைகள்–தத்துவங்கள்–பண்பாட்டின் செல்வாக்கு, ஐரோப்பாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு போன்றவை சீர்திருத்தங்களின் அவசியத்திற்கு வலுசேர்த்தன.

இச்சீர்திருத்த இயக்கங்களுக்குக் கருத்தொற்றுமை வழங்கியது பகுத்தறிவு, மனிதநேயம், உலகளாவிய மத உணர்வு ஆகியனவாகும். இக்கண்ணோட்டம் மரபு சார்ந்தவற்றைப் பகுத்தறிவோடு அணுகவும் சமகால சமூக–சமய நடைமுறைகளைச் சமூகப் பயன்பாடு எனும் பரிமாணத்தில் பார்க்கவும் உதவின. எடுத்துக்காட்டாக பிரம்ம சமாஜத்தில் ராஜா ராம்மோகன் ராய் வேதங்களில் தவறே இருக்க முடியாது எனும் கருத்தைப் புறக்கணித்தார். அலிகர் இயக்கத்தின்போது சையது அகமதுகான் மதம் சார்ந்த சிந்தனைகள் மாற்றப்பட முடியாதவை என்பதை மறுத்தார். "எங்களுடைய நிலை அனைத்து மதங்களிலும் உண்மைகள் இருந்தாக வேண்டும் என்பதல்ல, ஆனால் உலகத்தில் நிறுவப்பட்ட அனைத்து மதங்களும் உண்மையானவையே" எனக் கேசவ் சந்திர சென் கூறினார்.

இந்தியச் சமூகத்தின் ஒட்டுமொத்தப் பண்பாட்டு நீரோட்டத்தை உள்வாங்கிக் கொண்ட இவ்வியக்கங்கள் மொழி, மதம், கலை, தத்துவம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின. விரிந்த கண்ணோட்டத்தில் இச்சீர்திருத்த இயக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. சீர்திருத்த இயக்கங்கள்
2. மீட்பியக்கங்கள்

இவ்விருவகைப்பட்ட இயக்கங்களும் தாங்கள் மீட்டெடுக்கவுள்ள மதம் இழந்துவிட்ட தூய்மையைப்பற்றி மாறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டிருந்தன. ஒரு சீர்திருத்த இயக்கத்திற்கும் மற்றொன்றுக்குமான வேறுபாடு, இவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு மரபுகளைச் சார்ந்திருந்தன என்பதைப் பொறுத்தே அமைந்தது. அடிப்படையில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் மதச்சீர்திருத்தங்களோடு ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகவே இருந்தது. ஏனெனில் சமூகத் தீமைகளான சாதியும், ஆண் பெண் சமத்துவமின்மையும் தங்களின் இருப்பிற்கான நியாயத்தை மதங்களிடமிருந்தே பெற்றன. தொடக்கத்தில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் ஒரு குறுகலான சமூக அடித்தளத்தைக் கொண்டிருந்தன. சமூகத்தின் மேல்தட்டு மற்றும் இடைத்தட்டை சேர்ந்த அவ்வியக்கங்கள் தங்களின் நவீன சிந்தனைகள் நிலவிவரும் சமூக எதார்த்தங்களோடு இணைந்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. அதன் பின்னர் சமூக சீர்திருத்த இயக்கங்கள் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை மறுகட்டமைப்பு செய்வதென்பது சமூகத்தின் கீழ் அடுக்குகளுக்குள்ளும் கசியத் துவங்கின. பொது விவாதங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் ஆகிய வடிவங்களில் அறிவுஜீவிகளிடையே நடைபெற்ற அனல் பறக்கும் விவாதங்கள், புதிய சிந்தனைகளை மக்களிடையே கொண்டு செல்வதிலும் பழைய சிந்தனைகளைப் புதிய வடிவத்தில் மீட்டுருவாக்கம் செய்வதிலும் பெரும்பங்கு வகித்தன.

தொடக்கத்தில் சமூகப் பேரவை, இந்தியப் பணியாளர்கள் போன்ற அமைப்புகளும், கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களுமே சமூகச் சீர்திருத்த

இயக்கங்களை துரிதப்படுத்தக் காரணங்களாய் இருந்தன. அதற்குத் தெளிவான அறிவுத்திறன் கொண்ட பல தனி நபர்களும் துணை நின்றனர். அவர்களைப் பற்றி வர இருக்கிற பக்கங்களில் நாம் பார்க்கவுள்ளோம். பின் வந்த வருடங்களில், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் இந்திய தேசிய இயக்கம் சமூக சீர்திருத்தத்திற்கான தலைமையையும் அமைப்பையும் வழங்கியது.

பிரம்ம சமாஜம் (1828)

ராஜா ராம்மோகன் ராய் பல்துறை புலமை பெற்றவராவார். அவர் 1828இல் பிரம்ம சமாஜத்தை நிறுவினார். "எங்கும் நிறைந்துள்ள, கண்டறிய முடியாத, மாற்ற முடியாத, இவ்வுலகத்தை உருவாக்கி பாதுகாக்கும் சக்தியை வணங்கி வழிபடுவதில் பிரம்ம சமாஜம் உறுதியாயிருந்தது. இந்து மதத்தைத் தூய்மைபடுத்தல், ஒரு கடவுள் வழிபாட்டைப் போதித்தல், மனித கண்ணியத்திற்கு முக்கியத்துவம் தருதல், உருவ வழிபாட்டை எதிர்த்தல், சமூகத் தீமையான உடன்கட்டை ஏறுதலை ஒழித்தல் ஆகியன அவருடைய நீண்டகாலத் திட்டங்களாகும். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றி ஓய்வு பெற்ற அவர் பாரசீகம், சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் உரையாடக் கூடியவர். அவருடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் சமூக சீர்திருத்தங்களின் வழியாக மக்களை அரசியல் ரீதியாக உயர்வடையச் செய்வதை இலக்காகக் கொண்டிருந்தன. அவர் மனித நேயமற்ற சமூகப்பழக்கமான உடன்கட்டை ஏறுதலுக்கு எதிரான மனவுறுதிமிக்க போராளியாவார். 1818 இல் அவர் எழுதிய "கைம்பெண்களை உயிரோடு எரிக்கும் பழக்கத்தை ஆதரிப்போருக்கும் எதிர்ப்போருக்குமிடையே நடைபெற்ற விவாதம்" எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரையில் எந்த மதமும் கைம்பெண்களை உயிரோடு எரிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை புனித நூல்களைச் சுட்டிக்காட்டி நிரூபித்தார். கம்பெனி 1829இல் ஒரு சட்டத்தை இயற்றி அதன்மூலம் உடன்கட்டை ஏறுதல் குற்றம் என அறிவித்ததன் மூலம் அவருடைய முயற்சிகள் வென்றன.

பிரம்ம சமாஜத்தின் ஒட்டுமொத்தப் பங்களிப்பைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்.

1. பலதெய்வ வழிபாடு, உருவ வழிபாடு, தெய்வ அவதாரங்கள் மீதான நம்பிக்கை ஆகியவற்றை வெளிப்படையாகக் கண்டனம் செய்தது.
2. சாதிமுறை, மூடநம்பிக்கைகள், ஆகியவற்றைக் கண்டனம் செய்தது.
3. குழந்தைத் திருமணம், பர்தா முறை, உடன்கட்டை ஏறுதல் ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோரியது.
4. கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தது.

ராஜா ராம்மோகன் ராய்

பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு ஐரோப்பா சென்ற ராஜா ராம்மோகன் ராய் பிரிஸ்டல் நகரில் மரணத்தைத் தழுவினார். தக்க சமயத்தில் தேவேந்திரநாத் தாகூர் (ரவீந்திரநாத் தாகூரின் தந்தையார்) புத்துயிர் ஊட்டாமல் இருந்திருந்தால் இவ்வியக்கம் விரைவாக வீழ்ந்திருக்கும். அவருக்குப்பின் 1857 முதல் கேசவ் சந்திர சென் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார். இவ்வமைப்பின் வலுவை 1865இல் அது பெற்றிருந்த 54 கிளைகளின் எண்ணிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். (வங்காளத்தில் 50 கிளைகள், வடமேற்கு மாகாணத்தில் 2, பஞ்சாப்பில் 1, தமிழ்நாட்டில் 1 என மொத்தம் 54 கிளைகள்) காலப்போக்கில் பிரம்ம சமாஜம் இரண்டாகப் பிரிந்தது. அவை தேவேந்திரநாத் தாகூரின் தலைமையில் இயங்கிய 'இந்திய பிரம்ம சமாஜம்', கேசவ் சந்திர சென்னுடைய 'சதாரன் பிரம்ம சமாஜ்' என்பனவாகும்.

தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளரான சைதை காசி விஸ்வநாத முதலியார் சமாஜத்தின் கருத்துகளை விளக்க 'பிரம்ம சமாஜ நாடகம்' எனும் தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதினார். கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவாக ஒரு ஆய்வுக் கட்டுரையையும் எழுதினார். 1864இல் இதே நோக்கத்திற்காகத் 'தத்துவபோதினி' எனும் தமிழ் இதழ் தொடங்கப்பட்டது.

பிரம்ம சமாஜம் வங்காள சமூகத்தின் வைதீகப் பிரிவினரிடமிருந்தும், இந்து தர்மசபை போன்ற அமைப்புகளிடமிருந்தும் பெரும் எதிர்ப்பைச் சந்தித்தது. இருந்தபோதிலும் ஈஸ்வரசந்திர வித்யாசாகர் போன்ற சீர்திருத்தவாதிகளும் இருந்தனர்; ஆனால் அவர் இந்து நூல்களைத் தமக்கு ஆதாரமாக கொண்டார்.

பிரம்ம சமாஜம் பெருமளவிலான மக்களை ஈர்க்கவில்லை எனினும், அது அறிவு ஜீவிகளின் மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் முற்போக்குக் கருத்துகளால் கவரப்பட்ட பல இளைஞர்கள் ஆர்வத்தோடு

11th History Lesson 19 Tamil Medium.indd 328 02-01-2023 14:12:22

அவற்றைப் பரப்பினர். தாகூரின் குடும்பம் ஒரு பிரம்ம சமாஜக் குடும்பம். அதன் செல்வாக்கை தாகூருடைய கருத்துக்களிலும் எழுத்துக்களிலும் காணலாம்.

பிரார்த்தனை சமாஜம் (1867)

பிரம்ம சமாஜத்தின் கிளை அமைப்பான பிரார்த்தனை சமாஜம் 1867இல் பம்பாயில் ஆத்மராம் பாண்டுரங் என்பவரால் நிறுவப்பட்டது. எம்.ஜி. ரானடே, ஆர்.ஜி. பண்டார்க்கர் ஆகியோர் இவ்வமைப்பில் சேர்ந்து அமைப்புக்கு வலிமை சேர்த்தனர். பிரார்த்தனை சமாஜம் ஓர் அமைப்பு என்ற அளவில் பெரும் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவ்வமைப்பின் உறுப்பினர்களான ரானடே, பண்டார்க்கர், கே.டி. தெலங் போன்றோர் மகாராஷ்டிராவின் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் தலைவர்களாவர். பின்வந்த ஆண்டுகளில் அவர்கள் சமூக சீர்திருத்த இயக்கங்களை நிறுவினர்.

பிரார்த்தனை சமாஜம் பிரம்ம சமாஜத்தைப் போன்றதே என்றாலும் அது மகாராஷ்டிராவைச் சேர்ந்த துறவிகளின் பக்தி மரபுகளோடு உளப்பூர்வமான தொடர்பைக் கொண்டிருந்தது. பிரார்த்தனை சமாஜம், சமூகத்தின் கடைநிலையிலுள்ள பெண்கள், தொழிலாளர் ஆகியோருக்குக் கல்வி வழங்குவதன் மூலம் தனது பணியைத் தொடர்ந்தது. சமபந்தி விருந்து, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் மேம்பாடு ஆகிய சமூக சீர்திருத்தப் பணிகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தியது.

ரானடேயின் முயற்சியால் உருவாக்கப்பட்ட தேசிய சமூக மாநாடு என்னும் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாடு (1885) நடைபெற்று முடிந்தவுடன் கூடும். ஆழமான அறிவும் கூர்மைத்திறனும் கொண்ட நீதியரசர் ரானடேயின் வழிகாட்டுதலில் பிரார்த்தனை சமாஜம் மேற்கிந்தியப் பகுதியில் சமூக சீர்திருத்தத்தின் செயலூக்கமிக்க மையமானது. விதவை மறுமணச் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கியவர்களில் அவரும் ஒருவர். மேலும் தக்காணக் கல்விக் கழகம் என்னும் புகழ் பெற்ற அமைப்பைத் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றார். நாட்டுக்குத் தன்னலமற்றச் சேவை செய்வதற்கு எத்தகைய கல்வி அவசியமோ அக்கல்வியை இளைஞர்களுக்கு வழங்குவதை இவ்வமைப்பு நோக்கமாகக் கொண்டிருந்தது. ரானடே 1901இல் இயற்கை எய்திய போது சந்தவர்க்கர் தலைமைப் பொறுப்பேற்றார்.

ஆரிய சமாஜம் (1875)

தயானந்த சரஸ்வதி

ஆரிய சமாஜத்தை உருவாக்கியவர் தயானந்த சரஸ்வதி (1824–1883) ஆவார். குஜராத்தை சேர்ந்த அவர் துறவியாகும் எண்ணத்தில் இளமையிலேயே வீட்டைவிட்டு வெளியேறினார். பதினேழு ஆண்டுகள் இந்தியா முழுவதும் சுற்றியலைந்தார். 1863இல் பல ஊர்களுக்குச் சென்று தனது கருத்துக்களைப் போதித்தார். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் சில கல்வி நிலையங்களையும் நிறுவினார். 1872இல் கல்கத்தாவில் பிரம்மசமாஜ உறுப்பினர்களைச் சந்தித்தார். 1875இல் 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் தனது முக்கிய நூலை வெளியிட்டார். அவருடைய கருத்தின்படி சமகாலத்து இந்து மதம் சீர்கேடு அடைந்துவிட்டது. ஆகவே அவர் புராணங்கள், பல கடவுள் வழிபாடு, உருவ வழிபாடு, பிராமண அர்ச்சகர்களின் நடவடிக்கைகள், புனிதப் யாத்திரைகள் ஆகியவற்றை நிராகரித்தார். விதவைத் திருமணத்திற்கான தடையை எதிர்த்தார். சமஸ்கிருத மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்த அவர் "வேதங்களை நோக்கித் திரும்புக" என அழைப்பு விடுத்தார். வேதங்களை அடிப்படையாக கொண்டு சமூகத்தை வடிவமைக்க விரும்பிய அவர் அதே சமயம் புராணங்களைப் புறக்கணித்தார். ஏனைய சீர்திருத்தவாதிகளைப் போலவே பெண் கல்வி, கைம்பெண் திருமணம் ஆகியவற்றை ஊக்குவித்தார்.

சுவாமி தயானந்த சரஸ்வதி பஞ்சாப் பகுதிகளில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தார். அங்கிருந்த 'கத்ரி' எனப்படும் வணிகச் சமூகம் காலனிய காலத்தில் மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. ஆனால் பஞ்சாபில் இந்து, முஸ்லீம், சீக்கியரிடையே பெருமளவில் வகுப்புவாத மோதல் நடைபெற்று வந்தது. தயானந்தரின் 'சுத்தி' இயக்கம் இந்துக்கள் அல்லாதவர்களை இந்துக்களாக மாற்ற முயன்று பெரும் எதிர்ப்புகளை குறிப்பாக அகமதியா இயக்கத்தின் எதிர்ப்புகளை சந்தித்தது.

ஆரிய சமாஜம் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது. தயானந்தா ஆங்கிலோ வேதப் பள்ளிகளும் (DAV) கல்லூரிகளும் நிறுவப்பட்டதின் மூலம் தயானந்தரின் செல்வாக்கு இருபதாம் நூற்றாண்டில் தொடர்ந்தது.

இராமகிருஷ்ண இயக்கம் (1897)

சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதையும் அதில் வங்காளம் தீவிரமாகப்

11th History Lesson 19 Tamil Medium.indd 329 02-01-2023 14:12:22

பங்கேற்று நாட்டின் மற்ற பகுதிகளுக்கு முன்மாதிரியாக திகழ்ந்ததையும் நாம் முன்னரே கண்டோம். அதன் தொடர்ச்சியாக வங்காளத்தில் இராமகிருஷ்ண பரம்ஹம்சரின் நினைவாக இராமகிருஷ்ண மிஷன் உதயமானது. இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவின் அருகேயுள்ள தட்சினேஸ்வர் எனும் ஊரிலுள்ள கோவிலின் ஏழைப் பூசாரி ஆவார். அவர் முறையான கல்வி கற்றவரில்லை. ஆனால் தீவிர ஆன்மீக வாழ்வை மேற்கொண்டவர். அனைத்து மதங்களிலும் இயல்பாக உள்ள உண்மைகள் மீது ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். பல்வேறு மதங்களின் நடைமுறைகளுக்கு ஏற்றவாறு சமயப் பணிகளை மேற்கொண்டு அம்மதங்கள் சார்ந்த நம்பிக்கைகளைச் சோதித்துப் பார்த்தார். அவரைப் பொருத்த அளவில் "அனைத்து மதக் கருத்துக்களும் ஒரே இலக்கைச் சென்றடையும் பல்வேறு பாதைகள்" என்பதாகும். இராமகிருஷ்ணருடைய பரந்த பார்வையும், இறைநிலை சார்ந்த உள்ளுணர்வும், ஆன்மீகப் பெருவிருப்பமும் பெருவாரியான மக்களைக் கவர்ந்தன. தன் கருத்துகளை கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகள் மூலமாக விளக்கினார். அவர்மேல் வியப்புற்ற ஒருவர் இவையனைத்தையும் 'இராமகிருஷ்ண காதாமிர்தா' எனும் தலைப்பில் தொகுத்தளித்துள்ளார்.

இராமகிருஷ்ண பரம்ஹம்சர்

விவேகானந்தர்

அவருடைய சீடர்களுள் மிகவும் புகழ் பெற்றவர், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்திருந்த இளைஞர் நரேந்திரநாத் தத்தா என்பவராவார். இவரே சுவாமி விவேகானந்தர் (1863–1902) எனப் புகழடைந்தார். அவர் தன் குருவின் கருத்துகளை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கொண்டு சென்றார். அவருடைய கல்வியறிவும் பேச்சாற்றலும், ஆன்மீக தோற்றமும், அவருடைய வியத்தகு ஆளுமையும் அவருக்கு நாடு முழுவதும் சீடர்களை உருவாக்கியது. அவர்களில் பலர் தேசிய இயக்கத்திலும் இணைந்தனர். விவேகானந்தர் 1893இல் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற உலகச்சமய மாநாட்டில் பங்கேற்று அங்கு கூடியிருந்தோர் மேல் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினார். இவ்வியக்கம் பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கான இல்லங்கள் ஆகியவற்றையும் நிறுவியது. இயற்கை பேரழிவுகளாலும் மனிதர்களால் ஏற்பட்ட பேரழிவுகளாலும் மக்கள் துயருற்றபோது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.

> சுவாமி விவேகானந்தர் இளமை, தைரியம் ஆகியவற்றின் மறுவடிவமாவார். வாலன்டைன் சிரோல் என்பாரின் வார்த்தைகளில் "தனது ஆளுமைத் திறனால் வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கும் அதனுடைய புதிதாகப் பிறப்பெடுத்துள்ள தேசம் எனும் உரிமைக் கோரிக்கைக்கும் கண்கூடான அங்கீகாரத்தைப் பெற்று தந்த முதல் இந்தியர்" ஆவார்.

பிரம்மஞான சபை (1875)

இந்திய அறிவார்ந்த மக்கள், தாங்கள் மேற்கத்திய அறிவொளி மற்றும் பகுத்தறிவு இயக்கங்களால் விழிப்புணர்வு அடைந்ததாக உணர்ந்த நேரத்தில் மேலை நாடுகளின் சிந்தனையில் ஒரு சோர்வு ஏற்பட்டு அது ஆன்மவிடுதலைக்கு கிழக்கு நாடுகளை அணுகியது. இச்சிந்தனைப் போக்கிலிருந்தே பிரம்ம ஞான சபை உதயமானது. இவ்வமைப்பு 1875இல் பிளாவட்ஸ்கி அம்மையார், கர்னல் ஆல்காட் ஆகியோரால் அமெரிக்காவில் நிறுவப்பட்டது. 1879இல் இந்தியா வந்த அவர்கள் 1882இல் அமைப்பின் தலைமையிடத்தைச் சென்னை அடையாரில் அமைத்தனர். 1893இல் இந்தியாவிற்கு வந்த அன்னி பெசன்ட் அம்மையாரின் தலைமையில் பிரம்மஞானசபை வலுப்பெற்று குறிப்பாகப் பல தென்னிந்திய ஆதரவாளர்களைப் பெற்றது. இந்துப் பாரம்பரியத்தை மேற்கத்திய அறிவார்ந்த மக்கள் ஒத்துக்கொண்டதில் அவர்கள் பெருமை கொண்டனர். தென்னிந்தியாவின் பல பகுதிகளில் பிரம்மஞான சபையின் கிளைகள் உருவாயின. பல முரண்பாடுகளுக்கு உள்ளானாலும் இவ்வமைப்பு இந்தியாவில் பௌத்தம் மீண்டும் உயிர் பெற்றதில் முக்கியப் பங்கு வகித்தது. முற்போக்குச் சிந்தனையாளரான அயோத்திதாச பண்டிதர், ஹென்றி ஆல்காட்டுடன் கொண்ட தொடர்பின் காரணமாக நவீன பௌத்தத்திற்கு அறிமுகமானார். ஆல்காட் அயோத்திதாசரை இலங்கைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் புகழ்பெற்ற மீட்பு வாதிகளான அனகரிகா தர்மபாலா, ஆச்சாரிய சுமங்களா உட்பட பல பௌத்த பிட்சுக்களைச் சந்தித்தார்.

11th History Lesson 19 Tamil Medium.indd 330 02-01-2023 14:12:22

19.2 சத்யசோதக் சமாஜம் (1873)

ஜோதிபா புலே

சாவித்திரிபா புலே

இதுவரை விவாதிக்கப்பட்ட இயக்கங்கள் பெரும்பாலும் மேல்சாதியாகக் கருதப்பட்ட சமூகங்களின் மேல் அதிக கவனம் செலுத்தின. ஆனால் சில குறிப்பிட்ட இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களை அணிதிரட்டி அவர்களிடம் தங்கள் கொள்கைகளை விளக்கின. அவற்றுள் மிக முக்கியமான இயக்கம் ஜோதிபா புலேவின் சத்ய சோதக் சமாஜமாகும்.

1827இல் பிறந்த ஜோதிபா புலே மாலி (தோட்ட வேலை செய்வோர்) சமூகத்தைச் சேர்ந்தவராவார். தொடக்கக் கல்வியைக் கிறித்தவ சமய நிறுவனப் பள்ளியில் கற்ற அவர் இடையில் கல்வியைத் தொடர முடியாமல் நின்றுவிட்டார். ஜோதிபா புலே மேல் சாதியினரின் அடக்குமுறைக்கு எதிராக வாழ்நாள் முழுவதுமான நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார். உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்ற தாகத்தினால் வேதங்கள், மனுசங்கிதை, புராணங்கள், புத்தர், தீர்த்தங்கரர் ஆகியோரின் கருத்துகள், இடைக்கால பக்தி இயக்கத்தைச் சேர்ந்த சமயப் பெரியோர்கள் என மிக விரிவான வாசிப்பை மேற்கொண்டார். மேற்கத்திய சிந்தனைகளோடும் கிறித்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களோடும் தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டார். ஒட்டுமொத்தப் பண்பாட்டையும் மரபுகளையும், பகுத்தறிவு மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டு அளவுகோல்களைக் கொண்டு சீர் தூக்கிப் பார்த்தார். சமத்துவம் எனும் கொள்கை சாதிய முறையையும் அதிகாரமிக்க குடும்ப அமைப்பையும் பெண்களின் கீழான நிலையினையும் ஒட்டுமொத்தமாக மறுக்க கோரியது. பகுத்தறிவு எனும் கொள்கை மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது.

அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளில் அவர் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தார். சாதி முறையானது பிராமணர் அல்லாதோரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, பல நூற்றாண்டு காலமாக நிலவி வரும் சமத்துவமின்மை, சமூகத் தாழ்வு நிலை ஆகியவற்றுக்கு எதிராக அவர்களைப் புரட்சி செய்ய ஒருங்கிணைந்து போராட்டங்களை மேற்கொள்ளச் செய்தார். இந்த லட்சியங்களை அடைவதற்காக சத்ய சோதக் சமாஜம் (உண்மை தேடும் சங்கம்) என்ற அமைப்பை 1873இல் நிறுவினார். மக்களின் கல்வியே விடுதலைக்கான புரட்சிகரமான காரணியாக இருக்கும் என்று கூறினார். இவர் எழுதிய முக்கிய நூல் 'குலாம்கிரி' (அடிமைத்தனம்) என்பதாகும்.

சமூகத்தில் பெண்களும் வறுமையில் உழல்வோரும் நசுக்கப்பட்டோருமே மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். பெண்களின் விடுதலை என்பது சமூகத்தின் ஏனைய வர்க்கங்களின் விடுதலையோடு இணைந்துள்ளது என்று வாதிட்டார். வர்க்கங்களுக்கிடையேயான சமத்துவம் மற்றும் ஆண் பெண் சமத்துவத்தை முன்வைத்தார். திருமணத்தின் போது மணப்பெண்ணின் கல்வி உரிமையை ஏற்றுக்கொள்வதாக மணமகனை உறுதியளிக்கும்படி கூறினார்.

புலே தன்னுடைய கருத்துக்களை உண்மையான போராட்டங்களாக மாற்ற விரும்பினார். மக்களுக்குக் கட்டாய தொடக்கக் கல்வியை விவசாய வர்க்கங்களைச் சேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்குமாறு ஆங்கில அரசாங்கத்தைப் புலே வற்புறுத்தினார். அவர் 1851இல் புனேயில் பெண்களுக்கென்று ஒரு பள்ளியையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு பள்ளியையும் தனது துணைவியார் சாவித்ரியின் உதவியோடு தொடங்கினார். தீண்டத்தகாதவர்களுக்காக ஒரு பள்ளியையும் கைம்பெண்களின் குழந்தைகளுக்காக ஒரு இல்லத்தையும் நிறுவினார். பிற்காலத்தில் மகாராஷ்டிராவில் பிராமணரல்லாதோர் இயக்கம் இவருடைய பணிகளால் தோன்றியது.

பண்டித ரமாபாய் (1858–1922)



பண்டித ரமாபாய்

பண்டித ரமாபாய் இந்தியாவில் பெண் விடுதலைக்காகப் போராடிய முன்னணித்தலைவர்களில் ஒருவராவார். சிறந்த கல்விப் பின்னணி கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். சமஸ்கிருத மொழியில் ஆழமான புலமை பெற்றிருந்ததால் அவருக்கு 'பண்டித', 'சரஸ்வதி' எனும் பட்டங்கள்

11th History Lesson 19 Tamil Medium.indd 331 02-01-2023 14:12:23

வழங்கப்பட்டன. பெற்றோரின் மரணத்திற்குப் பின்னர் ரமாபாயும் அவருடைய சகோதரரும் நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டனர். 1878இல் அவர்கள் கல்கத்தா சென்றனர். இரண்டாண்டிற்குப் பின்னர் அவருடைய சகோதரரும் காலமானார். 1880இல் சமூகத்தின் கீழ்மட்டக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வங்காளியைத் திருமணம் செய்து கொண்டார். அக்காலத்திலேயே வேற்று சாதியைச் சேர்ந்த வேற்று மொழி பேசக்கூடிய ஒருவரை திருமணம் செய்துகொள்ளும் நெஞ்சுரம் அவருக்கிருந்தது. இரண்டு வருடங்களுக்குப் பின்னர் கணவரும் இயற்கை எய்தவே, புனே திரும்பிய அவர் ரானடே, பண்டார்க்கர் ஆகிய தலைவர்களின் உதவியுடன் ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவினார். 1882இல் 300 பெண்கள் இவ்வமைப்பில் கல்வி கற்றனர்.

ரானடே, பண்டார்க்கர் ஆகியோரின் உதவியோடு கைவிடப்பட்ட விதவைகளுக்காக 'சாரதா சதன்' (வீடற்றவர்களுக்கான இல்லம்) எனும் அமைப்பைத் தொடங்கினார். வெகு விரைவிலேயே இந்து பெண்களைக் கிறித்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்கிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டதால் தனது செயல்பாடுகளைப் புனேவுக்கு அருகேயுள்ள கேத்கான் எனும் இடத்திற்கு மாற்றினார். அங்கு 'முக்தி சதன்' (சுதந்திர இல்லம்) எனும் அமைப்பை நிறுவினார். அந்நிறுவனத்தில் 2000 பெண்களும் குழந்தைகளும் தங்கியிருந்தனர். அவர்களை சுயசார்புடையவர்களாக மாற்றுவதற்காக தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது.

ஸ்ரீ நாராயண குரு

கேரளத்தை மையமாகக் கொண்ட இந்த, ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலன யோகம் உயர் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தாருக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளிலிருந்து தோன்றியது. இவ்வியக்கத்தை தோற்றுவித்த ஸ்ரீநாராயணகுரு, கள் இறக்குவதைத் தொழிலாகக் கொண்ட கேரளத்து ஈழவ சமூக இயக்கத்தின் ஈட்டி முனையாக விளங்கினார். ஈழவர்கள் கேரள மக்கள் தொகையில் தனிப் பெரும்பான்மையாக 26 விழுக்காடு உள்ளனர். ஸ்ரீநாராயண குரு 1902இல் "ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்" (Sri Narayanaguru Dharma Paripalana Yogam (SNDP)) எனும் அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பு i) பொதுப்பள்ளிகளில் சேர்வதற்கான உரிமை ii) அரசுப் பணிகளில் அமர்த்தப்படுதல் iii) சாலைகளைப் பயன்படுத்துவதற்கான, கோவில்களுக்குள் செல்வதற்கான உரிமை iv) அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற பிரச்சனைகளைக் கைகளில் எடுத்தது. இவ்வியக்கம் சமூகத்தில் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு மாறுதல், பாரம்பரியமான அதிகார விநியோக முறையில் மாற்றம், பிற்படுத்தப்பட்ட வர்க்கங்களின் கூட்டமைப்புகளை ஒருங்கிணைத்துப் பெருவடிவிலான சம்மேளனமாக மாற்றுதல் போன்ற கூட்டமைப்பு மாற்றங்களைக் கொணர்ந்தது. கோவில்களுக்குள் ஈழவர்கள் நுழைவதற்கிருந்த தடைகளுக்கு எதிராக ஸ்ரீநாராயண குரு புதிய கோவில்களை நிறுவியதோடு ஈழவ சமூகம் தன்னைத்தானே நவீனப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு சக்தி கொண்டதாக மாற்றினார். கவிஞர் குமரன் ஆசான் டாக்டர் பல்பு, சகோதரன் ஐயப்பன் போன்ற மகத்தான ஆளுமைகள் இவ்வியக்கத்திலிருந்து தோன்றி, கேரளச் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தினர். வைக்கம் சத்யாகிரகத்தில் நேரடியாகப் பங்கு பெறாவிட்டாலும், கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர்கள் நுழைவதற்கான தடைகளுக்கு எதிராகப் போராட்டங்களை ஏற்பாடு செய்தார். அவை எதிர்கால கோவில் நுழைவு இயக்கங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தன.

19.3 இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்கள்

1857 பெருங்கிளர்ச்சியும், அது ஆங்கிலேயரால் கொடூரமாக அடக்கப்பட்டதும் தெற்காசிய முஸ்லிம்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. 1857 எழுச்சிக்கு முஸ்லீம்களே காரணம் என்று ஆங்கிலேயர் சந்தேகித்த நிலையில், முஸ்லீம்களும் காலனிய நவீனத்துவம் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீடுகளுக்குள்ளேயே சுருங்கியிருந்தனர். இதன் விளைவாக முஸ்லீம்கள் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் பின்தங்கியிருந்தனர். இச்சூழலில் ஒரு சில பதிற்றாண்டுகளுக்குப் பின்னர் முஸ்லீம்களுக்கிடையே சில சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

அலிகர் இயக்கம் (1875)

அலிகர் இயக்கம் 1875இல் சையது அகமது கானால் தொடங்கப்பட்டது. மேற்கத்திய அறிவியல் கல்விக்கும் குரானின் போதனைகளுக்குமிடையே ஒத்திசைவை ஏற்படுத்த அவர் விரும்பினார். அவருடைய முற்போக்கான சமூகக் கருத்துக்கள் அவருடைய பத்திரிகையான தத்கிப்–ஓல்–அக்லுக் (பழக்க வழக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும்

11th History Lesson 19 Tamil Medium.indd 332 02-01-2023 14:12:23

மேம்படுத்துதல்) மூலம் பரப்பப்பட்டது. அலிகர் இயக்கத்தின் கொள்கைகள் (i) முஸ்லீம்கள் இஸ்லாமின் மேல் கொண்டிருக்கும் பற்றினைப் பலவீனப்படுத்தாமல் நவீனக் கல்வியை அவர்களிடையே பரப்புதல். (ii) பர்தா முறை, பலதார மணம், கைம்பெண் மறுமணம், விவாகரத்து போன்றவற்றோடு தொடர்புடைய சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்வது போன்ற கொள்கைகளைக் கொண்டிருந்தது.

சையது அகமது கான்

சையது அகமத் கானின் கல்வி குறித்த திட்டம் தொடக்கத்திலிருந்தே ஆங்கில வழிக் கல்வியின் சாதக அம்சங்களை வலியுறுத்திக் கூறியது. இயற்பியல் அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழியாக்கம் செய்வதன் மூலமும் இருமொழிப் பத்திரிகை ஒன்றை நடத்துவதன் மூலமும் மேற்கத்திய அறிவியலை அறிமுகம் செய்வதற்காக 1864இல் அவர் அறிவியல் கழகம் எனும் அமைப்பை ஏற்படுத்தினார். அதே ஆண்டில் காஜிப்பூரில் நவீனப் பள்ளியொன்றை நிறுவினார். 1868இல் முஸ்லீம் மக்களிடையே நவீனக் கல்வியைத் தொடங்குவதற்காகப் பல மாவட்டங்களில் கல்விக் குழுக்கள் அமைக்கப்படுவதை ஊக்கப்படுத்தினார்.

1869–1870இல் அவர் ஐரோப்பா சென்றபோது இந்திய முஸ்லீம்களுக்காக ஒரு மாபெரும் கல்வி நிறுவனம் என்ற தனது வாழ்நாள் பணிக்கான திட்டத்தை உருவாக்கினார். முஸ்லீம்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்காக 1875இல் அலிகரில் ஒரு நவீன முகமதியப் பள்ளியை தொடங்கினார். இதுவே 1877இல் முகமதியன் ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சிபெற்றது. அவருடைய மறைவிற்குப் பின்னர் இக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இதுவே முஸ்லிம் அரசியல் தலைவர்களையும் அறிவுஜீவிகளையும் உருவாக்கும் மையமாகத் திகழ்ந்தது

இந்திய முஸ்லீம்களிடையே தாராளவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்காக 1886இல் சையது அகமது கான் ஆங்கிலேய கீழை கல்வி மாநாட்டை (Anglo–oriental Educational Conference) தொடங்கினார். சமயச் சட்டங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை அவர் எதிர்த்தார். மாறிவரும் காலச் சூழலுக்கேற்றவாறு பகுத்தறிவுச் சிந்தனையின் வெளிச்சத்தில் குரானில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்குப் புதிய விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும் என்றார். இந்திய முஸ்லீம் மதத்தை தாராளமாக்கி, புதிய சிந்தனைகளுக்கும் விளக்கங்களுக்கும் ஏற்புடையதாய் மாற்றும் முயற்சியை மேற்கொண்டார். இம்முயற்சியில் வைதீக இறையியலாளர்களின் தீவிரத் தாக்குதல்களை அவர் உடனடியாக எதிர்கொள்ள நேர்ந்தது.

அகமதியா இயக்கம் (1889)

1889இல் மிர்சா குலாம் அகமது (1835–1908) என்பவரால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் ஒரு மாறுபட்ட போக்கை ஏற்படுத்தியது. குரானில் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என்று கூறிய அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசி எனக் கூறி சர்ச்சையை ஏற்படுத்தினார். அவரது கூற்று மதத்திற்கு எதிரானது என மைய நீரோட்ட இஸ்லாமியர் கருதினர். ஆனாலும் பலர் அவருடைய கொள்கைக்கு மாறினர். அவருடைய முக்கியப் பணி ஆரிய சமாஜமும், கிறித்தவ சமயப் பரப்பாளர்களும் இஸ்லாமுக்கு எதிராக வைத்த விவாதங்களை எதிர் கொண்டு மறுத்ததாகும். சமூக நெறிமுறைகளில் அகமதியா இயக்கம் பழமைவாதக் கண்ணோட்டதுடனே பலதாரமணம், பெண்கள் முகத்திரை அணிவது போன்றவற்றையும், விவாகரத்தைப் பொறுத்தமட்டில் பழமையான விதிகளையும் பின்பற்றினர்.

தியோபந்த் இயக்கம் (1866)

தியோபந்த் இயக்கம் முஸ்லீம் கல்வியாளர்களில் வைதீகப் பிரிவைச் சார்ந்தவர்களால் மீட்டெடுப்பு இயக்கமாக இரு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. ஒன்று குரானின் தூய்மையான கருத்துக்களையும் ஹதீஸ் எனப்படும் மரபுகளையும் பரப்புரை செய்தல். மற்றொன்று அந்நிய ஆட்சியாளர்களுக்கெதிராக ஜிகாத் (புனிதப்போர்) எனும் உத்வேகத்தை உயிரோட்டமுடையதாக வைத்திருப்பது. இவ்வியக்கம் நிறுவன வடிவம் பெற்று சரண்பூருக்கு அருகேயுள்ள தியோபந்த் என்னுமிடத்தில் முகமது காசிம் நாநோதவி (1833–1877), ரஷித் அகமத் கங்கோரி (1828–1905) ஆகியோரால் முஸ்லீம் சமூகத்திற்கான சமயத் தலைவர்களுக்குப் பயிற்சி வழங்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது. அலிகர் இயக்கத்தின் நோக்கங்களான மேலைக் கல்வியின் மூலம் முஸ்லீம்களின் நலனை மேம்படுத்துதல், ஆங்கிலேய ஆட்சியை ஆதரித்தல் ஆகியவற்றிற்கு எதிராக இஸ்லாமிய சமூகத்தாரிடையே சமயப் புத்துயிர்ப்பை ஏற்படுத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தியோபந்தில் கொடுக்கப்பட்ட

11th History Lesson 19 Tamil Medium.indd 333 02-01-2023 14:12:23

குறிப்பாணைகள் செவ்வியல் இஸ்லாமிய மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே.

வாலி அல்லா சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த இறையியலாளர்களால் 1867இல் தியோபந்தில் இறையியல் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. அவர்களுள் மிக முக்கியமானவர் முகமது காசிம் நாநோதவி ஆவார். கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களும் ஆரிய சமாஜமும் முன்வைத்த வாதங்களுக்கு எதிர் வாதங்கள் வைப்பதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். இவ்விறையியல் கல்லூரியின் மிக முக்கியமான நோக்கம் பழமைவாதிகளுக்கு இடைத்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கும் இறையியலாளர்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவது, சமய, இறையியலை மீள்வாசிப்பு செய்ய வைப்பது என்பனவாகும். ஒரு சமயப் பல்கலைக்கழகமாக தியோபந்த், முஸ்லீம் இந்தியாவில் மட்டுமல்லாமல் முஸ்லீம் உலகத்திற்கே பெருமதிப்புமிக்க நிறுவனமாயிற்று.

நட்வத்–அல்–உலாமா

தியோபந்த்தைக் காட்டிலும் குறைந்த அளவு பழமைவாதப் போக்குடைய அதே சமயம் நவீனகாலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்த இவ்வியக்கம் 1894இல் லக்னோவில் சிப்லி நுமானி எனும் வரலாற்று ஆசிரியராலும் வேறுசில அறிஞர்களாலும் உருவாக்கப்பட்டது. நவீன மேற்கத்தியக் கல்வியின் வருகையைத் தொடர்ந்துவந்த இறைமறுப்புக் கொள்கை, லோகாயதவாதம் ஆகியவற்றை எதிர்கொள்ள அறிவார்ந்த முறையில் சமயத்திற்கு விளக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஃபிரங்கி மஹால்

மூன்றாவதாகப் புகழ்பெற்ற ஆனால் மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் மூத்த இச்சிந்தனைப் பள்ளி லக்னோவிலுள்ள ஃபிரங்கி மஹாலில் உருவானது. மற்ற இரண்டைப் போலல்லாமல் ஃபிரங்கி மஹால் பள்ளி சூபியிஸத்தை மதிப்பு வாய்ந்த அனுபவமாகவும் அறிந்து கொள்வதற்கான களமாகவும் ஏற்றுக்கொண்டது. மற்றொரு மரபுசார்ந்த இயக்கம் அல்–இ–ஹதித் அல்லது நபிகள் நாயகம் கூறியவற்றை அப்படியே பின்பற்றுபவர்களாவர்.

19.4 பார்சி சீர்திருத்த இயக்கங்கள்

தங்கள் தாயகமான பாரசீகத்தில் அடக்குமுறைக்கு உள்ளானதால் ஜொராஸ்டிரியர்கள் பத்தாம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் குடியேறினார். ஒரு வணிக சமூகமாக அவர்கள் நூற்றாண்டுகளின் போக்கில் செல்வச் செழிப்படைந்தனர். நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட அச்சமூகத்தையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சீர்திருத்தக் காற்று தழுவத் தவறவில்லை.

1851இல் கல்வி பயின்ற பார்சிகள் அடங்கிய குழுவானது "ரக்னுமய் மத்யஸ்னன் சபா" (Rahnumai Madyasnam Sabha, சமய சீர்திருத்த சங்கம்) எனும் அமைப்பைப் பார்சிகளின் சமூக நிலைகளை மேம்படுத்தவும் ஜொராஸ்டிரிய மதத்தின் தூய்மையை மீட்டெடுக்கும் நோக்கங்களுடனும் உருவாக்கியது. இவ்வியக்கம் நௌரோஜி பர்தோன்ஜி, தாதாபாய் நௌரோஜி, காமா, பெங்காலி ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டிருந்தது. சீர்திருத்தம் பற்றிய செய்திகளை பரப்புவதற்காக ராஸ்ட்–கோப்தார் (உண்மை விளம்பி) எனும் செய்தித்தாளும் வெளியிடப்பட்டது. பார்சிகளின் மத நடவடிக்கைகளும் சடங்குகளும் சீர்திருத்தப்பட்டன. பார்சி மதத்திற்கு மறு விளக்கமும் தரப்பட்டது. சமூகத் தளத்தில் பார்சி பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காகக் கல்வி கற்பித்தல், பர்தா முறையை நீக்குவது, திருமண வயது வரம்பை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. படிப்படியாகப் பார்சிகள் இந்திய சமூகத்திலேயே அதிக அளவு மேற்கத்தியமயப்பட்ட பிரிவினராக மாறினர். தேசிய இயக்கத்திலும் இந்தியாவைத் தொழில்மயம் ஆக்கியதிலும் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.

19.5 சீக்கிய சீர்திருத்த இயக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலெழும்பிய பகுத்தறிவு முற்போக்கு அலைகள் சீக்கியரையும் தொட்டுத் தழுவின. 1873இல் சிங் சபா இயக்கம் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக உருவானது. 1) நவீன மேற்கத்தியக் கல்வியை சீக்கியருக்குக் கிடைக்கச் செய்தல் 2) கிறித்தவச் சமயப்பரப்பாளர்களின் மதமாற்ற நடவடிக்கைகள், இந்து மீட்டெடுப்பு இயக்கவாதிகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்வது. அகாலி இயக்கம் சிங் சபா இயக்கத்தின் கிளை இயக்கமே. அகாலி இயக்கம் சீக்கிய குருத்வாராவை ஊழல் மிகுந்த உதாசி மகந்த் என்றறியப்பட்ட மத குருமார்களின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டது. அரசு 1922இல் சீக்கியர் குருத்துவாரா சட்டத்தை (1925 திருத்தப்பட்டது) இயற்றியது. அதன்படி சீக்கிய குருத்துவாரா, சிரோன்மணி குருத்தவாரா பிரபந்தக் கமிட்டி எனும் அமைப்பின் கீழ் வந்தது.

11th History Lesson 19 Tamil Medium.indd 334 02-01-2023 14:12:23

19.6 தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கங்கள்

நாம் முன்னர் பார்த்தபடி வட இந்திய சீர்திருத்த இயக்கங்கள் தமிழகத்தின் மீது தங்கள் தாக்கத்தை ஏற்படுத்தின. பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் தமிழகத்தில் கிளைகளைப் பெற்றிருந்தன. கேசவ சந்திர சென் சென்னைக்கு வருகை தந்து உரையாற்றினார். ஆனால் தமிழகம் தனக்கே உரித்தான சீர்திருத்த இயக்கங்களைச் சந்தித்தது.

இராமலிங்க அடிகள் (வள்ளலார்) (1823–1874)

வள்ளலார் இராமலிங்க அடிகள்

இராமலிங்க அடிகள் சிதம்பரத்திற்கு அருகே ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து தன் இளமைக் காலத்தில் சென்னையில் வாழ்ந்தார். முறையான கல்வியைப் பெறாத அவர் பெரும் புலமையை வெளிப்படுத்தினார். தேவார, திருவாசகப் பாடல்களால் ஈர்க்கப்பட்ட அவர் மனம் உருகும் பாடல்களைச் சொந்தமாக இயற்றினார். அவருடைய காலத்தில் சைவ சமயமானது திருவாவடுதுறை, தர்மபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இராமலிங்க அடிகளின் பாடல்கள் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன. அவர் மதவெறியையும், பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார். உள்ளுணர்வு சார்ந்த இறைநிலைக்கு ஆட்பட்ட அவர் அவ்வனுபவங்களைத் தனது பாடல்களில் பதிவு செய்தார். இதனால் வைதீக சைவ சமயத்தினர் இவர்பால் வெறுப்புக் கொண்டனர். அவர் சத்திய தர்ம சாலை ஒன்றை வடலூரில் நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்கத் தொடங்கினார். முக்கியமாக 1860களில் பஞ்சங்களும் கொள்ளை நோயும் ஏற்பட்ட போது சாதிமத வேறுபாடின்றி உணவளித்தார். தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக சத்ய ஞான சபை எனும் அமைப்பை நிறுவினார். இதனால் நிறுவனபடுத்தப்பட்டிருந்த சைவ அமைப்புகளோடு அவர் மோதல் துவங்கியது. இவருடைய சீடர்கள் அவருடைய பாடல்களைத் திரட்டித் 'திருவருட்பா' எனும் பெயரில் 1867இல் வெளியிட்டபோது மோதல் உச்சத்தை எட்டியது. இலங்கையைச் சேர்ந்த வைதீக சைவர்கள் சீர்திருத்தவாதி ஆறுமுக நாவலரின் தலைமையில் இதைத் தெய்வநிந்தனை எனக் கூறி இவருக்கு எதிராக கட்டுரை எழுதும் போரில் ஈடுபட்டனர். ஆனால் இறுதியில் இராமலிங்க அடிகளின் பணி அங்கீகரிக்கப்பட்டது. அவருடைய எழுத்துக்கள் உலகளாவிய சிந்தனைகளைத் தூண்டி சைவ சமயத்துக்குள் இருக்கும் பிரிவினைகளை மதிப்பிழக்கச் செய்தன.

பௌத்தத்தின் மீட்டுருவாக்கமும் அயோத்திதாசப் பண்டிதரும்

அயோத்திதாச பண்டிதர்

முந்தைய பாடங்களில் குறிப்பிட்டபடி பௌத்தம் தமிழ்நாட்டில் இரண்டாவது ஆயிரம் ஆண்டின் தொடக்கத்திலேயே முற்றிலுமாக மறைந்துவிட்டது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பௌத்தம் புத்துயிர் பெறத் துவங்கியது. சீவகசிந்தாமணி(1887), மணிமேகலை (1898) ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்த பின்னணியில் மிகமுக்கியமான ஆளுமை அயோத்திதாச பண்டிதராவார். (1845–1914) ஒரு சுதேசி மருத்துவராகத் தொழில் செய்தாலும் அவர் பல்வேறு துறைகளில் புலமை பெற்றிருந்தார். பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஹென்றி ஆல்காட்டின் செல்வாக்கிற்கு அவர் உள்ளானவர். 1890களில் ஆதிதிராவிடர்களிடையே இயக்கத்தைத் தொடங்கிய அவர் ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றும், வேத பிராமணியத்தை எதிர்த்ததன் விளைவாக அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர் என்றும் வாதிட்டார். தனது கருத்துக்களை மெய்ப்பிப்பதற்காகத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களையும் பிறவற்றையும் மறுவாசிப்பு செய்தார். மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை அவர் ஊக்குவித்தார். அவர் கொள்கையை வட தமிழகப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பின்பற்றினர். கோலார் தங்கவயலில் பணியாற்றிய தொழிலாளர்கள் பலர் இவரது கொள்கையைப் பின்பற்றினர். இவ்வியக்கத்தில் சிங்காரவேலரும் லட்சுமி நரசுவும் முக்கியப் பங்கு வகித்தனர். அயோத்திதாச பண்டிதர் 1908 முதல் ஒரு பைசாத் தமிழன் (பின்னர் தமிழன்) என்ற பெயரில் வாராந்திரப் பத்திரிகை ஒன்றை தொடங்கி தான் இயற்கை எய்தும் காலம் வரை நடத்தினார்.

11th History Lesson 19 Tamil Medium.indd 335 02-01-2023 14:12:23

19.7 கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்கள்

இடைக்கால இந்தியாவைச் சேர்ந்த முஸ்லிம் மன்னர்களைப் போலவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும் இந்திய மக்களின் மத விஷயங்களில் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றியது. அதற்கான காரணம் போர்த்துகீசியரின் கட்டாய மதமாற்ற முயற்சிகளே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமென அவர்கள் நம்பினர். அதன் விளைவாகக் கம்பெனி தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சமயப் பரப்பாளர்கள் நுழைவதற்கு தடை விதித்திருந்தது.

1793 இல் பாப்டிஸ்டுகளான வில்லியம் கேரி, ஜான் தாமஸ் ஆகிய இருவரும் சமயப்பரப்பு நிறுவனத்தைத் தொடங்கும் நோக்கில் இந்தியா வந்தனர். சமயப்பரப்பு நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் டேனியர்களுக்குச் சொந்தமான கல்கத்தாவிற்கு வடக்கேயுள்ள செராம்பூரில் தங்கினர். கேரி, வேறு இரு சமயப்பரப்பாளர்களான ஜோசுவா மார்ஷ்மேன், வில்லியம் வார்டு ஆகியோருடன் இணைந்து 1799இல் செராம்பூர் மிஷன் எனும் அமைப்பை ஏற்படுத்தினர்.

செராம்பூர் மதப்பரப்பாளர்களே முதன்முதலாக இந்தியாவிற்கு வருகை தந்த நற்செய்தி மறைப் பணியாளர்கள் (Evangelical Babtist) ஆவர். இவர்களைத் தொடர்ந்து சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த மதப் பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். செராம்பூர் மதப்பரப்பாளர்களின் வருகைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பல கிறித்தவ மதப் பரப்பு நிறுவனங்கள் போர்த்துகீசியருக்குச் சொந்தமான கோவாவிலும், மலபார் கடற்கரைப் பகுதிகளிலும், சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளிலும் செயல்பட்டனர். மதமாற்றம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. விரிவான, பெருமளவிலான மதமாற்ற நடவடிக்கைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கின.

மதப் பரப்புக் குழுவினர் சமூகப் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பள்ளிகளை நிறுவினர். அரசுப் பணிகளில் அவர்களைப் பணியமர்த்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர். பொதுச் சாலைகளைப் பயன்படுத்துதல், தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடைகள் அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைகளுக்காகவும் சமயப் பரப்புக் குழுவினர் போராடினர்.

அனாதைக் குழந்தைகளையும் ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து தங்களது உறைவிடப் பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி வழங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்து கடந்த பாடத்தில் நாம் விவாதித்துள்ளோம். பஞ்சங்களின் போது சமயப் பரப்புக் குழுவினர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தங்குமிடம் வழங்கி உதவி செய்யும்போது மக்களை மதமாற்றம் செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. பஞ்சக் காலங்களில் குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்கள் கிறித்தவ மதத்தைத் தழுவின. இதைப் போன்ற சூழலில் ஆந்திராவில் மாலா, மடிகா சமூகங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் மதம் மாறினர்.

கம்பெனி அரசு இந்தியர்களுக்கு நவீன கல்வியை வழங்குவதில் சிறு முயற்சிகளை மட்டுமே மேற்கொண்டது. நீண்ட காலத்திற்கு உள்ளூர் மக்களுக்குக் குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட ஏழை மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பைக் கிறித்தவ சமய நிறுவனங்களே தன்னார்வத்துடன் ஏற்றுக்கொண்டன. மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் கிறித்துவ சமய நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்தது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

19.8 சீர்திருத்த இயக்கங்களின் முக்கியத்துவம்

சமூகத்தின் வைதீகப் பிரிவைச் சார்ந்தோரால், சமய–சமூக சீர்திருத்தவாதிகளின் அறிவியல் சித்தாந்த எதிர்ப்புகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதன் விளைவாகச் சீர்திருத்தவாதிகள் தூற்றப்பட்டனர், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர், அவர்களுக்கு எதிராக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன, பிற்போக்குவாதிகளால் கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் எதிர்ப்புகளை மீறி இவ்வியக்கங்கள், அச்சத்தின் காரணமாக இணங்கிச் சென்ற தனிமனிதர்களின் விடுதலைக்குப் பங்களிப்பைச் செய்தன. சமய நூல்கள் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமை, சமய நூல்களில் காணப்படும் கருத்துகளுக்குப் புதுவிளக்கம் அளிக்கும் உரிமை, சடங்குகள் எளிமைப்படுத்தப்பட்டமை ஆகியன

11th History Lesson 19 Tamil Medium.indd 336 02-01-2023 14:12:23

இறைவழிபாட்டைத் தனிப்பட்ட அனுபவமாக மாற்றின. சிந்திக்கவும் பகுத்தறியவும் தெரிந்த மனித அறிவின் திறமைக்குச் சீர்திருத்தவாதிகள் முக்கியத்துவம் கொடுத்தனர். சமய நடவடிக்கைகளிலிருந்த ஊழல்களைக் களைந்து தங்கள் சமூகமும் மதமும் கீழானவை, பின்தங்கியவை என்ற குற்றச்சாட்டுக்கும் பழிப்புரைக்கும் எதிராகப் பதில்தர தங்களைப் பின்பற்றுவோர்க்கு சீர்திருத்தவாதிகள் உதவினர். உருவாகிவந்த மத்தியதர வர்க்கம் பற்றிக்கொள்வதற்கான பண்பாட்டு வேர்களை இவ்வியக்கங்கள் வழங்கின.

பாடச் சுருக்கம்

- பிரம்ம சமாஜத்தில் ராஜா ராம்மோகன் ராய், கேசவ் சந்திரசென் பங்களிப்பு
- தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் ஆகியோரால் நிறுவப்பட்ட ஆரிய சமாஜம் மற்றும் இராமகிருஷ்ண இயக்கம்
- அலிகர் இயக்கம், அகமதியா இயக்கம், தியோபாந்த் இயக்கங்கள் இஸ்லாமிய சமூகத்தில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள்
- சீக்கிய, பார்சிய, பிரார்த்தனை சமாஜ சீர்திருத்தங்கள்.
- ஜோதிபா புலே , பண்டித ரமாபாய், ஸ்ரீநாராயண குரு, தமிழகத்தில் இராமலிங்க அடிகள், அயோத்தி தாசர் ஆகியோரின் சமூக சீர்திருத்தங்கள்.
- கிறித்துவ சமயப் பரப்பு குழுவின் சேவைகள்.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் ____________ ஆகும்.

(அ) பஞ்சாப்

(ஆ) வங்காளம்

(இ) பம்பாய்

(ஈ) சென்னை

2. "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" ____________ ஆவார்.

(அ) சுவாமி விவேகானந்தர்

(ஆ) தயானந்த சரஸ்வதி

(இ) இராஜா ராம்மோகன் ராய்

(ஈ) ஆத்மராம் பாண்டுரங்

3. தேசிய சமூக மாநாடு ____________ முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.

(அ) M.G. ரானடே

(ஆ) தேவேந்திரநாத் தாகூர்

(இ) கேசவ சந்திர சென்

(ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. "வேதங்களை நோக்கி திரும்புக"– என்று முழக்கமிட்டவர் ____________ ஆவார்.

(அ) இராஜா ராம்மோகன் ராய்

(ஆ) தயானந்த சரஸ்வதி

(இ) விவேகானந்தர்

(ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

5. கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகளின் மூலம் ____________ தனது கருத்துக்களை விளக்கினார்.

(அ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

(ஆ) தேவேந்திர நாத் தாகூர்

(இ) கேசவ சந்திர சென்

(ஈ) ஜோதிபா புலே

6. "ஒரு பைசாத்தமிழன்" என்ற வாரப்பத்திரிகையை நடத்தியவர் ____________ ஆவார்.

(அ) சுவாமி விவேகானந்தர்

(ஆ) தயானந்த சரஸ்வதி

(இ) இராமலிங்க அடிகளார்

(ஈ) அயோத்திதாச பண்டிதர்

7. பிரம்ம ஞான சபை ____________ ல் நிறுவப்பட்டது.

(அ) இந்தியா

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(இ) பிரான்சு

(ஈ) இங்கிலாந்து

11th History Lesson 19 Tamil Medium.indd 337 02-01-2023 14:12:23

8. தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் ____________ ஆவார்.

(அ) இராமலிங்க அடிகளார்

(ஆ) காசி விசுவநாத முதலியார்

(இ) அயோத்திதாச பண்டிதர்

(ஈ) தேவேந்திரநாத் தாகூர்

9. மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமதுகான் நிறுவிய அமைப்பு ____________ ஆகும்.

(அ) சத்ய சோதக் சமாஜம்

(ஆ) சிங் சபா இயக்கம்

(இ) அறிவியல் கழகம்

(ஈ) பிரம்ம ஞான சபை

10. இஸ்லாமிய சமூகத்தினரின் சமய மீளுருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டிருந்த இயக்கம் ____________ ஆகும்.

(அ) தியோபந்த் இயக்கம்

(ஆ) அகமதியா இயக்கம்

(இ) அலிகர் இயக்கம்

(ஈ) வாஹாபி இயக்கம்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க

(அ) சுத்தி இயக்கத்தை நிறுவியவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்.

(ஆ) சத்திய தர்ம சாலை இராமலிங்க அடிகளால் நிறுவப்பட்டது.

(இ) இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

(ஈ) அகமதியர்கள் பொதுவான மசூதியில் தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டனர்.

12. கூற்று: சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப் பள்ளி, பின்னர் முகமதிய ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

காரணம்: முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.

(ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

13. பொருத்துக

(i) ஆங்கிலேய சமயப்பரப்புக் குழு	– 1. சிகாகோ உலகச்சமய மாநாடு
(ii) பார்சி செய்தித்தாள்	– 2. வில்லியம் காரே மற்றும் ஜான் தாமஸ்
(iii) தியோபந்த் இயக்கம்	– 3. ராஸ்ட் கோப்தார்
(iv) விவேகானந்தர்	– 4. முகமது காசிம் நநோதவி

(அ) 3, 2, 1, 4 (ஆ) 1, 2, 3, 4

(இ) 2, 3, 4, 1 (ஈ) 2, 1, 4, 3

II. குறுகிய விடை தருக

1. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜா ராம்மோகன் ராயின் பங்களிப்புகள் யாவை?
2. சமூக நீதிக்கு ஜோதிபா புலேவின் பங்கு என்ன?
3. 'சுத்தி' (சுத்திகரிப்பு) இயக்கம் ஏன் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது?
4. ஸ்ரீ நாராயண குருவின் தர்ம பரிபாலன இயக்கத்தின் பங்களிப்பை எழுதுக
5. இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?

III. சுருக்கமான விடை தருக

1. எம்.ஜி. ரானடே
2. சுவாமி விவேகானந்தர்
3. அகமதியா இயக்கம்
4. சிங் சபா இயக்கம்

IV. விரிவான விடை தருக

1. இந்தியாவில் கிறித்தவ மதப்பரப்பாளர்கள் ஆற்றிய பணிகளை விளக்குக
2. தமிழ் நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக

செயல்பாடுகள்

1. அடையாறில் உள்ள பிரம்ம ஞான சபையின் தற்போதைய செயல்பாடுகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
2. சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உரையின் சாராம்சங்கள் பற்றி ஒரு கட்டுரை தயார் செய்க.

11th History Lesson 19 Tamil Medium.indd 338 02-01-2023 14:12:23

ஒப்படைப்பு

1. இராமகிருஷ்ணா மிஷன் உருவாக்கிய நிறுவனங்களுக்குச் சென்று, சமூகத்திற்கு அவை ஆற்றும் சேவைகளைக் குறித்து ஒரு அறிக்கையைத் தயார் செய்க.
2. பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள், அவர்கள் நிறுவிய அமைப்புகள் பற்றிய படத்தொகுப்பு ஒன்றினைத் தயார் செய்க.

மூலநூல்கள்

1. Anthony Giddens, *The Consequences of Modernity*, Stanford University Press, 1990
2. D.P. Chattopadhyaya, *History of Science, Philosophy and Culture in Indian Civilization*, Vol.III, Pearson Longman, 2008.
3. A.L. Basham, *A Cultural History of India*, OUP, 1975.
4. C.B. Firth, *Church History in India*, 1960.
5. Meghnad Desai, *The Rediscovery of India*, Allen Lane (Penguin), 2009.
6. Sumit Sarkar and Tanika Sarkar, *Women and Social Reform in Modern India: A Reader*, Indiana University Press, 2008.

கலைச்சொற்கள்

தொடர் சிக்கல்	**vicious circle**	continuing unpleasant situation
புலமைமிக்க	**erudite**	scholarly
கண்டனக்குரல் எழுப்பு	**decry**	denounce openly
உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்	**iconoclast**	a critic of image worship
ஐயம்; அவநம்பிக்கை	**skepticism**	disbelief
கடவுள் பற்றி அக்கறையற்றவர்	**agnosticism**	one who is indifferent to religion or existence of god
எதிர்வாதம்	**polemics**	a strong verbal or written attack on someone or something
இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலான தீர்ப்பு	**fatwa**	a ruling by a recognized authority according to Islamic law

11th History Lesson 19 Tamil Medium.indd 339 02-01-2023 14:12:24

காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

இந்திய வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1500–1900)

1500

- 1505 – துளுவ வம்சம் தொடக்கம்
- 1509 – கிருஷ்ண தேவராயர் மன்னராக முடி சூடல்

1510

- 1518 – தக்காணிய சுல்தான்களின் அரசுகள் உருவாக்கம் (பாமினி அரசு சிதைதல்)

1520

- 1526 – முதலாம் பானிப்பட் போர்
- 1527 – கான்வா போர்
- 1528 – சந்தேரிப் போர்
- 1529 – காக்ரா போர் / கிருஷ்ண தேவராயரின் இறப்பு
- 1530 – பாபரின் இறப்பு

1530

- 1539 – சௌசாப் போர்
- 1540 – கன்னோசி போர்

1540

- 1545 – ஷெர்ஷாவின் இறப்பு

1550

- 1556 – இரண்டாம் பானிப்பட் போர்

1560

- 1565 – தலைக்கோட்டைப் போர்

1570

- 1573 – அக்பர் குஜராத்தைக் கைப்பற்றுதல்
- 1576 – ஹால்டிகாட் போர்

1580

- 1582 – தீன் இலாஹி

1590

1600

Timeline_Tamil.indd 340 1/31/2022 06:08:36 PM



Timeline_Tamil.indd 341 1/31/2022 06:08:36 PM


1700
1707 – ஔரங்கசீப்பின் இறப்பு
1710
1720
1730
1731 – வார்னா உடன்படிக்கை
1740
1746 – முதல் கர்நாடகப் போர் ஆரம்பம்
1749 – இரண்டாம் கர்நாடகப் போர் ஆரம்பம் / ஆம்பூர் போர்
1750
1756 – மூன்றாம் கர்நாடகப் போர் ஆரம்பம்
1757 – பிளாசிப் போர்
1760 – வந்தவாசிப் போர் / உத்கிர் போர்
1760
1761 – மூன்றாம் பானிப்பட் போர்
1764 – பக்சார் போர்
1769 – மதராஸ் உடன்படிக்கை
1770
1773 – ஒழுங்குமுறைச் சட்டம்
1775 – முதல் ஆங்கிலேய–மராத்தியப் போர் ஆரம்பம்
1780 – இரண்டாம் மைசூர் போர் ஆரம்பம்
1780
1782 – ஹைதர் அலியின் இறப்பு / சல்பை உடன்படிக்கை
1783 – பாரிஸ் உடன்படிக்கை
1784 – மங்களூர் உடன்படிக்கை / பிட் இந்தியச் சட்டம்
1790
1793 – நிலையான நிலவரித் திட்டம்
1799 – செராம்பூர் சமயப்பரப்புக் குழு வருகை
1800

1800

1801 – தென்னிந்திய கிளர்ச்சி

1803 – இரண்டாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் ஆரம்பம்

1806 – வேலூர் கிளர்ச்சி

1810

1817 – பூனா உடன்படிக்கை / மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் ஆரம்பம்

1820

1822 – இரயத்துவாரி முறை

1823 – இராமலிங்க அடிகளின் பிறப்பு

1828 – பிரம்ம சமாஜம்

1829 – சதி ஒழிப்புச் சட்டம்

1830

1832 – இரண்டாம் சரபோஜி மறைவு

1840

1845 – அயோத்திதாச பண்டிதரின் பிறப்பு

1850

1853 – இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து அறிமுகம்

1857 – இந்தியப் பெருங்கிளர்ச்சி / சென்னைப் பல்கலைக்கழகம்

1858 – விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை

1860

1867 – பிரார்த்தனை சமாஜம்

1870

1873 – சத்திய சோதக் சமாஜம்

1875 – ஆரிய சமாஜம் / அலிகார் இயக்கம் / தியோசாபிகல் சொசைட்டி

1876–78 – சென்னை மாகாணப் பஞ்சம்

1880

1890

1897 – இராமகிருஷ்ண மிஷன்

1900

Timeline_Tamil.indd 343 1/31/2022 06:08:37 PM

கலைக்களஞ்சியம்

KL02T

பொறுப்புள்ள	accountable
பிற பண்பாடு ஏற்றல்	acculturation
சேர்த்த	accumulated
கசப்பான	acrimonious
சான்றாகக் காண்பித்தல்	adduced
விரோதி	adversary
மரக் கைப்பிடி கொண்ட உளி போன்ற கருவி	adzes
உயர் வகை கல்	agate
கடவுள் பற்றி அக்கறையற்றவர்	agnosticism
விசுவாசம்	allegiance
இணை	amalgamate
வெறுக்கத்தகுந்ததாக	anathema
உயர்பதவியில் அமர்த்தும் போது செய்யப்படும் சமயச்சடங்கு	anointment
முரண்பட்ட	antithetical
சார்ந்தது	ascribed
பாணர்	bard
சிறுமைப்படுத்துதல்	belittle
தீவிரமாகப் போரிடும் கொள்கை	belligerent policy
பௌத்தத் துறவி	bhikshu
போரின் மூலம் கொள்ளையடிக்கப்பட்டவை	booty
மீறு	breach
பரபரப்பான	bustling
அணிகலன்களில் பதிக்கும் சிவப்பு நிறக் கல்வகை	carnelian
விட்டுக் கொடுத்தல்	ceded
குறுகிய நோக்குடைய தேசியவாதம்	chauvinism
ஏறத்தாழ	circa
தொப்பியின் மீது பதவியைக் குறிக்கும் ரிப்பன் அல்லது துணிக் குஞ்சம்	cockade
கட்டாயப்படுத்துதல்	coercion
கருவூலம்	coffer
மோதல்	collision
கொண்டாட்டம்	commemoration
இணக்கத்தை ஏற்கும்	conciliatory
கூழாங்கற்கள் மற்றும் சரளைக் கற்களாலான பாறை	conglomerated
அர்த்தம்/பொருள்	connotation
கருத்தொருமித்த	consensus
கூட்டுச் சதி	conspiracy
சிந்தனை செய்தல்	contemplating
வெறுக்கத்தக்க	contemptible
இராணுவப் பிரிவு	contingent
உறுதிபடுத்து	corroborate
கோபுர வடிவக் குவிமாடம்	cupolas
ஊக்கம் இழக்கத்தக்க	daunting
கண்டனக்குரல் எழுப்பு	decry
அழிந்துபோதல்	devastated
விழுங்குதல்	devoured
கருத்து வேற்றுமை	dissension
இரு நதிகளுக்கிடையில் காணப்படும் செழுமையான நிலப்பகுதி	doab
கொடுமையான	draconian
திருச்சபை தலைவர்	ecclesiastical head
பேரானந்த / அநுபூதி நிலை	ecstatic
கட்டடம்/மாளிகை	edifice
தப்பிச்செல்	elude

Glossary & Illustration Credits.indd 344 1/31/2022 06:06:15 PM

வெளிவருகின்ற	emanating
அழகு படுத்து	embellished
மற்றவர் உணர்வினை மதித்தல்	empathetic
ஒப்புதல்	endorsement
பின்பு ஏற்பட்ட	ensued
அடைமொழி	epithet
பெயருக்குரிய	eponymous
மெய்யறிவு உள்ளவர்களுக்காக	esoteric
ஆதரித்தல்	espousing
தட்டிக் கழிக்கின்ற	evasiveness
உயர்ந்த	exalted
மிகவும் அதிகமான	exorbitant
புகழ்கின்ற	extoll
உயிர்ப்புமிக்க	exuberance
புலமைமிக்க	erudite
முகப்பு	facade
குதிரைக்கு லாடமடிப்பவர்	farrier
இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலான தீர்ப்பு	fatwa
நிலப்பிரபுத்துவ முறைப்படி உருவாக்கப்பட்ட சிற்றரசர்கள்	feudatories
கற்பொறி மூலம் இயங்கும் துப்பாக்கி	flintlock
கைவிடப்பட்டதற்காக	forsaking
சிக்கனமான	frugality
கோட்டைக் காவற்படை	garrison
ஒரு வகை அழகிய மான்	gazelle
வம்சாவளி / குடிவழி	genealogy
கோப்பை	goblet
திருத்தொண்டர் வாழ்க்கை பற்றிய புராணங்கள்	hagiographical
மேலாதிக்கம்	hegemony
வைதீகத்திற்கு எதிரான	heretics
அவைதீக	heterodox

செதுக்கப்பட்ட	hewn
ஓரினத்தன்மை	homogeneity
உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்	iconoclast
தீப் பாய்தல்	immolate
தகர்க்க முடியாத	impregnable
இடையறாத	incessant
தூண்டும்	inciting
ஊடுருவல்	incursion
புத்திகூர்மை	ingenuity
உலோக வார்ப்பிரும்புக் கட்டி	ingots
செயல்படுத்தும் விதமாக	inpursuance
சிறப்புரிமைச் சின்னம்	insignia
கிளர்ச்சி	insurrection
இடைப்படு காலம்	interregnum
சூழ்ச்சி, சதி	intrigue
உள்ளுணர்வு	intuitive
சடங்குகள் செய்து பதவியில் அமர்த்துதல்	investiture
வெல்லமுடியாத	invincibility
தொல்லைக்கு ஆளான	irked
மஞ்சள், சிவப்பு, பழுப்பு நிறம் கொண்ட கல் வகை	Jasper
மர ஆபரணப் பொருள்	lacqueware
தாவர குடும்ப வகை (அவரை வகை)	legume
துவரை வகை	lentil
கிழக்கு மத்தியத் தரைக்கடல் பகுதி	levant
அகராதி தயாரிப்பவர்	lexicographer
பரம்பரை	lineage
உருமாற்றம்	metamorphosis
தலைசிறந்த கலை படைப்பு	magnum opus
சூழ்ச்சி	manoeuvring
வணிகம் சார்ந்த	mercantile
அகழி	moat

Glossary & Illustration Credits.indd 345 1/31/2022 06:06:16 PM

அன்றாட வாழ்க்கைப் பிரச்சனை	mundane issue
கொடை; வள்ளன்மை	munificence
செயல்படாததாக்கு	negate
சிறு கொம்புடைய மான் வகை	Nilgai
பொருள்களின் பெயரிடும் முறை	nomenclature
நாணயங்கள் பற்றி படிப்பது	numismatic
காணிக்கை ; ஆகுதி	oblation
கோபமூட்டும்	obnoxious
ஒப்புயர்வற்ற	paramount
பேச்சு வார்த்தை நடத்துதல்	parleys
ஆதரி	patronise
கற்பிக்கும் கலை	pedagogy
எப்போதும் நிலைத்திருக்கும்	perpetual
பரவு	pervade
எங்கும் நிறைந்ததாக; நீக்கமற நிறைந்த	pervasiveness
சூறையாடுதல்	pillage
எதிர்வாதம்	polemics
அரசியல் அமைதியின்மை	political turmoil
ஆசிரியர் /ஆசான் / குரு	preceptor
புகழ்வாய்ந்த	preeminent
நடப்பதற்குமுன் தடுத்து நிறுத்துவது	pre-empt
மூத்த மகனுக்கு மட்டுமே வாரிசுரிமை என்ற கோட்பாடு	primogeniture
பல்கிப் பெருகி	proliferated
மதமாற்ற முயற்சி	proselytizing
முன்னெடுப்பவர்	protagonist
நெடிய	protracted
தண்டிக்கிற	punitive
பல்நிறம் கொண்ட விலை குறைந்த மணிக்கல்	quartz
ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிகழும்	quinquennial
சூறையாடு	ravage

சூறையாடு	ransack
சேதப்படுத்து	ravage
கணக்கிடு	reckon
தவிர்	refrain
சிட்டத்தில் நூல் நூற்பவர்	reeler
விட்டுக்கொடுக்காத	relentless
திருத்தியமைக்கப்பட்ட	revamped
அறுவைக் கத்தி	scalpel
அவநம்பிக்கை	scepticism
பிளவு	schism
சண்டை	scuffle
கப்பல் கட்டுபவர்	shipwright
தவிர்	shun
ஐயம்; அவநம்பிக்கை	skepticism
கொல்	slain
நசுக்கு அல்லது அடக்கு	smother
ஒற்றுமை	solidarity
நீண்ட மூக்குடைய பாத்திரம்	spouted vessel
சச்சரவு	squabble
கைவிடப்பட்ட	stranded
வர்க்க அடிப்படையில் அமைக்கப்பட்ட	stratified
புனிதமாக்கு; விழுமியதாக்கு	sublimate
கலாச்சாரப் பரிமாற்றம்	syncretism
துரோகத்தனமான, நம்பிக்கை மோசம் செய்கிற	traitorous
துரோக	treacherous
எண்ணிக்கை குறைந்த	truncated
வெல்லப்பட்ட	vanquished
வணங்குதற்குரிய	venerated
தொடர் சிக்கல்	vicious circle
பீரங்கிகளின் ஒரே நேரத்தில் குண்டு வீச்சு	volley
உறுதிப்படுத்து	vouch

Glossary & Illustration Credits.indd 346 1/31/2022 06:06:17 PM

ஒளிபடங்கள்/ஓவியங்கள் – நன்றி

State Department of Archaeology, Tamilnadu
Chennai Museum
Archaeology Survey of India
Tamil Virtual Academy
Tamil University, Thanjavur
Kerala Council for Historical Research
British Museum
British Library
Ulaga Tamil Sangam, Conference Magazines
http://www.tamilnadutourism.org
en.wikipedia.org
commons.wikimedia.org
www.wikiwand.com
harappa.com
whc.unesco.org
www.frontline.in
https://colnect.com/en
breedingback.blogspot.in
https://www.flickr.com
www.paleophilatelie.eu/description/stamps/nepal_2015.html
https://www.thehistoryhub.com/mehrgarh-facts-pictures.htm
pinterest.com
www.tes.com
http: heidicon.ub.uni-heidelberg.de
http://paadunar.blogspot.in
padmad.org
www.talkativeman.com

www.cngcoins.com
www.thefamouspeople.com
www.quora.com
www.numisbids.com
Coinindia.com
www.numismall.com
http.historicalleys.blogspot.in
immersedimmersed.blogspot.in
Department of State Archaeology, Tamilnadu
www.wikipedia.org
https://commons.wikimedia.org
https://wikitech.wikimedia.org
Google Art Project
metmuseum
Prince_of_Wales_museum
www. himalayanacademy.com
www.historydiscussion.net
Rod Hudson UK
Prof. y.subbarayalu
Prof. R.G. Bednarik
V.N. Misra
Dorian Fuller
Dr.K.Rajan, Prof & head Department of Archaelogy, Pondichery University
K.T.Gandhirajan
K.Sasikala
R.K Lakshimi
Dr.P.J.Cherian and Kerala Council for Historical Research M. Kenoyer et al. (1983), ‹An Upper Palaeolithic Shrine in India›, Antiquity

மேல்நிலை-முதலாம் ஆண்டு - வரலாறு

பாடநூல் ஆசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர்கள்

பாடக்குழுத் தலைவர்
முனைவர் **ஆ. இரா. வேங்கடாசலபதி,**
பேராசிரியர்,
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை

பாடக்குழு இணைத் தலைவர்
முனைவர் **கா.அ. மணிக்குமார்,**
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

பாட ஒருங்கிணைப்பாளர்கள்
திருமதி. ப. **ஈஸ்வரி,**
துணை இயக்குநர்,
SCERT, சென்னை

பெ. சுரேஷ்,
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஆத்தூர், சேலம் மாவட்டம்

முனைவர் **க. சுரேஷ்,**
பட்டதாரி ஆசிரியர்,
குமாரராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி
அடையாறு, சென்னை.

மேலாய்வாளர் குழு
முனைவர் **எ.சுப்புராயலு,**
மேனாள் பேராசிரியர்,
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

முனைவர் **சுரேந்தர் ராவ்,**
மேனாள் பேராசியர்,
வரலாற்றுத்துறை,
மங்களூர் பல்கலைக்கழகம்,
மங்கள கங்கோத்ரி.

முனைவர் **கேசவன் வேலுதத்,**
மேனாள் பேராசியர்,
வரலாற்றுத்துறை,
புதுதில்லி பல்கலைக்கழகம்.

முனைவர் **கனகலதா முகுந்த்,**
மேனாள் பேராசிரியர் (ஓய்வு),
பொருளாதாரம் மற்றும் சமூக
ஆய்வுகள் மையம், ஐதராபாத்.

முனைவர் S. **ரவிச்சந்திரன்**
இணைப் பேராசிரியர் (ஓய்வு),
ராஜுஸ் கல்லூரி, ராஜபாளையம்.

முனைவர் **டி.அபுல் ஃபாசல்,**
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
இஸ்லாமியா கல்லூரி,
வாணியம்பாடி.

முனைவர் **ஜே.முருகன்,**
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி,
சேலம்

முனைவர் Y. **சுப்பராயலு,**
மேனாள் பேராசிரியர்,
கல்வெட்டியல் துறை, தமிழ்ப்
பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முனைவர். **பெர்னார்டு D சாமி**
ஆய்வு மையம், லயோலா கல்லூரி,
சென்னை.

முனைவர். M.S. **தங்கம்**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை
சாராள் டக்கர் கல்லூரி,
பாளையம்கோட்டை.

பாடநூல் ஆசிரியர்கள்
முனைவர் **கா.அ. மணிக்குமார்,**
மேனாள் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

முனைவர். **கனகலதா முகுந்த்,**
மேனாள் பேராசிரியர்,
பொருளாதாரம் மற்றும் சமூக
ஆய்வுகள் மையம், ஐதராபாத்

முனைவர் **டி.எஸ்.ராஜேஸ்வரி,**
மேனாள் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி,
தூத்துக்குடி.

முனைவர் **வீ.செல்வகுமார்,**
இணைப் பேராசிரியர், கடல்சார்
தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

முனைவர் **சீ.ஆனந்த கிருஷ்ணன்,**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
ஏ.எம்.ஜெயின் கல்லூரி, சென்னை.

முனைவர் **ஆர்.வெங்கடராமானுஜம்,**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரி,
சென்னை.

முனைவர் **கே.ஆர். சங்கரன்,**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
ஏ.வி.சி. கல்லூரி, மயிலாடுதுறை.

மொழி சீரமைப்பு
திரு. **அப்பணசாமி,** ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை

மொழி பெயர்ப்பாளர்கள்
முனைவர் S. **ரவிச்சந்திரன்,**
இணைப் பேராசிரியர் (ஓய்வு),
ராஜுஸ் கல்லூரி, ராஜபாளையம்.

திரு **இரா. இராஜ்குமார்**
பாலசுப்பிரமணியன்
நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர்
(தமிழ்), புதுதில்லி.

திரு C. **ஆனந்த்,**
எழுத்தாளர், சென்னை.

வினோத் வின்சென்ட் ராஜேஷ்,
உதவிப் பேராசிரியர்
(வரலாற்றுத்துறை)
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி
திருநெல்வேலி.

திரு. **சுப்பாராவ்,** மதுரை

திரு. **பிரவாகன்,** காஞ்சிபுரம்

திரு. **இரவிச்சந்திரன்,**
வடகரை, மதுரை

உள்ளடக்கம் வழங்கியோர்/ வாசிப்பாளர்
திரு. **அப்பணசாமி,** ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை

திருமதி **ஜே.கீதா,**
முதுகலை ஆசிரியர் (ஓய்வு),
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி, சென்னை.

திருமதி **ஆர். ஜெயஸ்ரீ,**
பட்டதாரி ஆசிரியர்,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி, சென்னை.

திருமதி **எம்.மீரா,**
முதுகலை ஆசிரியர்,
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து
மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர்.

முனைவர். **க. சுரேஷ்,**
பட்டதாரி ஆசிரியர்,
குமார ராஜா முத்தையா
மேல்நிலைப்பள்ளி, சென்னை

திருமதி S. **ராஜேஸ்வரி**
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு),
அரசு மேல்நிலைப் பள்ளி,
நெல்லிக்குப்பம், காஞ்சிபுரம்.

முனைவர் **சிந்தியா ஜூட்**
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி,
சென்னை.

திரு **கோ. சதீஷ் குமார்**
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
முசிறி, திருச்சிராப்பள்ளி.

திரு **ப. வேதபுரீசன்**
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு மேல்நிலைப் பள்ளி, ஆழியூர்,
நாகப்பட்டினம்.

திரு **த. முத்து**
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு மேல்நிலைப் பள்ளி, லாடவரம்
திருவண்ணாமலை.

திருமதி **A. சகாய சினி**
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு மேல்நிலைப் பள்ளி, நெம்மேலி
காஞ்சிபுரம்.

திரு R. **சரவணன்**
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு நந்தனார் மகளிர் மேல்நிலைப்
பள்ளி, சிதம்பரம்

தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்
திரு. **து. நாகராஜ்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ராப்பூசல்,
புதுக்கோட்டை

R. **காமேஷ்,**
SGT அரசு துவக்கப் பள்ளி,
பிஞ்சனூர், கடலூர்

A. **சரண்யா,**
SGT ஊராட்சி ஒன்றிய தொடக்கப்
பள்ளி
செல்லத்தபாளையம், ஈரோடு

பக்க வடிவமைப்பாளர்கள்
ஆரோக்கியம் பெலிக்ஸ்
காமாட்சி பாலன் ஆறுமுகம்
ச. அசோக் குமார்
பேச்சிமுத்து கைலாசம்
அ. அடிசன் ராஜ்
ர. பாலசுப்ரமணி
ஜெரால்டு வில்சன்
அடைக்கலம் ஸ்டீபன்
பிரசாந்த்

ஓவியம்
திரு. க. த. காந்திராஜன்,
S.V. கோகுல கிருஷ்ணன்
தீபக் ராஜ்
V. வினோத் குமார்

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

தரக்கட்டுப்பாடு
ராஜேஷ் தங்கப்பன்

தட்டச்சு
திருமதி. **தா.அல்போன்சா மேரி,**
புனித அன்னாள் ஆ.ப.நி., சென்னை

திருமதி. **பரிமளா,**
மா.ஆ.க.ப.நி., பெருந்துறை, ஈரோடு

EMIS தொழில்நுட்பக் குழு
இரா. மா. சதீஸ்
மாநில ஒருங்கிணைப்பாளர்

க.ப. சத்தியநாராயணா
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்

இரா. அருண் மாருதி செல்வன்
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்

ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

Author_Page.indd 348 1/31/2022 06:24:16 PM